ஸ்ரீராமஜயம்.

வால்மீகி ராமாயண வசனம்.

யுத்தகாண்டம்.

150

இது,

பண்டித நடேசசாஸ்திரியாரால்

தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு,

திருவல்லிக்கேணி

ஹிந்து ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியராரால்

பார்வையிடப்பட்டது.

சென்னை:

க. மஹாதேவன்

1912.

[ரிஜிஸ்டர்ட் காபி ரைட்.]

பண்டித நடேச சாஸ்திரியாரால்

இயற்றப்பட்ட

தமிழ்ப் புத்தகங்கள்

வால்மீகராமாயண வசனம்.

	ரூ.	அ.
பாலகாண்டம்	1	12
அயோத்தியாகாண்டம்	3	0
ஆரண்ணியகாண்டம்	1	12
கிஷ்கிந்தாகாண்டம்	1	12
சுந்தரகாண்டம்	1	12
மதிகெட்ட மனைவி	1	0
ஸ்ரீ மாமி கொலுவிருக்கை	0	8
தீனதயாளு	0	8
கோமளம் குமரியானது	0	8
திக்கற்ற இரு குழந்தைகள்	0	12
தலையணை மந்திரோபதேசம் ...	0	8
வேணீ ஸம்ஹாரம்	0	3
முத்திரா ராக்ஷஸம்	0	4
மிருச்சகடி	0	4
ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் ...	0	6
நளோபாக்கியானம்	0	12



ஸ்ரீராமஜயம்.

வால்மீகி ராமாயண வசனம்.

ஆறவது

யுத்த காண்டம்.

முதற் சருக்கம்:

நீராமர் சீதையின் சமாசாரத்தைச் சொல்லிய அநுமானைப் புகழ்ந்து தழுவுதல்.

அநுமான் தான் கண்டபடியே சொன்ன சொல் லை இராமர் கேட்டு, வெகு சந்தோஷ மடைந்து, தக்கவாறு சொல்லலானார்:— வ்வுலகத்தில் ஒருவராலும் மனத்தினாலும் எண்ண யாத மிக்க அரும்பெருங்காரியத்தை, அநுமான், செ முடித்தான். கருடபகவானும் வாயுபகவானும் அநு னுமேயன்றி, பெருங்கடலைத்தாண்டுபவர் வேறொருவ நிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை.

இராமர் அநுமானைப் புகழ்தல்.

தேவர், தானவர், யக்ஷர், கந்தர்வர், உர கர், ராக்ஷஸர் இவர்களுள் ஒருவராலும் வெல்லமுடியாததும், இராவணனால் நன் ப் பாதுகாக்கப்பட்டதுமான இலங்காபுரியிற் புகு வலிமையுடையனாய், மூச்சுடன் ரும்பிவரக்

கூடியவன் எவன்தான் ? ஒருவராலும் வெல்லமுடி
யாதபடி அரக்கர்களால் நன்முகப்பாதுகாக்கப்படுகின்ற
இலங்கைக்குள், அநுமானுக்கு ஒப்பான பலமும் பராக்
கிரமமுமுள்ளவனன்றி வேறு யார்தான் நுழைவான் ?
சுக்கிரீவனுக்கு அடிமையாக இருந்து, செய்யவேண்டி
பெருங்காரியத்தை, அநுமான், செய்துமுடித்தான். [illegible]
வாறு கடலேக்கடந்து சீதாபிராட்டியைக் கண்டுவ
லாகிய சுக்கிரீவகார்யத்தைச் செய்ததுமல்லாமல், [illegible]
வநுமான் தனது பெருந்திறமைக்குத் தக்கவாறு அசோ
வநிகையை முறித்தல், இலங்கையைச்சுட்டெரித்தல்
லியவற்றையும் தானுகவே செய்தான். எவனெருவ
தனதுயஜமானனுல் அரியதொருகாரியத்தில் ஏ
பட்டு அதனை அன்புடன் செய்துமுடித்து, அதற்கு இ
மான வேறுகாரியத்தையும் தன் யஜமானனிடத்
பேரன்பினுற் செய்கின்றனே, அவனே உத்தம
ஷன் ; எவனெருவன் தான் உத்ஸாஹமும் வல்லமை
முடையவனுயிருந்தும், தன்னரசன் ஏவின தொழி
யன்றித் தனதுஅரசனுக்கு அனுகூலமான மற்ற
காரியத்தைச் செய்யாமலிருக்கின்றனே, அவன் மத்திம
புருஷன் ; எவனெருவன் தான் சமர்த்தனுகவும் பு
யுள்ளவனுகவு மிருந்தும், ஏவப்பட்ட தொழிலை இ
கிரதையாக முடிக்காம லிருக்கின்றனே, அவனே
புருஷர்களில் அதமனென்று சொல்லுகிறார்கள். அ
மான் உத்தமபிருத்திய னுதலால், ஏவிய காரியத்தை
சரியாகச் செய்தான் ; தனக்கு ஒருதாழ்வையும் உண்டா
கிக்கொள்ளவில்லை ; சுக்கிரீவனையும் தனதுதொழில
மகிழச்செய்தான். அநுமான் சீதையைக் கண்டுவந்
னல், என்னையும் இந்த ரகுவம்சத்தையும் மகாப
பொருந்திய லக்ஷ்மணனையும் தருமத்தினின்று த
வாதவண்ண காப்பாற்றினன். இவ்வளவு இவ

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
28.	சுகன் வானரத்தலைவரை இராவணனுக்குத் தெரிவித்தல்	122
29.	சுகஸாரணர்மேற் சினந்த இராவணன் அனுப்பிய சார்த்தூலன் முதலியோரது தூது	127
30.	சார்த்தூலன் இராம சேனையை இராவணனுக்குக் கூறுதல்	131
31.	இராவணன் வித்யுஜ்ஜிஹ்வனைக் கொண்டு மாயைசெய்தல்	135
32.	சீதையின் புலம்பலும், இராவணன் சேனையைத் திரட்டலும்	140
33.	விபீஷணர் மனைவியாகிய ஸரமை சீதையைத் தேற்றுதல்	145
34.	ஸரமை இராவணசபையில் நடந்தவைகளைச் சீதைக்குத் தெரிவித்தல்	150
35.	மால்யவான் இராவணனுக்குக் கூறிய நற்புத்தி	153
36.	இராவணன் இலங்கையைக் காக்குமாறு சேனையை வகுத்துவைத்தல் ...	157
37.	இராமர் இலங்கையிற் போர் செய்தற்குச் செய்த ஏற்பாடுகள்	160
38.	இராமர் இலங்கையைப்பார்க்குமாறு சுவேல மலையி லேறுதல்	164
39.	இராமர் இலங்கையைக் காணுதல் ...	167
40.	சுக்கிரீவனுக்கும் இராவணனுக்கும் நடந்த தொந்தயுத்தம்	170
41.	இராமர் இலங்கையை முற்றுகைசெய்து ... அங்கதனைத் தூதனுப்புதல் ...	174
	[illegible]ானரரும் அரக்கரும் போர்புரியத் தொடங்குதல்	185

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
43.	அரக்க வானரர்களின் தொந்தயுத்தம் ...	190
44.	இராத்திரி யுத்தம்	195
45.	நாகபாசத்தால் இராமலட்சுமணர்களை இந்திரஜித்து கட்டுதல்	199
46.	விபீஷண சுக்கிரீவர் வானரரைத் தேற்றுதலும், இந்திரஜித்து இலங்கைக்குத் திரும்புதலும்	202
47.	இராவணன் சீதையைப் புஷ்பகத்திலேற்றி, இராமலட்சுமணர் நிலையைக் காட்டுதல்	208
48.	சீதையின் புலம்பல்	211
49.	தெளிந்தெழுந்த இராமர், இலட்சுமணர் நிலைமையைப் பார்த்துப் புலம்புதல் ...	215
50.	கருடபகவான் நாகபாசத்தை நீக்குதல் ...	219
51.	இராமலட்சுமணர் நாகபாசத்திலிருந்து நீங்கியதை யுணர்ந்த இராவணன் தூம்ராக்ஷனைப் போருக்கு அனுப்புதல் ...	226
52.	தூம்ராக்ஷனை அனுமான் வதைத்தல் ...	231
53.	வச்சிரதம்ஷ்ட்ரன் போருக்கு வருதல் ...	235
54.	வச்சிரதம்ஷ்ட்ரன் வதை	239
55.	அகம்பனன் போர்க்கு வருதல்	243
56.	அகம்பனனது வதம்	247
57.	பிரஹஸ்தன் போரிடச் செல்லுதல் ...	251
58.	பிரஹஸ்தனது வதம்	256
59.	இராவணனது மகுடபங்கம்	263
60.	இராவணன் கும்பகர்ணனை எழுப்புவித்தல்.	283
61.	கும்பகர்ணனைப்பற்றி விபீஷணர் ஸ்ரீராமரிடஞ் சொல்லுதல்	295
62.	இராவணன், கும்பகர்ணனிடம் தனக்கு இராமரால் நேர்ந்ததைச் சொல்லு	

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
63.	கும்பகர்ணன் இராவணனுக்கு நற்புத்தி சொல்லுதல்	303
64.	மஹோதரன் கும்பகர்ணனதுவசனத்தைக் கண்டித்துப் பேசுதல்	310
65.	கும்பகர்ணன் போர்செய்ய எழுதல் ...	315
66.	கும்பகர்ண யுத்தம்	322
67.	கும்பகர்ணனது வதை	326
68.	இராவணனது புலம்பல்	347
69.	நராந்தகனது வதை	349
70.	தேவாந்தகன் முதலியவர்களின் வதை ...	360
71.	அதிகாயன் வதை	367
72.	இராவணனது சோகம்	379
73.	இந்திரஜித்து பிரமாஸ்திரத்தால் யாவரையுங் கட்டுதல்	382
74.	அனுமான்கொணர்ந்த ஓஷதிகிரியால் யாவரும் பிரமாஸ்திரத்தினின்று விடுபடுதல்.	391
75.	சுக்கிரீவன் இலங்கையைத் தீயிட்டுக்கொளுத்தியதும், நிகும்பன் முதலான அரக்கர்கள் போர்புரிய வருதலும்	401
76.	கும்பனது வதை	409
77.	நிகும்பனது வதை	420
78.	மகராட்சன் போர்செய்யச் செல்லுதல் ...	423
79.	மகராட்சனது வதை	426
80.	இந்திரஜித்தின் யுத்தம்	430
81.	மாயாசீதையின் வதை	435
82.	நிகும்பிலையில் இந்திரஜித்தினது ஹோமாரம்பம்	440
83.	மாயாசீதையின் வதையைக் கேட்டு மூர்ச்சித்த இராமரை இலட்சுமணர் சாந்தப்படுத்துதல்	443

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
84.	விபீஷணர், இராமருக்கு உண்மையை யறிவித்துத் தேற்றி, இந்திரஜித்தை வதைக்கும் உபாயங் கூறுதல்	450
85.	இந்திரஜித்தை வதைக்க இலட்சுமணர்புறப்படுதல்...	452
86.	இந்திரஜித்தின் யுத்தாரம்பம்	457
87.	இந்திரஜித்துக்கும் விபீஷணருக்கும் நடந்த சம்வாதம்	461
88.	இந்திரஜித்துக்கும் இலட்சுமணருக்கும்நடந்த போர்	465
89.	இலட்சுமணர்க்கும் இந்திரஜித்துக்கும் ... நடந்த பெரும்போர்	470
90.	இந்திரஜித்தினது ரதபங்கம்	475
91.	இந்திரஜித்தின் வதை	481
92.	இராமர் இலட்சுமணரைச் சிலாகித்தல் ...	492
93.	இராவணன் இந்திரஜித்தின் வதையாற் சோகித்து, சீதையைக் கொல்ல முயலுதல்.	496
94.	மூலபல யுத்தம்	503
95.	ராக்ஷஸிகளின் கதறுதல்	508
96.	இராவணன் யுத்தத்துக்குப் புறப்படுதல் ...	513
97.	விரூபாக்ஷனது வதை	518
98.	மகோதரனது வதை	522
99.	மகாபார்சுவனது வதை	527
100.	ஸ்ரீராமருடன் இராவணன் போர்தொடங்குதல்	530
101.	இலட்சுமணர் இராவணனது சத்தியாயுதத்தால் இறந்தவர் போன்று விழுதல் ...	535
102.	இலட்சுமணரைப் பிழைப்பு மூட்டுதல் ...	542
103.	ஸ்ரீராமர் இந்திரனது இரதத்தி லேறிக்கொ	

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
104.	இராவணனெறிந்த சூலத்தை ஸ்ரீராமர் முறித்தெறிதல்	552
105.	இராவணன் போரிற் கலைப்படைதலும், சாரதி அவனது தேரை அப்பாற் செலுத்துதலும்	555
106.	மறுபடி போர்க்களத்துக்கு இராவணன் வருதல்	559
107.	அகஸ்தியர் ஆதித்யஹ்ருதயத்தை இராமருக்கு உபதேசித்தல்	562
108.	இராவணனுக்கு அபசகுனங்கள் நேர்தல் ...	568
109.	ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் நடந்த கொடிய போர்	572
110.	இராமர் இராவணனது தலையை யறுத்தல்.	575
111.	இராவண வதை	580
112.	விபீஷணர் புலம்பல்	584
113.	அரக்கியரின் புலம்பல்	587
114.	மண்டோதரியின் புலம்பலும், இராவணனது, உத்தரகிரியையும்	591
115.	விபீஷண பட்டாபிஷேகம்	604
116.	அனுமானுக்கும் சீதைக்கும் நடந்த ஸம்பாஷணை	607
117.	சீதாதேவியை ஸ்ரீராமரிடம் விபீஷணர் அழைத்துவருதல்	613
118.	ஸ்ரீராமர் சீதையைக் கடிந்துபேசுதல் ...	618
119.	தனது சுத்தியைத் தெரிவிக்குமாறு சீதாதேவி அக்கினியிற் பிரவேசித்தல் ...	621
120.	ஸ்ரீராமரைத் தேவர்கள் துதித்தல் ...	625
121.	அக்கினிபகவான் கொணர்ந்து கொடுத்த சீதாதேவியை ஸ்ரீராமர் அங்கீகரித்தல்.	630

யுத்தகாண்டம்

விஷயசூசிகை.

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
1.	ஸ்ரீராமர் சீதையின் சமாசாரத்தைச் சொல்லிய அனுமானைப் புகழ்ந்து தழுவுதல்...	1
2.	கடல்கடப்பதைப் பற்றிச் சிந்தைகொண்ட இராமரைச் சுக்கிரீவன் சாந்தப்படுத்துதல்	4
3.	இலங்கையின் கோட்டை முதலியவற்றை இராமரிடம் அனுமான் சொல்லுதல் ...	7
4.	வானரசேனை புறப்பட்டுக் கடற்கரையைச் சேர்தல்	11
5.	சமுத்திரத்தைக் கண்ட இராமர் சீதையை நினைத்துவருந்த, லக்ஷ்மணர் சமாதானப்படுத்துதல்	25
6.	இராவணன், மந்திரிமார்களைக்கூட்டி, இராமரைவெல்ல ஆலோசனை சொல்லுமாறு கேட்டல்	27
7.	அரக்கர்கள் இராவணனுக்குத் தைரியஞ் சொல்லுதல்	29
8.	பிரஹஸ்தன் முதலியோர் தமது வல்லமையைக் கூறுதல்	32
9.	நிகும்பன் முதலியோரைத் தடுத்து விபீஷணர் இராவணனுக்குப் புத்தி கூறுதல்.	35
10.	சீதையை விட்டிடவேண்டுமென்று விபீஷணர் வற்புறுத்திக் கூறுதல் ...	38
11.	இராவணன் ஆலோசனைக்காகச் சபையிற் புகுதல்	42
12.	இராவணன் மந்திராலோசனை கேட்க, கும்பன் கூறுதல்	46

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
13.	இராவணன் சீதையைப் பலாத்காரஞ் செய்யாமைக்குக் காரணமும், அவனது அஸஹாய சூரத்வமும்	51
14.	விபீஷணர் சொன்ன நற்புத்தி ...	54
15.	தமதுசொல்லைப் பரிகசித்த இந்திரஜித்துக்கு விபீஷணர் நற்புத்தி கூறல் ...	57
16.	விபீஷணர் இராவணனை விட்டு எழுதல் ...	60
17.	ஸ்ரீராமரைச் சரணமாகவடைந்த விபீஷணரைக்குறித்துப் பலர் பலவாறுகூற, அனுமான் ஏற்றுக்கொள்ளலா மென்றல் ...	63
18.	இராமர் சரணுகதரான விபீஷணரை அங்கீகரித்தல்	71
19.	இராமர், விபீஷணர்க்கு இலங்கையை யளித்துப் பட்டாபிஷேகஞ் செய்தல் ...	77
20.	சுகனென்பவனது தூது	82
21.	இராமர், தமதுவேண்டுகோளுக்கு இணங்காத சமுத்திரராஜன்மேல் அம்பு தொடுக்க ஆரம்பித்தல்	87
22.	சமுத்திரராஜன் பிரதியட்சமாகத் தோன்றி இராமரது வேண்டுகோளுக்கு இணங்க, அணைகட்டியபின் யாவரும் சமுத்திரத்தைக் கடத்தல்	90
23.	இராமர் எல்லோருடனும் இலங்கையை நோக்கிச் செல்லுதல்	100
24.	இராமர் சேனையுடன் கடல்கடந்துவந்ததைச் சுகன் இராவணனிடங் தெரிவித்தல் ...	102
25.	சுகஸாரணர்களின் தூது	107
26.	ஸாரணன் வானரசேனையை இராவணனுக்குக் காட்டுதல்	111
27.	மிகவும் பிரதானரான வானரத்தலைவர்களை ஸாரணன் இராவணனுக்குக் கா	

மான சமாசாரத்தைச் சொன்ன இவ்வநுமானுக்கு ஏற்ற வாறு விருப்பத்தைச்செய்ய முடியவில்லையே யென்பது தான், இப்பொழுது, எளியனை எனது மனத்தை வாட்டு கின்றது; ஆனாலும், என்னைச் சேர்ந்த எல்லாவற்றையும் தானம் பண்ணுவதற்கு ஒப்பான எனது "ஆலிங்கநத்தை" நான் இப்பொழுது இம்மகாத்துமாவான அநுமானுக்குக் கொடுத்தேன்" என்று சொல்லி, இராமர், தான் சென்ற காரியத்தைச் செய்துமுடித்துத் திரும்பிவந் திருந்த மகாத்துமாவாகிய அநுமானை, ஆனந்தத்தால் உடம்பு சிலிர்க்கக் கட்டிக்கொண்டார்.

இராமர் அநுமானைத் தழுவிக்கொள்ளுதல்.

அதன்பிறகு, சிறிது ஆலோசித்துப் பார்த்து, வானரரெல்லார்க்கும் மன்னவனுகிய சுக்கிரீவன் கேட்டுக் கொண்டிருக்கும்பொழுதே, பின்வருமாறு ரகுநந்தனர் சொல்லலானார்: — "சீதையுள்ளவிடத்தை நாடியறிதல் நன்முகச் செய்து முடிந்தது; என்முலும், நடுவிற் பெருங்கடலொன்றிருப்பதை ஆலோசித்துப்பார்த்து என்மனம் கெடுகின்றது. கரையில்லாத இப்பெருங்கடலின் தென்கரையை, எவ்வண்ணம் இவ் வானரர்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து அடைவார்கள்? சீதையின்சமாசாரம் நமக்கு இப்பொழுது தெரிந்தே விட்டது; ஆனாலும், இவ்வானரர்கள் சமுத்திரத்தைத் தாண்டும்வகை யென்ன?" என்று இவ்வாறு தமது சத் துருக்களை வருந்தச்செய்யும் இராமர், அநுமானைப்பார்த் துச் சொல்லிவிட்டு, பின்பு, சிறிது துக்கப்பட்டவராகச் சிந்திக்கலானார்.

கடல் கடப் பதைப்பற்றிய இராமரது சிந்தை.

இரண்டாஞ் சருக்கம்:
சுக்கிரீவன் இராமரைச் சாந்தப்படுத்துதல்.

சுக்கிரீவன் இராமரைச் சோகிக்கவேண்டாமென்றல்.

தசரதகுமாரரான இராமர் அவ்வாறு சோகத்தால் பரிதபிக்கும்பொழுது, சிமாஞன சுக்கிரீவன், அவரது துக்கத்தைப்போக்குஞ்சொற்களைப் பின்வருமாறு சொல்லலானுன்:—"வீரரே! சாதாரணமநுஷ்யன் பரிதபிப்பதுபோலத் தாங்கள் ஏன் பரிதபிக்கின்றீர்கள்? தாங்கள் இவ்வாறு இருத்தல் தகுதியன்று. செய்ந்நன்றியறியாதவன் சிநேகத்தை விடுவதுபோல, தாங்கள் சோகத்தைஅகற்றுங்கள். இராகவரே! சீதாதேவியின் சமாசாரத்தையும் நமதுபகைவரிருக்குமிடத்தையும் அறிந்த பிறகும், தாங்கள் துக்கப்படவேண்டிய காரணம் எனக்குப் புலப்படவில்லையே. இராகவரே! தாங்களோ கூர்மையான புத்தியுள்ளவர்கள்; சாஸ்திரங்களை நன்முகக் கற்றறிந்தவர்கள்; ஆராய்ந்துசெய்யுந் திறத்தைப் பெற்றவர்கள்; எல்லாவகைக் காரியங்களிலும் சாமர்த்தியமுள்ளவர்கள். யோகியாயிருப்பவன் நற்கதிக்கு விரோதமான புத்தியை விடுவதுபோல, ஊக்கத்தைக்கெடுக்கும் இப்பாபபுத்தியைத் தாங்கள் அகற்றுங்கள். பெருமுதலைகளால் நிரம்பியிருக்குஞ் சமுத்திரத்தை, நாம், இதோ, இச்சேனையைக்கடக்கச்செய்து, இலங்கையில் நுழைந்து, தங்கள் சத்துருவாகிய இராவணனை வதைப்போம். மிகவுஞ்சோகித்து, செய்யவேண்டிய காரியத்திற் சந்தோஷமின்றி, வெகுபரிதாபமானநிலையிலிருக்கின்றவனுடைய காரியங்களெல்லாம் கைகூடாமற் பாழாய்விடுகின்றன. அவன், பின்னும் துக்கமே யடைகிறுன். நமது இவ்வானரசேனைதிபர்களோ வெகுசூரர்கள். வல்லமை பொருந்தியவர்கள். உங்களுடைய இஷ்டப்படி நெருப்பிற் குதிப்பதற்கும் உத்ஸாஹங்கொண்டவர்கள். இவ்வானரர்கள் அவ்வாறு

உத்ஸாஹங்கொண்டுள்ளவரென்பதை, இவர்களுடைய முகமலர்ச்சியால் நான் அறிவேன். இப்படி நான் கொண்டிருக்கும் ஊகை சரியானதே. தங்கள துசத்துருவாகிய தீவினையைச்செய்த இராவணனை வதைத்து, சீதையை நான் திருப்பிக்கொண்டுவர எவ்வாறு முயற்சி செய்வேனே, அவ்வாறு, தாங்கள் ஊக்கங்கொள்ளவேண்டும். இராகவரே! இந்தச்சமுத்திரத்தில் சேதுகட்டி, அதன் வழியாக நாம் ராக்ஷஸராஜனுடைய அந்நகரத்தை எவ்வாறு சென்று காணவேண்டுமோ, அவ்வாறு, தாங்கள் இப்பொழுது உபாயத்தை ஆலோசியுங்கள். திரிகூடமலையின் உச்சியிலிருக்கும் இலங்கையை, நாம் பார்த்தமாத்திரத்தாலேயே, இராவணன் போரில் வதைக்கப்பட்டானென்று உறுதிகொள்ளுங்கள். பயங்கரமான சமுத்திரத்தின்மேற் சேதுவைக் கட்டாமல், தேவர்களும் அசுரர்களும் இந்திரனுடன் கூடி முயன்றாலும், இலங்கையை அழிக்கமுடியாது. நாம், இலங்கையின்சமீபம்வரையில் சமுத்திரத்திற் சேதுவை எப்போது கட்டிவிட்டோமோ, அப்போதே, நமது சேனைகளெல்லாம் கடலைக் கடந்தன வென்றும், வெற்றியை யடைந்தன வென்றும் உறுதியாகக் கருதுங்கள். இவ்வானரர்களோ போரில் மிகவும் வல்லவர்கள்; வேண்டியபடி ரூபமெடுத்துக்கொள்ளக் கூடியவர்கள்; ராக்ஷஸர்களுடன் இலங்கையைத் தூக்கிக் கொணரக்கூடிய சக்திமான்கள். ஆகையால், வேந்தே! எல்லாவிதமுயற்சியையும் பாழாக்குகின்ற தைரியக்குறைவான எண்ணத்தை விட்டிடுங்கள். இவ்வுலகத்தில் துக்கமென்பது புருஷனுடையபராக்கிரமத்தை முற்றிலும் போக்கிவிடுமன்றே. பேரறிவினரே! தைரியத்தைக் கைப்பற்றின மநுஷ்யனுல் எவ்வாறுனதைரியம் மேற்கொள்ளப்படுகின்றதோ, பராக்கிரமத்தினுல் அவ்வாறுன தைரியத்தை இப்போது மேற்கொள்ளுங்கள். மகாத்துமாக்களாகவும் சூரர்களாகவுமிருக்கும் தங்களைப்போன்ற

சுக்கிரீவன் சேதுகட்டினுல் காரியம் முடியுமென்றுகூறுதல்.

மநுஷ்யர்கள், காணப்படாத பொருளைப்பற்றியும் அழிந்துபோன பொருளைப்பற்றியும் துக்கப்படுவாராயின், அது அவர்கள் செய்துவரும் எல்லாக்காரியங்களையும் பாழாக்கிவிடுமே! ஐயா! தாங்களோ புத்திமான்களுக்குட் சிறந்தவர்கள்; சாஸ்திரங்களெல்லாவற்றையும் நன்கு கற்றறிந்தவர்கள்; ஆகையால், இப்பொழுது என்னைப் போன்ற மந்திரிகளுடன் கூடிச் சத்துருவை வெல்லுவது, தங்களுக்குத் தகுதியானது. ராகவரே! கையில் விற்பிடித்துப் போர்புரியத் தாங்கள் நிற்கையில், எதிராகப் போர்செய்பவனெருவனையும் இம்மூவுலகத்திலும் காணேம். வாநரர்கள்மூலமாக நடக்கவேண்டிய தங்கள் காரியம் குறைவுபடாது; எல்லையிலடங்காத இக்கடலைக் கடந்து, தாங்கள் சீதையைச் சடிதியிற் காண்பீர்கள். ஆதலால், சோகமென்பதை விட்டிடுங்கள். அரசரே! கோபமென்பதைக் கைப்பற்றுங்கள். முயற்சியற்றுப் பாக்கிய ஹீநரான க்ஷத்திரியர்கள், கடுங்கோபமுடைய அரசனைக் கண்டு நடுங்குகின்றார்கள். நதீபதியாகிய பயங்கரமான கடலைக் கடப்பதற்கு, இப்போது, எங்களுடனிருந்து நுண்ணறிவோடு ஆலோசியுங்கள். எனது சேனைகளெல்லாம் இச்சமுத்திரத்தைத் தாண்டினால், பின்பு வெற்றி கிடைத்ததென்றே எண்ணுங்கள். போரில் வல்லவர்களும் வேண்டியவடிவைக் கொள்ளக்கூடியவர்களுமான இவ்வாநரர்கள், மரங்களையும் மலைகளையும் பொழிந்து, அந்தச் சத்துருக்களை எரித்துவருவார்கள். எப்படியாவது சமுத்திரத்தை நாம் தாண்டியே தீர்வோம்; ஆகவே, போரில் மகிழ்பவரே! சத்துருவாகிய இராவணனை யுத்தத்திற் கொன்றதாகவே நினைக்கிறேன். பலபடியாகச் சொல்வதிற் பயன் என்ன? எப்படியும் இனித் தாங்கள் வெற்றியுடன் விளங்கப் போகின்றீர்கள். சுபசகுனங்களையும் நான் காண்கின்றேன். என்மனமும் வெகுசந்தோஷத்துடனிருக்கின்றது."

வெல்வது நிச்சயம்.

மூன்றுஞ் சருக்கம்:

இலங்கையின் கோட்டை முதலியவற்றை இராமரிடம் அநுமான் சொல்லுதல்.

உண்மைப்பொருளை யுணர்ந்தவரான இராமர், யுக்தியுக்தமான சுக்கிரீவன்சொல்லைக் கேட்டு, ஒப்புக்கொண்டு, பிறகு, அநுமானைநோக்கிச் சொல்லலானார்:— "எனது தவத்தின் மகிமையினாலே சேதுவைக் கட்டி முடித்தாவது, வற்றச்செய்தாவது இக்கடலைக் கடக்க எப்படியும் எனக்கு வல்லமையுண்டு. அநுமானே! இலங்கையை ஒருவராலும் தகையமுடியா தென்கிறார்களே; அதில், எத்தனைகோட்டைகளிருக்கின்றன? அவற்றை எனக்குச்சொல்லுக. அரக்கர்களுடைய சேனையின் அளவு, வாயில்களில் துர்க்கங்களின் அமைப்பு, இலங்கை பாதுகாக்கப்பட்டுவரும்விதம், அரக்கர்களின் மாளிகைகள் ஆகிய இவைகளெல்லாவற்றையும் நேரிற் கண்டதுபோல அறிய விரும்புகின்றேன். நீ சங்கையின்றி உள்ளபடி இலங்கையிற் பார்த்திருக்கிறாயன்றே! பார்த்தவைகளையெல்லாம் பார்த்தபடிசொல்லுக. நீ எல்லாப்படியாலும் வல்லவனன்றே!" என்றார்.

இராமர் இலங்கையின் கோட்டை முதலியவற்றைக் குறித்து அநுமானை வினவல்.

வாயுவின்குமாரனான அநுமான், இவ்விதமாகஇராமர் சொன்னதைக் கேட்டு, பேசுவதில் மிகவும் சமர்த்தனுகையால், பின்வருமாறு சொல்லலானான்:—"நன்றுகக்கேளுங்கள்: கோட்டைமுதலிய பாதுகாப்பால் இலங்கை எவ்வாறு ரட்சிக்கப்படுகின்றதோ, அரக்கர்களுடைய சைனியம் அந்நகரத்தை எவ்வாறு காக்கின்றதோ, அவற்றை நான்

ஒன்றுவிடாமற் சொல்லுகின்றேன். அரக்கர்கள் இராவணனிடம் எவ்வாறு அன்புடனிருக்கின்றார்களோ, இராவணனுடைய வல்லமையினுற் சம்பாதிக்கப்பட்ட இலங்கையின் ஒப்பற்ற ஐசுவரியம் எவ்வளவோ, சமுத்திரத்தின் பயங்கரமான தோற்றம் எப்படிப்பட்டதோ, சேனைகளின் வகுப்புக்கள் எவ்வளவோ, யானை குதிரை முதலிய வாகனங்களின் தொகை எவ்வளவோ, ஆகிய எல்லாவற்றையும், இப்பொழுது சொல்லுகின்றேன்; கேளுங்கள்" என்று இவ்வண்ணஞ்சொல்லி அவ்வானரசிரேஷ்டன் உண்மையாகச் சொல்லலானன்: —"கொழுத்த யானைகளால் நிரம்பிய இலங்கை, உத்ஸாஹமுள்ள ஜநங்களைக் கொண்டிருக்கின்றது; பெரிய இரதங்கள் நிறைந்து, அரக்கர்களின் கூட்டங்கள் எங்குஞ் சஞ்சரிக்கும்படி விசாலமாக விளங்குகின்றது; குதிரைகள் அதிகமாக நிரம்பிய அப்பட்டணத்தில் சத்துருக்களால் எளிதில் நுழையமுடியாது. உறுதியாக அமைக்கப்பட்ட கதவுகளையுடையனவும் உழலைமரங்களைக்கொண்டனவும் மிகப்பெரியனவும் விசாலமுமாகிய நான்குவாயில்கள் அந்நகரத்தி லிருக்கின்றன; அவைகளில் அம்புகளைக் கக்குவனவும் கற்களையெறிவனவுமாகிய வலிய பெரிய யந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளன: சத்துருக்களின் சைனியம் அக்கோட்டைவாயிலில் வரும்பொழுதே அவைகள் கொன்றுவிடுகின்றன. கோட்டைவாயில்களில், பயங்கரமானவைகளும் கறுப்பான இரும்பாற்செய்யப்பட்டவைகளும் கூர்மையுள்ளவைகளுமான * சதக்நியென்ற ஆயுதங்

அநுமானுடைய மறுமொழி: இலங்கையினமைப்பு.

* சதக்நி என்றால், நூறுபெயர்களைக் கொல்லவல்லது என்று அருத்தமாகின்றது. இது பழையகாலத்துப் பீரங்கி யென்று சிலர் சொல்வதுண்டு. சிலர், இருப்பாணிகள் முட்கன்போல் விளங்கிக்கொண்டிருக்கும் ஒரு விதத்தடி என்பர். இன்னும் சிலர், 4, 5—முழ நீளமுள்ள ஈட்டிபோன்ற ஓராயுதம் என்று சொல்லுவர்.

கள், நூற்றுக்கணக்காக, வீரர்களான ராக்ஷஸர்கூட்டங்க ளால் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்நகரத்தின்மதில், பொன்னு லெடுக்கப்பட்டு, வெகுஉன்னதமாக விளங்கு கின்றது. அம்மதில், ஆங்காங்கு, பத்மராகம், பவ ழம், வைடூரியம், முத்து இவைகளாற் பதிக்கப்பட்டி ருக்கின்றது. அம்மதிலைச் சூழ்ந்து, எல்லாப் பக்கங்களி லும், குளிர்ந்தஜலம் நிரம்பி, அழகாய், அளவிடமுடியாத ஆழமுடையனவாய், முதலைகளும் மீன்களும் நிரம்பியுள்ள பயங்கரமான அகழிகள், வெட்டப்பட்டிருக்கின்றன. அவ்வகழிகளைக் கடக்க, நான்கு வாயில்வழிகளிலும், நீண்ட பாலங்கள் நான்கு இருக்கின்றன. அவைகளில் அநேக விதயந்திரங்களும் வாயிற்காவலர் வாழும் பெரிய வீட்டு வரிசைகளும் இருக்கின்றன. சத்துருக்களின் சைனியங் கள் வரும்பொழுது, அந்நகரத்தை அப்பாலங்கள் காக் கின்றன; அப்போது, அப்பாலங்கள் யந்திரங்களால் உட் புறமாக இழுத்துக்கொள்ளப்படுகின்றன. அப்பாலங் களுக்குள் ஒருபாலம், ஒருவராலும் அசைக்கமுடியாதபடி வெகுஉறுதியாகக் கட்டப்பட்டிருக்கின்றது; அதில், பொன்னுற் செய்யப்பட்ட பல தம்பங்களும் திண்ணை களும் இருக்கின்றன. இராமரே! இராவணனே, சூது முதலியதீக்குணங்க ளின்றி அவதானமாக இருந்து கொண்டும், ஜாக்கிரதையாகத் தினந்தோறும் தனது சைனியங்களை நேரில்வந்து பார்த்துக்கொண்டும் யுத்தத்துக் குச்சித்தமாகக் காத்துக்கொண்டிருக்கின்றான். மேலும், இலங்கையோ, தன்மீது ஏறுவதற்கு ஒருவகைப் பிடிப்பு மின்றித் தேவர்களாலும் அணுகவொண்ணாததாய்ப் பயங் கரமாக விருக்கின்றது. நீரரண், மலையரண், காட்டரண், நிலவரண் என்ற நான்குவகை யரண்களும் இலங்கைக்கு இருக்கின்றன. வெகுதூரத்திற் கரையைக்கொண்டுள்ள சமுத்திரத்துக்குத் தென்கரையில், அந்நகரம், இருக்கின்ற து. மரக்கலவழியும் அவ்விடத்திற்கு இல்லை: அதனால்தான்

அவ்விடத்தியசமாசாரம் எங்கும் வருவதில்லை. அவ்விலங் காபுரியோ, ஒரு மலையின் உச்சியிற் கட்டப்பட்டு, ஒருவரா லும் அணுகமுடியாமல், இந்திரனுடைய நகரத்துக்கு ஒப் பாக விளங்குகிறது. யானைகளா லும் குதிரைகளா லும் நிரம்பியிருக்கும் அவ்விலங்கையை, ஒருபொழுதும் வெல்ல முடியாது. கொடிய இராவணனுடைய அந்நகரமானது, உழலைத்தடிகளா லும் சதக்கிகளா லும் மற்றும்பலவித யந்திரங்களா லும் விளங்கிக்கொண்டிருக்கின்றது.

இலங்கையின் வாயிற்காவல்.

தங்கள் கைகளிற் சூலங்களைப் பிடித்துக்கொண்டு, பிறரால் ஒருபொழுதும் வெல்லமுடியாதவர்களாய், எல் லோரும் கத்திமுனையாற் போர்புரியக்கூடியவர்களாய் விளங்கும் அரக்கவீரர்கள் பதினாயிரம் பெயர்கள், அவ்விலங்கையின் கிழைக் கோட்டைவாயிலிற் காவலிருக்கின்றார்கள். அக்கோட்டையின் தென்வாயிலில், லக்ஷம் அரக்கர்கள், காவல் காக்கின்றார்கள்; அவர்கள் நான்குவிதசேனைக ளுடன், தங்களுக்குமேற் போர்வீரர்களில்லை யென்னும் படி போர்புரிய வல்லவர்கள். அக்கோட்டையின் மேலை வாயிலில், எல்லாரும் கத்தியும் கேடயமும் ஏந்தி, எல்லா வித ஆயுதப் பயிற்சியிலுஞ்சிறந்தவர்களாய் விளங்கும் பத்துலட்சம் அரக்கர்கள் இருக்கின்றார்கள். வடக்குக் கோட்டைவாயிலில், தேரேற்றத்திலும் குதிரையேற்றத் திலும் தேர்ந்தவர்களாய் உயர்குலத்திற்பிறந்தவர்களான ஆயிரம் லட்சம் அரக்கர்கள் இருக்கின்றார்கள். நகரத்தின் நடுவிலோ, ஒருவரா லும் தகையமுடியாத அரக்கர்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் கோடிக் கணக்காகவும் இருக்கின்றார்கள்.

அரண்கள் அழிந்தமையை அநுமான் காரணத்துடன் கூறல்.

ஆனால், நானோ, அப்பாலங்களை யெல்லாம் முறித் தேன். அகழிகளைத் தூர்த்தேன்: இலங் கையையே தீயிட்டு எரித்தேன்: மதில் களையும் இடித்தேன்: பேருருவத்தை யுடைய அரக்கர்களில் ஒரு பாகத்தை நாசம்பண்ணினேன். எவ்விதமாகவாவது

நாம் சமுத்திரத்தைத் தாண்டிவிடுவோமாஞல், வாநரர்களால் இலங்கை அழிக்கப்பட்டதென்றே உறுதியாக எண்ணுங்கள்.

இலங்கையை யழிக்க, அங்கதன், த்விவிதன், மைந்தன், ஜாம்பவான், பநஸன், நளன், சேனைத்தலைவனுன நீலன் இவர்கள் மட்டுமே போதும்; மற்றை வாநரசேனை தங்களுக்கு எதற்கு? இவர்கள் சமுத்திரத்தைக் கடந்தவர்களாய், இராவணனுடைய பெரிய பட்டணத்திற் புகுந்து, மலை காடு அகழி வாயில் பிராகாரம் மாளிகை இவைகளோடு கூடிய இலங்கையையே பிளந்து, இங்குத் தூக்கிவந்துவிடுவார்கள். இவ்வண்ணம் செய்யுமாறு, சீக்கிரமாக, இவ்வாநரசேனைகளுக்குள் ஸாரமான அங்கதன் முதலியோர்க்குக் கட்டளையிடுங்கள். நல்ல வேளையிலே பிரயாணத்தை விரும்புங்கள்."

சில வாநர வீரர்களின் திறமை.

நான்காஞ் சருக்கம்:
வாநரசேனை புறப்பட்டுக் கடற்கரையைச் சேர்தல்.

அநுமான் ஒன்றும்விடாமல் அவ்வாறு சொன்னதைக் கேட்டு, மஹாபலவானும் தடைப்படாத பராக்கிரமத்தையுடையவருமான இராமர், உடனே சுக்கிரீவனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானர்:—"பயங்கர மான அரக்கனுடைய நகரமென்று எந்த இலங்கையைப்பற்றித் தெரிவிக்கின்றீரோ, அப்பட்டணத்தை, நான் சடதியில் நாசம் பண்ணிவிடுகின்றேன்: இது உண்மை. சுக்கிரீவ! இந்த முகூர்த்தத்திற் பிரயாணத்தைத் தொடங்க விரும்புகின்றேன். சூரியபகவான் உச்சியிலிருக்கும் இம்முகூர்த்தந்

இராமர் அந்த நல்ல முகூர்த்தத்தில் வாநரசேனையுடன் புறப்படுமாறு சுக்கிரீவனை ஏவுதல்.

தான், வெற்றிக்கு எடுத்த முகூர்த்தம். சூரியன் உச்சியை யடைந்துள்ள இவ்விஜயமுகூர்த்தத்தில் நான் புறப்பட்டால், சீதையை எடுத்துப்போனவன் எங்கு ஓடியிருந்தால்தான் என்ன? அவனை உயிருடன் விடமாட்டேன். விஷத்தையுண்டு பீடிக்கப்பட்ட ஒரு புருஷன், உயிர் போகுந்தருணத்தில் அமிருதத்தைத் தனதுகையால் தொட்டால், தான் ஒருகால் பிழைக்கலா மென்று எவ்வாறு கொஞ்சம் நம்பிக்கையுள்ளவ னுவானை, அவ்வாறே, சீதையும், நான் யுத்தத்துக்குப் புறப்பட்ட சமாசாரத்தைக் கேட்பாளேயானால் தனது பிராணன்மேற் கொஞ்சம் ஆசைவைப்பாள். இன்று * உத்தரநட்சத்திரம்: நாளைக்கோ சந்திரன் ஹஸ்தநட்சத்திரத்துடன்சேர்கின்றன். ஆகையால், சுக்கிரீவ! நாம் இப்பொழுதே வாநரர்களெல்லாரும் சூழப் பிரயாணப்படுவோம். அன்றியும், இப்பொழுது தோன்றும் நிமித்தங்கள் நமது பாக்கியத்தை எடுத்துக்காட்டும். நான் இராவணனைக்கொன்று சீதையைமீட்டுவருவேன். எனது † இடக்கண்ணின் மேலிமை துடிப்பதானது, என் மனோரதமாகிய வெற்றி கைகூடியதென்று வெளியிடுகின்றதுபோலும்" என்றார்.

அப்போது, ஸ்ரீராமரைச் சுக்கிரீவனும் இலட்சுமணரும் புகழ்ந்து மரியாதைசெய்ய, எல்லாவிஷயங்களையும் நன்றாக அறிந்த தருமமூர்த்தியாகிய இராமர், மறுபடியும் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்:—"வெகு பல சாலிகளான வாநரர்கள் நூறாயிரவர் தன்னைச் சூழ்ந்து நடக்க, நீலன், இச்சேனைக்கு முன்பாக, வழியை நன்றாகச்

*உத்தரம்-ஸ்ரீராமருடைய நட்சத்திரத்திற்கு 6-ஆவது நட்சத்திரமாகையால், அது ஸாதகத்தாரை; அதாவது-எடுத்தகாரியத்தைச் சரிவரநிறைவேற்றிவைக்கும் தாரையாம்; ஹஸ்தம்-7-ஆவது நட்சத்திரமாகையால், அது வதத்தாரை; ஆகவே, அந்த நட்சத்திரத்திற் புறப்பட்டால், இராமருக்கு வதம் நேரு மென்க.

† இடக்கண்ணின்மேலிமைதுடித்தல் - மனத்துயரைமாற்றும் அறிகுறி யென்பது, ஜ்யோதிஷநூலார்கொள்கை யென்பர்.

சோதித்தலின்பொருட்டுப் போகட்டும்; ஐயா! சேனை பதியாகிய நீலனே! கனிகளும் கிழங்குகளும் நிரம்பிக் குளிர்ந்த காடுகளும் ஜலமும் நிறைந்து தேனை அதிகமாகக்கொண்டுள்ள வழியாகச் சேனையை விரைவாக நடத்திக்கொண்டுசெல். கொடிய அரக்கர்கள், வழியிலிருக்கும் கனிகளையும் கிழங்குகளையும் ஜலங்களையும், ஒருகால், உணவுக்கு உதவாதபடி கெடுத்துவிடுவார்கள்: ஆகையால், அப்படி அவர்கள் செய்யாதிருக்குமாறு, எப்போதும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பள்ளத்தாக்குகளிலும், நீர்நிரம்பிய இடங்களிலும், காடுகளிலும் பகைவர்கள் தங்கள் சைனியங்களை ஒளித்துவைத்திருப்பார்கள்: ஆகையால், அவ்விடங்கள் காணப்படும்பொழுதெல்லாம் வாநரர்கள் அவைகளிற் பாய்ந்து, புகுந்துபார்த்துக்கொண்டே போகவேண்டும். நமதுசேனைக்குள் வல்லமையில்லாதவர்கள் யாராவது இருந்தால், அவர்களெல்லாரும் இவ்விடத்திலேயே நின்றுவிடுவது நலம்; ஏனெனில், "நாம் இப்பொழுது ஆரம்பித்திருக்குங் காரியமோ வெகுபயங்கரமானது; வெகுவல்லமைபொருந்தியவர்களே இதில் தலையிடத்தகுந்தவர்கள். நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவுமுள்ள வெகுபலம் பொருந்தியவர்களான வாநரசிரேஷ்டர்கள், சமுத்திரத்தின்வெள்ளம்போற் பெருகியிருக்கின்ற இச்சேனையை நடத்திக்கொண்டு முன்னேசெல்லட்டும். மலையையொத்த கஜனும், மகாபலம்பொருந்திய கவயனும், கவாக்ஷனும், பசுக்களின்முன்னே கொழுத்தஎருதுகள் நடப்பதுபோலச் சேனைகளுக்குமுன்னே செல்லட்டும். வாநரர்களுக்குட் சிறந்தவனான ரிஷபன் வாநரசேனையின் வலப்பக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டு போகட்டும். அடக்கமுடியாமல் மதயானைபோல வெகுபலத்துடன்விளங்குங் கந்தமாதனன், வாநரசேனையின் இடப்

இராமர், வாநர சேனையில் இன்ன இன்ன இடத்தில் இன்னார் இன்னார் வரவேணு மென்றல்.

பக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டு போகட்டும். இந்திரன் ஐராவதத்தின்மேல் ஏறிச்செல்வதுபோல, நான் அது மான்மேல் ஏறி வாநரசேனைகளின் மனத்தைக் களிப்பித் துக்கொண்டு, சேனைகளின் நடுவிற் செல்வேன். யமதர்ம ராஜனுக்கு ஒப்பான இலட்சுமணன், அங்கதன்மேலேறிக் கொண்டு, செல்வத்துக்குத் தலைவனுய் யக்ஷர்கட்கு அதிபதி யாகிய குபேரன் ஸார்வபௌமமென்ற வடதிசையானை மேல்ஏறிச்செல்வதுபோலச் செல்லட்டும். மகாபலம்பொ ருந்திய ருக்ஷர்களுக்கு மன்னவனும், ஜாம்பவான் ஸு ஷேணன் வேகதர்சியென்னும்வாநரன் ஆகிய இம்மூவ ரும், வாநரசேனையின் வயிற்றுப்புறத்தைப் பாதுகாத் துக்கொண்டு வரட்டும்'' என்றார்.

இராம லக்ஷ்மணர் சுக்கிரீவசேனை யோடு புறப் படுதல்.

வாநரசேனைகளுக்கெல்லாம் நாயகனுய் வாநரசிரேஷ் டனான சுக்கிரீவன், ஸ்ரீராமரிட்ட கட்ட ளையைக் கேட்டதும், மஹாவீரர்களான வாநரர்களுக்கு உடனே புறப்படுமாறு கட்டளையிட்டான். போர் செய்வதில் வெகு ஆசையுடன் கூடியிருந்த அவ்வாநர கணங்கள், அப்போது, பர்வதங்களின் குகைகளிலிருந்தும் சிகரங்களிலிருந்தும் விரைவாகக் கிளம்பின. வாநர மன்னவனான சுக்கிரீவனும் இலட்சுமணரும் மரியாதை யுடன் தொடர்ந்துவர, தர்மாத்துமாவாகிய இராமர், சைனி யங்களுடன் தென்திசையைநோக்கிப் பிரயாணமானர். அப்பொழுது, இராமர் நூற்றுக்கணக்காகவும் நூருயிரக் கணக்காகவும் கோடிக்கணக்காகவும் பதினுயிரகோடிக் கணக்காகவும் யானைகளைப்போன்ற வாநரர்கள் தம்மைச் சூழ்ந்துவரச் சென்றார். அவ்வாறு அவர் புறப்பட்டபொ ழுது, அப்பெருவாநரசேனை உடன்புறப்பட்டது. சுக்கிரீ வன் அச்சேனைகளையெல்லாம் பாதுகாத்துக்கொண்டுவர, அவ்வாநரர்களெல்லாம், வெகுஉத்ஸாஹமாகச் செருக் குடன் தாண்டிக்கொண்டும், தாவிக்கொண்டும், கர்ஜித்

துக்கொண்டும், சிங்கங்கள்போலப் பெருமுழக்கஞ்செய்து கொண்டும், ஓடிக்கொண்டும், இடைவழியில் நறுமண முள்ள தேனைக் குடித்துக்கொண்டும், கனிகளைப்புசித்துக் கொண்டும், பூங்கொத்துக்கள் கொத்துக் கொத்தாக விளங் கும் மரங்களைப் பிடுங்கிக் கைகளில்ஏந்திக்கொண்டும்தென் திசையை நோக்கி நடக்கலானார்கள்.அப்போது, தங்கள்பல த்தினற்செருக்கி, அவ்வானரர்கள், ஒருவரை யொருவர் திடீ ரென்று தூக்கியெறிவார்கள் ; சிலர், கீழ் விழுந்து, விழுத் தினவினை வாயால் அதட்டுவார்கள் ; சிலர், விழுத்தியவ னைப் பூமியில் தள்ளுவார்கள் ; சிலவானரர், எல்லா அரக்கர்களுடனும் இராவணனை நாங்கள் கொல்லவேண்டு மென்று இராமரருகில் கர்ச்சித்துக்கொண்டுபோவார் கள். வீரனன ரிஷபன், நீலன், குமுதன் என்ற இவர்கள், பலவானரர்களுடன் முன்பாக வழியைச் சோதித்துக் கொண்டே சென்றார்கள். நடுவில், வானரமன்னவனகிய சுக்கிரீவன் இராமர் இலட்சுமணர் என்ற இவர்கள், சத் துருக்களைக்கொல்லும் வல்லமையுள்ள வெகு பலசாலி களாய்ப் பயங்கரரான வானரர்களாற் சூழப்பட்டிருந்தார் கள். வீரனகிய சதவலி யென்ற வானரன், பத்துக்கோடி வானர சேனையுடன் தான் ஒருவனுகவே எல்லா வானர சேனைகளையும் மேற்பார்வைபார்த்துக்கொண்டு சென் றான். கேஸரீ, பனஸன், கஜன், மஹாபலசாலியான அர்க்கன் என்ற இவர்கள், தங்கள் நூறுகோடி வானர சேனையோடு, அச்சேனையின் ஒருபக்கத்தை ரட்சித்துக் கொண்டுபோனார்கள். அச்சேனையின் பின்பாகத்தை, சுக்கிரீவன முன்னிட்டுக்கொண்டு, ஸுஷேணன் ஜாம் பவான் என்ற ருக்ஷசேனபதிகள், அநேகருக்ஷர்க ளோடு பாதுகாத்துக்கொண்டு நடந்தார்கள். வானரசிரே ஷ்டனும் வீரனும் எல்லாச்சேனைகட்கும் தலைவனுமான நீலன், வழியைச் சோதித்துக்கொண்டு தான் முன்னேசெ ன்றதும், தாவிச்செல்வதில்வல்லவனதலால், அச்சேன

முழுவதையும் பாதுகாத்துக்கொண்டே சென்றான். தரீமுகன், பிரஜங்கன், ரம்பன், ரபஸன் என்ற இவ்வானர வீரர்கள், எல்லாப் புறத்திலும் வானரர்களைத் துரிதப் படுத்திக்கொண்டு சென்றார்கள்.

ஸஹ்யமலை.

இவ்வாறு அவ்வானரப்புலிகள், தங்கள் வலிமைச் செருக்கால் நடந்துசென்று, மரங்களும் கொடிகளும் நிரம்பிய ஸஹ்யமென்னுஞ் சிறந்ததொருபருவதத்தைக் கண்டார்கள். அம்மலையிலிருந்த பொய்கைகளும் சுனைகளும் காடுகளும் பூத்துவிளங்கின. சமுத்திரம்போலப் பேரொலி செய்துகொண்டிருந்த அந்தப் பெரிய கொடிய வானரசேனையானது, மிக்க கோபமுள்ள இராமருடைய கோபத்துக்காகப் பயந்ததுபோலப் பட்டணங்களின் சமீபத்தையும் நாடுகளின்சமீபத்தையும் அணுகாமல், விலகிப்போயிற்று. அன்றியும், யானைகள் போன்ற அவ்வானரவீரர்களெல்லாரும், சம்மட்டியாலடிக்கப்பட்ட நற்குதிரைகள்போல, இராமருடைய பக்கத்திற் குதித்துக்கொண்டு, சென்றார்கள். அநுமான் அங்கதன் இவர்கள்மேல் ஏறிக்கொண்டு சென்ற இராமலட்சுமணர்கள், சுக்கிரபிருகஸ்பதிகளுடன் சேர்ந்த சந்திரசூரியர்கள்போல் விளங்கினார்கள். அப்போது, வானரமன்னவனுகிய சுக்கிரீவனும் இலட்சுமணரும் மரியாதைபண்ணிக்கொண்டுதொடர்ந்துவர, இராமர் தென்திசையைநோக்கிப் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார்.

அப்பொழுது, அங்கதன்மேல் ஏறிக்கொண்டு மன மகிழ்ச்சியுடன் வருகின்ற இலட்சுமணர், தமது நுண்ணறிவாலும் படிப்பாலும் தாம் கண்ட சில விஷயங்களை, இனிமையான சொற்களால் இராமரிடம் பின்வருமாறுசொல்லலானார்:—"இராகவரே! தாங்கள், சீதையைத் தூக்கிச்சென்ற இராவணனைச் சீக்கிரம் வதைத்துச் சீதை

யை மீட்டுக்கொண்டு காரியங் கைகூடப்பெற்றவர்களாய், எல்லாப்பொருள்களாலும் நிரம்பிய அயோத்திக்குத் திரும்புவீர்கள். நாம் எடுத்த எல்லாக்காரியங்களும் கைகூடுமென்பதை யுணர்த்த, சிறந்த நற்சகுனங்கள் பூமியிலும் ஆகாயத்திலும் தோன்றுவதைக் காண்கின்றேன். நமதுசேனைக்குஅநுகூலமாகக் குளிர்ந்த மெல்லிய இனிய காற்றுவீசுகின்றது, சுபத்தைத் தெரிவிப்பதாக வீசுகின்றது. மிருகங்களும் பறவைகளும், நிறைந்த இனிய குரலுடன் கூவுகின்றன. எல்லாத் திசைகளும், தெளிவாக விளங்குகின்றன. சூரியபகவானும் நிர்மலமாகப் பிரகாசிக்கின்றார். தெளிவான ஒளியையுடையராய்ப் பிருகுவின் குமாரராய் வேதவித்தாகிய * சுக்கிரரும், பாபகிரகங்களின் சேர்க்கையில்லாமல் தங்களுக்குப்பின்னே இருக்கின்றார். பரிசுத்தர்களாய் மிக்கஒளியையுடைய ஸப்தரிஷிகளும், துருவனுக்குத் தென்புறத்தில் விளங்குகின்றார்கள். மஹாத்மாக்களான இக்ஷ்வாகுவமிசத்தைச்சேர்ந்த நமது மூதாதையரான திரிசங்குவும், விசுவாமித்திரஸ்ருஷ்டியிற் சேர்ந்தநக்ஷத்ரரூபியான வசிஷ்டகுருவுடன் நிர்மலமாக விளங்குகின்றார். மஹாத்மாக்களான இக்ஷ்வாகுவமிசத்தாராற் கொண்டாடத்தக்க இரட்டையான விசாகநட்சத்திரம், பாபநட்சத்திரசம்பந்தமில்லாமல் விளங்குகின்றது. நிருருதியைத்தேவதையாகக்கொண்டதும் அரக்கர்கட்கு உரியதுமான மூலாநட்சத்திரம், விநாசத்துக்கு அறிகுறியான தூமகேதுவினால் தீண்டி எரிக்கப்படுகின்றது. இவ்வாறு, மிருத்யுவினிடத்திற் சிக்கினவனுக்கு, அந்திமகாலத்திற்கு அறிகுறியாக, நட்சத்திரமும் கிரகத்தாற் பீடிக்கப்பட்டிருக்கின்றது. தீர்த்தங்கள், தெளிவாயும் ருசியுள்ளனவாயு மிருக்கின்றன; வனங்களெல்லாம், கனிகளால்

இலட்சுமணர் இராமரிடத்து நன்னிமித்தங்களைக் கண்டு மகிழ்ந்து கூறல்.

* பிரயாணத்தில் முன்புறத்திற் சுக்கிரனிருந்தால், அபசகுனம்; பின் இருந்தால் சகுனம் என்பது கொள்கை.

நிரம்பியிருக்கின்றன; விருக்ஷங்களெல்லாம், பருவத்திற்கு ஏற்ற புஷ்பங்களையுடையனவாய் மிகவும் நறுமணம் வீசுகின்றன. பிரபுவே! தாரகாசுரனுடன் போர்புரியச்சென்ற தேவர்களின் சேனைகள்போல, அணிவகுக்கப்பட்டுள்ள வாநரசேனைகள் மிகவும்விளங்குகின்றன. ஆரியரே! இவைகளையெல்லாம் கண்ணுற்றுக் களிப்படையுங்கள்" என்று இவ்வாறு இலட்சுமணர் தமது தமையனுர்க்குத் தேறுதலுண்டாகுமாறு கூறினர்.

அப்போது, பற்களையும் நகங்களையும் ஆயுதமாகப் பெற்ற சிறந்த ருக்ஷர்களும் வாநரர்களும் நிரம்பிய பெரியசேனை, பூதலம் முழுவதையும் மறைத்துக்கொண்டு, நடந்தது. அவர்களுடைய கைகளாலும் கால்களாலும் கிளப்பப்பட்ட தூளியானது, சூரியபகவானுடையஒளியையும் மறைத்து, வெகு பயங்கரமாக இவ்வுலகத்தையும் மூடிற்று. மேகவரிசைகள் ஆகாயத்தை மூடிக் கொண்டு செல்வதுபோல, பயங்கரமான அந்தவாநரசேனை, காடுமலைகளால் நிரம்பிய தென்திசையை மறைத்துக்கொண்டு சென்றது. அவ்வாநரசேனை இடைவிடாமற் கடந்து செல்லும்பொழுது, குறுக்காகவுள்ள எல்லா நதிகளின் பெருக்குக்களும் பலயோஜனதூரம் எதிர்த்தோடுவதுபோலப் பெருகின. அச்சேனை, தெளிவான நீர்நிரம்பிய பொய்கைகளில் இடையிலும், மரங்களடர்ந்த மலைகளிற் குறுக்காகவும், சமமாகவிருக்கும் பூமிபாகங்களில் நான்குபுறத்திலும், கனிகள் நிறைந்திருக்கும் காடுகளிற் கீழ்ப்புறத்திலு மாகப் புகுந்து சென்றது. அப்பெருஞ்சேனை, பூமிமுழுவதையும் இவ்வாறு மறைத்துக் கொண்டு, நடந்தது. அச்சேனையிலிருந்த வாநரர்களெல்லாரும், இராம காரியத்தைச் செய்வதில் வல்லமை வளரப்பெற்றவர்களாய், வெகுசந்தோஷ மனத்துடன் வாயுவேகமாக நடந்தார்கள்; அன்றியும், களிப்பு வீரியம்

வாநரசேனையின் பிரயாண வருணனை.

பலம் இவை தமக்கு மிக்கிருப்பதை, ஒருவர் மற்றொருவர்க்குக் காண்பித்துக்கொண்டும், நல்ல யௌவநகாலத்திற் கொழுத்துச்செய்யுந் தொழில்களை வழியிற் செய்துகொண்டும் சென்றார்கள். அங்கு, சிலர், வேகமாக நடந்தார்கள்; வேறு சிலர், குதித்தார்கள்; மற்றுஞ் சில வாநரர், காடுகளிற் புகுந்து செல்லும்பொழுது, கில கில வென்று சத்தம் பண்ணினர்கள்; பின்னுஞ் சிலர், வாலைப் பூமியில் அடித்தும், பாதங்களால் ஓங்கிப் பூமியில் உதைத்துஞ் சென்றார்கள்; சிலர், தங்கள்கைகளை நீட்டி மலைகளையும் மரங்களையும் முறித்தார்கள்; சிலர், மலைநேரிடும் போது அதன்சிகரங்களில்லறிப் பெருஞ்சத்தமிட்டார்கள்; சிலர், சிங்கநாதஞ்செய்தார்கள்; சிலர், தாங்கள் சென்ற தொடைகளின்விசையால் வழியிலிருந்த கொடிவரிசைகளைத் துவைத்தார்கள்; சிலர், தங்கள் வல்லமையைக்காட்டி, மலைகளையும்விருக்ஷங்களையுங்கொண்டு விளையாடினர்கள். இவ்வண்ணம் நூறு ஆயிரம் பதினாயிரம் கோடிக்கணக்கான கொடிய வாநர சைனியங்களால், பூமி, அழகாக மூடப்பட்டிருந்தது. சேனாபதியையுடைய அப்பெரிய வாநரசேனை, இரவும் பகலும் வெகு ஆதரவுடன் சுக்கிரீவன் பாதுகாத்துவர, முகமலர்ச்சியுடனும் மிக்க களிப்புடனும் போய்க்கொண்டிருந்தது. சீதாதேவியை விடுவிக்கக் கருதி, ஒரு நிமிஷமாவது இளைப்பாறுமல், வாநரர்களெல்லோரும் போர்செய்வதில் விருப்பங்கொண்டவர்களாய் விரைந்துசென்றார்கள்.

ஸஹ்யமலையும், வாநரவீரர்களும்.

பிறகு, மரங்களடர்ந்து, பலவிதமிருகங்கள் சஞ்சரிக்கும்படி விளங்கும் ஸஹ்யமலையையும் மலயமலையையும் வந்து அடைந்தார்கள். ஸஹ்யம் மலயம் என்ற மலைகளிலிருந்த அழகானகாடுகளையும், நதிகளையும் அருவிகளையும் பார்த்தபடியே, இராமர் போய்க்கொண்டிருந்தார். வாநரர்களோ, அம்மலைகளிலிருந்த மூங்கிழ், தில

கம், மா, அசோகம், கருநொச்சில், கரவீரம், திமிசம், அங்கோலம், கரஞ்சம், ப்லக்ஷம், ஆல், திந்துகம், நாவல், நெல்லி, கடம்பு முதலிய மரங்களே ஓடித்துவிழுத்தினர்கள். அழகான பாறைகளினிடையில் வளர்ந்திருந்த பல விதமான காட்டுமரங்கள், காற்றடித்து அலையும்பொழுது, அவ்வானரர்கள்மீது புஷ்பங்களைத்தூவின. அவர்கள் அவ்விடஞ்சேர்ந்தபொழுது, தேன்மணம் வீசுகின்ற காடுகளிற் பாடுகின்ற வண்டுகளால் தொடரப்பட்டு, சந்தனம் போற் குளிர்ந்த இளங்காற்றுச் சுகமாக வீசலாயிற்று. அந்தஸஹ்யபருவதமும், காவிக்கற்களினால் மிகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அம்மலையானது, காற்றுவிசையால் மேற்கிளம்பிய காவிக்கற்களின்தூளியினால், அப்பெருவானரசேனையை முற்றிலும் மறைத்தது. அழகான மலைத்தாழ்வரைகளில் எங்கும் நன்றாகப் பூத்து விளங்கிக் கொண்டிருந்த தாழை, நொச்சி, அழகிய முல்லை, வாசனை நிரம்பிய குருக்கத்தி, புன்கு, இலுப்பை, பூத்துள்ள குருந்தமரப்புதர், மகிழ், கடம்பு, ஸ்பூர்ஜகம், திலகம், நன்றாகப்பூத்த நாகை, தேமா, பாதிரி, பூத்துள்ள காட்டகத்தி, முசுலிந்தம், மருதம், சிம்சுபம், குடமல்லி, தவை, முள்முருக்கை, சிவந்த மருதாணை, ஹிந்தாலை, வேங்கை, சூர்ணகை, தீபகம், நீலாசோகமரம், வரணம், அங்கோலம், பத்மகம் ஆகிய இவைகள், குதித்துச்செல்லுகிற வானரசேனையாற் பாழாக்கப்பட்டன. அப்பருவதத்தில், குளிர்ந்த நடைவாவிகளும் குட்டைகளும் மற்றுமுள்ளநீர்நிலைகளும், சக்ரவாகம் காரண்டவம் ப்லவம் க்ரௌஞ்சம் இவைகளால் நிரம்பியும், பன்றிகளும் மான்களும் சூழ்ந்தும், கரடி சிறுத்தை சிங்கம் புலி பயங்கரமான பல வகை யானைகள் இவைகளால் நாற்புறத்திலும் சூழப்பெற்றும், மலர்ந்துள்ள தாமரை செங்கழுநீர் ஆம்பல் குவளை முதலான பல நீர்ப்பூக்களால் வெகுமனோகரமாக விளங்கிக்கொண்டும், அழகாக இருந்தன. அம்மலைத்தாழ்வரை

களில், பலவகைப் பறவைகள் சத்தம்பண்ணிக்கொண் டிருந்தன. அங்குள்ள குளங்களில், அவ்வாநரர்கள், ஸ்நா நம்பண்ணி, நீரருந்தி, ஜலத்திலிருந்துகொண்டே விளை யாடுபவர்களாய், ஒருவர்மீது ஒருவர் ஜலத்தை வாரி யிறை க்கலானார்கள். மலையின்மேலேறி, அவ்வாநரர்கள், மிக்க களிப்பையடைந்து, அமிருதம்போல மணக்குங் கனிகளை யும் கிழங்குகளையும் மரங்களின்புஷ்பங்களையும் புசித்தார் கள். தேன்போன்ற நிறமுடைய வாநரர்கள், அக்காட்டில் ஒருதுரோணமளவுநீளமாகத் தொங்கிய தேனடைகளி லுள்ள தேனைக் குடித்துவிட்டு, சந்தோஷமாகப் போகலா னார்கள். அன்றியும், அவர்கள்சென்ற வழிகள்தோறும் மரங்களை முறித்துக்கொண்டும், கொடிகளை இழுத்துக் கொண்டும், மலைகளை நொருக்கிக்கொண்டும் சென்றார்கள். சிலர் மரங்களில்லாதவிடத்திலும் முன்னேகுடித்த தேனி னலாகிய களிப்பாற் பேராரவாரஞ் செய்துகொண்டும், சிலர் ஒருமரத்திலிருந்து மற்றொருமரத்துக்குத்தாண்டியும், சிலர் மரங்களிலிருந்து விழுந்துகொண்டும் செல்லலானார் கள். நன்றாக முற்றிய செந்நெற்பயிர்கள் நிரம்பிய வயல் களாற் பூமி விளங்குவதுபோல, அவ்வாநரவீரர்களால் நிரம்பிய பூபாகமும் விளங்கிற்று.

தோள்வலிவிஞ்சித் தாமரைமலர்போன்ற கண்களை யுடையவரான இராமர், மகேந்திரமலையைச் சேர்ந்ததும், அநேக மரங்களடர்ந்து அழகாகவிளங்கிய அதன்சிகரத் தின்மேல் ஏறலானார். அச்சிகரத்தைச் சேர்ந்ததும், தசரதமன்னவரின்குமாரரான இராமர், ஆமை மீன் முதலிய ஜலஜந்துக்களால் நிரம்பிய சமுத்திரத்தைக் கண்ணுற்றார். ஸஹ்யமலையையும் அப்படியே மலயமலை யையும் அவர்களெல்லாரும் கடந்து, பயங்கரமாக ஒலிக் குங் கடலின் சமீபத்தை வந்து சேர்ந்தார்கள். மலையை விட்டு இறங்கினதும், எல்லாருடைய மனங்களையும் களிக்கப்பண்ணுவதில் உத்தமரான இராமர், சுக்கிரீவ

னுடனும் இலட்சுமணருடனும் அக்கடற்கரையிலிருந்த காட்டிற் புகுந்தார். திடீர்திடீரென்று கிளம்பும் பேரலைகளாற் கழுவப்பட்ட பெரும் பாறைகளையுடைய வெகு விசாலமான கடற்கரையை யடைந்ததும், இராமர், பின்வருமாறு சொல்லலானார் :—" சுக்கிரீவா ! நாம் எல்லோரும் இப்பொழுது இச்சமுத்திரம் வந்து சேர்ந்துவிட்டோம். இங்குவந்த பிறகு, சமுத்திரத்தைக் கடப்பதைப் பற்றி முன்னே நமக்குஉண்டான கலக்கம், மீண்டும்உண்டாகின்றது. இனி அக்கரை கண்ணுக்குத் தென்படாத இப்பெருங்கடலைப் பேருபாயத்தாலன்றி, நாம் எவ்வாறு தாண்டமுடியும் ? ஆகையால், நமதுசேனைகளை நாம் இவ்விடத்திலேயே தங்குவிப்போம். எவ்வாறு இக்கடலை வானரசேனை கடப்பதென்பதைப்பற்றி மந்திராலோசனை பண்ணுவோம் " என்றார். சீதையைப்பிரிந்த சோகத்தால் இளைத்திருந்த மகாபாகுவாகிய இராமர், கடற்கரைசேர்ந்ததும், சுக்கிரீவனைப் பார்த்து, அப்போது, அவ்விடத்தில் அவ்வானரசேனையை நிறுத்துமாறு கட்டளையிட்டார் : " வானரசேனைகளின் தலைவா ! எல்லாச் சேனைகளையும் இக்கடற்கரையிலே நிறுத்துக. இச்சமுத்திரத்தை எவ்வாறு தாண்டுகிறதென்ற ஆலோசனையைச் செய்யுங்காலம், இப்பொழுது நமக்கு வந்துவிட்டது. ஒருசேனைத்தலைவனுவது தனது சேனையைத் தனிமையாக விட்டிட்டுப்போதலென்பது கூடாது ; சூரர்களான வானரர்கள், இவ்விடங்களைப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும் ; ஏனெனில், மறைவாக நமதுசத்துருக்கள் இங்குப் பதுங்கியிருக்கலாம் " என்றார்.

கடற்கரை சேர்தல்.

இராமர் சேனையுடன்தங்கிச் சமுத்திரத்தைக் கடக்கும் உபாயத்தைச் சிந்திக்க வேண்டுமென்றல்.

இராமர் சொன்னதைக் கேட்டதும், சுக்கிரீவனும் இலட்சுமணரும் மரங்களடர்ந்த அக்கடற்கரையில் வானரசேனைகளை இறக்கினர்கள். அவ்வாறு சமுத்திரத்தினரு

கில் தங்கின அச்சேனையானது, மதுவைப்போன்ற நிறத்தையுடைய ஜலம்நிரம்பியதொரு அழகிய இரண்டாவது சமுத்திரம்போல விளங்கிற்று. கடற்கரையை யடைந்த பிறகு, அவ்வானரவீரர்கள், பெருஞ்சமுத்திரத்தின் அக்கரையைக் காண ஆவலுள்ளவராய்த் தங்கினார்கள். அங்குத் தங்கின அவ்வானரசேனையினிடமிருந்து அப்பொழுது உண்டான பெருஞ்சத்தமானது, சமுத்திரத்தின் இரைச்சலையும் அடக்கி, அதற்கு மேலாகக் கேட்கலாயிற்று. அப்பெருஞ்சேனைக்குத் தலைவனான சுக்கிரீவன், அச்சேனையை மூன்றுபாகமாகப் பிரித்து உட்காரவைத்தான்; அப்போது, அச்சேனை இராமருடைய காரியத்தை முடித்துவைக்கவேணுமென்ற பேராவலையடைந்திருந்தது; அப்பெருவானரசேனை, அப்பெருங்கடலினிடம் வந்துசேர்ந்ததற்காகக் களித்துக்கொண்டுமிருந்தது. காற்றின்வேகத்தால்அங்கும்இங்கும்அலைந்துகொண்டும், வெகுதூரத்திற் கரைபெற்றும், கலக்கமுடியாமலும், அரக்கர்களாற் குடியேறப்பெற்றும், வெகுபயங்கரமாக விளங்கும் கொடிய முதலைகளைக்கொண்டு பிராணிகளை யிழுப்பதாயும், சர்யங்காலத்தில் நுரைக்கூட்டத்தினழகாற் சிரிப்பது போலவும் பேரலைக்கூட்டங்களின் கொந்தளிப்பாற் கூத்தாடுவதுபோலவும் தோன்றியும், சந்திரோதயத்தினாற் பொங்கியும், பிரதிபிம்பமான சந்திரர்களுடைய தோற்றத்தால் விளங்கிக்கொண்டும், பெருஞ்சுழல்காற்றுப் போற் கொடிய பெருமுதலை திமி திமிங்கிலம் காந்தியால்எரிவதுபோல்விளங்குகின்ற கடற்பாம்பு ஆகிய இவைகளால் நிரம்பியும், இன்னும் பலவகையான பெரிய நீர்வாழுயிர்கள் நிறைந்தும், பலமலைகளுடன் கூடியும், மிகவும் கிட்டுதற்கு அருமையாய் ஆழ்ந்தும், அசுரர்கட்கு இடமாயு முள்ள அக்கடலைக் கண்டுகொண்டே அங்கு வானரவீரர்கள் களித்தார்கள். சுறுமீன்களும் டாம்புகளும்

வானரசேனை கடற்கரையில் தங்குதல்.

புகப்பெற்றுக் காற்றுல்மோதப்பட்ட ஜலராசிகள், மேற் கிளம்பிக்கொண்டும், கீழேவிழுந்துகொண்டும் இருந்தன. நீர்த்திவலைகள் நெருப்புப்பொறிகள்போல் விளங்க,பெரும் பாம்புகள்சஞ்சரிக்கப்பெற்று, பாதாளலோகம்போற் கம் பீரமாய், எப்போதும் அசுரராட்சசர்கட்கு வாழிடமாய்ப் பயங்கரமான சமுத்திரமானது—அனற்பொறிகள்போல நட்சத்திரங்கள் பிரகாசிக்க, பெரிய உரகர்களையுடைய தாய், பாதாளம்போற் கம்பீரமாய், அசுரராட்சசர்களுக்கு வாழிடமான கொடிய ஆகாயத்தைப்போல் விளங்கிற்று. ஆகாயமும் சமுத்திரம்போல் விளங்கிற்று. சமுத்திரத் துக்கும் ஆகாயத்துக்கும் ஒருவகைவேறுபாடும் தோன் றும வில்லை. இரத்தினங்களையுடைய கடலின் ஜலம் ஆகாயத்தோடும், நட்சத்திரங்களையுடைய ஆகாயம் கட லின்ஜலத்தோடும் வேறுபாடுதோன்றுமல் ஒரேநிறத் தனவாய் விளங்கின. மேலெழும் மேகங்களைக்கொண்ட ஆகாயம், உயரவெழுந்திரைகளையுடைய சமுத்திரம், ஆக இரண்டுக்கும் அப்பொழுது வேறுபாடு யாதொன்று மில்லை. யுத்தகளத்திற் பெரும்பேரிகைவாத்தியங்கள் பலவிடங்களில் அடிக்கப்படுவதுபோல, சமுத்திரத்திற் கிளம்பிய பேரலைகள், ஒன்றுடன் ஒன்று மோதிப் பயங் கரமாகச் சத்தித்துக்கொண்டிருந்தன. காற்றுல் அலைக் கப்பட்டு ஒன்றுகச்சேர்வதுபோன்றும் சினந்து உயர வெழுவதுபோன்றுந் தோன்றி, ஜல ஜந்துக்களின் கூட் டத்துடன்கூடி, காற்றுற் கிளப்பப்பட்ட பெருந்திரைகள், ஆகாயத்தில் வெகுஉயரமாகக் கிளம்பிக் கூத்தாடுவது போலத் தோன்ற, இரத்தினக்குவியல்களும் நீர்ப்பெருக் குக்களும் என்ற இவற்றின் ஒலிகளையுடையதாய், காற் றுல் மோதப்படுஞ் சமுத்திரத்தை, மிக்க உற்சாகங் கொண்ட அவ்வானரவீரர்கள் கண்டார்கள். அப்போது, திரைகள் கொந்தளித்து ஒலிக்க, திக்பிரமைகொண்ட வண்போலத் தோன்றுகின்ற அச்சமுத்திரத்தை, வானர வீரர்கள் கண்டு களிப்படைந்தார்கள்.

ஐந்தாஞ் சருக்கம்:
சமுத்திரத்தைக்கண்டஇராமர் சீதையைநினைத்து வருந்த, இலட்சுமணர் சமாதானப்படுத்துதல்.

காவலையுடையதாய்க் கலக்கமற்றதான அவ்வானரசேனையை, நீலன், சமுத்திரத்தின் வடகரையில் முறைப்படி இனிதாக நிறுத்தினன். அப்போது, வானரவீரர்களான மைந்தன், த்விவிதன் என்ற இவ்விருவரும், அச்சேனையைப் பாதுகாப்பவர்களாய், எல்லாத்திசையிலும் சுற்றிப் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். அவ்விதமாக வானரசேனை கடற்கரையில் இறங்கியதும், தமது அருகிலிருந்த இலட்சுமணரைப் பார்த்து, இராமர், பின்வருமாறு சொல்லலுற்றார்:—"நாள் கழியக்கழியச் சோகம் குறைந்துவிடுமன்றே! எனக்கோ, சீதையைக்காணுமையாலுண்டான சோகம் நாளுக்குநாள் வளர்கின்றது. என்காதலி தூரத்திலிருக்கின்றாளென்று நான் துக்கப்படவில்லை; அரக்கன் தூக்கிப் போனானேயென்றுவது நான் துக்கப்படவில்லை; இவளுடையவயசு கழிந்துவிடுகின்றதேயென்ற இதுவொன்றைப் பற்றியே நான் வருந்துகின்றேன்." காற்றே! என் நாயகி எங்கிருக்கின்றாளோ, அங்குப்போய் வீசி, அவளுடைய ஸ்பரிசத்தைப் பெற்று, என்மேல் வீசுவாய்; நீ இவ்வாறுசெய்தால், சீதை பார்க்குஞ் சந்திரனைப் பார்ப்பதனால் நானே சீதையைப்பார்ப்பதாக எவ்வாறு ஆகின்றதோ, அவ்வாறே, உன்மூலமாகச் சீதையின் சரீரஸ்பரிசமும் நேரும். அரக்கன் எடுத்துக்கொண்டுபோனபொழுது, ஹா! நாத!! என்று சீதை கதறின சத்தம் என்மனத்திலிருந்துகொண்டு, உட்கொள்ளப்பட்ட விஷம்போல, என் அவயவங்களை எரிக்கின்றது. சீதையின்விரஹமாகிய விறகையும், அவளைப்பற்றி இடைவிடாதுநேர்கின்ற நினைவாகிய ஜ்வாலையையுமுடைய மன்மதாக்கியானது, எனதுஉடலை

இராமருடைய சோகம்.

இரவும்பகலும் எரிக்கின்றது. ஆகையால், இலட்சுமண ! நான் உன்னைவிட்டுச் சமுத்திரத்தில் முழுகித் துஞ்சுகின்றேன் ; கொழுந்துவிட்டெரிகிற இக்காமத்தீ நீரிலுறங்கும் என்விஷயத்தில் மந்தமாகும். நானும் அந்தச்சீதையும் ஓரேபூலோகத்தில் இருக்கின்றே மென்ற இதுவே, நான் பிழைத்திருக்கச் சாதனம் : இதனல்தான் விரஹியானஎன்னல், உயிருடனிருக்க முடிகிறது. நீருள்ளகழனியின் சார்பால் நீரற்றகழனியின் பயிரும் பிழைத்திருப்பதுபோல, சீதை உயிருடனிருப்பதாகக் கேள்விப்பட்டு நான் பிழைத்திருக்கின்றேன். நிறைந்த சம்பத்தைக் காண்பதுபோல, நூற்றிதழ்க் கமலம்போன்ற கண்களையுடைய சீதையை, என்சத்துருக்களைவென்று எப்பொழுது நான் காண்பேனே ? நோயாளி ரஸாயநமென்ற ஔஷதவிசேஷத்தை உட்கொள்வதுபோல, அழகிய கோவைப்பழம்போன்ற அதரத்தையுடைய சீதையின் தாமரைமலரையொத்த முகத்தைச் சிறிது உயர்த்தி எப்போது அதரபானஞ்செய்வேனே ? நான் எப்போது சீதையின் ஆலிங்கனத்தைப் பெறுவேனே ? கரிய கடைக்கண்களையுடைய சீதை, அரக்கமடந்தையர்நடுவிற் சிக்கிக்கொண்டு, என்னைக் கணவனுகப்பெற்றும் கணவனில்லாதவள்போலத் தன்னைக்காப்பாற்றுகின்றவரைப்பெருமல் தவிக்கின்றுள் : இது திண்ணம். ஜநகமஹாராஜாவின் குமாரியும் எனதுகாதலியும் தசரதமன்னவருடைய நாட்டுப்பெண்ணுமான சீதை, அரக்கர்மடந்தையர்நடுவில் எவ்வாறு படுக்கிறுள்! சரத்காலத்திற் கருநிறமேகத்தினின்று பிறைச்சந்திரன் வெளிப்படுவதுபோல, கலக்குவதற்கு அரிய அரக்கர்களை யுதறிவிட்டு அந்தச்சீதை எப்போது வெளிப்படுவாளோ ? இயற்கையாகவே இளைத்துத்தோன்றுஞ் சீதை, காலத்தின்மாறுபாட்டால்நேர்ந்தசோகத்தாலும் உணவில்லாமையாலும் பின்னும் இளைத்துவிடுவாள் : இது நிச்சயம். ராக்ஷஸர்தலைவனுடைய மார்பில்

அம்புகளைப்பிரயோகித்து, மனத்துன்பம்நீங்கும்படி சீதை யை நான் மீட்பது எப்போது? கற்புடையவளும் தேவ மடந்தையர்க்கு ஒப்பானவளுமாகிய சீதை, மிகுந்தகாதலு டன் என்க்ழுத்தைத்தழுவி ஆனந்தக்கண்ணீர் பெருக்கு வது எப்போது? அழுக்குவஸ்திரத்தை நீக்குவதுபோல், மைதிலியின் விரஹத்தால் நேர்ந்த இந்தக்கொடியசோ கத்தை உடனே நீக்குவது எப்போதோ?

சூரியாஸ்தமனம்.

இவ்வாறு புத்திமானுகிய அந்தஇராமர் புலம்பும் பொழுது, பொழுதுகழிந்ததால், சூரியன், ஒளிகுறைந்து அஸ்தமித்தான். காமரை யிதழையொத்த கண்களையுடைய சீதையை நினைந்து வருந்துகின்ற இராமர், அப்போது இலட்சுமணர் தேற்றியதனுல் தேறி, மாலைச்சந்தியை உபாஸித்தார்.

ஆரூஞ் சருக்கம்.

இராவணன் மந்திரிமார்களைக் கூட்டி இராமரை வெல்ல ஆலோசனை சொல்லுமாறு கேட்டல்.

இராவணன் அரக்கரைக் கூட்டி ஆலோசனை கேட்டல்.

ராக்ஷஸராஜனுன இராவணன், மஹாத்மாவான இந் திரன்போல் அநுமான் இலங்கையிற்செய்த பயங்கர மான கொடுஞ்செயல்களைப் பார்த்து, வெட்கத்தாற் சிறிது தலைதாழ்ந்து, எல்லா வரக்கர்களையும் நோக்கிப் பின்வரு மாறுசொல்லலுற்றுன்:— "ஒருவானரன், எவராலும் வெல்லப்படாத இலங்கையில் தனியாகப் புகுந்து அழித்து, ஜானகியாகிய சீதையை யும் பார்த்துவிட்டுச் சென்றுன்; நமது நகரத்துப் பிரதான அரண்மனையை அழித் தான்; பெயர்பெற்ற அரக்கர்கள் அநேகரை வதைத் தான்; அநுமான்ஒருவனே இலங்கை முழுவதையும் ஒருகலக்குக் கலக்கினன். ஆகையால், இனி எவ்வித மாகச்செய்தால் நன்றுகச் செய்ததாகுமோ, எது நமக்கு

ஹிதமான்தோ, அதனைச்சொல்லுங்கள் : அவ்வாறே செய்வேன். உங்களுக்கு மங்களமுண்டாகுக. வெற்றியென்பது மந்திராலோசனையிலிருந்து உண்டாகிறதென்று, விசாலமாகிய மனத்தையுடையவரான பெரியோர், சொல்லுகின்றார்கள். ஆகையால், மகாபலவான்களே! இராமனை வெல்வதைப்பற்றி ஆலோசிக்க விரும்புகின்றேன். இவ்வுலகத்தில் மூன்றுவகுப்பினரான மனிதர்கள் இருக்கின்றார்கள்: அவர்களாவார்-உத்தமர், மத்தியமர், அதமர் என்பவர். இம்மூவருடைய குணதோஷங்களைச் சொல்லுகின்றேன். மந்திராலோசனையில் தேர்ந்தவர்களும் நன்மைசெய்வதிற் கருத்துள்ளவர்களுமான மந்திரிகளுடனுவது, சுகதுக்கங்களைத் தம்முடையனபோல நினைக்கின்ற நண்பர்களுடனுவது, தனது நன்மையை நாடும் பந்துக்களுடனுவது ஒருமித்து எவனொருவன் கடவுளின் மேற் பாரத்தைவைத்து நன்றுகஆலோசித்துத் தனது பிரயத்தனங்களைச் செய்கின்றானே, அவன் உத்தமனுவான். எவனொருவன், தானே தனியாகவே ஒருகாரியத்தை ஆலோசித்துக் கடவுளின்மேல் மனப்பூர்வமாகப் பாரத்தைவைத்துக் காரியத்தைச் செய்கின்றானே, அவன் மத்தியமனுவான்; எவனொருவன், ஒருகாரியத்திலிருக்கின்ற குணதோஷங்களைக் கவனியாமல் தைவமிருக்கின்றதென்ற எண்ணத்தையும் விட்டு, தானேசெய்துமுடிப்பதாக ஒன்றை ஆரம்பித்துக் கடைசியில் தியங்கிநிற்கின்றானே, அவன் அதமனுவான். மனிதர்கள் எவ்வாறு மூன்று வகுப்பினரோ, அவ்வாறே மந்திராலோசனைகளும் மூன்றுவிதம். சாஸ்திராப்பியாசமென்ற கண்களையுடைய மந்திரிமார் ஒற்றுமையையடைந்து, எந்த ஆலோசனையிற் கருத்து ஊன்றியிருக்கின்றார்களோ, அதுதான் உத்தமமான ஆலோசனை யென்று சொல்லப்படுகின்றது. எங்கு, விஷயத்தை நிர்ணயிப்பதில் மந்திரிமார்களின்

மந்திராலோசனையின் வகை.

ஆலோசனைகள் பலவிதமாக விருந்தும், இறுதியில் ஒரே வழிக்கு வருகின்றனவோ, அவ்வாலோசனை மத்தியமமான ஆலோசனையாம். எவ்வாலோசனையை, ஒருவருடன் மற்றொருவர் ஒருமித்திராமல் தமதுகொள்கையே சிறந்ததென்று தனித்தனிபேசி ஒற்றுமையிற்சிறிதும் எண்ணமில்லாமலே முடிக்கிறார்களோ, அதனை அதமமான ஆலோசனையென்று சொல்லவேண்டும். ஆகையால், புத்திமான்களான நீங்கள், நன்றாகவும் உறுதியாகவும் ஒற்றுமையுடன் காரியத்தை ஆலோசித்துச் சொல்லுங்கள். நீங்கள் சொல்லுகின்ற இதுவே, யான் செய்யத்தக்கதாகும். மஹாவீரர்களான வாநரர்கள் ஆயிரக்கணக்காகச் சூழ, இராமன், நம்மை எதிரிடுமாறு இலங்கையைநோக்கி வந்துகொண்டிருக்கின்றான். இராமன், தனது வல்லமையால் வற்றச்செய்தாவது, வேறு உபாயஞ்செய்தாவது, இச்சமுத்திரத்தைத் தாண்டி, தனது தம்பியுடனும், வாநரசேனையுடனும் இவ்விடம் வந்துவிடுவானென்பது நிச்சயம். வாநரர்களுடன் நமக்கு விரோதமுண்டாய், இலங்கையைத்தகைதலென்ற இக்காரியம் இவ்வாறு நேர்ந்ததனால், நமது பட்டணத்துக்கும் சேனைகளுக்கும் நன்மைதரக் கூடியது எதுவோ, முழுவதையும் நன்றாக ஆலோசித்து நீங்கள் சொல்லுங்கள்."

ஏழாஞ் சருக்கம்:
அரக்கர்கள் இராவணனுக்குத் தைரியஞ் சொல்லுதல்.

மகாபலவான்களான அரக்கர்களைப்பார்த்து ராக்ஷஸராஜனாகிய இராவணன் அவ்வண்ணம் சொன்னதும், அவர்களெல்லோரும் அஞ்சலிபந்தம்பண்ணிக்கொண்டு, அந்த ராக்ஷஸராஜனை இராவணனை நோக்கி, சத்துருவின் பலத்தை யறியாதவர்களாய், நீதிசாஸ்திரத்திற்கும் மாறாக,

தங்களுடைய அறிவின்மையாற் சொல்லலானார்கள்:— "வேந்தே! மிகவும் பெரிய நமது சைனியம்-உழலேத்தடி, நீண்டதடி, கத்தி, சூலம், பட்டஸம் முதலிய ஆயுதங்களால் நிரம்பிநிற்கின்றதே; தங்களுக்கு ஏன் இப்பொழுது துக்கமுண்டாகவேண்டும்? தாங்கள், போகவதியென்ற நகரத்துக்குச் சென்று, அங்கிருந்த பன்னகர்களைப் போரில் வென்றவர்களாயிற்றே. யக்ஷர்கள் பலராற் சூழப்பட்டுக் கைலாஸமலையினுச்சியிலே வசித்துக்கொண்டிருந்த குபேரனுடு பெரும்போரிட்டு, அவரைத் தாங்கள் வசமாக்கிக்கொண்டீர்களே. பிரபுவே! சிவபெருமானிடம் தனக்கு நட்பு உண்டென்று செருக்கடைந்திருந்த மஹாபலசாலியான அவ்வுலகபாலனைத் தாங்கள் கோபங்கொண்டு போரில் வென்றீர்கள். அங்குள்ள யக்ஷர்களையெல்லாம் போர்செய்து கொன்றும், நடுநடுங்கச்செய்தும், கைலாஸமலையினுச்சியிலிருந்து தாங்கள், இந்தப்புஷ்பகவிமானத்தைப் பறித்துக்கொண்டுவந்தீர்கள். அரக்கர்களின் சிங்கமே! தங்களிடம் பயமடைந்து தங்களுடைய நட்பைநாடிவந்த தானவேந்திரராகிய மயன் தமதுகுமாரியைத் தங்களுக்குமனைவியாகக் கொடுத்தார். ஒருவராலும் அடக்கமுடியாமல் வல்லமையின்மிகுதியாற் கர்வமடைந்திருந்த மதுவென்ற தானவேந்திரனைத் தாங்கள் வென்று வசமாக்கிக்கொண்டு, உங்கள் தங்கை முறையாகிய கும்பீநஸிக்குக் கணவனுக்கி, அவளுக்குச் சுகத்தை விளைவித்தீர்கள். பெருந்தோள்வலிமை யுடையவரே! தாங்கள் பாதாளலோகஞ் சென்று, அங்கிருந்தவர்களையெல்லாம் வென்று, வாசுகி தக்ஷகன் சங்கன் ஜடி என்ற இவர்களையும் தங்களுடைய வசமாக்கிக்கொண்டீர்கள். பிரபுவே! அழிவற்றவர்களாயும் வெகுபலம்பொருந்தியவர்களாயும் மஹாசூரர்களாயும், வரம்பெற்றவர்களாயுமிருந்த காலகேயரென்றதானவர்களுடன், ஒரு

அரக்கர்கள் இராவணனைப் புகழ்தல்.

வருஷகாலம், பெருஞ் சைனியத்துடன் போர்செய்து, தாங்கள், அவர்களைத் தங்களுக்குக் கீழாக்கிக்கொண்டீர்கள்: பகைவரை யடக்குபவரே! அன்றியும், அவர்களிடமிருந்து பலவித மாயைகளையும் கற்றுக்கொண்டீர்கள். மஹாபாகுவே! சூரர்களாயும், பலசாலிகளாயுமிருந்துகொண்டு நான்குவித சேனைகளுடன் போரிடவந்த வருணபகவானுடைய குமாரர்களைப் போரில் தாங்கள் வென்றீர்கள். யமதண்டமாகிய பெருமுதலைகளையும், முள்ளிலவமென்கிற ஆயுதமாகியமரங்களையும், யமபாசமாகியபேரலைகளையும், யமதூதர்களாகிய சருப்பங்களையுமுடைய யமனது சேனைசமுத்திரத்திற் புகுந்து, ராஜரே! தாங்கள் மிக்கவெற்றிகொண்டு, காலனைத் தங்களிடம் நெருங்காமலிருக்கும்படி தள்ளிவைத்தீர்கள். அங்கிருந்தவரெல்லோரும், தாங்கள் செய்த சிறுபோரிலேயே புறங்காட்டி யோடினார்கள். இப்பூலோகமானது, பெருமரங்கள் நிறைந்திருப்பதுபோல, இந்திரனுக் கொப்பான வல்லமை பொருந்திய பல அரசர்களால் நிரம்பியிருந்தது: வெல்வதற்கு அரிய அவர்களைத் தாங்கள் வலிய வென்றீர்கள். இராகவனென்பவன் வீரகுணத்திலும் உற்சாகத்திலும் அவ்வரக்கர்களுக்கு ஒப்பாவனே? பெருவேந்தரே! தாங்கள் நில்லுங்கள்: தாங்கள் ஏன் சிரமப்படவேண்டும்? மிக்கதோள் வலிமையுடைய இந்த இந்திரஜித்து ஒருவரே வானரர்களையெல்லாம் நாசஞ்செய்துவிடுவார். மஹாராஜாவே! இவ்விந்திரஜித்தோ, மாஹேச்வரமென்ற சிறந்தயாகத்தைச்செய்து, இவ்வுலகத்தார் ஒருவராலும் அடையமுடியாத வரத்தைப் பெற்றிருக்கின்றார். ஈட்டிதோமரங்களாகிற மீன்களையும், கீழ்சிதறி விழுந்திருக்கும் நரம்புகளாகிற பாசிகளையும், யானைகளாகிற ஆமைகளையும், குதிரைகளாகிற தவளைகளையும், ருத்திரர்களும் ஆதித்யர்களுமாகிற பெருமுதலைகளையும், மருத்துக்களும்

அரக்கர்கள் இந்திரஜித்தே யாவரையும் வெல்வானென்றல்.

வஸ்-க்களுமாகிற பெரும்பாம்புகளையும், ரதங்களும் அசுவங்களும் கஜங்களுமாகியநீர்ப்பெருக்கையும், பதாதிகளாகிற மணற்குன்றுகளையுமுடைய தேவர்சைனியமாகிற பெருங் கடலிற்புகுந்து, இவ்விந்திரஜித்து, தேவராஜாவாகிய இந்திரனைப் பிடித்து இலங்கைக்குக்கொண்டு வந்தாரன்றே ! அரசரே ! சம்பரனையும் விருத்திரனையுங் கொன்றவனுய், எல்லாத்தேவர்களாலும் வணங்கப்படுகின்ற இந்திரன், பிரமதேவருடைய கட்டளையினுலன்றே அப்போதுவிடுவிக்கப்பட்டுத்தேவலோகஞ்சென்றான். ஆகையால், அந்த இந்திரஜித்தென்ற புத்திரரொருவரைத் தாங்கள் அனுப்புங்கள் ; அவர், எல்லாவானரசேனைகளுடனும் இராமரை நாசமாக்குவார். வேந்தே ! அற்பனுகிய அநுமானுல் நமக்கு நேர்ந்த இவ்வாபத்தோ, எதிர்பாராது வந்தது : இதை ஒன்றுகத் தாங்கள் மனத்திற் கொள்ளவேண்டாம். தாங்கள் இராகவரை நிச்சயமாய் வதைப்பீர்கள்" என்றார்கள்.

எட்டாஞ் சருக்கம் :
பிரகஸ்தன் முதலியோர் தமது வல்லமையைக் கூறுதல்.

பிறகு, நீலமேகம்போலக் கறுத்துள்ள பிரகஸ்தனென்ற சூரனுன ராக்ஷஸசேனபதி அஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டு, அப்போது, இராவணனைநோக்கி, "தேவர், தானவர், கந்தர்வர், பிசாசர், பதகர், உரகர் என்பவர்கள் தங்களைப் போரில் வெல்லவல்லவரல்லர் ; அப்படியிருக்க, வானரர்கள் வெல்வதைக்குறித்துச் சொல்லவேணுமோ ? அநுமான் வந்திருந்த காலத்திலோ வென்றுல், அலட்சியமாய் 'இவன் என்ன செய்யப்போகின்றன்?' என்று மதத்தினுல் நம்பியிருந்து, எல்லாரும் மோசம் போய்விட்டார்கள். நான் உயிருடனிருக்கின்றவரையில்

பிரகஸ்தன் வார்த்தை.

அவ்வாநரன் உயிருடன் போவர்னே? தாங்கள் எனக்குக் கட்டளையிடுங்கள்: நான் கடல் வரையிலும் பரவியுள்ள காடுமலைகளைக்கொண்ட பூமிமுழுவதிலும் ஒரு வாநரமும் உயிருடனில்லாவண்ணம் செய்துவிடுவேன். ராக்ஷஸரே! தாங்கள் செய்த குற்றமாகிய சீதாஹரணத்தால் தங்களுக்கு ஒருதுன்பமும் நேராதவாறு வாநரர்களிடமிருந்து பாதுகாப்பேன்" என்று கூறினன்.

துர்முகன் வார்த்தை.

அதன்பிறகு, துர்முகனென்ற அரக்கன், வெகுகோபத்துடன், "ஒருவாநரவீரன் வென்றது, நம்மெல்லார்க்கு மன்றியும் நமதுநகரத்துக்கும் நமதுஅந்தப்புரத்துக்கும் சீமானுன ராக்ஷஸராஜர்க்கும் அவமானத்தை யுண்டாக்கக்கூடியதே: ஆகையால், இது பொறுக்கமுடியாத தொன்றும். ஆதலால், நான் இப்பொழுதே புறப்பட்டுத் தனியாகவேசென்று, வாநரர்கள், பயங்கரமான சமுத்திரத்தில் மறைந்துகொண்டாலும் சரி, ஆகாயத்தில் ஒளிந்துகொண்டாலும் சரி, பாதாளலோகஞ்சென்றாலும்சரி ஒருவரையும் விடாமல் நாசஞ்செய்து திரும்பிவருகின்றேன்" என்று கூறினன்.

வச்சிரதம்ஷ்ட்ரன் வார்த்தை.

பின்னர், மகாபலம்பொருந்திய வச்சிரதம்ஷ்ட்ரணென்பவன், வெகுகோபத்துடன், உதிரமும் தசையும்பற்றியிருந்த பயங்கரமானகதாயுதமொன்றைத் தனதுகையால் எடுத்துச் சுழற்றிக்கொண்டு, "வெல்லுதற்கு அரியஇராமர் சுக்கிரீவனுடனும் இலட்சுமணனுடனும்சேர்ந்திருக்கும்போது, பயந்தவனும்எளியனுமாகிய அநுமானால் நமக்கு ஆவதென்ன? நான் ஒன்றியாகச்சென்று இன்றைத்தினமே எனது கதாயுதத்தால் இராமனைச் சுக்கிரீவனுடனும் இலட்சுமணனுடனும் கொன்று, வாநரசேனையைக் குழப்பிவந்துவிடுகின்றேன். வேந்தரே! நான் இன்னும்ஒன்றுசொல்லுகின்றேன்; இஷ்டமுண்டானுற் கேட்பீராக: சோம்பலின்றி, உபாயத்

தில்வல்லவனே, சத்துருக்களே வெல்வான். அரக்கர்தலைவ ரே!மிகக்கொடியவர்களும் பயங்கரமானதோற்றமுள்ளவர் களும் சூரர்களுமாய்த் தங்களால் அனுப்பப்பட்ட ஆயிரக் கணக்கான அரக்கர்கள் தம்மனத்திற் குழப்பமின்றி மனித வேடம்பூண்டு,இராமனது முன்பாகப் போய்நின்று, 'நாங் கள் தங்களதுதம்பியாகிய பரதரால்அனுப்பப்பட்டவர்கள்' என்று இராமனிடம் சிறிதும் பின்வாங்காமற் சொல்லிக் கொள்ளட்டும்: அவன், அவர்களையெல்லாம்சேர்த்துக்கொ ண்டு,வெகு சீக்கிரமாக இங்குப்புறப்பட்டுவருவான். நாமும் அதற்குள், இங்கிருந்து, சூலம் சக்தி கதை முதலிய ஆயு தங்களுடனும், வில் அம்பு கத்தி இவைகளுடனும் விரை வாகப் புறப்பட்டுச்சென்று, ஆகாயத்தில்நின்றுகொண்டு, கல்லையும் அம்பையும் மழைபொழிவதுபோலப் பொழிந்து, அவ்வானரசேனை யவ்வளவையும் கொன்று யமலோகத் துக்கு அனுப்புவோம். இவ்விதமாக நாம் செய்தால், இராம லட்சுமணர் நமது வஞ்சனைக்கு உட்பட்டு, நிச்சயமாய்த் தம்முயிரைவிடுவார்கள்" என்றான்.

அதன்பிறகு, கும்பகர்ணனதுகுமாரனுகிய நிகும்ப னென்றவீரன், வெகுகோபங்கொண்டவனாய், உலகத்தைக் கதறச்செய்பவனான இராவணனைப் பார்த்து, "அரக்கர் களே ! நீங்கள் எல்லோரும் இவ்விடத்திலேயே நமதுமன் னவரோடு, உட்கார்ந்திருங்கள். நான் ஒரு வனுகவேசென்று,இலட்சுமணனோடு இரா மனைவதைத்துச் சுக்கிரீவனையும் அனுமா னையும் மற்றுமுள்ள வானரர்களையும்நாசஞ்செய்கின்றேன்" என்றான்.

நிகும்பன் வார்த்தை.

அப்பால், மலைக்கு ஒப்பாக விளங்குகிற வச்சிரஹநு என்ற அரக்கனொருவன், வெகு கோபங் கொண்டவனாய், தனது நாவை வெளியே நீட்டிக்கொண்டு, "அரக்கர்களே! நீங்கள்

வஜ்ராஹநுவின் வார்த்தை.

குழப்பமின்றி உமதுவிருப்பத்தின்படி காரியங்களைச் செய்யுங்கள். நான் ஒருவனுகவே அவ்வானரவீரர்களைப் புசித்து விடுகின்றேன். நீங்கள், கவலையற்று, வாருணியென்ற மதுவைக் குடித்துக்கொண்டு ஸ்வஸ்தர்களாக விளையாடிக் கொண்டிருங்கள். நான் ஒருவன்மட்டும் சென்று,யுத்தவீரனுகிய இராமன்,சுக்கிரீவன்,இலட்சுமணன்,அங்கதன்,அநுமான் என்பவர்களை வதைத்துவிடுகின்றேன்" என்றான்.

ஒன்பதாஞ் சருக்கம்:

நிகும்பன் முதலியோரைத் தடுத்து விபீஷணர் இராவணனுக்குப் புத்திகூறுதல்.

நிகும்பன் முதலியோர் இராமர் முதலியோரைக் கொல்வதாகப் புறப்படுதல்.

அப்புறம் நிகும்பன், ரபஸன், மகாபலம்பொருந்திய சூரியசத்துரு, சுப்தக்நன், யஜ்ஞஹா, மஹாபார்ச்வன், மஹோதரன், தகைய முடியாத அக்நிகேது, ரச்மிகேது என்ற அரக்கன், மஹாதேஜஸ்வியும் வெகுபலம் பொருந்தியவனும் இராவணகுமாரனுமாகிய இந்திரஜித்து, ப்ரஹஸ்தன், விரூபாக்ஷன், அதிக வல்லமையுள்ள வஜ்ரதம்ஷ்ட்ரன், தூம்ராக்ஷன், அதிகாயன், துர்முகனென்ற அரக்கன் என்ற இவர்கள், உழலைத் தடிகள் ஈட்டிகள் கத்திகள் சக்திகள் சூலங்கள் கோடாலிகள் பாணங்களையுடையவிற்கள் கூரானபெரிய அரிவாள்கள் என்ற இவ்விதஆயுதங்களைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, வெகுகோபத்துடன் வெளிக்கிளம்பி, தங்கள்பராக்கிரமத்தை வெளியிட்டுக்கொண்டு, இராவணனைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலுற்றார்கள்: "இப்போதே இலட்சுமணனையும் இராமனையும், சுக்கிரீவனையும், நமது நகரமாகிய இலங்கையைக் கொளுத்தின அற்பனுகிய அநுமானையும் நாங்கள் கொன்று விடுகின்றோம்" என்றார்கள்.

புறப்பட்ட நிகும்பன் முதலியோரைத் தடுத்து, விபீஷணர் இராமருடன் பகை கூடாதென்றல்.

இவ்வாறு தங்கள் கைகளில் ஆயுதங்களை ஏந்திவந்த அவர்களையெல்லாம் தடுத்து, விபீஷணர், உட்காரச்செய்து, அஞ்சலிபந்தம்பண்ணிக்கொண்டு பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்:— "ஐயா! எந்தக்காரியத்தை, சாமம் பேதம் தானம் என்ற மூன்றுவித உபாயங்களாற் சாதிக்க முடியவில்லையோ, அப்பொழுதுதான் அக்காரியத்தைப் பராக்கிரமத்தால் முடிக்கவேண்டுமென்று புத்திமான்கள் சொல்லியிருக்கின்றார்கள். பகைவர்கள் ஜாக்கிரதையில்லாதவர்களாகவாவது, வெறுத்தவர்களாகவாவது, பாக்கிய மற்றவர்களாகவாவது இருக்கும் பட்சத்தில், நல்ல மந்திரிகளுடன் கூடி ஆலோசித்து, நீதிமுறைப்படி அப்பகைவர்களிடம்காட்டும் வல்லமை, வெற்றியைக்கொடுக்கும். இராமரோ வென்றல், வெகுஜாக்கிரதையுள்ளவர்; எப்பொழுதும் வெற்றியடையும்ஆவல்கொண்டு அதற்குத்தகுந்த பலத்துடனிருப்பவர்; கோபத்தை யடக்கியிருப்பவர்; ஒருவராலும் எளிதில் தகையக்கூடாதவர்; அவ்வித வீரரை, நீங்கள், எவ்வாறு வெல்ல விரும்புகின்றீர்கள்? பெருநதிகளெல்லாவற்றிற்கும் அடைக்கலமாய் வெகுபயங்கரமாயிருக்கும் இந்தச்சமுத்திரராஜனை, அதுமான், தாண்டி, செய்வதற்கு அரிய இவ்வகைத்தொழிலைச் செய்தானே! இதையாவது கருதுங்கள். அரக்கர்களே! நமது பகைவர்களுடைய பலமும் வல்லமையும் அளவிடமுடியாமலிருக்கின்றன; ஆகையால், நீங்கள், அவர்களைத் திடீரென்று அலட்சியமாக எண்ணக்கூடாது. நமது மன்னவருக்கு, இராமர், என்ன கெடுதிசெய்தார்? என்ன காரணத்துக்காக ஜநஸ்தாநத்திலிருந்து அவ்வீரருடைய கற்புள்ளமனைவியைக் கவரவேண்டும்? கரன், இராமரை வரம்புகடந்து, உபத்திரவம் பண்ணத்தொடங்கினன். பிராணிகள் தம்மாற்கூடிய மட்டும் தமது உயிரைக் காக்க முயலவேண்டுமன்றே!

பிறர்மனைவியைக் கண்ணெடுத்துப்பார்ப்பது—ஒருவனுடைய புகழுக்குக் கேடாகவும், ஆயுளைப் போக்குவதாகவும், செல்வத்துக்குக் குறைவை யுண்டாக்குவதாகவும், பாபத்துக்கெல்லாம் இருப்பிடமாகவும், மிகக்கொடியதாகவு மிருக்கிறது; இப்படியிருப்பதனால், சீதையின் மூலமாகப் பெரும் பயம் நமக்கு உண்டாகும்: ஆகையால், நாம் அப்பிராட்டியை உடனே திருப்பிக்கொண்டுபோய் விட்டு விடவேண்டும். வீணாகலகத்தால் என்ன பிரயோஜனம்? நீதிவழுவாமல் நடந்து வரும் அவ்வுத்தமபுருஷருடன் வீண் பகை விளைத்துக்கொள்ளுதல், நமக்குத் தகுதியன்று. ஆதலால், சீக்கிரமாகச் சீதாதேவியை இராமருக்குக் கொடுத்துவிடுங்கள். யானைகள் குதிரைகள் நிரம்பிப் பலவகைஇரத்தினங்கள் நிறைந்து விளங்கும் இவ்விலங்கையை, இராமர், தமதுபாணங்களால் நாசம்பண்ணுவதற்குமுன்னே, சீதாதேவியை அவரிடம் கொடுத்து விடுங்கள். வெகு பயங்கரங்களாய் வெல்லமுடியாதனவாகிய பெருவாநரசைனியங்கள், நமது இலங்கையைத் தகையுமுன்னமே சீதாதேவியைக் கொடுத்துவிடுங்கள். தாங்களே இராமரிடம் அவருடைய அன்பான மனைவியைக் கொடாதபக்ஷத்தில், இவ்விலங்கைநகரம் நாசமாய்விடும்; வீரர்களான எல்லா அரக்கர்களும் அடியோடு அழிந்துபோய் விடுவார்கள். நான் தங்களுக்கு உறவுமுறையா னதலால், தங்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்: நான் சொல்வதைக் கேளுங்கள். என்சொல்லோ, உங்களுடைய நன்மையை நாடியதாகவும், உண்மையை எடுத்துக்காட்டுவதாகவு மிருக்கின்றது; சீதையை இராமரிடம் கொடுத்துவிடுங்கள். சரத்காலத்துச் சூரியகிரணங்கள்போற் கொளுத்துபவையும், புதுமுனைகளுடன் கூடியனவையும், உறுதியானவையும், தவருமலழிப்பவையுமாகிய பாணங்களை, தங்களை வதைக்குமாறு சக்கரவர்த்தித்

விபீஷணர் சீதையைத் திருப்பிக் கொடுத்துவிடச் சொல்லுதல்.

திருமகனுர் பொழியுமுன்னம், தசரதகுமாரரான அவரிடம், தாங்கள் சீதையைக் கொடுத்துவிடுங்கள். தங்களுடைய சுகத்தையும் தருமத்தையும் நாசம்பண்ணின கோபத்தை விட்டிடுங்கள். தங்களுடைய க்ஷேமத்தையும் புகழையும் பெருகச்செய்யும் நியாயத்தைக் கைப்பற்றுங்கள். சிறிது மனத்தெளிவு அடையுங்கள். குமாரர்களும் பந்துக்களுமாக உயிர்தப்புவோமாக. சீக்கிரம் இராமரிடம் சீதாதேவியைக் கொடுத்துவிடுங்கள்" என்றார்.

அவ்வாறு விபீஷணர்சொன்ன சொற்களைக் கேட்டு, ராக்ஷஸராஜனுகிய இராவணன் அங்கு வந்திருந்த அரக்கர்களையெல்லாம் அனுப்பிவிட்டு, தானும் தனதுஅரண்மனையிற் புகுந்தான்.

ஆலோசனைச் சபை கலைதல்.

பத்தாஞ் சருக்கம்:

சீதையை விட்டிடவேண்டுமென்று விபீஷணர் வற்புறுத்திக்கூறுதல்.

பிறகு, அதிகாலையில், தர்மம் அர்த்தம் இவைகளை நன்றுகப் பகுத்தறிந்தவரும் வெகுபராக்கிரமசாலியும் மிக்கதேஜஸ்வியும் வீரரு மாகிய விபீஷணர், அரக்கர் தலைவனுகிய தமதுதமையனது மாளிகையிற் புகுந்தார்.

விடியற்காலத்தில் விபீஷணர் இராவணனது மாளிகையிற் புகுதல்.

இராவணனது அம்மாளிகையோ, பெரிய தொரு பருவதத்தின் கொடுமுடிகள் போலப் பல சிகரங்களை யுடையதாகவும், மலைச்சிகரங்கள்போ லுயர்ந்தும், நன்றுக வகுத்துக்கட்டப்பட்ட பெரிய கட்டுக்களுடன் கூடியும், பெரியவர்கள் நாடிவரப்பெற்றும், புத்தியிற் சிறந்தவர்களும் யஜமானனிடம் விசுவாசமுள்ளவர்களுமான பிரதானிகளால் நிரம்பப்பெற்றும், மிக நம்பிக்கை

யுள்ளவர்களான அரக்கர்களால் நான்கு பக்கங்களிலேயும் நன்முகப் பாதுகாக்கப்பட்டும், மதயானைகளின் மூச்சுக்களினுற் சுழல்காற்று வீசப்பெற்றும், சங்கவாத்தியங்களாற் பெருமுழக்கத்தை யடைந்தும், மற்றைப்பலவிதவாத்தியங்களினெலியாற் பிரதித்தொனி யொலிக்கப்பெற்றும், சிறுமியர் கூட்டங் கூட்டமாக நிரம்பிப் பேசுகிற வழிகளைப் பெற்றும், பத்தரைமாற்றுத் தங்கத்தாற் செய்யப்பட்ட கொடுங்குகளை யடைந்தும், சிறந்த ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்றும், 'கந்தர்வர்களின் அரண்மனையோ! தேவதைகளின் மாளிகையோ! இரத்தினக் கற்களாலிழைக்கப்பட்ட போகவதியோ!' என்ற சந்தேகத்தை விளைவித்துக்கொண்டும் விளங்கிற்று. அப்பெருமாளிகையினுள், பெரிய மேகத்தில் தனது கிரணங்களால் விளங்குஞ் சூரியபகவான் புகுவதுபோல, விபீஷணர் நுழைந்தார். அவ்விடத்தில், வேதங்களை நன்முக வுணர்ந்த அந்தணர்கள் இராவணனுக்கு ஜயமுண்டாகும் பொருட்டு மங்களகரமான புண்யாஹங்களை ஓதிக்கொண்டிருப்பதை, மிக்க ஒளியுள்ளவரான விபீஷணர் கேட்டார். மந்திரங்களையும் பிராமணங்களையும் அறிந்த வேதியர்கள் தயிர்நிரம்பிய பாத்திரங்களாலும் நெய்யாலும் புஷ்பத்தாலும் அக்ஷதையாலும் பூஜிக்கப்படுவதை, வெகுபலசாலியான விபீஷணர் கண்டார். அங்குள்ள அரக்கர்களெல்லாரும் மிக்க காந்தியால் விளங்குகிற விபீஷணரைக் கண்டு வணங்கிநின்முர்கள். அங்கு ஆசனத்திலுட்கார்ந்திருந்த தமது தமையனை வணங்கிநின்று, அவன் கண்ணுற் காட்டிய தோராசனத்தில் எல்லாவிதமரியாதைகளையுமறிந்த அவ்வீரரான விபீஷணர், தாம் செய்யவேண்டியமரியாதையைச்செய்துவிட்டுஉட்கார்ந்தார்.

ஏகாந்தமாய் மந்திரிகளுடன்கூடியிருந்த மஹாத்மாவான இராவணனைப் பார்த்து, விபீஷணர், அவனுடைய

நன்மையை நாடியவராய், யுக்திக்கு ஒத்ததாகச் சிலவார்த்தைகளைச் சொல்லத்தொடங்கினர். நன்மை தீமைகளை நன்முக அறிந்தவரான விபீஷணர், தமது தமையனை நல்ல வார்த்தையாலும் மரியாதைகளாலும் முதலிற் சந்தோஷப்படுத்தி, வெகு இனிமையாகவும் அந்தக்காலத்துக்கும் இடத்துக்கும் தக்கவண்ணமாகவும் பின்வருமாறு சொல்லலானர் :—" என்றையதினம் இவ்விடம் சீதை வந்தாரோ, அன்றுமுதல் நமதுபட்டணத்தில் அநேக அபசகுனங்கள் காணப்படுகின்றன. ஹோமாக்கினியானது—மந்திரங்களினல் சாஸ்திரபிரகாரம் வளர்த்தாலும், பொறிகளை வெளிப்படுத்திக்கொண்டும், புகைந்துஎரிந்துகொண்டும், அவிந்துஅவிந்து எரிந்துகொண்டும் நன்முக ஜ்வலிப்பதில்லை. சமையலறைகளிலும், அக்கினிஹோத்திரஞ்செய்யும் அறைகளிலும், வேதாத்தியயநம்பண்ணுமிடங்களிலும், அடிக்கடி சர்ப்பங்கள், கண்ணுக்குப்புலப்படுகின்றன. அப்படியே ஹவ்யங்களில் எறும்புகள் தென்படுகின்றன. பசுக்கள் திடீரென்று பால் வற்றிப்போய்விடுகின்றன. வீரயானைகளெல்லாம் தங்கள் மதம் அடங்கிநிற்கின்றன. குதிரைகளும் எளிமையாகக் கனைக்கின்றன ; ஆயினும், புற்களை விரும்புவதில்லை. கழுதைகள், ஒட்டகங்கள், கோவேறுகழுதைகள் மயிருதிரப்பெற்றுக் கண்ணீர்வடிக்கின்றன ; இவைகளுக்குச் சிகித்ஸைகள் செய்தாலும், இவைகள் பழைய ஸ்திதிக்கு வருவதில்லை. எங்குப்பார்த்தாலும் காக்கைகள் கூட்டங் கூட்டமாகக் கத்துகின்றன ; வாயசங்கள், கூட்டங்கூட்டமாக விமானங்களினுச்சியில் உட்கார்ந்துகொண்டிருக்கின்றன. கழுகுகள், ஏங்கினவைகளாய், நமதுநகரத்திலிருக்கும் வீடுகளின் மேல் வட்டமிட்டுக்கொண்டு, கூட்டங்கூட்டமாக உட்காருகின்றன. நரிகள், நகரசமீபத்தை யடைந்தனவாய், காலையிலும் மாலையிலும் வெகு

விபீஷணர் இலங்கையில் தோன்றும் அபசகுனத்தைக் கூறுதல்.

அமங்கள மாக ஊளையிடுகின்றன. மாமிசத்தைப் புசிக்கும் விலங்குகள், நகர வாயிலிற் கூட்டங்கூட்டமாக நின்றுகொண்டு இடியிடிப்பதுபோல்ப் பயங்கரமாக உறுமுகின்றன. இவ்வண்ணமாய் அபசகுனங்கள் உண்டாகின்றபடியால், இவைகளுக்கெல்லாம் பிராயச்சித்தமாக, இராமரிடம் சீதாதேவியைக் கொண்டுபோய் விடுகின்ற இதுதான் எனக்கு ஏற்றதாகத் தோற்றுகின்றது. மஹாராஜரே! நான் அறியாமையாலாவது லோபத்தாலாவது சொல்லியிருப்பேனேயானால், அதற்காக என்மேற் குற்றம் ஒன்றும் எண்ணவேண்டாம். நான் இப்போது கூறிய நிமித்தங்களை, நகரமும் அந்தப்புரமும் அரக்கர்களும் அரக்கியர்களும் காண்கின்றார்கள். உங்களுடைய கருத்தின்படி நடக்கவேண்டுமென்ற எண்ணமுடையவர்களாதலால், எல்லாமந்திரிகளும் உரியசமயத்தில் இவ்வாறு ஆலோசனை சொல்லாம லிருக்கின்றனர். நானே, கண்டதையும் கேட்டதையும் ஒன்றும் ஒளிக்காமல் எடுத்துச் சொல்லவேண்டியவன். நியாயம் இன்னதென்பதைச் சீர்தூக்கி, அவ்வண்ணம் தாங்கள் நடக்கவேண்டும்" என்றார். இவ்விதமாக, மந்திரிகளின்நடுவில் விபீஷணர் தமது தமையனும் ராக்ஷஸராஜனுமாகிய இராவணனை நோக்கி நன்மையை நாடிச் சொல்லிமுடித்தார்.

சீதையைக் கொடுத்துவிட வேணுமென்றல்.

நலமாகவும், பயனைத் தருவனவாகவும், இனிமையாகவும், காரணத்துடன் கூடினவைகளாகவும், முக்காலத்துக்கும் ஏற்றனவாகவு முள்ள அவ்வகைச்சொற்களை விபீஷணர் சொல்லக் கேட்டதும், பிடிவாதமுடைய இராவணன், வெகு கோபங்கொண்டவனாய், பின்வருமாறு மறுமொழி சொல்லத் தொடங்கினான்:— "எவ்விதத்தாலும் எனக்குப் பயம் தோன்றவில்லை. இராமன் சீதாதேவியை ஒருபொழுதும் அடையப் போகிறதில்லை. இலட்சுமணனுக்கு முன்

இராவணனது மறுமொழி.

னே பிறந்த இராமனுக்கு, இந்திரனேடுகூடியவர்களாய்த் தேவர்களே துணையாகவந்தபோதிலும், முனைமுகத்தில் என்முன் அவன் எவ்வாறு நிற்கமாட்டுவன்?" என்றான்.

விபீஷணனை யனுப்புதல்.

வெகுபலம் பொருந்தியவனும், ஒருகாலத்தில் தேவர்களது சைனியத்தை நாசம்பண்ணியவனும், போரில் அதிகபராக்கிரமமுள்ளவனுமான தசமுகன், தனது நன்மையை நாடிச் சொன்ன விபீஷணரை நோக்கி இவ்வாறு சொல்லி, அவருக்கு விடைகொடுத்து அனுப்பினன்.

பதினேராஞ் சருக்கம்:
இராவணன் ஆலோசனைக்காகச் சபையிற்புகுதல்.

அரக்கர்கள் தலைவனுய்ப் பாவியாகிய அந்த இராவணன்—மைதிலியினிடத்துக்கொண்ட காதலால் நேர்ந்துள்ள மதிமயக்கத்தாலும் விபீஷணர் முதலிய நண்பர்கள் தன் கொள்கையை அநாதரித்ததனுலும் தான் செய்த கொடுஞ்செயலினுலும் உடல்மெலிந்தவனுய், மந்திராலோசனைக்கு உரிய காலம் கழிந்து யுத்தம் சமீபித்திருக்கும் போது, அதனை, தனது அமைச்சர்களுடனும் நண்பர்களுடனும் ஆலோசித்தற்கு ஏற்றகாலமாகக் கருதினன். அவ்விராவணன், பொன்மயமான சாளரங்கள் நிரம்பியதும், இரத்தினங்களாலும் பவழங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும், வணக்கமுள்ள குதிரைகள் பூட்டப்பட்டதுமான பெரியதொரு ரதத்தை வலம்வந்து ஏறினன். மேகம்போற் சப்திக்கின்ற சிறந்த அவ்விரதத்தில் அவ்வரக்கர் தலைவன், ஏறி, சபையை நோக்கிப் புறப்பட்டான். அந்த இராவணனுக்கு முன்புறத்திலே, கத்திகேடயங்களை யேந்தியவர்களும் மற்றும் எல்லாவாயுதங்களையும் தரித்தவர்

இராவணன் சபைக்குப் புறபடுதல்.

களுமாகி, போர்வீரர்களான அநேக அரக்கர், சென்று கொண்டிருந்தார்கள். இன்னும் பல போர்வீரர்கள், பலவிதமாக அலங்கரித்துக்கொண்டும், பல வகை ஆபரணங்களை யணிந்துகொண்டும், இராவணனுடையபக்கங்களிலும் பின்புறத்திலும் நெருங்கிச்சென்றார்கள். அதிரதர்கள், ரதங்களிலும் கொழுத்தயானைகளிலும் நடைவிகற்பங்களையுடைய குதிரைகளிலும் ஏறி, வெகு விரைவாக இராவணனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். சில வீரர் கதாயுதம் உழலைத்தடி இவைகளைக் கையிலேந்திக் கொண்டும், வேறுசிலர் சக்தி தோமரங்களைக் கைகளில் தாங்கிக்கொண்டும், வேறுசிலர் கோடாலியைத் தரித்துக் கொண்டும், மற்றுஞ்சிலர் சூலங்களைச் சுமந்துகொண்டும் வந்தார்கள். இராவணன் சபைக்குச்சென்ற அப்பொழுது, அவ்விடங்களினின்றும் பல வாத்தியங்கள், வெகு சப்தத்துடன் முழங்கின; சங்கவாத்தியமும் அதிகமாக ஒலித்தது. அவ்வாறு மஹாரதனுய்ப் பெருமைபெற்ற அவ்விராவணன், தனது இரதத்தின் சக்கரங்கள் பிரதித்தொனியுண்டாகும்படி சத்திக்க, செல்வவளஞ் சிறந்ததோன்றும் இராஜமார்க்கத்தில் வந்து சேர்ந்தான். அவனுக்குப் பிடிக்கப்பட்ட அழகான ஒற்றை வெண்கொற்றக்குடையானது, களங்கமற்ற பூர்ணசந்திரன்போலப் பிரகாசித்தது. பொன்னாலே நடுவிலேபெற்றுச் சுத்தமான ஸ்படிகம்போன்ற நிறத்தையுடைய வெண்சாமரங்கள், இராவணனது இருபுறங்களிலும் விளங்கின. அவ்வரக்கர்வேந்தன் இரதத்திலிருந்தபொழுது, தரையிலிருந்த அரக்கர்களெல்லாரும், அஞ்சலிபந்தம்பண்ணிக்கொண்டு, தங்கள்தலைகளால் அவனை வணங்கினர்கள். சத்துருக்களை வெல்லுந்தன்மையனுய் மஹாபராக்கிரமசாலியாகிய இராவணன், அரக்கர்கள் வெற்றியைத்தரும் வாழ்த்துக்களைச் சொல்லித்தோத்திரஞ்செய்ய, அழகாக விளங்குகின்ற சபாமண்டபத்தைச் சேர்ந்தான். வெள்ளியாலும் தங்கத்தாலுஞ் செய்த தம்

பங்களைப்பெற்றும், படிகக்கற்கள் பதிக்கப்பட்ட நடுவிடத்தைப் பொருந்தியும், பொற்பட்டுவஸ்திரங்களாலியன்ற மேல்விரியைக்கொண்டும், அறுநூறு பிசாசர்களால் வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாக்கப்பட்டும், விசுவகர்மாவினல் அழகாக அமைக்கப்பட்டுமுள்ள அந்தச்சபைக்குள், மிக்க பராக்கிரமசாலியான இராவணன் புகுந்தான். அங்கு வைடூரியக்கற்களினுற் செதுக்கப்பட்டுப் பிரியகமென்ற மிருகத்தின் தோலால் வேயப்பட்டுத் திண்டு இட்டிருந்த பெரிய தொரு சிறந்த ஆசனத்தின்மேல் இராவணன் ஏறி உட்கார்ந்தான்.

இராவணன் ஆசனத்தில் வீற்றிருத்தல்.

பிறகு, இராவணன், அங்கிருந்த வெகுபராக்கிரமசாலிகளான தூதர்களை நோக்கி, "விரைவில் இந்நகரத்திலுள்ள அரக்கர்களை அழைத்து வாருங்கள்; நமது சத்துருக்களை வெல்லுதற் பொருட்டு நாம் பெருமுயற்சி செய்யவேண்டிய காரியம் வந்திருக்கிறது" என்று ஈசுவரனே கட்டளையிடுவதுபோலக் கட்டளையிட்டான். அக்கட்டளையைப் பெற்றவுடனே, அரக்கர்கள், இலங்கையில் வீடுவீடாகச்சென்று, விளையாடுமிடங்களிலும், படுக்கையறைகளிலும், பூந்தோட்டங்களிலும் மிருந்து மகிழ்கின்ற அரக்கர்களைச் சிறிதும் அச்சமின்றி அழைக்கலானர்கள். அழைக்கப்பட்டவர்களிற் சிலர் அழகியரதத்தின்மேலேறிக்கொண்டும், வேறு சிலர் கொழுத்தகுதிரைகளின்மேலேறிக்கொண்டும், மற்றுஞ்சிலர் யானையின்மேலேறிக்கொண்டும், பின்னுஞ் சிலர் பதாதிகளாகவும் சென்றார்கள். அப்பொழுது, அந்நகரம், யானைகளாலும் ரதங்களாலும் குதிரைகளாலும் நிரம்பி, பறக்கின்ற கருடன்களால் நிரம்பிய ஆகாசம்போல விளங்கலாயிற்று. அவ்வரக்கர்கள் சிவிகைமுதலியவாகனங்களையும் குதிரைகள் முதலிய யானங்களையும் வெளியில் நிறுத்திவிட்டு, சிங்கங்கள்

இராவணன் தூதர்களையே, உடனே மந்திராலோசனைக்கு யாவரும் வருதல்.

மலைக்குகையிற் புகுவதுபோலக் காலால்நடந்து அச்சபையிற் புகுந்தார்கள். அவ்விடஞ்சேர்ந்ததும், அவர்கள் தங்கள் அரசனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி, அவனுல் மரியாதை செய்யப் பெற்றவர்களாய், சிலர் பீடங்களிலும், சிலர் ப்ருஸியெனப்படுகிற ஒருவகை யாசனங்களிலும், சிலர் தரையிலுமாக உட்கார்ந்தார்கள். அவ்வரக்கர்கள், தங்கள் மன்னவன் கட்டளைப்படி அச்சபையில் வந்து சேர்ந்து, தங்களுக்குத்தக்கபடி ராக்ஷஸபதியாகிய இராவணனுக்குச் சமீபத்திலுட்கார்ந்தார்கள். அங்கு, சிறந்தவர்களாய், காரியங்களைச் சீராக ஆராய்கின்ற பண்டிதர்களாய், நற்குணங்களோடுகூடி எல்லாமறிந்தவர்களாய், புத்தியையே கண்ணுகப்பெற்றவர்களாய், ஆப்தர்களான மந்திரிமாரும் சூரர்களும் திரண்டிருந்தனர். அழகியதாய்ப் பொன்னிறமான இராவணனுடைய அச்சபையில், அரக்கர்கள், அப்பொழுது காரியம் இனிதுமுடியும்பொருட்டுப் பெருந்திரளாய் வந்துசேர்ந்தார்கள். மகாத்துமாவும் புகழ் பெற்றவருமாகிய விபீஷணர், விசாலமாய்க் குதிரைகள் பூட்டப்பட்டதாய்ப் பொன்னலங்கரிக்கப்பட்ட அழகிய சிறந்த இரதமொன்றி லேறிக்கொண்டு தமதுதமையனது சபைக்கு வந்து சேர்ந்தார். அவ்விடம் சேர்ந்ததும், அவர் தமது பெயரைச் சொல்லிக்கொண்டு, தமது தமையனுர் பாதங்களில் வணங்கினுர். சுக பிரகஸ்தர்களும் அவ்வாறே செய்தார்கள். அவர்களுடையநிலைமைக்குத்தக்கபடி ஆசனங்கள் அளிக்கப்பட்டன. பலவகையான பொன்னுபரணங்களினுலும் இரத்தினுபரணங்களினுலும் அலங்கரித்துக்கொண்டும், பலவகைப்பட்டாடைகளை உடுத்தும், சிறந்த கலவைச் சந்தனங்களைப் பூசிக்கொண்டுமுள்ள அரக்கர்கள் கூடிய அச்சபையில், நான்குபக்கங்களிலும் கமகமவென்று மாலைகளும் கந்தங்களும் கமழ்ந்தன. அங்கு வந்திருந்தவர்களில் ஒருவனுவது உயர்ந்தகுரலாற் பேசவில்லை; பொய்சொல்லவில்லை; வீண்வம்பான பேச்சுக்களை நிகழ்த்த

வில்லே: வெகுவீரர்களாய்த் தங்கள் தங்கள் மனோரதங்கள் நிறைவேறப்பெற்ற அவர்களெல்லோரும் தங்கள்யஜமானனுகிய இராவணனுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். அந்தச்சபையில், மஹஸ்வியாகிய இராவணனும், ஆயுதங்களே யேந்திக்கொண்டு வெகுமரியாதையுள்ளவர்களாய் மிக்க பலம்பொருந்தியவர்களான அவ்வரக்கர்களுடைய நடுவிலே, வசுக்களினிடையிலே தேவேந்திரன் விளங்குவதுபோல விளங்கலானன்.

பன்னிரண்டாஞ் சருக்கம்:
இராவணன் மந்திராலோசனைகேட்கக் கும்பகர்ணன் கூறுதல்.

போர்களில் வெற்றியடைபவனன இராவணன், அச்சபையை நன்றுகஉற்றுப்பார்த்து, சேனைத்தலைவனுகிய பிரஹஸ்தனை நோக்கி "சேனபதியே! நன்றுகத் தேர்ச்சியடைந்தவர்களான தேர்வீரர், யானைவீரர், குதிரைவீரர், காலாள்வீர ரென்ற நால்வகை வீரர்களையும், முன்னிலும் நன்றுகப் பாதுகாத்துவரும்படி நியமிப்பாயாக" என்று கட்டளையிட்டான். உடனே வணக்கமுடைய பிரஹஸ்தனும், அரசன்கட்டளையைச் செய்ய விரும்பி, சேனைகளையெல்லாம் அவ்வாலோசனைச் சபையின் உள்ளும் புறமும் வைத்து, பிறகு நகர்க்காவலின் பொறுட்டுத் தனியே சைனியங்களை யேவி, அரசன்முன் பாகவந்து உட்கார்ந்து, பின்வருமாறு சொல்லலானன்:—

இராவணன் கட்டளைப்படி பிரஹஸ்தன் நகர்க்காவலை வலிமைப்படுத்திவருதல்.

"வெகுபலம் பொருந்திய தங்கள் சேனையை நகரத்துக்கு வெளியிலும் உள்ளிலும் சரியாக அமைத்து வந்திருக்கின்றேன். ஆகையால், இனி யாதொரு கவலையு மின்றித் தாங்கள் தங்களிஷ்டப்படி என்ன செய்யவேண்டுமோ,

அதைச் செய்யலாம்; தங்கள் விருப்பம் நிறைவேறுக" என்றான்.

பிரஹஸ்தனுடைய பேச்சைக்கேட்டு, இராச்சியத்தின் நன்மையை நாடியிருக்கும் இராவணன், சுகப்படுவதிலேயே கருத்துக்கொண்டவனாய், தனதுநண்பர்கள்மத்தியிலிருந்துகொண்டு பின்வருமாறு சொல்லலுற்றான்:—"தர்மம், அர்த்தம், காமம் இவைகளுக்குள் எதை மேற்கொள்ளவேண்டுமென்று சந்தேகம் நிகழும்போது, இஷ்டாநிஷ்டங்களும் இன்பதுன்பங்களும் லாபநஷ்டங்களும் நன்மைதீமைகளும் உங்களுக்கு நன்றாகத்தெரியும். அன்றியும், இதுவரையில் நீங்கள் எடுத்த என்னுடைய காரியங்கள் யாவும், வீண்போகாமல், எப்பொழுதும் உங்களுடைய மந்திராலோசனையின்பிரபாவத்தாற் கைகூடியே வந்திருக்கின்றன. சந்திரன்முதலிய நவக்கிரகங்களும் நட்சத்திரங்களும் மருத்துக்களும் என்ற இவர்களாற் சூழப்பட்டு இந்திரன் விளங்குவதுபோல, நான் தங்களாற் சூழப்பட்டுச் சம்பத்துடன் விளங்கிவருகின்றேன். நானே, உங்களெல்லாருடனுங்கூடி ஆலோசிக்க எண்ணங்கொண்டிருந்தும், கும்பகர்ணன் தூங்கிக்கொண்டிருந்தபடியால், இதுவரையில் உங்களை இவ்விஷயமாக ஏவவில்லை. ஆயுதங்களையேந்தியவர்களில் முக்கியனும் மகாபலசாலியாகிய அந்தக்கும்பகர்ணன் ஆறுமாதகாலம் தூங்கிவிட்டு இப்பொழுதுதான் எழுந்திருந்தான். நானே, அரக்கர்கள் சஞ்சரிக்குந் தேசமாகிய தண்டகாரணியத்திலிருந்து ஜநகமகாராஜாவின் புத்திரியும் இராமனுடைய அன்பான மனைவியுமாகிய சீதையை, இங்குக்கொண்டுவந்திருக்கின்றேன். மந்தமானகதியையுடைய அவள், என்படுக்கையிலேற விரும்பவில்லை; மூவுலகங்களிலேயும் சீதைக்குச்சரியான ஒருபெண் இருப்பதாக எனக்குத்தோன்றவில்லை. அவளோ இடைசிறுத்துப்' பின்புறம்

இராவணன் மந்திராலோசனை கூறுமாறு கேட்டல்.

பருத்துச் சரத்காலசந்திரன்போன்ற முகமுள்ளவளாய், மயனுற் செய்யப்பட்ட மாயைபோலவும் தங்கப்பதுமை போலவும் தோன்றுகின்றாள். நன்றாகச் சிவந்து வழு வழுப்புடன் விளங்கும் அவளது இருபாதங்களையும், அவைகளில் அமைந்திருக்கும் தாமிரவருணமான நகங்களையும் பார்க்கும் பொழுதெல்லாம், என்காதல் பொங்குகின்றது. ஹோமத்தீப்போலவும் சூரியனுடைய காந்திபோலவும் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அவளைப் பார்த்து என் விருப்பம் அதிகரிக்கின்றது. மேலெடுத்த மூக்கும் அழகிய கண்களும் என்னும் இவற்றுடன் கூடிய அழகிய விசாலமான அவளுடையமுகம் பார்க்கப்படும்பொழுதெல்லாம், ஆசையென்பது என்னைத் தன்வசமாக்கிக் கொள்ளுகின்றதே! கோபம் சந்தோஷம் இவ்விரண்டினும் சமானமாயும், நிறத்தைவேறுபடித்துவதாயும், மன்மதத்தையும் உடம்பில் வியாதியையு முண்டாக்குவதாயுமுள்ள என்காமமானது, என்னைக் கலங்கச் செய்கின்றதே! நீண்டகண்களையுடைய அவளோ, தான் ஒரு வருஷகாலம் தனது கணவனை எதிர்பார்ப்பதாகவும், அதற்குள் அவன் வராதபக்ஷத்தில் என் கருத்துக்கு இசைவதாகவும் சொல்லியிருக்கின்றாள்.*நானும் அப்படியே ஆகட்டுமென்று அக் கண்ணழகியினிடம் ஒப்புக்கொண்டிருக்கின்றேன்; நானோ, வழிநடந்துவந்த குதிரை களைத்திருப்பதுபோல, எப்போதுமுள்ள காதலால் மெலிந்திருக்கின்றேன். பல நீர் வாழுயிர்களால் நிரம்பி வெகு கம்பீரமாக விளங்கும் இப் பெருஞ் சமுத்திரத்தை, காட்டிற் சஞ்சரிக்குங் குரங்குகள் எவ்வாறு தாண்டும்? தசரதருடைய குமாரர்களாகிய அவ்விருவர்தாம் எவ்வண்ணம் இதனைத் தாண்டுவார்? ஒரு குரங்கு இச்சமுத்திரத்தைத் தாண்டி இவ்விடம் வந்து நமக்குப் பெருந்தீங்குகளை விளைவித்த தாதலால், காரி

* இது, இராவணன் தனது மந்திரிகளுக்கு இட்டுக்கட்டிச் சொல்லும் பொய்.

யத்தின் போக்குக்கள் அறிந்துகொள்ளுதற்கு அரியன வா யிருக்கின்றன ; ஆகையால், உங்கள்புத்தியில் என்ன தோன்றுகின்றதோ, அதை வெளியிடுங்கள். மனிதர்க ளிடமிருந்து எனக்குப் பய முண்டாகப்போகிறதில்லை ; ஆனாலும், சிறிது ஆலோசியுங்கள். முன்பு உங்களுடன் கூடியவனாய், நான், தேவாசுரயுத்தத்தில் வெற்றியடைந்தி ருக்கின்றேன்: இப்பொழுதும், நீங்கள் எனக்குத் துணை யாக இருக்கின்றீர்கள். இப்பொழுதோ, சீதையிருக்கு மிடத்தையுணர்ந்து, அந்தராஜகுமாரரிருவரும், சுக்கிரீவன் முதலிய வானரவீரர்களை முன்னிட்டுக்கொண்டு, சமுத் திரத்தின் அக்கரையில் வந்திருக்கின்றார்கள். நான் மறு படி சீதையைத் திருப்பிக்கொடுக்காமலிருக்கும்படியும், அவ்விருராஜகுமாரரையும் வதைசெய்யும்படியும் எவ்வித மாக ஆலோசிக்கவேண்டுமோ, அவ்விதமாக ஆலோ சித்து நிச்சயமாகச்சொல்லுங்கள். இவ்வுலகத்தில் இராம னுக்கும் அவனையன்றி வேறொருவர்க்கும் வானரர் களுடன் இக்கடலைக்கடக்குஞ் சக்தி இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை ; ஆகையால், எனக்கு வெற்றி நிச்சயம்" என்றான்.

காமத்தாற் கவரப்பட்ட அவ்விராவணனுடைய இவ் வாறுகிய புலம்பலைக் கும்பகர்ணன் கேட்டு, வெகு கோபங் கொண்டு பின்வருமாறு சொல்லலானான்:— "தாங்கள் இலட்சுமணனோடு கூடிய இராமனிட மிருந்து, சீதையைப் பலாத்காரமாகத் தங்களுடைய புத்தி யின் நிச்சயத்தாலேயே எப்போது இங் குக் கொண்டுவந்தீர்களோ, அப்போதே, எங்களுடன் நன்றாக ஆலோசித்துச் செய்திருந்தால், தங்க ளுடைய மனமானது, யமுனாநதி யாமுனமலையினால் அணைகட்டப்பட்டிருப்பதுபோல உறுதியை யடைந்திருக் கும். மஹாராஜரே! இவ்வாலோசனைகளெல்லாம் சீதை யைக் கொணர்தற்குமுன்னமே தாங்கள் எங்களுடன்

கும்பகர்ணன் வார்த்தை.

ஆலோசித்திருந்தால், சரியாக இருந்திருக்கும். இராவண ரே! எவனொருவன் இராஜகாரியங்களை நியாயமாகப்பார்த்துச்செய்கின்றானே அவ்வரசனது புத்தி எல்லாருடைய ஆலோசனையாலும் ஒருவிதமான நிச்சயத்துக்கு வந்திருக்குமாதலால், அவன் பின்னல் ஒருவகைப் பரிதாபத்தையும் அடையமாட்டான். எவனொருவன் உபாயங்களை மந்திரிமார்களுடன் ஆலோசிக்காமல் அக்கிரமமாகச் செய்கின்றானே, அவனுடையகாரியங்கள், அசுசியான பாத்திரத்தில் வைக்கப்பட்ட ஹவிசுகள்போல் வீணாய்விடும். எவனொருவன் முன்செய்யவேண்டிய காரியத்தைப் பின்னும், பின்நடத்தவேண்டிய காரியத்தை முன்னும் செய்கின்றானே, அவன் நீதியநீதிகளை உணராதவனே. ஒருவன் பலவானாக இருந்தபோதிலும் ஆராயாது தொழில்செய்தால், அவ்வாறு செய்யப்பட்ட பொத்தல் வழியாக, சத்துருக்கள் பிரவேசித்துக் * கிரௌஞ்சமலையின் ஓட்டைவழியாக ஹம்ஸபட்சிகள் புகுந்து செல்வதுபோல, அவனை வெல்கின்றார்கள். தாங்கள் ஆலோசிக்காமல் இந்தப்பெரும்பாவகாரியத்தைச் செய்துவிட்டீர்கள்: விஷங்கலந்த மாமிசம் தன்னைப் புசிப்பவனைக் கொல்வதுபோல, இராமர் இதுவரையில் தங்களைக் கொல்லாமலிருப்பதே ஆச்சரியம். ஆனாலும், நான், தங்களுடையசத்துருக்களையெல்லாம்கொன்று,என்னலன்றிவேறொருவராற்சரிப்படுத்தமுடியாததும் தாங்கள்எடுத்துக்கொண்டதுமானகொடியஇக்காரியத்தைச் சரியான காரியமாகப் பண்ணிவைக்கின்றேன்: தாங்கள் கவலையற்றிருங்கள். எண்டிசைகளுக்கும் அதிபதியாக விளங்கும் மன்னவரே! இந்திரசூரியர்களாயிருந்தாலும், அக்கினி வாயுக்களாயிருந்தாலும், குபேர வருணர்களாயிருந்தாலும், தங்களுடைய சத்துருக்களை நான் வதைக்கின்றேன்.

* சுப்பிரமணியக்கடவுள் கிரௌஞ்சமலையைத் தமதுவேலாயுதத்தால் துளைத்தாரென்பதும், அவ்வோட்டை வழியாக அன்னப்பறவைகள் அம்மலைக்குக் கடக்கின்றன வென்பதும், புராணங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

மலைபோன்ற எனது தேகத்தையும், கூரான கடைவாய்ப் பற்களுடன் நான் செய்யும் அட்டஹாஸத்தையும், பெருமூலைத்தடி யெடுத்து நான் போர்புரிவதையும் கண்டால், இந்திரன்கூடப் பயப்படுவான். முதலிலே ஓர் அம்பைத் தொடுத்து, இரண்டாவதுதரம் மற்றோர் அம்பை எடுத்து இராமன் என்மேல் விடத்தொடங்குமுன்னமே, நான் அவனுடைய இரத்தத்தை உறிஞ்சிவிடுவேன். ஆகையால், தாங்கள் விசாரப்படவேண்டாம்; சந்தோஷமாக இருங்கள். நான், இராமனைக்கொன்று தங்களுக்குச் சுகத்தை விளைவிக்கும் வெற்றியை யுண்டாக்குமாறு என்னாலியன்றமட்டும் முயற்சிசெய்கின்றேன். இலட்சுமணனுடன்கூட இராமனைக் கொன்று, வானரசேனைத் தலைவரெல்லாரையும் புசித்துவிடுகின்றேன். தாங்கள் சுகமாகஇருங்கள். முதல்தரமான மதுக்களைப் பானஞ் செய்யுங்கள். ஒருவகைக்கலக்கமு மின்றி, தங்களுக்கு நன்மையான காரியங்களை நடத்துங்கள். இராமனை நான் யமனுடையமாளிகைக்கு அனுப்பிவிட்டபிறகு, சீதையும் தங்கள்வசமாய்விடுவாள்".

பதின்மூன்றுஞ் சருக்கம்:
இராவணன் சீதையைப் பலாத்காரஞ் செய்யாமைக்குக் காரணமும், அவனது அவஹாய சூரத்துவமும்.

சீதையை வலிவிற் கைப்பற்றுமாறு மஹாபார்சுவன் தூருபதேசஞ் செய்தல்.

வெகு பலசாலியாகிய மஹாபார்சுவன், இராவணன் கோபமாயிருப்பதையறிந்து, ஒருமுகூர்த்த காலம்ஆலோசித்து, கூப்பியகையனாய்,பின் வருமாறு சொல்லலானான்:— "எவனெருவன், பாம்புகளாலும் மற்றும் பலவிலங்குகளாலும் நிரம்பியிருக்குங் காட்டுக்குள், தேனைப் பருகவேண்டுமென்ற விருப்பத்தோடு புகுந்து,

தேனைப்பெற்றும் குடிக்காமலிருக்கின்றானே, அவன் மூடனேயாவன். சத்துருக்களை யடக்கும் வேந்தே! எல்லாருக்கும்மேலாகவிருக்கும் தங்களுக்கு மேலானவர் யார் இருக்கின்றார்கள்? ஆகையால், தாங்கள், தங்களுடைய சத்துருக்கள்தலையில் காலைவைத்ததாகக் கொண்டு, சீதையுடன் சுகமாக வாழுங்கள். மிக்கவலிமையுள்ளவரே! கோழியின்செயலை வலிய மேற்கொள்ளுங்கள்; சீதையை மெல்லமெல்லச் சுவாதீனப்படுத்திப் போகத்தைப்பெறுங்கள்; அதனால்மனமகிழுங்கள். தங்கள்கோரிக்கை நிறைவேறினபிறகு, ஏதாவது பயம் உண்டாகுமாயினும், இப்போது இல்லாமல் பின்னால் வரப்போகின்ற அந்தப்பயத்தைக் காத்துக்கொள்ளத் தங்களுக்கு வல்லமை யுண்டு. வச்சிராயுதத்தைத் தனது கையிலேந்தி இந்திரனே நம்மை எதிர்த்துவந்தபோதிலும், கும்பகர்ணனும் மகாபலம் பொருந்திய இந்திரஜித்தும் எங்களுடன்கூட நின்று அவனை வெல்ல, வல்லவர்கள். போர்செய்யச் சக்தியில்லாதவர்கட்காக ஏற்படுத்தியுள்ள சாம பேத தானங்க ளென்ற உபாயங்களை உதறிவிட்டு, தண்டோபாயமே நமக்கு வெற்றியைக் கொடுக்குமென்று விரும்புங்கள். மிக்கவலிமை படைத்தவரே! இங்கு வந்துசேர்ந்துள்ள தங்கள் சத்துருக்களெல்லாரையும் நாங்கள் எங்களுடைய ஆயுதங்களின் வல்லமையால் நம்வசஞ்செய்துவிடுவோம்; இதற்கு ஐயமேயில்லை" என்றான்.

மகாபார்சுவன் இவ்வண்ணஞ் சொன்னதும், அப்படிச் சொன்னதற்காக அவனை மெச்சி, ராக்ஷஸராஜன், மறுமொழி சொல்லுகின்றான்:— "மகாபார்சுவனே! என்விஷயமாய் இரகசியமாக முன்புநடந்த சங்கதியொன்று இருக்கின்றது: நான் சொல்லுகின்றேன்; முன்னே யான் அடைந்த அதைக் கேட்பாயாக: ஓருகால், ஆகாயத்தில் நெருப்புப்பொறிபோல விள

இராவணன் சீதாபிராட்டியைப் பலாத்காரஞ் செய்யாமைக்குக் காரணம்

ங்குகின்ற புஞ்சிகஸ்தலையென்பவள் என்னிடத்து அச்சத்தாற் பதுங்கிக்கொண்டு பிரமதேவருடைய மாளிகைக்குச் செல்வதைக் கண்டேன். உடனே அவளை நெருங்கி நான் பலாத்காரம் பண்ணினேன். அவளும் வாடின தாமரைக்கொடிபோல அக்கடவுளின்மாளிகை சேர்ந்தாள். நான்செய்த காரியம் அப்பிரமதேவருக்கு அப்போது தெரியவந்ததுபோலும்; உடனே அவர் வெகுகோபங்கொண்டு என்னிடம் வந்து, "அடா! இன்றுமுதல் நீ எந்தப்பெண்ணையாவது பலாத்காரம் பண்ணுவாயேயானால், உடனே உனது தலை நூறுசுக்கலாக வெடிக்கக்கடவது; இதற்கு ஐயமேயில்லை" என இவ்வாறு சபித்தார். இவ்வண்ணம் அவர் எனக்குச் சாபங்கொடுத்திருக்கின்றபடியால், நான் அச்சாபத்துக்குப்பயந்து, சீதையைப் பலாத்காரம்பண்ணுவதில் துணியாமலிருக்கின்றேன். என்வேகமோ சமுத்திரத்தின்வேகத்துக்கு ஒப்பானது; என்னுடையபோக்கோ வாயுவுக்குச் சமானமானது. இவைகளொன்றையும் இராமன் அறியான்: ஆதலால், அவன் என்னை எதிர்க்க வந்திருக்கின்றான். தனதுகுகையிற் படுத்துத் தூங்குஞ் சிங்கம் போலவும் உறங்கும் யமன்போலவும் கோபித்துக்கொள்ளுதற்குரியவனாகி வெறுமேனயிருக்கும் என்னை, எவன்தான் தட்டியெழுப்பத் துணிவான்? நான், போரிலே, சீறிக்கொண்டு செல்லுஞ் சருப்பங்களைப்போலக் கூர்மையான பாணங்களைப் பிரயோகிக்கும்போது, இராமன் பார்த்திலை; ஆகையால்தான், அவன் இப்பொழுது என்னையெதிர்க்கின்றான். வச்சிராயுதத்துக்கு ஒப்பாக எனது வில்லிலிருந்து புறப்படும் நாற்றுக்கணக்கான பாணங்களால், நான், இராமனை, கொள்ளிக்கட்டைகளால்யானையைக்கொளுத்துவதுபோல ஒருநொடியிற்கொளுத்திவிடுவேன். பெருஞ்சனியத்தாற் சூழப்பட்ட நான், காலையில் உதிக்குஞ் சூரியன் நட்சத்திரங்களின்காந்தியை வாங்கிவிடுவதுபோல,

இராவணனது தற்புகழ்ச்சி.

இராமனுடைய பலம்முழுவதையும் இழுத்துவிடுவேன். என்னுடன் போர்புரிவதற்கு, ஆயிரங்கண்கள்பெற்ற இந்திரனாலும் முடியாது; வருணனாலும் முடியாது. நான், குபேரனுற்பாதுகாக்கப்பட்டஇப்பட்டணத்தை, முற்காலத்தில் என்தோள்வலியாற் பெற்றேன்" என்றான்.

பதினான்காஞ் சருக்கம்:
விபீஷணர்சொன்ன நற்புத்தி.

அரக்கர்தலைவனான இராவணன் சொன்ன சொல்லையும், கும்பகர்ணன் பேசின நிரர்த்தகமான பேச்சுக்களையும் விபீஷணர், கேட்டு, அவ்விராவணனைநோக்கி, நன்மையை நாடி, வெகுஅர்த்தத்துடன்கூடியசொற்களைப் பின்வருமாறு சொல்லலுற்றார்:—"தோள்களினிடைப்பாகமாகிய உடலைப் பெற்று, சிந்தையென்ற விஷமமைந்து, புன்னகையென்னுங் கூரானபற்களுடன் கூடி, ஐந்து விரல்களாகிய ஐந்துதலைகளையுடைய பேருருவமுள்ள சீதையென்றபெரும்பாம்பை, அரக்கர்வேந்தே! எதற்காக விரும்புகின்றீர்கள்? பெருமலையின்சிகரத்துக்கு ஒப்பான சரீரமமைந்து, கோரதந்தங்களையும் நகங்களையும் ஆயுதங்களாகவுடைய வானரர்கள், நமது இலங்கையை நோக்கி ஓடிவருமுன், தாங்கள் இராமரிடம் சீதாதேவியைக் கொடுத்துவிடுங்கள். வச்சிராயுதம்போன்று வாயுவுக்கு ஒப்பான வேகத்தைக் கொண்ட பாணங்கள் இராமபிரானுற் பிரயோகிக்கப்பட்டு அரக்கர்களுள் முக்கியமானவர்களுடைய தலைகளைக் கவருமுன்னமே, இராமரிடம் சீதாதேவியைக் கொடுத்துவிடுங்கள். பிரஹஸ்தரே! இடிபோன்ற வேகமுள்ளனவாய் உயிரைமாய்த்தேதீர்வனவான கூரான இராமபாணங்கள்

விபீஷணர் கூறும் நற்புத்தி.

உங்களதுமேனியில் விழுந்து பிளக்கவில்லை; அதனால்தான், நீங்கள் இவ்வண்ணம் தற்புகழ்ச்சி செய்கின்றீர்கள். கும்பகர்ண இந்திரஜித்துக்களாவது, நமதுஅரசராவது, மகாபார்சுவ மகோதரர்களாவது, நிகும்ப கும்பர்களாவது, அதிகாயனாவது மூனைமுகத்தில் இராமருடைய எதிரில் நிற்கவல்லவ ரல்லர். வேந்தே! உம்மைச் சூரியபகவானே காப்பாற்றினாலும், மருத்துக்கள் பாதுகாப்பினும், நீங்கள் இந்திரன்மடியின்மேலேறிஉட்கார்ந்தாலும், யமனுடைய ஸம்ரக்ஷணையிலிருந்தாலும், ஆகாயத்திற் பறந்தாலும், பாதாளத்திற் புகுந்துகொண்டாலும், உம்மை இராமர் உயிருடன் பிழைத்திருக்க விடார்" என்றார்.

பிரஹஸ்தன் அவ்விபீஷணரது வார்த்தைக்கு மாறுகூறல்.

இவ்வாறு விபீஷணர் சொன்னதைப் பிரஹஸ்தன் கேட்டு, "தேவர்களிடமிருந்தாவது, அசுரர்களிடமிருந்தாவது நமக்குப் பயமென்பது உண்டாகமாட்டாது; யக்ஷர், கந்தர்வர், உரகர், கருடர் என்ற இவர்களிடமிருந்தும் போரில் நமக்குப் பயமுண்டாகக் காரணமில்லை. ஆகையால், மானுடவரசனுடைய குமாரனாகிய இராமனிடமிருந்து நமக்கு எவ்வண்ணம் பயமுண்டாகும்?" என்றான்.

இவ்விதமாய் இராவணனுடைய நாசத்துக்கே காரணமாகப் பிரகஸ்தன் சொன்ன சொல்லைக் கேட்டு, விபீஷணர், தாம் தமது தமையனுடைய நன்மையையே நாடிய மகாத்துமாவாகையாலும், தர்மம் அர்த்தம் காமம் இவைகளைத் தமது புத்தியால் நன்றாக ஆராய்ந்தறிந்தவராகையாலும், பின்வருமாறு மறுபடியும் சொல்லத்தொடங்கினார்:— "அதருமத்திற் புத்திவைத்தவன் சுவர்க்கத்தின் வழியை அடையமாட்டாதவாறுபோல, பிரகஸ்தரே! வேந்தரும் மஹாதரரும் நீங்களும் கும்பகர்ணனும் இராமரைப்பற்றி எவ்வாறு சொல்லுகின்றீர்களோ, அவ்வாறு

செய்தல் முடியாது. ஓடமில்லாதவனுல் எவ்வாறு சமுத்திரத்தைக் கடக்கமுடியாதோ, அவ்வாறே, பிரஹஸ்தரே! என்னுலும், உம்மாலும், ஒருங்குதிரண்ட எல்லா அரக்கர்களாலும், காரியத்தை நிறைவேற்றுவதில்வல்லவரான இராமரைக் கொல்வதென்பது, ஒரு பொழுதும் முடியாது. தர்மத்தையே பிரதானமாகக்கொண்டவராய், மஹாரதரென்ற பட்டம் பெற்றவராய், இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்தவராய், வல்லமையால் விளங்கும் இராமரது தொழில் திறமையைக் கண்டு தேவர்களும் தியங்குகின்றார்களே! பிரகஸ்தரே! கொஞ்சம் நுனிவளைந்து கிட்டுதற்கரியனவாய் வெகுகூராகவிருக்கும் கழுகினிறகுகட்டியுள்ள அவருடைய பாணங்கள் அவராற் பிரயோகிக்கப்பட்டு உமது சரீரத்தை இன்னும் துளைக்கவில்லை யாகையால், நீங்கள் இவ்வாறு தற்புகழ்ச்சிசெய்கின்றீர்கள். இராவணராலும், வெகுபலம்பொருந்திய த்ரிசீர்ஷராலும், கும்பகர்ணராலும், அவர்குமாரனுகிய நிகும்பனுலும், இந்திரஜித்தாலும், இந்திரனுக்குஒப்பான இராமர்முன்னே போரில்நின்று எதிர்க்கமுடியாது; போரில் இராகவரதுமுன்னேநிற்க, தேவாந்தகன், நராந்தகன், அதிரதனுய்ப் பருத்தஉடலையுடைய அதிகாயன், மலைக்குஒப்பானபலமுள்ள அகம்பனன் என்ற இவர்களில் ஒருவராலும் ஆகாது. நண்பர்கள் போல வேஷமாத்திரமுடையவராய்ப் பகைவர்களான நீங்கள், இயல்பாகவேகொடியவராய், ஆராயாது தொழில் செய்பவராகிய இவ்வரசரை, வியசனத்தில் மூழ்குவித்து, அரக்கர்களெல்லாம் ஒருசேர மாளும்படி, அனுசரிக்கின்றீர்கள். பெரிய உடலையும் ஆயிரந்தலைகளையுமுடைய மகாபலம்பொருந்திய பயங்கரமான இராமரிடத்துப் பகையென்ற பெருஞ்சர்ப்பத்தால் வெகுபலமாகக் கட்டப்பட்டிருக்கும் நமது இவ்வரசரை, நீங்கள் அக்கட்டி

விபீஷணர் இராமருடைய வலிமையைக் கூறி, சீதையை விட்டிடவேண்டுமென்றல்.

னின்று விடுவிக்கவேண்டும். நமது வேந்தரிடமிருந்து எல்லாப்பாக்கியங்களையும் பெற்றிருக்கும் நண்பர்களான நீங்களனைவரும், இக்காலத்தில் ஒன்றுசேர்ந்து, கொடிய வலிமைகொண்ட பூதமொன்றுற் பிடிக்கப்பட்டவனைப் போலச் சத்துருக்கள்கையில் வலியப் பிடிபடும்வரையில் நமது அரசரைக் காப்பாற்ற வேண்டாமா? கொல்லுந்தன்மையுள்ள லக்ஷ்மணரென்றசமுத்திரத்தில் மறைந்திருக்கின்ற இராமராகிய வடவைக்கனலின் வாயில் விழ இருக்கின்ற அவ்விராவணரை, நீங்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து வலியத்தப்புவித்தல் தகுதி. நாம், அம்மானுடவேந்தரிடம் அவர்மனைவியைக் கொண்டுபோய்க் கொடுத்துவிடுவோம்: இதுவே, இந்நகரத்துக்கும் இதில் வாழ்கின்ற எல்லாவரக்கர்களுக்கும் நமதுஅரசர்க்கும் அவரதுநண்பர்கட்கும் க்ஷேமத்தைத் தரக்கூடியது; இவ்வாறு ஏன் மனத்திலிருப்பதை, நான் ஒளியாமல் வெளியிடுகின்றேன். எவனொருவன், பகைவருடைய பலம் இடம் சக்தி சித்திகள்தன்னுடையவற்றோடு ஒத்திருத்தல், குறைந்திருத்தல், மிக்கிருத்தல் என்ற இவைகளையெல்லாம் நன்முக ஆலோசித்து, தனது யஜமானனது நன்மைக்குக் குறைவு வராதபடி சொல்லுகின்றானே, அவன்தான் மந்திரியாவன்" என்றார்.

பதினேந்தாஞ் சருக்கம்:
தமதுசொல்லைப் பரிகசித்த இந்திரஜித்துக்கு விபீஷணர் நற்புத்திகூறல்.

பிருகஸ்பதிக்கு ஒப்பான புத்தியையுடைய விபீஷணர் சொன்ன அச்சொற்களை, ராக்ஷஸவீரர்களில் முக்கியனை பருத்தவுடலையுடைய இந்திரஜித்து, பொறுமையுடன்கேட்டு, அப்போது பின்வருமாறு சொல்லலானான்:— "சிற்றப்பா! ஏன் இப்படி மிகவும் நடுங்கியவர்போல வீணைபேச்சுக்களைப் பேசு

விபீஷணரது வார்த்தையை இந்திரஜித்து கண்டித்துப் பேசுதல்.

கின்றீர்? இக்குலத்திற் பிறவாதவன்கூட இவ்வண்ணம்பேசமாட்டான்; இவ்வசனத்தை அநுஷ்டானத்திற் கொணரவும் மாட்டான். பலம், மகிமை, முயற்சி, சௌரியம், தைரியம், பிறரையடக்கும்வல்லமை இவைகள்ஒன்றுமில்லாமல் இக்குலத்திற் பிறந்திருப்பவரில் ஒருவர், என்சிற்றப்பனாகிய இந்தவிபீஷணர். அந்தராஜகுமாரர் இருவரோ மிகவும் வலியற்றவர்; அரக்கர்களுக்குள் வெகுசாதாரணமான ஒருவன் அவர்களை எளிதாகக் கொல்லலாம். அப்படியிருக்க, பயந்தவரே! நீங்கள் ஏன் பயப்படுத்துகிறீர்கள்? மூவுலகங்களுக்கும் யஜமானனான தேவேந்திரனையல்லவோ, நான் சிறையாகப் பிடித்து இவ்வுலகத்துக்குக் கொண்டுவந்தேன்; அதைக்கண்டு எல்லாத்தேவர்களும் நடுநடுங்கிப் பலதிசைகளைநோக்கி ஓடினார்கள். நான், கோவென்றுகதறின ஐராவதத்தின் தந்தங்களை வலியப்பிடித்து, அதனை இப்பூலோகத்தில் தள்ளவில்லையோ? அதைக்கண்டு எல்லாத்தேவகணங்களும் நடுங்கினின்றார்களே! இவ்வண்ணம், நான், தேவர்களின் செருக்கையும் குறைத்திருக்கின்றேனே; அசுரர்களுக்குள் முக்கியமானவர்களுக்கெல்லாம் துக்கத்தை விளைவித்திருக்கின்றேன். அவ்வாறுசெய்த மிக்கவலிமையையுடைய நான், சாதாரண மானிடர்களாயிருக்கும் ராஜகுமாரராகிய அவ்விருவரை யடக்க, எவ்வாறு வல்லமையுடையவனாகமாட்டேன்?" என்றான்.

விபீஷணர் இந்திரஜித்தைப் பழித்து, இராவணனை நோக்கிச் சீதையைக்கொடுத்துவிடச் சொல்லுதல்.

ஒருவராலும் தகையமுடியாதவனும் இந்திரனுக்கு ஒப்பானவனும் வெகுபராக்கிரமமுள்ளவனுமான இந்திரஜித்து இவ்விதமாகச் சொன்ன சொற்களை, ஆயுதம் ஏந்தியவர்களுக்குள் வெகுஉத்தமரான விபீஷணர் கேட்டு, உடனே அர்த்தகௌரவமுள்ள சொற்களைச் சொல்லலுற்றார்:— "குழந்தாய்! நீ இன்னும் சிறிய

வனே; உனக்குப் புத்தி நன்றாய் உதிக்கவில்லை; ஆகையால், ஆலோசிக்கும்படியான சக்தி உனக்கு வரவில்லை. அதனால் தான், நீ, உன்னையே நாசம்பண்ணிக்கொள்ளும்படி, அர்த்தமில்லாத பலவார்த்தைகளை வீணுகப்பேசினாய். இந்திரஜித்தே! நீ, இராவணகுமாரனென்ற பெயரை வகித்துக்கொண்டு, உன்தந்தைக்கு ஒருநண்பனாவடிவமாய் வந்த சத்துரு; இராகவரிடமிருந்து அவசியமாக மரணத்தையுண்டாக்கக்கூடியது இராவணனதுசெயலென்று நான் சொல்லக்கேட்டிருந்தும், நீ உனது புத்தியீனத்தால் உன்தந்தையின் தீச்செயலை அநுமதிசெய்கின்றாய். நீமாத்திரமா கொல்லுதற்கு உரியவன்? நீ மாத்திரமா கெடுமதியுடையவன்; சிறுவனும் பிடிவாதமுடையவனும் ஸாஹஸிகனுமான உன்னை, இப்போது, எவன், ஆலோசிப்பவர்களின் அருகில் இங்கு வரச்செய்தானோ, அவனும் கொல்லுதற்கு உரியவனே. நீயோ விவேக சூந்தியன்; எல்லாமறிந்தவனென்று கர்வங்கொண்டவன்; வணக்கமற்றவன்; கொடுந்தன்மையுள்ளவன்; அற்பபுத்தியுள்ளவன்; துஷ்டன்; மூர்க்கன்; எப்பொழுதும் கெடுதலிலேயே அறிவைச் செலுத்துபவன். ஆகையால், இந்திரஜித்தே! நீ சிறுபிள்ளைத்தன்மையால் இவ்வண்ணஞ் சொல்லுகின்றாய். பிரமதண்டம்போலப் பிரகாசித்துக்கொண்டு, மிக்கஜ்வாலையைப்பெற்று, யமதண்டத்துக்குச் சமானமாகச் சமீபத்தில் இனி வரும் இராமபாணங்களைப் போரில் யாராற் சகிக்கமுடியும்? ஓ! மன்னவரே! தனங்கள், இரத்தினங்கள் ஆபரணங்கள் திவ்வியமானவஸ்திரங்கள் விசித்திரமான மாணிக்கங்கள் என்ற இவைகளுடன், தேவியாகிய சீதையையும், இராமரிடம் கொண்டுபோய்க்கொடுத்துவிட்டு, இங்கு ஒரு துயரமுமின்றி நாம் சுகமாகவசிப்போம்" என்றார்.

———

பதினேழாஞ் சருக்கம்:
விபீஷணர் இராவணனைவிட்டு எழுதல்.

செவிக்குஇனியதும் நன்மையைநாடியதுமான வார்த்தையை விபீஷணர் சொல்ல, இராவணன் காலத்தினுல் ஏவப்பட்டவனுய், அவரைநோக்கிக்கடுமையாகச்சிலசொல்லலானுன்:—"சத்துருவோடும் கோபித்திருக்கின்றபாம்போடும் வசித்தாலும் வசிக்கலாம்: நண்பன்போலத் தோன்றிச் சத்துருவினிடத்திற் பட்சபாதமுடையவனுடன் வசிக்கவேகூடாது. அடா அரக்கா! உலகமுழுவதும் பங்காளிக்காய்ச்சலென்று சொல்லப்படுவதை நான் நன்றுக அறிவேன். தாயாதிகளென்பவர்கள் எப்பொழுதும் தங்களுடையதாயாதிகளுக்குச் சங்கடமுண்டாகும்பொழுது களிக்கின்றுர்கள். தமது குடியில், முக்கியமானவனுயும் படித்தவனுயும் காரியங்களைத்தவருது செய்து முடிப்பவனுயும் தருமங்களை ஆராய்பவனுயும் சூரனுயும் எவன் இருக்கின்றுனே, அவனைத் தாயாதிகள் லட்சியம்பண்ணுமல் நடக்கின்றுர்கள்; சமயம்நேரும்பொழுது அவமானமும் செய்கின்றுர்கள். தங்கள் மனத்தில் தீமையை ஒளித்துவைத்துக்கொண்டு, வெளிக்குமட்டும் எப்பொழுதும் நண்பர்கள்போல நடித்துவந்து, கொடிய செயல்களையே செய்யும் பங்காளிகள், சமயம்நேரிடும் பொழுது துரோகத்தையே பண்ணிவிடுகின்றுர்கள்: ஆகையால், அவர்கள் எப்பொழுதும் பயத்தைத் தோற்றுவிப்பவர்களே. ஒருகாலத்தில், பத்மவனமென்ற காட்டில் யானைகளைப் பிடிக்கக் கையும் கயிறுமாகச் சில ஆட்கள் வந்தபொழுது, அவர்களைப்பார்த்ததும் அக்காட்டுயானைகள் பாடியபாட்டுக்களை நான் சொல்லுகின்றேன்; நீ காது கொடுத்துக்கேள்:—" தீயும் பாசாயுதங்களும் வேறு ஆயு

இராவணன் விபீஷணரைப் பழித்தல்.

தங்களும் ஆகிய இவற்றால் நமக்கு ஒருபொழுதும் பய முண்டாகமாட்டாது ; தங்கள்காரியத்தையே பெரியதாகக் கொண்ட கொடிய நாட்டானைகளாகிய நமது தாயாதிகளே நமக்கு அச்சத்தை யுண்டாக்குகின்றன: ஏனெனில், இவை கள்தாம் நம்மைப்பிடிக்கும் உபாயத்தைச் சொல்லிக் கொடுக்கின்றன: இதற்கு ஐயமேயில்லை. ஆகையால், எல் லாப்பயங்களைக்காட்டிலும் தாயாதிபயமே மிகவுங்கஷ்ட மானது." இதை நான் நன்றாக அறிந்திருக்கிறேன். பசுக்க ளிடத்தில் வளத்துக்குக்காரணமும், அந்தணர்களிடத்தில் பஞ்சேந்திரிய நிக்கிரகமும், மகளிரிடத்திற் சஞ்சலமும் போல, தாயாதிகளிடத்தில் பயத்தையுண்டாக்குங் குணம் இயல்பாகவேயிருக்கின்றது. சாதுவே! இவ்வுலகத்திலுள்ள எல்லாராலும் வணங்கப்பட்டவனுய்ப் பாக்கியங்களெல்லா வற்றையும்பெற்றவனுய் எல்லாப்பகைவர்களையும் அட க்கினவனுய் நான் இருப்பது, உனக்கு விருப்பமாக இல்லை. தாமரையிலையில் விழுந்த நீர்த்துளி எவ்வாறு அத னுடன் ஒட்டமாட்டாதோ, அதுபோலவே அயோக்கியர்க ளிடம் பழக்கமென்பது ஒட்டுதற்குக் காரணமாகமாட்டாது. தேனீக்கள் மலர்களிலுள்ள தேனை ஆசையுடன் குடித்து விட்டு, பிறகு அவைகளில் நிற்காமற்போகும் ; அவ்வ ண்ணம்போன்றவனே நீயும்: அயோக்கியர்களுடைய நட்பு இவ்வாறுதான் இருக்கும். எப்படி, யானையானது, ஸ்நா நம்செய்துவிட்டுப் பிறகு தனது துதிக்கையால் மண்ணை வா ரித் தன் தலையிற் போட்டுக்கொள்ளுகிறதோ, அப்படித் தான் அயோக்கியர்களுடைய நட்பும். சரத்காலத்து மேகங்கள் கர்ஜித்து மழைபொழிந்தாலும், அதனால், முன் னமே ஈரமாயிருக்கின்ற நிலத்துக்கு யாதொரு பயனும் உண்டாகாதவாறுபோல, அயோக்கியர்களுடைய நட் பால் யாதொருபயனு மில்லை. அடா அரக்கா! வேறொ ருவன் இவ்வண்ணம் வார்த்தை சொல்லியிருப்பானே யானால், அவன் அந்நிமிஷத்திலேயே நாசமாயிருப்பான்.

நீ கெட்டாய்! நீ இக்குலத்தைக் கெடுப்பவன்" என்றான்.

இவ்வாறு இராவணன் கடுமையாகச் சொல்லவே, எப்பொழுதும் நியாயத்தையே எடுத்துப்பேசுந்தன்மையுள்ள விபீஷணர், தமதுகதாயுதத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, தம்மைச்சேர்ந்த நான்கு அரக்கர்களுடன் உயர எழுந்தார். அவ்வாறு ஆகாயத்திற்கிளம்பி நின்ற சீமானான விபீஷணர், கோபங்கொண்டவராய், தமது தமையனான இராவணனை நோக்கிச் சொல்லலானார்:— "வேந்தே! தாங்கள் என் தமையனராக இருக்கின்றீர்கள்; ஆகையால், உங்கள் மனத்துக்குத் தோன்றிய படி, நீங்கள், என்னைப்பற்றி என்னென்ன சொல்லவேண்டுமோ அவைகளைச் சொல்லுக. தமையனார் மரியாதை செய்யத்தக்கவர்; தந்தைக்குச் சமானமானவர்; ஆனாலும், தாங்கள் தருமத்தின்வழியில் நிற்கவில்லை: இப்பொழுது தாங்கள் என்னைநோக்கிக் கடிந்துகூறிய சொற்கள் அவ்வளவும் பொய். அவைகள் என்னைச் சகிக்கமுடியவில்லை. ஐயா! பத்துமுகங்கள் பெற்றவரே! தங்கள் நன்மையை நாடி, நான், நீதிகளை எடுத்துச்சொன்னேன்: நல்லறிவில்லாதவர்கள், காலத்தின்கொடுமையிற் சிக்கிக்கொண்டு, தங்களுடைய நன்மைக்காகச் சொல்லப்படுகின்ற இதங்களை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அரசரே! எப்பொழுதும் இனிமையாகவே பேசுங் குணமுள்ளவர்கள் இவ்வுலகத்தில் எங்கும் கிடைப்பார்கள்; கேட்பதற்கு இனிமையாயிராத நன்மை தரக்கூடியதை எடுத்துச்சொல்பவனும் அரியன்; அப்படிச் சொல்வதைக் கேட்பவனும் அரியனே. தீப்பற்றியெரியும் வீட்டை உபேட்சிக்க முடியாதவாறுபோல, எல்லாப் பிராணிகளையும் ஒழிக்கவல்ல காலபாசத்தாற் கட்டுண்டு அழியஇருக்கின்ற தங்களை, வெறுமனேபார்க்க மனமில்லாதவனாய், நான் இவ்வளவுதூரம் எடுத்துச்சொன்னேன்.

விபீஷணர் நால்வரோடுஅங்கிருந்து எழுந்து, இராவணனுக்குக் கட்டுரைகூறுதல்.

கொழுந்துவிட்டெரியும் தீப்போலப் பிரகாசிக்கின்ற பொன் மயமாகிய கூரான இராமபாணங்களால், நீங்கள் மாண்டு போவதைப் பார்க்க மனஞ் சகியாதவனுய், நான், இவ்வளவுதூரம் புத்தி சொன்னேன். மணலாற் கட்டப்பட்ட கரைகள் சிதறிவிடுவதுபோல, சூரர்களும், பலமுள்ளவர்களும், ஆயுதப்பயிற்சியில் தேர்ந்தவர்களும், காலத்தாற் பிடிக்கப்பட்டவர்களாய்ப் போரில் அழிந்துவிடுகின்றூர்கள். தங்கள் நன்மையை நாடி நான் இதுவரையிற் சொன்னதை, விரோதமாகத்தோன்றினலும், தாங்கள் பெரியவர்களாதலாற் பொறுத்துக்கொள்ளவேண்டும். தங்களையும், இந்நகரத்தையும் இதில் வசிக்கும் அரக்கர்களையும் எப்படியாவது பாதுகாத்துக்கொள்ளுங்கள். எப்படியாவது உங்களுக்கு க்ஷேமம் உண்டாகக்கடவது: நான் போகிறேன். என்னைவிட்டு எப்படியாவது சுகமடையுங்கள். நிசாசரரே! தங்கள் நன்மையை நாடிய நான் எவ்வளவோ தடுத்துக் கூறியும், என்சொற்கள் தங்கள்மனத்திற்குப் பிடிக்கவில்லை. ஆயுள்முடிந்து காலம்கிட்டப்பெற்றவர்கள் தமது நண்பர்கள் சொல்லும் ஹிதமானவார்த்தைகளை ஒருபொழுதும் கேட்கமாட்டார்களன்றே!" என்றூர்.

பதினேழாஞ் சருக்கம்:

ஸ்ரீராமரைச் சரணமாக அடைந்த விபீஷணரைக்குறித்துப் பலர் பலவாறுகூற, அநுமான் ஏற்றுக்கொள்ளலா மென்றல்.

இராவணனது தம்பியாகிய விபீஷணர், இவ்வாறு இராவணனைக் கடிந்து சொல்லி, ஒரு முகூர்த்தகாலத்துக்குள், இராமரும் இலட்சுமணரும் எவ்விடத்தில் இருந்தார்களோ அவ்விடம் வந்து சேர்ந்தார். மேருமலையின்சிகரத்தைப்போலவும் பிரகாசிக்கின்ற மின்னற்கொடிபோலவும்

ஆகாயத்தில்வந்துநிற்கும் அவ்விபீஷணரை, பூமியில்நின்ற வாநரத்தலைவர்கள் கண்டார்கள். அவ்வாறு நான்குஅரக்கர்களுடன் வந்த அவ்விபீஷணரை, எவராலும் வெல்ல முடியாத புத்திமானாய் வாநரராஜனை சுக்கிரீவன், பார்த்து, மற்றை வாநரர்களுடன் ஆலோசிக்கலானான்; ஒரு முகூர்த்தகாலம் ஆலோசித்து, அநுமான் முதலிய எல்லா வாநரர்களையும் பார்த்துப் பின்வருமாறு சொல்லலுற்றான் :—"பல ஆயுதங்களை ஏந்திக்கொண்டு, இவ்வரக்கன், தனக்குத் துணைவரான நான்கு அரக்கர்களுடன், நம்மைக் கொல்லவென்றே வருகின்றான்: நீங்கள் பாருங்கள்; ஐயமேயில்லை" என்று மிகவுஞ்சிறந்த இவ்வார்த்தையைச் சொன்னான். அந்தச் சுக்கிரீவனுடைய வார்த்தையை, வாநரமுக்கியர்களெல்லாரும், கேட்டு, ஆச்சாமரங்களையும் மலைகளையும் தூக்கிக்கொண்டு, பின்வருமாறு சொல்லலானார்கள் :—"வேந்தே! இப்பாதகர்களை வதைசெய்யுமாறு எங்களுக்கு விரைவாகக் கட்டளையிடுங்கள்: அற்ப பலமுடைய இவ்வரக்கர்கள் எங்களாற் கொல்லப்பட்டுப் பூமியில் விழட்டும்" என்று இவ்வாறு உரைத்தார்கள்.

விபீஷணரைக் கண்ட வாநரர்களின் கலக்கம்.

இவர்கள் இவ்வாறு ஒருவருடன்ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே, விபீஷணர், சமுத்திரத்தின் வடகரை சேர்ந்து, ஆகாயத்திலிருப்பவராகவே நிற்கலானார். அன்றியும், பேரறிவினராய் மஹாஞான அவர், ஆகாயத்திலிருந்துகொண்டே, சுக்கிரீவனையும் வாநரர்களையும் நோக்கிப் பெருங்குரலால் பின்வருமாறு சொல்லலுற்றார்:—"ஐயா! அரக்கர்வேந்தனாய் அரக்கனுமாய்க் கொடியநடத்தையுள்ளவனுமாய் இராவணனென்று பிரசித்திபெற்ற ஒருவன் இருக்கின்றான்; அவனுக்குப்பின்பிறந்த சகோதரன் நான்: விபீஷணனென்னும் பெயருடையேன். அவ்விராவணன், ஜடாயுவென்பவரைக் கொன்று,

வாநரரிடத்து விபீஷணருடைய வேண்டுகோள்.

ஜநஸ்தாநத்தினின்று சீதாதேவியை யெடுத்துப்போய், அசோகவநிகையிலே மூச்சும்விடவொண்ணுதபடி சிறைப் படுத்திப் பரவசையாய் எளியவளாயிருக்குமாறு வைத் திருக்கின்றான்; அவளை, ராக்ஷஸிகள் பாதுகாக்கின்றார் கள். நானே, பலதடவை பலகாரணங்களை எடுத்துக் காட்டி, இராமரிடம் சீதாதேவியை விட்டுவிடுங்களென்று அவ்விராவணனுக்கு அறிவு மூட்டினேன்; ஆயுள்முடிந் தவன் மருந்துண்பதை ஒப்புக்கொள்ளாதவாறுபோல, நான் சொன்ன நன்மையான வாக்கியங்களை, தனதுபொல் லாத காலத்தால் ஏவப்பட்டு அவ்விராவணன் ஒப்புக்கொ ள்ளவில்லை. அதுவுமல்லாமல், அவன், என்னை மிகவுங்கடி ந்துபேசி, ஓர் அடிமைபோல அவமானமுஞ் செய்தான்: ஆகையால், நான், என் பெண்டுபிள்ளைகளை விட்டு, இராக வரைச் சரணமாக வந்தடைந்தேன். எல்லாவுலகங்களுக் கும் சரண்யராய் மகாத்துமாவாக விளங்கும் இராகவ ரிடம், நீங்கள், சடிதியிற்சென்று, விபீஷணன் வந்திருக் கின்றனென்று என்னைப்பற்றிச் சொல்லுங்கள்" என்றார்.

இவ்வார்த்தையைக் கேட்டதும், வெகு வேகமாகச் சென்று, சுக்கிரீவன், இலட்சுமணருடையமுன்பாக, இராம ரிடம், வெகு பரபரப்புடன் பின்வருமாறு சொல்லலுற் றான் :—" இராவணனுக்குப் பின்பிறந்த சகோதரனுகிய விபீஷணனென்பா னொருவன், நான்கு அரக்கர்களுடன் வந்து தங்களைச் சரண மாக அடைந்திருக்கின்றான். சத்துருக்களை நாசம் செய்பவரே! வானரர்கள் விஷயத் தில் மந்திராலோசனை செய்தும், அணிவகு த்தும், ஏற்றபடி உபாயங்களை உபயோகித்தும், அரக்கர்க ளுடைய வேவுகாரரால் அவர்களது மந்திராலோசனையை உணர்ந்தும், அணிவகுப்பைத் தெரிந்தும், வெல்லும் உபாயங்களை ஆராய்ந்தும் ஜாக்கிரதையுடன் இருக்கவேண் டும்; இப்படியிருந்தால் தங்களுக்கு நன்மையுண்டாகும்.

சுக்கிரீவன் விபீஷணரைப் பற்றிச் சந்தே கித்து இராம ரிடம் கூறுதல்.

தங்களுக்கு இஷ்டமான உருவங்கொள்ள வல்ல இவ்வரக்கர்கள், கண்ணுக்குத் தெரியாதபடி சஞ்சரிக்க வல்லவர்கள்; வெகு சூரர்கள்; வஞ்சனையை அறிந்தவர்கள். இவர்களிடம் ஒருபொழுதும் நம்பிக்கை வைக்கலாகாது. இவன் ஒருகால் ராக்ஷஸராஜனுகிய இராவணனுடைய வேவுகாரனுக இருக்கலாம்: இவன், நமக்குட்புகுந்து, நம்மைப் பேதஞ்செய்வான்: ஐயமேயில்லை. அல்லது, புத்திமானுகிய இவன், நம்பும் வரையிற் சேர்ந்திருந்து, சமயம்பார்த்து ஒருகால் கொன்றுவிட்டாலும் விடுவான். பகைப்படையைத் தவிர்த்து, துணைப்படை காட்டுப்படை மூலப்படை கூலிப்படை என்ற எல்லாப்படைகளையும் ஓர் அரசன் கைக்கொள்ளலாம். பிரபுவே! இயல்பாகவே தங்களுக்குப் பகைவனன் அரக்கர்வேந்தனுடைய தம்பி இவன்; சத்துருவின் கட்சியிலிருந்து வந்திருக்கின்றன்: நாம் எப்படி இவனை நம்பலாம்? தகுதியாகத்தொழில்செய்பவரிற் சிறந்தவரே! இவ்விபீஷணனை, இராவணனுல் அனுப்பப்பட்டவனென்று கருதுங்கள்; நாம் இவனைவதைப்பதுதான் நலமென்று தோன்றுகின்றது. தாங்கள் நம்பிய வளவில் மாயையால் மறைந்து தங்களைக் கொல்வதற்காகவே, இவ்வரக்கன், கொடிய எண்ணத்துடன், இராவணனுல் ஏவப்பட்டு, இங்கு வந்திருக்கின்றன்: இவன் வெகுசாமர்த்தியமுள்ள பகைவனுகையால், தனக்குப் பகைவர்களான நமது சைனியத்தில் இவன் புகுந்து, சமயம் பார்த்திருந்து, காக்கையொன்றுமே கோட்டான்களை நலிந்தது போலக் கொன்றுவிடுவான். ஆகையால், நாம் கொடிய தண்டனையால் இவனை மந்திரிகளுடன் கொல்லவேண்டும். வெகுகொடியவனுகிய இராவணனுடைய தம்பியன்றே இவ்விபீஷணன்" என்று, இவ்வளவுதூரம் வானரத்தலைவனன சுக்கிரீவன், வெகுசாமர்த்தியமாய், பரபரப்புடன் பேசுவதில்வல்ல அந்தஇராமரிடம் சொல்லிவிட்டு, மௌனமாக நின்றன்.

மிக்க புகழ்பெற்ற ஸ்ரீராமர், சுக்கிரீவன் அவ்வாறு சொன்ன சொல்லைக் கேட்டு, தமக்குச் சமீபத்திலிருந்த அநுமான் முதலிய வாநரவீரர்களை நோக்கி, "இராவணன் தம்பியைப்பற்றி, வாநரராஜனுகிய சுக்கிரீவன் கூறியது காரணங்களுடன்கூடியதும், பயனுத்தரத்தக்கது மானதே; அதனை நீங்களும் கேட்டிருக்கின்றீர்கள். புத்திமான்களாயும் வல்லவர்களாயும் நண்பனுக்கு அழிவற்றபொருளைத் தேடிக்கொடுக்கக்கருதுகின்ற நண்பர்கள் நிர்ணயித்தற்குஅரிய காலத்தில் உபதேசித்தல் தகுதியுடையதேயாம்" என்று சொல்லினர்.

இராமர் வாநரர்களை ஆலோசனை கேட்டல்.

இவ்வண்ணம் இராமர் கேட்டதும், அவர்களெல்லாரும், அவருடைய நன்மையை நாடியவர்களாய், வெகு உபசாரத்துடன், அவ்விராமபிரானிடம் தங்கள்தங்கள் அபிப்பிராயத்தைச் சோம்பலின்றி வெளியிடலானுர்கள்:—"இராகவரே! இம்மூவகை யுலகங்களிலேயும் தங்களுக்குத் தெரியாதது ஒன்று மில்லை. இவ்வாறு உணர்ந்திருந்தும், தாங்கள் எங்களிடம் கொண்டுள்ள நட்பை வெளிப்படையாகக்காட்டும் பொருட்டே, எங்களைக் கேட்கின்றீர்கள். தாங்களோ உண்மையையே நோன்பாகக் கொண்டவர்; சூரர்; தார்மிகர்; ஒருவராலும் அசைக்கமுடியாத பராக்கிரமமுள்ளவர்; எல்லாக் காரியங்களையும் பரிசோதித்துச் செய்பவர்: ஞாபகசக்தியமைந்தவர்; நண்பர்கட்குப் பராதீநராயிருப்பவர். ஆகையால், தங்களுடைய மந்திரிகளில் ஒவ்வொருவரும் தம்தம் மனத்திலிருக்கும் அபிப்பிராயத்தைக் காரணத்துடன் எடுத்துச் சொல்லட்டும்; அவர்கள் யாவரும் புத்திமான்களும் சாமர்த்தியமுள்ளவர்களு மாயிற்றே" என்றூர்கள்.

இராமர்வினவியதை வாநரர்கள் கொண்டாடுதல்.

இப்படி அவர்கள்சொன்னதும், பிறகு, வெகுபுத்திமானுகியஅங்கதனென்னும் வாநரன், முதன்முதலில் விபீஷ

ணரைப் பரிசோதிக்கும்பொருட்டுப் பின்வருமாறுசொல்லுற்றான்:— "சத்துருவின் கட்சியிலிருந்து வந்திருப்பவன் எல்லாப்படியாலும் சந்தேகிக்கப்படவேண்டியவனே: ஆகையால், நாம் விபீஷணனை ஆராய்ந்தறியாமல் உடனே நம்பிவிடக்கூடாது. கொடிய புத்தியுள்ளவர்கள் தங்கள் இயல்பானகுணத்தை ஒளித்துக்கொண்டு ஒழுகுவார்களன்றே! சமயம்நேரிடும்பொழுது, அவர்கள் புடைப்பார்கள். அப்படிநேர்ந்தால், அவ்வஞர்த்தம் நம்பினவன் தானுகவே உண்டாக்கிக்கொண்டதாகுமன்றே? ஒருகாரியத்தில் ஒருவனை யேவி, அதனுலுண்டாகும் நன்மைதீமைகளைச் சீர்தூக்கி, பிறகு, அவனை அங்கீகரிப்பதையேனும் விட்டிடுதலையேனும் நிச்சயிக்கவேண்டுமன்றே? அவனுல் நமக்கு நன்மையுண்டாகுமென்றிருந்தால், நாம் கைப்பற்றவேண்டும்; தீமைவிளையுமென்று தோன்றினுல், விட்டிடவேண்டும். மன்னவரே! அவ்விபீஷணனிடத்தில் தீமையே மேலிட்டிருந்தால், கொஞ்சங்கூட ஆலோசிக்காமல் அவனைக் கைவிடுங்கள்; பலவிதகுணங்களிருப்பது புலப்பட்டால், அவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்" என்றான். அதன்பிறகு, சரபனென்பவன், தான் தனதுமனத்தில், செய்யவேண்டியதைப்பற்றி நிச்சயித்துக்கொண்டு, "புருஷ சிங்கமே! தாங்கள் ஓர் ஒற்றனை இந்தக்ஷணமே இவ்விபீஷணனிடம் அனுப்புக; நுண்ணறிவையுடையஒற்றன் இவனை நண்பன்போலக் கலந்து பரிசோதிக்கவேண்டிய வழியாகப் பரிசோதித்துப் பார்க்கட்டும்; அதன்பிறகு, நாம் நியாயப்படி அங்கீகரிக்கலாம்" என்றான். பின்பு, சமர்த்தனை ஜாம்பவான் "நம்முடன் தீராப்பகை கொண்டவனுய்ப் பாவியான அரக்கர்தலைவனிடமிருந்து இவ்விபீஷணன் காலமல்லாதகாலத்தில் இடமல்லாதஇடத்தில் வந்திருக்கின்றன்; ஆகையால், நாம் இவனைப்பற்றி எப்படியும் சந்தேகப்படவேண்டியதுதான்" என்று, தான் சாஸ்

அங்கதன்முதலியோர் தமது அபிப்பிராயத்தை யுரைத்தல்.

திரங்களின் வழியாய் அறிந்தபடி ஒருவிதவழுவுமின்றி யுக்தியாகஎடுத்துரைத்தான். பின்னர், நியாயம் அநியாயம் இவைகளை நன்றுக அறிந்தவனுன மைந்தனென்பவன், வெகுசாமர்த்தியமாகப்பேசுவதில்வல்லவனுகையால், "வேந்தரே! முதலில் தாங்கள் மதுரமானவாக்கால், இராவணன் நம்விஷயத்தில் என்னசொல்லுகிருனென்று இவ்விபீஷணனேமெல்லவினவி அவனுடையஅபிப்பிராயத்தைஉள்ளபடிஅறிந்து,இவன்துஷ்டன் அல்லதுநல்லவன் என்பதை அறுதியிட்டு,தங்கள் புத்தியில் தோன்றும்வண்ணம் தாங்கள்நடத்தலாம்" என்று காரணத்துடன் எடுத்துரைத்தான்.

அநுமன் வார்த்தை.

அப்பால்,மந்திரிகளுக்குள்உத்தமனும் சாஸ்திரங்கள் பலவற்றை ஆராய்ந்தறிந்தவனுமான அநுமான்,பொருத்தமான பேச்சுக்களால்சுருக்கமாகவும் இனிமையாகவும் பின்வருமாறு சொல்லத்தொடங்கினுன்:—"பிருகஸ்பதியே பேசினபோதிலும், வல்லமையுள்ளவரும் உயர்ந்தபுத்தியையடைந்தவரும் பேசுந்திறமை பொருந்தியவருமான தங்களைவிட மேம்பட வல்லவ ரல்லர்; நான் இப்பொழுது பேசத்துணிவது—'பேசுந் திறமையைக் காட்டவல்ல நமது முன்னிலையில் வேறுசிலர் பேசுகையாவது என்?' என்ற பொருமையாலன்று; எனக்கு ஒருமேன்மையுண்டாகவேண்டுமென்றன்று; வந்திருப்பவரிடத்திலுள்ள நேசத்தாலன்று; இராமரே! தாங்கள் என்னிடத்தில் விசுவாசம் வைத்திருப்பதனல், உண்மையாகச் சொல்லுகிறேன். விபீஷணருடைய குணதோஷங்களை அறுதியிடுமாறு, மந்திரிமார்சொன்னஉபாயங்களிற் குற்றம் தோன்றுகின்றது; பரீட்சித்தறிதல் இப்போது முடியாதன்றே! நாம் வந்தவினை இராசகாரியமொன்றில் ஏவாதவரையில், எப்படி அவன்குணத்தை அறியமுடியும்? திடீரென்று ஒருராஜகாரியத்தில் அவனை ஏவுவதும் பிசகென்று எனக்குத் தோன்றுகின்றது. ஓர்ஒற்றனை யனுப்பிப் பரிசோதித்தல்

தகுதி யென்று தங்களுடையமந்திரிமார் சொன்னதும், நமது கண்ணெதிரில்நிற்கும் விபீஷணர் விஷயத்தில்முடியாது; ஏனெனில், ஒற்றர்கள், தூரத்திலிருப்பவர் தன்மையை, தாம் மறைந்திருத்தல் முதலிய செய்கையால் உணர்வாரன்றே! இவ்விபீஷணர் காலமல்லாதகாலத்தில் இடமல்லாதஇடத்தில் வந்தா ரென்ற இவ்விஷயத்தில், 'இதுதான் காலம், இதுதான் இடம்' என்று உண்மையாக என்புத்தியாற் சொல்லவேணுமென்றே தோன்றுகிறது. அதைக் காரணத்துடன் சொல்வேன்;கேளுங்கள்: அதமனை இராவணனேமி உத்தமபுருஷரான தங்களை மனத்தினல் நினைத்துப் பார்த்து, அவ்வாறே உங்களிருவரிடத்திலுமுள்ள குணதோஷங்களையும் எண்ணிப்பார்த்து,இராவணனுடைய தோஷங்களையும் தங்களிடமிருக்கும் பராக்கிரமங்களையும் நன்றாக ஆலோசித்தறிந்து, தங்களையடைவதுதான் நல்ல தென்று தமதுபுத்தியில் நிச்சயமாகத்தோன்றியவுடன், அவர் வந்திருத்தல் தக்கதேயாம். வேந்தே! அவருக்குத்தெரியாமல் அவருடன்பேசி, அவர் அபிப்பிராயத்தை அறியவேண்டு மென்று சொல்லியதில், நன்றாய் ஆராய்ந்து கூறிய யுக்தி யொன்றையுங் காணேம். புத்திமானுகவிருந்தாலும் ஒருவனைத் திடீரென்று முகமறியாதவர்களைக்கொண்டு கேட்கும்பொழுது, அவன் சந்தேகங்கொள்வானே; அப்பொழுது, நம்பிக்கையுடனே வந்த சிநேகிதனும் கபடமாகக்கேட்கப்பட்டபடியால், மாறுய்விடுவன்; இவ்வாறுக, புதிதாகக்கிடைத்த நண்பனை இழக்க நேரிடும். அன்றியும், வேந்தே! மறைந்தஎண்ணங்களையுடைய தூதன்வார்த்தைகளைக்கொண்டு, பிறனது மனோபாவங்களை, தன்னைவல்லவனுகநினைத்திருப்பவனுல் சரேலென்று அறிந்துகொள்ளமுடியாது. பலபேசுகிற இவரிடத்தில், ஒருபோதும், கேட்டஎண்ணம் தோன்றவில்லை; முகமும் தெளிவாயிருக்கின்றது; ஆகையால், இவரிடம் எனக்கு ஐயமே

யில்லை. மேலும், மனத்திற் கபடத்துடன் வருபவன், சங்கையற்றபுத்தியுடன், இவ்வளவு ஸ்வஸ்தஞ்ஞ வரமாட்டான். இவர் சொன்ன சொற்களிலும் கெட்ட எண்ணம் தென்படவில்லை: ஆகையால், இவர்விஷயத்தில் இப்போது சந்தேகமே யில்லை. முகக்குறிப்பை ஒருவன் மறைத்துக்கொள்ளலாமென்றாலும் மறைத்துக்கொள்ள முடியாது. அம்முகக்குறிப்பு, மனிதருடைய உள்ளேயிருக்கின்ற எண்ணத்தை வெகு பலத்துடன் விளக்கிவிடும்; செய்தொழிலறிந்தவரிற் சிறந்தவரே! காலமறிந்து இடமறிந்து செய்யப்படும் காரியம், நற்பிரயோகத்துடன் மட்டும் சேர்ந்திருக்குமேயானால், தனது நற்பயனை விரைவில் விளைக்கும். இந்த விபீஷணர், தாங்கள் செய்துவருகின்ற முயற்சிகளையும் இராவணன் தீத்தொழிலில் ஒழுகுவதையும் பார்த்து, வாலி தங்களால் வதைக்கப்பட்டதையும் சுக்கிரீவர் பட்டத்துக்கு வந்ததையும் கேள்வியுற்று, ராஜ்யம்வேண்டுமென்ற எண்ணத்துடன் புத்திபூர்வமாக இங்கு வந்திருக்கிறார். இவைகளை ஆலோசித்து, இவரை நாம் சேர்த்துக்கொள்ளலாம். அறிஞரிற் சிறந்தவரே! இவ்வரக்கருடைய நல்ல எண்ணத்தைப்பற்றி, என்புத்தியில் தோன்றியபடி எடுத்துச் சொன்னேன். இதனைக்கேட்டு, இனித் தங்கள்மனத்தில் எது நியாயமோ அதை ஆராய்ந்தறிந்துகொண்டு அவ்வாறுசெய்யுங்கள்" என்றான்.

பதினெட்டாஞ் சருக்கம்:
இராமர் சரணாகதரான விபீஷணரை அங்கீகரித்தல்.

பிறகு, அநுமான்சொன்னதைக்கேட்டுத் தெளிந்த உள்ளத்தையுடையவராய் நற்கேள்விகளையுடைய இராமர், "நானும், விபீஷணரைப்பற்றிக் கொஞ்சஞ் சொல்ல

விரும்புகின்றேன்; எனதுநன்மையை நாடிநிற்கும் நீங்கள், அவற்றை யெல்லாம் கேட்கவேண்டு மென்று கருதுகின்றேன்: நண்பன்போல அபிநயித்துக்கொண்டுவந்தவனையும் கை விடலாமென்ற எண்ணம் எனக்குஒருபொ ழுதும்இல்லை; அவனிடம் குற்றங்களிருப்பினும் இருக்கட் டும்; சரணமாகஅடைந்தவனைக் காக்கும் இது, பெரியோர் கட்குப் பழிப்பை யுண்டாக்காததேயாம்" என்று தாம் ஒருவராலும் கலக்குதற்குமுடியாதவ ராகையால், தமதுமனத்திலிருந்த அபிப்பிராயத்தை வெளியிடலானார்.

விபீஷணரை அங்கீகரிப்பதைப் பற்றிய இராம ரது எண்ணம்.

பிறகு, அவர் சொன்ன சொல்லை வானரத்தலைவனான சுக்கிரீவன், அநுவதித்து, நன்றாக ஆலோசித்து, அதன் பின்பு மிகவும் இனிதாக ஒருவார்த்தை சொன்னான்: "இவ் வரக்கன், நல்லவனாயிருந்தாலும் சரி, கெட்டவனாயிருந்தாலும் சரி; நன்றியற்ற இவனால் நமக்கு என்ன பயன்? இப் படிப்பட்ட பெருஞ்சங்கடத்தி லிருக்கும் தனது தமையனைக் கைவிட்டு வந்த இவ் விபீஷணனுக்கு, கைவிடாமலிருக்கத்தகுந்தவன் எவன் தான்?" என்றான்.

சுக்கிரீவன், விபீஷணரை அங் கீகரிக்கக்கூ டாதென்றுமீண் டுங்கூறுதல்.

"இவ்வண்ணம் வானரராஜனான சுக்கிரீவன் சொன்ன சொல்லைக் கேட்டு, காகுத்ஸ்தர், எல்லா ரையும் பார்த்துப் புன்னகைகொண்டு, புண்ணியலட்சணங்களையுடைய இலட்சு மணரை நோக்கி இவ்வாறு சொல்ல லுற்றார்:—"சாஸ்திரங்களையோ தாமலும், பெரியவர்களிடத்திற் பழகாமலும், இந்தச்சுக்கிரீவனால் இவ்வாறு சொல்லமுடியாது. ஆனால், இந்த விபீஷணரை அங்கீகரிக்கும் விஷயத்தில், வெகு நுட்பமாக எனக்குத் தோன்றுவது ஒன்று உண்டு. பிரதியட்சமும், லோக

சுக்கிரீவனது கொள்கையை இராமர்மறுத்துப் பேசுதல்.

சித்தமுமான இது, எல்லா அரசர்களிடத்திலும் காணப் படுகின்றது. தமது குலத்திலே பிறந்த தாயாதிகளும், அடுத்தநாட்டி லிருப்பவர்களும், ஓர் அரசர் சங்கடத்தி லிருக்கும்பொழுது அவரைச் சமயம்பார்த்துக் கொல்லுகி ன்ற சத்துருக்க ளென்று சொல்லப்பட்டிருக்கின்றார்கள்; அதனால், 'தன்னை விபீஷணன் நலியக்கூடு மென்று நினைத்து, இராவணன் எங்குத் தன்னை நலிவனே' என்ற அக்காரணத்தால், இவ்விபீஷணர் இங்கு வந்திருக்கிறார். ஒருகுலத்திலேயே பிறந்த நன்னடக்கையையுடைய அர சர்கள், தங்கள்நன்மையை நாடிய அக்குலத்தவர்களைக் கொண்டாடுகின்றார்கள்; என்றாலும், இவ்வரசர்கள், நல் லறிவு பராக்கிரமம் முதலிய குணங்களையுடைய தாயாதி களைக் கண்டு, பெரும்பாலும் சந்தேகத்தையே கொள்ளு கிறார்கள். பகைப்படையைக் கைக்கொள்வதில் தாங் கள் சொன்ன தோஷத்தைக்குறித்து, சாஸ்திரங்கள் சொல்லுகிறபடி நான் எடுத்துக் கூறுகின்றேன். இது கேளுங்கள்: நாமோ விபீஷணருடைய குலத்தைச் சேர்ந் தவர்க ளல்லர்; அவ்வரக்கரோ, தாம் இராச்சியமடைவதை உத்தேசித்திருக்கின்றார்: மேலும், அரக்கர்களும் பண்டி தர்களா யிருக்கலாம். ஆகையால், விபீஷணரைக் கைக் கொள்ளவேண்டும். மிகவுந் துஷ்டர்களானவர்கள் பதரு மலும் இரார்கள்; ஒருவரோடொருவர் சேர்ந்தும் இரார் கள்; இவர்களோ பதருமலும் ஒருவரோடொருவர்சேர்ந் தும் இருக்கிறார்கள்; அன்றியும், இவருடைய குரலும் நம் மோடே சம்பந்தம்தோற்றும்படி இருக்கின்றது; இராவ ணனிடத்து இவருக்குப் பயம் வந்திருக்கின்றது: இக்கார ணத்தால், பேதப்பட்டு வருதல் இயல்பே; ஆகையால் விபீஷணரை அங்கீகரிக்கலாம். ஐயா! உலகத்தில்எல்லாத் தம்பிகளும் பரதனுக்கு ஒப்பாவார்களோ? சிறந்தீ தந்தை யைப்பெற்றவர்களில், என்னைப்போன்ற புத்திரர்களும்

இல்லை; உன்னைப்போன்ற சிநேகிதர்களும் கிடைத்தலரிது " என்றார்.

இவ்விதமாக ஸ்ரீராமர் சொல்லவே, வெகு புத்திமானுகிய சுக்கிரீவன், இலட்சுமணருடன் எழுந்து, மிக்க வணக்கத்துடன் நமஸ்காரஞ்செய்து, இவ்வாறு சொல்லலுற்றான்:—" அவனை, இராவணனுலனுப்பப்பட்ட இரவில் திரியும் ராக்ஷஸாதிபனென்று எண்ணுங்கள்; பொறுமையுள்ளவர்களுக்குள் உத்தமரே! அவனை வதைப்பதுதான் நலமென்று எனக்குத் தோன்றுகின்றது. தாங்களும் நானும் இலட்சுமணரும் நம்பிக்கையை அடைந்த பின்பு, மகாபாகுவே! நம்மைக் கொல்லுதற் பொருட்டு, மறைந்தவனுய்க் கொடிய கருத்துள்ள இராவணன் ஏவ, இவ்வரக்கன் இங்கு வந்திருக்கின்றான். ஆகையால், மந்திரிகளுடன் அவனைக் கொல்லவேண்டும் " எனப் பேசுவதில் சமர்த்தனுய் வாநரத்தலைவனுன அச்சுக்கிரீவன், சாதுரியமுடையரான இராமரிடம் இவ்விதமாகச் சொல்லி, பிறகு மௌனமாயிருந்தான்.

மீண்டும் சுக்கிரீவன் விபீஷணரைச் சந்தேகித்துக் கூறல்.

இராமரும், சுக்கிரீவன் அவ்வாறு சொன்னதைக் கேட்டு, சிறிதுநேரம் ஆலோசித்து, பிறகு, அவ்வாநரவேந்தனை நோக்கி, மிக இனிமையாகச் சொல்லத்தொடங்கினர்:—" இவ்வரக்கன், கொடியவனுயிருப்பினும் நல்லவனுயிருப்பினும், எனக்கு என்ன தீங்கு செய்யப்போகிறான்; என்விஷயத்தில் மிகவுஞ் சொற்பமான கெடுதியையும் வருந்தியும் இவனுற் செய்யமுடியாது. வாநரர்கூட்டத்தலைவனே! நான் கருதினுல், பிசாசர் தானவர் யக்ஷர் இப்பூமிமுழுவதுமுள்ள அரக்கர் இவர்கள் எல்லாரையும் ஒருக்ஷணத்தில் எனதுவிரல்நுனியாற் கொன்றுவிடுவேன். சரணமென்று வந்த சத்துருவானவன், புருவினுல்

முறைப்படியே அர்ச்சிக்கப்பட்டு, அதன் மாமிசத்தால் விருந்திடப்பட்டா னென்று கேட்கப்பட்டு வருகின்றதன்றே! வாநரர்தலைவனே! தன்மனைவியைக் கவர்ந்தவனுய் வந்த அவ் விருந்தினனை அப்புறு அங்கிகரித்ததே; என்னைப்போன்றவர்கள் சரணுகதரைக் காக்கவேண்டுமென்று சொல்லவும்வேண்டுமோ? அன்றியும், கண்வமகரிஷியின் குமாரராயும், பிரமருஷியாயும், உண்மையையே உரைப்பவராயுமுள்ள கண்டு வென்பவர் முன்னெருகாலத்திற் சொல்லிய தருமத்தினின்று தவறுதபாடலைக் கேட்பாயாக: "பகைவரைத் தவிக்கச்செய்பவனே! சத்துருவாயிருந்தாலும், கூப்பியகையனுகவாவது, எளிமைதோன்றும்முகத்தையுடையவனுகவாவது, வாயினல் இரப்பாளனுகவாவது சரணமாகவந்து அடைந்தவனை அருளுடைமை தோன்றும்பொருட்டுக் கொல்லாதுவிடுக. சத்துருக்களுட் சரணமாக அடைந்தவன் நொந்தவனுக இருப்பினும் சரி, கருவமுடையவனுக இருப்பினும் சரி, அப்பகைவனை, யோக்கியமுள்ள ஒருவன், தனது உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றவேண்டும். ஒருகால், சரணம் புகப்பெற்றவன், பயத்தினுலாவது, பொருளாசையினுலாவது, அறியாமையாலாவது உண்மையாகத் தன்னுலியன்றமட்டும் தனதுபலங்கொண்டு காப்பாற்றப்படாமற்போனுல், அவனதுபாதகம் உலகத்தாரால் நிந்திக்கப்படும். காப்பாற்றும் நிலையிலிருக்கும் ஒருவன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே சரணமடைந்தவன் பாதுகாக்கப்படாமல் வதைக்கப்படுவானே யானுல், அச்சரணுகதன், அவ்வாறு தன்னை இரட்சியாதவனுடைய புண்ணியங்களனைத்தையும் எடுத்துக்கொண்டு, புண்ணியப் பயனை உலகத்திற் போய்விடுகின்றன். சரணமென்று அடைந்தவர்களை இரட்சியாவிட்டால், இதில், இவ்வாறு பெருங்குற்றம் உண்டாகின்றது: இது, நரகத்தை விளைத்து

சரணமாக அடைந்தவரைக்காத்தல் இன்றியமையாதென இராமர் நிரூபித்தல்.

இதுவரையிற் கிடைத்திருக்கின்ற புகழ் பலம் வீரியம் முத லியவைகளையும் அகற்றிவிடும். ஆகையால், நான், கண்டு மகரிஷிசொல்லிய உத்தமமானவசனத்தை உண்மையாகச் செய்யக் கருதியிருக்கின்றேன். அவ்வாறு செய்யுங்கால், அது, தருமத்தையும் புகழையும் முடிவில் சுவர்க்கத்தையும் விளைக்கும். ஒருகால் மாநஸிகமாகப் பிரபத்தி பண்ணினவனுக்கும், 'நான் உனக்கு அடியவன்' என்று ஒருகால் இரந்தவனுக்கும், எல்லாப் பிராணிகளிடத்தினின்றும் அபயம் அளிக்கின்றேன்; இதுதான் என்னுடைய நோன்பு. வாநரவேந்தே! இவரை அழைத்துவருக: நான் இவர்க்கு அபயங் கொடுத்துவிட்டேன்; இவர் விபீஷணராகவாவது இருக்கட்டும்: அன்றி, ஸ்வயம் இராவணனேயாகவாவது இருக்கட்டும்" என்று சொன்னர்.

சுக்கிரீவன் அநுமதிசெய்தபிறகு, விபீஷணருக்குஇராமர் அபயமளித்தல்.

இராமபிரான் சொன்னதை, வாநரராஜனுகிய சுக்கிரீவன், கேட்டு, தான் அவரிடம் வைத்திருந்த அபிமானத்தால் ஏவப்பட்டவனுய், மறுமொழி சொல்லலானுன் :— "தருமங்களை அறிந்தவரே! எல்லா வுலகங்களுக்கும் நாதராக விளங்குபவரே! உலகங்களுக்கெல்லாம் சுகத்தையளிப்பவரே! தாங்கள், சத்துவகுணத்தையுடையவர்களாய், சன்மார்க்கத்தைக் கைக்கொண்டு இனிதாகச் சொல்வதும் ஓர் ஆச்சரியமோ? இப்பொழுது, எனது உள்ளமும் விபீஷணரைப் பரிசுத்தராகவே நினைக்கின்றது. மேலும், அதுமாநத்தாலும் முகக்குறிப்பாலும் விபீஷணர் பலபடியாகப் பரிசோதிக்கப்பட்டார். ஆகையால், இராகவரே! அவர், சடிதியில் எங்களுக்குச் சமானராக ஆய்விடட்டும்; மகாபுத்திமானை விபீஷணர், நம்மைச் சேர்ந்த நண்பராக ஆய்விடட்டும்" என்முன். அவ்வாறு வாநர மன்னவனுகிய சுக்கிரீவன் சொன்ன சொற்களை மானுடமன்னவராகிய இராமர், கேட்டு, புரந்தரன் கருடபகவானுடன் நட்புக்கொண்டவண்ணம் வெகுசடிதியில் விபீஷணருடன் நட்புக்கொண்டார்.

பத்தொன்பதாஞ் சருக்கம்:
இராமர் விபீஷணர்க்கு இலங்கையை யளித்து, பட்டாபிஷேகஞ் செய்தல்.

இராமர் அவ்வாறு அபயங்கொடுத்ததும், மகிழ்ச்சி கொண்டவராய், இராவணனுடையதம்பியும் மஹாபுத்திமானுமாகியவிபீஷணர், வணக்கத்துடன்கீழ்நோக்கிக்கொண்டே, தம்மிடத்தில் அன்புகொண்டு உடன்வந்தவர்களுடன், ஆகாயத்தைவிட்டுப் பூமியில்இறங்கலானார். தம்மைப் பாதுகாப்பவரைத் தேடிவந்த தருமாத்துமாவாகிய அந்த விபீஷணர், நான்கு அரக்கர்களுடன், ஸ்ரீராமருடைய சரணங்களில் வணங்கினர். மேலும், விபீஷணர், அப்போது, தருமத்தோடு கூடியதாயும், அக்காலத்திற்குத்தக்கதாயும், எல்லார்க்கும் சந்தோஷத்தை விளைக்கக்கூடியதாயு முள்ளசொற்களைச் சொல்லத் தொடங்கினர் :—"நான், இராவணனுடைய தம்பி; அவனால் அவமானம் பண்ணப்பட்டு, எல்லாப்பிராணிகளுக்கும் அடைக்கலமாக விளங்கும் தங்களையே சரணமாக அடைந்திட்டேன். நான், இலங்கையையும் அதிலிருக்கும் என்து கண்பர்களையும் பொருளையும் விட்டிட்டு, இங்கு வந்திருக்கின்றேன். என்னுடைய இராச்சியமும் உயிரும் சுகமும் தங்கள் அதீனமானவை" என்றார்.

விபீஷணர் இராமரைச் சரணம் புகுதல்.

அவர் அவ்வாறு சொன்னதைக் கேட்டு, இராமர், தமது வாக்கினால் அவரைச் சமாதானம்பண்ணி, தமது கண்களால் அவரைப் பருகுகின்றவர்போலக் கடாட்சித்து, "தாங்கள், என்னிடம் அரக்கர்களுடைய பலாபலங்களை உள்ளபடி சொல்லவேண்டும்"என்றார். எளிதில் தொழில் செய்யவல்லவரான இராமர் இவ்வண்ணம் கேட்கவே, அந்த ராக்ஷஸசிரேஷ்டர் இராவணனது பலம்முதலியவற்றைப்

இராமபிரானுடைய விருப்பத்தின்படி விபீஷணர் ராக்ஷஸர் பலத்தைக் கூறுதல்.

பற்றி மொழியலானார்:— "சக்கரவர்த்தித் திருமகனரே! பிரமதேவரிடமிருந்து கிடைத்துள்ள வரத்தினால், கந்தர்வர் அசுரர் அரக்கர் என்ற இவர்களில் ஒருவரும் இராவணனைக் கொல்லமுடியாது. இராவணனுக்குப்பின்னும் எனக்குமுன்னும் பிறந்த பராக்கிரமசாலியும் மஹாதேஜஸ்வியுமாகிய கும்பகர்ணனென்ற சகோதரன், போரில் இந்திரனுக்கு ஒப்பான பலமுள்ளவன். இராமரே! இராவணனது சேனாபதியாகிய பிரகஸ்தனைப்பற்றித் தாங்கள் கேள்வியுற்றிருக்கலாம். அவன், கைலாஸத்தில்நடந்தபோரில், குபேரனுடைய சேனாபதியான மாணிபத்திரனைத் தோற்கச்செய்தவன். இந்திரஜித்தோ, தனது விரல்களில் உடும்புத்தோலாலாகிய விரற்சட்டைகளை மாட்டிக்கொண்டு, எவராலும் பிளக்க முடியாதகவச மணிந்து, கையில் வில்லையெடுத்துக் கொண்டு, போரில் தான் நிற்குமிடத்தை ஒருவராலும் காணமுடியாதபடி நிற்பன். இராகவரே! போர்புரியும் வேளையில்அணிவகுத்த படையின் நடுவிலிருந்துகொண்டு, இந்திரஜித்தென்பவன், அக்கினிபகவானைத் திருப்திசெய்வித்து, தான் ஒருவருடைய கண்ணுக்கும் புலப்படாமல் நிற்கும் சக்தியை யடைந்து, தனதுசத்துருக்களை வதைக்கும் வல்லமை யுள்ளவன். இராவணனது சேனைத் தலைவர்களாகிய மகோதரன், மகாபார்சுவன், அகம்பனன் முதலான அரக்கர்கள், போரில் லோகபாலர்களுக்கு ஒப்பானவர்களாய், தங்களுக்குத்தோன்றும் உருவங்களைக் கொள்ளவல்லவர்களாய், மாமிசத்தைப் புசித்து, இரத்தத்தைக் குடித்துக்கொண்டு இலங்கையில் பதினாயிரங் கோடிக் கணக்காக இருக்கின்றார்கள். அச்சேனாபதிகளின் உதவியைக்கொண்டுதான் ராக்ஷஸேந்திரனாகிய இராவணன், லோகபாலர்களுடனும் போர்புரிந்தான். தேவர்களுடைய சகாயத்துடன் அந்தலோகபாலர்கள் போர்

புரிந்தும், மஹாதைரியமுள்ள இராவணனுல் தோற் கடிக்கப்பட்டார்கள்'' என்றூர்.

வெகு உறுதியான வீரியம்பொருந்திய இராமர், விபீஷணர் சொன்னதைக் கேட்டு, தமது மனத்தினுள்ளேயே எல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்து, பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்:—"விபீஷணரே! இராவணனைப் பற்றித் தாங்கள் உண்மையாகச் சொன்ன முன்பு நடந்துள்ள அந்தச் சரித்திரங்கள் எனக்கு நன்றுகத் தெரியும். நான், பிரகஸ்தனுடனும் பந்துக்களுடனும் தசக்கிரீவனைக் கொன்று, தங்களை வேந்தராகச் செய்துவைக்கின்றேன்.

இராமர் இராவணனைக்கொல்வதாகப்பிரதிஜ்ஞை செய்தல்.

இதனைத் தங்களிடத்திற் சத்தியமாகச் சொல்லுகிறேன். இராவணன் ரஸாதலத்திற் சென்றுலும், பாதாளலோகஞ் சென்றுலும், பிரமதேவரிடமே சென்று ஒளிந்துகொண்டாலும், அவனை, உயிர்பிழைத்திருக்கும்படி நான் விடப்போகின்றதில்லை. குமாரர்களுடனும் சேனைகளுடனும் பந்துக்களுடனும், இராவணனை, நான் போரிற் கொல்லாமல் அயோத்திக்குத் திரும்பிப்போகின்றதில்லை; எனது மூன்று சகோதரர்கள்மேலும் ஆணையிட்டுச்சொல்லுகின்றேன்!'' என்றூர்.

எளிதாகத் தொழில்செய்யவல்ல அவ்விராமருடைய சொற்களை, தருமாத்துமாவாகிய விபீஷணர், கேட்டு, தமது தலையால் இராமரை வணங்கி, மறுபடியும் சொல்லத் தொடங்கினர்: "இராகவரே! என்னுடைய வலிமைக்கு இயன்றமட்டும், அரக்கர்களைக் கொல்வதில் தூணைபுரிவதிலும் இலங்கையைத்தகைவதிலும் உதவிசெய்வேன்; நான் சேனையின்நடுவிலும் புகுவேன்" என்றூர்.

விபீஷணர் தூணைபுரிவதாக வாக்களித்தல்.

இப்படிச் சொல்லும் விபீஷணரை, இராமர், தழுவிக்கொண்டு, வெகுசந்தோஷத்துடனே, இலட்சுமண

ரைப் பார்த்து, "அடைந்தோர்க்குப் பெருமையைக்கொடுப் பவனே! சமுத்திரத்திலிருந்து ஜலம் கொண்டுவருக; அந்தத் தீர்த்தத்தாற் பேரறிவினராகிய இவ்விபீஷணருக்குச் சீக்கிரம் ராக்ஷஸராஜாவாகப் பட்டாபிஷேகஞ்செய்து வைப்பாய். நான், அவரிடம் அநுக்கிரகங் கொண்டிருக்கிறேன்" என்றார். இவ்விதமாக இராமர் சொன்னதும், தமையனார் கட்டளைப்படி, இளையபெருமாளும், வாநரசிரேஷ்டர்கள்நடுவில், விபீஷணரை அரக்கர்வேந்தராகப் பட்டாபிஷேகஞ் செய்துவைத்தார். சக்கரவர்த்தித்திருமகனார் அவ்வண்ணம் விபீஷணரிடம் ஒருநொடிப்பொழுதிற் கருணை கொண்டதை, வாநரர்கள் பார்த்து, வெகு சந்தோஷத்துடன் கூச்சலிட்டு, நன்று நன்றென்று மஹாத்மாவாகிய இராமரைக் கொண்டாடினார்கள்.

விபீஷண பட்டாபிஷேகம்.

அதன் பிறகு, அநுமானும் சுக்கிரீவனும், விபீஷணரைப் பார்த்து, "மகாபலசாலிகளான வாநரர்களடங்கிய இச்சேனையுடன், நாம் எல்லாரும், கலக்கமுடியாததும் வருணபகவானுக்கு இருப்பிடமுமான இக்கடலைக் கடப்பது எப்படி? நதிகளுக்கும் நதங்களுக்கும் நாயகனாக விளங்கும் இந்தச்சமுத்திரத்தை வலிமைகொண்டு சைனியங்களுடன் யாங்களெல்லோரும் எப்படித் தாண்டுவோம்? இவ்விஷயத்தில் எங்களுக்கு உபாயமொன்றும் புலப்படவில்லை" என்றார்கள். இப்படி அவர்கள் தம்மைக் கேட்டவுடனே, தருமத்தை நன்றாகஅறிந்தவரான விபீஷணர் மறுமொழி சொல்லலானார்:—"வேந்தராகிய இராமர் சமுத்திரத்தைச் சரணமாக அடையவேண்டும். கரைகாணுதற்கு அரிய இந்தச்சமுத்திரம், சகரரால் வெட்டியுண்டாக்கப்பட்டது; பேரறிவினராகிய சமுத்திரராஜன், தனது உற்பத்தியை அவ்வாறென்று அறிந்துகொண்டு, இராமர் சகரகுலத்திலுதித்தவ ராகையால், அவருடைய காரியத்

சமுத்திரத்தைக் கடக்கும் உபாயத்தை நிச்சயித்தல்.

தை யுணர்ந்து தவருமல் உதவிசெய்வான்" என்றார். அரக்கர்குலத்தவராய்ப் புத்திமானுகிய விபீஷணர் இவ்விதமாகச் சொன்னவுடனே, சுக்கிரீவன், எவ்விடத்தில் இலட்சுமணருடன் இராமர் இருக்கின்றாரோ, அவ்விடத்துக்கு வந்தான். பிறகு, விசாலமான கழுத்தமைந்த சுக்கிரீவன், 'சமுத்திரராஜனைச் சரணமடையவேண்டும்' என்று விபீஷணர் இனிதாகச் சொன்ன செய்தியை இராமபிரானிடம் சொல்லத்தொடங்கினான்; இயல்பாகவே தருமகுணமமைந்த இராமருக்கும், விபீஷணர்சொன்ன வழி, மனத்திற்கு உசிதமாகவேயிருந்தது. செய்தொழிலில் வல்லவராய் மிக்கபராக்கிரமசாலியான அவ்விராமர், விபீஷணர்கூறிய அந்த ஆலோசனையைக் கொண்டாடுதற்காகப் புன்சிரிப்புடன் இலட்சுமணரையும் வானரராஜனுகிய சுக்கிரீவனையும் பார்த்துச்சொல்லலானார்:—"இலட்சுமண! இப்பொழுது விபீஷணர் சொன்ன மந்திராலோசனை, என் மனத்திற்குப் பிடித்திருக்கின்றது. நீயும், சுக்கிரீவனுடன் இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசித்து, உன்மனத்திற்கும் இது ஒத்திருக்கின்றதா? என்பதைப்பற்றிச் சொல்வாய். சுக்கிரீவன் எப்பொழுதும் வெகுபுத்திமான்; நீயோ ஆலோசனை சொல்வதில் தேர்ந்தவன். ஆகையால், நீங்களிருவரும் நன்றாக ஆலோசித்து, உங்கள்மனத்திற்குப் பிடித்திருப்பதைச் சொல்லுங்கள்" என்றார். அவ்வாறு இராமபிரான் சொல்லவே, சுக்கிரீவன் இலட்சுமணர் என்ற இவ்விருவரும், மரியாதையுடன் இவ்விதமாகத் தெரிவித்துக்கொள்ளலானார்கள்:— "புருஷசிங்கமாகிய இராகவரே! இக்காலத்திற்கு இன்பத்தைத் தரக்கூடியதாக விபீஷணர் சொன்னது, ஏன் நமதுமனத்திற்குப் பிடிக்காது? வெகுபயங்கரமான இச்சமுத்திரத்தின்மேல் அணையொன்று கட்டாமல், தேவர்களும் அசுரர்களும் இந்திரனுடன் வந்தாலும், இலங்கையைப்போய்ச்சேர்வது முடியாது. ஆகையால், வெகுசூரராகிய விபீஷணர் சொன்ன செயலை

யே நாம் உண்மையாகச் செய்வோம்; காலதாமதம் செய்ய வேண்டாம். இராவணனுற் பாதுகாக்கப்படும் இலங்கைக் குச் சைனியங்களுடன் நாம் எவ்வாறு போய்ச்சேர்வோ மோ, அவ்வாருகச் சமுத்திர ராஜனையே வேண்டிக் கொள்க" என்றார்கள்.

இப்படி இவர்கள் சொன்னவுடனே, இராமர் அந்தச் சமுத்திரக்கரையில் தருப்பைப்படுக்கையில் யாகவேதிகை யில் அக்கினிபோலப் படுத்தார்.

இருபதாஞ் சருக்கம்:
சுகனென்பவனது தூது.

பிறகு, சுக்கிரீவனுல் ரக்ஷிக்கப்பட்டு அங்குத் தங்கிய வாநரசேனையை, அதிகபராக்கிரமமுள்ள சார்த்தூலனென்ற அரக்கன், வந்து பார்த்தான். மிகக் கொடியவனும் அரக்கர்கள் மன்னவனுமாய் விளங்கிய இராவணனுடைய ஒற்றனுகிய அவ்வரக்கன், அந்தச் சைனியத்தைச் சமீபித்து, வெகுஜாக்கிரதையாக முழுவதும் பார்த்து, வெகு வேகமாக இலங்கை சேர்ந்து, இராவணன் முன் நின்று சொல்லலானன் :— "வாநரர்களும் ருக்ஷர்களும் நிரம்பிய பெருஞ்சேனை, இலங்கையை நோக்கி வந்துவிட்டது : அச்சேனையோ, அளவிடமுடியாமலும் உள்ளேபிரவேசிக்க முடியாமலும் இரண்டாவதுசமுத்திரம்போல விளங்குகின்றது. தசரதராஜகுமாரர்களாய்ச் சகோதரர்களான அந்த இராமலட்சுமணர்கள், சிறந்த ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, சீதாதேவி யிருக்குமிடத்தைத் தேடி வந்துவிட்டார்கள். அவ்விருவரும், வெகு காந்தியுடன் விளங்கிக்கொண்டு, இச்சமுத்திரத்தின் அக்கரையை வந்துசேர்ந்திருக்கின்றூர்கள். அவர்க

வாநரசேனையைக் கண்ட சார்த்தூலன் இராவணனிடம் தெரிவித்தல்.

ளுடைய சேனையோ, நாற்புறத்திலும், பத்து யோஜனை தூரம் விசாலமாகப் பரவிநிற்கின்றது. மகாராஜாவே! நான் மேல்நோக்கார்க அறிந்த இவ்விஷயத்தின் உண்மையைத் தாங்கள் உண்மையாக அறிந்துகொள்ளவேண்டும்; மகாராஜாவே! தங்கள்வேவுகாரர்கள் உடனே சென்று, இவ்விஷயத்தின் உண்மையை விரைவாக அறிந்துவர வேண்டும். அவ்விராமன்விஷயத்தில், சீதையைத் திருப்பிக்கொடுத்தலையாவது, பேதஞ்செய்தலையாவது, சாந்தமானவழியில் நடத்தலையாவது உபயோகிக்கவேண்டும்" என்றான்.

அரக்கர்களது தலைவனாகிய இராவணன், சார்த்தூலன் சொன்ன சொல்லைக் கேட்டு, தான் செய்யவேண்டியதைப் பற்றி ஜாக்கிரதையாகத் தீர்மானம் பண்ணிக்கொண்டு, பரபரப்புடன், வெகு சமர்த்தனான சுகனென்ற அரக்கனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலுற்றான்:— "நீ, சுக்கிரீவமகாராஜனிடஞ் சென்று, இனிமையாய்ச் சிறந்த சொற்களால் பின்வாங்காமல் நான் சொன்னதாகச் சில சங்கதிகளைச் சொல்லவேண்டும்: 'மஹாராஜரே! தாங்களோ உயர்குலத்திற் பிறந்திருக்கின்றீர்கள். மஹாபலவான்; ருக்ஷராஜஸ் என்பவருடைய புதல்வர். தாங்கள் இராமனோடு நட்பைக்கொண்டிருப்பதில், தங்களுக்கு இலாபமும் இல்லை: நஷ்டமும் இல்லை. வானரர்தலைவரே! தாங்கள் என்னுடையசகோதரர்க்குச் சமமானவர்: புத்திமானான தசரதகுமாரனது மனைவியை நான் எடுத்துவந்தேனென்றால், அதனால் தங்களுக்கு என்ன? சுக்கிரீவரே! தாங்கள் கிஷ்கிந்தைக்குத் திரும்பிவிடுக. பிரயாஸப்பட்டாலும், வானரர்கள் இவ்விலங்கையிற் புகுதல் முடியாது. தேவர்களாலும் கந்தர்வர்களாலுங்கூட நுழைய முடியாத இவ்விலங்கையில், அற்பரான மானிடர்களும் வானரர்களும் எவ்வாறு புகுவார்கள்?'" என்றான்.

இராவணன் சுக்கிரீவனிடஞ் சுகனை அனுப்புதல்.

இராவணன் அவ்வாறு கட்டளையிட்டதும், சுகனென்ற அவ்வரக்கன், ஒரு பக்ஷிரூப மெடுத்துக்கொண்டு சரேலென்று ஆகாயத்திற் கிளம்பிச் சமுத்திரத்தின் மேலாக வெகுதூரம் பறந்து வழியைக் கடந்துவந்து ஆகாயத்தில்நின்றுகொண்டு, அதிபாதகனுகிய இராவணன் கட்டளையிட்டபடியே சுக்கிரீவனிடஞ் சொன்னன், அவன் அவ்வாறு சொன்னதைக் கேட்டவுடனே, வாநரர்கள், அவனைக் கொல்லவும் அவனிறகுகளை முறிக்கவும் எண்ணங்கொண்டவர்களாய், ஆகாயத்திற் கிளம்பிச் சூழ்ந்துகொண்டார்கள். அவ்வாநரர்கள் கையிற் கட்டுண்ட அவ்வரக்கன், அவர்களால், ஆகாயத்திலிருந்து பூமியில் விரைவாக விழுத்தப்பெற்றன்.

சுக்கிரீவனிடம் தூதுவந்த சுகனை வாநரர் வருத்துதல்.

வாநரர்கள் தன்னை அதிகமாகப் பீடிக்கும்பொழுது, சுகன் பின்வருமாறு கதறலானன் :—"காகுத்ஸ்தரே! தூதர்களைக் கொல்லுகின்றதில்லையே; ஆகையால், இவ்வாநரர்கள் எல்லோரையும், என்னைப் பீடியாதபடி தடுக்கவேண்டும். எந்தத் தூதன் தனதுயஜமானனது அபிப்பிராயத்தை விட்டுத் தன்னபிப்பிராயத்தைச் சொல்லுகின்றனனே, சொல்லாததைச் சொல்லுகின்ற அவனை கொல்லுதற்கு உரியவனுவன்" என்றன். இவ்வாறு சுகன் சொல்லிப் புலம்பியதை, இராமர், கேட்டு, அவனை வதைக்கும் வாநரர்களை நோக்கி, 'இவனைக் கொல்லாதேயுங்கள்' என்று கட்டளையிட்டார்.

சுகனை இராமர் விடுவித்தல்.

வாநரர்கள் அச்சுறுத்தியிருக்கையிலும், நன்றுகச் சிதைந்துபோன இறகுகளையுடைய அவன், ஆகாயத்தில் நின்றுகொண்டு மறுபடியும் பின்வருமாறு சொல்லலானன் :—"சுக்கிரீவரே! நற்குணமமைந்தவரே! அதிக பலபராக்கிரமம் பொருந்தியவரே! இவ்வுலகத்தைக் கதறப்

பண்ணும் இராவணரிடம் நான் என்ன சொல்லட்டும்?" என்றான். இவ்வண்ணம் அவ்வரக்கன் கேட்கவே, இராவணனுடைய வேவுகாரனை அவனே நோக்கி, மகாபலவானும் எளிமையற்ற மனமுள்ளவனும் வானரவேந்தனுமான அச்சுக்கிரீவன், மறுமொழி சொல்லலுற்றான்:—"நீ எனக்கு நண்பனல்லை; உன்னிடம் எனக்குத் தயையே கிடையாது. நீ எனக்கு உபகாரஞ் செய்தவனுமல்லன்: என்க்கு இஷ்டனுமல்லன்; கொல்லத்தகுந்தவனே. நீயோ, இராமருடன் பகைமைகொண்டவனுய்விட்டாய்: ஆகவே, வாலியைப்போலவே, நீயும், வதைக்கத்தகுந்தவனே யாவாய். அரக்கர்தலைவனே! உன்னை, நான், புத்திரர்கள் பந்துக்கள் தாயாதிக்கூட்டங்கள் உட்படச் சிக்கிரம் வதைப்பேன். என்து பெருஞ் சேனையுடன் வந்துசேர்ந்து, வெகுசீக்கிரத்தில் இலங்கை முழுவதையும், நான், சாம்பராகப் பண்ணுகின்றேன். எல்லாத்தேவர்களுடனுங்கூட இந்திரனே உன்னைப் பாதுகாத்தபோதிலும், நீ பாதாளலோகஞ்சென்று பதுங்கிக்கொண்டபோதிலும், சூரியதுவாரத்தையடைந்து மறைந்துகொண்டபோதிலும், அடா! பேதாய்! இராவண! நீ இராமரிடமிருந்துதப்பப்போகின்றதில்லை. இம்மூவுலகங்களிலேயும், இவ்வாபத்திலிருந்து, உன்னைக் காக்குஞ் சாமர்த்தியமுள்ளவர்களாக, பிசாசர் ராக்ஷஸர் கந்தர்வர் அசுரர் என்னும் இவர்களில் ஒருவரையும் காணேம். நரையால் தளர்ந்து தொழில் செய்யவலிமையற்ற ஜடாயுவைக் கொன்றுவிட்டாயென்ற இதில், உனக்கு என்ன வீரியம் உண்டு? இராமர்முன்பாகவும், இலட்சுமணர்சமீபத்திலிருக்கும்போதும், நீண்டகண்களையுடைய சீதையைக் கவர்ந்தாயோ? அச்சீதையைக் கவர்ந்தபோது, வரப்போகின்ற தீமையை உணராதவனுயினுய். ஸ்ரீரகுநாதர் மகாபலம்பொருந்திய மகாத்துமாவென்றும், தேவர்களாலும் தகையமுடியாதவரென்

சுக்கிரீவன் இராவணனுக்குச் சொல்லியனுப்பிய செய்தி.

றும் நீ தெரிந்துகொள்ளவில்லை ; அவர்தான் உன்பிராணனை வாங்கிவிடப்போகின்றார்" என்றான்.

சுகன் மீண்டுங் கட்டுப்படுதல்.

அதன்பின்பு, வாலியின்குமாரனுகிய அங்கதனென்ற வானரவீரன், "மஹாராஜரே! இவன் தூதனல்லன் ; வேவுக்காரனென்றே எனக்குத் தோன்றுகின்றது. நமதுபலம் இவ்வளவென்று இங்கே யிருக்கும் இவன் கண்டுகொண்டானன்றே! இவன் இலங்கைக்குத் திரும்பிப் போகவேண்டாம் ; இவனைப் பிடித்துக்கொள்ளுங்கள். இதுதான் எனக்கு விருப்பமாக இருக்கின்றது" என்றான். அதன்பிறகு, சுக்கிரீவன் கட்டளையிடவே, வானரர்கள், ஆகாயத்திற் கிளம்பிப் பிடித்து அநாதனுய்ப்புலம்புகின்ற அவனைக் கட்டினர்கள்.

வெகுகோபங்கொண்ட அவ்வானரர்கள் அங்குச் சுகனை இம்சிக்கவே, அவன் மகாத்துமாவாகிய இராமரை நோக்கிக் கதறத்தலைப்பட்டான்:—"ஐயோ! எனது இறகுகளைப் பலாத்காரமாகப் பிச்சுகின்றார்களே! எனது கண்களைத் தோண்டுகின்றார்களே! நான் இவ்விடத்திலேயே மரிப்பேனையானுல், பிறந்த இரவுதொடங்கி மரிக்கின்ற இவ்விரவுவரையில் நான் செய்துள்ள பாவங்களவ்வளவும் தங்களைச் சேரக்கடவது" என்று கதறினன்.

சுகனைப் பந்தனத்தினின்று இராமர்விடுவித்தல்.

இப்படி அவன் கதறியதைக் கேட்ட இராமர், "தூதனுகவந்த அவனைக்கொல்ல வேண்டாம். அவனை விடுங்கள்" என்று சொல்லி அவனைப் பந்தத்தினின்று விடுவித்தார்.

இருபத்தோராஞ் சருக்கம் :
இராமர் சமுத்திரராஜன்மேல் அம்புதொடுக்க ஆரம்பித்தல்.

அதன்பிறகு, சமுத்திரக்கரையில் தர்ப்பைகளைப் பரப்பி, பகைவரை யழிக்கவல்ல இராமரானவர், சமுத்திர ராஜனைக்குறித்து அஞ்சலிபண்ணி, பாம்பினுடம்பு போன்ற தோற்றத்தையுடைய கையைத் தலையணையாகக் கொண்டு, கிழக்குமுகமாகப் படுத்தார். அயோத்தியில் வசித்த காலத்தில், உயர்ந்த இரத்தினபரணங்களினாலும் பொன்னாபரணங்களினாலும் அலங்கரிக்கப்பட்டும், பத்தரைமாற்றுத் தங்கத்தாற்செய்த கைவளைகள் முத்துமாலைகள் இவைகளால் அலங்கரித்துக்கொண்டிருக்கிற தாதிமார்களால் சந்தனம்அகில்முதலிய வாசனைத்திரவியங்கள் பலமுறை பூசப்பட்டு மேன்மேலும் வாசனையுண்டாக்கப் பெற்றும், பாலசூரியன்போலத் தோன்றுகிற குங்குமத்தால் விளங்கியும், முன்பு படுக்கையில் சீதாதேவியின் சிரசால் விளக்கமடைந்தும் இருந்த இராமபிரானது கையானது, அக்காலத்தில் தருப்பசயனத்தில் அவர்க்குத் தலையணையாயிற்று. கங்கையின் ஜலத்திலிருக்கும் தக்ஷகனென்ற ஸர்ப்பராஜனது உடல்போன்றும், நகத்தடி போன்றும், சத்துருக்களுடைய துயரத்தை வளர்த்தும், நண்பர்களுடைய சந்தோஷத்தைப் பெருக்கியும், நீண்டும், சமுத்திரம்வரையிலுமுள்ள பூமிபாகத்துக்கு ஆதாரமாயும், அடிக்கடி இடப்பக்கமாக அம்பைத்தள்ளுவதனால் நாணிபட்டுக் காழ்ப்பேறியும், உழல்தடிபோன்றும், பசுக்களை ஆயிரக்கணக்காக அந்தணர்களுக்குத் தானம் செய்துமிருந்த தமது வலக்கையை, வல்லவரும் மகாபாகுவுமான இராமர், தலையணையாக வைத்துக்கொண்டு, 'இன்று

இராமர் சமுத்திரராஜனைச் சரணம் புகுதல்.

எனக்கு மரணமாவது சம்பவிக்கவேண்டும்; அல்லது, சமுத்திரத்தைக் கடத்தலாவது ஆகவேண்டும்' என்று நிச்சயித்து, மனோவாக்காயங்களில் நியமமுள்ளவராய், தாம் சாஸ்திரப்பிரகாரம் சமுத்திரராஜனைக் குறித்துப் படுக்கலானர். தருப்பை பரப்பிய வெறுந்தரையின்மேல் நோன்பு வழுவாமல் இராமர் படுத்திருக்கையில், மூன்றிரவுகள் கழிந்தன. இவ்வாறு, நியாயத்தை யறிந்து தருமத்தில் அன்புள்ளவராகிய இராமர், நதிகளுக்குத்தலைவனகிய சமுத்திரராஜனைக்குறித்து மூன்றிரவு தவம்புரிந்தார். வெகுநியமமுள்ள இராமர், தகுதிக்கு ஏற்பப் பூஜித்தபோதிலும், மூடனன சமுத்திரராஜன் அப்போது இராமருக்குத் தரிசனங் கொடுக்கவில்லை.

அதன்மேல், இராமர், சமுத்திரராஜன்மீது அதிக கோபங் கொண்டவராய், தமது கடைக்கண்கள் சிவக்க, தமது அருகிலிருந்த அழகான லக்ஷணங்களமைந்த இலட்சுமணரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானர்:—"சமுத்திரராஜனுடைய செருக்கைப் பார்த்தாயா! நேரில் வருகின்றனில்லை. கோபமின்மை, பொறுமை, நேர்வழியாக நடத்தல், இனிமையாகப் பேசுதல் என்ற இந்தப் பெரியோர்குணங்கள் நற்குணமில்லாதவர்கட்கு அசாமர்த்தியமாகத் தோன்றுகின்றன. அறிவில்லாத ஜநங்கள், தற்புகழ்ச்சிசெய்தும், வஞ்சித்தும், கருணையற்றும், எல்லாரையுந் துரத்தியும், எல்லாரிடத்திலும் தண்டனைசெய்தும் வருகின்ற மனிதனைக் கண்டு கௌரவிக்கிறார்கள். பலத்தினுண்டாகும் புகழ் சாமோபாயத்தால், உண்டாகின்றதில்லை; பராக்கிரமத்தால் தோன்றும் யசஸும் சாமோபாயத்தால் உண்டாகமாட்டாது. போர்முகத்தில் வெற்றியென்பதும், லக்ஷ்மணனே! இவ்வுலகத்தில் சாமோபாயத்தால் உண்டாகமாட்டாது. சுமித்திரைகுமாரனே! இன்று, சுறுமீன்கள்

இராமர் சமுத்திர ராஜன் மேல் அம்புதொடுக்கத் தொடங்குதல்.

நிறைந்துள்ள இச்சமுத்திரமானது, தனது நீர் முழுவதும் என்பாணங்களாற் பிளக்கப்பட்டு, மிதக்கின்ற சுறுமீன் களால் நிரம்புவதை நீ பார்க்கப்போகின்றாய். லக்ஷ்மண! இக்கடலில், பெருங்கடற்பாம்புகள், யானைவடிவமுள்ள மீன்கள் ஆகிய இவைகளுடைய உடம்புகள் என்னுற் கண் டங்கண்டமாகப் பண்ணப்படுவதை நீ காண்பாய். சங்கங் களும் முத்துச்சிப்பிகளும் என்னும் இவற்றின் தொகுதி யையுடையதாய், மீன்கள் முதலைகள் இவைகளுடன்கூடிய தான இச்சமுத்திரத்தை, இதோ, நான், பெரிய யுத்தஞ் செய்து வற்றடிக்கின்றேன். நான் மிகவும் பொறுமையாக இருக்கின்றபடியால், என்னை, இச்சமுத்திரராஜன், வல்ல மையற்றவனாகவே நினைக்கின்றான். இவ்விதமான அற்ப ஜநத்தினிடம் பொறுமைகாட்டிய நான் கெட்டேன்! எனது சமாதானத்தால், சமுத்திரராஜன், தன்வடிவைக் காட்ட வில்லை. சுமித்திராகுமாரனே! வில்லைக்கொண்டுவா; பார் வையில்விஷத்தைக்கொண்டுள்ளசர்ப்பங்களுக்குஒப்பான பாணங்களையும் கொண்டுவா. இச்சமுத்திரத்தை வற்ற டிக்கப்போகின்றேன். வாநரர்கள் தடையின்றிக் காலால் நடந்து செல்லட்டும். எவராலும் கலக்கமுடியாத கடலையும், நான், கோபங்கொண்டவனாய், இன்று கலக்கிவிடுகின் றேன். கரையைக்கடவாமலே அலைகளையுடையதாய் நிற் குஞ் சமுத்திரத்தை, எனதுபாணங்களால் வரம்புகடக்கும் வண்ணம் செய்துவிடுகின்றேன். பெரிய தாநவர்கள் நிரம்பி யிருக்கும் இப்பெருங்கடலை, இன்று, நான், கலக்கிவிடுகின் றேன்" என இவ்வாறு இலட்சுமணரைநோக்கிச் சொல்லி விட்டு, ஸ்ரீராமர், தமது கையில் வில்லையேந்திக் கோபத்தால் விழித்த கண்களையுடையவராய், கற்பாந்தகாலத்தில் ஜ்வ லிக்கும் அக்கினிபோலத் தகையமுடியாத உக்கிரமுடையவ ரானார். அவர் தமது பயங்கரமான வில்லை வளைத்து நாணேற்றி, உலக முழுவதும் நடுநடுங்கும்படியாக, இந் திரன் வச்சிராயுதத்தை யெறிவதுபோலக் கொடியபாணங்

கூளை எய்தார். உத்தமமான அந்தப்பாணங்கள், வெகுவேகத்துடன் ஜ்வலித்துக்கொண்டு சமுத்திரத்திலிருந்த சர்ப்பங்களெல்லாம் பயப்படும்படி அதன் ஜலத்தில் வந்து விழுலாயின. அக்காலத்தில், அச்சமுத்திரத்திலே, முதலையையும் சுறுமீன்களையுமுடையதாய்க் காற்றினால் மோதப்பட்டுப் பெருங்கோஷத்தைக்கொண்ட பேரலைகளின்வரிசை தோன்றிற்று. உடனே அப்பெருங்கடலானது, பெரிய அலைகளின் கூட்டங்களால் இழுக்கப்பட்ட சங்கம் சிப்பி முதலியவற்றுற்சூழப்பட்டு, புகைமூடிய அலைகளுடன் கூடியதாகத் தென்படலாயிற்று. கடற்பாம்புகள் மிகவும் வருந்தின; அதனால் சமுத்திரத்தினடியில்வசிக்கும் மகாவீரர்களான தானவர்களும், எரிகின்ற முகத்தையும் கண்களையு முடையவரானார்கள்; அச்சமுத்திரராஜனிடமிருந்து பேரலைகள், முதலைகளோடும் சுறுமீன்களோடும் கூடியனவாய், விந்திய பருவதம்போலவும் மந்தரமலைபோலவும் ஆயிரக்கணக்காக மேற்கிளம்பலாயின; சமுத்திரத்தில், அநேக அலைகளின் இராசிகள் சூழ்ன்றன; உரகர்களும் அரக்கர்களும் குழப்பமடைந்தார்கள். பெருமுதலைகள் சுருண்டு தவிக்கலாயின.

இலட்சுமணர் அதைத் தடுத்தல்.

அதற்குப் பிறகும், மகாவைபவமுள்ள இராமர் இன்னும்வேகமாகத் தமது வில்லை வளைத்து இழுத்துக்கொண்டு சினத்தாற் பெருமூச்சு விடும்பொழுது, இலட்சுமணர் ஓடிவந்து 'வேண்டாம் வேண்டாம்' என்று சொல்லி, அவர் வில்லைப் பிடித்துக்கொண்டார்.

இருபத்திரண்டாஞ் சருக்கம்:
சமுத்திரத்தில் அணைகட்டி யாவரும் கடந்துசெல்லுதல்.

அதன்பிறகு, ரகுநந்தனர், சமுத்திரத்தைப் பார்த்து, "பெருங்கடலே! இன்றையதினம் நான் உன்னைப் பாதாளம் வரையில் வற்றும்படி செய்கின்றேன். சாகரமே!

எனது அம்புகளால் ஜலமும் வறண்டு, ஊற்றுக்கண்களும் வற்றி, ஜலஜந்துக்களும்மாள, முன்பு உன்னிடத்து நீரிருந்த விடத்திற் பெரும்புழுதிபறக்கச் செய்கின்றேன். சமுத்திரமே! என்வில்லிலிருந்து பிரயோகிக்கப்பட்டஅம்புமாரியால், வானரர்கள் காலாலேயே உனது அக்கரையைச் சேர்வார்கள். தானவர்களினிருப்பிடமே! எனதுபலத்தையும் பராக்கிரமத்தையும் நீ தெரிந்துகொள்ளவில்லை; என்னுல் உனக்கு விளையப்போகிற சங்கடத்தையும் நீ அறியவில்லை" என்று சொல்லி, மகாபலம் பொருந்திய அந்த இராமர், தமது சிறந்த வில்லிற் பிரமதண்டத்துக்கு ஒப்பான பாணமொன்றைத் தொடுத்துப் பிரமாஸ்திரமந்திரத்தை அபிமந்திரித்து நாணையிழுக்கலானர். இராகவர் தமதுவில்லை இவ்வண்ணம் வளைத்துநாணேற்றியபொழுது, திடீரென்று ஆகாயமும் பூமியும் பிளந்தனபோலப் பர்வதங்கள் நடுநடுங்கின. இருள் உலகமுழுவதையும் மூடலாயிற்று; திசைகள் விளங்கவேயில்லை. பொய்கைகளும் ஆறுகளும் திடீரென்று குழம்பிவிட்டன. சந்திரசூரியர் நட்சத்திரங்களுடன் வக்கிரமாகச் செல்லலாயினர். அப்போது, ஆகாயம், சூரியனொளி சிறிது பிரகாசிக்க இருள் மூடியதாய், நூறு கொள்ளிக்கட்டைகளால் எரிக்கப்பட்டு விளங்கிற்று. காதுகொடுத்துக் கேட்கமுடியாத பெருமுழக்கத்துடன் பல இடிகள், ஆகாயத்தினின்று விழுந்தன. ஆகாயத்திலே திடீரென்று தோன்றி மேகங்கள் சஞ்சரித்தன. காற்றுனது, எதிர்பாராமல் ஆகாயத்தினின்று, கிளம்பி, மரங்களை முறித்தும் மேகங்களைத் தள்ளியும், மலைகளின் சிகரத்தையும் துண்டுமலைகளையும் பெயர்த்துக்கொண்டும் அடித்தது. பெருமேகங்கள், ஆகாயத்தை அள்ளாவினின்று, ஒருங்குசேர்ந்து பேரொலியுடன் மின்னல்களையுண்டாக்கின; அவை பேரிடிகளாயின. கண்ணுக்குப்

இராமர் சமுத்திரத்தின்மீது பிரமாஸ்திரந் தொடுக்கத் தொடங்குதல்.

அப்பொழுது தோன்றிய உற்பாதம்.

புலப்படும் எல்லாப் பிராணிகளும், காணப்படாத பூதங்களும், அஞ்சியனவாய், கதறி இடிமுழக்கம்போற் பயங்கரமாகச் சத்தித்தன; எல்லாப்பிராணிகளும், அச்சமடைந்து உறங்குவன்போலப் பூமியிற் படுத்துக்கொண்டன; அவை, அதிக ஏக்கமடைந்தவைகளாய்த் தாங்கள் படுத்த இடங்களைவிட்டு நகரவுமில்லை.

பிறகு, அலைகளையும் நாகங்களையும் அரக்கர்களையும் கொண்டுள்ள அப்பெருஞ்சமுத்திரமானது, இராமர் வேகமாக அம்பைப் பிரயோகிக்கத்தொடங்கிய அப்பொழுதே, தன்னிடம்அடங்கியுள்ள பிராணிகளுடன், அதிக பயங்கரமான வேகத்தை யுடையதாயிற்று. பிரளயகாலமென்பது அப்போது கிட்டாமலிருந்தபோதிலும், சமுத்திரமானது, கரைபுரண்டு ஒருயோஜனைதூரம் ஓடிற்று. முன்புசெருக்கடைந்திருந்த சமுத்திரராஜன் அவ்வாறு அஞ்சி ஓடியபோது, தமது சத்துருக்களைவதைசெய்யும் இராமர், அம்பைத் தொடுக்கவில்லை. அதன் பிறகு, பெருமலையாகிய மேருவினின்று சூரியபகவான் உதிப்பதுபோல, அப்பெருங்கடலின் மத்தியினின்று, சமுத்திரராஜன் எரிகிறவாயையுடைய பன்னகர்களுடன் தோன்றினன். அப்பொழுது, அவன், வழுவழுப்பான வைடூரியங்களைப் போலத்தோன்றியும், சிவந்த மாலைகளையும் வஸ்திரங்களையும் தரித்தும், தாமரையிதழ் போன்ற கண்களைப் பெற்றும், தேவலோகத்திலுண்டான கற்பகமலர் மாலையைத் தனது தலையில் அணிந்தும், உயர்ந்தபொன்னணிகள் பல தரித்தும், தன்னிடத்திலுண்டாகிய பலவகை யிரத்தினங்களாலிழைக்கப்பட்ட உயர்ந்த ஆபரணங்களைப் பூண்டிருப்பதனல், பலவகைக் காவிக்கற்களால் நிறைந்து விளங்கும் இமயபருவதம்போல விளங்கினன்; மேகமாலையும் காற்றும் குழப்பமடைந்த அந்தச் சமுத்திரராஜன், கௌஸ்துபமணிக்குச் சகோதரமான இரத்

இராமருக்கு எதிரில் சமுத்திரராஜன் வருதல்.

தினத்தை நடுநாயகமாகவைத்து இழைக்கப்பட்ட அழகான முத்துமாலை தனது விசாலமான மார்பில் அசைந்தாடவும், அலைகளின் சமூகங்கள் சுழன்று நிற்கவும், பெருமுதலைகள் வட்டமிடவும், உரகர்களும் அரக்கர்களும் மனம்குழம்பவும், வெளியில் தோன்றி, முதலில் ஸ்ரீராம நாமத்தைச் சொல்லியழைத்துக்கொண்டே வந்து, அஞ்சலி செய்து, வில்லுங்கையுமாய் நிற்கும் அந்த இராமபிரானைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:—"இரகுபுங்கவரே! சாந்தரே! பிருதிவி, வாயு, ஆகாசம், ஜலம், அக்கினி இவைகள்யாவும் நெடுநாளாகத் தங்கட்குஇயல்பென்று ஏற்பட்டிருக்கும் வழியில் பிறழாமலிருக்கின்றன; ஆகவே, ஆழம் அளவிட முடியாதென்பதும், பிறரால் தாண்டமுடியாதென்பதும், எனக்கு இயற்கை. தரை காணப்படுவதென்பது, எனது இவ்வியற்கைக்கு விரோதமாம். அவ்விஷயமாக நான் சொல்வதைக் கேளுங்கள்: சக்கரவர்த்தித்திருமகனரே! நான், விருப்பங்கொண்டாவது, உலோபகுணங்கொண்டாவது, பயந்தாவது, மீன்களாலும் முதலைகளாலும் நிரம்பியிருக்கும் எனது ஜலத்தை, வருந்தியும் ஸ்தம்பனஞ் செய்யக்கூடாது. ஆனல், எவ்வித உபாயத்தால் நானும் என்னைப் பொறுப்பேனே, எவ்வாறு முதலைகள் ஒருவகைத் தீங்கும் செய்யாமலிருக்கச் சேனைகள் என்னைத் தாண்டிச் செல்லுமோ, அவ்வாறு செய்வேன்; வானரர்கள் என்னைக் கடக்குமாறு அணைகட்டுகையில், அதனை அடித்துக்கொண்டுபோகாமல் நிலம்போல நிற்கச்செய்கின்றேன்" என்றான்.

சமுத்திரராஜன் தன்மீது அணைகட்ட இடங்கொடுப்பதாக இராமரிடம் கூறல்.

அப்போது, அச்சமுத்திரராஜனை நோக்கி, இராமர், 'நதிகளின் நாயகனே! நான் எனதுவில்லில் தொடுத்த இந்தப்பேரம்பு வீண்போகாது. நான் இதை எவ்விடத்தில் பிரயோகிக்கலாம்? சொல்லுக" என்றார். மிக்க ஒளி

பொருந்திய சமுத்திரராஜன், அவ்வாறு இராமர் சொல்லியதைக்கேட்டு, அந்த அம்பையும் கண்ணுற்று, பின்வருமாறு சொல்லலானான்:—

சமுத்திரராஜனதுவேண்டுகோளின்படி, இராமர் தொடுத்த பாணத்தைப் பிரயோகித்தல்.

"என்னைச்சேர்ந்த புண்ணியதலமொன்று வடதிசையிலிருக்கின்றது. அது, துருமகுல்யமென்று உலகத்திற்பெயர்பெற்று, தங்களைப்போல விளங்கிவருகின்றது. அவ்விடத்தில், கொடிய தொழில்களையும் பார்வைகளையு முடையராய்ப் பெரிய சூத்திரர்கள் பலர், பாபிஷ்டரான திருடர்களாய், எனது தீர்த்தத்தைப் பானம்பண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். பாவச்செயல்கள் புரிந்துவரும் அவர்கள் எனது ஜலத்தைத் தொடுவது, எனக்குப் பிடிக்கவில்லை. இராமரே! தங்களுடைய பாணத்தை, அவ்விடத்திலுள்ளவர்கள்மேல் விடுத்து வீண்போகாமற்செய்யுங்கள்" என்றான். வீரராகிய அந்த இராமர், சமுத்திரராஜன் அவ்வாறு சொன்னதைக் கேட்டு, அவன் குறித்த இடத்தை நோக்கி எரிகின்ற அந்தப்பாணத்தைப் பிரயோகித்தார். நெருப்புஜ்வாலையோடு விழும் இடிபோல அவ்விராமராற் பிரயோகிக்கப்பட்ட அப்பாணம் போய் விழுந்த இடமானது, இவ்வுலகத்தில் மருகாந்தார மென்ற பெயருடன் விளங்குவதன்றோ? அப்போது, அப்பாணத்தாற் பிளக்கப்பட்ட பூமியும், அவ்விடத்தில் அலறிற்று. அப்பாணம் குத்திய பிளப்பின் வழியாக, ரஸாதலத்திலிருந்து ஜலம் பொங்கி வழியலாயிற்று. பிறகு, அவ்விடம் விரணகூபமென்று பெயர் பெற்றது. எப்பொழுதும் அதினின்று எழுகின்ற ஜலம், சமுத்திரம்போலக் காணப்படுகின்றது. இராமபாணத்தால் அவ்விடம் பிளவுண்டபொழுது, பெருஞ்சத்தம் கேட்கலாயிற்று. அப்பாணத்தை எய்து அதனால், இராமபிரான், அங்குள்ள பெரும்பள்ளங்களில் தேங்கியிருந்த ஜலங்களை வற்றச்செய்தார். அவ்விடம், மருகாந்தார மென்றே வழங்குகின்றது. தேவர்களுக்கு ஒப்பான பராக்

கிரமமுள்ளவரும் வித்வானும் தசரத குமாரருமான ஸ்ரீராமர், அங்கிருந்த பெரும்பள்ளங்களை வற்றச்செய்து, பிறகு, "இந்த மருஸ்தலமானது - பசுக்களுக்கு நன்மையான இடமாகவும், நோய்மிகுதியாக இல்லாததாகவும், கனிகளும் கிழங்குகளும் தேனும் நிரம்பியதாகவும், மிக்க பாலையும் நெய்யையும் உடையதாகவும், நறுமணங்களையுடையதாகவும், பலவகை ஔஷதிகளையுடையதாகவும் ஆகுக" என்று அந்த மருப்பிரதேசத்துக்கு வரமளித்தார். இவ்வண்ணம் இராமரிடம் வரம்பெற்ற அந்த மருஸ்தலமானது, பலவகைக் குணங்களோடுகூடியதாய் நல்ல இடமாக மாறிற்று.

நளன் சேது வைக் கட்ட உடன்படுதல்.

அவ்வாறு தருமகுல்யமென்ற இடம் மாறுபட்டதும், நதிகளின் நாயகனாகிய சமுத்திரராஜன், கலைகளையெல்லாம் அறிந்த இராமரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:— "சாந்தமூர்த்தியே! இவன், நளனென்ற வானரன்; விசுவகருமாவினுடைய புதல்வன்; தந்தையினிடத்தில் வரம்பெற்ற செல்வப்புதல்வன்; விசுவகருமாவுக்கு ஒப்பானவன்; அதிக சுருசுருப்புள்ள இவ்வானரன் என்மேல் அணைகட்டட்டும்; அவ்வணையை, நான், தாங்குகின்றேன். இவன், தனது தந்தை எப்படியோ, அப்படியே வல்லமையுள்ளவன்" என்று இவ்விதமாகச் சொல்லிச் சமுத்திரராஜன் மறைந்ததும், மகாபலம் பொருந்தியவனும் வானரசிரேஷ்டனுமான் நளன், எழுந்து, இராமரைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:—"விசாலமான இந்தச் சமுத்திரத்தின்மீது, நான், என் தந்தையின் வல்லமையைக் கைப்பற்றியவனாய், அணையைக் கட்டுகின்றேன். சமுத்திரராஜன் சொன்னது உண்மையே. இவ்வுலகத்தில் புருஷனுக்குத் தண்டோபாயமே சிறந்ததென்பது, என்னுடைய கருத்து. அயோக்கியர்களிடம், பொறுமை சாமம் தானம் என்பவற்றை உபயோகித்தல் தீ

மையே. கொடிய இந்தச்சாகரம், தண்டபயத்தாலல்லவோ தன்மேல் அணைகட்டுமாறு இப்பொழுது வாக்களித்தது. முன்பு மந்தரமலையில் எனது தாய் இருந்தபொழுது,'என்னைப்போன்ற வல்லமையுள்ள புதல்வன் உனக்கு உண்டாவான்'என்று விசுவகருமா அவட்கு வரமளித்திருந்தார்.நான்தான்,விசுவகருமாவுக்குஒப்பான வல்லமையுள்ள அவருடைய ஔரஸபுத்திரன். இவ்விதமானசக்தி எனக்கு உண்டென்பது, இந்தச்சமுத்திரராஜன் சொல்லும்போது தான்,எனக்கு ஞாபகத்தில் வந்தது. சமுத்திரராஜன் சொன்னது உண்மையே.வேறொருவர்சொல்லாதபோது எனது குணங்களை நானே சொல்லிக்கொள்ளமாட்டேன். நான் இச்சமுத்திரத்தின் மீது அணைகட்ட வல்லமையுள்ளவன். ஆகையால், இப்போதே வானர வீரர்களெல்லாரும் அணைகட்டுவதற்கு வேண்டியவைகளைக் கொணரட்டும்" என்றான்.

இராமர் அவ்வாறே கட்டளையிட, வானரவீரர்கள், நாற்புறத்திலும் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பெருங்காட்டிற் சென்று புகுந்தார்கள். மலைகள்போன்ற உருவத்துடன் விளங்கிய அவ்வானரசிரேஷ்டர்கள், மரங்களை வேரோடுபெயர்த்துச் சமுத்திரத்துக்கு அருகில் இழுத்து வந்தார்கள். அவ்வானரர்கள்,ஆச்சா அசு

நளன் சேது கட்டுதல்.

வகர்ணம் தவம் மூங்கில் வெண்பாலை மருதம் பனை திலகம் திந்திசம் வில்வம் ஏழிலம் பாலை மலர்கள்நிறைந்த கர்ணிகாரம் மா அசோகம் என்ற மரங்களால், சமுத்திரத்தை நிரப்பினார்கள். இந்திரதுவசத்தை ஏந்திவருவதுபோல, அவ்வானர வீரர்கள், வேருடனும் வேரில்லாமலும் மரங்களைத் தூக்கி வந்தார்கள். இன்னும், அக்காட்டில் நான்கு பக்கங்களிலும் பிருந்து, சிறுபனை மாதுளை தெங்கு தான்றி மகிழ் கருங்காலி வேம்பு முதலிய மரங்களையும் வானரர்கள் பிடுங்கி வந்தார்கள். அன்றியும், மகாபலமுள்ள அவ்வானரவீரர்

கள், யானைகள்போற் பெரியவைகளாயிருந்த பெருங்கற் களையும் மலைகளையும் வேருடன்பறித்து யந்திரங்களால் தூக்கிவந்தார்கள். மலைகள் ஜலத்திற் போடப்பட்ட அவ் வப்பொழுது, சமுத்திரஜலம், ஆகாயம்வரையிற் கிளம் பிற்று. வாநரர்கள் நான்குபக்கங்களிலேயும் இருந்து கொண்டு சமுத்திரத்தைக் கலக்கினர்கள். சிலர் நூறுயோ ஜனதூரம் கயிறுகளை நீட்டிப்பிடித்து நின்றார்கள்; சிலர் அளவுகோலைத் தாங்கினர்கள்; சிலர் அவற்றைத்தேடினர் கள். நளனென்பவன், மிகப்பெரிய அணையொன்றை, சமுத்திரத்தின்மேற் கட்டலானான். பயங்கரமான தொ ழில்களைச் செய்யும் வாநரர்கள், அவ்வாறுசேதுகட்டுதற்கு உதவியாக நின்றார்கள். ஸ்ரீராமபிரானது கட்டளையை முன்னிட்டுக்கொண்டு, நூற்றுக்கணக்கான வாநரர்கள், மேகங்கள்போல்விளங்கும்மலைகளாலும் புற்களாலும் கட் டைகளாலும் நுனியிற்பூத்துள்ள மரங்களாலும் அவ் வணையைக் கட்டலானார்கள். யானைக்குஒப்பான வாந ரர்கள், மலைகள்போலத்தோன்றும் பெருங்கற்களையும், மலைகளின்சிகரங்களையும் எடுத்துக்கொண்டுவரக் காணப் பட்டார்கள். பாறைகளும் மலைகளும் அச்சமுத்திரத்தில் விழுத்தப்பட்ட பொழுது, பெருஞ்சத்தம் உண்டாயிற்று. வெகு பரபரப்புடனும் சந்தோஷத்துடனும் தொழில் செய்பவரான யானையையொத்த அவ்வாநரர்கள், முதல் நாளில் பதினான்குயோஜனைதூரம் அணைகட்டினர்கள். பயங்கரமானசரீரமும் அதற்கேற்ற மகாபலமும் பொருந் திய அவ்வாநரவீரர்கள், இரண்டாவதுநாளில், அவ்வாறே, விரைவாக, இருபதுயோஜனைதூரம் அணைகட்டினர்கள். வெகு அவசரத்துடன் தொழில்செய்பவரான பருத்தவடிவ முடைய அவ்வாநரர்கள், அவ்வாறே, மூன்றுவதுநாளில், இருபத்தொருயோஜனைதூரம் அணைகட்டினர்கள். வெகு வேகமாகத் தொழில்செய்யவல்ல அவ்வீரர்கள், அவ் வாறே, நான்காவதுநாளில், இருபத்திரண்டு யோஜனை

தூரம் அணைகட்டினார்கள். எல்லாத்தொழிலையும் சடிதியில் முடிக்கும் வலிமையமைந்த அவ்வானரர்கள், ஐந்தாவதுநாளில் இருபத்துமூன்றுயோஜனைதூரம் சுவேலமலை வரையும் அணைகட்டினார்கள். வெகுபலசாலியும் சீமானும் விசுவகருமாவின் குமாரனும் தந்தையையொத்த ஸாமர்த்தியமுள்ளவனுமாகிய நளனென்ற வானரசிரேஷ்டன். சமுத்திரத்தின்மேல் அங்ஙனமே அணைகட்டிமுடித்தான். சுரமீன்கள்நிரம்பிய அச்சமுத்திரத்தின்மேற் புதிதாகக் கட்டப்பட்ட அழகான அந்த அணையானது, ஆகாயத்தில் * சுவாதிவழிகாணப்படுவதுபோலக் காணலாயிற்று, பிறகு, அவ்வதிசயத்தைப் பார்க்க விரும்பி, தேவர்களும் கந்தர்வர்களும் சித்தர்களும் மஹர்ஷிகளும் ஆகாயத்தில் வந்து நின்றார்கள். நூறுயோஜனை நீளமும் பத்துயோஜனை அகலமும் முள்ளதாய்,இதுவரையில் ஒருவராலும் கட்டப்படாமல் நளனால் நூதனமாகக் கட்டப்பட்டு விளங்கும் அச்சேதுவை, தேவர்களும் கந்தருவர்களும் கண்டார்கள். மிக்க மகிழ்ச்சியால் வானரர்கள் அங்கும் இங்கும் குதித்துக்கொண்டிருந்தார்கள். மனத்தால் நினைக்க முடியாததும், கடவுளின் உதவியின்றிச் செய்துமுடிக்கச் சாத்தியப்படாததும், வெகு ஆச்சரியகரமானதும், பார்ப்பவர்களை மயிர்ச்சிலிர்ப்பெறியப்பண்ணுவதுமான சமுத்திரத்தின்மேலுள்ள அந்தச் சேதுபந்தனத்தை எல்லாப் பிராணிகளும் பிரதியட்சமாகப் பார்த்தார்கள்.

சேதுகட்டித் துணைபுரிந்த பலசாலிகளான அவ்வானரர்கோடிவானரர்களும், அச்சேதுவின் வழியாக நடந்து சமுத்திரத்தின் அக்கரையைச் சேரலானார்கள். விசாலமாயும், உறுதியுடையதாயும், நேர்மையுள்ளதாயும், மேடு

* இதனை, சூரியன் முதலிய கிரகங்களுக்குஏற்பட்டுள்ள உத்தர மத்யம தக்ஷிணவீதிகளில் இடைப்பட்ட தென்பர் ; வியாக்கியானங்களில் வாயு புராணத்திலுள்ளதாக விவரங் கூறப்பட்டிருக்கின்றது.

பள்ளமின்றிச் சமமானதரையுள்ளதாயும், புரைசலில்லாத தாயும் கட்டப்பட்ட அம்மகாசேது, உச்சிக் கூந்தலேவகிர்ந்ததுபோலச் சமுத்திரத்தில் விளங்கலாயிற்று. சமுத்திரத்தின் அக்கரையிலே, விபீஷணர், தமது நான்கு மந்திரிகளுடனே, வாநரர்களை எதிர்க்கவருஞ் சத்துருக்களை வதைக்கும்பொருட்டு, கதாயுதமுங் கையுமாக நின்றார். அதன் பிறகு, உண்மையும் வல்லமையும் அமைந்த இராமரை நோக்கிச் சுக்கிரீவன் பின்வருமாறு கூறலானான்:— "நீங்கள் அநுமான்மீது ஏறிக்கொள்ளுங்கள். இலட்சுமணர் அங்கதன்மீது ஏறிக்கொள்ளட்டும். இச்சமுத்திரம் வெகுவிசாலமுடைய தாகையால், ஆகாயமார்க்கத்தாற் செல்லும் இவ்வாநரவீரர்கள் உங்களைத் தாண்டுவிப்பார்கள்" என்றான். இப்படிச் சுக்கிரீவன் சொன்னதும், அச்சேனைக்கு முன்பாக, இலட்சுமணருடன்கூடிய தருமாத்துமாவும் வில்வீரரும் சீமானுமாகிய இராமர், சுக்கிரீவனுடன் சென்றார். சிலர் நடுவிலும், சிலர் பக்கங்களிலும் சென்றார்கள்; சிலர் நீரிற் குதித்து நீந்திக்கொண்டு சென்றனர். சிலர்க்குப் போக வழி கிடைக்கவில்லை. சிலர், கருடபகவான்போல் ஆகாயத்திற் பறந்து சென்றார்கள். இவ்வாறு கொடிய அவ்வாநரசேனை கடலைக்கடந்துசெல்லும்பொழுது செய்த சத்தம், பயங்கரமாகத்தோன்றுஞ் சமுத்திர கோஷத்தையும் அடக்கிற்று. நளன் கட்டிமுடித்த அந்தச் சேதுவழியாக எல்லாவாநரசேனையும் சமுத்திரத்தைக் கடந்ததும், சுக்கிரீவன், அவைகளை, மிக்க நீர் நிரம்பிக் கனிகளும் கிழங்குகளும் நிறைந்திருக்குந் தென்கரையில் தங்கச்செய்தான். தேவர்கள், சித்தர்களோடும் சாரணர்களோடும் மஹர்ஷிகளுடனும் இராமபிரானது செயற்கரிய அந்தச்செயலைப் பார்த்து, சடிதியில் இராமரிடம்வந்து, மங்களகரமான தீர்த்தங்களால் சக்கரவர்த்தித்திருமகனுக்குத் தனித்

வாநரர்முதலியோருடன் இராமர் சேதுவழியாகக் கடலைக் கடத்தல்.

தனியே அபிஷேகம்பண்ணிவைத்தார்கள். பிறகு "மன்னவரே! உங்களுடைய சத்துருக்களை நீங்கள் வெல்லுங்கள். கடல்சூழ்ந்த பெரிய இவ்வுலகத்தை நீங்கள் என்றென்றைக்கும் பரிபாலனம்பண்ணுங்கள்" என்று, தேவர்களாலும் மனிதர்களாலும் மரியாதைசெய்யப்படும் இராமரை, இவ்விதமான மங்களவாக்கால் பலவிதமாக அவர்கள் ஆசீர்வசனங் கூறினர்கள்.

இருபத்துமூன்றுஞ் சருக்கம் :
இராமர் எல்லோருடனும் இலங்கையைநோக்கிச் செல்லுதல்.

சகுனசாஸ்திரத்தை நன்றுகஅறிந்த இராமர், அப்பொழுது தோன்றிய சில சகுனங்களைப் பார்த்து, இலட்சுமணரைத் தழுவி, இவ்வாறு சொல்லலுற்றார்:— "இலட்சுமண! இங்கு, குளிர்ந்த நீரையும் கனிகள் நிரம்பிய காட்டையும் நாம் அடைந்திருக்கின்றோமாகையால், இவ்விடத்தில் நமது சைனியத்தைச் சற்றே நிறுத்தி, அதனை அணிவகுத்து, சிறிதுநேரம் இருப்போம். வெகுவீரர்களான வாநரர்களும் ருக்ஷர்களும் அரக்கர்களும் தொலையக்கூடியதாக, இவ்வுலகத்தையே பாழாக்கும்படியாகப் பயங்கரமான பெரும்போர் நெருங்கிவிட்டதாகத் தோன்றுகின்றது. காற்றே வெகு பயங்கரமாக வீசுகின்றது; பூமி நடுநடுங்குகின்றது; மலையின் சிகரங்கள் அசைகின்றன; மரங்கள் காரணமில்லாமலே விழுகின்றன. மேகங்கள் மாமிசத்தைப்புசிக்கும் விலங்குகள் போல விளங்கிக்கொண்டு வெகு உக்கிரமாகக் கர்ச்சித்து இரத்தத்துடன் கூடிய கொடிய பெருமழையைப் பொழிகின்றன. சந்தியாகாலமோ, குங்குமநிறம்போன்று பார்ப்பதற்கு வெகுகுரூரமாகக் காணப்படுகின்றது. பிரகாசிக்

கின்ற சூரியபகவானிடமிருந்து, அக்கினிபிழம்பு விழுகின்றது. எங்கும், கொடிதிய சீதை, கனும், பட்சிகளும், வெகு பரிதாபவண நிலையி லிருந்துகொண்டு, இரக்கமான ஆ லுடன், சூரியனைநோக்கி நின்றபடியே, பய முண்டாகும்படி பேரொலிசெய்கின்றன. இரவில், சந்தி ரன், பிரகாசிக்காமல் எரிக்கின்றது. ஓரத்தில் கறுப்பும் அதற்குச் சிறிதுமுன்னே சிவப்புமான கிரணங்களுடன் கூடி, மத்தியில் மிகவுஞ் செங்நிறமாய் இதுவரையிற் காணப்படாததான ஊர்கோள், பிரளயகாலத்தில் தோன்றுவதுபோலப் பார்ப்பதற்குவெகுகொடியதாயும் சிறியதாயும் காணப்படுகின்றது. இலட்சுமண! நிர்மலனை சூரியனிடத்தில் நீலமானகளங்கம் காணப்படுகின்றது. நட்சத்திரங்கள் பெரும்புழுதியால் மூடப்பட்டிருக்கின்றன; இவை, உலகத்தின் முடிவை வெளியிடுவதுபோலும். காக்கைகளும், கழுகுகளும், பருந்துகளும், துர்ப்பலமானபறவைகளால் அவமதிக்கப்படுகின்றன. நரிகள், வெகுபயங்கரமாய் அமங்களமாக ஊளையிடுகின்றன. மலைகள், சூலங்கள், கத்திகள் என்ற இவைகளை வானரர்களும் அரக்கர்களும் ஒருவர்மேல் ஒருவர் வீசியெறிவதால், இனி இப்பூமி, மாம்சங்களாலும் ரக்தத்தாலும் நிரம்பிச் சேறுகப்போகின்றது. நாம், இப்போதே சடிதியில்வெகுவேகமாக நான்குபக்கங்களிலேயும் நமது சேனைகளாற் சூழப்பட்டவர்களாய், இதுவரையில் ஒருவராலுந் தகையப்படாத இராவணநகரமாகிய இலங்கையை எதிர்ப்போம்" என்றார்.

போரைக்குறிப்பிக்குங் கொடியநிமித்தங்கள்.

போரில் எப்பொழுதும் உத்ஸாகப்படுபவரும், வீற்பிடித்தவரும், மகாவீரரும், வியாபகரும், தருமாத்துமாவுமான இராமர், இவ்வாறு சொல்லி, இலங்கையை நோக்கி முன்னே புறப்பட்டார். அவர்க்குப்பின்னர், விபீஷண சுக்கிரீவருடன் கூடிய வானரசேனை, தங்கள்சத்துரு

எல்லோரும் இலங்கையை நோக்கிப் புறப்படுதல்.

தனியே அதப்பதில் உறுதிகொண்டனவாய், அட்டகானவரே!ஊனிக்கொண்டு புறப்பட்டன: தைரியமும் வீரியமுகடல்ரூ வாநரர்கள், இராமரை மகிழ்விக்குமாறு செய்த ஊபார்க்குஅங்கமானதொழில்களைக் கண்டு, இராமர், சந்தோஷமடைந்தார்.

இருபத்துநான்காஞ் சருக்கம்:
இராமர் சேனையுடன் கடல் கடந்துவந்ததைச் சுகன் இராவணனிடந் தெரிவித்தல்.

வீரரான இராகவரால் நிர்வஹிக்கப்பட்ட அவ்வாநர சேனை, பூர்ணசந்திரனுல் சுபநட்சத்திரத்தை யுடைய சரத்காலத்துப் பூர்ணிமை விளங்குவதுபோல மிகவும் விளங்கிற்று. சமுத்திரம்போலவே அளவில்லாதிருந்த அவ்வாநரசேனையின் கூட்டத்தாற் பீடிக்கப்பட்ட பூமியானது, வேகத்தினுல் அசையலாயிற்று; நடுங்கவும் நடுங்கிற்று. பிறகு, இலங்கையிலே யுண்டான ராக்ஷஸசேனைகளின் கோலாஹலத்தையும், கேட்பவர்களின் தேகம் மயிர்க்கூச்செறியும்படி மிகுதியாக உண்டான பேரீ மிருதங்கங்களின் முழக்கங்களையும் வாநரர்கள் கேட்டார்கள். அவ்வொலி முழங்க முழங்க, வாநரத்தலைவர்கள் அதிக சந்தோஷமடைந்தார்கள்; அன்றியும், அவ்வொலியைக் கேட்க மனம் பொறுக்காமல், அதனினும்மேலாகத் தாங்களும் கர்ஜித்தார்கள். ஆகாயத்திற் செழித்த மேகங்கள் இடிக்கும் இடியைப்போன்ற அவ்வாநரர்களின் கர்ஜனையை, அரக்கர்களும் கேட்டார்கள்.

சேனைகளின் கோலாஹலம்.

அழகான துவசங்களும் தோரணங்களும் பறந்துகொண்டிருக்கும் இலங்கையை, இராமர், தமது கண்களாற் பார்த்ததும், " இவ்விடத்தில்தான் மான்குட்டியின்

கண்கள்போன்ற கண்களையுடைய என்தேவியாகிய சீதை, அங்காரகனுல் தகைப்பட்ட ரோகிணிபோல இராவணனுற் சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றுள் " என்று நோவுபட்டிருந்த தமதுமனத்தாற் சீதையைப்பற்றி நினைத்தார். பின்பு, உஷ்ணமாகப் பெருமூச்சு விட்டு, வீரராகிய இராமர், இலட்சுமணரைப்பார்த்து, அக்காலத்தில் தமக்கு நன்மையையுண்டாக்குஞ் சிலசொற்களைச் சொல்லலானுர்:— " லக்ஷ்மண ! விசுவகருமாவினுல் மலையின்சிகரத்திலே தனது மனத்தாலேயே நிருமிக்கப்பட்டதுபோலத் தோன்றுகின்ற இந்த இலங்கை, ஆகாயத்தையே முட்டக் கிளம்பியிருக்கின்றதுபோல விளங்குகின்றது; அதோ பார்; பல மாளிகைகளால் இவ்விலங்கை நிரம்பிவிளங்குவதைப் பார்த்தால், சூரியனுடைய ஸ்தானமான ஆகாயமேபலவெண்மேகங்களால்மூடப்பட்டிருப்பதுபோலப் புலப்படுகின்றது. சைத்திரரதம் போன்றனவாய், பல பறவைகள் சப்திக்க, மல்லிகைமுதலிய பூங்கொடிகள் நிரம்பி, புஷ்பங்கள் பூத்து விளங்குந் தோட்டங்கள் பல, இந்நகரத்தை அழகுடைய தாக்குகின்றன. இதோ பார்; கொழுத்துத்திரியும் பறவைகளையும் புஷ்பங்களிற் பதுங்கிக்கிடக்கும் வண்டுகளையும் குயில்கள் கூட்டங்கூட்டமாய் உட்கார்ந்திருக்கும் தளிர்க்கூட்டங்களையு முடைய தோட்டங்களை, இளங்காற்று அசைத்துக்கொண்டேயிருக்கின்றது!" என்று இராமர் இலட்சுமணரைப் பார்த்துச்சொன்னர். அதன் பிறகு, இராமர் நூல்களிற் கூறியவாறு தமது படையை அணிவகுப்பதைப்பற்றிப் பின்வருமாறு கட்டளையிடலானர்: " வீரனும் எவராலும் வெல்லமுடியாதவனுமான அங்கதன், நீலனுடன் கூட, தனது வானரசேனையைத் தன்னுடன்வைத்துக்கொண்டு, இவ்வணியினது மார்பின்தானத்திலிருக்கட்டும். வானரர்களுக்குள் உத்தமனான ரிஷபன், தனது வானரசேனையைத் தன்னைச்

இராமர் இலங்கையை இலட்சுமணருக்குக்காட்டி, பிறகு, சேனையின் அணிவகுப்பைப் பற்றிக்கூறல்.

சூழவைத்துக்கொண்டு, இவ்வணியின் வலப்பக்கத்திலிருக்கட்டும். மதயானைபோல அணுக முடியாதவனும் மிக்க பலவானுமான கந்தமாதனன், இவ்வானரசேனையின் இடப்பக்கத்திலிருக்கட்டும். நான், வெகு ஜாக்கிரதையாக, இலட்சுமணனுடன்கூட, இச்சேனையின் தலைப்பக்கத்திலிருக்கின்றேன். ஜாம்பவான், ஸுஷேணன், வேகதர்சியென்ற வானரவீரன் ஆகிய மகாத்துமாக்களான இம்மூன்று ருக்ஷவீரர்களும், இச்சேனையின் வயிற்றுப் பாகத்தைப் பாதுகாத்துவரட்டும். மேற்குத்திசையைக் காத்தியுள்ள வருணபகவான் இரட்சிப்பது போல, வானர ராஜனுகிய சுக்கிரீவன் இவ்வானரசேனையின் பின்பாகத்தை இரட்சிக்கட்டும்" என்று கட்டளையிட்டார். இவ்வாறு கருடவியூஹமாக வகுக்கப்பட்டுப் பெருவீரர்களாற்பாதுகாக்கப்பட்ட அப்பெருவானரப்படை, ஆகாயமானது மேகக்கூட்டங்களால் நிரம்பி விளங்குவதுபோல, விளங்கலாயிற்று. வானரர்கள் மலைகளின் சிகரங்களைப் பிடுங்கி யெடுத்துக்கொண்டும், பெருமரங்களைப் பேர்த்துத் தூக்கிக்கொண்டும், போரில், இலங்கையை முற்றிலும் அழித்துவிட விரும்பியவர்களாய் வந்து நின்றார்கள். அன்றியும், மலையின் சிகரங்களை வீசி யெறிந்தாவது கைகளாற் குத்தியாவது இவ்விலங்கையைப் பொடியாக்கி விடவேணுமென்று, அவ்வானரர்களில் ஒவ்வொருவீரனும் தனதுமனத்திற்குள்ளேயே கருதினன்.

அதன்பிறகு, வெகுவல்லமை தங்கிய இராமர், சுக்கிரீவனை நோக்கி "நமது வானரப்படையை நன்முக அணிவகுத்தாயிற்று; இனி இச்சுகனை விட்டிடலாம்" என்றார். மகாபலம் பொருந்திய அவ்வானர வேந்தன், இராமர் அவ்வாறு சொல்லக் கேட்டதும், அப்பிரானது கட்டளைப்படியே, ஓற்றனாய் வந்த அச்சுகனை விடுதலை செய்தான். வானரர்களிடம் அதிகஅவஸ்தைப்பட்

சுக்கிரீவன் விடுதலைசெய்ய, சுகன் இராவணனை யடைந்து அவனுக்குச் செய்தி கூறுதல்.

டிக் கடைசியாக இராமருடையகட்டளையால்விடுபட்ட சுகன், பயத்தால் மிகவும் நடுங்கியபடியே அரக்கர்தலைவனிடம் சென்றான். இராவணன் அவனைக் கண்டதும் பரிகாசமாகச் சிரித்துக்கொண்டே 'உனது சிறகுகள் ஏன் கட்டுப்பட்டிருக்கின்றன ? மேலும், உன் சிறகுகள் பிச்சப்பட்டனவாகவும் காணப்படுகின்றனவே? மனம் ஒருநிலையில் நில்லாத அக்குரங்குகளினிடம் நீ அகப்படாமலிருந்தாயா ?' என்று வினவினன். அரசன், தன்னை அவ்வாறு கேட்டதும், சுகன் அச்சத்தினால் நடுநடுங்கி, அந்த அரக்கத்தலைவனை நோக்கி மறுமொழி சொல்லலுற்றான்:— "வேந்தே! தங்கள்சொற்படி, நான், இக்கடலின் வடகரை சென்று, தாங்கள் சுக்கிரீவனிடஞ் சொல்லும்படி கட்டளையிட்டதை, எனது இனிய சொற்களால், வருந்தாதபடி சொன்னேன். அவ்வானரர்கள், என்னைக் கண்டமாத்திரத்திற் சினந்து ஆகாயத்திற் கிளம்பி என்னைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு,எனது இறகுகளைப்பறித்து என்னைத் தங்கள் கைக்குத்துக்களாற் கொல்லவும் தலைப்பட்டார்கள். வானரர்கள், இயல்பாகவே வெகுகோபமுள்ளவர்களாகவும் வெகு கொடியவர்களாகவும் காணப்படுகின்றார்கள் : போய் அவ்வானரர்களுடன் பேசுவதென்பதே முடியாத காரியமாயிருக்கிறது. இப்படியிருக்க, அரக்கர் தலைவனே ! அவர்களிடம் மறுமொழிபெறுவது எப்படி முடியும் ? விராதன், கபந்தன், கரன் என்ற இவ்வரக்கர்களைக் கொன்ற அந்த இராமரோ, சுக்கிரீவனுடன் சீதையிருக்குமிடத்தில் வந்திருக்கின்றார். அவ்விராமர், சமுத்திரத்தின்மேல் அணைகட்டிக் கடலைத்தாண்டி, அரக்கர்களை அலட்சியமாகக் கருதித் தமது கையில் விற்பிடித்துத் தைரியமாக வந்து இதோ நிற்கின்றார். ருக்ஷமுக்கியர்களாலும் வானரசிரேஷ்டர்களாலும் நிரம்பிய பெருஞ்சேனைகள்,ஆயிரக்கணக்காக,மலைகள்போலவும் மேகங்கள்போலவும் விளங்கி, இப்பூமியை மூடிக்கொண்டு நிற்கின்றன,

தேவர்கட்கும் அசுரர்கட்கும் சேர்க்கை எவ்வாறு ஒரு பொழுதும் கிடையாதோ, அவ்வாறே அரக்கர்களின் சேனைக்கும் வாநரர்களின் சேனைக்கும், ஒருபொழுதும் சம்பந்தம் கிடையாது. அவ்வாநரர்கள் நமது நகரத்தின் மதில்களை வந்து சேருமுன்னமே, தாங்கள் செய்யவேண்டியது, இரண்டில் ஒன்றுதான்; ஒன்று - சீதாதேவியைச் சடிதியில் அவ்விராமருக்குக் கொடுத்துவிடவேண்டும்: மற்றொன்று - போரையாவது கொடுக்கவேண்டும்" என்றான்.

சுகன் சொன்ன வார்த்தையைக் கேட்டதும், இராவணன், கோபத்தாற் கண்கள் சிவக்க், தனது கண்களாலே சுகனை எரித்துவிடுகின்றவன்போலப் பார்த்து, பின்வருமாறு சொல்லலானான்:— "தேவர்களும் கந்தர்வர்களும் அசுரர்களும் என்முன்நின்று போர்புரிந்தபோதிலும், இவ்வுலகத்திலுள்ள எல்லாரிடத்திலுமிருந்தும் எனக்குப் பயம் தோன்றினபோதிலும், நான், சீதையை ஒருபொழுதும் திருப்பிக் கொடுக்கமாட்டேன். வசந்தகாலத்திற் புஷ்பித்திருக்கும் மரத்தை நாடிக் கொழுத்தவண்டுகள் ஓடுவதுபோல, என்னுடையபாணங்கள் இராமனை நாடி எப்பொழுது செல்லுமோ? கொள்ளிக்கட்டையால் யானையை அச்சமுறுத்தித் துரத்துவதுபோல, எனது அம்பருத்தூணியிலிருக்கின்ற எரியுந்தன்மையுள்ள பாணங்களைக் கூட்டமாக எனது வில்லில் தொடுத்து விட்டு எப்பொழுது இராமனைக்கொல்லுத்துவேனோ? எனது பெருஞ்சேனை என்னைச் சூழ்ந்துவரக் கிளம்பி, உதயமாகுஞ் சூரியன் மற்றைக்கிரகங்களின் ஒளியை வாங்கிவிடுவதுபோல, நான், இராமனுடைய அந்தப்பலத்தை வாங்கிவிடுவேன். எனது வேகமோ, சமுத்திரத்தின் வேகம்போன்றது; என்போக்கோ, வாயுபகவானுடைய போக்குக்கு ஒப்பான்து. இவைகள் இராமனுக்குத் தெரியமாட்டா: ஆகையால், என்னுடன் எளிதிற் போர்புரியலா மென்று அவன் எண்ணங்கொள்

இராவணனது மறுமொழி.

கின்றன். விஷத்தைக் கொண்டுள்ள சர்ப்பங்கள் போன்ற எனது அம்பருத்தூணியி லிருக்கும் பாணங்களை இராமன் பார்த்ததில்லை; ஆகையால்தான், என்னுடன் போர்செய்ய எண்ணங்கொள்கின்றன். முனைமுகத்திலே எனக்கு இயற்கையாக அமைந்துள்ள வீரியத்தை, அந்த இராமன் முன்னமே அறிந்ததில்லை. நாணெலியாகிற நெருங்கிய ஓசையையும், பீடிக்கப்பட்டுப் பயமடைந்தவர்களின் கதறுதலாகிய பேரொலியையும், இருப்புச்சலாகையிலிருந்து தோன்றும் ஒலியாகிய நாதத்தையும் பெற்றிருக்கின்றதும், சரங்களாகிற நரம்பால் மீட்டப்பட்டதுமான எனதுவில்லாகிய கொடியவீணையை, போர்க்களத்தில், பகைவர்களுடைய சேனையாகிய அரங்கிற் புகுந்து வாசிப்பேன். ஆயிரங்கண்கள் படைத்த இந்திரனே வந்தபோதிலும், வருணபகவானே நேரில்நின்றபோதிலும், யமதேவனே எதிர்த்துவந்தபோதிலும், குபேரனே எதிர்த்தபோதிலும், பெரும்போரில் என்னைப் பாணங்களால் ஒருபொழுதும் வெல்லமுடியாது" என்றான்.

இருபத்தைந்தாஞ் சருக்கம்:
சுகஸாரணர்களின் தூது.

வானரசேனையுடன் தசரதகுமாரரான ஸ்ரீராமர் சமுத்திரத்தைக் கடந்ததும், சீமானான இராவணன், தனது மந்திரிகளான சுகஸாரணர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்:—"ஒருவராலும் தாண்டமுடியாத பெருங்கடலை, வானரசேனை, தாண்டிவிட்டது. முந்தி ஒருவராலுஞ் செய்யப்படாத காரியமாகிய சமுத்திரத்தின்மீது அணைகட்டுதலை இராமன் செய்துமுடித்தான். கடலின்மேற் சேதுகட்டப்பட்டதென்பதை, நான், ஒருபொழுதும் நம்பவேமாட்டேன். அது எப்

இராவணன் சுகஸாரணர்களை ஒற்றராக அனுப்புதல்.

படியிருந்தபோதிலும், அவ்வாநரசேனை இவ்வளவென் பதை நான் இப்போது அவசியமாக அறிந்துகொள்ள வேண்டும். ஆகையால், நீங்கள், ஒருவருக்குந் தெரியாமல் வாநரசைனியத்திற் புகுந்து, அச்சேனையினது அளவை யும், பலத்தையும், அதில் எவர்கள் முக்கியமான வாநரர்க ளென்பதையும், இராமனுடைய மந்திரிகள் யாவரென் பதையும், சுக்கிரீவனுக்கு வேண்டியவர்கள் இன்னரென் பதையும், எவர்கள் சைனியத்தில் முற்பட்டு நிற்கின்றார்க ளென்பதையும், எவ்வாநரர்கள் சூரரென்பதையும், நீர் நிரம்பிய சாகரத்தின்மேல் எவ்வண்ணம் அணைகட்டப் பட்டிருக்கிற தென்பதையும், உறுதியானமனத்தை யுடைய அவ்வாநரர்கள் வாழுமிடம் எவ்வாறுள்ள தென் பதையும், இராமனுடைய வியவசாயம் பலம் ஆயுதங்கள் இவைகளையும், இலட்சுமணனுடைய பலத்தையும் உள்ள படி அறிந்துவரவேண்டும். வெகுபலமமைந்த அவ்வாநர சேனைக்கு அதிபதி யாரென்பதையும் உள்ளபடி அறிந்து கொண்டு, சடிதியில் திரும்பிவந்து சேரவேண்டும்" என் றான்.

சுகஸாரணர் வாநரசேனையைக் காணல்.

வீரரான சுக ஸாரண ரென்ற அரக்கர், இவ்வாறு கட்டளையிடப்பட்டதும், வாநரவுருவமெடுத்துக்கொண்டு, அந்த வாநரசேனைக்குள் நுழைந்தார்கள். ஆனால், மனத்தால் ஆலோசித்துப்பார்க்க முடியாததும், பார்ப்பவர்களை மயிர்ச்சிலிர்ப் பெறியச் செய்வதுமான அவ்வாநரசேனை யை இவ்வளவென்று தொகையிடுவதற்கு, அந்தச் சுக ஸாரணரால் அப்போது முடியவில்லை; ஏனெனில், மலை யின்சிகரங்களிலும், பிளவுபட்ட பருவதஸ்தலங்களிலும், குகைகளிலும், சமுத்திரக்கரைகளிலும், காடுகளிலும், தோ ட்டங்களிலும், அவ்வாநரசேனைகளிற் சில தாண்டிக்கொ ண்டும், சில தாண்டிமுடிந்தும், சில தாண்டவிரும்பியும், சில உட்கார்ந்துகொண்டும், சில உட்கார முயன்றும்

இவ்வாறு பலவிதமாகத்தொழில்செய்துகொண்டு, கலக்க மற்ற பெருங்கடல்போன்று மிக்கபலத்துடனே கடோர மாகப் பேரொலி செய்வதை,அவ்வரக்கர்கள் கண்டார்கள்.

சுகஸாரணர்கள் வேற்றுருவத்துடன்வந்திருப்பதை, மகாபலவானுகிய விபீஷணர் கண்டு, அவர்களைப் பற்றிக்கொண்டுவந்து, "பகைவர்கள்பட்டணங்களை வெல்லும் மன்னவரே! இவர்கள் அவ்வரக்க வேந்தருடைய மந்திரிகளாகிய சுகஸாரணர் : இலங்கையிலிருந்து ஒற்றர்களாக வந்திருக்கின்றார்கள்" என்று இராமரிடம் தெரிவித்தார். அத்தூதர்கள், இராமரைக்கண்டதும், வருந்திய தங்களுயிரின்மேல் ஆசையற்றவர்களாய், அப்போது அஞ்சலிபண்ணிக்கொண்டு, வெகுபயத்துடன் இவ்வாறு தெரிவித்துக்கொள்ளலானார்கள் :—"அருளுடையவரே! ரகுகுலதிதிற் பிறந்தவரே! நாங்களிருவரும், இராவணரால னுப்பப்பட்டு, தங்களுடைய இச்சேனையை முற்றிலும் பார்த்தறியும்பொருட்டு இவ்விடம் வந்தோம்" என்றார்கள். தசரத ராஜனது புத்திரரும் எல்லாப்பிராணிகட்கும் நன்மையைச் செய்வதிற் கருத்துள்ளவருமான இராமர், அவர்கள் சொன்ன அச்சொல்லைக் கேட்டு, புன்னகையுடன் பின்வருமாறு மொழியலானார் :— "எங்களுடைய சேனைமுழுவதையும் பார்த்துவிட்டு,எங்களையும் நன்முகப் பரிசோதித்தறிந்து, உங்களுக்கு இடப்பட்ட கட்டளையைச் செய்தாய்விட்டதென்றால், நீங்கள் இஷ்டப்படி திரும்பிச்செல்லலாம். நீங்கள் இன்னும் பார்க்காதது ஏதாவது இருந்தால், மறுபடியும் சென்று பார்க்கலாம். வேண்டுமானால், விபீஷணர் முழுவதையும் மறுபடியும் காட்டுவார். இப்போது பகைவர்கள் கையில் அகப்பட்டுக்கொண்டதனால், உயிரைப் பற்றிக் கொஞ்சமேனும் அஞ்சவே வேண்டாம். ஆயுதமில்லாதவர்களையும், பிடிபட்ட தூதர்களையும் ஒரு

விபீஷணர் சுகஸாரணரைப் பிடித்துவர,அவர்களிடத்து இராமர் செயதி சொல்லி யனுப்புதல்.

பொழுதும் வதைக்கலாகாது. தமதுசத்துருக்களைச் சாமம் முதலான உபாயங்களால் தம்வசப்படுத்துகின்ற ஒற்றர்களாகிய இவ்வரக்கரிருவரும் கெஞ்சிக் கேட்பதனால், விபீஷணரே! இவர்களை விட்டிடுங்கள். வேவுகாரர்களே! நீங்கள் இலங்கை சேர்ந்தவுடன், குபேரனது தம்பியாகிய அரக்கர்தலைவனிடம், நான் சொன்னதாக, நான் சொல்லுகிறபடி சொல்லவேண்டும். எப்படிப்பட்ட வல்லமையின் மேல் உறுதிவைத்து எனது சீதாதேவியைக் கவர்ந்தாயோ, அதனை, உன்னுடைய இஷ்டப்படி, உனது சேனையுடனும் பந்துக்களுடனுங் கூடியவனாகி என்முன் காட்டுக. நாளைக்காலையில், பிராகாரங்களுடனும் தோரணங்களுடனும் இலங்கைமாநகரையும், அரக்கர்கள்சேனையையும், நான், என்பாணங்களால் நாசம்பண்ணுவதை நீ பார். இந்திரன் தானவர்கள்மேல் தனது வச்சிராயுதத்தைப்பிரயோகிப்பதுபோல, நான் நாளைக்காலையில் எனது பயங்கரமான கோபகாரியத்தைக் காட்டப்போகின்றேன். உன்து பலத்தைத் தாங்குவாயாக" என்றார்.

சுகஸாரணர் இராவணனுக்குக் கூறிய செய்தி.

இவ்வண்ணம் இராமராற் கட்டளையிடப்பட்ட அரக்கராகிய இந்தச் சுக ஸாரணர், வெகுதருமாத்துமர்வாக விளங்கும் இராமரை "தங்களுக்கு ஜயமுண்டாகட்டும்" என்று வாழ்த்துக்கூறி, இலங்கைக்குத் திரும்பிச்சென்று, அரக்கர்வேந்தனிடம் பின்வருமாறு சொல்லலுற்றார்:— "இராட்சசர் தலைவரே! வதைத்தற்குரியவரென்று விபீஷணராற் பற்றிக்கொண்டு விடப்பட்ட எங்களை, ஒப்பில்லாத ஒளியோடு விளங்குகின்ற தருமாத்துமாவாகிய இராமர், விடுதலைசெய்தார். உலகபாலகர்கள்போல வெகுசூரர்களாயும், ஆயுதங்களிற் பயின்றவர்களாயும், உறுதியான பராக்கிரமமமைந்தவர்களாயுமுள்ள இராமர் இலட்சுமணர் விபீஷணர் இந்திரனுக்கு ஒப்பான வல்லமை பொருந்திய சுக்கிரீவன் என்ற இந்த

நான்குஉத்தமபுருஷர்களும், அங்கு ஒன்றுகூடிவிட்டார் கள். இவர்கள், இவ்விலங்காபுரியை, மதில்களுடனும் கோபுரங்களுடனும் வேரோடு பிடுங்கியெறியவல்லவர்கள். மற்றை வானரர்கள் இருக்கட்டும். இராமருடைய உருவத் தையும் ஆயுதங்களையும் பார்த்தால், அவரொருவரே, இவ்விலங்காபுரியை அடியோடு நாசம்பண்ணுவா ரென்று தோன்றுகின்றது; மற்றை மூவரும் இருக்கட்டும். இராம லட்சுமணரும் சுக்கிரீவனும் பாதுகாத்துவருகின்ற அச் சைனியத்தை, தேவாசுரர்கள் இந்திரனே முன்னிட்டுக் கொண்டுவந்தாலும், ஒருபொழுதும் வெல்லமுடியா தென்று தோன்றுகின்றது. பேருருவத்தையுடைய அவ் வானரர்களின் சேனையோ, வெகு உத்ஸாஹத்துடன் எப் பொழுது போருண்டாகுமென்று ஆவலுடன் எதிர்பார்த் துக்கொண்டு நிற்கின்றது: ஆகையால், அவர்களுடன் விரோதமென்பது வேண்டாம்: சினத்தைப் போக்கிவிடுங் கள்: இராமரிடம் சீதாதேவியைக் கொடுத்துவிடுங்கள்" என்றார்கள்.

இருபத்தாறுஞ் சருக்கம்:

ஸாரணன் வானரசேனையை இராவணனுக்குக் காட்டுதல்.

அவ்வாறு வெகுநன்மையாகவும் உண்மையாகவும் பயமில்லாமலும் ஸாரணன் சொல்ல, ராக்ஷஸ ராஜனான இராவணன் கேட்டு, மறுமொழி சொல்ல லானான்:— "தேவர் கந்தர்வர் தானவர் முதலியோர் என்னுடன் போர் புரிந்த போதிலும், எல்லாவுலகத்தாலும் எனக்கு அச்சம் நேர்ந்த போதிலும், சீதையை நான் திருப்பிக்

இராவணன் ஸாரணனுக்குக் கூறிய உத்தரம்.

கொடுக்கமாட்டேன். சாந்தனே! நீ வாநரர்களால் வெல்லப்பட்டு மிகவும் அஞ்சினாய்; அதனால், இப்போதே சீதையைத் திருப்பிக்கொடுப்பதே நலமென்று நினைக்கின்றாய். என்னை எந்தப்பகைவன்தான் போரில் வெல்ல வல்லவன்?" என்றான்.

இவ்வண்ணம் அரக்கர்களின் மன்னவனும் சீமானுமாகிய இராவணன், அவனைக் கடுமையாகப் பேசிவிட்டு, பிறகு, வாநரசேனையைக் காணவிரும்பி, பனிக்கட்டி போல வெண்ணிறமாய்ப் பலபனைமரங்களினுயர்ச்சியையுடைய மாளிகையினுபரிகையில் ஏறினான். வெகுகோபங்கொண்டவனாய், இராவணன், அவ்விரு தூதர்களுடனும் சமுத்திரம் மலைகள் காடுகள் என்பவைகளைப் பார்க்கின்றவனாகி, வாநரவீரர்களால் நிரம்பியிருந்த பூமிபாகத்தையும் பார்த்தான். கரையில்லாமலும் அளவிட முடியாமலுமிருந்த பெரிய அந்த வாநரசேனையைக் கண்டு, மன்னவனாகிய இராவணன் ஸாரணனைக் கேட்கலானான்:—"இவ்வாநர முக்கியர்களுக்குள், எவர்கள் சூரர்கள்? எவர்கள் அதிக பலமமைந்தவர்கள்? எவர்கள் மஹோத்ஸாஹமுள்ளவர்களாய் நாற்புறத்திலும் முற்பட்டு நிற்கின்றவர்கள்? எவர்கள்சொல்லைச் சுக்கிரீவன் கேட்கின்றான்? எவர்கள் சேனைத்தலைவர்களுக்கும் தலைவர்? எவர்கள் சேனாபதிகள்? ஸாரணா! எல்லாச் சங்கதிகளையும் உள்ளபடி என்னிடம் சொல்லுக" என்றான்.

இராவணன் உபரிகைமேலேறி வாநரசேனையைக் காணுதல்.

இராவணன் வினா.

இவ்விதமாக அரக்கர்தலைவன் தன்னைக் கேட்டலும், வாநரர்களுள் முக்கியமானவர்களை நன்றாக அறிந்துவந்த அந்த ஸாரணன், வாநரர்கட்குள் பிரதானமானவர்களைப் பற்றிச் சொல்லலானான்:— "இதோ இலங்கைக்கு எதிர்முகமாக எந்தவாநரன் கர்ச்சித்துக்கொண்டுநிற்கின்றானோ, எவனை

ஸாரணன் மறுமொழி.

நூறுயிரம்வானரசேனைத்தலைவர்கள் சூழ்ந்து நிற்கின்றார்களோ, எவன் செய்யும் பேரொலியால் இலங்கையே தனது மதில்கள் கோபுரங்கள் காடுகள் தோட்டங்கள் மலைகள் இவைகளுடன் நடுநடுங்குகின்றதோ, எவன் எல்லாவானரர்களுக்கும் மன்னவனுய் மகாத்துமாவாய்விளங்குஞ் சுக்கீவனது சேனைக்கு முன்பாக நிற்கின்றானே, அவன்தான், நீலனென்ற முக்கியசேனைபதி. எவன் தனது இருகைகளையும் தூக்கிக்கொண்டும், இலங்கையைநோக்கித் தனது கால்களால் நடந்துகொண்டும், அடிக்கடி கோபத்தாற் கொட்டாவிவிட்டுக்கொண்டும், மலைச்சிகரம்போன்ற உருவத்துடனும் தாமரைத்தாதுபோன்ற நிறத்துடனும் வருகின்றானே, எவன் மிக்கசினங்கொண்டு அடிக்கடி தனது வாலைப் பூமியில் அடிக்கின்றானே, எவனது வாலின் சத்தத்தாற் பத்துத்திசைகளும் எதிரொலி செய்கின்றனவோ, அவன்தான் வானரராஜனை சுக்கிரீவனுல் இளவரசனுக அபிஷேகஞ்செய்யப்பட்ட அங்கதன்; இவன் தங்களைப் போர்க்கு அழைக்கின்றன். இவன், வாலியையொத்த அவனதுகுமாரன்; சுக்கிரீவனுக்கு எப்போதும் வேண்டியவன். இந்திரன்பொருட்டு வருணன் சகாயத்துக்கு வருவதுபோல, இராமருக்குத் தன்பராக்கிரமத்தால் உதவிசெய்ய வந்திருக்கின்றன். வெகுவேகத்துடன்கூடியவனும் இராமருடைய நன்மையிற் கருத்துள்ளவனுமான அநுமான் சீதாதேவியைக்கண்டதெல்லாம் இவனுடைய புத்தியினுல்தான். வெல்லுதற்கரிய இவ்வங்கதன், அநேகவானரசைனியங்களைத் தனது சேனையுடன் அழைத்துக்கொண்டு, உங்களுக்குறித்தே வந்திருக்கின்றன். அங்கதனுக்குப் பின்பாகப் பெருவானரசேனையாற் சூழப்பட்டிருக்கின்ற வீரன்தான், சமுத்திரத்தின்மேற் சேதுவைக்கட்டின நளன்: போர்க்

மீலன்.

அங்கதன்.

நளன்.

காக எதிர்நோக்கி நிற்கின்றான். எவர்கள் எழும்பிச் சிங்க நாதத்தையும் கொக்கரிப்பையும் செய்கின்றார்களோ, எவ் வானரர்கள் ஆசனத்தினின்று எழுந்து சோம்பல் விடுகின் றார்களோ, அவர்கள், போரில் ஒருபொழுதும் பிறரால் வெல்லமுடியாத பயங்கரரான பராக்கிரமமமைந்த கொடிய வீரர்கள். நூற்றெண்ணாயிரக்கணக்காகவும், பத்துக்கோ டிக்கணக்காகவுமுள்ள சந்தனபருவதத்தில் வசிப்பவர்க ளான இவ்வீரர்கள், இந்த நளனென்பவனை அநுசரித்துச் செல்கின்றார்கள். இவனொருவனுகவே தனதுசேனையைக் கொண்டு இவ்விலங்கையை நாசஞ்செய்யக் கருதுகின்றான். வெள்ளியின்நிறம்போன்ற நிறத்துடனே விளங்குகின்ற இவ்வானரன், சுவேதனென்று பெயர்பெற்

சுவேதன். றவன்; இவன், போரில் மிக்க விருப்பமுள் ளவன்; வெகு கொடிய பராக்கிரமசாலி; இவன், புத்திகூர்மையுள்ளவன்; வீரன்: மூவுலகங்களிலும் பிரசித்திபெற்றவன். இவன் இப்பொழுது வானரசேனை யின்மத்தியிலே வழிசெய்துகொண்டு சுக்கிரீவனிடம்வந்து பேசிவிட்டு, தனது சைனியங்கள்களிக்க வேகமாகத்திரும் புகின்றான். இதற்குமுன் கோமதியாற்றங்கரையில் அழ காகவிளங்கும் பல சிறுமலைகளையுடைய

குமுதன். சங்கோசனமென்னும்மலையிற்சஞ்சரித்துக் கொண்டு, அம்மலைநாட்டுக்கரசனுக விருப் பவன் எவனே, அவனே இந்தக் குமுதன்: இவன் நூரு யிரவாயிரக்கணக்கான வானரசேனையைத் தான்இருக்கு மிடத்தில் வரவழைப்பவன். மிக்க கொடுந்தொழிலையுடைய இவனது வால்களின் நீண்டமயிர்கள், கறுப்பு வெண்மை சிவப்பு மஞ்சளென்ற நிறமுள்ளனவாய், பல மார்பின ளவுநீளம் கொண்டனவாய், நான்குபக்கத்திலும் சிதறி யுள்ளன. இவன் எளிமையற்றவனையும் கோபங்கொண்ட வனையும் கொடியவனையும் விளங்கிக்கொண்டு, தங்களுடன் போர்செய்ய ஆசைகொண்டவனுக நிற்கின்றான். இவனும்

தனதுசேனையாலேயே இலங்கையை நாசம்பண்ணக்கருது கின்ருன். அதோ சிங்கம்போல விளங்கிக்கொண்டு, கபில நிறத்துடன் நீண்டகண்களை யுடையவ

ரம்பன். னுய் நின்றுகொண்டு இலங்கையைக் கொ ளுத்திவிட ஆசைகொண்டவன் போலத் தனது கண்களாற் பார்க்கின்ருனே, அவன்தான், ரம்ப னென்ற பெயருள்ள சேனைத்தலைவன்; அரசரே! அவன் விந்தியமலை கிருஷ்ணமலை ஸஹ்யமலை சுதரிசனமலைஎன்ற இம்மலைகளில் பலகாலும்வசிப்பான்; மூன்றுகோடி வானர வீரர்கள், வெகுகொடியபராக்கிரமமுள்ளவர்களாய், இலங் கையைத் தமதுவலிமையால் நாசம்பண்ணுமாறு இவனைச் சூழ்ந்துதொடர்ந்து நிற்கின்ருர்கள். எவன் தனதுகாதுகளை அகற்றிக்கொண்டும் அடிக்கடிகொட்டாவி

சரபன். விட்டுக்கொண்டும் இருக்கின்ருனே,அவன் யமனுக்கும் ஒருபொழுதும் அஞ்சாதவன்; போரினின்று பின்வாங்காதவன்; அவனுடம்போ கோபத்தாற் படபடத்துக்கொண்டிருக்கின்றது; அவன் அடிக்கடி குறுக்காகப் பார்க்கின்ருன்: தன்து வாலைப் பார்த்துக்கொண்டே சிங்கநாதம் பண்ணுகின்ருன்: அவன் அதிக பலம் பொருந்தியவன்: அச்சமற்றவன்; அவன் எப்பொழுதும் அழகிய ஸால்வேயமென்ற மலையி லிருப்ப வன்; இவன்தான் சரபனென்ற வானரசேனுதிபதி. அர சரே! பலவானுன இவனுக்கு விளையாட்டாகப் போர்த் தொழிலைச்செய்கின்ற நாற்பதுலட்சம்வீரர்களடங்கிய வா நரசேனை இருக்கின்றது. எவன் ஆகாயத்தைப் பெருமேகம் போல மறைத்துக்கொண்டு, வானரர்கள்மத்தியிலே தேவர் கள்நடுவில் தேவேந்திரன் விளங்குவதுபோல விளங்கு கின்ருனே, போர்புரிய ஆவலுட னிருப்

பஸன். பவரான எவனைச்சேர்ந்தவானரர்களின் கோஷம் பேரிகையினுலிபோலப்பெருஞ் சத்தத்தைக் கேட்பிக்கின்றதோ, அத்தன்மையையுடைய

இவன் யுத்தத்தில் எப்பொழுதும் பிறரால் அணுகமுடியாதவனும், மிகச்சிறந்த பாரியாத்திரமென்ற பருவதத்தில் வசிக்கின்றவனுமான பகஸனென்ற சேனாபதி. சேனைத் தலைவனான இவனுடன் ஐம்பதுலட்சம் வாநரசேனாபதிகள் தங்கள் தங்கள்சேனையுடன் சூழ்ந்துநிற்கின்றார்கள். சமுத்திரக்கரையில் இரண்டாவது சமுத்திரம் போலிருக்கிறதும் மகிழ்ச்சியாற் கூத்தாடுவதுமான பயங்கரமான சேனையை விளங்கச் செய்துகொண்டு தர்த்தரமலைக் கொப்பாய் விளங்குவோனேவிந்தனென்ற வாநரசேனாபதி; இவன் நதிகளுக்குள் உத்தமமான பர்ணசமென்றநதியின் ஜலத்தை அருந்திக்கொண்டுசஞ்சரிப்பவன்: இவன்சேனை அறுபதுலட்சம்வாநரர். குரோதனென்ற வாநரசேனாபதி அதோ தங்களைப் போருக்குக்கூப்பிடுகின்றான்; அவனது சேனையிலடங்கிய வாநரவீரர்களோ, வெகுவல்லமை பொருந்தியவர்களும் பலமுள்ளவர்களும் அணியணியாகப் பிரிந்தவர்களுமாக விளங்குகின்றார்கள். அதோபாருங்கள்! காவிக்கல்போன்ற தேககாந்தியுடன் பலத்தினற்செருக்கடைந்திருக்கும் வாநரர்களையெல்லாம் அவமதித்துக்கொண்டு, ஒளியுள்ள கவயனென்ற புகழ்பெற்ற வாநரசேனாபதி தங்களைநோக்கிக் கோபத்தோடு வருகின்றான். இவனை எழுபதுலட்சம்வாநரர்கள் சூழ்ந்து நிற்கின்றார்கள். இவன் தன்சேனையைக்கொண்டு, இலங்கையைத் தானொருவனுகவே அழிக்கக் கருதுகின்றான்.

விந்தன்.

குரோதன்.

கவயன்.

இந்தச் சேனைத்தலைவர்களும், சேனைத்தலைவர்களின் தலைவர்களும் சண்டையில் அணுகமுடியாதவர்கள்; கொடிய வல்லமை தங்கியவர்கள்; வெகுபலமுள்ளவர்கள்; வேண்டுமுருவங்கொள்ளும் வல்லமைபெற்றவர்கள். இவர்கள்படை தனித்தனியே அணியணியாக நிற்கின்றன".

இருபத்தேழாஞ் சருக்கம் :

மிகவும் பிரதானரான வானரத்தலைவர்களை ஸ்ரீராமன் இராவணனுக்குக் காட்டுதல்.

" அரக்கர்களது மன்னவரே ! பாருங்கள் ; நான் அவ் வானரசேனாபதிகளுக்குள் எவர்கள் இராமருக்காக உயிரை யும்விடுமாறு வந்திருக்கின்றார்களோ, அவர்களைச் சொல் லுகின்றேன். கொடுந்தொழிலையுடைய எவனதுவாவிலி ருந்து வெளுப்பும், கறுப்பும், சிவப்பும், மஞ்சளுமாக அழகிய அநேகமார்பினளவு நீண்ட மயிர்கள், சேர்ந்தும், சிதறியும், சூரி யனிடமிருந்து கிரணங்கள் பிரகாசிப்பதுபோலப் பூமியில் விழுந்துகொண்டும் விளங்குகின்றனவோ, அவன்தான், ஹரனென்ற வானரசேனாதிபதி. இவனைப் பின்தொடர்ந்து நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் இவனுடைய வேலைக்காரர்கள் பெருமரங்களைத்தூக்கிக்கொண்டு, இலங் கையின்மேல் ஏறுவதற்கு எண்ணங்கொண்டவர்களாய்த் தொடர்ந்துசெல்லுகின்றார்கள். அதோ பாருங்கள், நீலநிற முள்ள பெருமேகங்கள்போலவும் கறுத்த அஞ்சனம் போலவும் விளங்குகின்றார்களே, போரில் உண்மையான பராக்கிரமமுள்ளவர்களும் அளவிடமுடியாதவர்களும் சமுத்திரத் தின் அக்கரைபோலக் காட்டமுடியாதவர்களுமான இவர் கள், மலைப்பிரதேசங்களிலும் மேடுபள்ளமான நதிகளி லும்வசிப்பவர்களான கரடிகள்; மிகக்கொடியஇவர்கள், வே ந்தரே ! உங்களையெதிர்த்துப் போர்புரிய வந்திருக்கின்றார் கள். இவர்களடுவில் பார்ப்பதற்கு மிகவும்பயங்கரமான கண்களையுடையவனும் அஞ்சத்தக்கதோற்றத்துடன், மேக ங்கள்நடுவில் பர்ஜன்யதேவதைகோபிப்பதுபோற் கோபிக் கின்றானே, அவன்தான் ருக்ஷவானென்னும் பர்வதத்தில்

ஹரன்.

தூமிரன்.

வசித்துக்கொண்டு நர்மதையின் ஜலத்தைக் குடித்துவளர்ந்த தூமிரனென்ற ருக்ஷராஜன். இங்குக் காணப்படுபவனே, இந்தத்தூமிரனுடைய இளைய தம்பி; மலையையொத்தவனன இவனைப்பாருங்கள்; இவன் உருவத்தால் தனதுதமையனுக்கு ஒப்பானவன்; பராக்கிரமத்திலோ அவனுக்குமேலானவன்: ஜாம்பவானென்ற பெயருள்ளவன்; இவன் பெரிய சேனைத்தலைவர்களுக்கும் தலைவன்; பராக்கிரமமுள்ளவன்; நல்லாசிரியரிடத்திற் பழகியவன்; சண்டையிலோ அடங்காக்கோபமுள்ளவன்; தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த சண்டையில் இந்த ஜாம்பவான், இந்திரனுக்கு எவ்வளவோ உபகாரங்கள்செய்து, பலவரங்களைப் பெற்றிருக்கின்றன். இவனது சைனியத்தைச்சேர்ந்த பலர் மலைகளின் சிகரங்களில் ஏறிநின்று, மகாமேகங்கள்போல விசாலமாகவிருக்கும் பெரும்பாறைகளை உருட்டித்தள்ளுகின்றார்கள்: இவர்கள், யமனுக்கும் அஞ்சாதவர்கள். இவர்கள் மேனிமுழுமையும் உரோமம் அடர்ந்திருக்கின்றது: இவர்கள், அரக்கர்களுக்கும் பிசாசர்களுக்கும் ஒப்பானவர்கள். இவர்கள், அக்கினிக்கு ஒப்பான காந்தியுள்ளவர்களாய்ச் சஞ்சரிக்கின்றார்கள். எவன் அதோ கோபத்துடன் அங்குமிங்கும் தாண்டிக்கொண்டு எல்லா வானரர்களாலும் பார்க்கப்படுகின்றனே, பலசாலியாகிய அவன் இந்திரனையும் தனது வல்லமையாற் சந்தோஷப்படுத்திவைத்த தம்பனென்ற சேனாபதித்தலைவன். எவன் ஓரடியெடுத்துவைத்தால், யோஜனைக்கப்பாலிருக்கும்மலை தன் பக்கத்ததாகுமோ, எவன் நின்றால் ஒருயோசனை உயரமிருப்பானே, எவனைவிட இனிப்பெரிய தானவடிவம் விலங்குசாதியிலேயே கிடையாதோ, அவன் தான் ஸந்நாதனென்பவன்; வானரர்களுக்குப் பாட்டன் முறையானவன். இவன் முன்னொருகாலத்தில் தேவேந்

ஜாம்பவான்.

தம்பன்.

ஸந்நாதன்.

திரனுடன் அசுரர்கள் போர்புரிந்தபோது, தேவர்களுக்குத்துணையாய் நின்று அசுரர்களுடன் சண்டைசெய்து, தோல்வியடையாமல் நின்றான். இவன் வாநரசேனுதிபதிகளுக்குச் சேனுபதியாவன். இவன் தனது பராக்கிரமத்தைக் காட்ட யத்தனித்தால், அது, இந்திரனுடைய பராக்கிரமத்தை ஒத்திருக்கும். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர்நேர்ந்த அப்போது, இந்திரனுக்கு உதவிசெய்ய வேண்டுமென்றே அக்கினிபகவானுல், ஒரு கந்தர்வகன்னிகை வயிற்றில் இவன் உண்டாக்கப்பட்டான். எந்தமலைக்குக் குபேரன் அதிபதியோ, கிங்கரர்கள்நிரம்பிய எது மலைகளுக்குட் சிறந்ததோ, எங்கு நாவன்மரம் நிறைந்திருக்கின்றதோ, எது தங்கள்தமையனுராகிய குபேரனுக்கு விளையாட்டையும் சுகத்தையும் தருகின்றதோ, அவ்விடத்தில்தான், இதோகாணப்படுகின்றனே, இந்த

க்ரதநன். க்ரதநனென்ற சீமானும் பலவானும் வாநரர்கட்குட் சிறந்தவனுமான வாநரசேனுதிபதிலவன் வாழ்கின்றன்; இவன், தன்னைப்பற்றிப் போரிற் புகழ்ந்துகொள்ளாதவன். இவன், ஆயிரங்கோடி வாநரர்களாற் சூழப்பெற்று வந்திருக்கின்றன்; இவன் தானுகவே தனது சேனையைக் கொண்டு இவ்விலங்கையை நாசம்பண்ணக் கருதியிருக்கின்றன். எவன் முன்னெருகாலத்தில் யானைகளுக்கும் வாநரர்களுக்கும் * பகையுண்டாயிருந்ததைத் தன்மனத்திற்கொண்டு, யானைக்கூட்டங்களுக்குத் தலைமையானவற்றை நடுங்கச்

பிரமாதீ.

* முன்னெருகாலத்தில் சம்பஸாதனனென்ற பெயரையுடைய அசுரனெருவனிருந்தான்; அவன் ஒருகடற்கரையிலே யானையின்வடிவமெடுத்துக்கொண்டு முனிவர்களை வருத்தத்தொடங்கினன். அம்முனிவர்கள் கேஸரியென்ற வாநரவீரனைப் பிரார்த்தித்தார்கள். அம்முனிவர்களின் வேண்டுகோளின்படி அந்தக்கேஸரி அந்தஅசுரனைக்கொன்றன்; அதனல் மகிழ்ந்த முனிவர்கள் 'மகாபராக்கிரமசாலியாகிய அநுமான் உனக்குப்புதல்வனுகப் பிறப்பானுக' என்று வரமளித்தனர். அதுமுதல், வாநரங்கட்கும் யானைகட்கும் பகை யுண்டாயிற்று என்பர்.

செய்துகொண்டே கங்கைக்கரையோரமாகச்சஞ்சரிக்கின்ரு ளே, அந்தச்சேனாதிபதி தான் சஞ்சரிக்கும்பொழுதே பகைவர்களையழிப்பவன்; மலைக்குகையில் வாழ்பவன்; பெரியவிருக்ஷங்களை வேருடன்களைந்து யானைகளின்மேலும் யானைகளைத்தாக்கி மரங்களின்மேலும் வீசி யழிப்பவன்; இவன், இமயமலைத்தாழ்வரையி லோடுங் கங்கையை யடுத்துள்ளதாய் மந்தரமலைக்கு ஒப்பான உசிரபீஜமென்ற மலையிலே, இந்திரபகவான் சுவர்க்கலோகத்தில் வீற்றிருப்பதுபோலச் சுகமாகத் தானே வசிப்பவன்; மனக்கிளர்ச்சி பராக்கிரமம் இவைகள் அமைந்து அட்டகாசம்பண்ணும் பலசாலிகளான பத்துக்கோடிவாநரர்கள், இவனை எப்பொழுதும் தொடர்ந்துகொண்டே யிருக்கிரூர்கள்; பலசாலிகளான இவ்வாநரர்களுக்கு இவன் தலைவன். அரசரே! இவனைத் தகைய ஒருவராலும் முடியாது. காணப்படுகின்ற இவன்தான் பிரமாதி. பலங்கொண்டபோர்முயற்சியுள்ள இவனது வாநரசேனை, காற்ரூற்கிளப்பப்பட்ட மேகம்போற் காணப்படுகின்றது; இச்சேனை கிளப்பியமிகுந்ததூளிகளை, பலபடி மேலெழுந்து காற்ரூல் நாற்புறத்திலுஞ் சுழற்றப்பட்டுச் செந்நிறமாக அதோ விளங்குகின்றன. கறுப்புவர்ணமான முகமுள்ளவர்களாய் வெகுபயங்கரமான தோற்றமுள்ளவர்களான கொண்டைமுசுக்களென்னும் மகாபலம்பொருந்திய பத்துக்கோடி வாநரர்கள்,

கவாக்ஷன். சேதுகட்டிமுடிந்ததைப் பார்த்த சந்தோஷத்தால், வெகு வேகத்துடன் மகாபலங்கொண்ட கவாக்ஷனென்ற தமது சேனைத்தலைவனைச் சுற்றிக்கொண்டு இலங்கையைத் தமது பராக்கிரமத்தால் நாசம்பண்ண வருகின்ரூர்கள்.

கேஸரீ. எம்மலையில் வேண்டிய கனிகளோடுகூடிய விருக்ஷங்களின்மேல் எப்பொழுதும் வண்டுகள் மொய்த்துக்கொண்டிருக்கின்றனவோ, எம்மலையில் தன்னுடைய நிறத்தைப்பெற்

றுச் சூரியபகவான் சமீபத்திற் சஞ்சரிக்கின்றனே, தன்னுடைய ஒளியினல் மிருகங்களும் பட்சிகளும் பொன்னிறமாகவிளங்குகின்றனவோ, எம்மலையின் தாழ்வரைகளே மகாத்துமாக்களாகிய முனிவர்கள் எப்பொழுதும் விட்டுப் போகின்றதில்லையோ, எம்மலையிலிருக்கும் விருக்ஷங்கள் நமக்கு உண்டாகின்ற எண்ணங்களைக் கொடுக்கின்றவைகளாகவும் எக்காலத்திலும் கனியுள்ளவைகளாகவும் விளங்குகின்றனவோ, எம்மலையில் சிறந்த தேன் உண்டாகின்றதோ, அப்படிப்பட்ட பொன்மயமாகிய அழகுள்ள மேருமலையில் வசிப்பவன்தான், அதோ தாங்கள் காண்கின்ற கேஸரீயென்ற சேனபதி; அவன், வாநரத்தலைவர்களுக்கும் ஒருதலைவன்.

அறுபதினுயிரம்மலைக ளிருக்கின்றன ; அவைகளும் பொன்நிரம்பியவை; தாங்கள் எவ்வாறு அரக்கர்களுக்குள் உத்தமராக விளங்குகின்றீர்களோ, அவ்வாறே, அவ்வறு பதினுயிரம் மலைகளுக்குள் மேருஸாவர்ணி மலையென்பது உயர்ந்தமலை ; அம்மலையில் தான் கபிலநிறமாயும் வெளுப்பாயும்தாமிர நிறமாயும் தேன்போற் சிவந்தநிறமாயு மிருக்கின்ற வாநரர்கள் வசிக்கின்றார்கள். அவர்கள், கூரானகோரப்பற்களையும் ஆயுதங்களாக உதவுகின்ற நகங்களையும் உடையவர்கள் ; சிங்கங்கள்போன்ற நான்குகோரப்பற்க ளமைந்தவர்களாகவும், வேங்கைகள்போல அணுகமுடியாதவர்களாகவும் விளங்குபவர்கள். அவர்களெல்லாரும் அக்கினிக்குஒப்பானவர்கள் ; சீறுகின்ற சர்ப்பங்களுக்குச் சமமானவர்கள்;நன்றுகநீண்டு உயரமாகத்தூக்கிய வால் அமைந்தவர்கள் ; மதம்பிடித்த யானைகளுக்கு ஒப்பானவர்கள் ; பெரும்பருவதங்களைப் போன்றவர்கள் ; பெருமேகங்கள் போலக் கர்ஜ்ஜிக்கின்ற குரலுள்ளவர்கள்; உருண்டு பொன்னிறமாகவும் சிவப்பாகவுமிருக்குங் கண்களமைந்து, சிறிது பயங்கரமானநடையும் அட்டகாசமும் பொருந்தியவர்கள் ;

சதவலி.

அவர்கள் தங்களுடைய இலங்கையைப் பார்த்து அழிக்க வருபவர்கள்போல இருக்கின்றார்கள். இவ்வாகரர்களுக் குச்சேனைத்தலைவன், இவர்கள் நடுவில் நிற்கும் பலசாலி யான சதவலியென்று உலகமெங்கும் பிரசித்திபெற்றவன்; புத்திமானை இவன் இப்பொழுது வெற்றியைக்கருதிய வனாய், சூரியதேவதையின் பூஜையைத் தினந்தோறும் செய்துவருகின்றான். இவன் தனது சேனையொன்றைக் கொண்டே இலங்கா பட்டணத்தை நாசம்பண்ணக்கருதி யிருக்கின்றான். அரசரே! வெகுபராக்கிரமமும் பலமு மமைந்தசூரனாய்த் தனது வல்லமையொன்றிலேயே முற்றி லும் நம்பிக்கைவைத்த இவ்வாகரன், இராமருக்கு நன்மை செய்யவிரும்பியவனைப் பகைவருயிரின்மேற் கொஞ்சமே னும் கருணையென்பதைப் பாராட்டாம லிருக்கின்றான்.

மற்றுஞ்சில வாகரர்.

கஜன், கவாக்ஷன், கவயன், நளன், நீலன் என்ற இவ்வாகரத்தலைவர்களில் ஒவ்வொருவ னும் பத்துக்கோடிவாகரசேனையாற் சூழப் பட்டவனாய் நிற்கின்றான். அம்மாதிரியே விந்தியபர்வதத்தில் வசிப்பவர்களாகிய வேறு வாகரத் தலைவர்கள் மிகுதியாயிருப்பதால், கணக்கிலடங்காமலிருக் கின்றார்கள்; அவர்கள், பராக்கிரமத்தினால் மிகுந்தவர்கள். மகாராஜாவே! அவர்களெல்லாரும் மிக்கமகிமையுள்ள வர்கள்; எல்லாரும் பெருமலைக்கு ஒப்பான தேகமுள்ள வர்கள்; எல்லாரும் இவ்வுலகத்திலுள்ள மலைகளையெல் லாம் பொடியாக்கி இறைக்கத்தகுந்த பலமுள்ளவர்கள்.

இருபத்தெட்டாஞ் சருக்கம்:
சுகன் வாநரத்தலைவரை இராவணனுக்குத் தெரிவித்தல்.

ராக்ஷஸராஜனாகிய இராவணனிடத்தில் ஸாரணன் இவ்வாறு சொல்லிமுடிந்ததும், அவன் முழுதுஞ்சொல் லாததனால், சுகனென்பவன் அச்சேனைமுழுவதையும்

கையினற் சுட்டிக்காட்டிச் சொல்லலானுன்:— "வேந்தரே! மதம்பிடித்தயானைகள்போலவும், கங்கைக்கரையில் முளைத்துள்ள ஆலமரம்போலவும் இமயமலையில் முளைத்துள்ள ஆச்சாமரம்போலவும் நிற்கத் தாங்கள் காண்கின்றீர்களே, இவர்கள், போரில் எவராலும் வெல்லமுடியாத வீரர்கள்; தங்களுக்கு இஷ்டமான உருவங்கொள்ளும் வல்லமையுள்ளவர்கள்; ஒவ்வொருவரும் தேவர்கள்போலவும் அசுரர்கள்போலவும் விளங்கிக்கொண்டு, போரில் தேவர்களுக்குஒப்பான பராக்கிரமமுள்ளவர்கள். இவர்களின் தொகை, இருபத்தோராயிரங்கோடிக்கணக்காகவும், அப்படியே ஆயிரஞ்* சங்கக்கணக்காகவும், நூறுபிருந்த மென்னுங் கணக்காகவும் இருக்கின்றன.

இவர்கள் சுக்கிரீவனுடைய மந்திரிகள்; எப்பொழுதும் கிஷ்கிந்தையில் வசிப்பவர்கள்; இவ்வானரர்கள் வேண்டுமுருவங்கொள்ளும் வல்லமையுடன், தேவர்களிடமிருந்தும் கந்தர்வர்களிடமிருந்தும் பிறந்தவர்கள். அரசரே!

மைந்த த்விவிதர். அதோ, இருவராகச் சிறந்த உருவத்துடனிருக்கின்ற குமாரர்கள், மைந்த துவிவித ரென்ற பெயருள்ளவர்கள்; போரில் அவர்களுக்குச் சமான்மான்வ ரொருவருமில்லை; அவ்விருவரும் பிரமதேவனுற் கட்டளையிடப்பெற்று அமிருதபாகம் பண்ணினவர்கள்; இவர்கள் தமது வல்லமையால் இலங்கையையழிக்க எண்ணியிருக்கின்றார்கள். அதோ மதயானைபோல நிற்கின்றனே, அவ்வானரன் கோபங்கொண்டால், இச்சமுத்திரத்தையும் தன்பலத்தால் ஒருகலக்குக்கலக்கிவிடுவான்; அவன், இதற்குமுன்னமே இவ்விலங்கைக்குவந்து சீதாதேவியைத் தேடிக்கண்டு

அநுமான். தங்களையும் பார்த்துப் போனவன்; கேசரியின் புத்திரனும், வாயுபுத்திர

* இக்கணக்குகளின் அளவை இச்சருக்கத்தின் கடைசியிற் காணலாம்.

னென்று பிரசித்தனும், அநுமானென்று எங்கும்பெயர் வழங்கப்பெற்றவனுமான அவன்தான், முன்பே சமுத்திரத்தைத்தாண்டி இவ்விடம் வந்தவன்; முன்னமே பார்க்கப்பட்டுள்ள அவன் மீண்டும் வந்திருக்கின்றான்; தான் நினைக்கும் உருவங்கொள்பவன்; வானரர்களுக்குட் சிறந்தவன்; பலத்தையும் வரங்களையும் பெற்றவன்; வாயுபகவான் எப்படியோ, அப்படியே ஓரிடத்திலும் தடுக்க முடியாத போக்குள்ளவன்; தன்பலத்தினற்செருக்கடைந்த இவன் முன்பு சிறுகுழந்தையாக இருந்தபொழுது, உதயமாகுஞ் சூரியனைப் பார்த்துப் பசித்தவனாய், "எனக்குப் பசி நீங்குகின்ற வழியைக் காணேம்; நான் சூரியனைப் பறித்துப் புசிக்கின்றேன்" என்று தன்மனத்தில் எண்ணியவனாய், மூவாயிரம்யோஜனைதூரம் ஆகாயத்திற்கிளம்பி, தேவர்கள் மகாமுனிவர்கள் அசுரர்கள் என்ற இவர்களாலும்அடையமுடியாத சூரியபகவானைநோக்கித் தாவி, அக்கடவுளை அடையமுடியாமல் அவன் உதிக்கின்ற மலையில் விழுந்தான். அப்படிவிழுந்தகாலத்தில், இவ்வானரவீரனுடைய ஒரு ஹநு [கவுள்] பாறையிலடிபட்டுக்கொஞ்சம்* முறிந்தது; இக்காரணத்தால், இவன் ஹநுமானென்றபெயருள்ளவனானன். இவன்சரித்திரத்தைப்பற்றிச் சப்தபிரமாணத்தால் மெய்யாக அறிந்தேன். இவனுடைய பலத்தைப்பற்றியாவது உருவத்தைப்பற்றியாவது சாமர்த்தியத்தைப்பற்றியாவது பேசுதற்கு முடியாது. இவன் ஒருவனுகவே தனதுபராக்கிரமத்தால் இலங்கையை நாசம் பண்ணக் கருதியிருக்கின்றான்.

இங்கு அப்புறம்நிற்குஞ் சூரரைப் பாருங்கள்; நீலநிறமுள்ளவராய்த் தாமரையிதழுக்கொப்பான கண்களமைந்தவராய் நிற்கின்றாரே, அவர்தான் இக்ஷ்வாகுவம்

* அநுமானது கவுள் முறிந்ததற்கு இந்திரனது வச்சிராயுதத்தால் அடிபட்டதும், ஒரு காரணமா மென்க.

சத்திற் பிறந்த அதிரதர்; இவ்வுலகத்திற் பெயர்பெற்ற பராக்கிரமமுள்ளவர். அவரிடத்தில் தரு மம் சலிப்பதேயில்லை; அவர் அதருமத்தை ஒருபோதும் அநுசரிப்பவரல்லர். அவருக்குப் பிரமாஸ்திரமும் வேதங்களும் தெரியும்; வேதங்களுக்கற்றுணர்ந்தவர்களுக்குள் அவர் மிகவும் உத்தமர். தமது அம்புகளால் ஆகாசத்தையும் கிழித்துவிடுவார்: மலைகளையும் பிளந்துவிடுவார்: அவரது கோபமோ யமனுடையகோபத்துக்கு ஒப்பானது; அவருடைய பராக்கிரமம் இந்திரனுடைய பராக்கிரமத்துக்கு ஒப்பானது. அவருடைய மனைவியாகிய சீதையென்பவளைத்தான் ஜநஸ்தாநத்திலிருந்து தீர்க்கள் கவர்ந்துவந்தீர்கள். அரசரே! அவ்விராமர் தங்களுடன்போர்புரிய அதோ வந்திருக்கின்றார். அவருடைய வலப்பக்கத்தில், பத்தரைமாற்றுத்தங்கத்துக்கு ஒப்பான நிறமமைந்தவராய் விசாலமான மார்பைப் பொருந்தியவராய்க் கண்கள் சிவந்தவராய்க் கறுத்தும் சுருண்டுமுள்ள மயிர்முடியமைந்தவராய் விளங்குகின்றாரே, அவர்தான் அந்த இராமபிரானுடைய தம்பியாகிய இலட்சுமணர்; அவருடைய உயிருக்குஒப்பானவர்; அவரிடம் எப்பொழுதும் அன்புவைத்தவர்; நியாயசாஸ்திரத்திலும் யுத்தத்திலும் சாமர்த்தியமுள்ளவர்; எல்லாச்சாஸ்திரங்களையும் நன்றாகக்கற்றுத்தேர்ந்தவர். பொறுக்காததன்மையுள்ளவர்; அவரைவெல்ல ஒருவராலும் முடியாது. தாம் வெற்றியடைபவர்; பராக்கிரமசாலி; புத்தியமைந்தபலசாலி. அவரை இராமருடைய வலக்கையென்றும், வெளியில்நடக்கும் அவருடைய உயிரென்றும் சொல்லவேண்டும்; அவர் இராமருடையகாரியம் நிறைவேறுவதானால் தமதுயிரின்மேலும் அபிமானங்கொள்ளார். அவர் தாமாகவே அரக்கர்களையெல்லாம் போரிற்கொல்ல எண்ணங்கொண்டிருக்கின்றார்.

இராமர்.

இலட்சுமணர்.

இராமருடைய இடப்பக்கத்தில் விளங்குகின்றாரே, அவர்தான் அரக்கர்கூட்டத்தாற் சூழப்பட்ட விபீஷணர்; தங்களுடையஇராச்சியத்திற்கு மன்னவர்;

விபீஷணர்.

அரசர்களுக்கு அரசராகிய இராமரால் இலங்கைக்கு அரசராகப் பட்டாபிஷேகம் பண்ணப்பட்டார். இவர், தங்களைநோக்கிச் சினங்கொண்ட வராய்ப் போரிடுமாறு எதிர்வருகின்றார். இராமவிபீஷணர்களின்நடுவில் அசையாதமலைபோல ஒருவர் நிற்கின்றாரே பாருங்கள்; அவர்தான் எல்லா வானரவீரர்களுக்கும் மன்னவர்; அவரைவென்றவன் ஒருவனுமில்லை. எல்லாமலைகளுக்கும்மேலாக இமயமலை விளங்குவதுபோல், அவர், தமது ஒளியாலும், புகழாலும், இயற்கையறிவாலும், சாஸ்திரப்பயிற்சியினாற்பெற்ற புத்தியினாலும், நற்குலத்தாலும், எல்லா வானரவீரர்களினும் மேலாகவிளங்குபவர். அவர் எப்பொழுதும் அடர்ந்த மரங்களையுடையதும் மலையரணையுடையதுமான பிறராற் கிட்டுதற்கு அரிய கிஷ்கிந்தையென்றமலைக்குகையில், முக்கியமான சேனபதிகளுடன் வசிப்பவர். நாறுபொற்றூமரை மலராற் கோத்த மாலையொன்று அவர்கழுத்தில் விளங்குகின்றதே, அது தேவர்களாலும் மனிதர்களாலும் விரும்பப்படுகின்றது! அதில், லக்ஷ்மி இடைவிடாது தங்கியிருக்கின்றாள். இம்மாலையையும் தாரையையும் வானரராச்சியத்தையும் தம்மைவிட்டு நீங்காதவண்ணம், இந்தச் சுக்கிரீவர், இராமருடைய தயையால் வாலியைக்கொன்று, தாம் அடைந்தார்.

சுக்கிரீவன்.

நாறுலக்ஷம்கொண்டதை ஒருகோடியென்று பெரியவர்கள் ஏற்படுத்தியிருக்கின்றார்கள்; நாறுயிரங்கோடி, சங்கமென்று சொல்லப்படுகின்றது. நாறுயிரஞ்சங்கம், மகாசங்கமென்று குறிக்கப்படுகின்றது. நாறுயிரம் மகாசங்கம்கொண்டது, ஒருபிருந்தமெனப்படுகின்றது; நாறுயிரம்பிருந்தம், மகாபிருந்தமெனப்படுகின்றது. நாறுயிரம் மகாபிருந்

வானரசேனையின் தொகை.

தம், பத்மமாகும். நூறுயிரம்பத்மம்கொண்டது, ஒரு மகா பத்மம். நூறுயிரம் மகாபத்மம்கொண்டது, கர்வமென்று சொல்லப்படும்; நூறுயிரங்கர்வம்சேர்ந்தால், மகாகர்வ மென்பதும். நூறுயிரம்மகாகர்வம், சமுத்திரமென்பதும்; நூறுயிரஞ்சமுத்திரம்சேர்ந்தால், ஓகமென்றுகுறிக்கப்படுகின்றது; அவ்விதமான நூறுயிரவோகங்கொண்டது மஹௌகம்: இவ்வாறு ஆயிரம்கோடி சேனைகளோடும், நூறு சங்கம் சேனைகளோடும், ஆயிரம் மகாசங்கம் சேனைகளோடும், நூறுபிருந்தம் சேனைகளோடும், ஆயிரம் மகாபிருந்தம் சேனைகளோடும், நூறு பத்மம் சேனைகளோடும், ஆயிரம் மகாபத்மம் சேனைகளோடும், நூறு கர்வம் சேனைகளோடும், நூறுசமுத்திரம் சேனைகளோடும், அப்படியே நூறு மஹௌகம் சேனைகளோடும் ஆக ஒருகோடிமஹௌகமென்று சொல்லும்படியாய்ச் சமுத்திரம்போன்ற வானரசேனையாற் சூழப்பட்டும், ராக்ஷஸ மந்திரியுடன்கூடிய விபீஷணரால் உதவிசெய்யப் பெற்றும், மகா பலபராக்கிரமசாலியாய் வானரராஜரான சுக்கிரீவர், தங்களுடன்போர் புரிய வந்து நிற்கின்றார்.

மகாராஜாவே! கொடியகிரகத்துக்குஒப்பாக வந்துநிற்கும் இப்பெருஞ்சைனியத்தைப் பார்த்து, பிறகு, இந்தப் பகைவர்கள் நம்மைத்தோற்கடியாமல்நாம்வெற்றியடையும்படி, உத்தமமான முயற்சியைச் செய்யுங்கள்" என்றான்.

இருபத்தொன்பதாஞ் சருக்கம்:
சுகஸாரணர்மேற்சினந்த இராவணன்அனுப்பிய சார்த்தூலன் முதலியோரது தூது.

சுகன் குறிப்பிட்டுச் சொன்ன அந்தவானரசேனைத் தலைவர்களையும், இராமருக்கு அருகில்நிற்கும் தனது தம்பியாகிய விபீஷணரையும், இராமருடைய வலக்கைபோன்ற

மகாவீரராகிய இலட்சுமணரையும், பயங்கரமான பராக்கிரமமுள்ள எல்லாவானரர்களுக்கும் வேந்தரான சுக்கிரீவரையும் பார்த்து, இராவணன், கொஞ்சம் மனங்கலங்கிக் கோபங்கொண்டவனாய், அவ்வாறு சொல்லி வாய்மூடின அந்தச் சுகஸாரணரென்ற வீரர்களைக் கண்டித்து, அச்சத்தால் தலைகவிழ்ந்து வணங்கிநின்ற அவ்விருவரையும் நோக்கி, கோபத்தால் தழுதழுத்த கொடியவாக்கால் படபடப்புடன் பின்வருமாறு மொழியலுற்றான்:—"ஓர் அரசன்கீழ் அடங்கி நடக்கும் மந்திரிகள், தங்களைத்தண்டிக்கவும் அருள் செய்யவும் வல்லமைபெற்ற அரசன்முன் பாகநின்றுகொண்டு, அவனுக்குக்கேட்கப்பிடிக்காத சொற்களைச் சொல்லுதல், அடியோடு தகாது. உங்களைக் கேட்காமலிருக்கும்பொழுதே, நமக்குப் பகைவர்களாய்ப் போர் செய்யவந்தவர்களாயிருக்குஞ் சத்துருக்களைப்பற்றிக் காலமல்லாதகாலத்தில் இவ்வாறு நீங்களிருவரும் புகழ்ந்து பேசுவது தகுதியோ? இதுவரையில், நீங்கள் ஆசிரியர் பெரியவர் இவர்களிடத்திற் பழகியது வீணேயாம்; ஏனெனில், ராஜநீதிநூலின்ஸாரமாக, ஒருவன்கீழடங்கி நடக்கவேண்டியவன்தொழிலைத் தெரிந்து கொள்ளவில்லையே. கற்றறிந்ததை மறந்துவிட்டீர்களோ? அன்றி, நடவடிக்கைக்குக் கொண்டுவராமல் அறிவின்சுமையையுமாத்திரம் தாங்குகின்றீர்களோ? இவ்வண்ணம் மூடர்களான மந்திரிமார்களை வைத்துக்கொண்டு, நான் இராச்சியத்தை வகித்துவருவதும் பேராச்சரியந்தான். என்னைப் பார்த்து, இவ்விதமானசொற்களைச் சொல்லிவந்தீர்களே! நமது அரசன் நம்மைக் கொன்றுவிடுவானென்ற பயமும் உண்டாகவில்லையா, என்ன? கட்டளையிடத்தொடங்கும் எனது நாவே, நன்மையையும் தீமையையும் செய்யவல்லதாயிற்றே. தீப்பற்றியகாட்டில் மரங்கள்தப்பினாலும் தப்பலாம்; அரசர்களுக்குக் கோபத்தைமூட்டிய குற்றவாளி

சுகஸாரணரை இராவணன் கடிந்து பேசுதல்.

கள், ஒருபொழுதும் பிழைக்கமாட்டார்கள். சத்துருக்க ளுடையகட்சியைப்புகழும் பாவிகளாகிய இவர்களிருவரை யும் நான் கொல்வேன். இதற்குமுன் எனக்கு இவர்கள் செய்திருக்கும் உபகாரங்கள், எனதுகோபத்தைச் சாந்தப் படுத்தமாட்டா. ஆகையால், நீங்கள் உங்கள்தொழிலைவிட் டிடுங்கள்; என்முன்னிலையில் நில்லாதேயுங்கள்; நீங்கள் எனக்குச் செய்திருக்கின்ற உபகாரங்களை நினைப்பதனல், நான் உங்களைக்கொல்லவிரும்பவில்லை. என்னிடத்து அன் பில்லாமலும் செய்ந்நன்றிமறந்து மிருக்கின்ற உங்க ளுக்கு, அத்தொழிலே கொலைக்குச் சமானந்தான்: நான் இனிக்கொல்லவேண்டுவதில்லை" என்ருன். இப்படி சுக ஸாரணரைப்பார்த்து இராவணன்சொன்னதும், அவர்கள் வெட்கமடைந்தவர்களாய், 'ஜயம் உண்டாகுக' என்று சொல்லிவிட்டு அப்பாற் சென்ருர்கள்.

அதன்பிறகு பத்துத்தலைகளைப்படைத்த இரா வணன் தன்சமீபத்திலிருந்த மகோதரனைப் பார்த்து "நீதி சாஸ்திரங்களை நன்முகஅறிந்த வேவுகாரர்களை என் முன் னம் சடிதியில் நிறுத்துக" என்று கட்டளையிட்டான். அவ் வாறு கட்டளையிடப்பட்டதும், மகோதரன், வெகு சீக்கிரமாக வருமாறு வேவுகாரர்கட் குக் கட்டளையிட்டான். அரசன்கட்டளை யின்படியே வேகமாகவந்த வேவுகாரர்கள், இராவணனிடம் அஞ்சலிபண்ணிக்கொண்டு நின்று, "வேந்தே! உங்களுக்கு ஜயமுண்டாவதாக" என்று ஆசீர் வசனம் கூறினர்கள். பிறகு, அரக்கர்கள் மன்னவனகிய இராவணன், சூரர்களாயும் யஜமானவிசுவாசமுள்ள வர்களாயும், எதற்குங் கலங்காதவர்களாயும், வரவழைக் கப்பட்டு வந்துநின்ற அந்தவேவுகாரர்களை நோக்கிப் பின் வருமாறு மொழியலானன்:—"நீங்கள் இவ்விடம்விட்டுப் புறப்பட்டு இராமனுடைய விவசாயத்தைச் சோதித்துப் பாருங்கள்; எவர்கள் இராமனுக்கு அந்தரங்கமான மந்திரி

இராவணன் வேறு ஒற்றரை வரவழைத்துக் கட்டளையிடல்.

களாய், மிக்க அன்புடன் அவனிடம் நட்புச்செய்துகொண் டிருக்கின்றார்களோ, அவர்களை நன்றாக அறிந்து வாருங்கள். அவர் எவ்வண்ணம் தூங்குகின்றார்? எவ்விதமாய்க் கண் விழிக்கின்றார்? இன்னும் என்னசெய்கின்றார்? இவ்விஷ யங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் நுட்பமாகப் பரி சோதித்து, நீங்கள் மறுபடியும் இங்குத் திரும்பிவரவேண் டும். வேவுகாரர்கள்மூலமாகச் சமர்த்தர்களான அரசர் தமது பகைவர்களுடைய இரகசியங்களை ஒன்றுவிடாமல் அறிந்து போரில் நெருங்குவாராயின், அற்பமான முயற்சி யினாலேயே வெகுசுலபமாய்ப் பகைவர்களைவெல்வார்" என்றான்.

அவ்வேவுகாரர்களும் மிகமகிழ்ந்து, அப்படியே யாகட்டுமென்று இராவணனைநோக்கிச்சொல்லி, சார்த் தூலனை முன்னிட்டுக்கொண்டு பருத்தவடிவையுடைய னாய் அரக்கரிற்சிறந்த அவ்விராவணனைப் பிரதட்சிணம் பண்ணி, எவ்விடத்தில் இலட்சுமணருடன் இராமர் இருந்தாரோ, அவ்விடத்தை நோக்கிப் போனார்கள். அவர்கள், மாறுவேஷங்கொண்டவர்களாய்ப் போய்ச் சுவேலமலையின் சமீபத்தில் சுக்கிரீவனுடனும் விபீ ஷணருடனும், இராம லட்சுமணர் தங்கியிருப்பதைப் பார்த்தார்கள். அச்சேனையை அவர்கள் காணும்பொ ழுதே, அச்சத்தாற் கலக்கமடைந்தார்கள். அவ்வரக்கர்

சார்த்தூலனை விபீஷணர் பற்றிக்கொள்ள இராமர் விடுவித்தல்.

களைத் தருமாத்துமாவாகிய விபீஷணர் கண்டு, அங்கிருந்த அவர்களை விளையாட் டாகவே வென்று, சார்த்தூலனைமாத்தி ரம் இவ்வரக்கன் பெரும்பாவியென்று பிடித்துக்கொண்டார். அச்சார்த்தூலனை வானரர்கள் வதைசெய்ய ஆரம்பிக்கையில், அவனை யும், அவனுக்குத் துணையாகவந்தவர்களையும், இராமர், தமதுகருணையால் விடுவித்தார். விரைவுகொண்ட பராக் கிரமமுள்ள வானரர்களால் வருத்தப்பட்ட அவ்வரக்கர்கள்

குற்றுயிராக நெட்டுயிர்ப்புடன் மறுபடியும் இலங்கைசேர்ந்தார்கள். ஒற்றர்கள் இலங்கைசென்று செய்தியறிக்கத் தொடங்கல்.

சஞ்சரிக்குந் தன்மையுள்ளவர்களாய்ப் பல சரீரிகளான அவ்வரக்கவேவுகாரர்கள் இராவணேசுவரனைக்கிட்டி, சுவேலமலைக்கு அருகிலே கோடியசேனை தங்கியிருப்பதாகத் தெரிவிக்கலுற்றார்கள்.

மூப்படைந்த சருக்கம்:
சார்த்தூலன் இராமசேனையை இராவணனுக்குக் கூறுதல்.

அப்போது, சுவேலமலையில் இராமர் கலங்காதசேனையுடனே தங்கியிருந்ததை, ஒற்றர்கள் இலங்கைமன்னனான இராவணனிடம் அறிவித்தார்கள். அவர்கள் மூலமாய் இராமர் பெருஞ்சேனையோடு வந்துவிட்டதைக் கேட்டு, இராவணன் சற்றே மனங்கலங்கி, சார்த்தூலனை நோக்கி, "அரக்கனே! உன்னிறம் மாறியிருக்கின்றது; எவியவனுதவும் தோன்றுகின்றீரே. கோபங்கொண்ட பகைவர்கள்கையில், நீ சிக்கிக்கொள்ளாமலிருந்தனையா?" என்றுவினவினான். இராவணன் வினா.

அவ்வாறு இராவணன் கேட்கவே, அவ்வரக்கர்புலமைநோக்கி, சார்த்தூலன் பயத்தால் நடுங்கிக்கொண்டு, மெல்லியகுரலுடன் மறுமொழி சொல்லலுற்றான்:—"அரசரே! அவ்வானரச் சிரேஷ்டர்களினிடம் தூது செல்வது முடியாது. பராக்கிரமசாலிகளும், பலமுள்ளவர்களுமான, இராமரால் பாதுகாக்கப்பட்டவர்களுமான அவர்களுடன் பேசுவதும் அசாத்தியம். அவர்களை ஏதாவது கேட்டறிவது எவ்விதமாகச் சாத்தியப்படும்? மலைக்குஞ்சான வானரர் சார்த்தூலன் விடை.

கள், எல்லாவழிகளையும் பாதுகாக்கின்றார்கள். நான் வேவு தொழிலை மேற்கொள்வதற்குமுன்னமே, அச்சேனைக் குட் புகுந்தமாத்திரத்தில்தானே, அவர்கள் என்னை அறிந்துகொண்டார்கள். அரக்கர்கள் என்னைப்பிடித்துக் கொண்டு பூமியி லிழுக்க ஆரம்பிக்க, கோபிக்குந்தன்மை யுள்ள பலவான்களான வாநரர்கள், முழங்காலாலும், முஷ்டிகளாலும், பற்களாலும், கைகளாலும் என்னைப் பலவிதமாகத் தொந்தரைபண்ணி, இங்குமங்குமாக எங் கும் இழுத்துக் கடைசியாக இராமரிருந்த இடத்துக்குக் கொண்டுவந்து, அவர்முன்னிலையில் நிறுத்தினார்கள். என் உடம்புமுழுதும் இரத்தம்வழிய, மூர்ச்சைவர, எனது இந் திரியங்கள் கலங்க, வாநரர்கள் என்னைப்புடைப்பதைச் சகிக்கமுடியாமல், நான் இராமரைப்பார்த்து, என் கைக ளைக்கூப்பிக்கொண்டு,காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவர்தயையால், இவ்வாறுஉயிர்தப்பி, எதிர் பாராமல் பிழைத்திருக்கின்றேன். மலைகளாலும் மரங் களாலும் இவ்விராமர் சமுத்திரத்தைத்தூர்த்து, சுவேல மலையில் இலங்கையின்வாயிலைச்சேர்ந்து, ஆயுதத்துடன் இருக்கின்றார். தமது சேனையைக்கருடவியூகமாக வகுத்து, நாற்புறத்திலும் வாநரர்களாற் சூழப்பெற்றவராய், மிக்க பராக்கிரமசாலியான இராமர், என்னை விடுவித்து விட்டு, இலங்கையைநோக்கியே வந்துகொண்டிருக்கின்றார். அவர் நமதுநகரத்தின்மதிலுக்குச் சமீபத்தில் வருமுன், விரை வாகத் தாங்கள் இரண்டில்ஒன்று செய்யவேண்டும்; ஒன் று, சீக்கிரமாகச் சீதையை அவரிடம் திருப்பிக்கொடுத்து விடவேண்டும் : இல்லையென்றாலோ, அவருடன் பெரும் போரையாவது தரவேண்டும்" என்றான்.

அவ்வண்ணம் சொன்னதைக் கேட்டு, அப்போது, தன்மனத்திலும் ஆலோசித்து, பிறகு, அவ்விராவணன் சார்த்தூலனை நோக்கி, "என்னுடன் சண்டைசெய்யுமாறு தேவர், கந்தர்வர், தானவர் வந்தபோதிலும், இவ்வுல

கத்திலுள்ள எல்லாரிடமிருந்தும் எனக்குப்பயமுண்டான போதிலும், நான் சீதையைத் திருப்பிக்கொடுக்கவேமாட்டேன்" என்று, வெகு டம்பமாக முதலிற் சொல்லிவிட்டு, மிக்கபராக்கிரமசாலியான அவ்விராவணன், மறுபடியும் சார்த்தூலனைப்பார்த்துப் பின்வருமாறு கேட்கலானான்:

இராவணன் வானரசைனியத்தைக்குறித்து வினவல்.

"நீ வானரசேனையை உற்றுப்பார்த்தாயன்றே! அதில் சூரர்களான வானரர்கள் யாவர்? அடங்கியவனே! எவர்கள் அணுகவும் முடியாதவர்களோ? அவர்கள் எம்மாதிரியானவர்கள்? எந்தநிறம் பொருந்தியவர்கள்? அவர்கள் யாருடைய குமாரர்கள்? யாருடைய பேரன்மார்கள்? அரக்கனே! இவைகளைப்பற்றி உள்ளபடிசொல்லுக. நானும் அவர்களுடைய பலம் முதலிய விஷயங்களை நன்றாகஅறிந்துகொண்டு, அதற்குத்தக்கபடி ஏற்பாடுசெய்கின்றேன். சண்டையை விரும்புகிறவர்கள் தங்கள்சத்துருக்களின்சேனையைப்பற்றி நன்றாக அறிந்து கொள்ளவேண்டியது அவசியம்" என்றான்.

ஓற்றர்களில் உத்தமனான சார்த்தூலனை நோக்கி, இராவணன் இவ்வண்ணம் சொல்லவே, இராவணன் முன்னிலையில் அவன் இவ்வாறுசொல்லலுற்றான்:—"போரில் எவராலும் வெல்லமுடியாதவனான வானரராஜன், ருக்ஷரஜஸினுடையகுமாரன்; இவ்வானரர்களில் கத்கதனுடைய குமாரன், * ஜாம்பவானென்று பிரசித்திபெற்றவன். கத்கதனுடைய மற்றொருகுமாரன் தூம்ரன். எனது குமாரனாகிய அநுமான் தான் ஒருவனாகவிருந்து

சார்த்தூலனது மறுமொழி. சிலவானரர்களின் பிறப்பு முதலியன.

* இவன் பிரமதேவனுடைய கொட்டாவியினின்று பிறந்தவனாயினும், வளர்த்தவன் கத்கதனாகையால் இவ்வாறு கூறியது: பாலகாண்டத்திற் கூறியவற்றோடு மாறுபட்டு வருமிடங்கட்கெல்லாம் இவ்வாறேனும், வானரர்களையிற் சிக்குண்ட அரக்கன் அச்சத்தால் உண்மையைச்சரியாக உள்ளதில்லை வையமையாற் கூறினனென்றேனும், இப்பெயர் கொண்டவன் வேறொருவனென்றேனுஞ் சமாதானங் கண்டுகொள்க.

அரக்கர்களை நாசம்பண்ணினானே, அந்தக்கேஸரியென்பவன், தேவேந்திரனுடைய குருவாகிய பிரகஸ்பதியின் குமாரன். தருமாத்துமாவாகிய சுஷேணனென்ற வீரன், வருணபகவானுடைய குமாரன். அரசரே! அடக்கமுள்ளவனுகிய ததிமுகனென்ற வானரவீரன் சந்திரபகவானுடைய குமாரன். சுமுகன், துர்முகன், வேகதர்சி என்ற இம்மூன்று வீரர்களும், யமதேவதையின் புத்திரர்களான வானரர்களாகப் பிரமதேவராற் படைக்கப்பட்டிருக்கின்றூர். நீலனென்ற முக்கியசேனபதி, அக்கினிபகவானுடைய குமாரன். இங்கு, அதுமானென்பவன், வாயுபகவானுடைகுமாரனுகவும் பிரசித்திபெற்றிருக்கின்றூன். இளமைப்பருவம் முதலாகவே ஒருவராலும் தகையமுடியாத பலபராக்கிரமம்பொருந்தி விளங்கும் அங்கதன், இந்திரனுடைய பேரன். பலசாலிகளான மைந்த த்விவித ரென்ற இருவரும், அசுவினிதேவதைகளின் குமாரர். இங்கு, கஜன் கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன் என்ற இவ்வைந்துவீரர்களும் காலாந்தகனுக்கு ஒப்பானவர்கள்; வைவஸ்வதனுடைய குமாரர்கள். தேவபுத்திரர்களாய்ச் சூரர்களாய்ச் சீமான்களாய்ப் போர்புரியவிரும்பிநிற்கும் பத்துக்கோடிக்கணக்கான வானரர்கட்குப் பிறப்பு வாழிடம் முதலியவற்றைச் சொல்ல என்னல் முடியாது.

இராமர். இவர், தசரதருடைய புத்திரர்; சிங்கம்போன்ற சரீரமுள்ளவர்; யுவர்; கரன் தூஷணன் திரிசிரஸ் என்ற அரக்கர்களைக் கொன்றவர் இவர்தான். இவ்வுலகத்திலே பராக்கிரமத்தால் இராமருக்குஒப்பானவன் ஒருவனும் இல்லை. விராதனையும், யமனுக்குஒப்பானகபந்தனையும் இவர்தான் வதைத்தார். இவ்வுலகத்திலுள்ள ஒருமனிதனுலும் இராமருடைய நற்குணத்தை எடுத்துச்சொல்ல முடியாது.

ஜநஸ்தானத்திலிருந்த அவ்வளவு அரக்கர்களையும் இவர் தான்கொன்றார். இங்கு, இலட்சுமணரோ, வெகுதர்மாத்துவாக இருந்துகொண்டு, யானைகளின்மத்தியில் யானையரசன் விளங்குவதுபோல விளங்குகின்றார். இவருடைய பாணத்திற்கு நேரில் நின்று இந்திரனும் பிழைக்கமாட்டான்.

இலட்சுமணர்.

இங்கு, சுவேதன் ஜோதிர்முகன் என்பவர்கள் சூரிய பகவானுடைய பிள்ளைகள். ஹேமகூடனென்ற வாநரன், வருணபகவானுடைய வேறொரு குமாரன். வீரனென நளனென்ற வாநரத்தலைவன்தான், விசுவகர்மாவின் மகன். வெகுபராக்கிரமமும் அதிக பலமும் பொருந்திய துர்த்தரன், வசுவின் மகன். அரக்கர்களுக்குள்உத்தமரான விபீஷண ரென்ற தங்கள்தம்பியும், இராமரிடத்தினின்று இலங்காபுரியைப் பெற்றுக்கொண்டு, இராமருடைய நன்மையையே நாடுகின்றார். இவ்விதமாக நான் ஒன்றுவிடாமல் சுவேலமலையிலிருக்கும் இவ்வாநரசேனையைப்பற்றிச் சொல்லிவிட்டேன். இனிச்செய்யவேண்டிய தொழில் தங்களைச் சேர்ந்தது" என்றான்.

மற்றுஞ் சிலவாநரர்கள்.

முப்பத்தோராஞ் சருக்கம் :

இராவணன் வித்யுஜ்ஜிஹ்வனைக்கொண்டு மாயைசெய்தல்.

அப்போது, வேவுகாரர்கள், கலக்கமுடியாத சைனியத்துடன் சுவேலமலையில் இராமர் தங்கியிருப்பதை, இராவணனிடம் தெரிவிக்கவே, அவ்விராவணன் பெருஞ் சேனையுடன் இராமர்வந்ததைக் கேட்டுக் கொஞ்சம் மனங்கலங்கி, தனது மந்திரிகளை நோக்கி, "நீதியில் வல்லவரான எனது மந்திரிகள் எல்லோரும் சடிதியில் இங்குவந்து

சேரவேண்டும்; ஏனெனில், மந்திராலோசனை பண்ணுங் காலம் இப்பொழுது வந்துவிட்டது" என்று இவ்வாறு கூறினன். அவனது கட்டளையைக் கேட்டதும், அமைச்சர்கள் விரைவாக வந்தார்கள். பிறகு, அவ்வரக்க மந்திரிகளுடன், பகைவரால் எளிதில்வெல்லமுடியாதவனை அவ்விராவணன், அக்காலத்திற்குஏற்ற ஆலோசனைகளைச்செய்து, பிறகு அம்மந்திரிகளுக்கு விடைகொடுத்தனுப்பித் தனது மாளிகைசேர்ந்தான்.

இராவணன் மந்திராலோசனை செய்துவிட்டுத் தன்வீடுசேர்தல்.

அதன் பிறகு, மாயையையறிந்த மஹாபலசாலியரகிய வித்யுஜ்ஜிஹ்வனென்ற அரக்கனைத் தன்னுடன் கூட்டிக்கொண்டு, வெகுமாயாவியாகிய இராவணன், சீதாதேவியிருந்த இடத்தை நாடிவந்தான். அவ்வாறுவரும் பொழுது, வழியில் அவ்வரக்கர்மன்னவன் மாயையில்வல்லவித்யுஜ்ஜிஹ்வனைப் பார்த்து, "நாம் ஜநகராஜன்மகளாகிய சீதையை மாயையால் மோகிக்கச்செய்வோம். அரக்கனே! நீ இராமனுடைய தலைபோன்ற ஒருதலையையும்அம்போடுகூடியஒருபெருவில்லையும் மாயையால்நிருமித்துக் கையிலெடுத்துக்கொண்டு என்னிடம்வந்துசேர்" என்றான். இப்படி இராவணன் சொல்லவே, "அப்படியே செய்கின்றேன்" என்று வித்யுஜ்ஜிஹ்வனென்ற அரக்கன் ஒப்புக்கொண்டான். அது கேட்டு, அரக்கர்வேந்தன், அவனிடம் சந்தோஷமடைந்து, அவனுக்குப் பல அணிகளை வெகுமதி கொடுத்தான்.

இராவணன் வித்யுஜ்ஜிஹ்வனுக்கு மாயைசெய்யக்கட்டளையிடுதல்.

அதன்பிறகு, சீதாதேவியைப்பார்ப்பதில் அதிக ஆசைகொண்டவனாய், அரக்கர்கள்மன்னனும் மஹாபலசாலியுமாகிய இராவணன், அசோகவனிகையிற் புகுந்தான். பிறகு, குபேரன்தம்பியாகிய அவ்விராவணன், அவ்வனத்

இராவணன் சீதையைக் காணுதல்.

தில், எளிமையை யடைவதற்கு உரியளல்லாதவளாக விருந்தும் மிக்களளியநிலைமையி லிருப்பவளாய், தனது முகத்தைத் தாழ்த்திச் சோகத்தில் மூழ்கிப் பூமியிலே உட்கார்ந்துகொண்டிருப்பவளாய், அசோகவனிகையிலிருந்தும் இடைவிடாமல் தனது கணவனையே மனத்தால் நினைப்பவளாய், நாற்புறத்திலும் கொடிய அரக்கியர்களாற் சூழப்பட்டுப் பாதுகாக்கப்பட்டவளாய்ச் சீதையிருப்பதைக் கண்டான். பிறகு சீதையினருகிற்சேர்ந்து, இராவணன், வெகு சந்தோஷமாசாரத்தைச் சொல்பவன் போல, ஜநகமகாராஜாவின்குமாரியை நோக்கி, இவ்வாறு சொல்லலுற்றான்:—" மங்களமானவளே! நான் எவ்வளவோ வேண்டிக்கொண்டும் யாருடைய பலத்தை நினைந்து துள்ளினையோ, எவன் கரனைக்கொன்றானே, உன்கணவனுகிய அந்த இராமன், போரில் என்னற் கொல்லப்பட்டான். உனக்கு ஆதரவானது அடியோடு அழிந்துவிட்டது; உனதுசெருக்கை நான் அடக்கிவிட்டேன்; இவ்விதமான துக்கம் உனக்கு வந்துவிட்டபடியால், இனி நீயே என் மனைவியாவாய். பேதாய்! இப்புத்தியை இனி விட்டிடு. இறந்துபோனவனல் நீ என்ன செய்யமாட்டுவாய்? மங்களமானவளே! இனி நீ என்னுடைய மனைவிமார்களுக்கெல்லாம் தலைவியாக ஆகக்கடவாய். புண்ணியத்தைச் சொற்பமாகச்செய்தவளே! இதுவரையிற் புருஷார்த்தத்தை யிழந்தவளே! புத்தியற்றவளே! புத்திசாலியென்று தன்னைத்தானே வீணாக எண்ணுபவளே! சீதாய்! கொடிய விருத்திராசுரன்வதம்போல நடந்த உனதுகணவனுடையவதையைக் கேள்! வானராஜனுகிய சுக்கிரீவன் திரட்டிக்கொண்டுவந்த பெருஞ்சேனை உடன்சூழ, என்னைக்கொல்லவென்றே, இராமன், சமுத்திரக்கரையைச் சேர்ந்தான்; பெரியசேனையால், இச்சமுத்திரத்தின் வடகரையைக் கலக்கிக்கொண்டு, சூரிய

இராவணன் சீதையினிடத்திற் பொய்யாகச் சிலவற்றைக் கட்டியுரைத்தல்.

னஸ்தமிக்கிற வேளையிற் சேனையுடன் தங்கியிருந்தான். பிறகு, கள்ளிரவில் அவனதுசேனையானது, வழிநடந்து வந்தஇளைப்பினால் மெய்ம்மறந்து இனிதாகத் தூங்கிற்று; அப்போது எனதுவேவுகாரர்கள் அச்சேனையினுட்புகுந்து வேவுபார்த்துவந்தார்கள். பிறகு, எவ்விடத்தில் இலட்சுமணனுடன் இராமன் தங்கியிருந்தானோ, அச்சேனைக்குட் பிரஹஸ்தன் எனதுபெருஞ்சேனையுடன் புகுந்து, அதை முற்றிலும் இரவிலேயேஅழித்துவிட்டான். பட்டாக்கத்திகள், உழலைத்தடிகள், சிறிய சக்கரங்கள், இருப்புத்தடிகள், அரிவாட்கள், அம்புகளின் கூட்டங்கள், சூலங்கள், விளங்குகின்ற இரும்புப்பூண்கட்டிய கதைகள், தடிகள், தோமரங்கள், வேலாயுதங்கள், பெருஞ்சக்கரங்கள், உலக்கைகள் முதலான பலவகை ஆயுதங்களை அரக்கர்கள் எடுத்துக் கொண்டு, வானரர்கள்மீது எறிந்தார்கள். இராமர்தன்ருகத் தூங்கிக்கொண்டிருந்த சமயத்தில், போர்புரியுந் தன்மையுள்ளவனும் கைதேர்ந்தவனுமான பிரஹஸ்தன், ஒரு பெருங்கத்தியைத் தனதுகையிலெடுத்து, இராமன்தலையை விரைவாகவெட்டினான். அதைக்கண்டு, விபீஷணன் பயந்துஓடும்பொழுது, என்னைச்சேர்ந்த அரக்கர்கள்அவனைப் பிடித்து வென்றார்கள். இலட்சுமணனை, எல்லாவானரங்களுடனும் ஓட்டம்பிடித்தான். வானரமன்னவனுகியசுக்கிரீவனதுகழுத்தை அரக்கர்கள் முறித்துவிட்டார்கள். அதுமானை, அரக்கரால் தனது கவள்முறிந்து விழுந்துகிடக்கின்றன். ஜாம்பவானை, தனதுமுழங்காலாற்கிளம்பியோடப் பார்க்கையில், ராக்ஷஸர்களால், பலபட்டாக்கத்திகளால் வெட்டிக்கொல்லப்பட்டு, வெட்டிவீழ்த்தியமரம்போலச்சாய்ந்துகிடக்கின்றன். பகைவரைக் கொல்லுந்தன்மையுள்ள வானரக்காளைகளான மைந்தத்விவிதரென்ற ரீண்டஉடம்பையுடையஇருவரும் கத்தியினால்இடையிலே வெட்டுண்டு, பெருமூச்சுவிட்டுஅழுது, தங்களுடம்புமுழுவதும் இரத்தமோட மாண்டார்கள். பனஸன் பலாப்பழம்போற் பிளக்

கப்பட்டு விழுந்துகிடக்கின்றன. தீமுகன், பல நாரா சங்களாற் பிளவுண்டு குகையில் மாண்டுகிடக்கின்றன். மகாபலம்படைத்த குமுதன், பாணங்களால் வாய்திறவா மல் மடிந்தான். அங்கதனே அரக்கர்களின் பலபாணங்க ளினாற் பிளக்கப்பட்டவனாய், தனதுதோள்வலை தரையில் விழுந்துகிடக்க, தனதுவாயால் இரத்தத்தைக் கக்கிக்கொ ண்டு விழுந்துவிட்டான். வாயுவேகத்தால் கலைத்து ஓட் டப்பட்ட மேகங்கள்போல, மற்றைவானரர், எனதுயர்னை களாலும் தேர்வரிசைகளாலும் குதிரைகளாலும் கலைத்து நாசம்பண்ணப்பட்டார்கள். சிங்கங்களாற் பெரியயானை கள் அடிக்கப்படுவதுபோல, சிலவானரர்கள், அஞ்சி ஓடிக் கொண்டிருந்தபொழுது, அரக்கர்களாற் பின்புறத்திலடிக் கப்பட்டார்கள். சிலர் சமுத்திரத்தில் விழுந்தார்கள்; சிலர் ஆகாயமார்க்கமாய்க் கிளம்பியோடினர்கள்; ருக்ஷர்கள் வா னரர்களைபோலப் பெருமரங்களில் ஏறினர்கள். சமுத்திர க்கரையிலும் மலையிலும் காட்டிலும் சென்ற வானரர்களிற் பலர், அங்கங்குள்ள பிங்களவானரர்களாற் கொல்லப்பட் டார்கள். இவ்விதமாக, சேனைகளுடன், உனது கண வனை, எனதுசேனை வதைசெய்துவிட்டது. புழுதிமண்டி இரத்தத்தால் நனைந்துள்ள உன்கணவன்தலையை நான் இதோ கொண்டுவந்திருக்கின்றேன்" என்றான்.

பிறகு, பகைவர்களால் எளிதில் வெல்லமுடியாத வனாய் அரக்கர்தலைவனான இராவணன், சீதை கேட்கும் படி அங்கிருந்த ஓர் அரக்கியைப் பார்த்து "கொடியசெயல்களைப் புரியும் விதியுஜ்ஜிஹ்வனென்ற அரக்கனைச் சடிதியில் அழைத்துவா; அவன்தான் போர்க்களத்திலிருந்து இராமனுடையதலையைக் கொண்டுவந்தவன்" என்று கூறினன். அவ்விடத்தில் விதியுஜ்ஜிஹ்வன் வில்லுடனே அத்தலையைக் கொணர்ந்து சேர்ந்து தலையால்வணங்கி இராவணன்முன்பாக நின்

இராவணன் விதியுஜ்ஜிஹ்வனைக் கொண்டு, மாயாசீதைக் காட்டல்.

முன். பெரியநாக்கையுடைய விதியுஜ்ஜிஹ்வனென்ற அவ் வரக்கனை நோக்கி, மன்னவனுகிய இராவணன் "சீக்கிரம் சீதையின்முன்பாக இராமனுடையதலையை வை. எளிய வளான இச்சீதை தனது கணவனுடைய கடைசிநிலையை நன்முகப்பார்க்கட்டும்" என்முன். இப்படி இராவணன் சொன்னதும், அவ்வரக்கன் அழகான அத்தலையைச் சீதா தேவியின்முன்பாக வைத்துவிட்டு மறைந்து போனன். இராவணனும் இம்மூவுலகங்களிலேயும் கீர்த்திபெற்றுப் பெரிதாக விளங்கும் இராமருடைய வில்லை, விதியுஜ்ஜி ஹ்வனுடையகையினின்றும் வாங்கி, சீதையைநோக்கி, "இதுதான் இராமனுடைய நாண் ஏற்றப்பட்ட வில். இரவில் அம்மானுடனைக் கொன்றபிறகு, பிரகஸ்தன் இவ் வில்லை எடுத்துவந்தான்" எனக் கூறினன். அவ்வாறு விதியுஜ்ஜிஹ்வன் தலையைவைத்தபோதே அவ்வில்லையும் பூமியில் இராவணன் வைத்து, வெகுகீர்த்திபெற்றவளும் ஜனகருடைய குமாரியு மாகிய சீதாதேவியைப் பார்த்து, "இனி நீ என்வசமாகுக" என்று சொன்னன்.

மூப்பத்திரண்டாஞ் சருக்கம்:

சீதையின் புலம்பலும், இராவணன் சேனையைத் திரட்டலும்.

அந்தச்சீதாதேவி அத்தலையையும் உத்தமமான அவ் வில்லையும் பார்த்து, அநுமான் தன்னிடஞ்சொல்லியிருந்த சுக்கிரீவமகாராஜனது நட்பையும் இராவணன் சொல்லக் கேட்டு, கண்களும் முகத்தின்நிறமும் குடுமியும் நெற் றியும் அழகிய அந்தச்சூடாமணியும் தன்கணவருடைய வற்றைப்போன்றேயிருக்கக்கண்டு, இவ்வகையான எல்லா வடையாளங்களாலும் தனதுகணவரேயென்று நம்பின வளாய், துக்கத்தில்மூழ்கி, கத்துகிற அன்றிற்பேடு போ

ன்றகுரலுடன், கைகேயியை நிந்தித்துக்கொண்டு புலம்ப லாளுள்; "கைகேயீ! இப்பொழுது, மனம்நிரம்பிமகிழ் வாய்! குலத்திற்பிறந்த இந்தக்குமாரர் மடிந்தார். கலகம் செய்துவரும் உன்னுல், இக் குலமே வேருடன்அழிக்கப்பட்டது. வெகு நற்குணமுள்ள இராமர், உனக்கு என்ன கெடுதல்செய்தார்? எதற்காக அவரை மரவுரியணியச் செய்து, என்னுடன் நீ காட்டுக்குஓட்டினுய்" என்று இவ் வளவு சொல்லிவிட்டு, எளியவளான அச்சிதாதேவி துக் கத்தால் மெய்ந்நடுங்கி, ஒன்றுஞ்சொல்லத்தோன்றுதவ ளாய், அடியில்வெட்டப்பட்ட வாழைமரம்போலப் பூமி யில் விழுந்தாள். ஒருமுகூர்த்தகாலத்திற்குள் மூர்ச்சை கொஞ்சந்தெளிந்து, அறிவையடைந்து விசாலமான கண் களையுடையஅவள்,அத்தலையைமோந்து புலம்பலாளுள்:—

சீதை துயரத் தாற் கைகேயி யைப் பழித்தல்.

"மகாபாகுவே! வீரவிரதத்தை நடத்துந்தன்மையுள்ள வரே! அந்தோ! கெட்டேன்!! நான் தங் களுடைய கடைசிநிலையைக் கண்டறிந்த தனுல் கைம்பெண்ணுனேன். கணவன் முதலிலிறப்பது மனைவியின்தோஷ மென்று சொல்லப் பட்டிருக்கின்றது; நான் குற்றமற்றவளாயிருக்கையிலேயே எனக்குமுன்னமே நற்குணமுள்ள தாங்கள் மாண்டீர் கள்! துயரத்தின்மேல் துயரமடைந்து, சோகசாகரத்தில் மூழ்கியிருக்கும் என்னை, எவரொருவர் தூக்கிவிட முய ன்றுகொண்டிருந்தாரோ, அந்தத் தாங்களும் நாசமாய் விட்டீர்கள். இராகவரே! தங்களிடம் அன்புவைத்த எனதுமாமியாராகிய கௌசல்யை, கன்றையிழந்த பசு வைப்போலப் புத்திரரான தங்களை யிழந்து புத்திரஹீனை யாளுள். மனத்தாலும் அளவிட முடியாத பராக்கிரம முள்ளவரே! உங்களுக்குப் பூர்ணமான ஆயுளென்று பெரியோர்கள் சொன்னசொற்களெல்லாம் பொய்யாகமுடி ந்தனவே!! இராகவரே! அற்பஆயுளுள்ளவராய் விட்டீர்

சீதையின் பிரலாபம்.

களே!! அன்றி, எல்லாவற்றைக்காட்டிலும் மேம்பட்ட தான காலமே மதியையுண்டாக்குவ தாகையால், பெரி யோர்கட்கும் தங்கள் விஷயத்தில் ஆயுளின்உண்மைகண்டு பிடிக்கமுடியாமல் அக்காலவசத்தால் புத்தி மாறுபட்ட தோ? நீதிசாஸ்திரங்களே நன்முகஅறிந்த தாங்கள் விய சனங்களைப் போக்கிக்கொள்ளுவதில் வல்லீர்; இவ்வா று உபாயத்தையுணர்ந்த தாங்கள், எதிர்பாராத மரணத் தை எவ்வா று அடைந்தீர்கள்? தாமரைக்கண்ணரே! மிகக் கொடிய கருணையற்ற காலரர்த்திரியான்து தங்களே நன்மு கத் தழுவிக்கொண்டு, என்னைவிட்டுத் தங்களைத் தூக்கிப் போயிற்று. புருஷரிற் சிறந்தவரே! பருத்ததோள்களை யுடையவரே! கண்டவர்க்கெல்லாம் துயரத்தையுண்டாக் கும் நிலையை யடைந்துள்ள என்னைத் துறந்து, தாங்கள், காதலியைப்போலப் பூமியைத் தழுவிக்கிடக்கின்றீர்களே! வீரரே! பொன்னணியணிந்ததும் அதிகஆசைவைக்கப்பட் டதும் தங்களுடன் நானும் இடைவிடாமல் மலர்களாலும் சந்தனங்களாலும் பூசைசெய்ததுமாகிய இந்தத்தங்களது வில் இவ்வா று இருக்கின்றதே. குற்றமற்றவரே! எனது மாமனரும் தங்கள்தகப்பனருமாகிய தசரதரும் மற்று முள்ள பிதிரர்களும் ஆகிய இவர்களுடன், தாங்கள் சுவர்க் கத்தையடைந்தீர்கள்; இது நிண்ணம். தாங்கள் ஆகாயத் தில் நட்சத்திரவுருவங்கொண்டவர்களாய், சிறந்த தொழில் செய்பவர்கட்கு விருப்பமாயும் பரிசுத்தமாயு மிருக்கின்ற ராஜரிஷிவமிசத்தில் ஆசையொழிந்தீர்கள். மன்னவரே! என்னை ஏன் தாங்கள் திரும்பிப்பார்ப்பதில்லை? இளம்பிரா யத்தில் தாங்கள்மணந்த சிறுவயதுள்ள தங்கள்மனைவியல் லலோ நான்? காகுத்தரே! என்கையைப்பற்றித் தாங்கள் பாணிக்ரகஹணம் செய்தகாலத்தில், "உன்னுடன் கூடப் பிரியாமலிருந்துகொண்டு, நான் தர்மத்தைநடத்துவேன்" என்று தாங்கள் சொன்ன சொல்லை நினைத்துத் தூக்கப் பட்டுக்கொண்டிருக்கும் என்னை, தங்களிடம் அழைத்துக்

கொள்ளுங்கள். புத்திமான்களுக்குட்சிறந்தவரே! தங்களை விட்டுப்பிரிந்து துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் என்னை, இவ் வுலகத்தில்விட்டு, எக்காரணத்தால் தாங்கள்மட்டும் தனி யே மேலுலகஞ் சென்றீர்கள்? மங்களங்களுக்குத்தக்கதாய் என்னுல்மட்டும் ஆலிங்கனம் பண்ணப்பட்டதான தங் கள் மேனியை, மாமிசத்தையுண்ணும்விலங்குகள் நிச்சய மாய்ப் பிடுங்கிப் புசிக்கப்போகின்றனவே!! நாட்டை யடைந்தபிறகு, தக்ஷிணைகள்குறைவின்றியிருக்கும் அக்நி ஷ்டோமம் முதலிய யாகங்களைச் செய்து, முதுமைப் பிராயத்தில் அக்நிஹோத்ராக்நியால் தஹநஸம்ஸ் காரத்தைத் தாங்கள் ஏன் பெறவில்லை? நாட்டைவிட்டுப் புறப்பட்ட மூன்றுபெயர்களில் ஒருவராகிய இலட்சுமணர் மாத்திரம் திரும்பிப்போகப் பார்த்தால், கைலாசத்தை சோ கத்தில் முழுகியவராய் விசாரிப்பாரே! அப்படி அவர் கேட்கும்பொழுது, தங்களையும் தங்கள்நண்பர்சேனைகளை யும் அரக்கர்கள் இரவில் வதைத்ததை, அவர் நிச்சயமாகச் சொல்வார்; இராகவரே! அவர் தூங்கும்பொழுது தாங் கள் அரக்கர்களால் கொலைபண்ணப்பட்டதையும், நான் அரக்கன்வீட்டிற் சிக்கிக்கொண்டதையும் கேள்விப்பட்டு, மனம்விண்டு மாண்டுவிடுவார். கொடியபாவியாகிய என் னிமித்தம், இவ்விதமான சாவுக்குஏலாத மன்னவர்குமார ராகிய இராமர், ஒப்பற்ற வல்லமையிருந்தும், பெருங்கட லைத்தாண்டி, ஒரு குளப்படியில் மாண்டாரே! குலத்தை நாசஞ் செய்துவைக்கும் என்னை, இராமர், அறியாமல் கலி யாணம் பண்ணிக்கொண்டார். பெரியோர்புதல்வராகிய இராமருக்கு மிருத்யுவே பெண்டாகவாய்த்தது. நான் முற் பருவத்தில் யாராவதுசெய்ய எண்ணங்கொண்ட உயர்ந்த தானத்தை நிச்சயமாகத் தடுத்திருப்பேன்; அதன் பயனுகத்தான், எல்லாரையுங்காக்கின்ற வல்லமையுள்ள வரைக் கணவராகப்பெற்றும், போகத்தை நுகரவேண்டிய காலத்தில், நான் புலம்புகின்றேன். இராவண! என்னை

இப்பொழுதே இராமர்மேல் இருக்கும்படி நன்றுக வைப் பாய்; இப்படி பத்தினியைப் பர்த்தாவுடன்சேர்த்துவை; இவ்வாறு சிறந்ததொழிலைச் செய்க. என் தலையை அவர் தலையுடனும், என்னுடலை அவருடலுடனும் சேர்த்துவை; இராவணு! நான் எனது மகாத்துமாவாகிய கணவர்போன வழி போகின்றேன்" என்றுள். இவ்வாறு துக்கத்தால் பரிதபித்துக்கொண்டு நீண்டகண்களையுடைய அவள், தனது கணவன்தலையையும் அவர்வில்லையும் அடிக்கடி பார்த்துப் புலம்பினள்.

இவ்விதமாகச் சீதை அங்குப் புலம்பிக்கொண்டிருக் கையில், வாயில்காப்பானகிய ஓர்அரக்கன் இராவணனிடம் அஞ்சலிசெய்துகொண்டே வந்து, "வேந்தரே! தங்களுக்கு ஜயமுண்டாவதாக" என்று சொல்லி வணங்கி ஆசீர்வதித்து, சேனபதியாகிய பிரஹஸ்தன் வந்திருப்பதாகத் தெரிவித்தான். அவ்வரக்கன் இராவணனைநோக்கி "அமைச்சர்கள் அனைவர்களுடனும் பிரஹஸ்தர் வந்திருக்கின்றார்; பிரபுவே! தங்களைப் பார்க்க விரும்பிய அவர் என்னையனுப்பினர்; பெருமன்னவரே! தங்களுடையஅரசத்தன்மையால் தங்கள்கட்டளையைப் பெறுகிறவரையிற் பொறுக்கவேண்டியதும், அதியவசியமுமாகிய ராஜகாரியமொன்று இன்றியமையாததாக இருக்கின்றது; ஆகையால், சடிதியில் தாங்கள்போய் அவருக்குத் தரிசனம் கொடுக்கவேண்டும்" என்றான். அரக்கன் சொன்ன இதை இராவணன் கேட்டு, அசோகவனத்தை விட்டுப் புறப்பட்டு, மந்திரிகள் பார்க்குமாறு வந்தான். அவ்விராவணன் சபையிற்புகுந்து, தனது மந்திரிகளுடன் சேர்ந்து,இராமருடைய வல்லமையையும் நன்றுகச்சீர்தூக்கியறிந்தவனுய், தான் செய்யவேண்டிய காரியங்கள் அவ்வளவையும் ஏற்பாடுசெய்துகொண்டு, அப்பொழுதைக்கு ஏற்ற காரியத்தைச் செய்யலானன்.

இராவணன் அசோகவனிகையினின்றுபோய் மந்திராலோசனை செய்தல்.

இராவணன் அசோகவனிகையென்னும் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டதும், அத்தலையும் உத்தமமான அவ்வில்லும் தாமாகவே மறைந்துபோயின.

இராவணன் சேனையைத் திரட்டுதல்.

ராக்ஷஸராஜனும், பயங்கரமான பராக்கிரமமுள்ள தனது மந்திரிமார்களுடன் இராமனிடம் தான் செய்ய வேண்டிய தொழிலைப் பற்றி அப்போது எண்ணினான். காலனுக்கு ஒப்பாய், அரக்கர்மன்னவனான இராவணன், தன்க்குச் சமீபத்திலிருந்துகொண்டு தனது நன்மையையேநாடும் தன்சேனாபதிகளையெல்லாம் நோக்கி, "நீங்கள் எல்லோரும், பெரியகுணிலாலெறிந்து பேரிகைகளை முழக்கி எனது சைனியங்களைத் திரட்டுங்கள்; காரணம் மட்டுஞ் சொல்லவேண்டாம்" என்றான். அந்தச்சேனாபதிகளும் "அப்படியே" என்று ஒத்துக்கொண்டு, உடனே பெருஞ்சேனையைத் திரட்டி, அவ்வாறே சேனைகள் திரண்டு வந்ததையும், அவைகள் போர்புரியச்சித்தமாயிருப்பதையும் தங்களரசனிடம் தெரிவித்தார்கள்.

முப்பத்துமூன்றுஞ் சருக்கம்:
விபீஷணர்மனைவியாகிய ஸரமை சீதையைத் தேற்றுதல்.

விதேஹ வம்சத்தில் தோன்றிய சீதாதேவி மோகமடைந்ததை அவளிடத்துஅன்புள்ள தோழியாகிய ஸரமையென்ற ராக்ஷஸி பார்த்து, அவளிடத்தில் மிக்கஅன்பினால் அங்குவந்தாள். அரக்கர்கள் மன்னவனால் மோகமடைந்து மிகவும் துக்கமடைந்திருக்கிற சீதாதேவியை, மெதுவாகப் பேசுந்தன்மையுள்ள ஸரமை, அப்போது சாந்தப்படுத்தலானாள். அவள், முதலில் இராவணனாலேவப்பட்டுச் சீதை

சீதையை ஸரமை தேற்றுதல்.

யைப் பாதுகாக்க ஏற்பட்டும், மிக்கதையுள்ளவளாகவும், உண்மையுள்ளவளாகவு மிருந்துகொண்டு, தான்காக்கின்ற சீதையுடன் அவ்வசோகவனிகையில் நட்புள்ளவளானுள்ளன்றே; அவள், அங்குவந்தபொழுது, சீதை பிரஜ்ஞைதப்பிப் பூமியில் மூர்ச்சையாகக் கிடந்ததையும், பிறகு பூமியிற் புரண்டெழுந்த பெண்குதிரைபோலத் தேகம்முழுமையும் தூசுநிரம்பப் புரண்டெழுந்ததையும் கண்டாள். நல்ல நோன்புள்ள அவ்வுத்தமி, தோழமையினல் அச்சீதையைப் பின்வருமாறு உண்மைகூறிச் சாந்தம்பண்ணத் தொடங்கினுள்: "சீதே! உமது துயரத்தை அகற்றுங்கள்; அஞ்சுந்தன்மையுடையவரே! உமது மனத்தில் வருத்தமென்பதே வேண்டாம்.

சீதையை ஸரமை தேற்றுதல்.

இராவணன் தங்களிடஞ் சொன்னதும், அப்பொழுது நீங்கள் சொன்னதுமாகிய எல்லாவற்றையும், நான் தங்களிடம் வைத்திருக்கும் நட்பினல் நிர்ஜ்ஜநமான ஆகாயத்தில் மறைந்து நின்றபடியே இராவணனிடம் அச்சமில்லாமற் கேட்டேன்; எனெனில், தங்களைவிட எனக்கு என்னுயிர் பெரிதன்று. மைதிலீ! எக்காரணத்தால் மிக்க குழப்பங்கொண்டு, அரக்கர்கள்மன்னவனுகிய இராவணன் இவ்விடத்தைவிட்டுப்போனனே, அதுமுழுதும் எனக்கு நன்றாகத்தெரியும். மகாபிரசித்தரான இராமரைத் தூக்கத்திற் கொல்வது, ஒருபொழுதும் நடவாதகாரியம்; மானிடர்களுக்குட் புலியான அவ்வீரரை, வதைசெய்வதே முடியாது. விருக்ஷங்களைப் பிடுங்கிக்கொண்டு போர்புரியும் வானர வீரர்களை, ஒருபொழுதும் வதைக்கமுடியாது: இந்திரனுக்கு தேவர்கள் இரட்சிக்கப்படுவதுபோல, அவர்கள் இராமரால் பாதுகாக்கப்படுகிறார்களன்றே! நீண்டும் உருண்டுமுள்ள கைகளமைந்தவராய், எல்லாப்பாக்கியங்களும் பெற்றவராய், விசாலமான மார்பு அமைந்தவராய், ஒளியுள்ளவராய், விற்பிடித்தவராய், அழகான அவயவங்களைப் பொருந்தியவராய், தருமாத்துமாவாய், உலகத்திற் பிர

சித்தராய், பராக்கிரமமுள்ளவராய், எப்போதும் தம்மை யும் மற்றவர்களையும் பாதுகாப்பவராய், நீதிநூல நன் முக அறிந்தவராய், தமது சத்துரு சேனைகளை நாசஞ் செய்பவராய், எண்ணுதற்கும் முடியாத பலமும் வல்ல மையு முள்ளவரா யிருக்கின்ற இராகவர், தமது தம்பி யாகிய இலட்சுமணரோகூட க்ஷேமமாக இருக்கின்றார். சீதே! தமதுபகைவர்களைத் தவிக்கச்செய்கின்ற அந்தச் சீமான், கொல்லப்படவேயில்லை. எப்பொழுதும் செய்யக் கூடாத செயல்களைச் செய்வதிலே கருத்துள்ளவனுய், எல் லாப்பிராணிகளுக்கும் சத்துருவாய், மிகக் கொடியவனுய், மாயையைக் கற்றவனன் இராவணன், உம்மிடத்தில் இம் மாயையைக் காட்டினன். இன்றுமுதல் உமது எல்லா வகைத்துக்கங்களும் நீங்கின; நற்காலம் தங்களை நாடிவந்து விட்டது; பாக்கியலட்சுமி உங்களை நிச்சயமாக அடைந்து விட்டாள். நான் சொல்லப்போகின்ற இனியதான சமா சாரமொன்றைக் கேளுங்கள்; வானரசேனையுடன், இராமர், சமுத்திரத்தைத்தாண்டி, சமுத்திரத்தின் தென்கரையில் வந்து இறங்கிவிட்டார். அவ்விடத்திலுள்ள சேனைகளாற் பாதுகாக்கப்பட்டவராய்த் தமது மனோரதம் நிறைவேறிய இராமர், இலட்சுமணருடன் வீற்றிருப்பதை, நான் பார்த் தேன். இவ்விராவணனுல் அனுப்பப்பட்ட அரக்கர்களும் வெகுவேகமாகச் சென்று பார்த்து, இராமர் சமுத்திரத் தைக்கடந்து இக்கரைசேர்ந்த சமாசாரத்தையே இங்குக் கொணர்ந்தார்கள். நீண்ட கண்களையுடையவரே! ராக்ஷஸ ராஜனை இராவணன் அந்தச் சமாசாரத்தைக் கேட்டு, எல்லாமந்திரிமார்களுடனும் சேர்ந்து மந்திராலோச்சனை செய்கின்றன்" என்றுள்.

சைனியங்கள் போர்க்குச் சன்னத்தப்படுதல்.

இவ்விதமாக அவ்வரக்கி சீதையினிடஞ்சொல்லிக் கொண்டிருந்தபொழுதே, சைனியங்கள் செய்யும் போரைப்பற்றிய பூர்ணமான முயற்சியால், வெகு பயங்கரமாகச் செய்த சத்தம் கேட்கலாயிற்று. குறுந்தடியால் எறியப்படும் முரசத்தினது பேரொலி கேட்டது.

அதுகேட்டு, வெகுமதுரமாகப்பேசும் ஸரமை, சீதாதேவியைப் பார்த்துச் சொல்லலானாள்:—

மீண்டும் ஸரமை யுத்த ஸந்நாஹத்தைக்காட்டிச் சீதையைத் தேற்றுதல்.

"அஞ்சுகந்தன்மையுடையவரே! பயங்கரமான இந்தப்பேரிகை, போர்க்குச் சித்தமாக்குவது; மேகம்போல முழங்கும் கம்பீரமான பேரிகையின் சத்தத்தைச் சற்றுக் கேளுங்கள்; அரக்கர்கள் மதயானைகளை அலங்கரிக்கின்றார்கள்; தேரிற்குதிரைகளைப் பூட்டுகின்றார்கள்; ஆயிரக்கணக்கான போர்வீரர்கள், ஈட்டியைக் கைக்கொண்டு, குதிரைமீதேறிக்கொண்டு மகிழ்கின்றனர். காலாட்களான போர்வீரர்கள், ஆங்காங்குப் போர்புரியவேண்டிய ஏற்பாட்டுடன் எழுந்துசேர்கின்றார்கள். வேகத்துடன் ஒலித்துக்கொண்டு விழும் அலைக்கூட்டங்களாற் சமுத்திரம் விளங்குவதுபோல, பார்ப்பதற்கு வெகு அழகாகக் காணப்படுஞ் சேனைகளால் ராஜவீதிகள் நிரம்புகின்றன. தருவின்றி விளங்குகிற ஆயுதங்களாலும், கேடயங்களாலும், உடற்கவசங்களாலும், தேர் குதிரை யானை இவைகளாலும், தங்கள் மேனியை அலங்காரஞ் செய்துகொண்டிருக்கும் அரக்கர்களாலும் உண்டாகின்ற ஒளியானது, வெயிற்காலத்திலே வனத்திற்பற்றியெரிகின்ற நெருப்பினது ஒளிபோலப் பிரகாசிப்பதைப் பாருங்கள். மணிகள் ஒலிப்பதையும், இரதங்கள் ஓடுகின்ற ஓசையையும், குதிரைகள் கனைப்பதையும், பறைகள் அடிக்கப்படுகின்ற அரவத்தையும் கேளுங்கள். தங்கள் தங்கள் கைகளில் ஆயுதங்களை ஏந்தி, மன்னவனைத் தொடர்ந்துசெல்கின்றவர்களான அரக்கர்களின் சன்னாகம், மயிர்ச்சிலிர்ப்படையும்படி இங்கு நெருக்கமாக இருக்கின்றது. தங்களது சோகத்தைப் போக்குஞ் சம்பத்து வந்துவிட்டது; அரக்கர்களுக்கு அச்சமுண்டாய்விட்டது. தாமரையிதழுக்கு ஒப்பான் கண்களையுடையராய், கோபத்தை வென்றுள்ளவராய், எண்ணுதற்கு ஒண்ணுத பராக்கிரமமுள்ளவராய்த் தங்கள்கணவரான இராமர், அசுரர்களை

இந்திரன்வென்றதுபோல, அரக்கர்களையெல்லாம்வென்று, யுத்தத்தில் இராவணனைமாய்த்து, உம்மை அழைக்க வருவர். பகைவரைக்கொல்லுந்தன்மையுள்ள இந்திரன் விஷ்ணுவுடன் சேர்ந்து பகைவர்கள்மேல் தமது வல்லமையைக் காண்பித்ததுபோலவே, இலட்சுமணருடன் இருந்து இராமர் அரக்கர்கள்மேல் தமது பராக்கிரமத்தைக் காண்பிக்கப் போகின்றார். சத்துரு கொல்லப்பட்டவுடன், இராமர் உம்மைத்தேடிவர, பதிவிரதையாகிய தாங்கள் அவர்மடியில் உட்கார்ந்திருப்பதை, நான் என்கண்களாரக் காணப்போகின்றேன். கட்டழகுடையவரே! அப்போது தங்களையடைந்து தழுவிக்கொள்ளப் போகின்ற அவ்விராமரது விசாலமான மார்பில், தாங்கள் ஆனந்தக்கண்ணீர் வடிப்பீர்கள். தேவீ! சீதே! பலமாதங்களாகப் பின்னிவிடப்பட்டுத் தொங்கும் உமதுகூந்தலை, இராமர், அவிழ்த்துப் பின்னுமாறு செய்வார். தேவீ! பூர்ணசந்திரன் உதித்ததுபோலப் பிரகாசிக்கும் அவர்முகத்தைக் கண்டவுடனே, பாம்பு தனது தோலையுரிப்பதுபோல, உமது சோகத்தை நீங்கள் அகற்றப்போகின்றீர்கள். மைதிலீ! சுகத்திற்கு உரிய இராமர், இராவணனைப்போரிற்கொன்று, விரைவாக காதலியாகிய தங்களைச் சார்ந்து, தமதுமனோரதம் நிறைவேறப்பெற்றுச் சுகமாக வாழப்போகின்றார். மகாத்துமாவும் வீரருமான அவ்விராமரை யடைந்து, தாங்கள், நல்ல மழைபொழியப் பெற்ற பூமி பயிரால்விளங்குவதுபோலக் களிப்படையப் போகின்றீர்கள். குதிரை மண்டலமாகச்செல்வதுபோல எக்கடவுள் மேருமலையைச்சுற்றி விரைவாக வலம் வருகின்றாரோ, பகலையுண்டாக்குகின்ற அக்கடவுளை நீங்கள் சரணமடையுங்கள்; அவர் எல்லாப்பிராணிகளும் பிழைத்திருப்பதற்குக் காரணரன்றே!" என்றாள்.

முப்பத்துநான்காஞ் சருக்கம்:

ஸரமை இராவணசபையில் நடந்தவைகளைச் சீதைக்குத் தெரிவித்தல்.

இராவணன் சொன்ன சொற்களைக் கேட்டதனல் தாபங்கொண்டு மோகமடைந்திருந்த சீதாதேவியை, ஸரமை, பூமியை மழையானது நீராற் குளிரச்செய்வதுபோல, தனது வார்த்தைகளாற் சந்தோஷப்படுத்தினுள். பின்னும், காலத்திற்கு ஏற்றபடி நடக்கவல்ல சீதாபிராட்டியின் தோழியாகிய அந்த ஸரமை, தனதுதோழிக்கு நன்மைசெய்யவேண்டுமென்ற எண்ணங்கொண்டவளாய், புன்னகையுடன் அக்காலத்துக்கு ஏற்றபடி பேசலானுள்:— "கறுத்த கண்ணையுடையவரே! நான் இங்குநின்றும் போய், இராமரிடம் நீர் வினவுவதாக அவர்க்ஷேமத்தைவிசாரித்து, ஒருவர் கண்ணிலும் படாமல் திரும்பிவர, எனக்கு வல்லமையுண்டு. பிடிப்பற்ற ஆகாயத்தில் நான் செல்லும்பொழுது, வாயுபகவானும் கருடனுங்கூட என்னைத் தொடர வல்லவரல்லர்" என்றுள்.

ஸரமைஇராமரது க்ஷேமத்தைவிசாரித்து வருவதாகக்கூறல்.

இவ்வாறு அந்த ஸரமை சொன்னதும், சீதை சிறிது சோகத்துடன் கூடினதாயும் அழகானதாயுமுள்ள வார்த்தையினல் இனிதாக மீண்டுஞ் சொல்லுற்றுள்:— "ஆகாயமட்டுமல்ல, பாதாளலோகஞ் செல்லவேண்டுமென்றுலும் தங்களுக்குச் சாமர்த்தியமுண்டு; மற்றை எவர்களாலும் செய்யமுடியாத காரியங்களைத் தாங்கள் எண்ணிமித்தம் செய்வீர்களென்பதும் எனக்குத்தெரியும். எனக்கு ஏதாவது இஷ்டமான காரியம் செய்யவேண்டுமென்று உங்கள்மனத்தில் தோன்றியிருந்தால், அந்தப்புத்தி நிலையாகஇருக்குமேயானல், அங்குப்போய், இராவணன் இப்

பொழுது என்னசெய்துகொண்டிருக்கின்ருனென்று அறிந்துவருமாறு நான்விரும்புகின்றேன். அந்த இராவணனே, வெகுகொடியவன்; மாயையையே வலிமையாகக்கொண்டவன்; பகைவர்களை எப்பொழுதும் கதறும்படி செய்கின்றவன்; உட்கொள்ளப்பட்ட மதுவானது உடனே மயக்கமுண்டாக்குவதுபோல, கொடியதன்மையுள்ள அவன் தனது மாயைவித்தையால் என்னை மயக்குகின்ருன். என்னைப் பாதுகாக்கவென்று இங்கு வைத்திருக்கும் கொடிய அரக்கியரைக் கொண்டு, என்னைச் சொல்லினலும் செய்கையினலும் இடைவிடாது பயமுறுத்திக்கொண்டிருக்கின்ருன். நான், எப்பொழுதும் பயந்தவளும் கலக்கமுற்றவளுமாக இருக்கின்றேன்; என்மனம் நிச்சிந்தையாகவில்லை. அசோகவனத்திலிருக்கின்ற நான் இராவணனிடத்துள்ள அச்சத்தால் தவிக்கின்றேன். அந்த இராவணன் என்விஷயமாக என்ன ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்ருனென்பதையும், கடைசியாக என்ன உறுதிபண்ணியிருக்கின்ருனென்பதையும் அறிந்துவந்து தாங்கள் சொல்லவேண்டும். அதுதான் தாங்கள் எனக்குப் பண்ணும் பேருளாகும்" என்ருள்.

சீதை ஸரமையை இராவணன் கருத்தை யறிந்து வருமாறு சொல்லுதல்.

இவ்விதமாகச் சீதை சொல்லவே, மதுரமாகப்பேசும் ஸரமை அச்சீதாதேவியின்கண்களிலிருந்து பெருகிய கண்ணீரைத் துடைத்து அவளை நோக்கி, "ஜானகி! இது தங்கள் அபிப்பிராயமென்ருல், நான் இதோசென்று பகைவனுடைய எண்ணங்களையறிந்து திரும்பி வருகிறேன்; பாரும்" என்ருள். இவ்வண்ணஞ் சொல்லிப் பிறகு ஸரமை அவ்விடத்தினின்றும் இராவணனுக்கருகிற்சென்று, அவன் தனது மந்திரிமார்களுடன் செய்துகொண்டிருந்த மந்திராலோசனை அவ்வளவையும் கேட்டிருந்து, அவன்கொண்டிருந்த உறுதியான எண்ணத்தை யறி

ஸரமைஅவ்வாறே உடன்பட்டுச் செய்தல்.

ந்துகொண்டவளாய், அவ்விடம் விட்டுத் திரும்பி, விரை வாக அசோகவனம் வந்து சேர்ந்தாள்; அவள் மீண்டு அவ்விடம் வந்ததும், அங்குத் தன்னையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றவளும் தாமரைமலரை விட்டுவந்த இலக்குமி போன்றவளுமாகிய சீதை எங்கியுட்கார்ந்திருந் ததைக் கண்டாள். சீதையும், இனிமையாகப்பேசும் அந்த ஸரமையை வெகு அன்புடன் கட்டித்தழுவிக் கொண்டு உட்காருமாறு ஆசனமுங் கொடுத்து, "தாங் கள் இவ்விடத்திற் சுகமாக உட்கார்ந்துகொண்டு, துராத் துமாவும் கொடியவனுமான அந்த இராவணன் என் விஷயமாக என்ன உறுதிசெய்திருக்கின்ரு னென்பது முழுதையும் உள்ளபடி சொல்லுக" என்று கேட்டாள். மேனிநடுக்கத்துடன் சீதை இவ்வாறு விஞவியதும், இரா வணன் தனது மந்திரிகளுடன் பேசுங்காலத்தில் அவன் சொல்லியதையெல்லாம் ஸரமை சொல்லலுற்ருள்: "விதே ஹவமிசத்திற் பிறந்தவரே! இராவணனிடம், அவனுடைய தாயும், கிழமந்திரியாகிய அவித்தரென்பவரும், "மானுட வருக்குமரியாதைபண்ணிச் சீதையைத் திருப்பிக்கொடுத்து விடுங்கள்; இராமனுடையபராக்கிரமத்துக்கு,முன்பு அவன் ஜநஸ்தாநத்திற் செய்த ஆச்சரியமான காரியங்களே போதுமான சாட்சியாகும்; அநுமான் சமுத்திரத்தைத் தாண்டிவந்து, சீதையை நேரிற் கண்டு பேசி, போரில் அரக்கர்களை வதைத்ததையும் காணவில்லையோ? எந்த மநுஷ்யனுடையதூதன்தான் உலகத்தில்இவ்வாறுசெய்ய வல்லவன்?" என்று பலபடியாகத் தங்களைத்திருப்பிக் கொடுத்துவிடும்படியே போதித்தார்கள். வயதுசென்ற மந்திரிமார்களும் அவித்தரும் பலவிதமாக இவ்வாறு புத்தி சொல்லியும், செல்வத்தில் ஆசைகொண்டவன் பிறரிடமிரு ந்து அபகரித்த பொருளைத் திருப்பிக்கொடுக்க எண்ணங் கொள்ளமாட்டாதவாறுபோல, மைதிலீ! தங்களைவிட்டிட அவனுக்கு மனம்வரவில்லை. போரில் தனது பிராணனை

விடாமல் உங்களை விடுவதில்லை யென்ற இதுதான், அக் கொடிய அரக்கன் தனது எல்லாமந்திரிகளுடனுங் கூடி நிச்சயத்துக்கு வந்தது. இவ்விதமாக அவனுக்கு உறுதி யுண்டானது, மரணத்திலுள்ள ஆசையினாலாகும்: எல்லாவரக்கர்களும் தானும் போரிற் கொல்லப்படு தற்குமுன்பு பயந்து தங்களைத் திருப்பிக்கொடுக்கத் துணிய வில்லை. கறுத்த கண்களையுடையவரே! எப்படியாவது கூரான பாணங்களால், இராவணனைப் போரில் இரா மர் கொன்றுவிட்டுத் தங்களை அயோத்திக்கு அழைத்துப் போவார்" என்றான்.

வானரர்களின் யுத்தஸந்நாஹம்.

ஸ்ரமை இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்கையி லேயே, பேரிகை சங்கம் முதலியவைகள் ஒலிக்க உண்டாகும் போரொலி, இவ் வுலகத்தை நடுங்கச்செய்துகொண்டு, வானர சேனையிலிருந்து கிளம்பலாயிற்று. அந்தவானரசைனியத் தின் சத்தத்தை இலங்கையிலிருந்த இராவணனது ஏவ லாளர்கேட்டு, தமது காந்திகுன்றி ஏக்கமடைந்தமன முள்ள வர்களாய், தமது மன்னவன் செய்தது குற்றமாகையால் தமக்கு ஒருபொழுதும் நன்மைவிளையாதென்று எண்ணி னார்கள்.

முப்பத்தைந்தாஞ் சருக்கம்: மால்யவான் இராவணனுக்குக் கூறிய புத்தி.

தனதுபகைவர்நகரங்களை நாசம்பண்ணும் வல்லமை யுள்ள இராமர், பலவகை வாத்திய கோஷத்தோடு, இலங்கையை நோக்கி வந்துகொண்டிருந்தார். அரக் கர்கள்மன்னவனாகிய இராவணன், அந்தச் சத்தத்தைக் கேட்டு, ஒருமுகூர்த்தகாலம் ஆலோசித்து, மந்திரிகளைப்

பார்த்தான். பிறகு, உலகத்தைத் தவிக்கச்செய்பவனும் கொடியவனும் மகாபலசாலியுமாகிய அவ்விராவணன் அங்கிருந்த அமைச்சர்களை விளித்து, சபை முழுதும் நடுங்கும்படி "இராமன் சமுத்திரத்தைத் தாண்டியதைப்பற்றியும், அவன் வல்லமையைப்பற்றியும், அவன் சைனியத்தின் திரட்சியைப்பற்றியும், நீங்கள் சொன்னவைகளையெல்லாம் நான் கேட்டாயிற்று. நீங்கள் யுத்தம்பண்ணுவதில் உண்மையான வல்லமையுள்ளவர்களென்பதையும், அப்படியிருந்தும் இராமனுடைய பராக்கிரமத்தை யுணர்ந்து ஒருவர்க்கொருவர் வாயைமூடிக்கொண்டு பார்த்துக் கொண்டிருப்பதையும் நான் அறிவேன்" என்று பழித்து உரைத்தான்.

இராவணன் சபையோரைப் பழித்தல்.

அப்பொழுது, வெகுபுத்திமானும் இராவணனுடைய கிழப்பாட்டனுமாகிய மாலியவானென்ற ராக்ஷஸ மந்திரி, இராவணன் வார்த்தையைக்கேட்டுச் சொல்லலுற்றான் :— "அரசனே! எந்தஅரசன் விதிகளை நன்றாகக்கற்றவனாய், நியாயத்தை அநுசரித்து அரசாளுகின்றானோ, அவன்தான் வெகுகாலம் அரசாள்வான்; தனது சத்துருக்களையும் தனக்குஅடங்கும்படி செய்வான். காலத்திற்குத் தக்கபடி தனது பகைவர்களுடன் சந்திபண்ணிக்கொண்டும், போர்புரிந்துகொண்டும் தனதுபக்கத்தைவளர்க்கும் மன்னவன், பெரியஐசுவரியத்தை யனுபவிப்பான். ஓர் அரசன், தனது சத்துருவுக்குச் சமானபலமுள்ளவனையும் தாழ்ந்தபலமுள்ளவனையும் சந்திபண்ணிக் கொள்ளவேண்டும். பலத்தால்மேம்பட்ட மன்னவன் தன்சத்துருவை அலட்சியமாக எண்ணமற் போர்புரியவேண்டும். ஆதலால், இராவண! இராமனுடன் சமாதானஞ்செய்தலே தகுதியாக எனக்குத் தோன்றுகின்றது; யார்மூலமாகச்சண்டைநேர்ந்ததோ, அந்தச்சீதையை, இராமனுக்கேகொடுத்து

மால்யவான் கூறும் நீதி.

விடு; எல்லாத்தேவரிஷிகளும் கந்தருவர்களும் அவ்விராம னுக்கு ஜயமுண்டாகவேண்டுமென்று விரும்புகின்றார்கள். அவனுடன் உனக்கு விரோதம்வேண்டாம். ஆகையால், நீ அவனிடம் சந்திசெய்ய எண்ணங்கொள்வாயாக. பிரம தேவர் தேவாசுரர்கட்குத் தர்மம் அதர்மம் என்ற இரண்டு பட்சங்களை உண்டாக்கினர்; ஆகவே, அவை அவர்களைச் சார்ந்தவை. இராவணு! தர்மபட்சம் மகாத்துமாக்களா கிய தேவர்களைச் சேர்ந்த தென்றும், அதர்மபக்ஷம் அசுரர்களையும் அரக்கர்களையும் சேர்ந்த தென்றும் சொல் லப்படுகின்றது. எப்போது தர்மம் அதர்மத்தை விழுங்கு கின்றதோ, அது கிருதயுகமாகும். அதருமம் தருமத்தை விழுங்குவது எப்போதோ, அப்போது கலியுகம் வந்துவிடு கின்றது. நீ திக்விஜயஞ்செய்யும்படி உலகத்தில் திரிந்தபொ ழுது, தருமத்தை நாசஞ்செய்தாய்; அதருமத்தைக் கைக் கொண்டாய்: அதனல், நமது சத்துருக்கள் நம்மைவிட அதிக பலசாலிகளாக இருக்கின்றார்கள். அதருமமானது, உன்னுடையஅஜாக்ரதையினல் வளர்ந்து,நம்மையேவிழுங் கத்தொடங்கிவிட்டது; மேலும், தேவர்கட்கு அநுகூலமாக இருந்து, தேவர்களின்பட்சத்தை வளர்க்கின்றது. விஷயங் களில் ஆசைவைத்த உனக்குச் சிற்சிலகாரணத்தால், அக் கினிக்கு ஒப்பான முனிவர்களுடையபகை நன்றுகஉண்டாய் விட்டது. கொழுந்து விட்டெரியுந் தீப்போல் விளங்குகின்ற அவர்களது வல்லமையை, ஒருபொழுதும் தடுக்கமுடியாது. தவத்தினற் பரிசுத்தர்களாய், எப்பொழுதும் தருமத்தை வளர்ப்பதில் ஊற்றமுள்ளவர்களான அவ்வந்தணர்கள், சிறந்தபலவகையாகங்களைச் செய்கின்றார்கள்; அக்கினிகளி லும் முறைப்படி ஹோமம்பண்ணுகின்றார்கள்; வேதங் களையும் உயர்ந்தகுரலால் ஓதுகின்றார்கள்; அரக்கர்களை அவமானஞ்செய்துகொண்டு, வேதகோஷங்கள் அவர்களி டத்தினின்று கிளம்புகின்றன; இவற்றல், கோடைக்கா லத்தில் மேகங்கள் ஓடிவிடுவதுபோல, பலதிசைகளைநோ

க்கி அரக்கர் அஞ்சியோடுகின்றார்கள். அக்கினிக்குச்சமான ரான முனிவர்கள் செய்கின்ற அக்கினிஹோத்ரத்தாற்கிள ம்புகின்ற புகையானது,பத்துத்திசைகளிலும்பரவி அரக்கர் களின்வலிமையைக்கவர்கின்றது: உறுதியானநோன்புள்ள அவ்வந்தணர்கள் அவ்வப்புண்ணிய தலங்களிற்செய்கின்ற கொடிய தவமன்று, அரக்கர்களை எரித்து அழிக்கின்றது. நீ, தேவதாகவயக்ஷர்களிடமிருந்து மரணமில்லை யென்று தான்வரம் பெற்றிருக்கின்றாய் ; மிக்கவலிமையுள்ள மாலு டர்களோ, வாநரர்கள் ரிக்ஷர்கள் கொண்டைமுசுக்கள் என்ற சேனையுடன், உறுதியான பராக்கிரமமுள்ளவராய், இங்குவந்து கர்ச்சித்துக்கொண்டுநிற்கின்றார்கள். பலவகை யாகத் தோன்றுகின்ற பயங்கரமான உத்பாதங்களைப் பார்ப்பதனாலும், அரக்கர்களுக்கெல்லாம் நாசம் வந்து விட்டதென்பதாகவே நான் எண்ணுகின்றேன். கொடிய மேகங்கள், கேட்கப்பிடியாதபடி பயங்கரமாக இடித் துக்கொண்டு, இலங்கையைச்சுற்றி, கொதிக்கின்ற இரத் தத்துளிகளை வர்ஷிக்கின்றன ; நமதுவாகனங்கள், அழுது கொண்டு கண்ணீரைப்பெருக்குகின்றன; துவசங்கள், இழி ந்துபோய் அழுக்கடைந்தனவாய் நிறம்மாறி முன்போல் விளங்காம லிருக்கின்றன. கொடிய நரிகளும், கழுகுகளும், வெகுபயங்கரமாக ஊளையிட்டுக்கொண்டும் கத்திக்கொண் டும் எப்பொழுதும் இலங்கையிற்புகுந்து கூட்டங்கூடுகின் றன. கருநிறமுள்ள பெண்வடிவாகிய பிரதிமைகள், தூக் கத்தில் எதிர்நின்று, வீடுகளிலுள்ளவஸ்துக்களைத் திருடிக் கொண்டு, பிரதிகூலமாகப்பேசி, வெண்மையான தங்கள் பற்களைக்காட்டிச் சிரித்துநிற்கின்றன. வீடுகளிலுள்ள பலி யிடுதற்குரிய ஹவிஸ்ஸுகளை, நாய்கள் புசிக்கின்றன. மாடு களின்வயிற்றிலே, கழுதைகளும் கோவேறுகழுதைகளும் எரு களும் பிறக்கின்றன. பூனைகள் புலிகளுடனும், பன்றி கள் நாய்களுடனும், கின்னரர்கள் அரக்கர்களுடனும் மானிடர்களுடனும் சேர்கின்றார்கள். வெளுப்பும் சிவப்பு

மான கால்களையுடைய கபோதங்களென்ற பறவைகள், தெய்வச்செயலாக அரக்கர்களுக்கு நாசம்விளைவதை வெளியிடுமாறு சஞ்சரிக்கின்றன. வீட்டிலுள்ள கிளிகள் வீசி கூசீ யென்று இனிமையில்லாமற் கூவுகின்றன. பறவைகளும் மிருகங்களும் எல்லாம் தோல்வியடைந்தும், கலகம் பண்ணிக்கொண்டு கூட்டமாக ஓடுகின்றன : சூரியனுக்கு எதிரில்நின்று புலம்புதலையுஞ் செய்கின்றன. மிகக்கொடிய விகாரமான தோற்றத்தோடுவெகுபயங்கரமாய்க்கறுப்பும் மஞ்சளுமான வர்ணமுள்ள முண்டமான யமன், தினந் தோறும் ஒவ்வொரு வீட்டிலும் நுழைந்து பார்ப்பது போலத் தோன்றுகின்றது. இவைகளன்றி, இன்னும் பலவிதமாகவும், கொடிய நிமித்தங்கள் காணப்படுகின்றன. இவைகளை அறிந்து, செய்யவேண்டுவதை ஆலோசித்துநிச்சயித்து,இனி வருங்காலத்துக்கு ஏற்றபடி தொழில்செய்க" என்றான். இவ்விதமாகச் சிறந்த மந்திரிமார்களுள் மிகுந்தபராக்கிரமமுள்ள பலவானான மாலியவான் அச்சபையில் இராவணனிடஞ் சொல்லி, அவனுடைய கருத்தை முழுதும் ஆராய்ந்து, இராவணனை, ஆகாரத்தாலுணர்ந்து, அதற்குமேல் ஒன்றும் பேசாமல் தனது வாயை மூடிக்கொண்டான்.

மூப்பத்தாரூஞ் சருக்கம் :
இராவணன் இலங்கையைக்காக்குமாறு சேனையை வகுத்துவைத்தல்.

அவ்வண்ணம் தனதுநன்மையைநாடி மாலியவான் சொன்ன சொற்களை, காலத்தின்வசத்திற் சிக்கிக்கொண்ட துராத்துமாவாகிய இராவணன் சகிக்கவில்லை. அவன் கோபத்திற்கு வசப்பட்டவனாகிப் புருவங்களை நெறித்துக் கொண்டு, கோபத்தாற் கண்கள்சுழல, அந்தமாலியவானை

நோக்கிப் பின்வருமாறு சொல்லலுற்றான் :— "நன்மையைத்தேடி யுரைப்பதுபோல, தாங்கள் இப்பொழுது தீமையைவிளைக்குங்கொடிய வார்த்தைகளை நமது பகைவர்கள்கட்சியைச் சேர்ந்தவர்போலச் சொன்னது என்காதுகளில் ஏறவேயில்லை. மாலுடனும், எளியனும், குரங்குகளின்உதவியைக் கொண்டவனும், தனது தந்தையாற் காட்டுக்கு ஓட்டப்பட்டவனுமிருக்கும் தனியனை இராமனை, என்னகாரணத்தால் தாங்கள் வெகு சமர்த்தனென்று எண்ணுகின்றீர்கள்? அரக்கர்களுக்கெல்லாம் மண்ணவனும், தேவர்களுக்கெல்லாம் நடுக்க முண்டாக்குபவனும், எவ்வகைவல்லமையிலும் குறைவில்லாதவனுமிருக்கும் என்னை, எக்காரணத்தால் தாழ்ந்தவனாக நினைக்கின்றீர்கள்? எனது வல்லமையிற் பொறுமையினாலோ, அல்லது பகைவரிடமிருக்கும் பட்சபாதத்தாலோ, அல்லது பகைவர்களுடைய எவுதவினாலோ, தாங்கள் இவ்வாறு கடுமையாக என்னைக்குறித்துச் சொன்னீர்களென்று நினைக்கின்றேன். வல்லமைபெற்று நற்பதவியிலிருக்கின்ற வேந்தனைப் பார்த்து, பகைவரது ஏவுதலில்லாமல், அரசநீதியினுண்மையை யறிந்து பண்டிதனாகவிருக்கும் எவன்தான், இவ்வாறு சொல்வான்? தாமரையைவிட்டு வாழ்கின்ற இலட்சுமியைப் போன்ற சீதையை, நான் வனத்திலிருந்துகொண்டுவந்து, பிறகு யாதுகாரணத்துக்காக இராமனிடம்பயந்து திருப்பிக்கொடுக்கவேண்டும்? அநேககோடிவானரர்களாலும் சுக்கிரீவனாலும் இலட்சுமணனாலும் சூழப்பட்டிருக்கின்ற இராமனை, நான் சிலகாள்களுக்குள் வதைப்பதை, நீங்கள் பார்ப்பீர்கள். எவனுடைய தொந்தயுத்தத்தில் தேவர்களாலும் எதிர்த்து நிற்கமுடியாதோ, அவ்விராவணன் என் யுத்தத்தில் அச்சத்தை ஏறிட்டுக்கொள்ளவேண்டும்? நான் இரண்டுதண்டாயுப் பிளவுபட்டாலும் படுவேனேயன்றி, ஒருவரையும்,

இராவணன் மாலியவானைக் கடிந்து பேசுதல்.

வணங்கவேமாட்டேன். இது, எனக்கு இயல்பாயுள்ள குற்றம். இயற்கையைக்கடத்தல் முடியாதன்றே ? அற்ப மாகிய சமுத்திரத்தில் இராமன் ஏதோ அணைகட்டி விட்டால், அதில் என்ன ஆச்சரியம் ? அதனலன்றே நீங்கள் அஞ்சுகின்றீர்கள் ? அவ்விராமன் வானரசேனையுடன் சமுத்திரத்தைத்தாண்டி வந்திருந்தா னென்றலும், நான் உங்களுக்குச் சபதஞ்செய்து சொல்லுகிறேன் : அவன் உயிர்தப்பித் திரும்பிப்போவது இல்லை" என்றான்.

அதிகோபங்கொண்டு இராவணன் இவ்வாறு சொல்லவே, மாலியவான், அவ்விராவணன் சினங்கொண்டதை யறிந்து, வெட்கி, ஒன்றும் மறுமொழி சொல்லாமலே வழக்கப்படிக்கு "வெற்றியுண்டாவதாக" என்று வாழ்த்திவிட்டு விடைபெற்றுத் தனதுமாளிகை சேர்ந்தான்.

மாலியவான் போதல்.

அதன்பிறகு, அரக்கனகிய இராவணன் தனது மந்திரிகளுடன்சேர்ந்து செய்யவேண்டிய விஷயங்களைப்பற்றி நன்றாக ஆலோசித்து, இலங்கையை நன்றாகப்பாதுகாக்கும் ஏற்பாடுகளைச் செய்யலானான். அவ்விராவணன் கிழக்குவாயிலில் பிரஹஸ்தனென்ற அரக்கனையும், தெற்குவாயிலில் மகாவீரர்களான மகாபார்சுவ மகோதரர்களையும், பிறகு மேற்குவாயிலில் அதிகமாயாவியும் தனது குமாரனுமான வலிய பலஅரக்கர்களாற்சூழப்பெற்ற இந்திரஜித்தையும் காத்திருக்குமாறு கட்டளையிட்டான் ; வடக்குவாயிலில் சுகஸாரணர்களை யேவி, தனது மந்திரிகளை நோக்கி "நானும் இங்கு இருப்பேன்" என்று கூறினான். அதிகவீரியமும் பராக்கிரமமும் பொருந்திய விரூபாக்ஷனென்ற அரக்கனைப் பல அரக்கர்களுடைய சகாயத்தோடும் அணிவகுத்த சேனையின்நடுவில் விருக்கவைத்தான்.

இராவணன் இலங்கையிற் காவலமைத்தல்.

இவ்வாறு அவ்விராவணன், இலங்கையைப் பாதுகாக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, யமனது கட்டளைக்கு உட்பட்டவனாகி, தன்னுல் எல்லாக்காரியங்களும் சரிவரச் செய்து முடிக்கப்பட்டதாகக் கருதினன். தனது பட்டணத்தை இரட்சிக்கவேண்டிய ஏற்பாடுகளைப் பூர்ணமாகச்செய்து, இராவணன், தனது மந்திரிகளுக்கு விடைகொடுத்தனுப்பினன். அம் மந்திரிமார்களும் வெற்றியுண்டாகவேண்டுமென்று ஆசீர்வசனம் கூறிக்கொண்டு சென்றார்கள். அதன்பிறகு, இராவணனும் எல்லாப்பாக்கியங்களும் நிரம்பிய பெரிய தனதுஅந்தப்புரத்தினுட் புகுந்தான்.

சபைகலைதல்.

முப்பத்தேழாஞ் சருக்கம் : இராமர் இலங்கையிற் போர்செய்தற்குச் செய்த ஏற்பாடுகள்.

மானுடமன்னவராகிய இராமர், தனது சுற்றத்தாருடன்கூடிய வானரமன்னவனுகிய சுக்கிரீவன், வாயுபகவானது புதல்வனுகிய அநுமான், ருக்ஷராஜனுகிய ஜாம்பவான், விபீஷணரென்ற அரக்கர், வாலியின் மைந்தனுகிய அங்கதன், சுமித்திரையின் குமாரராகிய இலட்சுமணர், சரபனென்ற வானரன், சுஷேணன், மைந்தன், த்விவிதன், கஜன், கவாக்ஷன், குமுதன், நளன், பனஸன் ஆகிய இவர்களெல்லாரும், தங்களுடைய சதுரங்கசைன்யங்களை வந்து சேர்த்துவிட்டதனுல், ஒன்றுசேர்ந்து, இனிநடக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்யலானார்கள் : "இதோ விளங்குகின்றதே, இதுதான், இராவணன் பாதுகாத்து வருகின்ற இலங்கைமாநகரம். இது, அசுரர் உரகர் கந்தருவர் என்ற இவர்களுடன், தேவர்கள் வந்தபோதிலும் தகையமுடியாததாக இருக்கின்

ன்றது. இங்கு அரக்கரதுமன்னவனை இராவணன் எப்போதும் வாழ்கின்றனன்றே? எவ்வாறு செய்தால் நமது காரியம் கைகூடுமோ அதைத் தீர்மானிக்கும்படி இப்பொழுது ஆலோசிக்கவேண்டும்" என்றார்கள்.

இராமர் பக்கத்தார் மந்திராலோசனை செய்ய வேண்டுமென்றல்.

இவ்வாறு அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கையிலேயே, இராவணனுடைய தம்பியாகிய விபீஷணர், கிராமியவழக்கச்சொற்கள் இல்லாமல் வெகுநாகரிகமாகப் பொருள்நிரம்பிய சொற்களாற் சொல்லலானார்:—"அகலன் சரபன் சம்பாதி பிரகஸன் என்ற எனதுமந்திரிமார், இப்பொழுதுதான் இலங்கைக்குச் சென்று திரும்பிவந்தார்கள். இவர்களெல்லாரும் பறவைகளுருவங்கொண்டு நமதுபகைவர்கள்சேனைகளிற் புகுந்தார்கள்; அங்குள்ள ஏற்பாட்டைப் பார்த்துத் திரும்பிவந்திருக்கின்றார்கள். இராமரே! துராத்துமாவாகிய இராவணன் செய்திருக்கின்ற ஏற்பாடுகளை அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அவைகளை யெல்லாம் நான் உள்ளபடி சொல்லுகின்றேன், கேளுங்கள்: இலங்கையிலே கோழவாயிலில் பிரஹஸ்தன் தனதுசேனையுடன் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றனன். மகா வீரர்களான மகாபார்சுவமகோதரர் தெற்குவாயிலில் இருக்கின்றார்கள். இந்திரஜித்து-பட்டஸம், கத்தி, வில், சூலம், கதை என்ற பல ஆயுதங்களைக் கைப்பற்றி நிற்கின்ற சூரர்களான அரக்கர்களோடு மேலைவாயிலில் இருக்கின்றனன். ஆயுதங்களைக் கையிலேந்திய பல ஆயிரக்கணக்கான அரக்கர்களுடன் கூடிய இராவணன், சிறிதும் அஞ்சாதவனாய், பல அரக்கர்களாற் சூழப்பட்டு, நகரத்தின் வடக்கு வாயிலில் தானே நின்று பாதுகாத்துக்கொண்டிருக்கின்றனன். விரூபாக்ஷனென்பவன், சூலங்கள் கத்திகள் வில்கள் இவை

விபீஷணர், தமது மந்திரியரால் அறிந்த எதிரிகளின் ஏற்பாட்டை யுணர்த்தல்.

களையேந்திய பெரிய சேனையோடும் அரக்கரோடும் சேனை வகுப்பின்நடுவில் இருக்கின்றன். இவ்வண்ணம் இலங்கையில் சேனைகள் வகுக்கப்பட்டிருப்பதைக் கண்ணுற்று, எனது மந்திரிமார்களெல்லாரும் சடிதியில் இவ்விடம் திரும்பி வந்தார்கள். அங்கு - யானைகள் ஆயிரக்கணக்காகவும், தேர்கள் பதினாயிரக்கணக்காகவும், குதிரைகள் இருபதினாயிரக்கணக்காகவும், அரக்கர்கள் கோடிக்கணக்காகவும் சதுரங்கசேனைகள் சித்தமாக இருக்கின்றன; அங்குள்ள அரக்கர்களோ–போரில் வெகு வல்லமை தங்கியவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும், கடுந்தொழிலைச் செய்பவர்களாகவும், இராவணனுடைய விருப்பத்தின்படி எப்போதும் நடப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். மன்னவரே! இப்போது அவ்வரக்கர்களுள் ஒவ்வொருவனுக்கும் சண்டைசெய்வதற்காகப் பத்துலட்சம்பரிவாரங்கள் தொடர்ந்து வருகின்றன" என்றார். இவ்வண்ணம் மகாபாகுவாகிய விபீஷணர் தமது மந்திரிகள் தம்மிடஞ்சொன்ன இலங்கையின் சமாசாரத்தை இராமரிடம் அறிவித்து அவ்வரக்கர்களையும் சுட்டிக் காட்டி அவர்களைக்கொண்டும் இலங்கையில் நடக்குஞ் செய்தியைத் தெரிவித்தார். இன்னும் இராமருக்கு நன்மை செய்யநாடிநின்ற இராவணன் தம்பியாகிய விபீஷணர், இராமரை நோக்கி இவ்வாறும் தெரிவித்தார்: "இராமரே! முன்பு இராவணன் குபேரனிடம் போர்புரிந்தகாலத்தில், இராவணனுடன் அறுபதுலட்சம் அரக்கர்கள் தொடர்ந்து சென்றார்கள்; அவ்வரக்கர்களில் ஒவ்வொருத்தனும் தனது பராக்கிரமத்தாலும், வீரத்தாலும், ஒளியாலும், பலத்தாலும், தைரியத்தாலும், கர்வத்தாலும், துராத்துமாவாகிய இராவணனுக்கு நிகராக இருந்தான். இப்படி நான் சொல்லுகிறேனேயென்று என்மேல் கோபிக்கலாகாது; ஏனெனில், பகைவன்மீது உங்களுக்குக் கோபத்தைக் கிளப்பு

விபீஷணர் செய்யவேண்டுவதைப்பற்றிக் கூறுதல்.

கின்றேனே யன்றி, உங்களுக்குப் பயத்தை யுண்டாக்க வில்லை. தாங்களோ, வல்லமையால் தேவர்களையும் அடக்கச் சக்தியுள்ளவர்கள். ஆகையால், சதுரங்க சேனையுடன் கூடிய தாங்கள், இந்த வானர சைனியத்தை அணிவகுத்து இராவணனை நாசம்பண்ணுவீர்கள்" என்றார்.

இவ்வாறு இராவணனது தம்பியாகிய விபீஷணர் சொல்லி முடித்ததும், இராமர், தமது பகைவர்களை வெற்றி கொள்ளுதற் பொருட்டுப் பின்வருமாறு கட்டளையிடலானார்:—"நீலனென்ற வானரசேனாதிபதி, பல வானரர்களாற் சூழப்பட்டவனாய், இலங்கையின் கீழைவாயிலில் நின்று கொண்டு, பிரஹஸ்தனுடன் போர்புரியச் சித்தமாக இருக்கட்டும். வாலியினது குமாரனாகிய அங்கதன், மிகப் பெருஞ்சேனையுடனே தெற்குவாயிலில் மகாபார்சுவ மகோதரரை எதிர்த்து நிற்கட்டும். ஒருவராலும் அறியவொண்ணாத தன்மையமைந்த வாயுபகவானது மைந்தனான அநுமான், பல வானரர்களுடன் கூடி, மேலைவாயிலைத் தாக்கி நுழையட்டும். தேவர்களின் கூட்டத்துக்கும் மகாத்துமாக்களான முனிவர்களுக்கும் கெடுதிசெய்வதில் ஆசையுள்ளவனும், அற்பனும், வரங்களினால் வல்லமைபெற்றவனும், எல்லா வுலகங்களிலும் உள்ள பிராணிகளைத் தவிக்கச் செய்துகொண்டு திரிகின்றவனும், ராக்ஷஸராஜனுமாகிய இராவணனை வதைக்குமாறு உறுதிகொண்டு, நானே, நேராக, இலட்சுமணனுடன், அவ்விராவணன் நிற்கின்ற நகரத்துவடக்குவாயிலைத் தாக்கிப் புகுகின்றேன்; அங்கு, சேனைகளுடன் பலசாலியாகிய சுக்கிரீவரும், வீரியவானான ருக்ஷராஜனும், அரக்கமன்னவன் தம்பியாகிய விபீஷணரும், பலவான்களான இராவண இந்திரஜித்துக்களுடன் போர்புரிகின்றவர்கட்கு நடுவிலே, மத்திமசேனையாக இருக்கட்டும். போர் நடக்கும் பொழுது, வானரர்கள் மானிடவடிவங் கொள்ளவேண்

இராமர் செய்த ஏற்பாடுகள்.

டாம். இந்தப்போரில் வானரசைனியத்தில் இவ்வாறு சங்கேத மிருக்கட்டும். வாநரர்கள் அவ்வுருவத்துடனே யிருப்பதுதான், அவர்களை எளிதிலறிந்துகொள்ள ஸாதனமாக்விருக்கும். நாங்கள் ஏழுபேர் மனித வடிவத்துடன் போர்புரிகின்றவர்கள்; அவராவார்—அதிகபல மமைந்த தம்பியான இலட்சுமணனுடன் கூடிய நானும், மந்திரிமார்களுடன் கூடி ஐந்தாமவராக இருக்கின்ற எனது நண்பரான விபீஷணரும்" என்றார்.

இராமர் இலங்கையை நோக்கிச் செல்லுதல்.

புத்திமானான இராமர், தமது காரியம் கைகூடுதற் பொருட்டு அவ்விதமாக விபீஷணரிடம் சொல்லி, சுவேலமலையினது தாழ்வரையின் அழகிய அமைப்பைப் பார்த்து, அம்மலையின்மே லேற விருப்பங்கொண்டார். அதன்பிறகு, பெருஞ்சேனையால் இவ்வுலகத்தையே மறைத்துக்கொண்டு சென்ற மகாத்துமாவாகிய இராமர், வெகு சந்தோஷத்துடன் தமதுசத்துருவை வதைத்துவிடுவோ மென்ற உறுதியோடு இலங்கையை நோக்கிச் செல்லலானார்.

மூப்பத்தெட்டாஞ் சருக்கம்:
இராமர் இலங்கையைப் பார்க்குமாறு சுவேலமலையி லேறுதல்.

இராமர் தமது எண்ணத்தைத் தெரிவித்தல்.

இராமர், சுவேலமலையின்மேல் ஏறவேண்டுமென்ற கருத்துக்கொண்டு இலட்சுமணரால் பின் தொடரப்பட்டவராய், சுக்கிரீவனையும், தருமத்தை அறிந்துள்ளவரும் தம்மிடம் அன்பு வைத்தவரும் மந்திராலோசனை தெரிந்தவரும் செய்யும்முறைமையறிந்தவருமான விபீஷணரென்ற அரக்கரையும் பார்த்து, பின்

வருமாறு சொல்லலானார்:—" பலவகைத் தாதுப்பொருள் கள் நிரம்பிவிளங்கும் அழகான இச்சுவேலமலையில், நாம் எல்லோரும் ஏறி, இன்றிரவைக் கழிப்போம்; அவ்வரக் கன் வாழுமிடமாகிய இலங்கையையும் பார்ப்போம். எக் கொடியவன் தனது நாசத்துக்கென்றே எனது மனைவி யைக் கவர்ந்தானே, எவனொருவன் நன்னெறி இன்ன தென்பதை யறியாதவனுயும் குலாசாரத்தைத் தெரிந்து கொள்ளாதவனுயும் தான் பிறந்த குலத்தின் கௌரவத் தைக் காப்பாற்றுதவனுயு மிருந்துகொண்டு, அற்பமாகிய ராக்ஷஸ புத்தியினுல் எல்லாராலும் நிந்திக்கப்படுங் காரி யத்தைச் செய்திருக்கின்றனே, அவ்வரக்கப்பதரின் பேரை யெடுத்தாலும் எனக்குக் கோபம் பொங்குகின்றது. அவ் வரக்கனொருவன் செய்த குற்றத்திற்காக எல்லா அரக்கர் களும் மாளப்போகின்றூர்கள். காலபாசத்திற் சிக்கிக் கொண்ட ஒருவன் தீங்குசெய்தால், அவ்வற்பன்செய்த குற்றத்தால் அவன்குலமே நாசமாகின்றது" என்று இராமர் இவ்வாறு இழிகுணமுடைய அவ்விராவணனைப் பற்றி வெகு கோபத்துடன் சொல்லிக் கொண்டே, அழகானதாழ்வரையமைந்த சுவேலமலையில் வசிக்கும்பொருட்டு ஏறலா னர். நாணேற்றப்பட்ட வில்லைத் தமது கையிற் பற்றிக்கொண்டு, தமது பெரும்பராக்கிரமத்தைக் காட்ட நிச்சயித்திருக்கின்ற இலட்சுமணர், அவர் பின்னே வெகு ஜாக்கிரதையாக நடந்தார். சுக்கிரீவன் தனது மந்திரிமார்களுடனும் விபீஷணருடனும் அவர் பின்னர்த் தொடர்ந்து ஏறலானன். அநுமான், அங்கதன், நீலன், மைந்தன், த்விவிதன், கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், பனஸன், குமுதன், ஹரன், ரம்பனென்ற வானரசேனுபதி, ஜாம்பவான், சுஷேணன், வெகு புத்திமானுகிய ரிஷபன், மிக்க ஒளியால் விளங்குந் தூர் முகன், சதவலியென்ற வாநரன் என்னும் மலைகளிற் சஞ்

சுவேலமலையி லேறுதல்.

சரிக்குந் தன்மையுள்ள வெகுவேகமாகச் செல்கின்ற இவர்களும் இன்னும் அநேக வாநரர்களும் வாயுவேகமாக இராமர் ஏறிக்கொண்டிருந்த அச்சுவேலமலையின்மேல் ஏறலானார்கள். அவர்கள், சடிதியில் அம்மலையின்மேலேறி, ஆகாயத்திற் கட்டப்பட்டதுபோலத் திரிகூடமலையினுச்சியில் விளங்கும் இலங்கையைப் பார்த்தார்கள். சிறந்த வாயில்கள் அமைந்தும், மதில்களால் விளங்கிக்கொண்டும், அரக்கர்கள் நிரம்பியும், அவ்விலங்கை அழகாக விளங்குவதை, வானரசேனபதிகள் கண்ணுற்றார்கள். அவ்வாநரத் தலைவர்கள், அந்நகரத்தின் மதிள்களின் திண்ணைமேற் கறுத்த மேனியுடன் பல அரக்கர்கள் நிறைந்த காட்சியானது மற்றொரு பிராகாரம் கட்டப்பட்டிருந்தது போல விளங்கியதைக் கண்டார்கள். போர்புரிய வெகு ஆவலுடனிருந்த அவ்வாநரவீரர்கள் அவ்வாறு அவ்வரக்கர்களைக் கண்டதும், இராமர் முன்பாகவே, பலவிதமாக அட்டகாசம் பண்ணலானார்கள். அப்பொழுது சந்தியினற் செந்நிறமடைந்து சூரியன் அஸ்தமித்தான்; பூரணசந்திரனால் விளக்கப்பட்ட இரவு தோன்றலாயிற்று. அப்பொழுது எல்லா வாநர சேனைகளுக்கும் நாயகரான அந்த இராமர், விபீஷணர் தமக்கு அன்புடன் மரியாதைசெய்ய, சேனபதிகளாலும் சேனைகளாலும் சூழப்பட்டவராய், இலட்சுமணருடன், அந்தச் சுவேலமலையின்மேல் சுகமாகத் தங்கியிருந்தார்.

எல்லாரும் இலங்கையைத் தூரத்திற் காணுதல்.

இரவில் அம்மலையில் தங்குதல்.

முப்பத்தொன்பதாஞ் சருக்கம் :
இராமர் இலங்கையைக் காணுதல்.

திரிகூடமலையினது முதற்சிகரத்தின் வருணனை.

அன்றிரவு சுவேலமலையில் தங்கின வானரவீரர்கள், அங்கு இருந்தபடியே இலங்கையிலிருந்த வனங்களையும் தோட்டங்களையும் கண்டார்கள். அவைகள்—ஒன்றைப்போலவே மற்றொன்று அழகாகவும், நேர்த்தியாகவும், விசாலமாகவும், பார்ப்பதற்கு இனிமையாகவும் இருக்கக் கண்டு, அவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். சம்பகம், அசோகம், புன்னை, ஆச்சா, பனை, தமாலம், பலா, நாககேஸரம், ஹிந்தாளம், மருதம், கடம்பு, ஏழிலம்பாலை, திலகம், கர்ணிகாரம், பாதிரி என்ற இவை முதலான், உச்சிவரையில் அழகாகப்பூத்து நன்றுகப்படர்ந்துள்ள கொடிகள் தழுவப்பெற்றுத் திவ்வியமான பலவகை மரங்களாலும், பலவித அழகானபுஷ்பங்கள் பூத்துச் செந்தளிர்விட்டுக்கொண்டு வரிசையாக நின்ற காடுகளினாலும், நீலவர்ணமாக விளங்கிய புல்லடர்ந்த மைதானங்களாலும் இனிதாகஇருந்த சுவேலமலையானது, இந்திரனுடைய அமராவதிபோலச் சோபித்துக்கொண்டிருந்தது. மணிதர் பலவகையாபரணங்களை யணிவதுபோல அங்குள்ள மரங்கள், வாசனை வீசிக்கொண்டிருந்த அழகிய பலவகைக் கனிகளையும் மலர்களையும் தாங்குகின்றன. அன்றியும், சைத்திரரதத்துக்கு ஒப்பாகவும், நந்தனவனத்துக்கு ஒப்பாகவும் ஆறுபருவங்களிலுமுண்டாகும் பழங்களையும்புஷ்பங்களையும் ஒருங்கேபெற்றதாகவு முள்ள அவ்வனம், நாற்புறத்திலும் வண்டுகள் மொய்க்க இனிதுவிளங்கிற்று. காட்டருவிகளின் அருகில் நீர்க்கோழிகளும், மயில்களும், ஆனந்தத்தால் தாண்டவமாடிக்கொண்டிருக்க, குயில்கள் கூவுவதைக் கேட்டார்கள். எப்பொழுதும் மதித்திருக்கும் பற

வைகளும் கொழுத்த சுரும்புகளும் நிரம்பியும், பல பறவைகள் சத்தித்துக்கொண்டும், வண்டுகள் எப்பொழுதும் மொய்த்துக்கொண்டு ரீங்காரஞ் செய்யப்பெற்றும், வலியன் குருவியும் வண்டானமும் கூவிக்கொண்டும், கோகிலங்கள் கூவப்பெற்ற விருக்ஷங்கள் நிறைந்து முள்ள அந்தக்காடுகளிலும் பூந்தோட்டங்களிலும் வேண்டுமுருவங்கொள்ளும் வீரர்களான வாநரர்கள், வெகுசந்தோஷத்துடன் புகுந்து சஞ்சரிக்கலானார்கள். மிக்க காந்தியுள்ள அவ் வாநரவீரர்கள் அவ்வண்ணம் அங்குச் சஞ்சரிக்க ஆரம்பித்தபொழுது, புஷ்பங்களின்மேற்பட்டு மிக்கவாசனையுடனெழுகின்ற இளங்காற்று, கமகமவென்று வீசலாயிற்று. கர்ஜ்ஜிக்கவல்ல சில வானரசேனபதிகள், சுக்ரீவனிடம் அநுமதி பெற்றுக்கொண்டு, கொடிகள் பறக்கும் இலங்கையினுட்புகுந்து பறவைகளைப் பயமுறுத்திக்கொண்டும், மான்களையும் யானைகளையும் வெருண்டோடச்செய்துகொண்டும், தாங்கள் செய்கின்ற அட்டகாசத்தால் இலங்கையையே நடுங்கச்செய்துகொண்டும், நடந்த வேகத்தால் பூமியை அதிரச்செய்துகொண்டும் வெகு விரைவாகச்சென்றார்கள். அவர்கள் செல்லும்பொழுது காலாற்கிளப்பப்பட்ட புழுதிகள், விரைவில் உயரமாக எழலாயின. கரடிகளும் சிங்கங்களும் பன்றிகளும் எருமைகளும் யானைகளும் மான்களும், அவர்கள்செய்த சத்தத்தால் வெருண்டு, பத்துத் திசைகளையும் நோக்கி யோடின. திரிகூடமலையின் அந்த மத்திமசிகரமோ, வெகு உயரமாய், ஆகாயத்தை முட்டுவதாய், எல்லாப்பக்கங்களிலும்புஷ்பங்களால்மூடப்பெற்று, பொன்மயமான துபோலப் பிரகாசித்துக் கொண்டு நூறுயோசனவிஸ்தாரமுள்ளதாய், ஒளியமைந்ததாய், காண்பதற்கு அழகாய், மேடுபள்ளமற்று, பலவகைச் சம்பத்தும் நிரம்பியதாய்,

சில வாநரர் செய்த குழப்பம்.

திரிகூட மலையின் இரண்டாவது சிகரத்தின் வருணனை.

பறவைகளாலும் பறந்து செல்லக்கூடாததாய்க் காணப் பட்டது; அம்மலை, மானிடர்களால் மனத்தினாலும் ஏற முடியாதது; செய்கையால், அம்மனிதர் எவ்வாறு ஏற முடியும்? அந்தச் சிகரத்தில்தான், இராவணனாற் பாது காக்கப்பட்டு முப்பதுயோசனை அகன்றும், நாறுயோ சனை நீண்டுமிருக்கின்ற இலங்கை அமைக்கப்பட்டிருந்தது. மழைக்காலத்தில் பலமேகங்களால் ஆகாயம் விளங்குவது போல, அந்நகரம் வெண்மேகங்கள்போல விளங்குகின்ற உயர்ந்த கோபுரங்களாலும், தங்கத்தாலும் வெள்ளியா லுங் கட்டப்பட்ட மதில்களாலும், அநேக உபரிகைகளுடன் கூடிய அரண்மனைகளாலும், விமானங்களாலும் விளங் கிற்று. ஆயிரங் கம்பங்களால் அலங்கரிக் கப்பட்டு விளங்குகின்ற அரண்மனையாய், கைலாசமலையின் சிகரம்போல ஆகாயத் தையே முட்டிக்கொண்டு, அந்நகரத்தினி டையிலே, மாளிகையொன்று சோபித்துக்கொண்டிருந்தது. அதுதான், ராக்ஷஸராஜனன இராவணனது மாளிகை. அது அந்நகரத்துக்கே ஒருஅலங்காரம்போல விளங்கி ற்று. அதை, எப்போதும், பெருங்கூட்டமான அரக்கரது சேனை பாதுகாத்துவருகின்றது. வெகு அழகான காடுக ளைப் பெற்று, பல சிறு குன்றுகளால் விளங்கி, பல வித தாதுப்பொருள்கள் விளங்குஞ் சிங்காரவனங்களுடன் கூடி, பலஜாதிப் பறவைகள் கூவப் பலவித மிருகங்கள் சஞ்சாரம்பண்ணப் பலவகைச் சிங்காரவனங்கள் அமைய, பல அரக்கர்கள் காத்துக்கொண்டு நிற்க, எல்லாவிதமான பாக்கியங்களுடனும் விள ங்கிய அந்த இராவணநகரத்தை, இலட்சு மணரதமையனரும் சீமானுமாகிய இரா மர் வானரர்களுடன் கண்ணுற்றார். தேவ ருக்கு ஒப்பாய் இலட்சுமணரதமுன்பிறந்தவராகிய அம் மகாவீரர், பல பெருமாளிகைகளுடன் விளங்கிய அந்நகரத்

இலங்கையின் வருணனை.

இராமர் வானரர்களுடன் இலங்கையைக் காணுதல்.

தைப் பார்த்து, ஆச்சரியமடைந்தார். அவ்வாறு இராமர், தமது பெருஞ்சேனையுடன் நின்றுகொண்டு, இரத்தினங்கள் நிரம்பி, காவலிப்பெற்று, அரண்மனைகளால் அலங்கரிக்கப்பட்டு, பெருங்கோட்டைக்கதவுகளும் யந்திரங்களும் விளங்காநிற்கும் அந்நகரத்தைக் கண்ணுற்றார்.

நாற்பதாஞ் சருக்கம்:
சுக்கிரீவனுக்கும் இராவணனுக்கும் நடந்த தொந்த யுத்தம்.

அவ்வாறு, இராமர், சுக்கிரீவனுடன் வானரசேனைத் தலைவர் சூழ, உச்சியில் இரண்டு யோசனை விசாலமாக இருந்த சுவேலமலையின்மேல் ஏறினர். இராமர், அங்கு ஒரு முகூர்த்த காலம் நின்று, பத்துத் திசைகளையும் நோக்கின சமயத்தில், அழகான திரிகூடமலைச் சிகரத்தின் மேல் நல்லமைப்புடனும் பலசிங்காரவனங்களுடனும் விசுவகர்மாவால் நிருமிக்கப்பட்ட இலங்கைமாநகரம் விளங்குவதைக் கண்ணுற்றார். அந்நகரத்தில் கோபுரநிலையிலே, தனது இருபக்கத்திலும் வெண்சாமரங்கள் வீச, தனது தலையின்மீது வெண்கொற்றக்குடை பிடிக்க, ஐராவதத்தினுடைய தந்தங்கள் பட்டதனு லுண்டான காழ்ப்பு மார்பில்விளங்க, சிவப்புச்சந்தனம் பூசி, இரத்தினபரணங்களையணிந்து, நீலமேக நிறமாய், தங்கச்சரிகைகளால் நெய்யப்பட்ட ஆடையை யணிந்து, முயலினிரத்தத்துக்கு ஒப்பான வர்ணமுள்ள ஆடையை மேலேபோர்த்து, சாயங்காலவெயிலின் காந்தியால் ஆகாயத்தில் மேகங்கள் விளங்குவதுபோல விளங்கி எவராலும்அணுகமுடியாத அரக்கமன்னனை, இராமர் கண்டார். இராவணனைக் கண்டதும் சுக்கிரீவன் வெகு கோபங்கொண்டவனாய், இராம

இராவணனைக் காணுதல்.

ரும் மற்ற வானரவீரர்களும் தன்னைப் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே தனது தேகபலத்தினாலும் மனோபலத்தாலும் ஆகாயத்தில் திடீரென்று தானிருந்தமலையினுச்சியைவிட்டுக் கிளம்பிக் கோபுரத்தலத்தைநோக்கிப் பாய்ந்தான். அச்சுக்கிரீவன், அங்குக்கொஞ்சநேரம் நின்று, சிறிதும் பயமேயில்லாமல் உற்றுப்பார்த்து அவ்விராவணனை ஒருதரும்பாக வெண்ணி, அவனை நோக்கிச் சில கொடுஞ் சொற்களைப் பின்வருமாறு சொல்லலானான் :—

சுக்கிரீவன் இராவணன் மேற் பாய்தல்.

"அரக்கா! நான், உலகங்கட்கெல்லாந் தலைவராக விருக்கும் இராமபிரானுடைய நண்பனும் அடிமையுமாவேன். அம்மகானுடைய ஒளியால், நான் உன்னை உயிருடன் விடேன்" என்று இவ்விதமாகச் சொல்லிவிட்டு, சுக்கிரீவன், அவ்விராவணனது தலையின் மேல்வந்து இறங்கி, அவனுடைய அழகான கிரீடத்தைத்தள்ளி, தானும் பூமியிற் குதித்தான். அவ்வாறு விரைவாகச் செல்லுகின்ற சுக்கிரீவனைநோக்கி "நீ என்கண்ணெதிரில்லாவிட்டால், சுக்கிரீவன்தான் [அழகிய கழுத்துடையவன்தான்], என் கண்முன்பாகவோ கழுத்து அற்றவனுவாய்" என்று இராவணன் சொல்லி, சடிதியில்எழுந்து, அவனைத் தனது கைகளினல் இழுத்துப் பூமியில் தள்ளினன்; அவ்வானரவீரன் ஒரு பந்துபோல எழும்பி, அவ்விராவணனைக் கைகளினல் தள்ளினன். இவ்விருவரும் ஒவ்வொருவர் உடம்பிலும் போர்த்தொடக்கத்தில் அழுந்தக்கட்டுவதனல் வேர்வைநீர் பெருகி நிற்கவும், பிறகு தந்தம்நகங்களைக் கொண்டு விரணப்படுத்துவதனல் ஒவ்வொருவர் தேகத்திலும் இரத்தம் பெருகவும், ஒருவர் மற்றொருவரைக் கட்டிவிடுவதனற் செயலறவும் நின்று ஒருவரை மற்றொருவர் விட்டிட்டுச் சிரமப்பட்டுக்கொண்டு அரும்பிய இலவவரும்பு

சுக்கிரீவன் இராவணனை மகுடபங்கஞ் செய்தல்.

இராவண சுக்கிரீவர்களின் தொந்தயுத்தம்.

போலக்காணப்பட்டார்கள். கைக்குத்துகளாலும், முடக்கிய கையின் மணிக்கட்டால் மோதுவதனாலும், முன்கையடியாலும் மகாபலசாலிகளான ராக்ஷஸராஜனும் வானரராஜனுமாகிய அவ்விருவரும் பொறுக்கமுடியாத பெரும் போர் புரிந்தார்கள். அவ்விருவரும், மிக்கவேகத்துடன் கோபுரவேதிகையின் மத்தியில் மல்லயுத்தஞ் செய்யத் தொடங்கி, ஒருவரை யொருவர் உயரமாக எறிந்தும், ஒருவரையொருவர் இழுத்தும், தமது தேகங்களைக் குறுக்கிக் கொண்டும், அடிக்கடிபின்னிடைந்துகொண்டு மேல்விழும் அவசரம்பார்த்து அக்கோபுரவேதிகையிலே அசைவற்று நின்றும், பிறகு ஒருவரையொருவர் கைகளாலிறுகத் தழுவி மதிலுக்கும் அகழுக்கும் நடுவில் விழுந்தார்கள். அவ்விருவரும் பூமியிற்படாமல் ஆகாயத்தில் நின்றுகொண்டே, சிறிதுநேரம் பெருமூச்செறிந்து பிறகு உயரவெழுந்து, தங்கள்கைகளால் ஒருவர்மேல் ஒருவர் கயிறுகள்போலத் தழுவிக்கொண்டு சண்டையிடலானார்கள். போர்செய்வதில் ஊக்கம் பயிற்சி உடல்வலிமை இவைகளையுடையரான அவ்விருவரும், புலியும் சிங்கமும் செருக்காற் சண்டையிடுவதுபோலவும், இரண்டு யானைக்குட்டிகள் பொருவது போலவும், அப்போது யுத்தஞ்செய்யலானார்கள். அவ்விருவரும் ஒருவரையொருவர் கிட்டித் தம்தம் மார்பால் மோதிக்கொண்டு, ஒரே சமயத்தில் பூமியில் விழுந்தார்கள். அடிக்கடி பூமியிலிருந்து எழுந்து நின்று ஒருவரையொருவர் தூக்கி யெறிந்து பொரலானார்கள். வீரர்களாகிய அவ்விருவரும், தேகப்பயிற்சியில் தேர்ந்தவர்களும் தேகவலிமையிற்சிறந்தவர்களுமாக இருந்தமையால், இரண்டுபென்பதை விரைவாக அடையவேயில்லை. யானையினது கட்டுத்தறிபோன்ற கைகளால் அவ்வாறையுள்ள மாற்றரனுடைய கைகளைத் தடுத்துக்கொண்டு, அவர்கள் ஒருவரையொருவர் நெருங்கி ஒழித்துவிட முயன்றவராய், வெகுநேரம் போர்புரிந்து மண்டலாகாரமாகச் சுழன்றார்கள்.

தின்பண்டத்தைக் கவரப்பார்க்கின்ற இரண்டு பூனைகள் போல அசைவற்றிருந்தார்கள். போர்செய்யுந்தொழிலில் வல்ல இராவண சுக்கிரீவ ரென்ற அவ்விருவரும், விசித்திரமான மண்டலநிலையில் நின்றுகொண்டும், புலிப்பாய்ச்சல் சிங்கப்பாய்ச்சல் முதலிய பாய்ச்சல்கள் காட்டிக்கொண்டும், கோமூத்திரிகைக்குச்சமானமாகச் சென்றும், எதிர்த்தும், பின்வாங்கியும், எதிரி தாக்கவரும்போது குறுக்காகப் பாய்ந்தும், கோணலாகநடந்தும், இருந்த இடம்விட்டுப் பெயர்ந்தும், பிறகு ஓடி அடித்தும், எதிரியைச் சுற்றி ஓடியும், நேர்முகமாக விரைந்தோடியும், தவளைப்பாய்த்துப் பாய்ந்தும், அச்சமற்று எதிர்த்து நின்று சண்டைசெய்தும், திரும்பி யோடுவதுபோலக் காண்பித்தும், சத்துருவின் முன்நின்றே பக்கத்தால் ஓடியும், எதிரியைப் பிடித்துக்கொள்ளத் தேகத்தை ஓடுக்கிக்கொண்டு பாய்ந்தும், எதிரியைக் காலாலுதைக்குமாறு முகத்தைக்கிழ்நோக்கிவைத்து நடந்தும், எதிரியின்கையைப்பிடிக்கத் தன்கையை நீட்டியும், தன்கையைப் பிடியாமல் எதிரி ஏமாறும்படி நீட்டியகையைப் பின்னேவாங்கியும் இவ்வாறு மல்லயுத்தம்பண்ணினர்கள்.

இவ்வண்ணம் இவ்விருவரும் சண்டையிடுகையில், இராவணன், பலஇராவணர் இருப்பதுபோலத் தனது மாயையின் பலத்தாற் காட்டலானன். சிறிதும் சிரமமின்றி வெற்றியடைந்திருந்த சுக்கிரீவன் அதைக்கண்டதும், ஆகாயத்திற் கிளம்பினன்: இராவணன் அவ்விடத்திலேயே நின்றவனாய், வானரராஜனால் ஏமாற்றப்பட்டான். அவ்வாறு சூரியபகவானுடைய குமாரனாகிய வானரவேந்தன் இராவணனுடன் தான்புரிந்த போரிற் கீர்த்திபெற்று, அவ்வரக்க வேந்தனுக்கு அப்போரிற் கலைப்பையுண்டு பண்ணி, மிகவிசாலமாக விளங்கிய ஆகாயத்திற் கிளம்பி, வானரசேனையின் நடுவில் இராமர்பக்கத்தில் வந்துசேர்ந்

சுக்கிரீவன் மீண்டு இராமரை யடைதல்.

தான். அச்சூரியகுமாரன் அங்கு அவ்வாறு செய்துவிட்டு, களிப்புடன் இராமருக்குப் போரிலுத்சாகத்தை மூட்டி, தானும் உத்ஸாகங் கொண்டான்; வாநர முக்கியர்கள் மரியாதை செய்ய, வாயு வேகமாகச் சேனைக்குட்புகுந்தான்.

நாற்பத்தோராஞ் சருக்கம்:
இராமர் இலங்கையை முற்றுகைசெய்து அங்கதனைத் தூதனுப்புதல்.

இராமர் சுக்கிரீவன்செய்கையை உடன்படாது கூறுதல்.

பிறகு இராமர் சுக்கிரீவனிடத்திலுண்டான ஒல போர்க்குறிகளைப் பார்த்து, சுக்கிரீவனைத் தழுவிக்கொண்டு, அப்போது ஒருவார்த்தை சொல்லலானார்:—"என்னைக்கேட்காமலே நீர் இவ்வாறு செய்தது ஸாஹஸமானகாரியம்; இவ்வாறு சாகசமான காரியத்தை அரசர்கள் செய்யவே கூடாது. ஸாஹஸச்செயல் புரிவதில் ஆசையுள்ளவரே! என்னையும் இந்தச் சேனையையும் விபீஷணரையும் சந்தேகத்தில் விட்டு, கஷ்டமான இந்தஸாஹஸச்செயலைத் தாங்கள்செய்திர்கள். இனிமேல், வீரரே! தாங்கள் இவ்வண்ணம் எதிர்பாராத தொழிலைச் செய்யக்கூடாது; ஏனெனில், தங்களுக்கு ஏதாவது கொஞ்சம் சங்கடம் வந்துவிட்டால், எனக்குச் சீதையால் என்ன பயன்? மகாபாகுவே! பரதனால்தான் என்ன பயன்? சத்துருக்களையழிப்பவரே! எனது இளையதம்பி இலட்சுமணன் சத்துருக்கினன் இவர்களால்தான் என்ன பயன்? அல்லது, எனது சொந்தசரீரத்தால்தான் பயன் என்ன? இந்திரனுக்கும் வருணனுக்கும் ஒப்பான வீரியமமைந்தவரே! தங்கள் வல்லமையை நான் அறிந்திருந்தபோதிலும், தாங்கள் திரும்பிவராமற்போனால், இராவணனை, குமாரர்களுடனும்சேனைகளுடனும் வாகனங்களுடனும் போரிற்கொன்று, அதன்

பிறகு இலங்கைமாநகரத்தில் விபீஷணரை அரசராகப் பட்டாபிஷேகம்பண்ணி, எனது இராச்சியத்தைப் பரதனிடம் ஒப்பித்து, அதன் பிறகு எனதுபிராணனை விடுவதாக நான் முன்பு கருத்தில் உறுதிகொண்டிருந்தேன்" என்றார்.

இப்படிச் சொன்ன இராமரைப்பார்த்துச் சுக்கிரீவன் "இராகவரே! தங்கள்தேவியைக் கவர்ந்து சென்ற இராவணனைக் கண்டபிறகு, வீரரே! என்தேகத்தின் பலத்தை நான் அறிந்திருக்கையில், எவ்வாறு சகித்து நிற்பேன்?" என்று மறுமொழி கூறினன்.

சுக்கிரீவனது சமாதானம்.

இப்படி வீரனாகிய அவன் சொன்னதைக்கேட்டு, இராமர், வெகு சந்தோஷமடைந்து, இராம கைங்கரிய லட்சுமியைப் பெற்றிருக்கின்ற இலட்சுமணரைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:—"இலட்சுமண! குளிர்ந்த நீர்வளமுள்ளதும், கனிகள் நிரம்பிய காடுகளுள்ளதுமான ஓரிடத்தில் நமது படைகளைச் சேனாபதிகளின்வசத்தில் வைத்து அணிவகுத்து, யுத்தத்துக்குத் தகுந்த முயற்சியுடன் இருப்போம். உலகத்தையே நாசம்பண்ணிவிடக் கூடியதும், அரக்கர்கள் வானரர்கள் ருக்ஷர்கள் இவர்களுக்குள் பலவீரர்கள் மடிவதைத் தெரிவிக்கின்றதுமான கொடிய பல நிமித்தங்களைக் காண்கின்றேன். காற்றுக்கள் கடுமையாகவீசுகின்றன; பூமி நடுங்குகின்றது; மலைகளின் சிகரங்கள் அசைகின்றன; மரங்களோ காரணமில்லாமலேபூமியில்விழுகின்றன; விலங்குகளிருவங்களுடன் கொடிய மேகங்கள் தோன்றிக் கர்ச்சித்துக்கொண்டு, இரத்தத்துளிகளாற் கொடிய மழைத்துளிகளைப் பொழிகின்றன. மரவுரிபோலவும் சிவந்தகலவைச் சந்தனம்போல வெகுபயங்கரமாகக் காணப்படுகின்றது. விளங்குகின்ற அக்கினிமண்டலமானது, சூரியமண்டலத்தினின்று விழுகின்றது. தாழ்ந்த மிருகங்களும் பறவை

இராமர் லட்சுமணரிடத்துச் சேனைகளைச் சித்தப்படுத்தச் சொல்லி அங்கு நின்று இறங்குதல்.

களும், எளிமையுடன் கூடியனவாய், சூரியனே எதிர் நோக்கி நின்றுகொண்டு, பெரும்பயமுண்டாகும்படி மிக்க பரிதாபமான குரல்களுடன் கடிமையாகச் சத்தமிடுகின்றன. உலகமெல்லாம் அழியும் பிரளயகாலத்தி லுண்டாவதுபோல், இராக்காலத்திலே, சந்திரமண்டலம், ஓரங்கறுத்து அப்பாற் சிவந்து ஒளியற்றதாகக் காணப்பட்டுக் கொண்டு தகிக்கின்றது. சந்திரனைச்சுற்றியிடப்பட்ட மண்டலமானது, வெகுவாய்க் குன்றினதாயும், பார்ப்பதற்குப் பயங்கரமாயும், கலமில்லாததாயும், கதிவிற் சிவந்ததாயும் பிரளயகாலத்திற் காணப்படுவதுபோலத் தோன்றுகின்றது. இலட்சுமண! சூரியமண்டலத்தின்கடிவில் நீலவருணமானகளங்கமொன்று, காணப்படுகின்றது. நட்சத்திரங்கள் எப்பொழுதும்போலக் காணப்படவில்லை. ஆராய்ந்துபார்த்தால், இவைகளெல்லாம் இவ்வுலகத்தின்முடிவுகாலத்தைச் சொல்வனபோலவே விளங்குகின்றன. காக்கைகள் கழுகுகள் பருந்துகள், தாழப் பறந்துகொண்டிருக்கின்றன. நரிகள், பெருங்குரலோடு அமங்களமாக ஊளையிடுகின்றன. ஆகையால், நாம் இன்றையதினமே சடதியில் இதுவரையில் ஒருவராலும் தகையப்படாததாயும் இராவணனாற் பாதுகாக்கப்பட்டதாயும் விளங்குகின்ற இலங்கையை, வானரசைனியங்களாற்சூழப்பட்டவர்களாய்க்கொண்டு எதிர்த்துச் செல்வோம்" என்றார்.

இவ்வண்ணம் வீரரும் மகாபலசாலியுமாகிய அவ்விராமர், இலட்சுமணனே நோக்கிச் சொல்லிக்கொண்டே, அம்மலையினுச்சியிலிருந்து சடதியிற் கீழிறங்கினர். தருமாத்மாவாகிய அவ்விராகவர், அவ்வாறு இறங்கியபின்பு, ஒருபொழுதும் பகைவர்களால் தகையமுடியாத தமது சேனையைக் கண்ணுற்றார். காலத்துக்கு ஏற்றபடி செய்யும் வல்லமையுள்ள இராமர், காலமறிந்து, தமது வானரப் பெருஞ்சேனையை யுத்தத்துக்குச் சன்னத்தமாக இருக்க வேண்டிய ஏற்பாடுகளைச் சுக்கிரீவனுடன் செய்துமுடித்து,

போரைத் தொடங்குமாறு கட்டளையிட்டார். அதன் பிறகு, புஜபலம் பொருந்திய வில்வீரராகிய இராமர், விடியற்காலத்தில், பெருஞ்சேனை தம்மைச் சூழ்ந்துவர, இலங்கைமாநகரை எதிர்நோக்கி முன்னே சென்றார். அப்பொழுது அவரைத்தொடர்ந்துகொண்டு, விபீஷணர், சுக்கிரீவன், அநுமான், ஜாம்பவான், நளன், ருக்ஷராஜனாகிய தூமிரன், நீலன், இலட்சுமணர் ஆகிய இவர்கள் உடன்சென்றார்கள்; அவர்களுக்குப்பின்பாக, ருக்ஷர்களும் வாநரர்களும் நிரம்பிய பெருஞ்சேனை, பெரிய பூமியை மறைத்துக்கொண்டு தொடர்ந்து செல்லலாயிற்று. தங்கள் சத்துருக்களைத் தடுக்க வல்லவர்களும் யானைகள்போலப் பருத்த உடல்களமைந்தவர்களுமான வாநரர்கள், நாற்றுக்கணக்காக, மலையின் சிகரங்களையும், ஓங்கி வளர்ந்துநின்ற மரங்களையும் எடுத்துச்சென்றார்கள். வெகுநேரஞ்சென்றபிறகு, பகைவரை நாசஞ்செய்யவல்ல இராமலட்சுமணர்களென்கிற அவ்விருவரும் இலங்கையை யடைந்தார்கள். கொடிகள் பறக்கப்பெற்றனவும், அருகில் அழகிய தோட்டங்கள் விளங்குவனவும், அடியிற்கட்டிய அழகிய மண்திண்ணைகளையுடையனவும், ஒருவராலும் நெருங்கமுடியாதனவுமான உயர்ந்த மதில்களையும் வாயிலையுங் கொண்டு தேவர்களாலும் அணுகமுடியாத அவ்விலங்காபட்டணத்தை, ஸ்ரீராமரது கட்டளைப்படி அவ்வாநரசேனைத்தலைவர்கள், தம் தமக்கு விதிக்கப்பட்ட இடத்திலிருந்து முற்றுகைசெய்துகொண்டு தங்கினர்கள்.

யாவரும் இலங்கையைச்சேர்ந்து முற்றுகை செய்தல்.

பருவதத்தின் கொடுமுடிபோல் ஆகாயத்தை அளாவிநின்ற இலங்கையின் வடக்குவாயிலை, இராமர், தமது கையில் வில்லேந்தி, தமது தம்பியாகிய இலட்சுமணருடன், தமது சேனைகளைக் காத்துக்கொண்டு தகைந்தார்; தசரதராஜாவின் புதல்வராகிய இராமர், தமது

தம்பியான இலட்சுமணருடன், இராவணன் தங்கியிருந்த இலங்கையின் வடக்குவாயிலில் அவ்வாறு இறங்கினர். அக் கோட்டைவாயிலி லிருந்துகொண்டு பாதுகாக்க, இராமபிரா னலன்றி மற்ற எவராலும் முடியாது; ஏனெனில், வரு ணன் பயங்கரமான சமுத்திரத்தைப் பாதுகாத்திருப்பது போல், அவ்விடத்தில் இராவணன் இருக்கின்றான்; மேலும், எவ்விடத்திலும் கொடியவர்களான அரக்கர்கள், ஆயுத பாணிகளாக இருந்துகொண்டு, அவ்வாயிலை இரட்சித்து வந்தபடியால், தானவர்களாற் பாதுகாக்கப்பட்ட பாதாள லோகம்போலக் கொஞ்சம் பயந்தவர்களுக்குப் பெரும்பயத் தை யுண்டாக்கலாயிற்று. அவ்வாயிலில், பலவகையான ஆயுதங்களின் சமூகங்களும் கவசங்களும் இருந்ததை, இராமர் கண்டார். கிழைக்கோபுரவாயிலை யடைந்து, நீலனென்ற சேனபதி, மைந்த துவிவிதர்களுடன் இருந் தான். மிகுந்த சேனைகளையுடைய அங்கதன், ருஷபன் கவாக்ஷன் கஜன் கவயன் என்ற இவர்களுடன் தெற்கு வாயிலை முற்றுகைசெய்தான். சேனைகளையுடைய அநு மானை, பிரமாதி பிரகஸர்களுடனும், மற்றும் பல வீரர் களுடனும் மேற்குவாயிலிலே நிற்கலானான். சுக்கிரீ வன், மேற்குவாயிலுக்கும் வடக்குவாயிலுக்கும் நடுவிலே, கருடபகவானுக்கும் வாயுபகவானுக்கும் ஒப்பான வல்லமை யமைந்த வானரவீரர்களுடன் நின்றான். அன்றியும், முப் பத்தாறுகோடிக் கணக்கான புகழ்பெற்ற வானரத்தலை வர்கள், சுக்கிரீவனுடன் இலங்கையை முற்றுகைசெய்து கொண்டு நின்றார்கள். இராமருடைய கட்டளைப்படி, விபீ ஷணரும் இலட்சுமணனும், இடைவெளிகளிலெல்லாம் ஒவ் வொருகோடி வானரசேனையை நிறுத்தினர்கள். தோள் வலிமை படைத்தவர்களான சுக்கிரீவனும், ஜாம்பவானும், தங்கள் தங்கள் பெருஞ்சேனைகளுடன் சமயத்தில் இராமரு க்கு உதவிசெய்யும்படி மேற்புறத்தில் அவருக்குச் சமீபமாக வே சேனைவகுப்பின் நடுவிலே நின்றுகொண்டிருந்தார்கள்.

அவ்வண்ணம்முற்றுகைசெய்த வாநரசேனைகளிலுள்ளவரான வேங்கைகள்போன்ற வாநரச்சிரேஷ்டர்கள், தங்கள் கோரப்பற்களை வெளிக்காட்டிக்கொண்டும், மரங்களையும் மலைச்சிகரங்களையும் ஏந்திக்கொண்டும் போர்புரிய மிகவும் உற்சாகங் கொண்டிருந்தார்கள். எல்லாரும் தங்கள் தங்கள் வால்களை மேலேதூக்கிக்கொண்டும், எல்லாரும் தங்கள்தங்கள் பற்களையும் நகங்களையுமே ஆயுதமாக உபயோகிக்கச் சித்தமாக இருந்துகொண்டும், எல்லாரும் தங்கள் தங்கள் அழகானதேகத்தைக் கோபத்தாற் சிலிர்த்துக்கொண்டும், தங்கள் தங்கள் முகங்களைக் கோபத்தாற் சிவக்கச்செய்துகொண்டும் நின்றார்கள். அவ்வாநரர்களிற் சிலர் பத்து யானைகளின் பலமுள்ளவர்களாயும், இன்னும் சிலர் நூறுயானை பலமுள்ளவர்களாயும், வேறு சிலர் ஆயிரம் யானைகளின் பலமுள்ளவர்களாயும், மற்றுஞ் சிலர் ஓகமென்ற கணக்கைக்கொண்ட யானைகளின் பலமுள்ளவர்களாயும், பின்னுஞ் சிலர் அவ்வாறு சொல்லப்பட்டவர்களைக்காட்டிலும் நூறு மடங்கு மிக்க பலமமைந்தவர்களாயும், இன்னுஞ் சிலர் அளவிட முடியாத பலம் பெற்றவர்களாயும் அங்கே இருந்தார்கள். அவ்வானரவீரர்கள் அவ்விடம் நிரம்பிநின்ற காட்சியானது—வெகு ஆச்சரியமாயும், அழகாயும், விட்டிற்கூட்டங்கள் கிளம்பியதுபோலவும் காணப்பட்டது. இலங்கையில் இறங்கிவிட்டனவும் இலங்கையை நோக்கி வந்துகொண்டிருந்தனவுமான வானரங்களால், பூமியே மறைக்கப்பட்டதுபோலவும், ஆகாயமே மூடப்பட்டதுபோலவும் காணப்பட்டது. நாறுநூறுயிரமான வெவ்வேறுகியவானரர்களும் ருக்ஷர்களும் இலங்கை வாயிலண்டைநாற்புறமும் வந்துசேர்ந்தார்கள். அந்தத்திரிகூடபர்வதமே, நாற்புறத்திலும் அவ்வானரர்களால் மூடப்பட்டு விளங்கிற்று. ஆயிரம் அயுதம் வாநரர்கள், அந்நகரத்தைச் சூழ்ந்து நின்றார்கள். அப்போது விருட்சங்களைக் கைகளிலேந்திய பலசாலிகளான வாநரர்களால் எல்லாப்

பக்கங்களிலேயும்நன்முகத்தகையப்பட்டு,இலங்கையானது, வாயுபகவான்கூடப் புகுதற்கு அரிதாகக் காணப்பட்டது. மேகங்கள்போன்ற உடம்புகளுடனும் இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரமத்துடனுங் கூடிய வாநரர்கள், இலங்கையைச் சூழ்ந்துகொண்டதைக் கண்டு, அரக்கர்கள் ஆச்சரியமடைந்தார்கள். கரைகடந்து பொங்குஞ் சமுத்திரத்திலிருந்து சத்தம் உண்டாவதுபோல, அங்கே, முற்றுகை செய்கிற வாநரசேனையிலிருந்து பேரொலி யெழுந்தது. அப்பெருஞ் சத்தத்தினால், மலைகள் காடுகள் சோலைகள் மதில்கள் தோரணங்கள் இவைகளுடன், இலங்காநகரம், கிடுகிடென்று நடுங்கலாயிற்று. இராம லட்சுமணர்களாலும், சுக்கிரீவனாலும் பாதுகாக்கப்பட்ட அவ்வானரசேனையானது, எல்லாச் சுராசுரர்களும் திரண்டுவந்து எதிர்த்தபோதிலும், வெல்லமுடியாததாக விளங்கிற்று.

இராமர் அங்கதனைத் தூதனுப்புதல்.

சாமபேததான தண்டங்களென்னுஞ் சதுர்விதவுபாயங்களின் பயனை யுணர்ந்த இராமர், அரக்கர்களை வதைசெய்யும்பொருட்டு அவ்வாறு தமது சேனையை அணிவகுத்து இறக்கிய பின்பு, தாம் அரசநீதியைத் தவறுதிருக்குமாறு நினைத்து, செய்யவேண்டிய காரியங்களைப்பற்றித் தமது மந்திரிமார்களுடன் கலந்து பலதடவை நன்முகஆலோசித்து நிச்சயித்து, தாம் இனி நடத்தவேண்டிய காரியங்களை நடத்தவிரும்பி, விபீஷணருடைய அநுமதியின்மேல் வாலியின் குமாரனாகிய அங்கதனைத் தம்மிடங் கூப்பிட்டு இவ்வாறு சொல்லத் தொடங்கினர்:—

"நண்ப! வானரா! இலங்கையின்மதிலைச் சிரமமின்றிக் கடந்து, அச்சமில்லாமல் நீ இராவணனிடஞ் சென்று நான் சொன்னதாகச் சிலசங்கதிகள் சொல்லிவரவேண்டும்: 'அரக்கா! உனது சம்பத்தும், ஐசுவரியமும், உனது பிராணனும், அறிவும் இனித் தொலைந்தன. இரவில் திரிபவனே! நீ உனது செருக்கினால், முனிவர் தேவர் கந்தர்வர்

அப்ஸரஸ்ஸுக்கள் நாகர் யக்ஷர் மநுஷ்யர் இவர்களவ் வளவு பெயர்களுக்கும், பிரமதேவரிடமிருந்து வரம்பெற் றிருக்கின்றே மென்ற இறுமாப்பால், இதுவரையில்தீமை செய்துவந்தாயன்றே! அச்செருக்கு இன்றேடே தொலைந் தது; ஏனெனில், தகுந்ததண்டனையை விதிக்கின்ற நான், நீ என்மனைவியைக் கவர்ந்ததனால் இளைத்து, உன்விஷ யத்தில் தண்டனைவிதிக்குமாறு இந்த இலங்கைவாயிலில் நிற்கின்றேனன்றே! அரக்கனே! நீ யுத்தத்தில் நின்று, நம்மால் வதைக்கப்பட்டு, தேவதைகளும் மஹரிஷிகளும் மன்னவர்களும் மற்றவர்களும் சென்ற வழிக்குப் போய் விடுவாய். அடா அரக்கப்பதரே! எவ்வித பலத்தின்மேல் நம்பிக்கைவைத்து நாமில்லாதவேளைபார்த்துச் சீதையைக் கவர்ந்துசென்றாயோ, அப்பலத்தை, நம்முன்நின்று இப் பொழுது கொஞ்சம் காட்டிவிடு. சீதையைத் திருப்பிக்கொ ண்டுவந்து கொடுத்து நமது பாதங்களிற் சரணமென்று நீ வந்து விழாதபட்சத்தில், நமது கூரான அம்புகளால் இவ்வுலகத்தில் அரக்கப்பூண்டேயில்லாதவண்ணம் நாம் செய்துவிடுகின்றேம். அரக்கருள் உத்தமரான தருமா த்துமாவாகிய விபீஷணர், நம்மிடம்வந்து சேர்ந்திருக்கின் றார்: சீமானுகிய இவர், ஒருவிதஇடையூறு மின்றி, இனி இவ்விலங்கையையாளும் பாக்கியத்தை அடையப்போகின் றார். தருமநெறியினின்று வழுவியவனுய், புத்தியற்ற மந் திரியரால் சூழப்பட்டவனுய், பெரும்பாவியாய், மனத்தை யடக்கமுடியாதவனுன உன்னுல், ஒருநிமிஷமாவது இராச் சியபரிபாலநம் நடக்குமென்பது முடியாதகாரியம். சீதை யைஎனக்குக்கொடுத்து உயிரைக்காப்பாற்றிக்கொள்ளவிரு ப்பமில்லாதபட்சத்தில், நீ தைரியத்தைக் கைப்பற்றி, உனது வல்லமையைக்கொண்டு நம்முன்னே போர்புரி; நம துபாணத்தாற் போரில் மாண்டவனுய், பிறகுபரிசுத்தனுகி விடுவாய். நீ பறவையுருவங்கொண்டு மூவுலகங்களிலேயும் மனேவேகமாகஓடி ஒளித்தாலும், நமது கண்ணேக்கத்தில்

அகப்பட்டபிறகு, நீஉயிர்பிழைத்துப்போகமாட்டாய். நான் இப்பொழுது உனக்கு நல்வார்த்தைசொல்லுகிறேன்: இப்பொழுதே நீ உனக்கு உத்தரகிரியைகளைச் செய்துமுடித்துக்கொள்; நன்றாக ஒருமுறைஇலங்கையைப் பார்: ஏனெனில், உனதுஉயிர் எனதுகையில் இருக்கின்றது'' என்றார்.

அங்கதன் தூது.

இவ்விதமாக எளிதில் தொழில் செய்யவல்ல ஸ்ரீராமர் அங்கதனிடஞ் சொன்னதும், அவ்வாநரவீரன் உருவமெடுத்துச் செல்லுகின்ற அக்கினிபகவான்போல ஆகாயத்தில் லெழுந்து சென்றான். சீமானான அவன், ஒருநொடியில் இராவணன்மாளிகை சேர்ந்து, அவ்விராட்சசராஜன் தனது மந்திரிமார்களின்நடுவில் ஒருகவலையுமின்றி உட்கார்ந்திருந்ததைக் கண்டான். அவனுக்குச்சமீபத்தில், தோள்வலிகளையணிந்து கொழுந்து விட்டெரியுந் தீப்போன்ற அங்கதனென்னும் அவ்வாநரவீரன், இறங்கி, தான் இன்னானென்று தெரிவித்து, அமைச்சர்களுடன் வீற்றிருந்த அவ்வரக்கனிடம், இராமபிரான் சொன்ன சிறந்த சமாசாரத்தை, ஒன்றுவிடாமல் ஒன்றும் அதிகமில்லாமற் சொல்லலானான்: "எளிதில் எத்தொழிலையுஞ் செய்துவரும் இராமரென்ற கோசலதேசத்தரசருடைய தூதன் நான்; நான், வாலியின்குமாரன்: எனது பெயர், அங்கதனென்பது. என்னைப்பற்றி உன்காதில் விழுந்திருக்கலாம். கௌசல்யையின் அருமைமைந்தராகிய இராமர், உன்னிடத்திற் சொல்லுகிறார்: கொடியவனே! வெளிவந்து நேர்நின்று போர்செய்து ஆண்பிள்ளையென்ற பெயரைக் காப்பாற்றிக்கொள். உன்னை, உனது புத்திரர்களுடனும், மந்திரிகளுடனும், தாயாதிகளுடனும், உறவினருடனும், கொல்லப்போகின்றேன். உன்னைக்கொன்றால், இம்மூவுலகங்களும் உன்னிடமிருந்து அச்சமற்றனவாகும். நீ என்னைவணங்கிச் சம்மானித்துச் சீதையைக் கொடாவிட்டால், தேவர் தானவர் யக்ஷர் கந்தர்வர் உரகர் அரக்

கர் ஆகிய இவர்கட்குச் சத்துருவாயும் இருடிகட்குக்கண் டகனுயு மிருக்கின்ற உன்னை, இப்போதே வேருடன்களை வேன். நீ மாண்டதும், உனது இராச்சியம் விபீஷணருடையதாகும்" என்று இவ்வாறு இராமர் சொன்னதாக, அங்கதன் கடுமையாகச் சொல்லியபொழுது, அதுகேட்ட இராவணன் கோபத்திற்கு அதீனனுய், கோபத்தாற் கண்கள் சிவக்க, மந்திரிமார்களைநோக்கி, "புத்தியற்ற இவனைப் பற்றிக்கொள்ளுங்கள்; உடனே இவனை வதைசெய்யுங்கள்" என்று அப்போது அடிக்கடி கட்டளையிட்டான். பற்றியெரியுந்தீப்போல விளங்கிய அவ்விராவணனுடைய கட்டளையைக் கேட்டதும், பயங்கரமானதோற்றமுள்ள நான்கு அரக்கர்கள், அவனைப் பிடித்துக்கொண்டார்கள். அப்போது, தைரியசாலியான வீரனுகிய அங்கதனும்,

அங்கதன் தன் வல்லமையைக் காட்டுதல்.

அரக்கர் கூட்டத்தில் தனது பலத்தைக் கொஞ்சங் காண்பிக்க எண்ணங்கொண்டவனுய், அவர்கள் தன்னைப்பற்றிக்கொள்ளும்படி இடங்கொடுத்தான். அப்போது அப்படியே அவர்கள் தனது இருகைகளைப் பற்றிக்கொண்டதும், அவர்களை யிடுக்கிக்கொண்டு, அங்கதன், பருவதம்போ லோங்கிநின்ற இராவணன் மாளிகையின்மேற் பறவைபோலக் கிளம்பினன். அவ்வாறு கிளம்பி ஆகாயத்திலிருந்தபடியே, அவ்வங்கதன், அவ்வரக்கர்களை உதறிக் கீழே தள்ளியதனல், எல்லாவரக்கர்களும், இராவணன் கண்கள் முன்பாகவே, பூமியில் விரைவாகப் பொத்தென்று விழுந்தார்கள். அதன் பிறகு, பிரதாபமுள்ள அங்கதன், மிகவும் உயரமான இராவணனது மாளிகைச் சிகரத்தைப் பார்த்தான். பார்த்த அவன் ஓர் உதை உதைக்கவே, முன்பு இமயமலையின் சிகரம் இந்திரனுற் பிளக்கப்பட்டு விழுந்ததுபோல, பார்த்துக்கொண்டிருந்த பொழுதே, இராவணனது அம்மாளிகைச்சிகரம் இடிந்து விழுந்தது. அவ்வாறு அம்மாளிகையின் சிகரத்தை இடித்துத்

தனது பெயரைக் கூறி அட்டகாசஞ்செய்து, அவ்வானர வீரன், ஆகாயத்திற் கிளம்பினான். அரக்கர்களின் மனங்களிலே குழப்பத்தையும், வானரர்களின் மனங்களிலே சந்தோஷத்தையும் உண்டாக்கி, அங்கதன், வானரசேனையின்நடுவில், இராமருடைய சமீபத்தில் வந்துசேர்ந்தான்.

தனது மாளிகைச் சிகரம் அவ்வாறு அங்கதனால் இடிக்கப்பட்டதைக் கண்டு, இராவணன் அதிககோபங் கொண்டான் : அன்றியும், தனக்கு நாசகாலம் நெருங்கிவிட்ட தென்பதாகவும் நினைத்துப் பெருமூச்செறிந்தான். இராமரோ, சந்தோஷத்தால் அட்டகாசம்பண்ணும் பல வானரவீரர்களாற் சூழப்பட்டவராய், தமது சத்துருவை வதைக்கத் தீர்மானித்து, போர்புரிய மிக்க ஆவலுடன் எதிர்பார்த்து நின்றார். அதிகவல்லமை பொருந்தியவனும்

யுத்த சன்னாகம்.

மலைச் சிகரங்கட்கு ஒப்பான சரீரமுள்ளவனுமான சுஷேணனென்னும் வானர வீரன், வேண்டியவடிவங்கொள்ளும் வானரர்கள் பலராற் சூழப்பட்டவனாய், நட்சத்திரங்களினிடையிற் சந்திரன் புகுந்து சஞ்சரிப்பதுபோல, சுக்கிரீவனுடைய கட்டளைப்படி, நான்கு வாயில்களையும் அடிக்கடி சோதித்துப் பார்த்துக்கொண்டு நிற்கலானான். நூறு அக்ஷௌஹிணியான அவ்வானரப்படை, இலங்கையைக் கிட்டியும் சமுத்திரம் வரையிலும் பரவியுமிருந்ததை அரக்கர்கள் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். சிலர், அச்சத்தால் நடுங்கலானார்கள். வேறு சிலர், சண்டையிலுள்ள மனக்கிளர்ச்சியாற் களிக்கலானார்கள். வானரர்கள் மதிலுக்கும் அகழுக்கும் நடுவில் லிருந்த இடத்தில் எள்ளளவும் விடாமல் பரவி, வானரர்களாலமைக்கப்பட்ட மற்றொரு மதில்போலக் காணப்பட்டதை, அரக்கர்கள், எளிமையுடன் கண்ணுற்றார்கள். அப்போது, அரக்கர்கள் அச்சத்தால் அறிவிழந்து, " ஹா ஹா " என்று கதறலானார்கள்.

அவ்விதமாக மிகவும் பயங்கரமான கோலாகலமானது ராக்ஷஸராஜதானியில் தோன்றியபோது, அரக்கர்கள் தங்கள் கைகளில் ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு, பிரளயகாலக்காற்றுச் சஞ்சரிப்பதுபோலச் சஞ்சரிக்கத்தொடங்கினர்கள்.

நாற்பத்திரண்டாஞ் சருக்கம்:
வானரரும் அரக்கரும் போர்புரியத் தொடங்குதல்.

அதன்பிறகு, கோட்டைவாயில்காப்பாளராயிருந்த அரக்கர்கள், இராவணனுடைய மாளிகைக்குச் சென்று, வானரர்களுடன் இராமர் இலங்கைமாநகரை முற்றுகை செய்ததைத் தெரிவித்தார்கள். நகரம் தகையப்பட்டதைக் கேட்டு, அவ்வரக்கன், கோபங்கொண்டு, நகரத்தைக் காப்பாற்றுமாறு முன்னமே செய்திருந்த ஏற்பாடுகளை இரட்டிப்பாகச்செய்து, தனது மாளிகையின்மேலேறினன். அவன், தனது நகரமானது எல்லாப்பக்கங்களிலும் போர்புரிய உற்சாகத்துடனிருக்கின்ற எண்ணிக்கையிலடங்காத வானரர்களாற் சூழப்பட்டிருப்பதைக் கண்டான். பூமியின்பாகம் ஒருசாண்கூடவெற்றிடமாகக்காணப்படாமல் வானரர்கள்நின்றதை, இராவணன், உற்றுப்பார்த்து, 'எவ்விதமாய் இவர்களை நாம் ஜயிக்கப்போகின்றோம்?' என்று ஏக்கங்கொண்டான். அவ்விராவணன் இதைப்பற்றி வெகுநேரஞ்சிந்தித்து, தன்மனத்தை ஒருவாறு தைரியப்படுத்திக்கொண்டு, மறுபடியும் இராகவரையும் அவருடையசேனைகளையும் நன்றாகத் தனதுபரந்த கண்களைக்கொண்டு பார்த்தான்.

இராமர் சேனையுடன் முற்றுகை செய்ததை யுணர்ந்த இராவணன் கலங்கித்தேறுதல்.

இராமரோ, மகிழ்ச்சிகொண்டு தமது சேனைகளுடன் இலங்கையின் பிராகாரத்தைச் சார்ந்து, இலங்காபுரியானது அரக்கர்களால் நன்முகப் பாதுகாக்கப்பெறுவதையுங் கண்டார். இராமர், அழகான கொடிகள் பறக்க இலங்கை விளங்குவதைக் கண்டு, சீதையைநினைத்து, "இங்கேயல்லவோ எனது மான்விழியாளாகிய ஜானகி என்னிமித்தமாகத் துக்கத்தால் எரிக்கப்பட்டு வருந்தி மெய்வாடித் தரையிற் புரண்டுகொண்டிருக்கின்முள்!" என்று சீதை படுந் துக்கத்தைப்பற்றி மனம்வருந்தி, தருமாத்துமாவாகிய அவ்விராமர், வானரர்களை நோக்கிப் பகைவர்களை விரைவில் வதைக்குமாறு கட்டளையிடலானர். எளிதாகத் தொழில்செய்யவல்ல அம்மகாத்துமா அவ்வண்ணம் இட்ட கட்டளையை வானரர்கள் கேட்டதும், அவர்கள் போட்டி போட்டுக்கொண்டு சிங்கநாதஞ்செய்தார்கள். மலைகளின் சிகரங்களாலேனும், கைகளாற் குத்தியேனும் இவ்விலங்கையைப் பொடியாக்குவோமென்று தங்கள்தங்கள்மனத்திற்குள் எல்லா வானரத்தலைவரும் கருதலானர்கள்.

இராமர், சீதையை நினைத்து வருந்தி, பகைவரையழிக்குமாறு சேனையை யேவுதல்.

வானரசேனாபதிகள், பருவதங்களின் பெருஞ்சிகரங்களையும் பெரியதண்டுமரங்களையும் தூக்கிக்கொண்டும், பல விதவிருட்சங்களை வேருடன் பிடுங்கிக்கொண்டும் போர்புரியச் சித்தமாக நின்முர்கள். இராவணன் கண்ணுற்பார்த்துக் கொண்டிருந்தபொழுதே, அவ்வானர சேனைகள், இராமருக்கு நன்மைசெய்யக்கருதி, பலபாகங்களாகப் பிரிந்து தங்கள்தங்களுக்கு விதிக்கப்பட்ட இடத்தில் இலங்கை நகரத்தின் மதில்களை லேறலானர்கள். தாமிரவருணமான முகங்களும் தங்கநிறமானமேனியும்அமைந்த அவ்வானரர்கள், இராமபிரான் நிமித்தம் தங்களுயிரையுங் கொடுக்க உறுதிகொண்டவர்களாய், ஆச்சாபனை கற்பாறை இவை

வானரர்களின் யுத்தம்.

களை ஆயுதங்களாக ஏந்திக்கொண்டு, இலங்கையைநோக்கிச் செல்லலானார்கள். அவ்வானரர்கள்—விருக்ஷங்களினாலும் மலைச்சிகரங்களினாலும் தங்கள் கைக்குத்துக்களாலும், மதில்களின் உச்சிகளையும் பூந்தோட்டங்களையும் வெளி வாயில்களையும் அழிக்கலானார்கள். தெளிவான நீர்நிரம்பி யுள்ள அகழிகளை, அவ்வானரர்கள், மண்ணினாலும் மலைச் சிகரங்களாலும் புல்லாலும் கொம்புகளாலும் தூர்க்கலா னார்கள். அவ்வாறு தூர்த்தபிறகு, அப்போது அவ்வா னரப் போர்வீரர்கள், ஆயிரக்கணக்காகவும் கோடிக்கணக் காகவும் நூறுகோடிக்கணக்காகவும் இலங்கையினது மதிலின்மேல் ஏறினார்கள். பெரிய யானைகளை யொத்த வானரர்கள், தங்கத்தாலாகியவாசல்களையும் கைலமலையின் சிகரம்போன்ற கோபுரங்களையும் இடித்துக்கொண்டும், கர்ச்சித்துக்கொண்டும் போவதும் வருவதுமாய் இலங்கை யில் நாற்புறத்திலும் ஓடலானார்கள். வேண்டுமுருவங் கொள்ளவல்ல வானரர்கள், "வெகுபலம் பொருந்திய இராமபிரான் வெற்றிபெறுக; மகாபலம்படைத்த இலட்சு மணரும் வெற்றிபெறுக; இராமராற் பாதுகாக்கப்படும் மகாராஜராகிய சுக்கிரீவரும் வெற்றிபெறுக" என்று கோஷித்துக்கொண்டும், கர்ஜித்துக்கொண்டும் இலங்கை யின் மதில்களை நோக்கி ஓடலானார்கள். இப்படி நடந்த பொழுது,வீரபாகு சுபாகு நளன் என்றபிரசித்தரானவான ரர்கள், மதிலை ஒருபக்கத்தில் இடித்துத் தாங்கள் தங்கி, தங்கள்சைனியங்களை அவ்விடத்தில் அணியாகநிறுத்தினர் கள். பலவானனை குமுதன், பத்துக்கோடி வானரசேனை யுடன் கிழைவாயிலை முற்றுகைசெய்து நின்றான்; அவ னுக்கு உதவிசெய்யவேண்டி, பிரகஸனும், புஜபலம்பொரு ந்திய பநஸனும் பலவானரர்களடங்கிய தங்கள்சேனைகளு டன் தங்கியிருந்தார்கள். பலசாலியான சதவலியென்னும் வானரவீரன், இருபதுகோடிவானரசேனையுடன், தென்வா யிலை மறைத்துக்கொண்டு நின்றான். தாரையின் தந்தையா

கிய பலவானை சுஷேணன் என்ற வானரசேனபதி, அறு பதுகோடி வானரசேனையுடன், மேலவாயிலை மறைத் துக்கொண்டு நின்றான். வடக்குவாயிலை, ஸ்ரீராமரும் இல ட்சுமணரும், வானரவேந்தனை சுக்கிரீவனும், முற்று கைசெய்து நின்றார்கள். பேருடல்படைத்த கோலாங் கூலமென்னுஞ் சாதியைச் சேர்ந்த பயங்கரமான தோற்ற முள்ள மிக்கவீரியவானை கவாக்ஷன், கோடிக்கணக்கான சேனையுடன், இராமருடைய பக்கத்தில் நின்றான். பகை வரையழிக்கவல்ல மகாவீரியவானை தூமிரன், அதிக வேகம்பொருந்திய ஒருகோடி ருக்ஷர்களாற் சூழப்பட்ட வனாய், இராமருடைய மற்றொருபக்கத்தில் நிற்கலானான். மகாபலவானை விபீஷணர் கதாயுதத்தைக்கையிலேந்தி, போர்முயற்சியுள்ள தமது மந்திரிகளாற் சூழப்பட்டவராய், இராமருள்ள விடத்திற் சன்னத்தராய்வந்து நின்றார். கஜன் கவாக்ஷன் கவயன் சரபன் கந்தமாதனன் என்ற சேனபதி கள், வானரசேனைகளை, நான்குபக்கங்களிலும் ஓடிக் கொண்டு பாதுகாக்கலானார்கள்.

இராக்கதரின் யுத்தசன்னாகம்.

இப்படி இவர்கள் இங்கிருக்த காலத்தில், கோபத்தாற் கவரப்பட்ட அரக்கர்மன்னவனை இராவணன், தனது எல்லாச்சேனைகளையும் சடிதியிற்புறப்படுமாறு கட்டளையிட் டான். இவ்விதமாய் இராவணனது வாயி லிருந்து வந்த கட்டளையைக் கேட்டதும், அரக்கர்கள், வெகு பயங்கரமாக அட்ட காசம் பண்ணத் தொடங்கினர்கள். பிறகு, சந்திரன் போல் வெளுப்பான கண்ணையுடைய பயங்கரமான அரக் கர்களின் போர்ப்பறைகள், பொன்மயமான எதிர்தடிகளால் அடிக்கப்பட்டு, நாற்புறங்களிலும் ஒலிக்கலாயின. சங்கங் கள், நாற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் மிகக் கொடிய அரக்கர்களின் முகக்காற்றால் நிரப்பப்பட்டு ஊதப்பட்டன. தங்கமயமான அணிகலனணிந்த கறுத்த

மேனிகளையுடைய அவ்வரக்கர்கள், சங்கங்களை யேந்திக் கொண்டு, மின்னற்கொடிகளோடு சேர்ந்த கொக்குக்கூட்டங்களையுடைய கார்மேகங்கள்போலக் காணப்பட்டனர். பிறகு, இராவணன்கட்டளைப்படியே, அவ்வரக்கசேனைகள், உற்சாகத்துடன், சந்திரோதயகாலத்திற் சமுத்திரஜலம் பொங்குவதுபோலப் புறப்பட்டன.

இரு திறத்தாரும் செய்யும் போர்.

பிறகு,காற்புறத்திலும்வானரசேனைகளிலிருந்துகிளம்பிய பேராரவாரமானது, திரிகூடமலையினது குகைகளிலும தாழ்வரைகளிலும் மலைத்தடங்களிலும் நிரம்பிற்று.சங்கங்கள் துந்துபிகள் முதலிய வைகளின் பேரொலியுடன்கூடிய பலசாலிகளான வானர வீரர்களின் ஆரவாரமும், யானைகள்வீரிடுஞ் சத்தத்துடனும் குதிரைக்கனைப்புடனும் தேர்களுடைய சக்கரத்தின் பேரொலியுடனும் கூடிய அரக்கர்களின் பேராரவாரமும் ஆகிய இவற்றால், பூமியும் ஆகாயமும் சமுத்திரமும் எதிரொலி ஒலிக்கலாயின. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் முற்காலத்திற் சண்டையுண்டானது போல, இச்சமயத்தில் அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் வெகுபயங்கரமான சண்டை தொடங்கலாயிற்று. அவ்வரக்கர்கள் மின்னுகின்ற கதாயுதங்களாலும், சக்திகளாலும், சூலங்களாலும், கோடரிகளாலும், வானரர்களைப் புடைத்தார்கள். “ சுக்கிரீவமகாராஜர் வெற்றியடைகின்றார் ” என்ற சத்தம் பெருங்குரலாக எங்குங் கேட்கலாயிற்று.பெருந்தோற்றத்துடனிருந்தவானரர்கள், அதிகவேகத்துடன், தங்கள்தங்கள் பெயரை எடுத்துச் சொல்லி, முடிவில் “ மன்னவர் வெற்றிபெறுக, வெற்றி பெறுக” என்று உச்சரித்துக்கொண்டு, விருட்சங்களாலும் மலைச்சிகரங்களாலும் நகங்களாலும் பற்களாலும் அவ்வரக்கர்களை எதிர்த்துப் புடைத்தார்கள். மதில்களின்மேல் நின்ற பயங்கரரான சில அரக்கர்கள், பூமியில்நின்ற வானரர்களை, பிண்டிபாலங்களாலும் கத்திகளாலும் சூலங்களா

லும் வெட்டலானார்கள். தாவிக்குதிக்குந்தன்மையுள்ள பூமியிலிருந்த வானரர்களும், வெகுகோபங்கொண்டு, ஒரேபாய்ச்சலாகப்பாய்ந்து மதில்களின்மேல் நின்ற அரக்கர்களைப் பற்றி விழுத்தினர்கள். அவ்வாறு அப்பொழுது அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் நடந்த போர், நிகரற்றிருந்தது; போர்க்களமும், மாமிசங்களாலும் இரத்தங்களாலும் சேறுபிற்று.

நாற்பத்துமூன்றுஞ் சருக்கம்: அரக்க வானரர்களின் தொந்தயுத்தம்.

மகாத்துமாக்களாகிய வானரர்களும் அரக்கர்களும் அவ்வண்ணம் போர்செய்துகொண்டிருந்தபொழுது, ஒருவர்சேனையை ஒருவர் கண்டதும் அவ்விருதிறத்தார்க்கும் அதிகமாகக் கோபம் பொங்கிவிட்டது. அரக்கர்கள், பொன்னற்செய்யப்பட்ட தலைக்குஞ்சங்கள் கட்டிய குதிரைகளின் மேலும், கொழுந்துவிட்டெரியும் அக்கினிபோலப் பிரகாசிக்கின்ற கொடிகளையுடைய சூரியன்போற் சோபிக்கும் இரதங்களின்மேலும் ஏறிக்கொண்டு, அழகான்கவசங்களையணிந்து, இராவணனுடைய வெற்றியை விரும்பினவர்களாய், பத்துத் திக்குகளிலும் பிரதித்தொனியுண்டாக உறுமிக்கொண்டு போர்புரிய வெளிக்கிளம்பினர்கள். வானரப்பெருஞ்சேனையும், காமரூபிகளான அரக்கர்களடங்கிய அவ்விராட்சசசேனையைநோக்கி வெற்றியடையவேண்டி ஓடிற்று. இவ்விதமாக ஓடி யெதிர்த்த அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் அப்போது துவந்துவயுத்த முண்டாயிற்று. முக்கண்படைத்த சிவபெருமானுடன் யமன் போரிட்டதுபோல, வெகுபராக்கிரமம்பொருந்திய இந்திரஜித்து வாலியின் குமாரனாகிய அங்கதனோடு சண்டைசெய்யலானன். போரில் ஒரு

அரக்க வானரர்களின் தொந்த யுத்தம்.

பொழுதும் எவராலும் வெல்லமுடியாத ஸம்பாதியென்ற விபீஷணமந்திரி, பிரஜங்கனென்ற அரக்கவீரனுடன் மல்லுக்கு நின்றான். அநுமான், ஜம்புமாலியைக் கொல்லுமாறு முயன்றான். அதிக கோபங்கொண்டவரும் அரக்கவேந்தனது தம்பியுமான விபீஷணர், போரிற் கொடிய வல்லமை பொருந்திய மித்திரக்கினனென்ற அரக்கவீரனுடன் யுத்தம்பண்ணலானார். கபனனென்ற அரக்கனுடன் மகாபலவானான கஜனென்ற வானரனும், மகா பல பராக்கிரமசாலியாகிய நீலனென்ற வானரவீரன் நிகும்பனென்ற அரக்கனுடனும் போர்க்கு நின்றனர். சுக்கிரீவனென்ற வானரராஜன், பிரகஸனுடன் போரிடலானான். மிக்க பாக்கியசாலியாகிய இலட்சுமணர், விரூபாக்ஷனுடன் சார்ந்து யுத்தஞ்செய்தார். ஒருவராலும் வெல்லமுடியாத அக்கினிகேது ரச்மிகேது சுப்தக்கினன் யக்கிய கோபன் முதலான அரக்கர்கள், இராமருடன் போர்புரியுமாறு சேர்ந்தார்கள். வானர சிரேஷ்டரான மைந்த துவிவிதரை, கொடிய வச்சிரமுஷ்டியென்ற அரக்கனும், சனிபிரபனென்ற அரக்கனும், எதிர்த்து நின்றார்கள். வீரனும் போரில் வெல்லமுடியாதவனும் பயங்கரனுமான பிரதபனனென்ற அரக்கவீரன், யுத்தத்தில் அதிக வேகமமைந்த நளனுடன் போரிட்டுக்கொண்டு நின்றான். வருணனுடைய குமாரனும், வெகுபலசாலியுமான சுஷேணனென்ற புகழ்பெற்ற வானரவீரன், வித்யுந்மாலியென்ற அரக்கவீரனுடன் யுத்தஞ்செய்யத் தொடங்கினன். இன்னுமுள்ள பல வானர வீரர்கள், மற்றுமுள்ள பல அரக்கவீரர்களுடன் துவந்துவயுத்தம் பண்ணலானார்கள். அரக்கர்களும் வானரவீரர்களும் வெற்றியை வேண்டி அத்தருணத்திற் செய்த சண்டையானது, மிகவும் பெரியதாகவும் பார்ப்பவர்களை மயிர்க்கூச்செறியச் செய்வதாகவும் கைகலந்ததாகவும் இருந்தது. உரோமங்களாகிற புற்களையும் உறுப்புக்களாகிற கட்டைகளையும் பெற்று,

அரக்க வீனரர்களின் தேகங்களிலிருந்து பெரிய இரத்த நதிகள் பெருகின. வச்சிராயுதத்தைக்கொண்டு இந்திரன் புடைப்பதுபோல, இந்திரஜித்து, மிக்கவீரனும்பகைவர்களை புறங்கொடுத்து நடுங்கியோடச்செய்பவனுமான அங்கதனை வெகுகோபத்துடன் கதாயுதத்தால் அடித்தான். உடனே சீமானுகிய அங்கதனென்ற வானரன்தானும், மிக்கவேகத்துடன், இந்திரஜித்தினுடைய அழகான பொன்தேரைக் குதிரைகளுடனும் பாகனுடனும் புடைத்தான். பிரஜங்கனென்பவன், மூன்றுபாணங்களை விடுத்துச் சம்பாதியை அடிக்கவே, அவன், அசுவகர்ணனைக்கொண்டு போர்க்களத்திலே பிரஜங்கனை யடிப்பித்தான். மகாபலசாலியாகிய ஜம்புமாலியென்பவன், தன துதேரிலிருந்தபடியே, தேரை நடத்தும் வல்லமையால், அனுமானுடைய மார்பிலே விரணம்பண்ணிவைத்தான். மருத்தின்குமாரனை அனுமான், அவ்வரக்கனுடன் அவ்விரதத்தையே தூக்கிப் பூமியில்மோதி, அவனை யொழித்தான். பயங்கரமான பிரதபனன், கர்ச்சித்துக்கொண்டே நளனை நோக்கி ஓடிவந்து, அவன்மேலே கூரானஅம்புகளை விரைவாகப்பிரயோகித்து உடலெப்பிளக்கவே, அந்நளன் அவ்வரக்கனுடைய கண்களைப்பிடுங்கி யெறிந்தான். வானரசேனையை விழுங்கவந்தவன் போலப் போர்புரிந்த பிரகஸனை, வானரராஜனுகிய சுக்கிரீவன், ஏழிலைம்பாலையென்ற மரத்தாற் பிளந்து கொன்றான். தகையமுடியாத அக்கினிகேது, ரச்மிகேது, ஸுப்தக்நன், யஜ்ஞகோபன் என்ற அரக்கர்கள் இராமர்மீது பாணங்களைப் பிரயோகிக்கலானார்கள். இராமரும், அவர்களிடம் அதிகோபங்கொண்டு, அக்கினிக்கொப்பான கொடிய கூரிய நான்குபாணங்களை விடுத்து, அவ்வரக்கர்களுடையதலைகளை வெட்டியெறிந்தார். மைந்தனென்ற வானரவீரன், தனதுகைப்பிடியால் வச்சிரமுஷ்டியைக் கொல்லவே, அவ்வரக்கன் தனதுஉயிரையிழந்து, யுத்தத்தின் பொருட்டு மண்டபத்தின்மேற்கட்டிய மாளிகை சரிந்து

விழுவதுபோலத் தேருடனும் குதிரைகளுடனும் பூமியிலே விழுந்தான். கறுத்த மைக்குன்றுபோன்ற மேனி பொருந்திய நீலனை, நிகும்பனென்ற அரக்கன், சூரியன் தன்து கிரணங்களாற் கார்மேகத்தைக் குத்துவது போலக் கூரான அம்புகளாற் குத்தலானன். கைத்திறம் பெற்றிருந்த நிகும்பனென்ற அவ்வரக்கன், நாறு பாணங்களை மறுபடியும் நீலன்மேல்விடுத்து அவனைப்பிளந்து நகைத்தான். விஷ்ணுபகவான்போன்ற அந்நீலன், அந்நிகும்பனுடைய இரதத்தின் சக்கரத்தாலேயே, நிகும்பனையும் அவனுடைய தேர்ப்பாகனையும் தலைதுணித்தான். வச்சிராயுதம்போலவும் இடிபோலவும் வெகு உறுதியாகப் புடைக்கும் வல்லமையுள்ள துவிவிதன், அரக்கர்களெல்லாரும் விழித்துப் பார்த்துக்கொண்டிருந்த பொழுதே, மலைச் சிகரத்தைக் கொண்டு அசனிபிரபனைப் புடைத்தனன். அவ்வசனிபிரபனும் மலையைப் பேர்த்து வீசின வானரத் தலைவனுகிய துவிவிதன்மீது இடிக்குஒப்பான பாணங்களை விடுத்தான். அவ்வண்ணம் பாணங்களால் அடியுண்ட துவிவிதன், மிக்கசோபங்கொண்டு, ஆச்சாமரமொன்றைப் பேர்த்தெடுத்து, அதனல், அசனிபிரபனைத் தேருடனும் புரவிகளுடனும் வதைசெய்தான். வித்யுன்மாலியென்ற அரக்கவீரன், தனதுதேரிலிருந்துகொண்டே, தங்கத்தினுலியன்ற பாணங்களால் ஸுஷேணனைப் புடைத்து, அடிக்கடி அட்டகாசஞ் செய்யலானன். பிறகு, ஸுஷேணனென்ற சிறந்த வானரன், தேரின்மேலிருந்து போர்புரிந்துவந்த அவ்வரக்கனைக் கண்டு, பெரியதொரு மலைச்சிகரத்தை எறிந்து தேரை முறித்தான்: ஆனல், அதிகலாகவம்பொருந்திய வித்யுன்மாலி யென்ற அரக்கனே, சரேலென்று இரதத்தை விட்டிறங்கிக் கதையும் கையுமாகப் பூமியில் நின்றன். அதைக் கண்டு, ஸுஷேணனும் அதிகசோபமடைந்து, பெருங்கல் லொன்றைத் தூக்கிக் கொண்டு, அவ்வரக்கனைத் துரத்தலானன். வித்யுன்மாலி

யும் அவ்வாறு தன்னைத் துரத்திக்கொண்டுவந்த ஸுஷேணனைப் பார்த்து, அவன்மார்பிலே தனதுகதையால் அடித்தான். போர்க்களத்திலே பயங்கரமான அவ்வடியைக் கூட இலட்சியஞ்செய்யாமல், அவ்வானரவீரன், அப்பெருங்கல்லை அவன்மார்பின்மேல் எறிந்தான். அவ்வாறு மலையால் அடியுண்ட வித்யுந்மாலி, தனது மார்பு பிளப்புண்டு உயிர்போய்ப் பூமியில் விழுந்தான்.

பகைச்செறப்பு.

தேவர்களால் அசுரர்கள் கொல்லப்பட்டது போல, இவ்விதமாகச் சூரர்களான வானரவீரர் களினாலே துவந்துவ யுத்தத்தில், சூரர்களான அரக்கர்கள் கொல்லப்பட்டார்கள். அப்போர்க்களமானது—முறிந்துவிழுந்த கத்திகள், கதைகள், சக்திகள், சூலங்கள், தோமரங்கள், ஈட்டிகள் என்ற ஆயுதங்களாலும், ஓடிந்து நொருங்கியிருந்த தேர்களாலும், உயிரொழிந்த போர்ப்புரவிகளாலும், மதயானைகளாலும், வானரவீரர்களாலும், அரக்கர்களாலும், முறிந்து சிதறிக்கிடந்த சக்கரங்கள், அச்சுகள், நுகத்தடிகள், ஏர்க்கால்கள் என்ற இவற்றாலும் நிரம்பி, நரிகளின் கூட்டங்களோடு கூடியதாய்ப் பயங்கரமாகத்தோன்றிற்று. தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரைப்போல வெகுபயங்கரமான அப்பெரும்போரில் அவ்விருதிறத்தாருடைய கபந்தங்கள் எல்லாத்திசைகளிலும் எழலாயின.

மீண்டும் அரக்கர்த போர்.

அப்போது வானரவீரர்களால் நெருக்குண்ட அரக்கர்கள், தங்கள்மெய்யெல்லாம் இரத்தம்பெருக, எப்பொழுது சூரியாஸ்தமனமாகப்போகின்றதென்று எதிர்பார்த்தவர்களாய், மறுபடி அதிகமுயற்சியுடன் போர்புரிந்தார்கள்.

நாற்பத்துநான்காஞ் சருக்கம்:
இராத்திரி யுத்தம்.

அவ்வாறு வானரர்களும் அரக்கர்களும்போர்புரிந்து கொண்டிருக்கையில், சூரியன் அஸ்தமித்தான். வானரர் களுடைய உயிரை வாங்குவதற்கு அநுகூலமான இரவு தொடங்கலாயிற்று. அப்பொழுது, ஒருவர்மீது ஒருவர் பகைத்தும் ஒவ்வொருவரும் ஜயமடைய விரும்பியு முள்ள கொடிய அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் இராப்போர் நடக்கலாயிற்று. கொடிய அவ்விரவில் "நீ அரக்கன்" என்று சொல்லிக்கொண்டு வானரர்களும், "நீ வானரன்" என்று சொல்லிக்கொண்டு அரக்கர்களும், பொரிலே ஒருவரை யொருவர் புடைக்கலானர்கள். "கொல்லு," "வெட்டு," "வா," "ஏன் ஓடுகின்றாய்?" என்ற இவ்விதமான சத்தங்கள், நெருக்கமாக அவ்விருட்டிற் கேட்கலாயின. அவ்விரவில், கறுத்தமேனியிற் பொற்கவசங்களணிந்திருந்த அரக்கர்கள், எரிகொடிகள்நிறைந்த காட்டுடன் கூடிய சிறந்தமலைகளைப்போலக் காணப்பட்டார்கள். அளவிடமுடியாத அவ்விருளிலே, வெகுகோபத்துடன் போர்செய்த அரக்கர்கள், வானரர்களை விழுங்கிக்கொண்டு, வெகுவேகமாகச் சஞ்சரிக்கலானர்கள். அவ்வானரர் களும், பொன்னைச் செய்த தலையணியைப் பூண்ட புரவிகளையும் தீயின் சுவாலைபோல் விளங்கிய கொடிகளையும், கொடியகோபத்துடன் மேற்கிளம்பி கூரான பற்களாற் கிழித்தெறிந்தார்கள். வெகு பலசாலிகளான வானரர்கள், அரக்கசைனியத்தை அப்போரில் நன்றாகக் கலக்கிவிட்டார்கள்; அவர்கள், கோபங்கொண்டவர்களாய், யானைகளையும், யானைவீரர்களையும், கொடிகளையுடையதேர்களையும் இழுத்துத் தங்கள்பற்களாற் கடித்தார்கள். இலக்கு

இராத்திரி யுத்தம்.

மணரும் இராமரும், சர்ப்பங்களுக்கொப்பான தங்கள் பாணங்களினால், கண்ணுக்கு நன்றாய்த் தெரியாத சிறந்த அரக்கர்களைக் கொன்றார்கள்.

போர்க்கள வருணனை.

குதிரைகளின் குளம்புகளாலும் தேர்களின் சக்கரங்களாலும் இளப்பப்பட்ட தூளி, போர்செய்கின்றவர்களுடைய காதுகளிலும் கண்களிலும்படிந்து வருத்தலாயிற்று. பார்த்தவர்கள் மயிர்க்கூச்செறியும்படி பயங்கரமான அப்பெரும்போர் நடந்தபொழுது, அப்போர்க்களத்தில் செந்நீரானது, பார்ப்பதற்குப் பயமுண்டாகுமாறு ஆறாக ஓடலாயிற்று. அப்போர்க்களத்தில், பேரிகைகள் மிருதங்கங்கள் பணவங்கள் சங்கங்கள் புள்ளாங்குழல்கள் என்ற வாத்தியங்களிலிருந்து முழங்கிய போரொலி, ஒப்பற்ற தாய் வெகுஅதிகமாகக் கேட்கலாயிற்று. கொல்லப்பட்டுக் கதறிக்கொண்டு விழுந்த அரக்கர்களின் சத்தமும், பீடிக்கப்பட்டவானரர்களுடைய சத்தமும், வெகு கடோரமாகக் கேட்கப்பட்டன. அப்போது, கொல்லப்பட்டு விழுந்துகிடக்கும் வானரவீரர்களாலும், சிதறிக்கிடக்குஞ் சூலங்கள் ஈட்டிகள் கோடரிகள் என்ற இவைகளாலும், வானரர்கள் வீசியெறிந்த மலைகளாலும், அரக்கர்களாலும் நிரம்பிய அப்போர்க்களம், ஆயுதங்களென்ற புஷ்பங்கள் இறைக்கப்பட்டு விளங்கிற்று. இரத்தப் பெருக்காற் சேறாய்க்கிடந்த அக்களம், புலப்படாததாயும், உட்புகக்கூடாததாயும் காணப்பட்டது.

அரக்கர்களையும் வானரர்களையும் ஒழிக்கவென்றே வந்த அவ்விரவு, பிரளயகாலத்தின் இரவுபோல ஒருவராலும் உயிர்தப்பமுடியாமல் வெகுபயங்கரமாகத் தோன்றிற்று. பிறகு அந்தப் பயங்கரமான இருளில் அவ்வரக்கர்கள் அம்புமழையைப் பொழிந்துகொண்டு இராமரையே எதிர்த்து நின்றார்கள். அவ்வண்ணம் கோபத்தாற்

சீறிக் கர்ச்சித்துக்கொண்டு இராமரை நோக்கி ஓடிவந்த அரக்கர்கூட்டங்களின் சத்தமானது, பிரளயகாலத்தில் ஏழுகடல்களுஞ் சேர்ந்து கோஷிக்குஞ் சத்தம்போற் கேட்கலாயிற்று. கண்ணிமைப் பொழுதிலே, இராமர், அக்கினிக் கெர்ப்பான ஆறுபாணங்களைவிடுத்து அவ்வரக்கர்களுள் யஜ்ஞசத்துரு, மகாபார்சுவன், மகோதரன், பேருடல்பொருந்திய வஜ்ரதம்ஷ்ட்ரன், சுகன், சாரணன் என்ற ஆறுவீரர்களை யடித்தார். அவர்களெல்லாரும், அவ்வாறு இராமருடைய பாணக்கூட்டங்களால் தங்கள் மர்மஸ்தானங்களில் அடியுண்டு, போர்க்களத்தைவிட்டு ஓடி உயிர்பிழைத்தார்கள். அங்கு மகாவீரரான அவ்விராமர், தங்கத்தினாற் செய்து விசித்திரமாயும் நெருப்புச் சுவாலை போல விளங்கிக்கொண்டு மிருந்த தமது பாணங்களால், நான்கு பெருந்திசைகளையும், மூலைத்திசைகளையும் அரக்கப் பூண்டே இல்லாதபடி செய்துமுடித்தார். இராமரை எதிர்த்துப் போர்புரிய வந்த கொடிய மற்றை அரக்கர்களும், தீயின்முன் விட்டிற்பூச்சிகள்போல மடிந்தார்கள். ஆயிரக் கணக்காய் வெளிக்கிளம்பிய தங்கத்தாலியன்ற அம்புமுனைகளால், அவ்விரவு, மின்மினிப்பூச்சிகளால் விளங்குஞ் சரத்காலராத்திரிபோல விசித்திரமாக விளங்கலாயிற்று. அரக்கர்கள்செய்த அட்டகாசங்களாலும் வானரர்கள் செய்த பெருஞ்சத்தங்களாலும் முன்னமே பயங்கரமாகவிருந்த அவ்விரவு, அப்போது பின்னும் அதிக பயங்கரமாகத் தென்பட்டது. எங்கும் நிரம்பிக் கேட்கப்பட்ட அப்பெருஞ் சத்தத்தால், பல குகைகள் நிறைந்திருந்த திரிகூடபருவதமே பேசுவதுபோலக் காணப்பட்டது. பெருந்தேகமமைந்து இருள்போலக்கறுத்திருக்கின்ற கோலாங்கூலர்கள், தங்கள்கரங்களால் அவ்வரக்கர்களைத் தழுவிக்கொண்டு புசிக்கத் தொடங்கினார்கள். அங்கதனே, போரில் சத்துருவைக் கொல்லும்படி கிட்டியவனாய், இந்

இராமருக்கும் அரக்கருக்கும் நடந்த போர்.

திரஜித்தை அறைந்து, தேர்ப்பாகனையும் குதிரைகளையுங் கொன்றான். பெருஞ் சரீரமுடைய இந்திரஜித்து,அவ்வாறு மிகக்கொடிய கோரமான போர் செய்கையில், அங்கதனுல் குதிரையையும் பாகனையும் இழந்தவனுய், இரதத்தைவிட்டிட்டு அவ்விடத்திலேயே மறைந்துவிட்டான். அவ்வாறு வாலிபுத்திரனுகிய அவ்வங்கதன் செய்த போரைப் பார்த்து, எல்லாத் தேவர்களும் முனிவர்களும் அவனைப் புகழலானுர்கள். புகழுக்குப் பாத்திரமாகிய அவனது செயலைக் கண்டு, இராமலட்சுமணரும் அங்கதனைக் கொண்டாடலானுர்கள். இந்திரஜித்தினுடைய போர்வல்லமையை எல்லாரும் அறிந்தவர்களாகையால், அவனை அங்கதன் வென்றதைக் கண்டு,அவனை அவ்வண்ணம் புகழலானுர்கள். அப்போது, சுக்ரீவவிபீஷணர்களுடன்கூட எல்லாவானரவீரர்களும் வெகுசந்தோஷமடைந்து, "வெகு நன்றுகச் செய்யப்பட்டது! வெகு நன்றுகச் செய்யப்பட்டது!!" என்று சொல்லி, அங்கதன் இந்திரஜித்தை ஜயித்ததற்காக அவனைப் புகழலானுர்கள். வாலியின் குமாரனும் கொடுந்தொழிலையுடையவனுமான அங்கதன் போரில் அவ்வாறு வெற்றியடைந்ததைக் கண்டு, இந்திரஜித்து, அதிக சினங் கொண்டான்.

அங்கதன் இந்திரஜித்தை வெல்லுதல்.

அங்கதனைப் பலரும் புகழ்தல்.

இச்சமயத்தில், இராமர்,வானரர்களைப்பார்த்து,"நீங்களெல்லாரும் வானரவேந்தரைச் சூழ்ந்துகொண்டு ஒருசேர நில்லுங்கள்; அவ்விந்திரஜித்து பிரமதேவனிடமிருந்து வரம் பெற்றவனுகையால், இம்மூவுலகங்களையும் மிகவும் இம்சிப்பவன்; அவன், தனதுகாலத்தின்கொடுமையால் உங்களுக்கு வெற்றி கைகூடும்பொருட்டு இணங்கிச் சிக்கிக்கொண்டான். ஆகையால், நான் அவனை இப்பொ

இராமர் வானரரை நோக்கிக் கூறியது.

ழுதே நாசம்பண்ண வேண்டும் : உங்களுக்கு இனி விசாரம்வேண்டாம்" என்றார்.

இந்திரசித்து ராமலக்ஷ்மணர் மேல் நாகபாசத் தைவிடத் தொடங்குதல்.

பரியாகிய இந்திரஜித்து போரில் வெகுகொடியவனுகையால், தான் அவ்வாறு மறைந்தபின், மறைந்துநின்ற படியே இடிகளை விடுவதுபோலக் கூர்மையான் பாணங்களைப் பிரயோகிக்கலானன். அவ்வரக்கன், போரில் வெகு உக்கிரங்கொண்டவனுய், பயங்கரமான நாகாஸ்திரங்களைக்கொண்டு இராமரையும் இலட்சுமணரையும் தேகங்கள் முழுதும் பிளக்கலானன். மாயையில் மறைந்துநின்று, ஒருபிராணியின்கண்ணுக்கும் புலப்படாமல், வஞ்சனையாகப் போர்புரிந்துகொண்டு, அவன், அவ்வாறு இராமலட்சுமணர்களைத் தனது நாகபாசங்களால் மோகமடையும்படி கட்டினன். கொடிய பாம்புகளுக் கொப்பான அப்பாசங்களால், அவ்விருபுலிகளும், கோபங்கொண்ட இந்திரஜித்தால் விரைவாகக் கட்டப்பட்டதை, வானரர்கள்பார்த்தார்கள். இவ்விராஜகுமாரரிருவரையும் நேரில் நின்று போர்புரிந்து வருத்த எப்போது அவ்விந்திரஜித்து வல்லமையற்றனனே, அப்போது, தனமாயையப் பிரயோகிக்கத்தொடங்கி அவ்விருவரையும் கட்டிவிட்டான்.

நாற்பத்தைந்தாஞ் சருக்கம்:
நாகபாசத்தால் இராமலட்சுமணர்களை இந்திரஜித்து கட்டுதல்.

அதிக பலம்பொருந்திய பராக்கிரமசாலியான இராமர், அவ்விந்திரஜித்து போனவழியைக் கண்டுபிடிக்க, பத்து வானரசேனைத்தலைவர்களை அனுப்பினர் ; சத்துருக்களின் செருக்கை அடக்குபவரான அவ்விராமபிரான்—

ஸுஷேணனுடைய புத்திரர்களாகிய இரண்டு வானரவீரர்களும், வானரர்களுக்குள் உத்தமனான நீலனும், வாலியின் குமாரனான அங்கதனும், வெகுபலசாலியாகிய சரபனும், விந்தனும், ஜாம்பவானும், மகாபலம் பொருந்திய ஸாநுப்ரஸ்தனும், ரிஷபனும், ரிஷபஸ்கந்தனும் என்ற பத்துப்பெயர்களை யனுப்பினர். அவ்வானரவீரர்களும், வெகு சடிதியில் மரங்களைப்பிடுங்கிப் பயங்கரமாக ஓங்கிக் கொண்டு பத்துத் திக்குக்களிலேயும் தேட ஆகாயத்திற் கிளம்பினர்கள். அஸ்திரங்களை யுணர்ந்த இராவண குமாரனான இந்திரஜித்து, வெகுவேகமான பல அம்புகளால், அவ்வானரர்களின் வேகத்தைத் தடுத்தான். சடிதியிற்சென்ற அவ்வானர வீரர்கள் அந்தப்பாணங்களால் அடிக்கப்பட்டவர்களாய், மேகத்தால் மூடப்பட்ட சூரியனைப்போல, இருளால் மூடப்பட்ட அந்த இந்திரஜித்தைக் கண்டார்கள். போரில்வெல்பவனான இந்திரஜித்து, இராமலட்சுமணர்மீது தேகங்களைப் பிளக்கும்படியான பாணங்களை மிகுதியாக விடுக்கலானான். சினங்கொண்டிருந்த இந்திரஜித்தால், சகோதரர்களான இராமலட்சுமணர்களுடைய தேகங்கள் பாணங்களாலாக்காணப்பட்ட சர்ப்பங்களாற் கட்டப்பட்டன. அவர்களுடைய உடம்பில் பாணங்கள் தைத்த இடங்கள்தோறும் இரத்தம் அதிகமாகப்பெருகவே, அவ்விருவரும் பூத்திருந்த பலாசமரங்கள்போலக் காணப்பட்டார்கள். மலைபோன்ற தோற்றமுள்ள இந்திரஜித்து, தனது கடைக்கண்கள் சிவந்து சினங்கொண்டு மறைந்து நின்றபடியே, அவ்விருசகோதரரும் கேட்கப் பின்வருமாறு சொல்லலானான்:— "நான்மட்டும் மறைந்து நின்று போர்புரிந்தால், தேவராஜனாகிய இந்திரனாலுங்கூட என்

இராமர் இந்திரஜித்தைத் தேடுமாறு பத்து வானரத் தலைவரை யனுப்பல்.

தேடிய வானரர்களை இந்திரஜித்து தமித்தல்.

இந்திரசித்து இராமலட்சுமணர்களை நாகபாசத்தாற் கட்டிவிடுதல்.

னைக் காணுதலும் பிடித்தலும் முடியாதே! மனிதராகிய உங்களைப்பற்றிச் சொல்லவேணுமோ? இதோ கோபங் கொண்டிருக்கும் நான், இராகவர்களே! கழுகின் சிறகு கட்டிய எனது பாணங்களால் உங்களை நன்முகமூடி, யமனதுமாளிகைக்கு அனுப்பிவிடுகின்றேன்" என்முன். இவ்வாறுசொல்லி, தர்மமறிந்த சகோதரர்களான இராம லட்சுமணர்களை, இந்திரஜித்து, தனது கூரானபாணங் களை விடுத்துப் பிளந்து மிக்க களிப்புக்கொண்டு அட்டகா சம் பண்ணினன். கருநிறமுள்ள அந்த ராக்ஷஸன் யுத் தத்தில் பெருவில்லைவளைத்துப் பயங்கரமான பாணங்களை இடைவிடாமல்தொடுத்து, இராமலட்சுமணர்களுடையமர்ம ஸ்தானங்களில் தனது கொடியபாணங்களை மூழ்கச்செய்து அடிக்கடி அட்டகாசம் பண்ணினன். போர்க்களத்தில் அவ் விருவரும் பாணங்களாற் கட்டுப்படவே, ஒரு கொடிப் பொழுதில் தலைகளை மேலெடுத்துப்பார்க்க முடியாதவர்க ளாயினர்கள். அதன் பிறகு, தேகங்களின் ஒவ்வொரு பாகமும் பாணங்களின் நுனி பதிந்து பிளக்கப்பட்ட அவ் விருவரும், கயிற்றின்கட்டுஅவிழ்ந்து ஆடிக்கொண்டிருந்த இந்திர துவசங்கள்போலக் காணப்பட்டார்கள். மர்ம ஸ்தானங்களிற் பிளப்புண்டதனல் இளைப்படைந்த வில்லில் வல்ல அவ்விராமலக்ஷ்மணர், இவ்வுலகங்களுக்கே நாயகர் களாக இருந்தபோதிலும் பூமியிற் சாய்ந்தார்கள். உடம் பெங்கும் அம்புகள்நிறைந்து நொந்து எளிமையடைந்த அவ்விருவீரரும், உடம்பெங்குங் குருதிசொரிய, வீரர்படுக் கையில் படுத்துக் கொண்டார்கள். அவ்விருவருடைய தேகங்களிலும் கைந்நுனிவரையில், ஒரு விரற்கிடையள வாவது, பாணத்தால் அடிக்கப்படாமலும் சர்ப்பங்களாற் பிளக்கப்படாமலும் சலனம்பெற்றும் காணப்படவில்லை. வெகுகொடியவனுகவும் வேண்டும் வடிவங்கொள்ளவல்லவ னுகவுமிருந்த அவ்விந்திரஜித்தால் அடிக்கப்பட்ட அவ்விரு வர்தேகங்களிலிருந்தும் பிரஸ்ரவணமலையினின்று நீர்ருவி

பெருகுவதுபோல இரத்தமானது பெருகலாயிற்று. முன்பு இந்திரனெவென்ற அந்தராக்ஷஸனால் அடிக்கப்பட்டுப் பொறுக்க முடியாமல், முதலில் இராமர் பூமியிற் சாய்ந்தார். இந்திரஜித்து, பொன்மயமான மூனைகளையும் வழுவழுப்பான நுனிகளையுமுடைய அதோமுகமாகப்பாயும் பாணங்கள், நாராசங்கள், அர்த்தநாராசங்கள், பல்லங்கள், அஞ்சலிகள், கன்றின்பற்கள், சிங்கப்பற்கள், கத்திகள், என்ற இவ்விதமான ஆயுதங்களால் இராமரைப் பின்னும் புடைக்கலானன். அவ்விராமர், நாணியற்றும் மூன்றிடங்களில் வீழ்ந்தும் இரத்தினங்க ளிழைக்கப்பட்டதுமான தமது வில்லை உறுதியாகப் பிடியாமல் கைநழுவ விட்டவராய், வீரப்படுக்கையிற் படுத்திருந்தனர்.

இராமர் வீரதல்பத்திற் சாய்தல்.

அவ்விதமாகச் சரதல்பத்தில் இராமர் படுத்ததை இலட்சுமணர் கண்டு, தமது உயிரின்மேல் ஆசையை ஒழித்தார். தாமரைமலரினிதழுக்கு ஒப்பான கண்களமைந்த தமையனுரான் இராமர் இவ்வாறு பாசத்தாற் கட்டப்பட்டுப் பூமியிற்சாய்ந்ததைக் கண்டு, இலட்சுமணரும் துக்கித்துமூர்ச்சித்தார். வானரவீரர்களும் அந்த இராமரைப் பார்த்துப் பெருந்துயரத்தில் மூழ்கினர்கள். அவ்விரு வீரரும் அஸ்திரத்தாற் கட்டுண்டு பூமியிற் சாய்ந்ததும், அனுமான் முதலிய வானர வீரர்கள் அவ்விடம்வந்து அவர்களைச் சூழ்ந்து நின்று சோர்ந்து மிக்கதுயரத்தில் மூழ்கினர்கள்.

வானரர்களின் வருத்தம்.

நாற்பத்தாருஞ் சருக்கம்:
விபீஷண சுக்கிரீவர் வானரரைத் தேற்றுதலும், இந்திரஜித்து இலங்கைக்குத் திரும்புதலும்.

ஆகாயத்தையும் பூமியையும் எங்குப்பார்த்தாலும், வானரர்களுக்கு, இராமலட்சுமணர் பாணங்களால் மூடப்

பட்ட காட்சியொன்றுதவிர வேரொன்றும் புலப்படவே யில்லை. நன்றாக மழைபொழிந்தோய்ந்த மழைக்கடவுள் போலத் தனது காரியத்தை அவ்வரக்கன் முடித்ததும், அவ்விடத்திற்குச் சுக்கிரீவனுடன் விபீஷணர் வந்துசேர்ந் தார். நீலன், துவிவிதன், மைந்தன், சுஷேணன், சூழுதன், அங்கதன் என்ற இவர்கள் அனுமானுடன் சேர்ந்து இரா கவர்களைக்குறித்துத் துக்கப்படலானார்கள். செயலற்றவர் களாய், ஸ்வல்பமான மூச்சுள்ளவர்களாய், இரத்தவெள் ளத்தால் மூடப்பட்டவர்களாய், பாணங்க ளாகிய வலையாற் சூழப்பட்டவர்களாய், அசைவற்றவர்களாய், சரதல்பத்திற் படுத் தவர்களாய், வலியொடுங்கிச் சோர்ந்து உயிர்ப்புக்கொண் டிருக்குஞ் சர்ப்பங்கள்போன்றவர்களாய், இரத்தம் பெருகு கின்ற மேனிகளால் தங்கக்கொடிமரங்கள்போலக் காணப் படுகின்றவர்களாய், கைகால்கள் அசைவற்று வீரப்படுக்கை யிற் படுத்தவர்களாய், கண்ணுங் கண்ணீருமாகக் கதறு கின்ற வானரசேனபதிகளாற் சூழப்பட்டவர்களாய், நாகபாசத்தாற் கட்டப்பட்டவர்களாய் இராமலட்சுமணர் விழுந்திருப்பதைக் கண்டு, வானரர்களெல்லாரும் விபீ ஷணருடன்கூட வருத்தமடைந்தார்கள்.

வானரர்களின் கலக்கம்.

ஆகாயத்தையும் எல்லாத் திசைகளையும் வானரர்கள் பார்த்தபோதிலும், மாயையால் மறைந்திருந்த அவ்விந்திர ஜித்தை அப்போர்க்களத்திற் பார்க்கமுடியவில்லை. மாயை யின் பலத்தால் மறைந்துநின்ற தமது அண்ணன் மகனை இந்திரஜித்தை, விபீஷணர் தாமும் மாயையினாலேயே கண்டுகொண்டார். தான்பெற்றுள்ளவரங் களின் மகிமையால் மறைந்துகொண்டு போரில் ஒப்பற்றசெல்புரிபவனுகிப் போ ரில் நிகரற்றவனாய் ஒளியும் வல்லமையும் புகழும் பெற்றவனை இந்திரஜித்து மறைந்துநிற்பதை விபீஷணர் கண்டுகொண்டார்.

விபீஷணர் இந்திரசித்தைக் காணுதல்.

இந்திரஜித்து தான்புரிந்தசெயலையும் அவ்விருவரும் விழுந்திருப்பதையும் பார்த்து வெகுசந்தோஷமடைந்து, எல்லா அரக்கர்களையும் களிக்கச்செய்து சொல்லலானான்:—

இந்திரஜித்தின் கொண்டாட்ட மொழி.

"முன்னே கரனையும் தூஷணனையும் கொன்ற மகாபலசாலிகளான இராமலட்சுமணர்களென்றசகோதரர்கள், இப்போது எனதுபாணங்களால்ஒழிக்கப்பட்டார்கள். எல்லாத்தேவர்களும் அசுரர்களுடனும் முனிவர்கூட்டங்களுடனும் ஒருங்கு கூடினாலும் என்பாணக்கட்டிலிருந்து இவ்விருவரையும் விடுவிக்கமுடியாது. எவரொருவரை நினைத்து வருந்துகின்ற எனது தந்தைக்கு மூன்றுயாமங்களடங்கிய இரவுமுழுதும் படுக்கையென்பதைக் கொள்ளாமலே கழிகின்றதோ, எவரொருவர்க்காக இவ்விலங்கை மழைக்காலத்தில் நதிகள் கலக்கமடைவதுபோலக்கலங்கியிருக்கின்றதோ, நாம் வேருடன் கெடுமாறு நமக்கெல்லாம் அநர்த்தத்தை விளைக்கக்கூடியவரென்று நினைத்திருந்த அவ்விராமரை, நான் ஒழித்துவிட்டேன். சரத்காலத்தில் மேகங்களின் காரியங்கள்போல, இராமலட்சுமணர்களும் எல்லாவானரர்களும் செய்த முயற்சிகளெல்லாம் பயனற்றவைகளே" என்றான்.

இவ்வாறு தன்னைச்சுற்றியிருந்த அரக்கர்களைநோக்கி இந்திரஜித்து சொல்லிவிட்டு, இராமருடைய சேனாபதிகளையெல்லாம் புடைக்கலானான். வில்லில் வல்லவனுப்ப பகைவரைத் தவிக்கச்செய்கின்ற அந்த இந்திரஜித்து, நீலனை ஒன்பதுபாணங்களாலும், மைந்தனுவிவிதரையும்

இந்திரஜித்து வானரர்களின் மேல் அம்புதொடுத்தல்.

மூன்று பலமான பாணங்களாலும், ஜாம்பவானை மார்பிலே ஒருபாணத்தாலும் புடைத்தான். வெகுவேகமமைந்த அனுமான்மேற் பத்துப்பாணங்களை விட்டான். வேகமுள்ள இந்திரஜித்து, அப்போரிலே கவாக்ஷன் சரபன் என்ற அமிதமான பராக்கிரமமுள்ள இவ்விருவர்

மேலும் இவ்விரண்டுபாணங்களைப் பிரயோகித்தான். இன்னும் அவ்விராவணகுமாரன், வெகு வேகமாக, கோலாங்கூலரென்ற வானரர்களுடைய சேனைத்தலைவன் மேலும், வாலியின்குமாரனன அங்கதன்மேலும் பல பாணங்களைத்தொடுத்துப் பிளந்தான். அக்கினியின் காந்திக்கு ஒப்பான தனது பாணங்களால், வானரச்சிரேஷ்டர்களை, வல்லமை பெற்ற அவ்விந்திரஜித்து, பிளந்து, அட்டகாசம்பண்ணினன். இவ்வாறு தோள்வலிமையமைந்த இந்திரசித்து, அவ்வானரர்களை அம்புகளின் கூட்டங்களினுற் பீடித்துப் பயமுறுத்திப் பெருநகைநகைத்துப் பின்வருமாறு ராக்ஷஸர்களைநோக்கிச் சொல்லலானன்:— "அரக்கர்களே! இணைபிரியாத இவ்விரண்டுசகோதரரும் போர்க்களத்தில் என்னுடைய அம்புகளினுற் பயங்கரமாகக் கட்டுண்டு கிடக்கின்றார்கள், பாருங்கள்" என்றான். இப்படி இவன்சொன்னதும், கபடமாகப் போர்புரிகின்ற அரக்கர்களெல்லாரும் அவன்செய்த செயலைக் கண்டு களித்து அதிக ஆச்சரியங் கொண்டார்கள். மேகங்களுக்கொப்பான அவர்களெல்லாரும் பெருத்தகர்ச்சனை செய்தார்கள்; 'இராமர் மாண்டார்' என்று எண்ணினவர்களாய், இந்திரஜித்தைப் பூஜித்தார்கள். இராமலட்சுமணரென்ற அவ்விரு வீரரும் அசைவற்றவர்களாய்ப் பூமியில் மூச்சில்லாமல் விழுந்துகிடந்ததை அவ்வரக்கர்கள் பார்த்து, மாண்டார்க ளென்றே நிச்சயித்தார்கள். போரில் வெற்றிகொண்ட இந்திரஜித்தும், சந்தோஷமடைந்து எல்லா அரக்கர்களையும் களிக்கச்செய்துகொண்டு இலங்கைமாநகர்க்குட் புகுந்தான்.

அரக்கர்களின் கொண்டாட்டம்.

இந்திரஜித்து இலங்கைக்குத் திரும்புதல்.

இராமலட்சுமணர்களுடைய தேகங்களும் அவற்றின் உறுப்புக்களும் பாணங்களால் நிரம்பியதைப் பார்த்தும் சுக்கிரீவனுக்குப் பயமுண்டாயிற்று. அவ்வாறு

பயத்தால் நடுங்கிக் கண்ணுங்கண்ணீருமாய் வெகு பரிதாபமான தோற்றத்துடன் குழம்பிநின்ற வானர ராஜனுகிய சுக்கிரீவனை நோக்கி விபீஷணர் கூறலுற்றார்:— "சுக்கிரீவரே! பயப்படவேண்டாம். கண்ணீர்ப் பெருக்கை அடக்கிக் கொள்ளுங்கள். யுத்தமென்பது இவ்விதமாகத்தானிருக்கும்; வெற்றியென்பது நிச்சயமாக ஒருவர்பங்கன்று; வீரரே! நமக்குப் பாக்கியம் இன்னும் கொஞ்சம் மிகுந்திருக்குமேயானல், மகாபலமுள்ள இவர்களை விட்டு இந்தமோகம் சடிதியில் நீங்கிவிடும். வானரவீரரே! தங்களைத் தேற்றிக்கொள்ளுங்கள்; அநாதனுயிருக்கும் என்னையும் தேற்றிவையுங்கள். சத்தியம் தருமம் இவைகளில் அன்பு பாராட்டுகின்றவர்களுக்கு அகாலமரணத்தினுற் பயம் உண்டாகாது" என்றார். இவ்வாறு சொல்லிவிட்டு, பிறகு, விபீஷணர் தமது கையால் ஜலத்தைத்தொட்டுச் சுக்கிரீவனுடைய அழகான கண்களைத் துடைத்தார். மறுபடியும் ஜலம்கொண்டுவந்து அரக்கர்களது மாயையை அறிந்துகொள்ளும் மந்திரத்தை ஜபித்து, அந்தத் தீர்த்தத்தால் சுக்கிரீவனது கண்களைத் தருமாத்துமாவாகிய விபீஷணர் துடைத்தார். அவ்வாறு புத்திமானுன அவ்வானரராஜனுடைய நயனங்களைத் துடைத்தபின், அக்காலத்துக்குத் தக்கபடியும் மனத்தில் ஒருவகைக் குழப்பமும் உண்டாகாதபடிக்கும் பின்வருமாறு சொல்லலுற்றார்:—"வானரவேந்தரே! நாம் ஏக்கங்கொள்ள இது சமயமன்று; நாம் இப்பொழுது அதிகநேசம் வைத்திருப்பது மரணமாகமுடியும். ஆகையால், எல்லாக்காரியங்களையும் நாசம்பண்ணிவைக்கும் ஏக்கத்தை விட்டிடுங்கள். இதுவரையில் இராமர் நடத்திவந்த சைனியங்களுக்கு அநுகூலமானதை ஆலோசித்துப் பாருங்கள். இராமர் மூர்ச்சை தெளிகின்றவரையிலும் இந்தச் சைனியங்களைப் பரிபாலனம் பண்ணவேண்டும்.

கலங்கிய சுக்கிரீவனை விபீஷணர் தேற்றுதல்.

அவ்விருவர்க்கும் நல்லகினைவு வந்தவுடன், நமது துய ரத்தை அவர்களே அகற்றிவிடுவார்கள். இந்த அஸ் திரக்கட்டு இராமரை ஒன்றுஞ்செய்யாது; இராமர் மாண்டு போகமாட்டார். ஆயுள்ஒழிந்துபோனவனே விட்டுப்பிரி கின்ற முகக்களே சிறிதும் இவரை விட்டுப் பிரியவில்லே யே. ஆகையால், நான் எதுவரையில் செய்யவேண்டிய தொ ழில்களே யெல்லாஞ் செய்கின்றேனே, அதுவரையில் நீங்கள் உங்களேத் தேற்றிக்கொண்டு, பிறகு உங்க ளுடைய சேனைகளையும் தேற்றியிருங்கள். வானர வேந்தே! மலர்ந்த நோக்கமுள்ள இவ்வானரர்களோ, அச்சத்தால் வெருண்டு ஒருவரோடு ஒருவர் காதுவைத்து இரகசியமாகப் பேசுகின்றார்கள். என்னேக்கண்டு ஓடுகின்ற சைனியங்களேத் தாங்கள் களிப்பிக்கவேண்டும். பழைய பூமாலேயைக் கழற்றியெறிவதுபோல இவர்கள் தங்கள் மனத்திலிருக்குங் குழப்பத்தை நீக்கிவிடட்டும்" என்று இவ்வண்ணம் சொல்லி, அரக்கர்களுள் உத்தமரான விபீ ஷணர் சுக்கிரீவனேத் தேற்றி, ஓடத்தொடங்கிய எல்லா வானரசேனைகளையும் அவ்வண்ணமே தேற்றினர்.

பெருமாயையுள்ள இந்திரஜித்தோ, தனது எல்லாச் சேனைகளாலுஞ் சூழப்பட்டு, இலங்கையிலுட்புகுந்து தனது தந்தை யிருக்குமிடத்தை நாடிவந்தான். அவ் விடத்தில்வீற்றிருந்த தனதுதந்தையைவணங்கி, அஞ்சலி செய்து நின்றுகொண்டு, 'இராம லட்சுமணர்கள் மடிந்தார் கள்' என்று தனதுதந்தைக்கு வெகு சந்தோஷகரமான சமாசாரத்தைத் தெரிவித்தான். அரக்கர்கள்நடுவி லிருந்துகொண்டு தனதுசத்துருக்கள் மடிந்தார்க ளென்றதைக் கேட்டதும், இராவணன், தனது சந்தோ ஷத்தைஅடக்கமாட்டாமல், சரேலென்று எழுந்திருந்து தனது குமாரனேத் தழுவிக் கொண்டான். அவனே உச்சிமோந்து வெகு அன்பாக எல்லாச் சமாசாரங்களேயும்

இந்திரஜித்தால் இராமலட்சுமண ரது நிலேயை யறிந்து இரா வணன் மகிழ்தல்.

விசாரிக்கலானன். தந்தை தன்னைக் கேட்கவே, இந்திரஜித்தும் எல்லாச்சங்கதிகளையும் நடந்தவண்ணம் தெரிவித்தான். தன்னுடைய நாகாஸ்திரக்கட்டினுல் இராம லட்சுமணரிருவரும் அசைவற்று ஒளியற்றவர்களாய் விழுந்துகிடப்பதைத் தெரிவித்தான். மகாரதவீரனை அவ்விந்திரஜித்து சொன்ன செய்தியைக் கேட்டதும், அந்த இராவணன், தனது உள்ளம் முழுமையும் சந்தோஷத்தால் நிரம்பியவனுய், இராமரிடமிருந்து தானடைந்த அச்சம் நீங்கி, மனம்மகிழ்ந்து, தனதுகுமாரனைக் கொண்டாடலானன்.

நாற்பத்தேழாஞ் சருக்கம் :

இராவணன் சீதையைப் புஷ்பகத்தில் ஏற்றி இராம லட்சுமணர் நிலையைக் காட்டுதல்.

வானரர் இராமரைக் காத்திருத்தல்.

இராவணன்புதல்வனன் இந்திரஜித்து தனது காரியத்தைமுடித்துக்கொண்டு இலங்கைக்குத் திரும்பியபிறகு, வானரவீரர்கள், வெகுவிசனத்துடன் இராமரைச் சூழ்ந்துகொண்டு இரட்சிக்கலானுர்கள். ஹநுமான், அங்கதன், நீலன், ஸுஷேணன், குமுதன், நளன், கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், ஜாம்பவான், ரிஷபன், ஸ்கந்தன், ரம்பன், சதவலி, பிருது என்ற இவர்களும், மற்றுமுள்ள வானரர்களும் தங்கள்சைனியங்களை அணிவகுத்து நிறுத்திக்கொண்டும், தங்கள் கைகளில் பெருமரங்களை எடுத்துக்கொண்டும், மேலும் கீழும் மற்றைத்திசைகளையும் ஜாக்கிரதையுடன் பார்த்துக்கொண்டு மிருந்தார்கள். துரும்பு அசைந்தபோதிலும் அரக்கரென எண்ணினுர்கள்.

இராவணனை வெகுசந்தோஷ மடைந்தவனாய், தனதுகுமாரனான இந்திரஜித்தையனுப்பி விட்டு, சீதையைப் பாதுகாத்துவந்த அரக்கியரை வரவழைத்தான். ராட்சசிகளும், விபீஷணபுத்திரியான திரிஜடையும், கட்டளைப்படியே அங்கு வந்துசேர்ந்தார்கள். அவ்விராவணன், அவ்வரக்கியரை நோக்கி, வெகு சந்தோஷத்துடன் பின் வருமாறு சொல்லலானான் :—"சீதையினிடம், நீங்கள், சென்று, இந்திரஜித்து இராம லட்சுமணர்களைக் கொன்றதாகச் சொல்லுங்கள். அன்றியும், அவளைப் புஷ்பக விமானத்தில் ஏற்றிச்சென்று போர்க்களத்தில் அவ்விருவரும் மடிந்து கிடக்கின்றதையும் காட்டுங்கள். எவனுடைய ஆதாரத்தால் இவள் செருக்குக்கொண்டு என்னைக் கிட்டவில்லையோ, அந்த இவளது கணவன் தனது தம்பியுடன் போர்க்களத்தில் மாண்டுகிடக்கின்றான். இனிமேல் யாதொரு விசாரமும் மில்லாமலும், யாதொரு சோகமும் மில்லாமலும், மைதிலியானவள், ஆபரணங்களையெல்லாம் அணிந்துகொண்டு என்னிடம் வந்து சேர்வள். நீண்ட கண்களையுடைய சீதை, இப்போது காலனுக்கு வசப்பட்டு இராமன் இலட்சுமணனுடன் மாண்டுகிடப்பதைப்பார்த்து, இதுவரையில் வைத்திருந்த ஆசையை ஒழித்தவளாய், வேறுவித வழியற்றவளாய்த் தானாகவே என்னிடம் வந்து சேர்வாள்" என்றான்.

இராவணன் அரக்கியர்க்கு இட்ட கட்டளை.

இராவணனது மனோராஜ்யம்.

துராத்துமாவாகிய அவ்விராவணன் அப்படிச் சொன்னதைக் கேட்டதும், அவ்வரக்கியர்கள், "அப்படியே" என்று சொல்லிவிட்டு, புஷ்பகவிமானத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்கள், இராவணன் கட்டளைப்படியே புஷ்பகவிமானத்தை அசோகவனத்தில் சீதையிருந்தவிடத்தில் கொண்டு

அரக்கமடந்தையர் சீதையைப் புஷ்பகத்திலேற்றிச்சென்று, இராம லட்சுமணரைக் காட்டுதல்.

வந்து சேர்ந்தவர்களாய், அப்போது தனது கணவன் நிமித்தமாகச் சோகங்கொண்டிருந்த அந்தச் சீதாதேவியை அந்தப் புஷ்பகவிமானத்தில் ஏற்றினர்கள். திரிஜடையுடன்கூடச் சீதையை அவ்வாறு புஷ்பகத்தின்மேலேற்றி, அரக்கியர்கள் அவளுக்கு இராமலட்சுமணர்களைக் காட்டப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது, இலங்கை முழுவதும் பலவகைக்கொடிகள் பறந்துகொண்டிருக்கும்படி இராவணன் கட்டளையிட்டிருந்தான். அவ்விராவணன், அப்போது வெகு சந்தோஷத்துடன் அந்நகரத்தில் எல்லாவரக்கர்களையும் 'போரில் இந்திரஜித்து இராம இலட்சுமணர்களைக் கொன்றான்' என்று பெருங்குரலாகக் கூவச்செய்தான். திரிஜடையுடன் சீதை விமானத்தின்மே லேறிப்போய், வானரசேனைகள் அழிந்துபோயிருந்ததையும், அரக்கர்கள் மிக்கஉற்சாகத்துடன் களிப்புக் கொண்டதையும், வானரவீரர்கள் வெகுதுக்கத்துடன் இராம லட்சுமணரைச் சூழ்ந்து நின்றதையும் கண்டாள். அன்றியும், சீதாதேவியானவள், வீரர்களாகிய இராம லட்சுமணர் பிரஜ்ஞையற்றவர்களாய், பாணங்களாற் பீடிக்கப்பட்டும், கவசங்கள் அழியப்பெற்றும், விற்கள் கை நழுவப்பெற்றும், பாணங்களால் எல்லா அவயவங்களிலும் அடிபட்டும், சரங்கள் நிரம்பிய புதர்போன்றும் பூமியில் சரதல்பத்திற் படுத்திருந்ததைக் கண்டாள்.

சீதை இராமலட்சுமணரைக்காணல்.

வீரர்களாயும் புருஷசிங்கங்களாயும் தாமரையிதழ்போன்றகண்களமைந்தவர்களாயும் அனற்கடவுளின் குமாரர்களான ஸ்கந்த விசாகர்கட்கு ஒப்பானவர்களாயும் அவ்வாறு சரப்படுக்கையிற் படுத்திருந்த புருஷசிரேஷ்டர்களான அந்தச்சகோதரர்களைச் சீதை கண்டதும், அதிகதுக்கமடைந்து, வெகுநேரம் மிகவும் புலம்பலுற்றாள். களங்கமற்ற

சீதையின் சோகம்.

மேனியைப் பெற்ற கறுத்தகண்களையுடைய சீதை, தனது கணவரும் இலட்சுமணரும் புழுதிநிறைந்த தரையிற் கிடந்ததைப் பார்த்ததும் கதறலானாள். தனதுகண்களில் நீர் ததும்பி நிற்க, அவள், தேவர்களுக்கு ஒப்பான வல்லமையுள்ள அவ்விருவரையும் பார்த்து, மாண்டார்களென்றே கருதி, சோகசாகரத்தில் முழுகி இவ்வாறு புலம்பலானாள்.

நாற்பத்தெட்டாஞ் சருக்கம் :
சீதையின் புலம்பல்.

தனது கணவரும் மகாபலம்பொருந்திய இலட்சுமணரும் மாண்டதைச் சீதாதேவி பார்த்ததும், சோகத்தால் வாடியவளாய், வெகு பரிதாபமாகப் புலம்பலானாள்:— "சாமுத்திரிக லட்சண முணர்ந்தவர்கள், நான் பிள்ளைகளைப் பெறுவேனென்றும், விதவையாகமாட்டேனென்றும் சொல்லியிருந்தார்களே ; இப்பொழுது இராமர் மடிந்துவிட்டதும் அறிஞரான அவர்களெல்லோரும் பொய்யர்களாய்விட்டார்களே ! எவர்கள் என்னை அசுவமேதம் முதலிய மகாயாகங்களைச் செய்பவனுடைய பட்டமஹிஷியாகவும், ஸத்ரமென்கிற யாகத்தைச் செய்பவனுடைய பத்தினியாகவுஞ் சொன்னார்களோ, இப்பொழுது இராமர் மடிந்ததும் அறிஞரான அவர்களெல்லோரும் பொய்யர்களாய்விட்டார்களே ! என் முன்னிலையில் முகூர்த்தங்களைக் கணிக்கின்ற பிராமணர்கள் எப்போதும் மாங்கலியமுடையவளென்று என்னைச் சொன்னார்களே, இப்பொழுது இராமர் மடிந்துவிட்டதும், அறிஞரான அவர்களெல்லோரும் பொய்யர்களாய்விட்டார்களே ! வீரராகிய மன்னவருடைய மனைவி நீ என்றும், பாக்கியசாலியென்றும், என்னை எவர்கள் அறிந்தார்களோ, இப்பொழுது இராமர் மடிந்துவிட்டதும், அறிஞரான அவர்களெல்லோரும்

பொய்யர்களாய்விட்டார்களே! மகளிர்கால்களிடத்துப் பதுமரேகைகள் காணப்படுமாயின் அவர்கள் அரசரான தங்கள் கணவருடன் இராச்சியத்திற்கெல்லாம் பட்டமஹிஷியராகப் பட்டாபிஷேகம் பண்ணிக் கொள்ளுகின்றார்களே; அப்படிப்பட்ட பதுமரேகைகள் எனது கால்களிற் காணப்படுகின்றனவே! எவ்விதக் குறிகளிருந்தால், மடந்தையர் துர்ப்பாக்கியமுள்ளவர்களாய்க் கைம்மையை யடைவார்களோ, நிஷ்பலமான நல்லலட்சணங்களையுடைய நான், அவ்வகைக் குறிகளுள் ஒன்றையும் என்னிடத்திற் காணேன்! என்னிடத்திற் காணப்படும் பதுமரேகைகளைப் பற்றி, தவருமல் நற்பயனை விளைக்குமென்று சொல்லுகின்றனர்; ஆயினும், இராமர் இப்பொழுது மடிந்ததனால் அவை என்விஷயத்தில் வீணாயின. எனது கூந்தல் மயிர்கள் தடித்தில்லாமல் அளவொத்துக் கறுத்திருக்கின்றன; எனது புருவங்கள் ஒன்றோடொன்று சேரா திருக்கின்றன; எனது முழந்தாள்கள் உரோமமற்று வட்டமாக இருக்கின்றன; எனது பற்களோ சேர்ந்திருக்கின்றன; கண்ணையடுத்துள்ள நெற்றிப்பக்கங்களும், கண்களும், கைகளும், கால்களும், பரடுகளும், துடைகளும், தசைப்பற்றுள்ளவைகளா யிருக்கின்றன. எனது விரல்கள் வட்டமான நகங்களையுடையனவாய் அழகாய்த் தகுதியாக அமைந்திருக்கின்றன. எனது தன்கங்களும், பருத்து நெருங்கிக் காம்புகள் உள்ளே யடங்கப்பெற்றிருக்கின்றன; எனது உந்தியானது, ஆழ்ந்தும் பக்கங்களில் உயர்ந்து மிருக்கின்றது; எனது விலாப்பக்கங்களும், மார்பும், தசையுள்ளவைகளா யிருக்கின்றன; எனது உடம்பின் நிறம், மணிபோலப் பளபளப்புடையதாக இருக்கின்றது; எனது மயிர்கள், மெல்லியனவாக இருக்கின்றன; பத்துவிரல்களும் இரண்டுபாததலங்களும் என்ற பன்னிரண்டும் பூமியிற்படியநிற்கும் என்னை, உத்தமலட்சண முள்ளவளெனச் சொல்லுகின்றனர். யவமென்ற ரேகை நெடுகச்

சென்றும் இடைவெளியில்லாது நெருங்கியுள்ள விரல் களைக் கொண்டு முள்ள எனது கைகளும் கால்களும் உத் தமமான செங்கிறத்தைப் பெற்றிருக்கின்றன. நான் புன் னகையைக் கொண்டிருக்கின்றேன். இவைகள் சிறந்தன வென்று, இளமகளிரின் இலக்கணங்களை அறிந்த அந்த ணர், என்னைக்குறித்துச் சொல்லியிருக்கின்றார்கள். சோ திட சாஸ்திரத்தில் வல்லவர்களான அந்தணர்கள் என் கணவரோடு நான் இராச்சிய பட்டாபிஷேகஞ் செய்து கொள்ள வேண்டியவ ளென்று உறுதியாகக் கூறினர் களே, அச்சொற்களெல்லாம் பொய்யாக முடிந்தனவே! ஜனஸ்தானத்தைத் தேடி எனது வரலாற்றை யுணர்ந்து, ஒருவராலும் கடக்க முடியாத சமுத்திரத்தைக் கடந்து, இவ்விரு சகோதரரும் குளப்படியில் மாண்டார்களே! வாருணஸ்திரமும், ஆக்கினேயாஸ்திரமும், ஐந்திராஸ்திர மும், வாயவ்யாஸ்திரமும், பிரமசிரஸும், இராமர் நன்கு உணர்வரே! அநாதையான எனக்கு நாதர்களாய் இந்தி ரனுக்கு ஒப்பான இராமலட்சுமணர், கண்ணுக்குப் புலப் படாமல் மறைந்து போர்புரிந்த இந்திரஜித்தால் வதைக் கப்பட்டார்கள்! இராமரது கண்களுக்குமுன்னே நின்று போர்புரியுஞ் சத்துரு மனோவேகமுள்ளவனாக விருந்த போதிலும், தனது பிராணனுடன் திரும்பவேமாட்டான். காலத்தாற் செய்யக்கூடாத தொழில் எதுவும் இல்லை; யமனை வெல்வதும் அசாத்தியம்; ஆகவே, இராமர் தமது தம்பியுடன் போரில் விழுந்து கிடக்கின்றார். இராமருக்கும், மகா பலம் பொருந்திய இலட்சுமணருக்கும், எனக்கும், என் தாயாருக்கும், நான் அதிகமாகத் துக்கப்படவில்லை. எளியவளாகிய எனது மாமியான கௌசலையைப்பற்றியே நான் மிகுதியாகத் துக்கிக்கின்றேன். அவளோ, 'இராமன் வனவாசஞ் செய்யவேண்டிய காலத்தைக் கழித்துவர, அவனை எப்பொழுது சீதையுடனும், இலட்சுமணனுட

னும் நான் காண்பேன் ?' என்று, எப்பொழுதும் நினைத்துகொண்டே யிருக்கின்றாள் " என்றாள்.

திரிஜடை சீதையைத் தேற்றுதல்.

இவ்வண்ணம் புலம்பிய சீதையைப் பார்த்து, திரிஜடை சொல்லலானாள்:— " தேவியாரே! தாங்கள் துக்கப்படவேண்டாம். தங்களது இக்கணவர் பிழைத்திருக்கின்றார். சகோதரர்களான இவ்விராமலட்சுமணர் பிழைத்திருக்கிறார்களென்று நான் எவ்வாறு அறியமுடிகின்றதோ, அதற்கு ஏற்ற வெளிப்படையான காரணங்களைக் காண்கின்றேன்; தமது தலைவர் மாண்டபின், சேனைகளிலுள்ள வீரர்களின் முகங்கள், கோபக்குறிகளுடன் கூடினவைகளாயும் மகிழ்ச்சியால் தெளிந்தனவாகவும் தோன்றுவாம். வைதேகியே! புஷ்பகமென்னும் பெயருள்ள இந்தத் திவ்வியவிமானமானது, இவ்விரண்டுவீரரும் மாண்டிருக்கும் பட்சத்தில் உங்களை இவ்வாறு தாங்கிநிற்காது. மாலுமியில்லாத மரக்கலம் ஜலத்தில் தத்தளிப்பதுபோல, தலைவரை யிழந்த சேனை சந்தோஷமில்லாமல் செயலற்றுப்போர்க்களத்தில் அலைந்து நிற்குமன்றே; இவ்வானரசேனையோ, கொஞ்சமேனும் குழப்பமில்லாமல், அச்சமின்றி வலிமையுடன் இவ்விரண்டு காகுத்தர்களையும் பாதுகாத்துவருகின்றது. ஆகவே, நான் இவர்கள் பிழைத்திருக்கின்றார்களென்று பிரீதியோடு தங்களிடம் தெரிவித்தேன். புலம்புகின்றதர்ங்கள் தெளிவுகொண்டிருங்கள். எளிதிலுணரக்கூடிய அனுமானங்களால், இராகவர்கள் மாண்டுபோகவில்லையென்றே உணர்வீராக. அன்பால், நான் இவ்வாறு சொல்லுகின்றேன். இதுவரையில் நான் பொய்சொன்னவளல்லள்; நான் ஒருபொழுதும் பொய்சொல்லவேமாட்டேன். தாங்கள் கற்புநிலையை இனிய வொழுக்கமாகக் கைக்கொண்டிருத்தலால், என்னுள்ளத்திற் புகுந்திருக்கின்றீர். தேவர்களும் அசுரர்களும் தேவேந்திரனுடன் வந்தபோதிலும், இவர்களைப் போரில் வெல்ல முடியார்கள். இவர்கள் பிழைத்

திருத்தற்கு ஏற்ற அவ்வகைத்தோற்றங்களை நான் அறிந்துகொண்டபிறகுதான், தங்களிடம் தெரிவித்தேன். மைதிலியே! இவ்விருவரும் பிரஜ்ஞையற்றிருந்தும், முகக்களைமாத்திரம் இவர்களைவிட்டு நீங்காமலிருக்கின்ற இதுவும் ஒரு பெரிய அடையாளமாகும்; இதனை நுட்பமாகக் காணுங்கள். வாழ்நாளற்று உயிர்நீங்கிய மானிடர்களின் முகத்தைப் பார்க்குமிடத்து, பெரும்பாலும் மிகவும் விகாரங்கள் தோன்றுமன்றே! ஜநகராஜன்புதல்வியாரே! இராமலட்சுமணருக்காக, மனத்துயரையும் புலம்புதலையும் மோகத்தையும் விட்டிடுங்கள். இவர்கள் இப்போது உயிரற்றிருத்தல் சாத்தியமன்று" என்றாள்.

சீதை அசோக வனிகையை யடைந்து துயருடனிருத்தல்.

அந்தத் திரிஜடை சொன்ன சொற்களைத் தெய்வப் பெண்ணுக்கொப்பான சீதாதேவி கேட்டு, அஞ்சலிசெய்து, "அப்படியே ஆகுக" என்று சொன்னாள். மனோவேகமாகச் செல்லுகின்ற அந்தப் புஷ்பகவிமானத்தைத் திருப்பி, வெகுபரிதாபமான நிலைமையிலிருந்த சீதை, திரிஜடையினால் இலங்கையிற்புகுவிக்கப்பெற்றாள். அதன்பிறகு, அச்சீதை, திரிஜடையுடன் புஷ்பகவிமானத்தை விட்டு இறங்கி, ராக்ஷஸப்பெண்ணால் அசோகவனத்துக்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டாள். பலவிருக்ஷங்கள் அடர்ந்த அவ்விராவணனுடைய சிங்காரத்தோட்டத்தையடைந்தபிறகு, சீதாதேவி தான் பார்த்துவந்த அவ்விரண்டு ராஜகுமாரர்களையும் நினைந்து நினைந்து பெருந்துயரையடைந்தாள்.

நாற்பத்தொன்பதாஞ் சருக்கம் :
தெளிந்தெழுந்த இராமர் இலட்சுமணர் நிலைமையைப் பார்த்துப் புலம்புதல்.

பயங்கரமான சரபந்தத்தாற் கட்டப்பட்ட அந்தத் தசரதகுமாரிருவரும், சர்ப்பங்களைப்போலப் பெருமூச்

செறிந்து தேகமெல்லாம் இரத்தம்பெருகப் படுத்திருந்தார்கள். அம்மகாத்துமாக்களிருவரையுஞ் சூழ்ந்துகொண்டு, மகாபலசாலிகளான வானரவீரர்களெல்லாரும், சுக்கிரீவனுடன்கூடத் துக்கத்தில் மூழ்கி ஏங்கிக்கின்றார்கள். இப்படியிருந்த பொழுது, வீரராகிய இராமர், தாம் சரங்களாற் கட்டப்பட்டவராயிருந்தபோதிலும், தமதுஅதிகபலத்தாலும்தைரியத்தாலும் மூர்ச்சைதெளிந்தார். பிறகு, தனது தேகமெல்லாம் உதிரமொழுகப் பாணங்களால் நன்றாகக் கட்டப்பட்டு நொந்து வெகுபரிதாபமான முகத்துடன் தமது தம்பி விழுந்து கிடந்ததைப் பார்த்து, துக்கம்மேலிட்டவராய், இராமர், புலம்பலானார்:—"போரில் வெல்லப்பட்டவனுய், இப்பொழுது என்தம்பி படுத்திருப்பதைப் பார்க்கின்றேனே! இனி எனக்குச் சீதையால் என்னபயன்? அல்லது என்பிராணனுல் தான் யாதுபயன்? இம்மானிடவுலகத்தில் நன்றாகத் தேடிப்பார்த்தால், சீதையைப்போன்ற ஒரு பெண்ணை யான்காணலாம். உதவிசெய்கின்றவனுயும் போரில்விரனுயுமுள்ள இந்த இலட்சுமணனுக்குச் சமானமான தம்பி எங்கும் கிடைக்கமாட்டானே! சுமித்திரைக்கு மகிழ்ச்சி யூட்டுபவனை இலட்சுமணன் இறந்திருப்பனேயாயின், நான் வானரர்கள் முன்னிலையில்தானே என்பிராணனை விட்டிருக்கின்றேன். நான், அந்த இலட்சுமணனில்லாமல் அயோத்தி சென்றால், அப்போது என்தாய் கௌசல்யையினிடமும், கைகேயியினிடமும் என்ன சொல்வேன்? புத்திரனையிழந்தும் மெய்பதறிக்கொண்டும் அன்றிற்பேடு போலப் புலம்பிக்கொண்டும் தனதுகுமாரனைக் காணும் ஆவலுடனிருக்கும் எனதுதாய் சுமத்திரையை நான் எவ்வாறு தேற்றுவேன்? சத்துருக்கனனிடமும் புகழ்பெற்ற பரதனிடமும் நான் எவ்வாறுசொல்லுவேன்? எவனுடன் நான் வனத்திற்குச் சென்றேனை, அவனையின்றித் திரும்

இராமர் தெளிதல்.

இலட்சுமணரது நிலையைக் கண்ட இராமரது சோகம்.

பும் நான், சுமத்திரையின் ஏசுதலைச் சகியேன். அந்தோ! நான் இவ்விடத்திலேயே என்தேகத்தை விட்டிடுகின்றேன்; இனி நான் பிழைத்திருக்கமாட்டேன். கொடுஞ்செயல்புரி கின்ற என்னைப் பழிக்கவேணும். என் பொருட்டாக இலட் சுமணன் தரையில் வீழ்ந்து உயிர்நீங்கினவன்போற் சர தல்பத்திற் படுத்திருக்கின்றான். இலட்சுமண! இதுவரை யில் நான் துயரப்படும்பொழுதெல்லாம் நீயல்லவோ என்னைத் தேற்றிவந்தாய். இப்பொழுது நீ உன்னுயிரை இழந்திருக்கின்றபடியால், துக்கப்படுகின்ற என்னைத் தேற்றும்படி பேசுவதற்கு உன்னால் முடியாதே! எவ னொருவன் போரில் பல அரக்கர்களை வதைத்துத் தரை யில்விழுத்தினானே, அந்த வீரனே இப்பொழுது தனது சத்துருக்களால் வதைக்கப்பட்டுப் போர்க்களத்திற் படுத் திருக்கின்றான்! இலட்சுமணன், இந்தச் சரதல்பத்திற் படுத்தவனாகி, தனது தேகமுழுமையும் இரத்தம் பொசி யச் சரங்களால் மூடப்பட்டு, அஸ்தமிக்க இருக்குஞ் சூரி யன்போலக் காணப்படுகின்றான். பல பாணங்கள் இவ னுடைய மர்மஸ்தானங்களில் தைத்திருக்கின்றமையால், இவன் பேசவும் சக்தியற்றவனாக இருக்கின்றான்; பேசாம லிருந்தாலும், இவன் பார்வையோ இவன்படும்வருத்தத்தை வெளியிடுகின்றது. பேரொளிபொருந்திய இவ்வுத்தமன், நான் காட்டுக்குப் புறப்பட்டபொழுது எவ்வண்ணமாக என்னைத் தொடர்ந்து நின்றானே, அதுபோலவே நானும் இப்பொழுது இவனைத்தொடர்ந்து யமனுடையமாளிகைக் குச் செல்வேன். எப்பொழுதும் பந்துக்களிடத்து அன்பு வைத்தவனும், எப்போதும் என்னைத்தொடர்ந்து நிற்ப வனுமிருந்த இலட்சுமணன் இன்றைக்குத் துஷ்டனான என்னுடைய தீச்செயலால் இந்த நிலைமைக்கு வந்துவிட் டான். வீரனாகிய இந்த இலட்சுமணன், எவ்வளவுதான் கோபங்கொண்டிருந்தாலும், என்னைப்பார்த்துக் கடினமா கவாவது அநிஷ்டமாகவாவது ஒருசொல் சொன்னதை,

நான் ஒருபொழுதும் கேட்டதில்லையே! ஒருதரம் வில்லை வளைத்து நாணேற்றி ஒரேமூச்சில் ஐந்நூறுபாணங்களைப்பிரயோகிக்கவல்ல கார்த்தவீரியனைக்காட்டிலும், இலட்சுமணன் வில்வித்தையில் அதிகம்வல்லவனுயிற்றே! தேவராஜனை இந்திரனே அஸ்திரங்களைத் தொடுத்தபோதிலும், அவ்வஸ்திரங்களையும் தனது அஸ்திரங்களால் நாசமாக்குவானே! சிறந்த படுக்கையிற் படுத்தற்கு உரிய இவ்வீரன், வெறுந்தரையில் உயிரிழந்து படுத்திருக்கிறுன்!! நான் விபீஷணரை ராக்ஷஸராஜராகச் சொன்னபடி செய்யவில்லையே; நான் பொய்யாகச்செய்த வாக்குத்தத்தம் என்னேஎரிக்கின்றதே! சுக்கிரீவரே! நான் வல்லமையற்றவனென்பதை அறிந்துகொண்டு, பலசாலியாகிய இராவணன் தங்களைத் துரத்துமுன்னே தாங்கள் இவ்விடம் விட்டு ஓடிப்போவது கன்மை. மகாராஜரே! அங்கதனே முன்னிட்டுக்கொண்டு, சேனையுடனும், நண்பர்களுடனும், நீலன் நளன் என்ற இவர்களுடனும், தாங்கள் சடிதியில் சமுத்திரத்தைத் தாண்டுங்கள். போரில் எவராலும் செய்யமுடியாத பெருங்காரியங்களை அனுமான் செய்தான்; கோலாங்கூலர்களுடைய மன்னவராலும், ரிக்ஷராஜராலும் செயற்கரியபோர் செய்யப்பட்டது. போரில் அங்கதன் மைந்தன் துவிவிதன் என்ற இவர்கள்செய்த காரியங்களையும், முனேமுகத்திலே கேஸரி சம்பாதி என்னும் இவர்கள் பயங்கரமாகச்செய்த தொழிலையும், கவயன் கவாக்ஷன் சரபன் கஜன் என்றவர்களும் இன்னும் எனக்காக உயிரையிழக்குமாறு நிச்சயித்த மற்றை வானரவீரர்களும் செய்த போரையுங் கண்டதனல் மகிழ்கின்றேன். சுக்கிரீவரே! விதியை மனிதர்களால் வெல்லமுடியாது. சூரியகுமாரரே! பகைவரைத் தவிக்கச்செய்பவரே! தாங்கள் என்னிடம் வைத்த நட்பிற்கும் தங்கள்பருவத்திற்கும் தக்கபடி எவ்விதமாக நடந்து கொள்ளவேண்டுமோ, அவ்விதமாகத் தர்மத்துக்கு அஞ்சித் தாங்கள் நடந்தீர்கள். வானரவீரர்களே! நீவிரெல்லீ

ரும் உங்கள் நண்பனுக்குச் செய்யவேண்டிய காரியத்தைச் செய்துவிட்டீர்கள். இனி நான் உங்கட்கு விடைகொடுத்து விட்டேன். உங்களுக்கு இஷ்டமான இடங்களுக்குச் செல்லலாம்" என்றார்.

அவ்வானரர்களெல்லாரும், இராமர் அவ்வாறு புலம்பியதைக் கேட்டு, தங்கள்கண்கள் சிவந்தவர்களாய், கண்ணீரை வெள்ளமாகப் பெருக்கலானார்கள். பிறகு, விபீஷணர், எல்லாச்சேனைகளையும் நிறுத்தி, கதையும் கையுமாக, வெகு வேகத்துடன் இராமரிருந்த இடத்தை நாடிவந்தார். அஞ்சனமலைக்கொப்பாகிய கறுத்த மேனியுடன் அவ்வளவு விரைவாக அவர்வருவதைக் கண்டு, வானரர்கள், இந்திரஜித்தென்று மயங்கிப் பல திசைகளைநோக்கி ஓடலானார்கள்.

இராமரைநோக்கி விபீஷணர் வருவதைக் கண்ட வானரரது அச்சம்.

ஐம்பதாஞ் சருக்கம்:

கருடபகவான் நாகபாசத்தை நீக்குதல்.

பிறகு, மகாபலம்பொருந்திய வானராஜன், தனது சேனையை நோக்கி "ஏன் இச்சேனை எதிர்காற்றில் நீரில் ஓடம் தத்தளிப்பதுபோலத் தத்தளிக்கின்றது?" என்றான். சுக்கிரீவன் வினவியதைக் கேட்டு, வாலியின் குமாரனாகிய அங்கதன் "தசரத குமாரர்களான இராமர் இலட்சுமணர் என்ற இருவரும் இந்திரஜித்துவிய நாகபாசத்தாற் கட்டுண்டு, தங்கள் தேகமெங்கும் இரத்தம்பெருகச் சரப்படுக்கையிற் படுத்திருப்பதைத் தாங்கள் காணவில்லையோ?" என்றான். அதைக் கேட்டதும், சுக்கிரீவன், தனது குமாரனாகிய அங்கதனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலுற்றான்:—"இவர்கள் இப்படி ஓடுவதற்கு இதுதான் காரணமென்று எனக்குத் தோன்ற

சுக்கிரீவன் வானரர்களின் அச்சத்திற்குக் காரணம்விளவுதல்.

வில்லை. இதுவன்றியதோபயமொன்று உதித்திருக்கவேண்டும்; இவ்வானரர்கள் தங்கள் முகக்களை குறைந்து, தங்கள் ஆயுதங்களை யெறிந்துவிட்டு, தங்கள்கண்களை மருட்சியோடு விழித்துக்கொண்டு, நாம் இப்படி ஓடுகின்றோமே யென்ற வெட்கத்தையும் விட்டவர்களாய், பின் திரும்பிப் பாராமலே ஒருவரையொருவர் கட்டியிழுத்துக்கொண்டும் தவறி விழுந்தவர்களைத் தாண்டிக்கொண்டும் பல திசைகளையும் நோக்கி ஓடுகின்றார்கள்" என்றான்.

இப்படிச் சுக்கிரீவன் சொல்லிக்கொண்டிருந்த பொழுதே, கதாயுதத்துடன் விபீஷணர், அவ்விடம் வந்து சுக்கிரீவனை வாழ்த்திவிட்டு, இராமரிருந்த நிலைமையைப்பார்த்தார். இவ்விபீஷணர் வருகையைக் கண்டுதான் வானரர்கள் அஞ்சியோடினர்களென்பதைச் சுக்கிரீவன் தெரிந்துகொண்டதும், தனக்கு அருகிலிருந்த ஜாம்பவானை நோக்கி "விபீஷணர் இங்கு நம்மைநாடிவந்தார். இவரைக் கண்டதும், வானரர்களெல்லாரும், இவரை இராவணனுடைய குமாரனுகிய இந்திரஜித்தென்று எண்ணிக்கொண்டு பயந்தோடுகின்றார்கள். ஆகையால், மிகவும் பயந்தோடுகின்றவர்களையெல்லாம் கூப்பிட்டு, வந்தவர் விபீஷணரென்று சொல்லித் தேற்றிநிறுத்துக" என்று கட்டளையிட்டான். இப்படிச் சுக்கிரீவன் கூறியவுடனே, ரிக்ஷராஜனுகிய ஜாம்பவான், ஓடின வானரர்களைத் தேற்றித் தடுத்தான். அவ்வானரர்களெல்லாம் அவ்விதமாக ஜாம்பவான் சொன்னதைக்கேட்டு, விபீஷணரைப்பார்த்துப் பயந்தெளிந்து ஓடுவதை விட்டுத் திரும்பினர்கள்.

சுக்கிரீவன் வானரர்களின் பயகாரணத்தையுணர்ந்து தேற்றுதல்.

தருமாத்துமாவாகிய விபீஷணரோ, இராமலட்சுமணருடைய திருமேனி முழுமையும் பாணங்கள் மூடியிருந்ததைப் பார்த்து மனங்கலங்கினர். அவர் தமது கையைத் தண்ணீரில் நனைத்து இராமலட்சுமணர்களுடைய கண்களைத் துடைத்து, தாங்கமுடியாத துக்கமுடையவராய்க்

கதறிப்புலம்பலானுர்:—" வெகுபலம் பொருந்திப் பராக்கிர மம் நிரம்பியவராய்ப் போரில்வல்லவராயிருந்த இவ்விருவரை யும் கபடமாகப் போர்புரியுந்தன்மையுள்ள அரக்கர்கள் இந்நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள். துராத்மாவும் என்தமை யன்குமாரனு மாகிய அக்கொடியவன் அரக் கர்க்கு இயல்பான கோணல்புத்திகொண்டு தருமயுத்தஞ் செய்யும் இவ்வுத்தமர்களை மோசம்பண்ணினன். நன்முக அம்புகளாலடிபட்டு உடம்புமுழுதும் இரத்தம்வடியப் பூமி யிற்படுத்திருக்கின்ற இவ்விருவீரர்களும் முள்ளம்பன்றி கள்போலத் தோன்றுகின்றூர்கள். எவர்களது வீரியத்தை யே ஆதரவாகக்கொண்டு நான் பிரதிஷ்டையடையலா மென்று ஆசைகொண்டிருந்தேனே, மானிடரிற்சிறந்த அவ் விருவரும் தமதுதேகங்கள் ஓழியும்படி தூங்குகின்றூர்கள். இப்போது நான் உயிருடனிருப்பதனல், இராச்சியத்தைப் பெறலாமென்ற எண்ணமொழிந்து ஆபத்தையடைந்தவனு னேன்;பகைவனுன இராவணன்தன்பிடிவாதம்நிறைவேறு மாறு பூர்ணமனேரதனுன்" என்று அழுதுநின்றூர்.

விபீஷணர் இராமலட்சுமணரின் நிலையைக் கண்டு வருந்தல்.

இவ்விதமாகப் புலம்பிக்கொண்டுநின்ற விபீஷணரை, ஸாத்விககுணமுடைய சுக்கிரீவன், கட்டிக்கொண்டு, பின் வருமாறு தேற்றலுற்றூன்:— " தருமத்தையுணர்ந்த வரே ! இலங்காராஜ்ஜியத்தைத் தாங் கள் அடைவீர்கள். இதற்கு ஐயமேயில்லை. இராவணனும் அவன்குமாரனும் ஓரு பொழுதும் தங்களுடைய மனேரதங்களை இங்கு அடையமாட்டார்கள். இராமலட்சுமணர் இரு வரும் மரணநோயாற் பீடிக்கப்படவில்லை ; இவ்விருவ ரும் தங்கள்மோகம் நீங்கினவுடன், இராவணனை இனத் தோடு போரில் வதைசெய்வார்கள் " என்றூன்.

சுக்கிரீவன் விபீஷணரைத் தேற்றுதல்.

சுக்கிரீவன் இவ்விதமாக விபீஷணரை நல்வார்த்தை சொல்லித் தேற்றிவிட்டு, தனக்கு அருகிலிருந்த தனது

மாமனரான சுஷேணனைப் பார்த்துச் சொல்லலானன் :—

சுக்கிரீவனுக்கும் சுஷேணனுக்கும் நடந்த சம்பாஷணை.

"சகோதரரான இவ்விருவீரரும் மூர்ச்சை தெளிந்ததும், இவர்களை அழைத்துக்கொண்டு, சூரர்களான வானரவீரர்களுடன், தாங்கள் கிஷ்கிந்தை செல்லுங்கள். நான், இங்குத்தங்கி, இராவணனை, குமாரர்களுடனும் சுற்றத்தாருடனும் கொன்று, தாணிழந்த சம்பத்தை இந்திரன் கொண்டுவந்ததுபோலச் சீதாதேவியை மீட்டுக் கொண்டு வருகின்றேன்" என்றான். இவ்வாறு வானரவேந்தன் சொன்னதைச் சுஷேணன் கேட்டுப் பின்வருமாறு சொல்லலானன் :— "தேவர்கட்கும் அசுரர்கட்கும் நடந்த கடும்போரை நான் பார்த்திருக்கின்றேன். அப்போது அஸ்திரவித்தையில் மிகவும் வல்லவர்களான அசுரர்கள் ஆயுதங்களில்வல்ல தேவர்களை அடிக்கடி மறைந்து அடித்தார்கள். அத்தேவர்கள் தாங்கமுடியாமல் அறிவு தப்பித் தங்களுயிர்களை இழந்தவர்களாகவே ஆனார்கள். அப்பொழுது பிரஹஸ்பதி, அவர்களை, மந்திரங்களுடன் கூடிய வித்தைகளினாலும் மூலிகைகளாலும் சிகிச்சை செய்தார். ஆகையால், சம்பாதி பநஸன் முதலிய வானரர்கள் அம்மூலிகைகளை விரைவிற் கொண்டுவரும்பொருட்டு க்ஷீரசமுத்திரத்துக்கு வெகுவேகமாகச் செல்லவேண்டும். மலையின்மேல் வளர்கின்ற அம்மூலிகைகளை வானரர்கள் நன்றாக அறிவார்கள். தேவர்களின்பொருட்டு உண்டாக்கின திவ்விய ஔஷதங்களான ஸஞ்ஜீவகரணியையும் விசல்யகரணியையும் கொண்டுவரச் செல்லட்டும். உத்தமமான க்ஷீரசமுத்திரத்தில் எங்குத் தேவர்கள் அமிருதத்தைக் கடைந்தெடுத்தார்களோ, அங்குத்தான் சந்திரன் துரோணனென்று இரண்டுமலைகளிருக்கின்றன. அம்மலைகளிலே உத்தமமான அந்தமூலிகைகள் முளைத்துள்ளன. தேவர்கள் இம்மூலிகையை அவ்விடத்தில்தான் வைத்தார்கள். வேந்தரே! வாயுபகவானுடைய புதல்வனான இவ்வனுமான் அவ்விடம் போகட்டும்" என்றான்.

இவ்விதமாக இவர்கள் சொல்லிக்கொண்டிருந்தபொழுது, மின்னலுடன் கூடிய மேகங்களையும் சமுத்திரத்தின்ஜலத்தையும் கொந்தளிக்கச்செய்துகொண்டும், மலைகளை நடுங்கச்செய்துகொண்டும் ஒருபெருங்காற்று உண்டாயிற்று. அவ்வாறு கருடபகவானது சிறகாலுண்டாகிய பெருங்காற்றினால், இலங்கையிலுள்ள பெருமரங்களெல்லாம் கிளைகள் முறிந்து, வேரோடுபெயர்ந்து சமுத்திரத்தில் விழுந்தன. இலங்கையிலிருக்கின்ற சிறந்த உடலெப்பெற்ற பாம்புகள் நடுநடுங்கின ; ஜலஜந்துக்களெல்லாம் நீரில்மூழ்கி, சமுத்திரத்தின் அடித்தரையிற் சென்றன். பிறகு ஒருமுகூர்த்தகாலத்திற்குள், எரியுந் தீப்போல விளங்குகின்ற விநதையின் புதல்வனாகிய மகாபலமுள்ள கருடபகவானே, எல்லாவானரவீரர்களும் கண்டார்கள்.

கருடபகவானது வருகை.

அக்கருடபகவானது வரவைக்கண்டதும், மகாபலவான்களான இராமலட்சுமணர்களைச்சரவடிவமாகக்கட்டியிருந்தநாகங்கள் பயந்தோடிவிட்டன. பிறகு, கருடபகவானும், காகுத்ஸ்தர்களைக்கண்டு சந்தோஷித்து, சந்திரன்போல் விளங்கிய அவர்களது முகங்களைத் தனதுகைகளால் தடவிக் கொடுத்தான். கருடபகவான் கைபட்டதும், இராமலட்சுமணருடைய விரணங்களெல்லாம் ஆறின ; அவ்விருவருடைய திருமேனிகளும் தங்கம் போன்ற நிறமமைந்து, வழுவழுப்படைந்தன. அன்றியும், அவ்விருவரது ஒளி, வீரியம், பலம், தேககாந்தி, சிறந்தகுணமாகிய உற்சாகம், நுண்ணறிவு, விவேகம், ஞாபகசக்தி இவைகளெல்லாம் முன்னிருந்ததைவிட இரட்டிப்பாக விளங்கின். இந்திரனுக்கு ஒப்பாய் மகாவீரரான அவ்விருவரையும் கருடபகவான் எழுப்பி, அவர்கள் சந்தோஷமாக எழுந்துநின்றவுடன், அவர்களைத் தழுவிக்கொண்டான்.

கருடபகவான் இராமலட்சுமணரை நாகபாசத்தினின்று விடுவித்தல்.

அப்பொழுது இராமர் அந்தக் கருடனைநோக்கிச் சொல்லலானார் :— " தங்கள்கருணையால், இந்திரஜித்தினு லுண்டான பெரிய ஆபத்திலிருந்து, நாங் களிருவரும் இப்போது விடுவிக்கப்பட் டோம் ; அன்றியும், முன்போலவே பல முள்ளவர்களாகவும் செய்யப்பட்டோம். எனது தந்தை தசரதரிடமும் பாட்டனு ரான அஜரிடமும் எவ்வாறோ, அவ்வாறே தங்களைக் கண் டதும், என்மனம் தேறுதலை யடைகின்றது. இவ்வாறு நல்ல உருவத்துடன் தேவலோகத்து மலர் மாலையையும் கலவைச் சந்தனத்தையும் அணிந்து, மாசற்ற ஆடையுடுத்து, திவ்விய மான் ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு வந்திருக்கும் தாங்கள் யாவர் ?" என்றார்.

இராமர் கருட பகவானுக்குக் கூறிய உபசார வார்த்தை.

இராமர் கருடபகவானை வீர்யாசென்று விளுவுதல்.

விநதையின் குமாரனும் பட்சிராஜனுமாகிய மகாபலம்பொ ருந்திய அந்தக்கருடபகவான், வெகுசந்தோஷித்துடன் கண்களில் ஆனந்த பாஷ்பம் ததும்ப, இராமரைநோக்கி மறுமொழி சொல்லலானான்:—" காகுத்தரே! நான் தங்க ளுடைய தோழன் ; வெளியிற் சஞ்சரிக் கின்ற தங்களுடைய பிராணன் ; எனது பெயர் கருத்மான்; உங்களுக்கு உதவிசெய் தற்பொருட்டு இவ்விடம் வந்தேன். அதிகவீரியம்பொருந் திய அசுரர்களும் மகாபலம்பொருந்திய தானவர்களும் தேவர்களும் கந்தர்வர்களும், தேவேந்திரனையே முன்னிட் டுக்கொண்டுவந்தபோதிலும், இவர்களால், கொடியசெயல் புரியும் இந்திரஜித்து தனதுமாயையின் பலத்தாலுண் டாக்கிய கொடிய இந்த நாகபாசக்கட்டை ஒருபொழுதும் நீக்கமுடியாது. கத்ருவின் வம்சத்தைச் சேர்ந்தவும் கொடியவிஷமமைந்த பற்களுள்ளவுமான இந்த நாகங் கள், அவ்வரக்கனுடைய மாயையின் வலிமையால் சரவடி வங்கொண்டு தங்களைக்கிட்டின். தருமத்தை யுணர்ந்த

கருடபகவானது மறுமொழி.

வரே ! உண்மையும் வல்லமையும் அமைந்த ராகவரே ! தாங்களும், போரிற் பகைவர்களை வெல்லும் தங்களது சகோதரரான இலட்சுமணரும், வெகுபாக்கியசாலிகள். இவ்வண்ணம் நீவிர் இங்குவந்ததை நான் கேள்விப்பட்டு, நண்புரிமையைக் காக்குமாறு உங்களிடத்துள்ள அன்பினால் இங்கு விரைந்து வந்தேன். இக்கொடிய பாணக்கட்டினின்று நான் உங்களிருவரையும் விடுவித்துவிட்டேன். இனி நீங்களிருவரும் எப்போதும் வெகுஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அரக்கர்களெல்லாரும் இயல்பாகவே போரில் வஞ்சனையாகப் பொருபவர்கள். வெகு சூரர்களாயும், பரிசுத்தமானமனமுள்ளவர்களாயுமிருக்கின்ற உங்களைப்போன்றவர்களுக்கு நேர்வழியில் நின்று போரிடுவதே வல்லமை. போர்க்களத்தில் அரக்கர்களை நம்பியிருக்கவேண்டாம். அரக்கர்கள் கபடமாகவே யுத்தஞ் செய்பவர்களென்பதை இவ்வுபமானத்தாலேயே தெரிந்துகொள்ளலாம்" என்றான்.

கருடபகவான் இராமரிடம்விடை கேட்டுக் கொண்டு செல்லுதல்.

இவ்வண்ணம் மகாபலம்பொருந்திய நண்பனாகிய அந்தக் கருடபகவான் தனது நண்பராகிய இராமரிடஞ் சொல்லிவிட்டு, பிறகு ஒருமுறை தழுவிக் கொண்டு, தனக்கு விடைகொடுக்கும்படி வேண்டலானான்:— "நண்பரே ! ராகவரே ! தருமத்தை யறிந்தவரே ! பகைவர்களும் விரும்புங் குணமுள்ளவரே ! தங்களை விடையளிக்குமாறு வேண்டுகின்றேன். வந்தவழியே திரும்பிச்செல்லுகின்றேன். எவ்வாறு நான் தங்களுடைய நண்பனானே னென்பதைப்பற்றி அறியத் தாங்கள் இப்பொழுது ஆவல்கொள்ளவேண்டாம். போரில் தாங்கள் செய்யுந்தொழிலை முடித்தபிறகு, தாங்களே தெரிந்து கொள்வீர்கள். இவ்விலங்கையை, பாணங்களின் தொகுதிகளால், குழந்தைகளும் கிழவர்களும் மிச்சமாகுமாறு செய்து, ராவணனென்ற சத்துருவைக் கொன்று, சீதையைத் தாங்கள் அடைவீர்கள்" என்றான். இவ்வாறு

சொல்லிவிட்டு, கருடபகவான், விரைந்துசெல்லுந் தன்மையனாய், வீரியவானான இராமரை நோயற்றவராகச் செய்து, வானரக் கூட்டத்தின் நடுவில் இராமரை வலம்வந்து மீண்டும் ஒருமுறை தழுவி, ஆகாயத்திலெழுந்து வாயுவேகமாகச் சென்றான்.

பிறகு, வானரசேனைத்தலைவர்கள், இராமலட்சுமணர் தமக்குவந்த ஆபத்தினின்று நீங்கியதைக் கண்டதும், அப்போது சிங்கநாதஞ்செய்து, தங்கள் வால்களை உதறலானார்கள். பிறகு மிக்க களிப்புடன் பறைகளறைந்தார்கள்; மத்தளங்கள் கொட்டினார்கள்; சங்கவாத்தியங்களை யூதினார்கள்; முன்போலவே மீண்டுஞ் சிங்கநாதஞ் செய்தார்கள். மலைகளைக்கொண்டு போர்புரிகின்றவர்களான அவ்வானரவீரர்கள், தங்கள்தோள்களைத்தட்டிப் பலவகை விருட்சங்களை வேருடன் பிடுங்கிக்கொண்டு, நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் நின்றார்கள். வானரர்கள், போர்புரியவேண்டுமென்ற ஆவலுடனே, பெருஞ்சத்தஞ் செய்துகொண்டு, அரக்கர்களைப் பயமுறுத்தியபடியே இலங்கைவாயிலையடைந்து நின்றார்கள். வெகுபயங்கரமாயும் நெருக்கமாயும் உண்டான அவ்வானரசேனைபதிகளுடைய சத்தமானது, கோடைக் காலத்தின் முடிவில் நடுராத்திரியிற் கர்ச்சிக்கும் மேகக்கூட்டங்களது பயங்கரமான பேரிடிபோலக் கேட்கலாயிற்று.

வானரர்களின் மகிழ்ச்சியும்யுத்த சன்னகமும்.

ஐம்பத்தோராஞ் சருக்கம்:

இராமலட்சுமணர் நாகபாசத்திலிருந்து நீங்கியதை யுணர்ந்த இராவணன் தூம்ராக்ஷனைப் போருக்கு அனுப்புதல்.

பலமுள்ள அந்த வானரர்கள் அவ்வாறு பெருஞ்சத்தமிட்டதை அரக்கர்களுடனிருந்த இராவணன் கேட்

டான். அழகாயும் கம்பீரமாயு மெழுந்த அப்பெருஞ்சத்

இராவணன் வானரரின் பெருஞ்சத்தத்தைக் கேட்டல்.

தத்தை ராக்ஷஸராஜன் கேட்டதும், மந்திரிமார்களின் நடுவி லிருந்தவாறே அவ்விராவணன் பின் வருமாறு சொல்லலானான்:— "பல வானர வீரர்கள் வெகு ஆனந்தத்தில் மூழ்கிச்செய்கின்ற இப்பெருஞ்சத்தமானது, கர்ச்

இராவணன் தனது சந்தேகத்தை மந்திரிமார்க்கு உணர்த்தல்.

சிக்கின்ற மேகங்களிலிருந்து உண்டாகுஞ் சத்தம்போலக்கேட்கப்படுகின்றது; ஏதோ பெருங்களிப்புக்குக்காரணம் அவர்களுக்கு உண்டாயிருக்கவேண்டு மென்பதற்குச் சந்தேகமில்லை; எனெனில், அவர்கள் செய்யும் பெருஞ்சத்தத்தினாற் சமுத்திரமே கலங்கிவிடுகின்றதே. உடன்பிறந்தவர்களான அந்த இராமலட்சுமணர்கள் கொடிய நாகபாசங்களாற் கட்டுண்டிருக்கவும், இப்பெருஞ் சத்தமுண்டாவது, எனக்குப் பெருஞ்சந்தேகத்தை யுண்டாக்குகின்றது" என்றான்.

இவ்வண்ணம் மந்திரிகள்நடுவில் இராவணன்சொல்லி, தனக்கருகிலிருந்த அரக்கர்களை நோக்கி, "இந்த வானரர்களெல்லாரும் இப்பொழுது துக்கப்பட

இராவணன் வானரரின் மகிழ்ச்சிக்காரணத்தையறிய ஒற்றரை விடுத்தல்.

வேண்டிய காலமாக இருக்கவும், இவர்கள் சந்தோஷப்படுமாறு என்ன காரணமுண்டாயிற்றென்று சீக்கிரம் அறிந்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

அப்படியாகத் தமது வேந்தன் சொன்னதும், வெகு வேகமாக அவ்வரக்கர்கள், கலக்கத்தோடு மதில்களின்மேல்

ஒற்றர் உணர்ந்து செய்தியை இராவணனுக்கு உணர்த்தல்.

ஏறி, மகாத்துமாவாகிய சுக்கிரீவன் பாதுகாக்கின்ற வானரசேனையைப் பார்த்தார்கள். அந்தராகவிருவரும் மிகக்கொடிய நாகபாசத்தைவிட்டு நீங்கி யெழுந்து வெகுகாந்தியோடு விளங்கிக்கொண்டிருப்பதையும் கொடிய அவ்வரக்

கர்கள் கண்டு துக்கமடைந்தார்கள். அவர்களெல்லாரும் தங்கள்மனம் நடுங்கியவர்களாய், கீழேயிறங்கி, துக்கத் தால்வாடிய முகங்களுடன் இராவணனுக்கருகில் வந்தார் கள். பேசுவதில் வல்லவர்களாய் வாடியமுகமுடையவர் களான அவ்வரக்கர்கள், "சகோதரர்களாகிய எந்த இராம லட்சுமணர்களை இந்திரஜித்து போரிற் பாணங்களாற் கட்டிக் கைகளை அசைக்கமுடியாமற் செய்துவந்தாரோ, அரசயானையைப்போல மிக்க பராக்கிரமசாலிகளான அவ் விருவரும், யானைகள் கயிறுகளை யறுப்பதுபோலத் தமது கட்டுக்களையறுத்துப் பாணக்கட்டினின்று விடுபட்டவர்க ளாகி முனைமுகத்திற் காணப்படுகின்றார்கள்" என்று அந்த அநிஷ்டசங்கதி முழுவதையும் உண்மையாகத் தெரி வித்தார்கள்.

மகாபலம்பொருந்திய ராக்ஷஸராஜனை இராவணன், அவர்கள் அவ்வாறு சொன்னதைக் கேட்டு, சிந்தையிற் கொண்ட கவலையினற் கலங்கினவனாய், துயரத்தால் வா டியமுகத்துடன் சொல்லலுற்றான்:— "வெகுபயங்கரமான வையும், வரத்தினற் பெற்றனவும், சர்ப் பங்களுக்கு ஒப்பானவையும், வீண்போகா தனவும், சூரியனுக்கு ஒப்பானவையுமான தனது பாணங்களினல், இந்திரஜித்து, போரில் எனது பகைவர்களை வலியக்கட்டினன். அவ்வகையான அஸ்திரக் கட்டிலிருந்து எனதுசத்துருக்கள் விடுபட்டார்க ளென் றால், இனி எனது பெரும்பலத்திற்குச் சந்தேகம் வந்த தென்றே நினைக்கின்றேன். எந்தப்பாணங்கள் எனது பகைவர்களின் உயிரைக் கவர்ந்தனவோ, வாசுகிக்கு ஒப் பான தேஜசையுடைய அந்தப்பாணங்கள் இப்போது பிர யோஜன மற்றவைக ளாயின்வே!!" என்று இவ்வாறு சொல்லிவிட்டு, வெகு கோபங்கொண்டவனாய், பாம்புபோ லப்பெருமூச்செறிந்து சீறி, அரக்கர்கள் நடுவில் தூம்ராக்ஷ னென்ற அரக்கனைப் பார்த்து, "பயங்கரமான பராக்கிரம

இராவணன் சொன்னது கூறுதல்.

முள்ள வீரனே! நீ பெருஞ்சேனையை உடன்கொண்டு, சடி
தியில் வானரசேனையுடன் இராமனையும்
போரில் வதைசெய்யுமாறு செல்லுக" என்றான். இவ்விதமாக வெகு புத்திமானு
கிய அந்த இராவணன் சொன்னதும், தூம்
ராக்ஷன், அதிக சந்தோஷத்துடன் தனது
வேந்தனுக்கு நமஸ்காரம்செய்து, அவ்
வரண்மனையை விட்டுப் புறப்பட்டான். அக்கோட்டைவா
யிலைத்தாண்டினதும், தூம்ராக்ஷன் தனது சேனைத்தலை
வனைப்பார்த்து "போர்செய்ய விரும்புகின்ற என்து சேனை
களை விரைவாகச் செலுத்துக; தாமதிப்பதில் என்ன
பயன்?" என்றான். தூம்ராக்ஷன்சொல்லைக் கேட்டதும்,
சேனைகளாற் சூழப்பெற்ற சேனைத்தலைவன், இராவணன்
கட்டளைப்படியே பெருஞ்சேனையை வெகு விரைவிற்
செலுத்தினான். அச்சேனையைச் சேர்ந்த அரக்கர்களும்,
வீரக்கழலணிந்தவர்களும், பயங்கரமான தோற்றமுள்ள
வர்களும், சந்தோஷத்துடன் கர்ச்சிக்கின்றவர்களும், பல
வித ஆயுதங்களை யேந்தியவர்களும், கைகளில் சூலம்
முத்கரம் கதாயுதம் மொட்டைத்தலைத்தடி வெறுந்தடி
இருப்புலக்கை உழலைத்தடி பிண்டிபாலம் பல்லம் ஈட்டி
கோடாலி முதலிய ஆயுதங்களைப் பிடித்தவர்களுமாகிப்
பல திசைகளிலிருந்தும் மேகங்களைப்போலக் கர்ச்சித்துக்
கொண்டு கிளம்பி, தூம்ராக்ஷனைச் சூழ்ந்து நின்றார்கள்.
சிலர் கவசங்களணிந்து துவசங்களால் நன்றாகக் கோலஞ்
செய்யப்பெற்ற பொன்மயமாகிய இரதங்களிலும், வேறு
சிலர் பல முகங்களோடு கூடிய கோவேறுகழுதைகளி
லும், வேறுசிலர் வெகுவேகமான குதிரைகளிலும், பின்
னுஞ் சிலர் மதயானைகளிலுமாக, புலிகள்போல அணுக
முடியாத அவ்வரக்கப்புலிகள் புறப்பட்டார்கள். செந்நாய்
சிங்கம் இவைகளுடைய முகங்களைப்போலச் சித்திரவேலை
செய்யப்பட்டுப் பொன்னாபரணங்களா லலங்கரிக்கப்பட்ட
கோவேறுகழுதைகள் பூட்டி விளங்குகின்ற அழகான

இராவணன் தூம்ராக்ஷனையே ஏவியதலும், அவன் இராமர் மேற் படையெடுத்துச் செல்லல்.

பெருந்தேரொன்றில் வெகுகோரமாய்ச் சத்தித்துக்கொண்டு தூம்ராக்ஷன் ஏறினன். மகாவீரியம் பொருந்திய அந்தத் தூம்ராக்ஷன், சிரித்துக்கொண்டே, அரக்கர்களாற் சூழப்பட்டவனாய், கழுதை கட்டிய கிங்ஞசத்தமுள்ள தேரிலேறி, அனுமானென்னுஞ் சேனபதி யிருந்த மேலைக் கோட்டைவாயிலை நோக்கிப் புறப்பட்டான்.

தூம்ராக்ஷனுக்குத் நிமித்தந் தோன்றுதல்.

வெகுபயங்கரமான பராக்கிரமமுள்ள கொடிய அவ்வரக்கன் புறப்பட்டபொழுது, ஆகாயத்திலிருந்த கொடிய பறவைகள் சூழ்ந்து கொண்டன. தேரின் நுனியில் பெரிய தும் பயங்கரமுமான கழுகொன்று உட்கார்ந்தது. கொடிச் சீலையில் பிணம்பிடுங்கிகள் வரிசையாகத் தங்கின. தேகமெல்லாம் இரத்தம் பெருகப்பெற்றுப் பெரிய தொரு வெண்ணிறமான கபந்தம், தூம்ராக்ஷனது சமீபத்திலே வெகு கடோரமாகக் கத்திக்கொண்டே விழுந்தது. மழைத்தேவன் இரத்தமழை பொழிந்தான். பூமி நடுங்கிற்று. இடிமுழக்கம்போலச் சத்தம் பண்ணிக்கொண்டு எதிர்காற்று வீசலாயிற்று. பேரிருள் மூடித் திசைகள் புலப்படவில்லை.

தூம்ராக்ஷன் வருந்துதல்.

இவ்விதமாக அரக்கர்களுக்குப் பயம் வந்ததென்பதை எடுத்துக்காட்டும் பயங்கரமான அபசகுனங்களைத் தூம்ராக்ஷன் கண்டு மனங் கலங்கினன். அந்தத் தூம்ராக்ஷனுக்கு முன் சென்ற எல்லா அரக்கர்களும், மோகமடைந்தார்கள். பிறகு, மிக்கபலசாலியாய்ப் போர்புரிவதில் ஆசை கொண்டவனாய் வெகு பயங்கரனான தூம்ராக்ஷன், அரக்கர்களாற் சூழப்பட்டு வெளிப்புறப்பட்டுவந்து, அவ்விராக்ஷதர்களால் இரட்சிக்கப்பட்டுக் கடல்போல் வெகு கம்பீரமாக விளங்கும் பெரிய அவ்வானரசேனையைத் தனது கண்களாற் பார்க்கலானன்.

தூம்ராக்ஷன் வானரசேனையைக் காணுதல்.

ஐம்பத்திரண்டாஞ் சருக்கம் :

தூம்ராக்ஷனை அனுமான் வதைத்தல்.

யாவரும் அஞ்சத்தக்க பராக்கிரமம் பொருந்திய தூம்ராக்ஷனென்ற அரக்கன் அவ்வாறு வெளிப்புறப் பட்டு வருவதை, வானரர்க ளெல்லோரும், பார்த்து, சண்டையை எதிர் பார்த்திருந்தவர்களாகையால் வெகு சந்தோஷங்கொண்டு ஆரவாரஞ் செய்தார்கள். அப்போது, வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும், விருட்சங்களாலும் சூலங்களாலும் இருப்புலக்கைகளாலும் ஒருவரை யொருவர் தாக்குகின்ற வெகுபயங்கரமான யுத்தம் நடக்கலாயிற்று. பலவிதமாய்ப் பயங்கரங்களான உழலைத்தடிகளினாலும் முத்தலைச் சூலங்களினாலும் பெருந்திரளான கொடிய அரக்கர்கள் வானரர்களை நாற்புறத்திலும் அழிக்கலானார்கள். வானரர்களும், பெருமரங்களைக் கொண்டு அரக்கர்களைத் தரையுடன் தரையாகச் செய்தார்கள். அரக்கர்களும், வெகுகோபங்கொண்டவர்களாய், கழுகுகளின் இறகுகளோடு கூடிக் காலாந்தகன்போல் விளங்குகின்ற நேராகப்பாயுந்தன்மையுள்ள பல கூரிய பாணங்களாற் புடைக்கலானார்கள்.

அரக்கர்கட்கும் வானரர்கட்கும் கைகலந்தபோர்.

அவ்வாறு பயங்கரமான கதாயுதங்களாலும் தடிகளாலும் சம்மட்டிகளாலும் முத்கரங்களாலும் அரக்கர்களால் பிளக்கப்பட்ட பலமுள்ள வானரவீரர்கள், மிக்க ரோஷத்தினால் யுத்தத்திலுற்சாகங்கொண்டு கொஞ்சமேனும் பயப்படாமல் வெகு ஆச்சரியமாகத் தொழில் செய்யலானார்கள். தங்கள் தேகங்கள் அம்புகளாற் பிளக்கப்பட்டும், சூலங்களாற் குத்தப்பட்டு மிருந்தபோதிலும், அவ்வானரவீரர்கள், பெருமரங்களையும் பெரும்பாறைகளையும் அப்போது கைக்கொள்ள லானார்கள். உடனே,

கடுவேகமுள்ள அவ்வானரவீரர்கள் நான்குபக்கங்களிலும் பேரட்டகாசம் பண்ணிக்கொண்டு கடுவேகமுள்ள ராட்சசர்களைத் துவம்சஞ்செய்து தங்கள்பெயர்களைச் சொல்லலானார்கள். அப்பொழுது அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் வெகுபயங்கரமாகவும் அற்புதமாகவும் போர் நடக்கலாயிற்று. பல கற்பாறைகளாலும் பல மரங்களாலும் வெற்றியால் விளங்கிய வானரர்களாற் புடைக்கப்பட்டுச் சில அரக்கர்கள் வதைக்கப்பட்டார்கள்; இரத்தத்தைக் குடிப்பவரான சில அரக்கர்கள், வாயால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு விழுந்தார்கள்; சிலர் விலாப்பக்கங்கள் பிளப்புண்டார்கள்; சிலர் மரங்களினால் குவியலாகக் குவிக்கப்பட்டார்கள்: சிலர் பாறைகளாற் பொடியாக்கப்பட்டார்கள். சிலர் பற்களாற் கிழிக்கப்பட்டார்கள். முறித்து ஒடிக்கப்பட்ட தேர்த்துவசங்களாலும், கீழே வீழ்த்திய கோவேறுகழுதைகளாலும், தொமிசஞ் செய்யப்பெற்ற தேர்களாலும், இறந்து வீழ்ந்த அரக்கர்களாலும், வானரர்களெறிந்த மலைச்சிகரங்களால் உயிரிழந்துவிழுந்த மலைபோன்ற யானைகளாலும், கொல்லப்பட்டுச் சாரதியுடன் விழுந்துகிடந்த குதிரைகளாலும், அப்போர்க்களமானது நிரம்பியிருந்தது. பயங்கரமான பராக்கிரமத்துடனே விரைந்து தொழில் செய்கின்ற வானரர்கள் அடிக்கடி ஆகாயத்திலெழுந்து, தங்கள் கூரான நகங்களால் அரக்கர்களின் முகங்களைக்கிள்ளிவிடவே, அரக்கர்கள் தங்கள் முகவொளி குறைந்தவர்களாய், தலைமயிர்கள் கலைய மூர்ச்சையடைந்து இரத்தத்தினது தீ நாற்றம் வெளிப்படக் கீழே பூமியில் விழுந்தார்கள். சில அரக்கர்கள், வெகு கோபத்துடன் கர்ச்சித்துக்கொண்டு, வச்சிராயுதம்போலத் தாக்கவல்ல தங்கள் கைகளை யோங்கி வானரர்களைத் துரத்திச் சென்றார்கள். அவ்வாறு துரத்திவந்த அரக்கர்களை, அதிக வேகங்கொண்ட வானரர்கள், கைப்பிடிகளாலும் கால்களி

வானரர் அரக்கர்களைமுறியடித்தல்.

ஞலும் பற்களினுலும் விருட்சங்களினுலும் மாய்த்தொழித்தார்கள். அக்காலையில் வானரர்கள் தங்களை அவ்வாறு செய்வதைக் கண்டு, அரக்கர்கள் தப்பியோடத் தலைப்பட்டார்கள்.

தூம்ராக்ஷன் வானர்களை யழித்தல்.

அப்போது தன்து சேனை அஞ்சியோடுவதை வெகு வீரனை தூம்ராட்சன் பார்த்து, கோபங் கொண்டு யுத்தம் செய்ய விரும்பிவந்த வானரர்களை நாசம் பண்ணலானன். அப் பொழுது சில வானரர்கள் ஈட்டிகளாற் குத்தப்பட்டு இரத்தத்தைக் கக்கலானர்கள்; சிலவானர வீரர்கள் இருப்புலக்கைகளால் அடியுண்டு தரையிற் சாய்ந்தார்கள்; சிலர் உழலைத்தடிகளால் ஒங்கி யடிக்கப்பட்டார்கள்; சிலர் பிண்டிபாலங்களினுல் அடிக்கப்பட்டார்கள்; சிலர் பட்டஸத்தால் மோதப்பட்டுக் கலங்கி உயிரை யிழந்தார்கள்; சிலர் சூலத்தாற் குத்துண்டு இரத்தத்தைப் பெருக்கினர்கள்; சில வானரர்களை அரக்கர்கள் முனைமுகத்தில் துரத்திக்கொன்றார்கள். சில வானரர்கள் விலாப் பக்கங்களில் ஒருபக்கம் தொங்கி இருதயம் பிளப்புண்டு விழுந்தார்கள். சிலர் முத்தலைச் சூலங்களாற் குத்தப் பட்டுக் குடல் வெளிக்கினம்ப மாய்ந்தார்கள்.

பிகளச் றெப்பு.

இவ்வாறு மலைகளைக்கொண்டும் விருட்சங்களைக்கொண்டும் அரக்கர்களினுலும் வானரர்களினுலும் கைகலந்து நடத்தப்பட்ட அப்பெரும் போர், மிகவும் பயங்கரமாய்ப் பெருஞ்சத்தத்தை யுடையதாக விளங்கிற்று. விற்களின் நாணிகளை இனிய நரம்புகளாகவும், மாய்பவர்களின் விக்கல்களை தாளங்களாகவும், அவர்கள் ஈனசுவரமாகப் பேசுவதை மிருதுவான இராகமாகவும் அமைய, யுத்தசங்கீதமானது, அப்போது நடக்கலாயிற்று.

தூம்ராக்ஷனும், கையில் விற்பிடித்தவனுய்ச் சிரித்துக் கொண்டே அப்போர்க்களத்தில் வானரர் களையெல்லாம் சரமாரி பொழிந்து பல திசைகளில் துரத்தியடிக்கலானுன். வானர சேனை தூம்ராக்ஷனுல் அவ்வாறு இம்சிக் கப்பட்டுக் கலங்கினதை, அனுமான், பார்த்து, வெகுகோபங்கொண்டு, தனதுகையிற் பெருமலையொன்றை யெடுத்துக்கொண்டு ஓடிவந்தான். தனது தந்தைக்கு ஒப்பான பராக்கிரமமுள்ள அம்மாருதி, கோபத்தால் தனது கண்கள் இரட்டிப்பாகச் சிவக்க அந்தத் தூம்ராக்ஷனது தேரைநோக்கி அம்மலையை எறிந்தான். மலையொன்றுவருவதைக் கண்ட தூம்ராக்ஷன், வெகு பரபரப்புடன் கதாயுதமொன்றைக் கைப்பற்றிக்கொண்டு, வெகுவேகமாகத் தனது இரதத்தைவிட்டுக் குதித்துப் பூமியில் நின்றுன். அம்மலையும், சக்கரம் ஏர்க்கால் குதிரை கொடி என்ற இவற்றுடனே அவனது இரதத்தை முறித்துப் பூமியில் விழுந்தது. வாயுகுமாரனுன அனுமான், அத்தேரை நாசம்பண்ணிப் பின்னும் பல விருட்சங்களைக் கிளைகளுடனே பறித்தெடுத்து அரக்கர்களை ஒழிக்கலானுன். அரக்கர்கள் மரங்களினுல் தலைகள் முறிந்தவர்களாய், இரத்தவெள்ளம் பெருகப் பூமியில் விழுந்தார்கள்.

தூம்ராக்ஷன் வானரசேனைகளைத் துரத்தியடிப்பதைக் கண்டு, அனுமான் போர்க்குவருதல்.

அனுமான் அரக்கர்களை யழித்தல்.

வாயுபகவானது குமாரனுன அனுமான் ராக்ஷஸசேனையைப் பறக்கடித்துவிட்டு, மலையின் சிகரமொன்றைக் கையிலெடுத்துக்கொண்டு தூம்ராக்ஷனை நோக்கி யோடினுன். அவ்வாறு தன்னைநோக்கி விரைந்து வருகின்ற அனுமானைப்பார்த்து, வீரனுகிய தூம்ராக்ஷன் தனது கதையை ஓங்கியவனுகிக் கர்ச்சித்துக்கொண்டே அவனுக்கு எதிர்முகமாகச் செல்லலானுன். பிறகு அந்தத் தூம்ராக்ஷன் பல முட்களையுடைய அக்கதாயுதத்தை அனுமா

தூம்ராக்ஷனும் அனுமானும் பொருகையில் அனுமான் தூம்ராக்ஷனை வதைத்தல்.

னது தலையில் விழும்படி வெகுவேகமாக எறிந்தான். பயங்கரமான அக்கதையால் அனுமான் அடிபட்டனன். வாயுபகவானுக்கு ஒப்பான பலமுள்ளவனுகிய அனுமான், அவ்வடியை லட்சியஞ்செய்யாமலே, தூம்ராக்ஷனுடைய நடுத்தலையில் விழும்படி மலைச்சிகரமொன்றை யெறிந்தான். உடனே அவ்வரக்கனும், அச்சிகரத்தால் மோதப்பட்டு எல்லாவுறுப்புக்களும் சிதற, சிதறுண்ட பருவதம்போலப் புவியில் விழுந்தான். தூம்ராக்ஷன் மடிந்ததைக் கண்டதும், எஞ்சியிருந்த அரக்கர்கள் பயந்து இலங்கைக்குட் புகுந்துகொண்டார்கள். சத்துருவைக்கொன்ற சிரமம் மேலிடப்பெற்ற மகாத்துமாவும் வாயுகுமாரனுமான அவ்வனுமான், தனது சத்துருவைக் கொன்று, போரில் தான்பட்ட விரணங்களால் தனது உடம்பில் இரத்தமோட, எல்லா வானரர்களும் தன்னைக் கொண்டாடச் சந்தோஷமடைந்திருந்தான்.

ஐம்பத்துமூன்றுஞ் சருக்கம் :
வச்சிரதம்ஷ்ட்ரன் போர்க்கு வருதல்.

இராவணன் வச்சிரதம்ஷ்ட்ரனே யேவுதல்.

அரக்கர்களின் தலைவனுகிய இராவணன், தூம்ராக்ஷன் மாண்டதைக் கேள்விப்பட்டதும், வெகுகோபங்கொண்டு சர்ப்பம்போற் சீறி உஷ்ணமாகப் பெருமூச்சுவிட்டுக் கோபத்தாற் கலங்கினவனுய், மகாபலம் பொருந்திய சூரனுகிய வச்சிரதம்ஷ்ட்ரனே நோக்கிப் பின்வருமாறு கட்டளையிடலானன்:—"வீரனே! நீ ஏகுவாய்; அரக்கர்களாற் சூழப்பட்டவனுய், அங்குச்சென்று தசரதகுமாரனுன அவ்விராமனையும் சுக்கிரீவனையும் வானரர்களெல்லாருடனும் வதைசெய்வாய்" என்றன்.

மகாமாயாவியாகிய அந்த அரக்கனும், "அப்படியே" என்றுசொல்லி, சேனைகளுடன் பல சேனைத்தலைவர்களாற் சூழப்பட்டவனாய், வெகு சடிதியில் வெளிப்பட்டான்;

வச்சிரதம்ஷ்ட்ரன் பொருமாறு சேனையுடன் புறப்படுதல்.

யானைகளாலும் புரவிகளாலும் கோவேறு கழுதைகளாலும் ஒட்டகங்களாலும் பெருங் கொடிகளும் சிறுகொடிகளும் அழகாக விளங்குகிற பல இரதங்களாலும் விளங்கியும், அழகான கைவினையல்களையும் கிரீடத்தையும் அணிந்தும், தனது உடம்பிற் கவசந்தரித்தும், கையில் வில்லேயேந்தியும் விரைந்து புறப்பட்டான். பெருங் கொடிகளால் அலங்கரிக்கப் பெற்றதும் பொன்மயமாக விளங்குகின்றதுமான தன்து இரதத்தை வலஞ்செய்து, அச்சேனைத்தலைவன் ஏறினன். அரக்கர்களிற் சிறந்த காலாட்களான போர்வீரர்கள் தடிகள் தோமரங்கள் பல வகைச் சூலங்கள் உலக்கைகள் பேரீட்டிகள் பாசக்கயிறுகள் சக்திகள் பட்டஸங்கள் கத்திகள் சக்கரங்கள் கதைகள் கூரான கோடாலிகள் என்ற இவைபோன்ற ஆயுதங்களைக் கையிற்கொண்டும், எல்லாரும் அழகான வஸ்திரங்களை யுடுத்துக்கொண்டும், பெருங்களிப்புடன் அவனைத் தொடர்ந்து புறப்பட்டார்கள். மதத்தைப் பெருக்கிக்கொண்டு சஞ்சரிக்கும் மலைகள்போல விளங்கிய மதயானைகள், போரில் தேர்ச்சியடைந்து, அங்குசங்களையும் தோமரங்களையும் கையிற்கொண்ட வீரர்களால் ஏறப்பெற்றுச் சென்றன. அன்றியும், நல்லிலக்கணங்களமைந்த பல மூள்ள வேறு யானைகளும் சூரர்களால் ஏறிச் செல்லப் பெற்றன. அவ்வாறு புறப்பட்ட அந்தப் பெரிய ராக்ஷஸ சேனையானது, மழைக்காலத்தில் மின்னிக்கொண்டு கர்ச்சிக்கும் மேகக்கூட்டம்போல விளங்கிற்று. அச்சேனை, எவ்விடத்தில் அங்கதன் சேனபதியாக நியமிக்கப்பட்டிருந்தானோ, அந்தத் தென்திசைவாயில்வழியாக வெளிக்கிளம்பிச் செல்லலாயிற்று.

அப்போது அவர்கட்குப் பல தீ நிமித்தங்கள் தோன்றின. அப்போது மேகமற்ற ஆகாயத்திலிருந்து கொடிய கொள்ளிக்கட்டைகள் விழுலாயின. நெருப்புச்சுவாலைகளை வெளிக்கக்கிக்கொண்டு நரிகள் பயங்கரமாக ஊளையிடத்தலைப்பட்டன. அப்போது அரக்கர்களுக்கு நாசம் வந்ததென்பது புலப்படும்படியாக, கொடிய விலங்குகள் சத்தமிட்டன. யுத்தத்திற்குச் சென்ற போர் வீரர்கள் பயத்தால் மோகித்துக், காலிடறிப் பூமியில் விழுந்தார்கள்.

அங்கதனைநோக்கிச்சென்ற அரக்கசேனைக்குத் தோன்றிய தீ நிமித்தம்.

மகாபலம் பொருந்திய பராக்கிரமசாலியான அவ்வச்சிரதம்ஷ்ட்ரனும் இந்த அபசகுனங்களைப் பார்த்தும் அஞ்சாதவனாய், போர்புரிவதில் உற்சாகங்கொண்டு, வெகு தைரியமாக யுத்தத்துக்குச் சித்தமாகப் புறப்பட்டான். வெற்றியுடன் விளங்கிய வானரவீரர்கள், அவ்வாறு அவ்வரக்கர்கள் வந்ததைக் கண்டு, பத்துத்திசைகளும் நிரம்பும்படியாகப் பேரொலி செய்தார்கள். அப்பொழுது, கொடியவர்களாய்ப் பயங்கரமான உருவங் கொண்டு, ஒருவரையொருவர் வதைசெய்யக் கருதிய வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும் பெரும்போர் தொடங்கலாயிற்று. மிகுந்த உத்ஸாஹத்துடன் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து சில உறுப்புக்கள் அற்றவராக, சிலர் உடல் முழுதும் இரத்தம் பொசியப் பூமியில் விழலானார்கள். சில சூரர்கள், உழலைத் தடிகளைக் கொண்டு ஒருவரையொருவர் எதிர்த்தும், பல வகையஸ்திரங்களை ஒருவர்மேல் ஒருவர் பிரயோகித்தும் போரிற் பின்வாங்காமல் யுத்தஞ் செய்யலானார்கள். மரங்கள், மலைகள், அஸ்திரங்கள் என்ற இவைகள் கீழ் விழுவதனாலான பெருஞ்சத்தமானது, கேட்பவர்களின் மனம் இருபிளவாம்படி மிகவும் பயங்கரமாக அங்குத் தோன்றிற்று. தேர்ச்சக்கரங்களின் சத்தமும், விற்களின் தொனி

வானரர்க்கும் அரக்கர்க்கும் நடந்த போர்.

யும், சங்கங்கள் பேரிகைகள் மிருதங்கங்கள் என்ற இவற்றின் நெருங்கிய ஒலியும், அங்குக் கேட்கலாயின. சிலர் தமக்குத் தெரிந்த அஸ்திரங்களையெல்லாம் பிரயோகித்துவிட்டு, பிறகு, மற்போர் செய்யலானார்கள். போர்ச் செருக்கையுடைய வானரர்கள் சில அரக்கர்களைக் கைகளாலறைந்தும், கால்களாலுதைத்தும், முஷ்டிகளாற் குத்தியும், மரங்களால் மோதியும், முழந்தாட்களால் முட்டியும் உடல்பிளந்து இறக்குமாறு செய்தார்கள்; சில அரக்கர்களை, கற்களாற் பொடியாக்கினர்கள். வச்சிரதம்ஷ்ட்ரனும், பிரளயகாலத்தில் யமன் கைகளிற் பாசாயுதமேந்தி உலாவுவதுபோல, தனது அம்புகளால் வானரர்களை மிகவும் அச்சமுறுத்திக்கொண்டு போர்க்களத்திற் சஞ்சரிக்கலானான். பலவான்களும் அஸ்திரங்களை யுணர்ந்தவர்களும் பலவகைப் படைக்கலங்களை யுடையவர்களுமாகிய அரக்கர்கள், கோபம் பொங்கப் பெற்று வானரசைனியங்களை அப்போர்க்களத்தில் ஹிம்ஸிக்கலானார்கள்.

அரக்கர்கள் வானரர்களை வதைத்தல்.

போரில் அவ்விதமாக அரக்கர்களெல்லோரும் வானரர்களை வதைப்பதைப் பார்த்து, வாலியின் குமாரனும் இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரம முடையவனுமாகிய அங்கதன், தனக்கு இயல்பாகவிருக்குங் கோபத்தினும் இருமடங்கு கோபங்கொண்டவனாய், பிரளயகாலத்திப்போல விளங்கிக்கொண்டு, விருட்சங்களைப் பேர்த்து எடுத்து, கோபத்தினாற் கண்கள் சிவக்க, சிங்கமானது அற்பமிருகங்களை எளிதிலழிப்பதுபோல அரக்கர் கூட்டங்களெல்லாவற்றையும் மிகக்கடுமையாய் ஹிம்ஸிக்கலானான். அங்கதனுக்கு எதிரில்வந்து போர்புரிந்த அரக்கர்கள், எவ்வளவு பயங்கரமான பராக்கிரமமுள்ளவர்களாக இருந்தபோதிலும், வேரில் வெட்டப்பட்ட விருட்சங்கள் விழுவனபோலத் தங்கள் தலைகளறுபட்டுப் பூமியில் விழுந்தார்கள்.

அங்கதன் செய்த போர்.

தேர்களாலும் புரவிகளாலும் பலநிறமான துவசங்களாலும் இருதிறத்தாரது உடல்களாலும் இரத்தத்தாலும் முற்றிலும் மூடப்பட்ட போர்க்களமானது, அப்போது வெகு பயங்கரமாகக் காணப்பட்டது. ஆரங்கள் கைவளையல்கள் வஸ்திரங்கள் ஆயுதங்கள் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட அப்போர்க்களமானது, சரத்கால ராத்திரிபோல விளங்கிற்று. அங்கு, அந்தப் பெரிய ராக்ஷஸ சேனையானது, காற்றுற் சிதறுண்ட காளமேகம்போல, அங்கதனுடைய வேகத்தால் அப்போது நடுங்கலாயிற்று.

படிகளச் சிறப்பு.

ராக்ஷஸசேனையின் நடுக்கம்.

ஐம்பத்துநான்காஞ் சருக்கம்:
வச்சிரதம்ஷ்ட்ரன் வதை.

தனது சைனியம் மடிந்ததையும் அங்கதன் வெற்றி கொண்டதையும் கண்டு, மகாபலம் பொருந்திய வச்சிரதம்ஷ்ட்ரனென்ற அரக்கன், பெருஞ்சினங்கொண்டவனாய், இந்திரபகவானுடைய இடிபோலச் சத்தஞ் செய்யும் தனது பயரங்கமான வில்லை நாணேற்றி, டங்காரஞ்செய்து வானரசேனையின்மீது சரமாரிபொழிந்தான். சூரர்களாய்ச் சிறந்தவர்களான அந்த ராக்ஷசர்களும், இரதங்களிலேறி, பலவிதமான படைக்கலங்களையேந்தி, முனைமுகத்தில் நின்று அப்போது போர்புரியலானார்கள். வானரவீரர்களிற் சூரர்களெல்லாரும் அப்பொழுது நாற்புறத்திலும் ஒன்றுசேர்ந்து, கைகளில் மலைகளையேந்திக் கொண்டு போர்புரியலானார்கள். அந்தப்போரில் அரக்கர்கள், ஆயிரக்கணக்கான படைக்கலங்களை அப்போது

அரக்கர்கட்கும் வானரர்கட்கும் கைகலந்த போர்.

அந்த வானரவீரர்களின்மேல் மிகவும் எறிந்தார்கள். மத யானைகளுக்கு ஒப்பாய்ச் சிறந்த வீரர்களான வானரர்க ளும், அரக்கர்களின்மேல், மலைகளையும் மரங்களையும் பெரும் பாறைகளையும் வீசினர்கள். இவ்வாறு பின்வாங் காது பொருகின்ற சூரர்களான அரக்கர்களுக்கும் வான ரர்களுக்கும் போர் மேன்மேல் வளரலாயிற்று. சிலர் தலையறுபடவும், சிலர் கால்கள் கைகள் முறியவும், சிலர் தங்கள் தேகங்களில் படைக்கலங்களால் ஊடுருவப்பட்டு இரத்தவெள்ளம் ஓடவும், இவ்வாறு வானரர்களும் அரக் கர்களும் தரையிற் சாய்ந்தார்கள். அவர்களைக் கழுகுகளும் பருந்துகளும் காகங்களும் நரிகளும் சூழ்ந்துகொண்டன. பயந்தவர்களைப் பின்னும் பயமுறுத்துமாறு கவந்தங் கள் எழுந்தன. சிலர் தோள் கை தலைகள் அறுபட்டும், சிலர் உடம்பே அறுபட்டும் கிடந்த வானரர்களும் அரக் கர்களும் தரையில் விழலானார்கள்.

வானரர்களின் வெற்றி.

அப்பால், வச்சிரதம்ஷ்ட்ரன் பார்த்துக்கொண்டி ருக்கும்போதே வான்ரசேனை கலக்கிய தனல் இராட்சசசேனை சிதறிற்று. பயத் தால் நடுக்கமுற்று வானரர்களால் வதைக் கப்படும் அரக்கர்களைக் கண்டு, மிக்க பராக்கிரமசாலி யான வச்சிரதம்ஷ்ட்ரன், கோபத்தாற் கண்கள் சிவக்க வானரசேனை அஞ்சுமாறு கையும் வில்லுமாகப் புகுந்து,

வச்சிரதம்ஷ்ட் ரன், வானரசேனை யழித்தல்.

கழுகின் சிறகைக் கட்டிய நேராகப் பாயும் அம்புகளால் அவ்வானரசேனையைப் பிள க்கலானன். மகா வீரனாகிய வச்சிரதம்ஷ்ட் ரன், பெருஞ் சினங்கொண்டு ஒருமுறை அம்பைத் தொடுத்துவிடுகையிலேயே ஏழு எட்டு ஒன்பது ஐந்து வானரர்கள் விழுக்காடு கொல்லலானன். தங்கள் கழுத்து அறுபடவே, எல்லா வானரர்களும் நடுநடுங்கிப் பிரமதேவனைப் பிராணிகள் அடைவதுபோல; அங்கதனை நாடியோடலானார்கள். பிறகு வாலிகுமாரனான அங்கத

னும் அப்போது வானரசேனை முறிந்ததைக் கண்டு வெகு கொடுமையுடன் தன்னைப் பார்க்கும் வச்சிரதம்ஷ்ட்ரனைத் தானும் பெருஞ்சினத்துடன் ஒரு பார்வை பார்த்தான். வச்சிரதம்ஷ்ட்ரனும் அங்கதனும் வெகுகோபங் கொண்டவர்களாய், புலியும் யானையும் போல ஒருவரை யொருவர் எதிர்த்துப் போர்புரியலானார்கள். பிறகு, மகாபலம் பொருந்திய அவ்வரக்கன், ஆயிரம் பாணங்களை அங்கதனது மர்மஸ்தானங்களில் விடுத்து, மதயானையைத் தோமரங்களாற்புடைப்பதுபோல அவனைப் பிளக்கலானான். மஹாபராக்கிரமசாலியான அவ்வாலிகுமாரனும், தனது உடல்முழுதும் இரத்தவெள்ளம்பெருக, ஒரு பெரியவிருட்சத்தை மிக்க வலிமையுடன் அவ்வரக்கன் மீது எறிந்தான். அவ்வாறு விருட்சம் தன்மேல் வருவதைக் கண்டதும், அவ்வரக்கன், பரபரப்பில்லாமலே, அதைப் பாணங்களாற் பிளந்தான்; அந்த விருட்சமும், பலதுண்டங்களாக வெட்டுண்டு தரையில் விழுந்தது. அவ்வானரவீரன், வச்சிரதம்ஷ்ட்ரனுடைய வல்லமையைப் பார்த்து, பெரிய மலையொன்றை யெடுத்து அவன் மேல் வீசி அட்டகாசஞ்செய்தான். அம்மலை தன்மேல் வருவதைக் கண்ட மகாவீரனாகிய அரக்கன், சிறிதுங் கலங்காமல், கதாயுதமும் கையுமாகத் தனது இரதத்தைவிட்டுக் குதித்துத் தரையில் நின்றான். அங்கதனால் எறியப்பட்ட அம்மலையும், அப்போது அவ்வரக்கன்தேரை, சக்கரம் குடம் குதிரை என்ற இவைகளுடன் நாசம் பண்ணிற்று. அங்கதன், பல விருட்சங்கள் நிரம்பி மிகப் பெரியதான வேறொருமலையைப் பிடுங்கி, வச்சிரதம்ஷ்ட்ரனது சிரசின் மேலெறிந்தான். அது தன்மேல்விழுந்ததும், அவ்வச்சிரதம்ஷ்ட்ரன், இரத்தத்தைக்கக்கிக்கொண்டு மூர்ச்சையடைந்து ஒரு முகூர்த்தகாலம் உணர்ச்சியற்றுப் பெருமூச்சு

வானரசேனைகொல்லை கெட்டு அங்கதனை யடைதல்.

அங்கதனுக்கும் வச்சிரதம்ஷ்ட்ரனுக்கும் நிகழ்ந்த போர்.

டன் தனது கதாயுதத்தைப் பற்றியபடியே நின்றான்; அப்போது, அங்கதகுமாரன், அவனருகிற்சென்று, அந்தக் கதாயுதத்தைக் கவர்ந்துகொண்டான். பிறகு, அவ்வரக்கன், மூர்ச்சைதெளிந்து, கதாயுதத்துடன் தனக்கு முன்நின்ற அங்கதனைப்பார்த்துப் பெருஞ்சினங்கொண்டு, அவன் மார்பில் ஓரறையறைந்தான். அப்போது அங்கதகுமாரன் அக்கதையைவிட்டு, அவனோடு முஷ்டியுத்தஞ் செய்யத் தலைப்பட்டான். அக்காலையில் வானரன் அரக்கன் என்ற அவ்விருவரும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டார்கள். மிகவும் வல்லமை காட்டிய அவ்விருவரும், அடித்துக்கொள்வதனால் அவர்களது உடலெங்கும் இரத்தம் பொழியக் கொஞ்சஞ் சிரம்ம் மேலிடப் பெற்றவர்களாய், அங்காரகபுத்திரனைப்போல ஆனார்கள். அதன் பிறகு, மிக்க பலசாலியாகிய அங்கதன், மலர்களும் கனிகளும் நிறைந்த பெரிய விருட்சமொன்றைத் தனது கையிற் பற்றிநின்றான்; வச்சிரதம்ஷ்ட்ரனும் அவ்வாறே நின்றான். அங்கதன், எருத்தின் தோலாற் செய்யப் பெற்ற கேடகத்தையும், வடிவத்தாற் பெரியதாய் அழகியதாய்ப் பல சிறியமணிகள் கட்டப்பெற்று உறையுடன் கூடியதான ஒரு கத்தியையும் எடுத்துக்கொண்டு நின்றான்; வச்சிரதம்ஷ்ட்ரனும் அவ்வாயுதங்களைக் கைக்கொண்டு நின்றான். மிக்கரோஷங்கொண்டிருந்த அவ்வானரவீரனும் அரக்கவீரனும், மண்டலம் முதலிய பலநிலைகளில் நின்று, ஒருவரையொருவர் வெல்லவிரும்பி, தயையென் பதேயில்லாமல் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டார்கள். அவ்விருவரும், இரத்தத்தைப்பெருக்கும் புண்களால், புஷ்பித்த முருக்கமரங்கள்போல விளங்கினார்கள். அவ்வாறு போர்புரிந்த அவ்விருவரும் சிறிதுகாலைத்துத் தங்கள் முழங்கால்களைப் பூமியில் ஊன்றி நின்றார்கள்.

ஒருகணப்பொழுதிற்குள், வாலியின் புதல்வனும் மகாபலசாலியும் வானரர்கட்குள் சிறந்தவீரனுமான அங்கதன்

தடியால் தட்டப்பட்ட சர்ப்பம்போற் சீறி, தனது கண்களில் நெருப்புப் பொறி பறக்கக் கிளம்பி, வெண்மையாகவும் கூராகவுமிருந்த கத்தியால் வச்சிரதம்ஷ்ட்ரனுடைய பெரிய தலையை வெட்டினான். உடனே கோபத்தாற் சுழல்கின்றகண்களையுடைய அழகிய வச்சிரதம்ஷ்ட்ரனது தலையும் அறுபட்டுப் பூமியில் விழுந்தது.

அங்கதன் வச்சிரதம்ஷ்ட்ரனைக் கொல்லுதல்.

வச்சிரதம்ஷ்ட்ரன் வதைக்கப்பட்டதைக் கண்டதும், அரக்கர்கள், அச்சத்தால் ஒன்றுந் தோன்றாதவர்களாய், தங்களை வானரர்கள் தூரத்தி வதைக்க, வெகு பரிதாபத்துடன் வெட்கித் தலைகுனிந்தபடியே நடுநடுங்கி யோடி இலங்கைக்குட் புகலானார்கள்.

அரக்கர் அஞ்சியோடிவிடுதல்.

அவ்வண்ணம் வாலியின் குமாரனான இந்திரனைப் போன்றவல்லமையுள்ள அந்த அங்கதன், வஜ்ரதம்ஷ்ட்ரனை வதைத்தபிறகு, எல்லா வானரர்களாலும் புகழப்பட்டவனாய், தேவர்களின் நடுவில் தேவேந்திரன் விளங்குவதுபோல, வானரசேனையின் நடுவில் வெகு சந்தோஷத்துடன் விளங்கினான்.

அங்கதன் மகிழ்ந்திருத்தல்.

ஐம்பத்தைந்தாஞ் சருக்கம் :
அகம்பனன் போர்க்கு வருதல்.

வாலிகுமாரனால் வச்சிரதம்ஷ்ட்ரன் வதைக்கப்பட்டதை இராவணன் கேட்டதும், வருத்தமும் கோபமும் ஒருங்கேகொண்டு, தனக்கருகில் அஞ்சலிபண்ணிக்கொண்டு நின்ற சேனாபதியான ப்ரஹஸ்தனை நோக்கிப் பின்

வருமாறு சொல்லலானுன்:— "ஒருவராலும் அணுக முடியாமல் கொடிய பராக்கிரமமுள்ள அரக்கர்கள் ஆயுதங்களெல்லாவற்றிலும் மிகத்தேர்ந்த அகம்பனனே முன்னிட்டுக் கொண்டு, சடிதியில் போருக்குப் புறப்படுக. அகம்பனனே, முனைமுகத்தில் தனது பகைவர்சேனையை யழிப்பதிலும் தனதுசேனையைப் பாதுகாப்பதிலும் வல்லமையுள்ள சேனபதி; எனது க்ஷேமத்தையே எப்போதும் நாடுபவன்; எப்பொழுதும் போரில் உற்சாகமுள்ளவன். இவன் காகுத்ஸ்தர்களையும் மகாபலம்பொருந்திய சுக்கிரீவனையும் வெல்வான். பகைஞரைத் தவிக்கச்செய்யவல்ல இவன், மற்றைக் கொடிய வானரர்களையும் வதைப்பான்" என்றான்.

இராவணன் அகம்பனனைப் போர்செய்யச் செல்லுமாறு பிரஹஸ்தனிடம்சொல்லியனுப்புதல்.

அவ்வாறு இராவணனிட்ட கட்டளைப்படியே, எளிதில் வல்லமையைக்காட்டவல்ல மகாபலம்பொருந்திய ப்ரஹஸ்தன், அப்போது சேனையைத் துரிதப்படுத்தினன். சேனபதியின் தூண்டுதலின்மேல், பலவகைப் படைக்கலங்களையுடையவர்களும் கொடுமையான கண்களையுடையவர்களும் பயங்கரமான தோற்றமுள்ளவர்களுமான அரக்கவீரர்கள், புறப்பட்டார்கள். மேகம்போலக் கறுத்த பெருவடிவங்கொண்டும் மேகம்போற் கர்ச்சித்துக்கொண்டு மிருக்கின்ற அகம்பனன், தங்கத்தாற் செய்யப்பட்ட குண்டலங்களை யணிந்துகொண்டு மிக்க விசாலமான தேரின்மேல் ஏறி, பயங்கரமான அரக்கர்கள் புடைசூழப் போர்க்களத்தை நோக்கிப் புறப்பட்டான். பெரும்போரிலும் தேவர்களாலும் சிறிதும் அசைக்கமுடியாதவனுதலால் அகம்பனனென்று பெரும் பெயர்பெற்ற அவன், தேவர்களின் நடுவிற் சூரியன் விளங்குவதுபோலத் தனது காந்தியால் அரக்கர்களின் நடுவில் விளங்கினன்.

இராவணன் கட்டளைப்படி அகம்பனன் பல அரக்கரோடுபோர்க்குச்செல்லுதல்.

போர்புரியுமாறு புறப்பட்ட அவ்வரக்கனதுதேரிற் கட்டியிருந்த குதிரைகள், ஒருகாரணமுமில்லாமல் எளிமையடைந்து நின்றன; போரிற் குதூகலங் கொண்டுள்ள அவ்வீரனுடைய இடக்கண் துடிக்கலாயிற்று; அவன் முகத்தினொளி குன்றிற்று; அவன் பேச்சும் தழுதழுத்தது; அகாலத்திலும், மேகங்கள் தோன்றிச் சூரியனை மறைத்துநிற்க, புயல்காற்றுக் கடுமையாக வீசலாயிற்று. பட்சிகளும் மிருகங்களும் பயங்கரமாகவும் விகாரமாகவும் மிகக்கொடிய குரலாற் கத்தின. ஆனால், சிங்கத்தின்பிடரி போன்றதோள்களையுடையவனும்புலிபோன்றபராக்கிரமமுள்ளவனுமான அவ்வீரன், அவ்விதமான உத்பாதங்களை லக்ஷியஞ் செய்யாமலே, போர்க்களத்தைக்குறித்துச் சென்றான். மற்றை யரக்கர்களுடன் அவ்வாறு போருக்குச் சென்றபொழுது, அவ்வரக்கன், கடலுங் கலங்குமாறு பெருஞ்சத்தஞ்செய்தான். அச்சத்தத்தால் வானரர்களின் பெருஞ்சேனை நடுநடுங்கி, மரங்களையும் மலைகளையும் பிடுங்கிக் கைக்கொண்டு யுத்தத்திற்குச் சித்தமாகநின்றது. இராமன்பொருட்டாகவும், இராவணன்பொருட்டாகவும் தமதுயிரையும் விடத் துணிந்திருந்த வானரர்களுக்கும் அரக்கர்களுக்கும் பெரும்போர் தொடங்கிற்று. எல்லோரும் வெகு பலம்பொருந்திய சூரர்கள்; எல்லோரும் மலைபோலப் பருத்த சரீரமுள்ளவர்கள். அரக்கர்களும் வானரர்களும் ஒருவரையொருவர் அழிக்கவிரும்புபவர்கள். மிக்கபலசாலிகளான் அவ்வீரர்கள், பெரும்போரிலே கோபத்தால் ஒருவரைநோக்கி ஒருவர் கர்ச்சித்த சத்தமானது, மிகவும் அதிகமாகக் கேட்கலாயிற்று. வானரர்களும் அரக்கர்களும் போர் செய்தபொழுது அவர்கள்காலடியிலிருந்து கிளம்பிய செந்

அகம்பனனுக்குத்தோன்றிய நிமித்தங்கள்.

நிமித்தங்களை லட்சியஞ் செய்யாமற் சென்று அகம்பனன் பெரும் போர் புரிதல்.

வானரர்க்கும் அரக்கர்க்கும் போர்.

தூளியானது, வெகுபயங்கரமாகப் பத்துத்திசைகளிலும் மறைத்துக்கொண்டு மிகுதியாகப் பறக்கலாயிற்று. வெண் பட்டுப்போலத் தோன்றிய தூளியால் மறைக்கப்பட்டு, ஒருபிராணியாவது ஒன்றையொன்று பார்ப்பதற்குங்கூட வில்லை. அவ்வண்ணம் தூளி கம்மிக்கொண்டபொழுது, 'இது கொடி, இது கொடிச்சீலை, இது கவசம், இது குதிரை, இது ஆயுதம், இது தேர்' என்று ஒன்றையாவது தெரிந்து கொள்ளவும் முடியாமலிருந்தது. நெருங்கிய அப்போரில் எதிர்த்து ஓடிக்கொண்டு கொக்கரிப்பவரின் சத்தமட்டும் கேட்கலாயிற்றேயன்றி, அவரது உருவம் சிறிதேனும் புலப்படவில்லை. அப்போது, இருள் மண்டியிருந்ததனால், கோபமடைந்திருந்த வானரர்கள் வானரர்களையே கொல்லும்படியும், அரக்கர்கள் அரக்கர்களையே கொல்லும் படியும் ஆயிற்று. வானரர்களும் அரக்கர்களும், தம் இனத்தார்களையும் பகைவர்களையும் அழிப்பதனால் அப்போர்க்களத்தை இரத்தத்தால் நனைந்ததாகவும், இங்குமங்கும் அடிவைப்பதனால் சேறு நிரம்பியதாகவும் செய்தார்கள். பிறகு, இரத்தவெள்ளத்தாற் பூமி நனையவே, தூளி அடங்கிற்று. போர்க்களமும், மாண்ட பிணங்களால் மூடப்பட்டதாகக் காணப்பட்டது. மரங்கள், ஈட்டிகள், பாறைகள், கத்திகள், கதைகள், உழலைத்தடிகள், இருப்புலக்கைகள் என்ற ஆயுதங்களால் வானரர்களும் அரக்கர்களும் ஒருவரையொருவர் பராக்கிரமத்துடன் அடித்துக்கொள்ளலானார்கள். மலைக்கு ஒப்பான உருவம் அமைந்து கொடுஞ்செயல் புரியும் வானரர்கள், உழலைத்தடிக்கு ஒப்பான தங்கள் கைகளால் முனைமுகத்தில் அரக்கர்களை யடித்தார்கள். அரக்கர்களும், வெகு கோபங்கொண்டவர்களாய், ப்ராஸம் தோமரம் என்ற இவ்வாயுதங்களைத் தங்களதுகைகளில் எடுத்துக்கொண்டு, மிகவும் அச்சத்தை விளைக்கின்ற அப்படைக்கலங்களால் வானரர்களை யழித்தார்கள். அப்பொழுது அரக்கர்சேனைத்தலைவனன அகம்பனனும், வெகுகோ

பங்கொண்டவனுய், பயங்கரமான வல்லமையமைந்த அரக்கர்களெல்லாரையும் உத்ஸாஹப்படுத்தினுன். வானரர்களும், எதிர்த்துச் சென்று அரக்கர்களுடைய ஆயுதங்களையெல்லாம் பிடுங்கி, பெருமரங்களாலும் பெருங்கற்களாலும் அவர்களைப் பிளக்கலானுர்கள். இச்சமயத்தில், வானரவீரர்களான சுமுதன் நளன் மைந்தன் துவிவிதன் இவர்களெல்லாரும், தங்கள் வல்லமையை முற்றிலும் காண்பிக்கலானுர்கள். மிக்கவேகமுள்ள அவ்வானரசேனுதிபதிகள், அப்போர்க்களத்தில் மரங்களைக்கொண்டு விளையாட்டாகவே அரக்கர்களை அழித்தார்கள்; வானரர்களெல்லாரும் கூட்டங்கூட்டமாகத் திரண்டு, அரக்கர்களைப் பொடியாக்கினுர்கள்.

ஐம்பத்தாரூஞ் சருக்கம் :
அகம்பனனது வதம்.

அவ்வாறு வானரவீரர்கள் முனைமுகத்தில் வெகு ஆச்சரியமாகப் போர்புரிந்ததை அகம்பனன் பார்த்துப் பெருஞ்சினங்கொண்டான். தனது சத்துருக்கள் செய்த கொடுமையைப் பார்த்து மூண்ட கோபத்தால் மெய்ம்மறந்தவனுய், அகம்பனன், உத்தமமான தனது வில்லை நாணேற்றி ஒலிசெய்து, தனது தேர்ப்பாகனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுன்: — "சாரதியே! எவ்விடத்தில் அநேக வானரவீரர்கள் அரக்கர்கள் பலரையும் போரிற்கொல்லுகின்றுர்களோ, அவ்விடத்தில்தானே சடிதியில் இந்த ரதத்தைச் செலுத்துவாய்; அங்கே, பயங்கரமான தோற்றமமைந்த வெகுபலசாலிகளான வானரர்கள் என்கண்கள் முன்பாக மரங்களையும் மலைகளையும் ஆயுதங்களாகக்

அகம்பனனது கடும் போர்.

கொண்டு நிற்கின்றார்கள். நான், போரில் மிக்க பெயர் பெற்ற இவர்களைக் கொல்ல விரும்புகின்றேன்; இவர்கள் நமது அரக்கசேனையை முற்றிலும் அழித்துவிட்டார்கள்" என்றான். அதன் பிறகு, வாயுவேகமாக ஓடுங் குதிரைகள் பூட்டிய இரதம் அவ்வானரசேனையை அணுகினதும், அதிரதர்க்குட் சிறந்தவனான அகம்பனன், பாணங்களைப் பிரயோகித்து வெகுகோபத்துடன் வானரர்களை வதைக்கலானான். வானர்களால் அவன்முன்பு நிற்கவும் முடியவில்லை யென்றால், அவனுடன் அவர்கள் போர்புரிந்ததாக எவ்வண்ணஞ் சொல்லலாம்? அகம்பனன் விடுத்த பாணங்களால் அவர்கள் எல்லோரும் சிதைந்து ஓடலானார்கள்.

அனுமான் அங்குத்தோன்றி, வானரர்களுடன் சேர்ந்து, அகம்பனனோடு பொருதல்.

அப்பொழுது அகம்பனன்கையிற் சிக்கி மடிகின்ற தன்னினத்தாரைப் பார்த்து மிக்கவலிமையுள்ள அனுமான் அங்குவந்து தோன்றினான். அதிகபலம்பொருந்திய அவ்வானரவீரனைக் கண்டதும், வானரசேனைதிகளெல்லோரும் ஒன்றுசேர்ந்து போரில் ஊக்கங் கொண்டவர்களாய், அவனைச் சூழ்ந்து நிற்கலானார்கள். அனுமான் வந்து சேர்ந்ததைக் கண்டு, அவனையடைந்தமாத்திரத்தில், அவ்வானரவீரர்கள் தாங்களும் பலசாலிகளானார்கள். மலைபோன்ற தோற்றமுள்ள அனுமான் வந்துநின்றதை அகம்பனன் பார்த்து, மகேந்திரன் மழையைச்சொரிவதுபோல அம்புகளைப் பொழிந்தான். மகாபலசாலியான அனுமானோ, தனது உடம்பின்மேற் பாய்ந்த கூரானபாணங்களைக் கொஞ்சமேனும் லக்ஷியம்பண்ணுமல், அகம்பனனைக் கொல்லுமாறு ஆலோசித்தான். அவ்வாறு கருதிய அனுமான் பூமி நடுநடுங்க அவ்வரக்கனைநோக்கி விரைந்து ஓடினான். கர்ச்சித்துக்கொண்டு மிக்க காந்தியால் விளங்குகின்ற அனுமானது உருவம், அப்பொழுது கொழுந்துவிட்டெரியும் தீப்

போலக் கண்கொண்டுபார்க்க முடியாதபடி உக்கிரமாகப் புலப்பட்டது. தனது கையில் ஓர் ஆயுதமு மில்லாததை அனுமான் நினைந்து, மிக்ககோபங்கொண்டு, அருகிலுள்ள மலையொன்றை வெகுவேகமாகப் பிடுங்கிக்கொண்டான். அப்பெருமலையை அனுமான் தனது கைகளிலொன்றுற் பிடித்துக்கொண்டு, பெருஞ்சத்தமிட்டுச் சுழற்றலானான். அம்மலையைச் சுழற்றிக்கொண்டே அவ்வீரன், முற்காலத்தில் வச்சிராயுதத்தை யேந்திக்கொண்டு நமுசியை இந்திரபகவான் துரத்தியதுபோல, அரக்கவீரனை அகம்பனை எதிர்த்துத் துரத்தலானான். தன்னை நோக்கி யெறியும் அம்மலையை அகம்பனன்பார்த்து, தூரத்திலிருந்தபடியே தனது அர்த்தசந்திரபாணங்களைப் பிரயோகித்துப் பிளந்தெறிந்தான். அப்பருவதசிகரம் அரக்கனது பாணங்களால் அவ்வாறு பிளக்கப்பட்டு விழுந்ததை வெகுரோஷமும் கர்வமுமுள்ள தேஜஸ்வியாகிய அனுமான் பார்த்து, வெகுகோபங்கொண்டவனாய், அசுவகர்ணமென்ற ஒரு விருட்சத்தைச் சடிதியிற் பிடுங்கி யெடுத்துக்கொண்டு, மலைபோல் ஓங்கி வளர்ந்துநின்ற பெருங்கிளைகளமைந்த அதனை நகைத்துக்கொண்டே வெகு குதூகலத்துடன் அப்போர்க்களத்திற் சுழற்றினான். மிக்க சினமடைந்த அனுமான், அப்போது தான்செல்லும்விசையால் மரங்கள் முறியுமாறும் பூமிபிளக்குமாறும் விரைந்துசென்றான். மகாபுத்திமானாகிய அனுமான், யானைப்பாகர்களுடன் யானைகளையும் தேர்ப்பாகர்களுடன் தேர்களையும் ராக்ஷஸ பதாதிகளையும் வதைத்தான். காலன்போலச் சீறிக்கொண்டு போரில் தங்களுயிரை வதைக்கின்ற அனுமானைப் பார்த்து, அரக்கர்கள் நடுநடுங்கி யோடலானார்கள். வெகுகோபங்கொண்டும் அரக்கர்களை நடுங்கச்செய்துகொண்டும் தன்னைநோக்கி வருகின்ற அனுமானை அகம்பனன் கண்டு தானும் மிக்ககோபங்கொண்டு கர்ச்சித்தான். அன்றியும், அவன், கூராய்த் தேகத்தைப்பிளக்கத்தக்க பதினான்கு பாணங்களை

மகாவீரனுகிய அனுமான்மீது பிரயோகித்தான். அவ் வண்ணம் தனது உடம்பிற் பலபாணங்கள் பொத்திக் கொண்டிருந்தபொழுது, அனுமான் மரங்கள் அடர்ந்து வளர்ந்து நிற்கும் தாழ்வரைபோலக் காணப்பட்டான். அன்றியும், பெரிய உடலும் மிக்கபலமும் வெகுகம்பீரமு மமைந்த அவ்வானரவீரன், புஷ்பித்த அசோகமரம் போலவும், புகையற்றுப்பிரகாசிக்குந் தீப்போலவும் விளங் கினன்.

பிறகு, அனுமான், மற்றொரு மரத்தைப் பிடுங்கி, அதை வெகுவேகமாகச் சுழற்றி அரக்கவீரனை அகம் பனது தலையின்மேல் மோதினன். அவ்வாறு வானர வீரனை அவ்வனுமான், மிக்ககோபத்து டன் அவ்வரக்கனை அடிக்கவே, அவன் கீழ்விழுந்து மடிந்தான்.

அகம்பனன் இறத்தல்.

வீரனுகிய அகம்பனன் மடிந்து கீழே விழுந்துகிடப் பதை அரக்கர்களெல்லாரும் கண்டு, பூகம்பத்தால் விருட் சங்கள் நடுங்குவனபோல அச்சத்தால் நடு ங்கினர்கள். உடனே, தோல்வியடைந்த அவர்கள், தங்கள் ஆயுதங்களை எறிந்து விட்டு, நடுநடுங்கி, வானரர்கள் தங்களைத் துரத்த இலங் கையைநோக்கி யோடலானர்கள். தோல்வியடைந்த அவ் வரக்கர்கள், தலைமயிர் அவிழ்ந்து புரள, மனங்கலங்க, மானங்குலைய, கவைப்பால் உடம்புமுழுதும் வேர்வைநீர் பெருகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு ஓடினர்கள். மிக வும் அறிவுகலங்கிய அரக்கர்கள், ஒருவர்மேல் ஒருவர் உராய்ந்துகொண்டும், எங்கு வானரர்கள் துரத்துகின்றார் களோ வென்று அடிக்கடி திரும்பிப்பார்த்துக்கொண்டும் பெரும்பயத்துடன் இலங்கைக்குள் நுழைந்தார்கள்.

அரக்கர்கள் அஞ்சியோடுதல்.

அவ்வரக்கர்கள் இலங்கைக்குள் புகுந்தபிறகு, மகா பலம் பொருந்திய எல்லாவானரர்களும் ஒருங்குசேர்ந்து,

அனுமானைக் கொண்டாடினார்கள். சத்துவகுணம் பெற்றவனான அனுமானும், பெருமகிழ்ச்சியடைந்து அவரவர்கட்குத் தக்கவாறு எல்லாவானரர்கட்கும் உசிதமான மறுமொழி கூறிக் களித்தான். வெற்றிபெற்ற வானரர்கள், தங்கள் முழுவல்லமையைக்கொண்டு அட்டகாசம்பண்ணினார்கள்; பின்னும் உயிருடனிருந்த அரக்கர்களைப் பிடித்திழுத்து வதைக்க ஆரம்பித்தார்கள். அனுமான், பெருந்திரளான அரக்கர்களைக் கொன்றதனால் வீரனென்று பெயர்பெற்று, போர்முகத்திற் பகைவரையழிக்க வல்ல மிகக்கொடிய பலியென்ற அசுரனை அடக்கியதனால் விஷ்ணுபகவான் கீர்த்திபெற்றதுபோல விளங்கினான். அப்பொழுது, தேவர்களும், இராமரும், மிக்கபலசாலியான இலட்சுமணரும், சுக்கிரீவன் முதலான வானரவீரர்களும், மகாபலம் பொருந்திய விபீஷணரும், அனுமானைப் புகழ்ந்தார்கள்.

யாவரும் அனுமானைக் கொண்டாடுதல்.

ஐம்பத்தேழாஞ் சருக்கம்:
பிரஹஸ்தன் போரிடச் செல்லுதல்.

இராவணன், அகம்பனன் போரில் வதைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டு, வெகுகோபங்கொண்டு, கொஞ்சம் பரிதாபமான முகத்துடன், தன்னருகிலிருந்த மந்திரிமார்களைப் பார்த்தான். அவ்விராவணன் சிறிதுநேரம் தனக்குள்ளே ஆலோசித்துப் பிறகு மந்திரிகளுடன் கலந்து ஆலோசனை செய்துவிட்டு, அன்றைக் காலையில், தனது சேனை அணிவகுக்கப்பட்டுநிற்பதைக் காணுமாறு இலங்கையைச் சுற்றிவந்தான். கொடிகள் நாற்புறத்திலும் பறக்க விளங்கிக்கொண்டிருந்த அம்மகாநகரம், அரக்கக் கூட்டங்களாற் பாதுகாக்கப்பட்டும் பலசேனைவகுப்பாற் சூழப்பட்டுமிருப்பதைக் கண்டான். அந்நகரம் பகைஞரால் முற்

இராவணன் மந்திராலோசனை செய்து நகரைச் சுற்றிப்பார்த்தல்.

றுகைசெய்யப்பட்டிருப்பதை ராக்ஷஸராஜனை அவ்விரா வணன் கண்டு, அக்காலத்துக்குத் தக்கபடி, யுத்தத்திற் சமர்த்தனை பிரஹஸ்தனைப் பார்த்துச் சொல்லலா னான்:— "போரில் வல்லவனே! காற்புறங்களிலும் பகை வரால் முற்றுகை யிடப்பட்டும், எதிர்பாராமலே உபத் திரவிக்கப்பட்டுமுள்ள இந்நகரத்துக்கு, யுத்தத்தைத்தவிர வேறு தப்பும்வழியைக் காணேம். நான், அல்லது கும்ப கர்ணன், அல்லது நமது சேனுபதியாகிய நீ, அல்லது இந்திரஜித்து, அல்லது நிகும்பன் இவர்களில் ஒருவர் தான் இந்நகரத்தைச் சத்துருபயத்திலிருந்து நீக்கிப் பாது காக்கும் பாரத்தை வகிக்கத்தக்கவர்கள். ஆகையால், விரைவாக, நீ இச்சைனியம் எல்லாவற்றையும் உடன் அழைத்துக்கொண்டு, வெற்றி பெறுதற் பொருட்டு, அவ்வானரசேனையைநோக்கிச் செல்லுவாய். நீ புறப்பட்டமாத்திரத்தில் அரக்கர்கள் செய்யும் அட்டகாசத்தை, ஓரேயிடத்திற்சேர்ந்திருக்கும் இயல்புள்ள குணமில்லாத அவ்வானரசேனை, கேட்டதும், ஓடிவிடும். வானரர்களோ தைரியமற்றவர்கள்; கட்டுக்கு அடங்காத வர்கள்; உறுதியற்ற மனமுள்ளவர்கள்; ஆகையால், நீ செய்யும் ஆரவாரத்தைக் கேட்டு, யானைகள் சிங்கத்தின் கர்ச்சனையைக்கேட்டதும் ஓடிவிடுவதுபோல ஓடிவிடுவார் கள். பிரகஸ்தனே! அவ்வண்ணம் வானரர்கள் ஓடி விட்டதும், இராமலக்ஷ்மணர்கள் ஒருவகையுதவியுமின்றித் தாமாகவே உனது வசத்திற் சிக்கிக்கொள்வார்கள். போர் புரிந்தால் வெற்றியைப்பெற்றாலும் பெறலாம்; புரியா விட்டாலோ, பகைவரால் உயிர்மாள்வது நிச்சயம்; ஆத லால், ஆபத்துத் தோன்றுவது ஸந்தேஹமாயிருக்கும் போரே புகழைத் தருவதாகும்; ஸந்தேஹமில்லாமல் ஆபத்தை யுண்டாக்கக் கூடிய தாகையால், போர்செய் யாது வாளா இருத்தல் ஒருபோதும் நன்மையைப் பய

இராவணன் பிரஹஸ்தனைப் போர்புரியச் செல்லுமாறு ஏவுதல்.

வாது. இவ்விஷயத்தில், உனது எண்ணம் அநுகூல மோ, அல்லது பிரதிகூலமோ? சொல்வாயாக" என்றான்.

இராவணன் இவ்விதமாகக் கூறினதும், சேனபதியான பிரகஸ்தன், உசநஸ் என்பவர் அசுரேந்திரனை நோக்கிப் பேசுவதுபோல, அவ்விராவணனைநோக்கி மறுமொழிசொல்லலானான் :— "வேந்தரே! வெகு சமர்த்தர்களான மந்திரிமார்களுடன் நாம் இதற்குமுன்னமே ஆலோசனை செய்திருக்கின்றோம். அக்காலத்தில் நாம் பலவிதமாக ஆலோசித்துப்பார்த்ததில், நமக்குள் ஒருவர்க்கொருவர்க்கு விவாதமும் உண்டாயிற்று; சீதாதேவியைத் திருப்பிக்கொடுப்பது நமக்கு க்ஷேம மென்றும், கொடுக்காவிட்டால் யாவரும் ஒழிதற்குக்காரணமான யுத்தம் நேருமென்றும் நாங்கள் தங்கட்குத் தெரிவித்தோம். அவ்வாறே இப்போது நேர்ந்தது. தாங்களோ, பொருள் கொடுத்தும், பலவகை மரியாதைகள் செய்தும், நல்வார்த்தை சொல்லியும் என்னை எப்போதும் பெருமையாக வைத்திருக்கிறீர்கள்; ஆகையால், தங்களுடைய ஆபத்துக்காலத்தில், தங்களுக்கு இஷ்டமான எதைத்தான் நான் செய்யமாட்டேன்? என் பிராணனையாவது, எனது குமாரர்கள் பெண்டுகள் பொருள்களையாவது, எனக்குப் பாதுக்காக்கவேண்டு மென்ற எண்ணமில்லை; தங்கள் பொருட்டுப் போர்க்களத்தில் என் உயிரை நான் இழப்பதைத் தாங்கள் பார்க்கலாம்" என்றான்.

இராவணன் கட்டளைக்குப் பிரஹஸ்தன் உடன்படுதல்.

இவ்வாறு தனதுதலைவனுகிய இராவணனிடஞ் சொல்லிவிட்டு, பிரகஸ்தன் தன்முன்னர்நின்ற சேனபதிகளை நோக்கி இவ்வாறு கட்டளையிடலானான் :— "அரக்கர்க ளடங்கிய நமது பெருஞ்சேனையை வெகுசீக்கிரமாகத் திரட்டிவாருங்கள்; போர்க்களத்தில் இடிவிழுவதுபோல வேகமாக விழும் எனது அம்புகளினல் உயிரிழந்த வானரர்களை, இப்போது மாமிசபட்

சேனைகளுடன் விரைந்து வருமாறு பிரஹஸ்தன் சேனபதிகட்குக் கட்டளையிடுதல்.

சிணிகளாகிய பறவைகள் புசித்துக் களிக்கப்போகின்றன" என்றான்.

இவ்வண்ணம் பிரஹஸ்தன்சொன்னதும், சேனாபதிகள் மிக்கபரபரப்புடன் அவ்வரக்கன்வீட்டிலேயே சேனையத்திரட்டிக்கொண்டுவந்துசேர்த்தார்கள். அவ்விலங்கையானது, ஒரு முகூர்த்தகாலத்திற்குள் பலவகையாயுதங்களைக் கைப்பற்றிய கொடிய அரக்கர்களால் நிரம்பி, மதயானையால் நிரம்பியதுபோல விளங்கலாயிற்று. அப்போது, அரக்கர் அக்கினியில் ஹோமஞ்செய்தும் பிராமணர்களை அர்ச்சித்து நமஸ்கரித்துக்கொண்டு மிருந்ததனால், நெய் மலர் இவற்றின் நறுமணங்களுடன் காற்று வீசலாயிற்று. அப்போது, மந்திரிக்கப்பட்ட பலவகைமாலைகளை, போருக்குரிய ஸந்நாஹத்துடனிருந்த அரக்கவீரர்கள் வாங்கி வெகுசந்தோஷத்துடன் அணிந்துகொண்டார்கள். விற்பிடித்தும் கவசமணிந்து மிருந்த அரக்கர்கள், வேகமாக வந்து, தங்களரசனுகிய இராவணனைக் கண்டு பிறகு பிரஹஸ்தனைச் சூழ்ந்துநின்றார்கள். அப்பால் பிரஹஸ்தனும், தனது வேந்தனிடம் விடைபெற்று, பயங்கரமான போர்ப்பறை முழங்க, வெகுவேகமாகச்செல்லுங் குதிரைகள் பூட்டப்பட்டுச் சிறந்ததேர்ப்பாகனுடன் கூடிப் பெருமேகம்போலச் சத்திப்பதும், பிரதியக்ஷமாக வந்த சூரியனே அல்லது சந்திரனே என்று சொல்லுமாறு சோபிப்பதும், ஒருவரும் அணுகமுடியாதவாறு கொடுமையைத் தெரிவிக்கின்ற சர்ப்பக்கொடி கட்டப்பட்டதும், தேர் மறைப்பு என்ற உறுப்பைப்பெற்றதும், சக்கரங்கள் இனிதாக அமையப்பெற்றதும், பொன்மயமான சாளரங்கள் வைக்கப்பட்டதும், தனதுபேரொளியால் ஒளியுள்ள பொருள்களைப் பார்த்துப் பரிகசிப்பது போன்றதும், படைக்கலங்களெல்லாவற்றுமேடுங்கூடிச் சித்தமாகக் கொண்டுவந்து பூட்டப்பட்டதுமான அழகிய இரதத்தின்மேல் ஏறினான்.

பிரஹஸ்தன் சேனையுடன் போர்க்குப் புறப்படுதல்.

அவ்விதமாக இரதத்தின்மேல் ஏறியபிறகு, ராவணன் கட்டளையைப்பெற்ற பிரஹஸ்தன், பெரிய ராட்சசசேனையாற் சூழப்பட்டவனாய், சடிதியில் இலங்கையைவிட்டுப் புறப்பட்டான். அவ்வரக்கசேனாபதி புறப்பட்டபொழுது, மேகம்போல் ஒலிக்கும் போர்ப்பறையின் சத்தமும், மங்களவாத்தியகோஷமும், சங்கங்களின்சப்தமும், சமுத்திரத்தையே தங்கள்சத்தத்தால் மறைப்பனபோலக் கேட்கலாயின. பயங்கரமான உருவமமைந்த அரக்கவீரர்கள், அட்டகாசம் பண்ணிக்கொண்டு பிரஹஸ்தனுக்கு முன்பாக நடக்கலானார்கள். நராந்தகன் கும்பஹநு மஹாநாதன் சமுந்நதன் என்ற பிரஹஸ்தனது மந்திரிமார், அவனைச் சூழ்ந்துகொண்டு சென்றார்கள். பயங்கரமாயும் கவசமணிந்துமுள்ள யானைக்கூட்டங்கள்போன்ற பெருஞ் சேனையாற் சூழப்பட்டு, அந்தப் பிரஹஸ்தன் கிழைவாயில் வழியாக வெளிப்புறப்பட்டான். சமுத்திரத்துக்கொப்பான அப்பெருஞ்சேனையாற் சூழப்பட்டு, அந்தப் பிரஹஸ்தன் பிரளயகாலத்தில் உலகங்களை யழிக்கின்ற யமன்போல விளங்கிக்கொண்டு சடிதியில் வெளிப்படலானான்.

அவன் புறப்பட்ட சத்தத்தாலும், அரக்கர்கள்செய்த பேராரவாரத்தாலும் இலங்கையிலிருந்த எல்லாப்பிராணிகளும் விகாரமானகுரலாற் பெருஞ்சத்தமிட்டன. தசையையும் இரத்தத்தையும் புசிக்கும் பறவைகள், மேகமில்லாமல் நிர்மலமான ஆகாயத்திற் பறந்து அப்பிரதக்ஷிணமாக அத்தேரைச்சுற்றி வட்டமிட்டன ; அக்நிஜ்வாலையைக் கக்கிக்கொண்டு நரிகள் பயங்கரமாக ஊளையிட்டன. ஆகாயத்தினின்று கொள்ளிக்கட்டைகள் விழுந்தன ; கொடிய காற்று வீசலாயிற்று ; ஒன்றுடன் ஒன்று ஆகாயத்தில் மோதிக்கொண்டு கிரகங்கள் ஒளியற்றிருந்தன. மேகங்கள், வெகுகடோரமாகக் கர்ச்சித்து, அந்தப்பிரஹஸ்தனது இரதத்தின்மேல் இரத்தமழை பொழிந்து, அவன்முன்

அக்காலத்துத் தோன்றிய நிமித்தங்கள்.

பாகச் சென்றவர்களையெல்லாம் நனைத்தன. அவன்தேர்க் கொடியின் தலையில் கழுகொன்று தெற்குமுகமாக உட்கார்ந்து, தனது இருசிறகுகளையும் அலகாற்கோதி, அதன் அழகை முற்றிலும் அழித்தது: தேர்க்குதிரைகளைநடத்திய தேர்ப்பாகனது கையிலிருந்து உளவுகோல் பலமுறை நழுவிவிழுந்தது. பிரயாணகாலத்தில் நிகரில்லாமல் விளங்கியதான அஷ்டவஸு-க்களுக்குமில்லாத பிரஹஸ்தனது பேரழகும், ஒருமுகூர்த்தகாலத்தில் மாறிற்று. சமநிலத்திலும் குதிரைகள் கால்கள் இடறின.

பெயர்பெற்ற வல்லமையும் பராக்கிரமமும் அமைந்த பிரஹஸ்தன் புறப்பட்டுவந்தபொழுது, போர்க்களத்தில் வானரசேனையும் பலவகையாயுதங்களை எடுத்துக்கொண்டு எதிர்த்து வந்துநின்றது. விருட்சங்களைப் பிடுங்கிக்கொண்டும், பெரும்பாறைகளைத் தூக்கிக் கொண்டு மிருக்கின்றபொழுது வானரர்களுள் பேராரவாரமுண்டாயிற்று. இவ்வாறு ராட்சசர்கள் கொக்கரிப்பதனாலும் வானரர்கள் கர்ச்சிப்பதனாலும் இரண்டுசேனைகளும் பெருங்களிப்பையடைந்திருந்தன. வெகுவேகமாகச் சஞ்சரித்துக்கொண்டும் வெகுவல்லமையமைந்தும் ஒருவரை யொருவர் வதைக்க விரும்பியும் போர்க்கு வலிய அழைத்துக்கொண்டும் நின்ற இராட்சசர் வானரர் என்ற அவ்விருதிறத்தாராலுந்தோன்றிய சத்தமானது, மிக்க பெருஞ்சத்தமாகக் கேட்கலாயிற்று. பிறகு, மதிகெட்ட பிரஹஸ்தனும், தான் வெற்றி பெறலாமென்று கருதி, விட்டில்கள் அனற்பிழம்பை நாடி ஓடுவதுபோல மிக்கவேகமுள்ள சுக்கிரீவசேனையை நாடிச் சென்று அச்சேனைக்குட் புகுந்தான்.

பிரஹஸ்தன் வானரசேனையை நெருங்குதல்.

ஐம்பத்தெட்டாஞ் சருக்கம் : பிரஹஸ்தனது வதம்.

அதன்பிறகு, வெகு பயங்கரமான பராக்கிரமங்கொண்ட பிரஹஸ்தன் போரிடவருவதைப் பார்த்து, பகை

இராமர் விபீஷணரை விஞவிப் பிரஹஸ்தனை இன்னனென உணர்தல்.

யடக்கவல்ல இராமர், புன்னகையுடன் விபீஷணரை நோக்கி, "மகாபாகுவே! பெருஞ்சேனையாற் சூழப்பட்டுப் பெருந் தோற்றத்தோடு அதோ வருகின்றனே, அவன் யார்? பலவானன அவ்வரக்கன் இன்னனென்பதைத்தெரிவிப்பீராக" என்று வினவினர். இராமர் வினவியதைக் கேட்டதும், விபீஷணர் மறு மொழி யளிக்கலானர்:— "இவன் அந்த ராவணனுடைய சேனபதி; இவன்பெயர் பிரஹஸ்தன்; இலங்கையில் இராவணனுக்கு உள்ள சேனைகளுள் மூன்றில் ஒருபாகம் இப் போது இவனைச் சூழ்ந்து வருகின்றது. இவன் வெகு பல சாலி; அஸ்திரங்களிற் பயின்றவன்; வெகு சூரன்; வல் லமையிற் பெயர்பெற்றவன்" என்றார்.

பின்னர், பலசாலிகளான வானரர்களையுடையதும் மிகவுங் கோபங்கொண்டு பிரஹஸ்தனை எதிர்நாடிக் கர்ச் சிக்கின்றதுமான அப்பெருஞ்சேனை, பயங்கரமான தோற் றத்தோடு அந்தப்பிரஹஸ்தன் வருவதைக் கண்டது. வானரர்களை வெல்லவிரும்பி யெதிர்த்துச்சென்ற அவ னுடன்வந்த அரக்கர்கள், கத்திகள் சக்

அரக்கர்க்கும் வானரர்க்கும் கைகலந்த போர்.

திகள் அஷ்டிகள் அம்புகள் சூலங்கள் உலக்கைகள் கதைகள் உழலைத்தடிகள் ஈட்டிகள் பலவகைக் கோடரிகள் பலவகை விற்கள் என்னும் ஆயுதங்களைக் கைகளிலேந்திக்கொ ண்டு விளங்கினர்கள். போர்செய்ய விரும்பிய வீரர்க ளான வானரர்களும், பூத்திருந்த பெருமரங்களையும் பெ ரும்பாறைகளையும் எடுத்துக்கொண்டார்கள். ஒருவரை யொருவர் கலந்தபொழுது, கல்மழையையும் அம்புமழை யையும் பொழிகின்ற அவ்விருதிறத்தாரிற் பலருக்குப் பெரும்போர் உண்டாயிற்று. போரிலே பல அரக்கர்கள் பலவானரர்களைக் கொன்றார்கள்; பலவானரர்கள் பல அரக்

கர்களைக் கொன்றார்கள். சிலர் சூலங்களாற் கொல்லப் பட்டார்கள்; சிலர் மற்றுஞ் சில கூரான ஆயுதங்களால் மாய்க்கப்பட்டார்கள்; சிலர் உழலைத்தடிகளால் அடிக்கப் பட்டார்கள்; சிலர் கோடரிகளாற் பிளக்கப்பட்டார்கள். சிலர் மூச்சுக்காற்றற்றுப் பூமியிலே விழுந்தார்கள்; சிலர் பாணங்களால் அடியுண்டு மார்பு பிளந்தவர்களாய்ச் சாய்ந்தார்கள். சிலர் கத்திகளால் இரண்டு துண்டாக்கப்பட்டுப் பூமியில் விழுந்தார்கள். சில வானரர்கள் அரக்கர்களால் தங்கள் விலாப்புறங்களிற் சூலங்களாற் குத்தப்பட்டார்கள். வெகு கோபங்கொண்ட வானரர்கள், அரக்கர்களின் கூட்டங்களை விருட்சங்களாலும் மலைச்சிகரங்களினாலும் மோதிப் பொடியாக்கினர்கள். வானரர்களின் இடிபோல் விழுந்த கையறைகளாலும் கைக்குத்துக்களாலும் அரக்கர்கள் தங்கள் பற்களும் கண்களும் தெறிக்க இரத்தத்தைக் கக்கிக்கொண்டு விழலானர்கள். வானரர்களும் அரக்கர்களும் எளிமையாகக் கூவுவதனாலும் கர்ச்சிப்பதனாலும் பெருஞ்சத்தம் தோன்றலாயிற்று. வானரர்களும் அரக்கர்களும் மிக்க சினங்கொண்டு வீரர்களின் வழியை மேற்கொண்டவர்களாய், தங்கள் கண்கள் கோபத்தாற் சுழலக் கொடுஞ்செயல்களைச் சிறிதும் அச்சமின்றிச் செய்யலானர்கள்.

நராந்தகன், கும்பஹநு, மஹாநாதன், ஸமுந்நதன் என்ற ப்ரஹஸ்தனுடைய மந்திரிகளான இந்நான்குபேரும் வானரர்களைப் பலபடியாக வதைத்தார்கள். அவ்வண்ணம் அவர்கள் வெகுவேகமாகச் சஞ்சரித்து வானரர்களை வதைசெய்துகொண்டிருந்த பொழுது, துவிவிதன் ஒரு மலைச்சிகரத்தைக்கொண்டு அந்நால்வர்களுள் ஒருவனை நராந்தகனைக்கொன்றான். விரைவாகத் தொழில்செய்யவல்ல துர்முகனென்ற வானரனை, பெரிய மரமொன்றைப் பிடுங்கி ஸமுந்நதனென்ற அரக்கனைக் கொன்றான். ஜாம்பவானென்பவனை, வெகு

வானரசேனாதிபதிகள் ப்ரஹஸ்தனது மந்திரிமார் நால்வரையும் வதைத்தல்.

கோபங்கொண்டவனுய், பெரியதொரு பாறையைத் தூக்கி மகாநாதன்மார்பின்மேல் வீசியெறிந்தான். பிறகு, வீரிய வானை கும்பஹநுவைத் தாரனென்பவன், எதிர்த்து, அவன்தலையில் பெருமரமொன்றுல் மோதி, அப்போர்க் களத்தில் அவனை உயிர்மாயச்செய்தான்.

பிரஹஸ்தன், அத்தொழிலைப் பார்த்துச் சகிக்காமல், தனது இரதத்தின்மே லிருந்தபடியே தனது வில்லை வளைத்து வானரர்களைக் கடுமையாக நாசஞ்செய்யலானுன். அவ்விருசேனைகளிலும், அப்பொழுது, பிரளயகாலத்திற் கலங்கிய சமுத்திரத்தில் தோன்றுவதுபோலப் பெருஞ் சத்தம் கேட்கலாயிற்று. போர்செய்வதில்வல்ல பிரஹஸ் தன், கடுஞ்சீற்றங்கொண்டு பெரும்பாணக்கூட்டங்களைப் பிரயோகித்து அப்பெரும்போரில் வானரர்களை ஹிம்ஸிக் கலானுன்.

வானரர்களின் சரீரங்களாலும் அரக்கர்களின் தேகங் களாலும் நிரம்பியிருந்த அப்போர்க்களம், சரிந்துவிழுந்த மலைகளால் நிரம்பியதுபோலத் தென்பட்டது. இரத்த வெள்ளத்தால் மூடப்பட்ட அப்போர்க்களம், வசந்த காலத்தில் செந்நிறமான மலர்களையுடைய பலாசமரங்களால் நிரம்பிய இடம்போலத் தென்பட்டது. மடிந்த வீரர்களின் குவி யல்களாகிய கரைகளையும் ஓடிந்த ஆயுதங்களாகிற ஓங்கி வளர்ந்த மரங்களையும் இரத்தவெள்ள மாகிற நீர்வெள் ளத்தையும் பெற்று யமனுகிற சமுத்திரத்தை நோக்கி யோடுவதும், யக்ருத் ப்லீஹம் என்ற ஹ்ருதயத்தினிரு புறங்களிலுமுள்ள தசைகளாகிற சேற்றையும் சிதறி யுள்ள நரம்புகளாகிற பாசிகளையும் சிதறிய உடம்பும் தலை களுமாகிற மீன்களையும் அவயவங்களாகிற புற்களையும்கழுகு களாகிற அன்னப் பறவைகளையும் பருந்துகளாகிற ஸாரஸ பட்சிகளையும் கொழுப்பாகிற நுரைகளையும் பெற்றிருப்ப

பகைவர்களைச் சிதைப்பு.

தும், குற்றுயிருடன் தவிப்பவர்களின் அழுகைகளாகிற சத்தத்தைப் பெற்றிருப்பதுமான அஞ்சியவர்களாற் கடத்தற்கரிய இரத்தநதியை, அப்போர்க்களத்திற் பெருகச் செய்தனர். மழை ஓய்ந்தபிறகு, அன்னங்களும் ஸாரஸங்களும் விளையாடும் நதியைக் கடப்பதுபோல, கடத்தற்கு அரிய அந்நதியையும் அரக்கர்களும் வானரவீரர்களும் கடந்தார்கள். தாமரைமலரின் மகரந்தத்தாற் செந்நிறமடைந்து விளங்குந் தாமரையோடையை மதயானைகள் தாண்டித் தாமும்செந்நிறத்தைப்பெறுதல்போல, வானரவீரர்களும் அரக்கவீரர்களும் தமது உடல் செந்நிறமாய்விடுமாறு அவ்விரத்தவெள்ளத்தைக் கடந்தார்கள்.

பிரஹஸ்தனுக்கும் நீலனுக்கும் நேர்ந்த போர்.

பிறகு, தனது தேரின்மேல் இருந்தபடியே சரமாரி பொழிந்து வானரர்களை விரைந்துவதைக்கும் பிரஹஸ்தனை, நீலனென்பவன் கண்டான். ஆகாயத்தில் அடர்ந்து நிற்கும் மேகக்கூட்டத்தைச் சிதறடித்துப் பெருங் காற்று வருவதுபோல, நீலன் தன்னை நோக்கி வருவதைப் பிரஹஸ்தன் கண்டு சூரியனைப்போன்ற நிறமுள்ள தனது தேரை ஓட்டிக்கொண்டு அந்நீலனுக்கு எதிர்முகமாக ஓடினான். வில்வித்தையில் தேர்ந்த சேனாதிபதியாகிய பிரஹஸ்தன், அப்பெரும்போரில் தனது வில்லை நாணேற்றி, நீலன்மேற் பாணங்களைப் பிரயோகித்தான்; மிக்கவேகத்துடன் நேராகச்செல்லுகின்ற அப்பாணங்கள், நீலன்மேல்தைத்து ஊடுருவிச் சீறின சர்ப்பங்களைப்போன்று பூமியிற் புகுந்தன. வானரமுக்கியனும் வீரனுமான நீலன், வெகு கூராய் நெருப்பை நிகர்ப்பனவான அந்தப் பாணங்களால் அடியுண்டு, தன்மேற் பாணப்பிரயோகஞ்செய்த அடக்குதற்குரிய அப்பிரஹஸ்தனைப் பெரிய விருட்சமொன்றைப் பிடுங்கி அடித்தான். அவ்விதமாக அடியுண்டதும், அவ்வரக்கன், கோபத்தாற் சீறிக்

கர்ச்சித்து, அவ்வானரசேனுபதியின்மேற் பாணங்களை மழைபொழிவதுபோலப் பொழிந்தான். அவ்வரக்கன் பிரயோகித்த கொடிய அந்த அம்புகளைத் தடுக்கமுடியாமல், மிக்க பலசாலியான நீலன், தனது கண்களை மூடிக்கொண்டவனுகித் தாங்கினன். திடீரென்று வந்த மழையை எருதானது தனது கண்களை மூடிக்கொண்டு எவ்வாறு தாங்குமோ, அவ்வாறே, நீலனென்பவன், கண்களைமூடிக்கொண்டு விரைந்து கடுமையாக மேல்விழும் பகைவனது அம்புகளைத் தேகத்தில் தாங்கிக்கொண்டான்.

அப்பொழுது பெருமைபெற்ற நீலன் வெகுகோபங்கொண்டு, பெரிய ஆச்சாமர மொன்றைப் பிடுங்கி, மனோவேகமாகச்செல்லும் பிரஹஸ்தனது தேர்ப்புரவிகளை அடித்துக்கொன்றனன்; பின்னும், மகாபலம்பொருந்திய அவ்வானரவீரன் பிரஹஸ்தனது வில்லைப் பிடுங்கித் தனதுபலத்தால் அதனைமுறித்துப் பலமுறை அட்டகாசஞ் செய்தான். பிரஹஸ்தனென்ற சேனுதிபதி, தனது வில் முறிந்தவுடன், பயங்கரமான உலக்கையொன்றைக் கைப்பற்றி, தனது இரதத்தைவிட்டுக் கீழேகுதித்தான். பகைமைமுதிர்ந்தும், மிகவும் கூரிய தங்கள் கோரப்பற்களால் ஒருவரையொருவர் கடித்தும், சிங்கத்தையும் புலியையும் ஒப்பாய் அவற்றைப்போன்ற தொழில் செய்தும், போரிற் பின்னிடாமலும், வெற்றிப்புகழைப் பெற விரும்பியும், விருத்திராசுர தேவேந்திரர்களைப் போன்று முள்ள அச்சேனுபதிகளிருவரும் மதயானைகள் போலச் செந்நீராற் பூசியஉடம்பையுடையவரானர்கள். அப்பொழுது, பிரஹஸ்தன் தனது வலிமை முழுமையையும் சேர்த்து உலக்கையால் ஓங்கி நீலனுடைய நெற்றியில் ஓரடி அடித்தான்; அதனல், அவனுடம்பில் இரத்தம் பெருகலாயிற்று. தனதுமேனிமுழுதும் இரத்தம்வழியப்பெற்ற வானரசேனுபதியாகிய நீலன், வெகு கோபங்கொண்டு, பெருமரமொன்

றைப் பிடுங்கி, பிரஹஸ்தன்மார்பில் அடித்தான்; அவ்வடியைக் கொஞ்சமேனும் இலட்சியஞ்செய்யாமல், அந்தப்பிரஹஸ்தன் பேருலக்கையைக் கையிற்கொண்டு, பலசாலியான நீலனேநோக்கிப் பரபரப்புடன் ஓடிவந்தான். வெகுவேகமாக அவ்வரக்கன் ஓடிவருவதை அவ்வானரவீரன் கண்டு, அவனிலும் அதிகவேகமாகச் சென்று பெரும் பாறையொன்றைத் தனதுகையில் எடுத்தான்; போரில் விருப்பங்கொண்டு உலக்கையாற் போர்புரிகின்ற அந்தப் பிரஹஸ்தனுடைய தலையின்மேல் அப்பாறையைவிரைந்து வீசியெறிந்தான். வானரரிற் சிறந்த அந்நீலனால் எறியப்பட்ட கொடிய அப்பெரும் பாறை, அப்போது பிரஹஸ்தனுடைய தலையைப் பலதுண்டமாகப் பிளந்திட்டது. வேருடன் வெட்டுண்ட மரம்போல, அவ்வரக்கன், தனது உயிர் ஒழிந்து புகழ்நீங்கி, வலிமைகுன்றி, ஐம்புலன்களும் தடுமாறித் திடீரென்று பூமியில் விழுந்தான். அவன்தலை பிளந்தபோது அங்குநின்று இரத்தம் மிகுதியாகப் பெருகிற்று. அவன் தேகத்தினின்றும் மலையினின்று அருவிகள்பெருகுவதுபோல இரத்தவெள்ளம் பெருகிற்று.

நீலன் பிரஹஸ்தனைக் கொன்றதும்.

நீலன் பிரஹஸ்தனைக் கொன்றதும், எவராலும் அசைக்கமுடியாது விளங்கிய இராட்சசசேனை சந்தோஷமிழந்து, இலங்கையை நாடி யோடிற்று. கரையுடைந்தவுடன் வெள்ளநீர் ஓடிவிடுவதுபோல, சேனைத்தலைவன் மாண்டதும், அவ்வரக்கர்கள், போர்க்களத்தில் நிற்கமுடியாமல் ஓட்டம்பிடித்தார்கள், முக்கியசேனபதியான பிரஹஸ்தன் மாண்டொழியவே, அரக்கர்கள் ஒன்றும் செய்யமாட்டாது இராவணனதுமாளிகைசேர்ந்து, ஏதோ தங்கள் மனத்திற்குள் எண்ணியவர்களாய், ஒன்றும் பேசாமல் வாயை மூடிக்கொண்டு, மிகப்பெரிய சோகசாகரத்தில்

ராக்ஷஸசேனையின் நிலைமை.

மூழ்கியவர்களாய், மூர்ச்சித்தவர்போலக் காணப்பட்டார்கள்.

நீலனது உத்ஸாஹம்.

பிறகு, வெற்றியடைந்த மகாபலசாலியாகிய நீலனென்ற சேனபதியும் தான்செய்தகாரியத்துக்காக எல்லாராலும் புகழப்பட்டு, இராமலட்சுமணர் இருந்த இடம்சேர்ந்து வெகு சந்தோஷத்துடன் விளங்கினன்.

ஐம்பத்தொன்பதாஞ் சருக்கம்:

இராவணனது மகுடபங்கம்.

பிரஹஸ்தனது மரணத்தைக் கேட்டு வருந்திய இராவணன் தானே போர்க்கு எழுதல்.

இராட்சசசேனாயகனான அந்தப்பிரஹஸ்தன் வானரவீரனான நீலனால் யுத்தத்தில் வதைக்கப்பட்டதும், பயங்கரமான ஆயுதங்களை யேந்திச் சமுத்திரம்போலக் கரைபுரண்டு வந்த அரக்கசேனை அஞ்சியோடலாயிற்று. அரக்கர்கள், இராவணனிடஞ் சென்று அக்கினிபகவானுடைய குமாரனால் அவ்வரக்கசேனபதி வதைக்கப்பட்டதைத் தெரிவித்தார்கள்; அவர்கள் மூலமாக அச்செய்தியைக் கேட்டதும், அவ்விராவணனும், வெகுகோபங் கொண்டான். போரில் பிரஹஸ்தன் கொல்லப்பட்டானென்பதை இராவணன் கேட்டு, வெகுதுக்கமடைந்து, பிறகு கோபத்தால் மெய்ம்மறந்தவனாய், போர்வீரர்களான தேவர்களை நோக்கித் தேவேந்திரன் சொல்லுவதுபோல, ராக்ஷஸவீரர்களைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:—"நமது பகைவனான இராமனை அலட்சியமாக எண்ணியிருக்கக்கூடாது; தேவேந்திரனிடம் போர்புரிந்து வெற்றிகொண்ட எனது சேனாயகனான பிரஹஸ்தன் போர்வீரர்களுடனும் மதயானைகளு

டனும் எவர்களால் வதைக்கப்பட்டாரோ, அந்த வானரர் களையும் நாம் அலட்சியமாக எண்ணியிருக்கக் கூடாது; எனது சத்துருக்களை நாசம் பண்ணும் பொருட்டும் நாம் வெற்றியடையும் பொருட்டும், இப்பொழுது ஆச்சரியமான அப்போர்க்களத்துக்கு, சிறிதும் ஆலோசியாமல், நானே போகின்றேன். காட்டைக் கொழுந்துவிட்டெரியுந்தியாற் கொளுத்துவது போல, நான், இப்பொழுது, அவ்வானர சேனைகளையும் இராமலட்சுமணரையும் என்னுடைய அம்பு களால் எரிப்பேன்" என்றான். தேவராஜனுக்குச் சத்துரு வாகிய அவ்விராவணன், இவ்வாறு சொல்லி, அக்கினிபோ லப் பிரகாசிக்கின்றதும் உத்தமமான சிறந்த குதிரைகள் பூட்டப்பட்டதும் வடிவுத்திலுல் மிக்க காந்தியுடன் விளங்கு வதுமான தனது தேரின்மேல் ஏறினான். அவ்விராவ ணன், அப்போது, சங்கம் பேரிகை தம்பட்டம் முதலிய வாச்சியங்கள் ஒலிக்கவும், வீரர்கள் தங்கள்தோளைத் தட் டிக்கொண்டு சிங்கநாதஞ்செய்யவும், வந்தியர்கள் சிறந்த தோத்திரங்கொண்டு துதிக்கவும் வெளிப்புறப்பட்டான்.

மலைகளுக்கும் மேகங்களுக்கும் ஒப்பான சரீரங்கள் பொருந்தியவர்களும் மாம்சங்களைப் புசிப்பவர்களும் நெருப்புப்போல் எரியுங் கண்களுள்ளவர்களுமான அரக் கர்களாற் சூழப்பட்டு, இராவணன், பூதகணங்களாற்சூழப் பட்ட அசுரர்தலைவனை ருத்திரமூர்த்திபோல விளங்கி னான். அப்பால், மிக்கபராக்கிரமசாலியான இராவணன், சரேலென்று தனதுபட்டண த்தைவிட்டு வெளிவந்து, பெருஞ்சமுத் திரம்போலவும் பெருமேகம் போலவும் பெருஞ்சத்தமிட்டுக்கொண்டும், தங்கள்தங்கள்கைகளில் மரங்களையும் மலைகளையும் எடுத்து ஓங்கிக்கொண்டும் அவ் வானரசேனை நிற்பதைக் கண்டான்.

இராவணன் வானரசேனையைக் காணுதல்.

ஸர்ப்பராஜனைப்போன்ற கைகளையுடையவரும் மிக்க காந்தியுடன் விளங்குபவரும் காப்புச்சேனையாற் சூழப்பெற்

றவருமான இராமர், மிகவுங்கொடுமைகொண்ட அவ்வரக்கசேனையைப் பார்த்து, ஆயுதப்பயிற்சியில் மிகத்தேர்ந்தவரான விபீஷணரை நோக்கிப் பின் வருமாறு வினவலானார்:— "பல பெருங் கொடிகளும் சிறுகொடிகளும் விளங்கவும், ஈட்டி கத்தி சூலம் வில் முதலிய பல ஆயுதங்கள் மின்னவும், ஐராவதம் போன்ற பல யானைகள் நிரம்பி அச்சமற்ற அரக்கவீரர்களையுடைய தாய் அதோ ஒரு சேனை வருகின்றதே, கலக்குதற்கு அரிய அது யாருடைய சேனை?" என்று வினவினர்.

இராமர் இராவணன் சேனையோடி வரக் கண்டு விபீஷணரை வினவுதல்.

அவ்விதமாக இராமர் கேட்டதும், இந்திரனுக்கு ஒப்பான வல்லமையுள்ள விபீஷணர், வெகு தைரியசாலிகளான அரக்கர்களுடைய சிறந்த அச்சேனையைப் பற்றிச் சொல்லத் தொடங்கினர்:—"அதோ இளஞ்சூரியனைப்போலச் சிவந்த முகமுள்ளவனும், யானையினது கழுத்தில் உட்கார்ந்துகொண்டு, தனது தேகத்தின் பாரத்தால் அந்தயானையின் தலையையே நடுங்கும்படி செய்துகொண்டு வருகின்றனே, அவன் வெகுவல்லமை தங்கிய அகம்பனனென்ற ராவணகுமாரன். அதோ தனது தேரின்மேல் சிங்கக்கொடி பறக்க, இந்திரனுடையவில்லுக்குஒப்பான தனது வில்லை அடிக்கடி நாணேற்றி இழுத்துக்கொண்டும், தனது கொடிய கோரப்பற்களை வெளிக் காட்டிக் கொண்டும் யானைபோல வருகின்றனே, அவன் தான் பிரமனது வரத்தால் திடீரென்று மறையுந்தன்மைபெற்ற இந்திரஜித்தென்ற ராவணகுமாரன். விந்தியமலை அஸ்தமலை மஹேந்திரமலை என்னும் இவைகள்போல விளங்கிக்கொண்டு, அதிரதவீரனும், பெருவடிவத்தை

விபீஷணரது விடை.

அகம்பனன்.

இந்திரஜித்து.

அதிகாயன்.

யுடைய தனது வில்லை நாணேற்றிக் கொண்டு மலை போன்ற பெருந்தேகத்துடன் அதோ இரதத்தில் வரு கின்றனே, அவன்தான் அதிகாயன். இளஞ்சூரியன் போலப் பிரகாசிக்குஞ் சிவந்த கண்களமைந்தவனாய், மணி கள்கட்டி அழகாக ஒலித்துக்கொண்டி

மகோதரன். ருக்கின்ற இரதத்தி லேறி வெகு கடோர மாகக் கர்ச்சித்துக்கொண்டு அதோ வரு கின்றனே, மஹாதைரியமுள்ள பெருவீரனை அவன், மகோதர னென்றபெயருள்ளவன். பலஅணிகலையணி ந்து அதனால் சாயங்காலமேகந்தங்கிய மலைபோல் விளங் குகின்ற புரவியில் ஏறி, மின்னுகின்ற

பிசாசன். தொரு பேரீட்டியை ஓங்கிக்கொண்டு அதோ கர்ச்சிக்கின்றனே, இடிக்கு ஒப் பானவேகமுள்ள அவன் பிசாசன். மின்னல்போற் பிர காசித்துக்கொண்டு வச்சிராயுதத்தினும் மேலான வேகத் துடன் செல்லுங் கூரான சூலத்தை யேந்தி மலைபோல விளங்குஞ் சிறந்த ரிஷபத்தின்மே லேறி அதோ வருகின்றனே, அவன் புகழ்பெற்ற திரி

திரிசிரஸ். சிரஸ் என்ற அரக்கன். மேகம்போல விள ங்கிக்கொண்டும், பருத்து விசாலமான அழ கிய மார்புபொருந்தியும், பாம்புக்கொடி பெற்றும், மனக் கலக்கமேயின்றித் தனதுபெருவில்லை நா

கும்பன். ணேற்றி யிழுத்துக்கொண்டும், போர்க் குச் சித்தனாக அதோ விளங்குகின்றனே, அவன் கும்பனென்ற அரக்கவீரன். பொன்னும் வைர மும் இழைத்துப் புகையடைந்த உழலைத்

நிகும்பன். தடியைக் கைப்பற்றி அதோ வருகின் றனே, வெகு ஆச்சரியமும் பயங்கரமு மான காரியங்களைப் போரிற் செய்பவனும் ராக்ஷஸ சேனைக்குள் முக்கியனுமான அவன் நிகும்பன். நெருப் புப்போல விளங்கி, வில் கத்திகள் இவற்றின் சமூகங்

களைப் பெற்று, கொடியுடன் தோன்றும் இரதத்தி லேறி மிக்ககர்வத்தோடு அதோ வருகின்றனே, மலை

நராந்தகன்.

களின் சிகரங்களைப் பெயர்த்தெடுத்துக் கொண்டு சண்டைசெய்பவனுன அவன் நராந்தகனென்பவன். புலி ஒட்டகம் மத யானை மான் குதிரை இவற்றின் முகம்போன்ற முகம் பெற்றுக் கண்கள் சுழலப் பயங்கரமான தோற்றமுடைய

இராவணன்.

னவான பூதகணங்களால் தொடரப்பட்டு அதோ வருகின்றரே, அவர்தாம் தேவர் களுடைய செருக்கையும் அடக்கியவர்; எங்கே நெருங்கிய கம்பிகளையுடையதாய்ப் பூர்ணசந்திரன் போல விளங்கும் வெண்கொற்றக் குடையொன்று காண் கின்றதோ, அங்குத்தான் பூதகணங்களாற் சூழப்பட்டுச் சிவபெருமான் விளங்குவதுபோல மிகுந்தபெருமைதங் கிய அரக்கவேந்தர் விளங்குகின்றார். இந்த ராக்ஷஸாதி பதியானவர், கிரீடமணிந்து, முகத்திற் குண்டலங்களாட, இமயமலைபோலவும் விந்தியமலை போலவும் பயங்கரமான தேகத்தால் விளங்குகின்றார். இவர், மஹேந்திரன் சூரி யன் இவர்களுடைய செருக்கைக் குறைத்தவர்; இவர் தாம், அரக்கர்களின் மன்னவர்: இவர், தமது ஒளியால் சூரியன்போல விளங்குகின்றார்" என்று தெரிவித்தார்.

தமது சத்துருக்களை நாசம்பண்ணும் வல்லமையுள்ள விபீஷணரை நோக்கி, ஸ்ரீராமர் மறுமொழி சொல்ல லானர்:— "என்ன ஒளி! என்ன காந்தி! ராக்ஷஸ

தனதுசேனை யுடன் வரும் இராவணனைக் கண்டு இராமர் வியந்து கூறுதல்.

ராஜனுகிய இராவணன் தனது மேலான காந்தியாற் சூரியபகவான்போல நேராகக் கண்கொண்டு பார்க்கமுடியாதவனுகக் கா ணப்படுகின்றனன். இவனுடைய ஒளி நிறைந்த உருவத்தை என்னுல் நன்றுகச் காணமுடியவில்லை. இவ்வரக்கமன்னவனுடம்பு பிரகாசிப்

பதுபோல, தேவாசுரவீரர்களின் உடம்பும் விளங்குவ தில்லை. இம்மகாவீரனைச்சேர்ந்த போர்வீரர்களாவரும், மலைக்கு ஒப்பானவர்களாயும், மலையைப் பேர்த்துவந்து பொருபவர்களாயும், விளங்குகின்ற ஆயுதங்களைக் கைப் பற்றியவர்களாயும் இருக்கின்றார்கள். மிக்க ஒளியும் பயங் கரமான பராக்கிரமமும் அமைந்த கொடிய பெருவடிவு படைத்த பூதங்களாற் சூழப்பட்ட இவ்வரக்கவேந்தன் யமதேவன்போலக் காணப்படுகின்றான். இக்கொடும்பாவி இன்று தெய்வாதீனமாய் என்கண்களுக்குப் புலனானன் ; இவன் சீதையைக் கவர்ந்து சென்றதனல் எனக்குத் தோன்றியுள்ள கோபத்தைநான் இன்று போக்கிக்கொள் வேன்" என்றார்.

இராமர் போர்க் குச் சித்தமாய் நிற்றல்.

வீரரான இராமர், இலட்சுமணர், தம்மைத்தொட ர்ந்து நிற்க இவ்வாறு சொல்லிவிட்டு, பிறகு, தமது வில்லை எடுத்து உயர்ந்த அம்பொன்றைத்தொடுத்தவராக நின்றார்.

இராவணன் போர்வீரர்க்கு இட்டகட்டளை.

அப்பொழுது, மகா பராக்கிரமசாலியாகிய இராவ ணன், மகாபலம்பொருந்திய அரக்கவீரர்களை நோக்கிப் பின் வருமாறு சொல்லலானன்:— "நீங்க ளெல்லாரும், மதிலின் வாயில்களிலும் கோபுரங்களி னிருபக்கங்களிலும் போர் வீரர்க்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளிலும் கோபுரங்களிலும் கொஞ்சமேனும் அச்சமில்லாமல் சந் தோஷமாகத் தங்கியிருங்கள். ஏனெனில், நீங்களெல் லோரும் என்னுடன் இங்கே வந்துவிட்ட இந்தப் புரை சலை, தெரிந்துகொண்டால், வானரங்கள் உடனே, ஒருவ ராலும் அணுகமுடியாத நமதுபட்டணம் சூனியமாகவிரு க்கும் இவ்வேளையில், விரைவாக ஒன்றுசேர்ந்து அதற் குட் புகுந்து, த்வம்ஸஞ்செய்து நம்மை அவமதிக்கும்" என்றான்.

அவ்வண்ணஞ் சொல்லி அவர்களை அனுப்பிவிட, அவர்களும் அந்தக்கட்டளைப்படியே திரும்பினதும், இராவணன், பெருமீன்கள் சமுத்திரத்தின் ஜலத்தைப் பிளந்துகொண்டு செல்வதுபோல அவ்வானரசமுத்திரப் பிரவாகத்தைப் பிளந்துகொண்டு செல்லலானன். பிரகாசிக்கின்ற வில்லையும் பாணத்தையு மேந்தி அவ்வாறு அவ்விராக்கதத்தலைவன் போரில்வருவதைச் சடிதியிற் கண்டு, வானரராஜனுகிய சுக்கிரீவன், பெரியமலைச்சிகரம் ஒன்றைப் பிளந்து எடுத்துக்கொண்டு, இராவணனை நோக்கி ஓடலானன். அப்பால், பலவிருக்ஷங்கள் நிரம்பிய தாழ்வரையையுடைய அச்சிகரத்தைச் சுக்கிரீவன் இராவணன் மீது வீசியெறிய, அவ்விராவணனும் தன்னைநோக்கி வந்த அம்மலைச்சிகரத்தை உடனே பொன்முனை பொருந்திய பாணங்களாற் பிளந்தெறிந்தான். தாழ்வரைகளும் உயர்ந்து வளர்ந்த விருட்சங்களும் அமர்ந்திருந்த அச்சிகரம் சிதறிப் பூமியில் விழுந்ததும், அவ்வரக்கவேந்தன், மிகவுங்கோபங்கொண்டவனுகி, பெரும்பாம்பையும் யமனையும் போன்ற பாணமொன்றை யெடுத்து, நெருப்புப் பொறியைக் கக்கவல்ல இடிக்கு ஒப்பான அப்பாணத்தைச் சுக்கிரீவனை வதைக்கும்பொருட்டு அவன்மீது விடுத்தான். இராவணனது கையால் பிரயோகிக்கப்பட்ட கூரான அந்தப்பாணமானது, சுப்பிரமணியக்கடவுளால் விடுக்கப்பட்ட கொடியசக்தியானது கிரௌஞ்சமலையைத் துளைத்தது போலச் சுக்கிரீவனுடைய உடம்பை வேகமாகத் துளைத்துவிட்டது. அப்போது பாணத்தால் வருந்திய அச்சுக்கிரீவன் கதறிக்கொண்டு பூமியில் விழுந்து மூர்ச்சையடைந்தான். அவ்வாறு மூர்ச்சையடைந்து அவன் பூமியில் விழுந்ததைக்

இராவணன் வானரசேனையையடைதல்.

இராவண சுக்கிரீவ யுத்தம்.

இராவணன் விடுத்த பாணத்தால் சுக்கிரீவன் மூர்ச்சித்து விழுதல்.

கண்டு, அப்போர்க்களத்தில் அரக்கவீரர்கள் மகிழ்ந்து அட்டகாசஞ் செய்தார்கள்.

சிலவானரர் இராவணனுடன் பொருதுதோற்று இராமரைச் சரண்புகுதல்.

பிறகு, கவாக்ஷன் கவயன் ஸுதம்ஷ்டிரன் ருஷபன் ஜ்யோதிர்முகன் நபன் என்ற வானரவீரர்கள், தங்கள் தேகங்களைப் பெருக்கி மலைகளைப் பேர்த்து எடுத்துக்கொண்டு அவ்வரக்கவேந்தனை எதிர்நோக்கி யோடினர்கள். அவ்வரக்கமன்னவனும், கூரான நுனியமைந்த தனது பாணங்களைக்கொண்டு அவ்வானரவீரர்கள் தன்னை யடித்த அவ்வளவு அடிகளையும் வீணாக்கி, அழகிய பொன்மயமான முனைகளையுடைய தனது பாணக்கூட்டங்களால் அவ்வானரவீரர்களையும் பிளந்தான். பயங்கரமான உடம்பையுடைய அவ்வானரவீரர்களும், தேவர்களின் சத்துருவாகிய அவ்விராவணனுடைய பாணங்களாற் பிளக்கப்பட்டுப் பூமியில் விழுந்தார்கள். பிறகு, இராவணனும் அவ்வானரசைனியங்களின்மீது அம்புக்கூட்டங்களை மிகுதியாகப் பொழிந்து அவர்களை மறைத்தான். இராவணன் அவ்வாறு வருத்தவே, அவ்வானரவீரர்கள், பூமியில் விழுந்து கதறிக்கொண்டும் அச்சத்தினாலும் அம்புமுனைகளாலும் அடிக்கப்பட்டும் இராவணபாணங்களாற் பீடிக்கப்பட்டவர்களாய், ரக்ஷகரான ஸ்ரீராமரைச் சரணமடைந்தார்கள். உடனே, வில்வீரரும் மகாத்துமாவுமாகிய அவ்விராமர், தமது வில்லை எடுத்துக்கொண்டு புறப்பட்டார்.

இராமர் இலட்சுமணரை அவரிஷ்டப்படி பொருமாறு போந்தித்து அனுப்புதல்.

அப்போது அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டு, இலட்சுமணர், அவ்விடம் வந்து, "பெரியோரே! தாங்கள் துராத்துமாவாகிய இவனைக் கொல்லுதற்கு அதிகவல்லமையுள்ளவர்; என்றாலும், இவன் நீசன்; இவனை நான் வதைப்பேன்; பிரபுவே! தாங்கள் என

க்கு அநுமதி தரவேண்டும்" என்று வெகு அர்த்தத் துடன் கூடிய சொற்களைச் சொல்லினர். உடனே வெகு பராக்கிரமம் பொருந்தியவரும் உண்மையை உறுதியா கக்கொண்டவருமான ஸ்ரீராமர், இலட்சுமணரை நோக்கி, "இலட்சுமண! நீயே போய் வா; போரில் வெகுஜாக் கிரதையாக இரு; இராவணனே வெகுவீரியமுள்ளவன்; போரில் ஆச்சரியமான வல்லமை யமைந்தவன்; அவன் கோபங்கொண்டால், இம்மூவுலகத்தாலும் அடக்கமுடி யாது; இது நிச்சயம். அவனுடைய அஜாக்கிரதையை முயற்சியுடன் கவனித்துப்பார். உனது அஜாக்கிரதையை வரவொட்டாமற் பாதுகாத்துக்கொள். உனது கண்களா லும் வில்லாலும் முயற்சியுடன் வெகு ஜாக்கிரதையாக உன்னைக் காப்பாற்றிக்கொள்" என்றார்.

இலட்சுமணர் இராவணனுடன் போர்செய்யச் செல்லல்.

பிறகு ஸ்ரீராமர் சொன்னதைக் கேட்டு, இலட்சு மணரும் அவரைக் கட்டித்தழுவி நமஸ்காரஞ் செய்து விட்டு, போரிடுமாறு சென்றார். இராவ ணன் நெருப்புப்போல் எரியும் தனது பெருவில்லை வளைத்துச் சரமாரி பொழிந்த தனல் விரணப்பட்டிருந்த வானரர்கள் உடம்புபிளப்புண்டு விழுந்துகிடப்பதை, யானைத்துதிக்கை போன்ற நீண்ட கைகளையுடைய இலட்சுமணர் கண்டார்.

இலட்சுமணர் வருவதைக்கண்டு அனுமான் தான் போர்செய்யச் செல்லுதல்.

அவ்வாறு இலட்சுமணர் வருவதை வாயுகுமாரனை அனுமான் பார்த்து, 'பணியாளனுகிய யான் இருக்கை யில், இவர் ஏன் போர்செய்யவேணும்?' என்று எண்ணி யவனாய், இராவணனது சரமாரியைத் தடுத்துக்கொண்டு இராவணனை நோக்கி யோடினன். அவ்விராவணனது இரதத்தினிடம் வந்து தன் வலக்கையை ஓங்கி, இராவணனைப் பயமுறுத்திக்கொ ண்டே, புத்திமானனை அனுமான், பின் வருமாறு சொல்லலானன்:— "தேவர்

அசுரர் கந்தர்வர் யக்ஷர் அரக்கர் என்ற இவர்களால் தான் கொல்லப்படாமலிருக்குமாறு நீ வரம்பெற்றுள்ளாய்; ஆனல், வானரர்களிடமிருந்து உனக்கு இப்போது பயம்வந்தது. ஐந்துவிரல்களமைந்த எனது வலக்கையை இதோ ஓங்கிவிட்டேன்; இது, உனது உடலிற் குடிகொண்டிருக்கும் ஆத்துமாவை அவ்வுடலினின்று வெளியிற் கிளப்பும்" என்றூன். பயங்கரமான பராக்கிரமமுள்ள இராவணன், அனுமானது வார்த்தையைக் கேட்டு, தனது கண்கள் சிவக்கக் கோபங்கொண்டு, "ஆலோசிக்காமல் சடிதியில் நீ என்னை ஓரறை அறைவாய்; அதனல்,உறுதியான கீர்த்தியைப் பெற்றுக்கொள்வாய். வானரனே! உனது வல்லமை இவ்வளவென்பதை அதனல் நான் அறிந்துகொண்டு, பிறகு உன்னை நாசம்பண்ணுகிறேன்" என்று கூறினன். இராவணன் சொன்னதைக் கேட்டு, வாயுகுமாரனன அனுமான் "நான் உன்னுடைய குமாரனன அக்ஷனைக் கொன்றதை நினைவிற்கொள்வாய்" என்றூன். இப்படி இவன் சொன்னதும், வெகு வல்லமை யமைந்த வீரனகிய இராவணன், தனது கையால் அனுமானது மார்பில் ஓரறை அறைந்தான். அவ்வறை விழுந்ததும், அனுமான் மெய்பதறி ஒன்றுஞ் செய்யத்தெரியாமல் சிறிதுநேரம் நின்று, அதன்பிறகு தைரியங்கொண்டு, வெகு கோபத்துடன், தேவசத்துருவான இராவணனைக் கைத்தலத்தாலேயே ஓரறை அறைந்தான். மகாத்துமாவான அவ்வானரனல் அறையப்பட்டதும், இராவணன், பூகம்பத்தால் மலை நடுங்குவதுபோல நடுநடுங்கினன். போர்முகத்தில் அனுமான்கையால் இராவணன் அறையப்பட்டதுகண்டு, முனிவர் வானரர் சித்தர் தேவர் அசுரர் என்னும் இவர்களெல்லாரும் சந்தோஷித்தார்கள். பிறகு, வெகுபராக்கிரமசாலி

அனுமானுக்கும் இராவணனுக்கும் போர்.

யாகிய இராவணன், தெளிந்தெழுந்து நின்று, "வானரா! நீ எனது சத்துருவாக இருந்தபோதிலும் நான் உன்னைக் கொண்டாட வேண்டியவனே" என்றான். இராவணன் இவ்வாறு சொன்னதும், அனுமான் "இவ்வறையை என் கையால் வாங்கிய பின்னும், நீ பிழைத்துள்ளாயன்றே; ஆகையால், என்னுடைய வல்லமையைப் பழிக்கவேணும். தூர்ப்புத்தியுள்ளவனே! வீணுகத் தற்புகழ்ச்சி செய்துகொள்ளவேண்டாம். ஒருதரம் நீ என்னை அறைவாய்; பிறகு நான் ஓரறையால் உன்னை யமனது மாளிகையிற் சேர்க்கின்றேன்" என்றான். அவ்வாறு அனுமான் சொன்னதும், இராவணனுக்கு அதிககோபம் மூண்டது. உடனே, அவ்விராவணன், தனது கண்கள் சிவக்கத் தன்வலக்கையை யோங்கித் தன்பலம் முழுவதையும் சேர்த்து அனுமான்மார்பில் ஒரு குத்துக் குத்தினன். தனது விசாலமான மார்பில் அக்குத்து விழுந்ததும், அவ்வானரவீரன், மறுபடியும் கொஞ்சம் கலங்கி நின்றான்.

பலசாலியான அவ்வனுமான் அவ்வாறுநின்ற அச்சமயம் பார்த்து, அதிரதனான இராவணன், தனது இரதத்தை வேகமாக ஓட்டி நீலனை எதிர்க்கச் சென்றான். பாம்புகள் போல வெகு பயங்கரமாயும் எதிரிகளின் மர்ம ஸ்தானங்களைப் பிளக்குந்தன்மைவாய்ந்து மிருந்த பாணங்களால், பத்துத்தலைபடைத்தவனும் பிரதாபசாலியும் அரக்கர்தலைவனுமான அவ்விராவணன், நீலனென்ற வானர சேனபதியை எரிக்கலானன். அம்புக் கூட்டங்களினால் ஆயாசத்தையடைந்த அவ்வானரவீரனும், ஓருகையால் அவ்விராவணன் பிரயோகித்த பாணங்களைத் தடித்துக்கொண்டு, மற்றொரு கையால் ஒரு மலைச்சிகரத்தைப் பிடுங்கி அவ்வரக்கன்மேலெறிந்தான்.

இராவணன் நீலனுடன்பொருதல்.

மஹாபராக்கிரமசாலியாய்த் தைரியசாலியான அனுமானும், இதற்குள் மூர்ச்சைதெளிந்து, தனது சத்துரு

மூர்ச்சை தெளிந்த அனுமானது விருப்பம்.

வாகிய இராவணன் நீலனுடன் சண்டை செய்வதைக் கண்டு, போர்செய்யவிரும்பிய வனாய், வெகு கோபத்துடன் " ஒருவனுடன் போர்செய்கையில் அவனைவிட்டு வேறொருவனுடன் போர்புரியுமாறு ஓடிவிடுதல் தகுதியன்று " என்றான்.

மிக்கபராக்கிரமசாலியாகிய இராவணன் நீலனெறிந்த ஒரு மலைச்சிகரத்தை மிக்க கூரான ஏழு பாணங்களை விடுத்துப் பிளந்தான்; அச்சிகரமும் சிதறுண்டு விழுந்தது. எதிரிகளான வீரர்களை யழிக்க வல்ல அவ்வானரசேனபதி

நீல இராவணரது யுத்தம்.

அம்மலை அவ்வாறு சிதறுண்டு விழுந்ததைப் பார்த்து, கோபத்தினற் பிரளயகாலத்தீப்போலக் கொதித்தான். உடனே அவன், அசுவகர்ணம் தவம் ஆச்சா பூக்கள் நிறைந்துள்ள மா இவற்றையும், இன்னும் பலவித மரங்களையும் போர்க்களத்தில் இராவணன்மீது எறிந்தான். அவ்விராவணனும் அவ்வளவு மரங்களையும் வெட்டி யெறிந்து, அக்கினிகுமாரனாகிய அந்நீலன்மேலுங் கொடுமையாகச் சரமாரி பொழிந்தான். மேகங்களால் மழை பொழியப்பட்ட மலைபோல, பாணங்களாற் பொழியப்பட்ட நீலன், அப்போது தனது உருவத்தைக் குறுக்கிக்கொண்டு, இராவணனுடைய தேர்க்கொடியின் நுனியில் தாவிப்பாய்ந்தான். தனது கொடியின் நுனியில் அவ்வண்ணம் அவன் தாவி யுட்கார்ந்ததைப் பார்த்த இராவணனுக்குக் கோபம் பொங்கிற்று; அப்போது, நீலன், அட்டகாசஞ்செய்தான். கொடிநுனியிலும் இராவணனுடைய வில்லின் முனையிலும் அவனது கிரீடத்தின் உச்சியிலும் அந்நீலன் விளையாட்டாகச் சஞ்சரித்ததை, இலட்சுமணர் அனுமான் ஸ்ரீராமர் என்ற இவர்களெல்லாரும் பார்த்து வெகு ஆச்சரிய மடைந்தார்கள். மிகுந்த பராக்கிரமசாலியாகிய இரா

வணனும், அவ்வானரனது லாகவத்தைக் கண்டு, ஆச்சரியங்கொண்டு, அற்புதமாக விளங்குகின்ற ஆக்கினேயாஸ்திரத்தைக் கையிலெடுத்தான். போர்க்களத்தில் நீலனது திறமையைக் கண்டு இராவணன் தடுமாறுவதைப் பார்த்து, வானரவீரர்கள் மகிழ்ந்து ஆரவாரித்தார்கள். இவ்விதமாக வானரவீரர்கள் ஆரவாரிக்கவே, இராவணன், பின்னும் உள்ளங்கலங்கிக் கொஞ்சநேரம் ஒன்றுஞ்செய்யத்தெரியாம லிருந்தான். அதன் பிறகு, மகாபலசாலியாய் அரக்கமன்னவனை அவ்விராவணன், தனது வில்லில் ஆக்கினேயாஸ்திரத்தைத் தொடுத்துத் தனது தேர்க்கொடியின்மேலிருந்த நீலனைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:—"குரங்கே! நீ மிகுந்த மாயையினல் திறமை யடைந்திருக்கின்றாய்; வானரனே! உன்னைக் கூடுமானல் உனது பிராணனைக் காப்பாற்றிக்கொள். உன்னைப்போலவே பல உருவங்களை நீ எடுக்க வல்லமையுள்ளவனுக இருந்தபோதிலும், நான் அஸ்திரத்தை அபிமந்திரித்துத் தொடுத்துவிட்டேன். என்பாணமானது பிராணனைக் காப்பாற்றுகின்ற உன்னைத் தவறுமற் கொல்லும்" என்றான். அவ்விராவணன், இவ்வண்ணஞ்சொல்லி, ஆக்கினேயாஸ்திரத்தைத் தனது வில்லில் தொடுத்து வானரசேனபதியின்மேல் விடுத்தான். அஸ்திரத்தால் மார்பில் அடிக்கப்பட்ட நீலன், எரிக்கப்பட்டு அசதியிற் பூமியில் விழுந்தான். தனது தந்தையின் மகிமை தன்னிடத்திலிருந்ததனலும், தனது பராக்கிரமத்தாலும், அந்நீலன், தனது முழங்காலை மடித்துக்கொண்டு பூமியில்விழுந்தானேயன்றி, பிராணனை யிழக்கவில்லை.

நீலனை இராவணன்வெல்லுதல்.

இராவணன், அவ்வானரன் மூர்ச்சையடைந்ததைப் பார்த்துப் பின்னும் போர்புரிய ஆசைகொண்டவனுய், மேகம்போல் ஒலித்த தனது இரதத்தை இலட்சுமணனிருந்த இடத்தை நோக்கிச் செலுத்தினன். அவனிருந்த இடஞ்

சேர்ந்து, தன்னோடு போரிடவந்த சுக்கிரீவன் முதலியவர்களை விலக்கி, பூமியை நடுங்கச்செய்கின்றவன் போல வில்லை நாணேற்றி டங்காரஞ் செய்தான். பலத்திற் கொஞ்சமேனும் அவனுக்குப் பின்வாங்காத இலட்சுமணரும், அளவிடமுடியாத மகிமைவாய்ந்த வில்லை டங்காரஞ் செய்துகொண்டுநின்ற அவனைப்பார்த்து, "அரக்கர்மன்னவனே! என்னிடமே போர்புரியுமாறு வருவாய்; வானரர்களுடன் போர்புரிதல் உன்க்குத் தகுதியன்று" என்றார். கம்பீரமான குரலுடன் இலட்சுமணர் அவ்வாறு சொன்னதையும், அவருடைய பயங்கரமான வில்நாணியிலையையும், அரக்கர்மன்னவன், கேட்டு, தனக்காக எதிர்பார்த்திருந்த அவரை நோக்கி வெகு கோபத்துடன் "ராகவ! விநாசமடைய விரும்பி விபரீதபுத்தியுள்ள நீ தற்செயலாய் என் பார்வையில் அகப்பட்டுக்கொண்டாய்; இந்நொடியில் நீ என் பாணக்கூட்டங்களால் அடியுண்டு, யமனுடைய விடுதியை அடையப்போகிறாய்" என்றான். இலட்சுமணர், அவன்செய்த தற்புகழ்ச்சியைக் கவனிக்காமல், உயர்ந்த வெகுத்த கோரப்பற்களுடன்கூடிய அவ்வரக்கனைப் பார்த்து, "அரசனே! உண்மையான பெரும்பராக்கிரமம் படைத்தவர்கள் தற்புகழ்ச்சி செய்துகொள்ள மாட்டார்கள். பாவிகளுக்குள்முதல்வனே! நீ தற்புகழ்ச்சிசெய்துகொள்ளுகிறாய். அரக்கவேந்தனே! உனது வல்லமை, பலம், பகைவரை யச்சமுறுவிக்குந்தன்மை, பராக்கிரமம் என்ற இவைகளை நான் நன்றாக அறிவேன். நானே, கையில் வில்லும் அம்பும் பிடித்துவந்து நிற்கின்றேன்; போரிட வருவாய். வீணாகத் தற்புகழ்ச்சிசெய்துகொள்வதில் என்ன பயன்?" என்றார்.

இராவணனுக்கும் இலட்சுமணருக்கும்நடந்த வாக்குவாதம்.

இவ்வாறு இலட்சுமணர் சொன்னதும், ராட்சசாதிபதியான இராவணன், கோபங்கொண்டு, கூரானமுனைகளுள்ள

ஏழுபாணங்களை அவர்மேல் விடுத்தான்; இலட்சுமணரும், அப்பாணங்களைப் பொன்மயமாய் அழகியகூரான மூன்றாஞ்ள பாணங்களால் அறுத்தொழித்தார். உடல் அறுபட்டு விழுந்த பாம்புகள்போல அப்பாணங்கள் அறுபட்டு விழுந்ததை லங்காதிபதியாகிய இராவணன் கண்டு, வெகு கோபங்கொண்டு, பின்னும் கூரான வேறு பாணங்களை விடுத்தான்: ஸ்ரீராமருடைய தம்பியாகிய இலட்சுமணர், கத்திவடிவான பாணங்களையும் அர்த்தசந்திரபாணங்களையும் கர்ணியென்ற பாணங்களையும் பல்லங்களையும் விரைவாக வில்லில்தொடுத்து அம்புமழைபொழிந்து அவ்விராவணன் விடுத்த அவ்வளவு பாணங்களையும் அறுத்தெறிந்து போரிற் கொஞ்சமேனும் கலங்காமல் நின்றார். ராக்ஷஸராஜனாகிய இராவணன், தான்விடுத்த அவ்வளவு பாணங்களும் வீணனதைக் கண்டு, இலட்சுமணருடைய திறமையை நினைத்து வெகு ஆச்சரியங் கொண்டு, பின்னும் கூரான பாணங்கள் பலவற்றை அவர்மேல் விடுத்தான். அந்த லக்ஷ்மணரும் இந்திரனுடைய வச்சிராயுதத்தையும் இடியையும் போன்ற வேகமுள்ளனவும் கூரான மூன்களுள்ளனவும் நெருப்புப்போல் விளங்குவனவுமான பல பாணங்களை அவ்வரக்கவேந்தனை வதைக்கும்பொருட்டுத் தமது வில்லில் விரைவாகத் தொடுத்து விடுத்தார். இராவணன், அவைகளை அறுத்துத் தள்ளி, அதன்பிறகு தான் பிரமதேவனிடமிருந்து பெற்றதும் யுகாந்தகாலத்து அக்கினியைப்போன்றதுமாகிய அம்பு ஒன்றை இலட்சுமணரது நெற்றியை நோக்கி விடுத்தான். இராவணன் விட்ட அந்தப் பாணத்தால் இலட்சுமணர் வருந்தி, தாம் கைப்பற்றியிருந்த வில்லும் கொஞ்சம் நழுவ அதை ஒருவாறு பிடித்துக்கொண்டு, சிறிதுநேரம் பிரஜ்ஞைதப்பியிருந்து, உடனே வெகுசிரமத்தின்மேல் தெளிந்து, தேவர்

இலட்சுமணருக்கும் இராவணனுக்கும் நிகழ்ந்த போர்.

களின் சத்துருவாகிய அவ்வரக்கனதுவில்லை வெட்டியெறிந் தார். வில்லை முறித்தபிறகு, கூரான மூன்று பாணங் களை இலட்சுமணர் இராவணன்மேல் விடுத்தார்; அப் பாணங்கள் தன்மேல் விழுந்ததும், அவ்வரக்கர்மன்னவன், பிரஜ்ஞைதப்பி மூர்ச்சையடைந்து வெகுநேரமத்தின்மேல் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். தனது வில்லும் முறி பட்டு, தானும் பாணங்களால் அடியுண்டு இரத்தத்தி னாலும் மேதசினாலும் நனைந்த உடம்பையுடையவனாய், மகா பலசாலியாகிய அவ்விராவணன், தனக்குப் பிரமதேவன் கொடுத்திருந்த சக்தியென்ற ஆயுதத்தைக் கைப்பற்றி னான். அரக்கர்நாட்டுவேந்தனாகிய அவ்விரா வணன், புகையற்ற நெருப்புப்போலத் தோன்றி வானரசேனையை அச்சமுறுத்தி விளங்கின அந்தச் சக்தியை இலட்சுமணர்மீது விரைவாக விடுத்தான். இலட்சுமணர், தம்மைநோக்கிவந்த அந்தச் சக்தியை அக்கினிக்கு ஒப்பான பல கெர்டிய பாணங் களால் எய்துபார்த்தும், தடைப்பட்டு நிற்காமல், அந்தச் சக்தியானது இலட்சுமணருடைய விசாலமான மார்பில் விரைவாகத் தைத்தது. வெகு வல்லமையுள்ளவராய் இரகு வம்சத்தி லுதித்தவரில் மிக்க வீரராய் விளங்கும் அந்த லட்சுமணரும் அந்தச் சக்தியைப் பொறுக்கமுடியாமல் மயங்கி விழுந்தார்.

இராவணன் பிரமனளித்த சக்தியைப் பிர யோகிக்க, இலட் சுமணர் மூர்ச் சித்து விழுதல்.

அவ்வாறு மயங்கிவிழுந்த இலட்சுமணரைக் கிட்டி, ராக்ஷஸராஜனாகிய இராவணனும் தன்து கைகளால் எடு த்துத் தூக்கிக்கொண்டுபோய்விட முயன்று பார்த்தான். இமயமலை மந்தரகிரி மேருமலை தேவர்களுடன் கூடிய இம்மூவுலகம் என்ற இவைகளையெல்லாம் தனது கைக ளால் அசைத்தெடுக்கவேணுமென்றாலும், அவ்விராவ ணன் அசைத்தெடுக்கலாம்; போர்க்களத்தில் இலட்சு மணரைத் தூக்கிக்கொண்டு போய்விடவேணுமென்று

நினைத்தாலோ முடியாது. பிரமதேவனுடைய சக்தியினல் இலட்சுமணர் தமதுமார்பில் அடியுண்டா ரென்றலும், அப்போது, அவர், இவ்வாறுள்ளதென்றும் இவ்வளவுள்ளதென்றும் கருதவும்முடியாததான விஷ்ணுவின் அம்சமாகிய தமது ஸ்வரூபத்தை ஸ்மரித்துக்கொண்டிருந்தார் : அந்த ஸ்வரூபம் இயற்கையாகவே பெரும்பார முடையதாதலால், தேவர்களுக்கு முட்போன்ற அவ்விராவணன், அசுரர்களின்செருக்கை யடக்குவதற்காக மானுடவடிவங் கொண்டுவந்த விஷ்ணுவின் அம்சமாகிய அவ்விலட்சுமணரைத் தனது கைகளால் அசைத்தற்கும் வல்லமையற்றவனுயினன்.

லக்ஷ்மணரது சக்தி.

பிறகு, அனுமான் வெகு கோபத்துடன் இராவணனிடம் ஓடிவந்து வச்சிராயுதத்துக்கு ஒப்பான முஷ்டியினல் அவன்மார்பில் ஒருகுத்துக் குத்தினன். அக்குத்து விழுந்ததும், அரக்கர் மன்னவனுகிய இராவணன் முழந்தாளை மடித்துக்கொண்டு இரதத்திற் சோர்ந்து சாய்ந்து விழுந்து, வாயாலும் கண்களாலும் காதுகளாலும் மிகுதியாக இரத்தத்தைக் கக்கலானன். தலைசுழலை ஒன்றுஞ் செய்யமுடியாது, இராவணன், தனது இரதத்தில் உட்கார்ந்துகொண்டான் ; அவன், ப்ரஜ்ஞைதப்பி மூர்ச்சையடைந்தவனுமானன் ; மூர்ச்சைதெளிந்த பின்பும், மனத்தில் தைரியங்கொள்ளவில்லை. போரிலே பயங்கரமான பராக்கிரமமுள்ள இராவணன் மெய்ம்மறந்ததைக்கண்டு, முனிவர்களும் வானரர்களும் இந்திரன் முதலிய தேவர்களும் களிப்பினல் ஆரவாரஞ்செய்தார்கள்.

அனுமான் இராவணனைவெல்லுதல்.

வெகு பராக்கிரமசாலியாகிய அனுமான், இராவணனல் ஹிம்ஸிக்கப்பட்ட இலட்சுமணரைத் தனது கைகளால் தூக்கி ஸ்ரீராமரிடம் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

தமது சத்துருவினல் அசைக்கமுடியாதவராயிருந்த இல
ட்சுமணர், நல்லெண்ணமுடைமையாலும்
சிறந்த பக்தியாலும் வாயுபகவானுடைய
குமாரனுகிய அனுமானுக்கு, எளிதில்
தூக்கிக்கொண்டுபோம்படியாயினர். இரா
வணன் எறிந்த சக்தியோ,போரில் வெல்ல
முடியாத அவ்விலட்சுமணரை விட்டிட்டு
மறுபடியும் இராவணனுடைய இரதத்தை யடைந்துதானி
ருக்கவேண்டிய இடத்தில் இருந்தது. பகைவரை யழிக்க
வல்ல இலட்சுமணர் நினைப்பதற்கு அரிய விஷ்ணுவின்
அமிசமாகிய தமது ஸ்வரூபத்தை ஸ்மரித்ததன்றி
வேருன்றுஞ் செய்யவில்லை ; அப்போதே மூர்ச்சை
தெளிந்து புண்ணுறியவராயினர்.

அனுமான் லட்சு
மணரை இராம
ருகிற் சேர்க்க,
இலட்சுமணர்
மூர்ச்சைதெளி
தல்.

மகாபராக்கிரமசாலியாகிய இராவணனும், அப்பெ
ரும்போரில் பிரஜ்ஞை வரப்பெற்று, பெரியதொரு வில்லை
யெடுத்துக் கூரானபாணங்களைத் தொடுக்கலானன். போர்
க்களத்தில் அப்போது பலவானரவீரர் கீழ்விழுந்து கிடப்
பதையும் வானரசேனை நிலைகலங்கி யோடுவதையுங் கண்டு,
ஸ்ரீராமர், இராவணனை எதிர்க்க வேகமாகச்சென்றார்.
அப்பொழுது, அனுமான் அவ்விராமரிடம் வந்து, "தாங்
கள் என் பிடரியில் ஏறிக்கொண்டு அரக்கனை அடக்குதல்
தக்கது" என்றான். அவ்வண்ணம் வாயுவின் குமாரனன
அனுமான் சொன்னதைக் கேட்டு, மஹாசூராகிய ஸ்ரீரா
மர், உடன்பட்டு, விஷ்ணுவானவர் எவ்வாறு பலசாலியான
கருடபகவான்மீது ஏறினரோ, அதுபோலவே வெகுபல
சாலியாகிய அவ்வனுமானது பிடரியின்மேல் ஏறினர்.
இரதத்தின்மே லேறியிருந்த இராவணனை, அவ்விராமர்
பார்த்து, விஷ்ணுபகவான் பலியைநோக்கி விரைந்து சென்
றதுபோல, வெகு சினத்துடனே ஆயுதத்தைத் தூக்கிக்
கொண்டு விரைந்து சென்றார்; இடியிடிப்பதுபோலத் தமது

இராமர் இராவணனுடன்போர் செய்ய வருதல்.

வில்லின் நாணியை யொலிப்பித்து, அவ்விராமர், வெகுகம்பீரமானவாக்கால் அவ்வரக்கமன்னவனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:— "நில், நில்; எனக்கு இவ்விதமான அப்பிரியத்தைச் செய்து, அரக்கரேறே! நீ எங்குச்சென்று உயிருடன் தப்புவாய்? இந்திரன் யமன் சூரியன் பிரமதேவன் அக்கினி சங்கரன் என்ற இவர்களிடமே நீ ஓடின்போதிலும், பத்துத்திசைகளிலேயும் ஓடிப்பதுங்கியபோதிலும் இன்று நான் உன்னை உயிருடன் தப்பவிடமாட்டேன். அரக்கர்கூட்டத் தலைவனே! இன்று நீ எவனைச் சக்தியால் அடித்தாயோ, அவனே, போரில் உனக்குத் துன்பத்தை யுண்டாக்க விரும்பியவனாகி, குமாரர்களுடனும் பந்துக்களுடனும் கூடிய உனக்கு மிருத்யுவாக வரப்போகின்றான். இந்த நான்தான் ஜனஸ்தானத்திலே சிறந்த ஆயுதங்களைக் கைப்பற்றியவர்களும் வரம்பெற்றவர்களும் அற்புதமான காட்சியை யுடையவர்களுமான பதினாலாயிரம் அரக்கவீரர்களை வதைத்தவன்" என்றார்.

இராமரது வீரவாதம்.

ஸ்ரீராமர் அவ்வாறு சொன்னதைக் கேட்டு, இராவணன், கோபங்கொண்டு, ஸ்ரீராமரைத் தாங்கிக்கொண்டிருந்த வெகு பலசாலியும் வாயுபுத்திரனுமாகிய அனுமானை, பிரளயகாலத்து அனலுக்கு ஒப்பான் கூரான பாணங்களால் அடித்தான். இராவணனுடைய பாணங்களால் அடிபட்ட போதிலும், அனுமானுடைய இயல்பான காந்தியானது, பின்னும் அதிகமாக வளரலாயிற்று. பிறகு, வெகு பராக்கிரமசாலியாகிய ஸ்ரீராமர், வானரசிங்கமாகிய அனுமான் இராவணனற் புண்பட்டதைப் பார்த்து, கோபத்திற்குப் பரவசரானார். ஸ்ரீராமர், இராவணன்தேரையெதிர்த்து நின்று, கூரானபாணங்களைப் பிரயோகித்து, சக்கரம் குதிரை துவசம் குடை தேர்ப்பாகன் இடிக்கொப்பான

ராம ராவண யுத்தம்.

சூலம் கத்தி என்னும் இவற்றுடன் அவனது தேரை முறித்தார். பிறகு, இந்திரன் வச்சிராயுதத்தால் மேருமலையைப் பிளந்ததுபோல, ஸ்ரீராமர் இந்திரசத்துருவாகிய அவ்விராவணனுடைய அழகான மார்பில் வச்சிராயுதத்தையும் இடியையும் போன்ற பாணத்தால் அடித்தார். எவன் வச்சிராயுதத்தின் அடிக்கும் இடியின் வீழ்ச்சிக்கும் கலங்காமலும் அசையாமலும் இருந்தானே, அந்த வீரனே, ஸ்ரீராமருடைய பாணத்தால் அடிபட்டவுடன், மிகவும் வருந்தி நடுநடுங்கித் தனது வில்லையும் நழுவவிட்டான். அவன் அவ்வாறு தடுமாறியதை, தயாளுவான ஸ்ரீராமர், பார்த்து, ஜ்வலிக்கின்ற அர்த்தசந்திரபாணத்தைத் தொடுத்து, அவ்வரக்கவேந்தனது சூரியன்போல விளங்குங் கிரீடத்தை விரைவாக வீழ்த்தினர். விஷமில்லாப் பாம்புபோலவும் கிரணங்களொடுங்கி ஒளியற்றிருக்குஞ் சூரியன்போலவும் கிரீடங்கள் தள்ளப்பட்டுக் கரந்தியற்று நின்ற அவ்விராவணனைப் பார்த்து, ஸ்ரீராமர், பின்வருமாறு சொல்லலானார்:— "அரக்கவீரா! நீ இன்று கொடிய பெரும்போர் புரிந்து எனது வீரர்களையும் வலியடக்கினாய்; ஆகையால், நீ அதிகம் சிரமப்பட்டிருக்கின்றாயென்று நிச்சயித்து, நான் எனது பாணங்களால் உன்னை யமனுடைய வசத்தில் ஒப்பிக்கவில்லை. அரக்கர்கட்கு அரசனே! நீ இப்போது போரிற் சிரமப்பட்டிருக்கின்றபடியால், திரும்பிப் போக நான் விடைகொடுக்கின்றேன். நீ இலங்கைக்குச் சென்று, உனது களைப்பை ஆற்றிக்கொண்டு, நாளை இரதமேறி, வில்முதலிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு திரும்பி வருவாய்: அப்பொழுது இரதத்திலிருந்தபடியே நீ என் வல்லமையைப் பார்க்கலாம்" என்று இவ்வாறு ஸ்ரீராமர் சொன்னதும், தனது செருக்கும் சந்தோஷமும் ஒழிந்து, வில் அறுக்கப்பட்டும் தேர்ப்பாகனும்குதிரையும் கொல்லப்

இராவணனது பராஜயம்.

இராமர் இராவணனை 'இன்று போய் நாளை நின்தானையோடு வா' என்றல்.

பட்டும், பாணங்களாற் பீடிக்கப்பட்டும், தனது கிரீடங்கள் உடைக்கப்பட்டும் வெகு பரிதாபமான நிலைமையி லிருந்த அவ்வரக்கவேந்தன், சடிதியில் இலங்கைக்குள் நுழைந்தான். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சத்துருவாய்ப் பெரும்பலம் படைத்த அவ்விராவணன் இலங்கையிற் புகுந்த பிறகு, அப்பெரும் போர்க்களத்தில், ஸ்ரீராமர், வானரர்களையும் இலட்சுமணரையும் பாணங்களுடைய பீடையிலிருந்து நீக்கினர். இந்திரனுடைய சத்துருவாகிய இராவணன் அவ்வண்ணம் தோல்வியடையவே, தேவர் அசுரர் பூதகணங்கள் திக்பாலகர் பெருஞ்சாகரங்கள் மஹர்ஷிகள் உரகர் நீரிலும் நிலத்திலுமிருக்கின்ற பிராணிகள் ஆக எல்லோரும் களித்தார்கள்.

இராவணன் இலங்கையிற் புகுதல்.

இராவணனது தோல்வியால் எல்லோரும் மகிழ்தல்.

அறுபதாஞ் சருக்கம்:
இராவணன் கும்பகர்ணனை எழுப்புவித்தல்.

அப்போது அரக்கர்கட்கு அரசனை இராவணன், இலங்கையினுட்புகுந்து, ஸ்ரீராமருடைய பாணத்தை நினைந்து அஞ்சினவனாய், தனதுசெருக்குக்குலைந்து மனங்குழம்பியவனானன். சிங்கத்தினால் யானைபோலவும், கருடனாற் பாம்புபோலவும், ஸ்ரீராமரால் இராவணன் அவமான மடைந்தான். அவ்வரக்கன் பிராமணனது சாபம்போல் ஜ்வலித்துக் கொண்டும் மின்னல்போல மின்னிக்கொண்டும் வந்த ஸ்ரீராமருடைய பாணங்களை நினைந்து நினைந்து துக்கிக்கலானன். பிறகு, இராவணன், திவ்வியமானதொரு சிறந்த பொன்னாசனத்தின்மீது வீற்றிருந்து, அரக்கர்களைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானன்:—"நான் இதுவரை

இராவணனது மனக்குழப்பம்.

யில் செய்திருந்த சிறந்த தவங்கள்யாவும் வீணுயின ; மகேந்திரனுக்கு ஒப்பான என்னே மானிடனெருவன் வென்றனே ! பிரமதேவர் 'மானிடரிடமிருந்து உனக்குப் பயமுண்டாகு மென்று அறிவாய்' என்று கடுமையாகச் சொன்ன அவ்வாக்கியம், இப்போது என்னிடத்திற் பலித்து விட்டது ; அவரதுவாக்குத் தவறுதன்றே ! நான், தேவர் அசுரர் கந்தர்வர் யக்ஷர் ராக்ஷசர் பன்னகர் என்ற இவர்களொருவராலும் என்னைக்கொல்ல முடியாதென்று வரம்பெற்றேனே யன்றி, மானிடராற் கொல்லப்படாமலிருக்கும்படி வரம்பெறவில்லையே. இக்ஷ்வாகு குலத்தவனன அநரணியனென்பவன், " அரக்கப்பதரே ! தாழ்ந்த குலத்தானே ! துர்ப்புத்தியே ! உன்னை, உனது குமாரர் மந்திரிமார் சேனைகள் குதிரைப்பாகர்கள் என்ற இவர்களுடன் போரில்வதைசெய்யப்போகின்ற புருஷன், என்குலத்திற் பிறக்கப்போகின்றன் ; இது, திண்ணம் " என்று முற்காலத்தில் சபித்தானே ; அவ்வாறே அக்குலத்திற்பிறந்த தசரதனுடைய குமாரனுகிய இராமன் மானுடனுகப் பிறந்தானென்று எனக்குத் தோன்றுகின்றது. நான் முன்னெருகாலத்தில் வேதவதி யென்பவளைப் பலாத்காரித்தபொழுது அவள் என்னைச் சபித்தாள் ; அவ்வுத்தமிதான் இப்பொழுது சீதையென்ற பெயருடன் ஜனகனுடையவம்சத்தில் வந்திருக்கின்றளென்றும் எண்ணுகின்றேன். உமை, நந்தீச்வரர், ரம்பை, வருணகன்னிகை என்ற இவர்கள் தவமகிமையால் என்னைக்குறித்து எவ்வெவ்வாறு சொன்னர்களோ, அவ்வப்படியே விளைந்தது ; முனிவர்கள்பேச்சுப் பொய்க்காதன்றே! ஆகையால், இவைகளையெல்லாம் அறிந்து, சத்துருவை ஜயிக்கவேண்டிய தொழிலில் அவதானமாக இருங்கள்.

அரக்கர்கள் இப்பொழுது கோபுரங்களின் மேலும் கோபுரங்களின் பக்கங்களிலே போர்வீரர்கள் உலாவுவ

இராவணன் அரக்கர்க்குக் கட்டளையிடுதல்.

தற்காக ஏற்பட்டுள்ள இடங்களிலும் இருந்துகொண்டு இந்நகரத்தைப் பாதுகாக்க வேண்டும். ஒப்பற்ற கம்பீரமுள்ளவனும், தேவதானவர்களின் செருக்கை யடக்குகின்றவனுமாகிய பிரமதேவருடைய சாபத்தால் தூங்குகின்றவனுமான அந்தக் கும்பகர்ணனை எழுப்புங்கள்" என்றான். மஹாபலசாலியாகிய அவ்விராவணன், தான் தோல்வியடைந்ததையும் பிரஹஸ்தன் வதைக்கப்பட்டதையும் நினைந்து, கும்பகர்ணன் வெகு பயங்கரமான பலமுடையவனென்பதையும் ஆலோசித்து அவனை எழுப்பும்படி கட்டளையிட்டான். அவ்விராவணன் "கோட்டைவாயில்களை ஜாக்கிரதையாகப் பாதுகாவல் செய்யுங்கள்; மதில்களின்மேலேறிக் காவலிருங்கள்; உறக்கத்தின் வசப்பட்டுள்ள கும்பகர்ணனை எழுப்புங்கள். இவனோ, காலத்தின் கொடுமையால் மெய்ம்மறந்து இனிதாகத் தூங்குகின்றான். இவன், சிலவேளை ஒன்பது, சிலவேளை ஆறு, சிலவேளை ஏழு, சிலவேளை எட்டு மாதங்களாகத் தூங்குகின்றான். யுத்தந்தொடங்கிய ஒன்பது நாளைக்கு முன்புதான் ஆலோசனை செய்துவிட்டு, இவன் தூங்க ஆரம்பித்தான். ஆகையால், மகாபலம்பொருந்திய இந்தக்கும்பகர்ணனைச் சடிதியில் எழுப்புங்கள். அரக்கர்களுள் பிரதானனுய்ப் பெருந்தோள்வலிபடைத்த இவனோ, போரில், வானரர்களையும் அந்த ராஜகுமாரரிருவரையும் சடிதியில் வதைப்பான். இக்கும்பகர்ணன் போருக்கே ஒரு வெற்றிக்கொடிபோன்றவன்; அரக்கர்களுக்கெல்லாம் மேலானவன்; ஆனால், அறிவின்மையால் நாட்டிச்சுகத்தில் விருப்பங்கொண்டு, எப்பொழுதும் தூங்குகின்றான். கும்பகர்ணன் எழுந்தானுயின், இக்கொடிய போரில் இராமனுல் நான் தோல்வியடைந்த துக்கம் நீங்கிவிடும். நான் இவ்விதமான சங்கடத்திலிருக்கும்பொழுது உபகாரம் பண்ணுவிட்டால், இந்திர

இராவணன் கும்பகர்ணனையெழுப்பச்சொல்லுதல்.

னுக்கு ஒப்பான பலமுள்ள இக்கும்பகர்ணனால், எனக்கு என்ன பிரயோஜனம்?" என்றான்.

அவ்வரக்கர்களும், அவ்விராவணன் சொன்னதைக் கேட்டு, 'காலமல்லாதகாலத்தில் எப்படி எழுப்புகின்றது'? என்று மிகவும் மனங்குழம்பியவர்களாய், கும்பகர்ணனது குகைக்குள் அரக்கர்கள் புகுதல். கும்பகர்ணனுடைய இருப்பிடத்துக்குச் சென்றார்கள். இராவணன் கட்டளையைப் பெற்ற அவ்வரக்கர்கள், மாமிசங்களைப் புஜித்துவிட்டு, கந்தங்களையும் புஷ்பங்களையும் உணவுகளையும் அவனுக்காக எடுத்துக்கொண்டு, விரைவாகச் சென்றார்கள். ஒரு யோசனை விசாலமுள்ளதும், அழகாக விளங்குகின்றதும், நான்கு திக்குக்களிலும் மிகுதியாக வாசனைவீசுகின்றதும், பெரியவாயிலமைந்ததுமான கும்பகர்ணன் தூங்குகின்ற அக்குகைக்குட் புகுந்து, மஹாபலசாலிகளான அரக்கர்கள், கும்பகர்ணனது மூச்சுக்காற்றால் தூக்கியெறியப்பட்டவர்களாய், வெகு சிரமத்தின்மேல் நேராகச்சென்று மிக்கமுயற்சியுடன் நுழைந்தார்கள். பொன்மயமான அழகிய இனிய அக்குகைக்குள் அவர்கள் நுழைந்ததும், வெகு பயங்கரமான தோற்றத்துடன் அவ்வரக்கப்புலி படுத்திருந்ததைக் கண்டார்கள். பர்வதமொன்று சிதறிக்கிடப்பதுபோலப் பெருங்குறட்டையுடனே படுத்து உறங்குகின்ற பெருந்தூக்கக்காரனான அக்கும்பகர்ணனை அவ்வரக்கர்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து எழுப்பலானார்கள். நேராகவளர்ந்த உரோமங்களால் மூடப்பட்ட தேகமுடையவனாய், பெருமூச்செறியுஞ் சர்ப்பத்திற்கு ஒப்பானவனாய், பெருங்குறட்டையால் எல்லாரையும் பயப்படுத்துபவனாய், பயங்கரமான உருவத்துடன் கூடியவனாய், பயங்கரமான மூக்குள்ளவனாய், பாதாளலோகம்போல விசாலமான முகமுள்ளவனாய், அரக்கர்கள் கும்பகர்ணனை யெழுப்புதல்.

தன்து தேகமுழுவதும் படுக்கையிற்பதிந்தவனுய், மாமிச ரக்தங்களின் நாற்றம் வீசப்பெற்றவனுய், பொன்னுற் செய்யப்பட்ட தோள்வளைகளை யணிந்தவனுய், கிரீடந் தரித்தவனுய், மகாபலம் பொருந்தியவனுய், சத்துருக்க ளுடைய வல்லமையை யடக்குகின்ற அரக்கப்புலியாகிய கும்பகர்ணனைக் கண்டு, மஹாதைரியசாலிகளான அவ் வரக்கர்கள், அக்கும்பகர்ணன்முன்பாக, அவனுக்குத் திரு ப்தியுண்டாக்கும்பொருட்டு மான்கள் எருமைகள் பன்றி கள் என்ற இவைகளின் மாமிசங்களை மேருமலைபோலக் குவியலாகக் குவித்தார்கள் ; அன்னக்குவியலையும், ஆச்சரி யமாகக் குவித்தார்கள். பின்னும், அவ்வரக்கர்கள், குடங் குடமாக இரத்தத்தையும் பலவித மத்தியங்களையும் அக்கும்பகர்ணன்முன்பாக நிறைத்து வைத்தார்கள். சிற ந்த சந்தனத்தை அவன்மேற் பூசினர்கள் ; இயற்கை நறு மணங்கமழுந் திவ்வியபுஷ்பமாலைகளைக்கொண்டு அவன் தேகத்தை மறைத்தார்கள்; திவ்வியபரிமளமுள்ள தூபங் களைக்கொண்டு புகைத்தார்கள் ; சத்துருக்களைத் தவிக்கச் செய்யும் அவனைப் பலவாறு தோத்திரமும் பண்ணினர் கள். அரக்கர்கள் அடிக்கடி மேகங்கள்போலவும் கர்ச்சித் தார்கள் ; சந்திரன்போல் வெண்ணிறமாக விளங்குஞ் சங் கங்களை யூதினர்கள். இவ்வளவு செய்தும் கும்பகர்ணன் எழுந்திராமையாற் கோபங்கொண்டவர்களாய், அரக்கர்க ளெல்லாரும், ஒருங்குசேர்ந்து கத்தினர்கள் ; சிங்கநாதஞ் செய்தார்கள் ; அவனைக் கைகளால் தட்டி எழுப்பினர்கள் ; அவன் உடம்பைப் புரட்டிப்புரட்டிப்பார்த்தார்கள். அவன் எப்படியாவது எழுந்திருக்கவேண்டு மென்று பெருஞ்சத் தஞ்செய்தார்கள். அவர்கள் சங்கவாத்தியம் பேரிகை பணவம் என்ற இவைகளை முழக்கியும் கைகளைத் தட்டியும் கர்ச்சித்தும் சிங்கநாதஞ்செய்தும் உண்டாக்கிய சத்தத்தால் பறவைகளெல்லாம் அஞ்சிநடுங்கியனவாய், எல்லாத்திசை க்களிலும் ஓடியும் ஆகாயத்திற் பறந்தும் தமது பயகாரணம்

நீங்காமையாற் பூமியில் விழுந்தன. எவ்வளவு பெருஞ் சத்தமிட்டும், பெருஞ்சரீரமுடைய அக்கும்பகர்ணன் எழுந் திராமலிருக்கவே, பெரிய அவ்வரக்கரெல்லோரும் முசுண்டி உலக்கை கதை என்ற இவைபோன்றவற்றை எடுத்துக் கொண்டு, பூமியில் சுகமாகத் தூங்குகின்ற அக்கும்பகர் ணனை அவ்வாயுதங்களாலும், மலைச்சிகரங்களாலும், மரங் களாலும், கைக்குத்துக்களாலும் அடித்து எழுப்பலானார் கள். கும்பகர்ணனென்ற அவ்வரக்கனது முகத்திலிரு ந்து வீசின மூச்சுக்காற்றின் முன்பாக, பலமுள்ளவர்களா யிருந்தபோதிலும் அவ்வரக்கர்கள் நிற்க வல்லமையற்றவ ரானார்கள். அதன் பிறகு, பதினாயிரம் அரக்கர்கள், தங்கள் வஸ்திரங்களை இழுத்துக்கட்டிக்கொண்டு, மிருதங்கம் பண வம் பேரி சங்கம் கடவாத்தியம் என்ற இவைகளை ஒரே காலத்தில் முழக்கினார்கள். அஞ்சன மலைக்கு ஒப்பான அவ்வரக்கர்கள் வாச்சியங்களை முழக்கியும் தாங்கள் பேரா ரவாரஞ்செய்தும் அவனை எழுப்பிப் பார்த்தார்கள்; அக்கும் பகர்ணனே எழுந்திருக்கவில்லை. எப்போது தங்களால் கும்பகர்ணனை எழுப்ப முடியவில்லையோ, அப்போதே அவர்கள், பின்னும் அதிகமான பெருமுயற்சி செய்யலா னார்கள். குதிரைகள் ஒட்டகங்கள் கோவேறுகழுதைகள் யானைகள் என்ற இவைகளை, அந்தக்கும்பகர்ணன்மீது செல்லும்பொருட்டு, தடிகள் சாட்டைகள் அங்குசங்கள் என்னும் இவைகளால் மோதியும், தாங்கள் பலங்கொண்ட மட்டும் சங்கம் பேரிகை மிருதங்கம் என்ற இவைகளை வாசித்தும் பார்த்தார்கள். மிக்க பெருஞ்சாட்டைகளைக்கொ ண்டும் தோமரங்களாலும் உலக்கைகளாலும் தங்கள் முழு பலத்தையும் கொண்டு மிகவும் ஓங்கிப்புடைத்தார்கள். அப்பெருஞ்சத்தம், மலைகளுடனும் காடுகளுடனும் கூடிய இலங்கை முழுவதும் நிரம்பிற்று; கும்பகர்ணன்மட்டும் எழுந்திருக்கவில்லை. அதன்மேல், அவ்வரக்கர்கள், ஆயி ரம் பேரிகைகளை ஆணிப்பொன்னற் செய்த குணில்களைக்

கொண்டு ஏககாலத்தில் நாற்புறத்திலுமாக அடித்தார்கள். இவ்வாறுசெய்தும், கும்பகர்ணன், பிரமதேவனுடைய சாபத்திற்கு வசப்பட்டவனுய் உறக்கம்விட்டு எழுந்திராமலிருக்கவே, அவ்வரக்கர்கள் கோபங்கொண்டார்கள். அவ்வாறு பயங்கரமான பராக்கிரமமமைந்த அவர்களெல்லோரும் அதிககோபங்கொண்டபின்னும், அவ்வரக்கனை எழுப்புமாறு, சிலர் முஷ்டியினுற் குத்தினுர்கள் ; வேறுசிலர், பேரிகைகளையறைந்தார்கள் ; மற்றுஞ் சிலர், பெருங்கர்ச்சனை பண்ணினுர்கள் ; பின்னுஞ் சிலர், கும்பகர்ணனுடைய தலைமயிர்களைப் பற்றியிழுக்கலானுர்கள் ; இன்னுஞ் சிலர், அவன்காதுகளைக் கடித்தார்கள். அன்றியும், சிலர், ஜலத்தைக் குடங்குடமாக அவன் காதுகளில் ஊற்றினுர்கள். இவ்வளவு செய்தும், பெருநித்திரைக்குப் பரவசனுகித் தூங்குகின்ற அக்கும்பகர்ணன் கொஞ்சமாவது அசையவுமில்லை. பலசாலிகளாகிய வேறுசிலர், கூடம் முத்கரம் என்னும் ஆயுதங்களைக் கையில் எடுத்துக்கொண்டு, அவன் தலையிலும் மார்பிலும் மற்றையுறுப்புக்களிலும் புடைத்தார்கள். கயிற்றுக்கட்டுக்களால் உறுதியாகக் கட்டப்பட்டுள்ள சதக்நியென்னும் பீரங்கிகளால் நாற்புறத்திலும் நெருப்பிட்டு அதிர்ச்சியுண்டாக்கினுர்கள் ; பேருடலையுடைய அவனை அவ்வரக்கர்கள் எவ்விதமாகத்தான் தொந்தரவுசெய்தபோதிலும், அவன் விழித்துக்கொள்ளவில்லை.

அதன்பிறகு, ஆயிரம்யானைகளை அவன்மேல் ஓட்டினுர்கள் ; அதனுல், கும்பகர்ணன் கொஞ்சம் உணர்ச்சியடைந்து, ஸ்பர்சத்தை யுணர்ந்தான். மலைகளும் மரங்களும் தன்மேல் விழ, அவைகளையும் அவன் கவனிக்காமல், தூக்கங் குறையவே, வெகு பசியால் வருந்தியவனுய், கொட்டாவி விட்டுக்கொண்டு எழுந்து உட்கார்ந்தான். அவ்வரக்கன், யானையினுடல்போலப் பருத்தும்

கும்பகர்ணன் விழித்துக்கொள்ளுதல்.

மலைச்சிகரம்போலுறுதியாயு மிருந்த பெருவலியமைந்த தனது கைகளை யுதறிக்கொண்டும், வடவைக்குதிரையின் வாயைப்போன்ற தனது வாயைத்திறந்துகொண்டும் வெகு விகாரமாகக் கொட்டாவிவிடலானன். அவன் கொட்டாவி விட்டபொழுது, பாதாளலோகம் போன்ற அவன் வாயானது, மேருமலையினுச்சியில் விளங்குஞ் சூரியன் போலக் காணலாயிற்று. அதிகபலமுள்ள அவ்வரக்கன் தூக்கம் நன்றுகநீங்கிக்கொட்டாவிவிட்டுக்கொண்டு உட்கார்ந்ததும், அவன் மூச்சுக்காற்றானது மலையினின்றும் பிரசண்ட மாருதம் வீசுவதுபோல வீசலாயிற்று. எழுந்து நின்ற பொழுது, ஆபரணங்களை யணிந்துள்ள கும்பகர்ணனது தோற்றமானது, கோடைக்காலத்தின் முடிவில் கொக்குக் கூட்டங்களுடன் விளங்கும் மழை பொழியப்போகின்ற மேகம்போலக் காணப்பட்டது. மண்டி யெரியுந் தீப்போலவும் மின்னலுக்கு ஒப்பான காந்தி பொருந்தியும் விளங்கிய அவனுடைய இருகண்களும், சனி அங்காரகன் என்ற இருகிரகங்கள்போலத் தோன்றின.

அதன்பிறகு, அங்கிருந்த அரக்கர்கள், மிகுதியாக வைத்திருந்த பலவகையான உணவுகளை யெல்லாம் அவனுக்குக் காட்டினர்கள். மகாபலம் பொருந்திய அவ்வீரன், வராகம் எருமை முதலிய அவைகளையெல்லாம் புசித்தான். அதிகம் பசித்தவனாய் மாமிசங்களைப் புசித்து, தாகித்தவனாய் இரத்தத்தையும் குடித்தான். அப்போது, இந்திரசத்துருவாகிய அவன் கொழுப்புக்களையுடைய கும்பங்களையும் மத்தியங்கள் வைக்கப்பட்டிருந்த பானைகளையும் குடித்து ஒழிக்கலானன்.

கும்பகர்ணன் உண்ணுதல்.

அவன் பசிநீங்கி மனம் நிரம்பினனென்று அறிந்துகொண்டதும், அவ்வரக்கர்கள், அவன்சமீபத்திற்சார்ந்தார்கள்; அவனைத் தங்களுடைய தலையால் வணங்கிச் சூழ்ந்துகொண்டு நின்றார்கள். தூக்கத்தால் மலராமலும் கலங்கியு

மிருந்த கண்களுடன் காணப்பட்ட அவ்வரக்கன், தன்னைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் பார்க்கும்பொழுது, அவ்வரக்கர்களைக் காணலானன். உடனே, அவ்வரக்கக்காளை,

கும்பகர்ணன் வினை.

அரக்கர்களுக்கெல்லாம் நல்வார்த்தை சொல்லி, தான் எழுப்பப்பட்டதில் ஆச்சரியமடைந்தவனாய், அவர்களைப் பார்த்துப் பின்வருமாறு வினவலானன்:—"என் என்னை நீங்கள் இவ்வளவு விரும்பி எழுப்பினீர்கள்? அரக்கமன்னவர் சௌக்கியமாக இருக்கின்றாரா? அவருக்கு ஒரு வகைப் பயமும் இல்லையா? இப்பொழுது, நீங்கள் விரைந்து எழுப்பினதனால், பிறரிடத்திலிருந்து அவர்க்குப் பயம் திண்ணமாக உண்டாயிருக்கவேண்டும்; இன்றைய தினமே நான் எனது தமையனார்க்கு வந்திருக்கின்ற பயத்தை வேருடன் பிடுங்கிவிடுகின்றேன். நமது சத்துரு மகேந்திரனுக இருந்தபோதிலும் அவனை விழச்செய்கின்றேன்; பெருநெருப்பாயிருந்தாலும் அவித்துவிடுகின்றேன். அல்பகாரணத்துக்காக எனதுபெரியவர் தூங்கும் என்னை எழுப்பியிருக்க மாட்டார்; ஆகையால், அரக்கர்களே! என்னை எழுப்பிய காரணத்தை உண்மையாகச் சொல்லுங்கள்" என்றான்.

இவ்விதமாகக் கோபத்துடன் மகாபலவானுகிய கும்பகர்ணன் கேட்டதும், இராவணனுடைய மந்திரியாகிய யூபாக்ஷன் அஞ்சலிப்பண்ணிக்கொண்டு மறுமொழி சொல்லலுற்றான்: — "நமக்கு ஒருகாலும் தேவர்

யூபாக்ஷனது மறுமொழி.

களிடமிருந்து ஒருவித பயமும் வராது. இப்பொழுது மனிதர்களிடமிருந்து பெரும்பயம் நம்மை அணுகிவருத்துகின்றது. அரசரே! இப்பொழுது நமக்கு மனிதர்களிடமிருந்து எவ்விதமான பயம் வந்திருக்கின்றதோ, அவ்விதமான பயம், இதுவரையில் தேவர்களிடமிருந்தாவது அசுரர்களிடமிருந்தாவது வந்ததேயில்லை. மலைபோன்ற உடம்புகளுடன் விளங்கும்

வானரர்கள் இவ்விலங்கையைச் சூழ்ந்துகொண்டிருக்கிறார்கள். சீதையைத் தூக்கிவந்த காரணத்தால் மனம் பதைத்து நம்மை எதிர்த்து வந்திருக்கும் இராமனிட மிருந்துதான் நமக்குப் பயம் இப்பொழுது வந்திருக்கின்றது; ஒரு வானரன், முன்பு இந்நகரத்தைத் தீயிட்டுக்கொளுத்திவிட்டான்; அக்ஷகுமாரனை அவன் பரிவாரங்களுடனும் யானைகளுடனும் வதைத்தான். தேவர்களுக்கெல்லாம் கண்டகரான இராவணரும், சூரியன் போன்ற பராக்கிரமமுள்ள இராமனல் போரில் உயிரிறந்தவர்போலச் செய்யப்பட்டு விடப்பட்டார். தேவர்கள் தைத்தியர்கள் தானவர்கள் என்ற இவர்களால் செய்யப்படாத உபத்திரவஞ் செய்யப்பெற்று, நமது அரசர், இராமனல், உயிருண்டோ இல்லையோ என்னுமாறுசெய்துவிடப்பட்டார்'' என்றான்.

யூபாக்ஷன் அவ்வண்ணம் தனது உடன்பிறந்தவனது தோல்வியைச் சொல்லக் கும்பகர்ணன்கேட்டு, தனது கண்களைச் சுழற்றிக்கொண்டு அந்த யூபாக்ஷனை நோக்கியவனாய், "யூபாக்ஷனே! இப்பொழுதே எல்லா வானர சேனைகளையும், இலட்சுமணனையும், இராமனையும் போரில் நான் கொன்றுவிட்டு, அதன்பிறகே எனது தமையனுரைப் பார்க்கப்போகின்றேன். அரக்கர்களை வானரர்களுடைய இரத்தத்தால் திருப்தி செய்விக்கப்போகின்றேன். இராமலட்சுமணர்களுடைய இரத்தத்தை நானே குடிக்கப்போகின்றேன்" என்றான்.

கும்பகர்ணனது சினமொழி.

ரோஷத்தால் குற்றம்பெருகிச் சொருக்குடன் கூறிய அக்கும்பகர்ணனது சொல்லைக் கேட்டு, அரக்கப் போர்வீரர்களில் முக்கியனான மகோதரனென்பவன், அஞ்சலி செய்துகொண்டு, "மகாபாகுவே! முதலில் தாங்கள் இராவணருடைய பேச்சைக் கேட்டு, அதிற் குணதோஷங்களை ஆராய்ந்து, அதன் பின்னரே சத்துருக்களைப் போரில் வெல்

மகோதரனது மதி.

வது நலம்" என்றான். மகோதரன் சொன்னதைக் கேட்டதும், மகா பராக்கிரமசாலியாய்ப் பலவானான அக்கும்பகர்ணன் அரக்கர்கள் தன்னைச் சூழ்ந்துவர வெளிப்புறப்படக் கருதினான்.

கும்பகர்ணனை யெழுப்பியசெய்தியை அரக்கர்கள் இராவணனிடஞ் சொல்ல, அவன் அவனை அங்கு அழைத்து வருமாறு கட்டளையிடுதல்.

பயங்கரமான கண்களும் உருவமு முள்ள கொடிய பராக்கிரமசாலியான அக் கும்பகர்ணனை, எழுப்பியபிறகு, இராவணனிடம் அவன் வருகையைத் தெரிவிக்குமாறு அரக்கர்கள் இராவணன்மாளிகைக்கு வெகுவேகமாக ஓடினார்கள். சிறந்த ஆசனத்தில் வீற்றிருந்த இராவணனிடஞ் சென்று, அரக்கர்களெல்லாரும் அஞ்சலிபண்ணிக் கொண்டு, அவனைப்பார்த்து "ராக்ஷஸவேந்தரே! தங்கள் தம்பியாகிய கும்பகர்ணர் எழுப்பப்பட்டார். அவ்விடமே சென்று அவரைப் பார்க்க எண்ணமா? அல்லது, அவரை இங்கு அழைத்துவர உத்தரவா?" என்றார்கள். இராவணனும் வெகுசந்தோஷத்துடன் அவ்வரக்கர்களைப் பார்த்து "அவனை நான் இவ்விடத்திற் பார்க்க விரும்புகின்றேன். தக்கமரியாதைபண்ணி அவனை இவ்விடம் அழைத்துவாருங்கள்" என்றான்.

அரக்கர்கள் கும்பகர்ணனை இராவணனிடம் வருமாறு அழைத்தல்.

"அப்படியே" என்றுசொல்லி, அவ்வரக்கர்கள், கும்பகர்ணனிடஞ்சென்று இராவணனுடைய கட்டளைப்படியே பின்வருமாறு சொல்லலானார்கள்:— "அரக்கர்களெல்லாருள்ளுஞ் சிறந்தவராகிய மன்னவர், தங்களைப் பார்க்க விரும்புகின்றார். ஆகையால், அவரைச் சந்தோஷப்படுத்துமாறு அவ்விடம் வாருங்கள்" என்றார்கள்.

ஒருவராலும் அணுகமுடியாத மகாபாகுவாகிய கும்பகர்ணன் தனது தமையனார் கட்டளையை அறிந்துகொண்டு,

"அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி, தனது படுக்கையைவிட்டு எழுந்தான். தனதுமுகத்தைக் கழுவிக்கொண்டு சந்தோஷத்துடன் ஸ்நானஞ்செய்து உயர்ந்த வஸ்திராபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு தனது தேகத்திற்கு அதிக வலுவைக் கொடுக்கும் மத்தியத்தைக் குடிக்கக் கருதி விரைந்தான். பிறகு அவ்வரக்கர்கள் இராவணன் கட்டளையால் விரைந்தவர்களாய், பலவித மத்திய கும்பங்களைக் கொண்டுவந்து கொடுத்தார்கள். கும்பகர்ணன், இரண்டாயிரம் பானைகளிலிருந்த மத்தியத்தைக் குடித்துவிட்டுப் புறப்படலானன். பானத்தாற் கொஞ்சம் மதமேறினவனாய், ஒளியாலும் பலத்தாலும் விளங்கிக்கொண்டு, இயற்கையிற் கொழுத்த கும்பகர்ணன், மகிழ்ந்து பிரளயகாலத்து யமன்போலத் தோன்றினன். அவன் எல்லா அரக்கர்களாலுஞ் சூழப்பட்டுத் தனது தமையன் மாளிகைக்குச் சென்றபொழுது, அவன் வைத்த காலடியால் பூமியே நடுங்கிற்று. ஆயிரங்கிரணங்கள்படைத்த சூரியபகவான் இவ்வுலகத்தைக் கிரணங்களினால் விளங்கப்பண்ணுவதுபோல, தனது தேககாந்தியால் ராஜவீதிகளைப் பிரகாசிக்கச்செய்துகொண்டு, கும்பகர்ணன் எல்லாவரக்கர்களும் அஞ்சலிபண்ணித் தன்னைச் சூழ்ந்துவர, பிரமதேவனுடைய மாளிகைக்கு இந்திரபகவான் ஏகுவதுபோல, இராவணனுடைய மாளிகைக்குச் சென்றனன்.

கும்பகர்ணன் இராவணனை நோக்கிச் செல்லுதல்.

தனது சத்துருக்களை வதைக்கின்றவனும், ஒப்பற்ற வல்லமையமைந்தவனும், மலைபோல் ஓங்கி வளர்ந்தவனுமான அவ்வரக்கவீரன் ராஜவீதியில் நடந்ததை, அந்நகரத்துக்கு வெளியிலிருந்த வானரர்களும் வானரசேனைத் தலைவர்களும், திடீரென்று பார்த்து பயத்தால் நடுங்கலானார்கள். எல்லாருக்கும் அடைக்கலமான ஸ்ரீராமரைச்

கும்பகர்ணனைக் கண்ட வானரர்களின் அச்சம்.

சிலர் சரணமாக அடைந்தார்கள்; சிலர் மனம்வருந்தி விழுந்தார்கள்; சிலர் வருத்தமடைந்தவர்களாய், பல திக்குக் களிலும் ஓடினார்கள்; சிலர் பயத்தால் பூமியிற் குப்புறப் படுத்தார்கள். மலையின் சிகரத்துக்கு ஒப்பானவனுய்க் கிரீடமணிந்து தனது ஒளியால் சூரியபகவானைத் தொடுகின்றவன்போலக் காணப்பட்டவனும் ஓங்கி வளர்ந்தவனுமான வியப்படையத்தக்க உடம்பையுடைய அக்கும்பகர்ணனை வானரர்கள், கண்டு பயத்தால் நடுங்கி, அங்குமிங்கும் கலைந்தோடினார்கள்.

அறுபத்தோராஞ் சருக்கம்: கும்பகர்ணனைப்பற்றி விபீஷணர் ஸ்ரீராமரிடஞ் சொல்லுதல்.

அதன்பிறகு, மகாவீரராகிய ஸ்ரீராமர், முற்காலத்தில் ஆகாயத்தில் அடிவைத்தளந்த நாராயணன் போலவும் நீருண்டமேகம்போலவும் விளங்குகின்ற பொற் றேர்ள்வலையணிந்த மலைபோன்ற பெருந்தோற்றமுடைய அவ்வரக்கனைப் பார்த்ததும், தமது வில்லைக் கையிற் சித்தமாகக்கொண்டு கிரீடமணிந்துள்ள அக்கும்பகர்ணனை உற்றுப்பார்த்தார். அப்பொழுது அவனை வானரசேனை அடிக்கடிபார்த்து அஞ்சி யோடுவதையும், அவர்கள் அவ்வாறு ஓடுவதைக் கண்டு அவ்வரக்கன் உற்சாகங்கொண்டு வளர்வதையும் பார்த்து, ஸ்ரீராமர், ஆச்சரியப்பட்டு, விபீஷணரைப் பின்வருமாறு வினவலானார்:—"கிரீடமணிந்து மலைக்கு ஒப்பான வடிவம்படைத்த அந்தப் பூனைக்கண்ணன் யார்? மின்னற்கொடியுடன்கூடிய கார்மேகம்போல இலங்கையிற் காணப்படுகின்றனை இவன் இவ்வுலகத்துக்கே ஒரு கொடிபோலத் தோன்றுகின்றன். வீரரே! இவ்வளவு உயர்ந்து வளர்ந்தவன் இவன்

இராமர் கும்பகர்ணனைப்பற்றி யாவனென விபீஷணரை வினவுதல்.

ஒருவன்தான். இவனைக் கண்டு பயந்து வானரர்களெல் லோரும் அங்குமிங்கும் நிலைகெட்டு ஓடுகின்றார்கள். பெரு வடிவமுடைய இவன் யார்? எனக்குச் சொல்லுங்கள்: இவன் அரக்கனு? அல்லது, அசுரனு? நான், இவனைப் போன்ற பிராணியை இதுவரையிலும் பார்த்ததேயில்லை" என்றார்.

விபீஷணர் கும்பகர்ணனைத் தெரிவித்தல்.

மாசற்ற சக்கரவர்த்தித் திருமகனான அவ்விராமர் இவ்வண்ணம் கேட்டதும், மகாபுத்திமானு கிய விபீஷணர், அவரைப்பார்த்துப் பின் வருமாறுசொல்லத்தொடங்கினார்:—"எவ னொருவன் சூரியபகவானுடைய குமாரனு கிய யமனையும் இந்திரனையும் போரில் வென்றானே, அப் படிப்பட்ட பிரதாபமுள்ள இவன் விசிரவஸின் குமாரனு கிய கும்பகர்ணனென்பவன். இவனுடைய ஆக்குதிக்கு ஒப்பான அரக்கன் மற்றொருவன் இல்லை; இராகவரே! இவன், யுத்தத்தில் பலமுறைகளில் தேவர் தானவர் யக்ஷர் புஜங்கர் அரக்கர் கந்தர்வர் வித்தியாதரர் கின்ன ரர் என்ற இவர்களைத் தோற்கடித்திருக் கின்றான். அழகற்ற கண்களைப்பொருந்திய வனும் மகாபலம் அமைந்தவனுமான கும் பகர்ணன் தனதுகையிற் சூலம் ஏந்திவந்தபொழுது, தேவர் 'இவன் யமன்தான்' என்று மயங்கி, அவனைக் கொல்ல வல்லமையற்றவரானார்கள். இந்தக் கும்பகர்ணன், இயல்பாகவே வெகுபராக்கிரமமும் பலமும் பொருந்திய வன்; மற்றை அரக்கர்களுக்கோ வரதானத்தினாற் பலம் உண்டாயிருக்கின்றது. பேருடல்படைத்த இவன் பிறந்த வுடனே, தனது பசியைப் பொறுக்கமுடியாமல் பல ஆயி ரக்கணக்கான பிராணிகளைப் புசிக்கலா னான். அவ்வாறு இவன் புசிக்க ஆரம் பித்தபொழுது, ஜகங்களெல்லோரும் மிக்க அச்சத்தால் வருந்தித் தேவேந்திரனை அடைக்கலமாக அடைந்து, அச்செய்தியையும் தெரிவித்தார்

கும்பகர்ணனது கொடியவலிமை.

குடிகள் இந்திரனைச் சரண் புகுதல்.

கள். அப்பொழுது, வச்சிராயுதமுடைய அந்த மகேந்திரன், வெகுகோபங்கொண்டு, தன்துகூரிய வச்சிராயுதத்தால் கும்பகர்ணனைக் குமைத்தான். அவ்வாயுதத்தால் அடியுண்ட பெருவலியனை அக்கும்பகர்ணன், சிறிதுகலங்கி மிக்க சினங்கொண்டு மிகவும் கர்ச்சிக்கலானன். புத்திமானகிய அக்கும்பகர்ணன் அவ்வாறு கர்ச்சித்தபொழுது, அப்பெருஞ்சத்தத்தைக் கேட்டுப் பயந்த பூமியானது, மீண்டும் மீண்டும் பயந்தது. அதன்பிறகு, கோபங்கொண்ட கும்பகர்ணன், ஐராவதத்தின் தந்தங்களில் ஒன்றைப் பிடுங்கி, அதனால் இந்திரன்மார்பில் அடித்தான். கும்பகர்ணன் அடித்த அடியால் இந்திரன் வெகுகோபங்கொண்டான். தேவர், மகாருஷிகள் தானவர் என்ற இவர்களெல்லாரும் அப்போது வருந்தினர்கள். தேவேந்திரன் எல்லாப்பிராணிகளையும் உடன் அழைத்துக் கொண்டு பிரமதேவனிடம் சென்றான். அப்பிராணிகளெல்லாம், அக்கடவுளினிடம் கும்பகர்ணனுடைய கொடியசெயலைப் பற்றிச் சொல்லத்தொடங்கி, அவன் பிரஜைகளைப் புசிப்பதையும், தேவர்களை வதைப்பதையும், ஆச்சிரமங்களை அழிப்பதையும், பிறர் மனைவியரைக் கவர்வதையும் முறையிட்டார்கள். "இவ்வண்ணம் இவ்வரக்கன் குடிகளைப் புசிப்பானேயானால், சடிதியில் இவ்வுலகத்தில் ஒரு பிராணியாவது இருக்கமாட்டாது" என்று தேவேந்திரன் உரைத்தான். இந்திரன் இவ்விதமாகச் சொன்னதைக் கேட்டு, இவ்வுலகங்களை யெல்லாம் படைத்த பிரமதேவன், அரக்கர்களையெல்லாம் தன்முன்னே வரவழைத்து, அவர்களுள் கும்பகர்ணனைப் பார்த்தார்.

கும்பகர்ணன் இந்திரனை வெல்லுதல்.

இந்திரன் முதலியோர் பிரமதேவனிடம் முறையிடுதல்.

அக்கடவுள், அக்கும்பகர்ணனைக் கண்டமாத்திரத்தில் நடுங்கினர். அதன்பிறகு, அவனை ஒருவாறு சந்

தோஷப்படுத்திச் சமீபத்தில் வரவழைத்து அவ்வரக்கனைப்பார்த்து, "இவ்வுலகத்தைப் பாழாக்குவதற்கென்றே புலஸ்தியர் உன்னை உண்டாக்கியிருக்கின்றார்; இது நிச்சயம்; ஆகையால், இன்று முதல் நீ இறந்தவனுக்குஒப்பாய்ப் படுத்திருக்கப்போகின்றாய்" என்றார். அவ்வண்ணம் பிரமதேவன் சாபமிடவே, பிறகு, அவன் இராவணனுக்கு முன்பாகத் தூக்கங்கொண்டு கீழ்விழுந்தான். பிறகு, இராவணன் மிகவுங் கலங்கி, பிரமதேவனைப் பார்த்து "தாங்களே வளர்த்த பொன்மரத்தைப் பலன்கொடுக்குஞ் சமயத்தில் வெட்டுகின்றீர்கள். பிரஜாபதியே! தங்களுடைய கொள்ளுப் பேரப்பிள்ளையை இவ்விதமாகத் தாங்கள் சபிப்பது நியாயமன்று. தாங்கள் சொன்ன சொற்கள் ஒருநாளும் வீண்போகமாட்டா; ஆகையால், இக்கும்பகர்ணன் இதுமுதல் தூங்கத்தான் போகின்றான். 'இவன் தூங்கும் காலம் இவ்வளவு; இவன் விழித்திருக்கும் காலம் இவ்வளவு' என்று ஒரு வரம்பைத் தாங்களே ஏற்படுத்தவேண்டும்" என்றான். இராவணன் சொன்னதைக் கேட்டு, பிரமதேவன் மறுமொழி சொல்லலானார்:— "இவன் ஓராறு மாதகாலம் தூங்கிவிட்டு ஒருநாள் விழித்திருப்பான். இவன் அந்த ஒருநாளில் பசியால் வருந்தி, பூமியில் தனது வாயைத்திறந்தபடியே நடந்து தனக்குக் கிடைக்கும் பிராணிகளை யெல்லாம் கோபங்கொண்ட அக்கினிபோலப் புசிப்பான்" என்றார்.

பிரமன் கும்பகர்ணனுக்குச்சாபங் கொடுத்தல்.

அரக்கர்கட்குஅரசனுகிய அவ்விராவணன், வருத்தமடைந்து, தங்களுடைய வல்லமையைக் கண்டு பயந்தவனுய், இக்கும்பகர்ணனை எழுப்பியிருக்கின்றான். வீரரே! ஆகையால்தான், கொடிய பராக்கிரமமுடைய இவ்வரக்கவீரன், இப்பொழுது தனது மாளிகையை விட்டு வெளி

பிரமன், இராவணன் விருப்பத்தின்படி, கும்பகர்ணனுக்குத் தூங்கிவிழிக்குங் காலங்களை வரையறுத்தல்.

யில் வந்து, வெகுகோபத்துடன் வானரர்களைப் புசித்துக்கொண்டு விரைந்து சென்றான். இப்போது கும்பகர்ணனைக் கண்டமாத்திரத்திலேயே வானரர்கள் அஞ்சியோடுகின்றார்கள். இவன் கோபங்கொண்டு போரிட வருகையில், வானரர்கள் இவனுக்கு முன் எவ்வாறு நிற்கமாட்டுவர்? வானரர்கள் பயமடையாமலிருக்குமாறு 'இது, ஓங்கியுள்ள ஒரு யந்திரம்' என்று சொல்லவேண்டும்; இப்படி யறிந்தால், வானரர்கள் தங்கள்பயத்தை ஒருவாறு நீக்குவார்கள்" என்றார்.

கும்பகர்ணன் செல்லுங் காரணத்தை விபீஷணர்தெரிவித்தல்.

பலகாரணங்களுடன், விபீஷணர் அவ்வாறு இனிதாகச்சொன்னதையெல்லாம், ஸ்ரீராமர், கேட்டு, சேனபதியாகிய நீலனை நோக்கி "அக்கினிகுமாரனே! நீ சென்று நமது சேனைகளெல்லாவற்றையும் வகுத்து நிறுத்துவாய். அவை, இலங்கையின் கோட்டைவாயிலிலும், கோட்டைவாயிலின்பக்கங்களிலிருக்கும் வீரர்கள்சஞ்சரிக்குமிடங்களிலும், வழிகளிலும், மலைச்சிகரங்களையும் விருட்சங்களையும் பாறைகளையும் குவியல் குவியலாகக் குவித்துவைத்துக் கொண்டிருக்கட்டும். எல்லாவானரர்களும் தங்கள் கைகளில் மலைகளையும் ஆயுதங்களையும் கொண்டு சித்தமாக இருக்கட்டும்" என்றார்.

இராமர் நீலனுக்குக் கட்டளையிடுதல்.

ஸ்ரீராமரிட்ட கட்டளையைப் பெற்ற சேனபதியாகிய நீலனும், அவ்வேந்தர் சொன்னபடிசெய்ய வானரசேனைகளுக்குக் கட்டளையிட்டான். பிறகு கவாக்ஷன் சரபன் அனுமான் அங்கதன் என்ற மலைபோலக் காணப்படுந் தேகங்களையுடைய இவர்களெல்லாரும், வெகுவேகமாகச் சென்று, பெருமலைச் சிகரங்களைக் கொண்டுவந்து, கோட்டைவாயில்களின் வெளியிற் குவித்து வைக்கலானார்கள்.

நீலன் இராமர் கட்டளைப்படி செய்தல்.

வெகுவீரர்களான வானரர்கள், இராமபிரான் இட்ட கட்டளையைக் கேட்டு, தங்கள்கைகளில் பெரியமரங்களை எடுத்துக்கொண்டு, அவைகளால் தங்கள் சத்துருக்களை வருத்தலானார்கள். கைகளில் மலைகளை எடுத்து ஓங்கிக் கொண்டு நின்ற பயங்கரமான அவ்வானரசேனையானது, பர்வதத்தைச் சார்ந்துகொண்டு நிற்கும் பெரிய மேகங்களின் கூட்டம்போல விளங்கிற்று.

அறுபத்திரண்டாஞ் சருக்கம்:
இராவணன் கும்பகர்ணனிடம் தனக்கு இராமரால் நேர்ந்ததைச் சொல்லுதல்.

ஒருவராலும் வெல்லமுடியாத மஹாபராக்கிரமசாலியாகிய அவ்வரக்கப்புலியும், தூக்கம் தனது கண்ணைச் சுழற்ற, மதக்களிப்பினால் அசைந்துகொண்டே, பலவகைச் சம்பத்துக்களும் நிரம்பியிருக்கும் அந்நகரத்து வீதிகளின் வழியாகப் பல அரக்கர்கள் தன்னைச் சூழ்ந்துவர நடந்து சென்றான். வீட்டுக்குவீடு அவன்மீது மலர்மாரிபொழிந்தார்கள். பொன்னாலாகிய சாளரங்கள் வைக்கப்பட்டுச் சூரியன்போல விளங்கிய அழகும் விசாலமுமான இராவணனுடைய மாளிகையை, அவ்வரக்கவீரன் கண்டான். அப்போது, மேகக்கூட்டத்திற் சூரியபகவான் புகுவதுபோல அம்மாளிகைக்குள் நுழைந்து, அக்கும்பகர்ணன், தூரத்திலே ஆசனத்தில் வீற்றிருந்த தனது தமையனை, தேவேந்திரன் ஆசனத்தில் வீற்றிருக்கும் பிரமதேவனைக் காண்பதுபோலக் கண்டான். பல அரக்கக் கூட்டங்களையுடைய தனது உடன்பிறந்தவனது அரண்மனையைநோக்கி அக்கும்பகர்ணன் வந்தபொழுது, தனது காலடியால் இவ்வுலகத்தையே நடுங்கச்செய்தான்; அவன், தனது மூத்தவ

கும்பகர்ணன் இராவணனை யடைதல்.

னுடைய அரண்மனைசேர்ந்து, பலகட்டுக்களையும் கடந்து, தனக்குப்பெரியவன் புஷ்பக விமானத்தின்மேல் வெகு விசனத்துடன் வீற்றிருந்ததையுங் கண்டான்.

இராவணனும், தனக்குச் சமீபத்தில் கும்பகர்ணன் வந்ததைப் பார்த்து, வெகுசந்தோஷமடைந்து, சரேலென்று எழுந்து, அவனைத் தனக்கருகில் அழைத்துக்கொண்டான். மகாபலம்பொருந்திய கும்பகர்ணனும், கட்டிலிலுட்கார்ந்த தனது தமையனுடைய பாதங்களை வணங்கி, "என்ன சமாசாரம்?" என்று வினவினான். இராவணனும், வெகு சந்தோஷத்துடன் எழுந்து தனது தம்பியைத் தழுவிக்கொண்டான். அந்தக்கும்பகர்ணன் தனது மூத்தவனால் தழுவப்பெற்று, முறைப்படியே கொண்டாடப்பட்டவனாய், அழகான சிறந்த ஆசனமொன்றையடைந்தான்.

கும்பகர்ணன் என்ன விசேஷமென்று வினவுதல்.

பலசாலியாகிய அந்தக் கும்பகர்ணன் அவ்வாசனத்தில் உட்கார்ந்து, தனது கண்கள் கோபத்தாற் சிவக்க, இராவணனைப் பார்த்துப் பின்வருமாறு கேட்கலானான்:— "வேந்தரே! என்னகாரணத்திற்காக விரும்பி என்னை எழுப்பினீர்கள்? யாரிடமிருந்து தங்களுக்குப் பயம் உண்டாயிருக்கின்றது? யார் இன்றையதினமே மடியவேண்டும்? சொல்லுங்கள்" என்றான்.

இராவணனும், கோபமடைந்திருந்த தனது தம்பியைக் கோபத்தாற் சுழன்றுகொண்டிருந்த கண்களாற் பார்த்துப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்:— "மஹாபலசாலியே! நீ வெகு நாளாகத் தூங்குகின்றாய். சுகத்திலே மூழ்கியிருக்கும் நீ, எனக்கு இராமனிடமிருந்து வந்திருக்கும் பயத்தைக் கொஞ்சமேனும் உணராமாட்டாய். தசரதகுமாரனாகிய அவ்விராமன், சுக்கிரீவனுடனும் அவனது சேனையுடனும் சமுத்திரத்தைத் தாண்டிவந்து, நம்மை வேருடன்

இராவணன் விடை.

அழிக்கின்றன். அந்தோ! இலங்கையின் தோட்டங்களும், தோப்புக்களும், இராமனுல் சேதுவின்வழியாகச் சுகமாக வந்த வானரசமூத்திரங்களால் நிரப்பப்பட்டிருக்கின்றன காண். அரக்கர்களில் முக்கியமாக இருந்தவர்களை, வானரர்கள், போரில் வதைத்திட்டார்கள்; போரில் வானரர்கள் மடிந்ததை நான் ஒருகாலும் பார்க்கவில்லை. போரில் வானரர்களை முன்பு ஒருபோதும் நான் வென்றதில்லை. ஆகையால், இப்பொழுது பயம் உண்டாயிற்று. மகாபலம் பொருந்தியவனே! இந்நகரத்தைக் காப்பாற்றுக. இப் பொழுது, நீ, இவ்வானரர்களை நாசஞ்செய்வாயாக; அதன் பொருட்டுத்தான், உன்னை நான் இப்போது எழுப்பியது. எனதுபாக்கியம் முழுதும் அழிந்துவிட்டதென்பதை உண் மையாக அறிவாய். சிறு குழந்தைகளும் கிழவர்களும் மாத்திரம் உயிருடன் மிகுந்திருக்கப்பெற்ற இந்நகரத்தைக் காப்பாற்றுக. மகாபாகுவே! தமையனுர்பொருட்டாக, ஒருவராலும்செய்யமுடியாதகாரியத்தைச் செய்க. சத்துருக் களைத் தவிக்கச்செய்கின்ற தம்பியே! நான் இதுவரையில் உன்னைப் பார்த்து இவ்வாறு சொன்னது உண்டோ? உன் னிடம் எனக்கு நட்பும் அதிகம்; மதிப்பும் அதிகம். ராக்ஷஸ சிரேஷ்டனே! தேவர்களும் அசுரர்களும் போர்செய்கையில், நீ, அணிவகுத்து, தேவர்களையும் அசுரர்களையும் பலமுறை வென்றிருக்கின்றாய். பயங்கர மான வல்லமை பொருந்தியவனே! அப்படிப்பட்ட உனது வல்லமைமுழுவதையும் கைப்பற்றிக்கொள். உன் னைப்போன்ற பலமுள்ளவன் ஒருவனும் இல்லை. போரில் ஆசைகொண்டவனே! சுற்றத்தாரிடத்தில் அன்புள்ள வனே! எனக்கு இப்பொழுது எது பிரியமோ, எது நன்மையோ, சிறந்த அதனையே செய்வாய்; பெருங்காற் றுக் கிளம்பிச் சரத்காலமேகத்தை அழிப்பதுபோல, நமது சத்துருக்களுடைய சேனையை உன்னுடைய வல்லமை யால் நாசம்பண்ணுவாயாக" என்றான்.

அறுபத்துமூன்றுஞ் சருக்கம்:
கும்பகர்ணன் இராவணனுக்கு நற்புத்தி சொல்லுதல்.

அவ்விராவணன் புலம்பியதைக் கேட்டு, கும்பகர்ணன், சிரித்துப் பின்வருமாறு சொல்லலுற்றான்:—

கும்பகர்ணன் கூறும் நீதி மொழி.

"முன்பு நாம் மந்திராலோசனை செய்த காலத்தில், 'சத்துருக்களால் உமக்கு ஆபத்து விளைந்தேதீரும்' என்று யாங்கள் நிச்சயித்திருந்தபடியே, நன்மையை நாடுபவர்களின்சொல்லைக் கேளாத தங்களுக்கு அவ்வாபத்து இப்பொழுது நேரிட்டது. கொடியபாதகங்களைச் செய்தவனுக்கு நரகத்தில் வீழ்தல் எவ்வாறு நிச்சயமோ, அவ்வாறே, சீதையைக் கவர்ந்ததாகிய பாவச்செயலின் பயன், தங்களைச் சடிதியில் நிச்சயமாக அணுகிற்று; மகாராஜரே! தங்களுடைய வல்லமையின் செருக்கொன்றை மாத்திரங்கொண்டு, முன்னமே இத்தொழிலைப்பற்றி நீர் கொஞ்சமேனும் ஆலோசிக்கவேயில்லை; இதனால் விளையுந் தோஷங்களைப்பற்றியும் ஆலோசிக்கவில்லை. எவனொருவன், ஐசுவரியத்தின் செருக்கால், ஒருகாரியம் ஆரம்பிக்குமுன் செய்யவேண்டிய மந்திராலோசனை முதலியவற்றைப் பின்பு செய்கின்றானே, தான் பின்னல் செய்யவேண்டிய காரியங்களை முன்பு செய்கின்றானே, அவன், நியாயம் அநியாயம் என்ற இவைகளை அறியாதவனுவான். காலமறியாமலும் இடமறியாமலும் அவ்விரண்டுக்கும் விரோதமாய்ச் செய்யப்படுங் காரியங்கள், அபரிசுத்தமான அபாத்திரங்களில் விடப்பட்ட ஹவிஸ்போலப் பிரயோஜனமற்றவைகளாகின்றன. எவன், மந்திரிகளுடன் சேர்ந்து நிச்சயமான சித்தாந்தத்தைச் செய்துகொண்டு, தான்

செய்யவேண்டிய *மூவகை வினைகளுக்கும் †ஐவகையான சம்பந்தத்தை நன்கு காண்கின்றானே, அவன்தான், நல்வழியில் நிற்பவனவன்.

அன்றியும், எவ்வரசன், நீதிசாஸ்திரத்தை யொட்டிக் காரியத்தை நிர்ணயிக்க விரும்பினவனாய், மந்திரிமாரோடும் நண்பரோடும் ஆலோசிக்கின்றானே, அவ்வரசன் நல்வழியில் நடப்பவனவன். மேலும், அரக்கவேந்தரே! தர்மம் அர்த்தம் காமம் என்ற இம்மூன்றையும் ‡அவைகளின்

* மூவகை வினைகளாவன—(1) தனது வல்லமை மேலிட்டிருக்கையில் தனது சத்துருவுடன் சண்டைக்குச் செல்லுதல், (2) தனது வல்லமையும் சத்துருவின் வல்லமையும் ஒத்திருக்கையில் அவனுடன் சமாதானஞ் செய்துகொள்ளுதல், (3) தனது வல்லமை சத்துருவின் வல்லமைக்குக் கீழ்ப்பட்டிருக்கையில் சத்துருவுக்கு ஏதாவது கொடுத்து வணங்கிப்போதல் என்பன.

† ஐவகையான சம்பந்தங்களாவன— (1) ஒரு காரியத்தில் இறங்குமுன் அதை எப்படி ஆரம்பிக்கின்றதென்று பார்த்தல் [ஆரம்போபாயம்], (2) அக்காரியத்தை நடத்தத் தன்னிடம் ஆட்களும் பொருளும் போதுமானவைகளாக விருக்கின்றனவா வென்று ஆலோசித்தல் [புருஷத்ரவ்ய சம்பத்து,] (3) தான் ஆரம்பிக்கும் காரியம் இடத்திற்கும் காலத்திற்கும் ஒத்திருக்கின்றதா வென்று ஆராய்ந்து பார்த்தல் [தேசகாலவிபாகம்], (4) ஆரம்பித்து நடத்துங்கால் ஏதாவது நடுவில் வழுவுண்டானால் அதைச் சரிப்படுத்தும்வகை பார்த்தல் [விநிபாதப்ரதீகாரம்], (5) காரியத்தை முடித்துக்கொள்ளும்வகை பார்த்தல் [காரியசித்தி] என்பன: இனி, தேசம் காலம் தான் பொருள் பயன் என்ற ஐந்தின் சம்பந்த மெனினுமாம்.

‡ காலையில் தருமம், மத்தியானத்தில் அர்த்தம், ராத்திரியில் காமம் என்று இவைகட்குத் தனித்தனியே காலம் குறிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வாறாகவேனும்,— காலையிலும் நடுப்பகலிலும் முறையே விதிக்கப்பட்ட அறத்தையும் பொருளையும் காலையிலேனும் நடுப்பகலிலேனும் அடைதல், நடுப்பகலிலும் ராத்திரியிலும் விதிக்கப்பட்ட பொருளின்பங்களை ராத்திரியில் அடைதல் என்ற இவ்வாறாகவேனும்,— காலை நடுப்பகல்களில் விதிக்கப்பட்ட அறம் பொருள்களை ராத்திரியில் விதிக்கப்பட்ட இன்பத்தோடு அடைதல் என்ற இவ்வாறாகவேனும்,— அறம்பொருளின்பங்களைப் பெறக் கடவன் என்று பொருள்; எப்போதும் இன்பத்திற் கருத்தூன்றியிருத்தல் தகாது என்று கருத்து.

காலத்துக்குத் தக்கபடி தனித்தனியாகவேனும் இரண்டி ரண்டாகவேனும் அல்லது ஒருங்காகவேனும் புருஷன் அடையக்கடவன். இம்மூன்றுவகையில் எது உத்தமமென்று கேட்டும் எவன் அறிந்துகொள்ளாமலிருக்கின்றானே, அவன் அரசனுக விருந்தாலும், அரசனுக்கு ஒப்பானவனுக விருந்தாலும், அவன்கற்ற பலநூல்களும் வீணேயாகும். எவ்வரசன், உரிய மந்திரிகளுடன் ஆராய்ந்து, காலத்துக்குத்தக்கபடி தன்னுல் நிர்வஹிக்க முடியுமென்பதையும் முடியாதென்பதையும் நிர்ணயித்து, சாம தான பேத தண்டங்களைத் தனித்தனியாகவும் ஒன்று சேர்த்தும் அறம் பொருளின்பங்களை அனுபவித்து வருகின்றானே, மனத்தைத் தன்வச மாக்கியுள்ள அவ்வரசன், இவ்வுலகத்தில் ஒருபொழுதும் விசனமென்பதை அடையவேமாட்டான். எவ்வரசன், பொருளின் உண்மையை யுணர்ந்த மந்திரிமாருடன்கூட ஆலோசித்து, தனக்கு நன்மையுண்டாகுமாறு 'இது செய்யத்தக்க காரியம், இது செய்யத்தகாத காரியம்' என்று நிச்சயஞ்செய்துகொண்டு, ஒருகாரியத்திலிறங்குகின்றானே, அவன் இவ்வுலகத்தில் வாழ்வானன்றே ! சாஸ்திரங்களின் பொருள்களை அறியாமல் மிருகங்களுக்கு ஒப்பான புத்தியையுடைய புருஷவேஷமுள்ளவர் மந்திராலோசனையிற் சேர்க்கப்பட்டார்களாயின், பயனற்ற தமது தைரியத்தினுல் ஆலோசனைசொல்ல விரும்புகின்றார்கள். செல்வநூலை யுணராது மிக்க செல்வத்தை விரும்புகின்ற அரசர்கள், நூலைக் கற்றறியாத அவர்களுடைய நன்மை பயவாத ஆலோசனைகளைக் கேட்கலாகாது. தீமையை விலக்கக்கூடியதும், நன்மையைவிளைப்பதுபோலத் தோன்றுவதுமான விஷயத்தை, நூலுணர்ச்சியின்றி எவர்கள் கேவலம் தமது குண்டுதைரியத்தினுற் சொல்லுகின்றார்களோ, காரியத்தைக் கெடுக்கின்ற அவர்களை, முன்னமே, அரசன், ஆராய்ந்துபார்த்து, மந்திராலோசனைவிஷயத்தில் பஹிஷ்காரஞ் செய்யக்கடவன்

அன்றியும், துர்மந்திரிகள், உபாயமறிந்த சத்துருக்களுடைய ஏவுதலினால், தமது தலைவனை நாசம்பண்ணும் பொருட்டுத் தமது தலைவனுக்குக் கெடுதலையுண்டாக்குங் காரியங்களையே செய்விக்கின்றார்கள்; எதிரிகளிடத்து லஞ்சம் முதலியன வாங்கிக்கொண்டு நண்பர்கள்போல நடிக்குஞ் சத்துருக்களான அந்தத் துஷ்டமந்திரிகளை, மந்திராலோசனையினால் நிர்ணயிக்குங் காலத்தில், பேச்சினாலேயே தெரிந்துகொள்ளலாம். அவ்விதமான மந்திரிகளுடைய புத்தியைக் கேட்டுச் சடதியில் ஒரு காரியத்தில் ஓர் அரசன் இறங்கிவிடுவானேயானால், அவனது சத்துருக்கள், அவ்வழுவைக் கண்டு, கிரௌஞ்சமலையின் ஓட்டையின் வழியாகப் பறவைகள் நுழைவதுபோல அவ்வரசனை அழிக்கப் புகுந்துவிடுவார்கள். எவ்வரசன், சத்துருவின் வஞ்சனையைத் தெரிந்து கொள்ளாமையால் தன்னைப் பாதுகாவாமலிருக்கின்றானோ, அவ்வரசன், எப்பொழுதும் துன்பத்தையே அடைவான்; தனது பதவியையும் இழந்து விடுவான். இவ்விஷயத்தைக் குறித்து, இதற்குமுன் உங்களது தம்பியாகிய விபீஷணன் சொன்னபடி செய்வதுதான் நமக்கு நன்மையான காரியமென்று எனக்குத் தோன்றுகின்றது. அப்புறம் தங்களுக்கு எப்படி இஷ்டமோ, அப்படிச் செய்யுங்கள்" என்றான்.

இவ்விதமாகக் கும்பகர்ணன் சொன்னதைக் கேட்டு, இராவணன், புருவங்களை நெறித்துக்கொண்டு, வெகு கோபத்துடன் அவனைநோக்கிச் சொல்லலானான்:—"அடா கும்பகர்ணா! கௌரவிக்கத்தகுந்தவனும் ஆசாரத்தை நடப்பிப்பவனுமான குருவைப்போல, நீ எனக்குக் கட்டளையிடுகிறாய். இது, உனக்குத் தகுதியோ? உனது வாய் நோக நீ இவ்வளவு சொன்னதில், என்ன லாபம்? இக்காலத்திற்கு ஏற்றதைச் சொல்வாய்: புத்திமயக்கத்தாலோ, ஞானமில்லாமையாலோ, பலம் வல்

இராவணன் கும்பகர்ணனிடத்துக் கோபத்தோடும் எளிமையோடும் இலக்கூறுதல்.

லமை என்னும் இவைகளினுலுண்டான செருக்கினுலோ, செய்யத்தகாத காரியத்தை நானே செய்துவிட்டே னென்றுல், அதைத் திருப்பித்திருப்பிச் சொல்வது வீணேயாம். ஆகையால், இக்காலத்தில் எதைச்செய்தால் தகுதியோ, அதை விதிப்பாய். கடந்துபோன விஷயத்தைப்பற்றி அறிஞர் துக்கப்படமாட்டார்கள்; ஏனெனில், போனது போனதேயன்றே! நீ என்னிடத்து அன்பு வைத்திருப்பது உண்மையானுல், உனது வல்லமையை நீ அறிகிறுயானுல், இந்த யுத்தமென்பது அவசியம் செய்யவேண்டியதே யென்று நினைக்கின்ற எனக்கு உதவி செய்ய உனது மனத்தினுல் விரும்பினுயானுல், எனது அநியாயத்தால் நேர்ந்த தீமையை, நீ, உனது வல்லமையால் சீர்திருத்துவாயாக. எவன் தனதுலாபத்தையெல்லாம் இழந்தாயினும் சங்கடப்பட்டுப் பரிதவிக்கும் நண்பனைக் கைவிடாது நிற்கின்றுனே, அவன்தான் நண்பனுவன்; அதுபோலவே, ஒருவன் தனது அநியாயத்தாற் கஷ்டப்படும்பொழுது, எவன் அவனுக்கு உபகாரம் பண்ணுகின்றுனே, அவன்தான், பந்துவாவன்" என்றுன்.

இவ்விதமாய்க்கொடுமையாகவும் கம்பீரமாகவும் இராவணன் சொன்னதைக் கேட்டு, கும்பகர்ணன் "இவன் கோபங் கொண்டுவிட்டான்" என்று தெரிந்துகொண்டு, மெதுவாகச் சமாதானஞ் சொல்லலானுன். தனது தமையன் மனத்தில் மிகவுங் குழப்பமடைந்ததை நன்றுகத் தெரிந்துகொண்டு, கும்பகர்ணன், நல்வார்த்தையினுற் பின்வருமாறு அவனேநோக்கிப் பேசலானுன்:— "அரக்கவேந்தரே! தாங்கள் துயரப்படவேண்டாம். தங்களுடைய கோபத்தை விட்டிட்டு, ஸ்வஸ்தராக இருங்கள். வேந்தரே! நான் உயிருடனிருக்கின்றவரையில் கீழ்நடந்ததைப் பற்றித் தாங்கள் மனத்திற் கவலைகொள்ள வேண்டாம். எவரைப்பற்றித் தாங்கள் வருந்துகின்றீர்களோ, அவரை,

கும்பகர்ணன் இராவணனைச் சமாதானப் படுத்துதல்.

நானே நாசஞ்செய்துவிடுகின்றேன். மன்னவரே! நான், தங்களிடம் சுற்றத்தானென்று வைத்த பொதுவான அன்பினாலும், தங்களுக்குத் தம்பியென்பதுபற்றிய சிறப்பான விசுவாசத்தாலும், கோபம் மகிழ்ச்சி முதலிய எல்லாக் காலங்களிலும் நான் தங்களுக்குச் சொல்லியே தீரவேண்டிய கண்மையை இவ்வளவு தூரஞ் சொன்னேன். இக்காலத்தில் உண்மையான பந்துவானவன் என்னசெய்யவேண்டுமோ, அப்படிப்பட்ட சத்துருநாசத்தை, நான், போர்க்களத்திற் செய்கின்றேன்; பாருங்கள். மகாபாகுவே! இன்றைத் தினமே, நான், போர்க்களத்தில் இராமனைத் தம்பியுடனே கொல்ல, பிறகு சத்துருசேனை முறிந்தோடுவதை நீங்கள் பார்க்கலாம். நான், இன்றைத்தினம், இராமனுடைய தலையைப் போர்க்களத்தினின்று கொண்டுவருவதை நீங்கள் பார்த்துச் சௌக்கியப்படுங்கள்; சீதை துக்கப்படட்டும். இலங்கையில் இதுவரையில் தங்கள் பந்துக்களைப் போரிலிழந்த அரக்கர்களெல்லாரும், வெகுசந்தோஷமாக, நான் இன்று இராமனை வதைப்பதைப் பார்க்கட்டும். தங்கள் பந்துக்களையிழந்த காரணத்தால் அழுதுகொண்டிருக்கும் அரக்கர்களுடைய கண்ணீரை, இன்று, நான், முனை முகத்தில் சத்துருவைக் கொல்வதனால் துடைக்கின்றேன். இன்று, சரிந்த மலை போலவும் செவ்வானம்போலவும் சுக்கிரீவனென்ற வானரோத்தமன் போரில் விழுந்துகிடப்பதைப் பாருங்கள். குற்றமற்றவரே! நானும் பல அரக்கர்களும் தங்களைப் பாதுகாத்திருக்கையில், தாங்கள் எவ்வாறு இராமனற் கொல்லப்படுவீர்கள்? முதலில் என்னைக் கொன்றுவிட்டல்லவோ இராமன் தங்களைக்கொல்ல வேண்டும்? அரக்கவேந்தரே! 'என்னை ஒருவன் கொல்வான்' என்ற பயமே எனக்கு ஒருபொழுதும் இல்லை. சத்துருக்களின் செருக்கை யடக்கும் வேந்தரே! இப்போது, என்னை, தங்கள் இஷ்டப்படி, போர்க்கு உத்தரவுகொடுத்தனுப்புங்கள். ஒப்பற்ற பராக்கிரமமுள்ளவரே! யுத்தத்

துக்கு வேறொருவரைத் தாங்கள் அனுப்ப வேண்டாம். மஹாபலசாலியே! நான் ஒருவனே, தங்கள் சத்துருக்க ளெல்லாரையும் ஒழித்துவிடுகின்றேன். நமது மாற்றார் இந்திரனுக விருந்தாலும், யமனுக விருந்தாலும், அக்கினி வாயுக்களாக விருந்தாலும், குபேர வருணர்களாக விருந்தாலுஞ் சரி, நான், அவர்களுடன் போரிடுகின்றேன். மலைபோன்ற தேகம் பொருந்திய நான், கூரான சூலாயுதத்தை எடுத்துக்கொண்டு, கர்ச்சித்து, கூரிய சிங்கப்பற்களை வெளிக்காட்டிக்கொண்டு கிளம்பிவிட்டால், இந்திரனும் என்னைப்பார்த்துப் பயப்படுவானே. அல்லது, எனது ஆயுதங்களை வைத்துவிட்டு வறுங்கையால் நான் விரைவாக அறைய ஆரம்பித்தேனேயானால், தனது உயிரின்மேல் ஆசைவைத்திருப்பவன் எவன்தான், என்முன்பு நிற்கமாட்டுவன்? சூலம் கதை கத்தி கூரான பாணங்கள் என்னும் இவைகளொன்றும் எனக்கு வேண்டாம்; நான், கோபங்கொண்டால், என்கைகளிலுலேயே வச்சிராயுதத்தை ஏந்தி நிற்கும் இந்திரனையும் வதைப்பேன். எனது கைக்குத்தின் வேகத்தை அந்த இராமன் தாங்கினபிறகல்லவோ, அவனது அம்புக் கூட்டங்கள் என்னுயிரை வாங்கும்? நான் இருக்கையில், வேந்தரே! ஏன் தாங்கள் சிந்தையால் வருந்துகின்றீர்கள்? இதோ நான் தங்கள் சத்துருவைக் கொல்லும்படி புறப்படச் சித்தமாயிருக்கின்றேன். அரசரே! இராமனிடமிருந்து பயப்படுவதை விட்டிடுங்கள். இராமன், இலட்சுமணன், மகாபலம்பொருந்திய சுக்கிரீவன், மூன்பு இலங்கையைக் கொளுத்தி அரக்கர்களைக் கொன்ற அனுமான் என்ற இவர்களெல்லாரையும், நான் ஒருவனே இப்போதே அழிக்கின்றேன்; இன்னும் நம்முடன் போரிட வரும் வானரர்களையெல்லாம் நான் வதைக்கின்றேன்; மற்றையோர்க்கு இல்லாத பெரும் புகழைத் தங்களுக்கு விளைக்கக் கருதியிருக்கின்றேன். அரசரே! இந்திரனிடத்திலிருந்து பயமுண்டானாலும்

அல்லது பிரமதேவரிடமிருந்து பயம்வந்திருக்கின்ற தென்ரூலும், அதையும் நான் போக்குவேன். நான், கோபங் கொண்டால், தேவர்களும் பூமியிற் சாய்ந்துவிடுவார்கள்; யமனையும் சாந்தப்படுத்துவேன்; அக்கினியை விழுங்கிவிடுவேன்; சூரியனை நட்சத்திரங்களுடன் இப்பூமியில் விழுத்துவேன்; இந்திரனை வதைப்பேன்; சமுத்திரத்தைக் குடித்துவிடுவேன்; மலைகளைப் பொடியாக்கிவிடுவேன்; பூமியைப் பிளந்துவிடுவேன். வெகு நாளாகத் தூங்கின கும்பகர்ணனுடைய வல்லமையை நாற்புறத்திலும் என்னால் உண்ணப்படுகின்ற பிராணிகளெல்லாம் பார்க்கட்டும். இந்த மூவுலகம் முழுதும் சேர்ந்தாலும், எனது ஆகாரத்துக்குப் பற்றுதே! எப்பொழுதும் இன்பமனுபவிக்கவேண்டிய தங்களுக்கு, இராமனைக் கொன்று சுகமளிக்க, நான், இதோ ஏகுகின்றேன். நான், இலட்சுமணனுடன் இராமனைப் போரில் வதைத்து, வானர சேனாபதிகளெல்லாரையும் புசித்துவிடுகின்றேன். வேந்தரே! தாங்கள் இஷ்டமான சுகங்களை அனுபவித்துக்கொண்டு வீற்றிருங்கள்; முதல்தரமான மத்தியங்களைக் குடியுங்கள்; உங்கள் காரியத்தைப் பாருங்கள்; கவலையை விட்டிடுங்கள்; நான் இன்றையதினம் இராமனை யமன்மாளிகைக்கு அனுப்புகின்றேன்; வெகுகாலத்திற்குப்பின் இப்போது சீதையும் தங்களுக்குச் சுவாதீனமாவாள்" என்றான்.

அறுபத்துநான்காஞ் சருக்கம்:
மஹோதரன் கும்பகர்ணன்வசனத்தைக் கண்டித்துப் பேசுதல்.

பெருந்தேகம்படைத்தவனும் வெகு பலசாலியும் புஜபலமுள்ளவனுமான கும்பகர்ணன் சொன்னதைக் கேட்டு, மகோதரன் சொல்லலானான்:—"கும்பகர்ணரே!

மஹோதரன் கும்பகர்ணனைப் பழித்தல்.

நீங்கள் உயர்ந்த குலத்திற் பிறந்தவர்களென்றாலும், அல்ப புத்தியும் குண்டுதைரியமும் செருக்கும் கொண்டிருக்கிறீர்கள்; எந்தக் காரியத்திலும் ஆலோசனைசெய்ய உமக்குத் திறமையில்லை. நமது அரசர், நீதியையும் அநீதியையும் அறியாதவரல்லர். நீங்களோ, பாலியத்தால், பயமில்லாமல், இஷ்டப்படி சொல்ல விரும்புகின்றீர்கள். ஆலோசனை செய்யத்தகுந்த தேசகாலங்களையும் செய்யத்தகாத தேசகாலங்களையும் உணர்ந்த நமதுவேந்தர், தமக்கும் சத்துருக்களுக்கு முள்ள பலத்தின் மிகுதியையும் குறைவையும் ஒத்திருத்தலையும் அறிந்தவர். பெரியோர்களையடைந்து அவர்களாற் சீர்திருந்திய புத்தியில்லாமல் கேவலம் வலிமையைமாத்திரம் பெற்றுச் சாதாரணபுத்தியையுடையவன் செய்யுந் தொழிலை, எந்தப் புத்திமான்தான் செய்வன்? தர்மம் அர்த்தம் காமம் என்னும் இவைகள் வெவ்வேறு பலன்களை விளைக்குமென்று தாங்கள் சொன்னீர்களே :* அவைகளின் உண்மையை அறிந்துகொள்ளப் பிரமாணமொன்றுமில்லை. ஒருவன் சுவர்க்கம் நரகம் என்ற பலன்களைப் பெறுவதற்குக் கருமங்களே காரணங்கள் இந்தக் கர்மங்களில் மிக்க பாபகர்மங்களும் நன்மையான பலனைக் கொடுக்கின்றன. தர்மமும் அர்த்தமும் அதர்மமும் அநர்த்தமும் நல்ல பலனைக்கொடுப்பனவே; ஆனால் சிலவேளைகளில், அதர்மமும் அநர்த்தமும் தீமையையும் கொடுக்கும். இவ்வாறு தர்மாதர்மங்களும் அர்த்தாநர்த்

* தர்மம் நன்மையையே விளைக்கும்; அதர்மம் தீமையையே விளைக்கும் என்பது ப்ரத்யக்ஷவிருத்தமென்று கருத்து. யாகம் முதலிய தர்மகாரியங்களைச் செய்யும்பொழுது துக்ககரமான சரீர பிரயாஸம் தோன்றுதலாலும், பிறர்பொருளைக்கவர்தல் முதலிய அதர்மகாரியங்களைச் செய்யும்பொழுது அந்திலையில் மனமகிழ்ச்சி தோன்றுதலாலும், இவ்வாறே பொருளின்பங்களிலு மிருத்தலாலும் இவ்வாறு கூறிய தென்பர்.

தங்களும் நன்மைதீமைகளைத் தருகின்றன. இவ்வுலகத் திற்கும் பரலோகத்திற்கும் உபயோகமான கர்மங்களைப் பிராணிகள் செய்து அவற்றின்பயனை யடைவதுபோலவே தன்விருப்பத்தின்படியே நடப்பவனும், நன்மையைத் தரு கின்ற கர்மபலங்களை அநுபவிக்கின்றன். தன் விருப்பத் தின்படி தொழில்செய்பவனும் நன்மையைப் பெறுவானென் ன்ற இந்தச் சித்தாந்தத்தையொட்டி நடக்கும் அரசர், சீதை யைக்கவர்தலாகிய இத்தொழிலைத் தமதுமனத்தாற் சிந்தித் தே செய்தார்; அது, எமக்கும் உடன்பாடேயாம். சத்துரு வினிடத்தினின்று சீதையைக் கவர்ந்தது ஆராய்ச்சியில்லா மையா லென்று தாங்கள் நிரூபியுங்கள், பார்ப்போம். நீங் கள் ஒருவராகச் சென்று இராமனை எதிர்த்து வென்று வரு வதைப்பற்றிச் சொன்ன காரணத்தில் யுக்தியில்லாமையை யும் தீமையிருப்பதையும் நான் எடுத்துக் காட்டுகின்றேன்:-- எந்த இராமன் முன்பு ஜநஸ்தானத்தில் மிக்க பலம் பொருந் திய பலஅரக்கர்களைக் கொன்றானே, அந்த இராமனை, நீங் கள் தனியாகச்சென்று எவ்வாறு வெல்வீர்கள் ? முன்பு ஜநஸ்தானத்தில் அந்த இராமனால் வெகு பலசாலிகளான எந்த அரக்கர்கள் வெல்லப்பட்டார்களோ, அவர்களின் சுற் றத்தவரான அரக்கரெல்லோரும், இப்போதும், இவ்விலங் காபுரியில் நடுங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கின்றீர்களே! தசரதகுமாரனான அந்த இராமன் சினங்கொண்ட சிங்கம் போன்றவனென்பதை யுணராமல், உறங்கும் பாம் பைத் தடியாலெழுப்புகிறீர்கள். எப்பொழுதும் காந்தியால் விளங்கிக் கோபத்தால் ஒருவராலும் அணுகமுடியாமல் யமன்போலத் தடுக்க முடியாத பராக்கிரமத்துடன் விளங் கும் அவ்விராமனிடம் தனியாக எவன்தான் செல்லத்துணி வன் ? எவனொருவனது முன்னிலையில் இச்சேனை முழுவ துமே உயிர்தப்புவது அருமையோ, அவனிடம், தாங்கள் ஒருவராகச் செல்வது என்மனத்திற்குச் சம்மதமாகவில்லை. வரவரக் குறைகின்ற சேனையையுடைய எவன்தான் தான்

உயிரிழப்பதை நிச்சயித்துக்கொண்டு, மேன்மேலும், வளரும் பலத்தையுடைய சத்துருவை, சாமானியமான எளிய மனிதனொருவனை வசப்படுத்துவதுபோல வசப்படுத்திக் கொள்ள விரும்புவான்? ராக்ஷஸோத்தமரே! எவனுக்கு நிகரானவர் மானிடர்க்குள் இல்லையோ, இந்திரனுக்கும் சூரியனுக்கும் சமானமாக விளங்குகின்ற அவனுடன், எவ்வாறு தனிமையாகப் போர்புரிய நீங்கள் விரும்புகின்றீர்கள்?" என்றான்.

மகோதரன், இவ்வண்ணம் வெகு கோபத்துடன் கும்பகர்ணனைப் பார்த்துச் சொல்லி, பின்பு, அவ்வரக்கர்களின் நடுவிலிருந்த இவ்வுலகத்தையே கதறச்செய்யுந்தன்மையுள்ள இராவணனை நோக்கிப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்:—"வேந்தரே! தாங்கள் சீதையையடைந்து, பிறகு பலபேச்சுக்கள் பேசுவானேன்? சீதையைத் தாங்கள் வசப்படுத்திக்கொள்ள எனக்கு ஓர் உபாயந்தோன்றுகின்றது; இந்த உபாயஞ்செய்வதில், தங்களுக்கு இஷ்டமிருந்தால், சீதை தங்கள் வசத்தில் உடனே வந்துவிடுவாள். அரக்கவேந்தரே! இவ்வுபாயம், தங்கள் புத்திக்குச் சரியாகத் தோன்றினால், அதைக்கேட்டு அவ்வாறு நடந்துகொள்ளுங்கள்; சொல்லுகின்றேன்: நான், த்விஜிஹ்வன், ஸம்ஹ்ராதி, கும்பகர்ணன், விதர்த்தநன் ஆகிய ஐவரும், இராமனை வதைக்கும் பொருட்டுப் புறப்படுமாறு விளம்பரப் படுத்துங்கள். பிறகு, நாங்கள் சென்று எங்களாலானவரையிலும் போர்புரிகின்றோம். நாங்கள் தங்களது சத்துருக்களை வென்றால், அப்புறம் எங்களது உபாயத்தால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை; சீதை தானாகவே வழிக்கு வந்துவிடுவாள். ஒருகால் நமது சத்துரு உயிருடனிருக்கும்பக்ஷத்தில், நாங்களும்போர்புரிகின்றவர்களாகவிருந்தால், அப்போது நாங்கள் செய்வதாக நினைத்திருப்பதைச் செய்கின்றோம். இராமனுடைய பெயரெழு

மஹோதரன் இராவணனுக்குச் சீதையை வசப்படுத்திக் கொள்ள உபாயஞ் சொல்லுதல்.

தப்பட்ட கூரிய பாணங்களால் எங்களுடம்பைப்புண்ப டுத்திக்கொண்டு, எங்கள்தேகங்களில் இரத்தத்தைப் பூசிக் கொண்டு போர்க்களத்தினின்றும் இங்குவந்து, " நாங்கள் இராமனையும் இலட்சுமணனையும் விழுங்கிவிட்டோம்" என்று சொல்லிக்கொண்டே தங்கள்கால்களைப் பிடித்துக் கொள்ளுகின்றோம். தாங்கள், அப்பொழுது எங்கள் மனம் திருப்தியடையும்படி ஸம்மானஞ் செய்யுங்கள். பிறகு, 'இராமன் உடன்பிறந்தானுடனும் வானரசைனியங்களு டனும் கொல்லப்பட்டான்' என்று நகரமெங்கும் பறை யறைந்து விளம்பரஞ்செய்யுங்கள். இம்மாதல்லாமல், சத்து ருக்களைத் தவிக்கச்செய்பவரே! தாங்கள் வெகு சந்தோஷ மடைந்தவராகக்காட்டிக்கொண்டு,தங்களுடைய வேலைக்கா ரர்களுக்குப் போகங்களையும் பரிவாரங்களையும் செல்வத் தையும் மற்றும் விருப்பமானவைகளையும் வெகுமதியாகக் கொடுங்கள். பிறகு, போர்வீரர்களுக்கு, புஷ்பசரங்கள் வஸ்திரங்கள் கலவைப்பூச்சுக்கள் மத்தியங்கள் என்ற இவைகளை யெல்லாம் மிகுதியாகக்கொடுத்து, தாங்களும் மகிழ்ந்தவர்களாய் மத்தியபானஞ்செய்யுங்கள். 'அரக்கர் கள் இராமனைச் சினேகிதர்களுடன் விழுங்கிவிட்டார்கள்' என்ற இவ்விஷயம் எல்லாவிடத்திலும் பகிரங்கமாய்ப் பர வும். பரவினதும், தாங்கள் மெதுவாக அசோகவனஞ் சென்று சீதையைத் தேற்றி நல்வார்த்தைசொல்லுங்கள். பொருளையும் தானியங்களையும் இன்னும் அவளுக்கு இஷ் டமான வஸ்துக்களையும் இரத்தினங்களையும் கொடுத்து, தங்களிடத்துச் சீதையை ஆசைப்படும்படி செய்யுங்கள். அரசரே! துன்பத்தையும் அச்சத்தையும் விலக்கக்கூடிய இந்த வஞ்சனையான உபாயத்தினால்தான், இதுவரையில் தங்களை விரும்பாத சீதை, இப்போது தான் அநாதையா யிருத்தலால் தங்களுக்கு இணங்குவாள். சீதை, தனக்குச் சந்தோஷத்தை விளைவிக்கின்ற கணவனை யிழந்ததாக எண்ணி அவ்விராமனைப்பற்றிய ஆசையை விட்டவளாய்,

மகளிர்க்கு உரிய சாபலகுணத்தினால் தங்கள்வசமாகிவிடுவாள். அவள் முன்பு சுகத்தில் வளர்ந்தவள்; சுகத்தையே பெறுதற்கு உரியவள்; இப்போது துன்பத்தால்வாடிய அவள், தங்கள் கைவசமாவதனால்தான் சுகமென்பதைத் தெரிந்துகொண்டு, தப்பாமல் தங்கள்வசமே ஆய்விடுவாள். இப்படிச் செய்வதுதான் சரியென்று எனக்குத் தோன்றுகின்றது. இராமனைப் போரிற் பார்த்தால் தங்களுக்குத் தீமையே விளையும். தாங்கள் இவ்விடமேயிருந்தால் இஷ்டம் நிறைவேறும். போர்செய்வதில் தாங்கள் விருப்பம் வைக்கவேண்டாம். யுத்தஞ்செய்யாமல் இருப்பதுதான் தங்களுக்குப் பெரியலாபம். மகிபதியே! சத்துருக்களின் சேனையைப் பாராமலும், போரில் நேரக்கூடிய பிராணபயமில்லாமலும், தனது பகைவர்களைத் தண்டோபாயத்தாலன்றி வேறு உபாயத்தால் வெல்லும் மன்னவன், புகழையும், மிக்க சுகத்தையும், பாக்கியத்தையும், ஜனங்களின் பிரீதியையும் என்றென்றைக்கும் அடைந்து நீடூழி வாழ்வான்" என்றான்.

அறுபத்தைந்தாஞ் சருக்கம்:
கும்பகர்ணன் போர்செய்ய எழுதல்.

அவ்வண்ணம் பேசிய மகோதரனை, கும்பகர்ணன், அதிகமாகக் கண்டித்து, அரக்கர்களுக்குள் உத்தமனை இராவணனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்:— "நான் அந்தத் துராத்துமாவாகிய இராமனை வதைப்பதனால், தங்களுக்கு வந்திருக்கும் பெரும் பயத்தை இப்போதே நீக்கிவிடுகின்றேன். தாங்கள், மாற்றானெழிந்தனும் சுகமாக இருங்கள். நீரற்ற மேகங்கள்போல, வீணு

கச்சூரர்கள் கர்ச்சிக்கமாட்டார்கள்; போர்க்களத்திலே செய்கையினுல் நான் கர்ச்சிப்பதைத் தாங்கள் பார்க்கலாம்.

கும்பகர்ணன் மகோதரனைக் கண்டித்துப் பேசிப் போர்க்கு எழுவதாகக் கூறுதல்.

சூரர்கள், சத்துருக்கள் தங்களுக்குச் செய்யும் அவமானங்களைப் பொறுக்கவும் மாட்டார்கள்; தற்புகழ்ச்சி செய்துகொள்ளவும் மாட்டார்கள். ஆனுல், அந்தச்சூரர்கள் இயல்பான் தங்கள் வல்லமையை வெளிக்காட்டாமலே செய்தற்குஅரியகாரியங்களைச் செய்து முடிப்பார்கள். மகோதரரே! பயந்தவர்களும் புத்தியற்றவர்களும் தாங்களே புத்திசாலிகளென்று தங்களைத்தாங்களே மெச்சிக்கொள்பவர்களுமான உங்களைப்போன்றவர்களின் புத்தியைக் கேட்கும் நமது அரசர், இப்பொழுது இந்நிலைக்கு வந்திருக்கிறூர். அன்றியும், போர்புரிவதில் அஞ்சியவர்களாய், எப்போதும் அரசனுடைய இஷ்டத்திற்குத் தக்கபடிபேசி அரசன் என்ன செய்தாலும் அதுதான் சரியென்று சொல்லிக்கொண்டு திரிகின்றவர்களான உங்களால், சீதையைக்கவர்தலாகிய இவ்விழிதொழில் நடந்துவிட்டது. தமதுஇஷ்டப்படிநடக்கின்ற உங்களதுபேச்சைக் கேட்பவராய் நன்மைசெய்பவர்போன்று தீமையைவிளைக்கின்ற இவரை அரசராகப் பெற்றதனுல், இலங்கையானது அரசர் ஒருவரே மிச்சமாகநிற்கின்ற நகரமாயிற்று; பொக்கிஷமெல்லாம் குறைந்துவிட்டது; சேனைகள் பலவாக அழிந்துபோய்விட்டன; நீங்கள் செய்துவிட்ட அநியாயங்களைச் சீர்திருத்தும்பொருட்டு, சத்துருக்களை வெல்லுமாறு, நான், இதோ முயற்சியுடன் முனைமுகத்திற் போர் செய்யச் செல்லுகின்றேன்" என்ருன்.

இவ்வாறு புத்திமானை அந்தக் கும்பகர்ணன் சொன்னதை ராக்ஷஸராஜனை இராவணன் கேட்டு, பிறகு, சந்தோஷத்தோடுமறுமொழிசொல்லலானுன்: "இந்தமகோதரன் இராமனிடம் பயந்திருக்கின்ருன்; சந்தேகமேயில்லை: ஐயா! போரில் வல்லவனே! ஆகையால்தான், இவன் போ

நிடத் துணியவில்லை. என்னிடம் நட்பிலும் வல்லமையி லும் உன்னைப்போன்றவன் ஒருவனுமில் லை. கும்பகர்ணனே! சத்துருக்களை வதைத் துப் போரில் வெற்றிகொள்ளப் புறப்படு வாய். நீ நிகரற்றவனாயிருப்பதனால்தான், எனது பயத்தைப் போக்கும்பொருட்டு, நான், உன்னை அகாலத்தில் எழுப்பினேன். பகைவர்களையடக்குபவனே! நண்பர்களான அரக்கர்கள் தங்கள்தங்களுடைய நட்பை எனக்குக் காண்பிக்க இதுதான் தக்க காலம். ஆகையால், பாசத்தைப்பிடித்துச் செல்லும் யமன்போல நீ சூலத்தைக் கையிலேந்திக்கொண்டு செல்வாய்; வானரர்களையும் சூரி யன்போல் விளங்குகின்ற இராசகுமாரர்களான இராம லட்சுமணர்களையும் புசித்துவிடுவாய். உன்னுடைய உரு வத்தைப் பார்த்தவுடனே, வானரர்கள், அஞ்சி யோடி விடுவார்கள்; இராமலட்சுமணர்களும் மனம்வின்டிடுவார் கள்" என்றான். மகாபலம்பொருந்திய கும்பகர்ணனைப் பார்த்து அரக்கர்தலைவனான இராவணன் இவ்வாறுசொல்லி விட்டு, தான் மறுபடியும் பிறந்ததாக எண்ணிக்கொண் டான். கும்பகர்ணனது இயல்பான வல்லமையையும் பராக் கிரமத்தையும் உண்மையாக அறிந்தவனுகையால், இராவ ணன், களங்கமற்ற சந்திரன்போல மனத்திற் கலக்கமற்று மகிழ்ந்திருந்தான்.

கும்பகர்ணன் போர்க்குச்செல் வதைஇராவண ன்உடன்படுதல்.

இவ்வளவுதூரம் தனது தமையன் கூறவே, மகாபல சாலியாகிய கும்பகர்ணன், உத்ஸாஹங்கொண்டு யுத்தத் துக்குப் புறப்படலானன். அரக்கர்வேந்தனது சொல்லைக் கேட்டுப் புறப்பட விரும்பிய கும்பகர்ணன், இரும்பினாற் செய்யப்பட்டுக் கூர்மையுடன் வெகுவேகமாக எதிரிகளை வதைப்பதாய்க் காந்தியால் ஜ்வலிப்பதாய் ஓடவிட்ட பொன்னால் அலங்காரஞ் செய்யப்பெற்ற தாய் இந்திரனது இடிக்கு ஒப்பானதாய் வெகு பயங்கரமாய் வச்சிராயுதம்போன்ற

கும்பகர்ணனது யுத்தஸந்நாஹம்.

கௌரவம்படைத்து, தேவ அசுர கந்தர்வ யக்ஷ கின்னரர்களை வதைக்கவல்லதாய், செங்நிறமான மலர்மாலை யணிந்து வெகு காந்தியுடன் விளங்கி நெருப்பைக்கக்குவதான சூலாயுதத்தைக் கைப்பற்றினன். மகாபலசாலியான கும்பகர்ணன், பகைவர்களுடையஇரத்தத்தாற் பூசப்பட்டுக் கூராக விருந்த சூலத்தைக் கைப்பிடித்து, இராவணனை நோக்கி ஒன்று சொல்லலானன்:— "நான் ஒருவனுகவே செல்லுகின்றேன். எனது சைனியம் இவ்விடத்திலே யிருக்கட்டும். கோபங்கொண்டிருக்கும் நான், என்னைக்கண்டு பயந்தோடும் அந்த வானரர்களை இன்றையதினமே புசித்துவிடுகின்றேன்" என்றன்.

கும்பகர்ணன் தான் தனியே போர்க்குச் செல்லுமாறு விடைகேட்டல்.

கும்பகர்ணன் சொன்னதைக் கேட்டு, இராவணன் சொல்லலானன்:—"சூலம் முத்கரம் முதலிய ஆயுதங்களையேந்திய சேனைகள் சூழ நீ செல்லவேண்டும். வானரர்களோ வெகு புத்திமான்கள்; விரைவாகச் சஞ்சரிப்பவர்கள்; போர்செய்வதில் உறுதியான எண்ணமுடையவர்கள். ஒன்றியாய்ப் போர்செய்யும் நீ சற்றுச் சோர்வடையுஞ் சமயம் பார்த்து உன்னைப் பற்களாற் கடித்துவதைத்துவிடுவார்கள். ஆகையால், நீ ஒருபோதும் பகைவர்களால் தகையமுடியாத சேனையாற் சூழப்பட்டவனுய்ச் செல்வாய். அரக்கர்களுக்குத் தீமைபுரிகின்ற சத்துருக்களான எல்லோரையும் வதைசெய்வாய்" என்றன். அதன்பிறகு, பராக்கிரமசாலியாகிய இராவணன் தனது சிங்காசனத்தை விட்டுக் கீழேயிறங்கி, ரத்நஹார மொன்றைக் கும்பகர்ணனுடைய கழுத்தில் அணிந்தான். அன்றியும், தோள்வளைகளையும் மோதிரங்களையும் மற்றும் பல சிறந்த அணிகலங்களையும், சந்திரஹாரங்களையும் மஹாதைரியசாலியான அந்தக்

இராவணன், கும்பகர்ணனைச் சேனைகளுடன் செல்லவேண்டுமென்று வற்புத்துதல்.

இராவணன் கும்பகர்ணனை யணிவித்தல்.

கும்பகர்ணனுக்கு அணிந்தான்; திவ்வியமாய் நறுமண முள்ள சிவந்த கலவைச்சந்தனத்தையும் மலர் மாலைகளையும் அவன்மேனியில் அணிந்து, அழகிய மகர குண்டலங்களையும் அவனது காதுகளில் அணிவித்தான். அப்போது பொன்னினுற்செய்த தோள்வளைகளையும் கைவளைகளையும் அணிந்த பெருஞ்செவிபடைத்த கும்பகர்ணன், நன்முக ஹோமஞ் செய்யப்பட்ட அக்கினிபோல விளங்கினன். அவ்வரக்கன், சிறந்த கருமாணிக்கங்களைக்கொண்டு இழைத்து வேலைசெய்யப்பட்ட அரைஞாணினுல், அமிருதத்தைக் கடைந்தெடுத்த காலத்தில் வாசுகியாற் சுற்றப்பட்டிருந்த மகேந்திரமலைபோல விளங்கினன். தங்கத்தாற் செய்யப்பட்டதும், எவ்வகைத் தடைகளையும் தாங்குவதும், காற்றையும் உட்புகவொட்டாததும், தனது மிக்க ஒளியால் மின்னலுக்கொப்பான காந்தியுடன் பிரகாசிப்பதுமான கவசத்தை அந்தக்கும்பகர்ணன் அணிந்தபொழுது, சந்தியாகாலத்து மேகத்தாற் சூழப்பெற்ற இமயமலைபோல் விளங்கினன். தனது உடம்புமுழுவதிலும் பலவகையணிகளணிந்து கையிற் சூலத்தைப் பிடித்த அவ்வரக்கன், மூவடிகளால் இவ்வுலகத்தையளக்க உற்சாகங்கொண்ட ஸ்ரீமந்நாராயணன்போல விளங்கினன்.

மகாபலம்பொருந்திய கும்பகர்ணன், தனது தமையனை இராவணனைக் கட்டித்தழுவி வலம்வந்து நமஸ்காரம்பண்ணிப் போர்புரியப் புறப்பட்டான். பேருடல் பெற்றுப் பெருங்குரலாற் கர்ச்சித்துக்கொண்டு பெரும் பலம்பொருந்தி விளங்கிய தம்பியை, இராவணனும், உயர்ந்த ஆசீர்வசனங் கூறி அனுப்பினன். சங்கங்களும் போர்ப்பறைகளும் ஒலிக்க, உயர்ந்த ஆயுதங்களைக் கொண்ட தேர்வீரர்கள், மேகங்கள்போற் சத்தம்பண்ணுந் தேர்கள் யானைகள் குதிரைகள் காலாள்வீரர்கள் என்னுஞ் சதுரங்க சேனையுடனே அதிரதவீரனை அவனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். அன்றியும்,

கும்பகர்ணன் சேனைகளுடன் போர்க்குப் புறப்படுதல்.

*சர்ப்பங்கள், ஒட்டகங்கள், கோவேறுகழுதைகள், குதிரைகள், சிங்கங்கள், யானைகள், மான்கள், பறவைகள் என்ற இவ்வகை வாகனங்களி லேறிக்கொண்டு, போர்வீரர்கள், மகாபலசாலியாய்க் கொடியனான அந்தக் கும்பகர்ணனைப் பின்பற்றிச் சென்றார்கள். அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் சத்துருவாய் இயற்கையான மதத்தால் மிக்கவனான அக்கும்பகர்ணன், கூரான சூலமேந்தியவனாய், அந்நகரத்து அரக்கர்கள் தன்மீது மலர்மாரிபொழிய, தன்முடிமீது ஒற்றைவெண்கொற்றக்குடை விளங்க, போர்க்களத்தினின்று வீசும் இரத்தவாசனையால் வெறிபிடித்தவனாய்ப் பிரயாணமானான். பேரொலி செய்பவர்களும், பெருவலி படைத்தவர்களும், குருதிகளைக்கக்கும் பயங்கரமான கண்களுள்ளவர்களும், பேருடல் படைத்தவர்களும், கருமலைகள்போல விளங்குகின்றவர்களும், சூலங்கள் கத்திகள் கூரான கோடரிகள் பலமுழ நீளமுள்ள உழலைத்தடிகள் கதாயுதங்கள் உலக்கைகள் பகைவர் கிட்டுதற்கு முடியாதபடி வீசுதற்கு உரிய பனந்தண்டங்கள் என்ற இவ்வாயுதங்களைக் கைகளிலேந்தியவர்களுமான பயங்கரமான்வடிவு படைத்த பல அரக்கக்காலாள் வீரர்கள் அவனுடன் சென்றார்கள்.

பிறகு, மிக்கபலமும் பராக்கிரமமும் அமைந்த கும்பகர்ணன், பார்ப்பவர்கள் நடுங்கும்படியான வேறோருருவமெடுத்துக்கொண்டு சென்றான். நூறுவிற்கிடை பருமனும் அறுநூறு விற்கிடை உயரமுமுள்ளவனாய், வண்டிச்சக்கரங்கள் போன்ற கண்களையும் பெருமலைபோலோங்கிய ஆகாரத்தையு முடையவனாகிக் கோரரூபத்துடன் காணப்பட்ட அக்கும்பகர்ணன், தன்னைத்தொடர்ந்துவரும் அரக்கர்களை நோக்கி, காட்டுத்தீயால் எரிந்த மலைபோன்ற தோற்றத்துடனே தன் வாயைத்திறந்து சிரித்துக்கொண்டு,

* பேருடல்பொருந்திய பாம்பு முதலியவை அரக்கர்கட்கு வாகனங்களாக உதவின என்க.

பின்வருமாறு சொல்லலானான் :— "மிக்க சினங்கொண்ட நான், இன்று, நெருப்பானது விட்டிற்பூச்சிகளை எரிப்பதுபோல, முக்கியர்களான வானரசேனாபதிகளின் சேனை முழுவதையும் கொளுத்திவிடுவேன். காட்டிற் சஞ்சரிக்கும் வானரர்கள் எனக்கு யாதொரு தீங்குஞ் செய்யவில்லை; இவ் வானரர்களின் இனங்கள், முன்பு என்னைப் போன்றவர்களின் பூந்தோட்டங்கட்கு அலங்காரமாக விளங்கின. இவை இப்பொழுது இந்நகரத்தை முற்றுகை செய்ததற்குக் காரணமோ, இராமனும் லக்ஷ்மணனுமே. அவ்விருவரையும் நான் கொன்றுவிட்டால், எல்லாரையும் கொன்றுவிட்டதற்குச் சமானம்: ஆகையால், அவர்களை வதைக்கின்றேன்" என்றான். கும்பகர்ணன் இவ்வாறு சொன்னபொழுது, அரக்கர்களெல்லாரும் சமுத்திரத்தையே நடுங்கச் செய்வதுபோல மிகவும் பயங்கரமாகப் பேரொலிசெய்தார்கள்.

கும்பகர்ணனது செருக்குமொழி.

பலசாலியான அந்தக் கும்பகர்ணன் விரைந்து புறப்பட்டபொழுது, வெகு பயங்கரமான அபசகுனங்கள் எல்லாத்திசைகளிலும் காணப்பட்டன. மேகங்கள், கழுதை நிறத்துடன், கொள்ளிக்கட்டை இடி என்ற இவைகளையுடையனவாயின. பூமியானது, சமுத்திரம் காடு என்னும் இவைகளுடன் மிகவும் நடுங்கிற்று; நரிகள், பயங்கரமான தோற்றத்துடன் நெருப்புக் கண்டங்களைக் கக்கிக் கொண்டு ஊளையிடத் தலைப்பட்டன. ஆகாயத்திற் பறக்கும் பறவைகள் இடமாக வட்டமிட்டன; அந்தக் கும்பகர்ணன் போய்க்கொண்டிருந்த பொழுது, அவனது தலையின்மேல் புஷ்பமாலைபோலக் கழுகுகள் பறந்தன; அந்தக் கும்பகர்ணனது இடக்கண்ணும் இடக்கையும் துடித்தன. அவன்முன்பாக, கொள்ளிக்கட்டை, மிக்க சத்தத்துடன் எரிந்தபடியே விழுந்தது; சூரியன், காந்தியற்ற

கும்பகர்ணனுக்குத் தோன்றிய நிமித்தங்கள்.

வனுனன் ; காற்றுனது, சுகமாக வீசவில்லை. அவ்வாறு மயிர்க்கூச்செறியும்படி தோன்றிய பெரிய அபசகுனங்களைக் கொஞ்சமேனும் மனத்தில் எண்ணுமலே, கும்பகர்ணன், காலத்தால் ஏவப்பட்டவனுய், போருக்குப் புறப்பட்டான்.

கும்பகர்ணன் வானரசேனையைக் காணுதல்.

மலைக்கு ஒப்பான அவ்வரக்கவீரன், பிராகாரத்தைத் தனது கால்களால் ஒருதாண்டில் தாண்டி, அந்நகரத்துக்கு வெளியில் வெகு ஆச்சரியமாக மேகக்கூட்டங்கள்போல் வந்திருந்த பெரிய அந்த வானரசேனையைக் கண்ணுற்றுன்.

கும்பகர்ணனைக் கண்ட வானரர்களின் அச்சம்.

அவ்வானரர்கள், மலைபோல் விளங்கிய அவ்வரக்கனைக் கண்டதும், பயந்து, காற்றால் ஓட்டப்பட்ட மேகங்கள்போலப் பலதிசைகளையும் நோக்கி ஓடலானர்கள். மிகக்கொடியதாக விளங்கிய அவ்வானரசேனை மேகக்கூட்டங்கள் கலைந்தோடுவதுபோலப் பலதிசைகளையும் நோக்கி ஓடுவதைக் கண்டு, மேகம்போலவிளங்கிய அவ்வரக்கன், மகிழ்ந்து, மேகம்போலவே கர்ச்சித்தான். ஆகாயத்தில் மேகங்களிடிப்பதுபோன்ற அவ்வரக்கனுடைய பயங்கரமான கர்ஜனையைக் கேட்டு, அவ்வானரர்களிற் பலர், நடுநடுங்கி, வேரில்வெட்டுண்ட ஆச்சாமரங்கள்போலப் பூமியில் விழுந்தார்கள். விசாலமான உழலைத்தடி பிடித்துத் தனது சத்துருக்களை ஒழிக்குமாறு எண்ணிவந்த அக்கும்பகர்ணன், பிரளயகாலத்தில் பயங்கரமான காலதண்டத்தைப் பிடித்துவரும் அந்தகன்போல, அவ்வானரசேனையின் மனத்தில் பெரும்பயத்தை உண்டாக்கிவிட்டான்.

அறுபத்தாருஞ் சருக்கம் :
கும்பகர்ண யுத்தம்.

மலையின் சிகரம் போன்றவனன வெகு பலமுள்ள கும்பகர்ணன், பிராகாரங்களைத் தாண்டி, அந்நகரத்தி

னின்று வெளியில் வந்து, இடியையுண்டாக்குபவன்போல வும் மலைகளையெரிப்பவன் போலவும், சமுத்திரமும் பிரதித்தொனி செய்யுமாறு பெருமுழக்குஞ் செய்தான். இந்திரன் வருணன் யமன் இவர்களாலும் கொல்ல முடியாதவனும், கொடுங் கண்ணனுமான அவ்வரக்கன் வருவதைப் பார்த்து வானரர்கள் பயந்தோடினர்கள்.

கும்பகர்ணனைக் கண்டு வானரர் அஞ்சியோடுதல்.

அவர்கள் அவ்வாறு ஓடுவதைக் கண்டு, வாலியின் புதல்வனை அங்கதன், நளன் நீலன் கவாக்ஷன் மகாபலம் பொருந்திய குமுதன் முதலியோரைப் பார்த்து, "வானரர்களே! நீங்கள் உங்களையும் நீங்கள்பிறந்தவர்குலத்தையும் மறந்து, சாதாரண வானரங்களைப் போல இப்பொழுது எங்கு ஓடுகின்றீர்கள்? சாந்தர்களே! நன்று!! திரும்புங்கள். பிராணனைக் காப்பாற்றப் போகிறீர்களோ? இவ்வரக்கன் போரிடவல்லவனன்று; இவ்வுருவமானது, நாம் பயந்தோடுமாறு ஏற்பட்ட ஒரு பெரிய மருளாகும். அரக்கரால் அனுப்பப்பட்ட இந்தப் பெருந்தோற்றமுள்ள மருளை நமது வல்லமையால் எரித்துவிடுவோம்; ஆகையால், வானரர்களே! நீங்கள் ஓடுவதைவிட்டுத் திரும்புங்கள்" என்றான்.

அங்கதன் ஓடுகின்ற வானரர்களைத் தேற்றித் திருப்புதல்.

பிறகு, வானரர்கள், வெகு சிரமப்பட்டுத் தேறுதலடைந்து, அங்கங்கு ஒன்றுகத்திரண்டு கைகளில் விருக்ஷங்களையும் மலைகளையும் தூக்கிக்கொண்டு போர்க்களத்துக்குத் திரும்பினர்கள். அவ்வானரர்கள், திரும்பி, வெகு கோபத்துடன், வெறிபிடித்த மதயானைகள்போலக் கும்பகர்ணனைப் புடைக்கலானர்கள். அவ்வானரர்கள் உயர்ந்த மலைச்சிகரங்களாலும், கற்பாறைகளாலும், நன்றாக உச்சிவரையிற் பூத்திருக்கும் மரங்களாலும் அடித்தும் மகாபலம் பொருந்திய அந்தக்கும்பகர்ணன் சிறிதுஞ்

வானரர்களும் கும்பகர்ணனும் செய்த போர்.

சலிக்கவில்லை. அவனுடம்பில் விழுந்த கற்களெல்லாம், ஒவ்வொன்றும் ஆயிரஞ்சுக்கல்களாயின; மரங்களும் முறிந்து தரையில் விழுந்தன. அப்பொழுது கும்பகர்ணன், மிக்க கோபமடைந்து, பெருமுயற்சியுடன் மிக்க பராக்கிரமம் பொருந்திய அவ்வானரசேனையை, பெருந் தீயானது காட்டை யெரிப்பதுபோல எரிக்கலானான். பலவானரவீரர்கள், பகைவரால் வெல்லப்பட்டு, இரத்தத்தால் நனைந்து, செம்மலர் செறிந்த மரங்கள்போல அப்போர்க்களத்திற் சாய்ந்தார்கள். சில வானரர்கள், எல்லாவற்றையுங் கடந்து திரும்பிப்பார்க்காமல் ஓடினார்கள். பலிஷ்டனான அவ்வரக்கன் தம்மைக் கொல்வதால், சிலர், சமுத்திரத்திற் குதித்தார்கள்; சிலர், ஆகாயத்திற் கிளம்பினார்கள். சிலர், எவ்வழியாகச் சமுத்திரத்தைத் தாண்டினார்களோ, அவ்வழியாகவே திரும்பியோடலானார்கள். சிலர், வாடிய முகத்தர்களாய், மேட்டுநிலங்களையும், பள்ளத்தாக்குகளையும் நோக்கி யடைந்தார்கள். சில ருக்ஷர்கள், மரங்களின்மேல் ஏறினார்கள்; வேறுசில ருக்ஷர்கள், மலைகளில் ஏறி மறைந்துகொண்டார்கள். சிலர், சமுத்திரத்தில் வீழ்ந்தார்கள். சிலர், குகைகளுக்குள் பதுங்கிக் கொண்டார்கள். சிலர், ஓடமுடியாமல் உட்கார்ந்தார்கள்; சிலர், கொஞ்சமேனும் நிற்காமல் ஓடிக்கொண்டே யிருந்தார்கள்.

கும்பகர்ணனது வல்லமையைத் தாங்கமுடியாமல் வானரர்கள் தெறியோடுதல்.

முறிந்தோடின அவ்வானரர்களைப் பார்த்து அங்கதன் இவ்வாறு சொல்லலானான் :— "வானரர்களே! யுத்தஞ் செய்பவர்களாக நில்லுங்கள்; திரும்பிவாருங்கள். தோல்வியடைந்து ஓடுகின்றது நீங்கள் தங்கியிருப்பதற்கு, இந்தப்பூமியை முழுதும் வலம்வந்தாலும் ஓரிருப்பிடம் அகப்படாது; ஆகையால், நீங்கள் எல்லாரும் திரும்புங்கள். என்னபயனைக்கருதி உயிரைக் காக்கின்றீர்கள்?

அங்கதன் வானரர்களை யழைத்தல்.

தடைப்படாத பராக்கிரம முள்ளவர்களே! ஆயுதங்களை யெறிந்துவிட்டுப் பயந்தோடுகின்ற உங்களைக்கண்டு, மனவி மார்களும் சிரிப்பார்களே! மானிகளுக்கு அது மரண மன்றே! நாமெல்லோரும், புகழ்பெற்ற பெருவம்சங்களிற் பிறந்தவர்களாயிற்றே! அப்படியிருக்க, சாதாரணவான ரங்கள்போல, அச்சத்தால் மனம்நடுங்கி எங்கு ஓடுகின்றீர் கள்? நீங்கள் வீரத்தன்மையின்றி அஞ்சி இவ்வாறு ஓடினால், நீசர்களாவீர்களே! ஜனங்கள் நிரம்பிய சபையில் அப்போது நீங்கள் உங்கள் வல்லமையைப்பற்றி உக்கிர மாகவும் மிகுதியாகவும் சொல்லிய தற்புகழ்ச்சிகளெல்லாம் இப்போது எங்குப் போய்விட்டன? எல்லாராலும் சியென் று சொல்லப்பட்டு உயிர் பிழைத்திருக்கின்றவனை 'கூழை' என்று அவமதிக்கின்றார்கள். பெரியோர்கள் நடக்கும் வழியில் நடவுங்கள்; பயத்தை விட்டிடுங்கள். சிலவாழ் நாளையுடைய நாம், போரில் வதைக்கப்பட்டு உயிர்மாய்ந்து போர்க்களத்தில் விழுவோமேயானால், பெறுதற்கு அரிய பிரமலோகம் போய்ச்சேர்வோம்; அல்லது, நமது சத்துரு வைப் போரில்வதைத்துக் கீர்த்திபெறுவோம். வீரலோகத் தைப் பெறுதற்கு உரிய விலைப்பொருள் நமது உயிரேயாம். எரிந்துகொண்டிருக்கும்நெருப்பை யணுகி விட்டிற்பூச்சிகள் எவ்வண்ணம் திரும்பமாட்டாவோ, அதுபோலவே கும்ப கர்ணனும், நமது இராமர்முன்னிலையில் வந்து, உயிருடன் திரும்பிப்போகமாட்டான். இவ்வரக்கனொருவனுக்குப் பயந்து பிரசித்திபெற்ற நாம் இத்தனைபெயர்களும் ஓடி உயிரைக் காப்பாற்றுவதனால், நமது கீர்த்தி நாசமாய் விடுமே!" என்றான்.

பொன்னிலாகிய தோள்வலையல்க ளணிந்த சூர னன அங்கதன், அவ்வாறு சொன்னதும், ஓடின அவ்வா னரவீரர்கள், வீரர்கள் ஒருநாளும் பேசாத சில சொற்க ளைச் சொல்லலானார்கள்:— "கும்பகர்ணன் வெகுபயங்கர மாக எங்களை வதைக்கின்றான்; ஆகையால், போர் முகத்

தில் நிற்க இது சமயமன்று; போகின்றோம். எங்களுக்கு உயிர் வெல்லம்" என்றார்கள். இவ்வளவு சொல்லிவிட்டு, அவ்வானர வீரர்களெல்லாரும், பயங்கரமான கண்களுடன் அவ்வரக்கன் வருவதைப் பார்த்துப் பத்துத் திசைகளையும்நோக்கி ஓடலானார்கள். அவ்வாறு ஓடின வீரரான வானரர்களெல்லாரையும் அங்கதன், இன்சொற்களாலும் உதாரணங்களாலும் திருப்பினன். புத்திமானான அனுமான், அவர்கள் மனத்திற் சந்தோஷத்தை உண்டாக்கிவைத்தான். அதன் பிறகு, வானரசேனபதிகள், சுக்கிரீவன் முதலியோர் விடுக்குங் கட்டளையை எதிர்பார்த்தவர்களாக நின்றார்கள். அப்பால், இடபன் சரபன் மைந்தன் தூம்ரன் நீலன் குமுதன் சுஷேணன் கவாக்ஷன் ரம்பன் தாரன் த்விவிதன் பனஸன் அனுமான் முதலியோர் மூன்முகத்தை நோக்கி விரைவாகச் சென்றார்கள்.

மனந் தேறுமல் முறிந்தோடின வானரர்கள், இறுதியில் அங்கதனுல் தெளிந்து போர்க்கு வருதல்.

அறுபத்தேழாஞ் சருக்கம்: கும்பகர்ணனது வதை.

பேருடல் படைத்த அவ்வானரர்களெல்லோரும், அக்காலத்தில் அவ்வாறு அங்கதன்சொன்ன சொற்களைக் கேட்டு, தங்கள் பராக்கிரமத்தைச் சொல்லியவண்ணம் தங்கள் வல்லமையை உறுதி செய்துகொண்டு, அங்கதன் செய்த தேற்ற ரவினுல் தேறி மனமகிழ்ந்து போர்க்குப் புறப்பட்டவர்களாய், தமது உயிரில் விருப்பமொழிந்ததனுல் மரணத்திலும் உறுதிகொண்டு, மிகவும் நெருக்கமாகப் போர்புரியலானார்கள். பிறகு, அவ்வானரர்கள், பெருமரங்களையும் மிகப் பெரிய மலைச்சிகரங்

அங்கதன் சொல்லினுல்தேறி வானரர்கள் மீண்டும் போர்க்கு எழுதல்.

களையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு, கும்பகர்ணனை நோக்கி விரைந்து ஓடினர்கள்.

கும்பகர்ணன் வானரர்களை முறியடித்தல்.

அப்பொழுது வீரியமுள்ள மஹாகாயனான அந்தக் கும்பகர்ணன், வெகுகோபங்கொண்டு, தனது கதையினால் ஓங்கிப்புடைத்துத் தன்பகைவர்களை நாற் புறத்திலும் வீழ்த்தினன். அவ்வண்ணம் கும்பகர்ணன் அடித்ததும், வானரர்கள் எழுநூறு எண்ணூற்றுக் கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பூமியிற் சிதறி விழலானர்கள்; அன்றியும், அவ்வரக்கன், தனது கைகளை நீட்டி, ஒவ்வொரு தரத்திலும் எட்டு பத்து பதினாறு இருபது மூப்பது விழுக்காடு வானரர்களைப் பிடித்து, மிக்ககோபங்கொண்ட கருடபகவான் பாம்புகளைப் புசிப்பதுபோல அவ்வானரர்களைப் புசித்தவண்ணம் திரியலானன். அக்காலத்தில், வானரர்கள், வெகு சிரமத்துடன் தைரியமுள்ளவர்களாய், அங்கங்கு ஒருங்குகூடி, தங்கள்கைகளில் மரங்களையும் மலைகளையும் வைத்துக்கொண்டு முனைமுகத்தில் நிற்கலானர்கள்.

த்விவிதன் செய்த போர்.

அப்போது, துவிவிதனென்ற வானரவீரன், பெரு மலைச் சிகரமொன்றைப் பிடுங்கியெடுத்து,மலைபோல் நின்று கொண்டிருந்த அக்கும்பகர்ணனை நோக்கி, நீரைத்தாங்குவதால் தொங்குகின்ற மேகம் போன்று பறந்துவரலானன். அவன், அம் மலையைத்தூக்கிக் கும்பகர்ணன்மேல் வீசினன்; ஆனால், அது அவன்மேல் விழாமல், அவனது சேனையில் விழுந்து அவனைச்சேர்ந்த யானைகள் குதிரைகள் தேர்கள் இவைகளையும் மற்றுஞ்சில அரக்கரையும் முறித்தது. அவ்வானரவீரன், மற்றொரு மலைச்சிகரத்தை யெடுத்து, அவ்வரக்கன்மே லெறிந்தான். அதனால், அரக்கரைச்சார்ந்த சேனை, தேரிற்பூட்டியிருந்த குதிரைகளும் தேர்ப்பாகனும் மடியப் பெற்று இரத்தத்தில் மூழ்குவதாயிற்று.

இவ்வாறு கடும்போர் உண்டாகவே, மகாவீரர்களான இராக்கதத்தேர்வீரர்கள், கர்ஜ்ஜித்துக்கொண்டு, பிரளயகாலத்தில் தோன்றும் யமனுக்கு ஒப்பான பாணங்களால், அட்டகாசம்பண்ணிக்கொண்டிருந்த வானரர்களின் தலைகளை விரைவாக வெட்டி வீழ்த்தினர்கள். மிக தைரியசாலிகளாகிய வானரர்களும், பெருமரங்களைப் பிடுங்கி அவைகளால் இரதங்களையும் குதிரைகளையும் யானைகளையும் ஒட்டகங்களையும் அரக்கர்களையும் கொன்றார்கள்.

அரக்கர்க்கும் வானரர்க்கும் கைகலந்தபோர்.

அனுமான், அப்போது ஆகாயத்திற் கிளம்பிநின்று, கும்பகர்ணனது தலையின்மேல் பல மலைச்சிகரங்களையும் வெவ்வேறுவகையான பல மரங்களையும் பொழியலானன். மிக்க வலிமைபடைத்தவனன கும்பகர்ணனும்பெருஞ்சூலமொன்று பிடித்து நின்று, அம்மலைச்சிகரங்களையும் அம்மரங்களையும் பிளந்தெறிந்தான். அதன்பிறகு, அக்கும்பகர்ணன், கூரான சூலத்தைப் பிடித்துநின்று அக்கொடியவானர சேனையை எதிர்த்து ஓட்டினன்; அவ்வாறு ஓட்டிவந்த அவனுக்கு முன்பாக, அனுமான், ஒரு மலைச்சிகரத்தைத் தனது கையிற் கொண்டு நின்றான். அவ்வனுமான், அந்தச் சிகரத்தால், இமயமலைபோன்று பயங்கரமான உடல் படைத்த அக்கும்பகர்ணனைக் கோபத்துடன் வெகுவேகமாக அடித்தான்; அவ்வடி பட்டதும், அந்தக்கும்பகர்ணன், அப்போது அதனால் இரத்தம்பெருகியோடமேதஸ் வெளிப்படக் கொஞ்சம் மனங்குழம்பினன். உடனே, கும்பகர்ணன், தெளிந்து, மின்னல்போலவும் நெருப்புப்பற்றியெரியும் மலைச்சிகரம்போலவும் விளங்கும் தனது சூலத்தை எடுத்துச் சுழற்றி, சுப்பிரமணியக்கடவுள் கிரௌஞ்சமலையைத் தனது கொடிய வேலாயுதத்தாலெறிந்தது போல, அனுமானுடைய மார்பில் எறிந்தான். அவ்வாறு

அனுமான் செய்த போர்.

மார்பில் அடிபட்ட அனுமான், கலங்கித் தனது வாயால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு, பிரளயகால மேகம் கர்ச்சிப் பதுபோல அப்போரில் வெகுபயங்கரமாகக் கர்ச்சித் தான். அவ்வண்ணம் அவன் வருந்தியதைக் கண்டு, அரக் கர்கள், வெகுசந்தோஷமடைந்து, அட்டகாசம் பண்ணி னர்கள்; வானரர்களோ, மிகவும் வருந்திப் பயந்து அப் போர்க்களத்திலிருந்து ஓடலானர்கள்.

நீலன் முதலியோர் செய்த போர்.

அத்தருணத்தில், பலசாலியாகிய நீலன், பயந்தோ டின அவ்வானரசேனையைத் தேற்றி நிலைப்படுத்தி, புத்தி மானுன கும்பகர்ணன்மேல் பெரிய மலைச் சிகரமொன்றை யெறிந்தான். அவ்வாறு தன்னை நோக்கிவந்த மலையை, அவ்வரக் கன், தனது கைப்பிடியாற் குத்தினன்; அதனல், அம்மலை, சிதறி, நெருப்புப்பொறியைக்கக்கி எரி ந்தவண்ணம் பூமியில் விழுந்தது. அதன்பிறகு, ரிஷபன் சரபன் நீலன் கவாக்ஷன் கந்தமாதனன் என்ற பலிஷ்டர் களான ஐந்து வானர வீரர்கள், கும்பகர்ணனை, மலைகளா லும் மரங்களாலும் கால்களாலும் கைகளாலும் கைக் குத்துக்களாலும் பலவாறு வருத்தினர்கள். கும்பகர்ணன், அவைகளையெல்லாம் தனது தேகத்தில் ஏதோ தொடு வதுபோல நினைத்தனையன்றி, ஒருவித வேதனையை யும் அடையவில்லை. வெகு வேகமாகச் சஞ்சரிக்கும் ரிஷ பனை, அந்தக் கும்பகர்ணன், தனது கைகளால் தழுவிக் கொண்டான். அப்போது, கொடிய அவ்வானரவீரன் அதனல் தனக்கு நேர்ந்த வருத்தத்தைப் பொறுக்க முடி யாமல், தனது வாயினின்று இரத்தத்தைக் கக்கிக் கொண்டு பூமியில் விழுந்தான். பிறகு, இந்திரசத்துரு வாகிய கும்பகர்ணன் தனது கைக்குத்தினல் சரபனையும், முழங்காலைக்கொண்டு முட்டியதனல் நீலனையும், ஓரறை யறைந்ததனல் கவாக்ஷனையும், தனதுகாலை யோங்கி ஓருதையுதைத்ததனல் கந்தமாதனனையும் கள்ளினன்.

அவ்வரக்கனிடம் அடிபட்ட அவ்வானரவீரர்கள், இரத்தம்பெருக வெகு வருத்தத்தோடு மூர்ச்சித்து, வேரில் வெட்டுண்ட பலாசமரங்கள்போலப் பூமியிற் சாய்ந்தார்கள்.

மகாத்துமாக்களாகிய அவ்வானரசேனாபதிவீரர்கள் அவ்வண்ணம் விழவே, மலைபோலிருந்த வானரவீரர்கள், ஆயிரக்கணக்காக, பெருமலைபோல ஓங்கிப் பலிஷ்டனான கும்பகர்ணனை யடைந்து, அக்கும்பகர்ணன் மேலே எழும்பிப்பாய்ந்து, அவனைத் தங்கள் பற்களாற் கடிக்கலானார்கள். அவ்வானரவீரர்கள், தங்கள் நகங்களாலும் பற்களாலும் கைக்குத்துக்களாலும் முழங்கால் முட்டுக்களாலும் அக்கும்பகர்ணனைப் புடைத்தார்கள். ஆயிரக்கணக்கான வானரர்கள் தன்மேல் ஏறியிருக்கப்பெற்ற அவ்வரக்கன், மரங்களால் மூடி விளங்குவதுபோல விளங்கினான். கருடன் சர்ப்பங்களை விழுங்குவதுபோல, அவ்வரக்கன், தனது கைகளால் வானரர்களையெல்லாம் பற்றி வெகு கோபத்துடன் புசிக்கலானான். கும்பகர்ணன் விழுங்குமாறு பாதாளம்போன்ற தன்வாயிலே வானரர்களைப் போகட்டுக்கொண்டதும், அவன் மூக்குத் துவாரங்களின் வழியாகவும், அவன் காதுகளின் வழியாகவும், வானரர்கள் வெளிக்கிளம்பினார்கள். மலைக்கு ஒப்பான அவ்வரக்கவீரன், வெகுகோபங்கொண்டு, வானரர்களெல்லாரையும் புசிப்பதற்காக முறிக்கலானான். அவ்வரக்கவீரன், பிரளயகாலத்தில் வளர்ந்துதோன்றிய காலாக்கினிபோல, அப்போர்க்களத்தை மாமிசத்தாலும் இரத்தத்தாலும் சேறாக்கிக்கொண்டு வானரசேனையின்நடுவிற் சஞ்சரிக்கலானான். சூலத்தைக் கையிற்பற்றிய பலசாலியான கும்பகர்ணன், போர்முகத்தில், வச்சிராயுதத்தைக் கையிற் பற்றிய இந்திரன்போலவும், பாசத்தைக்கையிற்பிடித்த யமன்போலவும் காணப்பட்டான். உலர்ந்த காட்டை

வானரவீரர் கும்பகர்ணனுடன் பொருது முறிந்தோடுதல்.

வெயிற்காலத்தில் அக்கினி கொளுத்துவதுபோல, கும்பகர்ணன், அவ்வானரசேனையைக் கொளுத்தலானன். பிறகு, கூட்டங் கூட்டமாகக் கொல்லப்பட்ட அவ்வானர வீரர்களில் எஞ்சியவர்கள், சேனபதிகளை யிழந்தவர்களாய், பயத்தால் மனம்விண்டு மிகவும் அலறலானர்கள். பலவிதமாக அவ்வரக்க வீரனற் கொல்லப்பட்டவர்களான அவ்வானரவீரர்கள், துயரத்தால் மனம்வருந்தி ஸ்ரீராமரைச் சரணமாக அடைந்தார்கள்.

அங்கதன் செய்த போர்.

வானரர்கள் முறிந்தோடினதைக் கண்டு, அங்கதன், வெகுவேகமாகக் கும்பகர்ணனை முனைமுகத்தில் எதிர்க்கச் சென்றான்; பெரியமலைச் சிகரமொன்றைக் கையினற்பற்றி, அடிக்கடி கர்ச்சித்துக்கொண்டு, கும்பகர்ணனைத் தொடர்ந்து சென்ற அரக்கர்களையெல்லாம் அச்சுறுத்தி, கும்பகர்ணனது தலைக்குநேராக அம்மலைச்சிகரத்தை வீசியெறிந்தான். மகாபலசாலியாகிய அந்தக் கும்பகர்ணன், அம்மலைச்சிகரத்தால் தலையில் மிகவும் அடிபட்டு, அப்போது மிக்ககோபத்தாற் பொங்கி, அவ்வவமானத்தைச் சகிக்கமுடியாமல், அங்கதனைநோக்கி வெகுவேகமாக ஓடி, வானரர்களெல்லோரும் கிடுகிடென்று நடுங்கும்படி பேரொலிசெய்து, அங்கதன்மேல் மிக்க கோபத்தோடு தனதுசூலத்தை யெறிந்தான். வானரர்களிற் சிறந்தவனும் போரிற்சமர்த்தனும் பலசாலியுமான அவ்வங்கதன், தன்னைநோக்கி அவ்வாயுதம் வருவதை யறிந்து, அதுதன்மேற் படாதவண்ணம் சாமர்த்தியமாக விலகி, பிறகு வெகுவேகமாகக் கிளம்பி, தனது கையால் கும்பகர்ணனதுமார்பில் ஓரறை அறைந்தான். மலைக்கு ஒப்பாக விருந்த அவ்வரக்கன், அவ்வறை தன்மேல் விழவே, சிறிது அறிவுசோர்ந்தான். உடனே, பலசாலியான அந்த அரக்கவீரன், மூர்ச்சைதெளிந்து, கைவிரல்களை மூடக்கித் தன்

இடக்கையால் அங்கதனை ஒருகுத்துக்குத்தினான். அதனால் அவ்வங்கதன் பிரஜ்ஞைதப்பிப் பூமியில் விழுந்தான்.

அவ்வானரவீரன் அவ்வண்ணம் விழுந்ததும், அவ்வரக்கவீரன் அச்சூலத்தை எடுத்துக்கொண்டு சுக்கிரீவனை நோக்கிச் சென்றான். வானரராஜனாகிய சுக்கிரீவன், கும்பகர்ணன் தன்னை எதிர்த்துவருவதைப் பார்த்து, எழுந்து, தனது கையிற் பெரிய மலைச்சிகர மொன்றை எடுத்து ஓங்கிக்கொண்டு, அவனைநோக்கி வெகுவேகமாகச் சென்றான். வானரவேந்தன் தன்னை நோக்கிவருவதைக் கண்டு, கும்பகர்ணன், தனது உடலெங்குஞ் சிலிர்க்க, வானரவேந்தனுக்கு எதிராகநின்றான்.

கும்பகர்ணன் சுக்கிரீவனைநோக்கி போர் செய்யச் செல்லுதல்.

உடம்புமுழுவதும் வானரர்களுடைய இரத்தம் பூசி வானரர்களைப் புசித்துக்கொண்டு தன்முன்நின்ற கும்பகர்ணனைப் பார்த்து, சுக்கிரீவன் பின்வருமாறு சொல்லலானான்:—"அரக்கரே! நீங்கள் பல வானர வீரர்களை வீழ்த்தினீர். ஒருவராலும் செய்யமுடியாத ஆச்சரியமான காரியத்தைச் செய்தீர். சேனையைப் புசித்தீர்; நிகரற்ற புகழ்பெற்றீர்: அந்த வானரசேனையை விட்டிடும்; சாதாரணமானவர்களை வென்று யாதுபயன்? உங்கள்மேல் விழப்போகின்ற இம்மலையைமட்டும் பொறுத்துக்கொள்ளும்; பார்ப்போம்" என்றான்.

சுக்கிரீவனது வீரவாதம்.

அவ்வண்ணம் பலத்தின் செருக்காலும் தைரியத்தாலும் வானரவேந்தன் சொன்ன சொல்லை அரக்கவீரனான கும்பகர்ணன் கேட்டு, தானும் மறுமொழி சொல்லலுற்றான்:—"வானர வேந்தரே! நீர் பிரமதேவருடைய பேரப்பிள்ளை; ருக்ஷராஜனின் புதல்வர்; பிரசித்தமான வல்லமையுள்ளவர்; ஏன் வீணுகக் கர்ஜ்ஜிக்கின்றீர்?" என்றான்.

கும்பகர்ணனது மறுமொழி.

கும்பகர்ணன்சொன்ன சொல்லைக் கேட்டு, சுக்கிரீவன் தனது கையிலெடுத்துவந்த மலையைச் சுழற்றி, அவ்வரக்க வீரன்மேல் எறிந்தான். வச்சிராயுதத்தையும் இடியையும் போன்ற அம்மலையும், அவ்வரக்கனது மார்பின்மேல் விழுந்தது. அம்மலைச்சிகரம், அரக்கனதுமார்பிற் பட்டு உடனே பலகண்டங்களாகச் சிதறினதைக் கண்டு, வானரர்கள் துயரமடைந்தார்கள்; அரக்கர்கள் சந்தோஷத்தால் ஆரவாரஞ் செய்தார்கள். அம்மலைச்சிகரம் மோதிய காரணத்தால், கும்பகர்ணன், கோபங்கொண்டு, தனது வாயைத் திறந்து கர்ச்சித்து, வானரசாதியர்க் கெல்லாந் தலைவனுகிய சுக்கிரீவனை வதைக்கும்பொருட்டு, மின்னல் போல் விளங்குகின்ற சூலாயுதத்தை வீசி யெறிந்தான்.

சுக்கிரீவனுக்கும் கும்பகர்ணனுக்கும் நேர்ந்த போர்.

கும்பகர்ணன் தனது தோள்வலிகொண்டு வீசிய பொன்னரிமாலையா லலங்கரிக்கப்பட்ட கூரிய அந்தச் சூலாயுதத்தை, வாயுபகவானுடைய புதல்வனுன அனுமான், உயரக்கிளம்பித் தனது கைகளாற் பிடித்து, விரைவாக முறித்தான். ஆயிரம் * பாரம் காரிரும்பினுற் செய்யப்பட்டுப் பெரியதான அந்தச் சூலாயுதத்தை, அனுமான் பற்றித் தனதுமுழங்காலில்வைத்து மகிழ்ச்சியோடு முறித்தான். அனுமான் சூலத்தை முறித்ததை வானரசேனை கண்டு களித்து மிகுதியாகப் பேராரவாரஞ் செய்துகொண்டு நான்குபக்கங்களிலும் ஓடித்திரிந்தது. வானரவீரர்கள், மகிழ்ந்தவர்களாய்ச் சிங்கநாதமுஞ் செய்தார்கள்; அந்தச்சூலம் அவ்வாறுனதற்காக வாயுகுமாரனைக் கொண்டாடினர்கள்.

கும்பகர்ணனெறிந்த சூலாயுதத்தை அனுமான் பற்றி முறித்தல்.

அரக்கர்தலைவனும் மஹாதைரியசாலியாகிய அந்தக் கும்பகர்ணன், அந்தச்சூலம் அவ்வாறு முறிக்கப்பட்டதைக் கண்டு மிகவுங் கோபங்கொண்டு, லங்காமலயமலை

* ஓர் நிறை.

யினின்று சிகரமொன்றைக் கொணர்ந்து, அதைக்கொண்டு சுக்கிரீவனை அடித்தான். வானரவேந்தன் அவ்வடியால் மூர்ச்சையடைந்து போர்க்களத்தில் விழுந்தான். அவ்வாறு அவன் பூமியில் விழுந்தது கண்டு அரக்கர்கள் களித்துப் பேராரவாரஞ் செய்தார்கள்.

சுக்கிரீவன் கும்பகர்ணனால் மூர்ச்சையடைதல்.

போரில் அற்புதமாயும் உக்கிரமாயுமுள்ள வல்லமை தங்கிய அச்சுக்கிரீவனது அருகிலணைந்து, கும்பகர்ணன், பிரசண்டமாருதம் பெருமேகத்தைக் கொண்டு ஓடுவதுபோல அவனைப்பற்றியெடுத்துக்கொண்டு போகலானன். அப்போது, மேருமலைபோன்ற அவ்வரக்கவீரன், பெரியமேகத்தைப்போன்ற உருவமுடைய அந்தச்சுக்கிரீவனைப் போர்க்களத்தில் தூக்கிக்கொண்டு செல்பவனாய், மிகவும் உயர்ந்த பெரிய சிகரத்தையுடைய மேருமலைபோல விளங்கினன்.* வானரவேந்தன் பிடிபட்டதைப்பற்றி ஆச்சரியப்பட்டுத் தேவர்கள் தங்களுள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டபடியே, கும்பகர்ணன், அரக்கவீரர்கள் தன்னைப்புகழ, வானரராஜனைத் தூக்கிக்கொண்டு போகலானன். இந்திரனுக்கொப்பான வல்லமை பொருந்திய இந்திரசத்துருவாகிய அவ்வரக்கவீரன், இந்திரனையொத்த வானரவேந்தனைத் தான் பிடித்துக்கொண்டு, "இவ்வானரராஜனை நான் பற்றிக்கொண்டு போய்விட்டால், இராம லட்சுமணர்களுடன் எல்லாரையும் பிடித்துவிட்டாற்போலத்தான்" என்று அப்போது எண்ணினன்.

கும்பகர்ணன் சுக்கிரீவனை எடுத்துக் கொண்டு இலங்கைக்குப் போதல்.

---

* கும்பகர்ணனது இயற்கை வடிவத்துக்கு உபமானமாக முதலில் மேருவைக் கூறியது; சுக்கிரீவனை எடுத்துக்கொண்டு செல்லுகையில் உபமானமாவதற்காக உயர்ந்த சிகரத்தைக் கொண்ட அம்மேருவையே மறுபடியும் உவமையாகக் கூறியது எனக் காண்க.

வானரசேனை ஆங்காங்கு முறிந்தோடுவதையும் சுக்கிரீவனை அரக்கன் எடுத்துச்செல்வதையும், வெகு புத்திமானும் வாயுவின்குமாரனுமான அனுமான் பார்த்து, "இவ்வாறு சுக்கிரீவனைப் பகைவன் கவர்ந்துசெல்கையில், நான் அவசியமாகச் செய்யவேண்டுவது யாது? எதை நான் செய்வது முறையோ, என்னாலானவரையில் அத்தொழிலைச் செய்வேன். நான், மலைபோன்ற உருவமெடுத்துக் கொண்டு இவ்வரக்கனை அழித்துவிடவல்லேன். இப்பொழுது நான் ஒரே குத்தினால் உடம்பு சிதறி விழுமாறு மகாபலவானான இந்தக் கும்பகர்ணனை வதைத்துவிடுவேனேயானால், நமது மன்னவரும் விடுபடுவார்; அப்போது வானரர்கள் யாவரும் களிப்படையட்டும். அல்லாவிட்டால், தேவர்கள், அசுரர்களுடனும் உரகர்களுடனும் இவரைப் பிடித்துக்கொண்டபோதிலும், அவர்களிடமிருந்தும் இவ்வானர வேந்தர் தாமே விடுவித்துக்கொள்ளவல்லவர். போர்க்களத்தில் கும்பகர்ணனால் மலையைக் கொண்டு அடிக்கப்பட்ட இவ்வானரராஜர் இன்னமும் மூர்ச்சைதெளியவில்லை யென்று எண்ணுகின்றேன். இன்னும் ஒரு முகூர்த்த காலத்துக்குள் இவர் மூர்ச்சை தெளிந்தவராய், தமக்கும் வானரர்களுக்கும் எது நன்மையோ அதைத் தாமே செய்வார். நான் இப்பொழுது மஹாதைரியசாலியாகிய இவரை விடுவிப்பேனேயானால், அவர் என்னிடம் மிகவும் அப்பிரீதியைக்காட்டுவார்; அது, அவர்க்கு என்றென்றைக்கும் அபகீர்த்தியையும் விளைக்கும்: ஆகையால், நான் ஒரு முகூர்த்த காலம் பொறுத்திருந்து, இவ்வானரவேந்தரது வல்லமையைப் பார்ப்பேன். அதுவரையிலும் முறிந்தோடும் வானரசேனையை நான் தேற்றிவைப்பேன்" என்று இவ்வாறு ஆலோசித்தான். பிறகு, மாருதனது புதல்வனாகிய அனுமான் மறுபடியும் அப்பெருவானரசேனையைத் தடுத்துத் தைரியப்படுத்தினன்.

அப்போது அனுமான் சுக்கிரீவ வானரர்களைத் தேற்றிக் கொண்டிருத்தல்.

அப்பால், அந்தக் கும்பகர்ணன், காந்தியால் விளங்கும் அவ்வானரவேந்தனைத் தூக்கிக்கொண்டு இலங்கையிற் புகுந்தான்; அப்போது, விமானங்களின்மேலும், கோவில்களின்மேலும், கோபுரங்களின்மேலும் ராக்ஷஸர்கள் நின்றுகொண்டு, சிறந்த மலர்களைக் கும்பகர்ணன்மேற் பொழிந்தார்கள். அதிக பலம்பொருந்திய மகாராஜாவாகிய சுக்கிரீவன், அரக்கர்கள் கும்பகர்ணன்மேல் வீசிய பொரியின் வாசனையாலும் பனிநீர்தெளித்தலினாலும் இயற்கையாகவே இராஜமார்க்கம் குளிர்ச்சியாக விருந்ததனாலும், கொஞ்சங் கொஞ்சமாக மூர்ச்சைதெளிந்து அரிதினில் தேறினன்.

சுக்கிரீவன் மூர்ச்சை தெளிதல்.

பலிஷ்டனான அந்தக் கும்பகர்ணன்து மார்பிலிருக்கின்ற மஹா தைரியசாலியாகிய அந்தச் சுக்கிரீவன், தான் இலங்கையின் ராஜவீதியில் இருந்ததைக் கண்டு அடிக்கடி ஆலோசிக்கலானான்: — "இவ்வாறு இவனிடம் சிக்கிக்கொண்டிருக்கின்ற நான், இப்பொழுது என்ன பதில் செய்யத்தக்கது? எவ்வாறுசெய்தால், வானரர்களுக்கு நன்மையும் பிரீதியும் உண்டாகுமோ அவ்வாறு செய்வேன்" என்று எண்ணினன்.

சுக்கிரீவன் எண்ணுதல்.

பிறகு, வானரவேந்தன் கூரான தனது கைநகங்களினால் கும்பகர்ணனுடைய இரண்டு காதுகளையும் கிள்ளி, பற்களால் மூக்கைக் கடித்தொழித்து, கன்னம் தோள் விலா என்னும் இவ்வுறுப்புக்களைக் கால்களாலுதைத்துப் பிளந்தான். அந்தக் கும்பகர்ணன், தனது மூக்கையும் காதுகளையும் இழந்து, தனது இரு விலாப்புறங்களிலேயும் புண்பட்டு வருந்தி, தனது உடம்பு முழுவதும் இரத்தவெள்ளமோட வெகுகோபங்கொண்டு சுக்கிரீவனைச் சுழற்றிப் பூமியிலெறிந்து துவைக்கலானான். கொடிய வலிமையுள்ள அக்கும்பகர்ணனால் பூமி

சுக்கிரீவன் கும்பகர்ணனது செவி மூக்குக்களை யொழித்திட்டு மீளுதல்.

யில் துவைக்கப்பட்டு அரக்கர்களால் வருத்தப்பட்ட அச் சுக்கிரீவன் வேகமாகக் கிளம்பி ஆகாயத்திற்சேர்ந்து, ஸ்ரீ ராமரிடம் மீண்டு வந்தடைந்தான்.

கும்பகர்ணன் மீண்டும் வந்து போர்செய்தல்.

காதுகளும் மூக்கும் போன மிக்கபலசாலியான கும்பகர்ணன், தனது மேனியெல்லாம் இரத்தம் பெருக, பல அருவிகள் பெருகிக்கொண்டிருக்கும் மலைபோலத் தோன்றினன். இரத்தத்தினல் நனைந்த பெருந்தேகம் படைத்தவனும் பயங்கரமான பராக்கிரமம் பொருந்தியவனும் பலிஷ்டனுமான அவ்வரக்கன், மீண்டும் போர்புரிய மனங் கொண்டான். கறுத்த மைக்கூட்டங்களுக்கு ஒப்பான நிறமுள்ள இராவணன்தம்பியாகிய அக்கும்பகர்ணன், அவ்வாறு கோபங்கொண்டபோது, அந்திக்காலத்திற் செந்நிறத்துடன் தோன்றும் மேகம்போலக் காணப்பட்டான். சுக்கிரீவன் தன்னைவிட்டுத் தப்பி யோடிவிட்டவுடனே, தேவேந்திரனது சத்துருவாகிய கொடிய கும்பகர்ணன், கோபத்தோடு மறுபடி போர்க்களத்தை நோக்கி யோடினன்; தன்கையில் ஆயுத மொன்று மில்லாமைபற்றிச் சிந்தித்து வெகு பயங்கரமான உலக்கை யொன்றை யெடுத்துக்கொண்டான். பிறகு, மஹாபராக்கிரமசாலியாகிய அந்தக் கும்பகர்ணன், சடிதியில் அப்பட்டணத்தினின்று வெளிவந்து போர்க்களத்திற் சென்று, யுகாந்த காலத்தில் தோன்றிய காலாக்கினியானது பிரஜைகளைப் பக்ஷிப்பது போல வானரர்களை யெல்லாம் புசிக்கலானன். புசிக்க விரும்பித் தன்னுடைய பசியடங்காமல், மாமிசவாயனும் ரக்த மாமிசங்களில் மிக்கவிருப்பமுள்ளவனுமான அந்தக் கும்பகர்ணன், கொடிய அவ்வானரசேனையிற் புகுந்து, அரக்கர்களையும் வானரர்களையும் பிசாசர்களையும் கரடிகளையும் மோகத்தினற் புசிக்கலானன். யுகத்தின் முடிவில் யமன் எவ்வாறு அழிப்பனே, அவ்வாறே, இக்கும்பகர்ணன் வானரத்தலைவர்களை யெல்லாம் புசிக்கலானன். அந்தக்

கும்பகர்ணன், போரில் வெறிகொண்டு, ஒருவன் இருவர் மூவர் பலர் என்ற இவ்வாறுகவானரர்களை அரக்கர்களுடன் ஒருகையாற் பற்றி விரைந்து வாயிற் பெய்துகொண்டான். வானரர்கள் மலைச்சிகரங்களால் தன்னைப் புடைத்துக் கொண்டிருந்தபோதிலும், மகாபலம் பொருந்திய அவ் வரக்கன், தான் மிகுதியாக உட்கொண்ட வானரர்களின் நிணத்தையும் இரத்தத்தையும் கக்கிக்கொண்டு வானரர் களைப் புசித்துக்கொண்டே யிருந்தான்.

கும்பகர்ணன் வானரர்களைப் புசித்தல்.

அவ்வாறு புசிக்கப்படும் வானரர்கள் அப்போது ஸ்ரீராமரைச் சரணமடைந்தார்கள். கும்ப கர்ணனே, மிகவும் வெறிகொண்டு குரங் குகளைத் தின்றுகொண்டே நாற்புறத்தி லும் ஓடலானான். ஏழு எட்டு இருபது முப்பது நூறு என்ற இவ்வாறு கைகளாற் சேர்த்துப் பிடித்து வானரர்களைப் பட்சித்துக்கொண்டே நாற்புறத்தி லுஞ் சஞ்சரித்தான்.

இலட்சுமணரது போர்.

அப்போது, சத்துருக்களின் சேனையை யடக்கிப் பகை வரது பட்டணத்தை வெல்பவரும் சுமித் திரையின் குமாரருமான இலட்சுமணர், கோபங்கொண்டு போர்புரியலானர். வீரிய வானகிய அந்த லக்ஷ்மணர், ஏழுபாணங்களை யெடுத்துக் கும்பகர்ணன்மேற் பிரயோகித்துத் தைக் கச்செய்தார்; மஹாபலவானான கும்பகர் ணனே, இலக்குமணரிடமிருந்து தப்புவித் துக்கொண்டு, பூமியையேபிளந்துவிடுகின்ற வன்போல, ஸ்ரீராமரிருந்த இடத்தை நோக்கி வேகமாக ஓடினான்.

கும்பகர்ணன் லக்ஷ்மணரைக் கடந்து, இராமரை யடைதல்.

பிறகு, தசரதகுமாரரான ஸ்ரீராமர், ருத்திரஸம்பந்த மான அஸ்திரத்தை அபிமந்திரித்துக் கூரான பாணங் களைக் கும்பகர்ணனுடைய மார்பில் விடுத்தார். ஸ்ரீராம

ரால் அடிக்கப்பட்டு விரைந்து தன்னுடன்பொருத அவரையே நோக்கி ஓடிவந்த வெகுகோபங்கொண்ட கும்பகர்ணனுடைய வாயிலிருந்து அக்கினிச்சுவாலைகள் கிளம்பின. ராமாஸ்திரத்தால் அடியுண்ட அவ்வரக்கன், வெகு பயங்கரமாகக் கதறியவண்ணம், மிக்ககோபத்துடன் வானரர்களெல்லாரையும் துரத்திக்கொண்டு போர்க்களத்திற் சஞ்சரிக்கலானன். மயில் தோகைகள் பூண்ட இராமபாணங்கள் அவ்வரக்கனது மார்பிற் பதிந்ததும், அவன் கையிலிருந்த பெருங் கதை நழுவிப் பூமியில் விழுந்தது; மற்றுமுள்ள ஆயுதங்களெல்லாம் பூமியிற் சிதறின. தான் ஆயுதமற்ற வனாயிருத்தலை மஹாபலசாலியாகிய அவ்வரக்கன் அறிந்து கொண்டதும், கைக்குத்துக்களாலும் காலுதைகளாலும் வானரர்களைப் பெருவதைசெய்யுமாறு ஆரம்பித்தான். பாணத்தால் நன்றாக அடிபட்ட அவனது உடம்பிலிருந்து இரத்தமோடிய காட்சியானது, மலையினின்று அருவி பெருகுவதுபோலக் காணப்பட்டது. மிக்க கோபத்தாலும் ரக்தப்பெருக்காலும் ஒன்றுந்தெரியாதவனாகவிருந்த அவ்வரக்கன், வானரர்கள் ராக்ஷஸர்கள் ரிக்ஷர்கள் இவர்களெல்லாரையும் வேறுபாடின்றிப் புசித்துக்கொண்டு சஞ்சரிக்கலானன். அதன்பிறகு, பலிஷ்டனும் பயங்கரமானபராக்கிரமமுள்ளவனும் யமனுக்கு ஒப்பானவனுமான அவ்வரக்கன், கொடிய மூலச்சிகரமொன்றைப் பெயர்த்து, அதைச் சுழற்றி ஸ்ரீராமர்மேல் வீசியெறிந்தான். அந்தச் சிகரம் தம்மை நெருங்குமுன்னமே, பொன்னுற் செய்யப்பட்டு அழகியனவாய் நேராகப்பாயுந் தன்மையுள்ள ஏழு பாணங்களைப் புருஷ சிரேஷ்டரான ஸ்ரீராமர் விடுத்து, அச்சிகரத்தைப் பிளந்தெறிந்தார். மேருமலையின் சிகரம்போலத் தனது காந்தியால் விளங்கிக்கொண்டு, இருநூறு வானரவீரர்களை நோக்கி வருகின்ற அந்தக் கும்பகர்ணனையும் ஸ்ரீராமர் கீழே வீழ்த்தினர்.

கும்பகர்ணனது போர்.

ராமர் கும்பகர்ணனைக் கீழ் வீழ்த்துதல்.

அக்காலத்தில், தருமத்தை ஆராய்ந்தறிந்த இலட்சுமணர் கும்பகர்ணனையொழிப்பதிற் பலவகை உபாயங்களைத் தமது மனத்தினுள் ஆலோசித்துக்கொண்டு பின் வருமாறு சொல்லலானார்:—"அரசரே! இவ்வரக்கனுக்கு 'இவர் வானரர், இவர் அரக்கர்' என்பது கூடத் தெரியவில்லை. இரத்தத்தின் நாற்றத்தால் வெறிகொண்டு, இவன் தன்னினத்தாரையும் மாற்றூரினத்தாரையும் வேறுபாடின்றிப் புசித்துவருகின்றான். வானரவீரர்கள் யாவரும் இவன்மேல் நன்றாக ஏறட்டும். நமது வானரசேனைத்தலைவர்களும் இவனைச் சூழ்ந்துகொண்டு நிற்கட்டும். அப்போது, பூமியில் விழுந்துகிடக்கின்ற இந்தப் புத்தியற்றவன் மிக்க பாரத்தால் வருந்தி, வேறொருவரையும் கொல்லமாட்டான்" என்றார். வெகு புத்திமானாகிய இலட்சுமணர் அவ்விதமாகச் சொன்னதைக் கேட்டதும், அவ்வானரர்கள் வெகுசந்தோஷத்துடன் கும்பகர்ணன் மேல் ஏறினார்கள். வானரவீரர்கள் தன்மீது ஏறக் கண்டதும், கும்பகர்ணன், வெகு கோபங்கொண்டு, மதம்பிடித்த யானை பாகனை உதறித்தள்ளுவதுபோல அவ்வானரர்களை உதறித் தள்ளினான்.

இலக்குமணர் கூறிய ஆலோசனை.

அவ்வானரர்கள் அவ்விதமாகத் தள்ளப்பட்டதைப் பார்த்து, ஸ்ரீராமர், அவ்வரக்கன் வெகுகொடியவனென்று எண்ணி, தமது சிறந்த வில்லை எடுத்துக்கொண்டு வேகமாக வரலானார். கோபத்தாற் கண்கள் சிவக்கப்பெற்ற வீரராகிய அவ்விராகவர், தமது கண்களால் அவ்வரக்கனை எரிப்பவர் போல விளங்கிக்கொண்டும், கும்பகர்ணனைக் கண்டு அஞ்சியிருந்த சேனாபதிகள் மனங்களையெல்லாம் களிக்கச்செய்துகொண்டும் வெகு வேகமாக அவ்வரக்கனை நோக்கி ஓடிவரலானார். அந்த ஸ்ரீராமர், சர்ப்பம்போல விளங்குவதும் உறுதியான நாணி

இராமர் கும்பகர்ணனிருக்குமிடத்திற்குச் செல்லுதல்.

யமைந்ததும் பொன்னுற் பலவகைத்தொழில் செய்யப் பெற்றதும் கொடியதுமான வில்லைக் கையிற்பிடித்துக் கொண்டும், அம்பரூத்தூணியைத் தாங்கிக்கொண்டும், வானரர்கள் யாவரையும் தேற்றிக்கொண்டே புறப்பட்டார். மஹாபலசாலியாய் ஒருவராலும் அடியோடு வெல்ல முடியாதவரான அந்த ஸ்ரீராமர், வானரவீரர்களின் கூட்டங்களாற் சூழப்பட்டு, இலட்சுமணரால் தொடரப்பட்டவராய்ப் புறப்பட்டார்.

இராமர் கும்பகர்ணனைக் காணுதல்.

பேருடல்படைத்தவனும், சத்துருக்களின் பராக்கிரமத்தை யடக்குகின்றவனும், கிரீடமணிந்தவனும், உடம்பு முழுமையும் இரத்தத்தால் நனையப்பெற்றவனும், மிக்க பலம்பொருந்தியவனும், கோபித்த திக்கஜம்போல எல்லாரையும் வெருட்டுகின்றவனும், வானரர்களைப் புசிப்பதற்காகத் தேடுபவனும், கோபமடைந்தவனும், அரக்கர்களாற் சூழப்பட்டவனும், விந்தியமலைக்கும் மந்தரமலைக்கும் ஒப்பானவனும், பொன்னலாகிய தோள்வளையல்களை யணிந்தவனும், வர்ஷாகால மேகம் மழையைப் பொழிவதுபோலத் தனது வாயால் இரத்தத்தைக் கக்குகின்றவனும், பகைவரது இரத்தத்தைத் தனது நாவினால் நக்குகின்றவனும், இரத்தக்கண்ணனும், பிரளயகாலத்து யமன்போன்று வானரசேனையை வதைக்கின்றவனும், கொழுந்துவிட்டெரியும் நெருப்புப்போன்ற தேஜஸையுடையவனுமான அவ்வரக்கவீரனை, ஸ்ரீராமர், பார்த்து, அப்போது தமதுவில்லைத் தட்டினர். அவ்வரக்கக்காளை, அந்நாணொலியைக்கேட்டுப் பொறுக்காமல் கோபங்கொண்டு ஸ்ரீராமரை நோக்கி ஓடிவர்லானன்.

அப்பால், காற்றால் ஓட்டப்பட்ட மேகம்போலவும் பெரிய பருவதம்போலவும் விளங்கி, ஆதிசேஷனது சிறந்த உடம்புபோன்ற கைகளமைந்து தம்மை எதிர்த்துவருங் கும்பகர்ணனைப் பார்த்து, அப்போர்க்களத்தில், ஸ்ரீராமர்,

பின்வருமாறு சொல்லலுற்றார்:—"அரக்க வேந்தனே! வருக: வியசனமடையவேண்டாம். நான் கையில் வில்லேந்தி வந்திருக்கின்றேன். இந்திரசத்துருவே! என்னை இராமனென்று நினைப்பாய். உனது பிராணனை ஒரு முகூர்த்தத்துக்குள் வாங்கிவிடுகின்றேன்" என்றார்.

இராமபிரானது வீரவாதம்.

கும்பகர்ணனும், தன்னைப்பார்த்துப் பேசினவரை ஸ்ரீராமரென்று தெரிந்துகொண்டு, பெருங்குரலால் நகைத்து, வானரர்களியாவரையும் பயமுறுத்திக்கொண்டு, அப்போர்க்களத்தில் வெகுகோபத்துடன் எல்லா வானரர்களுடைய இருதயங்களையும் தள்ளிவிடுபவன்போன்று சஞ்சரிக்கலானன். மஹாபராக்கிரமசாலியாகிய அந்தக் கும்பகர்ணன், அப்போது மேகம் கர்ச்சிப்பதுபோலப் பெருங்குரலோடு வெகுபயங்கரமாகச் சிரித்து, ஸ்ரீராமரைப் பார்த்து மறுமொழி சொல்லலானன்:— "தாங்கள் என்னை விராதனென்றுவது கபந்தனென்றுவது கரனென்றுவது எண்ணவேண்டாம். நான் வாலியும் அல்லேன்; மாரீசனும் அல்லேன்; இவ்விடம் வந்திருக்கும் நான், கும்பகர்ணன்; எனது கையிற் பற்றியுள்ள முழுவதும்இரும்பினாலாகிய பயங்கரமான இந்த முத்கரம் என்னும் ஆயுதத்தைச் சற்றுப்பாருங்கள். இவ்வாயுதத்தைக் கொண்டுதான் நான் முந்தித் தேவர்களையும் அசுரர்களையும் வென்றிருக்கின்றேன். காதும்மூக்கும்அற்று இருப்பதுகொண்டு, என்னை, நீங்கள், அவமதிக்கக்கூடாது. காதுகளும் மூக்கும் அற்றதற்காக எள்ளளவாவது எனக்கு வருத்தமில்லை. இக்ஷ்வாகுகுலத்திற் பிறந்த புலியே! தங்களுக்கிருக்கும் வல்லமையை எனது உடம்பின்மேற் சடுதியிற் காட்டுங்கள். தங்கள்வல்லமை இவ்வளவென்பதை நான் அறிந்துகொண்டதும், தங்களைப் புசிப்பேன்" என்றான்.

கும்பகர்ணனுடைய வீரவாதம்.

அந்த இராமபிரான், கும்பகர்ணன் சொன்னதைக் கேட்டு, கூரானமுனைகளுள்ள தமது பாணங்களை அவன் மேற் பிரயோகித்தார். வச்சிராயுதம்போல் வேகமாக விழுந்த அப்பாணங்களால் அடிக்கப்பட்டும்,தேவர்களின் பகைவனுகிய அவ்வரக்கன்,கொஞ்சமேனும் கலங்கவில்லை;வருத்தமு மடையவில்லை. எந்தப்பாணங்கள் சிறந்த ஏழு மராமரங்களைத் துளைத்தனவோ, எப்பாணங்கள் வானரர்களுக்குள் மகாவீரனுன வாலியை வதைத்தனவோ, வச்சிராயுதத்துக்குஒப்பான அந்தப்பாணங்கள்,

இராமபாணங்களாற் கும்பகர்ணன் ஊறடையாதிருத்தல்.

அந்தக் கும்பகர்ணனுடைய மேனியில் ஒருவகை வருத்தத்தையும் உண்டாக்காமலிருந்தன. தேவேந்திரனது பகைவனுகிய அந்தக் கும்பகர்ணன், மழைபொழிவதுபோலத் தனது உடம்பில் விழுந்த அவ்வளவு பாணங்களையும் தேகத்தில் அடக்கிக்கொண்டு, மிகக் கொடிய வேகமமைந்த முத்கரமென்ற ஆயுதத்தைச் சுழற்றி அந்தப் பாணங்களின் வேகமுழுவதையும் வீணுக்கிவிட்டான்.

பிறகு, அவ்வரக்கன், மாற்ருருடைய இரத்தத்தாற் பூசப்பட்டதும் தேவர்களுடைய சேனைகளுக்கும் பயமுண்டாக்குவதும் வெகுவேகம்பொருந்தியதுமான அந்த முத்கரத்தை அசைத்தான்; அதனுல், வானரசேனைகளெல்லாம் ஓடத்தலைப்பட்டன. அப்போது, ஸ்ரீராமர், சிறந்த

ஸ்ரீராமர் கும்பகர்ணனது கைகால்களைத் துண்டித்துத் தள்ளுதல்.

வாயவ்யாஸ்திரத்தை யெடுத்து அவ்வரக்கன்மேல் விடுத்து முத்கரத்தைப் பற்றியிருந்த அவன்கையை வெட்டினர். தனது கை வெட்டுண்டதும், அவ்வரக்கன் பெருங்குரலோடு கதறலானன். மலையின் சிகரத்துக்கு ஒப்பானதும் முத்கரத்தைப் பற்றியதுமான அவனது கை, ஸ்ரீராமருடைய பாணங்களால் வெட்டுண்டு, சுக்கிரீவசேனைநடுவில் விழுந்து, அச்சேனையிலிருந்த வீரர்களை வதைத்தது. மடிந்தவர்கள் போக மிகுந்து நின்ற

வானரர்கள், மிகவும் துயரமடைந்தவர்களாய், மூலைகளில் ஓடி ஒதுங்கி நின்று, தங்கள் மெய்ந்நடுங்க, அரக்கனுகிய கும்பகர்ணனுக்கும் ஸ்ரீராமருக்கும் நடந்த பயங்கரமான தொந்தயுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அஸ்திரத்தினலறுப்புண்ட ஒற்றைக்கையனுன அந்தக் கும்பகர்ணன், தனது ஒரு சிகரத்தை யிழந்த பெரிய இமயமலைபோல் விளங்கிக்கொண்டு, மற்றொருகையால் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கி யெடுத்து, அப்போர்க்களத்தில் ஸ்ரீராமரைநோக்கி ஓடிவந்தான். ஆச்சாமரத்தை ஓங்கிக் கொண்டிருந்த பாம்பின் உடல்போன்றுள்ள மற்றொரு கையின்மேலும், ஸ்ரீராமர், ஸ்வர்ணமயமான மற்றொரு பாணத்தில் ஐந்திராஸ்திரத்தை அபிமந்திரித்து விடுத்தார். மலைபோலிருந்த அந்தப்புஜமும் அதனல் வெட்டப்பட்டுப் பூமியில் விழுந்தது. அது புரண்டபொழுது, மரங்களையும் மலைகளையும் பாறைகளையும் அவ்வாறே வானரர்களையும் அரக்கர்களையும் அழித்தது. அக்கும்பகர்ணன் தனது இருகைகளும் வெட்டுண்டும் மிக்க பயங்கரமாகக் கத்திக்கொண்டும் தம்மைநோக்கி ஓடிவருவதைக் கண்டு, ஸ்ரீராமர், உடனே கூரான இரண்டு அர்த்தசந்திரபாணங்களை விடுத்து, அவ்வரக்கனது கால்களை வெட்டி யெறிந்தார். அவ்விரு கால்களும், பெருந்திசைகளையும் மூலத்திசைகளையும் மலைகளையும் குகைகளையும் சமுத்திரத்தையும் இலங்கைமாநகரத்தையும் இராட்சச வானரசேனைகளையும் எதிரொலி யொலிக்கச்செய்துகொண்டு பூமியில் விழுந்தன.

கைகளும் கால்களும் அற்றுப்போன கும்பகர்ணன், உடனே வடவையின் முகக்கனல்போலத் தனது வாயைப் பிளந்து கர்ச்சித்துக்கொண்டு, ஆகாயத்தில் இராகுவென்ற கிரகம் சந்திரபகவானை நோக்கி விரைந்துசெல்வதுபோல, ஸ்ரீராமரை நோக்கி விரைந்துசென்றன். ஸ்ரீராமரும், மூனையிற்பொற்கட்டமைந்த கூரான பாணங்களால் அவ்வரக்கனது வாயை நிரப்பினர்; அவ்வாறு தனது வாய்

நிரம்பியதும், அவன் பேசவும் முடியாமல் வருத்தத்தோடு மிகவும் கூக்குரலிட்டு, பிறகு மூர்ச்சையடைந்தான்.

அப்பால், ஸ்ரீராமர், சூரிய கிரணங்களைப்போல விளங்குவதும் பிரமதண்டத்தையும் பிரளயகால யமனையும் போன்றதும் சத்துருக்கட்குக் கேட்டை விளைப்பதும் கூரானதும் உறுதியான முனையையுடையதும் வாயுபகவான் போல் வேகமாகச் செல்வதுமான ஐந்திராஸ்திரத்தைத் தொடுக்கலானர். வைரங்களினாலும் பொன்னினாலும் இனியமுனையமைந்து, சூரியனது காந்திபோல மிக்க ஒளியுடன் விளங்கிக்கொண்டு, தேவேந்திரனது வச்சிராயுதமும் இடியும்போல் வேகமாகப்பாயும் அந்த அஸ்திரத்தை, அவ்வரக்கனை வதைக்கும் பொருட்டு ஸ்ரீராமர் விடுத்தார். ஸ்ரீராமருடைய கையாற் பிரயோகிக்கப்பட்ட அப்பாணமானது, பத்துத்திசைகளையும் தனது ஒளியால் விளக்கி, புகையற்ற தழல்போல் வெகு பிரகாசமாகப் புலப்பட்டுக்கொண்டே, இடிபோல் மிக்க வேகமாகவும் பலமாகவும் பாயலாயிற்று. முற்காலத்தில் இந்திரபகவான் விருத்திராசுரனுடைய தலையை யறுத்தது போல, இப்பொழுது அந்த அஸ்திரமானது, கோரப்பற்கள் வெளிவிளங்க * இரு குண்டலங்களையவிளங்கிப் பெருமலைச் சிகரம்போலப் புலப்படுவதான அவ்வரக்கனது தலையை அறுத்தெறிந்தது. குண்டலங்களை யணிந்த அக்கும்பகர்ணனுடைய பெரிய தலை, அதிதியைத் தேவதையாகக்கொண்ட இரட்டையான புனர்வசுநட்சத்திரங்களுக்கு இடையி லிருக்குஞ் சந்திரன்போல் விளங்கிற்று. இராமபாணங்களாலறுபட்டு மலைபோல் விளங்கிய அந்தக் கும்பகர்ணனது தலை, கோபுரங்களுக்கு அருகில் கட்டப்பட்ட வீரர்களது விடுதிகளையும் கோபுரங்களையும் ஒங்

ஸ்ரீராமர் கும்பகர்ணனது தலையையறுத்து வீழ்த்துதல்.

* கீழ்ச் சுக்கிரீவன் செவியறும்படி கடித்ததாகக் கூறியது, குண்டலமணியும் பாகத்தைத் தவிர்த்து என அறிக.

கிய மதிள்களையும் இடித்துக்கொண்டு கீழ் வீழ்ந்தது. பிறகு, கும்பகர்ணனது உடம்பும், அங்கும் இங்கும் ஓடும் வானரர்களைக் கோடிக் கணக்காக நசுக்கிக்கொண்டு பூமியில் விழுந்தது.

கும்பகர்ணனது உடல் கடலில் விழுதல்.

பிறகு, இமயமலைபோலப் பேருடல்படைத்தவனன அவ்வரக்கனது உடல், சமுத்திரத்தில் விழுந்து, அதிலிருந்த சிறந்த திமிங்கிலங்களையும் பெரிய மீன்களையும் பாம்புகளையும் நசுக்கிக் கொண்டே அடித்தரையில் அழுந்திற்று.

கும்பகர்ணனது மரணத்தால் தேவர் முதலியோரின் கொண்டாட்டம்.

அந்தணர்களுக்கும் தேவர்களுக்கும் சத்துருவாய் மகாபலம்பொருந்தியவனன அந்தக் கும்பகர்ணன் போரில் வதைக்கப்பட்டதும், தேவர்கள் தலைதெரியாத சந்தோஷத்தால் அட்டகாசம்பண்ணினர்கள்; அதனல், பூமியும் மலைகளும் அதிர்ந்தன. பிறகு, தேவரிஷிகள் மஹர்ஷிகள் பன்னகர் தேவர்கள் பூதங்கள் ஸ-பர்ணர் குஹ்யகர் யக்ஷர் கந்தர்வர் ஆகிய இவர்கள் தொகுதியாக வானத்திற் கூடி ஸ்ரீராமருடைய பராக்கிரமத்தைக் கொண்டாடினர்கள்.

மகிழ்ச்சியடைந்த வானரர்களின் நடுவில் ஸ்ரீராமர் விளங்குதல்.

அப்பால், மஹா தைரியசாலியான அந்தக் கும்பகர்ணன் வதைக்கப்பட்டதும், அந்த அரக்கவீரனைச் சார்ந்த சுற்றத்தாரான அரக்கர்கள், விஷ்ணுபகவானைக்கண்டு அசுரர்கள் கதறியழுவதுபோல, ஸ்ரீராமரைக்கண்டு மனங் குழம்பித் துக்கத்தால் உரக்கக்கதறலானர்கள். இராகுவின் முகத்திலிருந்து விடுபட்ட சூரியபகவான் தான் இருப்பதனலேயே உலகத்தின் இருளைப்போக்கிக்கொண்டுவிளங்குவதுபோல, ஸ்ரீராமர் போரில் கொடிய கும்பகர்ணனை வதைத்துப் போர்க்களத்தில் கீர்த்தியுடன் வானரசேனையின் நடுவில் விளங்கினர். கொடியபலம் பெற்றுக் கிட்டுதற்கரியவனன தங்கள் சத்துரு ஒழிந்ததும், வானரர்கள் பலரும், மிக்க சந்தோஷமடைந்தவர்களாய்,

நன்முகமலர்ந்த தாமரைமலருக்கு ஒப்பான தமது வாய்களால் தமது விருப்பத்தை நிறைவேற்றின ஸ்ரீராமரைக் கொண்டாடினர்கள். முற்காலத்தில் இந்திரபகவான் விருத்திரனென்ற மகாசுரனைக் கொன்று சந்தோஷமடைந்தது போல, அந்த ஸ்ரீராமர், தேவர்களின் கூட்டங்களை யழித்தவனும் பெரும்போர்களிற் சலிக்காதவனுமான கும்பகர்ணனைக் கொன்று சந்தோஷமடைந்தார்.

அறுபத்தெட்டாஞ் சருக்கம்:
இராவணனது புலம்பல்.

மகாத்துமாவாகிய ஸ்ரீராமர் கும்பகர்ணனைக்கொன்றதைக் கண்டு, அரக்கர்கள், தங்கள் மன்னவனுகிய இராவணனிடம் தெரிவிக்கலானர்கள் :—"வேந்தரே! தங்களது சகோதரரும் மலைபோன்றவருமான யமனுக்கு ஒப்பாகிய கும்பகர்ணர், முதலில் வானரசேனையைமுறிந்தோடச்செய்து, வானரர்களைப் புசித்து ஒரு முகூர்த்தகாலம் இவ்வாறு பகைவரைக்கொளுத்தி, பிறகு இராமபாணங்களாற் பீடிக்கப்பட்டு, கழுத்து கால் கைகள் வெட்டுண்டு, இரத்தத்தை வெகுவாகக் கக்கியவண்ணம், தமது கபந்தம் வெகு பயங்கரமான சமுத்திரத்திற் பிண்டமாய்க் கிடக்குமாறும், தமது தலை இலங்கையின் வாயிலைத் தகைந்து கிடக்குமாறும், காட்டுத்தீயாற் கொளுத்தப்பட்ட மரம்போல விகாரமடைந்த சரீரத்துடன், காலத்தின் கொடுமையால் ஸ்ரீராமனுடைய தேஜஸால் அடங்கிவிட்டார்" என்றார்கள்.

கும்பகர்ணன் மரண்டதை அரக்கர் இராவணனுக்கு அறிவித்தல்.

மகாபலம் பொருந்திய கும்பகர்ணன் யுத்தத்தில் வதைக்கப்பட்டதைக் கேட்டு, இராவணன், சோகத்தால் வருந்தி, மூர்ச்சையடைந்து கீழேவிழுந்தான். தேவாந்தகன் நராந்தகன் திரிசிரஸ் அதிகாயன் என்ற இராவணகுமாரர்கள், தமது சிற்றப்பன் இறந்ததைக்கேட்டு வெகுதுக்கமடைந்து அழத் தலைப்பட்டார்கள்.

கும்பகர்ணனது மரணத்தைக் கேள்வியுற்ற சுற்றத்தாரது சோகம்.

எளிதில் தொழில்செய்யவல்ல இராமரால் தமது உடன் பிறந்தவன் வதைக்கப்பட்டதைக் கேட்டதும், மகோதரன் மகாபார்சுவன் என்ற இவ்விருவரும் சோகத்தில் மூழ்கின வராஞர்கள்.

இராவணன் புலம்பல்.

பிறகு, அரக்கர்தலைவனை அந்த இராவணன், அரிதினில் தேறி, கும்பகர்ணன்வதையை நினைந்து நினைந்து எளிமையுடன் புலம்பலானன் :—"மஹாவீரனே! மாற்றாரது செருக்கை யழிக்கின்றவனே! கும்பகர்ணனே! மகாபலம் பொருந்தியவனே! நீ காலத்தின் கொடுமையால் என்னைவிட்டு யமனது மாளிகைக்குச் சென்றுவிட்டாயே! மகாபலம் பொருந்தியவனே! எனக்கும் சுற்றத்தார்க்கும் இப்போது நேர்ந்திருக்கும் மனச்சள்ளையை நீக்காமல், நீ ஒருவனுகின்று சத்துருசேனையைக் கொஞ்சநாழிகைவருத்தி, என்னைத் தனியே விட்டிட்டு நீமட்டும் சென்றுயே! சுராசுரர்களையெல்லாம் லக்ஷ்யஞ் செய்யாமலிருக்கும்படி உதவிய என்வலக்கையை இழந்தேனே! இனி யான் உயிருடனிருந்தும் இறந்தாற்போலத்தான். தேவதானவர்களின் செருக்கைக் குலைப்பவனும், காலாக்கினியையும் காலருத்திரனையும் போன்றவனுமான இப்படிப்பட்ட வீரன், எவ்வாறு போரில்இராமனல் கொல்லப்பட்டான்? நீ வச்சிராயுதத்தின் மோதுதலையும் லக்ஷ்யஞ்செய்யமாட்டாயே! அப்படிப்பட்டநீ எவ்வாறு இராமபாணத்தால் அடிபட்டுப் பூமியில் இறந்து கிடக்கின்றாய்? தேவர்கள், மஹர்ஷிகளுடன் அதோ ஆகாயத்தில் நின்றுகொண்டு, நீ போரில் வதைக்கப்பட்டதைப் பார்த்துச் சந்தோஷத்தாற் கொக்கரிக்கின்றார்களே! வானரர்கள், மிகவும் மகிழ்ந்து இதுதான் சமயமென்றுநாற்புறத்திலும் இலங்கையின் வாயில்களிலும் தூர்க்கங்களிலும் இப்போதே ஏறிவிடுவார்களே; இது, திண்ணம். இனிமேல் எனக்கு நாடே வேண்டாம். சீதையால்தான் எனக்கு என்ன பயன்? கும்பகர்ணன் இறந்துபோனபிறகு, நான்

பிழைத்திருப்பதிலும் எனக்கு ஆசையில்லை. என் தம்பியைக்கொன்ற இராகவனை நான் போரிற்கொல்லாவிட்டால், உயிரை நீங்குவதுதான் எனக்கு மேன்மையைக் கொடுக்கும்; வீணன இந்தப்பிராணனுல் நன்மையுண்டாகாது. இப்பொழுதே எனது தம்பி இருக்கின்ற இடத்துக்குப் போகின்றேன்: ஏனெனில், தம்பியைவிட்டுப் பிரிந்து ஒரு நொடிப்பொழுதாவது உயிருடனிருக்கப்பொறேன். முந்தி அபகாரஞ் செய்த என்னை, தேவர்கள் பார்த்துச் சிரிப்பார்களே! கும்பகர்ணு! நீ போனபிறகு, எவ்வாறு நான் இந்திரனை வெற்றிகொள்வேன்? என்னைப்பார்த்து விபீஷணன் சொன்ன நற்போதனைகள் இப்பொழுது உண்மையாக முடிந்தன; ஐயோ! அந்த மகாத்துமா சொன்னசொற்களைப் புத்தியின்மையால் அப்போது உண்மையென்று கொள்ளாது விட்டேனே! கும்பகர்ணபிரஹஸ்தர்கட்குக் கொடுமையான கேடு விளைந்தபிறகு, விபீஷணன்சொன்ன சொல் என்னை வருத்துகின்றது. தார்மிகனும் ஸ்ரீமானுமான அந்த விபீஷணனை நான் அவமதித்தேனே! அந்தக் கொடிய வினையின் பயன், துயரத்தைத்தருவதாக இப்போது விளைந்தது" என்று இந்திரசத்துருவும் தம்பியுமான கும்பகர்ணன் மாண்டதை நினைத்து மனங்குழம்பிப் பலவாறு எளிமையாகப் புலம்பி அதிகமாகத்துடித்துக் கொண்டு இராவணன் பூமியில் விழுந்தான்.

அறுபத்தொன்பதாஞ் சருக்கம்:
நராந்தகனது வதை.

துராத்துமாவாகிய இராவணன் துயரத்தால் வருந்தி இவ்வாறு புலம்பியதைக் கேட்டு, திரிசிரஸ் என்பவன் பின்வருமாறு சொல்லலானுன்:—"எமது நடித்தந்தை, தாங்கள் சொல்லியவாறே மகாபலசாலிதான்; வேந்தரே! ஆயினும், தாங்கள்புலம்புவதுபோலச்சற்புருஷர்கள் புலம்பமாட்டார்

கள். பிரபுவே! தாங்கள் மூவுலகங்களையுந் தாங்கும் வல்லமை யமைந்தவர்களென்பது திண்ணம். அப்படியிருக்க,

திரிசிரஸ் இராவணனைத் தேற்றுதல்.

அற்பன்போலத் தங்கள் நிலைமையைப்பற்றித் தாங்கள் இவ்வண்ணம் ஏன் வருந்த வேண்டும்? பிரமதேவராற் கொடுக்கப்பட்ட சூலாயுதமும், கவசமும், வில்லும், அம்பும், ஆயிரங்கோவேறுகழுதை பூட்டி மேகம்போலச் சத்தஞ் செய்துகொண்டுஓடும் பெரிய இரதமும் இவைகளெல்லாம் தங்களிடம் அமைந்திருக்கின்றனவே. ஓராயுதமுமின்றி, தாங்கள் தேவதானவர்களெல்லாரையும் பலதரம் தோற்கடித்திருக்கின்றீர்களே; அப்படிப்பட்ட தாங்கள், இப்போது ஆயுதங்களெல்லாவற்றுடனும் சென்று இராகவனை வெற்றிகொள்ளுங்கள். அதுதான் இப்பொழுது என்னத்திற்கு? மஹாராஜரே! தாங்கள்

பொருது பகை வரையழிப்பதாக, திரிசிரஸ் உறுதிகூறுதல்.

இவ்விடம் சௌக்கியமாக இருங்கள். நான் போர்க்களத்துக்குப் போகின்றேன். கருடன் பாம்புகளையழிப்பதுபோல, நான் சத்துருக்களை வேருடன் அழிக்கின்றேன். இந்திரனுற் சம்பரன்போலவும், விஷ்ணுவினுல் நரகாசுரன்போலவும், என்னுல் இன்று இராமன் போரிற் கொல்லப்பட்டுத் தரையிற் கிடக்கப்போகின்றனன்" என்றன். திரிசிரஸ் அவ்வாறுசொன்ன சொல்லை அரக்கர் தலைவனுகிய இராவணன், கேட்டு, தனது விதியால் ஏவப்பட்டவனுய், தான் வேறு பிறவி பிறந்ததாகத் தன்னைப்பற்றிக் கருதலானன்.

திரிசிரஸென்பவன் சொன்னதைக் கேட்டு, தேவாந்தகன் நராந்தகன் வெகு பலசாலியாகிய அதிகாயன் என்ற

தேவாந்தகன் நராந்தகன் அதிகாயன் என்பவர்களும் போர்க்குச் செல்வோமெனல்.

இவர்களும், போர்புரிவதில் உற்சாகங்கொண்டார்கள். அப்பால், அரக்கவீரர்களாய் இந்திரனைப்போன்ற பராக்கிரமசாலிகளாகிய அந்த இராவணகுமாரர்கள் "நான் போர்புரியப்போகின்றேன், நான் போகின்றேன்" என்று கர்ச்சித்துக்கொண்டு, எல்லோரும் ஆகாயத்தில் நின்றார்கள்.

இவர்கள் யாவரும் மாயையில் வல்லவர்கள் ; இவர்க ளெல்லாரும் தேவர்களின்செருக்கை அடக்கவல்லவர்கள் ; இவர்கள்யாவரும் போரில் ஒருவராலும் அணுகமுடியாத வர்கள் ; மிக்க பலமமைந்தவர்கள் ; எங்கும் பரவிய கீர்த்தி பெற்றவர்கள் ; இவர்கள்யாவரும் போரில் தேவர்கள் கந்தர்வர்கள் கின்னரர்கள் உரகர்கள் என்னும் இவர்களா லும் தோல்வியடையாதவர்கள் ; இவர்கள்யாவரும் வெகு வித்வான்கள் ; வீரர்கள் ; யாவரும் போரில் வல்லமைபெற் றவர்கள் ; யாவரும் மிகுந்த அறிவுள்ளவர்கள் ; யாவரும் வரங்களைப்பெற்றவர்கள். தானவர்களின்செருக்கை யடக் குந்தேவர்களாற் சூழப்பட்டு இந்திரன் விளங்குவதுபோல, சூரியனுக்கு ஒப்பான காந்தியுடன் கூடியவர்களும் மாற் றரின் செருக்கை யடக்குபவர்களுமான அக்குமாரர்களாற் சூழ்ப்பட்டு, இராவணன் அப்போது விளங்கினன். அவ் விராவணன், தனது புத்திரர்களைக் கட்டியணைத்து, அவர் களை ஆபரணங்களால் அலங்கரித்து, உயர்ந்த ஆசீர்வச னங்களால் வாழ்த்தி, யுத்தகளத்துக்கு அனுப்பினன். அன்றியும், தனது குமா ரர்களைப் பாதுகாக்குமாறு, யுத்தோன்மத்தனன மகோதரன், மதம்பிடித்தவனன மகாபார்சுவன் என்னுந் தனது இரண்டு சகோதரர்களையும் உடன் அனுப்பினன். பெருந்தேகம்படைத்த அவ்வரக்கவீரர்கள், சத்துருக்க ளைக் கதறச்செய்யுந் தன்மையுள்ள இராவணனை வலம் வந்து வணங்கிப் போர்க்களத்துக்குப் புறப்பட்டார்கள். திரிசிரஸ், அதிகாயன், தேவாந்தகன், நராந்தகன், மகோ தரன், மகாபார்சுவன் என்ற இந்த ஆறு அரக்கவீரர் களும், காலத்தினு லேவப்பட்டுப் போர்புரிய வெகு உற் சாகங் கொண்டவர்களாய், ஆயுதங்களா லுண்டாகும் விர ணத்தை மாற்றும் வல்லமையுள்ள எல்லாவித மூலிகை களையும் பல நறுமணப்பொருள்களையும் பூசிக்கொண்டு புறப்பட்டார்கள்.

இராவணனிடத்து விடைபெற்று, திரிசிரஸ்முதலியோர் போர்க்களத்திற்செல்லுதல்.

அப்போது, மகோதரன், ஐராவதமென்ற திக்கஜத்தின் குலத்திற் பிறந்ததும் நீலமேகம்போன்ற நிறமுள்ளதுமான சுதர்சனமென்ற யானையின்மேல் ஏறிக்கொண்டான். பலவகை ஆயுதங்களாலும் நிரம்பி அம்பரூத்தூணியால் நன்றாக் அலங்கரிக்கப்பட்டு விளங்கிய அவ்யானையின்மேல் ஏறிய அவ்வரக்கன், அஸ்தகிரியின்மீது விளங்குஞ் சூரியன் போலத் தோன்றினன்.

மகோதரன்.

திரிசிரஸென்ற இராவணகுமாரன், சிறந்த குதிரைகள் பூட்டப்பட்டுப் பலவகையாயுதங்களும் நிறைந்திருந்த உயர்ந்த இரதத்தின்மேல்ஏறினன். தனது கையில் வில்லேந்திய திரிசிரஸ், இரதத்தில் ஏறி, மலைமுகட்டிலே இந்திரசாபத்துடனும் எரிகொள்ளி பாயப்பெற்ற மின்னற்கொடியுடனும் விளங்கும் மேகம்போலக் காணப்பட்டான். அவ்வுத்தமமான இரதத்தின்மேல், தனது மூன்று தலைகளிலேயும் மூன்று கிரீடங்க ளணிந்த திரிசிரஸென்பவன், மூன்று பொற்சிகரங்கள் ஓங்கிநிற்கப்பெற்ற தொரு இமயமலை போலக் காணலாயினன்.

திரிசிரஸ்.

பலசாலியும், வில்வீரர்களுக்குள் உத்தமனுமான அதிகாய னென்ற இராவணகுமாரன், இனிய சக்கரங்களும் அச்சும் அமைந்தும், மிகவும் உறுதியாயும், இனிய நுகத்தடி வாய்ந்தும், அம்பரூத்தூணிகளுடனும் விற்களுடனும் விளங்கியும், ஈட்டி கத்தி உழலைத்தடி இவைகள் நெருங்கப் பெற்று முள்ள சிறந்த இரதத்தில் ஏறினன். அவ்வரக்கன், இரத்தினங்களால் இனிதாகச் செய்யப்பட்டு விளங்கிய கிரீடத்தாலும் ஆபரணங்களாலும், மேருமலை கிரணங்களினால் விளங்குவதுபோல விளங்கினன். மகாபலம் பொருந்திய அந்த ராக்ஷஸராஜகுமாரன், அரக்கர்களாற்

அதிகாயன்.

சூழப்பட்டவனாய், தேவேந்திரன் தேவர்களாற் சூழப்பட்டுச் சோபிப்பதுபோலக் காணப்பட்டான்.

நராந்தகன். நராந்தகனென்பவன், உச்சைச்சிரவஸைப்போன்றதும், வெண்ணிறமுள்ளதும், பொன்னபரணங்களாலலங்கரிக்கப்பட்டதும், மனோவேகமாகச் செல்வதும், பேருடல் பொருந்தியதுமான ஒரு குதிரையின்மேல் ஏறினன். கொள்ளிக்கட்டைபோல் விளங்குகின்ற எறியீட்டியைக் கையிற்பற்றிய அந்த நராந்தகன், சூலாயுதத்தைப் பிடித்தவனாய், மயிலின்மேல் வீற்றிருக்குந் தேஜஸ்வியாகிய சுப்பிரமணியக்கடவுள் போலச் சோபித்தான்.

தேவாந்தக மஹாபார்சுவர். வயிரக்கற்களிழைத்திருந்த உழலைத்தடியைக்கைப்பற்றிய தேவாந்தகன், தன் கைகளால் மந்தரமலையைப் பற்றிக்கொண்டு அமிருதமதனம் பண்ணிய விஷ்ணுவைப்போல விளங்கினன். பெருவீரனும் பெருந்தேகம்படைத்தவனுமான மஹாபார்சுவன், தனதுகையிற் கதாயுதத்தை யெடுத்தவனாய், போரிற்குபேரன் விளங்குவதுபோல விளங்கலானன்.

அரக்கர் போர்க்குச் செல்லுதல். வீரர்களாய் அளவற்ற சேனைகளாற் சூழப்பட்ட அவ்வரக்கர்கள், அமராவதிநகரத்தில் ஒப்பற்ற சேனைகளாற் சூழப்பட்ட தேவர்கள்போலப் போரிடச் சென்றார்கள். அவ்வரக்கவீரர்களை, சிறந்த ஆயுதமேந்திய பலபேர்கள், யானைகளிலும் குதிரைகளிலும் மேகம்போலச் சத்தஞ்செய்யும் இரதங்களிலும் ஏறித் தொடர்ந்து சென்றார்கள். சூரியனுக்கு ஒப்பாகக் காந்திபொருந்தி விளங்குபவர்களாய் மிக்க தைரியசாலிகளாகிய அவ்விராசகுமாரர்கள், கிரீடங்களையணிந்தவர்களாய், ஒளியினால் ஆகாயத்திலே விளங்குங் கிரகங்கள்போலக் காணப்பட்டார்கள். அவர்கள் தமது கைகளிற் பற்றியிருந்த வெண்ணிறமான ஆயுதங்களின் வரிசைகள், ஆகாயத்திலே சரத்கால

மேகங்கள் போலவும், அன்னப்பறவைகளின் வரிசைகள் போலவும் காணலாயின. யுத்தம்பண்ண நிச்சயித்திருந்த அவ்வீரர்கள், 'மரணத்தையாவது சத்துருக்களை வெல்வதையாவது நாம் பெறுவோமாக' என்ற உறுதியுடன் சென்றார்கள். வெகுவல்லமையுடன் யுத்தத்துக்குச் சென்ற அவ்வீரர்கள், வழியில் கர்ச்சித்துக்கொண்டும் சிங்கநாதஞ் செய்துகொண்டும், எதிரிகளைத்தடுக்கும்மொழிகளைச் சொல்லிக்கொண்டும் சென்று, அம்புகளை எடுத்துக்கொண்டார்கள். அரக்கர்களின் அட்டகாசங்களாலும் தோள்களைத் தட்டுஞ்சத்தத்தாலும் பூமியே சலித்தது. அவர்கள் செய்த சிங்கநாதத்தினால் ஆகாயமே வெடித்துவிடுவதுபோலக் காணலாயிற்று.

அரக்கசேனையும் வானரசேனையும் ஒன்றையொன்று காணுதல்.

மகாபலம்பொருந்திய அவ்வரக்கவீரர்கள், வெகு சந்தோஷத்துடன் யுத்தத்துக்கு வெளிப்புறப்பட்டுவந்து, தங்கள் கைகளிற் பாறைகளையும் மலைகளையும் ஏந்திநின்ற அந்தப் பெரிய வானரசேனையைக் கண்டார்கள். மகாத்துமாக்களான வானரர்களும், யானைகள் குதிரைகள் இரதங்கள் என்னும் இவைகள் நிரம்பிப் பெரிய பல ஆயுதங்களை ஏந்திக் கொழுந்துவிட்டெரியும் நெருப்புப்போலவும் சூரியனைப்போலவும் ஜ்வலித்துக்கொண்டு நீலமேகம்போல் விளங்கிய பெரிய அவ்வரக்கசேனையைக் கண்டார்கள்.

அவ்வண்ணம் வந்த அரக்கசேனையை வானரர்கள் கண்டதும், அதிகபலம்பொருந்திய வானரர்கள், தாம் போர் செய்யுமாறு இலக்குக்கிடைத்தமையால், பெருமலைகளை யெடுத்துக்கொண்டு அட்டகாசஞ் செய்து, அரக்கர்களைக் காண மனம் பொறுக்காதவர்கள்போலக் கர்ச்சிக்கலானார்கள். அவ்வண்ணம் வானரசேனைவீரர்கள் செய்த பேரொலியை, மகாபலம்பொருந்திய அவ்வரக்கவீரர்கள், கேட்டு, மாற்றாரது மிக்கமகிழ்ச்சியைச் சகியாதவர்களாய், தாமும்

மிகவும் பயங்கரமாக அட்டகாசம் பண்ணலானார்கள். அந்தப் பயங்கரமான இராட்சசசேனையிற் புகுந்து, வானரர்கள், தாங்கள் எடுத்துவந்த குன்றுகளுடனே, சிகரங்களுடன் கூடிய மலைகள்போலச் சஞ்சரிக்கலானார்கள். மரங்களையும் கற்களையும் ஆயுதங்களாகக் கையிற்பற்றியுள்ள வானரர்களிற் சிலர் ஆகாயத்திற் கிளம்பியும், வேறு சிலர் தரையில் நின்றபடியேயும், பெரியகிளைகளுடன் விளங்கிய மரங்களை யெடுத்துக்கொண்டு, வெகுகோபத்துடன் அரக்கசேனையில் நுழைந்தார்கள். அப்பொழுது, அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் வெகுபயங்கரமான யுத்தம் உண்டாயிற்று. பயங்கரமான பராக்கிரமமுள்ள அவ்வானரவீரர்கள், அரக்கர்கள் அம்புகளால் தங்களைத் தடுத்தபோதிலும், மரங்கள் மலைகள் கற்பாறைகள் இவைகளை உவமையெடுத்துக்கூற முடியாதவாறு அவ்வரக்கர்கள்மேற் சொரிந்தார்கள். போர்க்களத்தில், வானரர்களும் அரக்கர்களும் அடிக்கடி சிங்கநாதஞ் செய்தார்கள். வானரர்கள், பாறைகளைக்கொண்டு அரக்கர்களைத் தூளாக்கினர்கள். சிலவானரர்கள், கோபங்கொண்டு, கவசங்களையும் ஆபரணங்களையும் அணிந்திருந்த அரக்கர்களைக் கொன்றார்கள். சிலர், இரதம் குதிரை யானை இவைகளின்மேல் ஏறிச் சண்டைசெய்த அரக்கவீரர்களை விரைந்து மேல்விழுந்து வதைத்தார்கள். மலைச்சிகரங்கள் மோதுவதனற் புண்பட்ட தேகங்களுடனும், கைக்குத்துக்களாற் பிதுங்கின கண்களுடனும், அப்போர்க்களத்தில், அரக்கவீரர்கள் ஓடி விழுந்து அலறினர்கள். அரக்கர்களும், கூரான அம்புகளால் வானரர்களைப் பிளந்தார்கள்; சூலங்கள் வாளதடிகள் கதாயுதங்கள் ஈட்டிகள் வேலாயுதங்கள் என்னும் ஆயுதங்களாலும் புடைத்தார்கள். அங்கு, அரக்கர்களும் வானரர்களும், தங்கள் தங்கள் மாற்றாருடைய இரத்தத்தாற் பூசப்பட்டவர்களாய், தங்களுக்கே வெற்றியுண்

வானரர்களும் அரக்கர்களும் செய்த கடும் போர்.

டாகவேண்டுமென்ற ஆசையுடன் ஒருவரை மற்றொருவர் போரில் விழுத்தினர்கள். அப்பால், வானரர்களும் அரக்கர்களும் வீசியெறிந்த மலைகளாலும், கத்திகளாலும், அப்போர்க்களமானது, ஒரு முகூர்த்தகாலத்திற்குள் மறைக்கப்பட்டு, இரத்தத்தால் நனைந்ததாகவும் ஆய்விட்டது. அப்போது, பகைவர்களைக் கொல்லவல்லவர்களும் யுத்தமதங் கொண்டவர்களும் சரிந்த மலைபோன்ற உருவத்துடன் விழுந்தவர்களுமான அரக்கர்களால், அப்போர்க்களம் நிறைந்தது. வானரர்களால் தூக்கியெறியப்பட்டவர்களும் தமது சூலங்கள் முறியப்பெற்றவர்களுமான அரக்கர்கள், மீண்டும் நெருங்கி அற்புதமாக மல்லயுத்தஞ் செய்தார்கள். அவ்வரக்கர்கள், வானரர்களை வானரர்களைக்கொண்டே அடித்தார்கள்; அவ்வண்ணம் வானரர்கள், அரக்கர்களை அரக்கர்களைக்கொண்டே அடித்தார்கள். அரக்கர்கள், வானரர்கள் கைகளில் வைத்திருந்த பாறைகளைப் பிடுங்கி அவ்வானரர்களை அடித்தார்கள்; வானரர்களும், அரக்கர்கள் கைகளில் வைத்திருந்த ஆயுதங்களைப் பற்றியிழுத்து அவ்வரக்கர்களைக் கொன்றார்கள். அப்போரில், வானரர்களும், அரக்கர்களும், மலைகள் சூலங்கள் அஸ்திரங்கள் என்ற இவைகளைக் கொண்டு ஒருவரை மற்றொருவர் அடித்துப் பிளந்தார்கள்; ஸிம்ஹநாதமும் செய்தார்கள்.

வானரர்களால் அடியுண்ட அரக்கர்கள், கவசங்களாகிய தேகரக்ஷைகளை யிழந்து, மரங்கள் பிசினை வெளிவிடுவதுபோல இரத்தத்தைப் பெருகவிடலானார்கள். சில வானரர்கள், அன்று நடந்த சண்டையில், இரதங்களினால் இரதங்களையும், யானைகளால் யானைகளையும், குதிரைகளால் குதிரைகளையும் கொன்றார்கள். எல்லா வானரர்களும், வெகு உற்சாகத்துடன் மலைகளையும் பலகிளைகளடர்ந்த மரங்களையும் தூக்கிக்கொண்டு, அரக்கர்களை வதை செய்தார்கள். அவ்வண்ணம் அரக்கர்களுக்கும் வானரர்

களுக்கும் வெகு பயங்கரமான போர் நடக்கலாயிற்று. கத்திகளாலும் அர்த்தசந்திர பாணங்களாலும் பல்லங்களென்னும் ஆயுதங்களாலும் கூரான அம்புகளாலும், அரக்கர்கள், வானரர்களெறிந்த மலைகளையும் மரங்களையும் பிளந்தெறிந்தார்கள். சிதறின மலைச்சிகரங்களாலும் போரில் முறிந்த மரங்களாலும், மாண்ட அரக்க வானர வீரர்களாலும், அப்போர்க்களம், ஒருவராலும் நடந்து செல்ல முடியாததாகக் காணப்பட்டது.

வானரர்களின் வெற்றி.

அன்று, வானரர்கள் யாவரும், வெகு கர்வமடைந்து உற்சாகங் கொண்டவர்களாய், சிறிதும் அச்சமென்பதேயில்லாமற் போரிலிறங்கி, பலவித ஆயுதங்களையுடைய அரக்கவீரர்களோடு சிறிதுஞ் சலிக்காமல் யுத்தஞ் செய்தார்கள். அவ்வண்ணம் நெருக்கமான போர் நடக்கையில், வானரவீரர்கள் களித்துக்கொண்டும் அரக்கவீரர்கள் மடிந்துகொண்டுமிருந்தபொழுது, மஹர்ஷிகளும் தேவகணங்களும் ஆரவாரித்தார்கள்.

நராந்தகன் வானரருடன் போர் செய்தல்.

அப்பொழுது, நராந்தகனென்பவன், காற்றுக்கொப்பான கடிவேகமுள்ள ஒரு குதிரையின்மேலேறி, கூரான சூலமொன்றைக் கையிற் பிடித்துக்கொண்டு, பெருஞ் சமுத்திரத்தில் மீன்புகுவதுபோல, சுக்கிரீவனுடைய சேனைக்குட் புகுந்தான். அவ்வரக்கவீரன், பிரகாசமுள்ள ஈட்டியைக்கொண்டு, எழுநூறு வானரவீரர்களைப் பிளந்தான்; ஒரு கணப்பொழுதில், இந்திரசத்துருவும் மகாதைரியசாலியுமான அவ்வரக்கன், அவ்வானர சைனியத்தை நாசம்பண்ணினான். வித்தியாதரர்களும் மஹர்ஷிகளும், அவ்வரக்கவீரன் குதிரையின்மேலேறி வானர சைனியத்தின் நடுவிற் சஞ்சரிப்பதைக் கண்டார்கள். அவன் சென்ற வழியெல்லாம், இரத்த மாமிசங்களினாற் சேறுனதாகவும், மடிந்த வானர சவங்களால் மலைபோற் குவிந்ததாகவும் காணப்பட்டது. வானரவீரர்கள் தங்கள்

வல்லமையைக் காட்ட முயல்வதற்குள், நராந்தகன், மீறி, அவர்களைப் பிளக்கலானன். காட்டைக் காட்டித்தியானது கொளுத்துவதுபோல, அப்போர்க்களத்தில், மின்னுகின்ற ஈட்டியை ஓங்கிக்கொண்டு, நராந்தகன் வானரசேனையைக் கொளுத்தினன். மரங்களையும் மலைகளையும் பிடுங்கியெடுத்த பொழுதெல்லாம், வானரர்கள், அரக்கனுடைய ஈட்டியால் நறுக்கப்பட்டு, வச்சிராயுதத்தால் வெட்டுண்ட மலைகள் போலப் பூமியிற் சாய்ந்தார்கள். பிரளயகாலத்திலுண்டாகும் பிரசண்டமாருதம்போல, பலவானன நராந்தகன், எல்லாத் திசைகளிலும் சஞ்சரித்துக்கொண்டு, வானரசேனை முழுவதையும் நாசம் பண்ணலானன். உயரமாக எழுந்து போனலும் இருந்தாலும் சென்றலும் ஓருவரையும்விடாமல் அவ்வரக்கவீரன் பிளந்துகொண்டிருந்ததனல், அவ்வானரவீரர்களால் அச்சத்தினல் உயரவெழுந்து செல்லவாவது இருக்கவாவது நடந்துசெல்லவாவது முடியவில்லை. யமனைப்போலக் கொடியதாய்ச் சூரியனைப் போல மின்னிய ஓர் ஈட்டியால், அவ்வானரவீரர்கள் முறிந்து பூமியில் விழுந்தார்கள்; வச்சிராயுதம் நெருக்குவதுபோல் நெருக்கின அந்த ஈட்டியின் தாக்குதலைப் பொறுக்க முடியாமல், அவ்வானரவீரர்கள், பெருங்குரலாற் கதறினர்கள். அடிபட்டுக் கீழேவிழுந்த வானரர்களுடைய உருவம், வச்சிராயுதத்தாற் சிகரங்களில் அடிபட்டுச் சிதறிவிழுந்த மலைகளின் உருவம்போலக் காணப்பட்டது.

வானரர்கள் நராந்தகனல் முறியடிக்கப்படுதல்.

முன்பு கும்பகர்ணனல் அடிபட்ட பேருடல்படைத்த வானரவீரர்கள், தங்களைத் தேற்றிக்கொண்டவர்களாய், சுக்கிரீவனிடம் நின்றிருந்தார்கள். சுக்கிரீவன் நாற்புறத்திலும் நோக்குபவனுய், வானரசேனை நராந்தகனிடத்துப் பயத்தால் இங்கும் அங்கும் முறிந்தோடுவதைக் கண்டான். அவ்வாறு ஓடின சேனையைக் கண்டதும், சுக்கிரீவன், குதிரையின்மேல் ஏறி உட்கார்ந்து கையில் எறியீட்டி ஏந்தி நராந்தகன் வருவதைக் கண்ணுற்றன்.

வானரர்களின் நிலையைச் சுக்கிரீவன் காணுதல்.

உடனே, அதிகவல்லமைபொருந்திய வானரராஜனுகிய சுக்கிரீவன், இந்திரனுக்கு ஒப்பான பராக்கிரம மமைந்த வீரனுகிய அங்கதகுமாரனே நோக்கி, "நீ சிக்கிரமாகச்சென்று அதோ குதிரையின்மீது ஏறிக்கொண்டு நமது வானரசேனையைக் கலக்குகின்ற அவ்வரக்கவீரனுடைய பிராணனே வாங்கிவிடு" என்று கட்டளையிட்டான்.

நராந்தகனைக் கொல்லுமாறு அங்கதனைச் சுக்கிரீவன் ஏவுதல்.

அப்பால், அவ்வங்கதன், தனது யஜமானனுடைய கட்டளையைக் கேட்டதும், முகில்போன்ற சேனையினின்றும் சூரியன் போல எழுந்து, கார்முகில்போல் விளங்கிய அரக்கசேனைக்குட் புகுந்தான். வானரோத்தமனுகிய அங்கதன், தோள்வளைகளணிந்து, தாதுக்களுடன்கூடிய மலைபோல் விளங்கினன். வாலிபுத்திரனுய் மஹாபராக்கிரமசாலியாகிய அந்த அங்கதன், நகங்களும் பற்களும் தவிர வேறேராயுதமுமின்றி, நராந்தகனேயணுகி, 'சற்று இரு; சாதாரணமான இந்த வானரர்களோடு என்ன செய்கிறுய்? எனது இந்த மார்பில் வச்சிராயுதம்போல் விழுகின்ற உனதுஎறியீட்டியை விடுக' என்று கூறினன். நராந்தகன், அங்கதன்கூறிய மொழியைக் கேட்டு, மிகவுஞ் சினந்து, தனது உதட்டைப் பற்களாற் கடித்துக்கொண்டு, பாம்புபோலச்சீறி, அங்கதனே நோக்கி விரைந்து வந்து, ஜ்வலித்துக்கொண்டிருந்த தனது எறியீட்டியை அவன்மார்பைநோக்கி விசியெறிந்தான். அந்த ஈட்டியும், வச்சிரம்போல வலிமையுள்ள அங்கதன் மார்பில் விழுந்ததும் முறிந்து பூமியில் விழுந்தது. கருடனல் துண்டிக்கப்பட்ட பாம்புபோல் அவ்வீட்டி முறிந்து விழுந்தவுடன், வாலியின் குமாரனுகிய அவ்வங்கதன், தன்து கைத்தலத்தை ஓங்கி நராந்தகனுடைய குதிரையின் தலையில் ஓரறை அறைந்தான். அதனல், மலைபோ

சுக்கிரீவனது கட்டளைப்படியே, அங்கதன் நராந்தகனுடன் போர் செய்தல்.

லிருந்த அவனது அக்குதிரை, கன்னம்விண்டு, விழிவெளிக் கிளம்ப நாக்கு அறுபட்டு மண்டை சிதறிப் பூமியில் விழுந்தது. தனது அசுவம் கொல்லப்பட்டுப் பூமியில் விழுந்ததைப் பார்த்து, வெகுவல்லமையுள்ள நராந்தகன், மிகவுங் கோபமடைந்து, தனது கையை ஓங்கி வாலியின் புதல்வனைத் தலையில் ஓரறை அறைந்தான். அவ்வறைவிழுவே, அங்கதன், மூர்ச்சைகலங்கி, மிகவும் வெப்பமான இரத்தத்தை வாயினூற் கக்கிக்கொண்டு அடிக்கடி மனம்பொங்கி மூர்ச்சையடைந்து சிறிது தெளிந்து, அவ்வரக்கன் வல்லமையைக் கண்டு ஆச்சரியமடைந்தான். அப்பால், மஹாதைரியசாலியாய் வாலியின்புதல்வனை அங்கதன், வச்சிராயுதத்துக்கொப்பான வேகமமைந்து மலை சிகரம் போன்றதான தனது முஷ்டியைச் சுழற்றி நராந்தகன் மார்பில் ஒரு குத்து வைத்தான். அக்குத்தினுல், அவ்வரக்கன், மார்பு விரிந்து, கொதிக்கும் இரத்தம் வழிந்தோட, வச்சிராயுதம் விழுந்ததனூற் சிதறிவிழும் மலைபோலப் பூமியில் விழுந்து மடிந்தான்.

நராந்தகனை அங்கதன் கொல்லுதல்.

உடனே, ஆகாயத்தில் தேவர்களும் வானரர்களும் கூட்டங்கூடி, சிறந்த அரக்கவீரனுகியநராந்தகனை வாலியின்குமாரன் வதைத்ததற்காகக் களிப்பாற் கொக்கரித்தார்கள். மிக்க வீரபராக்கிரமமமைந்த அங்கதன், ஸ்ரீராமருடைய மனத்தைக் களிப்பிக்குமாறு தான் ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தைச் செய்ததற்காகத் தனக்குள்ளேயே ஆச்சரியமடைந்து, மறுபடியும் போர்புரிவதில் உற்சாகங் கொண்டவனுய் விளங்கினன்.

அங்கதன் கொண்டாட்டம்.

எழுபதாஞ் சருக்கம்:
தேவாந்தகன் முதலியவர்களின் வதை.

நராந்தகன் வதைக்கப்பட்டதைப் பார்த்து, புலஸ்திய வம்சத்தில் தோன்றியவரான தேவாந்தக திரிசிரஸ்களும் மகோதரனும் கூக்குரலிட்டுக் கதறினர்கள்.

வீரியவானனை மகோதரன், மேகம்போலிருந்த ஒரு யானையின்மேலேறி, மகாவீரியவானனை அங்கதனைத் துரத்தலானன். அவ்வாறே வெகு பலசாலியாகிய தேவாந்தகனும், தனது சகோதரன் வதைக்கப்பட்ட துக்கத்தால் மிக வருந்தி, ஒளியால் மின்னுகின்ற உழலைத்தடியையெடுத்துக் கொண்டு, அங்கதனைத் துரத்தலானன். திரிசிரஸ் என்ற அரக்கவீரன், சூரியன்போல் விளங்குவதாய் வெகு வேகமுள்ள குதிரைகள் பூட்டியிருந்த இரதத்திலேறிக்கொண்டு அங்கதனைத் தொடரலானன்.

தேவாந்தகன் முதலியோர் அங்கதனுடன் போர்செய்யச் செல்லுதல்.

தேவர்களுடையசெருக்கையும்அடக்கும்வல்லமை தங்கிய அவ்வரக்கவீரர் மூவராலும் துரத்தப்பட்ட அங்கதன், பெரிய கிளைகளுடன் விளங்கிய விருக்ஷமொன்றைத் தூக்கிக்கொண்டான். இந்திரபகவான் எரிந்துகொண்டுவிழும் இடியை விடுவதுபோல, பெருங்கிளைகளமைந்த அந்தப்பெருமரத்தை, அங்கதவீரன் சரேலென்று தேவாந்தகன்மேலெறிந்தான். திரிசிரஸென்பவன், சர்ப்பத்துக்கு ஒப்பான கொடிய பாணங்களைப் பிரயோகித்து அவ்விருட்சத்தைத் துண்டித்தான். அம்மரத்தை அரக்கன் துண்டித்ததைக் கண்டு, வானரவீரனகிய அங்கதன், வெகுவேகமாக ஆகாயத்திற் கிளம்பி, பல மரங்களையும் மலைகளையும் பிடுங்கிப்பிடுங்கிப் பொழிந்தான். திரிசிரஸென்பவன், வெகு கோபத்துடன் அவைகளைத் தனது கூரான பாணங்களால் வெட்டியெறிந்தான். தேவாந்தகனும், தனது உழலைத்தடியின் நுனியால் அம்மரங்களை முறித்தெறிந்தான். திரிசிரஸும் அம்புகளைத் தொடுத்துக்கொண்டு, வீரனகிய அங்கதனை எதிர்க்கலானன். மகோதரனும், மிக்க கோபத்துடன் யானையை வெகு வேகமாக ஓட்டிவந்து, அங்கதனை யணுகி, வச்சிராயுதத்துக்கு ஒப்பான தோமரங்களால் அவன் மார்பிற் புடைத்தான்.

தேவாந்தகன் முதலிய மூவரும் அங்கதனும் போர்செய்தல்.

தேவாந்தகனும், வெகு கோபத்துடன், அங்கதனையணுகி, உழலைத்தடியால் அடித்து, வெகு வேகமாகத் திரும்பினன். அவ்வாறு மூன்று அரக்கவீரர்கள் ஒருங்கே தன்னை எதிர்த்தபோதிலும், வெகு வல்லமைதங்கிய பராக்கிரமசாலியாகிய அங்கதன், கொஞ்சமேனும் வருத்தமடையவில்லை. தனது சத்துருக்களால் வெல்லமுடியாதவனும் அதிவேகமாகச் சஞ்சரிப்பவனுமான அங்கதன், வெகு விரைவாக எழுந்து, மகோதரனுடைய யானையின் தலையில் ஓரறையறைந்தான். அவ்வறை விழவே, மகோதரனது களிற்றின் கண்கள், போர்க்களத்தில் தெறித்து விழுந்தன; அவ்யானையும்வீரிட்டு இறந்தது. மகாபலம்பொருந்தியஅங்கதன், அக்களிற்றின் தந்தங்களி லொன்றைப் பறித்து, தேவாந்தகன்மீது தாவி, அவன்மார்பிலடித்தான். பெருங்காற்றுற் பேர்க்கப்பட்ட மரம்போல, அவ்வரக்கன் உறுப்புக்களெல்லாம் கலங்கி, செம்பஞ்சின் நிறத்தை யொத்த இரத்தத்தை வாயினுற் கக்கினன். பிறகு, மஹாதேஜஸ்வியாய்ப் பலசாலியாகிய தேவாந்தகன், அரிதினில் தேறி, கோரமான உழலைத்தடியைச் சுழற்றி, அப்போது அங்கதனை யடித்தான். அவ்வடிபட்ட அங்கதன், அப்போது தனது காலை மடித்தவண்ணம் பூமியில் விழுந்து, மறுபடியும் ஆகாயத்திற் கிளம்பினன். அவ்வண்ணம் கிளம்பிய அவ்வானரவேந்தன்புதல்வனது நெற்றியில், திரிசிரஸ் கூரான மூன்று பாணங்களை விடுத்தான்.

அனுமானும் நீலனும் அங்கதனுக்குத் துணையாக வருதல்.

அப்போது, அனுமானும் நீலனும், அரக்கவீரர் மூவரால் அங்கதன் சூழப்பட்டதை அறிந்து, அவனுக்கு உதவிசெய்ய வந்தனர். அப்பால், நீலனென்பவன், திரிசிரஸின்மேல் ஒரு பெரு மலைச்சிகரத்தை யெறிந்தான்; அம்மலைச் சிகரத்தை, புத்திமானுகிய அந்த இராவணகுமாரன், தனது கூரான பாணங்களினுற் பிளந்தெறிந்தான். அவ்வாறு பலபாணங்களாற் பிளந்

தெறியப்பட்ட அம்மலைச் சிகரம், கற்கள் பிளவுபட்டு, நெருப்புச் சுவாலையுடனும் தீப்பொறிகளுடனும் பூமியில் விழுந்தது.

பிறகு, அவ்விதமாய் மலை பிளவுபட்டதைக் கண்டு, தேவாந்தகன், களித்து, அப்போது போர்க்களத்தில் உழலத்தடியைக்கொண்டு அனுமானைத் துரத்தலானன்.

அனுமான் தேவாந்தகனைக் கொல்லுதல்.

தனது அருகில் அவன் வந்ததும், வாயுபுத்திரனன அனுமான், ஆகாயத்திற் கிளம்பி அப்போது வச்சிராயுதத்துக் கொப்பான தனது முஷ்டியால் அவ்வரக்கனைத் தலையிற் குத்தினன். மகா பராக்கிரமசாலியான வாயுகுமாரன் அவ்வண்ணம் குத்தியபோது, தனது கொக்கரிப்பால் அரக்கர்களை நடுநடுங்கச் செய்தான். அக்குத்து விழவே, அரக்கர்மன்னவனது குமாரனுகிய தேவாந்தகன், மண்டைசிதறுண்டு, தனது பற்களும் கண்விழிகளும் வெளியில்விழ, நாக்குத் தொங்க, தனது உயிரையிழந்து சடிதியிற் பூமியில் விழுந்தான்.

மகாபலம்பொருந்தியவனும் தேவர்களுடனும் எதிர்த்துநிற்பவனும் அரக்கவீரர்களுக்குள் முக்கியனுமான தேவாந்தகன் போரில் அவ்வாறு வதைக்கப்பட்டதும், திரிசிரஸ், உக்கிரமான கோபங்கொண்டு, நீலனுடைய மார்பைநோக்கிக் கூரானமுனைவாய்ந்த கொடிய பாணவர்ஷங்களை வர்ஷிக்கலானன். மகோதரனும், கோபங்கொண்டவனுய், மந்தரமலையில் சூரியபகவான் ஏறிவருவதுபோல மலைபோலிருக்கும் மற்றொருயானையின்மேல் ஏறிக்கொண்டு, இந்திரதனுசுடனும் மின்னலுடனும் விளங்கும் மேகம் மலையின்மேல் மழைபொழிவதுபோல நீலன் மார்பை நோக்கிச் சரமாரியைப் பொழியலானன். பிறகு, வானரசேனுபதியாகிய நீலனும், மஹா பலசாலியாகிய மகோதரனது அம்புமழைகளைத் தாங்கமாட்டாது உடல் முழுதும் புண்பட்டுச் சோர்ந்து ஒன்றுந்தோன்றுதவனுயி

ஞன். அதன்பிறகு, நீலன், மூர்ச்சைதெளிந்து, பெருவிருட்சங்கள் வளர்ந்திருந்த மலையொன்றைப் பறித்து, வெகுவேகமாக ஆகாயத்திற் கிளம்பிவந்து, அதனால் மகோதரனது தலையில் அடித்தான். அதனால் முறிக்கப்பட்ட மகோதரன், தனது பருத்த யானையுடன் ஹிம்ஸிக்கப்பட்டவனாய், உயிரிழந்து, வச்சிராயுதத்தாலடியுண்ட மலைபோலப் பூமியில் விழுந்தான்.

நீலன் மகோதரனைவதைத்தல்.

திரிசிரஸென்பவன், தனது சிற்றப்பன் வதைக்கப்பட்டதைப் பார்த்து, வில்லையெடுத்துத் தொடுத்து மிக்க சினத்துடன் அனுமானைக் கூரான அம்புகளாற் பிளக்கலானான். அந்த வாயுவின்குமாரன், வெகு கோபத்துடன் அவன்மீது மலைச்சிகரமொன்றை விட்டெறிந்தான். பலசாலியாகிய திரிசிரஸும், கூரான தனது அம்புகளால் அம்மலைச் சிகரத்தைப் பலதுண்டங்களாகப் பிளந்தான். பெருவானரனாகிய அனுமான், தனதுமலைச்சிகரம் வீணனதைப் பார்த்து, அப்போர்க்களத்தில், இராவணகுமாரன்மேல் மரங்களை மழைபோலப் பொழிந்தான். பிரதாபசாலியாகிய திரிசிரஸும், அம்மரமழை ஆகாயத்தில் வருகையிலேயே, கூரானபாணங்களைக்கொண்டு முறித்தெறிந்து கர்ச்சித்தான். பிறகு, அனுமான், கிளம்பி, திரிசிரஸின் குதிரையைச் சிங்கம் யானையைக் கிழிப்பதுபோலத் தனது நகங்களாற் பிளந்தான். அப்பொழுது, இராவணகுமாரனாகிய திரிசிரஸானவன், காலராத்திரியில் யமன்போல, சக்தியென்னும் ஆயுதத்தை யெடுத்து அனுமான்மேலெறிந்தான். ஆகாயத்தினின்று விழுகின்ற எரிகொள்ளியைப் போன்று தடைப்படாது தன்னைநோக்கி வந்துகொண்டிருந்த அந்தச் சக்தியை, அனுமான், கையினற் பிடித்து, இரண்டு துண்டாக முறித்து அட்டகாசம் பண்ணினான். வெகுபயங்கரமான அந்தச் சக்தியை அனுமான் முறித்தது கண்டு,

திரிசிரஸை அனுமான் வெட்டி வீழ்த்துதல்.

வானரர்கள் சந்தோஷமடைந்து, மேகங்கள்போலக் கர்ச் சித்தார்கள். அப்பால், அரக்கவீரனுகிய திரிசிரஸ், கத் தியை ஓங்கி அனுமானது விசாலமான மார்பை வெட்ட லானுன். அவ்வெட்டுக் கொஞ்சம் தன்மேற் பட்டதும், வாயு குமாரனும் வீரியவானுமான அனுமான், தனது கையைப் பரப்பி, அவ்வரக்கனது மார்பில் ஓங்கியறைந்தான். அவ் வறை விழுவே, தனது கையிலிருந்த கத்தி நழுவ, மஹா பராக்கிரமசாலியாகிய அவ்வரக்கவீரன், மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்தான். மலைபோலுந் தோற்றமுள்ள அப் பெருவானரவீரன், அவ்வாறு கீழ்விழுகின்ற அரக்கனிடத் தினின்றும் கத்தியைக் கவர்ந்துகொண்டு, அரக்கர் யாவ ரும் நடுநடுங்க அட்டகாசம்பண்ணினுன். அந்த அட்ட காசத்தைச் சகிக்காதவனுய், அவ்வரக்கன், எழுந்து அனு மான்மீது ஒரு குத்துக் குத்தினுன். அக்குத்து விழுவே, அனுமான், வெகுகோபங்கொண்டு, அவ்வரக்கவீரனுடைய கிரீடங்களணிந்த தலைகளைத் தனது கையால் தாவிப் பிடித் தான். பிறகு, முற்காலத்தில் இந்திரபகவான் த்வஷ்டாவின் புதல்வனுகிய விசுவரூபனது தலையை அறுத்ததுபோல, அனுமான், மிக்க கினத்துடன் கூரான அந்தக் கத்தியால் திரிசிரசின் தலைகளை வெட்டி வீழ்த்தினுன். புண்யங்கள் கூடியித்தபின் ஆகாயத்தினின்று நட்சத்திரரூபங்கள் கீழ் விழுவதுபோல, மீண்டும் நெருப்புப்போல ஜ்வலித்துக் கொண்டும் பர்வதங்கள்போலப் பருத்துமிருந்த கண்களை யுடையஅவ்விந்திரசத்துருவின் தலைகள் பூமியில்விழுந்தன, இந்திரனுக்கொப்பான பராக்கிரமமுள்ள அனுமான், தேவ சத்துருவாகிய அவ்வரக்கனை வதைத்ததும், வானரர்கள் பூமியும் அதிரும்படி சந்தோஷத்தால் அட்டகாசஞ் செய் தார்கள்; அப்போது, அரக்கர்கள் அஞ்சிப் பலதிசைகளி லும் ஓடலானுர்கள்.

திரிசிரஸ் கொல்லப்பட்டதையும், அவ்வண்ணமே மகோதரன் செய்யப்பட்டதையும், ஒருவராலும் போரில்

எதிர்நிற்கமுடியாத வீரர்களான தேவாந்தகநராந்தகர்க ளும் நாசம் பண்ணப்பட்டதையும் பார்த்து, சகிக்கமுடியா தவனுய், மிகவுங் கோபிக்குந் தன்மையுள்ள அரக்கரிற் சிறந் தவனுன மத்தனென்பபடுகின்ற மஹாபார்சுவன், வெகு கோபமடைந்தான். உடனே, அவ்வரக்கன், முழுதும் இரும் பாற் செய்யப்பட்டதும் வெகு பயங்கரமாக விளங்குவதும் பொற்பூண் கட்டியதும் மாமிசங்களினுலும் இரத்தத்தா லும் நுரைப்பதும் மாற்ருருடைய இரத்தத்தாற் பூசப் பெற்றதும் வடிவத்தால் ஜ்வலிப்பதும் முனையில் ஒளியோடு மிகவிளங்குவதும் செம்மலர்களாலாகிய மாலையால் அலங் கரிக்கப்பட்டதும் ஐராவதம் மகாபதிமம் சார்வபௌமம் என்னுந் திக்கஜங்களுக்கும் பயத்தை விளைப்பதுமான ஜ்வலிக்கின்ற கதாயுதத்தைக் கைப்பற்றினுன். அரக்க ரிற் சிறந்த அந்த மத்தன், அந்தக்கதையை எடுத்து, ஊழித் தீப்போலக் கொதித்துக்கொண்டு, மிக்க சினத்துடன் வான ரர்களைத் துரத்தலானுன். அப்பொழுது, ருஷபன் என்ற வானரசேனுபதி, இராவணனது தம்பிமுறையாகிய அவ் வரக்கவீரனது சேனையை நோக்கி ஓடிவந்து அவ்வரக்கன் முன்பாக நின்ருன். மலைபோன்ற அவ்வானரவீரன் தன் முன் நின்றதைப் பார்த்து, மத்தன், வெகுகோபங்கொண்டு, வச்சிராயுதத்துக் கொப்பாக இருந்த கதையால் அவன் மார்பி லடித்தான். அவ்வானரவீரன், அவ்வாறு அடிபட்டதும், மார்பு பிளக்க நடுங்கி ரக் தத்தை மிகுதியாகக் கக்கிக்கொண்டு மூர்ச் சையடைந்தான். வானரச் சிரேஷ்டனுகிய ருஷபன், வெகுநேரங்கழித்து மூர்ச்சை தெளிந்து, மஹா தைரியசாலியாகிய அவ்வரக்கனது கதையைப் பிடுங்கிக் கொள்ளுமாறு ஓடினுன்; அந்தப் பயங்கரமான கதாயு தத்தை அவ்வாறே கைப்பற்றி, அதை அடிக்கடி சுழற்றி, அவ்வரக்கன் சேனையை வெருட்டி, அப்போர்க்களத்தில்

ருஷபன் மஹா பார்சுவனை உயிர் வாங்குதல்.

மத்தனுகிய மஹாபார்சுவனே ஓரடி யடித்தான். வச்சிரத்தால் அடிபட்டுச் சிதறிவிழும் மலைபோல, அந்தமத்தனும், தனது கதையா லடிபட்டு, தனது பற்களும் கண்களும் தெறிக்க மாண்டு பூமியில் விழுந்தான்.

அவ்வரக்கன், கண்கள் தெறித்துப் பலமொடுங்கி உயிரற்றுப்பூமியில்விழுந்ததும், அரக்கசேனை முறிந்தோட லாயிற்று. இராவணன் தம்பியாகிய அவ்வரக்கவீரன் வதைக்கப்பட்டதும், சமுத்திரம்போல் வெகுகம்பீரமான அவ்விராட்சச சேனை, ஆயுதங்களெல்லாவற்றையும் வீசி யெறிந்துவிட்டு, உயிர்தப்பிப் பிழைத்தாற் போதுமென்று எண்ணங் கொண்டு, சமுத்திரமே கரைபுரண்டோடுவதுபோல ஓட லாயிற்று.

அரக்கசேனை முறிந்தோடுதல்.

எழுபத்தோராஞ் சருக்கம் : அதிகாயன் வதை.

வெகு அதிகமாயும் பார்ப்பவர்கள் மயிர்க்கூச் செறியும்படியாயு மிருந்த தனதுசேனை போரி லழிந்ததையும், இந்திரனுக்கொப்பான வல்லமையமைந்த தனது சகோதரர்கள் மடிந்ததையும், தனது சிற்றப்பன் மார்களான யுத்தோன்மத்தன் மத்தன் என்ற இராவணசகோதரர்கள் இருவரும் போரிற் சாய்ந்ததையும், வெகு பராக்கிரமமுள்ளவனும் பிரமதேவரிடமிருந்து வரம்பெற்றவனும் மலைக்கொப்பானவனும் தேவ தானவர்களுடைய செருக்கை யடக்குபவனுமான அதிகாயன், பார்த்து, மிக்க கோபங்கொண்டான். அவ்விந்திரசத்துரு, ஆயிரஞ் சூரியர்கள் ஒன்றுகூடிப் பிரகாசிப்பதுபோல் விளங்குகின்ற அழகான இரதத்தி லேறி வானரர்களைத் துரத்தலானன். கிரீடமணிந்தவனும் மாசற்ற குண்டலங்களைப் பூண்டவனு

அதிகாயன் சினந்துபோர்க்கு வருதல்.

மான் அவன், தனது பெரியவில்லை வளைத்துத் தனது பெயரைச் சொல்லிக்கொண்டு பெருங் குரலாற் கர்ச்சித்தான், அவன், தனது சிங்கநாதத்தாலும் தன் பெயரைச் சொல்லிக் கத்துவதாலும் கொடிய வில்லின் சத்தத்தாலும், வானரர்களைப் பயமுறுத்திக்கொண்டு சஞ்சரிக்கலானான்.

வானரர்களின் அச்சம்.

அவ்வானரர்கள், அவன் தேகத்தின் பருமையைக் கண்டு அவனைத் திரும்பிவந்த கும்பகர்ணனேயென நினைத்துக்கொண்டு, அச்சத்தால் நடுங்கியவர்களாய் ஒருவரையொருவர் சரணமாக அடைந்தார்கள். அவ்வானரசேனை வீரர்கள், திரிவிக்கிரமாவதாரம் பண்ணின விஷ்ணுபகவானுடைய உருவம்போல் விளங்குகின்ற அவ்வரக்கனது உருவத்தைக் கண்டு, பயத்தால் நடுங்கி, அங்குமிங்கும் ஓடலானார்கள். வானரர்கள், மூன்முகத்தில் அதிகாயனைக்கண்டு, ஒன்றுஞ் செய்யத் தெரியாதவர்களாய், இலக்குமணனது தமையனாகிய ஸ்ரீராமரைச் சரணமடைந்தார்கள்.

வானரர் இராமரைச் சரண் புகுதல்.

அப்பால், ஸ்ரீராமர், இரதத்திலேறி மலைபோலத் தோன்றிக்கொண்டு கையில் வில்லேந்திய வனாய் வெகுதூரத்தில் பிரளயகால மேகம் போலக் கர்ச்சித்துநிற்கின்ற அதிகாயனென்னும் அரக்கனைக் கண்டார். காகுஸ்தர் பெருந்தேகம்படைத்த அவ்வரக்கனைக் கண்டதும், வியப்படைந்தார்.

இராமர் அதிகாயனைக்கண்டு வியப்படைதல்.

அப்பால், ஸ்ரீராமர், வானரர்களைத்தேற்றி, விபீஷணரை நோக்கிப் பின்வருமாறு வினவலானார்:-"அதோ மலைபோல்விளங்கி, கையில் வில்லேந்தி, சிங்கம்போலுங் கம்பீரமான பார்வையுடையவனாய், ஆயிரங் குதிரைகள் பூட்டிய விசாலமான தேரிலேறிக்கொண்டு வருகின்றனை; அவன்யாவன்? இவன் கூராய் ஒளிவீசுவன

இராமர் அதிகாயனைப்பற்றி விபீஷணரை வினவுதல்.

வான சூலங்களாலும் ஈட்டிகளாலும் தோமரங்களாலும் சூழப்பட்டவனாய், அவ்வாயுதகாந்தியின் நடுவி லிருப்பது, பூதங்களின் நடுவில் மகேசுவரனிருப்பதுபோலக் காணப் படுகின்றது. இவனைச்சூழ்ந்து இரதத்தில் கானனதுகாவைப் போலத் துலங்குகின்ற சக்தியென்னும் ஆயுதங்கள் பிரகாசிப்பது, காளமேகத்தைச்சுற்றி மின்னற்கொடிகள் விளங்குவதுபோலத் தோன்றுகின்றது. இவனுடைய விற்களும், முழுவதும் பொன்மயமான கட்டுக்களையுடையனவாய் நாணேற்றப்பட்டு, ஆகாயத்தை இந்திரதனுசு விளக்குவது போல, சிறந்த இரதத்தை முழுதும் விளக்குகின்றன. சூரியன்போல் விளங்கும் இரதத்தில் ஏறி, போர்க்களத்தைத் தனது ஒளியால் விளங்கச்செய்துகொண்டு வருகின்றஇவ்வரக்கவீரன், யாவன்? சூரியன்போற் பிரகாசிக்கும் பாணங்களால் திசைகளெல்லாவற்றையும் ஒளியுள்ளவைகளாக விளக்குகின்ற இவனுடைய தேர்க்கொடியின்மேல் இராகுவின் உருவம் விளங்குகின்றது. மூவிடங்களில் வளைந்து மேகம்போன்ற நாணொலியை யுண்டாக்குகின்ற அலங்காரமமைந்த இவனுடைய கைவில்லானது, பொன்மயமான பக்கத்தையுடையதாய், இந்திரபகவானுடைய வில்லைப் போலக் காணப்படுகின்றது. இவனுடைய தேர், கொடி பதாகை பார் என்ற இவைகளுடன் அமைந்து, நான்கு சாரதிகளையுடையதாய், மேகம்போலச் சத்தஞ் செய்கின்றது. இவனுடைய இரதத்தில் இருபது பத்து எட்டு என்ற கணக்குள்ள அம்பறாத்தூணிகள் வைக்கப்பட்டிருக்கின்றன ; விற்களும் பயங்கரமாயுள்ளன ; நாணிகளும் ஸ்வர்ணம்போன்று மஞ்சள் நிறமாயுள்ளன. இவனுடைய இரதத்தின் இருமருங்கிலும் இரண்டு கத்திகள் விளங்குகின்றன. அவைகள், ஒவ்வொன்றும் நான்குமுழ நீளமுள்ள கைப்பிடிகளையுடையனவாய், பத்துமுழம் நீளமுள்ளவைகளாய்க் காணப்படுகின்றன. கழுத்திற்செந்நிறமாலையணிந்து, மலைபோல விளங்கி, கறுத்தமேனி பொருந்தி,

யமனுடையன வாய்க்கு ஒப்பான பெருவாயை யுடையவனு
ய், மேகத்தில் மறைந்திருக்குஞ் சூரியன்போலத்தோன்று
கின்ற இந்தத் தைரியமுள்ளவீரன், தங்கத்தாற் செய்யப்
பட்டதோள்வளைகளைத் தோள்களிலணிந்தவனுய், உயர்ந்த
உச்சிகளுடன் விளங்கும் இமயபருவதம்போல் விளங்குகின்
ருன். அழகான கண்களமைந்த இவனது முகம், காதில்
விளங்குங்குண்டலங்களுடன்கூடியதாய், புனர்வசுநக்ஷத்
திரத்தினிடையிற் சேர்ந்திருக்கும் சந்திரபிம்பம்போலப்
பிரகாசிக்கின்றது. இவ்வரக்கவீரனைக் கண்டு, வானரவீரர்
கள் பயந்தோடுகின்ருர்கள்; இவன் யார்? மகாபாகுவே!
தாங்கள் சொல்லவேண்டும்" என்ருர்.

வரம்பில்லாத பராக்கிரமம் படைத்த சக்கரவர்த்தித்
திருமகனரான ஸ்ரீராமர், அவ்வாறு வினவவே, வெகு
வல்லமையுள்ள விபீஷணர் பின்வருமாறு மறுமொழி
சொல்லலானர்:— "மிக்க காந்தியுள்ளவ
ராய், அரக்கவேந்தராய், குபேரனுருடைய
தம்பியாய், கொடுந்தொழில்கள் செய்கின்ற
வராய், அதிக உற்சாகமுள்ளவராய் விளங்
கும் இராவணனுருடைய குமாரன் இவன்; வீரியமுள்ள
வன்; போர்புரிவதில் இராவணனர்க்கு ஒப்பானவன்; பெரி
யவர்களிடம் பழக்கமுடையவன்; பலநூற்கேள்விகளையுடை
யவன், அஸ்திரங்களைக் கற்றறிந்தவர்கள் யாவரினும் சிறந்த
வன்; குதிரையேற்றம், தேரேற்றம், யானையேற்றம், கத்தி
சுழற்றுதல், வில்வளைத்தல், சாமம், தானம், பேதம், யுக்தி,
ஆராய்ச்சி என்னும் இவைகளில் இவன் மிக வல்லவன். இவ
னது பாகுபலத்தையடைந்து, இவ்விலங்கை, சிறிதும்பய
மில்லாமலிருக்கின்றது. இவன், ஞானியமாலினி யென்பவ
ளுடைய குமாரன்; அதிகாயனென்று பெயர் பெற்றவன்.
இவன், மனத்தையடக்கிப் பிரமதேவரைக்குறித்துத் தவம்
புரிந்துஉயர்ந்த அஸ்திரங்களைப் பெற்றிருக்கின்ருன்; சத்து
ருக்களையெல்லாம்வென்றிருக்கின்ருன். பிரமதேவர் இவனு

விபீஷணர் அதிகாயனைச் சொல்லித்தல்.

க்குச் சுரர்களாலும் அசுரர்களாலும் மரணமில்லை யென்று வரங்கொடுத்திருக்கின்றார். இத்தத்திவ்வியமான கவசமும், சூரியன்போல் விளங்கும் இந்த இரதமும், பிரமதேவர் அளித்தனவே. இவைகளைக்கொண்டு, இவன், பலமுறை தேவதானவர்களை வென்று அரக்கர்களைக் காப்பாற்றியிருக்கின்றான்; யட்சர்களையும் கொன்றிருக்கின்றான். வெகு புத்திமானுகிய இந்திரனுடைய வச்சிராயுதத்தை, இவன், தனது அம்புகளால் அசைவறச்செய்திருக்கின்றான்; வருண பகவானுடைய பாசத்தை, இவன் ஒன்றுஞ்செய்யமாட்டாது போரில் தடங்கல் செய்திருக்கின்றான். ஆகையால், மானிட சிங்கமே! சடிதியில் இவன்விஷயமாகச் செய்ய வேண்டிய முயற்சிகளைச் செய்க. நாம் வாளா இருந்தால், இவன், வானரசேனையை நீறுக்குவான்" என்றார்.

அதிகாயன் வானரசேனையிற் புக்கு வானர சேனாபதிகளை முறியடித்தல்.

அப்போது, வெகுபலசாலியாகிய அதிகாயன், வானர சேனையினுட் புகுந்து, கதுவ்ஷடங்காரஞ் செய்து அடிக்கடி அட்டகாசம் பண்ணலானான். அதிரதரிற் சமர்த்தனுய்த் தேரிலிருப்பவனுய்ப் பயங்கரமான வடிவம்படைத்த அவ்வரக்கவீரனைக் கண்டதும், பேருடல் படைத்தவராகிய முக்கியமான வானரசேனாபதிகள், எதிர்க்கவந்தார்கள். குமுதன் துவிவிதன் மைந்தன் நீலன் சரபன் என்ற இவர்கள், மரங்களையும் மலைச்சிகரங்களையும் எடுத்துக்கொண்டு, ஒருங்கே அவனை யெதிர்க்கலானுர்கள். அஸ்திரங்களைப் பிரயோகிப்பதில் மிக வல்லவனுன அவ்வதிகாயன், பொன்னுபரணங்களால் விளங்குகின்ற பாணங்களால், அவர்களெதிர்ந்த அவ்வளவு மரங்களையும் மலைச்சிகரங்களையும் பிளந்தெறிந்தான். பயங்கரமான தோற்றமுடைய அவ்வரக்கவீரன், எல்லாப் பாகங்களும் இரும்பாலேயே செய்யப்பட்டிருந்த தனது உறுதியான பாணங்களைப் பிரயோகித்து அவ்வானரசேனாபதிகளைப் போர்க்களத்தில் எதிர்த்து அடித்துப் பிளந்

தான். அச்சேனபதிகள், சரமாரியாற் பீடிக்கப்பட்டவர்களாய், உடல்முறிந்து, அப்பெரும்போரில் அவ்வரக்கவீரனுக்குமாருகத் தொழில்புரியச் சக்தியற்றவர்களானார்கள். யௌவனத்தாற் கர்வங்கொண்ட சிங்கம் மான்கூட்டங்களை அச்சமுறுத்துவதுபோல, அவ்வரக்கன், அவ்வானரவீரரது சேனையை அச்சுறுத்தினன். அவ்வரக்கர்தலைவன், வானரசேனையில் போர்புரியாத ஒருவனையும் கொல்லவில்லை.

அதிகாயன் இராமரைக் கிட்டி வீரவாதங்கூறுதல்.

பிறகு, அந்த அதிகாயன், வில்லுடனும் அம்பரூத்தூணியுடனும் ஸ்ரீராமரதுமுன்பாக வந்து, மிக்க செருக்குடன் "தேரின்மேலிருந்து கையில் வில்லும் பாணமும் பிடித்துநிற்கின்ற நான், அற்பர்களில் ஒருவருடனும் போர்செய்யேன். எவனுவது ஒருவன் போர்செய்ய உத்ஸாஹமுடையவனுயிருப்பின், அவன் என்னுடன் போர்செய்க" என்று கூறினன்.

அதிகாயனது வீரவாதத்தைப் பொருமல், போர்செய்யுமாறு இலட்சுமணர் தநுஷ்டங்காரஞ்செய்தல்.

அவ்வரக்கன் அவ்வண்ணம் சொன்னதைக் கேட்டு, தனது சத்துருக்களை வதைசெய்யும் வல்லமைதங்கிய இலட்சுமணர், கடுங்கோபங்கொண்டு, அவன்சொன்னசொல்லைப் பொறுக்கமுடியாதவராய்ப் புன்சிரிப்புச்செய்து அவனருகிற் பாய்ந்து தமது வில்லை எடுத்துக்கொண்டார். சினங்கொண்ட இலட்சுமணர், விரைந்து தூணியினின்று பாணமொன்றை யெடுத்து அதிகாயன் முன்பாகப் பெரியவில்லை டங்காரஞ்செய்தார். அவ்வாறு லக்ஷ்மணருண்டாக்கின கொடிய நாணொலியானது, பூமி மலைகள் ஆகாயம் சமுத்திரம் எண்டிசைகள் என்ற இவைகளை நிரப்பி, அரக்கர்களைப் பயமுறுத்திற்று. அவ்வாறு வெகுபயங்கரமாகத்தோன்றிய லக்ஷ்மணரது தநுஷ்டங்காரத்தைக் கேட்டு, அப்போது, ராக்ஷஸ ராஜனது புதல்வனும் வெகுபலசாலியுமான அதிகாயன் ஆச்சரியமடைந்தான்.

பிறகு, இலட்சுமணர் தன் எதிரில் வந்து நின்றதைப் பார்த்து, அதிகாயன், சீறி, கூரான அம்பொன்றை யெடுத்துக்கொண்டு பின்வருமாறு சொல்லலானான்:—"இலட்சுமண! நீ சிறுபிள்ளையாயிருக்கின்றாய்: ஆகவே, வல்லமையின் வகை உனக்கு இன்னதென்பது தெரியாது. ஆகையால், நீ திரும்பிச் செல்க. காலன்போலச் சீறி நிற்கும் என்னுடன் நீ எவ்வாறு போர்செய்ய விரும்புகின்றாய்? என்னுடைய கையால்விடுக்கப்படும் பாணங்களின் வேகத்தைத் தாங்குவதற்கு ஹிமவானாலும் முடியாதே; ஆகாசத்தாலும் முடியாது; பூமியாலும் முடியாது. இனிதாகஉறங்கிக்கிடக்குங் காலாக்கினியைக் கிளறத்துணிகின்றாய். உனது வில்லைக் கீழேவைத்திட்டுத் திரும்பிவிடுக. என்னை யெதிர்த்து வீணாக உனது உயிரை மாய்த்துக்கொள்ளவேண்டாம். இனிமேற்போர்முன் நின்றபிறகு திரும்ப உனக்குமனமில்லாதபக்ஷத்தில், அப்படியேநின்று கொண்டிரு; உனது பிராணனை விட்டிட்டு யமனுடையமாளிகைக்குச் செல்வாய். சத்துருக்களின்செருக்கை யடக்குவனவும் மகேசுவரனது ஆயுதம் போன்றனவும் உருக்கியபொன்னுபரணங்கள் பூண்டனவுமான எனது கூரிய பாணங்களைப் பார். கோபங்கொண்ட சிங்கம் யானையினிரத்தத்தைக் குடிப்பதுபோல, நான் தொடுக்கப்போகின்ற சர்ப்பத்துக்கொப்பான இந்தப்பாணம், உனது இரத்தத்தைக் குடித்து விடும்" என்று இவ்வாறு சொல்லி, அதிகாயன், வெகு கோபத்துடன் தனதுபாணத்தை வில்லில் தொடுத்தான்.

அதிகாயன் இலட்சுமணரிடத்துக் கூறிய வீரவாதம்.

அதிகாயன் போர்க்களத்தில் கோபத்துடனும் கர்வத்துடனும் சொன்ன அச்சொல்லை, ராஜகுமாரரும் மிக்க பலசாலியும் பெருஞ்செல்வம்படைத்தவருமான இலட்சுமணர் கேட்டு, அவனிலும் அதிககோபங்கொண்டு, பிறகு, மிக்க பொருட்சிறப்பையுடைய மொழியைப் பின்வரு

மாறு சொல்லலானார்: — "நீ இவ்வளவு பேசினதனால் மாத்திரம் மேன்மை யுள்ளவனுகமாட்டாய். தற்புகழ்ச்சியினுலேயேருவன்பெரியவனுகமாட்டான். துராத்மாவே! நான் விற்பிடித்து நிற்கையில், உனது பலத்தைக் காட்டுக. செய்கையால் உனதுமேன்மையைத் தெரிவிப்பாய். தற்புகழ்ச்சி செய்துகொள்வது, சிறிதும் தகுதியன்று. எவனிடம் வல்லமையிருக்கின்றதோ, அவனேத்தான் சூரனென்பார்கள். எல்லாவாயுதங்களுடனுங்கூடி, வில்லாளியாய் நீ இரதத்திலுட்கார்ந்திருக்கின்றாய். நீ, பாணங்களினுலாவது அஸ்திரங்களினுலாவது உனது வல்லமையைக் காட்டு. அதன் பிறகு, காலஞ்சென்று நன்றுகப் பழுத்துத் தொங்கும் பனம்பழத்தைக் காம்பிலிருந்து காற்றுக் கீழேதள்ளுவது போல, நான், கூரானபாணங்களால் உனது தலையை அறுத்து விழுத்துவேன். இப்போது பத்தரைமாற்றுத் தங்கத்தாலியன்ற அணிகளை அணிந்த என்னுடைய அம்புகள், உனது உடலிலிருந்து அம்புபுனேபாய்ந்த வாயின் வழியாய்க் கிளம்பும் இரத்தத்தைக் குடிக்கப்போகின்றன. என்னை இளையவனென்று எண்ணி இகழாதே. நான் சிறுவனே, முதியவனே; போரில் உனக்கு நான்தான் ம்ருத்யுவென்று அறிந்துகொள்வாய். சிறியவடிவமுடையவனை விஷ்ணுதான் மூவுலகங்களையும் மூவடிகளால் அளந்தான்" என்றார்.

இலட்சுமணரது மறுமொழி.

காரணங்களுடனும் உண்மைப்பொருளுடனும் கூடியிருந்த இலட்சுமணர்சொற்களைக் கேட்டு, அதிகாயன், கடுங்கோபங்கொண்டு, தனது சிறந்த பாணத்தையெடுத்தான். அப்பொழுது, வித்தியாதரர்களும், பூதங்களும், தேவர்களும், தைத்தியர்களும், மகாமுனிவர்களும், மகாத்துமாக்களான குஹ்யகர்களும், அந்த யுத்தத்தைப் பார்க்க வந்தார்கள். அதன்பிறகு, அதிகாயன், சினந்து, தனது வில்லில் அம்பைத் தொடுத்து, ஆகாயத்தை விழுங்கு

பவன்போல இலட்சுமணர்மேல் விடுத்தான். சத்துருக்களையொழிப்பவரான இலட்சுமணர் தம்மைநோக்கிச்சர்ப்பம்போலச் சீறிக்கொண்டு வந்த கூரானஅந்த அம்பை, அர்த்தசந்திர பாணத்தை விடுத்து வெட்டித்தள்ளினர். உடலறுந்த பாம்புபோலத் தனது அந்த அம்பு அறுபட்டு விழுந்ததைப் பார்த்து, அதிகாயன், அதிகோபங் கொண்டு, ஐந்து பாணங்களைத் தொடுத்து இலட்சுமணர் மேல் விடுத்தான். அவைகள் தம்மை யணுகுமுன்னமே, எதிர்க்கும் வீரர்களை யடக்குபவராய் வீரியவானான இலட்சுமணர், கூரிய பாணங்களால் வெட்டி யெறிந்து, நெருப்புப் போல் விளங்குங் கூரான் பாணமொன்றை யெடுத்து உயர்ந்த வில்லில் தொடுத்து வெகு வேகமாக இழுத்து அவ்வரக்கன்மீது விடுத்தார். பூர்ணமாக இழுத்து விடப்பட்ட அந்தப்பாணத்தால், அவ்வரக்கவீரனுடைய நெற்றியி லடித்தார்; பயங்கரனான அவ்வரக்கனுடைய நெற்றியிற் பாய்ந்து முழுகின அவ்வம்பு, இரத்தத்தாற் பூசப்பெற்ற சர்ப்பராஜன் மலையின்மேல் விளங்குவதுபோலப் புலப்பட்டது. சிவபெருமானதுபாணம்விழுந்ததும் பயங்கரமான திரிபுரத்வாரம் எவ்வாறு நடுங்கிற்றோ, அவ்வாறே, அவ்வரக்கன், இலட்சுமணருடைய பாணம் தனது மார்பில் விழுந்து பீடித்ததும் நடுநடுங்கினன். கொஞ்சம் தெளிந்து, மகாபலம்பொருந்திய அவ்வீரன், செய்யவேண்டுவதை நிச்சயித்துக்கொண்டு, 'நீ எனது பகைவனு யிருந்தாலும் இவ்வாறு பாணத்தைப் பிரயோகித்ததனால், என்னால் நன்கு மதிக்கத்தக்கவனே' என்று இலக்குமணரை நோக்கிச்சொல்லி, தனது முகத்தை வணக்கி, கைகளைக் கட்டிக்கொண்டு தனது தேரின் மத்தியில் உட்கார்ந்து, இரதத்தினும் சஞ்சரித்தபடியே ஒன்று மூன்று ஐந்து ஏழு என்ற இவ்வாறுகப் பாணங்களை யெடுத்துத் தொடுத்து இழுத்து விடுக்கலானன். பொன்மயமான மூனைகளை

அதிகாயன்இலட்சுமணருடன் போர் செய்தல்.

யுடையனவும் சூரியன்போல் ஒளிர்வனவுமான யமன் போன்ற அந்தப் பாணங்கள், அரக்கர்தலைவனது வில்லி னின்று புறப்பட்டனவாய், ஆகாயத்தைக் கொளுத்து வனபோல விளங்கின. இராமபிரானுக்கு இளவலான இலட்சுமணர், கொஞ்சமேனுங் குழப்பமில்லாமல், தமது கூரான பாணங்களால், அரக்கன் விடுத்த அந்தப் பாணங் களையெல்லாம் வெட்டியெறிந்தார். இந்திரசத்துருவாய் மஹாபராக்கிரமசாலியான இராவணகுமாரன், தான் எய்த அம்புகள் யாவும் போர்முகத்தில் வெட்டுண்டதைப் பார்த்து, கூரான மற்றொருபாணத்தை யெடுத்து, வெகு சடிதியில் இலட்சுமணர்மேல் விடுத்தான்; அது, ஸௌமித் திரியின் மார்பிற் பாய்ந்தது. இலட்சுமணர் அந்தப்பாணத் தினல் மார்பிலடியுண்டு, மதயானையானது மதஜலத்தைப் பெருக்குவதுபோல, மிகுதியாக இரத்தத்தைக் கக்கலானர்.

பிரபுவாகிய இலட்சுமணர், ஒரு நிமிஷத்தில் சல்லிய மற்று, வெகு கூரான அம்பொன்றை யெடுத்து அதில் அஸ்திரத்தையுந் தொடுத்தார்: அப்போது, அம்பை ஆக்கினேயாஸ்திரத்தினேடு அபிமந்திரித்து விடுத்தார்; அதனல், மகாத்துமாவாகிய அவரது வில்லில் அம்பு அழல் போல் விளங்கிற்று. வெகு பலசாலியாகிய அதிகாயனும், சூரியபகவானைத் தேவதை யாகக்கொண்ட அஸ்திரத்தை யெடுத்து, அதிற் பாம்புபோல் விளங்கும் ஸ்வர்ண மயமான முனையையுடைய அம்பைத் தொடுத்தான். இலட்சுமணர், பாணத்துடன்சேர்ந்த வெகுகோரமான அந்த ஆக்கினேயாஸ்திரத்தை, யமன் காலதண்டத்தை யெறிவதுபோல அவ்வரக்கன்மேல் விடுத்தார். அதிகாயன் ஆக்கினேயாஸ்திரத்துடன் சேர்ந்த அம்பைக் கண்டு, அப் போது, சூரியாஸ்திரத்துடன் சேர்ந்து ஜ்வலிக்கும் அம் பைத் தொடுத்தான். வெகுகாந்தியுடன் விளங்குங்கூரான நுனிகளையுடைய அவ்விரண்டு பாணங்களும், சீறிச் சண்

இலட்சுமணரும் அதிகாயனும் பல வகை யஸ்திரங் களை விடுதல்.

டையிடும் பாம்புகள்போன்று ஆகாயத்தில் ஒன்றை யொன்று மோதின. அவை, ஒன்றை மற்றொன்று எரித்துக்கொண்டு காந்தியற்றுச் சாம்பராய்ப் பூமியில் விழுந்தன ; அப்பால், அவை மழுங்கின. அப்பொழுது, அதிகாயன், வெகுகோபங்கொண்டு, ஐஷிகமென்ற அஸ்திரத்தை விடுத்தான். அதை, வீரியவானான இலட்சுமணர், ஐந்திராஸ்திரம் விடுத்துப் பிளந்தெறிந்தார். இராவணன் புதல்வனான அதிகாயன், ஐஷிகாஸ்திரம் பிளக்கப்பட்டதைக் கண்டு, கோபங்கொண்டு, யமனைத் தேவதையாகக் கொண்ட அஸ்திரத்தை அபிமந்திரித்து இலக்குமணர்மீது பாணத்தைத் தொடுத்தான். இலட்சுமணர், அந்தப்பாணத்தை, வாயுவைத் தேவதையாகக்கொண்ட அஸ்திரமொன்றை விடுத்து அழித்தார்.

பல பாணங்களை இலட்சுமணர் தொடுக்க, வாயு பகவான் "பிரமாஸ்திரமொன்றினால்தான் அதிகாயன் இறப்பான்" எனல்.

அதன்பிறகு, இலட்சுமணரானவர், மிகவுஞ் சினமடைந்தவராய், மேகம் மழையைச் சொரிவதுபோல, அவ்வரக்கன்மீது சரமாரிபொழிந்தார். அவைகள்யாவும், அதிகாயனது வஜ்ரத்தினு லிழைக்கப்பட்ட கவசத்திற்பட்டு மூனைமுறிந்தவைகளாய்ப் பூமியில் உடனே விழுந்தன. சத்துருக்களான வீரர்களை யழிக்கவல்ல பெரும்புகழ்படைத்த இலட்சுமணர், அவைகள் வீணனமை கண்டு, பாணங்களை ஆயிரக்கணக்காக வருஷிக்கலானர். அவர் எவ்வளவுதான் பாணங்களைப் பொழிந்தாலும், பிளக்கமுடியாத கவசமணிந்திருந்த மஹா பலசாலியாகிய அவ்வதிகாயன், போரிற் சிறிதுஞ்சலிக்கவில்லை ; வெகு சமர்த்தரான இலட்சுமணரால் போரில் அவனைச் சிறிது புண்படுத்தவும் முடியவில்லை. அப்பால், வாயுபகவான், இலட்சுமணரிடம்வந்து, "இவ்வரக்கன் பிரமதேவரிடமிருந்து வரம்பெற்றவன் ; ஒருவராலும் பிளக்கமுடியாத கவச மணிந்திருக்கின்றன் ; பிரமாஸ்திரத்தினால் இவனை வதைக்கவேண்டும் ; வேறு

அஸ்திரங்களினுலே, கவசமணிந்து வெகு பலசாலியாகிய இவனை, வதைக்கமுடியாது" என்று தெரிவித்தான்.

பிறகு, இந்திரனுக்கொப்பான வீரியமமைந்த சௌமித்திரி, வாயுபகவான் சொன்னதைக் கேட்டு, பிரமாஸ்திரத்தை உடனே ஜபித்து, தமது வில்லில் தடைப்படாத வேகத்தையுடைய பாணத்தைத் தொடுத்தார். இலட்சுமணர் பாணங்களுக்குள் வெகு உத்தமமானதும் கூரான முனையுள்ளதுமான அப்பிரமாஸ்திரத்தைத் தமது வில்லிலேற்றியதும், திசைகளும் சூரியசந்திரரும் கிரகங்களும் நடுநடுங்கின; பூமியும் சலித்தது. யமதூதன்போன்றதும் உறுதியான முனைவாய்ந்ததும் வச்சிராயுதத்துக்குச் சமமானதுமான அந்தப்பாணத்தை வில்லில் பிரமாஸ்திரத்துடன் சேர்த்து அப்போர்க்களத்தில் இலட்சுமணர் அதிகாயன்மேல் விடுத்தார். தடுக்கமுடியாத வேகத்துடன் இலட்சுமணரால் விடுக்கப்பட்டு நெருப்புப்போல் மின்னிக்கொண்டு ஸ்வர்ணத்தாலும் சிறந்த வஜ்ரங்களாலும் இயன்ற முனை வாய்ந்த அப்பிரமாஸ்திரம் தன்னை நோக்கி வருவதை அதிகாயன் கண்டான். அதைக் கண்டதும், அதிகாயன், வெகுசடிதியில் அதை வெகு கூரான பலபாணங்களைத்தொடுத்துத் தடுக்கலானுன். ஆனுல், அப்பிரமாஸ்திரமோ, கருடன்போல் வெகு வேகமாக அவைகளெல்லாவற்றையும் லக்ஷ்யஞ்செய்யாமல் அதிகாயனதுபக்கத்தில் வந்தது. அப்போது, அதிகாயன், ஜ்வலிக்கின்ற காலனுக்கொப்பான அப்பாணம் தன்னை அணுகிவிட்டதைப் பார்த்துச் சிறிதுங்கலங்காமல், சக்தி குண்டாந்தடி சூலம் கதை கோடரி ஈரிலைக்கத்தி முதலிய பல ஆயுதங்களால் அடித்துத் தடுத்துப் பார்த்தான். நெருப்போடு விளங்குகின்ற அப்பிரமாஸ்திரமோ, சிறந்த அவ்வாயுதங்களெல்லாவற்றையும் வீணுக்கி, கிரீடமணிந்திருந்த அவன் தலையைப் பற்றி அறுத்தது. கிரீட

இலட்சுமணர் அதிகாயனைப் பிரமாஸ்திரத்தால் வதைத்தல்.

மணிந்திருந்த அவ்வரக்கனது தலை, அவ்வாறு இலட்சுமணரது பாணங்களால் அறுக்கப்பட்டு, இமயமலையின் சிகரம் பூமியில் விழுவதுபோல் அப்போர்க்களத்தில் விழுந்தது.

அரக்கர்களின் கலக்கம்.

இறந்தவர்கள்போக மிகுந்திருந்த அரக்கர்களெல்லாரும், அந்த அதிகாயன் ஆபரணங்களெல்லாம் சிதறப் பூமியில் விழுந்ததைக் கண்டு, மிகவும் வருத்தமடைந்தார்கள். அவர்கள் யாவரும், பெருந்துக்கமடைந்து, வெகு பரிதாபமான தோற்றமுள்ளவர்களாய், அதுவரையிற்பட்ட அடியினுலுண்டான சிரமம் மேலிட்டவர்களாய், கோரமான பலகுரலால் வெகுபரிதாபமாக வாய்விட்டு உரக்கக்கதறலானுர்கள். தங்கள் சேனைத்தலைவன் வதைக்கப்பட்டதும், அவ்வரக்கர்கள், ஒன்றிலும் மனஞ்செல்லாதவர்களாய், அச்சத்துடன் வெகுவேகமாக இலங்கையைநோக்கி யோடலானுர்கள்.

வானரர்களின் மகிழ்ச்சி.

அப்போது, வானரர்கள் பலரும், மிக்க மகிழ்ச்சியடைந்து, மலர்ந்த தாமரைமலருக் கொப்பான தங்கள் முகங்களால் விளங்கிக்கொண்டு, கொடியவனும் மாற்ருனும் பல சாலியும் ஒருவராலும் வெல்லமுடியாத வனுமான அவ்வரக்கன் வதைக்கப்பட்டதும், தங்கள் வேண்டுகோளை முடித்துக் கொடுத்த இலட்சுமணரைக் கொண்டாடலானுர்கள்.

எழுபத்திரண்டாஞ் சருக்கம்:
இராவணனது சோகம்.

வெகுபராக்கிரமமுள்ள இலட்சுமணர் அதிகாயனை வதைத்ததைக் கேட்டு, அரக்கமன்னவன், மிகவும் ஏக்கமடைந்து இவ்வாறு சொல்லலுற்ருன்:— "மிக்க சினங்

கொண்டவரும் வீரரெல்லாரிலும் சிறந்தவருமான தூம்ராக்ஷன், அகம்பனன், பிரஹஸ்தன், கும்பகர்ணன் ஆகிய இவ்வரக்கர்கள் யாவரும், மிக்கபலசாலிகள்; வீரர்கள்; போரில் விருப்பமுள்ளவர்கள்; சத்துருக்களின் சேனையை வெல்பவர்கள்; ஒருபோதும் எதிரிகளால் வெல்லப்படாதவர்கள்; இவ்வாறு மஹாவீரர்களான இவர்களை எளிதாகத்தொழில்செய்யவல்ல அவ்விராமன் கொன்றனனே! பெருந்தேகம் படைத்தவரும் பலவகையாயுதங்களில் மிகத் தேர்ந்தவரும் பலவகையான மேன்மையையடைந்தவரும் சூரருமான இன்னும்பல அரக்கரும், அவ்விராமனல் மாண்டார்களே! பலத்திலும் வல்லமையிலும் புகழ்பெற்றவனுய் இந்திரனை வென்றவனுக விளங்கும் எனதுகுமாரனுகிய இந்திரஜித்து வரமாகப்பெற்றபாணங்களால் கட்டுண்டும், வீரர்களாகிய அவ்விரு சகோதரரும், எத்தகைய தேவர்களாலும் மஹா பலசாலிகளான அசுரர்களாலும் யக்ஷகந்தர்வகின்னரர்களாலும் தப்ப அரிதான கொடிய அக்கட்டிலிருந்து எவ்வாறு விடுபட்டார்களோ! அது, அவர்களுடைய மகிமைதானே, அல்லது மாயையோ, அல்லது மருந்தின் பலமோ, எனக்குத் தெரியவில்லையே! என் கட்டளைப்படி, வெகு சூரர்களான எந்த அரக்கவீரர்கள் போர்க்களத்திற்குச் சென்றுர்களோ, அவர்களெல்லாரும், அதிகபலம் பொருந்தியவானரவீரர்களால் வதைக்கப்பட்டார்களே! இப்பொழுது, இராமன் இலட்சுமணன் சேனையுடன்கூடிய சுக்கிரீவன் விபீஷணன் என்ற இவர்களைப் போரில் வெல்லவல்லவன் ஒருவனையுங் காணுமே! ஆச்சரியம்! இராமன் பலசாலியே; அவனுக்கு அஸ்திரபலமும் வெகு அதிகம். அவன்வல்லமைக்குமுன்னே நிற்கமுடியாமலன்றே பல அரக்கர்கள் நாசமானுர்கள்? இவ்வண்ணம் மஹாவீரனை அவ்விராகவனை, ஒருபொழு

இராவணன் வருந்திக்கூறல்.

தும் அழியாத நாராயணனென்றே நினைக்கின்றேன். அவனிடத்து அச்சத்தினுலல்லவோ இப்பொழுது இலங்கையின் கோட்டைவாயில் அடைக்கப்பட்டிருக்கின்றது.

இராவணனிட்ட கட்டளை.

இனிமேல், இவ்விலங்கையை எல்லாப்பக்கங்களிலும் காவலாளிகள் ஜாக்கிரதையுடன் மறைந்து கொண்டு பாதுகாக்கவேண்டும். சீதையை வைத்துப் பாதுகாத்துவரும் அசோகவனத்தையும் ஜாக்கிரதையாகப் பார்க்கவேண்டும். வெளிவருதலும் உட்புகுதலும் நமக்குத் தெரிந்தே எப்பொழுதும் நடக்கவேண்டும். எங்கெங்கு மாற்றூர்சேனை தங்கியிருக்கின்றதோ, அங்கங்கு நீங்கள் உங்களுடைய சேனைகளுடன் இருக்கவேண்டும். அரக்கர்களே! காலையிலும் மாலையிலும் நள்ளிரவிலும் எந்தவேளையிலும் வானரர்களின் கருத்தை வெகு கவனத்துடன் அறியவேண்டும். வானரர்களிடத்தில் ஒருபோதும் அலட்சியங் காட்டக் கூடாது. "மாற்றூர் சேனை ஓரிடத்தில் இருக்கின்றதா? அன்றிமுயல்கின்றதா? அல்லது நமதுமேல் வருகின்றதா? என்று எப்போதும் பார்த்துக் கொண்டே யிருக்கவேண்டும்" என்றான்.

அக்கட்டளையை அரக்கர்செய்தல்.

பிறகு, அரக்கர்கள் யாவரும், தங்கள் மன்னவன் அவ்வண்ணஞ் சொன்னதைக் கேட்டு, அவன் சொன்னபடியே நடத்தினர்கள். அரக்கமன்னவனுகிய இராவணன், அவ்விதமாக அவர்கள் யாவர்க்கும் திட்டஞ்செய்துவிட்டு, கோபத்தாலும் துக்கத்தாலும் வெகுவாக வருந்தியவனுய், தனது மாளிகைக்குச் சென்றான். பிறகு கோபத்தீ ஒருபக்கம் மண்டியெரிய, வெகு பலசாலியாகிய அவ்வரக்கவேந்தன், தனக்கு உண்டான அந்தப் புத்திரசோகத்தையே நினைத்துக்கொண்டு அடிக்கடி பெருமூச்செறிந்தான்.

இராவணன் மாளிகையிற்புக்கு வருந்தியிருத்தல்.

எழுபத்துமூன்றுஞ் சருக்கம்:
இந்திரஜித்து பிரமாஸ்திரத்தால் யாவரையுங் கட்டுதல்.

இராவணனது கலக்கம்.

பிறகு, கொல்லப்பட்டவர்கள் போக உயிர்தப்பி எஞ்சிய அரக்கர்கள், ஓடிச்சென்று, தேவாந்தகன் முதலியோரும் திரிசிரஸும் அதிகாயனும் மடிந்த சமாசாரத்தை, சடிதியில் இராவணனிடம் தெரிவித்தார்கள். அங்கு அவர்களெல்லாரும் மாய்ந்ததைத் திடீரென்று கேட்டதும், இராவணன், தனது கண்களில் சோக நீர் ததும்ப மோகமடைந்தான்; தனது புதல்வர்களின் மரணத்தையும் சகோதரர்களின் கொடுமையான சாவையும் நினைத்து நினைத்துப் புலம்பலானான்.

இந்திரஜித்து, தான்வெல்வதாக உறுதிகூறி இராவணனைத் தேற்றுதல.

அவ்வாறு அரக்கவேந்தன் வெகு பரிதாபமாகச் சோகக்கடலில் மூழ்கியதைக் கண்டு, அவ்வேந்தன் மகனுகிய ரதிகரிற் சிறந்தவனன இந்திரஜித்து, தனது தந்தையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானான்:— "தந்தையே! அரக்கர்கட்கரசரே! இந்திரஜித்து என்னும் நான் உயிருடனிருக்கும் வரையில், தாங்கள் இவ்விதமான துக்கத்தை யடைதல் சிறிதும் தகுதியன்று. இந்திர சத்துருவாகிய என்னுடைய பாணத்தால் அடிபட்டு, ஒருவனும், போர்க்களத்தில் உயிர் பிழைத்துப் போகமாட்டான். இன்றையதினமே, எனது கூரான பாணங்களாற் பிளவுபட்டுச் சிதறிய தேகங்க ளுள்ளவர்களாய், உடலெங்கும் கூரிய பாணங்களால் நிரம்பியவர்களாய், போர்க்களத்தில் இராமனும் லக்ஷ்மணனும் ஆயுளொழிந்து விழுந்து கிடப்பதை நீங்கள் பார்க்கலாம். இந்திர சத்துருவாகிய என்னுடைய வீண்போகாத பாணங்க

ளால், நான், இன்றையதினமே, இராமனையும் இலட்சு மணனையும் நிரப்பி ஒழித்து விடுகின்றேன்; இதைத் தெய்வபலத்தினலும் மானுஷ பலத்தினலும் நான் பிர திஜ்ஞை செய்கின்றேன்; பாருங்கள். தேவேந்திரன், யமன், விஷ்ணுபகவான், துவாதசாதித்தியர், சாத்தியர், அசுவினீ தேவதைகள், வைச்வாநரர்கள், சூரியசந்திரர் என்ற இவர்களெல்லாரும், மகாபலி சக்கரவர்த்தியினது யாகசாலையில் விஷ்ணுபகவான் தனது பராக்கிரமத்தைக் காண்பித்ததுபோல நான் இன்று எனது நிகரற்ற வல்ல மையைக் காண்பிப்பதைப் பார்ப்பார்களாக" என்று இவ்வாறு சொல்லி, எளிமை யில்லாத வலிமை தங்கிய இந்திரஜித்து, இராவணனிடம் விடைபெற்றுக்கொண்டு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, காற்றுக்கொப்பான வேகம் பொருந்தியதும் நல்ல சாதியுள்ள கோவேறுகழுதைகள் பூட்டியதும் பலவகைப் படைக்கலங்களை யுடையதுமான இரதத்தில் ஏறினன்.

இந்திரஜித்து போர்க்களங் குறுகுதல்.

பகைவர்களை யடக்கும் வல்லமையுள்ள மஹாபராக் கிரமசாலியாகிய அவ்வரக்கவீரன், சூரிய பகவானது தேர்க்கு ஒப்பான அவ்விரதத் தின்மேல் ஏறி உடனே போர்க்களத்துக் குப் பிரயாணமானன். மிக்க வல்லமை யுள்ள அவ்விந்திரஜித்து புறப்பட்டபொழுது, வெகு பல சாலிகளும் போரிடுவதில் அதிக உற்சாகங் கொண்டவர் களுமான அரக்கர்கள் பலர், சிறந்த வில்லை யேந்தியவர்க ளாய், அவனைத் தொடர்ந்து சென்றார்கள். சிலர் யானை களின் மேலும், சிலர் உயர்ந்த குதிரைகளின்மேலுமாக, பிராஸம், முத்கரம், கத்தி, கோடாலி, கதை என்ற ஆயுதங் களை எடுத்துக்கொண்டு உடன்சென்றார்கள். சங்கநாதம் எங்கும் கேட்க, போர்ப்பறைகள் எங்கும் ஒலிக்க, அரக் கர்களெல்லாரும் துதிக்க, அவ்விந்திரஜித்து, புறப்பட் டான். பகைவர்களை யழிக்கவல்ல அந்த இந்திரஜித்து,

சங்கம்போலவும் சந்திரன்போலவும் வெண்மையான பெரிய குடையின் கீழ், சந்திரனல் ஆகாயம் விளங்குவது போல விளங்கிக்கொண்டு சென்றான். சில அரக்கர்கள், ஸ்வர்ணமயமான அழகிய சிறந்த சாமரங்களால் வில் வீரர்களுக்குள் உத்தமனான அவ்வரக்கவீரனை வீசி உபசரித்தார்கள். அப்போது ஆகாயமானது சூரியனல் விளங்குவதுபோல, சூரியனுக்கொப்பான காந்தி பொருந்தியவனும் ஒப்பற்ற வல்லமையுள்ளவனுமான அவ்விந்திரஜித்தால் இலங்கைமாநகரம் விளங்கிற்று.

இந்திரஜித்து அபிசாரயாகஞ் செய்தல்.

பகைவர்களை யடக்கும் பெருவல்லமை தங்கிய அவ்வரக்கவீரன், போர்க்களம் சேர்ந்ததும், அரக்கர்களைத் தனது இரதத்தைச் சுற்றி லும்நிறுத்தினன். அதன்பிறகு, அரக்கரிற் சிறந்தவனாய், அக்கினிக்கொப்பான இந்திரஜித்து, சாஸ்திரப்பிரகாரம் சில மந்திரங்களால் அக்கினிபகவானைக் குறித்து ஓமம் பண்ணலானான். பிரதாபம்பெற்ற அவ்வரக்கக்காளை, சந்தனத்தாலும் புஷ்பத்தாலும் பூஜிக்கப்பட்டு ஸம்ஸ்காரமடைந்த ஹவிஸாகிய பொரியினல் அங்கு அக்கினியில் ஓமஞ்செய்தான். அங்கு, ஆயுதங்கள் தர்ப்பைகளாகவும், தான்றிமரச்சுள்ளிகள் சமித்துக்களாகவும், அவனது ஆடை செந்நிறவாடையாகவும், ஸ்ருவம் இரும்புமயமாகவும் இருந்தன. அவ்விந்திரஜித்து, நாணலியுடன் தோமரங்களைப் பரிஸ்தரணமாகப் பரப்பி, கறுப்புவர்ணமாயிருந்த உயிரோடுகூடிய ஆடு ஒன்றின் கழுத்தை அறுத்துப் பலிகொடுத்தான். அவ்வாறு ஒரு தரத்திலேயே ஜ்வலிக்கச்செய்து ஹோமம் பண்ணுகையில் புகையற்றுப் பெருத்த ஜ்வாலையுடன் விளங்கிய அந்த அக்கினியானது, வெற்றிக்குறிகளைக் காட்டிற்று. தனது ஜ்வாலை வலமாகச் சுழன்றுகொண்டெரிய, ஆபரணங்களைப் பூண்ட புருஷரூபத்துடன், அக்கினிபகவான், நேராகவே தோன்றி, இந்திரஜித்து கொடுத்த அந்த ஹவிஸைப் பெற்றுக்கொண்டான்.

அவ்விந்திரசத்துரு, அப்போது பிரமாஸ்திரத்தை யழைத்தான்; தனது வில் இரதம் முதலிய எல்லாவற்றையும் அங்கு அபிமந்திரித்தான். அவ்வண்ணம் அவ்வரக்கன் ஹோமஞ்செய்து அஸ்திரத்தை யழைக்கையில், கிரகங்கள், சந்திரன், நட்சத்திரங்கள் என்ற இவற்றுடன் ஆகாயமே நடுநடுங்கிற்று.

இந்திரஜித்து பிரமாஸ்திரத்தை வரவழைத்தல்.

அக்கினிக்கொப்பான காந்தியுடன் விளங்குகின்றவனும் இந்திரனுக்கொப்பான வல்லமையுள்ளவனுமாகிய கொடிய அவ்வரக்கவீரன், அவ்விதமாக அக்கினியில் ஹோமஞ்செய்தபின்பு, தனது வில் அம்பு வாள் இரதம் தேர்ப்பாகன் என்ற இவைகளுடன் ஆகாயத்தில் மறைந்தான். அதன்பிறகு, குதிரைகள் இரதங்கள் இவைகள் நிரம்பி, பெருங்கொடிகளும் சிறுகொடிகளும் விளங்க, போர்புரிய வேணுமென்னும் விருப்பத்தினால் அட்டகாசம் பண்ணிக்கொண்டு, அவ்வரக்கசேனை புறப்பட்டது.

இந்திரஜித்தும் அவன் சேனையும் போர்புரியப் புறப்படுதல்.

அரக்கவீரர்கள், கூரானவையும் வேகமாகச் செல்லுகின்றவையும் அலங்கரிக்கப் பட்டவையுமான அழகிய பல அம்புகளாலும் தோமரங்கள் அங்குசங்கள் இவைகளாலும் வானரர்களை அப்போரிற் புடைத்தார்கள். அப்பொழுது, ஆகாயத்தில் மறைந்து நிற்கும்இந்திரஜித்து, அரக்கவீரர்களை நோக்கி, முனிந்தவனாய், "வீரர்களே! நீங்கள் சற்றுங்கலங்காமல் உத்ஸாஹத்துடன் வானரர்களை வெல்லுமாறு போர்செய்யுங்கள்" என்றான். அதைக்கேட்டு, எல்லா அரக்கர்களும்,வெற்றியடைய ஆசைகொண்டவர்களாய்க் கர்ச்சித்துக்கொண்டு, பயங்கரரான வானரர்களின்மேல் சரமாரி பொழிந்தார்கள். அந்த இந்திரஜித்தோ, அரக்கர்கள் போர்செய்கின்ற போர்க்களத்தின் நடுவுக்குச்சரியாக மேலே ஆகாயத்தில் மறைந்து நின்று, அகலமான நுனிகளமைந்த அம்புகளினாலும்

இந்திரஜித்தும் அரக்கசேனையும் வானர சேனையும் போர்செய்தல்.

கதைகளினும் உலக்கைகளினும் வானரர்களையெல்லாம் ஹிம்ஸிக்கலானன். கடும்போர்புரியவல்லவராய் மரங்களை ஆயுதங்களாகக்கொண்ட வானரர்கள் போரில் அவ்வாறு வதைக்கப்படவே, அவர்கள், ஒன்றுகூடி இந்திரஜித்து இருந்த இடத்தை நாடிச் செல்லலானார்கள். அப்பொழுது, அதிகவல்லமையும் அதிகபலமுமமைந்த இராவணகுமாரனாகிய அவ்வரக்கன், வெகுகோபங்கொண்டு, வானரர்களின் தேகங்களைத் தனதுபாணங்களாற் பிளக்கலானன். அவன், அரக்கர்கள்யாவரும் களிக்கும்படியாக, ஒரே அம்பு எய்து, அதனால், ஐந்து ஏழு ஒன்பது என்ற இக்கணக்காக வானரர்களைப் பிளந்தான். போரில் வெல்ல முடியாத வல்லமையமைந்த அவ்விந்திரஜித்து, சூரியனுக்கொப்பாணவையும் பொன்னுபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவையுமான தனது பாணங்களினால், அப்போர்க்களத்தில் வானரவீரர்களை ஒழித்தான். தேவர்களால் நாசம்பண்ணப்பட்ட அசுரர்கள்போல, அன்று, அப்போர்க்களத்தில், வானரர்களெல்லாரும், தங்கள் தேகங்களில் பாணங்களால் அடியுண்டு பீடிக்கப்பட்டவர்களாய், தமதுஎண்ணமொழிய விழுந்தார்கள். பாணங்களென். கிரணங்களால் வெகுபயங்கரமாக விளங்குஞ் சூரியன்போலிருந்த அவ்விந்திரஜித்து நிற்கும் இடத்தை நோக்கி, வெகு கோபத்துடன், சில வானரவீரர்கள், எதிர்முகமாக ஓடினர்கள். அவ்வானரர்கள் யாவரும், அப்பால் தங்கள் தேகங்களில் அடியுண்டு, அறிவு சோர்ந்து, தங்களது உடம்பெல்லாம் இரத்தம்பெருக, வருத்த மடைந்தவர்களாய் ஓடலானார்கள். ஸ்ரீராமரின் திறத்தில் தங்கள் உயிரைக் கொடுக்க உறுதிசெய்திருந்த வானரர்கள், அப்போர்க்களத்தில் தங்கள் கைகளில் மலைகளை வைத்துக்கொண்டு அட்டகாசம் பண்ணியவண்ணம் பகைவர்க்கு எதிர்முகமாக ஓடினர்கள். அன்றியும், அவர்கள், மரங்களாலும் மலைச்சிகரங்களாலும் பாறைகளாலும் இந்திரஜித்திருந்த விடத்தை நோக்கிப் பொழிந்தார்கள்.

போரில் வெற்றியடையும் புகழ்பெற்ற அவ்விராவண குமாரன், அவ்வாறு தன்னைநோக்கிவந்த பிராணனை யொழிக்கவல்ல விருகூங்கள் மலைகள் என்ற இவைகளின் மழையை ஒன்றும் தன்மேல்விழாதபடி தடுத்தான். பிரபு வாகிய அவ்வரக்கன், அதன்பிறகு, நெருப்புக்கும் சர்ப் பத்துக்கும் சமானமான பாணங்களை விடுத்து, வானரசேனையை அப்போர்க்களத்தில் பிளந்தான். அவ்விந்திரஜித்து, கூரான பதினெட்டுப் பாணங்களைப் பிரயோகித்து, கந்தமாதனனைப் பிளந்தான்; தனக்குக் கொஞ்சந்தூரத்தி லிருந்த நளனை, ஒன்பது பாணங்கள் கொண்டு புடைத்தான்; மகாபலம் பொருந்திய அவ்வரக்கவீரன், மர்மஸ்தானங்களைப் பிளக்கவல்ல ஏழு பாணங்களைப்பிரயோகித்து மைந்தனென்றவீரனைத் துளைத்தான்; கஜனை, அப்போர்க்களத்தில் ஐந்து பாணங்களால் அடித்தான்; ஜாம்பவானைப் பத்துப் பாணங்களாலும், நீலனை முப்பது பாணங்களாலும் சாடினான்; சுக்கிரீவன், ரிஷபன், அங்கதன், துவிவிதன் என்ற இவர்களை, அப்போது, வரத்தாற் பெற்றவைகளும் கூரானவைகளும் கொடியவைகளுமான பல பாணங்களால் வலியொடுங்கினவராகச்செய்தான். பிரளயகாலத்தில் தோன்றும் அக்கினிபோலக் கோபங்கொண்டிருந்த இந்திரஜித்து, அப்போது இன்னும் முக்கியர்களான மற்றைவானரவீரர்களையும் பல பாணங்களை விடுத்துப் பீடிக்கலானன். அவ்வாறு அன்று நடந்த பெரும் போரில், இராவணனுடைய குமாரனுகிய அந்த இந்திரஜித்து, சூரியனுக்கொப்பானவைகளும் நன்முக இழுத்து விடப்பட்டவைகளும் வெகு வேகமாகச் செல்பவைகளுமான பாணங்களைத் தொடுத்து, வானரசேனையை முறியடித்தான். தான்விடுத்த பாணக்கூட்டங்களினல் வியாபிக்கப்பட்டு மோகமடைந்த வானரசேனை, இரத்தம் பெருக்குவதைக் கண்டு, இந்திரஜித்து, பெருங்களிப்பாற் செருக்குற்றான். பின்னும், வரபலபுஜபலங்களையுடைய

இந்திரஜித்தின் வீரம்.

மகாபராக்கிரமசாலியான இராவணபுத்திரனுகிய இந்திரஜித்து, பல பாணங்களையும்மற்றும் பல ஆயுதங்களையும் விடுத்து,அவ்வானர சேனையை விரைவாகக் குமைத்தான். அப்பெரும்போரில், அவ்வரக்கவீரன், தனது சேனையை விட்டிட்டுக் கிளம்பி வானரசேனைக்குள்ளே விரைந்து புகுந்து, மறைந்தவண்ணம், கார்மேகம் மழையைச் சொரிவதுபோல, கொடிய சரக்கூட்டங்களை வர்ஷித்தான்.

அவ்வாறு இந்திரஜித்தினுடைய மாயையால் வெல்லப்பட்டு அவனது அம்புகளால் தேகம் பிளப்புண்ட மலைக் கொப்பான வானரர்கள், வாய்குளறிக் கதறிக்கொண்டு, இந்திரனுடைய வச்சிராயுதத்தால் வெட்டுண்ட மலைகள் போல் அப்போர்க்களத்திற் சாய்ந்தார்கள். அப்போரில், அவர்களெல்லோரும், வானரசேனையின் மேற் கூரான பாணங்கள்வந்து விழுவதை மட்டும்பார்த்தார்கள்; மாயையால் தன்னை மறைத்துக்கொண்டு புலனுகாமல் நின்ற இந்திரசத்துருவாகிய இந்திரஜித்தைப் பார்க்கவில்லை. பிறகு, வெகு சமர்த்தனன அவ்விந்திரஜித்து, சூரியன் போற் பிரகாசிக்கின்ற கூரான முனைகளுள்ள பாணங்களால் எல்லாத்திசைகளையும் மூடி, வானரவீரர்களைத் துன்புறுத்தினன். அன்றியும், அவன், கொழுந்துவிட்டெரியுந் தீப்போல ஒளிவிட்டு நெருப்புப்பொறிகளைக் கக்கிக்கொண்டு செல்லுகின்ற சூலம் கத்தி கோடாலி என்ற இவ்வாயுதங்களைச் சுழற்றி, அவ்வானரசேனையிற் பொழிந்தான். பிறகு, நெருப்புக்கொப்பாய்க் கூர்மையாயுள்ள இந்திரஜித்தின் பாணங்களால் அடிபட்டுப் பிளப்புண்டவர்களாய், பூத்த முண்முருக்கைமரங்கள்போலத் தோன்றிய வண்ணம், அவ்வானர சேனவீரர்கள், ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு வாய்விட்டுக்கதறி அப்போர்க்களத்தில் விழுந்தார்கள். சில வானரர்கள், ஆகாயத்தைப் பார்த்தபொழுது, கண்களில் அம்புகளால் அடிக்கப்பட்டு, ஒரு

வானரர்கள் இந்திரஜித்துக்குத் தோற்றல்.

வரையொருவர் பற்றியபடியே அந்த யுத்த பூமியிற் சாய்ந் தார்கள். அனுமான், சுக்கிரீவன், அங்கதன், கந்தமா தனன், ஜாம்பவான், சுஷேணன், வேகதர்சி, மைந்தன், துவி விதன், நீலன், கவாக்ஷன், கஜன், கோமுகன், கேஸரி, ஹரிலோமா, வித்யுத்தம்ஷ்ட்ரன், சூரியானனன், சோதி முகன், ததிமுகன், பாவகாக்ஷன், நளன், குமுதன் முதலிய வானரசேனபதிகள் யாவரையும், அவ்வரக்கக் காளையாகிய இந்திரஜித்து, மந்திரத்துடன் கூடிய ஈட்டி, சூலம், கூரான பாணங்கள் என்ற இவைகளினல் நன்றாகப் புடைத்தான்

இந்திரஜித்து ராமலக்ஷ்மணர் மீது சரமாரி பொழிதல்.

ஸ்வர்ணமயமான முனைகளுடன் விளங்கின பாணங் களாலும் கதாயுதத்தாலும் அவ்வானர வீரர்களை அவ்வாறு அடித்த பின்பு, இந்திரஜித்து, சூரியனுக்கொப்பான உயர்ந்த பாணங்களைக் கொண்டு, ஸ்ரீராமரையும் இலட்சுமணரையும் நோக்கிச் சரமாரிபொழியலானன்.

மழைசொரிவதுபோல விளங்கிய அச்சரமாரியை, மிகவும் ஆச்சரியமான தைரியத்தையுடைய ஸ்ரீராமர், கொஞ்சமேனும் இலட்சியஞ்செய்யாமல், தமது ஸ்வபாவத்தைப்பற்றி அந்தப்பிரமாஸ்திரத்திற்கு மாறுசெய்யக்கருதிய இலட்சுமணரைக் குறிப்பாகப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலுற்றார்:— "லக்ஷ்மண! இந்திரசத்துருவாகிய இவ்வரக்கவீரன், பிரமாஸ்திரத்தைக் கைப்பற்றி,

இராமர் அப்போது செய்யவேண்டிய செயலைக் குறித்து இலட்சுமணருக்குத் தெரிவித்தல்.

அதன் வல்லமையால் எல்லா வானரவீரர்களையும் கீழ்விழுத்தி, இப்பொழுது நம்மையும் இம்சிக்க ஆரம்பித்திருக்கின்றன். பிரமதேவரிடமிருந்து வரம்பெற்ற மஹாபலசாலியாகிய இவ்வீரன், கண்களாற் காணவண்ணம் பயங்கரமான தனது தேகத்தை ஆகாயத்தில் மறைத்துக்கொண்டு போர்புரிகின்றன; தனது ஆயுதத்தின் செருக்கினல் விளங்கும் இவ்வரக்கனை, நாம், இன்று, எவ்வாறு வதைக்க முடி

யும்? இந்த அஸ்திரத்திற்கு உரிய கடவுள் யாரோ, இந்த அஸ்திரத்தை இவனுக்கு அளித்தவர் யாரோ, அந்தப் பிரமதேவர், எண்ணுதற்கும் அரியவரென்று நினைக்கின்றேன்; ஆகையால், புத்திமானே! நீ இன்று இங்கு ஒரு வகைக் கலக்கமும் மனத்திற்கொள்ளாமல், வீழ்கின்ற இவ்வஸ்திரத்தை என்னுடன் தாங்கிக்கொள். இவ்வரக்கன், பாணவர்ஷங்களின் தொகுதியால் திக்குகளெல்லாவற்றையும் மறைத்துவிடுகின்றான். இந்த வானரசேனை முழுவதும், சிறந்த வீரர்கள் யாவரும் கீழ்விழுந்து கிடக்கின்றமையால் ஒளியற்றிருக்கின்றது. கோபமும் சந்தோஷமும் நீங்கினவர்களாய்ப் போர்செய்தலைத் தவிர்ந்து அறிவொழிந்து மூர்ச்சையடைந்து பூமியில் விழுந்த நம்மைப் பார்த்து, இவ்விந்திரஜித்து, போர்முகத்தில் வெற்றி தனக்குண்டாய்விட்டதாக எண்ணிக்கொண்டு, தனது நகரத்துக்குச் சந்தோஷத்துடன் திரும்பிவிடுவான்; இது திண்ணம்" என்றார்.

இந்திரஜித்து இலங்கையுட் புகுதல்.

பிறகு, அவ்வாறே அவ்விருவரும் இந்திரஜித்தின் அஸ்திரக் கூட்டங்களால் ஹிம்ஸிக்கப்பட்டவர்கள்போ லானார்கள்; அந்த இந்திரஜித்து, அவர்கள் அவ்வண்ணம் விழுந்ததைக் கண்டு, வெகுசந்தோஷத்துடன் முனைமுகத்தில் அட்டகாசம்பண்ணினான். அவன், இவ்வாறு வானரசேனை முழுமையையும் இராமர் இலட்சுமணர் என்ற இவர்களுடன் போர்க்களத்தில் வருத்திவிட்டு, இராவணனுற் பாதுகாக்கப்பட்ட இலங்கைமாநகருக்குள் விரைவாகப் புகுந்தான்.

எழுபத்துநான்காஞ் சருக்கம்:
அனுமான்கொணர்ந்த ஓஷதிகிரியால் யாவரும் பிரமாஸ்திரத்தினின்று விடுபடுதல்.

இராமலட்சுமண ரது நிலையைக் கண்டு வானரர் துயர்க்கடலில் மூழ்குதல்.

போர்க்களத்தில் இராமலட்சுமண ரிருவரும், அவ்வாறு பிரமாஸ்திரத்தால் உபத்திரவமடைந்தவளவில், வானரசேனை முழுவதும் மோகமடைந்து கிழ்விழுந்தது; சுக்கிரீவன், நீலன், அங்கதன், ஜாம்பவான் என்ற இவர்களும் ஒன்றும் உணராது அறிவொடுங்கிக் கிடந்தார்கள்.

விபீஷணர் வானரரைத் தேற்றுதல்.

அப்பொழுது, புத்திமான்களுக்குள் உத்தமரான விபீஷணர், சேனை துயரப்படுவதைப் பார்த்து, நிகரற்ற இனிமையான சொற்களால் அவ்வானரவீரர்களைத் தேற்றிப் பின்வருமாறு சொல்லலானார்:— "ஸ்ரீராமலட்சுமணர் மிகவும் வருந்திக் கடைசியாகப் பரவசராய்க் கிடக்கின்றார்களென்பதைப்பற்றி, இது, வருந்தவேண்டிய காலமன்று; ஏனெனில், இவர்கள், பிரமதேவருடைய வாக்கியத்துக்குக் கட்டுப்பட்டவர்களாய், இந்திரஜித்து விடுத்த அஸ்திரக்கூட்டங்களினுல் இறந்தவர்கள்போல இருக்கின்றார்கள்; வீண்போகாத வேகமுள்ள இப்பிரமாஸ்திரத்தை, அந்த ஸ்வயம்புவாகிய பிரமதேவர், இந்திரஜித்துக்குக் கொடுத்தார். அவ்வஸ்திரத்துக்கு மரியாதைசெய்யும் நிமித்தம், ஸ்ரீராமலட்சுமணர், போர்க்களத்திற் சாய்ந்து கிடக்கின்றனர்; இது நமது துயரத்திற்குக் காரணமான காலமாகுமா?" என்றார்.

ஒரு முகூர்த்தகாலம், புத்திமானும் வாயுபுத்திரனுமான அனுமான், பிரமாஸ்திரத்துக்குக் கட்டுப்பட்டிருந்து

தக்கௌரவித்து, பிறகு விபீஷணரது பேச்சைக் கேட்டதும், "வெகு பலசாலிகளான வானரர்களின் சேனை இப்போரிற் கொல்லப்பட்டிருத்தலால், இச்சேனையில் எவரெவர் உயிருடனிருக்கின்றனரோ, அவரவர்களை நாம் தேற்றுவோம்" என்று சொன்னன்.

அனுமான் உயிருடனிருப்பவரைத்தேற்றவேண்டுமெனல்.

பிறகு, அனுமான் விபீஷணர் என்ற அவ்விருவரும், கொள்ளிக்கட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு, அவ்விரவில், அப்போர்க்களத்தில் முழுதும் சஞ்சரிக்கலானார்கள். வாலறுந்தும், கையற்றும், கால்போயும், துடை நொருங்கியும், விரல்விண்டும், கழுத்தறுபட்டும், புண்பட்ட இடத்திலிருந்து இரத்தமோடிக்கொண்டிருக்கச்சிறுநீர்விட்டுக்கொண்டும், ஆங்காங்கு, வானரர்கள் மலைபோலவிழுந்துகிடக்கின்ற அப்போர்க்களத்தை, அவ்விருவரும், தம்கையிற்கொண்டுள்ள கொள்ளிக்கட்டையினுற் கண்டதுந் தவிர, ஆங்காங்கு விழுந்துகிடந்த ஆயுதங்கள் பளபளவென்று மின்னுவதனாலும் கண்டார்கள். சுக்கிரீவன், அங்கதன், நீலன், சரபன், கந்தமாதனன், கவாக்ஷன், சுஷேணன், வேகதர்சி, ஆகுகன், மைந்தன், நளன், சோதிமுகன், துவிவிதன், பனஸன் என்றஇவர்களும் மற்றும் பிறரும் உயிரிழந்தவர்கள்போலப் போர்க்களத்திற் சாய்ந்து கிடந்ததை, விபீஷணரும் அனுமானுமாகிய வீரர்கள் பார்த்தார்கள். அறுபத்தேழுகோடி வானரவீரர்கள், இந்திரஜித்து விடுத்த பிரமாஸ்திரத்தால், அந்தச் சாயங்காலத்தில் உயிரொடுங்கினர்கள்.

விபீஷணரும் அனுமானும் சேனையில் உயிருடனிருப்பவரைத் தேடுதல்.

அவ்வண்ணம் அப்பாணங்களால் ஒடுங்கின சேனை, பெருங்கடல்போல் விசாலமாகப் பரவியிருந்ததைக்கண்டு, அனுமான், விபீஷணருடன், ஜாம்பவானைத்தேடலானன். இயல்பான கிழத்தனத்துடன்கூடி, நூற்றுக்கணக்கான பாணங்

ஜாம்பவானை நாடிக் காணுதல்.

கள் உடம்பிற்பொத்த, பிரமதேவனதுபுதல்வனுகிய அந்த ஜாம்பவான், அவிந்துபோகின்ற நெருப்புப்போலிருந்ததைக் கண்டு, அவனிடம் சென்று அவனேநோக்கி, விபீஷணர் "பெரியோரே! கூரானபாணங்களால் தங்களுடைய பிராணன் போகாமலிருக்கின்றதா?" என்று வினவினர். அவ்வாறு விபீஷணர் சொன்னதைக் கேட்டதும், ரிக்ஷமன்னவனுகிய ஜாம்பவானும், வெகு சிரமத்துடனே சில பேச்சுக்களைச் சொல்லலானுன்:—

விபீஷணர் ஜாம்பவானே விசாரிக்க, அவன் அநுமானது க்ஷேமத்தை விசாரித்தல்.

"அதிக வல்லமைபொருந்தியவரே! அரக்கவீரரே! குரலால் உம்மை இன்னுரென்று தெரிந்துகொண்டேன். கூரான பாணங்களால் வருந்திக்கொண்டிருக்கும் நான், உம்மைக் கண்களால் நேராகப் பார்க்கமுடியவில்லை. அரக்கவீரரே! எந்த ஒருவனுல், அஞ்சனுதேவியும் வாயுதேவனும் நற்புத்திரனைப் பெற்றிருக்கின்றவராகிறார்களோ, அனுமானென்ற அவ்வானரசிரேஷ்டன் உயிருடனிருக்கின்றனு?" என்று வினவினன். ஜாம்பவான் சொன்னதைக் கேட்டு விபீஷணர்— "ஸ்ரீராமர் லக்ஷ்மணர் இவர்களைக்கூட விசாரியாமல், அனுமானை மாத்திரம் ஏன் வினவுகின்றீர்? அனுமானிடமுள்ள பேரன்பு, அரசரானசுக்கிரீவரிடத்திலாவது அங்கதரிடத்திலாவது ஸ்ரீராமரிடத்திலாவது தங்களுக்கு இல்லைபோலும்" என்றார். விபீஷணர் சொன்னதைக் கேட்டு ஜாம்பவானும் பின்வருமாறு சொல்லலுற்றுன்:—"அரக்கச்சிங்கமே! நான் அனுமானைப்பற்றி விசாரித்ததற்குக் காரணம் சொல்லுகின்றேன்; கேளுங்கள்: அவ்வீரன் ஒருவன்மாத்திரம் உயிருடனிருந்தால், பெரிய இவ்வானரசேனை முழுவதும்உயிரற்றிருந்தபோதிலும், உயிருடனிருப்பதேயாம். அனுமான்மட்டும் மாண்டிருந்தால், நாங்கள் உயிருடனிருந்தபோதிலும் உயிரற்றவரே. வாயு

அனுமானது க்ஷேமத்தைவிசாரித்ததன்காரணத்தை விபீஷணர் வினவ, ஜாம்பவான் மறுமொழி கூறுதல்.

பகவானுக்குச் சமானமாயும் வல்லமையில் நெருப்புக்கு ஒப்பாயுமிருக்கும் அவ்வனுமான் உயிருடனிருந்தால்தான், நாங்கள் பிழைத்திருக்க ஆசையுண்டாம்" என்றான்.

அனுமான் ஜாம்பவானிடஞ் சென்று முறைப்படி அவன்து பாதங்களில் விழுந்து வணங்கிநின்றான்.

அனுமான் ஜாம்பவான் வணங்கி நிற்றல்.

அனுமானது குரலைக் கேட்டதும், ஜாம்பவான், அப்பொழுது எவ்வளவோ சங்கட மடைந்து இந்திரியங்கள் குழம்பியிருந்தபோதிலும், தான் மறுபடியும்உயிர்பிழைத்தெழுந்துவிட்டதாகவே கருதினன்.

அப்பால், அந்த ஜாம்பவான், அனுமானைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினன்:—"வானரப்புலியே! இங்கு வருக. நீ எல்லா வானரர்களையும் காப்பாற்றவேண்டும். ஏனெனில், பூர்ணமான பராக்கிரமமுடையவர் உன்னைத் தவிர வேறொருவரும் இல்லை. அன்றியும், நீ இவர்களுக்குச் சிறந்த நண்பன். இதுதான், உனது வல்லமையைக் காட்டத் தகுந்த காலம். மேலும், வல்லமையுடையவரான வேறொருவரையும் காணேம். ஆதலால், ரிக்ஷவீரர்கள் வானரவீரர்கள் நிரம்பிய இப்பெருஞ்சேனையை மகிழ்விப்பாய். பூமியிற் சாய்ந்திருக்கின்ற இந்த ஸ்ரீராமலட்சுமணர்களைச் சல்லியமற்றவராகச் செய்க. அனுமானே! சமுத்திரத்துக்கு அருகாக மேலே வெகுதூரம் நீ சென்று, பர்வதங்கட்குட் சிறந்த இமயமலையைச் சேரவேண்டும். பகைவரையழிப்பவனே! அவ்விடத்தில், பொன்மயமாய் மிகச் சிறந்த ரிஷபமென்ற பெரிய மலைச் சிகரத்தையும், கைலாஸமென்ற மலைச்சிகரத்தையும் நீ காண்பாய். வீரனே! அவ்விருசிகரங்களுக்கும் நடுவில், ஒப்பற்ற காந்தியால் வெகு அதிகமாக மின்னிக்கொண்டு எல்லாவகை யோஷதிகளாலும் நிரம்பியதாய், ஓஷதிமலை

ஜாம்பவான், ஓஷதி மலையைக் கொணருமாறு அனுமானுக்குக் கூறுதல்.

யிருப்பதை, நீ பார்ப்பாய். அம்மலையினுச்சியில் நான்கு மூலிகைகள் தோன்றியுள்ளன ; அவைகள், தமது காந்தியால் பத்துத்திசைகளையும் விளங்கச்செய்துகொண்டிருப்பதை நீ பார்க்கலாம். அம்மூலிகைகளின் பெயராவன:— ம்ருதஸஞ்ஜீவநீ [இறந்தவர்களைப் பிழைப்பிப்பது], விஶல்யகரணீ [அம்பினுல் தோன்றிய புண்ணை யாற்றுவது], ஸாவர்ண்யகரணீ [பட்ட புண்வாயிலைத் தெரியவொட்டாது ஒரேநிறமாக்குவது], ஸந்தாநகரணீ [அறுபட்ட உறுப்பை ஒட்டச்செய்வது] என்பன. வாயுகுமாரனே! அவைகள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு இங்கு நீ வெகு சடிதியில் வந்து சேரவேண்டும். உயிர்போன எல்லா வானரர்களையும், அனுமானே! நீதான் பிழைப்பிக்கவேண்டும்" என்றன்.

அக்கட்டளைக்கு இசைந்து அனுமான் ஓஷதிமலையைநோக்கிப் புறப்படுதல்.

ஜாம்பவான்சொன்னதைக்கேட்டதும்,ஜலவேகத்தாற் சமுத்திரம் நிரம்பியுள்ளதுபோல், பலத்தின் மிகுதியினுல் அனுமான் நிரம்பி யிருந்தான். உடனே, அவ்வனுமான், திரிகூடமலையின்மே லேறி நின்று, அதனைத் தனது மிகப் பெரு வடிவத்தால் வருத்திக்கொண்டு, இரண்டாவது பருவதம்போல விளங்கினன். அம்மலையும்,அவ்வானரவீரனுடையஅடிவைப்பைத் தாங்கமுடியாமல் முறிந்து விழலாயிற்று ; அனுமான் அம்மலையில் ஏறிப் பெருவடிவங்கொண்டதும், அம்மலை, மிகவும் வருத்தமடைந்து தன்னையும் தாங்கமுடியாததாயிற்று ; அம்மலையிலுள்ள மரங்கள், அனுமானதுவேகத்தால்கீழே விழுந்து, நெருப்புப் பொறிகளையும் கக்கலாயின. அனுமானுல் நெருக்கப்பட்ட அம்மலையின் சிகரங்களும், சரிந்தன. மரங்களும் பாறைகளும் முறிந்து சரியுமாறு பீடிக்கப்பட்ட அம்மலை மிகவும் சுழலமிட்டதனுல், வானரவீரர்களாலும் அவ்விடத்தில் நிற்கமுடியவில்லை. இலங்கையின் பெருங்கோட்டைவாயிற் கதவுகளும் அவ்வதிர்ச்சி

யால் அசையலாயின ; கோபுரங்களும் ஆடி அசைந்து சரிந்தன ; இலங்கையும் பயத்தால் நடுநடுங்கிக் கூத்தாடுவது போல அன்றிரவு விளங்கிற்று. மலைபோன்ற வடிவமுள்ள அவ்வனுமான், அம்மலையை நொருக்கி, சமுத்திரத்தோடுகூடிய பூலோகத்தையே கலங்கச்செய்தான். அப்போது, அவ்விடத்தினின்று, மேருமந்தரமலைகள் போன்றதும், பலவகை நீரருவிகள் நிரம்பியதும், பலவகை மரங்களும் கொடிகளும் செழித்து விளங்குவதும், மலர்ந்த தாமரைமலர்களும் குவளைமலர்களும் நிறைந்துள்ளதும், தேவகந்தர்வர் வாழப்பெற்றதும், அறுபது யோசனை உயரமுள்ளதும், வித்யாதரர்களும் முனிக்கூட்டங்களும் அப்ஸரஸுக்களும் வசிக்கப்பெற்றதும், பலவகை மிருகக்கூட்டங்களால் நிறைந்ததும், அநேக குகைகள் நிரம்பியுள்ளதுமான லங்காமலயமலையின்மேல் அனுமான் ஏறினான். வாயுவின் குமாரனும் மேகத்திற்கு ஒப்பானவனுன் அனுமான், அங்குள்ள யக்ஷகந்தர்வகிந்நரர்களான யாவரும் நடுநடுங்கிக் குழப்பமடையும்படி ஓங்கி வளர்ந்தான். அனுமான், அம்மலையழுந்துமாறு கால்களைப் பதியவைத்து, வடவையின் முகத்தைப்போல்த் தனது வாயைக் கோரமாகத் திறந்து, அரக்கர்யாவரையும் நடுங்கச்செய்பவன்போல உரக்க இரைந்தான். அவ்வாறு பேரிரைச்சலிடுகின்ற அனுமானது ஆச்சரியமான நாதத்தைக் கேட்டு, இலங்கையில் வாழ்கின்ற அரக்கர்களெல்லோரும், அச்சத்தால் அசைதற்கும் வல்லமையற்றவராஞர்கள். பிறகு, கொடிய பராக்கிரமமுள்ளவனும் எதிரிகளைத் தவிக்கச் செய்பவனுமான அனுமான், ஸ்ரீராமரின் பொருட்டு நமஸ்காரஞ் செய்துவிட்டு, இராமர்விஷயமான அப்பெருங்கடமையைத் தான் செய்து முடிக்க முயற்சிகொண்டான். கடிவேகமமைந்த அவ்வனுமான், பாம்புபோன்ற தனது வாலை மேலே தூக்கி, முதுகை வணக்கி, தனது காதுகளை மடக்கி, வடவையின் முகம்போன்ற தனது வாயைத் திறந்தவண்ணம்

ஆகாயத்திற் பாய்ந்தான். அவ்வனுமான், தான் பாய்ந்த வேகத்தால், மரங்கள் மலைகள் பாறைகள் சாதாரண வானரங்கள் என்ற இவைகளை, தன்னுடன் கூட இழுக்க லானன். அவ்வாறு அவனுடைய கைகளின் வேகத்தா லும் துடைகளின் வேகத்தாலும் உயர இழுக்கப்பட்டுக் கொஞ்சதூரம் சென்ற அவை, தமது வேகங் குறையவே, ஜலத்தில் விழுந்தன. கருடனுக்கொப்பான வேகமுள்ள அவ்வானரவீரன், திசைகளை இழுப்பவன்போலப் பாம்பு போலிருந்த தன்கைகளை நீட்டிக்கொண்டு சிறந்த இமய மலையை நோக்கிச் சென்றான். அவ்வனுமான், அப்போது, தனது விசையால் மிகவுஞ் சுழலமிடுகின்ற அலைகளையும் பலவகைப் பிராணிகளையுமுடைய சமுத்திரத்தைப் பார்த் துக்கொண்டே, விஷ்ணுபகவானுடைய கையால் விடுக்கப் பட்ட சக்கராயுதம்போலக் கடுவிசையுடன் சென்றான். தந்தையோடொத்த வேகமுள்ள அவ்வனுமான், இடை வழியில் மலைகள் விருக்ஷங்களின் தொகுதிகள் ஓடைகள் நதிகள் தடாகங்கள் சிறந்த பட்டணங்கள் செழித்த நாடு கள் என்ற இவைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டே விரைந்து சென்றான். தந்தையோடொத்த பராக்கிரம முள்ள வீரனாகிய அனுமான், மிகவும் விரைவுகொண்டு சூரியமண்டலவழியை யடைந்து, சிறிதும் சிரமமில்லாமற் செல்லலானன். வாயுபகவான்போல வேகமாகச் செல்லும் அனுமான், தான் சென்ற வழியில் எல்லாத்திசைகளையும் தனது அட்டகாசத்தால் நிரப்பிக்கொண்டு செல்லலானன்.

அனுமான் இமய மலையையடைதல்.

ஜாம்பவானது சொல்லை நினைந்து, அனுமான், வாயு வேகமாகச்சென்று, விரைவாக இமயமலை யைக் கண்டான். பிறகு, பல நீரருவிகளா லும் அநேக குகைகளாலும் வெண்மேகங் கள்போன்ற பல அழகான சிகரங்களாலும் பலவகை விருக்ஷங்களினாலும் சோபித்துக்கொண்டிருந்த அவ் விமயமலையை வந்து சேர்ந்தான்.

வெகு உயரமாயும் பயங்கரமாயும் காணப்பட்ட சிறந்த சிகரங்களுடன் கூடிய சிறந்த அப்பருவதத்தைச் சேர்ந்தும், அனுமான், சிரேஷ்டமான தேவரிஷிகளின் கூட்டங்கள் வசித்துக்கொண்டிருந்த பரிசுத்தமான பல ஆச்சிரமங்களைப் பார்த்தான். அங்கே, பிரமதேவனுடைய மாளிகையும், கைலாஸமும், இந்திரன்மாளிகையும், உருத்திரமூர்த்தி விளையாட்டாகப்பாணத்தை விடுமிடமும், ஹயக்ரீவனையாராதிக்குமிடமும், பிரமாவின் தலை கீழேவிழுந்த இடமும், சூரியனுடைய ஏவலாட்கள் தங்குமிடமும், இந்திரனுக்குப் பிரமதேவன் வச்சிராயுதம் கொடுத்த இடமும், சூரியஒளிபோல் விளங்குகின்றகுபேரனது மாளிகையும், சாயாதேவியை மகிழ்விக்குமாறு விசுவகர்மா சூரியனைச் சாணைபிடிக்க ஏற்படுத்தின இடமும், தேவர்கட்குக் காட்சியளிக்குமாறுபிரமதேவன் வீற்றிருக்கின்ற சிங்காசனமும், உருத்திரனது வில் இருக்குமிடமும், பாதாளலோகத்துக்குப் போகும் வழியும் என்ற இவைகளையும், சிறந்த கைலாசமலையையும், இமவச்சிலை யென்ற இடத்தையும், ரிஷபமலையையும், சிறந்த ஸ்வர்ண பர்வதத்தையும், எல்லா மூலிகைகளும் ஒளியால் அதிகமாக விளங்கிக்கொண்டிருக்கும் ஸர்வௌஷதி பர்வதமென்னும் மலையையும் கண்டான்.

இமயமலையிற் பல இடங்களை அனுமான் காணுதல்.

அனுமான் ஔஷதிமலையைக் காணுதல்.

நெருப்பின்காந்திபோல் மின்னிக்கொண்டிருந்த அம்மலையை, அனுமான், பார்த்ததும், வெகு ஆச்சரியமடைந்தான். உடனே, அம்மலையைச்சுற்றி ஔஷதிகளைத் தேடலானான். அனுமான், ஓர் ஆயிரம் யோஜனைதூரம் கடந்துவந்து, ஔஷதிமலையைச் சேர்ந்து, அவ்விடத்தில் அம் மூலிகைகளைத் தேடலானான்.

ஔஷதிகளை அனுமான் தேடுதல்.

அம்மலையிலிருந்த எல்லா மஹாமூலிகைகளும், தங்களைத் தேடிக்கொண்டு ஒருவன் வருகின்றதை யறிந்து,

தங்களை வெளிக்காட்டாமல் மறைந்து நின்றன. மஹாத்மாவான அனுமான், தான் தேடிவந்த மூலிகைகளைக் காணுமல், வெகு கோபங் கொண்டு மிகவும் கர்ச்சித்தான். நெருப்புப்போல் தனது கண்கள் விளங்க, அனுமான், அவ்வவமானத்தைப் பொறுதவனுய், அம்மலையை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானன்:— "பர்வதசிரேஷ்டமே! ஸ்ரீராமரிடம் தயைகாட்ட உனக்கு இஷ்டமில்லையென்பது நிச்சயமாக இருக்கும் பக்ஷத்தில், இன்றையதினம், நீ எனது கையின் வல்லமையால் அவமதிக்கப்பட்டுச் சிதறிவிடுவதைக் காண்பாயாக" என்றன். அதன்பிறகு, அனுமான், அம்மலையின் சிகரத்தை, அதிலிருந்த குன்றுகள் யானைகள் பாம்புகள் பொன் பலவகைத்தாதுப்பொருள்கள் என்ற இவைகளுடன், தாழ்வரை சிதறவும் நெருப்புப்பொறிகிளம்பவும் உறுதியாகப் பிடித்து வேர்ப்பிடுங்கலாகப் பெயர்க்கலானன். அவன், அவ்வாறு அம்மலையைப் பெயர்த்து, தேவ அசுர இந்திரர்களுடன் இவ்வுலகத்தையே பயமுறுத்திக்கொண்டு, ஆகாயத்திலெழும்பி, ஆகாயசாரிகளால் வாழ்த்தப்பட்டவனுய், கருட பகவானைவிட அதிக வேகம் பொருந்தியவனுய்ச் செல்லலானன். சூரியன்போல விளங்கிய அம்மலையை, தனதுகையி லேந்திக்கொண்டு, சூரியன் செல்லும் வழியாகிய ஆகாயமார்க்கத்தை யடைந்து, தனது மேனியின் நிறத்தாற் சூரியனுக்கு ஒப்பாக விளங்கிய அனுமான், தான் சூரியனருகிற் சென்றுகொண்டிருந்தபொழுது மற்றொரு சூரியனுக விளங்கினன். மலைக்கொப்பாக இருந்த அவ்வனுமான், அம்மலையைத் தான் எடுத்துவந்தபொழுது, நெருப்புப்போல் மின்னும் ஆயிரம் முனைகளையுடைய சக்கராயுதத்துடன் ஆகாயத்தில் விஷ்ணுபகவான் விளங்குவது போல விளங்கினன்.

ஓஷதிகள் மறைந்திருந்ததனுல், அனுமான்கினந்து ஓஷதிமலையையே எடுத்துவருதல்.

அவன் ஆகாயத்தில் வந்துகொண்டிருந்ததைக்கண்டதும், வானரர்கள் உயர்ந்த குரலால் அட்டகாசம்பண்ணிக் களித்தார்கள்; அவ்வனுமானும் அவர்களைப்பார்த்து மகிழ்ச்சியாற் சிங்கநாதஞ்செய்தான். அவர்களின் பேரொலியை இலங்கைமாநகரிலிருந்த அரக்கர்கள் கேட்டு, மிகவும் பயங்கரமாகக் கத்தினர்கள். மகாத்துமாவாகிய அவ்வனுமானும், திரிகூடமலையில் வானரசேனையின் நடுவில் இறங்கினன். அதன் பிறகு, உத்தமர்களான வானரவீரர்களுக்கு நமஸ்காரம் பண்ணிவிட்டு, அனுமான், விபீஷணரைக் கட்டித்தழுவினன். இராஜகுமாரரும், வீரர்களுமான அந்த ஸ்ரீ ராம லட்சுமணர், அம்மலையி லிருந்த உயர்ந்த மூலிகைகளின் மணத்தைத் தாங்கள் மோந்ததும் சல்லிய மற்றவரானர்கள். மற்ற வானரவீரர்களும், அவ்வண்ணமே எழுந்திருந்தார்கள். உயிரற்றும் விரணப்பட்டு மிருந்த எல்லாவானரவீரர்களும், ஒரு நொடியில், உயர்ந்த மூலிகைகளின் மணத்தால், தங்கள் விரணங்களாறி நோயற்றவர்களாய், விடியற்காலத்தில் துயில் நீங்கி எழுந்திருக்கின்றவர்கள் போலச் சுகமாக விழித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தார்கள்.

அனுமான்வானரசைனியத்தையடைந்துயாவரையும் உயிர்ப்பித்தல்.

என்று முதல் அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் சண்டைநேர்ந்ததோ, அன்றுமுதல், போரில் வானரர்களாற் கொல்லப்பட்ட அரக்கர்களெல்லாரும், கொல்லப்பட்டவுடனே, இராவணனது கட்டளையால், கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளுதற் பொருட்டுச் சமுத்திரத்தில் தள்ளப்பட்டார்கள்.

அரக்கர்பிழையாமைக்குக் காரணம்.

அதன் பிறகு, மஹாபராக்கிரமசாலியான அனுமான், பெரு மூலிகைகள் நிரம்பிய அம்மலையை வேகமாகத் திரும்பித் தூக்கிக்கொண்டு போய், இமவானிடத்தில் வைத்துவிட்டு, ஸ்ரீராமரிடம் வந்து சேர்ந்தான்.

அனுமான் ஓஷதிமலையை இருந்தவிடத்துவைத்துவருதல்.

எழுபத்தைந்தாஞ் சருக்கம்:
சுக்கிரீவன் இலங்கையைத் தீயிட்டுக் கொளுத்தி யதும், நிகும்பன் முதலான அரக்கர்கள் போர்புரிய வருதலும்.

அதன்பிறகு, வெகுவல்லமைபொருந்திய வானரராஜனை சுக்கிரீவன், சிறந்த பொருளுடன் கூடிய சொல்லே இராமரிடத்து விண்ணப்பஞ்செய்து, பின்பு, அனுமானைநோக்கி இவ்வாறு சொல்லலானான்:— "கும்பகர்ணன் வதைக்கப்பட்டபடியாலும், அதிகாயன் முதலான தனது குமாரர்கள் கொல்லப்பட்டபடியாலும், இராவணன் இப்பொழுது எதிர்த்துவந்து போர்புரியமாட்டான். ஆகையால், வெகு சுருசுருப்பாகச் சஞ்சரிக்கும் மஹாபலவான்களான வானரவீரர்களெல்லாரும், இப்பொழுதே தங்கள்கைகளிற் கொள்ளிக்கட்டைகளை எடுத்துக்கொண்டு மதிலைத் தாவிக்கடந்து இலங்கையிற் புகுந்து தீயிடவேண்டும்" என்றான்.

வானரர் யாவரும் கொள்ளிக்கட்டையால் இலங்கையைக் கொளுத்துமாறு சுக்கிரீவன் அனுமானுக்குக் கட்டளையிடுதல்.

அதன்பிறகு, இருள்செறிந்த அந்த இராத்திரியின் முதல்யாமத்தின் முடிவில், அவ்வானரவீரர்கள், கைகளிற் கொள்ளிக்கட்டைகளை யெடுத்துக்கொண்டு அவ்விலங்கை மாநகரினுள்ளே நுழைந்தார்கள். கையும் கொள்ளியுமாகத் தோன்றிய வானரர்களால், விகாரமான வடிவமுடைய அரக்கர்கள், துரத்தப்பட்டவர்களாய், தாம் காத்துக்கொண்டிருந்த கோட்டையைவிட்டு ஓடலானார்கள். கோபுரங்கள் கொத்தளங்கள் வீதிகள் பலவகை நாற்சந்திகள் மாளிகைகள் என்ற இவைகளிலெல்லாம், அவ்வானரவீரர்கள், மகிழ்ச்சியுடன் தீயை மூட்டினார்கள்.

வானரர் இலங்கையில் தீயிடுதல்.

அப்பொழுது, அரக்கர்களின் ஆயிரக்கணக்கான வீடுகளைத் தீ யெரிக்கலாயிற்று. அப்போது மலைபோல் விளங்கிய மாளிகைகள், எரிந்து பூமியில் விழுந்தன; அவற்றிலுள்ள அகிற்கட்டைகளும் உயர்ந்த சந்தனக்கட்டைகளும் நீறுபின; அவ்வாறே, அழகான முத்துக்களும், வைரக்கற்களும், பவளங்களும், இன்னும் பலவகை இரத்தினங்களும், அழகான வெண்பட்டுக்களும், பலவகைக்கம்பளங்களும், தங்கப்பாத்திரங்களும், பல ஆயுதங்களும், குதிரைகளின் அலங்காரத்திற்கு வேண்டிய ஆபரணங்களும், கல்லணைகளும், யானைகளின் கழுத்தணிகளும், கழுத்திடுகயிறுகளும், தேர்களின் அலங்காரத்தைச்சேர்ந்த அணிகளும், போர்வீரர்களின் கவசங்களும், குதிரை யானைகளின் கவசங்களும், கத்தியும், வில்லும், நாணிகளும், அம்புகளும், தோமரமும், அங்குசமும், சூலமும், பலவகை யிரத்தினகம்பளங்களும், சாமரம் முதலியனவும், கேடகமும், புலித்தோலும், புலி நகங்களும், கஸ்தூரியும் வெந்தொழிந்தன. அந்நகரத்தில், முத்துக்களையிழைத்து வெகு அழகாகக் கட்டப்பட்டிருந்த மாளிகைகளையும், பலவித அஸ்திரங்களையும், அக்கினிபகவான் எரிக்கலாயினன். கிருஹஸ்தர்களான அரக்கர்கள் வாசஞ்செய்தற்கு இடமான ஸ்வஸ்திகம் முதலியனவாகப் பெயர்பெறும் பலவகை வீடுகளையும், அப்போது, அக்கினி தகிக்கலாயினன். பொன்னிழையாகிய கவசங்களையணிபவர்களையும், புஷ்பஸரங்களையும் வஸ்திரங்களையும் தரிப்பவர்களையும், மதுபானத்தாற்கண் சுழலமிட மயங்கித் தத்தளிக்க நடந்துகொண்டிருப்பவர்களையும், தங்கள் நாயகிகளாற் பற்றியிழுக்கப்பட்ட வஸ்திரமணிந்தவர்களையும், சத்துருக்களிடம் கோபங்கொண்டிருப்பவர்களையும், தங்கள் கைகளில் கதை சூலம் கத்தி என்ற இவைகளைப் பிடித்தவர்களையும், போசனஞ்செய்பவர்களையும், குடித்துக் கொண்டிருப்பவர்களையும், மனைவிமாரோடு சிறந்த படுக்

அக்கினி இலங்கையை எரித்தல்.

கையில் துயில்பவர்களையும், பயத்தால் நடுநடுங்கித் தங்கள் குழந்தைகளை மார்போடணைத்துக்கொண்டு எல்லாத்திசைகளிலும் ஓடுபவர்களையும், இன்னும் இவ்வாறு நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் அவ்விலங்கையிலிருந்தவர்களையும், அக்கினியானது, கொளுத்தி, மேன்மேலும் கொழுந்துவிட்டெரியலாயிற்று. அன்றியும், மிக்க செல்வங்களைக்கொண்டனவும், மிக்கதிரவியஞ்செலவிட்டுக் கட்டப்பட்டனவும், சிறந்த படிக்கைகளையுடையனவாய் வெகு அழகாக விளங்குவனவும், தங்கத்தாற் செய்யப்பட்டு விளங்கிய சந்திரபிம்பங்களையும் அர்த்தசந்திரர்களையுமுடையனவும், ஓங்கிய மேன்மாடங்களையுடையனவும், இரத்தினமயமான பலகணிகளையுடையனவும், எப்புறத்திலும் இனியனவாக விளங்குவனவும், இரத்தினங்கள் பவளங்கள் என்னும் இவைகளால் அழகாகக் கட்டப்பட்டு விளங்குவனவும், சூரியபகவானைத் தொடுவனபோல ஓங்கியனவும், அன்றில் மயில் வீணை இவைகளின் இன்னிசையாலும் அணிகளின் கலகலப்பாலும் எப்பொழுதும் ஒலிப்பனவும், பர்வதம்போலக் காணப்படுவனவுமான மாளிகைகளை, அன்று, அந்தத் தீ, எரிக்கலாயிற்று.

தீயெரித்தபொழுது தோன்றிய அங்கங்களின்காட்சி.

எல்லாப் பக்கங்களிலேயும் நெருப்புச் சூழ்ந்தெரிந்த வீட்டுவாயில்கள், மழைக்காலத்தில் மின்னற்கொடியால் அலங்கரிக்கப்பட்ட மேகங்கள்போலக் காணப்பட்டன. நெருப்பெரிந்துகொண்டிருந்தபொழுது இடிந்து விழுந்த மாளிகைகள், இந்திரனதுவச்சிராயுதத்தால் அடியுண்டு விழும் பெருமலைச்சிகரங்கள்போலக் காணப்பட்டன. பெருமாளிகைகளின் உபரிகைகளிற் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த அழகான மடந்தையர், தம்மீது தீப்பிடிக்கவே, தங்கள் உடம்பில் அணிந்திருந்த ஆபரணங்களையெல்லாம் கழற்றியெறிந்துவிட்டு, ஹா! ஹா!! என்று கதறத் தலைப்பட்டார்கள். அம்மாளிகைகளும், முற்றி

லும் தீப்பற்றி யெரியவே, ஜ்யோதிர்லதை யென்ற கொடிகளையுடைய காடுகளால் இமயமலையின் சிகரங்கள் விளங்குவனபோலத் தூரநின்று பார்த்தவர்கள் கண்களுக்குப் புலனுயின. நெருப்புப்பற்றியெரிந்த மேன்மாளிகைகளினுல், அவ்விலங்கா நகரமானது, அன்றை இரவு, நன்முகப் பூத்து விளங்கும் முண்முருங்கைமரம்போலப் புலப்பட்டது. பாகர்களால் கட்டுத்தறித்து விடப்பட்ட யானைகளாலும், அவ்வாறே விடப்பட்ட குதிரைகளாலும், அவ்விலங்கையானது, உலகத்தின் முடிவுகாலத்திலே தத்தளிக்கின்ற முதலை முதலிய ஜலஜந்துக்களால் சமுத்திரம் தோன்றுவதுபோலத் தோன்றியது. கட்டவிழ்த்துவிட்ட குதிரையைக் கண்டு, யானை அச்சத்தால் வெருண்டோடிற்று; அவ்வாறு வெருண்டோடும் யானையைக்கண்டு, குதிரை அஞ்சித் திரும்பியோடிற்று. அவ்விலங்கை தீப்பற்றி யெரிந்தபொழுது, அத்தியின்ஜ்வாலை சமுத்திரத்தில் தோன்றியதனுல், அச்சமுத்திரமே, சிவந்த தண்ணீரால் நிரம்பியிருந்தது போலத் தோன்றிற்று. அன்றிரவு, ஒரு முகூர்த்தகாலத்தில், வானரர்களால் தீயிடப்பட்ட அவ்விலங்கை, இவ்வுலகத்துக்குப் பயங்கரமான முடிவுகாலம் வரும்பொழுது இவ்வுலகமே தீப்பிடித்து யெரிவதுபோல எரிந்தது. புகை சூழ்ந்துகொள்ளத் தீயின்நடுவிற் சிக்கிக்கொண்டு கோவென்று கதறின பெண்டுகளின் பெருங்குரல், பத்துயோசனை தூரம் கேட்கலாயிற்று.

வானரர்களின் உத்ஸாஹம்.

தங்கள் தேகங்கள் தீயாற் பொசுக்கப்பட்டுச் சகிக்க முடியாமல் வெளியிலோடிய அரக்கர்களை, போரிடுவதில் வெகு உற்சாகங்கொண்டிருந்த வானரர்கள், சரேலென்று தோன்றி எதிர்க்கலானர்கள். வானரர்களுடைய அட்டகாசமும், அரக்கர்களுடைய புலம்பலும், பத்துத் திசைகளையும்சமுத்திரத்தையும் பூமியையும் மூடலாயின.

சல்லியமற்றவர்களாய் மகாத்துமாக்களாகிய இராமர் இலட்சுமணரென்ற அவ்விருவரும், கொஞ்சமேனும் மனங்

கலங்காதவர்களாய், சிறந்த விற்கலைக் கைப்பற்றி நின்றார்கள். அப்பொழுது, ஸ்ரீராமர் தமது உயர்ந்த வில்லின் நாணியைத் தட்டவே, அந்நாணியின் சத்தமானது, அரக்கர்களுக்குப் பயத்தை உண்டாக்கிக்கொண்டு பேரொலியாகத் தோன்றிற்று. அவ்வாறு தமது பெரிய கோதண்டத்தைத் தட்டிய இராமர், வேதமயமான வில்லைத்தட்டுகின்ற கோபங்கொண்ட சிவபெருமான்போலக் காணப்பட்டார். வானரர்கள் செய்த அட்டகாசம் அரக்கர்களின்காதறுதல் என்னும்இவ்விரண்டுக்கும் மேலாக, ஸ்ரீராமருடைய நாணியின் சத்தம் கேட்கலாயிற்று. வானரர்கள் செய்த அட்டகாசமும் அரக்கர்களின் கூச்சலும் ஸ்ரீராமருடைய நாணியின் ஓலியும் ஆக இம்மூன்றும், பத்துத்திசைகளிலும் வியாபித்தன.

பேரொலி.

இராமர்வில்லினின்று எய்த பாணங்களால், கைலாசமலையின் சிகரம்போலிருந்த அந்நகரத்தின் கோபுரமானது, சிதறுண்டுபூமியில்விழுந்தது. அதன்பிறகு, ஸ்ரீராமருடைய பாணங்கள் மாளிகைகளிலும்வீடுகளிலும் விழுவதைக்கண்டு, அரக்கவீரர்கள் தாங்கள்போரிடுமாறு மிக்கமுயற்சியுடையவர்களானார்கள். அவ்வாறு முயற்சிசெய்துகொண்டு அட்டகாசம்பண்ணின அரக்கவீரர்களுக்கு, அவ்விரவு, காள ராத்திரியாக விருந்தது.

வானரருடன் கூடிய இராமர் பொருமாறு ஸங்காஹப்பட, அரக்கரும் ஸங்காஹப்பிதல்.

அப்பொழுது, வானரவேந்தனாகிய சுக்கிரீவன்—"வானரவீரர்களே! நீங்கள், அருகிலுள்ள கோட்டைவாயிலிலிருந்துகொண்டு சண்டையிடவேண்டும். உங்களுக்குள் எவனாவது இக்கட்டளைக்கு விரோதமாகத் தானிருக்கும்இடத்தைவிட்டுவிலகிப்போவானேயானால், அவனை அரசன்கட்டளையை மீறி நடந்ததற்காக வதைக்கவேண்டும்" என்று கட்டளையிட்டான்.

சுக்கிரீவன் வானரர்க்கு இட்ட கட்டளை.

இவ்விதமாக வானரவீரர்கள் கையுங் கொள்ளியுமாக அந்நகரத்து வாயிலைச் சூழ்ந்துநின்றதை யறிந்து, இராவணன் கடுஞ்சினமடைந்தான். அப்பொழுது, அவ்விராவணன் கோபத்தால் தன்னுடலை முடக்கி நீட்ட, அதனால் பத்துத் திசைகளும் நடுநடுங்கின. அவ்வரக்கமன்னவனது கோபமானது, உருத்திரனது கோபம் ஒருருவமெடுத்து வந்ததுபோலக் காணப்பட்டது. உடனே, அவன், கும்பகர்ணனுடைய குமாரர்களாகிய கும்பன் நிகும்பன் என்னும் அரக்கவீரர்களைப் பல அரக்கர்களுடன்கூடப் போர்க்களத்துக்குச் செல்லக் கட்டளையிட்டான். இராவணன் இட்ட கட்டளையின்படியே, யூபாக்ஷன், சோணிதாக்ஷன், பிரஜங்கன், கும்பனன் என்ற அரக்கர்கள், அந்தக்கும்பகர்ணகுமாரர்களுடன் புறப்பட்டார்கள். அன்றியும், மகாபலம்பொருந்திய அவ்வரக்கவீரர்களைநோக்கி, இராவணன், அட்டகாசம் பண்ணிக்கொண்டு, "அரக்கர்களே! நீங்களெல்லாரும் இப்பொழுதே சென்று சடிதியில் சத்துருக்களை வெற்றிகொண்டு திரும்புங்கள்" என்று கட்டளையிட்டான். அவ்வண்ணம் ஏவப்பட்ட அரக்கவீரர்கள், அதிகமாகப் பிரகாசிக்கும் ஆயுதங்களைக்கைகளிற்கொண்டு, அடிக்கடி அட்டகாசம் பண்ணுபவராய், இலங்கையை விட்டுக் கிளம்பினர்கள். அரக்கர்கள் அணிந்திருந்த ஆபரணங்களின் காந்தியாலும், வானரர்கள் கைகளிற் பற்றியிருந்த கொள்ளிகளாலும், ஆகாயம் முற்றிலும் ஒளியால் விளங்கலாயிற்று. சந்திரகாந்தியாலும், நட்சத்திர காந்தியாலும், அவ்விருசேனையும் அணிந்திருந்த அணிகளின் காந்தியாலும், அப்பொழுது, அவ்வாகாயம், விளக்கம் பெற்றது. சந்திர காந்தியும், ஆபரண காந்தியும், நெருப்புப்பிடித்து எரிகின்ற வீடுகளின் காந்தியும், அரக்க வானரசேனைகளை நன்றாக விளக்கின. அந்நகரத்தில் வீடுகள் அதிகமாக ஓங்கி யெரிந்தபொழுது, அந்தக்காந்தியால் அலையுந்

இராவணன் கட்டளைப்படி கும்பநிகும்பர்கள்பல அரக்கருடன்போர்க்களம் சேர்தல்.

அக்காலத்துத் தோன்றிய பேரொளி.

திரைகளுள்ளதாய்ப் பாதாளம்வரையில் ஆழ்ந்துள்ள சமுத்திரமும், மிகுதியாக விளங்கிற்று.

அரக்கசேனை.

சிறு கொடிகளுடனும் பெருங்கொடிகளுடனுங் கூடியதும், சிறந்த கத்திகளையும் கோடரிகளையு முடையதும், பயங்கரமான தேர்பரியானைகளைக் கொண்டதும், பலவகைப் பதாதிகளைப் பெற்றதும் விளங்குவனவான சூலம் கதை கட்கம் ஈட்டி தோமரம் வில் என்ற இவைகளுடன் கூடியதும், எரிகின்ற எறியீட்டி பொருந்தியதும், சிறுமணிகள் பல ஒலிக்கப்பெற்றதும், புஜங்களிற் பலவகை யணிகளை அணிந்திருப்பதும், கோடரிகளைக் கைகளிற்பற்றியுள்ளதும், பேராயுதங்களைச் சுழற்றுவதும், விற்களில் அம்புகளைத் தொடுப்பதும், சந்தனம் முதலிய கலவைப்பொருள்களும் மலர்களும் பானஞ்செய்த கள்ளும் என்ற இவற்றின் நாற்றங்களால் காற்றை நறுமணமாக்குவதும், பார்ப்பவர்களின் மனத்தை நடுங்கச் செய்வதும், சூரர்களானபோர்வீரர்கள் நிரம்பப்பெற்றதும், மேகம்போலக் கர்ச்சிப்பதுமான பயங்கரமாகிய இராட்சச சேனை, கொடிய வல்லமையும் பராக்கிரமமும் பெற்றதாகக் காணப்பட்டது. அக்கொடிய அரக்கசேனை வருவதைக் கண்டு, வானரசேனை, எதிர்கொண்டு சென்று கர்ச்சிக்கலாயிற்று. பெரிய அவ்வரக்க சேனையும், தங்கள் சத்துரு சேனையாகிய வானரசேனையை நோக்கி, நெருப்பைக் குறிப்புவைத்து விட்டிற்பூச்சிகள் ஓடிவதுபோல விரைந்து எழுந்து ஓடலாயிற்று. அவ்வரக்க வீரர்களின் சேனை, கைகளினுலெடித்துச் சுழற்றுவதனுல் விளங்குவனவான உழலைத்தடிகளையும் வச்சிராயுதங்களையு முடையதாய், அதிகமாக விளங்கிற்று.

அப்பொழுது, வானரவீரர்கள், வெறிகொண்டவர்கள் போல, போர்செய்யும் விருப்பத்தினுல், விருட்சங்கள் மலைகள் கைகுத்துக்கள் என்ற இவைகளாற் புடைப்பவர்களாய், அரக்கர்களின்மேல் வீழ்ந்தார்கள் ; வெகுபயங்கர

மான உருவத்துடனிருந்த அரக்கர்கள், அவ்வண்ணம் தங்கள்மேல் விழுந்த வானரர்களின் தலைகளைக் கூரான வாள்களால் அறுத்தொழித்தார்கள். அப்போரில், பற்களாற் கடிப்புண்டு காதுகளை யிழந்தவர்களாகவும் கைக்குத்தால் விண்ட தலைகளுள்ளவர்களாகவும், மலைகளின் மோதுதலால் அவயவங்கள் நசுங்கினவர்களாகவும், அரக்கர்கள் சஞ்சரித்தார்கள். பிரசித்த வீரர்களான வானரர்களிற் சிலர், பலவான்களான அரக்கவீரர்களை நாற்புறத்திலும் போகவொட்டாமல் தடுத்து நின்று கொன்றார்கள். அவ்வண்ணமே சில பயங்கரரான அரக்கர்கள், கூரான கத்திகளால், சில வானரவீரர்களை வெட்டினார்கள். ஒருவனைக் கொன்றவனை மூன்றாமவன் கொன்றான் ; ஒருவனைக் கீழே தள்ளியவனை மூன்றாமவன் கீழே தள்ளினான் ; ஒருவனை நிந்தித்த மற்றொருவனை மூன்றாமவன் நிந்தித்தான். தனது சத்துருவைப் பற்களாற் கடித்துக்கொண்டிருந்தவனை மற்றொருவன் பற்களாற் கடித்தான். "அடி, பார்ப்போம்" என்பான் ஒருவன்; "இதோ அடிக்கின்றேன் பார்" என்பான் மற்றொருவன் : ஆனால், மூன்றாமவன் அடிக்கின்றவனாக இருப்பான். "ஏன் வீண் சிரமம் உனக்கு ? கொஞ்சம் பொறுத்திரு" என்பான் ஒருவன். இவ்வாறு அப்போர்க்களத்தில் பலவகைப் பேச்சுக்கள் ஒருங்கே உண்டாயின. வஸ்திரங்கள் அவிழ்ந்து போகவும், கவசங்களும் ஆயுதங்களும் நழுவிவிழவும், பேரீட்டிகள் ஓங்கப்படவும், தடிகளும் சூலங்களும் கத்திகளும் ஒன்றுடன் ஒன்று மோதப்படவும், இவ்வாறு அப்பொழுது அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் வெகு பயங்கரமான யுத்தம் நடக்கலாயிற்று. அப்போரில், அரக்கர்கள், வானரர்களை, பத்து ஏழு விழுக்காடு கொல்லலானார்கள் ; அவ்வாறே வானரர்களும், அரக்கர்களைப் பத்து ஏழு விழுக்காடு உயிர் மாய்ந்து விழச் செய்தார்கள். தங்கள் ஆடைகள் நழுவவும், குடுமிகள் குலையவும், கவசங்களும்

அரக்கரும் வானரரும் போரிடும் கைகலத்தல்.

கொடிகளும் முறிந்து போகவும், முறிந்தோடின அரக்க சேனையை, வானரர்கள், நாற்புறங்களிலேயும் போகவொட்டாமல் தடுத்துச் சூழ்ந்துகொண்டார்கள்.

எழுபத்தாரூஞ் சருக்கம் : கும்பனது வதை.

அநேக வீரர்களுக்கு முடிவுகாலமாய் ஒழிவேயில்லாமல் அச்சண்டை வெகுபயங்கரமாக நடந்த பொழுது, போரிடுவதில் வெகு உற்சாகங் கொண்டுள்ள அங்கதன், கம்பனனென்ற வீரனிருந்த இடத்தை நாடிவந்தான். கம்பனனும், வெகு கோபத்துடன், அங்கதனை வலிவில் சண்டைக்கு இழுத்து தனது கதையால் முதலில் ஓரடி வைத்தான். அவ்வாறு அடிக்கப்பட்டதும், அங்கதன் மூர்ச்சையடைந்தான். உடனே, மகாபராக்கிரமசாலியாகிய அங்கதன், மூர்ச்சைதெளிந்து, மலைச்சிகரமொன்றை அவனது தலையின்மேல் எறிந்தான். அவ்வடியால் வருத்தப்பட்டுக்கொண்டு அவ்வரக்கன் பூமியில் விழுந்து மாய்ந்தான்.

அங்கதன் கம்பனனை வதைத்தல்.

பிறகு, சோணிதாக்ஷன், அவ்விதமாகக் கம்பனன் அப்போர்க்களத்தில் மாண்டதைப் பார்த்து, கொஞ்சமேனும் பயமேயில்லாமல், தனது இரதத்தை வெகு வேகமாக ஓட்டிக்கொண்டு, அங்கதனிருந்த விடம் வந்து சேர்ந்து, வெகு கூரானவையும் கொடியவையும் தேகத்தைப் பிளக்கக்கூடியவையும் யுகாந்தகாலத்தில் தோன்றும் அக்கினிக்கொப்பானவையுமான அம்புகளினால், அங்கதனை, வெகுவேகமாக அடிக்கலானான். சிறுகத்தியின் வடிவமான அம்புகளாலும், அர்த்தசந்திரபாணங்களினாலும், நாராசங்களாலும், குழந்தைகளின் பற்கள்போன்ற மூனைகளை

சோணிதாக்ஷனும் அங்கதனும் போர் செய்தல்.

யுடைய பாணங்களினாலும், கழுகினிறகுகள் கட்டியஅம்புக ளாலும், இரண்டு பக்கங்களிலேயும் காதுகள் போலக் கூரான முனைகளமைந்த அம்புகளாலும், அர்த்த நாராச பாணங்களினாலும், பட்டாக்கத்தி வடிவமான அம்புகளா லும், இன்னும் பலவகைக் கூரான அம்புகளாலும், அவ் வரக்கன் அப்போது அங்கதனைப் பலமாகப் புடைக்க லானான். வாலியின் குமாரனும் பிரதாபசாலியுமாகிய அங் கதன், தனது தேகத்தில் அவ்வாறு அடியுண்டவனாய், தனது பலத்தால் அவ்வரக்கனுடைய சிறந்த வில் இரதம் வில் அம்புகள் என்ற இவைகளவ்வளவையும் விரை வாக முறித்தெறிந்தான். பிறகு, வெகுகோபங்கொண்ட சோணிதாக்ஷன், கத்தியையும் கேடகத்தையும் எடுத்துக் கொண்டு, கொஞ்சமேனும் ஆலோசனையில்லாமல், வெகு வேகமாக ஆகாயத்திற் கிளம்பினான். பலசாலியாகிய அங் கதன், ஆலோசித்து அவனிலும் வேகமாக ஆகாயத்திற் கிளம்பி, அவனது கையிலிருந்த கத்தியைப் பிடுங்கிக் கொண்டு அட்டகாசம் பண்ணலானான். அதன் பிறகு, அங்கதன், அவ்வரக்கன்தோளிலிருந்து மார்பில் பூணூல் தரிக்கும் இடத்திற்குச் சரியாகக் கத்தியினற் கீறினான்.

அப்பால், வாலியின் குமாரனான அவ்வங்கதன், அப் பெருங்கத்தியைத் தனது கையிலேந்தியவனாய், அடிக்கடி அட்டகாசம் பண்ணிக்கொண்டு, இன்னும் மற்றைச் சத் துருக்களை எதிர்க்குமாறு அப்போர்க்களத்திற் சஞ்சரிக்க லானான். பொன்னாலாகிய தோள்வளைகளணிந்த வீரனாகிய சோணிதாக்ஷன், இரும்பினாலாகிய கதையையெடுத்துச் சுழற்றிக்கொண்டு, அவ்வங்கதனை நோக்கி ஓடி வந்தான். அவ்வாறே, வெகு பலசாலியாகிய யூபாக்ஷன், பிரஜங்க னுடன்கூடத் தனது இரதத்தை வேகமாக ஓட்டிக் கொண்டு மஹாபலசாலியாகிய அங்கதனை எதிரிட்டு வந்தான். சோணிதாக்ஷன் பிரஜங்கன் என்ற இவ்விருவர் நடுவில், அங்கதனவன், விசாகநட்சத்திரங்களின் நடு

விற் பூர்ணசந்திரன் விளங்குவதுபோல விளங்கினன். மைந்த துவிவிதர் அங்கதனுக்குச் சமீபத்தில் அவனைப் பாதுகாத்துக் கொண்டு, தமக்குத் தக்க எதிரியான அரக்கவீரனது வருகையை எதிர்பார்த்த வண்ணமாக நின்றார்கள். அதிக பலம் பொருந்தியவர்களும், பெருடல் படைத்தவர்களுமான அரக்கர்கள், வீரத்தன்மையை யேறிட்டுக்கொண்டு, கோபத்துடன், கத்தி கேடகம் கதை என்னும் ஆயுதங்களுடன், அவ்வானரசேனையின்மேல் வீழ்ந்து தாக்கலானார்கள். அம்மூன்று அரக்க சேனபதிகளும் அம்மூன்று வானர சேனபதிகளின்மேல் விழுந்து எதிர்த்தபொழுது, பார்ப்போர்க்கு மயிர்க்கூச்சையுண்டாக்கும் பெரும்போர் நடக்கலாயிற்று. அப்போரில், அவ்வானரர்கள், பெருவிருட்சங்களைப் பிடுங்கியெடுத்துவந்து எறியலானார்கள்; மகாபலம் பொருந்திய பிரஜங்கனை, அவைகளை வாளினால் நறுக்கிவிட்டான். அப்போரில், அவ்வானரர்கள், மரங்களையும் மலைகளையும் இரதங்களின்மீதும் குதிரைகளின்மீதும் எறியலானார்கள்; அவைகளை, யூபாக்ஷனென்ற அரக்கன், அம்புக்கூட்டங்களால் வெட்டி யெறிந்தான். மைந்த துவிவிதர் பிடுங்கி யெறிந்த மரங்களை, மிக வல்லமை தங்கிய சோணிதாக்ஷன், தனது கதையால் இடைவழியிலேயே முறித்தெறிந்தான்.

யூபாக்ஷ பிரஜங்க சோணிதாட்சர்களுக்கும் மைந்த த்விவித அங்கதர்கட்கும்போர்.

பிரஜங்கன், சத்துருக்களுடைய மார்பைப் பிளக்க வல்ல விசாலமான தனதுகத்தியைத் தூக்கிக்கொண்டு, வாலியின் புதல்வனை அங்கதனை நோக்கி வெகுவேகமாக ஓடினன். அதிக பலமமைந்த அவ்வானரவீரன், அவ்வரக்கன் தனக்கருகில் வந்ததைக் கண்டு, அப்போது அசுவகர்ணமென்ற மரத்தைப் பிடுங்கி அவன்மேல் ஓங்கியடித்தான். அன்றியும், அவ்வானரவீரன், கத்தி

பிரஜங்கன் அங்கதனுடன் பொருது உயிரை இழத்தல.

யைப்பற்றியிருந்த அவன் கையின்மேலும் ஒருகுத்துக் குத்தினான் ; வாலி புத்திரனது குத்தினால், அவ்வரக்க னுடைய கத்தியானது, பூமியில் நழுவி விழுந்தது. அப் பெருங் கத்தி பூவிதழ் உதிர்வதுபோலப் பூமியில் விழுந்த தைக் கண்டு, மஹாபராக்கிரமசாலியாகிய அவ்வரக்கன், இடிக்கொப்பான குத்து ஒன்று வைக்கும் பொருட்டுத் தனது கையை முடக்கி மஹாவீரனை அங்கதனுடைய நெற்றியில் ஒரு குத்து விட்டான்; அதனால், அவ்வங்க தன், ஒரு முகூர்த்தகாலம் மூர்ச்சையடைந்திருந்து, சிறிது நேரங் கழித்து மூர்ச்சைதெளிந்தெழுந்து, பிரஜங்களு டைய தலையைக் கத்தியால் வெட்டிப் பூமியில் விழுமாறு தள்ளினான்.

தனது தகப்பனுடன் பிறந்தவன் போர்க்களத்தில் மாண்டதைக் கண்டதும், யூபாக்ஷன், தனதுகண்களில் நீர் ததும்ப, விரைவாக இரதத்தைவிட்டுக் கீழேயிறங்கி, பாண ங்கள் ஆய்விட்டபடியால் கையிலே கத்திபிடித்து நின்றான். அந்த யூபாக்ஷன் வருவதைக் கண்டு, துவிவிதன், வெகு வேகமாக அவனைநோக்கிச்சென்று கோபத்துடன் அவன் மார்பில் ஓரறைவைத்து, மஹாபலசாலியாகையால் அவனை உறுதியாகப் பற்றிக்கொண்டான். வெகு பலம் பொருந்

மைந்ததுவிவிதர் யூபாட்சசோணிதாட்சருடன் போர்செய்து அவர்களை மாய்த்தல்.

திய சோணிதாக்ஷன், தனது சகோதரன் பிடிக்கப்பட்டதைப் பார்த்து, பின்பு தனது கதையின் முனையால் துவிவிதனை மார்பி லடித்தான். மஹாபலசாலியாயிருந்தும், அவ்வடியால், துவிவிதன், கொஞ்சம் கலங் கினான்; பிறகு, அவ்வரக்கன் மறுபடியும் தன்னைப்புடைக்குமாறு ஓங்கிய கதையைப் பிடுங்கிக் கொண்டான். இதற்குள், மைந்தனென்ற வீரனுகிய வானரசேனபதி, ஓடிவந்து, யூபாக்ஷனது மார்பில் ஓரறை யறைந்தான். வெகு பலம் பொருந்திய சோணிதா க்ஷன் யூபாக்ஷன் என்ற அரக்கரிருவரும் அவ்விரு

வானர வீரர்களும், ஒருவர்க்கொருவர், அப்போரில் மிகக்கடுமையாகத் தரையில் தள்ளியிழுத்தலையும், அறை தலையும் செய்துகொண்டனர். துவிவிதனென்ற வீரன், சோணிதாக்ஷனது முகத்தை நகங்களினுற் பீறி, பூமியில் வேகமாகத்தள்ளி நன்முகத்துவைத்துக்கொன்முன். கோப குணமுள்ள மைந்தனென்ற வானரசேனவீரனும், வெகு கோபங்கொண்டு, பூபாக்ஷனைக் கைகளால் இறுக்கிக் கட்டிக் கொன்று பூமியில் தள்ளினன்.

கும்பன் அரக்க சேனையைத் தேற்றுதல்.

அப்பொழுது, அவ்வரக்கசேனை, சேனபதிகளை யிழந்ததாய், எவ்விடத்திலே கும்பகர்ணனுடைய குமாரன் இருந்தானோ, அவ்விடத்தை நோக்கிப் போகலாயிற்று. நிகரில்லாத பெருவானரவீரர்களால் மகாவீரர்களை யிழந்து தன்னையே நாடிவந்த அவ்வரக்கசேனையை, சிறந்த வீரனுகிய கும்பன், சாந்தப்படுத்தினன்.

கும்பன்செய்த போர்.

பிறகு, கும்பன், வெகு கோபங்கொண்டு, அப்போர்க்களத்தில் மிக ஆச்சரியமான காரியங்களைச் செய்யலானன். வில்வீரர்களுக்குள் மிகத் தேர்ச்சிபெற்ற அவ்வீரன், கொஞ்சமேனும் குழப்பமின்றி, வில்லொன்றை யெடுத்துப் பகைவர்களுடைய தேகங்களைப் பிளக்கத்தகுந்தவையும் பாம்புக் கொப்பானவையுமான பல பாணங்களை விடுக்கலானன். அம்புகளுடன் கூடிய சிறந்த அவனுடைய வில்லானது, மின்னற்கொடி ஐராவதம் இவ்விரண்டனுடன் கூடி விளங்கும் இரண்டாவது இந்திரதனுசுபோல விளங்கிற்று.

துவிவிதன் கும்பனெதிர்த்துத் தோற்றல்.

காதுவரையில் நன்முக இழுத்து விடப்பட்டதும், வஸ்திரத்தை யணிந்ததுபோல இறகுகட்டப்பட்டதும் பொன்முனையமைந்ததுமான பாணத்தினுல், அவ்வரக்கன், அப்போது, துவிவிதனை அடித்தான். மலைச்சிகரம்போன்ற தோற்றமுள்ளவனும் வானரரிற் சிறந்தவனுமான

அந்தத்துவிவிதன், திடீரென்று அவ்வாறு அடிபட்டதும், அடிவைப்புந் தடுமாறக் கலங்கியவனுய்த் துடித்துக் கொண்டு பூமியில் விழுந்தான். அப்பெரும் போரில் தனது சகோதரன் பூமியிற் செயலற்று விழுந்ததைப் பார்த்து, மைந்தன், ஒரு பெரும் பாறையைத் தூக்கிக்கொண்டு அவ்வரக்கனேநோக்கி ஓடினன். அன்றியும், அதிக பலம் பொருந்திய அவ்வானரவீரன், அப்பெரும் பாறையை அவ்வரக்கன்மேல் வீசியெறிந்தான். கும்பனும், அழகும் கூர்மையுமைந்த ஐந்துபாணங்களை விடுத்து, அப்பாறையைப் பிளந்தான். அதன்பிறகு, அவ்வரக்கன், சர்ப்பத்துக்கொப்பானதும், கூரான முனையமைந்ததுமான பாணமொன்றைத் தனது வில்லில் தொடுத்து, துவிவிதனுக்கு முன்பிறந்தவனன மைந்தனது மார்பிலடித்தான். அம்மைந்தனும், அரக்கனுல் மர்மஸ்தானத்தில் அடியுண்டு, மூர்ச்சையடைந்து விழுந்தான்.

மைந்தன் கும்பனே யெதிர்த்துத் தோற்றல்.

அங்கதன், பலசாலிகளான தனது மாமன்மார்களிருவரும் பூமியில் விழுந்ததைக் கண்டு, கையில் வில்லை யோங்கிக்கொண்டுநின்ற கும்பனை நோக்கி யோடினன். அவ்வாறு தன்னை நோக்கிவந்த அங்கதன்மேல், கும்பன், இரும்புமயமான ஐந்து பாணங்களை முன்னம் எய்தான்; மதம்பிடித்தயானையைத் தோமரங்களாற் குத்துவதுபோலப் பின்னும் மூன்று கூரான வேறு பாணங்களையும் அவன்மேல் விடுத்தான். ஒருபொழுதும் மழுங்காத முனைகளமைந்தவைகளும் கூரானவைகளும் கொடியவைகளும் பொன்னணிபூண்டவைகளுமான பலவகை யம்புகளினுல், வீரியவானன கும்பன், அங்கதனைப்பிளக்கலானன். வாலியின் புதல்வனுகிய அங்கதன், உடல்முழுதும் அடியுண்டபோதிலும், அவ்வளவுக்கும் கொஞ்சமேனும் அஞ்சாமல், மலைகளையும் மரங்களையும் மழைபெய்வதுபோல அவ்வரக்

அங்கதன் கும்பனுடன் பொருது தோற்றல்.

கன்மேற் சொரிந்தால் அவ்விதமாக வாலியின் புதல்வன் பொழிந்த அவ்வளவு மரங்களையும், கும்பகர்ணன் புத்திரனை கும்பன், முறித்தெறிந்தான்; அவ்வாறே மலைகளையெல்லாம் பிளந்தெறிந்தான். தன்னையே குறிப்பிட்டு அவ்வானரவீரன் வருவதை அவ்வரக்கன் பார்த்து, மதயானையைக் கொள்ளிக்கட்டைகளைக்காட்டித் துரத்துவதுபோல, அங்கதனுடைய இரண்டு புருவங்களிலும் இரண்டு பாணங்களை எய்து துரத்தப் பார்த்தான். அவ்வங்கதனது புருவங்களினின்று இரத்தம் பெருகி ஓடி அவனுடைய கண்களையும் மறைத்தது. அங்கதன், இரத்தம் பரவியதனது கண்களை ஒரு கையால் மூடிக்கொண்டு, தனக்கருகிலிருந்த ஆச்சாமரமொன்றை, கிளைகளைத் தன்மார்பினல் தழுவினபடியே சிறிதுகுனிந்து கையால்உறுதியாகப் பிடித்துக்கொண்டு மதயானைபோலப் பெயர்த்தான்; பெயர்த்தபிறகு, அங்கதன் மற்றொருகையால் அம்மரத்தை யெடுத்துக்கொண்டான். இந்திரதுவசம்போலவும் மந்தரமலைபோலவுமிருந்த அம்மரத்தை, அரக்கர்களுடைய கண்கள் முன்பாகவே வெகு வேகமாக எறிய, அவ்வரக்கன், உடம்பைப்பிளக்கவல்ல ஏழுபாணங்களால் எய்து அம்மரத்தைப் பிளந்தெறிந்தான். அவ்வரக்கனோடு போர்செய்கையில், அங்கதன், அடிக்கடி நொந்து, வாய்விட்டுக்கதறி மூர்ச்சையடையலானன்.

அங்கதன் சலித்ததை யறிந்த ஸ்ரீராமர், ஜாம்பவான் முதலியோரைப் பக்கபலமாக அனுப்புதல்.

பகைவரால் அணுகமுடியாத வானரவீரனாகிய அங்கதன், சமுத்திரத்தில் மூழ்கிப்போகின்றவன்போன்று அன்று அப்போரில் அடைந்த வருத்தத்தைச் சிலர் ஸ்ரீராமரிடம் தெரிவித்தார்கள். இராகவரும், வாலியின் புதல்வன் கலங்கின சமாசாரத்தைக் கேட்டதும், வல்லமையிற் சிறந்த ஜாம்பவான் முதலிய வானரவீரர்களை அங்கதனுக்கு உதவிக்காகச் செல்லுமாறு கட்டளையிட்டார்.

ஸ்ரீராமருடைய கட்டளையைப் பெற்றுக்கொண்டு, உடனே அவ்வானரவீரர்கள், வெகுகோபத்துடன், வில் லெடுத்து நிற்கின்ற கும்பனை எதிர்க்க வந்தார்கள். சிறந்த அவ்வானரர்கள், கோபத்தாற் கண்கள் சிவந்தவர்களாய், கைகளில் மலைகளையும் மரங்களையும் பற்றியவர்களாய், அங்கதனைப் பாதுகாக்க விரும்பி யடைந் தார்கள், ஜாம்பவான் சுஷேணன் வேக தர்சீ என்னும் வானரவீரர்கள், வெகு கோ பத்துடன், கும்பனுக்கு எதிர்முகமாக ஓடி னர்கள். மகாபலம்பொருந்திய வானரவீர் கள் தன்னை நாடி வேகமாக ஓடிவருவதைப் பார்த்து, நீர்ப்பெருக்கை மரங்களின் திரள்களைக்கொண்டு தடுப்பதுபோல, அக்கும்பன் தனது பாணசமூகத்தால் தடுக்கலானன். சமுத்திரம் கரையைமீறி ஓடமுடியாமல் கட்டுப்பட்டிருப்பதுபோல, அவ்வரக்கனது அம்புகளுக்கு இலக்கான வானரவீரர்கள், எதிர்முகமாகச் செல்லமுடியா தவராயினர்.

இராமரது கட்டளைப்படி சென்ற வானரர்கள், கும்பனது அம்புக்கு முன்னே நிற்க மாட்டாமற் போதல்.

அவ்விதமாக, அம்புமழையால் வானரர்கள் தவிப்ப தைக் கண்டு, வானரராஜனாகிய சுக்கிரீவன், வேகமாக ஓடிவந்து, தனது தமையன்குமாரனைத் தனது முதுகில் தூக்கிக்கொண்டு, ஒரு மலையின் தாழ்வரையிற் சஞ்சரிக்கும் யானையைநோக்கிச் சிங்கமானது ஓடுவதுபோலப் போர்க் களத்தில் அவ்வரக்கனைநோக்கினவனாகிவெகுவேகமாக ஓடி னன். அன்றியும், அதிகபலம்பொருந்திய சுக்கிரீவன், பெரு மலைகளையும், அசுவகர்ணம் தவம் முதலான பல பெரிய விருக்ஷங்களையும் பிடுங்கி அவ்வரக்கன்மே லெறிந்தான். கும்பகர்ணனது குமாரனான கும்பன், ஆகாயத்தை மூடிக் கொண்டு மழைபொழிவதுபோலத் தன்மேல் விழவந்த அம்மரமழையைத் தனது கூரான பாணங்களினாற் பிளந் தான். இலக்கையறிந்தவனும் கொடியவனுமான கும்ப னுடைய கூரானபாணங்கள் பரவப்பெற்ற அம்மரங்கள்,

கொடியபீரங்கிகள்போல விளங்கின. மிக்கமனேபலமுள்ள வனும் வெகுவீரனும் வானராஜனுமான சுக்கிரீவன், தான் எறிந்த அவ்வளவு மரங்களையும் கும்பன் பிளந்ததைக் கண்டு, கொஞ்சமாவது மனங் கலங்கவில்லை. அவ்வானரவீரன், தனது தேகத்தின்மேற் பிளக்கும்படி கும்பன் எய்த அவ்வளவு அம்புகளையும் சகித்துக்கொண்டு, அக்கும்பன்பற்றியிருந்த இந்திரதனுசுக் கொப்பான வில்லைச் சரேலென்று பாய்ந்து அவன்கையினின்று பிடுங்கி முறித்தான்.

சுக்கிரீவன் கும்பனுடன் பொருது அவனது வில்லை முறித்து எறிதல்.

சுக்கிரீவமஹாராஜன், அவ்வாறுதாவிச்சென்று ஆச்சரியமான அந்தக் காரியத்தைச் செய்து, பின்பு, தனது தந்தம்முறிபட்ட யானைபோலிருந்த அக்கும்பனைப் பார்த்துப் பின்வருமாறு வெகுகோபத்துடன் சொல்லலானான் :—

சுக்கிரீவன் கும்பனை நோக்கிக் கூறியவீரவாதம்.

"நிகும்பனுக்குமுன்னேபிறந்த கும்பனே! உனது பாணங்களின் வேகத்தால் உன் வல்லமை ஆச்சரியமாக விளங்குகின்றது. உனது வல்லமையும் சுற்றத்தாரிடத்து அன்பும் இராவணனுக்குச் சமானமாக விளங்குகின்றன. பிரஹஸ்தன் பலி இந்திரன் குபேரன் வருணன் இவர்களுக்கு ஒப்பானவனே! பலத்தாலும் வல்லமையாலும் நீ ஒருவன்தான் உன்து தந்தையை ஒத்திருக்கின்றாய். ஐம்புலன்களையும் வென்றவனைச் சிந்தையென்பது எவ்வாறு அணுகாதோ, அதுபோல, நீ ஒருவன்மட்டும் உனது பலத்தைக் காட்ட விற்பிடித்து நின்றுவிட்டால், உனக்கு முன்பாகத் தேவர்களாலும் நிற்க முடியாது. பெரும்புத்தியுள்ளவனே! உனது வல்லமை எவ்வளவு என்றாலும், என்கண்முன்பாக அவ்வல்லமையைக் கொஞ்சம் காண்பிப்பாயாக. உனது பெரிய தந்தையாகிய இராவணன், தான்பெற்ற வரங்களின் மகிமையால் தேவதானவர்களை எதிர்த்து வருகின்றான். கும்பகர்ணனை, தனது வல்ல

மையால் தேவாசுரர்களையெல்லாம் வெல்கின்றாய். நீயோ விற்போர்செய்வதில் இந்திரஜித்துக்கு ஒப்பானவன்; பிரதாபத்தில் இராவணனுக்கு ஒப்பானவன். அரக்கர்கூட்டத்திற்குள் நீ பலத்தாலும் வல்லமையாலும் சிறந்தவன். முற்காலத்தில் தேவேந்திரனுக்கும் சம்பராசுரனுக்கும் நடந்ததுபோல, இன்று உனக்கும் எனக்கும் நடக்கப்போகின்ற ஆச்சரியமான பெரும்போரை, எல்லாரும் பார்க்கட்டும். நீயோ ஒப்பற்ற காரியங்களை இப்போர்க்களத்திற் செய்திருக்கின்றாய்; அஸ்திரப்பயிற்சியில் உனக்குள்ள வல்லமையைக் காட்டிவிட்டாய்; வெகுகொடிய பராக்கிரமமுள்ள பலவானரவீரர்களை விழுத்தினாய். வீரனே! 'இவ்வளவுதூரம் போர்புரிந்து களைத்திருக்கும் உன்னைக் கொன்றால் என்னை வீரர்கள் எங்கு நிந்திப்பார்களோ' என்ற பயத்தால், நான், உன்னை இப்பொழுது உயிருடன் விட்டிருக்கின்றேன். கொஞ்சம் இளைப்பாறிவிட்டு, எனது வல்லமையை நீ பார்க்கலாம்" என்றான்.

கும்ப சுக்கிரீவர்களின் மற்போர்.

தனக்கு அவமானத்தை விளைக்கத்தக்கதாக அவ்வாறு சுக்கிரீவன் சொன்ன சொற்களைக்கும்பன் கேட்டதும் நெய்யினால் ஹோமம்பண்ணப்பட்ட அக்கினிஜ்வலிப்பதுபோல அவனுக்குக்கோபம் பொங்கலாயிற்று. அப்போது, உடனே, கும்பன், சுக்கிரீவனைத் தனது கைகளாற் பற்றிக்கொண்டான். மதங்கொண்ட இரண்டு யானைகள்போல, அவ்விருவரும் அடிக்கடி பெருமூச்சுவிட்டுக்கொண்டும் ஒருவர் மேனியை மற்றொருவர் கோத்துக்கொண்டும், ஒருவரையொருவர் பற்றியிழுத்துக்கொண்டும், ஒவ்வொருவரும்மிக்களைப்பால் புகையுடன்கூடிய நெருப்பைக் கக்கிக்கொண்டும் இருந்தார்கள். அவர்களின் காலுதையால் இந்தப் பூமியே அழுந்திவிட்டது. சமுத்திரமும் அதிகமாக அலைகள் சுழன்று குழப்பமடையலாயிற்று.

பிறகு, சுக்கிரீவன், கும்பனை ஒரே தூக்காகத் தூக்கி, அவனுக்குச் சமுத்திரத்தின் தரையைக் காட்டக்கருதித்துக்

கொண்டவன்போல, அவனே அவ்வுவர்நீரில் விசியெறிந் தான். கும்பன் கடலில் விழுந்ததும், தண் ணீரானது, விந்தியமலை போலவும் மந்தர மலைபோலவும் ஆகாயத்திற் கிளம்பிற்று. பிறகு, கும்பன், சமுத்திரத்தினின்று கிளம்பிவந்து, சுக்கிரீவனை யடைந்து, வச்சிராயுதம்போன்ற வெகு வலிமையான தனது முஷ்டியால் அந்தச்சுக்கிரீவனுடைய மார்பிலேகோபங் கொண்டு ஒரு குத்து வைத்தான். அந்த வானரவீரனுடைய உடம்பின் மேல்தோல் கீறுண்டு உடம்பிலிருந்து இரத்தமும் அதிகமாகப் பெரு கிற்று. அவனுடைய மிக்க வேகமுள்ள அந்த முஷ்டியா னது, சுக்கிரீவனது எலும்புக்கூட்டத்தில் தாக்கிற்று. அவ்வாறு அடித்த வேகத்தால், வச்சிராயுதத்தால் தாக் கியபொழுது மேருமலையில் அனற்பொறி கிளம்பியது போல, சுக்கிரீவனுடையதேகத்திலிருந்துஅனற்பொறிகள் கிளம்பலாயின. வானரத் தலைவனுகிய சுக்கிரீவன், தன் மேல் அடிவிழவே, பகைவனைக் குத்தும்பொருட்டு வச்சிரா யுதத்துக்கு ஒப்பான தனது கையை முடக்கிச் சித்தமாக வைத்துக்கொண்டான். ஆயிரங் கிரணங்களுடன் கூடிய இரவிமண்டலம்போல் விளங்கிய சுக்கிரீவனுடைய முஷ்டி யானது, கும்பன்மார்பில் விழுந்தது. அந்தக்குத்து மிக்க விசையாக விழவே, கும்பன், தனது அவயவங்கள் சிதறியவ னுய், நெருப்பு ஜ்வாலையற்று அவிவதுபோல வெகுவேகமா கப் பூமியில் உயிரொழிந்து விழுந்தான். அவ்வரக்கன்மேல் அந்தக் குத்து விழவே, அவ்வரக்கன், காந்தியால் விளங்கு கின்ற செந்நிறமான ஒரு நட்சத்திரம் ஆகாயத்திலிருந்து தானுகவே விழுவதுபோலப் பூமியில் விழுந்தான். தனது மார்பிற் குத்துவிழுந்ததனற் பிளப்புண்டுகீழ்விழுந்தகும்ப னது உருவமானது, உருத்திரதேவனுல் அவமதிக்கப்பட்ட சூரியனது உருவம்போல விளங்கிற்று. கொடிய பராக்

சுக்கிரீவன் கும்பனைச் சமுத் திரத்தில் தூக்கி யெறிதல்.

கும்பன் மீண்டு வந்து சுக்கிரீவனு டன்போர்செய்து உயிரிழத்தல்.

கிரம மமைந்த அவ்வானர வீரனுல் அக்கும்பன் வதைக்கப் பட்டபோது, மலைகள் காடுகள் என்ற இவைகளுடன் நிரம் பிய பூமி நடுங்கலாயிற்று; அரக்கர்களுக்குள் பயமும் அதிகமாகப் புகுந்தது.

எழுபத்தேழாஞ் சருக்கம்:
நிகும்பனது வதை.

நிகும்பன், தனது சகோதரனைச் சுக்கிரீவன் வதைத் ததைக் கண்டு, சினத்தால் எரித்துவிடுகின்றவன்போல அவ்வானரராஜனைப் பார்த்தான். அதன்பிறகு, மலையின் சிகரத்துக்கு ஒப்பானதாயும் புஷ்பமாலைகளா லலங்கரிக் கப்பெற்றதாயும் ஐந்துவிரல்களின் அடையாளத்தைப் பெற்றதாயும் தங்கப்பூண்கட்டியதாயும் வைரமும் பவழ மும் ஒருசேர அணியப்பெற்றதாயும் காலனுடைய தண் டம்போலப் பயங்கரமாகவிளங்குவதாயும் அரக்கர்களின் பயத்தை அகற்றுவதாயுமுள்ள உழலைத் தடியை, அவ்வீரன், கையிலெடுத்தான். கொடிய வல்லமை யமைந்தவனும் மஹா பராக்கிரமசாலியுமாகிய நிகும்பன், இந்திர னுடைய கொடிபோன்ற அந்தக்கதையைச் சுழற்றிக்கொண்டு, வாய்திறந்தவண்ணம் அட்டகாசம்பண் ணினான். மார்பில்விளங்கிய பதக்கங்களாலும், தோளி லணிந்த வளையல்களாலும், அழகான குண்டலங்களாலும், அழகான மாலைகளாலும், மற்றும் பல ஆபரணங்களாலும், அவ்வுழலைத் தடியினாலும், நிகும்பன், மின்னல்களுடனும் இடியுடனும் சேர்ந்து விளங்கும் மேகம்போல விளங்கி னான். மிக்க வல்லமையுள்ள அவ்வரக்கனது உழலைத் தடியின் நுனியால் ஸப்தவாயுமண்டலமும் பிளக்கலாயின. அவ்வரக்கன், தனது அட்டகாசத்தால் புகையற்ற நெருப் புப்போலப்பிரகாசித்தான். அவன் தனதுஉழலைத்தடியைச்

நிகும்பன், உழலைத்தடியைக் கொண்டு, போர்க்கு உக்கிரமாக வருதல்.

சுழற்றியபொழுது, அசுவினிமுதலிய நட்சத்திரங்களுடனும் வேறு பலவகை நட்சத்திரங்களுடனும் புதன் முதலிய கிரகங்களுடனும் சந்திரனுடனும் சுக்கிரன் முதலிய மகாகிரகங்களுடனும் கூடிய ஆகாயமானது, கந்தர்வ கிருகங்களுடனும் அளகாபுரியுடனும் அமராவதியுடனும் எல்லா வுலகங்களுடனும் சுழல்வதுபோலக் காணலாயிற்று. உலகத்தின் முடிவுகாலத்தில் தோன்றும் அக்கினி எவ்வாறு நெருங்கமுடியாததாக விருக்குமோ, அதுபோலவே, உழலைத்தடியினலும் ஆபரணங்களினலும் விளங்குகின்ற நிகும்பனென்ற அக்கினியானது, வானரர்களுள் ஒருவராலும் அணுகமுடியாததாக விருந்தது. அரக்கர்களும், வானரர்களும், பயத்தினல் பதசலனம்பண்ணுவதற்கும் வல்லமையற்றவர்களாக நின்றார்கள்.

அனுமானும் நிகும்பனும் போர்செய்தல்.

வெகு பலசாலியாகிய அனுமான், தனது மார்பைக் காட்டிக்கொண்டு, அவ்வரக்கவீரனுக்கு முன்பாக வந்துநின்றான். உழலைத்தடிக்கு ஒப்பான கைகளமைந்த பலசாலியாகிய அவ்வரக்கவீரன், சூரியன்போல் விளங்கிய தனது உழலைத்தடியை, வெகு பலசாலியாகிய அவ்வனுமானது மார்பில் வீசியெறிந்தான். வெகுவிசாலமானதும் உறுதியுள்ளதுமான அவ்வனுமானது மார்பிலே விழுந்த அந்த உழலைத்தடியும், நூறுதுண்டாகமுறிந்து, ஆகாயத்தினின்று ஆயிரங் கொள்ளிகள் உதிர்வனபோலச் சிதறி விழுந்தது. அவ்வானரவீரனே, பூகம்பத்தால், மலை அசைவதுபோல, அவ்வடியாற் கலக்கப்பட்டவனுய்ச் சிறிதுகலங்கினன். வானரரிற்சிறந்தவனும் மஹாபலசாலியும் நிகும்பனல் அடியுண்டவனுமாகிய அவ்வனுமான், அப்போது தனதுபலம்முழுவதையுங்கொண்டு கைவிரல்களை முடக்கிக் கொண்டான். வாயுபகவானுடைய வல்லமையமைந்தவனும் அதிக பராக்கிரமம் பொருந்தியவனும் மஹாவீரனும் வேகமமைந்தவனுமாகிய அவ்வனுமான், அதிசீக்கிரமாக,

தனது அம்முஷ்டியை யோங்கி நிகும்பனுடையமார்பில் ஒருகுத்துக் குத்தினன். அதனால், அவ்வரக்கனது உடலானது, விண்டு இரத்தத்தை வழியவிடலாயிற்று; குத்து விழுந்தவிடத்தில் மின்னல்போல நெருப்புச்சுவாலையும் கிளம்பிற்று. அக்குத்தைத் தாங்கமுடியாமல், அந்த நிகும்பன், மூர்ச்சையடைந்தான்; மூர்ச்சை தெளிந்தபிறகு, அவ்வரக்கன், தன்னைக்குத்தினவனை அனுமானைப் பிடித்துக் கொண்டான். அவ்வரக்கன் மஹாபலசாலியாகிய அனுமானைப் பிடித்துக்கொண்டதைக் கண்டு, லங்காவாசிகளான அரக்கர்கள், மகிழ்ச்சியினால், அப்போர்க்களத்தில் அட்டகாசம் பண்ணினார்கள். அப்போது, அந்தக் கும்பகர்ணனுடைய புதல்வனால் தான் பிடியுண்டபோதிலும், அவ்வனுமான், அவ்வரக்கனை வச்சிராயுதத்துக்கு ஒப்பான தனது முஷ்டியாற் குத்தினன். பிறகு, வாயுவின் புதல்வனை அனுமான், தன்னை விடுவித்துக்கொண்டு, பூமியில் வந்து நின்றான். அப்பால், அவ்வனுமான், அவ்வரக்கனை விரைவாகக் கலக்கலானன். வீரனை அனுமான், மிகவும்பிரயாசத்துடன், அவ்வரக்கனைக் கீழேதள்ளிப் பிசைந்தான்; ஆகாயத்தில் திடீரென்று கிளம்பிப் பொத்தென்று அவன்மார்பிற் குதிக்கவுங் குதித்தான். அவ்வானரவீரன், கதறிக்கொண்டிருக்கையிலேயே நிகும்பனுடைய தலையைத் தனது கைகளினால் பற்றித் திருகிப் பயங்கரமான பருத்த அத்தலையை உடலினின்று வேறுபடுத்தினன்.

அனுமான் நிகும்பனைக் கொல்லுதல்.

கதறிக்கொண்டிருந்த நிகும்பன் அனுமானால் கொல்லப்பட்டபிறகு, அப்போர்க்களத்தில், வெகுரோஷத்தையடைந்த ஸ்ரீராமருக்கும் அரக்கர்வேந்தனது குமாரனான மகராட்சனுக்கும் பயங்கரமான பெருஞ்சண்டை தொடங்கலாயிற்று.

இனி, அடித்த இரண்டு சர்க்கங்களின் தோற்றுவாய்.

நிகும்பனுடைய உயிர் நீங்கியதும், வானரர்கள், சந்தோஷத்தால் அட்டகாசம் பண்ணினார்கள். அதனால் எல்லாத் திசைகளிலும் எதிரொலி தோன்றிற்று; பூமியும் அசைந்ததுபோலிருந்தது; ஆகாயமும் வெடித்ததுபோலிருந்தது. அரக்கர்களின் மனங்களிலும் பயம் புகுந்தது.

வானரரது மகிழ்ச்சியும், அரக்கரது அச்சமும்.

எழுபத்தெட்டாஞ் சருக்கம் :
மகராட்சன் போர்செய்யச் செல்லுதல்.

நிகும்பன் வதைக்கப்பட்டதையும் கும்பன் மடிந்ததையும் கேட்டு, இராவணன், சோகமும்கோபமுங்கொண்டு, நெருப்புப்போலக் கொதித்தான். அவ்வரக்கவேந்தன், கோபம் துக்கம் என்னும் இவைகளிரண்டாலும் மிக்கவனாய், விசாலமான கண்களமைந்த மகராக்ஷனென்னுங் கரனுடைய குமாரனைப் பார்த்துப் பின்வருமாறுசொல்லலுற்றான் :— "குழந்தாய்! எனது கட்டளையின்படியே நீ சேனைகளை உடனழைத்துக்கொண்டு, போரிடச் செல்வாயாக. இராமர் சென்று லட்சுமணரையும் அவ்வானரர்களையும் வதைப்பாயாக" என்றான்.

இராவணன் மகராட்சனைப் போர்செய்யுமாறு ஏவுதல்.

தானே வெகுசூரனென்று செருக்குக்கொண்டிருந்த கரனதுகுமாரனான பலசாலியாகிய மகராக்ஷனென்ற அந்த அரக்கனும், இராவணன் அவ்வாறுசொன்னதைக் கேட்டு, நல்லதென்று சொல்லி வெகுசந்தோஷமாக அங்கீகரித்து, எழுந்து, இராவணனுக்கு நமஸ்காரம் பண்ணி அவனைவலம்வந்து, அவ்வரக்கவேந்தனது கட்டளைப்படியே வெண்மையான அம்மாளிகையைவிட்டுக் கிளம்பினான்.

மகராட்சன் இராவணனது கட்டளைக்கு உடன்படுதல்.

உடனே, மகராக்ஷன், தனக்கு அருகிலிருந்த சேனைத் தலைவனைப் பார்த்து, "எனது இரதத்தைச் சீக்கிரம் வருவிக்க; சடிதியில் சேனையைத் திரட்டுக" என்று கூறினன். அவ்வண்ணம் அவன் சொன்னதும், சேனைத்தலைவனுகிய அரக்கனும், அவனது தேரையும் அவனுடன் புறப்படவேண்டிய சேனையையும் சடிதியிற் கொணர்ந்து நிறுத்தினன். உடனே, அவ்வரக்கவீரன், இரதத்தை வலம்வந்து, அதன்மேல் ஏறி உட்கார்ந்து, தேர்ப்பாகனை நோக்கி "சடிதியில் இரதத்தைச்செலுத்துக" என்றியிட்டான்.

மகராட்சனது யுத்தயாத்திரையின் சன்னகம்.

அன்றியும், மகராக்ஷன், தன்னைச்சூழ்ந்திருந்த அரக்கர்களெல்லாரையும் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானன் :—"அரக்கர்களே! நீங்கள் யாவரும் எனக்கு முன்பாக நின்று, போர்புரியுங்கள். மகாத்துமாவும் ராக்ஷஸராஜருமாகிய இராவணனர் இராமலட்சுமணர் இருவரையும் போரிற் கொல்லும்படி எனக்குக் கட்டளை யிட்டிருக்கின்றார். ஆகவே, அரக்கர்களே! நான், இன்று இராமலட்சுமணர் என்ற இவ்விருவரையும், சுக்கிரீவன் என்ற வானராராஜனையும், மற்றைவானரர்களையும் சிறந்தபாணங்களால் ஒழித்துவிடுகின்றேன். காய்ந்த கட்டைகளை நெருப்பு எரிப்பதுபோல, நான், இன்று, போர்முகத்திற் சென்று சூலாயுதத்தைப் பிரயோகம்பண்ணி, வானரசேனை முழுவதையும் எரித்துவிடுகின்றேன்" என்றனன்.

மகராட்சன் தன் பரிவாரங் கட்குக் கட்டளை யிடுதல்.

அவ்விதமாக மகராக்ஷன் சொன்ன சொல்லைக்கேட்டு, பலவான்களாகிய அவ்வரக்கர்களெல்லாரும், பலவகையாயுதங்களையும் எடுத்துக்கொண்டு வந்தார்கள். நீண்ட சிங்கப்பற்களையும் சிவந்த கண்களையுமுடைய இஷ்டமான உருவங் கொள்ளும் பேருடல்படைத்த கொடிய

அவ்வரக்கர்கள், யானைகள்போலக் கர்ச்சித்துக்கொண்டு, தங்கள் தலைமயிர் கலைய, வெகு பயங்கரமான தோற்றத்துடன், கரகுமாரனைச் சூழ்ந்துகொண்டு, வெகு சந்தோஷத்துடன் பூமியே நடுநடுங்கப் போர்க்களத்தை நோக்கிப் புறப்படலானார்கள்.

மகராட்சன் கட்டளைப்படி அரக்கர்கள் புறப்படுதல்.

அவ்வாறு அவர்கள் பிரயாணமானபொழுது, நாற் புறத்திலும் ஆயிரக்கணக்காக முழங்கிய சங்கம் பேரிகை யென்னும் வாத்தியங்களின் சத்தமும், சிங்கநாதஞ் செய்தல் தோள்தட்டுதல் என்னும் இவற்றின் சத்தமும், மிகுதியாக எழுந்தன.

அப்போது தோன்றிய பேரொலி.

அச்சமயத்தில், மகராக்ஷனுடைய தேர்ப்பாகனது கையிலிருந்த குதிரைச் சாட்டையானது, அவனது கையை விட்டு நழுவிக் கீழ்விழுந்தது; அவ்வரக்கனுடைய தேரின் கொடியும் திடீரென்று முறிந்து விழுந்தது. அவன் தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகள், தமக்கு உரிய நடைகளைவிட்டு, முதலிற் கால் சோர்ந்தவைகளாய்க் கண்ணீர்விட்டுக்கொண்டு பிறகு செல்லலாயின. கெடுபுத்தியையுடைய கொடிய அந்த மகராக்ஷன் புறப்பட்ட காலத்தில், மிக்க கடுங்காற்று தூளியுடன் வீசலாயிற்று.

மகராட்சனுக்குத் தோன்றிய நிமித்தங்கள்.

அவ்விதமாக அபசகுனங்கள் உண்டானபோதிலும், காரமேகம், யானை, எருமை என்ற இவற்றுக்கு ஒப்பான நிறமுள்ளவர்களும், போர்முகத்திற் பலதடவைகளிற் கதை கத்தி என்னும் ஆயுதங்களாற்புண்பட்டுத்தேறினவர்களும், 'நான் முன்னே, நான் முன்னே' என்று நாற்புறத்திலும் கோஷித்துக் கொண்டிருப்பவர்களும், போரில் வல்லவர்களும், நிசாசரர்களுமாகிய

அரக்கர்கள் அத் நிமித்தங்களை லக்ஷியஞ் செய்யாமற் போர்க்குச் செல்லுதல்.

ஆயிரக்கணக்காயுள்ள அவ்வரக்கர்கள், அத்தீநிமித்தங்களைச் சிறிதும் லக்ஷ்யஞ்செய்யாமல், அந்த இராமலட்சுமணரிருக்குமிடத்தை நோக்கிச் சென்றார்கள்.

எழுபத்தொன்பதாஞ் சருக்கம்:
மகராக்ஷனது வதை.

மகராக்ஷன் வந்ததைக் கண்டு, வானரவீரர்கள் யாவரும், சரேலென்று தாவிக்குதித்துக்கொண்டு யுத்தஞ்செய்வதில் ஆசையுள்ளவர்களாய் எதிர்நின்றார்கள். அதன்பிறகு, அசுரர்களுடன் தேவர்களுக்கு நேர்ந்ததுபோல, அரக்கர்களுடன் வானரர்களுக்கு, பார்ப்பவர் மயிர்க்கூச்செறியும்படியான பெரும் போரானது தொடங்கலாயிற்று. அப்போது, வானரர்களும் அரக்கர்களும், மரங்களையும் சூலங்களையும் வீசியெறிந்தும், மலைகளையும் உழலைத்தடிகளையும் வீழ்த்தியும் ஒருவரையொருவர் குமைக்கத் தொடங்கினர்கள். சில அரக்கர், முத்தலைச்சூலம் கத்தி கதாயுதம் குந்தம் தோமரம் பட்டசம் பிண்டிபாலம் நிர்க்காதம் என்ற ஆயுதங்களாலும், வேறு சில அரக்கர்கள், பாசம் முத்கரம் தடி நிகாதம் என்ற ஆயுதங்களாலும், வானரவீரர்களை நாற்புறங்களிலும் வதைக்கத் தொடங்கினர்கள்.

வானரர்கட்கு அரக்கருடன் நேர்ந்தபோர்.

மகராக்ஷனும் பாணவருஷத்தால் வானரர்களை வருத்தவே, எல்லா வானரர்களும், பயத்தால் மனங் குழம்பியவர்களாய் ஓடத்தொடங்கினர்கள். அவ்வானரவீரர்கள் அவ்வாறு ஓடினதைக் கண்டு, அரக்கர்கள், வெற்றி தங்களுக்குக் கிட்டியதென்று சந்தோஷங்கொண்டவர்களாய், சிங்கங்கள் போலக் கர்ச்சிக்கலானார்கள். அவ்விதமாக வானரர்கள் நாற்புறத்

வானரர்கள் முறிந்தோட, இராமர் அரக்கர்களை ஒன்றுஞ் செய்யவொட்டாது தமித்தல்.

திலும் ஓடியபோது, ஸ்ரீராமர், பாண வருஷத்தால், அவ் வரக்கர்களை ஒன்றுஞ் செய்யமுடியாதபடி தடுக்கலானர்.

மகராட்சன் இராமரிடத்துக்கூறிய வீரவாதம்.

இராமர் அரக்கர்களை ஒன்றுஞ்செய்யவொட்டாது தடுத்ததைப் பார்த்து, மகராக்ஷன் கோபத்தீ மண்டியவனுய், அவரைநோக்கி இவ்வாறு சொல்லலானன் :— "இராமரே! என்முன் சிறிது நில்லுங்கள். நான் தங்களிடம் துவந்துவயுத்தம் செய்கின்றேன். எனது வில்லிலிருந்து கூரிய பாணங்களைப் பிரயோகித்து, நான், தங்களுடைய உயிரை வாங்கிவிடுகின்றேன். தண்டகாரணியத்தில் தாங்கள் எனது தந்தையைக் கொன்றவர்களாகையால், கடுந்தொழிலைச் செய்யுந் தங்களை நான் கண்முன்பாகப் பார்க்கும்பொழுது, எனக்குக் கோபம் பொங்குகின்றது. இராகவரே! துராத்மாவே! அக்காலத்தில் பெருங்காட்டிலே நான் தங்களைக் காணுமையால், இப்போது எனது உறுப்புக்கள் பற்றியெரிகின்றன. இராமரே! தாங்கள் இங்குத் தெய்வாதீனமாய்க் காணக் கிடைத்தீர்களே! பசியால் வருந்துஞ் சிங்கம் மானென்றை ஆவலுடன் எதிர்பார்ப்பதுபோல, நான், தங்களை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். இப்போது எனது பாணங்களுடைய வேகத்தால், தாங்கள் யமனுடைய நகரத்திற்குப் போய், எவர்களைத் தாங்கள் கொன்றீர்களோ, அந்த வீரர்களுடன் சேர்வீர்கள். இங்கு அதிகமாகப் பேசுவதிற் பயன் என்ன? இராமரே! என் சொல்லைக் கேளுங்கள் : போர்க்களத்தில், தங்களையும் என்னையும் ஜனங்கள் யாவரும் பார்க்கட்டும். அஸ்திரங்களைக்கொண்டோ, கதாயுதத்தைக் கொண்டோ, கைகளைக் கொண்டோ, எப்படி தங்களுக்கு வழக்கமோ, அவ்வகையாலேயே இப்பெரும்போரில், தாங்கள் என்னுடன் போர் புரியலாம்" என்றுன்.

மகராக்ஷன் அவ்விதமாகச் சொன்னதைக் கேட்டு, ஸ்ரீராமர் பிதற்றிக்கொண்டிருந்த அவ்வரக்கனைப்பார்த்துச் சிரித்தவண்ணம் சொல்லலானார்:— "அரக்கனே! என் வீணுய்த் தகாத பலபேச்சுக்களைக் கர்வத்தோடு பேசுகின்றாய்? போர்முகத்தில் வாய்ப்பேச்சாலல்லாமல், நீ சண்டையால் வெற்றிபெற முடியாது. நான், தண்டகையில் பதினாலாயிரம் அரக்கர்களையும், உனது தந்தையையும் கிரி சிரசையும் தூஷணனையும் வதைத்தவன். பாவச்செயல் புரியும் அரக்கனே! இன்று, கூரியநகத்தையும் மூக்குமுனையையுமுடைய கழுகுகளும் நரிகளும் காக்கைகளும் உனது மாமிசத்தால் வயிறு நிரம்பியனவாகும்" என்றார்.

இராமர் மகராட்சனைக்கண்டித்துப்பேசுதல்.

ஸ்ரீராமர் இவ்விதமாகச்சொன்னதும், கரனுடைய குமாரனுகிய அவ்வரக்கன், அப்போர்க்களத்தில் கொடிய அம்புகளை அவர்மேற் பிரயோகிக்கலானன். அந்தப் பாணங்களை, ஸ்ரீராமர், அம்புமழைகளாற் பல துண்டுகளாக முறித்தெறிந்தார். பொன்மயமான நுனிகளையுடைய அவைகளும் ஆயிரந் துண்டுகளாக அறுபட்டுப் பூமியில் விழுந்தன. அங்கு, ஒருவர்க்கொருவரது பரர்க்கிரமத்தால், மகராக்ஷனுக்கும் ஸ்ரீராமருக்கும் பெரும்போர் விளைந்தது. அப்போரில், நாணியிற் கைத்தலம்படுதலால் தோன்றிய சத்தமும், வில்லினின்றுதோன்றிய பெருஞ்சத்தமும், ஆகாயத்தில்தோன்றும் மேகங்களின்கர்ச்சனை போலக்கேட்கலாயின. ஆச்சரியமான அப்போரைக்காண விரும்பி, தேவர்கள், தானவர்கள், கந்தர்வர்கள், கின்னரர்கள், உரகர்கள் என்ற யாவரும் ஆகாயத்தை யடைந்தார்கள். ஒருவரை மற்றொருவர் பாணங்களினுலே தாக்கத்திற் புடைத்தலால், அப்போர், இரட்டிப்பாக மிகவும் வளர்ந்து சென்றது. ஒருவர் செய்ததற்கு மற்றொருவர் மாறுசெய்யும் போரை, அவ்விருவரும் அம்முனைமுகத்திற் செய்தார்கள்.

மகராட்சன்இராமருடன் போர்செய்தல்.

அப்போரில், ஸ்ரீராமர் எய்த பாணங்களின் தொகுதிகளை அவ்வரக்கவீரன் முறித்தெறிந்தான். மகராக்ஷன் எய்த அம்புத்தொகுதிகளை, ஸ்ரீராமர், பாணங்களினுற் பல துண்டங்களாக்கினர். பெருந்திசைகளும் மூலைத்திசைகளும் யாவும், அப்போது, பாணங்களினுலே பரம்பின; பூமியும், எல்லாப் பக்கங்களிலும் மூடப்பட்டதாய்க் கண்களுக்குப் புலனுகாதிருந்தது.

ஸ்ரீராமர் மகராட்சனது வில் முதலியவற்றைப் பிளந்தெறிதல்.

அப்பொழுது, அதிக புஜபராக்கிரமம் பொருந்திய ஸ்ரீராமர், வெகு கோபங்கொண்டு, அவ்வரக்கனது வில்லை வெட்டி யெறிந்தார்; அன்றியும், எட்டு நாராசங்களை விடுத்து, அவனுடைய தேர்ப்பாகனைப் பிளந்தார். ஸ்ரீராமர், அவனது தேரை முறித்து, தேரிற்பூட்டியிருந்த குதிரைகளையும் வதைத்தார். மகராக்ஷனென்ற அரக்கன், தேரற்றவனுய்ப் பூமியில் நின்ருன்.

இராமர் மகராட்சனெறிந்த சூலத்தைப் பொடியாக்குதல்.

அந்நிலைக்கு அவன் வந்ததும், அவ்வரக்கன், எல்லாப் பிராணிகளையும் பயமுறுத்தத்தக்கதாய் உலகத்தின்முடிவு காலத்தில் தோன்றும் அக்கினிக்கு ஒப்பானதான சூலாயுதத்தைக்கைப்பற்றினன். அப்போர்க்களத்தில்ஜ்வலிக்கின்ற அப்பெருஞ்சூலாயுதத்தைச்சுழற்றி அவ்வரக்கன்வெகுகோபத்துடன் ஸ்ரீராமர்மேல் வீசியெறிந்தான். ஸ்ரீராமர், தம்மைநோக்கி மின்னிக்கொண்டு வந்த கரனுடையபுதல்வன் விடுத்த அந்தச்சூலாயுதத்தை, மூன்றுபாணங்களையெய்து ஆகாயத்திலேயே ஒடித்தெறிந்தார். ஆணிப்பொன்னல் அலங்கரிக்கப்பெற்ற அச்சூலாயுதம், இராமபாணத்தாற்பீடிக்கப்பட்டுப் பலதுண்டுகளாக முறிந்து, ஆகாயத்திலிருந்து கொள்ளிக்கட்டை விழுவதுபோலப் பூமியிற் சிதறி விழுந்தது. எளிதில் தொழில் செய்யவல்ல ஸ்ரீராமர், அச்சூலத்தை வெட்டியதைப்

பார்த்து, ஆகாயத்தில் நின்றுகொண்டிருந்த பிராணிகள் 'நன்று, நன்று!' என்று கொண்டாடிக் கூறினர்கள்.

தனது சூலம் அவ்வாருனதைப் பார்த்ததும், மகரா க்ஷன் முஷ்டியைத் தூக்கிக்கொண்டு, "நில்க, நில்க" என்று சொல்லிக்கொண்டு வந்தான். அவ்வாறு அவ்வரக்கன் தம்மைநோக்கிஓடிவருவதைக் கண்டு, ஸ்ரீ ராமர், நகைத்து, வில்லில் ஆக்நேயாஸ்திரத் தைத் தொடுத்தார். அப்போது, அப்போ ரில், அவ்வஸ்திரத்தால் அவ்வரக்கன் அடி யுண்டு மார்புவிண்டு பூமியில் விழுந்து மடிந்தான்.

இராமர் மகராட்சனை ஆக்நேயாஸ்திரத்தால்சம்ஹரித்தல்.

ஸ்ரீராமருடைய பாணத்தால் வருத்தமடைந்த அரக் கர்கள்யாவரும், மகராக்ஷன் மடிந்துவிழுந் ததைப் பார்த்து, இலங்கையையே நோக்கி ஓடலானர்கள். தசரத புத்திரரான ஸ்ரீ ராமருடைய பாணத்தின் வேகத்தால், வச் சிராயுதத்தாற் சிதறிவிழுந்த மலைபோல் அவ்வரக்கன் மாய்ந்துவிழுந்ததைப் பார்த்து, தேவர்கள் அதிகசந்தோஷ மடைந்தார்கள்.

அரக்கர்களின் ஓட்டமும், தேவர்களின் மகிழ்ச்சியும்.

எண்பதாஞ் சருக்கம்:
இந்திரஜித்தின் யுத்தம்.

போரில் வெற்றிகொள்ளுந்தன்மையனுகிய இராவ ணன், மகராக்ஷன் வதைக்கப்பட்டதைக் கேள்வியுற்று, அதிக கோபங்கொண்டவ னுய், தனதுபற்களைக்கடகடவென்று கடிக் கலானன். மிக்க சினங்கொண்டவனுய், அவ்வரக்கமன்னவன், 'இனி அங்குஎன்ன செய்யலாம்?' என்று சற்று ஆலோசித்து, பிறகு, மிகுந்த கோபத்துடனே, தனது சிறந்த குமாரனுகிய இந்திரஜித்

இராவணன் சினந்து, இந்திரஜித்தைப் போர்க்குச் செல்லுமாறு கட்டளையிடுதல்.

தைப் போர்க்களத்துக்குச் செல்லுமாறு கட்டளையிடலா னுன் :—" வீரனே ! வெகு பலசாலிகளான இராமலட்சு மணர் இருவரையும், அவர்கள் கண்முன்பாக நின்றுவது, மறைந்து நின்றுவது எப்படியாவது கொன்றுவிட்டு வா. எல்லாப்படியாலும் நீ பலத்தில் மேலானவன். ஒப்பற்ற பராக்கிரமமுள்ள இந்திரனையே நீ போரில் வென்றிருக் கின்றுய். அப்படியிருக்க, அற்ப மனிதர்களைப் பார்த்த மாத்திரத்தில் நீ போரில் ஏன் வதைக்கமாட்டாய் ?" என்றுன்.

தனது தந்தையான இராவணன் அவ்வாறுசொன்ன வுடனே, இந்திரஜித்து, அவ்வாறு செய்தற்கு உடன்பட்டு, தனது யாக்சாலைக்குச் சென்று அக்கினிபகவானைக் குறி த்து விதிப்படி ஓமம் பண்ணலானுன். அங்கு, அவ்விரா வணகுமாரன் ஓமஞ்செய்ய ஆரம்பித்த போது, ருத்விக்குகள் அணிந்துகொள்ளும் பொருட்டுச் சிவப்புத் தலைப்பாகைகளை ராக்ஷஸப்பெண்கள் வெகு பரபரப்புடன் கொணர்ந்தார்கள். அந்த ஹோமத்துக்குப் பரிஸ்தரணப் புற்கள் ஆயுதங்களே ; தான்றிமரத்தின் சுள்ளிகள் சமித் துக்கள் ; ருத்விக்குகளின் ஆடைகள் செந்நிறவாடைகள் ; ஸ்ருக்குக்கள் இரும்புமயமானவை. இந்திரஜித்து, அக்கினி யின் நாற்பக்கங்களிலேயும் நாணலேயும் தோமரங்களேயும் பரிஸ்தரணங்களாகப் பரப்பி, உயிருடனிருந்த கருநிற மான ஆட்டின் கழுத்தை வெட்டினுன். ஒரே தடவை எரி யச் செய்தபோதிலும், அவ்வோமாக்கினி, புகையற்றதாய் அதிக காந்தியுடன் ஜ்வலித்துக்கொண்டு, வெற்றிக்குறியை வெளிக் காட்டிற்று. உருக்கின தங்கத்துக்கு ஒப்பாக விருந்த அக்கினியானது, வலமாகச் சுழலும் ஜ்வாலையை யுடையதாய், தானே நேராகவந்து அந்தஹவிஸைப் பெற் றுக்கொண்டது.

இந்திரஜித்து ஹோமஞ்செய் தல்.

அவ்வாறு அக்கினியில் ஓமஞ்செய்து முடித்து, தேவ தானவ ராக்ஷஸர்களைத் திருப்தி செய்வித்து, இந்திரஜித்து, மறையவல்ல அழகான தனது இரதத்தி லேறினன். சிறந்த அவ்விரதம், நான்கு குதிரைகள் பூட்டப்பட்டதாய், கூரான பாணங்களமைந்ததாய், நாணேற்றிய பெருவில்லுடன் கூடியதாய் விளங்கிற்று. அவ்விரதம், தனது வடிவத்தால் ஜாஜ்வல்ய மாநமாய், தங்கத்தகடிகள் வேயப்பட்டு, பல மிருகங்களின் வடிவமான பிரதிமைகளை யுடையதாய், சந்திராகாரமாயும் அர்த்தசந்திராகாரமாயுமுள்ள வேலைகள் செய்யப்பெற்று, இவ்வாறு அலங்காரமமைந்திருந்தது. கொழுந்துவிட்டெரியுந் தீப்போல மின்னுமாறு அத்தேரின் வலயங்கள் பொன்மயமாகவும், அதன் கொடி வைரீரியக்கற்களா லிழைக்கப்பட்டதாகவும் இருந்தன. சூரியனுக்கு ஒப்பான பிரமாஸ்திரத்தாற் காப்பாற்றப்பட்டவனும் வெகுபலசாலியுமானதால், இந்திரஜித்து, போரில் தகையமுடியாத வல்லமை தங்கியவனாயிருந்தான். இந்திரஜித்து தேரிலேறுதல்.

போரில் வெல்பவனான அவ்விந்திரஜித்து, இலங்கையைவிட்டுப் புறப்பட்டு, நிருருதியைத் தேவதையாகவுடைய மந்திரங்களால் அக்கினியில் ஹோமம் பண்ணி, மறைந்துநிற்கும் வல்லமையைப் பெற்றவனாய், பின்வருமாறு சொல்லலானன் :—" இன்று, நான், இப்போர்க்களத்தில், காட்டிலே பொய்வேடம்பூண்டிருந்தவர்களான அந்த இரண்டு வீரரையுங் கொன்று, போரிற் சம்பாதிக்கும் வெற்றியை என்து தந்தையாகிய இராவணனருக்குக் கொடுக்கின்றேன். இன்று, நான், இராமனையும் இலட்சுமணனையும் கொன்று, இப்பூமியில் வானரப்பூண்டே இல்லாதவாறு செய்து, எனது தந்தைக்கு அதிக சந்தோஷத்தை விளைக்கின்றேன் " என்று சொல்லி மறைந்தான். இந்திரஜித்தின் வீரவாதம்.

பிறகு, மூனிமுகத்தில் கொடிய வில்லின் நாராசங்களாற் கொடியவனாய் இராவணனாலேவப்பட்டவனான அவ்

விந்திரசத்துரு, மிக்க சினத்துடன் ஆகாயத்தி லெழுந் தான். முத்தலை நாகங்கள் போன்ற மிக்க பராக்கிரமத்தையுடைய இராமலக்ஷ்மணர் வானரர்களின் நடுவில் நின்றுகொண்டு பாணக்கூட்டங்களை விடுப்பதை, இந்திர ஜித்து பார்த்தான். 'இவர்கள்தான் அவர்கள்' என்று நிச்சயித்து, தனது வில்லை நாணேற்றி, மழைபொழியும் மேகம்போல அம்பின் தாரைகளைப் பரப்பினன். தேரை யுடைய அவ்வரக்கன், ஆகாயத்திற் சஞ்சரித்தலையுடைய வனாய், கண்களுக்குப் புலப்படாமல் நின்று, அவ்விராம லக்ஷ்மணர்களைக் கூரான பாணங்களால் வருத்தலானன். அந்த ராமலக்ஷ்மணரிருவரும், அவனுடைய பாணவேகத் தாற் சூழப்பெற்றவர்களாய், தங்கள் விற்களை நாணே ற்றித் திவ்வியாஸ்திரங்களை விடுக்கலானார்கள். மகாபலம் பொருந்திய அவ்விருவரும், தங்கள் பாணங்களால் ஆகா யத்தை மறைத்தனரேயன்றி, சூரியனுக்கு ஒப்பான தங் கள் பாணங்களைக்கொண்டு அவ்வரக்கனைமட்டும் தொட முடியவேயில்லை. சீமானன அவ்வரக்கவீரன், புகையால் இருண்ட ஆகாயத்தை மறைந்தது மன்றி, பனியிருளால் மூடப்பட்டிருந்த எல்லாத் திசைகளையும் மறைத்தான். அவன் ஆகாயத்திற் சஞ்சரிக்கையில், நாணியின் சத்தமா வது, சக்கரமென்ன குளம்பென்ன இவற்றின் சத்தமா வது கேட்கவேயில்லை; அவனுருவமும் கண்ணுக்குத் தெரியாமலிருந்தது. மேகத்தோடுகூடிய நள்ளிருள்போ ன்ற அவ்விருளில், அதிக புஜபலம் பொருந்திய அவ்வரக்க வீரன், நாராசசரங்களை அம்புமழை யென்னுமாறு ஆச் சரியமாகப் பொழியலானன். அதிக வரம்பெற்றவனன அந்த இராவணகுமாரன், போரில் வெகு கோபங்கொண்ட வனாய், சூரியனுக்கு ஒப்பான பாணங்களைக்கொண்டு, இராமரை உடம்புமுழுதும் துளைக்கலானன். பெருமழைத் துளிகளால் மலை துளைக்கப்படுவதுபோல, அவ்விருபுரு ஷப் புலிகளும், நாராசங்களா லடியுண்டவர்களாய், அவன்

இந்திரஜித்துக் கும்ராமலக்ஷ்மண ர்க்கும் போர்.

மீது பொன்மயமாக அடிப்புறம்வாய்ந்த கூரிய அம்புகளைப் பிரயோகித்தார்கள். பறவைகளின் இறகுகள் கட்டப்பட்டிருந்த அவ்வம்புகள், பறவைகள்போன்ற வேகங்கொண்டு ஆகாயத்திற்சென்று, இந்திரஜித்தையறுத்து இரத்தத்துடன் கூடியவையாய்ப் பூமியில் விழுந்தன. இராமலட்சுமணர்கள், இந்திரஜித்தினது பாணக்கூட்டங்களால் அதிகமாகப் பீடிக்கப்பட்டவர்களாய், தங்கள்மேல் விழுந்த அவ்வம்புகளைப்பலவானபல்லங்களால் அறுத்துத்துத்தள்ளினர்கள். அந்தத் தாசரதிகள், கூரிய பாணங்கள் எத்திசையினின்று வந்தனவோ, அத்திசையைக் குறித்து, உயர்ந்த அஸ்திரங்களை விடுத்தார்கள். அதிரதனுகிய இந்திரஜித்து, தனது இரதத்தைப்பலதிசைகளிலும் ஓட்டி அப்பாணங்களுக்குத் தப்பித்துக்கொண்டு, எளிதிற் பிரயோகிக்கக்கூடிய அஸ்திரமுடையவனுய், கூரானபாணங்களால் தசரதகுமாரர்களிருவரையும் அடிக்கலானன். அவ்விருவரும், இடைவிடாது பொழிந்த அப்பாணங்களால் மிகுதியாக அடிபட்டு, நன்றுகப்பூத்த முண்முருக்கை விருட்சங்கள்போலக் காணப்பட்டார்கள். மேகத்தில் மறைந்த சூரியனை எவ்வாறு காணமுடியாதோ, அதுபோல, இந்திரஜித்தின் போக்கையாவது அவனுடைய உருவத்தையாவது வில்லையாவது அம்புகளையாவது அவனைச்சேர்ந்த மற்றும் எதையாவது ஒருவராலும் அறியமுடியவில்லை. அவனுல் அடிக்கப்பட்ட வானரர்களும், நூற்றுக்கணக்காகக் கொலையுண்டு உயிரிழந்து அங்குப் பூமியில் விழுந்தார்கள்.

இலக்குமணர் பிரமாஸ்திரத்தைப் பிரயோகிப்பேனென்ன, இராமர் தடுத்து ஆலோசனை கூறுதல்.

அப்பொழுது, இலட்சுமணர் வெகுகோபங்கொண்டு, தமது தமையனுரை நோக்கி, "அரக்கர்யாவரையும் வதைப்பதற்காக, இதோ நான் பிரமாஸ்திரத்தைப் பிரயோகிக்கின்றேன்" என்றார். பிறகு, இராமர், நல்ல குறிகளமைந்த அந்த லக்ஷ்மணரை நோக்கி, இவ்வாறு சொல்லலானர் :— "ஒரு அரக்கனுடைய குற்றத்திற்காக இவ்வுலகத்திலுள்ள எல்லா வரக்கர்களையும் வதைப்பது, நியாயமன்று. நீ, போர்செய்யாதவனையும்,

மறைந்திருக்கிறவனையும், கைகளைக் கூப்பிக்கொண்டு சரண மென்றுவருகின்றவனையும், போரில் நிற்கமாட்டாமல் புறங் கொடுத்து ஓடுகின்றவனையும், பைத்தியம் பிடித்தவனையும், ஒருபொழுதும் கொல்லக்கூடாது. மஹாபலம்பொருந்திய வனே! இவனொருவனையேகொல்லவகைதேடுவோம். பாம்பு போன்ற மிக்க வேகமமைந்த அஸ்திரங்களைப் பிரயோகிப் போம். வெகு மாயாவியாய் அதிக அற்பனுய்த் தனது இர தத்தோடு மறைந்து சஞ்சரிப்பவனுயுள்ள இவ்வரக்கனை, வானரசேனபதிகள் நாடிப்பிடித்து வலியக்கொல்வார்கள். இவன், பூமியிற்புகுந்தபோதிலும், ஸ்வர்க்கத்திற்குச் சென் றபோதிலும், பாதாளலோகத்தைச் சார்ந்தபோதிலும், ஆகாயத்தையடைந்தபோதிலும், இவன் எங்குத்தான் மறைந்தபோதிலும், எனது அஸ்திரத்தாற் கொளுத்தப் பட்டவனுய்ப் பூமியில் உயிரற்று விழுவான்" என்றார். மகாத்துமாவாகிய அந்த ஸ்ரீராமர், இவ்வாறு சொல்லி, வானரவீரர்களாற் சூழப்பட்டவராய், கொடியவனும் பயங் கரமான செயலையுடையவனுமான அவ்வரக்கனை வதைக்க வெகு வேகமாகப் பார்க்கலானர்.

எண்பத்தோராஞ் சருக்கம்:
மாயாசீதையின் வதை.

பிறகு, இந்திரஜித்து, மகாத்துமாவான ஸ்ரீராமரது எண்ணத்தைத் தெரிந்துகொண்டு, அப் போர்க்களத்தைவிட்டுத்திரும்பி இலங்கை மாநகரினுட் புகுந்தான்.

இந்திரஜித்து, இராமரது எண் ணத்தை யுணர்ந்து நகர்க்குத் திரும்புதல்.

சூரனை அவ்விந்திரஜித்து, பலவான் களான அரக்கர்களின் வதத்தை நினைந்து நினைந்து, கோபத்தாற் கண்கள் சிவந்தவனுய், பெருங்காந்தி யால் விளங்கிக்கொண்டு, மறுபடியும் வெளிக்கிளம்பி னன். வெகு வல்லமை தங்கியவனும் புலஸ்தியவம்சத்தி

லுதித்தவனும் தேவர்களுக்குமுள்ளாகப் பெயர்பெற்ற வனுமான அவ்விந்திரஜித்து, பல அரக்கர்களாற் சூழப்பட்டவனுய், அந்நகரத்தின் மேலைவாயில்வழியாக வெளிக்கிளம்பினன். வீரர்களாய்ச் சகோதரர்களான ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் போரிடச் சித்தமாகவிருந்ததைப் பார்த்து, இந்திரஜித்து, அப்போது மாயையை வெளிக்காட்டக் கருதினன். பிறகு, அவ்வரக்கவீரன், இரதத்தில் மாயாமயமான சீதையை உண்டுபண்ணி, பெருஞ்சேனையாற் சூழப்பட்டவனுய், அவளை வதைக்க விரும்பினன். கெட்ட எண்ணங்கொண்ட அவன், எல்லோரையும் மோசம்பண்ண வேண்டுமென்று எண்ணி, சீதையைக் கொல்ல முயற்சிகொண்டவனுய், வானரரைநோக்கிச் சென்றான்.

இந்திரஜித்து, போர்க்களத்தைச்சார்ந்து, நிருமித்த மாயாசீதையைக் கொல்ல நினைத்தல்.

அவ்விந்திரஜித்து இலங்கையைவிட்டு வெளிக்கிளம்பி வந்ததை வானரர்கள், கண்டு, வெகு கோபங்கொண்டவர்களாய், போர்புரிய விரும்பி மலைகளைத் தூக்கிக்கொண்டு சென்றார்கள். வானரர்களுக்குள் யானைபோன்றவனுன அனுமான், கிட்டுதற்கும்அரிய மலையினது பெருஞ்சிகரமொன்றை யேந்திக்கொண்டு அவர்களுக்கும் முன்பாகச் சென்றான். அப்படிச் சென்ற அனுமான், இந்திரஜித்தின் இரதத்திலே, ஸ்ரீராமரது காதலியாய் அழகிய பெண்ணுன சீதை, கூந்தலை ஒரே பின்னலாகத் திரித்துவிட்டுக்கொண்டும், எளிமையடைந்தும், உபவாசத்தால் வாடினமுகம்பெற்றும், மிகவும் அழுக்கடைந்த ஒற்றைத்துணியுடுத்தும், ஓர் ஆபரணமுமில்லாமல், தரசியாலும் அழுக்காலும் தேகம் முழுவதும் நிரம்பியிருந்ததைக் கண்டான். அவளை ஒருமுகூர்த்தகாலம் உற்றுப்பார்த்து மைதிலியென்றே நிச்சயித்து மிகவும் வருந்தினன்; ஏனெனில், அவ்வனுமான் சிலநாளைக்கு

வானரப்படையின் முன்னே சென்ற அனுமான் மாயாசீதையைக் காணுதல்.

முன்பாகத்தான் அவளைப் பார்த்தானன்றே! வெகு பரிதாபமான நிலையில் அழுக்குநிறைந்த தேகத்துடன் சீதை அந்த இரதத்திலிருந்ததைப் பார்த்து, அனுமான், கண்களில் நீர்ததும்ப வெகு துக்க மடைந்தவனனன். துக்கத்தையடைந்துகொஞ்சமேனும்சந்தோஷமின்றிஎளி மையடைந்த சீதை இந்திரஜித்தினிடம் அகப்பட்டுக் கொண்டு அவனுடைய இரதத்தில் வந்துசேரும்படியான நிலை மையைக் கண்டு, அவ்வனுமான், "இவன் என்னசெய்ய உத்தேசித்திருக்கின்றனனே!" என்று சிந்தையுடன் சொல்ல லானன். அவ்வனுமான், எல்லா வானரவீரர்களுடனும் இந்திரஜித்து இருந்த இடத்தை நோக்கி ஓடலானன்.

இந்திரஜித்து சீதையைக்கத்தியாலறுக்கத் துணிதல்.

அவ்வானரசேனையைக் கண்டதும், இந்திரஜித்து, கோபம்மூண்டு, கத்தியை உறையினின்றும் உருவியெடுத்துச் சீதையின் தலையைப் பரிசிக்கலானன். அன்றியும், அவ்விந்திரஜித்து, அவ்வானரர்கள் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, மாயையால் இரதத்தில் வைக்கப்பட்டிருந்த அப்பெண்மணி 'ராம ராம' என்று சொல்லி அலறிக்கொண்டிருக்கும்போது அவளைப்புடைக்கலானன். சீதையின் கூந்தலை அப்பொழுது இந்திரஜித்து பற்றியதை, அனுமான், பார்த்து, மிகவும் பரிதாபமான நிலையையடைந்து, சோகக்கண்ணீரைக் கண்களினின்றும் வடித்தான்.

அனுமான் இந்திரஜித்தைப் பழித்தல்.

எல்லாவவயவங்களிலும் அழகுநிரம்பியவளும், ஸ்ரீராமருடைய தருமபத்தினியுமான சீதாதேவி அவ்வவஸ்தையிலிருந்ததைப் பார்த்து, அனுமான், வெகு கோபங்கொண்டு, அவ்விந்திரஜித்தைக் கடிந்து பின்வருமாறு சொல்லலானன்:— "கொடும்பாவியே! நீ நாசமடைந்துபோகவேண்டுமென்றே, இப்பெண்மணியின் கூந்தலைப் பற்றினாய். நீ பிரமரிஷிகுலத்திற் பிறந்தும், தாய்வழியால்

அரக்கர்குலத்தைச் சேர்ந்தவன். பாவச்செய்கையையே நோன்பாகக்கொண்ட நீ கெட்டாய்! இவ்வளவுதானு உன் புத்தி? கொடியவனே! மரியாதையற்றவனே! தீயொழுக்க முடையவனே! அற்பனே! வல்லமைபடைத்த பாவியே! மரியாதையற்றவனேப்போல இவ்வாறுனதொழில் செய்வ தில் உனக்குக் கொஞ்சமேனும் வெறுப்புத்தா னில்லையா! நீ கருணையற்றவன். சீதாதேவியோ, தனது கிருகத்தை யிழந்து, நாட்டையிழந்து, கணவராகிய ஸ்ரீராமரையும் விட் டுப் பிரிந்திருக்கின்றாள். அப்பெண்மணி, உனக்கு என்ன குற்றம் செய்தாள்? நீ, இவளைக் கொல்லக் கருதுகின்றாயே! சீதையைக் கொன்றபிறகு, சிரமப்பட்டும், நீ வெகுகாலம் பிழைத்திருக்கப்போகிறதில்லை. கொலை விதிக்கத் தகுந்த இந்த உனது செய்கையால், உன்பிராணனே எனது கைக் குள்ளிருக்கின்றதுகாண்: உலகத்தாராற் கொல்லத்தக்க வனே! இந்தப் பதினான்கு உலகத்திலும் பெண்களைக் கொன்றவனுக்கு எந்த இழிவான நரகம் விதிக்கப்பட் டிருக்கின்றதோ, உயிரையிழந்த பிறகு, நீ அந்தநரகத் துக்குத் தவறாது செல்வாய்" என்று சொல்லிக்கொண் டே, அனுமான், வெகு கோபத்துடன், ஆயுதங்களை யேந் திய வானரர்கள் தன்னைத் தொடர்ந்துவர, இந்திரஜித்தை நோக்கி யோடினான்.

அவ்வாறு ஓடிவந்த வெகுவல்லமை தங்கிய வானர சேனையை, கடிவேகமுள்ள அரக்கர்களின் சேனை தடுத் தது. அப்போது, அவ்விந்திரஜித்து, அம்புகளை ஆயிரக் கணக்காக எய்து, அவ்வானரசேனையைக் கலக்கி, வானர வீரர்களுக்குள் உத்தமனான அனுமானை நோக்கி மறுமொழி சொல்லலானான்:—

இந்திரஜித்து அனுமானைநோக் கிக் கூறிய மறு மொழி.

"சுக்கிரீவனும் நீயும் இராமனும் எவள் காரணத்தால் இவ்விடம் வந்தீர்களோ, அச்சீதையை, உன் கண்முன்பாக நான் இதோ வதைக்கின்றேன். இதோ இவளைக்கொன்றபிறகு,

வானரனே ! இராமனையும், இலட்சுமணனையும், வானரஞ்கிய உன்னையும், சுக்கிரீவனையும், மரியாதையற்றவிபீஷணனையும் வதைப்பேன். வானரனே ! பெண்வதை செய்யக்கூடாதென்று நீ சொல்லுகின்றயென்றலும், சத்துருக்களுக்குத் துக்கமுண்டுபண்ணுங் காரியத்தைச் செய்யவேண்டுவது இன்றியமையாததாகும்" என்று இவ்வாறு அனுமானைநோக்கிச் சொல்லிவிட்டு, இந்திரஜித்து, அழுது கொண்டிருந்த மாயாசீதையை, தானுகவே கூரிய முனையையுடைய கத்தியால் வெட்டினன். பூணூல் அணிந்துகொள்ளுமிடமாகக் கத்தியால் வெட்டுண்ட அவ்வழகான எளிய சீதை, மாய்ந்து, பூமியில் விழுந்தாள்.

இந்திரஜித்து மாயாசீதையை மாய்த்தல்.

இந்திரஜித்து, சுயமாகவே அப்பெண்மணியைக் கொன்றபிறகு, அனுமானை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானன்:— "நான் கோபத்தால் இராமனுடைய மனைவியைக் கொன்றுவிட்டேன். இவ்வாறு யான் சீதையைக்கொன்றபடியால், இனி நீங்கள் படுகின்ற சிரமம் வீணே" என்றன். அவ்விதமாக இந்திரஜித்து கத்தியாற் சீதையைக் கொன்றுவிட்டு, இரதத்திலேறி, சந்தோஷத்துடன் பெருங்குரலாற் கர்ச்சிக்கலானன். கர்ச்சித்துக்கொண்டே கோட்டைக்குள் நுழைந்த இந்திரஜித்தினது அட்டகாசத்தை வானரர்கள் தூரத்தில் நின்ற வண்ணமே கேட்டார்கள்.

இந்திரஜித்தின் மகிழ்ச்சி.

கொடிய புத்தியுள்ள அந்த இந்திரஜித்து, அவ்வண்ணம் தானே சீதையைக் கொன்று வெகு சந்தோஷமடைந்தான்; அப்போது அவன் எவ்வளவு சந்தோஷமடைந்திருந்தானே, அவ்வளவு துக்கமடைந்தவர்களாய், வானரர்கள் யாவரும், சரேலென்று ஓடலானார்கள்.

வானரர்கள் துக்கத்துடன்ஓடுதல்.

எண்பத்திரண்டாஞ் சருக்கம்:
நிகும்பிலையில் இந்திரஜித்தினது ஹோமாரம்பம்.

இடிபோலப் பயங்கரமாக இந்திரஜித்து செய்த ஆரவாரத்தை, வானரவீரர்கள், கேட்டு, திசைகளெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு ஓடலானார்கள். பிறகு, துக்கத்தால் வாடிய முகங்களுள்ளவர்களும், வெகு பரிதாபமான நிலைமையி லிருப்பவர்களும், பயந்தவர்களும், சிதறியோடுகின்றவர்களுமான வானரர்களெல்லாரையும் பார்த்து, வாயுவின் குமாரனுகிய அனுமான் இவ்வாறு சொல்லலானான்:—"வானரர்களே! யாது காரணத்தால், முகம்வாடியவர்களாய், போர்செய்வதில் உற்சாகத்தை யிழந்து நீங்கள் ஓடுகின்றீர்கள்? உங்களுடைய போர்வல்லமை எங்குப் போயிற்று? இப்போரில் முன்னே செல்லுகின்ற என்னைப் பின்தொடர்ந்து நீங்கள் வாருங்கள். உயர்குலத்திற் பிறந்த சூரர்கள் புறங்காட்டியோடுவது தகுதியன்றே!" என்றான்.

அஞ்சியோடிய வானரரை அனுமான் தேற்றுதல்.

இவ்விதமாக அனுமான் சொன்னதும், வானரர்கள், வெகுஉத்ஸாஹங்கொண்டவர்களாய்உள்ளங்களித்து, மலையின் சிகரங்களையும் மரங்களையும் தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டார்கள். வானரவீரர்கள், கர்ச்சித்துக்கொண்டு அப்பெரும்போரில் அனுமானைச் சுற்றித் தொடர்ந்துசென்று அரக்கர்களை எதிரிடலானார்கள். அவ்வீரர்களால் எல்லாப்பக்கத்திலுஞ் சூழப்பட்ட அனுமான், கொழுந்துவிட்டெரியுந் தீயைப்போலச் சத்துருசேனையை எரித்து அழிக்கலானான். கற்பாந்தகாலத்தில் தோன்றும் யமன்போன்ற அனுமான், வானரசேனையாற் சூழப்பட்டவனுய், அரக்கரை மிகுதியாக அழிக்கலானான்

அனுமான் தேறுதலடைந்த வானரருடன் சென்று அரக்கரை யழித்தல்.

அப்பெரு வானரவீரன், ஒருபக்கம் கோபத்தாலும் ஒரு பக்கம் துக்கத்தாலும் பற்றப்பட்டவனாய், பெரும் பாறை யொன்றை இந்திரஜித்தினுடைய இரதத்தின்மேல் வீசி யெறிந்தான். அப்பாறை இரதத்தை நோக்கி வரு வதைக் கண்டு, தேர்ப்பாகன், இனிதாகப் பழகிய குதிரை கள் பூண்ட இந்திரஜித்தின் தேரைச் சரேலென்று வெகு தூரம் ஓட்டினன். அதனால், அப்பாறை, அத்தேரிலே யிருந்த இந்திரஜித்தின்மீது படாமல், வீணாக எறியப்பட்ட தாய்ப் பூமியைப் பிளந்துகொண்டு சென்றது. பாறையை அனுமான் வீசியெறிந்தபொழுது, அரக்கசேனை துயர மடைந்தது; அன்றியும், கீழ்விழுந்த அதனால் அரக்கர் பலர் அழிந்தனர். நூற்றுக்கணக்கான வானரவீரர்கள், இந்திரஜித்தை யெதிர்த்தார்கள். மகா வீரர்களான கொடிய பராக்கிரமமுள்ள வானரர்கள், கைகளில் மலை களையும் மரங்களையும் எடுத்துக்கொண்டு, இந்திரஜித்தின் மேல் அவைகளை யெறிந்தார்கள். மரங்களையும் மலைகளை யும் மழைபொழிவதுபோலப் பொழிந்த வானரவீரர்கள், சத்துருக்களை யழித்து, பலவகைக் குரலோடு அட்டகாசம் பண்ணலானார்கள். வெகு பலம் பொருந்திய வானரர் களால், வெகுபயங்கரமான வடிவமமைந்த ராக்ஷஸர்கள், மரங்களால் வலிய மோதப்பட்டவர்களாய் அப்போர்க் களத்திற் புரண்டு கிடந்தார்கள்.

தனது சேனை அவ்வாறு வானரராற் பாழாக்கப்பட் டதைப் பார்த்து, இந்திரஜித்து, அடங்காத கோபங்கொ ண்டவனாய், ஆயுதங்களை யேந்திக்கொண்டு வானரர்களை யெதிர்க்கச் சென்றான். கண் கூடான பராக்கிரமமுள்ள அவன், தனது சேனையின் நடுவில் நின்றுகொண்டு, பல வானரவீரர்களின்மீது பாணங்களைப் பொ முிந்து வதைத்தான். சூலங்களாலும், அச னிகளாலும், பட்டசமென்ற ஆயுதங்களாலும், கத்திகளா

இந்திரஜித்து தனது சேனை யுடன் வந்து பொர, வானரர் களுடன் கூடி அனுமான் முறியடித்தல்.

லும், சம்மட்டிகளாலும், முத்கரங்களாலும், இந்திரஜித்தைச் சேர்ந்த அரக்கவீரர்கள், தமது முழுவலிமையுடன், வானரவீரர்களை ஹிம்ஸித்தார்கள். கொடிய செயல்கள் புரிந்த அவ்வரக்கர்களை, மஹாபலம்பொருந்தியஅனுமான், நன்முகப் பருத்திருந்த ஆச்சாமரங்களாலும் மலைகளாலும் மிகுதியாக அழித்தான்.

இவ்வாறு பகைவனது சேனையை முறியடித்துவிட்டு, அனுமான், வானரர்களை நோக்கிப் பின்வருமாறு சொல்லலுற்முன்:—"இனித் திரும்புங்கள். இந்த ராக்ஷஸசேனையை வெற்றிகொள்வதால் நமக்கு ஒருவித லாபமு மில்லை. எந்தப் பெண்மணியின் பொருட்டு நாம் நமது உயிரின்மேலும் ஆசையொழிந்து, ஸ்ரீராமருக்கு எவ்வித மாகவாவது விருப்பமானதைச் செய்ய வேண்டுமென்று போர்செய்கின்முமோ, பெண்மணியாகிய அச்சீதாதேவி தன்னுயிரை யிழந்து விட்டாள். இச்செய்தியை நாம் ஸ்ரீராமரிடமும் சுக்கிரீவரிடமும் சொல்வோம். அதன்பிறகு, அவர்கள், எவ்விதமாகக் கட்டளையிடுகின்முர்களோ, அவ்விதமாக நடப்போம்" என்முன். இவ்வாறு வானரவீரனை அனுமான் சொல்லி, அவ்வானரவீரர்களையெல்லாம் திருப்பிக் கொஞ்சமேனும் மனங்கலங்காமல் மெல்லமெல்லத் தன் சேனையுடன் திரும்பினன்.

அனுமான் மாயாசீதையின் வதையால் சேனையுடன் இராமருள்ள இடம் நோக்கித் திரும்பிவிடுதல்.

துஷ்டாத்மாவாகிய இந்திரஜித்து, இராமரிருக்குமிடத்தை நாடி அனுமான் சென்றதைப் பார்த்து, தனக்கு வெற்றியைத் தரவல்ல ஓமத்தைச் செய்து முடிக்க எண்ணங்கொண்டவனாய், சைத்தியத்தோட்டத்திலிருந்த நிகும்பிலை யென்ற ஆலயத்துக்குச் சென்முன். நிகும்பிலையைச் சேர்ந்ததும், அவ்விந்திரஜித்து, அக்கினியை வளர்த்து ஓமம்பண்ணலானான். யாகசாலையில் முறைப்

இந்திரஜித்து நிகும்பிலையிற் செய்தஹோமம்.

படி ஓமஞ்செய்யப்பட்ட தீயும், மாமிசங்களையும் இரத்தத் தையும் உண்டு, அப்போது அதிகமாக ஓங்கி யெரியலாயிற் று. அந்த யாகத்தில் இரத்தஹோமத்தால் திருப்தியடை ந்து கொழுந்துவிட்டு விளங்கிய கடுந் தீயானது, சாயங்கால சூரியன்போல அதிக காந்தியுடன் சோபித்தது. அப்பொ ழுது, செய்யவேண்டிய முறைமையை யுணர்ந்த அவ்விந்திர ஜித்து, அரக்கர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டுச் சாஸ் திரப் பிரகாரம் ஹவ்யத்தை ஹோமம் பண்ணினன். அதுகண்டு, 'இது சாஸ்த்ரீயம், இது அசாஸ்த்ரீயம்' என் பதை யுணர்ந்த அரக்கர்கள், பெருங்கூட்டமாக இருந் தார்கள்.

எண்பத்துமூன்றுஞ் சருக்கம் :
மாயாசீதையின்வதையைக் கேட்டு மூர்ச்சித்த இராமரை இலட்சுமணர் சாந்தப்படுத்துதல்.

ஸ்ரீராமர், அரக்கர்களும் வானரர்களும் மிகுதியாகப் போர்செய்வதனு லுண்டான பேரொலியைக் கேட்டு, ஜாம் பவானை நோக்கி இவ்வாறு சொல்லலா னர்:— "சாந்தகுணமுடையவனே! அனு மான் ஒருவராலும் செய்யமுடியாதபெருங் காரியத்தைச்செய்கின்றதுபோலக் காண் கின்றது; ஆயுதங்களின் சத்தம், வெகு பயங்கரமாகவும் மிகுதியாகவும் கேட்கப்படுகின்றதன்றே! ஆகையால், ருக்ஷவேந்தனே! நீர் சேனையை யிட்டுக் கொண்டு வெகுவேகமாகச் சென்று, அவ்வானரவீரர் கள் சண்டைசெய்கையில் அவர்கட்கு உதவி செய்க" என்றார்.

இராமர் அனுமானுக்கு உதவிசெய்ய ஜாம்பவானை ஏவுதல்.

அவ்விதமாகக் கட்டளையிடப்பட்டதும், ஜாம்பவான், தனது சேனை புடைசூழ, அனுமானிருந்த மேலைக் கோட்டைவாயிலை நோக்கி நடக்கலானான். அப்பொழுது, ஜாம்பவான், வழியிலே, மிகவும் யுத்தம்பண்ணிப் பெருமூச்செறியும் வானரவீரர்கள் புடைசூழ்ந்துள்ள அனுமானைப் பார்த்தான். அனுமானும், நீல மேகம்போல விளங்கிக்கொண்டு போர்செய்யும் முயற்சியுடன்வந்த கொடிய ருக்ஷசேனையைத் தடித்து, தானும் திரும்பினன்.

அனுமான், இடைவழியில் சேனையுடன் ஜாம்பவானைத் திருப்புதல்.

பெரும்புகழ்படைத்த அனுமான், வானர சேனையுடன், விரைவாக ஸ்ரீராமரிடம்வந்து வெகு துக்கத்துடன் பின்வருமாறுசொல்லத்தொடங்கினன்:—

அனுமான் தான்வந்த காரணத்தை இராமருக்குத் தெரிவித்தல்.

"இராவண குமாரனாகிய கொடிய இந்திரஜித்து, போர்புரிந்துகொண்டிருந்த எங்கள் கண் முன்பாகவே, சீதாதேவியை அழுதுகொண்டிருக்கையிலேயே கொன்றிட்டான். சத்துருக்களை யடக்கும் வல்லமை பொருந்தியவரே! அதைக் கண்டதும், நான் மனங்குழம்பித் துயரத்தில் மூழ்கியுள்ளேன்; ஆகையால், தங்களிடம் இச்செய்தியைச் சொல்ல ஓடிவந்தேன்" என்றான்.

அவ்வனுமான் சொன்னதைக் கேட்டதும், இராமர், சோகம் மேலிட்டவராய் மூர்ச்சையடைந்து, அப்போது வேரிலே வெட்டுண்ட மரம் போலப் பூமியில் விழுந்தார். தேவருக்கொப்பான ஸ்ரீராமர் பூமியில் விழுந்ததைப் பார்த்து, நாற்புறத்தினின்றும் வானரசேனாபதிகள் வெகுவேகமாக ஓடிவந்தார்கள். திடீரென்று தோன்றி நெருங்கமுடியாமற் கொழுந்துவிட்டெரியுந் தீயை யவிக்க முயல்வதுபோல, தாமரைமலர் நீலோத்பலம் இவற்றினுடைய நறுமணம்

இராமர் மூர்ச்சையடைதல்.

வானரர்கள் செய்த சைத்யோபசாரம்.

நிரம்பிய ஜலத்தை இராமபிரானது மூர்ச்சையைத் தெளி விக்குமாறு அவர்மீது தெளித்தார்கள்.

பிறகு, மிகவுந்துயரமடைந்த இலட்சுமணர், அவ்விரா மரைத் தமது கைகளால் தழுவிக்கொண்டு, அஸ்வஸ்தரா யிருந்த ஸ்ரீராமரை நோக்கி, காரணத்துடனும் அர்த்தத் துடனுங் கூடிய வார்த்தைகளைப் பின்வருமாறு சொல்ல லானார்:— "பெரியவரே! பித்ருவசநபரி பாலநமாகிற நல்வழியில் நடந்து, ஐம்புல வாசையைஅடக்கியுள்ள தங்களை, பயனற்ற தருமமானது, அநர்த்தத்தினின்றும் பாது காக்க வல்லமையற்றதே. ஸ்தாவர ஜங்கமங்களான பொ ருள்கள் கண்ணுக்குப்புலனாவதுபோலத் தருமமென்பது கண்ணுக்குக்காணுத பொருளாயிருத்தலால், அது இல்லை யென்றே எனக்குத் தோன்றுகின்றது. தர்மமென்று ஒரு பதார்த்த மிருக்குமாயின், அது ஸ்தாவரமாகவாவது ஜங் கமமாகவாவது கண்ணுக்குப் புலனாகவேண்டியிருக்க, இந் தத்தர்மம் அவ்வாறு பிரதியட்சமாக வில்லையே: மேலும், தர்மமென்று ஒன்று உண்டாயின், தங்களைப்போன்றவர் கள், இவ்விதமாகத் துக்கமனுபவிக்கவே மாட்டார்கள். அன்றியும், அதர்மமென்பது நிச்சயமாக இருக்கும்பட்சத் தில், இராவணன் பெருந்துன்பத்தை யடைந்திருக்கவேண் டும்; அவ்வாறே, தர்மமென்பது நிச்சயமாக இருக்கும் பட்சத்தில், தர்மத்தையே மேற்கொண்டுள்ள தாங்களும் இவ்விதமாக வியசனமடைந்திருக்கமாட்டீர்கள். அதார் மிகனான இராவணன் துக்கப்படாமையையும், தர்மிஷ்ட ரான தாங்கள் துக்கப்படுவதையும் சீர்தூக்கிப்பார்த்தால், தர்மம் அதர்மமாகவும், அதர்மம் தர்மமாகவும் காணப்படு கின்றன. இவ்வாறு இவை ஒன்றோடொன்று மாறுக இருக்கின்றன. தர்மத்தினால் அதன் பயனாகிய நன்மை யும், அதர்மத்தினால் அதன்பயனாகிய தீமையும் விளையு மென்று தாங்கள் எண்ணுவீர்களேயானால், அது சரி

இலட்சுமணர் இராமரைத் தேற்றுதல்.

யன்று; எவரிடத்தில் அதர்மம் குடிகொண்டிருக்கின்றதோ அவர் துக்கத்தையும், எவரிடத்தில் தர்மம் குடிகொண்டிருக்கின்றதோ அவர் இன்பத்தையும் அடைந்தாரேயானால், அப்போது தர்மத்தில் நடப்பவர்கட்குத் தருமத்தின் பயனாக இன்பமுண்டாகு மென்றும், அதர்மத்தில் நடப்பவர்கட்கு அதர்மத்தின் பயனாகத் துன்பமுண்டாகு மென்றும் உறுதியாக ஏற்படும். இப்போது, அதர்மத்தை மேற்கொண்டிருப்பவர்க்கு நன்மைபெருகுவதையும், தர்ம வழியிலேயே ஒழுகுபவர்க்குத் துயரம் பெருகுவதையும் காண்கின்றபடியால், தர்மத்தினால் நன்மையும், அதர்மத்தினால் தீமையும் விளையுமென்று கூறுகின்ற சொற்கள் பொருளற்றனவே. இராகவரே! பாவச்செயல் புரிகின்றவர்கள் அதர்மத்தாற் கொல்லப்படுகின்றார்களென்போமானால், தர்மமும் அதர்மமும் தொழில்வடிவமாக இருத்தலாலும், தொழில்கள் யாவும் க்ஷணிகமென்பது கொள்கையாதலாலும், செய்தக்ஷணத்திலேயே நசிப்பனவான அந்தத் தர்மமும் அதர்மமும், எவ்வாறு பயனளிக்க வல்லனவாகும்? இனி, தர்மத்தினாலும், அதர்மத்தினாலும், விதியென்பது ஒன்று தோன்றி அது பயனளிக்கின்றதென்போமானால், அப்போது, தருமாதருமங்களின் பயனை நடத்துவிப்பதான விதியைத்தான் நன்மைதீமைகள் சேர்ந்தனவாகும். சத்துருக்களை யழியச்செய்பவரே! அனுமானத்தினாலேனும், பிரதியக்ஷத்தினாலேனும் காணப்படாததாய் இல்லை யென்றே சொல்லக்கூடியதான அபூர்வமென்று பெயர்பெற்ற தர்மத்தினால் ஒருவன் பேறுபெறுகின்றா னென்று சொல்வதுதான் எவ்வாறு சாத்தியமாகும்? ஸத்துக்களுட் சிறந்தவரே! தர்மமென்பது ஒன்று நிச்சயமாக இருந்தால், தங்களுக்குத் துக்கம் ஒன்றும் வந்தேயிருக்கக்கூடாது. எப்பொழுது இவ்விதமான துக்கம் தங்களை அணுகிற்றோ, அப்பொழுது தர்மமென்பது ஒன்று உண்டென்பது பொருத்தமாகமாட்டாது. இனி,

வலியற்றதும் தானுகவே ஒருகாரியத்தை நிறைவேற்று விக்கும் திறமையில்லாததுமான தர்மமென்பது, தான் பயனை விளைவிக்கின்றபோது, தகுதியான வலிமையை யெதிர்பார்க்கின்ற தென்றுல், வலிமையற்றதும் தானுகவே பயனை விளைக்கும் திறமில்லாததுமான அந்தத் தரு மத்தை அநுஷ்டிக்கவேண்டுவதில்லையென்பது, எனது எண்ணம். காரியத்தைச் சாதிக்கின்ற விஷயத்தில், தருமமானது வலிமைக்கு உட்பட்டு நின்று பயனை விளைவிக்கின்றதென்றுல், தருமத்தைப் பிரதானமாகக் கொள்ளாமல் தருமத்திலிருந்ததுபோலப் பலத்துக்குப் பிராதானியங்கொடுத்து நடவுங்கள். பகைவரைத் தவிக் கச் செய்பவரே! மெய்ம்மையென்பது ஒரு தர்மமானுல், தங்களுக்குப் பட்டாபிஷேகம் செய்விப்பதாக முதலிற் சொல்லி, பிறகு அதைப் பொய்யாக்கித் தயையின்றித் தங்களைக் காட்டுக்கு அனுப்பிய தந்தையை, ஏன் தாங்கள் தண்டித்திருக்கக்கூடாது? எப்பொழுதும் ஒரு க்ஷத்ரியன் தர்மத்தைத்தான் செய்யவேண்டு மென்பது கோட்பாடானுல், இந்திரன்விசுவரூபனென்னும்முனிவனை க்கொன்று யாகம்பண்ணியிருப்பானு? முனிவனைக் கொல் லாமலே யாகஞ்செய்திருப்பானன்றே! அன்றி, ஒரு க்ஷத் ரியன் அதர்மத்தையே செய்யவேண்டுமென்பது கோட் பாடானுல், முனிவனைக் கொன்று யாகஞ்செய்திருக்கமாட் டான்; முனிவனது கொலையைமாத்திரஞ்செய்திருப்பான். க்ஷத்ரியனை தேவேந்திரன் முனிவனது கொலையையும் யாகத்தையும் செய்ததனுல், மனிதனை க்ஷத்ரியனும் காலத்துக்குத்தக்கபடி தருமம் அதருமம் என்னும் இரண் டையும் மேற்கொள்ளவேண்டியது இன்றியமையாததே யாம். இராகவரே! தர்மமும் அதர்மமும் தனியே ஒரு நியமமாக மேற்கொள்ளப்படுமாயின், அவை செய்பவனை நாசஞ்செய்யும். ஆகவே, தர்மத்தையும் அதர்மத்தை யும் ஒரு நியதியாகக் கொள்ளாமல், அந்தந்தக் காலத்

துக்குத் தக்கபடி மனிதன் செய்யவேண்டும். அருள்செய்யத்தக்கவரே! இவ்வாறு செய்வதுதான் முறைமையாகுமென்பது, எனது கொள்கை. தர்மத்திற்கு முதற்காரணமாகிய பொருளை, இராச்சியத்தை உபேக்ஷித்துவிட்டதாங்கள், முன்னமே வெட்டியெறிந்தீர்கள். மலைகளிலிருந்து ஆறுகள் பெருகுவனபோல, யாகம் தானம் முதலிய நற்காரியங்களெல்லாம், பல விடங்களிலிருந்து வந்து குவிந்து வளரும் பொருளால்தான் கைகூடும். பொருளில்லாமல் ஒளிகுறைந்த புருஷனுடைய காரியங்களெல்லாம், கோடைக்காலத்திலே அற்பநதிகள்போல வறண்டுவிடும். முதலிற் சுகமாகவிருந்து தனக்குக் கிட்டிய பொருளைக் கைவிட்ட புருஷன், பிறகு சுகத்திலுள்ள விருப்பத்தினல் தீயவழியினலும் பொருளைத் தேடுகின்றன்; அவ்வழியால் அவனுக்குப் பெருங்குற்றம் உண்டாய்விடுகின்றது. எவனுக்குப் பொருளிருக்கின்றதோ, அவனுக்குத்தான் நண்பர்கள்; எவனுக்குப் பொருளிருக்கின்றதோ, அவனுக்குத்தான் பந்துக்கள்; எவன் பணக்காரனே, அவன்தான் இவ்வுலகத்தில் மனிதனுவான்; எவன் கையில் திரவியமிருக்கின்றதோ, அவன்தான் பண்டிதன்; எவன் பணக்காரனே, அவன்தான் வல்லமையுள்ளவன்; எவன் பொருளுள்ளவனே, அவன்தான் மகாபுத்திமான்; எவனிடம் தனமிருக்கின்றதோ, அவன்தான் பாக்கியவான்; எவன் பணக்காரனே, அவன்தான் பெருங்குணவான்; திரவியத்தைக் கைவிடும்பட்சத்தில், நான் முன்பு சொன்னவற்றிற்கு மாறுன நண்பினரில்லாமை முதலிய பெருங்குறைகள் தோன்றும். வீரரே! எந்தக் குணத்தைக் கண்டு, கிட்டிய இராச்சியத்தைத் தாங்கள் கைவிட்டீர்களோ, அது எனக்கு விளங்கவில்லை. எவனிடம் திரவியமிருக்கின்றதோ, அவனுக்குத்தான் தர்மமும், காமமும் அனுகூலமாகும். திரவியமில்லாதவன் அதனைத் தேடுவதிலேயே தனது காலத்தைக் கழிக்கவேண்டியவ

னுகையால், அவன், வேறொருவகைப் பிரயோசனத்தை யும் தேடிக்கொள்ள முடியாதவனுகின்றான். வேந்தரே! சந்தோஷம், சுகம், செருக்கு, தருமம், கோபம், ரமம், தமம் இவைகளெல்லாம் பொருளுடைமையிலிருந்துதான் உண்டாகின்றன. எதிரிலிருக்கும் செல்வத்தை உபேட்சித் தவர்கட்கு இவ்வுலகவின்பமே கிட்டாது. மேகம்மூடிய நாள்களில் சூரியன் முதலிய கிரகங்கள் காணப்படாமற் போவதுபோல், சுகத்திற்குக் காரணமான அப்பொருள் கள் தங்களிடத்திற் காணுமற்போய்விட்டன. காட்டுக்கு ஓட்டப்பட்ட தாங்கள், பிதிருவாக்கிய பரிபாலனமாகிய தர்மத்தைப் பரிபாலனஞ் செய்துவருகையில், தங்களு டைய உயிரினும் மேலான மனைவியை அரக்கன் தூக்கிக் கொண்டுபோனுன். இந்தத்துக்கம் போதாதென்று இந்திர ஜித்து இதற்கும் மேலான துக்கத்தை இன்றைக்கு உண் டாக்கிவைத்தான்; அந்தத்துக்கத்தை நான் இன்று எனது காரியத்தால் அகற்றுகின்றேன். ஆகையால், இராகவரே! எழுந்திருங்கள். புருஷசிங்கமே! புஜபல பராக்கிரமமுள்ளவரே! உறுதியான நோன்பு புரிகின்ற வரே! தங்களை மகாத்துமாவென்றும், பரமாத்துமாவென் றும் ஏன் தாங்கள் அறிந்துகொள்ளவில்லை? குற்றமற்ற வரே! தங்களுக்கு நன்மையை விளைக்கவேண்டுமென்றே ஜநமெடுத்துத் தங்களை யடுத்திருக்கும் நான், சீதாதேவி வதைக்கப்பட்டதைப் பார்த்துக் கோபங்கொண்டேனுகை யால், யானைகள் தேர்கள் அரக்கவீரர்கள் என்ற இவர் களுடன் கூடிய இவ்விலங்கையையே எனது பாணத்தி னல் அழித்துவிடுகின்றேன்; தேற்றிக்கொள்ளுங்கள்" என்றுர்.

எண்பத்துநான்காஞ் சருக்கம்:
விபீஷணர், இராமரை உண்மையறிவித்துத் தேற்றி, இந்திரஜித்தை வதைக்கும் உபாயங் கூறுதல்.

விபீஷணர் இராமரிடம்வந்து அங்குளனாரது நிலைமையைக் காணுதல்.

தமையன்மேல் அதிக விசுவாசம் வைத்திருந்த இலட்சுமணர் ஸ்ரீராமரைத் தேற்றிக்கொண்டிருந்தபொழுது, விபீஷணர், எல்லாச் சேனைகளையும் அவ்வவற்றிற்கு உரிய இடங்களில் நிறுத்திவிட்டு, யானையரசு யானைகளாற்சூழப்பட்டுவருவதுபோல, பலவகைப் போர்களிலும் வல்லவர்களும் நீலமலைக்கு ஒப்பான உருவம் பொருந்தியவர்களுமான நான்கு மந்திரிமார்கள் புடைசூழ அவ்விடம் வந்துசேர்ந்தார். அவர் வந்ததும், மகாத்மாவான இராமர் சோகத்தாற் பரிதவித்துக்கொண்டிருப்பதையும், வானரர்கள் கண்களில் நீர்ததும்பத் துயரப்பட்டுக்கொண்டிருப்பதையும் கண்டார். இக்ஷ்வாகுவம்சத்தைப்பெருமைப்படுத்துமாறு திருவவதரித்த மகாத்மாவான ஸ்ரீராமர் இலட்சுமணருடைய மடியில் மூர்ச்சையாகப் படுத்திருந்ததை அவ்வரக்கர் பார்த்தார்.

விபீஷணர் வினவ, இலக்குமணர் சோககாரணத்தைத் தெரிவித்தல்.

ஸ்ரீராமர் சோகத்தினால் வருந்தி முகம் வாடினவராயிருந்ததை, அந்த விபீஷணர், பார்த்ததும், தமது மனத்துக்குள்ளே தாமும் துக்கித்து, மிக்க எளிமையுடன் "இதற்கு என்ன காரணம்?" என்று வினவினர். அப்பொழுது, இலட்சுமணர், தமது கண்களிலே நீர்ததும்ப, சுக்கிரீவன் முதலான வானரசேனாபதிகளின் முகங்களைப் பார்த்து, விபீஷணரை நோக்கி, வெகுதுக்கத்துடனே, "சாந்தகுணமுடையவரே! இந்திரஜித்து சீதையைக் கொன்றானென்று அனுமான் ஸ்ரீராமரிடம் சொல்ல, அதைக்கேட்டதும் அவர் மோகமடைந்தார்" என்றார்.

அவ்வாறு இலட்சுமணர் சொல்லிக்கொண்டிருக்கையில், அவரை, விபீஷணர், தடுத்து, "வேந்தரே! அனுமான் சொன்ன சமாசாரம் சமுத்திரம்வற்றிற்றென்பது எவ்வாறு அசம்பாவிதமோ, அதுபோலவே இதுவும் அசம்பாவிதமான காரியமென்று நான் எண்ணுகின்றேன். மகாபாகுவே! சீதையினிடம்கொடிய இராவணன் கொண்டிருக்கும் கருத்து, எனக்கு நன்முகத் தெரியும்; அப்பெண்மணியை அவன் ஒருபொழுதும் கொல்லமாட்டான். அவனது நன்மையை நாடிய நான், பலமுறை 'சீதையை விட்டிடுங்கள்' என்று இரந்து கேட்டும், அவன் அதை ஒருபொழுதும் ஒத்துக்கொள்ளவேயில்லை. சாமத்தினுலேனும் தானத்தினுலேனும் பேதத்தினுலேனும் சீதையைக் காணுதற்கும் முடியாதே; அப்படி யிருக்க, யுத்தோபாயத்தினுற் சீதையைக்காணுதல் அவனுக்குக்கூடுமோ? அன்றி, வேறு மாயோபாயத்தினுல்தான், அப்பெண்மணியைக் காணமுடியுமோ? அவ்வரக்கன், எல்லாவானரர்களையும் மாயையால் வஞ்சித்து, இப்போது நிகும்பிலையென்னுங் கோயிலுக்குச் சென்றிருக்கின்றன். அங்குத்தான் அவன் ஓமம்பண்ணுவான். அவன் ஓமத்தைச் சரிவரமுடித்து மட்டும் போர்க்களம் புகுவானேயானுல், தேவர்கள் யாவருடனுங் கூடிய இந்திரபகவானுலும் அவனைப் போரில் வெல்லமுடியாது. வானரர்கள் தனக்கு இடையூறு செய்யாமலிருத்தற்காகவே, அவ்வானரர்கட்கு மோஹத்தையுண்டாக்கிய அவ்விந்திரஜித்து இவ்வண்ணம் மாயை செய்திருக்கின்றன். ஆகையால், அவன் அவ்வோமத்தை முடிக்குமுன்னமே நாம் சேனைகளுடன் அவ்விடஞ்செல்ல வேண்டும். மானிடப்புலியே! வீணன இந்தத் துயரத்தை விட்டிடுங்கள். தாங்கள் சோகத்தில் மூழ்கியிருப்பதைப் பார்த்து, எல்லாச்சேனைகளும் குழம்பிக்கிடக்கின்றன. தாங்கள், இவ்விடத்திலேயே மனக்குழப்பம் சிறிதுமின்றி

விபீஷணர் உண்மையை ஊகையினுல்தெரிவித்தல்.

இயல்பான தன்மையுடன் சுகமாக இருங்கள்; இலட்சுமணரைமாத்திரம் சேனபதிகளுடன் என்னிடம் அனுப்புங்கள்; இவர், தமது கூரான அம்புகளால், அவன் செய்கின்ற ஓமத்தை அழிப்பார். ஓமம் அழிந்தமாத்திரத்தில் இந்திரஜித்து எளிதில் வதைக்கத்தக்கவனுவான். இலட்சுமணரது கூரானகொடிய இந்தப் பாணங்கள், இறகுகட்டியிருப்பதனல் வெகு வேகமாகப் பறவைகள்போலப் பறந்துசென்று இந்திரஜித்தின் இரத்தத்தைக் குடித்துவிடும். இந்திரபகவான் வச்சிராயுதத்தை ஏவுவதுபோல, இந்திரஜித்தினுடைய நாசத்தின் பொருட்டு, தாங்கள் உத்தமகுணங்கள்யாவும் நிறைந்த இலட்சுமணரை ஏவியனுப்பவேண்டும். வேந்தரே! சத்துருக்களை வதைப்பதில் காலதாமதஞ்செய்ய இதுவன்று சமயம்; ஆகையால், மஹேந்திரன் அசுரர்களைக் கொல்லக் கட்டளையிடுவதுபோல, இப்பொழுது தாங்கள் சத்துருக்களை வதைக்கக் கட்டளை கொடுக்கவேண்டும். அவ்வரக்கவீரன் தனது யாகத்தை முடித்துவிடுவானேயானல், அவன், போர்க்களத்தில் தேவாசுரர்களின் கண்களுக்குந் தெரியவேமாட்டான். மேலும், தனது ஓமத்தை முடித்துவிட்டபிறகு, அவன் போரிடத் தொடங்கினல், பிறகு, தேவர்களுக்கும் தமது உயிரைப்பற்றியும் பெருஞ் சந்தேகமே" என்றார்.

விபீஷணர் இந்திரஜித்தைக் கொல்லும் உபாயத்தைக் காணுதல்.

எண்பத்தைந்தாஞ் சருக்கம்:
இந்திரஜித்தைவதைக்க லக்ஷ்மணர் புறப்படுதல்.

துக்கத்தாற் பரிதவித்துக்கொண்டிருந்த ஸ்ரீராமர், விபீஷணர் சொன்னதைக் கேட்டும், அவ்வரக்கவீரர் இன்னது சொன்னரென்பதைத் தெரிந்துகொள்ளாமலேயிரு

ந்து, அதன்பிறகு, சத்துருக்களை வெல்லுந்தன்மையுள்ள அவர், தம்மைக் கொஞ்சம் தைரியப்படுத்திக்கொண்டு, வானரர்கள் முன்னிலையில் சமீபத்திலிருந்த விபீஷணரை நோக்கி, "ராக்ஷஸராஜராகிய விபீஷணரே! தாங்கள் சொன்னதை மறுபடியும் நான் கேட்க விரும்புகின்றேன்; தாங்கள்சொல்லவிரும்பியதைமீண்டுஞ் சொல்லுக" என்றார்.

இராமர் முன் சொன்னதை மீண்டும்சொல்லு மாறுவிபீஷணரை வினவுதல்.

அவ்விதமாக இராமர் சொன்னதைக் கேட்டு, பேசுவதில் வல்லவரான விபீஷணரும், முன்சொன்னதை மீண்டும் பின்வருமாறு சொல்லலானார்:— "மகாபாகுவே! வீரரே! தாங்கள் கட்டளையிட்டபடியே நான் எல்லாச்சேனைகளையும் அவ்வவற்றை நிறுத்தவேண்டிய விடங்களில் நிறுத்திவைத்தேன். அச்சேனைகளெல்லாவற்றையும் நாற்புறத்திலும் பிரித்துவைத்துள்ளேன். அச்சேனைகளுக்கு ஏற்பச் சேனாபதிகளும் முறைப்படி அங்கங்கே நிறுத்தப்பட்டிருக்கின்றனர். புகழ்பெற்றவரே! இன்னும் நான் விண்ணப்பஞ்செய்துகொள்வது என்னவென்றால், தாங்கள் இவ்வண்ணம் காரணமின்றித் துயரப்படுகின்றபடியால், நாங்களும் அவ்வாறே துயரப்படும்படியாகின்றது. வேந்தரே! வீணுய்த்தங்களைவாட்டும்இந்தத்துக்கத்தை அகற்றுங்கள். மாற்றாரது சந்தோஷத்தை வளரச்செய்யும் இந்தத்துக்கத்தை அடியோடு விட்டிடுங்கள்; வீரரே! சத்துருக்களைநாசம்பண்ணவேண்டிய முயற்சிகளைக் கைப்பற்றுங்கள்; மனத்தில் உற்சாகங்கொள்ளுங்கள். சீதையைமறுபடிஅடையவேண்டுமென்றும், அரக்கர்களை வதைக்கவேண்டுமென்றும் தங்களுக்கு எண்ணமிருக்கும்பட்சத்தில், இரகுநந்தனரே! நான் சொல்லும் நன்மையான சொல்லைக் கேளுங்கள். நிகும்பிலையைச்சேர்ந்து அங்குப் போரில் இந்திரஜித்தை வதைக்குமாறு இலட்சுமணர் பெருஞ்சேனையுடன்

விபீஷணரது விடை.

உடனே புறப்படவேண்டும். மண்டலாகாரமான வில்லினுற் செலுத்தப்பட்டுப் பாம்புகள்போலச் சீறிக் கிளம்புஞ் சிறந்த பாணங்களால், வில்வீரராய்ப் போரில் வெல்பவரான இலட்சுமணர், இந்திரஜித்தைக் கொல்லவேண்டும். வீரனுன இந்திரஜித்தோ கொடுந்தவங்கள் புரிந்து வரம் பெற்றுப் பிரமதேவரிடமிருந்து பிரமசிரமென்ற அஸ்திரத்தையும் கருதியபடிசெல்லும் புரவிகளுடன்கூடிய இரதத்தையும் பெற்றுள்ளான். அவன் இப்பொழுது சேனையுடன் நிகும்பிலைக்குச் சென்றிருக்கின்றான்; அவன் அவ்விடத்தில் தனது ஹோமகாரியத்தை முடித்து விட்டுத் திரும்புவானேயானுல் நாம் எல்லோரும் மாய்ந்தோமென்றே எண்ணுங்கள்; மஹாபாகுவே! 'ஆனுல், எவனுயினும் ஒருபகைவன், நீ ஹோமத்தை முடித்துவிட்டு நிகும்பிலை யென்னும் ஆலமரத்தடியைச் சேர்வதற்கு முன்னமே படைக்கலமேந்திய உன்னைக் கொல்ல முயல்வானேயானுல், அவன்தான் இந்திரசத்துருவாகிய உன்னைக் கொல்லத்தக்கவன்' என்று பிரமதேவர் முன்னெருகாலத்தில் அவனைநோக்கி வாக்களித்திருக்கின்றார். வேந்தரே! ஆகவே, இந்திரஜித்தின் ஹோமத்திற்கு இடையூறு செய்பவனே அவனைக்கொல்பவனுவன்; ஆகையால், மஹாபலசாலியே! இராமரே! அவ்விந்திரஜித்தினுடைய வதத்தின்பொருட்டு லக்ஷ்மணரை ஏவுங்கள். இந்திரஜித்து மடிந்தால், இராவணன் நண்பர்களுடனும் மடிந்தானென்று நிச்சயமாக நம்புங்கள்" என்றார்.

விபீஷணர் சொன்னதைக் கேட்டதும், ஸ்ரீராமர், "உண்மையான பராக்கிரமமுள்ள விபீஷணரே! கொடிய அவ்வரக்கனுடைய மாயை எனக்குத்தெரியும். அவன், பிரமாஸ்திரத்தை அறிந்த புத்திமான்; அதிகமாயையும் மிக்கபலமும் அமைந்தவன். வருணபகவானேடுசேர்ந்து தேவர்கள் யாவரும் அவனுடன் போர்புரிய வந்தபோதி

இராமர் இந்திரஜித்தின் வல்லமையைக் கூறுதல்.

லும், அவர்கள் அவ்வளவுபெயர்களையும் மூர்ச்சை யடை யும்படி செய்யவல்லவன். மிக்கபுகழ்பெற்றவரே! அவ்வரக் கன் இரதமேறி ஆகாயத்திற் சஞ்சரிக்கையில், மேகக்கூட் டத்தில் மறைந்துவிட்ட சூரியனைப்போல, அவ்வரக்கனு டையபோக்கைக் கண்டுபிடிப்பது அசாத்தியம்" என்று சொல்லினர்.

கொடிய துராத்துமாவாகிய இந்திரஜித்தினது மாயை யின் வல்லமையை ஸ்ரீராமர் அறிந்தவராகையால், புகழ் பெற்றுவிளங்கும் இலட்சுமணரை நோக்கி அவர் இவ்வாறு சொல்லலானர்:— "லக்ஷ் மண! வானரராஜருக்கு எவ்வளவு சேனைக ளுண்டோ அவ்வளவையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு, அனுமான்முதலான சேனபதிகளுடனுங் கூடியவனாய், சேனைகளுடன் கூடி வரும் ரிக்ஷராஜனை ஜாம்பவானையும் அழைத்துக்கொ ண்டு சென்று, மாயாபலத்தில் தேர்ந்திருக்கும் இந்திர ஜித்தை வதைசெய்வாய். இந்திரஜித்து இப்பொழுது சென் றிருக்கும் இடத்தை நன்முகத்தெரிந்த மகாத்துமாவாகிய இவ்வரக்கவீரர், மந்திரிமாருடன் உன்னைப் பின்தொடர் ந்து வருவார்" என்றார்.

இலட்சுமணரை இராமர் இந்திர ஜித்தைக் கொல் லப்புறப்படுமாறு ஏவுதல்.

ஸ்ரீராமர் அவ்வண்ணங் கட்டளையிட்டதைக் கேட் டதும், வெகு ஆச்சரியகரமான வல்லமை யமைந்த இலட் சுமணர், விபீஷணரைத் தம்முடன் கூட் டிக்கொண்டு, சிறந்தவில்லைக் கையிலேந்தி, கவசத்தை உடம்பில் தரித்து, கத்தியை யும் எடுத்துக்கொண்டு, பொன்மயமான அம்புகளையும் கைப்பற்றி, ஸ்ரீராமருடைய திருவடிகளைத் தொட்டு நமஸ்காரஞ்செய்து, வெகு சந்தோஷத்துடன் அவரைப்பார்த்துச் சொல்லலானர்:— "அன்னப்பறவை கள் தாமரை யோடைகளில் இறங்குவதுபோல, இன்று எனது வில்லினின்று விடுக்கப்பட்ட பாணங்கள் இந்திர

இலட்சுமணரது யுத்தயாத்ராஸந் நாஹம்.

ஜித்தைக் கொன்று இலங்கையில் விழப்போகின்றன. எனது வில்லினுடைய நாணியினின்று பிரயோகிக்கப் பட்ட அப்பாணங்கள், இன்றைக்கே, கொடியவனுனை அவனது உடலைப் பிளந்துகொண்டு விழும்'' என்று இவ்வாறு ஸ்ரீராமர் முன்பாக, அதிக காந்தியால் விளங்கும் இலட்சுமணர், சொல்லிவிட்டு, இந்திரஜித்தை வதைப்பதற்காக வெகு வேகமாகச் செல்லலானுர். அவர், ஸ்ரீராமருடைய சரணங்களில் நமஸ்காரம் பண்ணி, அவரை வலம்வந்து, இந்திரஜித்து பாதுகாத்து வந்த நிகும்பிலையைச் சேருமாறு யாக சாலையை நோக்கிப் புறப்பட்டார். பிரதாப சாலியாய்ச் சக்கரவர்த்திகுமாரராண இலட்சுமணர், தமையனுரால் ஸ்வஸ்தியயநஞ்செய்யப்பெற்று, விபீஷணருடன்கூட வெகுவேகமாகப் போனுர். பல ஆயிரக்கணக்கான வானரர்கள் நிரம்பிய பெருஞ்சேனையை அழைத்துக்கொண்டு, அனுமானும், மந்திரிமார்களுடன் கூடிய விபீஷணரும், இலட்சுமணரைத் தொடர்ந்தார்கள். விரைந்து செல்லும் பெருவானரசேனையாற் சூழப்பட்டு அவர் போய்க்கொண்டிருந்தபொழுது, ரிக்ஷராஜனுகிய ஜாம்பவான் தனது சேனையுடன் வழியில் அவருடன் சேர்ந்தான். நண்பர்களை மகிழ்விக்குந்தன்மையுள்ள சுமித்திராகுமாரர், வெகுதூரம் வழி நடந்துசென்று, கொஞ்ச தூரத்தில் இராட்சசசேனை போரிடுவதற்காக அணிவகுக்கப்பட்டு நின்றிருந்ததைக் கண்டார். பகைவரை யழிக்க வல்லவரும் இரகுவமிசத்துத் தோன்றியவரும் பிரதாப சாலியுமான இலட்சுமணர், மாயாரூபமான உபாயத்தைக் கைக்கொண்ட அவ்விந்திரஜித்தை யடைந்து, பிரமதேவர் விதித்த வரப்படி வெல்வதற்காக வில்லேந்தியவராய், விபீஷணருடனும், அங்கதன் அனுமான் முதலியோருடனும் நின்றார். பிறகு, அவ்விலட்சுமணர், பலவகையான மாசற்ற படைக்கலங்கள் மின்னவும், கொடிகள் காடுகள்

இலட்சுமணர் இந்திரஜித்தின் வதையைக்கருதிப்புறப்படுதல்.

போல விளங்கவும், மஹாரதர்கள் அடர்ந்து நிறைய வும், இருள்போலப் பயங்கரமாகத்தோன்றி மிக்க விரைவு கொண்டிருந்த அச்சத்துருசேனைக்குட் புகுந்தார்.

எண்பத்தாறுஞ் சருக்கம்:
இந்திரஜித்தின் யுத்தாரம்பம்.

விபீஷணர் இந்திரஜித்து டன்போர்செய்யு மாறு இலட்சுமண ரைத் தூண்டுதல்.

அச்சமயத்தில், விபீஷணரானவர், இலட்சுமண ரைப் பார்த்து, சத்துருக்களுக்கு விநாசத் தையும் தமது கட்சிக்கு நன்மையையும் விளைக்குஞ் சில சொற்களைச் சொல்லலா னார்:— "அதோ மேகம்போற் கறுப்பா கக் காண்கின்றதே, அந்த ராக்ஷஸ சேனை யுடன், கைகளில் மரங்களையேஆயுதங்களாகப் பற்றிவந் திருக்கின்ற வானரர்கள் விரைவாகப் போர்செய்யவே ண்டும். இலட்சுமணரே! பெரிய இவ்விராட்சசசேனையை முறியடிக்க எவ்விதத்தினாலாவது முயற்சிசெய்க; இச் சேனை முறிந்தால், இராவணனுடையகுமாரனாகிய இந்திர ஜித்தும் உங்கள்கண்களுக்குப் புலனாவான். இந்திரஜித்து யாகத்தை முடிக்குமுன்னமே, தாங்கள் இந்திரனுடைய இடிக்கு ஒப்பான பாணங்களைத் தங்கள் சத்துருக்களின் மேற் பிரயோகித்து விரைவாக அவர்களைத் துரத்துங்கள். மகா வீரரே! துராத்துமாவாய், மாயாவியாய், பாவங்கள் செய்கின்றவனாய், கொடுஞ்செயல்கள்புரிகின்றவனாய், எல் லா வுலகங்களுக்கும் பயத்தை யுண்டாக்குகின்றவனான இந்திரஜித்தைக் கொல்லுங்கள்" என்றார்.

விபீஷணர் சொன்னதை இலட்சுமணர் கேட்ட தும், அழகான இலக்கணங்களமைந்த அந்த இலட்சும ணர், ராக்ஷஸராஜனது குமாரன்மீது சரமாரி பொழியத் தொடங்கினர். நகங்களாலும், மரங்களா லும், மலைகளாலும் போர்செய்பவரான ரிக்ஷர்களும், வானரர்களும், ஒன்றுசேர்ந் தவர்களாய்த் தமது சமீபத்திலிருந்த இந் திரஜித்தின்சேனையைநோக்கி ஓடினர்கள். அரக்கர்களும்

வானரர்க்கும் அரக்கர்க்கும் கைகலந்தபோர்.

வானரசேனையைக் கொல்ல விரும்பியவர்களாய், கூரிய பாணங்களையும், கத்திகளையும், சக்திகளையும், தோமரங்களையும் சித்தமாகவைத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது, இலங்கையில் எல்லாப்பக்கங்களிலும் எதிரொலி யுண்டாகுமாறு பேரொலியுடன் அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் வெகு பயங்கரமான யுத்தம் நடக்கலாயிற்று. பலவகை யாயுதங்களினாலும், கூரான பாணங்களினாலும், மரங்களினாலும், மேலோங்கிய பயங்கரமான மலைச்சிகரங்களினாலும் ஆகாயமும் மூடப்பட்டது. அவ்விந்திரஜித்தின் சேனையிலிருந்த அரக்கவீரர்கள், முகங்களையும் கைகளையும் விகாரமாகவைத்துக்கொண்டு, வானரர்களின்மேற் பலவகையாயுதங்களைப் பிரயோகித்து, அவ்வானரர்கட்கு மிக்க அச்சத்தை யுண்டாக்கினார்கள். அப்படியே, வானரவீரர்களும், பலவகை மரங்களாலும் மலைச்சிகரங்களாலும் அரக்கவீரர்களை அப்போரில் துரத்தித் துரத்தி யடித்தார்கள். பெருந்தேகமும் பெரும்பலமும் படைத்தரிக்ஷர்களும் வானரர்களும், அவ்வாறே அரக்கவீரர்களை வதைத்தபொழுது, அரக்கர்களின் மனத்திற் பெரும்பய முண்டாயிற்று.

அரக்கர்களின் அழிவைக்கேட்டு இந்திரஜித்து போர்க்கு எழுதல்.

பகைவர்களால் வெல்லுதற்கு அரிய இந்திரஜித்து, தனது சேனை மிக்க சங்கடத்திலிருப்பதையும், அதனைச் சத்துருக்களழிப்பதையும் கேள்விப்பட்டு, தான் தொடங்கிய ஓமம் முடியு முன்னமே, அவ்வோமத்தை விட்டுப் போர்க்கு எழுந்தான். அவ்விந்திரஜித்து, தான் உட்கார்ந்திருந்த செறிந்த மரக்கூட்டத்தினிடையிலிருந்துவெளிக்கிளம்பி, தனக்காகமுன்னமேகுதிரைகட்டிச் சித்தமாகவிருந்த அழகான இரதத்தின்மேல் ஏறினான். பயங்கரமான வில்லைக் கையிற்பற்றிக் காளமேகம்போல விளங்கிக்கொண்டு கோபத்தாற் சிவந்த முகமும் கண்களு முடையவனான அவ்விந்திரஜித்து, சினங்கொண்

டவனுய், யுகாந்த காலத்தில் உலகத்தை நாசஞ்செய்யும் யமன்போலக் காணப்பட்டான். அவன் இரதமேறி வந்ததைக் கண்டதும், இலட்சுமணருடன் போர்புரியும்படி உற்சாகங்கொண்ட அவனுடைய சேனை, அவனைச் சூழ்ந்து நின்றது.

அனுமானுக்கும் அரக்கர்க்கும் நடந்த போர்.

அச்சமயத்தில், பகைவரை யழிக்கவல்லவனன மலை போல விளங்குகின்ற அனுமான், ஒருவராலும் எடுக்கமுடியாத பெருமரமொன்றைத் தனதுகையில் எடுத்துப் பிரளய காலத் தீப்போல அரக்கர்களை அழித்து, பிறகு, பல மரங்களைக்கொண்டு அவ்வரக்க சேனையைப் பிரஜ்ஞை தப்பியதாகச் செய்தான். வாயுவின் குமாரனன அனுமான், இராட்சசர்களை விரைவாக வதைப்பதைப் பார்த்து, அரக்கப் போர்வீரர்கள் பலர், படைக்கலங்களை அவ்வனுமான்மீது பொழியலானர்கள். கூரான சூலத்தைப்பற்றிவந்தவர்கள் சூலங்களாலும், கையும்கத்தியுமாக வந்தவர்கள் கத்திகளாலும், சக்தியென்ற ஆயுதமேந்திவந்தவர்கள் சக்திகளாலும், பட்டஸம்பிடித்துப் போரிடவந்த அரக்கர்கள் பட்டஸங்களாலும், அழகிய தோற்றமுள்ள உழலைத்தடி கதைகள் சக்கரங்கள் நூற்றுக்கணக்கான நூற்றுவரைக்கொல்லிகள் இருப்புலக்கைகள் பயங்கரமானகோடாலிகள் பிண்டிபாலங்கள் என்ற ஆயுதங்களை யேந்தியவர்கள் அவ்வகையாயுதங்களாலும் போர்செய்தார்கள். சில அரக்கர்கள், வச்சிராயுதத்துக் கொப்பான கைக்குத்துகளாலும், இடிபோல் விழுகின்ற அறைகளாலும், மலைபோலச் சலியாதுநின்ற அனுமானை நான்குபக்கங்களிலுஞ் சூழ்ந்துகொண்டு இம்சித்தார்கள். அனுமானே, மிக்க சினத்தோடு அவர்களை யெல்லாம் பெருங்கொலை புரிந்தான்.

மலைபோல விளங்கிச் சத்துருக்களை யொழிக்கின்ற அவ்வனுமானை இந்திரஜித்து நேரிற்கண்டு, உடனே, தனது சாரதியைப் பார்த்து, "அனுமானுகிய அவ்வானரன் இருக்குமிடத்திற்கு இரதத்தை ஓட்டுக; நாம் இவனை லக்ஷ்யஞ்செய்யாதிருந்தால், இவன் உடனே அரக்கராகிய நமக்கு அழிவைச்செய்வான்" என்றான். இவ்வண்ணம் அவன் சொன்னதும், சாரதி மாருதியிருந்தவிடத்துக்கு, ஒருவராலும் போரில் தகையமுடியாத இந்திரஜித்து ஏறியிருந்த இரதத்தைச் சடிதியில் ஓட்டினான்.

இந்திரஜித்து அனுமானை நெருங்குதல்.

இந்திரஜித்தின் போர்.

நெருங்குதற்கு அரிய வல்லமையுள்ள அவ்விந்திரஜித்து, அனுமானைச்சேர்ந்ததும், பாணங்கள் கத்திகள் பட்டசங்கள் கோடாலிகள் என்னும் இவ்வாயுதங்களை, அனுமானது தலைமீது பொழிந்தான்.

அனுமானது வீரவாதம்.

பயங்கரமான அவ்வாயுதங்களையெல்லாம் அனுமான் தாங்கிக்கொண்டு, வெகுகோபத்துடனே இந்திரஜித்தைப் பார்த்து வெகுஅலட்சியமாகப் பின்வருமாறு சொல்லலானான்:— "கெட்டபுத்தியுள்ள இந்திரஜித்தே! ராவணபுத்ரா! நீ, வீரனானால், என்முன் நின்று யுத்தஞ்செய்; பார்ப்போம். வாயுவின் குமாரனை எதிர்த்தபிறகு, நீ, உயிருடன் திரும்பிச்செல்லமாட்டாய். உனக்குத் துவந்துவயுத்தஞ்செய்யவேண்டுமென்றிருந்தால், ஆயுதங்களை விட்டிட்டு, கைச்சண்டைக்கு வருவாய். அங்கு எனது குத்துக்களை நீ தாங்கிக்கொள்வாயேயானால், அப்போதுதான் நீ அரக்கர்களுக்குள் பலவானுவாய்" என்றான்.

அச்சமயத்தில் அனுமானை வதைக்கும்படி வில்லை யோங்கிக்கொண்டு நின்ற இந்திரஜித்தை, விபீஷணர், இலட்சுமணர்க்குச் சுட்டிக்காட்டி இவ்வாறு சொல்லலானார்: "எவன் முற்காலத்தில் இந்திரனை வெற்றிகொண்டவ

னுகிய இராவணகுமாரனே, அந்த இந்திரஜித்தே தனது இரதத்தி லேறிக்கொண்டு அனுமானை வதைக்க விரும்புகின்றான். இலட்சுமண ரே! ஒப்பற்ற அமைப்பால் விளங்குகின்றவைகளும், சத்துருக்களை நாசஞ்செய்கின்றவைகளும், பிராணனை யொழிக்கின்றவைகளும், பயங்கரமானவைகளுமான பாணங்களால் இவ்விந்திரஜித்தை இப்பொழுதே வதைசெய்க" என்றார். சத்துருக்கள் கண்டு நடுங்கும்படியான தோற்றமுள்ள விபீஷணர் இவ்வாறு சொன்னதும், லக்ஷ்மணர், மலைபோல விளங்கிய அழகான இரதத்தில் உட்கார்ந்துகொண்டு, பயங்கரமான பலமமைந்து கர்ச்சிக்கும் அவ்விந்திரஜித்தைப் பார்த்தார்.

இந்திரஜித்துடன் போர்செய்யுமாறு இலட்சுமணருக்கு விபீஷணர் கூறுதல்.

எண்பத்தேழாஞ் சருக்கம்:
இந்திரஜித்துக்கும் விபீஷணருக்கும் நடந்த சம்வாதம்.

இவ்வாறு வெகுசந்தோஷத்துடன், அவ்விபீஷணர், இலட்சுமணரைப்பார்த்துச் சொல்லி, வில்லும் கையுமாக விருந்த அந்த இலட்சுமணரைத்தம்முடன்கூட அழைத்துக்கொண்டு, வெகு விரைவாக நடந்து சென்றார். சிறிது தூரம் சென்றபிறகு, விபீஷணர், பெருங்காட்டைச் சேர்ந்து, அங்கு இந்திரஜித்து ஹோமஞ் செய்யுந் தலத்தை இலட்சுமணருக்குக் காட்டலானார். கார்மேகம்போன்ற தோற்றத்துடன் பயங்கரமாகக்காணப்பட்டதோர் ஆலமரத்தை, வெகு காந்தியுடன் விளங்கிய இராவணசகோதரரான விபீஷணர், இலட்சுமணர்க்குக் காட்டலானார். அப்போது, விபீஷணர், "இவ்விட

விபீஷணர் இந்திரஜித்தின் ஹோமஸ்தானத்தை இட்சுமணருக்குக்காட்டிப் போர்செய்யச் சொல்லுதல்.

த்தில்தான், இந்திரஜித்து, பூதங்களுக்குப் பலியீந்துவிட்டு, பிறகு, இவ்விடத்தினின்று போரிடவருவான். இந்தச் சடங்கை முடித்தபின், இவன் ஒருவர்கண்களிலும் புலப்படாமல் மறைந்து நின்றுகொண்டு, போரிற் சத்துருக்களைக் கொல்லவேண்டி மென்றூற் கொல்வான்; கட்டவேண்டு மென்றூற் கட்டிவிடுவான். ஆகையால், வெகுபலசாலியாகிய இவன் அவ்வாலமரத்தண்டை சேருமுன்னமே, இவனை, தேர் சாரதி குதிரைகள் என்ற இவைகளுடன் தாங்கள் வதைக்கவேண்டும்" என்றூர்.

லக்ஷ்மணர் சித்தமாக இருத்தல்.

நண்பரை மகிழ்விக்கவல்ல பராக்கிரமசாலியாகிய இலட்சுமணரும், "அப்படியே ஆகட்டும்" என்றுசொல்லி, அவ்விடத்திலே தமது அழகானவில்லை டங்காரஞ்செய்துகொண்டு சலியாமல் நின்றூர். பலவானுய் இராவண குமாரனை இந்திரஜித்து, கவசம் அணிந்து வில்லை யேந்தி, கொடிவிளங்குகின்ற அக்கினி நிறமான தனது தேரின்மீது தோன்றினன். போரில் எவராலும் வெல்லப்படாத புலஸ்திய வமிசத்தவனை அவ்வர்க்கனை நோக்கி, மஹாபராக்கிரமசாலியான் இலட்சுமணர், "உன்னை நான் போரிடக் கூப்பிடுகின்றேன்; ஆகையால், உன்னுற் கூடியமட்டும் நீ முயன்று என்னுடன் போர்செய்வாய்" என்றூர்.

யுத்தஸந்நாஹத்துடன் வந்த இந்திரஜித்தை லக்ஷ்மணர் போர்செய்ய அழைத்தல்.

வெகுபலமும் திடசித்தமுமுள்ள அவ்விந்திரஜித்து இவ்வண்ணம் சொல்லப்பட்டு, அங்கு விபீஷணரைக்கண்டு கடிமையாகச் சில சொல்லலானன்:— "இவ்விலங்கையில் நீர் பிறந்து வளர்ந்தவர்; எனது தந்தைக்கு நேரே தம்பி; அரக்கரே! இவ்வாறிருக்க, எனக்குச் சிற்றப்பனரான நீர், புத்திரனன எனக்குத் துரோகம்பண்ணலாமா? கெடுமதியுடையீர்! உமக்கு, உறவுமுறையும், நட்பும், ஜாதியும்,

விபீஷணரைக் கண்டு இந்திரஜித்து ஏசுதல்.

பாராட்டவேண்டுவனவல்ல; தர்மத்தைக் கெடுக்கவந்தவரே! உமக்கு, உடன்பிறப்பும் தருமமுங்கூடப் பாராட்டவேண்டுவனவாமோ? நீர், உமதுஜநங்களை விட்டு மாற்றாரிடம் அடிமையாகப் புகுந்து விட்டதனால், உம்மைக்குறித்து விசனப்படவேண்டியதாக விருக்கின்றது; நன்னடத்தையுள்ள சாதுக்களால் நீர் நிந்திக்கத்தக்கவரு மாகின்றீர். உமது அற்பபுத்தியால், ஸ்வஜநங்களுடன் சேர்ந்திருத்தலும் அற்பனுகிய அன்னியனோடு சேர்ந்திருத்தலும் ஆகிய இவ்விரண்டிற்குமுள்ள தாரதம்மியத்தை அறிகின்றிலீர். அன்னியன் நற்குணங்கள்நிறைந்தவனுக இருந்தாலும், நம்மைச் சேர்ந்தவன் குணங்களற்றவனுக இருந்தாலும், குணமற்ற நமது பந்துக்களுடன் சேர்ந்திருப்பதுதான் நன்மை; அன்னியனென்பவன் அன்னியனே யன்றே! எவன் ஸ்வபக்ஷத்தைவிட்டுப் பரபக்ஷத்தையடைகின்றனே, அவன் ஸ்வபக்ஷம் நாசமானபிறகு, அந்த மாற்றாராலேயே நாசமுறுகின்றன். அரக்கரே! இராவணனுர்க்குத் தம்பியே! உமது தயையின்மை எவ்வளவு பயங்கரமாக விருக்கின்றதோ, அவ்வளவுகொடுமையான தயையின்மையால், மாற்றானுக்கு ஸ்வஜநத்தைக்காட்டிக்கொடுத்தலாகிய செய்கை உம்மையன்றி வேறு யாரால்தான் செய்ய முடியும்?" என்று இவ்விதமாகத் தமது தமையன்மகனை இந்திரஜித்து சொன்னதும், விபீஷணர் பதில்சொல்லலானர்:—

விபீஷணரது உத்தரம்.

"அரக்கா! இதற்கு முன்னே எனது நடக்கையைத் தெரியாதவன் போல் என்னிதற்றுகின்றாய்? ராக்ஷஸ ராஜருடைய குமாரா! துஷ்டா! நான் உனது சிற்றப்பனென்ற கௌரவத்தாலாவது இவ்வண்ணம்பேசுவதை விட்டிடு. கொடுஞ் செயல்கள் செய்யும் அரக்கக்குலத்தில் நான் பிறந்தவனென்றாலும், எனது நடத்தை அரக்கர்களுடைய நடத்தையல்லவே; என்னிடத்திலுள்ள இக்குணந்தான், ஸத்புருஷர்கள் முதன்மையாகக் கொண்டாடுங் குணம். கொ

நிந்தொழிலினுலே நான் ஒருபொழுதும் சந்தோஷப் படேன்; தர்மத்துக்கு விரோதமான செயலினுலும் நான் சந்தோஷங் கொள்ளேன். மேலும், மாறுபாடான நடக் கையுடைய எனது தமையனர் உடன்பிறந்தவனை என்னை ஏன் துரத்திவிட்டனர்? தருமத்தினின்று வழுவிய வனுய்ப் பாவத்தொழில்களையே புரிகின்றவனை, தனது கையில் விழுந்த பாம்பை உதறுவதுபோல உதறிவிட்டு எவன் விலகிவருகின்றனை, அவன்தான் சுகமடைவான். எவனெருவன் பிறரை ஹிம்ஸிப்பதும் பிறர் பொருளைக் கவர்வதும் பிறர்மனைவியரைச் சேர்வதும் என்ற இவைகளை யே நோன்பாகக் கொண்டிருக்கின்றனை, தீப்பற்றி யெரி யும் வீட்டை விட்டுப்போவதுபோல, தியொழுக்கமுள்ள அவனை விட்டு நீங்குவதுதான் நியாயமென்று பெரியோர் சொல்லுகின்றனர். பிறர்பொருளைக் கவர்வதும், பிறர் மனைவியரைக் கெடுப்பதும், நண்பர்களிடம் மிகவுஞ் சங் கிப்பதும் என்னும் இம்மூன்று தோஷங்களும் நாசத்தை யே விளைக்கும். மஹர்ஷிகளின் சித்திரவதையும், தேவர் கள் யாவருடனுஞ் சண்டையும், கர்வமும், கோபமும், பகைமையும், பிரதிகூலனுக விருத்தனும் என்னும் இவ் வகைத் துர்க்குணங்கள், எனது தமையனுருடைய ஆயுளை யும் ஸம்பத்தையும் நாசஞ்செய்யத் தோன்றியனவாகி, அவரிடமுள்ள நற்குணங்களை, மேகங்கள் மலையை மூடி வதுபோல மறைத்துவிட்டன. இவ்வகைத் தோஷங்களுக் காகத்தான், நான், எனது உடன்பிறந்தவரான உனதுதந் தையைக் கைவிட்டேன். இனிமேல் இவ்விலங்கை விரை வில் அழிவடையப்போகின்றது; நீயும் உயிருடன் பிழைத் திருக்கப்போகின்றதில்லை; உனது தந்தையும் பிழைத்தி ருக்கப்போகின்றதில்லை. அடா அரக்கா! நீ வெகுகர்வங் கொண்ட சிறுபிள்ளை: வணக்கமற்றவன். காலபாசம் உன்னை இறுக்குகின்றபடியால், நீஉன்மனத்தில்தோன்றி யபடி யெல்லாம் என்னைப் பேசுகின்றாய். இன்றையதினம்

உனக்கு முடிவுகாலம் வந்துவிட்டது; என்னைப்பார்த்து ஏன் வீணுகப் பிதற்றுகின்றாய்? அடா அரக்கப்பதரே! இனி உன்னால் அவ்வாலமரத்தினடிக்குப் போகமுடியாது. காகுஸ்தர்களான இராமலட்சுமணர்களை அவமதித்த பிறகு, நீ பிழைத்திருத்தல் சிறிதும் முடியாது. நீ தெய்வப்பிறப்பையுடைய மனிதரான இலட்சுமணருடன் போர் புரிவாயாக. அவரால் வதைக்கப்பட்ட பிறகு, நீ யமலோகத்திற்சென்று தேவகாரியமாகிய யாகத்தை முடித்துக் கொள்ளலாம். ஓங்கி விளங்குகின்ற உனதுவல்லமையை முற்றிலும் நீ காட்டுவாய்; உன்னிடமிருக்கும் ஆயுதங்களெல்லாவற்றையும், அம்பு முழுவதையும் நீ விடுப்பாயாக இலட்சுமணருடைய பாணங்களுக்கு இலக்கான பிறகு, நீ, உனது சேனையுடன் உயிர்பிழைத்துத் திரும்பமாட்டாய்" என்றார்.

எண்பத்தெட்டாஞ் சருக்கம்:
இந்திரஜித்துக்கும் இலட்சுமணக்கும் நடந்த போர்.

இந்திரஜித்து போர்க்கு எழுது இலக்குமணரைக் காணுதல்

இவ்வாறு விபீஷணர் சொன்னதைக் கேட்டு, இந்திரஜித்து, வெகுகோபங்கொண்டு, அவரைக் கடிந்து வெகுவாகப் பேசிவிட்டு, தனது கத்தியையும் மற்றையாயுதங்களையும் ஓங்கிக்கொண்டும், கருங்குதிரைகள் பூட்டி நன்றுகஅலங்கரிக்கப்பட்டிருந்த இரதத்தில் ஏறிக்கொண்டும், மற்றொருயமன்போல விளங்கியவனுய், பெருந்தோற்றமுள்ளதும் விசாலமானதும்விரைவு கொண்டதும் உறுதியானதுமான தனது கொடிய வில்லைக் கையில் ஓங்கி நிறுத்தி எதிரிகளை யழிக்கவல்ல அம்புகளையும் எடுத்துக்கொண்டு வெகுவேகமாகப் போர்புரியுமாறு

எழுந்தான். பெரிய வில்வீரனுய்த் தேரில் அலங்காரத் தோடு விளங்கிய அவ்விந்திரஜித்து, தனக்கு முன்பாக, பகைவர்களை யழிப்பவரும் ஸ்ரீராமருடைய தம்பியுமாகிய இலட்சுமணர், உதயமலையில் விளங்குஞ் சூரியன்போல மிக்கசிங்காரிப்புடனே அணுமானது முதுகின்மேல் விளங்கக் கண்டான்.

அப்பொழுது, அவ்விந்திரஜித்து, இலட்சுமணர் விபீஷணர் வானரவீரர்கள் என்ற இவர்களெல்லாரையும் பார்த்து வெகு கோபத்துடன் பின்வருமாறு சொல்லலானுன் :—"நீங்களெல்லாரும் இன்று எனது வல்லமையைப் பாருங்கள். இன்று என்னுடைய வில்லினின்று புறப்படும் பாணங்கள் ஒருவராலும் அணுகமுடியாதவண்ணம் ஆகாயத்தினின்றுமழைபொழிவதுபோலப் போரில்விழுவதை, நீங்கள் தடை செய்யுங்கள். இன்று எனது பெரியவில்லினின்று புறப்படுகின்ற பாணங்கள், பஞ்சுமூட்டைகளை நெருப்பு எரிப்பதுபோல, உங்களுடைய தேகங்களை எரிக்கப்போகின்றன. நான், கூரான பாணங்களாலும், சூலங்கள் சக்திகள்குண்டாந்தடிகள் தோமரங்கள்என்றஆயுதங்களாலும் உங்கள்தேகங்களைப்பிளந்து உங்களெல்லோரையும் யமனுடைய மாளிகைக்கு அனுப்புகின்றேன். நான், போர்க்களத்தில் நின்று, எனது ஹஸ்தலாகவத்துடன் பாணவர்ஷங்களைப் பொழிந்து மேகம்போலக் கர்ச்சிப்பேனேயானுல், என்கண் முன்பாக நிற்பதற்கு யாரால்தான் முடியும்? நான் முன்பு இராப்போர் புரிந்தபோது, வச்சிராயுதத்துக்கு ஒப்பான எனதுபாணங்களால் நீங்களிருவரும் பரிவாரங்களுடன் பூமியில் விழுந்து உணர்வுஒடுங்கிக் கிடந்தீர்களே! ஸர்ப்பம்போலக் கோபங்கொண்டிருக்கின்ற என்னிடம் போர்புரிய மறுபடியும் விரும்பிவந்ததனுல், முன்பு நடந்த அச்செயல், உங்கள் ஞாபகத்திற்கு வரவில்லைபோலும்; அன்றி, நீங்கள் யமலோகம் சேரவேண்

இந்திரஜித்தின் வீரவாதம்.

டிய காலந்தான் கிட்டியிருக்கலாமென்று நினைக்கின்றேன்" என்றான்.

இந்திரஜித்து அவ்வளவுகர்வத்துடன் சொன்னதைக் கேட்டு, இலட்சுமணர், கொஞ்சமேனும் பயமில்லாமல் வெகு கோபத்துடன் அவ்விராவணகுமாரனை நோக்கி மறுமொழி சொல்லலானார் :—" அரக்கா ! நீ அசாத்தியமான காரியங்களை வாயினல்மாத்திரஞ் சொல்லுகின்றாய் ; எவனொருவன் செயலினல் தன் காரியத்தை முடிக்கின்றானே, அவனல்லவோ நல்ல புத்திமான். கெடுமதியுடையாய் ! பகைவனை வெல்லமாட்டாத நீ, ஒருத்தனலும் செய்து முடிக்கக் கூடாத காரியத்தை வாயினல்மட்டுஞ் சொல்லி, அம்மட்டினலேயே தொழிலைச் செய்து முடித்தவன்போலக் களிக்கின்றாயே ! போர்க்களத்தில் மாயையால் மறைந்து நின்று யுத்தஞ்செய்த நீ, திருட்டுவழியாகச்சென்றாய்; அது, வீரர்கள் அனுசரிக்கும் வழியல்லவே ! இன்று, நான், உனது பாணங்கள் விழும் வழியில் நிற்கின்றேன் ; உனது வல்லமையை நீ இப்பொழுது காட்டு. நீ வீணுகக் கர்வப்படவேண்டாம்" என்றார்.

இலட்சுமணரது மறுமொழி.

இப்படி இவர் சொல்லவே, அதிக பலம்பொருந்தியவனும் போரில் வெல்பவனுமான இந்திரஜித்து, தனது பயங்கரமான வில்லிலே கூரான அம்புகளைத் தொடுத்து இலட்சுமணர்மேல் விடுத்தான். சிறிய சர்ப்பங்கள்போல் வெகுவேகமாக வந்த அந்த அம்புகள், இலட்சுமணர்மீது பட்டுப் புவியில் விழுந்தன. இராவணகுமாரனை இந்திரஜித்து, வெகு வேகமாகச் சஞ்சரித்துக்கொண்டு, தனது வேகமான பாணங்கள் பல வற்றைப் பிரயோகித்து, அப்போரில் நல்லிலக்கணமமைந்த இலட்சுமணரைப் பிளந்தான். உடம்பு முழுவதும் பாணங்களால் அடியுண்டு இரத்தம் பெருக நின்ற இலட்சுமணர்,

இந்திரஜித்து இலட்சுமணருடன் போர் செய்யத் தொடங்குதல்.

புகையற்ற அழல்போலச் சோபித்தார். இந்திரஜித்து, தான் செய்த காரியம் பயன்பெறுவதைக் கண்டு, பெருங் குரலினுற் பின்வருமாறு சொல்லலானன் : — "சுமித்திரா குமாரனே ! இன்று கூரான முனைகளுள்ளனவாய்ச் சிறகு கட்டியனவாய் உயிர்க்கு இறுதியை விளைக்கக்கூடியனவாய் எனது வில்லினின்று வெளிப்போந்தனவான பாணங்கள், உனது மேனியில் விழுந்து உனது உயிரை வாங்கிவிடப்போகின்றன. இலட்சுமணனே ! என்னுல் வதைக்கப்பட்டு நீ பூமியில் விழுந்ததும், நரிக்கூட்டங்களும், கழுகுகூட்டங்களும், பருந்துகளும், உட்கார்ந்துகொண்டு உன்னைப் புசிக்கப்போகின்றன. கூடத்திரியாதமனுய், எப்போதும்கொடியவனுய், தமையனிடம் மிக்க அன்பு வைத்தவனு யிருக்கும் நீ இன்று என்னுல் வதைக்கப்பட்டு வீழ்வதை, மிகவுங் கெடுமதியுடைய அவ்விராமன் பார்ப்பான். கவசம் புயியிற் கழன்றுவிழ, வில்முறிய, கலையறுப்புண்டு, என்னுல் நீ வதைக்கப்பட்டதை இராமன் காண்பான் " என்ருன்.

இந்திரஜித்தின் தற்புகழ்ச்சி.

இவ்வாறு இறுமாப்போடு சொல்லிக்கொண்டு சினமடைந்துநின்ற இந்திரஜித்தைப் பார்த்து, இலட்சுமணர், நல்ல அர்த்தத்துடன்கூடிய சில சொற்களைப் பின்வருமாறு காரணத்துடன் சொல்லலானர் :—"கொடிய புத்தியுள்ளவனே ! உனது பேசும் வல்லமையை நீ விட்டிடு ; அரக்கனே ! நீ இவ்வாறு சொல்வது மிகவுங் கொடுஞ் செயலாகும். நீ ஏன் வீணுகப் பிதற்றுகின்ருய் ? நீ சொல்லுகின்றவைகளைத் தொழிலால் முடித்துக் காட்டுவாய். அரக்கனே ! நீ தொழிலினுற்காட்டாமல் ஏன் வீணுகவாய்ப் பேச்சினுல்மட்டும் புகழ்ந்துகொள்ளுகின்ருய் ? நான் உன்னை நம்புமாறு, நீ சொல்வதை, முடித்துக் காட்டுவாயாக. புருஷரிற் கடைப்பட்டவனே ! அரக்கப்பதரே ! கொடிய சொல்லொன்றுஞ் சொல்லாமலும் ஒருவரையும் நிந்தியாம

இலட்சுமணர் இந்திரஜித்தைக் கண்டித்தல்.

லும், தற்புகழ்ச்சி செய்யாமலும் நான் உன்னைக் கொல்லுகின்றேன், பார்!" என்று சொல்லி, கூரான ஐந்து பாணங்களை, இலட்சுமணர், தமது வில்லிற் பூட்டி, நாணை நன்றாக இழுத்து, இந்திரஜித்தின் மார்பை நோக்கி விடுத்தார். அப்பாணங்கள் அழகான இறகுகள் கட்டப் பெற்றதனால் வெகுவேகமாகச் சென்று, பாம்புகள்போலச் சீறிக்கொண்டு இந்திரஜித்தின் மார்பில் விழுந்து, சூரியனுடைய கிரணங்கள்போல அவ்விடத்தில் விளங்கின.

அவ்வாறு, இலட்சுமணர், தன்னைப் பாணங்களாலடித்ததும், இந்திரஜித்து, கடுங்கோபங்கொண்டு மூன்று பாணங்களை எடுத்து விடுத்து இலட்சுமணரைப் பிளந்தான், ஒருவரையொருவர் வெல்லவிரும்பிய அவ்வரக்க வீரனும் அம்மனித வீரரும் போர்புரிந்த அப்போது, அந்த யுத்தம் வெகு பயங்கரமாக இழுந்தது. அவ்விருவரும், மிகுதியாகப் பலமமைந்தவர்கள்; அவ்விருவரும், வெகுபராக்கிரம முள்ளவர்கள்; அவ்விருவரும், மிக்க வல்லமையுள்ளவர்கள்; ஆயுதங்களெல்லாவற்றிலும் வல்லவர்கள். அவ்விருவரும், ஒப்பற்ற பலமும் காந்தியும் அமைந்து, ஒருவராலும் வெல்லமுடியாதவர்கள் அவ்விருவரும், அச்சமயத்தில், ஆகாயத்தில் இரண்டு கிரகங்கள் போரிடுவதுபோலப் போரிடலானார்கள். போரில் ஒருவராலும் அணுச்சமுடியாத மகாதைரியசாலிகளான அவ்விருவரும், ஒருவரைக்கண்டு ஒருவர் பயப்படாமல் விருத்திராசுர தேவேந்திரர் போரிடுவதுபோலவும், இரண்டு சிங்கங்கள் சீறிப் போரிடுவதுபோலவும் போரிடலானார்கள். அப்போது அம்மானுடச்சிங்கமும் அவ்வரக்கச்சிங்கமும், பல பாணங்களைப் பிரயோகித்துக்கொண்டு, வெகு உற்சாகத்துடன் போர்புரிந்தார்கள். விற்களையும் அம்புகளையும் ஏந்திய அவ்வரக்கனும், இலட்சுமணரும், ஒருவரையொருவர் வெல்லவிரும்பி, மிக்க உற்சாகத்துடன் ஒருவர்

இந்திரஜித்துக்கும் இலக்குமணருக்குங் கைகலந்த போரீ.

மே லொருவர் மேகங்கள் சோனுமாரிபொழிவதுபோல மிகுதியாக அம்புமாரி பொழியலானுர்கள். போரில் மிகவல் லவர்களாய், மஹாபலசாலிகளான அவ்விரண்டு வீரர்க ளும், கொடிய அம்புகளையும் கத்திகளையும் மற்றும்கூரான பல ஆயுதங்களையும் ஏந்தியவர்களாய், போரில் மிகுதி யாகத் தலையிட்டுக் காண்டு, முன்பு பெரும்போரில் இந் திரனும் சம்பராசுரனும் போரிட்டதுபோல மிகவும் புடை த்துக்கொண்டார்கள்.

எண்பத்தொன்பதாஞ் சருக்கம்:
இலட்சுமணருக்கும் இந்திரஜித்துக்கும் நடந்த பெரும்போர்.

சத்துருக்களை வதைக்கும் வல்லமை தங்கிய இலட்சு மணர், வெகுகோபங்கொண்டு, சர்ப்பம்போற் சீறி, அவ் வரக்கவீரன்மேற் பாணமொன்றைத் தொடுத்து விடுத் தார். அவ்விராவணகுமாரன், இலட்சுமணருடைய வில் நாணியின் சத்தத்தைக் கேட்டதும், முகவொளி குன்றிய வனுய் இலட்சுமணரை ஒரு பார்வை பார்த்தான். அவ் வாறு அவ்விந்திரஜித்து, தன் முகவொளி மாறியதை, விபீஷணர், கண்டு, போர்புரிய முயன்று நின்ற இலட்சும ணரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுர்:— "நான், இப்போது இராவணகுமாரனுகிய இவ்விந் திரஜித்தின் முகத்திற் சிலகுறிகளைக்காண் கின்றேன்: புஜபராக்கிரமமமைந்தவரே! அதனல் இவன் இப்போது தோற்ரு னென்பதற்கு ஐயமேயில்லை: ஆகையால், இவனை வதை செய்யவிரைவுகொள்க" என்ருர்.

விபீஷணர் இலட்சுமணர்க்கு உத்ஸாஹ மூட்டுதல்.

அதன்பிறகு, இலட்சுமணர், கழல்போல ஜ்வலித்துக் கொண்டும் அதிக விஷமமைந்த சர்ப்பங்கள்போல விளங்கிக்கொண்டு மிருந்த தமது கூரான பலபாணங்களை வில்லில் தொடுத்து, இந்திரஜித்தின்மேல் விடுத்தார். இடிவிழுவதுபோல இலட்சுமணர் பிரயோகித்த பாணங்கள் தன்மீது விழவே, இந்திரஜித்து, ஒருமுகூர்த்தகாலம் தனது ஐம்பொறிகளும் குழம்பியவனாய், மூர்ச்சையாய்க் கிடந்தான். வீரனான அவ்விந்திரஜித்து, உடனே சிறிது நாழிகைக்கெல்லாம் மூர்ச்சைதெளிந்து, நல்லறிவடைந்து, வீரராகிய இலட்சுமணர் தன்முன் நிற்பதைக் கண்டான்.

இந்திரஜித்து மூர்ச்சையடைந்து தெளிதல்.

அவ்விந்திரஜித்து, கோபத்தாற் கண்கள் சிவந்தவனாய், இலட்சுமணரை நெருங்கி, அவரைப்பார்த்துப் பின்வருமாறு மறுபடியும் கடிந்து பேசலானான் :— "முதலில் நேர்ந்த அப்போரில் எனது பராக்கிரமச்செய்கைகள் உனதுஞாபகத்தில்லையோ? அப்பொழுது, உன்னையும் உனது தமையனாகிய இராமனையும் யான் கட்ட, நீவிர் பூமியிற் புரண்டீர்களே! போர்க்களத்தில் வச்சிராயுதத்துக்கொப்பான எனது பாணங்கள் பரிவாரங்களுடன் உங்களைப் பிரஜ்ஞையற்றுப் பூமியில் விழச்செய்தனவே! அவ்விஷயம் உங்கள் ஞாபகத்தில்லையென்று நினைக்கிறேன்; அல்லது, என்னை இன்று நீ எதிர்க்கவந்துள்ளதனல், நிச்சயமாய் யமனுடைய மாளிகைக்குப் போகவிரும்புகின்றாய்போலும். முதல்தரத்தில் என்னுடன் போர்புரிந்தபொழுது, எனதுவல்லமையை நீ முற்றிலும் பார்க்கவில்லை யென்றல், இப்பொழுது நான் அவ்வல்லமையைக் காட்டுகின்றேன்; கொஞ்சம் சாவதானமாக நில்" என்று இவ்வாறு சொல்லி, இந்திரஜித்து, ஏழு பாணங்களை விடுத்து, இலட்சுமணரைப் புடைத்தான்; அவ்வாறே கூரான நுனியமைந்து சிறந்த பத்துப்பாணங்களைப் பிரயோகித்து அனுமானைப் புடைத்தான்; இவ்விரு

இந்திரஜித்து கூறியகடுமொழி.

இந்திரஜித்தின் போர்.

வரிடமிருந்ததைவிட இரட்டிப்பான கோபத்துடன், இந்திரஜித்து, கூரான நூறு பாணங்களை நன்றாக இழுத்துவிடத்து, விபீஷணரைப் பிளக்கலானன்.

இலட்சுமணரது வல்லமை.

மனிதரிற் சிறந்த இலட்சுமணர், அவ்வாறு இந்திரஜித்துசெய்த செயலைப் பார்த்து, அதைக் கொஞ்சமேனும் லட்சியம் பண்ணாதவராய், "இது ஒரு வீரச்செயலோ?" என்று புன்சிரிப்புடன் சொல்லிவிட்டு, தமது பயங்கரமான பாணங்களை இந்திரஜித்தின்மேல் விடுத்தார். அன்றியும், இலட்சுமணர், தாம் அப்போரிற் சிறிதும் அச்சங்கொள்ளாதவராய், இந்திரஜித்தைப்பார்த்து, "அரக்கனே! போர்க்களத்தில் நின்று போர்புரியுஞ் சூரர்கள், நீ இப்பொழுது எய்ததுபோல அம்பெய்ததை, நான் பார்த்ததில்லை; உனது அம்புகள், இலேசானவையும் வெகு அற்பமான வீரியமுடையனவுமாகி எனக்குச் சுகத்தையுண்டாக்குகின்றன. போரில் வெற்றியடைய விருப்பங்கொண்டிருக்குஞ் சூரர்கள், இவ்வண்ணம் ஒரு பொழுதும் போர்செய்யமாட்டார்கள்" என்று இவ்வாறு சொல்லிக்கொண்டு இந்திரஜித்தின்மேற் சரமாரிபொழிந்தார்.

இலட்சுமணர் இந்திரஜித்தின் கவசத்தைப் பிளத்தல்.

இந்திரஜித்தினுடைய தங்கக்கவசம், இலட்சுமணர் எய்த பாணங்களாற் பிளப்புண்டு, ஆகாயத்திலிருந்து நட்சத்திரங்கள் உதிர்வனபோல அவனது இரதத்தின் நடுவிற் சிதறி விழுந்தது. வீரனாகிய இந்திரஜித்து, கவசம்போய் உடம்பு முழுமையும் அம்புகள் தைத்து விரணமடைந்தபொழுது, அப்போர்க்களத்தில், மரமடர்ந்த மலைபோலக் காணப்பட்டான். அதன்பிறகு, கொடிய பராக்கிரமமமைந்த அவ்விந்திரஜித்து, வெகுகோபங்கொண்டவனாய், ஆயிரக்கணக்காகப் பாணங்களைவிடுத்து, மகாவீரராகிய இலட்சுமணரைப் பிளக்கலானன். அப்பொழுது, இலட்சுமணருடைய அழகான பெருங்கவசமும் முறிந்தது. இவ்

இந்திரஜித்து இலட்சுமணரது கவசத்தைப் பிளத்தல்.

வாறு ஒருவன்செயலுக்கு மாற்றுத்தொழிலே அவ்விரண்டு வீரரும் விரைந்து செய்தனர்.

இலட்சுமணர்க்கும் இந்திரஜித்துக்கும் கைகலந்த போர்.

இலட்சுமணர் இந்திரஜித்து என்னும் அவ்விருவரும், உடம்பெங்கும் அறுப்புண்டு, எல்லாவுறுப்புக்களினின்றும் உதிரம்பெருக அடிக்கடி பெருமூச்செறிந்துகொண்டு, வெகு நெருக்கமாகப் போர் புரிந்தனர். மிக்க தைரியமமைந்த வீரர்களாகிய அவ்விருவரும், வெகுநேரம்வரையில் ஒருவரை மற்றொருவர் கூரான பாணங்களாற் செதுக்கிக்கொண்டார்கள். ஒவ்வொருவரும் தாம் தாம் வெற்றியடையவேண்டுமென்று கருதித் தமது பயங்கரமான வல்லமையைக் காட்டிக்கொண்டு, ஒருவர்மேல் மற்றொருவர் பாணக்கூட்டங்களை இறைத்து, ஒருவரது கவசத்தையும் தேர்த்துவசத்தையும் மற்றொருவர் வெட்டியெறிந்து, தமது தேகத்தினின்று இரத்தவெள்ளம் பெருக, அருவிகளைப் பெருக்குகின்ற ப்ரஸ்ரவணமலைபோலத் தோன்றினர்கள். பயங்கரமான அட்டகாசத்துடன், அவ்விருவரும் ஒருவர்மேலொருவர் சரமாரிபொழிந்துகொண்ட காட்சியானது, ஆகாயத்தில் இரண்டு கார்மேகங்கள் கர்ச்சித்துக்கொண்டு பெருமழையைப்பொழிவதுபோலத் தோன்றிற்று. வெகுநேரம் அவ்வாறு பெரும்போர் செய்தபோதிலும், அவ்விருவர்க்கும் போரைவிட்டுவிலகவேண்டுமென்ற எண்ணமாவது, சிரமமாவது தோன்றவேயில்லை. அஸ்திரவித்தைகளைக் கற்றுத்தேர்ந்தவரில் உயர்ந்த அவ்விரண்டுவீரரும், அச்சமயத்தில், அடிக்கடி தாம் தாம் அறிந்த அஸ்திரங்களைக் காட்டிக்கொண்டார்கள்; சிறந்த பாணங்களால் ஆகாயத்தை மூடலானார்கள். மனிதரும் அரக்கனுமான அவ்விருவீரரும், ஆயுதப்பிரயோகங்களில் ஒருவிதவழுவுமின்றிச் சடிதியாகவும் அழகாகவும் ஆயுதங்களை எறிந்துகொண்டு நெருக்கமாகக் கொடும்போர் புரிந்தார்கள். ஒவ்வொருவரும் அறைந்த அறையின் பேரொலி

யானது, கொடிய இடியைப்போல ஜனங்களின் மனத்தை நடுநடுங்கச்செய்துகொண்டு, தனித்தனி வெகு பயங்கரமாகக் கேட்கலாயிற்று. போரில் அதிக உற்சாகத்துடன் கர்ச்சித்த அவ்விருவீரர்களுடைய அட்டகாசமும், ஆகாயத்திற் பயங்கரமாக மேகங்களிடிக்கும் இடிபோல வெகு கடோரமாகக் கேட்கலாயிற்று. புகழ்பெற்று வெற்றியில் உறுதிகொண்டுள்ள மஹாபலவான்களான அவ்விருவீரரும், ஒருவரை மற்றொருவர் தங்கமிழைத்த பாணங்களைக் கொண்டு தேகத்தில் உதிரமொழுகும்படி விரணப்படுத்தினர்கள். அவர்கள் ஒருவர்மீது ஒருவர் பிரயோகித்துக் கொண்ட பாணங்கள், ஊடுருவிப்பாய்ந்து தேகத்தைப் பிளந்து இரத்தத்தை வழிந்தோடச்செய்து பிறகு பூமியில் விழுந்தன. இந்திரஜித்தும் இலட்சுமணரும் ஒருவர்மேல் மற்றொருவர் விடுத்த ஆயிரக்கணக்கான பாணங்களிற் சில, ஆகாயத்தில் வரும்பொழுதே ஒன்றொடொன்று உராய்ந்தன; சில, தம்மைநோக்கி வந்த அம்புகளை முறித்தெறிந்தன; சில, வெட்டியெறிந்தன. அவ்விருவர்க்கும் நடந்த போரானது, கடும்போராக இருந்தது; அப்போரிலே, வேள்வியிற் கொழுந்து விட்டெரிகின்ற கார்ஹபத்யம் ஆஹவநீயம் என்னும் அக்கினிகள் தருப்பையினாலாகிய பரிஸ்தரணத்தாற் சூழப்பெற்றிருப்பதுபோல, அவ்விருவீரரும் அம்புகளாற் சூழப்பெற்றிருந்தனர். மிகவும் விரணப்பட்ட அவ்விரண்டு வீரருடைய உடல்களும், காட்டில் இலையேயில்லாமல் அடிமுதல் நுனிவரையிற் பூத்துக்குலுங்கும் முண்முருக்கையும் இலவமரமும்போல விளங்கின. இந்திரஜித்தும் இலட்சுமணரும் ஒருவரையொருவர் கொல்லக் கருதி, வெகு பயங்கரமாக நெருங்கியபோரை அடிக்கடி புரிந்தனர். அப்போர்க்களத்தில், இலட்சுமணர் இந்திரஜித்தையும், இந்திரஜித்து இலட்சுமணரையுமாக, ஒருவரையொருவர்பலமுறைஅடித்துக்கொண்டபோதிலும், அவ்விருவரும் சிரமத்தையடையவில்லை. மஹாபலசாலிகளான அந்தப்

பெருவீரர்கள், தமது உடம்பு முழுவதும் பாணராசிகளால் மூழ்கப்பெற்று, மரங்களடர்ந்து விளங்கும் மலைகளைப் போலத் தோன்றினர்கள். மிகவும் பாணங்களால் மூடப் பட்டு இரத்தத்தைப் பெருகவிட்டுக்கொண்டிருந்த அவ் விருவரது உடம்புகளும், கொழுந்துவிட்டெரியுந் தீப்போ லச் சோபித்தன. அவ்வாறு அவ்விருவரும் வெகுநேரம் போர்புரிந்தும், போரை நிறுத்தவேண்டுமென்ற எண்ண மாவது, போரிற்களைப்பாவது அவர்கட்கு உண்டாகவே யில்லை.

விபீஷணர் இலட்சுமணரைக் கிட்டி நிற்றல்.

அப்பால், போர்முகத்திற் பிறரால் வெல்லப்படாதவ ரான இலட்சுமணருடைய களைப்பைப் போக்கும் பொருட்டு, மகாதேஜஸ்வியாகிய விபீஷணர், அப்போரிற் கிட்டிவந்து, அவ் விலட்சுமணர்க்கு நன்மையும் விருப்பமு மான சொல்லைச் சொல்பவராய் நின்றார்.

தொண்ணூருஞ் சருக்கம்:
இந்திரஜித்தினது இரதபங்கம்.

விபீஷணர் அரக்கருடன் போர் செய்தல்.

லக்ஷ்மணர் இந்திரஜித்து என்னும் அவ்விருவீர ரும் மதங்கொண்ட யானைகள்போல ஒரு வரையொருவர் கொல்லக்கருதிப் போர் புரிந்துகொண்டிருந்ததைப் பார்த்து, சூர ரான விபீஷணர், தாம் முதலில் லக்ஷ்ம ணர்க்கு உதவியாகப் போர்புரியக் கருதியிருந்தும் அவ் விருவருடைய பலத்தின் தாரதமியத்தை யறிய விரும்பி வெறுமையாக இருந்து, அவ்விருவரும் ஒத்த வல்லமை யையுடையராதலை யறிந்து, பிறகு போர்க்களத்தில் தாம் போர்புரியுமாறு வந்து நின்றார். பிறகு, அவர், தமது வில்லைத் தட்டி வளைத்துக் கூரிய பாணங்களை அரக்கர்

களை வதைக்கவேண்டி விடுக்கலானார். நெருப்புஜ்வாலை போன்ற அப்பாணங்கள், அரக்கர்கள்மேல் ஒருசேர விழுந்து, பெருமலைகளை இடிகள் பிளப்பதுபோல, அவர்களை நாசம்பண்ணின. விபீஷணரைத் தொடர்ந்துவந்த அவ்வரக்கவீரர்களும், சூலங்கள் கத்திகள் பட்டஸங்கள் என்னும் ஆயுதங்களால் அரக்கக்கூட்டங்களை மூனைமுகத்தில் வெட்டி யெறிந்தார்கள். அரக்கர்கள் சூழ நடுவில் நின்ற விபீஷணர், யானைக்குட்டிகளின் நடுவில் நின்ற பெரு யானைபோல விளங்கினார்.

விபீஷணர் வானரர்களைத் தூண்டுதல்.

அப்பொழுது, அரக்கர்களுக்குள் உத்தமரும் காலத்தை யுணர்ந்தவருமான அவ்விபீஷணர், போரிலெதில் விருப்பங்கொண்டிருந்த வானரர்களுக்குப் பின்னும் உத்ஸாஹத்தை யுண்டாக்குபவராய், அக்காலத்துக்குத்தக்கபடி சில சொற்களைப் பின்வருமாறு சொல்லலானார்:— "ராக்ஷஸராஜனுகிய இராவணனுக்கு இவனொருவன் மாத்திரமே பெரும்பிடிப்பாய் மிகுந்திருக்கின்றன்; அவ்விராவணனுடைய சேனையில் இவனொருவன்தான் மிச்சம்; ஆகையால், வானரவீரர்களே! வீணுக ஏன் நிற்கின்றீர்கள்? பாபிஷ்டனை இவ்வரக்கனமட்டும் இப்போர்க்களத்திற் கொல்லப்படுவானேயானுல், இராவணனொருவன் நீங்கலாக இவனதுசேனை அவ்வளவும் மடிந்துபோனதாகவே கருதுங்கள். வீரனுகிய பிரகஸ்தன், மகாபலம் பொருந்திய நிகும்பன், கும்பகர்ணன், கும்பன், தூம்ராக்ஷன், ஐம்புமாலீ, மஹாமாலீ, தீக்ஷணவேகன், அசனிப்ரபன், ஸுப்தக்நன், யஜ்ஞகோபன், வஜ்ரதம்ஷ்ட்ரன், ஸம்ஹ்ராதீ, விகடன், நிக்நன், தபநன், தமன், ப்ரகாஸன், ப்ரகஸன், ப்ரஜங்கன், ஜங்கன், பகைவர்களால் அடக்குதற்கு அரிய அக்நிகேது, வெகுவல்லமை பொருந்திய ரஸ்மிகேது, வித்யுஜ்ஜிஹ்வன், த்விஜிஹ்வன், ஸூர்யஸத்ரு, அகம்பநன், ஸுபார்ஸ்வன், ஸுக்ரமாலி, கம்பனன்,

வெகு பலசாலிகளான தேவாந்தக நராந்தகர் முதலிய சூரர்களும் வீரர்களுமான அரக்கர்கள் பலபெயர்களை இதற்கு முன்னே கொன்றீர்கள்; உங்களுடைய கைகளைக்கொண்டு பெருங்கடலை நீந்தி, முடிவாக இலேசாய்க் குளப்படியைக் கடவுங்கள். உங்களால் வெல்லவேண்டியவனும் மிகுந்து நிற்கின்றவன், இவனொருவன்தான். பலத்தின் செருக்காற் போரில் உங்களை இதுவரையில் எதிர்த்துவந்த அரக்கர்களாவரும் உங்களால் வதைக்கப்பட்டார்கள். குமாரனை வதைப்பதில் சிற்றப்பனுகிய நானே காரணமாயிருப்பது நியாயமன்றென்றாலும், ஸ்ரீராமகாரியத்தின் கௌரவத்தால், அச்செயலிலுள்ள அருவருப்பை விட்டு, நான், தமையன்குமாரனை வதைப்பேன். ஆனால், இந்திரஜித்தைக் கொல்லும்படி நினைக்கின்ற எனது கண்களைக் கண்ணீர் மறைக்கின்றது. அவனை, மகாவீரரான இலட்சுமணர் வதைசெய்வார். வானரர்களே! நீங்களெல்லாரும், ஒன்றுசேர்ந்து, அவனைச்சார்ந்துள்ள ராக்ஷஸவீரர்களை வதைசெய்யுங்கள்" என்றார்.

வானரர்களின் உத்ஸாஹம்.

இவ்வாறு வெகு புகழ்தங்கிய விபீஷணரென்னும் அரக்கவீரரால் வானரர்கள் தூண்டப்பட்டதும், அவ்வானரவீரர்கள் சந்தோஷத்தால் தமது வால்களை அசைத்தார்கள். அதன்பிறகு, அவ்வானரர்கள் அடிக்கடி சிங்கநாதஞ்செய்துகொண்டு, மேகங்களைக் கண்ட மயில்களைப்போலப் பல விதமாக ஆரவார மிடலானார்கள்.

ஜாம்பவானுக்கும் அரக்கர்க்கும் போர்.

ஜாம்பவானும், தனது கூட்டத்தாற் சூழப்பட்டவனாய், கற்களாலும், நகங்களாலும், பற்களாலும் அரக்கர்களை இம்சிக்கலானான். அவ்வாறு பலபடியாலும் பீடித்த ஜாம்பவானை, வெகு பலம்பொருந்திய அவ்வரக்கர்கள், கொஞ்சமேனும் பயமில்லாமல், பலவகையாயுதங்களை யேந்தியவராய்ச் சூழ்ந்துகொண்டார்கள். அரக்கர்

சேனையை வாட்டிக்கொண்டிருந்த ஜாம்பவானை, பாணங்களாலும், கூரான கோடரிகளாலும், பட்டஸங்களாலும், தடிகளாலும், தோமரங்களாலும், அரக்கர்கள், போர்க்களத்தில் இம்சிக்கலானார்கள். முற்காலத்தில் வெகு கோபத்துடன் தேவர்களும் அசுரர்களும் சீறிப் பெருஞ்சண்டையிட்டதுபோல, அப்பொழுது, அரக்கர்களும் வானரர்களும் பெரும்போர் நடத்தினர்.

அனுமானது போர்.

அப்பொழுது, அனுமானும், கொஞ்சநேரம் இளைப்பாறுமாறு இலட்சுமணரைக் கீழே யிறக்கிவிட்டு, வெகுகோபங்கொண்டு ஆச்சாமரமொன்றைப் பிடுங்கிக்கொண்டு அரக்கர்களை ஆயிரக்கணக்காக அழித்திட்டான்.

இலட்சுமணரும் இந்திரஜித்தும் மீண்டும்போர் செய்தல்.

இந்திரஜித்து, தனது சிற்றப்பனுடன் வெகு பயங்கரமாகக் கொஞ்சநேரம் யுத்தஞ் செய்துவிட்டு, தனது சத்துருக்களை யடக்கக் காத்திருக்கின்ற இலட்சுமணரிடம் மீண்டும் போர்புரியுமாறு வந்துசேர்ந்தான். அப்போது, அவ்விருவரும், ஒருவரை யொருவர் போர்க்களத்திற் சந்தித்து, வெகு பயங்கரமாக யுத்தஞ் செய்யத் தொடங்கி, ஒருவர்மேல் ஒருவர் சரமாரிபொழிந்து சண்டையிட்டார்கள். பலவான்களான அவ்விருவரும், முதுவேனிற்காலத்துமுடிவில் மழைக்கூட்டங்களாற் சந்திரசூரியர் மூடப்படுவதுபோலப் பாணவலைகளால் மறையலானார்கள். அவ்விருவரும் பொருகையில், ஹஸ்தலாகவத்தால், அவர்கள் பாணங்களை அம்பறாத்தூணியிலிருந்து எடுப்பதும், நாணியில் தொடுப்பதும், வில்லை வலக்கையிலும் இடக்கையிலும் பிடிப்பதும், பாணங்களை விடுப்பதும், நாணியை யிழுப்பதும், பலவகைநிலையில் தங்குவதும், வில்லின் நாணியிற் கைப்பிடியை வைத்திருத்தலும், இலக்கைக் குறித்தலும் என்னும் இவற்றில் ஒன்றுவது ஒருவருக்கும் அங்குப் புலப்படவில்லை. இடைவிடாமல்

அவர்கள் விடுத்த பாணவலைகளால் ஆகாயமும் நன்முக நாற்புறங்களிலும் மூடப்பட்டபடியால், பொருளொன்றும் விளங்கவேயில்லை. இராவண குமாரனுன இந்திரஜித்தை இலட்சுமணரும், இலட்சுமணரை இந்திரஜித்தும் நிமிஷத்துக்கு நிமிஷம் எதிர்த்துப் போர்புரிந்தபொழுது, வெற்றி எந்தப்பக்கமோவென்று அறுதியிடமுடியாதவாறு பார்ப்பவர்களுக்குச் சந்தேகம் உண்டாயிற்று.

அவ்விருபலவான்களும் கூரிய அம்புகளைப் பலத்துடன் பொழிந்துகொண்டிருந்தபொழுது, ஆகாயம் கொஞ்சமேனும் இடைவெளியின்றி இருளால் முற்றிலும் மூடப்பட்டது. நூற்றுக்கணக்காகப் பாணங்களை அவ்விருவரும் எய்தபொழுது, பெருந் திக்குக்களும் மூலைத் திக்குக்களும் பாணங்களால் நிரம்பின. சூரியன் அஸ்தமிக்கும்பொழுது தோன்றுங் காரிருள்போல, எங்கும் பேரிருள் தோன்றி எல்லாரையும் நடுநடுங்கச் செய்தது. இரத்தவெள்ளம் நிரம்பிய பெருநதிகள், ஆயிரக்கணக்காகப் பெருகியோடின. மாமிசங்களைப் புசிக்கும் நரிமுதலிய கொடுவிலங்குகள், வெகுபயங்கரமாக ஊளையிட்டன. அச்சமயத்தில், காற்றும் வீசவில்லை; நெருப்பும் எரியவில்லை; மஹர்ஷிகள் உலகத்துக்கு க்ஷேமமுண்டாக வேண்டுமென்று பேசினர்கள். அப்போரின் அதிசயத்தைப் பார்க்க அப்போர்க்களத்துக்கு வந்திருந்த கந்தர்வர்களும் சாரணர்களும் பயந்து அவ்விடத்தை விட்டு அகன்றார்கள்.

அக்காலத்து அவ்விடத்திய வருணனை.

பிறகு, இந்திரஜித்தினது தேரில் ஸ்வர்ணபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுப் பூட்டப்பட்டிருந்த கருங்குதிரைகள் நான்கை, இலட்சுமணர், நான்குபாணங்களைவிடுத்துப் பிளந்தார். அதன்பிறகு, வெகு கூரானதும் வெண்ணிறமுடையதும் நன்முக இழுத்து விடப்பட்டதும் அழகிய இறகுகள் கட்டப்பட்டதும் நல்லமுனையமைந்ததும் தேவேந்திரனுடைய இடிக்கு ஒப்பானதுமான பல்லமென்னும் பாணவிசேஷத்தைப்

இலட்சுமணர் இந்திரஜித்தின்சாரதியை வதைத்தல்.

பேரொலியுண்டாகுமாறு எய்து, இலட்சுமணர், இந்திரஜித்தினுடைய தேர்ப்பாகன் தேரை ஓட்டிக்கொண்டிருக்கும்பொழுதே, வெகு சாமர்த்தியமாக அவனது தலையைத் தேகத்தினின்று பிரித்தெறிந்தார். தேர்ப்பாகன் மாண்டதும், வெகுவல்லமைதங்கிய மந்தேர்தரீகுமாரனுகிய இந்திரஜித்து, தானே தேர்செலுத்திவந்து, மீண்டு, வில்லேப் பிடித்து இலக்குமணரோடு போர்புரியலானன். அப்போர்க்களத்தில், அவ்வல்லமையைப் பார்த்த யாவரும் பேராச்சரியமடைந்தார்கள். இந்திரஜித்து குதிரைகளைத் தூண்டித் தேரை நடத்திவந்தபொழுது, அவன்மேல் இலட்சுமணர் பாணங்களை விடுத்தார்; அவன் தனது வில்லேக் கையிலெடுத்தபொழுது, அவனது குதிரைகளின்மேல் அம்புகளை யெய்தார். புரைசல்களை யுணர்வதிலும் அம்புகளை யெய்வதிலும் வல்ல இலட்சுமணர், சிறிதும் அச்சமின்றிச் சஞ்சரித்துக்கொண்டிருந்த இந்திரஜித்தின்மேல், அம்புக் கூட்டங்களை யெய்து பீடிக்கலானர்.

வானரர்கள் இலட்சுமணரைக் கொண்டாடுதல்.

இந்திரஜித்து, தனது தேர்ப்பாக னிறந்ததைப் பார்த்து, போரில் உற்சாகங் குறைந்தவனுய்த் துக்கமடைந்தான். அவ்வரக்கன் துக்கத்தால் முகம் வாட்டமுற்றதை, வானரவீரர்கள், கண்டு, வெகு சந்தோஷத்துடன் இலட்சுமணரைக் கொண்டாடினர்கள்.

பிரமாதி முதலியோர் இந்திரஜித்தின் தேர்க் குதிரைகளை வதைத்தல்.

அச்சமயத்தில், பிரமாதி, சரபன், ரபஸன், கந்தமாதனன் என்னுங் கொடிய பராக்கிரமமுள்ள நான்கு வானரவீரர்களும், இந்திரஜித்து தன்தேரைத் தானே நடத்துவதையும் பொருதவர்களாய், தாங்களிருந்த விடத்தைவிட்டு வேகமாக எழுந்து, அவ்விந்திரஜித்தின் நான்கு தேர்க்குதிரைகளின்மேலும் குதிரைக்கு ஒருவராகப் பொத்தென்று குதித்தார்கள். மலேக்கு ஒப்பான அந்நான்கு வானரவீரர்களும், அக்குதிரைகளின்மேல்

அவ்வாறுவிழவே, அவை, வாய்களினின்று இரத்தத்தைக் கக்கிக்கொண்டு நன்றாகத் துவைக்கப்பட்டவைகளாய், உயிரையிழந்து பூமியில் விழுந்தன. அவ்வாறு அந்நான்கு வானரவீரர்களும், அப்புரவிகளைக்கொன்று, இந்திரஜித்தினது இரதத்தையும் முறித்தெறிந்து, மறுபடியும் வெகு வேகமாக அவ்விடம்விட்டுக்கிளம்பி இலட்சுமணரது பக்கத்தில் வந்து நின்றார்கள்.

இந்திரஜித்தின் அம்புகளை இலட்சுமணர் தடுத்தல்.

அவ்விந்திரஜித்து, பாகனையிழந்து புரவிமாய்ந்து ஒடிந்துபோன தனது இரதத்தை விட்டுச்சரே லென்று கீழிறங்கி இலட்சுமணர்மேற் சரமாரி பொழியலானான். அதன்பிறகு, தேவேந்திரனுக்கு ஒப்பான இலட்சுமணர், பதாதியாய்க் கூரான பாணங்களை விடுத்துப் போர்புரிந்த அவ்விந்திரஜித்தை, தமது கூரான பாணங்களினால் தடுத்தார்.

தொண்ணூற்றேராஞ் சருக்கம்:
இந்திரஜித்தின் வதை.

லக்ஷ்மண இந்திரஜித்துக்களின் யுத்தம்.

மஹாபராக்கிரமசாலியான இந்திரஜித்தென்னும்அவ்வரக்கன், தனது இரதத்தின் குதிரைகள் வதைக்கப்பட்டதும், பதாதியாய் வெறுந்தரையில் நின்றுகொண்டு, வெகு கோபங்கொண்டவனாய், தனது பராக்கிரமத்தாற் கொதித்து நின்றான். ஒருவர்மீது ஒருவர் அம்புகளை எய்கின்ற அவ்விரு வில்வீரரும், தாம் தாம் வெற்றியடையும் பொருட்டு, காட்டானைகளும் காட்டெருதுகளும்போல உக்கிரமாகப் போர்புரியலானார்கள். அவ்வாறே, மற்றை அரக்கவீரர்களும் வானரவீரர்களும், ஒருவரையொருவர்

அடக்குபவர்களாய், தங்கள் தலைவர்களை விட்டு நீங்காமல், நாற்புறத்திலும் ஆங்காங்குச் சஞ்சரித்துக்கொண்டு யுத்தஞ் செய்யலானார்கள். அப்பொழுது, இந்திரஜித்து, அரக்கர்கள் யாவரையும் உற்சாகப்படுத்துபவனாய், அவர்களைப் புகழ்ந்து மகிழ்ச்சியோடு இவ்வாறு சொல்லலானான்:— "இப்பொழுது எல்லாத் திசைகளும் பேரிருளால் மூடப்பட்டிருக்கின்றன; ராக்ஷஸோத்தமர்களே! இதில், நமது கட்சிக்காரன் இவன், நமது சத்துரு இவன் என்பதுகூட விளங்கவில்லை. நீங்களெல்லாரும் வானரர்களை ஏமாற்றும்பொருட்டு, வெகு தைரியமாக யுத்தஞ்செய்யுங்கள். நான், இலங்கையிற் புகுந்து, தேரிலேறி, ஒரு நிமிஷத்தில் வருகின்றேன். நான் போகையில், துராத்துமாக்களாகிய இவ்வானரர்கள் என்னை மடக்கிக்கொண்டு யுத்தஞ்செய்யாமலிருக்கும்படி நீங்கள் அவர்களோடு போர்செய்யவேண்டும்" என்று சொல்லிவிட்டு, பகைவரை யழிக்கவல்ல இந்திரஜித்து, வானரர்கள் யாவர்க்கும் தான்போவது தெரியாதபடி மோசஞ்செய்து, இரதமேறித் திரும்பிவருமாறு இலங்கைக்குட் புகுந்தான். போரில் வெல்பவனும் மஹாபராக்கிரமசாலியுமான அவ்விராவணி, அழகியதாய், பொன்னுபரணங்கள் அலங்கரிக்கப்பெற்று, கத்தி பிராஸம் என்ற இவை ஆயிரக்கணக்காக நிரம்பி, உத்தமமான அசுவங்கள் பூட்டப்பட்டு, அவற்றின் கருத்தையறிந்து செலுத்தவல்லவனும் நன்மையானவற்றை யுணர்த்தவல்லவனான தேர்ப்பாகனுடன் கூடியிருந்த இரதமொன்றில் ஏறி, முக்கியர்களான அரக்கர்களாற் சூழப்பட்டு, தனது ஊழ்வினையின் வலிமையால் ஏவப்பட்டவனாய் இலங்கையினின்று புறப்பட்டான். பகைவீரர்களை யழிக்கவல்ல இந்திரஜித்து, நகரத்தைவிட்டு வெளிக்கிளம்பி, ஒருநொடியில், வெகு வேகமாகச் செல்லும் புரவிகளை நடத்திக்கொண்டு, விபீஷணருடன் இலட்சுமண

இந்திரஜித்து, வானரர்களை வஞ்சித்து இலங்கையிற்போய், இரதமேறி மீண்டு வருதல்.

ரிருந்த இடம் வந்துசேர்ந்தான். பிறகு, புத்திமானன அவன் அவ்வளவு வேகமாக இரதமேறிவந்ததைக் கண்டு, இலட்சுமணரும் விபீஷணரும் மற்றும் அங்கிருந்த வானர வீரர்கள் யாவரும் பேராச்சரிய மடைந்தார்கள்.

இந்திரஜித்தின் யுத்தம்.

பிறகு, இராவணகுமாரனன அவ்விந்திரஜித்தோ, வெகுகோபங்கொண்டவனாய், தனது பாணங்களைக் கூட்டமாகளய்து,வானரர்களை நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் போர்க்களத்தில் வதைசெய்யலானன். போரில் வெல்பவனன அவன், தனது வில்லைச் சக்கராகாரமாக வளைத்து வெகு ஸாமர்த்தியமாக அம்புகளை எய்து, சினத்தினால் வானரர்களையெல்லாம் வதைக்கலானன். வெகு பயங்கரமான பராக்கிரமமுள்ள அவ்வானரவீரர்களெல்லாரும்,

வானரர் லக்ஷ்மணரைச் சரண மடைதல்.

அவ்வாறு அவனால் வதைசெய்யப்படவே, அந்த அவஸ்தையைப் பொறுக்கமுடியாமல், பிரமதேவரைப் பிரஜைகள் சரணமடைவதுபோல, இலட்சுமணரைச் சரணமாக அடைந்தார்கள்.

லக்ஷ்மணர் இந்திரஜித்தின் வில்களை அறுத்து விடுதல்.

அப்பொழுது, இரகுவம்சத்தின் சந்தேஷத்தைப் பெருக்குமாறு இவ்வுலகத்தில் திருவவதரித்த அவ்விலட்சுமணர், கோபத்தால் நெருப்புப்போலக் கொதித்துக்கொண்டு, தமது கைத்திறத்தைக் காட்டுபவராய், அப்போர்க்களத்தில் இந்திரஜித்தின் வில்லை அறுத்தெறிந்தார். அவனும், வெகுவேகமாக மற்றொரு வில்லையெடுத்து நாணேற்றினன்; அதையும், இலட்சுமணர் மூன்று பாணங்களை விட்டு முறித்தெறிந்தார். அவ்வாறு வில்லை முறித்தபிறகு, இலட்சுமணர், அவ்வரக்கக்காளையின் மார்பின்மீது சர்ப்பத்துக்கொப்பான ஐந்துபாணங்களை விடுத்தார். அப்பாணங்கள், பெரிய வில்லினின்று பிரயோகிக்கப்பட்டவைக ளாகையால், அவனது தேகத்தைப்பிளந்து, இரத்தத்தாற் பூசப்பட்ட பெரும்பாம்புகள்

போலப் பூமியில் விழுந்தன. அவ்விந்திரஜித்து, அப்பாணங்களினுற் கவசம்பிளப்புண்டு வாயால் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு, வெகுபலமாகவிருந்த உறுதியான நாணியையுடைய மற்றொரு வில்லைக் கைப்பற்றி, இந்திரன் மழையை இடைவிடாமற்பொழிவதுபோல, இலட்சுமணர் மீது வெகு சாமர்த்தியமாகச் சரமாரி பொழியலானன். ஒருவராலும் சகிக்கமுடியாத இந்திரஜித்து விடுத்த அவ்வளவு அம்புகளையும், இலட்சுமணர், கொஞ்சமேனுங் கலங்காமல் தடுக்கலானர். அப்பொழுது, மகாவீரரான இலட்சுமணர், குழப்பமில்லாதவராய், இந்திரஜித்துக்குத் தமது உண்மையான வல்லமையைக் காட்டினர்: அது, பேராச்சரியமாகவிருந்தது. அன்றியும், அவ்விலட்சுமணர், அப்பொழுது, அதிகவிரைவாக அம்பு எய்யும் வல்லமை தம்மிடமிருப்பதை எல்லாரும் அறியும்படி, ஒவ்வொரு அரக்கன்மேலும் மூன்று பாணங்கள் விழுக்காடு எல்லா வரக்கர்மீதும் பிரயோகித்தார்; இந்திரஜித்தையும் பல பாணங்களைப் பிரயோகித்துப்புடைத்தார். சத்துருக்களைக் கொல்லவல்ல அவ்விலட்சுமணரால் இந்திரஜித்து அவ்வாறு அடிக்கப்பட்டதும், அவனும் அந்த இலட்சுமணர் மேற் பல பாணங்களை விரைவாக விடுத்தான்; ஆனல், அவைகள் தம்மை அணுகு முன்னமே, அதிரதரிற்சிறந்த இலட்சுமணர், அவைகளெல்லாவற்றையும் தமது கூரியபாணங்களால் முறித்தெறிந்தது மல்லாமல், கொஞ்சம் நுனிவளைந்து கூராகவிருந்த பல்லமென்னும் பாணவிசேஷத்தால் இந்திரஜித்தின் தேர்ப்பாகனது தலையையும் வெட்டி யெறிந்தார். அப்போது, தேர்ப்பாகன் போயும், முன்போலவே அக்குதிரைகள் கொஞ்சமேனும் வழுவாமல் இரதத்தை மண்டலாகாரமாக இழுத்துக்கொண்டு ஓடின; அதுவும் வெகு ஆச்சரியமாக இருந்தது. உறுதியான வல்லமை யமைந்த இலட்சும

இலட்சுமணர் இந்திரஜித்தின் தேர்ப்பாகனை வதைத்தல்.

ணர், போர்க்களத்தில் வெகுகோபங்கொண்டவராய், எல்லாருடைய மனத்தையும் பயத்தால் நடுங்கச் செய்துகொண்டு, தமது பாணத்தால் இந்திரஜித்தின் தேர்க்குதிரைகளை அடித்தார். பலசாலியான இராவணகுமாரனும், அவரதுஅச்செய்கையைச் சகிக்காதவனாய், பகைவரைக்கோபிக்கின்ற அவர்மேற் பத்துஅம்புகளை விடுத்தான். வச்சிராயுதம்போன்றனவும் சர்ப்பங்களின் விஷம்போலக் கொடுமையுள்ளனவுமான அப்பாணங்கள், இலட்சுமணருடைய தங்கக்கவசத்தின்மேற் பட்டதும், யாவும் ஒன்றுசேர்ந்து லயித்தன. அப்பொழுது, இந்திரஜித்து, இலட்சுமணருடைய கவசத்தைப் பிளக்கமுடியாதென்பதைத் தெரிந்துகொண்டு, வெகுகோபத்துடன், உறுதியான முனைகள் வாய்ந்த மூன்று அழகான பாணங்களை வெகு விரைவாகவும் வெகு சாமர்த்தியமாகவும் அவருடைய நெற்றியை நோக்கி விடுத்தான்; அம்மூன்றுபாணங்களும், தமது நெற்றியில் தைத்தபொழுது, போரிற்புகழ்பெற்ற அவ்விலட்சுமணர், அப்போர்க்களத்தில் மூன்று கொடுமுடிகளுடன் விளங்கும் பருவதம் போலக் காணலானார். அவ்வாறு தாம் அப்போர்க்களத்தில் அடிபடவே, இலட்சுமணர், தமது வில்லில் ஐந்து பாணங்களைத் தொடுத்து, குண்டலங்களணிந்து அழகாகவிளங்கிய அவ்விந்திரஜித்தின் முகத்தில் விடுத்தார். வெகு பயங்கரமான வல்லமையமைந்த வீரர்களான இலட்சுமணரும் இந்திரஜித்தும், மிகவுறுதியான விற்களை யேந்தியவராய், பல வகையான முனைகளமைந்த பாணங்களால் ஒருவரையொருவர் பலவிதமாக அடித்துக்கொள்ளலானார்கள்.

இந்திரஜித்துக்கும் லக்ஷ்மணர்க்கும் கைகலந்த போர்.

பிறகு, உடம்புமுழுவதும் இரத்தம்பெருகப் போர் செய்த அவ்விருவீரரும், அப்போர்க்களத்தில், பூத்திருந்த முண்முருக்கை மரங்கள் போலக் காணப்பட்டார்கள். தாமே வெற்றியடையவேண்டுமென்று கருதிய அவ்விரு

வில்வீரரும், ஒருவரையொருவர் கிட்டி, தம்தமது தேகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் பயங்கரமான அம்புகளாற் பிளந்துகொண்டார்கள்.

பிறகு, இந்திரஜித்து, போர்வெறிகொண்டவனாய், மூன்று பாணங்களை விடுத்து, விபீஷணருடைய முகத்தைப் பிளக்கலானன். அரக்கர் தலைவரான விபீஷணரை மூன்று அம்புகளாற் பிளந்தவுடனே, வானரசேனைத் தலைவர்கள் யாவரையும் தலைக்கொரு பாணமாக எய்தான்.

விபீஷணர் இந்திரஜித்தின் தேர்க்குதிரைகளைக் கொல்லுதல்.

அப்பொழுது, வெகுபராக்கிரமமுள்ள விபீஷணர், அடக்கமுடியாத கோபங்கொண்டவராய், தமது கதாயுதத்தினால் துராத்துமாவான இந்திரஜித்தின் தேர்க்குதிரைகளைக் கொன்றார். மஹாபராக்கிரமசாலியான இந்திரஜித்து, தேர்ப்பாகனை யிழந்து குதிரைகள் மாளப்பெற்ற அத்தேரிலிருந்து கீழேகுதித்து, அவ்விரதத்திலிருந்த சக்தியென்னும் படையை யெடுத்துத் தனது சிற்றப்பன்மீது எறிந்தான். அவ்வாறு விபீஷணரை நோக்கிவந்த அச்சக்தியைக் கண்டு, சுமித்திராகுமாரரான இலட்சுமணர், அதனைக் கூரியபாணத்தாற் பிளந்தார்; அது, பத்துத்துண்டுகளாகப் பூமியில் விழுந்தது.

விபீஷணர் மீது இந்திரஜித்து எறிந்த சக்தியை லக்ஷ்மணர் துணித்து விடுதல்.

தாம் குதிரைகளை வதைத்தபிறகும் அவ்விந்திரஜித்தினிடம் கோபம் நீங்காதவராய், உறுதியான வில்லையேந்திய விபீஷணர், அவனது மார்பை நோக்கி வச்சிராயுதத்துக்கொப்பான ஐந்து பாணங்களை விடுத்தார். குறித்த இலக்குத் தவறுமற்சென்ற பொன்முனையமைந்த அவைகளும், அவனது தேகத்தைப் பிளந்து, இரத்தத்தால் முற்றிலும்பூசப்பட்டவைகளாய், செந்நிறப்பெரும்பாம்புகள்போலப் பூமியில் விழுந்தன.

அப்பொழுது, தனது சிற்றப்பன்மீது அதிககோபங்கொண்ட மஹாபலசாலியாகிய இந்திரஜித்து, தனக்கு

யமதேவனுற் கொடுக்கப்பட்டதாயும் எல்லாப் ப[illegible]ராகிய ஞக்குள்ளும் உத்தமமாயுமிருந்த பாணமொன்றை, [illegible]கிர வரக்கர்களின்மடிவி லிருந்துகொண்டு எடுத்தான். வெகு வல்லமை தங்கிய கொடிய பராக்கிரமசாலியாகிய இலட்சுமணர், அதைக்கண்டு, மஹாத்மாவான குபேரன் தமக்கு ஸ்வப்நத்தில் தானாக அளித்தும் பிறரால் வெல்லுதற்கு அரியதும், ஸ-ராஸ-ரர்களுடன் தேவேந்திரனே எதிர்நின்றாலும் பொறுத்தற்கு அரியதுமான பாணமொன்றைக் கைப்பற்றினர். உழலைத்தடிகளுக்கு ஒப்பான தங்கள் கைகளால் அவ்விருவீரரும் அப்பாணங்களைச் சிறந்த விற்களிற் பூட்டி வில்லின் நாணியையிழுத்தபொழுது, அந்தவிற்கள் கிரௌஞ்சப்பறவைகள் போல ஒலித்தன. அவ்விருவீரரும், உயர்ந்தவிற்களில்சிறந்த அந்தப்பாணங்களைத்தொடுத்து விடுத்தபொழுது, அப்பாணங்களும் ஒப்பற்ற காந்தியால் விளங்கின. விற்களைவிட்டுக் கிளம்பிய அப்பாணங்கள், ஆகாயத்தை ஒளியால் விளங்கச்செய்துகொண்டு, ஒன்றை மற்றொன்று மூனையால் தாக்கிக் காந்தியுடன் உராய்ந்தன. கொடிய அவ்விரண்டு பாணங்களும் அவ்வண்ணம் உராய்ந்தபொழுது, நெருப்புப்பொறிகளுடனும் புகையுடனும் பயங்கரமானபெருநெருப்புத்தோன்றலாயிற்று. இரண்டு பெருங்கிரகங்கள் போன்ற அவ்விரு பாணங்களும், ஒன்றையொன்று அவ்வாறு எதிர்த்து, அப்போரில் நூறுதுண்டுகளாகிப் பூமியில் விழுந்தன. அப்போது அக்களத்தில் தங்கள் பாணங்கள் அவ்வாறு முறிந்ததை அவ்விருவீரரும், பார்த்து, மிகவும்வெட்கிக் கோபங்கொண்டார்கள்.

இலட்சுமணர், விபீஷணர்மீது இந்திரஜித்து விடுத்த அஸ்திரத்தை அடக்கி விடுதல்.

அப்பொழுது, இலட்சுமணர், அதிக கோபங்கொண்டவராய், வாருணாஸ்திரத்தைத் தொடுத்தார்; இந்திரஜித்து, போரிலே நிலைநின்றவனாய், ரௌத்திராஸ்திரத்தை விடுத்

அது, வெகு ஆச்சரியமான அவ்வருணஸ்த்ரத்தைப் பாழாக்கிற்று. அதன்பிறகு, மஹாபராக்கிரமசாலியும் போரில் வெல்லுந்தன்மையனுமான இந்திரஜித்து, கடுஞ்சினமடைந்தவனாய், இவ்வுலகத்தையேயெரிக்கக் கருதினவன்போல, ஜ்வலிப்பதான ஆக்கிநேயாஸ்திரத்தை விடுத்தான்; வீரரான இலட்சுமணர், ஸௌராஸ்திரத்தால் அதனைத் தடுத்தார். தனது அஸ்திரம் தடுக்கப்பட்டது கண்டு, இந்திரஜித்து, கோபம் மிகவும் மேலிடப்பெற்றவனாய், சத்துருவை நாசஞ்செய்யும்பொருட்டு, ஆஸுராஸ்திரமென்னுங் கொடிய அஸ்திரத்தை விடுத்தான்; அப்பொழுது, அவனது வில்லினின்று, வெகு பிரகாசத்துடன், சம்மட்டிகள் பெருந்தடிகள் சூலங்கள் இருப்புலக்கைகள் கதைகள் கத்திகள் கோடரிகள் என்ற இவைகளெல்லாம் வெளிப்புறப்பட்டன. எல்லாச்சத்துருக்களையும் வதைக்கத்தகுந்ததும் ஒரு பிராணியாலும் தடுக்க முடியாததுமான பயங்கரமாகிய அவ்வாஸுராஸ்திரம் தொடுக்கப்பட்டதைக் கண்டு, காந்திமானுகிய இலட்சுமணர், மஹேச்வராஸ்திரத்தை விடுத்து அவ்வஸ்திரத்தைத் தடுத்தார். அப்பொழுது, அவ்விரண்டு வீரர்க்கும் நடந்த பெரும்போரானது, வெகு ஆச்சரியமாக இருந்தது. ஆகாயத்திலிருந்த எல்லாப்பிராணிகளும் இலட்சுமணரைச் சூழ்ந்து நின்றன. வெகு பயங்கரமாகச் சத்தஞ் செய்கின்ற அரக்கர்கட்கும் வானரர்கட்கும் நேர்ந்த பயங்கரமான அப்போரில், வெகு ஆச்சரியமடைந்த பலபிராணிகளால் நிரம்பி ஆகாயம் விளங்கிற்று. ருஷிகள் பித்ருக்கள் தேவர் கந்தர்வர் கருடர் உரகர் இவர்கள் யாவரும், இந்திரனை முன்னிட்டுக்கொண்டு, அப்போரில் இலட்சுமணரைப் பாதுகாத்தனர்.

வில்வீதிரட்சுமணரும் இந்திரஜித்தும் அஸ்திரங்களாற் போர்செய்தல்.

அப்போது ஆகாயத்தில்நின்று யுத்தத்தைப் பல பிராணிகளும் காணுதல்.

அப்பொழுது, இராமபிரானது திருத்தம்பியாராகிய லக்ஷ்மணர், நெருப்புப்போன்ற பரிசமமைந்ததும் இந்திரஜித்தை வதைக்கவல்லதுமாகிய உத்தமமாகிய மற்றொரு பாணத்தைத் தொடுத்தார். நன்றாக இறகுகள் கட்டப்பெற்று வட்டவடிவமமைந்து கூரான முனையுடன்கூடி உறுதியுள்ளதும், பொன்னுபரணங்கள் அணியப்பெற்றுச் சரீரத்தைப்பிளக்கத்தக்கதும், எவராலும் தடுக்கமுடியாததும், சகிக்கமுடியாததும், அரக்கர்கள்மனத்திற் பயமுண்டாக்குவதும், பாம்புபோலக்கொடியதும், தேவர்களால் திரள்திரளாக வணங்கப்பெற்றதுமான அந்தப் பாணத்தினுல்தான், வெகு வல்லமை தங்கிய மஹாவீரராகிய இந்திரபகவானும், முற்காலத்தில் தேவாசுர யுத்தம் நடந்தபோது அசுரர்களை வென்றார். ஒருவராலும் வெல்லப்படாத ஐந்திராஸ்திரமாகிய அந்தச் சிறந்த அம்பை மனிதரிற் சிறந்த இலட்சுமணர், சிறந்த வில்லில் தொடுக்கலானர். உத்தம புருஷரான அந்தமகாவீரர், சிறந்த அப்பாணத்தை மேன்மைதங்கிய தமது வில்லில் தொடுத்து, உலகத்தை நாசம்பண்ணுங் காலன்போன்று, காணியையிழுத்து விடுபவராய், அந்த அஸ்திரத்தை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானர்:— "தசரதருடைய புதல்வரான ஸ்ரீராமர் தருமாத்துமாவென்பதும் உண்மையையே நோன்பாகக்கொண்டவரென்பதும் உண்மையானுல், போர்புரிவதில் அவருக்கு ஒப்பான்வர் ஒருவருமில்லை யானுல், பாணமே! நீ இந்த இந்திரஜித்தை வதைப்பாயாக" என்று சொல்லி, அப்போர்க்களத்தில், வீரரான இலட்சுமணர், அந்தப் பாணத்தை ஐந்திராஸ்திரமந்திரத்தால் அபிமந்திரித்து, காதுவரையில் நன்றாக இழுத்து, இந்திரஜித்தின் மேற் பிரயோகித்தார். அவ்வைந்திராஸ்திரம், அழகான குண்டலங்க ளணிந்து தலைப்பாகையுடன் விளங்கிய இந்திரஜித்தின் தலையை அறுத்துக் கீழே தள்ளிற்று.

இலட்சுமணர் ஐந்திராஸ்திரத்தால் இந்திரஜித்தை வதைத்தல்.

கழுத்தில் வெட்டுண்ட ராக்ஷஸராஜகுமாரனுடைய பெரிய அத்தலை, இரத்தத்தாற் பூசப்பட்டு, பொன்போல அப் போர்க்களத்தில் விழுந்துகிடந்தது. இந்திரஜித்து, வதைக் கப்பட்டவனுய், கவசத்துடனும் தலைப்பாகையுடனும் வில் லுடனும் பூமியில் விழுந்தான்.

இந்திரஜித்தின் வதத்தாலுண்டான சந்தோஷம்.

அவன் மாண்டதும், விருத்திராசுரன் மாண்டவுடனே சந்தோஷத்தால் தேவர்கள் சத்தமிட்டது போல, எல்லா வானரர்களும், விபீஷணருடன் களித்துச் சத்தமிடலானர்கள். பிறகு, தேவர்கள், முனிவர்கள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்ஸுக்கள் என்னும் இவர்களுடைய பேராரவாரம் ஆகாயத்தில் தோன்றிற்று.

அரக்கர்கள் சிதறியோடுதல்.

இந்திரஜித்து மாண்டதை யறிந்துகொண்ட ராக்ஷஸசேனை, வெற்றியால் விளங்கும் வானரவீரர்களாற் கொல்லப்படுகின்றதாய், பத்துத்திக்குகளிலும் சிதறியோடிற்று. வானரர்களால் வதைக்கப்படும் ராக்ஷஸவீரர்கள், தமது படைக்கலங்களையும் விட்டிட்டு, தமது உணர்வு அழிய, இலங்கையைநோக்கி ஓட்டமெடுத்தார்கள். அரக்கர்கள், பலவிதமாகப் பயந்து தாங்கள் ஏந்திவந்த ஆயுதங்களாகிய பட்டசங்கள் கத்திகள் கோடாலிகள் என்னும் இவைகளையெல்லாம் எறிந்துவிட்டு முறிந்தோடலானர்கள். வானரர்களாற் பீடிக்கப்பட்டுப் பயந்த அரக்கர்களிற் சிலர், இலங்கையில் நுழைந்தார்கள்; சிலர், சமுத்திரத்தில் விழுந்தார்கள்; சில அரக்கர்கள், மலையில் ஓடி ஒளித்துக்கொண்டார்கள். இந்திரஜித்து உயிரிழந்து போர்க்களத்தில் விழுந்துகிடந்ததைப் பார்த்தபிறகு, ஆயிரக்கணக்கான அவ்வரக்கர்களில் ஒருவனுவது அப்போர்க்களத்திற் காணப்படவில்லை. சூரியபகவான் அஸ்தமித்தபின்பு எவ்வாறு அவரது கிரணங்கள் மிச்சப்பட்டு நிற்கமாட்டாவோ அவ்

வாறே, வீரனுகிய அவ்விந்திரஜித்து மாண்டதும், அவனைச் சேர்ந்த அவ்வளவு அரக்கர்களும் நிற்காமல் திசைகள் தோறும் ஓடிவிட்டார்கள்.

இந்திரஜித்தினது வதையின் பின், உலகத்தின் நிலைமை.

மஹாபராக்கிரமசாலியாகிய அவ்விந்திரஜித்து, உயிரொழிந்த பிறகு, கிரணங்களையிழந்த சூரியன்போலவும் அவிந்தொடுங்கிய நெருப்புப்போலவும் இருந்தான். அவ்வரக்க மன்னவனுடைய குமாரன் மாய்ந்ததும், இவ்வுலகம்-பலவகைப் பீடைகள் நீங்கியதும், எல்லாத் தீமைகளும் நீங்கப்பெற்றதும், சூரியனதுவெயிலைக் காண்பதும் ஆயிற்று. பாவச்செய்கைகள் செய்துவந்த கொடிய அப்பாதகவரக்கன் மாய்ந்ததும், இந்திரனும் எல்லாத்தேவர்களும் களித்தார்கள். ஆகாயத்தில் தேவதுந்துபிகளின் முழக்கம் கேட்கலாயிற்று; அப்ஸரஸ்ஸுக்களின் நர்த்தனங்களினுலும் கந்தருவர்களின் சங்கீதங்களினுலும் இனியவொலியும் கேட்கலாயிற்று. ஆகாயத்திலிருந்து புஷ்பவருஷம் பொழிந்தது. இவ்வாறு அப்போது ஆச்சரியம் உண்டாயிற்று. கொடிய அவ்வரக்கனை வதைத்ததற்காக, எல்லாத்தேவர்களும், இலட்சுமணரைக் கொண்டாடலானுர்கள். நீர் தெளிந்தது; திசைகளெல்லாம் ஒளியால் விளங்கலாயின; தேவர்களும் தானவர்களும் களித்தனர். உலகங்களெல்லாவற்றுக்கும் பயமுண்டாக்கிய கொடிய அவ்வரக்கன் மாண்டதும், தேவர் கந்தருவர் தானவர் இவர்களெல்லாரும் வந்து ஒன்றுகூடி, "இனி அந்தணர் விசாரமில்லாமலும், அச்சமில்லாமலும் சஞ்சரிக்கலாம்" என்று பேசிக்கொள்ளலானுர்கள்.

அப்போது, ஒப்பற்ற வல்லமையமைந்த அவ்வரக்க வீரன் அவ்வாறு போரில் வதைக்கப்பட்டதை, வானர வீரர்கள், கண்டு, அதிக ஆனந்தமடைந்து களித்தனர். விபீஷணர் அனுமான் ரிக்ஷமன்னவனுகிய ஜாம்பவான் என்னும் இவர்கள், இலட்சுமணருடைய வெற்றிக்காகப்

பேரானந்தமடைந்தவர்களாய், இலட்சுமணரைப் புகழ்ந்தார்கள். அன்றியும், எல்லா வானரர்களும், சிங்கநாதஞ் செய்துகொண்டும், அட்டகாசம்பண்ணிக்கொண்டும், கர்ச்சித்துக்கொண்டும் இலட்சுமணரை நோக்கி வந்து அவரைச் சூழ்ந்து நின்றுகொண்டு சந்தோஷப்பட்டார்கள்; அன்றியும், வானரர்கள் தங்கள் வால்களை உயரத்தூக்கிக்கொண்டும், சில வானரர்கள் உயரத் தூக்கிய தங்கள் வால்களை உதறிக்கொண்டும் பூமியில் தட்டிக்கொண்டும், "இலட்சுமணர்க்கு வெற்றி" என்னும் வார்த்தையை அப்போது பலருங் கேட்குமாறு கூவினர். வானரர்கள், ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு, வெகு சந்தோஷத்துடன், ஸ்ரீராம லக்ஷ்மணருடைய உத்தமமான குணங்களை வெளிப்படக் காட்டுங் கதைகளைப் பேசினர்கள்.

வானரர்களின் மகிழ்ச்சி.

தேவர்கள், சாரண முகத்தால் இலட்சுமணர் இந்திரஜித்தை வதைத்ததைக் கேட்டு, முதலில், மிக்க மனக்களிப்பை யடைந்தனர்; பிறகு, 'அது உண்மையாயிருக்குமா?' என்ற ஒரு சந்தேகத்தாற் போர்க்களத்தையடைந்து, பிறராற் செய்வதற்கு அரிய அச்செயலைத் தமது அன்புள்ள நண்பரான லக்ஷ்மணர் செய்ததைக் கண்கூடாகக்கண்டு வியப்படைந்தார்கள்.

தேவர்களின் வியப்பு.

தொண்ணூற்றிரண்டாஞ் சருக்கம் :
இராமர் இலட்சுமணரைச் சிலாகித்தல்.

உத்தமவிலக்கணமமைந்த இலட்சுமணர், இரத்தத்தாற்பூசப்பட்ட தேகத்தையுடையவராய், இந்திரனை வென்றவனான இந்திரஜித்தைக் கொன்று சந்தோஷமடைந்தார். அதன்பிறகு, வெகுவல்லமைதங்கிய பராக்கிரமசாலியாகிய

இலட்சுமணர், ஜாம்பவானுடனும் அனுமானுடனும் மற்ற வானரர்களுடனும் ஒன்றுகூடி, விபீஷணரைப்பற்றிக்கொண்டு, சுக்கிரீவனுடன் ஸ்ரீராமரிருந்த விடத்துக்கு விரைவாகவந்தார். பிறகு, சுமித்திராகுமாரர், ஸ்ரீராமரை வலம் வந்து நமஸ்காரம்பண்ணி, இந்திரபகவானிடம் பிருகஸ்பதி போலத் தமது தமையனருகில் இருந்தார்.

இலட்சுமணர் வானரர்களுடன் இராமரை யடைதல்.

வீரராகிய லக்ஷ்மணர், தாம் வந்ததும், மஹாத்மாவான இராமபிரானிடம் கடுமையான இந்திரஜித்தின் வதத்தைத் தமது மழலைச் சொல்லினாற் கூறினர்; அப்பொழுது, வெகுசந்தோஷத்துடன்விளங்கிய விபீஷணர், இளைய பெருமாள் இந்திரஜித்தினுடைய தலையையறுத்ததை ஸ்ரீராமரிடம் விவரமாகத் தெரிவித்தார்.

இலட்சுமணர் தாம் இந்திரஜித்தை வதைத்ததைத் தெரிவித்தல்.

அம்மகாவீரரும், இந்திரஜித்து இலட்சுமணரால் வதைக்கப்பட்ட பெருஞ்சந்தோஷசமாசாரத்தைக்கேட்டு, வெகுமகிழ்ச்சியடைந்து, பின்வருமாறு சொல்லலானார்:— இலட்சுமண! நன்று; நான், உனது வீரச்செயலாற் களிக்கின்றேன். சிறந்த நற்காரியஞ் செய்தாய்; எப்பொழுது இந்திரஜித்து மடிந்தானோ, அப்பொழுதே நாம் இராவணனை வெற்றிகொண்டோ மென்று கருதுக" என்று சொன்னர். பிறகு, ஸ்ரீராமர், வெற்றிச் செல்வத்தால் வளர்ந்துள்ள இலட்சுமணரை உச்சிமோந்து, அவர் வெட்கப்பட்டபோதிலும், அவரிடம் தாம் வைத்திருந்த அன்பினால் அவரைத் தமது மடியின்மேல் உட்காரவைத்து இறுகத் தழுவிக்கொண்டு, தம்மிடத்து அன்புள்ள சகோதரரான அவரை அடிக்கடி பார்த்தார். பகைவனது அம்பின் முனையால் விரணப்பட்டுப் பெருமூச்சுவிட்டு வருந்திய இலட்சுமணரைப் பார்த்து, ஸ்ரீராமர், அதிக வருத்த

இராமபிரான் லக்ஷ்மணரைக் கொண்டாடுதல்.

மடைந்து, அவரைவிட மிகுதியாகத் தாம் பெருமூச்செறிந்து, அவரை மறுபடியும் உச்சிமோந்து, அவருடம்பைத் தமது கையால் விரைந்து தடவிக்கொடுத்து, அவரைத் தேற்றிச் சொல்லலானார்:— "இலட்சுமண! ஒருவராலும் செய்யமுடியாத மிக்க நன்மையான காரியத்தை, நீ இன்று செய்து முடித்தாய்; இன்று இராவணனுடைய குமாரன் மடிந்துபோனதனால், லோககண்டகனை இராவணனே போரில்மடிந்தானென்று எண்ணுகின்றேன். கொடியஅவ்வரக்கன் வதைக்கப்பட்டானுகையால், இன்று நான் சத்துருக்களை வென்றவனே. வீரனே! கொடியபாதகனை இராவணனுடைய வலக்கையை இன்று போரில் தெய்வாதினமாக நீ அறுத்தொழித்தாய்; அவன் இராவணனுக்குப் பெரும்பிடிப்பன்றே! விபீஷணரும், அனுமானும், இவ்விந்திரஜித்தோடு நீ செய்த போரில் மூன்று பகலும் இரவும் பெருங்காரியஞ் செய்திருப்பார்கள்; அவர்களுடைய ஆச்சரியமான வல்லமையினால்தான், அவ்வரக்கன் மடிந்தான். இன்று, நான், பகைவனற்றவனேன்; ஆயினும், தனது குமாரன் இறந்ததைக் கேட்டு, பெருஞ்சேனையோடு இராவணன் போர்புரியக் கிளம்புவான். அவ்வாறு தனது குமாரனுடைய வதையைக் கேட்டு மனக்கொதிப்புடன் வரக்கூடிய வெல்லுதற்கு அரிய வல்லமையுடைய இராவணனை, நான், சைனியத்தாற் சூழ்ந்துகொண்டு, ஒரு நிமிஷத்தில் வதைப்பேன். இலட்சுமண! இந்திரனென்ற இந்திரஜித்தையே வதைத்த உனது சகாயம் எனக்கு இருக்கின்றவரையில், நான் எவ்வாறு சீதையையும் எனது இராச்சிய சம்பத்தையும் அடையாமலிருக்க முடியும்?" என்றார்.

ஸ்ரீராமர், இவ்வாறு சொல்லித் தமது தம்பியைத் தேற்றி அவரை அன்புடன் கட்டித்தழுவி, வெகு சந்தோஷத்துடன் ஸுஷேணனை அழைத்து அவனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலுற்றார் :— "பேரறிவுடைய

வனே! நண்பரிடத்தில் அன்புகாட்டுகின்ற இலட்சுமணன் இப்போது அம்புமூனைகளால் விரணப்பட்டிருப்பதனால், அவ்வருத்தத்தை நீக்குதற்கு உரிய சிகித்ஸைகளை உடனே செய்ய வேண்டும். இலட்சுமணன் விபீஷணர் என்னும் இவ்விருவர்மேலும் தைத்திருக்கின்ற அம்புகளை வாங்கி விரணங்களை உடனே ஆற்றுவாயாக. அவ்வாறே, மரங்களைக்கொண்டு போர்புரிபவர்களான ரிக்ஷவானர வீரர்களில் இப்போரில் எவர்கள் அம்புமூனைகளால் விரணப்பட்டிருக்கின்றார்களோ, அவர்களெல்லாரையும் தக்கமுயற்சிசெய்து சௌக்கியப்படுத்துக" என்றார்.

இராமர் விரணப்பட்டவர்களின் விரணத்தை யாற்றுமாறு ஸுஷேணனுக்குக் கட்டளையிட, அவன் அவ்வாறே செய்தல்.

இவ்வாறு ஸ்ரீராமர் மகாத்துமாவாகிய அவ்வானர சேனபதியைப் பார்த்துச் சொன்னதும், அவன், இலட்சுமணருடைய மூக்கிற் சிறந்த ஔஷதியொன்றை வைத்தான். அவ்விலட்சுமணர், அதன் வாசனையை மோந்தவுடனே, சல்லியமற்றவரும் வேதனையற்றவரும் விரணப்பட்ட இடங்கள் கூடப்பெற்றவரு மாயினர். அவ்வானர சேனபதி, விபீஷணர் முதலான நண்பர்களுக்கும் வானர வீரர்கள்யாவர்க்கும் ஸ்ரீராமருடைய கட்டளையின்படியே வைத்தியஞ் செய்தான்.

இலட்சுமணர், தமது திருமேனியில் தைத்த சல்லியங்களும் வேதனையும் கொதிப்பும் நீங்கி, முன்புபோல் ஒரு கொடியில் சௌக்கியமாக மகிழ்ந்திருந்தார். இலட்சுமணர் முன்போலவே ஒருவித வருத்தமு மின்றிச் சௌக்கியமாக எழுந்து உட்கார்ந்ததைக் கண்டு, ஸ்ரீராமரும், சுக்கிரீவனும், விபீஷணரும், ஜாம்பவானும், சேனைகளுடன் வெகு நேரம் சந்தோஷத்தாற் களித்தார்கள். மகாத்துமாவாகிய ஸ்ரீராமர், ஒருவராலும் செய்யமுடியாத அக்காரியத்தை லக்ஷ்மணர் செய்ததற்காக அவரைப் புகழ்ந்தார்.

யாவரும் மகிழ்ந்திருத்தல்.

இந்திரஜித்து மாண்டதைக் கேட்டு, எல்லா வானர சேனபதிகளும் களிப்படைந்தார்கள்.

தொண்ணூற்றுமூன்றுஞ் சருக்கம்:
இராவணன் இந்திரஜித்தின் வதையாற் சோகப்பட்டு, சீதையைக் கொல்ல முயலுதல்.

அதன்பிறகு, இராவணனுடைய மந்திரிமார் இந்திரஜித்தின் வதையைக் கேள்விப்பட்டு உண்மையென்று தெரிந்துகொண்டு, அச்செய்தியை இராவணனிடம் வெகு துக்கத்துடன் தெரிவிக்கலானார்கள் :—

மந்திரிமார் இராவணனிடம் இந்திரஜித்தின் வதையைத் தெரிவித்தல்.

"மஹாராஜரே! நாமெல்லோரும் உயிரோடிருக்கும்பொழுதே, விபீஷணனைச் சகாயமாகப்பெற்ற இலட்சுமணன், வெகு வல்லமைதங்கிய இந்திரஜித்தை வதைத்து விட்டான். மகேந்திரனையும் வென்ற வெகுசூரனும் போரில் ஒருபொழுதும் தோல்வியடையாதவனுமான இந்திரஜித்தென்னுந் தங்களது புதல்வன், சூரனுகவிருந்த இலட்சுமணனைப் போரில் எதிர்த்து, அவனை வேண்டியமட்டும் தனது பாணங்களால் வருத்திவிட்டு, அவனால் வதைக்கப்பட்டவனாய், வெகு உயர்ந்ததான வீரசுவர்க்கஞ் சேர்ந்தான்" என்றார்கள்.

இராவணன், தனது புத்திரனை இந்திரஜித்துபோர்க்களத்தில் மடிந்த வெகு கொடிய சமாசாரத்தைக் கேட்டு, சோகம் தாங்கமாட்டாமல் மூர்ச்சையடைந்தான். அவ்வரக்கமன்னவன், வெகு நாழிகைக்கு அப்பால் மூர்ச்சைதெளிந்து, புத்திரசோகத்தால் அறிவு தடுமாறி, வெகுவாக வருந்தியவனாய், மிகவும் பரிதாபமாகப் புலம்பலானான்:— "ஹா! ராக்ஷஸசேனைத்தலைவர்களுள் முக்கியமானவனே! என்

இராவணனின் சோகம்.

குழந்தாய்! மகாரதனே! முற்காலத்தில் தேவேந்திரனே வென்ற நீ, இப்போது எவ்வாறு மனிதனுகிய இலட்சுமணனிடஞ் சிக்கிக்கொண்டாய்? ஹா ஹா! நீ கோபங் கொண்டுமட்டும் போர்க்களத்தில் நிற்பாயானுல், உனது பாணங்களால் காலாந்தகர்களையும் மந்தரமலையின் சிகரங்களையும் பிளந்தெறிவாயே! அப்படியிருக்க, இலட்சுமணன் போரில் உனக்கு ஒரு பொருட்டா? நான் யமனுடையவல்லமையைப் பாராட்டுகின்றேன்; ஏனெனில், மகாபாகுவே! அவன் இப்போது உன்னையும் மரணத்துக்கு உள்ளாக்கினனன்ரே! நீ செல்லும் வழிதான், தேவர்களாயிருப்பினும் வீரர்கள்யாவரும் ஏகும் வழி; எவனெருவன் தனது யஜமானனுக்காகத் தன்னுயிரையிழக்கின்ருனே, அவன் சுவர்க்கலோகஞ் சேர்கின்ருன். எல்லாத்தேவகணங்களும், லோகபாலர்களும், மஹர்ஷிகளும், இப்போது இந்திரஜித்து மாண்ட சமாசாரத்தைக் கேட்டு, இன்று முதல் பயமின்றிச் சுகமாகத் தூங்குவார்கள். இந்திரஜித்து ஒருவன் இல்லாமையால், இன்று, எனக்கு, காடுகளுடன் கூடிய இப்பூமண்டலம் முழுதும், சூனியமாகத் தோன்றுகின்றது. மலைக்குகைகளில் பிடியானைகள் கதறுவது போல, இன்று, நமது அந்தப்புரத்தில் ராக்ஷஸஸ்திரீகள் புலம்புவதை நான் கேட்க நேரிடுமே! பகைவர்களை வாட்டுபவனே! உனது இளவரசு பட்டத்தையும் இலங்கையையும் அரக்கர்களையும் தாயையும் என்னையும் மனைவியையும் விட்டு, அடா குழந்தாய்! நீ எங்குப்போயினுய்? வீரனே! நான் யமலோகத்துக்குச்சென்ருல், நீ எனது உத்தரகிரியைகளைச் செய்யவேண்டியவன்; இதற்கு மாருகவல்லவோ இப்பொழுது எல்லாக்காரியங்களும் முடிந்தன. சுக்கிரீவன் இலட்சுமணன் இராமன் என்னும் இவர்கள் உயிருடனிருக்கையில், எனது மனச்சள்ளையை யொழிக்காமல், எங்களை விட்டிட்டு, நீ எங்குப் போய்விட்டாய்?" என்று புலம்பினுன்.

இவ்வாறு பலவிதமாக அரக்கர்தலைவனனை இராவணன் புலம்பிக்கொண்டிருந்தபொழுது, புத்திரனை யிழந்த சோகமானது, அவனுக்குப் பெருங்கோபத்தை மூட்டிற்று. இயல்பாகவே வெகுகோபமுள்ள அவ்விராவணனை, புத்திரன் மாண்டதனால் தோன்றிய சோகமானது, கோடைக்காலத்தில் சூரியபகவானை அவனது கிரணங்கள் உக்கிரமாக்குவதுபோலக் கொடியவனாக்கிற்று. அப்பொழுது, அவன், தனது இருபது புருவங்களையும் நெரித்துக் கொண்டு, பிரளயகாலத்திற் சமுத்திரங்களின் பேரலைகள் முதலைகளால் உக்கிரமாக விளங்குவதுபோல விளங்கலானான். கோபத்தால் அவன் கொட்டாவி விட்டபொழுது, விருத்திராசுரனது வாயிலிருந்து புகையுடன் நெருப்புக் கிளம்பியதுபோல, புகையுடன் நெருப்பு வெளிப்புறப்படலாயிற்று. குமாரனுடைய வதையால் வருந்திக்கொண்டிருந்த அவ்வீரன், கோபத்திற்குப் பரவசனாகி, தனது புத்தியாற் கொஞ்சநேரம் ஆலோசித்து, உடனே சீதையை வதைக்கலா மென்று எண்ணங்கொண்டான். இயல்பாகவே சிவந்திருந்த அவன் கண்கள், கோபத்தீயாற் பின்னுஞ் சிவந்து வெகு பயங்கரமாக எரிந்துகொண்டு விளங்கின. இயற்கையாகவே கொடியதான அவனது உருவம், கோபம் மிகப்பெற்று, உருத்திரமூர்த்தியினுடைய உருவம் போலக் கிட்டுதற்குங் கூடாததாகக் காணப்பட்டது. நன்முக எரியும் விளக்குகளினின்று எண்ணெய்ச்சுடர் விழுவதுபோல, கோபத்தாற் கொதித்த அவனது கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் விழலாயின. அவன் தனது பற்களைக் கடகடவென்று கடித்தபொழுது உண்டான சத்தமானது, பலிஷ்டர்கள் பெருஞ்செக்கைச் சுழற்றியாட்டும்பொழுது உண்டாகுஞ் சத்தம்போலக் கேட்கலாயிற்று. பிரளயகால அக்கினிபோல அழன்று எந்தெந்தத் திசையைத் தனது கண்களினால் இராவணன் பார்த்

இராவணனின் சினம்.

தானே, அவ்வதத்திசையிலிருந்த அரக்கர்களெல்லாரும், பயத்தால் நடுநடுங்கி அங்கங்கே பதுங்கிக்கொண்டார்கள். சராசரங்களையெல்லாம் புஜிக்கவேணுமென்று விருப்பங் கொண்ட அந்தகன்போலக் கோபங்கொண்டு எல்லாத் திசைகளையும் விழித்துப்பார்க்கின்ற அவ்விராவணனை அரக்கர்கள் அணுகவும் நடுங்கினார்கள்.

இராவணன் யுத்தஸந்நாஹத்தின்பொருட்டு அரக்கர்களைத் தூண்டுதல்.

பிறகு, வெகுகோபங்கொண்டிருந்த ராக்ஷஸராஜனை இராவணன், அரக்கவீரர்களைப் போரில் நிலைநிறுத்தும்பொருட்டுப் பின் வருமாறு சொல்லலானான் :— "நான், பல்லாயிரமாண்டு ஒருவராலும் செய்யப்படாத வெகு கோரமான கடுந்தவம்புரிந்து, ஆங்கார்ங்குப் பிரமதேவரைச் சந்தோஷப்படுத்தினேன். எனது தவத்தின் பயனாலும் பிரமதேவரது அநுக்கிரகத்தாலும், எனக்கு அசுரர்களாலாவது தேவர்களாலாவது பயம் ஒருபோதும் நேரவில்லை. சூரியனுக்கொப்பான ஒளியோடு விளங்குகின்ற எனது கவசமும், அக்கடவுளால் எனக்கு அளிக்கப்பட்டது ; தேவர்களுடனும் அசுரர்களுடனும் செய்தபோரில், தேவேந்திரனது வச்சிராயுதத்தாலும் சக்தியினாலும்கூட அக்கவசத்தைப் பிளக்க முடியவில்லை. நான் அக்கவசத்தை யணிந்துகொண்டு இரதமேறிப் போர்க்களத்தில் வந்துநின்றால், என்னைவெல்ல யாரால்தான் முடியும்? தேவேந்திரனே கோரமாக வந்து எதிர்த்தபோதிலும் என்முன் நிற்கவும் முடியாதன்றே! நான் செய்த தவத்தால் மகிழ்ச்சியடைந்த பிரமதேவர், தேவாசுரர்களுடன் போர்புரிகையில், எனக்கு ஒரு பெரிய வில்லும் அம்பும் கொடுத்திருக்கின்றாரே ; பயங்கரமான அவ்வில்லை, பெரும் போரில் இராமலட்சுமணர்களை வதைக்குமாறு, இன்றையதினம் நூற்றுக்கணக்காய்ப் பேரிகைகளை அடித்துத் தூக்கிக்கொண்டு வாருங்கள்" என்றான்.

அதன்பிறகு, சூரனான இராவணன், தனது குமாரன் வதைக்கப்பட்ட சோகத்தாற் பரிதவித்து, வெகுகோபமடைந்து, சீதையைக் கொல்லவேண்டுமென்று தனது புத்தி

யால் ஆராய்ந்து நிச்சயித்தான். வெகுகோரமான தோற்ற முள்ளவனும் கொடியவனும் கோபத்தாற் சிவந்த கண்களை யுடையவனு மான அவ்விராவணன், சீதையைக்கொல்ல நிச்சயித்த பின்பு, அருகிலுள்ள அரக்கர்களைப் பார்த்து வெகுபரிதாபமாகச் சொல்லலானுன் :—"எனது குமாரன் வானரர்களை வஞ்சிக்கும்பொருட்டு மாயாசீதையைக் காட்டி வதைசெய்ததோ பொய்யானது ; நானே, எனக்கு விருப்பமான அச்செயலை உண்மையாகவே செய்வேன் : அந்த கூடத் திரியாதமன்மீதே ஆசை வைத்திருக்கும் சீதையை நாசஞ்செய்வேன்" என்று இவ் வாறு தனது மந்திரிகளைப் பார்த்துச் சொல்லிவிட்டு, கத்தி யொன்றை விரைவாக உருவி யெடுத்தான். புத்திரசோகத் தாற் புத்திதடுமாறிய அவ்விராவணன், வெகு கோபத் துடன், மாலைகளால் அலங்கரிக்கப்பெற்று நிர்மலமான ஆகாசம்போல் விளங்கிய அக்கத்தியைக் கையிலெடுத்துக் கொண்டு, தனது மனைவிமார்களும் மந்திரிமார்களும் தன் னைச் சூழ்ந்துவர, சீதையிருந்த இடத்தை நோக்கி வெகு வேகமாகக் கிளம்பினுன். அவ்வாறு இராவணன் புறப் பட்டபொழுது, அரக்கர்கள் சிங்கநாதம் பண்ணலானுர்கள் ; அன்றியும், அவன் அவ்வாறு கோபங்கொண்டதைக் கண்டு, அரக்கர்கள், ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு இவ்வாறு பேசலானுர்கள் :—"இன்று நமது இராவணனு ரைக் கண்டமாத்திரத்தில், ராமலக்ஷ்மணரென்னும் அவ் விரு சகோதரரும் மிகவருந்துவார்கள் ; இவர் கோபங் கொண்டு திக்குப்பாலகர் நால்வரையும் ஜயித்திருக்கின்ரு ரன்ரே ! சத்துருக்கள் அநேகம்பெயர்கள் இவராலே போரில் வதைக்கப்பட்டார்களே ! நமது இராவணனுர், இம்மூவுலகங்களிலுமுள்ள உத்தமவஸ்துக்க ளெல்லா வற்றையும் கொண்டுவந்து அனுபவிக்கின்ரூர். வல்லமை யிலும் பலத்திலும் இவருக்கு நிகரானவர் இவ்வுலகத்தில்

இராவணன் சீதையைக் கொல்லநினைந்து அசோகவனிகை யைச் சார்தல்.

ஒருவரு மில்லை" என்று இப்படி அவர்கள் பேசிக்கொண் டிருந்தபொழுது, இராவணனும் கோபம் மேலிடப்பெற் றுச் சீதையிருந்த அசோகவனிகையை நோக்கி வெகு விரை வாகச் சென்றான். நல்ல புத்திகளைச் சொல்லும் நண்பர் களால் தடுக்கப்பட்டும், இராவணன், வெகு கோபத்துடன், ஆகாயத்தில் அங்காரகன் ரோகிணியைத் துரத்துவது போல, அசோகவனத்தில் சீதையை நோக்கி யோடினான்.

அவ்வசோகவனத்தில் அரக்கமடந்தையராற் பாது காக்கப்பட்டிருந்த குற்றமற்ற அச்சீதாதேவியும், சினத் தோடு கையிற் கத்தியை யெடுத்துக்கொண்டு வந்திருந்த இராவணனைக் கண்டாள். தானிருந்த விடத்தை நோக் கிக் கத்தியுடன் இராவணன் வருவதையும், நண்பர்கள் பலவிதமாக அவனைத் தடுத்தும் அவன் கேட்காம லிருப்பதையும் கண்டு, சீதை, வெகு துக்கமடைந்து, பின் வருமாறு புலம்பலானாள் :—"இந்தத் துர்ப்புத்தி, இவ் வளவு கோபத்துடன் என்னை நோக்கி ஓடிவருவதனால், நாதனையுடைய என்னை ஒரு அநாதையை வதைப்பது போல வதைப்பான். இந்தப்பாவி "நீ என்மனைவியாகவேண்டும்" என்று கணவ னையே அநுசரித்திருக்கும் என்னைப் பல முறை கேட்டுக்கொண்டான்; நான் ஒவ்வொரு முறையி லும் அவனை அவமதித்துவந்தேன். இது, நிண்ணம். அவன் என்மீது அடியோடு மனம் விட்டவனாய், கோப மும் துயரமும் மேலிட என்னை வதைக்கவே இப்பொ ழுது வருகின்றான். ஒருகால், உடன்பிறந்த புருஷசிங்கங் களான இராம லட்சுமணர்களை, எனக்காக, துஷ்டனான இவ்வரக்கன், போரில் இப்போது கொன்றானே? அப்படி யிருக்குமானால், எனக்காக அவ்விருராஜகுமாரரும் இன்று மரணமடைந்ததைப்பற்றி என்பிறப்பைத்தான் பழிக்க வேணும். அல்லது, அரக்கனான இக்கொடும்பாவி, தனது மகன் மாண்ட சோகத்தால், ஸ்ரீராம லட்சுமணர்களைக்

சீதையின் புலம்பல்.

கொல்லமுடியாமல், என்னைத்தான் எரிக்கின்றனை? ஐயோ! முதலில் அனுமான் சொன்னதை நான் எனது அற்பபுத்தியாற் கேளாமற் போனேனே! சூற்றமற்ற நான் அவனுடைய முதுகின்மேல் ஏறி அப்பொழுதே போயிருந்தால், பர்த்தாவின்மடியை யடைந்த நான், இப்பொழுது தவிப்பதுபோலத் தவிக்கமாட்டேனே! ஒரு பிள்ளையை மாத்திரம்பெற்ற கௌசல்யை தனது புதல்வன் போரில் மடிந்ததைக் கேட்டால், மனம்விண்டு மடிந்து போவாளென்று கருதுகின்றேன். அவ்வம்மணி, மஹாத்மாவான என்கணவருடைய உற்பத்தியையும் பாலியத்தையும் யௌவனத்தையும் தருமகாரியங்களையும் ரூபத்தையும் நினைந்து நினைந்து புலம்புவாள். அவ்வுத்தமி, தனதுபுத்திர னிறந்த துக்கத்தால் ஆசைகள்யாவும் ஒழிந்தவளாய், அவருக்குச் சிராத்தம் கொடுத்துத் தீயிலாவது குதிப்பாள்; அல்லது, தண்ணீரிலாவது விழுவாள். கொடிய பாவியான அம்மந்தரை யென்னுங் கூனி கெட்டாள்! அவளாலல்லவோ கௌசல்யை இவ்வகைத் துயரங்களுக்கு உள்ளானாள்?" என்றாள்.

அச்சீதாதேவி, ரோகிணீநட்சத்திரம் சந்திரனைப் பிரிந்து அங்காரகனிடம் அகப்பட்டுக்கொண்டு புலம்புவது போல, இவ்வாறு எளிமையாகப் புலம்புவதைக் கண்டு, அப்போது அவ்விராவணனுடைய மந்திரிகளில் வைத்து, புத்திமானும் நல்லொழுக்கமுள்ளவனுமான சுபார்சுவனென்ற அரக்கன், பல அமைச்சர்கள் அவ்விராவணனைத் தடுத்துக் கொண்டிருந்தபொழுது, பின் வருமாறு சொல்லலானான்:— "தசக்கிரீவரே! தாங்கள் வைசிரவணருடைய நேரான தம்பியாயிருந்து, தர்மமென்பதைக் கோபத்தால் மறந்துவிட்டு, சீதையைக் கொல்ல எவ்வாறு கருதுகின்றீர்? அரக்கவேந்தரே! வீரரே! தாங்கள்வேதங்களையெல்லாம் ஓதி, விரதஸ்நானஞ் செய்து, எப்

இராவணன் சீதையைக் கொல்ல முயன்றதை ஸுபார்சுவன் தடுத்தல்.

போதும் ஸ்வகர்மானுஷ்டானத்தில் நிஷ்டையுடன் இருந்து, இவ்வாறு பெண்வதைசெய்ய எவ்வாறு நினைக்கின்றீர்கள்? மிக்க ரூபத்துடன் விளங்குஞ் சீதை, எப்பொழுதாவது தங்களுக்கு வசமாவாளென்று நம்பியிருங்கள். இப்பொழுது, தங்களுக்கு உண்டாயிருக்குங் கோபத்தை, எங்களுடைய உதவியுடன், ஸ்ரீராமனிடம் திருப்புங்கள். கிருஷ்ணபட்ச சதுர்த்தசிதிதியாகையால், இன்றையதினமே யுத்தத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்; காலை அமாவாசை வெற்றியை யடையும் பொருட்டுப் புறப்படுங்கள். வெகு சூரரும் புத்திமானும் அதிரதவீரரும் சக்தியை யேந்திய வருமான தாங்கள், சிறந்த தேரி லேறிச் சென்று இராமனை வதைசெய்துவிட்டுச் சீதையை யடைவீர்கள்" என்றான்.

இராவணன் மீண்டு சபைக்குச் செல்லுதல்.

இராத்துமாவாகிய அவ்விராவணன், தனது நண்பன் சொன்னதை நியாயமான புத்தி யென்று ஒப்புக்கொண்டு, வீரனுகிய அவன், தனது மாளிகைக்குத் திரும்பி, அங்கிருந்து புறப்பட்டுத் தனது நண்பர்களுடன் சபைக்குச் சென்றான்.

தொண்ணூற்று நான்காஞ் சருக்கம்:
மூலபல யுத்தம்.

அவ்விராவணன், வெகு பரிதாபமடைந்து, மிக்க துயரத்துடன் சபையிற் சேர்ந்து, சிறந்த சிங்காசனத்திலுட்கார்ந்து, சினங்கொண்ட சிங்கம்போல நெட்டுயிர்ப்புக் கொண்டான். அதன்பிறகு, சேனைகளுக்குத் தலைவர்களான அரக்கர்கள் யாவரையும் பார்த்து, புத்திரசோகத்தால் மெலிந்தவனன மகாபலம்பொருந்திய இராவணன், கைகளைக் கூப்பிக்கொண்டு, பின்வருமாறு சொல்லலானான்:—

இராவணன், சபையைச்சேர்ந்த சேனைபதிகளைப் போர்செய்ய ஏவுதல்.

"நீங்களெல்லாரும், யானைகள் குதிரைகள் இரதங்கள் பதாதிகள் என்ற சதுரங்க சேனைகளுடன் புறப்படுங்கள். அவ்விராமன் ஒருவனையே

நீங்களெல்லாரும் சூழ்ந்துகொண்டு, மழைக்காலத்து மேகங்கள் மழையைச் சொரிவதுபோலச் சரமாரிபொழிந்து அவனைக் கொன்றுவிடுங்கள்; இல்லாவிடில், நீங்கள் நன்றாக அடித்துக் காயப்படுத்தியிருக்கும் அவ்விராமனை, நானே, நேரில், போர்க்களத்தில், உங்கள் கண் முன்பாக, நாலைக்குக், கூரான பாணங்களால் வதைப்பேன்" என்றான்.

அரக்கர்கள் சென்று வானரருடன்பொருதல்.

இவ்விதமாக அவ்வரக்கமன்னவன் சொன்னதைக் கேட்டதும், அவ்வரக்கர்கள், பலவகைச்சேனைகள் சூழ்ந்துவர விரைவாகச்செல்லுந் தேரின்மீதேறிச் சென்றார்கள்; பகைவர்களின் தேகத்தைப் பிளக்கத்தக்கனவான உழலைத்திடிகள் பட்டசங்கள் அம்புகள் கத்திகள் கோடரிகள் என்ற ஆயுதங்களை, வானரர்கள்மேல் எறியலானார்கள். வானரர்களும், மரங்களையும் மலைகளையும் கணக்கில்லாமல் அரக்கர்கள்மேல் வீசியெறியலானார்கள். அந்தயுத்தம், வெகு பயங்கரமாகவும் வெகுநெருக்கமாகவும், அன்று காலைமுதல் அரக்கர்களுக்கும் வானரர்களுக்கும் நடக்கலாயிற்று. அப்போது, அந்த அரக்கர்களும் வானரர்களும், பலவிதமான கதைகளாலும், பிராஸங்களாலும், கத்திகளாலும், கோடரிகளாலும், அப்போரில் ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளலானார்கள்.

பிணக்களச்சிறப்பு.

அவ்வாறு வெகு மும்முரமாகப்போர்நடந்தபொழுது, அப்போர்க்களத்தினின்று மேலெழுந்த பெருந்தூளியானது, ராக்ஷஸ வானரர்களுடைய தேகத்தினின்று பெருகிய இரத்தத்தால் அடங்கிற்று. யானைகளையும் இரதங்களையும் இருகரைகளாகவும், குதிரைகளை மீன்களாகவும், கொடிகளை மரங்களாகவும் வைத்துக்கொண்டு, சரீரமென்ற தெப்பத்தைக் கொண்டரக்தநதி, அப்போர்க்களத்திற் பெருகியோடலாயிற்று.

அப்பொழுது, எல்லாவானரவீரர்களும், இரத்தவெள்ளத்தால் நனைக்கப்பட்டவர்களாய், துள்ளிக்கிளம்பி

அரக்கர்களுடைய கொடிகள் கவசங்கள் இரதங்கள் அசுவங்கள் பலவகை யாயுதங்கள் என்னும் இவைகளை யெல்லாம் முறித்தார்கள். வானரர்கள், அரக்கர்களுடைய தலை மயிர்கள். காதுகள் நெற்றிகள் மூக்குகள் என்னும் இவைகளை, தங்களுடைய கூரான பற்களாலும் நகங்களாலும் பற்றியறுத்தார்கள். பழம்பழுத்த மரத்தைப் பறவைகள் நாடிச்செல்வதுபோல, ஒவ்வொருஅரக்கனையும், அப்போர்க்களத்தில், நூறுவானரவீரர்கள் நாடிச் சென்றார்கள். மலைக்கொப்பான சலியாத தன்மையுள்ள அரக்கர்கள், கதைகளாலும், பிராஸங்களாலும், கத்திகளாலும், கோடரிகளாலும், பயங்கரமாகிய வடிவமமைந்த வானரர்களை வதைக்கலானார்கள். அவ்வாறு அந்தப் பெரிய வானரசேனை அரக்கர்களால் வதைக்கப்படவே, வானரர்கள், எல்லாருக்கும் சரணியராகவிருந்த தசரதகுமாரரான ஸ்ரீராமரைச் சரணமாக அடைந்தார்கள்.

அரக்கர்களால் வதைக்கப்படும் வானரர்கள் இராமரைச் சரணமடைதல்.

அப்பால், பராக்கிரமமமைந்த ஸ்ரீராமர், சினங்கொண்டு வில்லைக் கையிலேந்தி அரக்கசேனைக்குட் புகுந்து பாணங்களை மழைபொழிவதுபோலப் பொழியலானார். ஸ்ரீராமர் அம்புகளினால் வெகுகடுமையாக எரித்துக்கொண்டு அப்போர்க்களத்தில் வந்துநின்றதைக் கண்டதும், ஆகாயத்திற் சூரியனைக்கண்ட மேகங்கள்போல, அரக்கர்கள், அவர்முன் நிற்கவும்முடியாமற் போயினர். அப்போர்க்களத்தில், அரக்கர்கள், ஸ்ரீராமர் தங்களுயிரைப்போக்கும் பயங்கரமான காரியங்களைச் செய்துமுடித்ததைப் பார்த்தார்களேயல்லாமல், அவர் செய்துகொண்டிருந்த வகையைப் பார்க்கவில்லை. மரங்களுள்ள விடத்தில் எளிதாக ஊகிக்கப்படுகின்ற காற்றைப் பிரதியட்சமாகக் காணுதுபோல, அரக்கர்கள், பெருஞ்சேனையை நிலைக்கவொட்டாமலும் தேரைப் பறக்கடித்துக்கொண்டு மிருந்த ஸ்ரீராம

இராமர் மூலபலத்தை மாய்த்தல்.

ரைப் பிரதியட்சமாகக் காணமுடியாதவராயினர். ஆங்காங்கு வெட்டுண்டும், தேகம் பிளக்கப்பட்டும், பாணங்களால் எரிக்கப்பட்டும், மிகவும் முறிபட்டும், ஆயுதங்களால் விரணப்பட்டுமிருந்த சேனைகளைக் கண்டார்களேயன்றி, இவற்றைச்செய்கின்ற ஸ்ரீராமரைப் பார்க்கமுடியவில்லை; எனெனில், அவர், ஓரிடத்தில் நிலைத்திராமல் அவ்வளவுவிரைவாகத் தொழில்புரிந்தார். இந்திரியங்களின்பயனை யநுபவிக்கின்ற தமது ஆத்மாக்களை ஜநங்கள் உணராதவாறுபோல, தமது சரீரங்களைத் துளைக்கின்ற ஸ்ரீராமரை அரக்கர்கள் நேராகக் காணமாட்டாதவராயினர். "இவன் யானைச்சேனையைக் கொல்லுகின்றான்; இவன் மகாரதர்களை வதைக்கின்றான்; இவன் கூரியபாணங்களாற் பதாதிகளையும் குதிரைகளையும் வதைக்கின்றான்" என்று அப்போர்க்களத்தில் அரக்கர்கள்யாவரும் இராமரைப்போலத் தோன்றிய தங்களையே ஒருவரையொருவர் வெகுகோபத்துடன் அடித்துக்கொண்டு மாண்டார்கள். * தாம் பிரயோகித்த மிக்க மகிமையுள்ள கந்தர்வாஸ்திரத்தால், அரக்கர்கள் மோகமடைந்து அவ்வாறு தங்களைத் தாங்களே இராமராகப் பிரமிக்கும்படிசெய்து சத்துருசேனையையெரித்த உண்மையான ஸ்ரீராமரை, கண்டறிய முடியாதவராயினர். அவ்வரக்கர்கள், சிலவேளையில், அச்சத்தால், ஆயிரம் இராமர்களைப் பார்ப்பார்கள்; சில வேளையில், ஒரு இரா

* மோஹத்தை யுண்டாக்கும் கந்தர்வாஸ்திரத்தால் ஸ்ரீராமர் அரக்கர்களையடித்தாரானால், இந்திரஜித்தைப்போல இவரும் மாயாவியாய்விடுவரேயென்னில், இராமர் கந்தர்வாஸ்திரத்தைப்பிரயோகித்துப் பலவிடங்களிலும் வேகமாகச் சுழன்று போர்செய்கையில், இராமரிருந்த இடத்தைக்குறித்து அரக்கர்தொடுத்த அம்புகள், அங்கு அவர் இல்லாமையால், அங்கு நிற்கின்ற தம்மவர் மீது பட, அவர்கள் இறந்தனர்; இவ்வாறு மோசம்போய், அரக்கர் ஒருவரையொருவர் அடிக்கநேர்ந்ததேயன்றி, இராமர்செய்த மாய் மொன்றும் இல்லை; விரைந்துதொழில்செய்தலொன்றே இராமரிடத்து உள்ள தென்க.

மரையே பார்ப்பார்கள்; சிலசமயத்தில், அவ்வரக்கர்கள், மஹாத்மாவான ஸ்ரீராமருடைய தங்கமயமான நுனியையுடைய பெரு வில் கொள்ளிவட்டம்போல இடைவிடாமற் போர்த்தொழிலிற் சுழன்றுகொண்டிருந்ததை மட்டும் கண்டார்களேயன்றி, ஸ்ரீராமரைப் பார்க்கவில்லை. சரீரத்தையே குடமாகவும், பலத்தையே ஜ்வாலையாகவும், பாணங்களையே இலைகளாகவும், வில்லையே வட்டையாகவும், நாணியின்சத்தமும் நாணியினுற் புண்ணுண்டாகாதவாறு அணியுஞ் சட்டையினின்றுதோன்றும் ஒலியும் ஆகிய இவைகளையே பெருஞ்சத்தமாகவும், பராக்கிரமத்தையே இரிசாகவும், திருமேனியின்காந்தியையே சக்கரத்தின் காந்தியாகவும், திவ்வியாஸ்திரங்களின் வல்லமைகளையே தாரைகளாகவுங் கொண்ட ஸ்ரீராமபிரானுகிய சக்கரத்தை, ஜநங்கள் காலசக்கரம்போலக் கண்டார்கள். காற்றுப்போல வேகமாகச்செல்லும் பதினுயிரந்தேர்களையும், வெகுபல முள்ளவைகளான பதினெண்ணுயிரம் யானைகளையும், போர்வீரர்கள் மீதேறிச் சண்டையிடப்பெற்ற பதினுலாயிரங் குதிரைகளையும், பதாதிவீரர்களான இரண்டுலக்ஷம் அரக்கர்களையும், ஸ்ரீராமர், ஒருவராகவே நின்று, அரக்கர்கள் இஷ்டமான உருவங்கொள்ளும் வல்லமையுடையவராயிருந்தபோதிலும், மூன்றேமுக்கால் நாழிகையில், நெருப்புக்கொப்பான தமது பாணங்களால் வதைத்திட்டார்.

எஞ்சினவர் யாவரும் இலங்கைக்கு ஓடிவிடுதல்.

மிகுந்திருந்த இரண்டொரு அரக்கர்கள், குதிரைகள் கொல்லப்பட்டவர்களாயும், இரதங்கள் முறிந்தவர்களாயும், செருக்கு அடங்கினவர்களாயும், கொடிகள் முறிந்தவர்களாயும், இலங்கையை நோக்கி ஓடினுர்கள்.

படுகளச்சிறப்பு.

தேர்களும் காலாட்களும் குதிரைகளும் மாய்ந்துகிடந்த அப்போர்க்களம், கோபங்கொண்ட உருத்திரக்கடவுளின் விளையாட்டிடம்போலக் காணப்பட்டது.

அதன்பிறகு, தேவர் கந்தர்வர் சித்தர் மஹர்ஷிகள் இவர்களெல்லாரும், ஸ்ரீராமர் அவ்வாறு செய்ததைப்பார்த்து, "வெகுநன்று! வெகு நன்று!!" என்று ஸ்ரீராமரைப் புகழ்ந்து கொண்டாடினர்கள். அப்பொழுது, ஸ்ரீராமரானவர், தமது அருகில் இருந்தவர்களான சுக்கிரீவன் விபீஷணர் அனுமான் ஜாம்பவான் மைந்த த்விவிதர் என்ற வீரர்களைப் பார்த்து, "இதுதான் என்னுடைய திவ்வியாஸ்திரத்தின் பலம்; இது, சிவபெருமானுக்கு முண்டு" என்றார். இந்திரனுக்கொப்பானவரும் மகாத்மாவுமாகிய ஸ்ரீராமர், அரக்கசேனையை அவ்வாறு கொன்று, தாம் விடுத்த அஸ்திரங்களினாலும் சஸ்திரங்களினாலும் ஒருவித சிரமமு மில்லாமல் விளங்குகையில், தேவர்கள், கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து அவரைக் கொண்டாடலானார்கள்.

இராமபிரானைப் பற்றியகொண்டாட்டம்.

தொண்ணூற்றைந்தாஞ் சருக்கம்:
ராக்ஷஸிகளின் கதறுதல்.

இராவணனால் அனுப்பப்பட்ட ஆயிரக்கணக்கான போர்வீரர்களேறிய குதிரைகளும், கொடிகளுடன்விளங்கி நெருப்புப்போலப் பிரகாசிக்கின்ற ஆயிரக்கணக்கான இரதங்களும், பொற்கொடிகள் பிடித்துச்செல்பவர்களும் கதை உழலைத்தடி இவைகளாற் போர்செய்பவர்களும் வேண்டுமுருவங் கொள்பவர்களும் சூரர்களுமாகிய ஆயிரக்கணக்கான ராக்ஷஸர்களும், எளிதாகத் தொழில் செய்யவல்ல ஸ்ரீராமருடைய பொன்னுபரணங்களணிந்த கூரிய அம்புகளால் வதைக்கப்பட்டதை, இறந்தவர்கள்போக எஞ்சின்ற அரக்கர்கள், கண்ணாற்பார்த்தும், காதாற்கேட்டும், பயத்தால் மனங்குழம்பிவிட்டார்கள். தங்கள் கணவர்

களை யிழந்து கைம்பெண்களாய்விட்ட அரக்கமடந்தையர் கள், அங்கு வந்து, எளிமையடைந்து கவலையாற் கலங் கியவராஞர்கள். கணவனை யிழந்தவர்களும் பிள்ளை களைப் பறிகொடுத்தவர்களும் மற்றும் பந்துக்களை யிழ ந்தவர்களுமான ராக்ஷஸிகள், ஒன்றுசேர்ந்து, துக்கத் தாற் பரிதவித்துக்கொண்டு கதறுபவர்களாய்ப் பின்வரு மாறு புலம்பலானார்கள்:— "கிழவியும் கோரமான உருவ முள்ளவளும் வயிறுசரிந்தவளுமான சூர்ப்பணகை, மன் மதன்போல விளங்குபவரும் ஸுகுமாரரும் மஹாபல மமைந்தவரும் எல்லாப்பிராணிகட்கும் நன்மைபுரிவதிற் கருத்துள்ளவருமான இராமரை, ஏன் காட்டிற் பார்த் தாள்? அழகற்றவளும் உலகத்தாரால் நிந்திக்கப்பட்டவ ளுமான அவள், அவ்விராமரிடம் ஏன் அன்புவைத்தாள்? ஒருவித நற்குணமுமில்லாதவளும் விகாரமான முகமுள்ள வளும் ராக்ஷஸியுமான அச்சூர்ப்பணகை, எல்லாக்குணங் களும் நிரம்பி வெகு பலவானும் அழகான முகமமைந்தவரா யிருக்கும் ஸ்ரீராமரிடம் ஏன் ஆசைகொண்டாள்? திரையும் நரையும் பொருந்திய குரூபியான சூர்ப்பணகையினுடைய, செய்யத் தகாததும், உலகத்தவராற் பரிகசிக்கக்கூடியதும், எல்லாராலும் நிந்திக்கப்பட்டதுமான ஸ்ரீராமரைப் பலாத் காரமாகக் கூப்பிடுதலென்கிற செயலானது, இலங்கையி லிருக்கும் ஜனங்களின் பாக்கியக் குறைவினால், அரக்கர் களுடைய விநாசத்துக்கும், கரன் தூஷணன் இவர்களு டைய நாசத்துக்கும் காரணமாயிற்று. அம்மூலமாகத் தான், இராவணனுக்கும் இராமருக்கும் பெரும்பகை யுண்டாயிற்று. இராவணனுர், தமது நாசத்துக்கென்றே, சீதாதேவியைத் தூக்கிவந்தார்; இந்தத் தசக்கிரீவர், ஜனக மகாராஜாவின் குமாரியான சீதையை ஒருநாளும் அடை யப்போகின்றதில்லை. வெகு பலசாலியான இராமரோடு, ஒருநாளும் நீங்காத பகைமையை, இவர், விளைவித்துக் கொண்டார். சீதையின்மேல் ஆசைகொண்ட விராத னென்ற அரக்கனை ஸ்ரீராமர் ஒருவராகக்கொன்றாரே; அது வொன்றே ஸ்ரீராமருடைய வல்லமைக்குப் போதுமான

திருஷ்டாந்தமாம். கொடிய செயல்கள் புரிந்துவந்த பதி னாலாயிரம் அரக்கர்களை, ஜநஸ்தாநத்தில், தழலுக்கொப் பான தமது பாணங்களால், ஸ்ரீராமர் ஒருவரே வதைத் தாரே; கரன் தூஷணன் திரிசிரஸ் என்ற இவ்வரக்கவீரர் களைச் சூரியனுக்கொப்பான அம்புகளால் ஸ்ரீராமர்வதைத் தாரே; அவைகளே இராமரதுவல்லமைக்குப் பூர்ணமான திருஷ்டாந்தங்கள். ஒரு யோசனை நீளமான கைகளை உடையவனும் இரத்தத்தைக் குடித்துக்கொண்டு கோபத்தாற் கர்ச்சிப்பவனுமிருந்த கபந்தனையும் ஸ்ரீராமர் வதைத்தாரே; அதுவே இராமருடையவல்லமையைத்தெரிவிக்கப் போது மான திருஷ்டாந்தம். வெகுபலவானும் இந்திரனுடைய குமாரனும் மேருவுக்கு ஒப்பானவனுமிருந்த வாலியை ஸ்ரீ ராமர் கொன்றாரே; அதுவே அவருடையவல்லமையையறிந் துகொள்ளப் போதுமான ஒரு திருஷ்டாந்தம். ரிசியமூக மலையில் வசித்துக்கொண்டு தனதுமனோதங்கள் ஒன்றும் கைகூடாமல் வெகு பரிதாபமாகவிருந்த சுக்கிரீவனை ஸ்ரீரா மர் வானரவேந்தனாக முடிசூட்டிவைத்தாரே; அவர் மகி மைஇப்படிப்பட்டதென்பதைத்தெரிந்துகொள்ள அதுவே போதுமான ஒரு திருஷ்டாந்தம். தர்மத்துடனும் அர்த் தத்துடனும் கூடியதும் எல்லா அரக்கர்களுடைய க்ஷேமத் தையும் நாடியதும் நியாயமானதுமான விபீஷணருடைய நற்போதனை, அவ்விராவணனுக்கு மோஹத்தால் மனத் திற்குப் பிடிக்கவில்லை. விபீஷணர் சொல்லியபடி குபே ரன்தம்பியான இவ்விராவணனுர் செய்திருந்தால், இவ்வில ங்கை துயரத்தால் வருத்தப்பட்டுச் சுடுகாடாகப் போகாம லிருக்குமே! மகாபலம்பொருந்தியகும்பகர்ணனை ஸ்ரீராமர் கொன்றதைக் கேட்டபிறகும், ஒருவராலும் தகைய முடி யாத அதிகாயனை இலட்சுமணர் கொன்றதைக் கேட்டபிற கும், தமது அருமை மகனை இந்திரஜித்து மடிந்ததைத் தெரிந்துகொண்டபிறகுங்கூட இராவணனுர்க்குப் புத்தி வரவில்லையே! "என் குமாரன் மாண்டானே; என் உடன்

பிறந்தோன் மாண்டானே ; என் கணவன் போரில் மடிந் தானே!" என்றுபுலம்புங் குரல், அரக்கர்கள் விடுகள் தோ றும் கேட்கின்றதே ! சூரரான இராமர், தேர்கள் யானை கள் குதிரைகள் அரக்கரானகாலாட்கள் என்ற எல்லா வற்றையும், நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் தாம் ஒருவராக வதைசெய்தாரே ! சிவபெருமானே, அல்லது விஷ்ணுவோ, அல்லது நூறுயாகங்கள் செய்து முடித்த மகேந்திரரோ, இவர்களில் யாரோ ஒருவர், இராம ரது உருவங்கொண்டு வந்து வதைக்கின்றார் ; அல்லது, உயிரைப்பற்றிக்கொள்ளும்யமதர்மராஜன் தான் இவ்வாறு வந்திருக்கின்றானே ? வீரர்களான பந்துக்களை யெல்லாம் ஸ்ரீராமர் கொன்றுவிட்டபடியால், இனிமேல் உயிருட னிருப்பதில் எங்களுக்கு ஆசையேயில்லை. எங்களுக்கு வந்த பயம் நீங்கும்வழியும் எங்களுக்குப் புலப்படவில்லை ; நாங்கள் அநாதைகளாய்ப் புலம்பி நிற்கின்றோம். சூரராய் அநேகவரங்களைப் பெற்றவராயிருக்கும் இராவணனர், தமக்கு இராமர்மூலமாக வெகு கோரமான பயமுண்டா யிருக்கின்ற தென்பதைத் தெரிந்துகொள்ளவில்லையே. ஸ்ரீராமரால் எதிர்க்கப்படுகின்றவரைக் காப்பாற்ற, தேவர் கள், கந்தர்வர்கள், பிசாசர்கள், அரக்கர்கள் இவர்களி லொருவராலும் சாத்தியமன்றே. இப்போது இராவணனு ரது ஒவ்வொரு சண்டையிலும் தோன்றுகின்ற உத்பாதங் கள், இராமரால் இராவணனர்க்கு நேரும் நாசத்தைக் காட்டு கின்றனவே ! இராவணனர் செய்த தவத்தால் மனங்குளிர் ந்த பிரமதேவர், அவருக்கு, தேவர்கள் தானவர்கள் ராக்ஷ ஸர்கள் இவர்களிடமிருந்து பயமில்லையென்று வரமளித்த து உண்மையே ; ஆனல், மனிதனிடமிருந்து பயமில்லையெ ன்ற வரத்தை, இராவணனர் கேட்டுக் கொள்ளவில்லையே ! ஆகையால், இப்பொழுது இவ்விடத்திற் போரிடவந்திருக் கும் மனிதரிடமிருந்து, அரக்கர்களுயிரையும் இராவணனு ருயிரையும் ஒழிக்கும் பயம், நிச்சயமாக வந்திருக்கின்ற

தென்று எண்ணுகிறேம். வரதானத்தைப்பெற்ற பலத்தின்செருக்கால், இராவணனுர், வெகுவாய்த் தேவர்களையெல்லாம் இம்சித்தபொழுது, அத்தேவர்கள் கொடியதவங்கள் புரிந்து, பிரமதேவரை வணங்கி நின்றார்கள்; மகாத்துமாவாகிய அப்பிரமதேவர், அத்தேவர்களுக்கு நன்மையைக்கருதி, வெகு சந்தோஷத்துடன்: "இனி எல்லாத்தானவர்களும், இராட்சசர்களும், இம்மூவுலகங்களிலும் எப்பொழுதும் பயத்தால்நடுங்கினவர்களாய்ச் சஞ்சரிப்பார்கள் என்பது திண்ணம்" என்று சொல்லினர். அதன்பிறகு, இந்திரபகவானை முன்னிட்டுக்கொண்டு, எல்லாத் தேவர்களும், திரிபுரங்களையுந் தீயிட்டுக் கொளுத்திய விருஷபதுவஜராகிய மகாதேவர் அநுக்கிரகஞ்செய்யுமாறு முயன்றார்கள்: அவர்கள் செய்த பூஜைகளால் வெகு சந்தோஷமடைந்த மகாதேவர், எல்லாத் தேவர்களையும் பார்த்து:— "உங்களுக்கு க்ஷேமத்தை விளைக்கும்பொருட்டு எல்லாராட்சசர்களையும் அழிக்க, ஒரு பெண்பிள்ளை பிறக்கப்போகின்றுள்" என்றார். ஆதலால், முற்காலத்தில் தேவர்களால் எவிடப்பட்ட பசியென்பது தானவர்களை எப்படி அழித்ததோ, அதுபோல, இப்பொழுது அரக்கர்களைக் கொல்லவந்த சீதாதேவி, இராவணனுடன் நம்மை அழிக்கப்போகின்றுள். புத்திகெட்டு அகியாயத்தில் தலையிட்டுக்கொண்ட இராவணனுடைய கொடுமையால், இந்தப் பயங்கரமான நாசம் எங்களுக்கு நேர்ந்தது. இவ்வுலகத்தின் முடிவில் குடிகளை யழிக்கத் தொடருங் காலனைப் போல, இப்பொழுது அரக்கர்களை யழிக்கும் ஸ்ரீராமரிடமிருந்து, எங்களுக்கு அபயமளித்து இரட்சிப்பவன், இம்மூவுலகங்களிலும் தேடிப்பார்த்தாலும், ஒருவனிருப்பதாகத் தெரியவில்லையே! காட்டுத்தீயால் நான்குபக்கங்களிலுஞ் சூழ்ந்துகொள்ளப்பட்ட பெண்யானைகளுக்கு அக்காட்டில் உயிர்தப்பியோட எவ்வாறு ஒருவகையும் இராதோ, அதுபோல, இப்பெரும்பயத்தாற் சூழப்பட்ட எங்களுக்குத்

தப்பிப்புகும் அடைக்கலம் ஒருவரு மில்லையே! அம்மகாத் துமாவாகிய விபீஷணர், நியாயமாக என்ன செய்யவேண் டுமோ, அதைச் செய்தார்; எவ்வாறெனில்,—அவர் எங் கிருந்து பயம் வருமென்று கருதினரோ, அதேயிடத்துக் குச்சென்று சரணமடைந்தார்" என்று இவ்வாறு அரக்க மடந்தைக ளெல்லாரும் ஒருவரை யொருவர் தங்கள் கை களாற் கட்டிக்கொண்டு, பயத்தாற் பரிதபித்து, வெகுவாய் மனம் நொந்தவர்களாய், பெருங் குரலால் வெகு கடோர மாகப் புலம்பலானார்கள்.

தொண்ணூற்றுமூஞ் சருக்கம்:
இராவணன் யுத்தத்துக்குப் புறப்படுதல்.

அவ்வாறு ஒவ்வொருவீட்டிலும் அரக்கிகள் வெகு துக்கத்துடன் பரிதாபமாகப் புலம்பியதை, இராவணன், கேட்டான். அவ்வழுகையொலி அவன்காதில் விழுந்ததும், அவ்விராவணன், பெருமூச்சுவிட்டு, கொஞ்சநேரம் ஒன்றுந் தோன்றுமல் ஆலோசிக்கலானன்; அதன்பிறகு, வெகு கோபங்கொண்டவனாய், வெகு உக்கிரமான உருவத்துடன் விளங்கினன். அவன், பற்களால் உதட்டைக்கடித்துக் கோபத்தாற் கண்கள் சிவந்தவனாய், பிரளயகாலாக்கினி போல அரக்கர்களாலும் பார்க்கமுடியாதவ னாயினன். பிறகு, அவ்வரக்கமன்னவன், தனது கண்களால் தன்முன் னே நின்றவர்களை எரித்துவிடுகின்றவன்போல விளங்கிக் கொண்டு, பெரும் பயத்தாற் கொஞ்சம் வாய்குழற, தனக் குச் சமீபத்திலிருந்த * மகோதரன் மகாபார்சுவன் விரு

* மத்தன் பிரமத்தன் என்ற பரியாயநாமம்முள்ளவர்களாய் முன்னமே யுத்தத்தி லிறந்த மகோதர மகாபார்சுவர் என்ற அரக்கவீரர்கள் வேறு; அவர்கள், இராவணனுக்கு ஒருவாறு தம்பி முறையாகின்றவர்கள்; இவர்களோ, இராவணனுக்கு மந்திரிமார் களான மகோதர மகாபார்சுவர்கள்.

பாக்ஷன் என்னும் அரக்கர்களை நோக்கி, "சீக்கிரம் போரிடப் புறப்படும்படி நான் கட்டளையிட்டதாகச் சேனாபதிகட்குத் தெரியப்படுத்துங்கள்" என்றான். அவ்வரக்கர்களும், அவன் அவ்வாறு சொன்ன சொல்லைக் கேட்டு, அச்சத்தால் நடுநடுங்கியவர்களாய், அஜாக்ரதையாக இருந்த அரக்கர்களை நோக்கி அரக்கமன்னவனுடைய கட்டளைப்படியே ஏவினர்கள்.

இராவணனது கட்டளைப்படி மஹாபார்சுவன் முதலியோர், சேனாபதிகளைப் போருக்கு ஏவுதல்.

பயங்கரமான தோற்றமுள்ள அவ்வரக்கர்கள் யாவரும், அப்படியே யென்று உடன்பட்டு, தங்களுக்கு க்ஷேமமுண்டாக ஸ்வஸ்தியயனஞ் செய்துகொண்டு, யுத்தஞ்செய்யுமாறு புறப்பட்டார்கள். அவ்வரக்கர்கள் யாவரும், இராவணனிடம் வந்து அவனுக்கு முறைப்படி மரியாதைகளைச் செய்து, தமது தலைவனுடைய வெற்றியை விரும்பினவர்களாய், கைகளை அஞ்சலிபண்ணிய வண்ணம் நின்றார்கள்.

அரக்கர்கள் இராவணனை யடைதல்.

அப்பொழுது, கோபம் மிகுந்தவனும், இராவணன், பரிகாசமாகக் கொஞ்சஞ்சிரித்து, மகோதரன் மகாபார்சுவன் விரூபாக்ஷன் என்ற இவர்களைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:—"நான் இன்று என்னுடைய வில்லினின்று பிரயோகிக்கப்போகின்றனவாய்ப் பிரளயகாலத்தில் தோன்றுஞ் சூரியன்போன்ற பாணங்களால் இராமன் இலட்சுமணன் என்ற இவ்விருவரையும் யமனுடைய மாளிகைக்கு அனுப்புகின்றேன். இன்று நான், எனது மாற்றாரை வதைப்பதனால், கரன் கும்பகர்ணன் பிரஹஸ்தன் இந்திரஜித்து என்ற இவர்களைக் கொன்ற பழியைத் தீர்த்துக்கொள்ளுகின்றேன். எனது பாணமென்னும் மேகத்தால் மூடப்பட்டு, இன்று, ஆகாசம் திக்குக்கள் நதிகள் சமுத்திரங்கள் என்ற இவைகளொன்றும் விளங்கா

இராவணனது வீரவாதம்.

திருக்கச்செய்கின்றேன். நன்றாக இறகுகள்கட்டி வில்லி னின்றுதொடுக்கப்படும் பாணங்களால் வானரோத்தமர்க ளாகிய அச்சேனைத்தலைவர்களாற் பாதுகாக்கப்படுஞ் சேனைத்தொகுதிகளில், ஒன்றும்விடாமல் இன்று அழிக் கின்றேன். இன்று, நான், காற்றுப்போல் வேகமாகச் செல் லவல்ல இரதத்திலேறி, வில்லென்ற சமுத்திரத்திலிருந்து கிளம்பும் அம்புகளென்ற அலைகளால், எல்லாவானரர்களை யும் குழப்பிவிடுகின்றேன். மலருந்தருணத்திலிருக்கின்ற தாமரையரும்புகள்போன்ற முகங்களும் அம்மலரின்தா தகள்போன்ற நிறமு முள்ள வானரசேனையென்ற தாமரை யோடையை, மதயானை யொன்று கலக்குவதுபோல, நான், இன்று கலக்கிவிடுகின்றேன். இன்று, போரில், வானர சேனாதிபதிகள், எனதுபாணங்கள் பொத்திக்கொண்டிருக் கப்பெற்ற தமது முகங்கள் நாளத்துடன் கூடிய தாமரை மலர்கள்போன்றிருக்க, பூமியிற் கிடப்பார்கள். மரங்களை ஆயுதங்களாகக்கொண்டு போர்புரிகின்ற கொடிய வானரர் களை, நான், இன்று, எனது ஒவ்வொருபாணத்தாலும் நூறு நூறு விழுக்காடு பிளந்துவிடுகின்றேன். எவர்கள் 'கணவன் மாண்டான்', 'உடன்பிறந்தவன் மாண்டான்,' 'குமாரர்கள் மாண்டார்கள்' என்று புலம்புகின்றார்களோ அவ்வரக்கிகளுடைய கண்ணீரை, நான், இன்று, சத்துரு வைக்கொல்வதனால் துடைக்கின்றேன். இன்று, என்னு டைய பாணங்களாற் பிளக்கப்பட்ட சரீரங்களை யுடையவர் களான வானரர்களால் இப்பூமிமுழுமையையும் சிறிது இடமும் கண்ணுக்குத் தெரியாதவாறு மூடும்படி செய்கி ன்றேன். இன்று என்னுடைய பாணத்தினற் பிளக்கப் படுகின்ற சத்துருக்களுடைய மாமிசத்தால், காக்கை கழுகு நரி இவைகளையும் மற்றும் மாமிசங்களைப்புசிக்கும் பறவைகளையும் விலங்குகளையும் திருப்தியடையும்படி செய் கின்றேன்" என்று கூறி, பின்பு, "எனது இரதத்தைச் சீக்கிரங் கொண்டுவந்து நிறு த்துங்கள்; எனது வில்லைச் சடிதியிற் கொ ண்டுவந்து வையுங்கள். இன்னும் எஞ்சிநிற்கின்ற அரக்கர் களெல்லாரும் என்னைத் தொடர்ந்துவரட்டும்" என்றான்.

இராவணன் கட்டளை.

அவன் அவ்வாறுசொன்னதைக் கேட்டதும், மகாபார்சுவன், அங்கிருந்த சேனபதிகளைப் பார்த்து "எல்லாச் சேனைகளும் விரைவாக வரட்டும்" என்று சொன்னன்.

சேனபதிகள் சேனைகளைத் திரட்டுதல்.

மஹாபலசாலிகளான சேனாபதிகளும், இலங்கையில் வீடுதோறுஞ் சென்று ஒவ்வொரு அரக்கனையும் அழைப்பவர்களாய், இலங்கையின் ஒவ்வொருவீதியிலுஞ் சஞ்சரித்தார்கள். உடனே, ஒருமுகூர்த்தத்துக்குள், பயங்கரமான தோற்றமும் மிகவுங்கொடுமையான முகங்களுமுள்ள அரக்கர்கள் யாவரும், கதிகள் பட்டசங்கள் சூலங்கள் கதைகள் உலக்கைகள் கொழுக்கள் கூரான முனைகளமைந்த ஈட்டிகள் பெரிய சம்மட்டிகள் இரும்புலக்கைகள் தடிகள் மின்னுகின்ற சக்கரங்கள் கூரான கோடரிகள் பிண்டிபாலங்கள் சதக்கினிகள் என்ற இவைகளையும், மற்றுஞ் சிறந்த பலவகையாயுதங்களையும் எடுத்துக்கொண்டு கர்ஜ்ஜிப்பவர்களாய்ப் புறப்படலானார்கள்.

இராவணன் தேர்மீது ஏறிப் புறப்படுதல்.

இராவணனுடைய கட்டளையின்படி, அவன்சேனைத் தலைவன், நன்றுகச்செலுத்துஞ் சாரதியுடன், எட்டுக்குதிரைகள் பூட்டப்பட்ட அழகான இரதமொன்றை, வெகுசீக்கிரமாகக் கொண்டுவந்து நிறுத்தினன். தனது காந்தியால் விளங்கிக்கொண்டிருந்த அவ்விரதத்தின்மேல் மிகவும் பயங்கரமான தோற்றமுள்ள இராவணன் ஏறினன். பிறகு, பல அரக்கர்களாற் சூழப்பட்டு, இராவணன், தனது பலத்தாலும் காம்பீரியத்தாலும் பூமியையே பிளந்துவிடுகின்றவன்போன்று போர்க்களம்நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது, இராவணன்கட்டளைப்படி, மகாபார்சுவன் மகோதரன் ஒருவராலுந் தகைபமுடியாத விரூபாக்ஷன் என்ற இவர்களும், இரதங்களில் ஏறியவர்களாய், சந்தோஷத்தால் இவ்வுலகத்தைப் பிளந்துவிடுகின்றவர்கள் போலக் கர்ஜ்ஜித்துக்கொண்டு, வெற்றியடைவதில் மிக

ஆசைகொண்டவர்களாய்ப் புறப்பட்டார்கள். வில்லைக் கையிற் கம்பீரமாகப் பிடித்துக்கொண்டு பிரளயகாலத்து யமன் போல விளங்கின மஹாபராக்கிரமசாலியான இராவணன், அரக்கக்கூட்டத்தாற் சூழப்பட்டவனாய்ப் போருக்குப் புறப்பட்டான். அப்போது, மஹாரதனான அவ்விராவணன், வெகுவேகமான குதிரைகள் பூட்டப்பட்ட இரதத்திலேறி, இராமலட்சுமணர் எங்கு இருக்கின்றார்களோ, அவ்வாயில் வழியாக வெளிப்புறப்பட்டான்.

இராவணனுக்குத் நிமித்தங்கள் தோன்றுதல்.

அவ்வண்ணம் அவன் வெளிப்புறப்பட்டபொழுது, சூரியபகவான் ஒளியையிழந்தான்; திசைகள் இருளால் மூடப்பட்டன; பறவைகள் பயங்கரமாகக் கூச்சலிட்டன. பூமி அசையலாயிற்று; மழைக்கடவுள் ஆகாயத்தினின்று இரத்த மழையைப்பொழிந்தான்; வழியில் குதிரைகள் காலிடறி விழலாயின; கொடியின்மேல் கழுகுகள் உட்கார்ந்தன. நரிகள் அமங்களமாக ஊளையிட்டன; இராவணனுடைய இடக்கையும் இடக்கண்ணும் துடித்தன; அவனுடைய முகமும் வெளுத்தது; குரலும் கம்மிற்று. பத்துத்தலைகளைப்பெற்ற அவ்விராவணன் யுத்தத்துக்குப் புறப்பட்டபொழுது, அவனுடைய நாசத்தைக் காட்டுகின்ற பல அபசகுனங்கள் இவ்வாறு காணப்பட்டன. இடிவிழுந்தாற்போலச் சத்தம்பண்ணிக்கொண்டு ஆகாசத்திலிருந்து கொள்ளிக்கட்டைகள் விழலாயின. கழுகுகள் காக்கைகளுடன் சேர்ந்து வெகு அமங்களமாகக் கத்தலாயின. அப்போது, இராவணன், இவ்வாறு பயங்கரமாகத் தோன்றிய அபசகுனங்களில் ஒன்றையும் தனது புத்திமாருட்டத்தாற் சிறிதுங்கவனிக்காமல், தனது விதியால் ஏவப்பட்டவனாய், தனது சத்துருக்களை நாசம்பண்ணுதற்பொருட்டுப் போரிடப் புறப்பட்டான்.

மகாவீரர்களான் அவ்வரக்கர்கள் போரிடவந்ததை இரதகோஷத்தால் வானரவீரர்கள் அறிந்துகொண்டு,

அவர்களும் யுத்தம்பண்ணச் சித்தமாகக் காத்திருந்தார்கள். அச்சமயத்தில், வெகு கோபத்துடன் ஒருவரையொருவர் அழைத்துக்கொண்டு வெற்றியை விரும்பியவர்களாய்ச் சண்டைசெய்த அரக்கர்கள் வானரர்கள் என்னும் அவ்விருதிறத்தாருக்கும் வெகுபயங்கரமான யுத்தம் நடந்தது.

அரக்கவானரர்களின் போர்.

அதன்பிறகு, உக்கிர கோபங்கொண்ட இராவணன், பொன்னுபரணங்களையணிந்த பாணங்களை எய்து, வானரசேனையை அதிகமாக அழிக்கலானன். அப்போது, சில வானரவீரர்கள், இராவணனுல் தலையறுப்புண்டார்கள்; சிலர், மார்பு பிளப்புண்டார்கள்; சிலர், காதுகளை யிழந்தார்கள்; சிலர், மூச்சுவிடாமற் செய்யப்பட்டு வதையுண்டார்கள்; சிலர், விலாப்புறங்கள் விண்டார்கள்; சிலர், தலைகள் வெட்டியெறியப்பெற்றார்கள்; சிலர், கண்கள் பிடுங்கப்பட்டார்கள்; கோபத்தாற் கண்கள் சுழல, இவ்வாறு போர்புரிந்த இராவணன், தனது இரதத்தை எவ்வெத்திசையில் ஓட்டினனே, அவ்வத்திசைகளிலிருந்த வானரவீரர்கள், அவ்விராவணனது பாணவேகத்தைச் சகிக்க முடியாதவர்களாய் வருந்தினர்கள்.

இராவணன் வானரர்களை வதைத்தல்.

தொண்ணூற்றேழாஞ் சருக்கம்:
விரூபாக்ஷனது வதை.

இராவணபாணங்களால் தேகங்கள் அறுபட்ட வானரர்கள் அவ்வண்ணம் விழவே, பூமிமுழுதும் வானரர்களால் மூடப்பட்டதுபோல விளங்கிற்று. விட்டிற்பூச்சிகள் விளக்கு வெளிச்சத்தைத் தாங்கமாட்டாதவாறுபோல, வானரர்கள், ஒப்பற்ற இராவணனுடைய எரிகின்ற பாணங்களைத் தாங்கமுடியாதவரானர்கள். அவ்விராவண

இராவணபாணங்களால் வானரர்கள் வருந்தியோடுதல்.

னுடைய கூரான பாணங்களாற் பீடிக்கப்பட்டவர்களாய், வானரர்கள், நெருப்பாற் சூழப்பட்டு எரிக்கப்படுகின்ற யானைகள் வீரிடுவதுபோலக் கூவிக்கொண்டு நான்குபக்கங்களிலும் ஓடத்தலைப்பட்டார்கள். பெருங்காற்று பெருமேகங்களைத் தன்முன்னே நிற்கவொட்டாமல் துரத்திக்கொண்டு வீசுவதுபோல, அவ்விராவணன், வானரசேனையைப் பாணங்களால் துரத்திக்கொண்டு சஞ்சரிக்கலானன்.

அரக்கர்தலைவனன இராவணன், அப்பெருஞ்சேனையை விரைவாக அழித்து, பிறகு, அப்போர்க்களத்தில், ஸ்ரீராமரிருந்த விடத்தை நோக்கி வெகுவேகமாகச் செல்லலானன். அப்பொழுது, சுக்கிரீவன், வானரசேன அவ்வண்ணம் போர்க்களத்தில் முறிந்தோடுவதைக் கண்டு, அச்சேனையைப் பாதுகாக்குமாறு ஸுஷேணனென்பவனை அணிவகுப்பில் நியமித்துவிட்டு, தான் காண்பவர் ஆச்சரியப்படும்படி சண்டை செய்ய விரும்பினன். தனக்கு ஒப்பான வல்லமையுள்ள வீரனை நியமித்துவிட்டு, சுக்கிரீவன், ஒரு மரத்தை ஆயுதமாக எடுத்துக்கொண்டு, தனது சத்துருவுக்கு எதிர்முகமாக ஓடினன். அவனது பக்கங்களிலும் பின்புறத்திலும் வானர சேனுபதிகள் யாவரும் பெருமலைகளையும் பலவகைமரங்களையும் எடுத்துக்கொண்டுசென்றார்கள். அப்போர்க்களத்தில், பெருந்தோற்றமுள்ள சுக்கிரீவன், பெருங்குரலால் அட்டகாசஞ்செய்து, மஹாவீரர்களான அரக்கர்கள் பலரையும் இன்னும் பலவகையானவர்களையும் வதைத்தான்.

சுக்கிரீவன் அரக்கர்களையழித்தல்.

பிரளயகாலத்தில் வீசும் பெருங்காற்று வளர்ந்த மரங்களை வேர்ப்பிடுங்கலாகப் பிடுங்கியெறிவது போல, பேருடலமைந்த அவ்வானரவேந்தன், பல அரக்கர்களை ஒழித்தான். காட்டில் பறவைகளின் நடுவில் மேகமானது ஆலங்கட்டிமழையைப் பொழிவதுபோல, இராட்சச சேனையின் நடுவில், அவ்வானர வேந்தன் மலைமழையைப் பொழிந்தான். வானரவேந்தன் விடுத்த மலைமாரி

யால், சிறகு அறுப்புண்ட மலைகள் விழுந்தனபோல, பல அரக்கர்கள் தலைகளறுப்புண்டு விழுந்தார்கள்.

விரூபாக்ஷன் சுக்கிரீவனுடன் போர்செய்தல்.

அவ்வண்ணம் எல்லாவிடங்களிலும் அரக்கர்கள் மடியவே, வெல்லுதற்கு அரிய வில்வீரனான விரூபாக்ஷனென்னும் இராட்சசவீரன், தன்து பெயரைச் சொல்லிக்கொண்டே அவ்விடம் தோன்றி, இரதத்தைவிட்டுக் கீழே இறங்கி, யானையின்மேல் ஏறிக்கொண்டான். மகாரதனான அவ்விரூபாக்ஷன், அவ்வாறு யானையின்மீது ஏறிப் பயங்கரமாகக் கர்ச்சித்துக்கொண்டு வானரர்களைத் துரத்தலானான். அவ்வரக்கவீரன், சுக்கிரீவன்மீது கொடிய பாணங்களை விடுத்தான்; அன்றியும், பயந்த அரக்கர்களை மகிழ்ந்தவராகுமாறு சேனைமுகத்தில் நிலைநிறுத்தினான். பெருங்கோபமுள்ள அவ்வானரவேந்தன் அவ்வாறு அவனுடைய கூரான அம்புகளால் அடியுண்டதும், வெகு கோபங்கொண்டு, அவனை வதைக்கவேண்டுமென்று மனத்திற் கருதலானான். அதன்பிறகு, போர்புரியவல்ல அப்பெருவானரவேந்தன், ஒருமரத்தைப் பிடுங்கி ஓங்கி அவ்வரக்கன்முன்பாக நின்று, அவனுடைய பெரிய யானையை யடித்தான். சுக்கிரீவனது அவ்வடியை அக்கஜம்தாங்க மாட்டாமல், ஒரு வில்லளவு தூரம் வெகு வேகமாகச் சென்று வீரிட்டுக் கதறி உயிரொழிந்து பூமியில் விழுந்தது. அவ்விதமாக யானை மாண்டதும், எளிதாக வல்லமையைக் காட்டவல்ல அவ்வரக்கவீரன், விரைவாக அதனை விட்டுக் குதித்து, மாற்றானான வானரனது முன்பாக நின்று, தனது கத்தியையும், எருத்துத் தோலினாற் செய்யப்பட்ட கேடகத்தையும்கைப்பற்றி, சமீபத்தில் நின்ற சுக்கிரீவனை மருட்டுபவன்போலக் கிட்டிநின்றான். சுக்கிரீவன் அவனிலும் அதிகங் கோபங்கொண்டவனாய், மேகம்போல விளங்கிய பெரும் பாறையொன்றை எடுத்து அவன்மேல் வீசியெறிந்தான். மகாபராக்கிரமசாலியான அவ்வரக்க

வீரன் தன்னைநோக்கிவந்துகொண்டிருந்த அப்பாறைக் குக் கொஞ்சம்விலகித்தப்பி, பின்பு சுக்கிரீவன்மீது தனது கத்தியைக் கொஞ்சம் வீசினன். அவ்வாறு பலவானன அவ் வரக்கனுற் கொஞ்சம் புண்படுத்தப்பட்டதும், வீரனன சுக்கிரீவன், கொஞ்சநேரம் மூர்ச்சை யடைந்திருந்தான்; உடனே, அவன், திடீரென்று கிளம்பி, அவ்வரக்கனது மார் பில் தனது கையை முடக்கிக்கொண்டு விசையாக ஒரு குத் துக் குத்தினன். அக்குத்துத் தன்மேல் விழவே, விரூபா க்ஷன், வெகுகோபங்கொண்டு, தான் பிடித்திருந்த அக் கத்தியால் சுக்கிரீவனுடைய கவசத்தை நறுக்கி யெறிந்து, அவனையும் தனது காலாலுதைத்துப் பூமியில் தள்ளினன். அவ்வாறு விழுந்த வானரவீரன், உடனே எழுந்து கர்ச்சித் துக்கொண்டு, அவ்வரக்கன்மீது இடிவிழுவதற்கொப்பாகப் பயங்கரமான சத்தமுள்ள ஓரறை அறையலானன். அவ் வண்ணம் விழப்போகின்ற அறைக்கு வெகு சாமர்த்திய மாக, விலகி, அவ்வரக்கன், தானும் தனது கையால் அவ்வா னரவீரனது மார்பில் ஓங்கி ஒருகுத்துக் குத்தினன். தான் ஓங்கின அறை விழாமல் தப்பிப்போய், தன்மேல்மட்டும் அவ்வரக்கனுடையகுத்து விழுந்ததைக் கண்டு, சுக்கிரீவன், வெகுகோபங்கொண்டு, அவ்விரூபாக்ஷன வதைக்கச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். பிறகு, அவன் நெற்றி யிற்படுமாறு கோபத்தோடு ஓரறை அறைந்தான். இந் திரபகவானுடைய இடிக்கொப்பான அவ்வறையினல், மலை அருவிகளைப் பெருகவிடுவதுபோல, அவ்வரக்கன் நவத்வாரங்களாலும் இரத்தத்தைக் கக்கிக்கொண்டு, இர த்தவெள்ளத்தில் மூழ்கியவனப்போல் பூமியில் விழுந்தான். கோபத்தாற் கண்கள்சுழலமிடநின்ற விரூபாக்ஷன், வாயில் நுரை ததும்ப, உடம்பெங்கும் இரத்தம் பெருக, கருவிழிகள் சிதறி விழுந்ததனல் விரூபமான கண்களை யுடையவனனதை அங்குள்ளயாவரும் கண்டார்கள். தமது மாற்ருன் துடித்

விரூபாக்ஷன் மாண்டு விழுதல்.

துக்கொண்டும் புரண்டுகொண்டும் வெகு பரிதாபமாகக் கதறிக்கொண்டு மிருந்ததை வானரர்கள் கண்டார்கள்.

அப்பொழுது, போரில் நன்முக உழைப்பவர்களும் மஹாபலசாலிகளுமான வானரர்கள் அரக்கர்கள் என்னும் இவ்விருதிறத்தாரும் நிரம்பிய இரண்டு சேனைகளும், கரை புரண்ட இரு சமுத்திரங்கள் அலைகளால் ஒலிப்பனபோல, பயங்கரமாகச் சத்தஞ்செய்யலாயின. சுக்கிரீவனுல் வெகு பலசாலியான விரூபாக்ஷன் வதைக்கப்பட்டதும், இராட்சசர்கள் வானரர்கள் என்ற இவர்களின் சேனை, கரைக்கு அடங்காத கங்கையின் பெருக்கைப் போன்றிருந்தது.

அரக்க வானரர்களின் பெருஞ் சத்தம்.

தொண்ணூற்றெட்டாஞ் சருக்கம் : மகோதரனது வதை.

அப்பெரும்போரில், அவ்விருதிறத்துச் சேனைகளும், ஒன்றை யொன்று கொன்று, முதுவேனிற்பருவத்திற் குளம் வற்றுவதுபோலக் கொஞ்சங்கொஞ்சமாகக் குறையலாயின. தனது சேனை மிகுதியாக நாசமடைந்ததனுலும், விரூபாக்ஷன் வதைக்கப்பட்டதனுலும், இராவணன், முன்னிலும் இருமடங்கு கோபங் கொண்டவனுனன்.

இராவணன் தனதுசேனை குறைவதைக் கண்டு வருந்துதல்.

அப்போது, இராவணன், வானரர்கள் வதைத்தலால் தன்சேனை குறைவுபடுவதைப் பார்த்து, தெய்வம் தனக்கு விரோதமாயிருப்பதைக் கண்டு, அப்போரிற் கொஞ்சம் மனஞ் சஞ்சலித்துத் துக்கப்பட்டு, அருகிலிருந்த மகோதரனென்ற அரக்கவீரனை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுன்:— "புஜபராக்கிரமமுள்ள மகாவீரனே! இந்த வேளையில் எனது வெற்றியைப்பற்றிய ஆசை, உன்னைச்

சார்ந்திருக்கின்றது. ஆகையால், நமது சத்துருவின் சேனையை வதைப்பாயாக. உன்வல்லமையை இன்று காட்டுக. யஜமானனுடைய சோற்றுக்கடனுக்குத் தக்க உபகாரஞ்செய்ய இதுதான் ஏற்றசமயம்; வெகுசாமர்த்தியமாகச் சண்டைசெய்க" என்றான்.

இராவணன் மகோதரனைப் பொருமாறு ஏவுதல்.

இவன் இவ்வாறு சொல்லவே, மகோதரனென்ற அரக்கவீரன், நல்லதென்றுசொல்லி, விட்டிற்பூச்சி நெருப்பிற் புகுவதுபோலச் சத்துருசேனைக்குட் புகுந்தான். அவ்வீரன், தனது யஜமானன் சொன்ன சொல்லாலும் தனது இயற்கைவல்லமையாலும் ஏவப்பட்டவனாய், வானரசேனையை வெகு அதிகமாக வருத்தியழிக்கலானான். வெகுபலசாலிகளான வானரர்களும், பெரும்பாறைகளைக் கைகளிலெடுத்துக் கொண்டு பயங்கரமான சத்துருசேனைக்குட் புகுந்து அரக்கர்களை வதைக்கலானார்கள். அப்பெரும்போரில், மகோதரன், அதிகங்கோபங்கொண்டவனாய், ஆபரணங்களாலலங்கரிக்கப்பட்ட பாணங்களால் வானரர்களுடைய கைகள் கால்கள் துடைகள் என்ற உறுப்புக்களை வெட்டலானான்.

மகோதரனது போர்.

அவ்வாறு அரக்கவீரனால் அதிகமாக ஹிம்சைசெய்யப்பட்ட வானரர்கள் யாவரும், பத்துத்திசைகளிலும் சிதறியோடினார்கள்; சிலர், சுக்கிரீவனைச் சரணமாக அடைந்தார்கள்.

வானரர்கள் தோற்றோடுதல்.

சுக்கிரீவன், வானரர்களின் பெருஞ்சேனை போரில் முறிந்தோடுவதைப் பார்த்து, பிறகு, மகோதரனிருந்த விடத்தைநோக்கி ஓடினான். மலைக்கொப்பாய் வெகு விசாலமாயிருந்த பாறையொன்றை எடுத்துச் சுக்கிரீவன் மகோதரனை வதைக்கும்பொருட்டு அவன்மீது எறிந்தான். தன்னை நோக்கி வந்த கிட்டுதற்கும் அரிய அப்பெரும்பாறையை, மகோதரன், கொஞ்சமேனும் அஞ்சாமல்

சுக்கிரீவனுக்கும் மகோதரனுக்கும்நடந்தபோர்.

பாணங்களைக்கொண்டு பிளந்தெறிந்தான். அரக்கன் விடுத்த பாணங்களினால், அப்பெரும்பாறை, நூறுசுக்கலாகப் பிளப்புண்டு நாற்புறத்திலும் கலந்த கழுகுகளின் கூட்டங்கள்போலப் பூமியில் விழுந்தது. தான் எறிந்த அப்பாறை அவ்வண்ணம் தூளாகி விழுந்ததைப் பார்த்து, வானரவேந்தனாகிய சுக்கிரீவன், வெகு கோபங்கொண்டு, ஆச்சாமரமொன்றைப்பிடுங்கி மகோதரனது தலையின்மேலெறிந்தான். பகைவர்களைவெல்லுஞ் சூரனாகிய அவ்வரக்கன், அதையும், தனது கூரான பாணங்களாற் பிளந்தான். அப்பொழுது, கோபமடைந்த சுக்கிரீவன், பூமியில் ஓர் உழலைத்தடி விழுந்திருக்கக் கண்டு, உடனே விளங்குகின்ற அந்த ஆயுதத்தை யெடுத்து, வெகுவேகமாகச் சுழற்றி அவ்வரக்கனுடைய சிறந்தகுதிரைகளை யடித்தான். பிறகு, மடிந்த குதிரைகளையுடைய அவ்விரதத்தைவிட்டுக்கீழே இறங்கி, வீரனான மகோதரன், வெகு கோபத்துடன் கதை யொன்றைக் கைப்பற்றினன். உழலைத்தடி கதை என்ற இவைகளைக் கைகளிலேந்திக் கொண்டு அட்டகாசஞ்செய்யும் அவ்வீரர்கள், அப்போர்க்களத்தில், சினங்கொண்ட எருதுகள்போலவும், மின்னற் கொடியுடன் கூடின மேகங்கள்போலவும் காணப்பட்டார்கள். அதன்பிறகு, உக்கிர கோபங்கொண்ட மகோதரனென்னும் அரக்கன், சூரியனைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்த அக்கதையைச் சுக்கிரீவன்மேலெறிந்தான். தன்னைநோக்கி வந்துகொண்டிருந்த பயங்கரமான கதாயுதத்தை, வெகு பலசாலியும் வானர ராஜனுமான சுக்கிரீவன், பார்த்து, அதிக கோபத்துடன், உழலைத்தடியால் அடித்து தடுத்தான்; ஆனால், அவ்வுழலைத்தடி அக்கதையில் மோதினதனால் முறிந்து பூமியில் விழுந்தது. அதன்பிறகு, வெகுபராக்கிரமசாலியாகிய சுக்கிரீவன், பூமியில் விழுந்திருந்ததும் வெகு பயங்கரமானதும் முற்றிலும் தங்கத்தாற் சித்திரவேலை செய்யப்பட்டிருந்ததுமான இரும்புலக்கை யொன்றைக் கைப்பற்றினன்; அவ்வுலக்கையை எடுத்து,

சுக்கிரீவன், ஓங்கியெறிந்தான். அவ்வரக்கனும், அதை மற்றொரு கதையால் தடுத்தான். அவ்விரண்டு ஆயுதங்களும், ஒன்றையொன்று மோதிக்கொண்டு, முறிந்து பூமியில் விழுந்தன. அவ்வண்ணம் அவ்விருவருடைய ஆயுதங்களும் முறிந்துவிழவே, பற்றியெரியுங் கனல்போன்று அதிக பலத்தாலும் ஒளியாலும் விளங்கிய அவ்விருவீரரும், தங்கள் கைக்குத்துக்களாற் போர்புரிய ஒருவரையொருவர் அணுகினர்கள். அவ்விருவரும், அப்போது, ஒருவரையொருவர் அதிகமாக அடித்துக்கொண்டார்கள்; ஒருவரைப் பார்த்து மற்றொருவர் அதிகமாக அட்டகாசம் பண்ணினர்கள்; ஒருவரையொருவர் தங்கள் கைகளால் அறைந்து கொண்டு பூமியில் விழுந்தார்கள்; சரேலென்று அவர்கள் மறுபடி ஆகாயத்திற் கிளம்பிச் சலிக்காமல் பரஸ்பரம் அடித்துக்கொண்டார்கள். ஒருவரையொருவர் வெல்லமாட்டாமல் கைகளால் தூக்கியெறிந்துகொண்டார்கள்; அவ்வாறுசெய்த மல்லயுத்தத்தால், பகைவரைத்தவிக்கச்செய்ய வல்ல அவ்விருவீரரும், சிறிது களைப்படைந்தார்கள். அப்பொழுது, தனக்குச்சமீபத்தில் விழுந்துகிடந்த கத்தியொன்றை, விரைந்து தொழில்செய்யவல்ல மகோதரன், கேடகத்துடன் எடுத்துக்கொணர்ந்தான். அவ்வாறே, மிகவும் விரைந்து தொழில்செய்யவல்ல வானரோத்தமனான சுக்கிரீவன், தனக்கருகிலிருந்த மற்றொரு பெருங்கத்தியையும் கேடகத்தையும் கைப்பற்றினன். அதன்மேல், போரில் வெகு உற்சாகங்கொண்டவர்களும் ஆயுதங்களையுபயோகிப்பதில் வல்லவர்களுமான அவ்விருவீரரும், அதிக கோபங்கொண்டவர்களாய், கத்திகளை யோங்கிக்கொண்டும் அதிகமாகக் கர்ச்சித்துக்கொண்டும் ஒருவரையொருவர் எதிர்த்து ஓடினர்கள். ஒருவரையொருவர் வெல்ல முயல்பவர்களும் ஒருவர்மீது ஒருவர் பெருஞ்சினங்கொண்டவர்களுமான அவ்விருவீரரும், வலசாரியாகவும் இடசாரியாகவும் வெகுவிரைவாக ஓடினர்கள். வல்லமையிற் செருக்கடைந்த சூரனும் ஆர்ப்புத்தியுமான மகோதரன், வெகு வேக

மாகச் சுக்கிரீவனது கேடகத்தின்மேல் தனது கத்தியை வீழ்த்தினன். அப்பொழுது, அக்கேடகத்திற் பதிந்த கத்தியை மகோதரன் விடுவித்துக்கொள்ள முயல்கையில், சுக்கிரீவன், பாகையுடனும் குண்டலங்களுடனுங் கூடி அழகாகவிளங்குகின்ற அவனதுதலையைத் தனது கத்தியாற் கொய்தெறிந்தான்.

சுக்கிரீவன் மகோதரனை வதைத்தல்.

தலையறுந்து அவ்வரக்கன் பூமியில் விழவே, அரக்கவேந்தனுடைய சைனியம், அதைக்கண்ணுற்று, பிறகு, அவ்விடத்தில் நிற்கமுடியாமல் ஓடலாயிற்று. சுக்கிரீவன், அவ்வரக்கனைக் கொன்று, பலவானரர்களுடன் சந்தோஷத்தால் அட்டகாசம் பண்ணினன்; இராவணன் அதிக கோபங்கொண்டான்; ராமர் மனம்பூரித்தார். எல்லா வரக்கர்களும், தங்களது முகங்கள் பெருந் துக்கத்தால் வாடப்பெற்றவர்களாய், மிகவும் பரிதாபமான தோற்றத்துடன் அச்சத்தால் நடுநடுங்கி ஓடத்தலைப்பட்டார்கள்.

வானரர்கள் மகிழ்ந்து நிற்க, அரக்கர்கள் அஞ்சி யோடுதல்.

பெருமலையின் ஒரு பாகந்தான் சிதறி விழுந்ததோவென்று எண்ணும்படியாக மகோதரனைச் சுக்கிரீவன் வதைத்துப் பூமியில்வீழ்த்தி, சூரியபகவான் அணுகமுடியாத ஒப்பற்ற காந்தியோடு விளங்குவதுபோல, அச்சூரியபகவானுடைய புதல்வனன சுக்கிரீவன் ஜயலக்ஷ்மியோடு அங்கு விளங்கலானன். அப்போர்க்களத்தில், அவ்வானரமன்னவன், அவ்வாறு வெற்றிபெற்று நிற்கையில், தேவர்கள் யக்ஷர்கள் சித்தர்கள் என்ற இவர்களின் திரள்களும், மற்றும் பூலோகத்திலுள்ள பிராணிவர்க்கங்களும், சந்தோஷத்தால் வாய்குழறத் தோத்திரம் பண்ணின.

சுக்கிரீவனது கொண்டாட்டம்.

தொண்ணூற்றொன்பதாஞ் சருக்கம்:
மகாபார்சுவனது வதை.

மகோதரன் சுக்கிரீவனால் வதைக்கப்பட்டதும், வெகு பலம்பொருந்திய மகாபார்சுவன், அதிக கோபத்தாற் கண்கள்சிவந்தவனாய், தான்செய்யவேண்டுவதை ஆலோசித்து, பிறகு அங்கதனுடைய பயங்கரமான சேனையைப் பாணங்களாற் கலக்கலானான். காற்றானது கார்பு களினின்று பழங்களை யுதிர்ப்பதுபோல, அவ்வரக்கன், வானரவீரர்களுடைய தலைகளை நாற்புறங்களிலும் பாணங்களாற் கீழே வீழ்த்தினான். வெகுகோபங்கொண்ட அவ்வரக்கன், சில வானரர்களுடைய கைகளையும், சில வானரர்களுடைய கழுத்துக்களையும், சில வானரர்களுடைய விலாப்புறங்களையும், தனது பாணங்களாற் பிளந்தெறிந்தான். அவ்வாறு மகாபார்சுவன் விடுத்த பாணவர்ஷத்தாற் பீடிக்கப் பட்ட வானரர்கள், வெகு அக்கமடைந்தவர்களாய், போரினின்று முகங்களை மாறவைத்துக்கொண்டு மூர்ச்சையடைந்தார்கள்.

மஹாபார்சுவனது போர்.

வானரர்கள் தோற்றோடுதல்.

அவ்வரக்கனால் தனதுசேனை வருத்தப்பட்டு அஞ்சியதைப் பார்த்து, அங்கதன், பௌர்ணமியிற் சமுத்திரம்போல வெகுவேகங்கொண்டான். பிறகு, வானரச்சிரேஷ்டனாகிய அங்கதன், சூரியன்போலப் பிரகாசிக்கும் பெரிய இரும்புழலைத்தடியொன்றை யெடுத்து, அப் போர்க்களத்தில், மகாபார்சுவன்மேல் வீசியெறிந்தான். அவ்வடியால், மகாபார்சுவனும், அவனது தேர்ப்பாகனும், மூர்ச்சையடைந்து, அத்தேரினின்று பூமியில் விழுந்தனர்.

மஹாபார்சுவனுடன் அங்கதன் பொருதல்.

மஹாபார்சுவன் மூர்ச்சித்தல்.

அத்தருணத்தில், வெகு பலவானும் நீலமேகம் போன்ற மேனியுள்ளவனுமான ஜாம்பவான், மேகத்துக்கொப்பான தனது சேனையைவிட்டுக் கிளம்பிவந்து, மலையின் சிகரம் போலிருந்த பெரும்பாறை யொன்றை எடுத்து, வெகு கோபத்துடன் அம்மகாபார்சுவனுடைய தேர்க்குதிரைகளை விரைவாகக் கொன்றான்; அவனது தேரையும் முறித்தான்.

ஜாம்பவான், மஹாபார்சுவனுடைய தேரையும் குதிரைகளையும் அழித்தல்.

வெகு பலசாலியாகிய மகாபார்சுவன், ஒரு முகூர்த்தத்திற்குள் மூர்ச்சை தெளிந்து எழுந்து, மறுபடியும் பலபாணங்களை விடுத்து அங்கதனை யடித்தான். நிகும்பனுடைய மார்பில் மூன்று பாணங்களை விடுத்தான்: கவாக்ஷனையும் பல பாணங்களாற் புடைத்தான். ஜாம்பவானையும் கவாக்ஷனையும் அவ்வண்ணம் அரக்கன் பாணங்களாற் புடைத்ததைக் கண்டு, அங்கதன், வெகுகோபங்கொண்டு, சூரியனைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருந்த வெகு பயங்கரமான இருப்புழலைத்தடி யொன்றைக் கையிலெடுத்துக்கொண்டான். உடனே, வாலிகுமாரனை அங்கதன், வெகு தூரத்தில் நின்ற மஹாபார்சுவனை வதைக்க எண்ணங்கொண்டவனாய், தனது இரண்டுகைகளாலும் பிடித்து அதனை வெகுவேகமாகச்சுழற்றி அவன்மேலெறிந்தான். பலவானான அங்கதனால் வேகமாக எறியப்பட்ட அவ்வுழலைத்தடி, அவ்வரக்கன்கையிலிருந்த வில்லையும் அம்பையும் அவனது தலையிலணிந்திருந்த பாகையையும் கீழேவிழுத்திற்று. உடனே, பிரதாபசாலியாகிய அங்கதன், வெகுவேகமாக அவ்வரக்கனிடம் வந்து, தனது கையை ஓங்கி, குண்டலமணிந்திருந்த அவனது காதுகளை நோக்கி ஓரறை யறைந்தான். வெகு வல்லமை தங்கிய மகாபார்சுவன், அதிகங் கோபங்கொண்டவனாய், வெகுவேகமாகப் பெருங்கோடாலி யொன்றைத்

மூர்ச்சை தெளிந்த மஹாபார்சுவனது போர்.

தன்கையில் எடுத்தான். நன்றாக எண்ணெய் பூசப்பெற்றுப் பளபளவென்று மின்னிக்கொண்டு மலைபோல வெகு உறுதியாக விருந்த அவ்வாயுதத்தை, அவ்வரக்கன், அங்கதன்மேல் வீசியெறிந்தான். தனது இடத்தோளிற் கொஞ்சம் புண்படுத்தின அக்கோடாலியை, தனது தந்தைக் கொப்பான பராக்கிரமமுள்ள அங்கதன், வெகு கோபத்துடன் வாங்கியெறிந்துவிட்டு, வச்சிராயுதத்துக்கு ஒப்பான வலிமையுள்ள தன்கையை மடித்துக்கொண்டவனாய், தனது சத்துருவின் மார்பில் ஒருகுத்துக்குத்தினன்.

மஹாபார்சுவன் அங்கதனது குத்தினால் இறத்தல்.

அப்போர்க்களத்தில், மர்மஸ்தானத்தையறிந்த அங்கதன் அவ்வரக்கனது மார்பில் அவ்விதமாக இந்திரனது வச்சிராயுதத்துக்கு ஒப்பான குத்துக் குத்தினதனால், அவ்வரக்கன் மார்புபிளந்தவனாய், உயிரற்றுப் பூமியில் விழுந்தான்.

அரக்கரின் குழப்பம்.

அவ்வரக்கன் இறந்து பூமியில் விழுந்ததும், அவனதுசேனை மனக்குழப்ப மடைந்தது; இராவணனுக்கும் பெருங்கோபமுண்டாயிற்று.

வானரர்களின் களிப்பு.

இந்திரனுடன்கூடிய தேவர்கள் அட்டகாசஞ் செய்ததுபோலவே, அதிக சந்தோஷத்தால் வானரர்களும் அட்டகாசஞ்செய்தார்கள். அந்தச் சத்தமானது, கோட்டை கோபுரங்களுடன் கூடிய இலங்கையையே இடிந்துவிழச் செய்வதுபோல விளங்கிற்று.

இராவணன் சினத்தல்.

தேவர்களும் வானரர்களும் அப்போரிற் செய்த பெருஞ்சத்தத்தைக் கேட்டு, இந்திரனுடைய சத்துருவாகிய இராவணன், வெகு கோபங்கொண்டு, போர்க்களத்தைநோக்கி வெகுவேகமாகச் சென்றான்.

நூறுஞ் சருக்கம்:
ஸ்ரீராமருடன் இராவணன் போர்தொடங்குதல்.

மகாபலம் பொருந்திய விரூபாக்ஷன் மடிந்தவுடன் மகோதரன் மகாபார்சுவன் என்னும் அரக்கர்களும் மாண்டுவிடவே, அப்பெரும் போரில், இராவணன், வெகுகோபங் கொண்டவனனன். உடனே, அவன், தனது தேர்ப்பாகனைப் பார்த்து, இரதத்தை வெகுவேகமாக ஓட்டும்படி கட்டளையிட்டு "எனது மந்திரிகளெல்லாரும் மடிந்தார்கள். எனது நகரமும் உட்புகவழியில்லாமல் தகையப்பட்டிருக்கின்றது. நான், இராமன் லக்ஷ்மணன் என்ற அவ்விருவரையுங் கொன்று எனக்கு உண்டாயிருக்கும் துக்கங்களைப் போக்கிக் கொள்ளுகின்றேன். எந்த விருட்சத்துக்கு, சுக்கிரீவன் ஜாம்பவான் குமுதன் நளன் மைந்தன் துவிவிதன் அங்கதன் கந்தமாதனன் அனுமான் சுஷேணன் என்ற இவர்களும் மற்றுமுள்ள வானர சேனாதிபதிகளும் இலைகளோ, எதற்கு அந்தச்சீதை மலரோ, அப்படிப்பட்ட பயன்படும் இராம விருட்சத்தை, நான், இன்று இப்போர்க்களத்தில் வெட்டித் தள்ளுகின்றேன்" எனக்கூறினன். இவ்வாறுசொல்லி அதிரதனனிய மஹாரௌத்ர இராவணன் தனது இரதத்தின் சத்தத்தால் எல்லாத்திசைகளிலும் எதிரொலி யுண்டாக்கிக்கொண்டு, வெகு வேகமாக ஸ்ரீராமரிருந்த இடத்தை நாடி வந்தடைந்தான். அவ்விதமாக உண்டான சத்தத்தினால், நதிகள் மலைகள் காடுகள் என்ற இவைகளால் நிரம்பிய பூமிமுழுமையும் அசைந்தது; பூமியிலிருந்த முள்ளம்பன்றிகள் மான்கள் யானைகள் முதலிய மிருகங்களும், நடுநடுங்கின.

இராவணனது கோபம்.

இராவணனது வீரவாதம்.

இராவணன் இராமரையடைதல்.

அவ்விராவணன், தாமஸமென்ற மிகக்கொடிய அஸ்திரத்தை அபிமந்திரித்து விடுத்து எல்லா வானரர்களையும் வதைக்கத்தொடங்கினன். அப்போது, அவ்வானரர்கள், நான்கு பக்கங்களிலும் ஓடத்தலைப்பட்டார்கள். தோல்வியடைந்து பலதிசைகளையும் நோக்கி யோடின வானரர்களால், பெருந்தூளி யெழுந்தது; பிரமதேவர் தாமே உண்டாக்கின இராவணனுடைய அந்த அஸ்திரத்தைச் சகிக்க ஒருவராலும் முடியவில்லை.

இராவணன் போர் செய்ய, வானரர் முறிந்தோடுதல்.

இராவணனுடைய சிறந்த பாணங்களினால் தமது சேனை நாறுபாகங்களாக முறிந்தோடியதைப் பார்த்து, ஸ்ரீராமர், இராவணனுடன் போர் புரியுமாறு வெகு வேகமாக வந்தார். அரக்கப் புலியாகிய அவ்விராவணன், தான் அவ்விதமாக வானரசேனையை முறிந்தோடச்செய்தபின்பு, தன் கண் முன்பாகத் தாமரையிதழையொத்து நீண்ட திருக் கண்களையும் நீண்ட திருக்கைகளையு முடைய ஸ்ரீராமர் இலட்சுமணருடனே கூடி, உபேந்திர பகவானுடன் தேவேந்திரன்போல ஒருவராலும் வெல்லமுடியாத காந்தியுடன் விளங்கிக்கொண்டு ஆகாயத்தை யளாவுவது போன்ற பெருவில்லைக் கையிற்பிடித்தவராய் நிற்கக் கண்டான். அப்பொழுது, வெகுபராக்கிரமசாலியும் பலசாலியும் இரகுவமிசத்தி லுதித்தவருமான இராமர், இலட்சுமணருடன் கூட நின்று, வானரர் போரில் முறிந்தோடுவதையும், இராவணன் தம்மைக்குறித்து விரைந்து வருவதையும் பார்த்து, வெகுசந்தோஷங்கொண்டு, தமது வில்லை நடுவிற் பிடித்தார். பிறகு, அவ்விராமர், நாணியையிழுத்து, வெகு வேகமும்இவ்வுலகத்தைப்பிளந்துவிடுவதுபோன்றபெருஞ் சத்தமுங் கொள்ளுமாறு சிறந்த வில்லி லேற்றினர். அப்போது, இராவணன் பிரயோகித்த பாணங்களாலும், ஸ்ரீராமர் நாணேற்றிய சத்தத்தாலும், அங்கிருந்த அரக்

அப்போது, இராமர் போருக்கு வர, இராவணன் காணுதல்.

கர்களெல்லாரும், நடுநடுங்கி நூற்றுக்கணக்காய்க் கீழே விழுலானர்கள். சக்கரவர்த்தித் திருமகர்களான அவ்விருவருடைய பாணங்களின் முன்னிலையில் வந்துசேர்ந்த இராவணன், சந்திரசூரியருடைய சமீபத்திலிருக்கும் இராகுபோலக் காணப்பட்டான்.

யுத்த சங்ஙாகம்.

இலட்சுமணர், அவ்விராவணனுடன் முதலிற்போரிட எண்ணங்கொண்டவராய், தமது வில்லை வளைத்து, அக்கினிக்கு ஒப்பான கூரான பாணங்களை அவ்வரக்கன்மேல் விடுக்கலானர். வில்வீரரான இலட்சுமணராற் பிரயோகிக்கப்பட்ட அப்பாணங்கள் ஆகாயத்தில் வந்துகொண்டிருந்தபொழுதே, மஹாபராக்கிரமசாலியாகிய இராவணனவன், தனது பாணங்களால் தடுத்தான். அன்றியும், அவன், வில்லில் தனக்கிருக்கின்ற தேர்ச்சியைக் காட்டுமாறு, அவர் விடுத்த ஒற்றைப்பாணங்களைத் தனது ஒற்றைப்பாணங்களாலும், மூன்று பாணங்களை மூன்று பாணங்களாலும், பத்துப் பாணங்களைப் பத்துப் பாணங்களாலும் வெட்டியெறிந்தான்.

லக்ஷ்மணர் இராவணனுடன் பொருதல்.

போரில் வெற்றியைப் பலதரங்களில் அடைந்துள்ள இராவணன், இலட்சுமணரைத் தாண்டி, மலைபோலக் கொஞ்சமேனுஞ்சலியாமல் நின்ற இராமரிடம் வந்துசேர்ந்தான். அவ்விராவணன், அப்போர்க்களத்தில் ஸ்ரீராமரிடம் வந்துசேர்ந்து, கோபத்தாற் கண்கள் சிவந்தவனாய், ஸ்ரீராமர்மீது சரமாரி பொழியலானன். அப்பாணங்களைப் பார்த்ததும், ஸ்ரீராமர், பல்லங்களை யெடுத்து, மின்னிக்கொண்டும் வெகு பயங்கரமாயும் சர்ப்பங்கள்போன்றும் வந்த அப்பாணங்களெல்லாவற்றையும் வெட்டியெறிந்தார். அப்போரில், இராமர் இராவணனையும் இராவணன் இராமரையுமாக ஒருவரை யொருவர் வெகு கூரான பலவகைப்பாணங்

ராமராவணயுத்தம்.

களால் விரைவாக அடித்துக்கொள்ளலானார்கள். ஒருவர் மீது ஒருவர் விடுத்த பாணங்களைத் தடுத்துக்கொண்டு வெல்லப்படாதவராயிருந்த அவ்விருவரும், வலசாரியாகவும் இடசாரியாகவும் விசித்திரமாகச் சுற்றிக்கொண்டு போர்செய்தார்கள். வெகு பயங்கரமான தோற்றமுள்ளவர்களாய், யமனுக்கும் அந்தகனுக்கும் ஒப்பான அவ்விருவரும் அம்புகளைத் தொடுத்து விட்டுக்கொண்டு யுத்தஞ்செய்ததைக் கண்டு, எல்லாப்பிராணிகளும் நடுநடுங்கின. அப்போது, பல அம்புகளால் நிரம்பிய ஆகாயம், வெயிற்கால மொழிந்தவுடன் மின்னலுடன்கூடிய மேகங்களையுடையதாவதுபோலத் தோன்றிற்று. அன்றியும், அம்மழையால், ஆகாயம், பல கணிவைக்கப்பெற்றதுபோலவும் காணப்பட்டது. வெகு வேகமுள்ளவைகளாயும் கூரான முனைகளுள்ளவைகளாயும் அழகான சிறகுகள் கட்டப்பட்டவைகளாயுமிருந்த கழுகின்சிறகுகளென்ற பாணங்களால், அவ்விருவீரரும், பயங்கரமான அப்போரில் இருளையுண்டாக்கினார்கள்; அவ்விருளும் சூரியன் மறைந்தபிறகு மேகக்கூட்டங்கள் ஆகாயத்தில் தோன்றுவதனால் உண்டாக்கப்படுங் காரிருள்போல விருந்தது. ஒருவரையொருவர் வதைக்க முயன்ற அவ்விருவீரருக்குள்ளும் அப்பொழுது நடந்த போரானது, தேவேந்திரனுக்கும் விருத்திராசுரனுக்கும் நடந்த பெரும்போர்போல வேறொருவரால் செய்யமுடியாததாகவும், மனத்தினாலும் இன்னபடியென்று நினைக்கமுடியாததாகவு மிருந்தது; ஏனெனில், அவ்விருவரும் வில்வித்தையில் நன்றாகப் பழகியவர்கள்; அவ்விருவரும், மற்றை ஆயுதப்பயிற்சியிலும் பெயர் பெற்றவர்கள்; அவ்விருவரும், அஸ்திரவித்தையை நன்றாகக் கற்றறிந்தவர்கள்; யாவரினும் உத்தமர்கள்; அவ்விருவரும், அவ்வாறு அன்று யுத்தஞ்செய்தார்கள். சமுத்திரத்திற் புசல்காற்றடித்த விடங்களிலெல்லாம் பேரலைக் கூட்டங்கள் தோன்றுவன போல, அவ்விருவரும் மண்டலமாகச்செல்லும் இடங்களிலெல்லாம் பாணத்தின்

அலைகள் காணப்பட்டன. அப்பொழுது, இவ்வுலகத்தையே அழப்பண்ணும் இராவணன், வெகு சாமர்த்தியமாகப் பாணங்களை யெடுத்து ஸ்ரீராமருடைய நெற்றியில் விடுத்தான். உருத்திரமூர்த்தியினுடைய வில்லினின்று விடப்பட்டனவும், செங்கழுநீர்ப்பூவின் இதழுக்கொப்பான நிறமுள்ளவைகளுமான அப்பாணங்களை, ஸ்ரீராமர், தமது தலையால் தாங்கி, ஒருவகை வருத்தமு மடையாதவராயினர். பிறகு, வீரியவானும்மஹாதேஜஸ்வியுமாகிய ஸ்ரீராமர், அதிககோபங்கொண்டவராய், உருத்திர மூர்த்தியினுடைய அஸ்திரத்தைப்பற்றிய மந்திரங்களை ஜபித்து, வில்லை வளைத்துப் பாணங்களைத் தொடுத்து இராவணன்மேல் விடுத்தார். அவைகள், பெருமேகத்துக் கொப்பான இராவணகவசத்தில் விழுந்து, அக்கவசம் பிளக்கக்கூடாததாக இருந்தபடியால், அவனுக்கு ஒருவிதமான வருத்தத்தையு முண்டாக்காமற்போயின. மறுபடியும், ஸ்ரீராமர், இரதத்தின்மே லிருந்த அவ்வரக்கமன்னவனது நெற்றியில் சிறந்த அஸ்திரமந்திரங்களை ஜபித்து விடுத்தார். அவைகள், ஐந்தலைநாகங்களைப்போல இராவணன்மேற் சீறிச்சென்று, அவனுல் தடுக்கப்பட்டனவாய், அவன் விடுத்த பாணங்களைப் பிளந்து பூமியில் விழுந்தன. அவ்வாறு, இராமர் விடுத்த அஸ்திரத்தை முறித்தெறிந்து, இராவணன் வெகுகோபங் கொண்டவனுய், வெகு பயங்கரமான ஆசுரமென்னும்அஸ்திரத்தைப்பிரயோகிக்கலானுன். அதினின்று, அம்மாயாவியாகிய இராவணன், சிங்கமுகம் புலிமுகம் கழுகுமுகம் காக்கைமுகம் வல்லூறுமுகம் பருந்தின்முகம் நரியின்முகம் செந்நாய்முகம் என்ற பாணங்களையும், இன்னும் வாயைத்திறந்துள்ள பயங்கரமான பலவகை மிருகங்களின் முகங்களைக் கொண்ட பாணங்களையும், ஐந்தலைநாகமுகம் கழுதைமுகம் முள்ளம்பன்றிமுகம் கோழிமுகம் நாய்முகம் முதலைமுகம் சர்ப்பமுகம் என்றபாணங்களையும்இன்னும் பலவகைப்பாணங்களையும்

ஸ்ரீராமரைநோக்கி விடுக்கலானன். அக்கினிக்கு ஒப்பான அவ்விராமர், அவ்வாறு ஆசுராஸ்திரத்தை இராவணன் தன்மீது விடுத்ததைப் பார்த்து வெகுஉற்சாகங்கொண்ட வராய், அதைத் தடுக்க ஆக்நேயாஸ்திரத்தைப் பிரயோ கம்பண்ணினர். அக்கினிபோல எரியுங் காந்தியுடன் விளங்கிய முகமமைந்த பாணங்களையும், சூரியனுடைய முகத்துக்கொப்பான முகமமைந்த பாணங்களையும், சந்திர முகமுள்ள பாணங்களையும், அர்த்தசந்திரபாணங்களை யும், நவக்கிரகங்கள் நட்சத்திரங்கள் என்னும் இவைகளின் முகங்களுள்ள பாணங்களையும், தூமகேதுபோன்ற தோற்ற முள்ள பாணங்களையும், பெருங் கொள்ளிக்கட்டையைக் கொண்ட பாணங்களையும், மின்னல்போன்ற நாவுள்ள பாணங்களையும், ஸ்ரீராமர், தமது அந்த அஸ்திரத்தி னின்று உண்டாக்கினர். அவைகளால், இராவணன் விடுத்த பயங்கரமான பாணங்களவ்வளவும், ஆகாயத்தி லேயே அழிக்கப்பட்டு ஆயிரந்துண்டுகளாய்க் கீழே விழுந்தன. மாசற்ற ஸ்ரீராமரால் கொடிய அவ்வரக்கனு டைய பாணங்க ளவ்வளவும் அழிந்ததைப் பார்த்து, தங் களுக்கு இஷ்டமான உருவங்கொள்ளுஞ் சுக்கிரீவன் முத லான வானரர்களெல்லாரும், சந்தோஷமடைந்து, ஸ்ரீரா மரைச் சுற்றிநின்று அட்டகாசம் பண்ணினர்கள். தசரத குமாரராகிய ஸ்ரீராமர், தமது பல பராக்கிரமத்தால் அவ்வி ராவணன் பிரயோகித்த அஸ்திரத்தை அப்பெரும்போரிற் பாழாக்கினதற்காக வெகுகளிப்படைந்தார்; அவ்வாறே, ஆனந்தமடைந்த வானரவீரர்கள், பேராரவாரஞ் செய் தார்கள்.

நூற்றேராஞ் சருக்கம்:

இலட்சுமணர் இராவணனது சக்தியாயுதத்தால் இறந்தவர்போன்று விழுதல்.

அவ்வாறு தனது அஸ்திரம் நாசமாக்கப்பட்டதும், அரக்கவேந்தனுகிய மஹாபராக்கிரமமுள்ள இராவணன்,

இருமடங்கு கோபங்கொண்டவனாய், மயன் கொடுத்ததும் உருத்திரமூர்த்தியைத் தேவதையாகக்கொண்டதும் வெகு பயங்கரமுமான அஸ்திரமொன்றை யெடுத்து, ஸ்ரீராமர்மேல் விடுக்கத்தொடங்கினான். பிரளயகாலத்திற் பலவகையாகப் பிரசண்டமாருதங்கள் கிளம்புவனபோல, அவ்வஸ்திரத்தினின்று பிரகாசிக்கின்ற வச்சிராயுதங்களுக்கு ஒப்பான வலிமையுள்ள பல சூலங்களும், கதைகளும், உலக்கைகளும், முத்கரங்களும், வஜ்சகத்தன்மையுள்ள பாசாயுதங்களும், மின்னுகின்ற இடிகளும் ஆகிய பலவகையான கொடும்படைகள் கிளம்பின. அஸ்திரங்களையறிந்தவர்களுக்குள் உத்தமரும் மகாபராக்கிரம முள்ளவரும் சீமானுமான ஸ்ரீராமர், அவ்வஸ்திரத்தைக் காந்தர்வாஸ்திரமென்னுஞ் சிறந்த அஸ்திரத்தை விடுத்து அழித்தொழித்தார். மகாத்துமாவாகிய ஸ்ரீராமர் அவ்வண்ணம் அவ்வஸ்திரத்தை நாசமாக்கினதும், இராவணன், கோபத்தாற் கண்கள் சிவந்தவனாய், சூரியபகவானைத் தேவதையாகக்கொண்ட அஸ்திரமொன்றைப் பிரயோகித்தான். அப்போது, கடிவேகமமைந்த புத்திமானுகிய இராவணனது வில்லினின்று ஒளியுடன் விளங்கிய பெரிய சக்கராயுதங்கள் வெளிவந்தன. சந்திரனும் சூரியனும் மற்றைக்கிரகங்களும் செல்லப்பெற்ற பத்துத்திசைகளும் பிரகாசிப்பதுபோல, அங்குமிங்குஞ் சென்றுகொண்டிருந்த அவைகளால் ஆகாயமானது விளங்கலாயிற்று. அவ்விதம் வெகு விசித்திரமாக இராவணன் அப்போர்க்களத்தில் பிரயோகித்த சக்கரங்களையும் ஆயுதங்களையும், ஸ்ரீராமர், அம்புக்கூட்டங்களால் வெட்டியெறிந்தார். அவ்வஸ்திரமும் நாசமாய்ப்போனதை, அரக்கவேந்தனுகிய இராவணன், கண்டு, ஸ்ரீராமருடைய மர்மஸ்தானங்களிலெல்லாம் பத்துப்பாணங்களைப் பிரயோகித்துப் பிளந்தான். பெருவில்லினின்று பத்துப்பாணங்களை விடுத்து இராவணன் புடைத்தாலும்,

இராவணன் இராமருடன் போர்செய்தல்.

மஹா பராக்கிரமசாலியாகிய ஸ்ரீராமர் கொஞ்சமாவது சலிக்கவில்லை. பிறகு, போரில் வெல்பவரான ஸ்ரீராமர், வெகு கோபங்கொண்டு, இராவணன்மீது பல பாணங்களை விடுத்து அவனுடைய சரீரம்முழுவதிலும் புடைத்தார்.

இச்சமயத்தில், பகைவரை வெல்லுந்தன்மையுள்ள வெகு பலசாலியான ஸ்ரீராமருடைய தம்பியாகிய இலட்சுமணர், வெகுகோபங்கொண்டவராய், ஏழுபாணங்களை யெடுத்து வெகுவேகமாகச் செல்லும் அப்பாணங்களைக்கொண்டு, மானுடத்திலே யுருவமெழுதிய இராவணனது தேர்க்கொடியைப் பலதுண்டமாக அறுத்தெறிந்தார். அன்றியும், சீமானுன் இலட்சுமணர், ஒரு பாணத்தை விடுத்து, அழகான குண்டலங்களணிந்திருந்த அரக்கமன்னவனது தேர்ப்பாகனுடைய தலையை யறுக்கித் தள்ளினர்; மேலும், ஐந்து கூரான பாணங்களை விடுத்து, யானையின் துதிக்கைபோல் விளங்கிய இராவணனது வில்லையும் வெட்டியெறிந்தார். நீலமேகங்கள்போலக் கறுத்து மலைகள்போல் வெகு உன்னதமாக விளங்கிய அவ்விராவணனது சிறந்த குதிரைகளை, விபீஷணர், தாம் தாவிப்பாய்ந்து கதாயுதத்தினால் அடித்துக் கொன்றார். விரைந்து தொழில் செய்யவல்ல இராவணன், புரவிகள்மாண்ட இரதத்திலிருந்து வெகுவேகமாகக் கீழிறங்கி, தனது தம்பியின்மேற் கொடுங்கோபங்கொண்டான். பிறகு, வெகு வல்லமைதங்கிய பராக்கிரமமுள்ள ராக்ஷஸராஜனுகிய இராவணன், மின்னலுடன்கூடிய இடிபோல் விளங்கிய சக்தியென்னும் ஆயுதத்தை விபீஷணர்மேல் வீசினுன்; அந்தச்சக்தி விபீஷணரை யணுகுமுன்னமே, இலட்சுமணர், அதை மூன்று பாணங்களை விடுத்து நறுக்கியெறிந்தார்; அப்போது, அப்போர்க்களத்தில், வானரர்களெல்லாரும் மிகவும் அட்டகாசம்பண்ணினர்கள். அவ்வாறு

இலட்சுமணர் இராவணனது தேவசம் சாரதியில் இவைகளை யொழித்தல்.

விபீஷணர் இராவணனது தேர்க்குதிரைகளையொழித்தல்.

பொன்மாலை சூட்டப்பெற்ற அச்சக்தி, மூன்று துண்டுக ளாகநறுக்கப்பட்டு நெருப்புப்பொறிகளைக் கக்கிக்கொண்டு ஆகாயத்திலிருந்து விழுகிற எரிகொள்ளி போலப் பூமியில் விழுந்தது. அதன்பிறகு, இராவணன், சந்தனம் முதலிய பல உப சாரங்களால் நன்றாகப் பூசிக்கப்பட்டதாய், யமனாலும் அணுக முடியாததாய், தனது ஒளியால் மிகுதியாக மின்னிக்கொண்டிருந் ததான பெரியதொரு சக்தியென்னும் ஆயுதத்தைக் கை யிற்பிடித்தான்; வெகு பலவானாகிய இராவணன், கிட்டுதற் கும் அரியதாய் இந்திராயுதம்போல் விளங்கியதான் அப் பெருஞ்சக்தியைக் கையாற்சுழற்றியபொழுது, அது, வெகு பயங்கரமாக மின்னிற்று. அச்சமயத்தில், அச்சக்தியால் விபீஷணருடையஉயிருக்கு அபாயமுண்டாகுமென்று சந் தேகித்து, இலட்சுமணர், விபீஷணரை மறைத்துக்கொ ண்டு அவர்க்கு முன்பாக நின்று விபீஷணரை விடுவிக்கக் கருதி, சக்தியைக் கையிற்கொண்டிருந்த இராவணன்மேல் தமது வில்லை வளைத்துப் பாணங்களை வருஷிக்கலானார். மகாத்துமாவாகிய இலட்சுமணர் விடுத்த பாணங்கள் வந்து துளைத்தலால், இராவணன், தனது பராக்கிரமங் குன்றி, தனது தம்பியின்மேல் அச்சக்தியை விடவேண்டுமென்ற எண்ணத்தை மாற்றினன்.

இராவணன் விபீஷணர்மே லெறிந்த சக்தி யரியுதங்களை இலட்சுமணர் தடுத்துவிடுதல்.

இலட்சுமணர் அவ்வாறு தன் தம்பியைப் பாதுகாத் ததற்காக,அரக்கவேந்தனாகிய இராவணன், அவரைநோக்கி இவ்வாறு சொல்லலானான்:— "பலத்தினாற் புகழ்பெ ற்ற இலட்சுமணரே! தங்களால் விபீஷணன் இச்சக்திக்கு இரையாவதிலிருந்து விடுவிக்கப்பட்டானதலால், அவன் மீது பிரயோகிப்பதை விட்டு, நான், இச்சக்தியைத் தங்கள் மேல் விடுகின்றேன். இரத்தம் பூசப்பட்டதான் இது, என் கையாகின்ற உழலைத்தடியிலிருந்து விடப்பட்டு, தங்களது மார்பைப் பிளந்து தங்களுடைய பிராணனை வாங்கிவிட்

டேபோகும்" என்று இவ்வண்ணஞ்சொல்லி, எட்டுமணிகள் கட்டியெழிலிக்கப்பெற்றதும், மயனால் மாயையாற் செய்யப்பட்டதும், ஒருபொழுதும் வீண் போகாததும், சத்துருவைக் கொல்வதும், தனது ஒளியால் எரிவதுபோன்றதுமாகிய அச்சக்தியை, வெகு கோபங் கொண்ட இராவணன், இலட்சுமணர்மேல் விடுத்து அட்டகாசமும் பண்ணினன். அப்போர்க்களத்தில், அச்சக்தி இலட்சுமணரை நோக்கி வந்தபொழுது, ஸ்ரீராமர் அதை உத்தேசித்து, "இலட்சுமணனுக்கு க்ஷேமமுண்டாகுக; உனது கொல்லுதலி லுள்ள முயற்சி யொழிந்து பயனற்றொழிக" என்று கூறினர். அந்த யுத்தத்தில், கோபித்துக்கொண்டு நின்ற இராவணனால் விடப்பட்ட ஸர்ப்பத்திற்கு ஒப்பான அந்தச்சக்தியானது, பயமற்றவராயிருந்த இலட்சுமணரது மார்பில் விரைவாக மூழ்கிற்று.

இராவணன் இலட்சுமணர் மீது சக்தியை விடுதல்.

பேரொளியும் பெருவேகமுமுள்ள அந்தச் சக்தியானது, நாகராஜனுடைய நாக்குப் போல மின்னிக்கொண்டு, இலட்சுமணரது விசாலமான மார்பில் மூழ்கிற்று. பிறகு, இராவணன் எய்த வேகத்தால் நன்றுகப்பாய்ந்த அச்சக்தியால், இலட்சுமணர், மார்புபிளப்புண்டு புவியில் விழுந்தார்.

இலட்சுமணர் பூமியில் விழுந்திடுதல்.

அவ்விதமான அவஸ்தையை யடைந்த இலட்சுமணரை அவருக்குச் சமீபத்திலிருந்த ஸ்ரீராமர், பார்த்து, வெகு தைரியசாலியாக விருந்தும் தம்பியின் மேல் வைத்திருந்த அன்பினால், மிக்க வருத்தமடைந்தார். அந்தத்துக்கத்தாற் கண்ணீர்வடிகின்ற கண்களுடன், அம்மகாத்துமா, கொஞ்ச நேரம் ஆலோசித்து, உடனே வெகுகோபங்கொண்டவராய், பிரளயகாலத்தீப்போலக் கொதிக்கலானர்: 'இது வன்று, துக்கப்படவேண்டிய சமயம்' என்று நினைத்து,

ராமரது வருத்தம்.

ஸ்ரீராமர், இராவணனை வதைக்கக்கருதியவராய், பெரு முயற்சியுடனே, இலட்சுமணரைத் தமது கண்களாற் பார்த்துக்கொண்டே, வெகுபயங்கரமானயுத்தத்தி லிறங்கினர். ஸ்ரீராமர், அப்பெரும்போரிற் சக்தியால் அடிபட்டு உடம்பு முழுதும் இரத்தம் பெருக விழுந்துகிடந்த இலட்சுமணரை, பாம்புடன்கூடிய ஒரு பெருமலைபோலப் பார்த்தார்.

இராமர் இலட்சுமணரது மார்பிற் பாய்ந்திருந்தசக்தியைப் பிடுங்கியெறிதல்.

வெகு பலசாலியாகிய இராவணன் விடுத்த அந்தச் சக்தியை, வானரவீரர்கள் யாவரும், பிடுங்கியெடுக்க எவ்வளவோ முயன்றுபார்த்தும், முடியாதவர்களானார்கள்; மேலும், அவ்வானரர்கள் யாவரும், மிகுதியாகக் கைவேகமுள்ள இராவணனது சரமாரியாற் பீடிக்கப்பட்டு மிருந்தார்கள். அன்றியும், அச்சக்தி இலட்சுமணரைப் பிளந்து பூமியிலும் புகுந்திருந்தது. பலவானான ஸ்ரீராமர், அப்போரில், கோரமான அச்சக்தியைக் கைகளால் தொட்டுப் பிடுங்கி வெகு கோபத்துடன் முறித்தெறிந்தார்.

இராமர், இலட்சுமணரைப் பாதுகாக்குமாறு ஹநுமத்ஸுக்ரீவர்க்குக் கட்டளையிட்டு, 'நான் இராவணனைக் கொல்வேன்' என்றல்.

அவ்விதமாக அவ்விராமர் அச்சக்தியைப் பிடுங்கின பொழுது, வெகு பலசாலியான இராவணன், ஸ்ரீராமருடைய மார்பைப் பிளக்கும்படியான பலபாணங்களை விடுத்துக்கொண்டேயிருந்தான். அப்பாணங்களை ஒருபொருட்டாக எண்ணுமல், ஸ்ரீராமர், இலட்சுமணரை வெகு அன்புடன் தழுவிக்கொண்டு, அநுமான் சுக்கிரீவன் இவ்விருவரையும் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:— "வானரோத்தமர்களே! நீங்கள் இலட்சுமணரைச் சூழ்ந்துகொண்டு இவ்விட மிருங்கள். நான் வெகுநாளாக எதிர்பார்த்திருந்ததாகிய என்வல்லமையை வெளிக்காட்டுஞ் சமயம் இப்பொழுதுதான் நேர்ந்திருக்கின்றது. எப்பொழுதும் பாவச்செயல்களையே புரியும் இப்பாவியை வதைக்கவேண்டும். கோடை நீங்கினதும் சாதகப்பறவை

மேகத்தை ஆவலுடன் எதிர்பார்ப்பதுபோல, நான் இந் தச்சமயத்தைதத்தான் இதுவரையில் எதிர்பார்த்திருந் தேன். வானரர்களே! வெகுசடிதியில் இதே முகூர்த் தத்தில் இவ்வுலகத்தைவிட்டு ஒன்று இராவணனுவது ஒழியவேண்டும், இராமனென்ற நானுவது ஒழியவேண் டும்; இவ்வண்ணம் நான் சத்தியமாகப் பிரதிஜ்ஞை செய் கின்றேன். நாட்டையிழத்தல், வனத்தில்வாசம்பண்ணு தல், தண்டகையிற்சஞ்சரித்தல், சீதையைத்தேடுதல், அரக்கர்களுடன் போர்விளைத்தல் என்ற கொடும் பெரும் துயரத்தையும், நரகத்திற்கு ஒப்பான மனச்சஞ்சலை யையும் எல்லாவற்றையும், நான், இவ்விராவணனை வதைப் பதனற் போக்கிக்கொள்ளுகின்றேன். எவனுக்காக, இவ் வளவு வானரசேனைகளையும் நான் இங்குக் கொணர்ந் தேனே, வாலியைவதைத்துச் சுக்கிரீவனுக்குப் பட்டாபி ஷேகஞ் செய்துவைத்தேனே, எவனுக்காகச் சமுத்திரத் தில் அணைகட்டித் தாண்டிவந்தேனே, அவன், இன்று என்கண்களினெதிரே வந்திருக்கின்றான்; பார்த்தமாத் திரத்திற் பிராணனைவாங்கிவிடுஞ் சர்ப்பத்தின் பார்வையி லகப்பட்ட பிறகு, எவ்வாறு ஒருவன் பிழைக்கமாட் டானே, அதுபோல, இன்று,பாவியாகிய இவ்விராவணன், என்பார்வையிலகப்பட்ட பிறகு ஒருபொழுதும் உயிர்தப்ப மாட்டான். வானரவீரர்களே! ஒருவராலும் தகைய முடியாத நீங்கள், மலைச்சிகரங்களை யுட்கார்ந்துகொண்டு, எனக்கும் இராவணனுக்கும் நடக்குஞ் சண்டையை ஒரு வகைக்குழப்பமு மில்லாமற் பார்த்துக்கொண்டிருங்கள். கந்தர்வர், தேவர் முனிவர் சாரணர் என்ற இவர்களுடன் கூடிய இம்மூவுலகத்தாரும், இராமனுகிய நான் இராமனு யிருப்பதை இன்று காண்பார்களாக. சராசரரூபமாகிய இவ்வுலகங்களும் ஜலங்களும் தேவர்களும் ஆங்காங்குக் கூடி, இவ்வுலகம் இருக்கும் வரையில் எப்போதும் எத் தொழிலை வியந்துபேசுவார்களோ, அவ்வாறுக நடத்தப்

படும் போர்த்தொழிலே, இன்று, நான், செய்யப்போகின் றேன்" என்றார்.

இராமர் இராவணனுடன் பொருதல்.

ஸ்ரீராமர், இவ்வாறு சொல்லி, மனந்தேறி, பொன்னுபரணங்களையணிந்த கூரான பாணங்களை அப்போரில் இராவணன்மேல் விட்டார். மேகமானது மழைத்தாரையைப் பொழிவதுபோல, இராவணன் ஸ்ரீராமர்மேல் வெகு பிரகாசமான பாணங்களையும் இருப்புலக்கைகளையும் விடுத்தான். ஸ்ரீராமரும் இராவணனும் அவ்வாறு ஒருவர்மேல் ஒருவர் பாணங்களை விடுத்துக்கொண்டபொழுது, அவ்விருவருடைய பாணங்களின் ஒலியும் நெருக்கமாகக் கேட்கலாயிற்று. ராமராவணர்களுடையை அப்பாணங்கள், மூறிந்தும் சிதறியும் பிரகாசிக்கின்ற முனைகளுடன் ஆகாயத்திலிருந்து பூமியில் விழுந்தன. அவ்விராமராவணர்கள் செய்த நாண்களின் சத்தமானது, வெகு ஆச்சரியமாகவும், எல்லாப்பிராணிகளும் நடுநடுங்கும்படியாகவும் கேட்கலாயிற்று. மகாத்துமாவும் கொடிய கோதண்டத்தைக் கைப்பற்றியவருமாகிய ஸ்ரீராமர் பாணக்கூட்டங்களைப் பொழிந்து வருத்தவே, இராவணன், பெருங்காற்றினல் மேகம் சிதறுண்டு ஓடுவதுபோலப் பயத்தால் நடுநடுங்கி அப்போர்க்களத்தைவிட்டு ஓடினன்.

நூற்றிரண்டாஞ் சருக்கம்:
இலட்சுமணரைப் பிழைப்புமூட்டுதல்.

வெகு பலசாலியாகிய இராவணனது சக்தி யென்கின்ற ஆயுதத்தால், போரில்வெகு சூரரான இலட்சுமணர் வருத்தப்பட்டு இரத்தம் பெருக விழுந்ததைப் பார்த்த பிறகு, ஸ்ரீராமர், கொடிய அவ்வரக்கவேந்தனுடன் வெகு பயங்கரமான யுத்தம்பண்ணி, அவன்மேற் சரமாரிபொழி

ந்த வண்ணமே, சுஷேணனைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:— "இராவணனுடைய வல்லமையால் இலட்சுமணன் பூமியில் விழுந்துகிடக்கின்றான்; எனது துக்கத்தைப் பெருகப்பண்ணிக்கொண்டு, இவ்வீரன், சர்ப்பம் போலப் புரள்கின்றான். எனது உயிரைவிட எனக்குச் சிறந்த இவ்வீரன் தனது உடம்பு முழுமையும் இரத்தத்தால் நனைந்திருப்பதைப் பார்த்தபிறகு, மனங்குழம்பிவிட்ட எனக்கு, இனிமேல் யுத்தஞ்செய்ய என்ன வல்லமை யிருக்கின்றது? போரில் வல்லவனும், என் தம்பியாய், உத்தமவிலக்கணங்கள்பொருந்தியவனு மிருக்கும் இலட்சுமணன், தனது பிராணனை யிழந்தா னென்றால், அதன்பிறகு, என்னுயிராலும் மற்றைச் சுகங்களாலும், எனக்கு என்ன பிரயோஜனம்? அக்கொடிய இராவணன் எனது தம்பியை வதைத்ததைப் பார்த்தபிறகு, எனது வல்லமையே, எனக்கு வெட்கத்தையுண்டாக்குகின்றது; எனது கையிலிருந்து வில்லே நழுவுகின்றது; எனது அம்புகள் தவறிவிழுகின்றன; எனது கண்களில் கண்ணீர் ததும்புகின்றது. கனவில் நடப்பவனுடைய அவயவங்கள்போல எனது தேகமும் சோர்வடைகின்றது; கொடிய கவலை எனக்கு வெகு அதிகமாய்விட்டது. இப்படி அவஸ்தைப்படுவதைவிட இறந்துபோவதே நலமென்னும் புத்தி, எனக்குஉண்டாகின்றது" என்று சொன்னார். அன்றியும், தமது உயிரே வெளிக்கிளம்பிச் சஞ்சரிப்பதுபோலிருந்த தம்பி, உயிரிழப்பவராய், பெருமூச்சுவிட்டுக்கொண்டும், அவஸ்தையால் துடித்துக்கொண்டும், மர்மஸ்தானத்தில் மிகவும் விரணப்பட்டும் வருந்துவதைக் கண்டு, இராமர், ஏதோ ஆலோசித்துக்கொண்டு தீராப் பெருந்துயரத்தில் மூழ்கி மனங்குழம்பிப் பின்வருமாறு புலம்பலுற்றார்:— "எனதுதம்பி மடிந்து போர்க்களத்திற் புழுதியிற் புரள்வதைப் பார்த்த பின்பு, இனிமேல் எனக்கு யுத்தத்தால் ஒருவிதபிரயோஜனமு மில்லை; எனதுயிராலு

இராமரது சோகம்.

மில்லை; சீதையாலு மில்லை. எனக்கு இராச்சியத்தினால் ஆகவேண்டுவது என்ன? எனது உயிரினால்தான் ஆகவேண்டுவது என்ன? எனது தம்பி மடிந்து விழுந்தான்; இனி, போர்செய்வதிலும் யாதொருகாரியமு மில்லை. வேண்டுமானால், தேசந்தோறும் ஒவ்வொரு மனிவியை விவாகஞ்செய்து கொள்ளலாம்; வேண்டுமானால், தேசந்தோறும் பந்துக்களைச் சம்பாதிக்கலாம்; ஆனால், எந்தத்தேசத்தில் எனது உடன்பிறந்த தம்பி எனக்குக் கிடைப்பானே, அப்படிப்பட்ட தேசம்மாத்திரம் எனக்குப் புலப்படவில்லை" என்றார்.

இவ்வாறு துக்கத்தால் ஐம்புலன்களும் தடுமாறப் புரண்டு எளிமையாகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு ஸ்ரீராமர் புலம்புகையில், சுஷேணன் அவருக்குப் பின்வருமாறு தேறுதல் சொல்லலானான்:— "புஜபராக்கிரம முள்ளவரே! எல்லாவகைச் சம்பத்துக்களும் நிரம்பிய இலட்சுமணர், இறந்துபோகவில்லை; அவரது முகம், நிறம் மாறியதாகவேனும், காந்தி குறைவுபட்டதாகவேனும் ஆகவில்லை; ஒருவகைவிகாரத்தையும் அடையவில்லை. மேலும், அவருடைய முகமானது, நல்லொளியமைந்து தெளிவடைந்ததாய்க் காணப்படுகின்றது. அவருடைய கைகள், தாமரை மலர்போலச் சிவந்திருக்கின்றன. அவர் கண்கள், வெகு அழகாக விளங்குகின்றன. மன்னவரே! உயிரிழந்தவர்களுடைய உருவம், இவ்வாறு ஒருபொழுதும் இராது. எவர்களுடைய ஆயுள் நீடித்திருக்குமோ, அவர்களுடைய முகம்போல, இலட்சுமணருடையமுகம், தோன்றுகின்றது. செல்வத்தைப் பெருக்கவல்ல இவ்விலட்சுமணர், இறக்கவில்லை; பகைவரை யழிக்கவல்ல இவர், உயிருடனிருக்கின்றார். ஆகையால், வீரரே! தாங்கள் கொஞ்சங்கூட விசனப்படவேண்டாம். பூமியில் இவர் மெய்சோர்ந்து விழுந்து கிடந்தபோதிலும், இவர் உயிருடனிருப்பதை, அடிக்கடி

சுஷேணன் இராமரைத் தேற்றுதல்.

அசைந்துகொண்டிருக்கும் இவருடையஹ்ருதயம் வெளி விட்டுச் சொல்லுகின்றது" என்று இவ்விதமாக இராகவ ரைப்பார்த்துச் சுஷேணன் சொல்லினன்.

சுஷேணன் சில ஓஷதிகளைக் கொணருமாறு அனுமானுக்குச்சொல் லியவுடன், அனுமான் ஓஷதிமலையைக் கொணர்தல்.

பிறகு, அவ்வானரன் அனுமானை நோக்கிப் பின்வரு மாறு வெகு விரைவுபடுத்திச் சொல்லலானன்:—"அடக்க முடையோனே! இவ்விடம்விட்டுச் சடிதியிற் கிளம்பி, ஜாம்பவான் முந்திச் சொல்லியிருக்கும் ஓஷதிபர்வத மென்னும் மூலிகைமலைக்குப் போய், அதன்வலச்சிகரத்தில் முளைத்திருக்கின்ற அம்புகளினுண்டாகிய புண்களை ஆற்றும் வல்லமையுள்ளதான இனிய விஶல்யகரணீ யென்னும் பச்சிலையையும், ஸாவர்ண்யகரணீயென்னும் மூலிகையையும், ஸஞ்ஜீவியென்ற ஓஷதியையும், ஸந்தாநகரணீ யென்ற பச்சிலையையும், மகாத்துமாவாகிய இலட்சுமணரைப் பிழைப்பிக்கும்பொருட்டு, இம்மூலிகைகளவ்வளவையும் வெகுசடிதியில் இவ்விடம் கொண்டுவரவேண்டும்" என்றான். இப்படி அவன் சொன்னதும், சீமான அனுமான், உடனே அவ்விடம்விட்டு ஓஷதிமலைசேர்ந்து, அம்மூலிகைகள் இவைகளென்று தெரியாதவனுய் மனங்குழம்பி நின்றான். உடனே, அமிதமான பராக்கிரமமுள்ள அவனது புத்தியில் 'நாம் மலையின் இச்சிகரத்தையே இப்பொழுது எடுத்துக்கொண்டுபோவோம்; இச்சிகரத்தில் தோன்றியுள்ள தாய்ச் சுஷேணன் சொல்லியதான சுகத்தையுண்டாக்கும் அம்மூலிகையை ஊகையாலறிவேன். விசல்யகரணியில்லாமல்மட்டும் நான் போவேனேயானுல், காலதாமதத்தினுற் பெருங்குற்றமுண்டாகும்; பெருந்துன்பமும் நேரிடும்" என்று எண்ணினன். அப்பால், மஹாபலசாலியாகிய அனுமான், கொஞ்சநேரம் ஆலோசித்து, அச்சிகரத்தினிடம் சடிதியில் வந்து நின்று, நன்முகப்பூத்த பலவகை விருட்சங்கள் நிரம்பியிருந்த அச்சிகரத்தை, மூன்று

தரம் அசைத்துத் தனது கையி லேந்திக்கொண்டான். நீர் நிரம்பியிருக்கின்ற நீலமுகில்போலிருந்த அம்மலைச்சிக ரத்தை, அனுமான், கையிலேந்தி, ஆகாயமார்க்கமாகவந்து சேர்ந்தான்.

வெகு வேகமாய் வந்துசேர்ந்து, அம்மலைச்சிகரத்தைச் சேனையின் நடுவிற் கீழேவைத்துக் கொஞ்சம் இளைப்பாற் றிக்கொண்டு, பிறகு, அனுமான், அச்சுஷேணனைப்பார்த் துப் பின்வருமாறு சொல்லலானான்:—"வானரவீரனே! நீ குறித்த பச்சிலை எனக்குத் தெரியவில் லை ; ஆகையால், அம்மலைச்சிகரத்தையே இங்குக் கொணர்ந்தேன்" என்றான். இப் படிச் சொன்ன மாருதனது புதல்வனு கிய ஹநுமானை, சுஷேணன், புகழ்ந்து தனக்குவேண்டிய மூலிகையைப் பிடுங்கியெடுத்துக்கொண் டான். தேவர்களாலும் செய்யமுடியாத காரியத்தை அந்த அனுமான் செய்ததைக் கண்டு, அரக்கர்களும் வானரர்க ளும், வெகு ஆச்சரியமடைந்தார்கள். பிறகு, வானரோத்த மனான சுஷேணன், அந்தப்பச்சிலையை நன்றாகக் கசக்கி மஹா தேஜஸ்வியாகிய இலட்சுமணருடைய மூக்கினுல் மோக்கும்படி செய்தான். சக்தியாற் பிளப்புண்டு அவஸ் தைப்பட்டுக்கொண்டிருந்த பகைவீரரை யழிக்கவல்லவ ரான இலட்சுமணர், அதை மோந்தமாத்திரத்தில், வேத னைகள் அவ்வளவும் நீங்கி விரணமாறிப் பூமியிலிருந்து எழுந்தார். அவ்விதமாக அவர் பூமியிலிருந்து எழுந்ததை எல்லாவானரவீரர்களும் பார்த்துக் களித்து, 'நன்று, நன்று' என்று சொல்லிச் சுஷேணனைக் கொண்டாடினர் கள்.

சுஷேணன் ஔஷதியை யெடுத்து இலட்சுமணரைப்பிழைப் பித்தல்.

அப்போது, பகைவரையழிக்கவல்ல ஸ்ரீராமர், இலட் சுமணரைப் பார்த்து, "வருக, வருக" என்று சொல்லி, கண் களில் நீர்ததும்ப, அவரை அன்பினுல் இறுகத் தழுவிக் கொண்டார். அவ்வாறு அவரைக் கட்டிக்கொண்ட பிறகு,

ஸ்ரீராமர் அவரைநோக்கி "வீரனே! என்னுடைய பாக்கியத்தால், மாண்ட நீ மீண்டும் பிழைத்திருக்கக் காண்கின்றேன். நீ மட்டும் மாண்டிருந்தால், என்னுயிரால் எனக்கு என்ன இலாபம்? சீதையால்தான் என்ன லாபம்? எனது வெற்றியால்தான் என்ன பயன்?" என்றார்.

இவ்வாறு அம்மகாத்துமாவாகிய ஸ்ரீராமர் சொன்ன பொழுது, வீரத்தன்மையைவிட்டு நழுவிக் கோழைமனத்துடன் இராமர் பேசியதற்காக, இலட்சுமணர், வெகு விசனமடைந்தவராய் மறுமொழி சொல்லலானார்:—"உண்மையையும் வல்லமையையும் உடையவரே! * அவ்வாறு தாங்கள் வாக்குக்கொடுத்து, பலமில்லாத அற்பன் பேசுவதுபோல் இப்பொழுது தாங்கள் இவ்வாறு பேசுவது நியாயமா? மாசற்ற வீரரே! சாதுக்கள் வீணாக வாக்குத்தத்தஞ்செய்யார்கள். பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவதல்லவோ பெருந்தன்மைக்கு உரிய அடையாளம். குற்றமற்றவரே! எனக்காகத் தாங்கள் எல்லாவற்றிலும் ஆசையை யொழித்துவிடுவது நீதியல்ல; இன்றைக்குத் தாங்கள் இராவணனை வதைத்து, செய்த பிரதிஜ்ஞையை நிறைவேற்றுக. கொடிய கோரப்பற்களுடன் கர்ச்சிக்குஞ் சிங்கத்தின் முன் நின்ற யானை எவ்வண்ணம் உயிருடன் ஒருநாளும் திரும்பமாட்டாதோ, அது போல், தங்களது பாணங்களின் முன்பாக வந்துநின்ற சத்துரு ஒருபொழுதும் உயிருடன் திரும்பவேமாட்டான். இச்சூரிய பகவான் தனது கடமையை முடித்து அஸ்தமலையை யடையுமுன்னமே, இக்கொடிய பாவியைத் தாங்கள் வதைக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். வீரரே! போரில் இராவணனை வதைக்கவேண்டுமென்ற எண்ணம் தங்களுக்கு இருக்கும்பட்சத்தில், தாங்கள்செய்த பிரதிஜ்ஞை

இராவணனை வதைக்குமாறு லக்ஷ்மணர் இராமரைத் தூண்டுதல்.

*"இராவணனைக்கொன்று, விபீஷணபட்டாபிஷேகம் நடத்திவைக்கின்றேன்" என்பது, ஸ்ரீராமர்செய்த பிரதிஜ்ஞை.

யை நிறைவேற்றத் தங்களுக்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில், சீதையின்மேல் அன்பென்பது தங்களுக்கு இருக்கும் பட்சத்தில், நான் சொன்னபடி விரைவிற் செய்துமுடியுங்கள்" என்றார்.

நூற்றுமூன்றுஞ் சருக்கம் :
ஸ்ரீராமர் இந்திரனது இரதத்தி லேறிக்கொண்டு இராவணனுடன் போர்புரிதல்.

பகைவர்களின்செருக்கை யடக்கும் வீரரான ஸ்ரீராமர், இலட்சுமணரதுசொல்லைக் கேட்டு, வில்லை வளைத்து நாணேற்றி, பயங்கரமான அம்புகளைத் தொடுத்து, சேனமுகத்தில் இராவணன்மேல் விடுத்தார். அரக்க வேந்தனுகிய இராவணனும், மற்றேரிரதமேறி, ஆகாயத்தில் சூரியனை நோக்கி இராகு ஓடிவருவதுபோல, இராமரை நோக்கி விரைவாக வரலானன். இராவணன், இரதத்தி லிருந்தபடியே, மழையை மேகம்வருஷிப்பதுபோல, ஸ்ரீராமர்மேல் வச்சிராயுதத்துக்கு ஒப்பான பயங்கரமாகிய பாணங்களைப் பொழியலானன். பொன்னுபரணங்களையணிந்து கொழுந்துவிட்டெரியுந் தீப்போல் மின்னிய பாணங்களால், ஸ்ரீராமர், போரில் வெகு உறுதியாக நின்ற இராவணனை நன்முகப் பிளந்தார். பூமியில் நின்றுகொண்டிருக்கும் ஸ்ரீராமர்க்கும் இரதத்திலிருந்துகொண்டு போர்புரிகின்ற இராவணனுக்கும் இப்போது நேர்ந்துள்ள போர் சரியானதன்றென்று, தேவகந்தர்வகின்னரர்கள் சொல்லலானுர்கள்.

இராவணன் இரதத்தி லிருந்துகொண்டு, பதாதியான இராமருடன் பொருதல்.

அப்பொழுது தேவேந்திரன் தனது சாரதியான மாதலியைப் பார்த்துக் கட்டளையிடவே, தங்கத்தினுல் அழுகாகச்செய்யப்பட்டதும், நூறு சிறுமணிகளாலலங்கரிக்கப்பட்

டதும், இளஞ்சூரியனுக்கு ஒப்பானதும், வைரிய இரத்தினங்களாற் செய்யப்பட்ட பாருள்ளதும், பொன்னுபரணங்களாலலங்கரிக்கப்பட்டுச் சூரியனுக்கொப்பாகி வெண்சாமரங்களுடன்கூடிய பச்சைநிறமுள்ள நற்குதிரைகள் பூட்டப்பட்டதும், பொன்மூங்கிலின் மேற் பறக்கின்ற கொடிச்சீலையையுடையதும், செல்வச்சிறப்பைத் தெரிவிக்கின்றதுமான தேவேந்திரனது இரதத்திலே, ஏறிவந்து, அந்தமாதலி, ஆகாயத்திலிருந்து இறங்கி, ஸ்ரீராமர்முன்பாக அதை நிறுத்தி, அஞ்சலிபண்ணிக்கொண்டு, தனது கையிற் சாட்டையைப் பிடித்தவண்ணமே, இராமரைப்பார்த்து, "காகுத்தரே! இப்பொழுது தாங்கள் வெற்றியடையும்பொருட்டு, தேவேந்திரர், இந்த இரதத்தைத் தங்களுக்கு அனுப்பியிருக்கின்றார். சீமானே! பெருவலிபடைத்தவரே! சத்துருக்களின் செருக்கைப் போக்கவந்தவரே! இந்திரபகவான், தம்முடைய இப்பெருவில்லையும், அக்கினிக்கு ஒப்பான இக்கவசத்தையும், சூரியனுக்குஒப்பான இந்தஅம்புகளையும்,வெகுகூரான முனையுடன் கூடிப் பிரகாசிக்கும் இந்தச் சக்தியையும், தங்களுக்காக அனுப்பியிருக்கின்றார். வீரரே! இந்த இரதத்தின்மேலேறி, நான் சாரத்தியம்பண்ண, தேவேந்திரர் தானவர்களையழித்ததுபோல், தாங்கள் அரக்கமன்னவனுன இராவணனை வதையுங்கள்" என்றுகூறினன்.

தேவேந்திரன், தனது இரதத்தையும், கவசபாணங்களையும், தனது பாகன் மூலமாக இராமரிடம் அனுப்புதல்.

இப்படி மாதலி சொன்னதும், ஸ்ரீராமர், அந்த இரதத்தை வலம்வந்து நமஸ்காரஞ்செய்து, உலகத்தைத் தமது காந்தியால்விளக்கிக்கொண்டுஅவ்விரதத்திலேறினர். அப்போது, மஹா வீரராகிய இராமருக்கும் அரக்கனுன இராவணனுக்கும்,பார்த்தவர்கள்மயிர்க்கூச்செறியும்படி, அற்புதமாய் நெருக்கமான பெரும்போர் தொடங்கிற்று. சிறந்த அஸ்திரங்களையெல்லாம் அறிந்தவரான ஸ்ரீராமர்,

மாதலிசொற்படி இராமர் இந்திரரதத்திலேறிப் போர்செய்தல்.

தமது காந்தர்வாஸ்திரத்தால் இராவணன் விடுத்த காந்தர்வாஸ்திரத்தையும், தேவாஸ்திரத்தால் தேவாஸ்திரத்தையும் நாசம்பண்ணினார். பிறகு, அவ்வரக்கமன்னவன், வெகுபயங்கரமான சிறந்த ராக்ஷஸாஸ்திரத்தை வெகு உக்கிர கோபத்துடன் இராமர்மீது விடுத்தான்; இராவணனுடைய வில்லினின்று விடுக்கப்பட்ட பொன்னணிகளையுடைய அப்பாணங்கள், கொடிய விஷத்துடன்கூடிய சர்ப்பங்களாக மாறிக் காகுத்தரை நாடிவந்தன. அவைகள், தங்கள் முகங்கள் நெருப்புப்போல எரிய, வாயால் நெருப்புப்பொறியைக் கக்கிக்கொண்டும், பயமுண்டாகுமாறு தங்கள் வாயை விரித்துக்கொண்டும், ஸ்ரீராமரையே குறியாகக் கொண்டு வந்தன. வாசுகிக்கு ஒப்பான உறுதியுள்ளனவும் எரிகின்ற உடம்பையுடையனவும் பெருவிஷமுள்ளனவுமான அச்சர்ப்பங்களால், எல்லாப் பெருந்திசைகளும் எல்லா மூலைத்திசைகளும் நிரம்பின. அவ்வாறு சர்ப்பங்கள் வரவே, ஸ்ரீராமர், பார்த்து, கொடியதும் பயங்கரமுள்ளதுமான காருடாஸ்திரத்தை விடுக்கலானார். அவ்வாறுபிரயோகிக்கப்பட்ட அஸ்திரத்தினின்றுபொன்முனைகளையுடையனவும் நெருப்புப்போன்றனவுமான அவ்விராமபாணங்கள், சர்ப்பங்களைக் கொல்லவல்லனவும் பொன்மயமுமான கருடன்களாகி, அப்போர்க்களத்திற் சஞ்சரித்தன. தங்களுக்கு இஷ்டமான உருவங்கொள்ளும் வல்லமையமைந்த கருடன்வடிவான அப்பாணங்கள், வெகுவேகமுள்ள அச்சர்ப்பங்களையெல்லாங் கொன்றன. தனது அஸ்திரம் அவ்வாறு அழிக்கப்பட்டதைக் கண்டு, அப்போது மிக்கசினங்கொண்ட இராவணனென்ற ராக்ஷஸராஜன், ஸ்ரீராமர்மேற் பயங்கரமாகச் சரமாரி பொழிந்தான். பிறகு, அவ்விராவணன், எளிதாகத்தொழில்செய்யவல்ல இராமரை, அவ்வாறு தனதுஆயிரக்கணக்கான பாணக்கூட்டங்களாற் புடைத்துவிட்டு, தனது பாணக்கூட்டங்க

ளால் மாதலியை இம்சிக்கலானுன். ஒரு பாணத்தை, இரா

இராமரதுசாரதி, தேர்க்கொடிகுதிரைகள் என்ற இவற்றை இராவணன் ஹிம்ஸித்தல்.

வணன், தங்கக்கொடியின்மேல் விடுத்து வெட்டி, அதை இரதமத்தியில் வீழ்த்தி, இந்திரனுடைய குதிரைகளையும் பாணக் கூட்டங்களாற் புடைக்கலானுன். கொடிய பாதகனை அவ்விராவணன், அவ்வளவு தூரம் பெருங்காரியங்கள் செய்ததைக் கண்டு, தேவர், கந்தர்வர், தானவர், சாரணர் என்ற இவர்களெல்லாரும் விசன

இராமர் போரிற் சிறிது இளைத்தல்.

மடைந்தார்கள். ஸ்ரீராமர் இளைப்படைந் திருப்பதைக் கண்ணுற்று, சித்தர்கள், மஹர்ஷிகள், வானரவீரர்கள், விபீஷணர் என்ற இவர்களெல்லாரும், துக்கமடைந்தார்கள். ஸ்ரீராம ரென்ற சந்திரனை இராவணனென்ற இராகு பற்றியது. ஜனங்களுக்கு அமங்களத்தை விளைப்பதாய், பிரமாவைத் தேவதையாகக்கொண்டதும் சந்திரனுக்குப்பத்தினியுமான ரோகிணியைப் * புதன் சேர்ந்துநின்றது. சமுத்திரமா

அப்போது தோன்றிய தீநிமித்தம்.

னது, புகையாற்சூழப்பட்ட நெருப்புடன் கூடியதாய், வெகுகோபத்துடன் சூரிய னைத்தொட யத்தனித்ததுபோல மேலே கிளம்பிற்று. சூரியன், தனது நிறம் கறுப்பாகமாறி, ஒளிகுறைந்து, தலையற்ற முண்டத்தைத் தன்னிடத்திற் களங்கமாகக்கொண்டு, தூமகேதுவுடன்கூடி, வெகுபயங்கரமாகக் காணப்பட்டது; இந்திரனையும் அக்கினியையும் தேவதைகளாகக் கொண்டதும், இக்ஷ்வாகு வம்சத்தார்களின் நட்சத்திரமு மான விசாக மென்னும் நக்ஷத்திரத்தை, அங்காரகனென்ற கிரகம் ஆக்கிரமித்தது.

அப்போது, பத்துத்தலைகளுடனும் இருபது கைகளுடனுங் கூடிய இராவணன், விற்பிடித்து, மைநாகமென்ற மலைபோல விளங்கினுன். அவ்வரக்கன், ஸ்ரீராமரை எதி

* புதனென்ற கிரகம் ரோகிணியுடன் சேர்ந்தால், உலகத்துக்குப் பீடையுண்டாகு மென்பது, நூற்கொள்கை.

ர்க்கவே, அப்போர்க்களத்தில், ஸ்ரீராமர், பாணங்களை விடுக்க வல்லமையற்றவராக நின்றார். அவ்விராமர், வெகுகோபத்துடன், புருவங்கள் நெரிந்தேறக் கண்கள் சிவந்தவராய், கண் பார்வையாலேயே இராவணனை யெரித்து விடுகின்றவர்போல வெகுகோபங்கொண்டவரானார்.

இராமர்இராவணனுக்குமுன்போராமாட்டாமை.

நூற்றுநான்காஞ் சருக்கம்:
இராவணனெறிந்த சூலத்தை ஸ்ரீராமர் முறித்தல்.

வெகு வீரரான ஸ்ரீராமர் கோபங்கொண்டபோது, அவர்முகத்தைப் பார்த்து எல்லாப்பிராணிகளும் நடுநடுங்கின; பூமியும் நடுங்கிற்று; மலைகள், சிங்கம் புலி மரங்கள் என்ற இவைகளுடன், அசைந்தன. நதிகளின் கணவனான சமுத்திரமும் கலக்கமடைந்தது. பறவைகளும், வெகு கொடிய சூரலுடன் உற்பாதத்தைத் தெரிவிப்பனவாய்க் கூச்சலிட்டுக்கொண்டு ஆகாயத்தில் நாற்புறங்களிலும் நெருக்கமாகப் பறந்தன. ஸ்ரீராமர் வெகுகோபங்கொண்டதையும், அவ்விதமாகக் கொடிய உற்பாதங்களுண்டானதையும் கண்டு, எல்லாப்பிராணிகளும் நடுநடுங்கின; இராவணனுடைய உள்ளத்திலும் பயம் தோன்றிற்று.

இராமரதுகோபம்.

ஆகாயத்தில் தங்கள் விமானங்களிற் சஞ்சரிக்கின்ற தேவர்களும், கந்தர்வர்களும், மகோரகர்களும், ருஷிகளும், தானவர்களும், தைத்தியர்களும், ஆகாயத்திற் சஞ்சரிக்குங் கருடர்களும், பலவகையாயுதங்களால் இராமராவணர்கள் போர்செய்யும்பொழுது, இவ்வுலகத்தையே முடிக்கவந்த அப்பெரும்போரைப் பார்க்க

தேவகணங்கள் இராமராவணர்களின் போரைக் காணுதல்.

லானுர்கள். அப்பெரும்போரைப் பார்க்கவந்த தேவர்களும், அசுரர்களும், தங்கள் தங்கள் கட்சியில் வெகு அபிமானங்கொண்டவர்களாய், சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் கூறலானுர்கள். அங்குவந்த அசுரர்கள், இராவணனைப்பார்த்து "வெற்றிபெறுக" என்று சொல்லினுர்கள்; பிறகு, தேவர்கள் ஸ்ரீராமரைப்பார்த்து "தாங்கள் வெற்றி பெறுக" என்று பலமுறை சொல்லலானுர்கள்.

இத்தருணத்தில், துஷ்டாத்மாவாகிய இராவணன், தான் ஸ்ரீராமர்மேற் கொண்ட கோபத்தால், அவரை வதைக்கும் பொருட்டு, வச்சிராயுதத்துக்கு ஒப்பானதும், பெருஞ்சத்தத்தோடுகூடினதும், எல்லாச் சத்துருக்களையும் நாசம்பண்ணத்தக்கதும், மலைச்சிகரங்களுக்கு ஒப்பாய்க் கூரானமுனைகளமைந்ததும், பார்ப்பதற்கே பயங்கரமானதும், புகையுடன் கூடிய நெருப்புப்போன்ற கூர்முனையமைந்ததும், பிரளயகாலாக்கினிக்கு ஒப்பானதும், உருத்திரசூலத்தினுங் கொடியதும், ஒருவராலும் அணுகமுடியாததும், யமனுலும் நெருங்கக்கூடாததும், எல்லாப்பிராணிகள் மனத்திலும் அச்சமுண்டாக்குவதும், பகைவரை யறுக்கவும் இரண்டாகப் பிளக்கவும் வல்லதும், கோபத்தாற் சீறிக்கொண்டிருப்பதுபோலத் தோன்றுவதுமான சூலாயுதத்தைக் கைப்பற்றினுன். வீரனை இராவணன், வெகுகோபத்துடன், அச்சூலாயுதத்தை, போரிற் சூரர்களான பல அரக்கர்கள் தன்னைச்சூழ்ந்து நிற்க, நடுவிற் பற்றினுன். பேருடல்படைத்த அவன், கோபத்தாற் கண்கள் சிவக்க, தன்னுடைய சேனையைச் சந்தோஷ மடைவித்து, அதை எடுத்துக்கொண்டு வெகு பயங்கரமாகக் கர்ச்சித்தான். அவ்விராவணன் செய்த அக்கடுஞ் சத்தத்தால், பூமி ஆகாயம் முக்கியமான திசைகள் மூலத்திசைகள் என்னும் இவைகளெல்லாம், நடுநடுங்கின; அத்துராத்துமா செய்த பெருஞ்சத்தத்தால், எல்லாப்பிரா

இராவணன் இராமர்மேற் சூலத்தை யெறிதல்.

ணிகளும் நடுநடுங்கின; சமுத்திரமும் குழப்பமடைந்தது. இராவணன், அவ்வாறு அப்பெருஞ் சூலத்தைக் கைப் பற்றி, பெருங்குரலுடன் கர்ச்சித்து ஸ்ரீராமரைநோக்கிப் பின்வருமாறு வெகுகொடுமையாகச் சொல்லலானான் :— "இராமரே! வச்சிராயுதத்துக்கு ஒப்பான இச்சூலத்தை, நான், வெகு கோபத்துடன் எடுத்துவிட்டேன். உமது தம்பி யினது உதவி யிருந்தபோதிலும், உமது உயிரை இது வாங்கியேவிடும். போரிற் பேர்பெற்ற மகா வீரரே! இப் போர்க்களத்தில் சூரர்களான பல அரக்கர்களைத் தரங்கள் கொன்ற பழியை, நான், இன்றைக்குத் தங்களைக்கொன்று தீர்த்துக்கொள்ளுகின்றேன்; ஓடாமல்மட்டும் நில்லுங்கள்; இன்று இச்சூலத்தால், இராகவரே! உம்மை நான் வதைக் கின்றேன்" என்று சொல்லி, அவ்வரக்கமன்னவன், அச் சூலத்தை ஸ்ரீராமர்மேல் வீசியெறிந்தான். அவ்வாறு இராவணனால் விடுக்கப்பட்ட அச்சூலம், மின்னல்போற் பிர காசித்துக்கொண்டு, எட்டுமணிகள் கட்டப்பட்டதாய், பே ரொலி செய்தவண்ணம் ஆகாயத்தில் விளங்கிக்கொண்டு வரலாயிற்று.

அவ்வண்ணம் பயங்கரமாகப் பிரகாசித்துக்கொண்டு அச்சூலம் வருவதை, வீரரான ஸ்ரீராமர், பார்த்து, தமது கோதண்டத்தை வளைத்துப் பாணங்களை விடுத்தார். கொழுந்து விட்டெரியும் பிரளயகாலத்தீயைத் தேவேந்தி ரன் மழைவிட்டு அவிப்பதுபோல, ஸ்ரீராமர், அச்சூலத் தைப் பாணக்கூட்டங்களால் அடக்கப்பார்த்தார். ஆனால், தீயானது விட்டிற்பூச்சிகளைக் கொளுத்துவதுபோல, இரா வணனுடைய அப்பெருஞ்சூலமானது, ஸ்ரீராமர் விடுத்த அவ்வளவு பாணங்களையும் தீருக்கிற்று. அவ்விதமாகத் தமது பாணங்களெல்லாம் அச்சூலத்தின்மேற் பட்டமாத் திரத்திற் சாம்பலாய்ப்போய் ஆகாயத்திலே தூளியாகப் பறந்ததைப்பார்த்து, ரகுகுலத்திற்பிறந்த ஸ்ரீராமர், வெகு கோபமடைந்து, மாதலி தம்மிடங் கொண்டுவந்துகொடுத்த

இந்திரபகவானுடைய சக்தியென்னும் ஆயுதத்தையெடுத் தார். பலவானை ஸ்ரீராமர் அச்சக்தியைத் தமது கையிற் பிடித்துச் சுற்ற, அது, மணிகளால் ஒலித் துக்கொண்டு, பிரளயகாலத்திலே ஒளி யுடன் விளங்குங் கொள்ளிக்கட்டைபோல ஆகாயத்தை விளக்கிற்று. இராமர் அவ் வரக்க மன்னவனுடைய அச்சூலத்தைக் குறிவைத்து வீசியெறிய, உடனே, அப்பெருஞ் சூலம், ஸ்ரீராமர் பிரயோகித்த சக்தியால் முறிந்து ஒளியற்றுக் கீழே விழுந்தது.

இராமர், அச் சூலத்தை இந் திர சக்தியால் முறித்துவிடு தல்.

அதன்பிறகு, ஸ்ரீராமர், கூரானவையும், வச்சிரா யுதத்துக்கு ஒப்பானவையும், வெகு வேகமானவையும், வெகுகொடியவையுமான பல பாணங்களை விடுத்து, அரக்க வேந்தனுடைய வெகுவேகமாகச்செல்லவல்ல குதிரைகளைக் கொன்றார். அன்றியும், ஸ்ரீராமர், மிகவும் முயற்சியெடுத் துக்கொண்டு, கூரான பாணங்களை விடுத்து, இராவணனது மார்பைப் பிளந்து அவன்நெற்றியிலும் மூன்றுபாணங் களை எய்தார். அவ்விராவணன், தனது உடம்புமுற்றி லும் அம்புகள் பொத்தியவனாய், உடம்பெங்கும் இரத்தம் பெருக நின்று, அப்போர்க்களத்தில், அடிமுதல் நுனி வரையிற் பூத்த அசோகமரம்போலக் காணலானான். அரக் கமன்னவன், அப்போது தன்மேனி முழு வதிலும் அவ்வண்ணம் ஸ்ரீராமருடைய பாணங்களாற் பொத்துண்டு, விரணங் களிலிருந்து பெருகுகின்ற இரத்தத்தாற் பூசப்பட்டவனாய், அப்போர்க்களத்தில் வெகு துக்கமடைந்து, மிகவுங் கோபமடைந்தவனானான்.

இராவணன் இராமபாணத் துக்கு ஆற்றாது இளைத்தல்.

நூற்றைந்தாஞ் சருக்கம்:
இராவணன் போரிற் களைப்படைய, சாரதி தேரை அப்பாற் செலுத்துதல்.

அவ்வளவு கோபத்துடன் ஸ்ரீராமர் இராவணை இம்சித்தபொழுது, போரில் வெகு புகழ்பெற்றிருந்த இரா

வணன், பெருஞ்சின மடைந்தான். வீரனான அவன், கோபத்தாற் கண்கள் சிவந்தவனாய், அப்பெரும்போரில் வில்லைவளைத்து அம்புகளை யெய்து ஸ்ரீராமரைப் பீடிக்க லானான். ஆகாயத்திலிருந்து மேகமானது மழையைப்பொழிந்து தடாகத்தை நிரப்புவதுபோல, இராவணன் சரமாரியால் இராமரை நிரப்பினான். அப்போர்க்களத்தில், அவ்வண்ணம் இராவணனுடைய பெரிய வில்லினின்று விடுக்கப்பட்ட பாணங்களால் நன்றாக மூடப்பட்டாரென்றாலும், பெருமலைபோல் ஒருநாளும் அசைக்கமுடியாத ஸ்ரீராமர், கொஞ்சமேனும் அஞ்சவில்லை. மஹாவீரரான அவர், தமது பாணங்களால் அவனெய்த அவ்வளவு பாணங்களையும் தடுத்து, அவனை வதைக்கும்பொருட்டுச் சூரியனுடைய கிரணங்களுக்கு ஒப்பான சிறந்த பாணங்களைக் கைப்பற்றினார். அப்பொழுது, அதிகங் கைவேகமுள்ள அவ்வரக்கன், வெகு கோபத்துடன், மஹாத்மாவான ஸ்ரீராமருடைய மார்பை நோக்கி ஓராயிரம் பாணங்களை விடுத்தான்; அவைகளால் இரத்தமோடுஞ் சரீரத்துடன் காணப்பட்ட அவ்விராமர், காட்டில் நன்றாகப் பூத்துநிற்கும் முண்முருக்கைமரம்போலப் புலப்பட்டார். மஹாபராக்கிரமசாலியாகிய ஸ்ரீராமர், அவ்வாறு தாம் அடியுண்டதனால் மிக்க கோபமடைந்து, பிரளயகாலத்திலுண்டாகுஞ் சூரியனுக்கொப்பான பாணங்களைக் கைப்பற்றினர். அவ்வண்ணம் ஒருவருடன் ஒருவர் வெகுமும்மரமாகப் போர்புரிய ஆரம்பித்த இராமர் இராவணன் என்ற அவ்விருவரும், பாணங்களென்ற பேரிருளால் மூடப்பட்டவர்களாய், ஒருவரை யொருவர் காணமாட்டாதவராயினர்.

இராமராவண யுத்தம்.

அதன்பிறகு, வெகு கோபங்கொண்ட சக்கரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமர், புன்னகைசெய்து, இராவணனைப் பார்த்து, வெகுகடோரமாகப் பின்வருமாறு சொல்லலானார்:— "அரக்கப்பதரே! ஜநஸ்தாநத்தில் ஸ்வா

தீமைகத் தொழில் செய்யமாட்டாது பரதந்திரையான எனதுமனவியை,என்னையறியாமல், எப் பொழுது நீ கவர்ந்தாயோ, அப்பொழுதே நீ வீரியவானன்றென்பது ஏற்பட்டுவிட் டது. என்னையின்றிப் பெருங்காட்டில் தனிமையில் வெகு பரிதாபமான நிலையுடன் ஜானகி யிருக்கையில், அவளைப் பலாத்காரமாய்க் கவர்ந்துசென்றுவிட்டு, நீ உன்னைச் சூர னென்று எண்ணுகின்றாய். பிறர்மனைவியை விரும்பு பவனே ! யஜமானனில்லாமலிருக்கின்ற மடந்தைகளிடம் சூரத்தன்மையைக் காட்டுகின்றவனே ! இவ்வாறு இழி தொழில்களைப் புரிந்துவிட்டு, உன்னைச் சூரனென்று எண் ணுகின்றாயே ! மரியாதைகெட்டவனே! வெட்கமற்றவனே! நன்னடக்கையற்றவனே ! செருக்கால், மரணத்தை நீ விலை க்கு வாங்கிவிட்டு, உன்னை ஒரு சூரனென்று வீணாக உன் மனத்திற் கருதுகின்றாய். சூரனும் குபேரனது தம்பியும் பெருஞ்சேனைபடைத்தவனுமாகிய நீ, * எல்லாராலும் புக ழக்கூடிய பெருங்காரியமொன்றைச் செய்துமுடித்தாய். எல்லாராலும் நிந்திக்கக்கூடிய தீயகாரியத்தைச்செருக்கால் செய்ததன் பெரும்பயனை, நீ, இப்பொழுது அனுபவிப்பா யாக. கெடுமதியுள்ளவனே ! உன்னைப்பற்றி 'நான் சூரன்' என்று நீ நினைக்கின்றாய் ; திருடன்போலச் சீதையைக் கவர்ந்த உனக்குச் சிறிதும் வெட்கமில்லையா ? என் முன்பா கப் பலத்தால் நீ சீதையை யெடுத்திருப்பாயேயானால், அப் போதே, நீ, எனதுபாணங்களாற் கொல்லப்பட்ட உனது சகோதரனுடைய கரனைப் பார்த்திருப்பாய். துராத்மாவே ! நீ தெய்வாதீனமாக இப்பொழுதாவது எனது கண்முன்பாக வந்தாயே ! கூரானபாணங்களால் உன்னை இன்றைக்கு யம னுடைய மாளிகைக்கு அனுப்புகின்றேன். குண்டலமணி ந்த உன்தலை இன்று எனது பாணங்களால் வெட்டுண்டு இப்போர்க்களத்தின் புழுதியிற் புரளுகையில், நாய் நரி

இராமர் இராவ ணனைப் பழித்தல்.

* இது, இகழ்ச்சிக் குறிப்பு.

முதலிய மாமிசத்தைத் தின்னும் விலங்குகள் பிடுங்கட்டும். இராவணு! கழுகுகள், பூமியில்விழுந்த உனது மார்பில் தங்கி, அம்பினுலடிபட்ட வாயிலிருந்து பெருகுங் குருதியை, வெகுதாகத்துடன் பானம்பண்ணட்டும். நீ என்பாணங் களாற் பிளக்கப்பட்டு உயிரிழந்து பூமியில் விழுந்ததும், கருடன் பாம்புகளை யிழுப்பதுபோல, உனது தேகத்தின் நரம்புகளைப் பறவைகள் இழுக்கும் '' என்ருர்.

ஸ்ரீராமருக்கு அப் போது பலம் முத லியன மிகுதியா கத்தோன்றுதல்.

தமது சத்துருக்களின் செருக்கை யடக்கும் வீரரான ஸ்ரீராமர், இவ்வாறு சொல்லி, தமக்குச் சமீபத்திலிருந்த இராவணன்மீது பாணங்களைத் தூவினர். சத்துருவின் நாசத்தை மனத்தாற் கருதிய ஸ்ரீராமருக்கு, வீரியமும் பலமும் உற்சாகமும் அஸ்திரபலமும் அப்போது முன்னிலும் இருமடங்கு தோன்றின. தம்மையறிந்த அம்மகானுக்கு, அஸ்திரங்களெல்லாமும், தமக்குத்தாமாகவே தோன்றின. மஹா பராக்கிரமசாலியாகிய அவ்விராமர், உற்சாகத்தால் கைத்தொழிலில் மிக்க விரைவையும் அடைந்தார். அரக்கர்களை யொழிக்கத் திருவவதரித்த அவ்விராமர், தம்மிடம் அவ்விதமாகத் தோன்றிய நற்குறிகளை யறிந்து இராவணனை மீண்டும் இம்சிக்கலானர்.

இராவணன் இராமருக்குமுன் போர்செய்ய முடியாமற் போனதுகண்ட பாகன் தேரை முனேமுகத்தினின்று அப்பாற் செலுத்துதல்.

வானரவீரர்கள் ஒருபக்கம் தன்னைப் பாறைகளாற் புடைக்க, ஸ்ரீராமர் ஒருபக்கம் தன்மீது சரமாரிபொழிய இராவணன், மன்குழம்பி ஒன்றுந்தோன்ருது திகைத்துநின்றிட்டான். எப்பொழுது, இராவணன் ஓராயுதத்தையும் தொடவில்லையோ, எப்பொழுது வில்லை வளைக்கமுடியாமல் திகைத்தானை, எப்பொழுது மனங்கலங்கி ஸ்ரீராமருடைய வல்லமைக்கு மாறுசெய்ய மாட்டாதவனுயினனை, சாகுங்காலங்குறுகிய அவ்விராவணன்

விடுத்த அம்புகளும் பலவகையாயுதங்களும் எப்போது தமக்கு உரிய தொழிலைச் செய்யமாட்டாமல் நின்றனவோ, அப்போது, அவனுடைய தேரைச் செலுத்திய சாரதி, இராவணன்து அந்த நிலையைக் கண்டு, கொஞ்சமேனும் மனங்குழம்பாமல் மெதுவாக அவனது இரதத்தை அப் போர்க்களத்திலிருந்து வேறிடத்திற்கு ஓட்டிக்கொண்டு போனன்.

நூற்றுருஞ் சருக்கம்:
மறுபடி போர்க்களத்துக்கு இராவணன் வருதல்.

பிறகு, இராவணன், தனது விதியால் ஏவப்பட்ட வனாய், கோபத்தாற்கண்கள் சிவக்க, தனது அறிவின்மை யாற் சாரதியைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலா னன்:— "புத்திகெட்டவனே! நீ, வீரியமற்றவன்போலவும், உத்ஸாஹமற்றவன் போலவும், வல்லமையில்லாதவன் போலவும், பயந்தவன்போலவும், பலமற்றவன்போலவும், தைரியமற்றவன்போலவும், மாயைமுதலிய தந்திரங்களற் றவன்போலவும், ஆயுதங்களை உபயோ கிக்கும்வகையறியாதவன்போலவும் என் னைக் கருதி, எனக்கு அவமானமுண்டாகு மாறு, உனக்குத் தோன்றியபடியெல்லாம் செய்தாய். என்னை அவமதித்து, என்னபிப்பிராயத் தையும் கலக்காமல், என்சத்துருவின்முன்பாகஎன்னிரதத் தைப் போர்க்களத்திலிருந்து இங்கு ஓட்டிவந்தாய். அயோக்கியனே! உன்னால், நான் இதுவரையில் வெகு சிரமப்பட்டுச் சம்பாதித்த புகழும் வல்லமையும் பராக்கிர மமும் இராவணன்போரிற்புறங்கொடானென்ற உறுதியும் என்ற இவைகளவ்வளவையும் இன்று இழந்தேன். வல்ல மையில் வெகுபுகழ்பெற்றுப்பராக்கிரமத்தால்யாவரையுங் களிப்பிக்கின்ற என் சத்துரு பார்த்துக்கொண்டிருக்கையில்

இராவணன் பாகனைப் பழித்தல்.

தானே, என் வல்லமையைக் காட்டவிரும்பிய நான், உன்னால் அற்பபுருஷனுக மாறிவிட்டேன். கெடுமதியுடையாய்! நீ இப்பொழுது இந்த இரதத்தைச் சீக்கிரம் போர்க்களத்துக்கு ஓட்டாமற்போனால், நீ சத்துருவினால் லஞ்சங் கொடுக்கப்பட்டு இவ்வாறுசெய்தவனென்று நான் உன்னைக்குறித்துக்கொள்ளுஞ் சந்தேகம் உண்மையாய்விடும்; ஏனெனில், நன்மையை நாடுகின்ற ஒரு நண்பன் இவ்வாறு ஒருபொழுதுஞ் செய்யமாட்டான். நீ இப்பொழுது செய்த செயல் சத்துருக்களால்தான் செய்யத்தக்கது: நீ இப்போது உனதுதொழிலைச் செவ்வனே நடத்தவில்லை. நீ எனது நண்பனாயிருந்தால், நான் செய்த உதவிகளை நீ மறவாதவனாயிருந்தால், அப்போது, எனது சத்துரு வருவதற்கு முன்பே போர்க்களத்துக்கு இந்த இரதத்தைச் சடிதியில் திருப்பிச் செலுத்திவிடுக" என்றான்.

பாகன் இராவணனிடத்தில் தான்செய்த தொழிலைப்பற்றிச் சமாதானங் கூறுதல்.

புத்தியற்ற இராவணன் அத்தேர்ப்பாகன்செய்த நன்மையைத் தீமையாகவேகருதி அவ்வளவு சொல்லவே, அப்பாகன், வெகுவணக்கமாகவும் நன்மையாகவும் பின்வருமாறு சொல்லலானான்:— "நான் பயந்தவனல்லன்; புத்தியற்றவனுமல்லன்; சத்துருக்களாலேவப்பட்டவனுமல்லன்; பைத்தியம்பிடித்தவனுமல்லன்; நண்பற்றவனுமல்லன்; தாங்கள் செய்திருக்கின்ற உபகாரங்களை மறந்தவனு மல்லன். தங்களுக்கு நன்மை செய்யக் கருதி, தங்கள்புகழைப் பாதுகாக்கவேண்டியே, நான், தங்களிடம் வைத்திருக்கின்ற அன்பினால், தங்களுக்கு உபகாரமென்று நினைத்து, அநிஷ்டத்தைச் செய்தேன். பெருமன்னவரே! இந்த விஷயத்தில், தங்களுடைய நன்மையிலும் க்ஷேமத்திலும் கருத்துவைத்திருக்கின்ற என்னை, அற்பபுத்தியென்றும் அயோக்கியனென்றும் இவ்வாறு குற்றவாளியாகக் கருதலாகாது. மேட்டிலிருந்து பள்ளத்தில் ஓடும் நதி எவ்வளவு வேகமாகச் செல்லுமோ, அவ்

வளவு வேகமாக இந்த இரதத்தை, நான் போர்க்களத்திலி
ருந்து இங்குச் செலுத்திவந்த காரணத்தைச் சொல்லு
கின்றேன்; கேளுங்கள் : பெரும்போரால், தாங்கள் களை
த்துவிட்டதாக நான் அறிந்துகொண்டேன். வீரரே ! தங்
கள் முகத்தில் தெளிவும் தோன்றவில்லை; சந்தோஷமென்
பதும் கொஞ்சமாவது புலப்படவில்லை. இரதத்தை இழுத்
துக்கொண்டு சஞ்சரித்ததனல் வருத்தமடைந்த இக்குதிரை
களும், பசுக்கள் மழையினல் ஒடுங்குவதுபோல மிக்க எளி
மையோடு வெயிலால் வாடிக் களைத்தன. பலவாகத்தோ
ன்றிய அபசகுனங்களில், நமக்குப் பிரதிகூலசமய மென்
பதையும் நான் நன்றாக அறிந்துகொண்டேன். தேரையோ
ட்டுஞ் சாரதியானவன், காலம் இடம் இவைகளையும், சகுனங்
களையும், முகக்குறிகளையும், தேர்வீரனது உற்சாகமின்மை
சிரமம் சந்தோஷம் பலாபலம் என்னும் இவைகளையும்,
போர்செய்கின்ற இடத்தில் மேட்டுநிலம் பள்ளநிலம் சம
விஷமபூமி என்ற இவற்றையும், போரிடவேண்டிய சமயத்
தையும், சத்துருவின் புரைசலையும் அறியவேண்டும்; அன்
றியும், 'எந்தச் சமயத்தில் சத்துருவுக்குச் சமீபத்தில்
இரதத்தை ஓட்டலாம்; எப்பொழுது அச்சத்துருவின் பக்
கத்தில் இரதத்தை ஓட்டவேண்டும்: எப்பொழுது அவன்
நேரில் நிற்கலாம்; எப்பொழுது எதிர் நிற்கையில் சத்
துருவின் பின்புறமாகச் செல்லவேண்டும்' என்ற இவை
களையும் சாரதியானவன் நன்றாக அறிந்திருக்கவேண்
டும். தாங்கள் இளைப்பாறவேண்டுமென்ற எண்ணத்தினு
லும், இப்புரவிகள் இளைப்பாறவேண்டிய காரணத்தினு
லும், இன்னும் அதிகபயங்கரமான சிரமம் தங்களுக்கு
உண்டாவதை மாற்ற, நான் இவ்வாறு செய்வது தகுதியே
யென்று நினைத்தேன். என்னிஷ்டப்படி நான் இவ்வாறு
செய்ததாக, வீரரே ! தாங்கள் ஒருபொழுதும் எண்ண
வேண்டாம். பிரபுவே ! நான் செய்ததானது, எனது
யஜமானரிடத்து நான் வைத்திருக்கும் அன்பினலேயே

செய்த காரியம். சத்துருக்களை வதைக்க வந்தவரே! தாங்கள் எவ்வாறு இப்பொழுது கட்டளையிடுகின்றீர்களோ, அவ்வாறே,நான், என்மனப்பூர்வமாகச் செய்யக் காத்திருக்கின்றேன் ; எனக்குக் கட்டளையிடுக " என்றான்.

அச்சாரதி அவ்வண்ணஞ்சொன்னதைக் கேட்டு,இராவணன், சந்தோஷமடைந்து,அவனைப் பலவாறு புகழ்ந்து, போரில் மனங்கொண்டவனுய்ப் பின்வருமாறு சொல்ல லுற்றான் :—"சாரதியே! சீக்கிரமாக இந்த இரதத்தை இராமருக்குமுன்பாக நிறுத்து; போர்முகத்தில் சத்துருவை வதைக்காமல், இராவணன் திரும்பான் " என்று இவ்வாறு சொல்லி, பின்பு, இராவணன், வெகுசந்தோஷமடைந்து, உயர்ந்த கைவளையலொன்றைக் கழற்றி அச்சாரதிக்கு வெகுமதியாகக் கொடுத்தான்.

இரதத்தை இராமரிருக்கின்ற இடத்தைநோக்கிச் செலுத்தும்படி இராவணன் கட்டளையிடுதல்.

சாரதியானவன், இராவணனது கட்டளைப்படி அத் தேரைப் போர்க்களத்தை நோக்கித் திருப்பினான். அப்போது, இராவணனுடைய கட்டளைப்படியே, அத்தேர்ப்பாகன், குதிரைகளை வெகுவேகமாகத்திருப்பியோட்டலானான் ; அவ்வரக்கமன்னவனுடைய பெரிய இரதமும், ஸ்ரீராமருடையமுன்னிலையில் ஒருநொடிக்குள்ளே வந்து சேர்ந்தது.

பாகன் தேரைத் திருப்பி முனைமுகத்திற்கு ஓட்டுதல்.

நூற்றேழாஞ் சருக்கம்:
அகஸ்தியர் ஆதித்யஹ்ருதயத்தை இராமருக்கு உபதேசித்தல்.

அதன்பிறகு, போரைப் பார்க்கவந்ததேவர்களுடன் சேர்ந்துவந்த ரிஷியாகிய அகஸ்தியபகவான், இராவணன்

முதலிற் போரிற்களைத்து மறுபடியும் போர்செய்யுமாறு இராமர்முன்பாக வந்துநின்றதையும் ஸ்ரீராமர் கவலைகொண்டிருப்பதையும் பார்த்து, ஸ்ரீராமரையடைந்து சொல்லலானார்:—

அகஸ்தியமுனிவர், இராமரிடம் வந்து, ஆதித்யஹ்ருதயமந்திரத்தைக் கொண்டாடுதல்.

"ராமராம! மகாபாகுவே! குழந்தாய்! எதனல் எல்லாப் பகைவர்களையும் போரில் வெல்வாயோ, அநாதியாய் இரகசியமான இதைக் கேட்பாயாக. ஆதித்யஹ்ருதயமென்ற பெயரையுடையதும், புண்ணியமானதும், சத்துருக்களெல்லாரையும் வெல்ல வல்லதும், வெற்றியையே கொடுப்பதும், குறையாத பயனையளிப்பதும், பரமபாவநமானதும், மங்களங்களுக்கும் மங்களமானதும், எல்லாப்பாவங்களையும் நாசம் பண்ணுவதும், கவலையையும் நோயையும் ஆற்றுவதும், வாழ்நாட்களைப் பெருக்குவதும், ஜபிக்கக்கூடிய மந்திரங்களுக்குள் உத்தமமுமான இதை, விருப்பமுள்ளவன் ஜபிக்கக்கடவன். தேவாசுரர்களால் நமஸ்காரஞ்செய்யப்படுகின்றவரும், ஆயிரங்கிரணங்களுடன் நன்றாக உதயமாகியிருக்கின்றவரும், தமது ஒளியால் மற்றையொளிகளை மறைப்பவரும், ஒளியைக்கொடுக்கின்றவரும், உலகங்களுக்கெல்லாம் ஈசுவரருமான சூரியபகவானைப் பூஜைசெய்க. தேஜஸ்வியாகிய இவர், எல்லாத்தேவதைகளுக்கும் ஆத்துமாவாக விளங்குகின்றார்ரே! இவர், தேவர்கூட்டங்களின் வடிவமாயும் அசுரர்கூட்டங்களின் வடிவமாயுமிருக்கின்ற ஜனங்கள் எல்லாரையும் தமது கிரணங்களினல் ரக்ஷிக்கின்றார். இவர்தாம், பிரம்மா; விஷ்ணு; சிவபெருமான்; ஸ்கந்தன்; நவப்ரஜாபதிகள்; மஹேந்திரன்; குபேரன்; காலன்; யமன்; சோமன்; வருணன்; பிதிருக்கள்; வசுக்கள்; சாத்தியர்கள்; அசுவினீதேவதைகள்; மருத்துக்கள்; மநுக்கள்; வாயு; அக்கினி; ஜந்துக்களின் உயிர்; பருவங்களை யுண்டாக்குகின்ற ப்ரபாகரர்."

இனி ஆதித்யஹ்ருதயோபதேசம்.

"நீர்—ஆதித்யர் [அதிதியின் புதல்வர் அல்லது, ஸமஸ்தபூமிக்குந் தலைவர்]; ஸவிதா [ஜகத்தை யுண்டாக்குபவர்]; ஸூர்யர் [ஜகங்களைத் தொழில்செய்யுமாறு ஏவுபவர்]; ககர் [உலகத்தின் நன்மைக்காக ஆகாயத்திற் சஞ்சரிப்பவர்]; பூஷா [ஜகத்தை மழையாற்போஷிப்பவர்]; கபஸ்திமாந் [கிரணங்களை யுடையவர்]; ஸ்வர்ணஸத்ருஶர் [பொன்னின்நிறமானவர்]; பாநு [பிரகாசிப்பவர்]; ஹிரண்யரேதஸ் [பொன்மயமான பிரமாண்டத்தைச் செய்தவர்]; திவாகரர் [பகலைச்செய்பவர்]; ஹரிதஶ்வர் [பச்சைநிறக்குதிரைகளையுடையவர்]; ஸஹஸ்ரார்ச்சிஸ் [ஆயிரங்கிரணங்களையுடையவர்]; ஸப்தஸப்தி [ஸப்தமென்ற குதிரையையுடையவர்]; மரீசிமான் [பிரகாசத்தையுடையவர்.] திமிரோந்மதநர் [இருளைப்பிளக்குங் கிரணங்களையுடையவர்]; சம்பு [சுகத்தையுண்டாக்குபவர்]; த்வஷ்டா [ஸர்வஸம்ஹாரகர்த்தா]; மார்த்தாண்டர் [ஸர்வஸம்ஹாரத்தில் அழிந்தவற்றைப் படைக்குமாறு மீண்டுந் தோன்றியவர்]; அம்ஶுமான் [பிரகாசிப்பவர்]; ஹிரண்யகர்ப்பர் [இந்தப் பிரமாண்டத்தின் நடுவில் விளங்குபவர்]; சிசிரர் [தம்மைவணங்குபவர்களின் துள்ளத்தைக் குளிரச்செய்பவர்]; தபநர் [வெயிலால் விளங்குபவர்]; பாஸ்கரர் [ஒளியையுண்டாக்குபவர்]; ரவி [எல்லாராலும் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவர்]; அக்நிகர்ப்பர் [பகலில் அக்நியைத் தம்மிடம்வைத்துக்கொண்டிருப்பவர்]; அதிதிபுத்ரர் [அதியின் புதல்வர்]; சங்கர் [சாயங்காலத்தில் சுயமாகவே தணிவையடைபவர்]; சிசிரநாசநர் [பனியை நாசம்பண்ணுபவர்]; வ்யோமநாதர் [ஆகாயத்துக்கு மன்னவர்]; தமோபேதீ [ராஹுவைப் பிளப்பவர்]; ருக்யஜுஸ்ஸாமபாரகர் [ருக்யஜுஸ்ஸாமம் என்னும் வேதங்களின் கரையைக் கண்டவர்]; கவ்ருஷ்டி [பெருமழையை யுண்டாக்குபவர்]; அபாம்மித்ரர் [தண்ணீர்க்குநண்பர்]; விந்த்யவீதி

[விந்தியமலையைத் தக்ஷிணயநத்திற் செல்லும்வழியாகக் கொள்பவர்]; ப்லவங்கமர் [புணைபோல் ஆகாயமாகியசமுத்திரத்திற் செல்பவர்]; ஆதபீ [வெயிலையுடையவர்]; மண்டலீ [வட்டவடிவமானவர்]; அம்ருத்யு [அடைந்தவரது பகைவர்களை நாசம்பண்ணுபவர்]; பிங்களர் [உதயகாலத்திற் பொன்னிறமானவர்]; ஸர்வதாபநர் [மத்தியான்னத்தில் எல்லாரையும் எரிக்கின்றவர்]; கவி [எல்லாச்சாஸ்திரங்களையும் நடைபெறச்செய்பவர்]; விஶ்வர் [இவ்வுலகத்தை நிர்வஹிக்கின்றவர்]; மஹாதேஜஸ் [பெருங்காந்தி பொருந்தியவர்]; ரக்தர் [எல்லாரிடமும் அன்பு பாராட்டுபவர்]; ஸர்வபவோத்பவர் [எல்லாரது ஸம்ஸாரத்துக்கும் உத்பத்திகாரணர்]; நக்ஷத்ர க்ரஹ தாராதிபர் [நட்சத்திரங்கள் கிரகங்கள் தாரைகள் இவைகளுக்குத் தலைவர்]; விஶ்வபாவநர் [எல்லாவற்றையும் நிலைநிறுத்துபவர்]; தேஜஸாம் தேஜஸ்வீ [ஒளிபொருந்திய அக்கினி முதலியவற்றிற்குள் மிக்கஒளிபொருந்தியவர்]. த்வாதஶாத்மாவே! [இந்திரன்-தாதா-பகன்-பூஷா-மித்திரன்-வருணன்-அர்யமன்-அர்ச்சிஸ்-விவஸ்வான்-த்வஷ்டா-ஸவிதா-விஷ்ணு என்ற பன்னிரண்டு மூர்த்திகளாக இருப்பவரே!] உமக்கு நமஸ்காரம்; கிழக்குமலையை (உதிக்குமிடமாக) உடையவர்க்கு நமஸ்காரம். மேற்குமலையை (அஸ்தமிக்குமிடமாக) உடையவர்க்கு நமஸ்காரம் ஜ்யோதிஸ்ஸுக்களின் கூட்டங்களுக்கு மன்னவரான பகற்காலத்தின் அதிபதிக்கு நமஸ்காரம். ஜயரும் [உபாஸகர்க்கு வெற்றிகொடுப்பவரும்] ஜயப்ரரும்மான [வெற்றிக்ஷேமம் இவைகளை அளிப்பவருமான] ஹர்யஶ்வர்க்கு [பச்சைவருணமுள்ள குதிரைகளை யுடையவர்க்கு] நமோநமஃ. ஸஹஸ்ராம்ஶோ [ஆயிரங் கிரணங்களை யுடையவரே]! நமோநமஃ. ஆதித்யர்க்கு நமோநமஃ. உக்ரரான [உபாஸியாதவர்களிடம் கொடுமையைக்காட்டுகின்ற] வீரர்க்கு [ஜகங்களைப் பலதொழிலில் ஏவுகின்றவர்க்கு] நமஸ்கா

ரம் ;ஸாரங்கர்க்கு [வெகு வேகமாக ஆகாயத்திற் சஞ்சரிப் பவர்க்கு] நமோநமஃ. பத்மப்ரபோதர்க்கு [தாமரை மலர் களை எழுப்புகின்றவர்க்கு] நமஸ்காரம்; மார்த்தாண்டர்க்கு நமோநமஃ. ப்ரஹ்மேஶாநாச்யுதேஶரும் [பிரமாவையும் சிவபெருமானையும் எல்லாவாபத்துக்களிலும் பாலனம் பண்ணுகின்றவரும்], ஸூர்யருமான ஆதித்யவர்ச்சஸ் ஸுடம் [ஆதித்யரூபமான காந்தியையுடையவரும்], பாஸ் வாநும் [காந்தியையுடையவரும்], ஸர்வபக்ஷருமான [எல் லாவற்றையும் அழிப்பவருமான] ரௌத்ரவபுஸ்ஸுடக்கு [எல்லாவற்றையும் அழிக்கையில் கடுமையான வடிவத்தை யுடையவர்க்கு], நமஸ்காரம். தமோக்நரும்[இருளைப்போக் குகின்றவரும்], ஹிமக்நரும் [பனியைப் போக்குகின்ற வரும்], சத்ருக்நரும் [தம்மையடைந்தவரது பகைவரை யழிப்பவரும்], அமிதாத்மாவும் [அளவிடக்கூடாத ஸ்வ ரூபத்தையுடையவரும்], க்ருதக்நக்நரும் [நன்றியற்றவர் களை நாசஞ்செய்கின்றவரும்],தேவருமான [விளங்குபவரு மான] ஜ்யோதிஷாம்பதிக்கு நமஸ்காரம். தப்தசாமீகரா பரும் [உருக்கிவிட்ட தங்கத்தின் நிறமாக விளங்குபவரும்], வஹ்நியும் [அக்நிரூபமாக்நின்று ஹவிஸை வஹிப்பவ ரும்], விஶ்வகர்மாவும் [எல்லா ஜகத்துக்கும் கர்த்தாவும்], தமோபிஹிக்நரும் [அஜ்ஞாநவிருளைப் பிளப்பவரும்], ருசி யுமான [ஒளிவடிவமானவருமான] லோகஸாக்ஷிக்கு [அந் தர்யாமியாயிருத்தலால் ஜநங்களின் புண்யபாவங்களுக்குச் சாக்ஷியானவர்க்கு] நமஸ்காரம்."

"இக்கடவுள், பிரளயகாலத்தில் ஜகத்தை யழிக்கின் றார்; அதையே மறுபடியும் உண்டாக்குகின்றார்; இவர், ரக்ஷகர். இவர்தாம், எல்லாவற்றையும் வற்ற அடிக்கின் றார்; எரித்துவிடுகின்றார்; தமதுகிரணங்களால் மழை யைப் பொழிகின்றார். இவர்தாம், எல்லாப் பிராணிகளும் உறங்கும்பொழுது, அந்தர்யாமியாகவிருந்து விழித்திருக் கின்றார். இவர்தாம், அக்நிஹோத்ரம்; அக்நிஹோ த்ரஞ் செய்கின்றவர்களுக்குப் பயனும் இவரே. வேதங்

களும், யாகங்களும், யாகங்களின் பயனும், இன்னும் இவ்வுலகத்தில் நடக்கின்ற செயல்களும் எல்லாமும் இந்தச் சூரியபகவானே."

"இராகவரே! எவன் ஒருவன் தான் ஆபத்திலிருக்கும் பொழுதும், கஷ்டப்படும்பொழுதும், கடத்தற்கு அரிய வழியில் அகப்பட்டுக்கொண்டு விழிக்கும்பொழுதும், மனத்திற்குப் பயமுண்டாகுஞ் சமயங்களிலும் இந்த ஆதித்ய ஹ்ருதய மந்த்ரத்தை ஓதுகின்றானே, அவன் ஒருபொழுதும் வருத்தமடையமாட்டான். ஏகாக்ரமனத்துடனிருந்து கொண்டு, தேவர்களுக்குந்தேவராகவிருக்கின்ற இந்த ஜகத்பதியான சூரியபகவானைப் பூசை செய்க; ஆதித்யஹ்ருதயமென்ற இம்மந்திரத்தை மூன்றுதரம் ஜபஞ்செய்க; போரில் வெற்றிபெறுவாய். மகாபாகுவே! இந்தக்ஷணமே இராவணனை வெல்வாய்" என்று இவ்வாறு சொல்லிவிட்டு, அப்போது, அகஸ்தியமகாமுனிவர், தாம் வந்தவழியே திரும்பிப்போனார்.

அகஸ்தியர் மீண்டு செல்லுதல்.

வெகுபராக்கிரமசாலியாகிய ஸ்ரீராமர், இதைக் கேட்டு அப்போது துயரமற்றவரானார். ஐம்பொறியையடக்கின வீரரான இராகவர், சூரியதேவரைப்பார்த்து ஜபம்பண்ணி மூன்றுதரம் ஆசமனஞ் செய்துவிட்டு, ஆனந்தமடைந்தவராய், வில்லைக் கையிலேந்தி மனதைரியங்கொண்டு நின்றார். அப்போது, இராமர், இராவணனைக் கண்ணுற்று வெகுஉற்சாகங்கொண்ட உள்ளத்துடன் போரிடுமாறு வந்தார்; எல்லாப்பெருமுயற்சியாலும் அவ்வரக்கனை வதைக்கவேண்டுமென்று உறுதிகொண்டார்.

இராமர் இராவணவதத்திற்குச் சித்தமாக நிற்றல்.

பிறகு, சூரியபகவான், மிகுதியாக மயிர்க்கூச்செறிய ஸ்ரீராமரைப் பார்த்து மகிழ்ந்த மனமுடையவராய், அரக்கமன்னவனது நாசத்தை அநுக்கிரகித்து தேவதைகளின் மத்தியிலிருந்துகொண்டு ஸ்ரீராமரை நோக்கி "இராவணவதத்தின் பொருட்டு விரைக" என்ற வார்த்தையைக் கூறினார்.

சூரியபகவான் இராவணவதஞ் செய்யுமாறு இராமர்க்கு அநுக்கிரகித்தல்.

நூற்றெட்டாஞ் சருக்கம்:
இராவணனுக்கு அபசகுனங்கள் நேர்தல்.

அதன்பிறகு, சத்துருக்களுடைய சேனையை நாசம் பண்ணத்தக்கதும், கந்தர்வநகரம்போன்றதும், ஓங்கியது வசம் பறக்கப்பெற்றதும், பொன்னணிகளாலலங்கரிக்கப் பெற்ற சிறந்த குதிரைகள் பூட்டியுள்ளதும், போரிடுவதற்கு உரிய எல்லாக் கருவிகளும் நிரம்பியதும், கொடிகளை நாற்புறங்களிலும் மாலையாகப் பெற்றதும், ஆகாயத்தை விழுங்குவதுபோலக் காண்பதும், பூமியை எதிரொலி யொலிக்கச்செய்வதும், தனது சேனைக்குச் சந்தோஷம் விளைவிப்பதுமான இராவணனுடைய இரதத்தை, சாரதியானவன், வெகு உற்சாகத்துடன் வேகமாகச் செலுத்திவந்தான். அவ்வாறு எதிரொலியுண்டாகுமாறு அதிகஞ் சத்தத்தோடு ஓடிவந்த இராவணனுடைய அந்த இரதத்தை ஸ்ரீராமர் பார்த்தார்.

இராமர் இராவணனுடைய தேர் வருவதைப் பார்த்தல்.

கறுப்புக்குதிரைகள் பூட்டப்பட்டும், உக்கிரமான காந்தியுடன் விளங்கிக்கொண்டும், மின்னல்போன்ற கொடிகளாற் சோபித்துக்கொண்டும், இந்திராயுதத்துக்குஒப்பான பலவித ஆயுதங்களால் நிரம்பியும், மேகமானது மழையைப்பொழிவதுபோலச் சரங்களைப் பொழிந்துகொண்டும், மேகத்துக்கொப்பாயுமுள்ள சத்துருவினிரதம் வருவதைக் கண்டு, வச்சிராயுதத்தாலடிக்கப்பட்டுப் பிளப்புண்ட மலையின் சத்தத்திற்கு ஒப்பான சத்த முண்டாகுமாறு, ஸ்ரீராமர், பாலசந்திரன் வடிவமாக வானத்துள்ள தமது கோதண்டத்தை டங்கார்ஞ்செய்து, இந்திரபகவானுடைய சாரதியாகிய மாதலியைப் பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:-
"மாதலியே! சத்துருவினிரதம் வேகமாக வருகின்றது

இராமர் இராவணனது தேர்க்கு எதிராகத் தமது இரதத்தைச் செலுத்துமாறு மாதலிக்குக்கட்டளையிடுதல்.

காண். வெகுவேகமாகத் திரும்பிவருகின்ற இராவணனது இரதம் * அப்பிரதக்ஷிணமாக வருவதால், போரில் தன்னைத் தான் வதைத்துக்கொள்ளுவதற்கே அவ்விராவணன் எண்ணங்கொண்டிருப்பதுபோலக் காணப்படுகின்றது. ஆகையால், நீ, இப்பொழுது கொஞ்சமேனுங் குழப்பமில்லாமல் சதுருவினிரதத்தை எதிர்கொள்க. மிகுதியாகக் கிளம்பியிருக்கும் மேகத்தை வாயுவானது கலைப்பதுபோல, நான், இராவணனை நாசம்பண்ண விரும்புகின்றேன். நீ, எளிமையில்லாமலும் மனங்குழம்பாமலும் உள்ளத்தையும் பார்வையையும் ஒரேநிதானமாக வைத்துக்கொண்டும், கடிவாளத்தைச் சரிவரக் கைப்பற்றியும் வெகுவேகமாக இந்தஇரதத்தை ஓட்டுக. தேவேந்திரனுடைய இரதத்தையோட்டுகின்ற உனக்கு, நான், ஓட்டும்வகையை உபதேசிக்கவேண்டுவதில்லையே. ஆயினும், போரிடுவதற்கு மனங்கொண்டிருக்கும் நான் உனக்கு இரதத்தைச்செலுத்தும் வகையை நினைவுமூட்டுகின்றேனே யல்லது, உனக்குக் கற்றுக்கொடுக்க இவ்வாறு சொல்லவில்லை" என்றார். தேவேந்திரனுக்குச்சாரதித்தியம்பண்ணித் தேர்ச்சியடைந்த அம்மாதலியும், ஸ்ரீராமர்சொன்னதைக் கேட்டுச்சந்தோஷமடைந்து, அவ்விரதத்தையோட்டினன். அவன், இராவணனுடைய இரதத்தைத் தன்னிரதத்திற்கு இடப்பக்கத்திற் செல்லச் செய்து, தனது இரதத்தின் சக்கரத்தினலுண்டாகுந் தூளியால் அவ்விராவணனை மறைத்தான்.

ராம ராவண யுத்தம்.

அப்பொழுது, வெகுகோபங்கொண்ட இராவணன், சிவந்து மலர்ந்த கண்களையுடையவனாகி, தனக்கெதிரில் வந்த ஸ்ரீராமரைப் பாணங்களினற் பிளக்கலானன். தம்மை இராவணன் எதிர்த்ததைக் கண்டு வெகு ரோஷங் கொண்ட

* போரில் அப்பிரதக்ஷிணமாக வருவது அபசகுனம் என்றபடி.

மஹாபராக்கிரமசாலியாகிய இராமர், கோபத்தினால் தைரியமடைந்து, அப்போர்க்களத்தில், வெகுவேகத்துடன் கூடிய தேவேந்திரனதுவில்லையும், சூரியனுடைய கிரணங்களுக்கு ஒப்பான காந்தி பொருந்திய பாணங்களையும் கைப்பற்றினர். அப்போது, பரஸ்பரம் விரோதங்கொண்டு சண்டைசெய்கின்ற கொழுத்த சிங்கங்களிரண்டற்கு நேர்ந்த சண்டைபோல, ஒருவரையொருவர் வதைக்கக் கருதிப் போர்புரிந்த அவ்விருவர்க்கும், பெரும்போர் உண்டாயிற்று. அப்பொழுது, இராவணனுடைய நாசத்தை விரும்பிய தேவர்களும், கந்தர்வர்களும், சித்தர்களும், பரமருஷிகளும், இரண்டு இரதங்களின் மூலமாக நடந்த அப்போரின் வேடிக்கையைப் பார்க்க அவ்விடம் வந்துசேர்ந்தார்கள்.

அப்போது தோன்றிய உத்பாதங்கள்.

அச்சமயத்தில், மயிர்க்கூச்செறியும்படி பயங்கரமான அபசகுனங்கள் பல, இராவணனுடைய நாசத்தையும் ஸ்ரீராமரது வெற்றியையும் வெளிக்காட்டிக்கொண்டு தோன்றலாயின. இராவணனுடைய தேரின்மேல் மழைக்கடவுள் இரத்தமழை பொழிந்தான். சுழல்காற்றுக்கள் அப்பிரதட்சிணமாகக் கடுமையுடன் வீசின. ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டு தோன்றிய பெருங் கழுகுகூட்டங்கள், இராவணனுடைய தேர் சென்ற விடமெல்லாம் அதைத் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தன. ஜபாபுஷ்பத்தின் நிறத்துக்கொப்பான சந்தியால் இலங்கைமாநகர் மூடப்படவே, இலங்காபூமியானது, பகற்காலத்திலும் நெருப்பாலெரிக்கப்படுவதுபோல விளங்கிற்று. இடிமுழக்கத்துடன்கூடிய கொள்ளிக்கட்டைகள், இராவணனுக்குத் தீமையுண்டாவதை வெளிக்காட்டிக்கொண்டும், அரக்கர்களுக்குத் துயருறுத்திக்கொண்டும், பெருஞ்சத்தத்துடன் விழலாயின. இராவணன் எங்குச் சஞ்சரித்தானோ, அங்குப் பூமி அசையலாயிற்று. போரில் ஆயுதங்களைக்கொ

ண்டு புடைக்கின்ற அரக்கர்களின் கைகளெல்லாம் பிடிப்பு உண்டாஞற்போலத் தம்பித்துநின்றன. மேலேயின்மேற் பலவகைத்தாதுக்கள் காணப்படுவதுபோல, தாமிரநிற மும் கறுப்பும் வெளுப்புமான சூரியகிரணங்கள், இராவண னது மேனியில் விழுபவைகளாய்க் காணலாயின. நெருப் பை வாய்களாற் கக்கிக்கொண்டு கழுகுகளால் தொடரப் பட்ட நரிகள், இராவணனுடைய முகத்தை நோக்கி வெகு அபசகுனமாக ஊளையிடலாயின. அப்போர்க்களத்தில் இராவணனது கண்களில் தூசியையடித்துப் பார்வையை விளங்காமற் செய்துகொண்டு எதிர்முகமாகக் காற்று வீசிற்று. அவனதுசேனையிற் பலபக்கங்களிலும், ஆகா யத்தில் மேகமில்லாமலிருக்கும்பொழுதே காதாற்கேட்க முடியாத பயங்கரமான சத்தத்துடன், இடிகள் விழலா யின. எல்லாப்பெருந்திசைகளும் மூலைத்திசைகளும் இருளால்மூடப்பட்டன. மிக்கமண்மாரியால், ஆகாயமும், காணமுடியாதவாறு ஆயிற்று. நூற்றுக்கணக்கானபெண் கிளிகள், பயங்கரமாகச் சண்டைசெய்து, வெகு பரிதாப மாய்க் கத்தி, பயங்கரமாக, அவ்விராவணனது இரதத்தின் மேல் விழலாயின. இராவணனுடைய தேர்க்குதிரைகள், பின்புறங்களிலிருந்து நெருப்புப் பொறிகளையும், கண்களி லிருந்து கண்ணீரையும், இவ்வாறு அவை நெருப்பையும் நீரையும் ஒருங்கராக வெளிவிட்டன. இவ்வாறு பயங்கர மான கொடிய பலஅபசகுனங்கள், இராவணவிநாசம் நெ ருங்கிவிட்டதென்பதை வெளிக்காட்டத்தோன்றின.

இராமருக்கு நன் னிமித்தங்கள் தோன்றுதல்.

இராமருக்கோ, எல்லாப் பக்கங்களிலும் பலவகைநற் சகுனங்கள் அழகாய் மங்களகரமாகத்தோ ன்றி, அவருடைய வெற்றியை நன்றாக வெளிப்படுத்தின. அவ்வாறு தமது வெற் றியைக்காட்டிக்கொண்டு பலவகை நன்னி மித்தங்கள் தோன்றியதை ஸ்ரீராமர், கண்டு, வெகுசந்தோ ஷமடைந்து, இராவணன் மாண்டானென்றே கருதினர்.

நிமித்தங்களை நன்குணர்ந்த இராமர், முனைமுகத்தில் தமக்கு நன்னிமித்தங்கள் தோன்றினதைக் கண்டு மனங்களித்து, மிக்க இன்பமடைந்து போரில் மிக்க பராக்கிரமத்தைக் காட்டலானார்.

நூற்றொன்பதாஞ் சருக்கம்:
ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் நடந்த கொடிய போர்.

அதன்பிறகு, ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும், உலகங்களெல்லாவற்றுக்கும் அச்சத்தை யுண்டாக்குவதும், அவர்களது இரண்டு இரதங்களினுற் செய்யப்பட்டதுமான வெகு கொடியபெரும்போர், தொடங்கிற்று. அப்பொழுது, அரக்கசேனையும் வானரசேனையும், கைகளில் ஆயுதங்களை வைத்துக்கொண்டு, ஒன்றுஞ் செய்யாது நின்றன. வெகுபலசாலிகளான ஸ்ரீராமர் இராவணன் என்னும் இவ்விருவரும் அவ்வாறு போரிடுவதைப் பார்த்து, எல்லாரும் தங்களது மனம்முழுமையும் அப்போரில் வைத்தவர்களாய்த் திகைத்து நின்றார்கள். அவ்வரக்கர்களும் வானரர்களும், பற்பல ஆயுதங்களைக் கைகளிற் பிடித்தபடியே அப்பெரும்போரைப் பார்த்துத் திகைத்து நின்றார்களேயன்றி, அருகிலிருக்கின்ற மாற்றானைப் பார்த்துப் போர்புரிய விருப்பங்கொள்ளவில்லை. இராட்சசசேனை மலர்ந்த கண்களால் இராவணனைப் பார்த்துக் கொண்டும், வானரசேனை மலர்ந்த கண்களால் ஸ்ரீராமரைப் பார்த்துக்கொண்டும் திகைத்தனவாய், சித்திரத்தில் எழுதிய சைனியம்போல அசைவற்று நின்றன.

இராமராவணயுத்தத்தைப்பார்த்தபடியே சேனைகள் யாவும் திகைத்துநிற்றல்.

அப்பொழுது, இராமர் இராவணன் என்ற அவ்விருவரும், அப்போர்க்களத்தில் தோன்றியபலநிமித்தங்களைப்

பார்த்து, நிலைகின்ற கோபத்துடனும் மிக்க உறுதியுடனும் சிறிதும் அஞ்சாமல் யுத்தஞ்செய்யலானார்கள். ஸ்ரீராமர் தாம் அவசியம் வெற்றியடையவேண்டு மென்றும், இராவணன் தான் மடிந்துபோவது நிச்சயமென்றும் உறுதிகொண்டவர்களாய், அவ்விருவரும், தங்கள் முழுவல்லமையையும் அந்தயுத்தத்திற் காட்டலானார்கள்.

ராமராவண யுத்தம்.

பிறகு, வீரனான இராவணன், வெகு கோபத்துடன் பாணங்களைத் தொடுத்து, ஸ்ரீராமருடைய இரதத்தின்மேலிருந்த கொடியைநோக்கி விடுத்தான். அந்தஅம்புகள், இந்திரபகவானுடைய கொடியை நெருங்கமுடியாமல், அந்த இரதத்தை அணுகியமாத்திரத்தில், அவ்விரதத்தின் மகிமையால் தடுக்கப்பட்டுப் பூமியில் விழுந்தன. பிறகு, வீரராகிய ஸ்ரீராமர், மிகவுஞ் சினந்து, இராவணன் செய்ததற்குப் பதில் செய்யுமாறு மனத்தினுங் கருதி, இராவணனுடைய துவசத்தை நோக்கி, பெரும்பாம்புபோல அணுகமுடியாததும் காந்தியால் மின்னுவதுமான கூர்மையுள்ள பாணத்தை விடுத்தார். அப்பாணம், இராவணனுடைய துவசத்தை வெட்டிவிட்டுப் பூமியிற் பாய்ந்தது; இராவணனுடைய துவசமும் பூமியில் விழுந்தது.

இராமர் இராவணனது தேர்த்துவசத்தைக் கீழேவீழ்த்துதல்.

வெகு பலசாலியாகிய இராவணன், தனது தேர்த்துவசம் நாசமானதைநோக்கி, அவ்வவமானத்தைச் சகிக்கமுடியாமற் கோபத்தாற் கொதிக்கலானான். அவ்விராவணன், பெருஞ்சினங்கொண்டு, அம்புமழையை மிகுதியாகப் பொழிபவனாய், கூரானபாணங்களால் ஸ்ரீராமருடைய தேர்க்குதிரைகளைப் பிளக்கப்பார்த்தான். அப்புரவிகள், அவ்வாறு அடிக்கப்பட்டபோதிலும், கொஞ்சமேனும் கலங்காமலும் குழப்பமடையாமலும், தாமரைத்தண்டுகளால் அடிக்கப்பட்டனபோல ஸ்வஸ்தமானமனத்துடனிருந்தன.

ராமராவணர்களின் பெரும்போர்.

இராவணன், அக்குதிரைகள் மனக்குழப்பமின்றி நின்ற தைக் கண்டு, அப்பொழுது கடுஞ்சினமடைந்து, மறுபடியும் அவைகளின்மேற் சரமாரிபொழியலானன். அன்றியும், அவன், அப்புரவிகளின்மேல், கதைகள் உழலைத்தடிகள் சக்கராயுதங்கள் உலக்கைகள் மலைச்சிகரங்கள் மரங்கள் சூலங்கள் கோடரிகள் என்ற இவைகளையெல்லாம் விடுத்தான். இவ்வாறு அச்சமுண்டாக்குவதும் கொடியதும் கடும் பேரொலியை எதிரொலியாகக் கொண்டதுமான படைக்கலமழையை, இராவணன், தனதுமாயாசக்தியாற் பொழியலானன். அவ்வாறு பலபடியாகப் பொழிந்த படைக்கலங்கள், கோபங்கொண்ட ஸ்ரீராமருடைய பாணங்களால் விலக்கப்பட்டனவாய், அவ்விராமருடைய இரதத்தைவிட்டு வானரசேனையின்மேல் விழுந்தன. பின்னும், அந்தத் தசக்கிரீவன், உத்ஸாஹங்குறையாமல் ஆயிரக்கணக்கான பாணங்களை, கலங்காத மனத்துடன் இடைவிடாது பொழியலானன்; அதனால், ஆகாயமும் இடைவெளியற்றதாயிற்று. பிறகு, அவ்வண்ணம் போரில் ஊக்கத்துடன்முயல்கின்ற அவ்விராவணனைக்கண்டு, ஸ்ரீராமர், புன்னகைசெய்பவர்போல ஆயாசமின்றிக் கூரானபாணங்களைத் தமது வில்லில் தொடுத்து நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் விடுக்கலானார். அதைப்பார்த்து, இராவணன், தனது பாணங்களால் ஆகாயத்தை இடைவெளியற்றதாகச் செய்தான். அவ்வாறு அவ்விருபோர்வீரர்களும் விடுத்த பாணங்களால் விளங்கிய ஆகாயம், அம்புகளாற் கட்டப்பட்ட இரண்டாவது ஆகாசம்போலக் காணலாயிற்று, அப்போது விடுக்கப்பட்ட அம்பானது, இலக்குத் தவறியதாகவேனும், குறித்த அளவைவிட மிகுதியைப் பிளப்பதாகவேனும், இலக்கிற்சார்ந்து பயனற்றதாகவேனும் ஆகவில்லை. அப்போர்க்களத்தில், ஸ்ரீராமராவணர்கள் அவ்வாறு பிரயோகித்துக்கொண்ட பாணங்கள், ஒன்றை மற்றொன்று அடித்துக்கொண்டு பூமியில் விழுந்தன. அந்த

இருவரும் இடமும் வலமுமாக அம்புகளைச் சொரியலானார்கள்: அவ்விருவரும் தமது அம்புக்கூட்டங்களால் ஆகாயத்தை மூச்சும்விடவொட்டாது செய்தனர். ஒருவர் செய்த கொடுமைக்குப் பதில்செய்துகொண்டு போர்புரிந்த அவ்விருவரும், ஒருவரது தேர்க்குதிரைகளை மற்றொருவராக, இராமரது குதிரைகளை இராவணனும், இராவணனது குதிரைகளை இராமரும் ஹிம்ஸிக்கலானார்கள். அவ்விருவரும், வெகு கோபத்துடன், இவ்வாறு ஆச்சரியமாகப் போர்புரிந்தனர். ஒரு முகூர்த்தகாலம் அவ்விருவர்க்கும் நெருக்கமாகவும், பார்ப்பவர் மயிர்க்கூச் செறியுமாறும், பெரும் போர் நிகழ்ந்தது. மகாபலம்பொருந்தியவர்களான இராமர் இராவணன் என்ற அவ்விருவீரரும், கூரான பாணங்களால் யுத்தம் பண்ணினார்கள்; ஆனால், அரக்கர்மன்னவனான இராவணன், தனது துவசம் விழுத்தப்பட்டதனால், இராமர்மீது மிக்கசினங் கொண்டான்.

நூற்றுப்பத்தாஞ் சருக்கம்:

இராமர் இராவணனதுதலையை அறுத்தல்.

அப்போது ஸ்ரீராமரும் இராவணனும் போர்புரிகின்றதைப் பார்த்து, எல்லாப்பிராணிகளும், ஆச்சரியமடைந்த மனத்துடன் பார்த்தன. சிறந்த தேரிலேறிப் போர்செய்கின்ற அவ்விருவீரரும், அவ்விரண்டு இரதங்களினாலும், மண்டலகதியையும் நேராகமுடுகிச் செல்வதையும் மாற்றானையணுகுவதும் விலகுவதுமாகச் செல்வதையும், தங்களது சாரதிகளின் வல்லமையால் இவ்வாறு பலவகைக் கதிகளைக் காண்பித்துக்கொண்டு, ஒருவர்மீது ஒருவர் சினந்து எதிர்த்து, ஒருவரையொருவர் வதைக்கக்கருதிப் பீடிப்பவர்களாய், பார்ப்பதற்கு வெகுபயங்கர ரூபமுள்ளவர்க

ராமராவண யுத்தம்.

ளாகக் காணப்பட்டார்கள். இராவணனே இராமரும், இரா மரை இராவணனும் இம்சிப்பவர்களாய், ஒருவரையொரு வர் அணுகிநிற்பதும் ஒருவரைவிட்டு ஒருவர் விலகி நிற்பது மாகி, இவ்வாறு விரைவான கதியை மேற்கொண் டனர். பாணங்களைவிடுத்துக்கொண்டு போர்புரிந்த அவ் விரண்டுவீரர்களின் உத்தமமான ரதங்களும், அப்போர்க் களத்தில் மழைபொழிகின்ற மேகங்களிரண்டுபோலச் சஞ் சரித்தன. அப்போர்க்களத்தில், அவர்களிருவரும் அவ் வாறு பலவகையான போக்கைக் காட்டி, மீண்டு, ஒருவருக் கொருவர் எதிர்முகமாக நிற்கலானார்கள். அவ்விருவரும் அவ்வாறு நின்றபொழுது, ஒரு தேரின் நுகத்தடியுடன் மற்றொரு தேரின் நுகத்தடியும், குதிரைகளின் முகங் களுடன் குதிரைகளின் முகங்களும், கொடிகளுடன் கொடி களும் இடித்துக்கொண்டன. அப்பொழுது, ஸ்ரீராமர், கூர் மையாய் எரிகின்ற நான்கு பாணங்களை விடுத்து, இராவண னுடைய நான்கு குதிரைகளைப் பின்னிடையச் செய்தார். அவ்வரக்கன், ஸ்ரீராமர் தன் குதிரைகளைப் பின்னே போ கச்செய்ததைப் பார்த்துப் பெருஞ்சினமடைந்து கூரான பாணங்களை இராகவர்மேற் பொழியலானான். வெகு பலசாலியாகிய இராவணனால் அவ்வாறு அடிக்கப்பட்ட போதிலும், ஸ்ரீராமர் கொஞ்சமேனும் வருத்தமடைய வில்லை; அவைகளை, ஒருபொருட்டாக எண்ணவுமில்லை. அப்பொழுது, இராவணன், இந்திரனுடைய சாரதியாகிய மாதலியின்மீது வச்சிராயுதத்துக்கு ஒப்பான பல பாணங் களை விடுத்தான். வெகுவேகமாக மாதலியின் சரீரத்தில் விழுந்த அவ்வம்புகள், அவனுக்குக் கொஞ்சமேனும் மூர்ச் சையையாவது வருத்தத்தையாவது உண்டாக்கவில்லை. ஸ்ரீராமர், மாதலியின்மேல் அவ்வாறு விழுந்த அம்புகளைத் தம்மேல் விழுந்த அம்புகளுக்கும் மேலாக நினைந்து வெகு கோபங்கொண்டு, அவ்விராவணனைத் தமது பாணங்க ளென்ற வலையால் முகம்மாறும்படி செய்தார். அன்றி

யும், அவ்விராகவர், தமது சத்துருவி னிரதத்தின்மேல், இருபது முப்பது அறுபது நூறு ஆயிரமென்ற கணக்காகப் பாணங்களை விடுக்கலானார். அரக்கர்வேந்தனன இராவணனும், கோபத்தாற் சீறி, தன்து இரதத்தி லிருந்தபடியே, கதை இரும்புலக்கை என்ற இவைகளைக் கணக்கின்றிச் சொரிந்து ஸ்ரீராமரை வருத்தினன்.

அப்பொழுது, பார்ப்பவர்களின் மனம் மயிர்க்கூச்செறி யும்படி நெருக்கமாகப் பெரும்போர் நடக்கலாயிற்று. கதை கள் இருப்புலக்கைகள் உழலைத்தடிகள் என்ற இவைகளின் சத்தத்தாலும், கூர்முனைகளுடன் கூடிய அம்புகளின் வீழ்ச்சியாலும், ஏழுகடல்க ளும் குழம்பின. ஏழுகடல்களும் குழம்ப வே, பாதாளலோகத்தில் வசித்துக்கொண் டிருந்த பங்நகர்களும், ஆயிரக்கணக்கான நாகவர்களும் வருந்தலானார்கள். மலைகள், தோப்புகள், காடுகள் என்ற இவற்றால் நிரம்பிய பூமி முழுதும் அசைந்தது; சூரியபக வான் ஒளியற்றவனயினன்; காற்றும் வீசவில்லை.

இராமராவண யுத்தத்தைக் கண்டு எல்லாம் குழப்ப மடைதல்.

பிறகு, தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள், மஹர்ஷி கள், கிந்நரர்கள், மஹோரகர்கள் என்ற யாவரும் கவலை யடைந்தார்கள். "பசுக்களுக்கும் அந்த ணர்களுக்கும் க்ஷேமம் உண்டாகுக; உல கங்கள் அழிவின்றி நிலைநிற்பனவாக. இப் போரில் அரக்கமன்னவனுகிய இராவ ணனை ஸ்ரீராமர் வெல்லட்டும்" என்று ஜபித்துக்கொண்டு, தேவர்கள், முனிவர் களின் கூட்டங்களுடன், பயங்கரமாய் மயிர்க்கூச்செறி யும்படி இராமருக்கும் இராவணனுக்கும் நடந்த அப் பெரும்போரைப் பார்த்தார்கள். கந்தர்வர்களின் கூட்ட மும் அப்ஸரஸ்-க்களின் கூட்டமும், நிகரற்ற அப்போரைப் பார்த்து, "ஆகாயம் ஆகாயத்தின்வடிவையே யுடையது; சமுத்திரம் சமுத்திரத்தையே உபமானமாகக்கொண்டது;

தேவர் முதலி யோர் ராமராவ ண யுத்தத்தைக் கண்டு மங்களத் தைப் பிரார்த் தித்தல்.

அதுபோலவே, ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் நடக்கும் போரானது, ஸ்ரீராமருக்கும் இராவணனுக்கும் நடக்கும் போரையே போலும்" என்று இவ்வண்ணம் பேசிக் கொண்டு, ராமராவணர்கள் செய்யும் அப்போரைப் பார்க்க லானர்கள்.

அப்பொழுது, மகாபாகுவும் இரகுவம்சத்தின் கீர்த்தியை வளர்க்கவந்தவருமான ஸ்ரீராமர், வெகு கோபங் கொண்டவராய், சர்ப்பத்துக்கு ஒப்பான கத்திமுனை யம்பைக் கோதண்டத்தில் தொடுத்து அதைவிடித்து, வெகு அழகாய்க் குண்டலமணிந்து விளங்குகின்ற இராவணனுடைய தலையை வெட்டினர். அத்தலையும், இம்மூவுலகத்தாரும் பார்த்துக்கொண்டிருந்தபொழுதே பூமியில் விழுந்தது; ஆனல், அத்தலைபோல மற்றொரு தலை இராவணனுக்கு உடனே உண்டாயிற்று. ஆயுதப் பயிற்சியில் வெகு சுருசுருப்புள்ள ஸ்ரீராமர், அத்தலையைச் சடிதியிற் கூரான பாணங்களை விடுத்து வெட்டியெறிந்தார்; அவ்விரண்டாவது தலை வெட்டுண்ட மறுநிமிஷத்தில், மற்றொரு தலை தோன்றிற்று. அதையும், இடிக்கு ஒப்பான பாணத்தால், ஸ்ரீராமர் வெட்டினர்; இவ்வாறு ஒரேமாதிரியாகவிளங்கிய நூறுதலைகளை ஸ்ரீராமர் அவ்வப்போது வெட்டித்தள்ளியும், இராவணனுடைய அந்திம காலத்திற்கு ஓர் எல்லையும் ஏற்படவில்லை.

இராமர் இராவணனது தலையை யறுக்க, அது மீண்டும்மீண்டும் முளைத்தல்.

அப்பொழுது, அஸ்திரங்களெல்லாவற்றையும் அறிந்த வீரரும் கௌசலையின் மகிழ்ச்சியை வளர்க்கப் பிறந்தவருமாகிய ஸ்ரீராமர், தம்மிடம் பலவகைப் பாணங்களிருந்தும் பின்வருமாறு ஆலோசிக்கலானர்:— "எவ்வம்புகளால் மாரீசன் மாய்ந்தானே, எவ்வம்புகளால் கரன்தூஷணன் என்னும் இவர்கள் மடிந்தார்களோ, எவ்வம்புகளால் க்ரௌஞ்சாவனத்தில் விராதனும் தண்டகாரணியத்தில் கபந்தனும் உயிரி

இராமரதுசிந்தை.

முந்தார்களோ, அவ்வாறு எனக்குப் பலமுறையாகப் போரில் நம்புதலையுண்டாக்கிய அந்தஅம்புகள் இப்பொழுது இராவணனைக் கொல்லாமல் ஒளிமழுங்கியிருப்பதற்குக் காரணம் என்ன?" என்று இவ்வாறு சிந்தையில் மூழ்கியும், ஸ்ரீராமர், அப்போரில் ஜாக்கிரதையுள்ளவராக விருந்தார்.

அப்போது, இராவணனதுமார்பை நோக்கி, ஸ்ரீராமர் சரமாரிபொழிந்தார். அரக்கர்தலைவனுகிய இராவணனும், தனது இரதத்திலிருந்தபடியே வெகு கோபங்கொண்டவனுய், கதை இருப்புலக்கை என்ற இவைகளை வீசியெறிந்து, இராமரை இம்சிக்கலானுன். அப்பொழுது, ஆகாயத்திலும், பூமியிலும், திரிகூடமலையின் சிகரத்திலும், அவ்விருவர்க்கும் மயிர்க்கூச்செறியும்படி மிகவும் பயங்கரமான யுத்தம் மும்முரமாக நடக்கலாயிற்று. தேவர்கள் தானவர்கள் யக்ஷர்கள் பிசாசர்கள் உரகர்கள் ராக்ஷஸர்கள் என்னும் இவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், அன்றிரவுமுடிய, அப்பெரும்போர் நடந்தது. இராமர் இராவணன் என்ற இவ்விருவர்க்கும் போர் பகலிலும் இரவிலும் முகூர்த்தகாலத்திலும் ஒருநிமிஷமேனும் ஒய்வில்லாமல் நடந்தது.

இராமராவணர் கட்குத் தேவர்முதலியோர் காணுமாறுஒழிவின்றிப் போர்நடத்தல்.

அவ்வண்ணம் நடந்த போரில் ஸ்ரீராமர் இராவணன் என்னும் இவ்விருவர்க்குள் ஸ்ரீராமருக்கு வெற்றி இன்னுங் கைகூடாமலிருந்ததை, மஹானுன தேவேந்திரசாரதி, பார்த்து, போர்செய்வதில்முனைந்திருந்தஇராகவரை நோக்கி ஒரு சொல்லைச் சொல்லலானுன்.

தேவேந்திர சாரதி இராமர்க்கு ஒன்று கூறத் தொடங்குதல்.

நூற்றுப்பதினோராஞ் சருக்கம்:
இராவண வதை.

அப்பொழுது, மாதலியானவன், ஸ்ரீராமருக்கு இனைப்பு மூட்டலானுன்:— "வீரரே! தாங்கள் பிரமாஸ்திரத்தை யுணராதவர்போல, இவ்விராவணன் ஓரஸ்திரத்தைப் பிரயோகிக்க, அதற்குமாருன அஸ்திரத்தைமாத்திரம் ஏன் பிரயோகிக்கின்றீர்கள்? பிரபுவே! இவ்விராவணனை வதைக்கும்பொருட்டுப் பிரமாஸ்திரத்தைப் பிரயோகியுங்கள். தேவர்கள்கூறிய விநாசகாலம் இப்பொழுது இவனுக்கு வந்துவிட்டது" என்றுன்.

மாதலி இராமரைப் பிரமாஸ்திரத்தைத் தொடுக்கச சொல்லுதல்.

முக்காலங்களையறிந்த அகஸ்தியமஹர்ஷி தமக்கு முன்புகொடுத்ததும், ஒப்பற்ற காந்தியுடன் விளங்குகின்ற பிரமதேவர் இந்திரபகவானுக்காக முன்பு உண்டாக்கி இம்மூவுலகங்களையும் வெல்லவிரும்பிய அத்தேவேந்திரனுக்கு முதன் முதல் அளித்ததும், தனது இறகுகளில் வாயுபகவானையும் முனையில் அக்கினி சூரியர்களையும் கொண்டதும், தனது உடல் ஆகாயமயமானதும், தனது பெருமையால் மேருமந்தரமலைகளை யடக்குவதும், அங்கத்தாற் பளபளவென்று விளங்குவதும், அழகிய முனையுடன்கூடியதும், எல்லாப் பிராணிகளுடைய ஒளியையுஞ் சேர்த்துத் திரட்டிச் செய்யப்பட்டிருப்பதனுற் சூரியனுக்குச் சமானமான காந்தியுள்ளதும், புகையுடன்கூடியகாலாக்கினிபோலவும் நெருப்பைக்கக்குகின்ற கொடுஞ்சர்ப்பம்போலவும் காணப்படுவதும், சிறந்த யானைகள் புரவிகள் இவைகளைக் கூட்டங்கூட்டமாக வதைக்கவல்லதும், தன்தொழிலை விரைவாகச் செய்வதும், கோட்டைகொத்தளங்கள் அகழிகள் மலைகள் இவைகளையும் பிளப்பதும், பல சத்துருக்களின் இரத்

இராமர், பிரமாஸ்திரத்தையெடுத்தல்.

தத்தைப் பூசிக்கொண்டிருப்பதும், தசைபற்றிய காரணத்தால் வெகு கொடியதாக விளங்குவதும், வச்சிராயுதத்துக் கொப்பான வலிமையுள்ளதும், பேரொலியுடையதும், முன்னே பல போர்களில் வெற்றியடைந்ததும், பயங்கரமான தோற்றமுள்ளதனல் எல்லாரையும் நடுநடுங்கச்செய்வதும், பெருமூச்செறியுஞ் சர்ப்பம்போல விளங்குவதும், காக்கை கழுகு பருந்து கூளி நரி பிசாசுகூட்டங்கள் என்ற இவைகளுக்கு எப்பொழுதும் உணவையளிப்பதும், யமனுக்கு ஒப்பாய்ப் போரில் அச்சத்தை யுண்டாக்குவதும், வானர வீரர்களுக்குக் களிப்பையும் அரக்கர்களுக்குப் பயத்தையு முண்டாக்குவதும், சத்துருக்களின் புகழையொழிப்பதும், தமக்குச் சந்தோஷத்தை விளைப்பதுமாகிய ஜ்வலிக்குந் தன்மையுள்ள பிரமாஸ்திரத்தை, ஸ்ரீராமர், மாதலியால் நினைப்பூட்டப்பெற்று, கையி லெடுத்துக்கொண்டார்.

மகாபலம்பொருந்திய ஸ்ரீராமர், அப்பெரும் பாணத்தை அபிமந்திரித்து வேதத்திற்சொல்லிய முறைப்படி வில்லில் தொடுத்தார். ஸ்ரீராமர் உத்தமமான அவ்வஸ்திரத்தை வில்லில் தொடுத்தபொழுது, எல்லாப்பிராணிகளும் நடுக்கமடைந்தன ; பூமியும் அசைந்தது. வெகுகோபங்கொண்ட ஸ்ரீராமர், மிக்க முயற்சியுடன் வில்லை நன்றாக வளைத்து இழுத்து மர்மஸ்தானத்தைப் பிளக்க வல்ல அந்த அஸ்திரத்தை இராவணன்மேல் விடுத்தார். வச்சிரபாணியாகிய இந்திரனல் விடுக்கப்பட்ட வச்சிராயுதம்போலத் தகையமுடியாததும் யமனைப்போலத் தடுக்கமுடியாததுமான அப்பிரமாஸ்திரம், இராவணனது மார்பில் விழுந்தது. வெகுவேகமாகப் பிரயோகிக்கப்பட்ட அந்த அம்பானது, துராத்துமாவான அந்த இராவணனுடைய சரீரத்தை யொழிப்பதாய் மார்பைப் பிளந்தது. பிராணனைத்தவறுது ஒழிக்கவல்லதாய் இரத்தத்தாற் பூசப்பெற்றதான அவ்வம்பானது, வேகத்துடன் இராவணனுடைய

இராமர் பிரமாஸ்திரத்தை மந்திரித்துவிட, இராவணன் மார்பகத்தையில் விழுதல்.

பிராணனை வாங்கிக்கொண்டு பூமியிற் பாய்ந்தது. அப்பாணம், அவ்வாறு இராவணனைக்கொன்று, தனது உடம்பு முழுவதும் இரத்தம் பூசப்பெற்றதாய், தான்செய்யவேண்டிய காரியத்தைச் செய்துமுடித்து நிச்சிந்தையை யடைந்ததுபோலத் தனது அம்பருத்தூணியில் மீண்டும் புகுந்தது. உயிரையிழந்த இராவணனுடைய கையிலிருந்த பாணத்துடன் கூடிய வில்லானது, வெகு சடிதியில், அவன் தேகத்திலிருந்து நழுவிய பிராணனைத் தானும் நழுவி விழுந்தது. போரில் விரைந்து தொழில் செய்பவனும் மஹாபராக்கிரமசாலியுமான அவ்வரக்கர்தலைவன், உயிரை யிழந்தவனாய், வச்சிரார்யுதத்தாற் கொல்லப்பட்ட விருத்திராசுரன் போல, இரதத்திலிருந்து பூமியில் விழுந்தான்.

அரக்கர்கள் அஞ்சியோடுதல்.

அவன் அவ்விதமாகப் பூமியில் விழுந்ததை, அங்கு மிகுந்திருந்த அரக்கர்கள், பார்த்து, தங்கள் யஜமானனே வதைக்கப்பட்டபடியால் மிகவும் பயந்தவர்களாய், நான்கு பக்கங்களிலுஞ் சிதறியோடினர்கள். அவ்வாறு ஓடினவர்களை, வானரர்கள், அட்டகாசம் பண்ணிக்கொண்டும், மரங்களை யோங்கிக்கொண்டும் துரத்தினர்கள். மிகுந்திருந்த அரக்கர்கள், இராவணன் வதைக்கப்பட்டதையும், ஸ்ரீராமர் வெற்றியடைந்ததையும் பார்த்து, மனப்பிணிப்பு அற்றமையால் வெகு பரிதாபமாகக் கண்ணீர்பெருகுகின்ற முகங்களுடன் களிப்புக்கொண்ட வானரவீரர்கள் ஒருபக்கம் தம்மைப்பீடிக்க, பெரும் பயத்துடன், இலங்கையை நோக்கி ஓடினர்கள்.

வானரர்களின் மகிழ்ச்சி.

அதன்பிறகு, வெற்றியால் விளங்கி வெகு சந்தோஷமடைந்த வானரர்கள், ஸ்ரீராமருடைய வெற்றியையும் இராவணனுடைய வதையையும்பற்றிச் சொல்லிக்கொண்டு கொக்கரித்தார்கள்.

பிறகு, ஆகாயத்தில் வெகு அழகாகத் தேவதுந்துபி முழங்கிற்று ; அப்போது, திவ்யமான வாசனையுடன் மந்த

மாருதம் இனிதாக வீசிற்று; பிறரால் அடையமுடியாததும் மனமகிழச் செய்வதுமான மலர்மாரியும், ஆகாயத்திலிருந்து பூமியில் இராமருடைய இரதத்தின்மேற் பொழிந்தது. ஸ்ரீராமரது புகழுடன் கூடியதும் "வெகுநன்றுகச் செய்யப்பட்டது, வெகுநன்றுகச் செய்யப்பட்டது" என்று சொல்லி ஸ்ரீராமரைக் கொண்டாடியதுமாகிய மகாத்துமாக்களான தேவர்களின் வாக்கு, வானத்திற் கேட்டது. வெகு கொடியவனும் எல்லாவுலகங்களையும் நடுநடுங்கச்செய்தவனுமான இராவணன் வதைக்கப்பட்டதும், தேவர்களும் சாரணர்களும் அதிக சந்தோஷமடைந்தார்கள். ஸ்ரீராமர், இராவணனைக்கொன்று மகிழ்ந்தவராய், சுக்கிரீவன் அங்கதன் என்னும் இவ்விருவரையும் தமது மனோரதம் நிறைவேறியவர்களாகச் செய்தார். அதுமுதல், தேவர்கூட்டங்கள், சாந்தத்தையடைந்தன; திசைகள் தெளிவடைந்தன; ஆகாயம், நிர்மலமாய் விளங்கிற்று; பூமியும், பயத்தால் நடுக்கம் நீங்கிற்று; இளங்காற்று, சுகமாக வீசிற்று. சூரியபகவானும், ஒளியை ஒரேவிதமாகக் கொடுத்துக்கொண்டு பிரகாசிக்கலானன்.

தேவர்களின் கொண்டாட்டம்.

அப்பொழுது, சுக்கிரீவன் விபீஷணர் முதலான நண்பர்கள், இலட்சுமணருடன்கூட ஒன்றுசேர்ந்து, ஸ்ரீராமரது வெற்றிக்காகச் சந்தோஷமடைந்து, அப்போர்க்களத்தில் ஸ்ரீராமரிடம்வந்து நின்று அவரை முறைப்படி கொண்டாடலானார்கள். தமது பகைவனைக் கொன்று, தாம் மேற்கொண்ட நோன்பை நிறைவேற்றிய இரகுகுலத்து மன்னரை மகிழ்விக்கத் திருவவதரித்த மஹாபராக்கிரமசாலியாகிய அந்த இராமர், தமது நண்பர்களால் அப்போர்க்களத்திற் சூழப்பட்டு, தேவர்கூட்டங்களாற் சூழப்பட்ட தேவேந்திரன்போல விளங்கினர்.

நண்பர்கள் இராமரைக் கொண்டாடுதல்.

நூற்றுப்பன்னிரண்டாஞ் சருக்கம்:
விபீஷணர் புலம்பல்.

விபீஷணர், தமது தமையன் ஸ்ரீராமரால் வெல்லப் பட்டு உயிர்மாண்டு போர்க்களத்திற்கிடப்பதைப் பார்த்து, சோகம் வலிவிலே தம்மனத்தைக் கவர பின்வருமாறு புலம்பலானார்:—"வீரரே! வல்லமையிற் புகழ்பெற்றவரே! வித்தைகளை நன்முகக் கற்றறிந்தவரே! ராஜநீதிகளைச் செவ்வையாக ஆராய்ந்தறிந்தவரே! விலையுயர்ந்த சயனங்களிலே எப்பொழுதும் படுத்துறங்குபவரே! இப்பொழுது தாங்கள் கொல்லப்பட்டுச் செய்கையற்றுத் தோள்வலைகளிணைந்து நீண்டுள்ள கைகளைப் பரப்பிக்கொண்டு, சூரியனைப்போன்ற ஒளியுள்ள இரீடம் சிறிதுசாய, வெறுந்தரையில் ஏன் படுத்திருக்கிறீர்கள்? வீரரே! நான் முன்னமே சொன்னது, தங்கள்மனத்திற் சிறிதும் ஏறவில்லை; அது, இப்பொழுது விளைந்தது! காமத்தாலும், அறிவின்மையாலும், பிரகஸ்தன் இந்திரஜித்து அதிரதனை கும்பகர்ணன் அதிகாயன் நராந்தகன் என்னும் அரக்கவீரர்களோடு, தாங்களும் மிக்க செருக்கினல் நான் சொன்னதைக் கேளாமல் ஸ்வயமாகவே போனீர்கள்; அதன் பயன் இப்பொழுது வந்து விளைந்திட்டது. நல்ல நீதிகளின் கரையே உடைந்தது; தருமத்தினுருவமே யொழிந்தது; பலத்தின் பிடிப்பே முறிந்தது; புகழ்ச்சியின் பற்றுக்கோடே போயிற்று. ஆயுதங்களைக் கைப்பற்றியவர்களுக்குள் உத்தமவீரராகிய இவ்விராவணனார் பூமியில் விழுந்துவிடவே, சூரியபகவான் பூமியில் விழுந்துவிட்டான்; சந்திரன் இருளில் ஆழ்ந்தான்; அக்கினிதேவன் அவிந்தான்; உற்சாகசக்தியே செயலற்றது. அரக்கப்புலிபுழுதியில் துஞ்சுங்காலம் வந்த இப்பொழுது, பெரு வீரனையிழந்த இவ்வுலகத்தில் இனி என்ன மிகுந்திருக்கின்றது?

விபீஷணர் புலம்பல்.

தைரியத்தைத் தளிராகவும், பொறுமையாகத் தொழில் செய்தலை முதன்மலராகவும், தவத்தை வைரமாகவும், ஒளார்யத்தை வேராகவுங் கொண்டுநின்ற ராக்ஷஸராஜ ரென்றபெருமரம், போர்க்களத்தில் இராகவரென்னும்பிர சண்டமாருதத்தால் முறித்துத்தள்ளப்பட்டதே! பராக் கிரமத்தைத் தந்தமாகவும், பிதா பிதாமஹர்முதலிய வர்க் கங்களை முதுகெலும்பாகவும், கோபத்தை மேனியாக வும், அநுக்கிரகத்தைத் துதிக்கையாகவுங் கொண்டுவந்த இராவணனென்னும் மதயானை, இக்ஷ்வாகுவமிசத் துச் சிங்கத்தால் தேகத்திற் பீடிக்கப்பட்டுப் பூமியில்விழு ந்து இறந்ததே! பராக்கிரமம் உற்சாகம் என்ற இவைக ளைக் கொழுந்துவிட்டெரியும் ஜ்வாலையாகவும், அஸல்வீசும் மூச்சுக்காற்றைப் புகையாகவும், பலத்தை உஷ்ணமாக வுங் கொண்டு விளங்கிய இராவணனென்னும் அக்கினி, இராமரென்ற கரும்பூண்ட மேகத்தாற், போர்க்களத்தில் அவிக்கப்பட்டதே! பகைவர்களை வெல்ல வல்லதாய், எதிரிகளை யொழிப்பதில் மதயானைக்குச் சமமாய், அரக்க வீரர்களை வால் முசுப்புக் கொம்புகளாக வுடையதாய், சிற் றின்பவாசையைக் கண்காதுகளாக வுடையதான இரா வணனென்னுங் காளை, இராமரென்ற புலியாற் கொல் லப்பட்டதே!" என்று இவ்வாறு காரணங்களுடன் கூடிய நற்பொருள் நிரம்பிய பல சொற்களைச் சொல்லிக்கொண்டு துயரத்தில் மூழ்கி விபீஷணர் புலம்பினர்.

ஸ்ரீராமர், அதனைப் பார்த்து, பின்வருமாறு சொல்ல லானர்:— "இவர் ஒருதொழிலுஞ் செய்யாமற் போரில் மடியவில்லை; மிகக்கொடிய வல்லமை யையும் மிகவுயர்ந்த் பேருற்சாகத்தையுங் கொண்டுவிளங்கி, போரில், இவர், சத்துரு வுக்கு அஞ்சாமலே விழுந்தார். இவ்விதமாக க்ஷத்திரிய தருமத்தி லுறுதியாக நின்று போர்புரிந்து மடிந்தவர் களைப்பற்றித் துக்கப்படலாகாது; ஏனெனில், இவர்கள்,

இராமர்விபீஷணரைத் தேற்றுதல்.

மறுமையிலும் தங்கள் நன்மையை நாடியே போர்க்களத்திற் பின்வாங்காமல் நின்று மடிகின்றார்கள். எந்தத் தீரர், இந்திரனையும் இம்மூவுலகங்களையும் போரில் நடுநடுங்கச் செய்தாரோ, அவர், தமது காலத்தின் முடிவால் மாண்டால், அவரைப்பற்றித் துயரப்படவேண்டிய சமயமன்று இது. அன்றியும், யுத்தத்தில் வெற்றியென்பது எப்போதும் ஒருவன்பங்காக முன்பு எப்போதும் உண்டாகவில்லை. வீரன் சத்துருக்களைக் கொல்வது முண்டு; அவனே ஒருசமயத்திற் சத்துருக்களாற் கொல்லப்படுவது முண்டு. இதுதான், க்ஷத்திரியனுக்குத் தக்ககதியாகப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. போரிற் கொல்லப்பட்ட சூரனைப்பற்றித் துயரமடையலாகாதென்பது, உறுதியாக ஏற்பட்டுள்ள விஷயம். நீங்கள், இவ்வாறான உறுதியை அறிந்து, மனத்தைத் தைரியப்படுத்திக் கொண்டு, இக்குழப்பத்தைவிட்டு, இனிச் செய்யவேண்டிய காரியங்களைப்பற்றி ஆலோசியுங்கள்" என்றார்.

பராக்கிரமத்தாற் பகைவென்ற ஸ்ரீராமர் அவ்வாறு சொன்னதும், சோகத்தில் மூழ்கியிருந்தவிபீஷணர், தமையனுடைய நன்மையைநாடினவராய், இராமபிரானை நோக்கிப் பின்வருமாறு மறுமொழி சொல்லலுற்றார்:—"தேவர்கள்யாவருடனுங் கூடி இந்திரபகவான் எதிர்த்துநின்ற பொழுதும் எவரொருவர் போரில் தோல்வியடையவில்லையோ, அப்படிப்பட்ட இவர், கரையினுல் கடல் அடங்கிவிழுவதுபோலத் தங்களைப் போரில் எதிர்த்து மடிந்து விழுந்தார். இவர், பலவகைத்தானங்கள் செய்திருக்கின்றார்; பெரியவர்களுக்கும் தெய்வங்களுக்கும் பூஜைசெய்திருக்கின்றார்; பல வகைச் சுகங்களையும் நன்றாக அனுபவித்திருக்கின்றார்; தம்மைச் சேர்ந்தவர்களை வரையும் நன்றாக ஆதரித்திருக்கின்றார். இவர், நண்பர்களுக்குப்பொருளைக்கணக்கில்லாமற்கொடுத்

இராமபிரானிடத்தில், இராவணனுக்கு அந்திமக்கிரியை செய்ய விபீஷணர் அநுமதி வேண்டுதல்.

திருக்கின்றார். பகைவர்களிடத்திற் பகைமையைத் தமது வல்லமையாற் பயனுள்ளதாக்கினர். இவர் ஆஹிதாக்நி* ; பெரிய தபஸ்வீ ; வேதங்களின் கரையைக் கண்டறிந்தவர். தமது நித்தியக்கடன்களைச் சரியாக நடத்தியவர். ஆகையால், இவருடைய பிரேதத்துக்கு, இப்பொழுது நடத்த வேண்டிய சடங்குகளைத் தங்களுடைய அநுக்கிரகத்தைப் பெற்று நடத்தக் கருதுகின்றேன் " என்றார்.

மகாத்துமாவாகிய அந்த ஸ்ரீராமர், சிறிதும் எளிமைப்படாத பராக்கிரமமுள்ளவரான விபீஷணரது மிகவும் பரிதாபமான சொல்லால் நன்கு அறிவிக்கப்பட்டு

இராமர் அநுமதி தருதல்.

"பகையென்பது, சத்துரு மடிகின்றவரையில்தான். நமது பயனை கைகூடிவிட்டது ; ஆகையால், இவருடைய உத்தரகிரியையை உடனே செய்துமுடிக்க. இவர் தங்களுக்கு எப்படியோ, அப்படியே எனக்கும் உடன்பிறப்பே யாவர் " என்று சொல்லி, இராவணன் ஸ்வர்க்கஞ் செல்வதற்கு ஹிதமான அந்திமகிரியைகளைச் செய்யுமாறு விபீஷணருக்கு விடை கொடுத்தார்.

நூற்றுப்பதின்மூன்றுஞ் சருக்கம் : அரக்கியரின் புலம்பல்.

மகாத்துமாவாகிய ஸ்ரீராமரால் இராவணன் கொல்லப்பட்ட சமாசாரத்தைக் கேட்டதும், அந்தப்புரத்திலுள்ள அரக்கியர்கள், சோகத்தால் வாடியவர்களாய், பலபெயர்கள் பலவிதமாகத் தடுத்துங் கேளாமல் மண்ணில்விழுந்து புரண்டுகொண்டும், கூந்தலை விரித்துக்கொண்டும், கன்று

* ஆஹிதாக்நி சாஸ்திரப்படியே அக்கினியை வளர்த்துத் தினந் தோறும் ஆராதித்து வந்தவர்.

களைச் சாகக்கொடுத்த பசுக்கள் கதறுவதுபோலக் கதறிக் கொண்டும், அந்தப்புரத்தைவிட்டு வெளிப் புறப்பட்டார்கள். அரக்கர்களுடன் வடக்குக்கோட்டைவாயில்வழியாகவெளிக்கிளம்பி, பயங்கரமான அப்போர்க்களத்திற் புகுந்து, இறந்துபோன தங்கள்கணவனைத் தேடுபவர்களாய், அவர்கள், "ராஜகுமாரா!" என்றும், "ஹா!நாதா!!" என்றும் சொல்லிக் கொண்டு, தலையற்ற முண்டங்கள் நிரம்பி இரத்தச்சேறு மண்டியிருந்த அப்போர்க்களத்தில் நான்குபக்கங்களிலும் தமது கணவனாகிய இராவணனைத் தேடலானார்கள். அவ்வரக்கியர், கணவனிறந்த சோகம் மேலிட்டவர்களாய், கண்களில் நீர்தும்ப, தலைமையான மதயானையை பிழந்த யானைப் பேடுகள் வீரிடுவனபோலப் புலம்பலானார்கள். மிக்க வல்லமையமைந்து பெரும்புகழுடன் விளங்கிய இராவணன் பருத்தமேனியுடன் மேலமலைபோலப் பூமியில்மாண்டு கிடந்ததை, அவர்கள், கண்டார்கள். அப்போர்க்களத்தின் புழுதியில் தங்கள் கணவன் விழுந்து கிடப்பதை, அவர்கள், திடீரென்று பார்த்து, அறுப்புண்ட கொடிகள் போல அவனுடம்பின்மேற் சாய்ந்து விழுந்தார்கள். ஒருத்தி அவனிடத் திலுள்ள மிக்க மதிப்பால் அவனைக் கட்டித்தழுவியும், ஒருத்தி அவனதுகால்களைத் தழுவிக்கொண்டும், ஒருத்தி அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டும் புலம்பினார்கள். ஒருத்தி, கைகளைத்தூக்கிவைத்துக் கொண்டு பூமியிற் புரள்பவளானாள்; ஒருத்தி, இறந்த அவனது முகத்தைப் பார்த்து மூர்ச்சித்து விழுந்தாள்; ஒருத்தி, அவனது தலையைத் தன்மடியில் வைத்துக் கொண்டு, பனித்துளிகளால் தாமரைமலரை நனைப்பது போல, முகத்தைக் கண்ணீர்த்துளிகளால் நனைத்தவண்ணம் அம்முகத்தைப் பார்த்துக்கொண்டே புலம்பினாள்.

அந்தப் புரத்து அரக்கியர்கள் யுத்தபூமியில் வந்து இராவணனைத் தேடுதல்.

அந்தப்புரத்து அரக்கியர்கள் இராவணனைக் கண்டுபுலம்புதல்.

பூமியில் மாண்டுவிழுந்துகிடந்த தங்கள்கணவனை இராவணனைப் பார்த்து, அவ்வரக்கியர், இவ்வண்ணமாக வெகுதுக்கப்பட்டுக்கொண்டு சோகத்தாற் கதறி, மீண்டும் பலவகையாக வாய்விட்டுப் புலம்பலானார்கள்:— " எவரைக் கண்டு இந்திரன் நடுங்கினனே, எவரைநினைத்து யமன் அஞ்சினனே, எவராற் குபேரன் தனது புஷ்பகவிமானத்தை யிழந்தானே, எவராற், கந்தர்வர்கள் மஹர்ஷிகள் மகாத்துமாக்களான தேவர்கள் ஆகிய எல்லாருக்கும் பெரும்பயம் எப்பொழுதும் விளைந்துகொண்டே யிருந்ததோ, அவர், இப்பொழுது போர்க்களத்திலே மடிந்து விழுந்துகிடக்கின்றார் ! தேவர்களிடமிருந்தாவது, அசுரர்களிடமிருந்தாவது, பன்னகர்களிடமிருந்தாவது, எவர், பயமென்பதை அறியாரோ, அவருக்கு இப்போது மனிதனிடமிருந்து இவ்வாறு பயம் விளைந்ததே !! எவர் தேவர்களாற் கொல்லமுடியாதவரோ, அவ்வாறே தானவர்களாலும் அரக்கர்களாலும் கொல்லமுடியாதவரோ, அவர், இப்போது பதாதியான ஒருமனிதனற் கொல்லப்பட்டு இப்போர்க்களத்திற் படுத்துக்கொண்டிருக்கின்றார் ! எவர் தேவர்களாலேனும் யக்ஷர்களாலேனும் அசுரர்களாலேனும் கொல்லமுடியாதவரோ, அவர், வலிமையில்லாத புருஷன்போல மனிதனல் மரணத்தையடைந்தாரே ! " என்று இவ்வண்ணம் பலவிதமாகச்சொல்லி, அவ்விராவணனது ஸ்திரீகள் புலம்பினார்கள். துயரத்தாற் பீடிக்கப்பட்டவர்களாய், அவ்வரக்கியர்கள், மீண்டும் அடிக்கடி புலம்பலுற்றார்கள்:— " தாங்கள் எப்பொழுதும் நன்மையையேபோதிக்கின்ற நண்பர்களுடைய பேச்சுக்களைக் கேளாமல், மரணத்துக்காகவேசீதையைத் தூக்கிவந்து, எல்லாவரக்கர்களையும் வதைத்தீர்கள். நாங்களும், அவ்வரக்கர்களும், தங்களுயிரும், எல்லாரும், தங்களாலேயே நாசமானோம். தங்களிடம் அன்புள்ள தம்பியாகிய விபீஷணர், தங்களது நன்மையைப்பற்றி எவ்வளவோசொல்லியும்,

தங்களுடைய நாசத்தை நாடியே, தாங்கள், அறிவில்லாமல் அவரைக் கடிந்தீர்கள். அப்பொழுதே, தாங்கள், சீதையை இராமரிடம் திருப்பிக்கொடுத்திருப்பீர்களேயானால், நமது குலத்தைவேருடன் பிடுங்கிவிடுமாறு, பயங்கரமான இந்தத் துயரம் நமக்கு உண்டாயிருக்கமாட்டாது ; தங்களது தம்பியாரும், தமது மனோரதம் நிறைவேறப்பெற்றிருப்பர் ; இராமரும், தங்களதுநண்பர்களின் வர்க்கத்திற் சேர்ந்திருப்பர் ; நாங்களும், கைம்பெண்களாகாமலிருப்போம்; நமதுபகைவர்களுடைய [தேவர்களுடைய] கோரிக்கையும் ஈடேறுமலிருக்கும். கருணையற்ற தாங்கள், சீதாதேவியை வலியத்தூக்கிவந்து அரக்கர்களையும் எங்களையும் தங்களையும் ஒருங்கே அழித்துவிட்டீர்கள். ராக்ஷஸசிரேஷ்டரே ! இவைகளெல்லாம், தாங்கள் வேண்டுமென்று செய்துகொண்டவைகளல்ல ; எல்லாவற்றையும் தெய்வந்தான் நடத்துகின்றது ; தெய்வத்தினற் கெடுதியடைந்த வஸ்துவே, பிறராற் கெடுக்கப்படுவதுபோலத் தோன்றுகின்றது. இப்பெரும்போரில் வானரர்களுடையமரணமும் அரக்கர்களுடைய மரணமும் தங்களுடைய மரணமும் எல்லாமும், தெய்வச்செயலால்தான் உண்டாயின. பலத்தைவிஞ்சுகின்ற தெய்வகதியை, செல்வத்தாலேனும், இஷ்டத்தாலேனும், வல்லமையாலேனும், கட்டளையாலேனும், இவ்வுலகத்தில் ஒருபொழுதும் விலக்கமுடியாது" என்று இவ்வண்ணம்சொல்லி, அவ்வரக்கமடந்தையர்கள், கண்ணீரை வடித்துக்கொண்டு, அன்றிற்பேடுகள்போலத் துக்கத்தால் வீரிட்டுக் கதறிப் புலம்பினர்கள்.

நூற்றுப்பதினன்காஞ் சருக்கம்:
மண்டோதரியின் புலம்பலும்,
இராவணனது உத்தரகிரியையும்.

அவ்வாறு அரக்கியர் புலம்பிக்கொண்டிருந்த பொழுது, இராவணனுடைய பட்டமஹிஷியாகிய மண்டோதரி யென்பவள், வெகு பரிதாபமான தோற்றத்துடன் அவ்விடம்வந்து தனதுகணவனைக் கண்டாள்.

இராவணனை மண்டோதரி காணுதல்.

ஒப்பற்ற வல்லமை படைத்த ஸ்ரீராமராற், பத்துத் தலைகளைப்பெற்றதனதுகணவன் கொல்லப்பட்டது கண்டு, அம்மண்டோதரி வெகுதுக்கத்துடன் புலம்பலானாள்:—

மண்டோதரியின் புலம்புதல்.

"பெரும்பாக்கியம் பெற்றவரே! குபேரனுடைய சகோதரரே! தாங்கள் கோபங்கொண்டால், தங்களுக்குமுன்பாகநிற்கவும் தேவேந்திரனும் நடுங்குவானே; மஹர்ஷிகளும், அந்தணர்களும், புகழ்பெற்ற கந்தர்வர்களும், பயப்படுவார்களே! தங்களிடத்தில் அச்சத்தினாலே, சாரணர்களும் திசையெல்லையடைந்தார்களே! அப்படிப்பட்ட தாங்கள், மனிதராகிய இராமராற் போரில்வெல்லப்பட்டும், அரக்கர்தலைவரே! எவ்வாறு வெட்கப்படாமலிருக்கின்றீர்கள்? பாக்கியத்தினாலும் வல்லமையினாலும் மூவுலகங்களிலும்பெயர் பெற்றுப் பிறராற் பொறுக்கவொண்ணாத பராக்கிரமம் படைத்த தாங்கள், காட்டிற் சஞ்சரிக்கும் இராமரென்ற மனிதரால் எவ்வண்ணம் வதைக்கப்பட்டீர்கள்! மனிதர்கள் வரக்கூடாத இத்தேசத்தில், காமரூபிகளாய்ச் சஞ்சரிக்கும் தாங்கள் ஸ்ரீராமரால் நாசம்பண்ணப்பட்டீர்களென்றால், இது நம்பக்கூடாத விஷயமாக விருக்கின்றது. தாங்கள் ஆயுதங்களெல்லாவற்றோடுங் கூடிப் போருக்குச் சென்று போர்க்களத்திற் கொல்லப்பட்டதை ஸ்ரீராமர் செய்தசெயலென்று நான் நம்பவில்லை. ஜநஸ்தாநத்திலே பலஅரக்கர்களுடன் கூடியிருந்த தங்கள் தம்பியாகிய கர

ரை எப்பொழுது ஸ்ரீராமர் கொன்றாரோ, அப்பொழுதே, அவரைச் சாதாரணமனிதரல்லரென்று நான் எண்ணிவிட்டேன். எப்போது, தேவர்களாலும் நுழைய முடியாத இலங்கைக்குள் அனுமான் தனது பலத்தின்மகிமையாற் புகுந்தானே, அப்பொழுதே, நமக்கு நாசம் விளைந்ததென்று நான் அஞ்சினேன். எப்பொழுது, பெருங் கடலில் பயங்கரமான வானரர்கள் அணையைக் கட்டினார்களோ, அப்பொழுதே, நான் இராமரை அமானுஷராக எண்ணினேன். இனி, தங்கள்விநாசத்துக்காகவே ஒப்பற்ற அழகமைந்த சீதாதேவியென்ற மாயையைச் செய்துவைத்துக்கொண்டு, யமனே ராமரூபங்கொண்டு வந்திருந்தார். மஹாபலவானே! தேவேந்திரன் ஒருகால் தங்களைக் கொன்றானென்போமென்றால், அத்தேவேந்திரனுக்குப் போர்முகத்தில் தங்களைக் கண்ணெடுத்துப் பார்க்கத்தான் வல்லமை எது? மஹாயோகியும், எப்போதும் அழியாமலிருப்பவரும், ஆதியும் நடுவும் அந்தமும் அற்றவரும், இந்திரன் முதலான தேவதைகளினும் மேம்பட்ட பிரமன் முதலிய தேவர்களைப்பார்க்கிலும்சிறந்தவரும், வைகுண்டவாஸியும், சங்கம் சக்கரம் கதை இவைகளைத் தரித்தவரும், போஷகரும், அழகைத் தருகின்ற வக்ஷஸ்மென்னும் மச்சத்தை இடத்திருமார்பி லுடையவரும், எப்போதும் விட்டுப்பிரியாத திருமகளை வலத்திருமார்பி லுடையவரும், ஒருபொழுதும் வெல்லக்கூடாதவரும், விகாரமற்றவரும், உறுதியாய்நிற்பவரும், எல்லாவுலகங்கட்குந்தலைவரும், மஹாபராக்கிரமமுள்ளவரும், சத்தியமானபராக்கிரமத்தையுடையவருமாகிய ஸாக்ஷாத் விஷ்ணுபரமாத்துமா, எல்லாவுலகங்களுக்கும் நன்மைசெய்யும்பொருட்டு மானுடவுருவங்கொண்டு, வானரவடிவங்கொண்ட தேவர்களாற் சூழப்பட்டு, இவ்விடம் வந்து எல்லாவரக்கக்கூட்டங்களுடனும் தங்களைக் கொன்றார். தாங்கள், முற்காலத்தில் ஐம்பொறிகளையும் வென்று இம்மூவுலகங்களையும் வென்றீர்கள்;

ஐம்பொறிகளும், அக்கொடுமையைத் தங்களது மனத்தில் நினைத்துக்கொண்டிருந்தனபோல, இப்பொழுது அவை களே உங்களை வெற்றிகொண்டன. இராகவருடன் நமக் குப் பகைவேண்டா மென்று நான் என்ன சொல்லியும் கேளாததன் பயன் இப்பொழுது வந்து விளைந்தது. அரக் கர்தலைவரே! தங்களுடைய சம்பத்தும் தேகமும் பந்துக் களும் நாசமடையுமாறு, தாங்கள் திடீரென்று சீதாதேவி யின்மேற் காதல்கொண்டீர்கள். கொடிய புத்திகொண்ட வரே! அருந்ததிக்கும் ரோகிணிக்கும் மேலானகுணமுள்ள உத்தமியாய்க் கௌரவிக்கத் தக்கவளான சீதையை வலியுக்கவர்ந்தது, தங்களுக்குத் தகுதியல்லவே! பிரபுவே! பூமிதேவியினும் மிக்க பொறுமையுள்ளவளும், சகலசம் பத்துக்கும் இருப்பிடமானவளும், கணவன்மேல் மிக்க அன்புகொண்ட பதிவிரதையும், எல்லாப்படியாலும் குற்ற மற்ற உறுப்புக்களமைந்தவளுமான அச்சீதை காட்டில் தனித்திருக்குஞ் சமயம் பார்த்து, தங்களை அவள் விரும் பாதிருக்கையிலே, வஞ்சனையாக அவளைக் கவர்ந்துவந்து, தங்கள் சொத்தாகிய என்னைப் பழிப்பிற்கு உள்ளாக்கின வரே! தங்களுடைய மனோரதம் நிறைவேறப்பெறுமலே அந்தப் பதிவிரதையின் தவத்தினால் தாங்கள் எரிந்து போனீர்கள். அப்பிராட்டியைக் கவர்ந்துவந்தபோதே தாங்கள் கொலுத்தப்படாமைக்குக் காரணம், இந்திரன் அக்கினி முதலான எல்லாத்தேவர்களும் தங்களைக்கண்டு அஞ்சியிருந்ததேயாம். பாவகாரியங்களைச் செய்பவன், காலம்வருகையில், அவற்றின் கொடும்பயனை அவசியம் அனுபவிப்பான்; இதிற் சிறிதும் ஐயமேயில்லை. நன்மை செய்தவன், நன்மையையடைவான்; பாவஞ் செய்தவன், பாவத்தின்பயனை அனுபவிப்பான். விபீஷணர், இப்பொ ழுது சுகத்தையடைந்தார்; தாங்கள், இவ்வண்ணமாகப் பாவத்தின்பயனை யடைந்தீர்கள். சீதையைவிட அழகான ரூபமுடைய மடந்தையர் தங்களுக்கு இருக்கின்றார்கள்;

ஆனல், மன்மதனுக்குப் பரவசப்பட்ட தாங்கள், மோகத் தினல் அவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளவில்லே. குலத் தினலாவது, உருவத்தினலாவது, வித்தையினலாவது, சீதா தேவி எனக்கு மேலானவளு மல்லள்; எனக்குச் சமான மானவளுமல்லள்; ஆனல், தங்களுக்கோ மோகத்தினல் இது தெரியவில்லே. எல்லாப் பிராணிகளுக்கும் மரணமென் பது ஒருகாரணத்துடன்தான் வருகின்றது; அப்படியே, தங்களுக்கும், இப்பொழுது, மரணம், சீதாதேவியைக் கவ ர்ந்துவந்த காரணத்தால் வந்தது. சீதாதேவியின் காரணத் தால்வந்த ம்ருத்யுவைத் தாங்கள் வெகு தூரத்தினின்று கொண்டுவந்தீர்கள். சீதாதேவி, துயரம்நீங்கி, ஸ்ரீராமரு டன் சுகமாக வாழப்போகின்ருள். சொற்ப புண்ணியமுள் ளவளான நானே, கொடியசோகசாகரத்தில் விழுந்திட்டேன். கைலாசமலேயிலும் மந்தரமலேயிலும் மேருமலேயிலும் சைத் திரரதமென்னும்பூந்தோட்டத்திலும் மற்றுமுள்ளதேவர் களின் பூந்தோட்டங்களிலும் தங்களுடன் கூடவே மகிழ்ந் திருந்தும், தக்கவிமானத்திலேறி ஒப்பற்ற செல்வத்துடன் பலவகைத் தேசங்களேயுங் காண்பவளாய்ச் சஞ்சரித்தும், விசித்திரமான ஆடைகளேயும் மாலேகளேயு மணிந்துமிருந்த நான், வீரரே! தாங்கள் வதைக்கப்பட்டதனல், இப்பொ ழுது, அவ்வகைச்சுகங்களெல்லாவற்றையும் இழந்துவிட் டேன். அவ்வளவு சுகங்களே அனுபவித்த நானே, வேரு ருத்திபோல ஆயினேன்; இவ்வாறு நிலேயற்ற அரசர்களு டைய பாக்கியம், பழிக்கத்தக்கது. அரசரே! ஹா!! இனிய புருவங்களும் வழுவழுப்பான மேனியும் உயர்ந்த நாசிகையு முடையதும், காந்தியினுற் சந்திரனேயும் சௌந்தரியத்தால் தாம்ரையையும் தேஜஸினுற் சூரியனேயும் போன்றதும், சிகரம்போன்ற கிரீடத்தினல் விளங்குவதுமான எந்த முகம், குண்டலங்களணிந்து மதத்தால் கண்கள்வட்டமிடப் பான்பூமிகளிற் பலவகைமாலேகளே யணிந்து வெகு சமத் காரமாகப் புன்சிரிப்புடன் பல கதைகளேச் சந்தோஷமாகச்

சொல்லிக்கொண்டு இனிதாகத் தோன்றிற்றே, அந்த முகமே, இப்பொழுது ஸ்ரீராமருடைய பாணங்களாற் பிளக்கப்பட்டு, இரத்தம்பெருக, தசையும்நிணமும்வழிய, தேர்ப்புழுதிமண்டி, இவ்வளவு அழகற்றதாகத் தோன்றுகின்றதே! என்னைக் கைம்பெண்ணாக்கி, உமக்கும் மரணம் வந்ததே! ஹா!! அறிவற்ற நான், இப்படி எனக்கு வருமென்று ஒருபொழுதும் எண்ணவில்லையே! "எனது தந்தையோ, தானவர்களுக்கெல்லாம் மன்னவரான மயனர். என்கணவரோ, அரக்கர்களுக்கெல்லாம் மன்னவரான இராவணனர்; என்குமாரனே, இந்திரனையே ஜயித்தவன்" என்று இவ்வண்ணமல்லவோ நான் மிகவுஞ் செருக்கடைந்திருந்தேன். தங்கள்சத்துருக்களையடக்குவதிலும், பலத்திலும், வல்லமையிலும் புகழ்பெற்ற சூரர்க ளிருத்தலால், நமக்கு ஓரிடத்திலிருந்தும் பயமேயுண்டாகாதென்றல்லவோ நான் நிச்சயமாக நம்பியிருந்தேன்? அரக்கமன்னவரே! இவ்வளவு வல்லமையுள்ளவர்களான உங்களுக்கு, ஒருபொழுதும் எண்ணுதவண்ணம், மனிதர்களிடமிருந்து, எவ்வாறு பயம் தோன்றிற்று? நீலமணிக்கொப்பான நிறமமைந்து, உயர்ந்தமலைக்கொப்பாய், கேயூரம் வயிரமயமான அங்கதம்முத்துமாலை இவைகளையணிந்து விளங்கி, அந்தப்புரத்தில் அழகாகியும் போர்க்களத்தில் ஜ்வலித்துக்கொண்டும், மின்னலால் வானம்விளங்குவதுபோல ஆபரணங்களினால் விளங்கிய தங்களது சரீரம், ரஸ்ரீராமருடைய கூரான பல பாணங்களினாற் பொத்தப்பட்டு, இடைவிடாது பாய்ந்த அம்புகளினால் முள்ளம்பன்றியின் முட்கள்போன்றுதெரிவதற்கும் கூடாததாய், தழுவிக்கொள்ளுதற்கும் கூடாமலிருக்கின்றதே! அரசரே! நன்றாக மார்பைநோக்கிவிடப்பட்ட பாணங்களால் எலும்புகளும் மூட்டுவாய்களும் பிளப்புண்டு, காரிரத்தம் குழம்பியல்லவோ தங்கள்தேகம் இப்போர்க்களத்தில் விழுந்துகிடக்கின்றது! வச்சிராயுதத்தாற் பிளப்புண்ட மலைபோல, தாங்கள், பிளப்புண்டு கிடக்கின்

நீர்களே! ஹா! இராமரால் இராவணனுர் கொல்லப்பட்டா ரென்பது, உண்மையில் கனவாகவே இருக்கும்; தாங்கள் எவ்வாறு இராமராற்கொல்லப்பட்டிருப்பீர்கள்? தாங்கள் யமனையுங்கொல்லும் யமனுயிற்றே! கடைசியாக, யமனிடம் எவ்வாறு சிக்கிக்கொண்டீர்கள்? தாங்கள் இம்மூவுலகங் களுடைய சம்பத்தையும் அனுபவித்தவர்களல்லவோ! இம்மூவுலகங்களையும் பெருநடுக்கம் நடுங்கச் செய்தவர்க ளாயிற்றே! உலகபாலகர்களை ஜயித்தவர்களாயிற்றே! சங்கரரையே தள்ளினவர்களாயிற்றே! செருக்கடைந்த வர்களை அடக்கி அவர்களிடம் பராக்கிரமத்தைக்காட்டின வர்களாயிற்றே! இவ்வுலகத்தையே கலக்கினவர்களாயிற் றே! தாங்கள் அட்டகாசத்தால் எல்லாப்பிராணிகளையும் நடுநடுங்கச் செய்தவர்களாயிற்றே! வல்லமையின்மகிமை யாற் பகைவர்களின்முன்பாகக் கர்வமான சொற்களைச் சொன்னவர்களாயிற்றே! கொடுஞ்செயலை மேற்கொண்ட வர்களான போர்வீரர்கள் தங்களைச்சேர்ந்தவர்கள் தங்க ளினத்தார்கள் என்ற இவர்களையெல்லாம் காப்பாற்று பவர்களாயிற்றே! பயங்கரமான வல்லமையமைந்தவர்க ளாயிற்றே! தானவர்கள் யக்ஷர்கள் இவர்களெல்லாரை யும்ஆயிரந்தடவை வென்றவர்களாயிற்றே! நிவாதகவசர்க ளென்ற அசுரர்களுடன் நட்புச் செய்துகொண்டவர்களா யிற்றே! எத்தனையோ யாகங்களை நாசம்பண்ணினவர்க ளாயிற்றே! இதுவரையில் நமது ராக்ஷஸபந்துக்களைப்பா துகாத்தவர்களாயிற்றே! தர்மத்தின் வரும்பை யழித்தவர்க ளாயிற்றே! போரில் மாயையுண்டாக்குபவர்களாயிற்றே! ஆங்காங்கிருந்து, தேவகன்னிகைகள் அசுரகன்னிகைகள் மானிடகன்னிகைகள் என்ற இவர்களையெல்லாம் கவர்ந்து கொண்டுவந்தவர்களாயிற்றே!பகைவர்களின்மனைவியர்க்கு எப்பொழுதும் துக்கத்தை விளைப்பவர்களாயிற்றே! இனத் தாரை எப்பொழுதும் பாதுகாப்பவர்களாயிற்றே! இலங் கைத்தீவை இரட்சிப்பவர்களாயிற்றே! எவ்வளவோ பயங்

கரமான செயல்களைச் செய்தவர்களாயிற்றே! எங்களைப் போன்ற பெண்டிகளுக்குப் பலவகைச் சுகங்களையு மளித்த வர்களாயிற்றே! எல்லாத்தேர்வீரர்க்குள்ளும் உத்தம ராயிற்றே தாங்கள்! இவ்வளவு வல்லமையமைந்த என் கணவனுர் ஸ்ரீராமராற் கொல்லப்பட்டதைப் பார்த்த பிறகும், நான் தைரியமாக இருக்கின்றேனே! இனிமே லும் நான் எனது தேகத்தை வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா? ஐயோ! என் இதயம் மிகக் கடினமானது. அர க்கமன்னவரே! விலையுயர்ந்த சயனங்களில் இதுவரையில் தூங்கிவிட்டு, இப்பொழுது புழுதிபடிய என் இப்பூமியிற் படித்தீர்கள்? எனது குமாரனுகிய இந்திரஜித்து இலட்சு மணராற் கொல்லப்பட்டவுடனே, நான், உயிரையிழந்தவ ளானேன். இன்று, தங்கள்நாசத்தால், நான், சித்திரவதை யடைந்தேன். என்னுடைய உறவினர்களில் எத்தனை யோ பேர்கள் இறந்தும், நான் இதுவரையில் அதிகமாகத் துக்கப்பட்டவளல்லள்; எனது கணவராகிய தாங்கள் இறந்துவிட்டபடியால், நான், என்றென்றைக்கும் துக்கப் படவேண்டியவளாய்விட்டேன். எனது எல்லாவிதச் சுகங் களும் இன்றோடு தொலைந்தன. எல்லாராலும் எளிதில் நடக்கமுடியாத பெருவழியில், தாங்கள், சென்றுவிட்டீர் கள்; அதிகமாகத் துக்கப்பட்டுக்கொண்டிருக்கும் என்னை, யும் அவ்விடம் அழைத்துச் செல்லுங்கள். தங்களையின்றி நான் உயிருட னிருக்கமாட்டேன். வெகு பரிதாபமான நிலைமையிலிருக்கும் என்னை, இவ்விடம் விட்டிட்டுத் தாங் கள்மட்டும் ஏன் போகக் கருதுகின்றீர்கள்? அழுது அழுது சோர்ந்திருக்கும் என்னுடன் ஏன் பேசுவதில்லை? பிரபு வே! நான் நம்மூரைவிட்டுப் புறப்பட்டுக் காலால் நடந்து முக்காடின்றி முகத்தைக் காட்டிக்கொண்டு இவ்விடம் வந்ததற்காக என்மேற் கோபமா என்ன? மனைவியரின் மேல் மிக்க அன்புகொண்டவரே! தங்களுடைய அன் பான மனைவிமார்களைப் பாருங்கள்; அவர்களெல்லா

ரும் நாணத்தை விட்டு முக்காடின்றி இங்கு வந்திருக்கின் றீர்களே ; அதற்காக, அவர்களைத் தாங்கள் ஏன் கோபித் துக்கொள்ளவில்லை? தங்களுக்கு இன்பத்தை விளைப்ப தில் துணையான இந்த ஜநம், கணவனையிழந்து மிகவும் புலம்புகின்றதே! இதை ஏன் சாந்தப்படுத்தக்கூடாது? என்னிடம் ஏன் சந்தோஷமான வார்த்தைகள் சொல்லக் கூடாது? அரசரே! எத்தனையோ குலப்பெண்களைத் தாங்கள் கைம்பெண்டுகளாகப் பண்ணிவிட்டீர்களே! பதி விரதைகளும் தருமத்தின்வழியில் நடப்பவர்களும் தங் களது பெரியவர்களைப் பூஜிப்பதில் வழுவாமலிருப்பவர் களுமான அவர்களெல்லாரும், வெகு துக்கத்துடன் தங் களை ஒருகால் சபித்தகாரணத்தினால், தாங்கள், இவ்வாறு சத்துருவினிடஞ் சிக்கிக்கொண்டீர்களோ? தாங்கள், பல தடவைகளில் பல உத்தமிகளை அநியாயமாகக் கொண்டு வந்தீர்கள்; அவர்களுடைய சாபந்தான் இவ்வண்ணம் முடிந்ததோ! 'பதிவிரதைகள் வடிக்குங் கண்ணீர், வீண் கப் பூமியில் விழுகின்றதில்லை' என்று உலகத்தார் சொல் லுஞ் சொல், பெரும்பாலும் தங்கள்விஷயத்தில் உண்மை யாகவே முடிந்தது. அரசரே! வல்லமையால் இம்மூவுல கங்களையும் வென்ற தங்களுக்கு, பெண்டுகளை வஞ்சனை யாகத் தூக்கிக்கொண்டு வருவ தென்னும் இவ்வற்ப புத்தி, எவ்வாறு உண்டாயிற்று? ஒருமானைத் தொடருங் காரணத்தால் இராமனை ஆச்சிரமத்தைவிட்டு ஓட்டி, இரா மனுடைய மனைவியைத் தாங்கள் எப்பொழுது தூக்கிவந் தீர்களோ, அப்பொழுதே, தாங்கள் பயந்தவர்களென்று விளங்கிவிட்டது. இதுவரையில் போரிலே தாங்கள் பயந்த தை நான் கேட்டதேயில்லை. அப்படியிருக்க, கள்ளத்தன் மையாற் சீதையைக் கவர்ந்தது, தங்களுடைய நாசத்தை வெளிக்காட்டிற்று. தாங்கள் இவ்விடம் சீதாதேவியைக் கொண்டுவந்ததைப் பார்த்து, திரிகாலஞானமுடையவரும் எல்லா நியாயங்களையும் ஆராய்ந்தறிந்தவரும் உண்மை

சொல்பவருமான் விபீஷணர், பெருமூச்சுவிட்டுத் துக்கப் பட்டு, 'ஐயோ! இச்செயல் எல்லா வரக்கர்களுக்கும் நாசத் தை விளைக்குமே!' என்று சொன்னரே; அவருடைய சொல் இப்பொழுது பலித்தது. தங்களுடைய காமத்தினு லும், கோபத்தினுலும் இவ்வளவு பெயர்களையும் நாசம்பண் ணினீர்களே! தாங்கள் செய்த ஒரு தீவினையால், நமது பெரிய அரக்கக்குலம் வேருடன் ஒழிந்ததே! இவ்வரக்கக் குலத்துக்கேயஜமானனில்லாதவண்ணம், தாங்கள் செய்து முடித்தீர்களே! பலத்திலும் வல்லமையிலும் புகழ்பெற்ற வரே! நான் இவ்வாறு தங்களைப்பற்றித் துக்கப்படுவது நியாயமன்று; நான், பெண்பாலாகையால், என் இயற்கைப் படி இவ்வாறு பரிதாபமாகப் புலம்புகின்றேன். தாங்கள் செய்த நல்வினைகளையும் தீவினைகளையும் தங்களுடன்கூட எடுத்துக்கொண்டு தாங்கள் பரலோகம் போய்விட்டீர்கள் தங்களை விட்டுப்பிரிந்த என்னைப்பற்றி, நான், இப்பொழுது துக்கப்படுகின்றேன். தங்கள் நன்மையை நாடிய நண்பர் கள் சொன்ன சொற்களையும், தாங்கள் கேட்காமற் போ னீர்கள்; தங்கள் சகோதரர்களெல்லாரும் சொன்ன நற் போதனைகளை நீங்கள் அவமதித்தீர்கள். பலவிதகாரணங் களுடன் தங்களுடைய க்ஷேமத்தை நாடி எடுத்துக்காட்டி வெகு நயமாக விபீஷணர் சொன்ன சொற்கள் ஒன்றும், காரணத்தை ஆலோசியாமையால், தங்கள் காதில் ஏற வில்லை மாரீசன் கும்பகர்ணன் என் தந்தை என்ற இவர் கள் சொன்ன நற்போதனைகளையும், வல்லமைச்செருக்கால், தாங்கள் கேட்கவேயில்லை. அவ்வாறு நற்புத்திகளைத் தள் ளியதன் பயன், இப்பொழுது விளைந்திட்டது. கார்மேகத் துக்கொப்பானவரே! அழகான பீதாம்பரமும் அங்கதமும் அணிந்தவரே! தங்கள் உடம்புமுழுவதும் இரத்தம்பெருக, ஏன் இவ்வாறு பூமியிற் கைகளைப் பரப்பிக்கொண்டு கிடக் கின்றீர்கள்? துக்கத்தால் வருந்தும் என்னை, தூக்கத்திலிரு ந்து கண்விழித்தவுடனே அன்பாக அழைப்பதுபோல்,

ஏன் அழைக்கக்கூடாது ? மிக்க மேன்மையும் வெகுவல்ல மையும்தங்கிப்போரிற்புறங்கொடாதவராகிய மாலியவானுடையபேர்த்தியாகிய என்னை ஏன் கண்ணெடுத்துப் பார்க்கக் கூடாது? இன்றுதான், சூரியனுடைய கிரணங்கள், பயமில்லாமல் தைரியத்தோடு இலங்கைக்குட் புகுந்தன ; இவ்வகையான அவமானம் வந்திருக்கத் தாங்கள் படுத்திருக்கலாமா ? ஐயா ! எழுந்திருங்கள், எழுந்திருங்கள்! சூரியனுக்கொப்பான காந்திபொருந்தி இந்திரனது வச்சிராயுதம்போன்று தங்களுக்கு உபயோகமாக விருந்ததும் எப்பொழுதும் சத்துருக்களை நாசம்பண்ணியதும் எப்பொழுதும் பூஜிக்கப்பட்டதுமாகிப் பொன்னினால் அழகாகவேலை செய்யப்பெற்று விளங்கிய இந்த உழலைத்தடி, இராமருடைய பாணங்களால் துண்டிக்கப்பட்டுப் பல துண்டுகளாக முறிந்துகிடக்கின்றதே ! போர்க்களத்தை, தங்களுடைய அன்பான மனைவியைப்போலத் தழுவிக்கொண்டு படுத்திருக்கின்றீர்களே ! என்மேல் அன்பு ஒழிந்துவிட்டதுபோல ஏன் ஒன்றும் பேசாமலிருக்கின்றீர்கள் ? தாங்கள் இறந்துவிட்ட சோகத்தினால், ஆயிரந்துண்டுகளாக இன்னுஞ் சிதறாமல் என் இதயம் இருக்கின்றதே ! நான் கெட்டேன் !! " என்று இவ்வாறு மண்டோதரி அழுதுகொண்டு, தனதுகண்களில் நீர் தாரைதாரையாய் வடிய, தனது கணவன்மீது தான் கொண்டிருந்த மிக்க நட்பினால் மோகம் மேலிட்டவளாய் விழுந்தாள். துக்கத்தினால் மோகமடைந்த அவ்வுத்தமி அவ்விராவணனது மார்பில் விழுந்ததானது, சாயங்காலத்திலுண்டாகுஞ் செவ்வானத்தில் மின்னற்கொடி தோன்றுவதுபோலக் காணப்பட்டது.

மண்டோதரிமூர்ச்சித்து விழுதல்.

அவ்வாறு விழுந்த மண்டோதரியினிடம், அவளைப்போலவே துக்கப்பட்டுக்கொண்டிருந்த சக்களத்திகள், ஓடிவந்து, அதிகமாகப் புலம்பிய அவளைச் சாந்தப்படுத்த

லானுர்கள்: "தேவி! ஒவ்வொருவருடைய அதிருஷ்டமும் சுழன்றுகொண்டே யிருக்கின்றதனால், உலகவாழ்க்கை சஞ்சலமென்பது தங்களுக்குத் தெரியாதா! அவ்வாறே, அரசர்களுடைய பாக்கியமும் எப்பொழுதும் சஞ்சலமென்பதுதான் தங்களுக்குத் தெரியாதா?" என்று அவ்வரக்கமடந்தைகள் இவ்வாறுசொல்ல, மண்டோதரி, பின்னும் அதிகமாகக் கண்ணீர்வடியப் பேரொலியுடன் கதறியழலானுள்.

சக்களத்திகள் மண்டோதரியைத் தேற்றுதல்.

இப்படியிருக்கையில், ஸ்ரீராமர், விபீஷணரைப் பார்த்து, "தங்களுடைய தமையனுரது உத்தரகிரியையைப் பண்ணுங்கள்; இந்தப் பெண்டுகளையும் அப்புறத்திற் செல்லுமாறு கட்டளையிடுங்கள்" என்று சொல்லலானுர்.

இராமர் விபீஷணர்க்கு இட்ட கட்டளை.

அவ்வாறு ஸ்ரீராமர் சொன்ன சொல்லைக் கேட்டதும், உடனே, வெகு வணக்கத்துடன்கூடிய விபீஷணர், தமது புத்தியால் ஆராய்ந்துபார்த்து, ஸ்ரீராமருடைய கருத்தை யொட்டி, தருமத்துடன்கூடிய சொல்லைப் பின்வருமாறு கூறலானுர்:— "வீரரே! தருமத்தின் வழியைவிட்டு விலகினவனும், கொடியவனும், பொய்யனும், காமத்தாற் பிறர்மனைவியை விரும்புபவனுமான இவ்விராவணனுடைய உத்தரகிரியையைச் செய்ய எனக்கு இஷ்டமேயில்லை. இவன், எனக்குத் தமையனென்று பேர்கொண்ட எனதுமாற்ருன்றே! இவன் எப்பொழுதும் எல்லாருக்கும் தீமை செய்துகொண்டே யிருந்தான். பெரியவனென்ற காரணத்தால், நான் வணங்கவேண்டியவனுகவே இராவணனிருந்தபோதிலும், நான்முற்கூறிய காரணங்களால் இவனுக்கு மரியாதைசெய்வது, நியாயமே யன்று. என்னைக் கொடியவனென்று ஜனங்கள் ஆராயாமற் சொன்ன

இராமர் சொல்லை விபீஷணர் தடுக்க, இராமர்சமாதானஞ் சொல்லி அவரை இணங்குவித்தல்.

போதிலும், அவனுடைய துர்க்குணங்களைக் கேட்டபின்பு, நான் செய்தது சரியென்றும், என்னை நல்லவனென்றும் சொல்வார்கள்" என்றார். தருமத்தை யநுஷ்டிப்பதிற் சிறந்தவரும் பேசுவதில்வல்லவருமான ஸ்ரீராமர், பேச வல்ல விபீஷணர் அவ்வாறுசொன்னதைக் கேட்டு, வெகு சந்தோஷமடைந்து, மறுபடியும் விபீஷணரைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:— "அரக்கவேந்தரே! தங்களுடைய உதவியால் நான் வெற்றியடைந்தவனாகையால், தங்களுக்குநன்மையாகிய காரியத்தையே நான் தங்களுக்கு எப்பொழுதும் எடுத்துச்சொல்வேன். தாங்களும் என் விருப்பத்தைத் தட்டாமற்செய்யவேண்டியவர்கள். இவ்வரக்கவீரர், எவ்வளவோ பாவங்களைச் செய்தவராயும், பொய்யராயு மிருந்தபோதிலும், போரில் வெகு சூரர்; மிக்க காந்திபெற்றவர்; வெகு பலசாலி; தேவேந்திரனை முன்னிட்டுக்கொண்டு தேவர்களே இவரை எதிர்த்தகாலத்திலும், இவர், தோல்வியடையாமலிருந்தார். இவ்வுலகங்களையெல்லாம் கதறச் செய்த இவ்விராவணனுர், பலம் பொருந்திய மகாத்துமா; ஒருவனிடம் நமது பகையெல்லாம் அவன் மாண்டதும் நீங்கிவிடவேண்டும். மேலும், நாம் எடுத்த காரியமும் முடிந்தது. இவருடைய உத்தரகிரியையைத் தாங்கள் செய்து முடியுங்கள். அவர் தங்களுக்கு எப்படியோ, அப்படியேதான் எனக்கும். அன்றியும், தங்களால் இராவணனுருடைய உத்தரகிரியை சாஸ்திரப்பிரகாரம் நடத்தப்பட்டால், தங்களுக்கு மிக்க புகழ் உண்டாகும்" என்றார்.

விபீஷணர் இராவணனுக்கு உத்தரகிரியை செய்தல்.

ஸ்ரீராமர் அவ்விதமர்கச் சொன்னதை, விபீஷணர், கேட்டு, இறந்துபோன இராவணனுக்குத் தக்கபடி உத்தரகிரியை செய்யலானார். சந்தனக்கட்டைகளை அடுக்கி அவற்றின்மேல் விலாமிச்சவேரைப்பரப்பி, ரங்குவென்னும் மானின்தோலை அதன்மேல், மூடிமந்திரப்பிரகாரம், விபீஷ

ணர் சிதையை யுண்டாக்கினர்; அவ்வாறு சிதையுண்டாக்கின பிறகு, அவ்வரக்கமன்னவனுக்கு, பித்ருமேதமென்னும் அந்திமகாலச் சடங்கைச் சாஸ்திரபிரகாரம் நடத்தினர். அரக்கர்கள், சிதையின் தென்கிழக்குப்பாகத்தில் அக்கினிமூட்டி ஓமம் வளர்க்கலானர்கள்; தயிருடன் கலந்த நெய்யை அவ்வக்கினியில் ஓமம் பண்ணினர்கள். அதன் பிறகு, வேதியர்கள், இராவணனுடைய சவத்தைச் சிதையி லேற்றி, வேதத்திற் சொல்லியிருக்கின்ற வண்ணமும், ஸ்மிருதிகளிற் சொல்லியிருக்கின்ற பிரகாரமும், அச்சவத்தின் இருகால்களில் சகடம் என்னும் யஜ்ஞபாத்திரத்தையும், துடைகளின் நடுவில் உலூகலம்[உரல்]என்பதையும், மற்றை மரப்பாண்டங்களை அவ்வவற்றிற்குத் தக்க இடங்களிலும் வைத்து, உலக்கையையும் மற்றவற்றையும் அவற்றிற்குத் தகுந்த விடங்களில் வைத்து, அவ்வரக்கமன்னவனது சடங்குக்காக யாகப்பசுவொன்றைக் கொன்று நெய்யில்நனைத்த துணியொன்றை அம்மன்னவனது சவத்தின் மேல் மூடினர்கள். அதன்பிறகு, அவர்கள், வெகு துக்கத்துடன், இராவணனது உடம்பைச் சந்தனத்தினலும் புஷ்பத்தினலும் அலங்காரம் பண்ணி, பலவித ஆடைகளுடுத்து, கண்ணுங்கண்ணீருமாக விபீஷணரையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டு, பொரியை வாரியிறைத்தார்கள். அவ்விராவணனுக்கு விபீஷணர் சாஸ்திரப்பிரகாரம் நெருப்பிட்டார். பிறகு, அவர், ஸ்நானம்பண்ணி, ஈரத்துணியுடன் புல்லும் எள்ளுங் கலந்த ஜலத்தினல் தர்ப்பணஞ்செய்து, சிதையை நோக்கித் தலையால் வணங்கி, இவ்வாறு தஹநஸம்ஸ்காரம் முதலிய சடங்குகளெல்லாவற்றையும் செய்து முடித்தார்.

பிறகு, விபீஷணர், அநேகவிதமாக நல்வர்த்தைகள் சொல்லி அரக்கமடந்தையரைச் சாந்தப்படுத்தி, அவர்களனைவரையும் இலங்கைக்குத் திரும்புமாறு கட்டளையிட்டார்; அவர்களும் அப்படியே திரும்பினர்கள்.

அரக்கியரெல்லாரும் இலங்கைக்குத் திரும்பிப்போனதும், விபீஷணர், ஸ்ரீராமரிடம் வந்து, வெகு வணக்கமாக அவர் பக்கத்தில் நின்றார்: இராமரும், தமது வானரசேனையுடனும் சுக்கிரீவர் இலட்சுமணர் இவர்களுடனும் வெகு சந்தோஷமடைந்து, தேவேந்திரன் தனது சத்துருவாகிய விருத்திராசுரனைக் கொன்றபிறகு ஆனந்தமடைந்ததுபோல விளங்கினர்.

விபீஷணர் அரக்கியரை இலங்கைக்கு அனுப்பி, தாம் இராமருடன் இருத்தல்.

நூற்றுப்பதினைந்தாஞ் சருக்கம்: விபீஷண பட்டாபிஷேகம்.

தேவர்கள் கந்தர்வர்கள் தானவர்கள் என்ற இவர்களெல்லாரும், இராவணனுடைய வதையைப் பார்த்து, தங்கள்தங்கள் விமானங்களி லேறிக்கொண்டு, ராமராவணயுத்தவிஷயமான இனிய கதைகளைச் சொல்லிக்கொண்டே திரும்பிப்போனார்கள். இராவணனது கொடிய வதையையும், ஸ்ரீராமருடைய பராக்கிரமத்தையும், வானரர்கள்செய்த அழகான யுத்தத்தையும், சுக்கிரீவருடைய அமைச்சையும், சுமித்திரையின் குமாரராகிய இலட்சுமணர் அன்புடன் காட்டிய வல்லமையையும் பற்றி, மஹாபாக்கியசாலிகளான அந்த வானவர்களெல்லாரும், பேசிக்கொண்டே மகிழ்ச்சியோடு தாங்கள் வந்தவழியே திரும்பினர்கள்.

வானவர்கள் மீண்டு செல்லுதல்.

ஸ்ரீராமர், இந்திரபகவான் தமக்குஅனுப்பியநெருப்புக் கொப்பான காந்தியையுடைய அந்தத் திவ்வியரதத்தைத் திருப்பிக்கொண்டு போகச்சொல்லி மாதலிக்குத் தக்க மரியாதைபண்ணினர். தேவேந்திரசாரதியாகிய மாதலியும், ஸ்ரீராமரிடம் விடை பெற்றுக், தேவரதத்திலேறித் தேவலோகத்துக்குச் சென்றான்.

ஸ்ரீராமரது அநுமதியின்மேல் மாதலி இந்திரரதத்துடன் செல்லுதல்.

அத்தேவசாரதி, ஆகாயமார்க்கமாகச் சென்ற பின்பு, ஸ்ரீராகவர், வெகுசந்தோஷத்துடன் சுக்கிரீவனைக் கட்டிக்கொண்டார். அப்பொழுது, இலட்சுமணர் நமதுபடைவீட்டுக்குத் திரும்பலாம் என்று விண்ணப்பஞ்செய்ய, வானர வீரர்களெல்லாரும் வணங்கிநிற்க, ஸ்ரீராமர், சுக்கிரீவனுடன் படைவீட்டில் வந்துசேர்ந்தார்.

இராமர் படைவீட்டை யடைதல்.

அப்போது, வெகுபலத்துடன் தமதருகிலே விளங்கிய சத்தியசந்தரான இலட்சுமணரை நோக்கி, இராமர், பின்வருமாறு கட்டளையிடலானார்:— "என் அன்பனே! நம்மிடம் அன்பும் அபிமானமும் வைத்து, நமக்கு உபகாரஞ்செய்த இந்த விபீஷணரை இவ்விலங்கைக்கு மன்னவராகப் பட்டாபிஷேகஞ் செய்வாயாக. ஸௌம்யனே! இராவணனுடைய தம்பியாகிய இவ்விபீஷணரை, இலங்கைக்கு அரசராக அபிஷேகம்பண்ணிப் பார்க்கவேண்டுமென்பது எனது முக்கியமான விருப்பம்" என்றார். மகாத்துமாவாகிய ஸ்ரீராமர் இவ்விதமாக இலட்சுமணரைப்பார்த்துச் சொன்னதும், "அப்படியே ஆகட்டும்" என்று சொல்லி, மகிழ்ச்சியோடு பொற்குடத்தை எடுத்துவந்து, வல்லமையுள்ள வானரர்கள் கையிற் கொடுத்து, மனோவேகமாகச் செல்பவர்களும் வெகுபலம் பொருந்தியவர்களுமான அவ்வீரர்களைச் சமுத்திரஜலம் கொண்டுவருமாறு அவர் கட்டளையிட்டார். அவ்வானரோத்தமர்களும், அக்கட்டளைப்படி வெகுவேகமாகச் சென்று, பல சமுத்திரங்களிலிருந்து ஜலத்தைக் குடங்களிலெடுத்துவந்தார்கள். அவைகளில் ஒருகுடத்தை எடுத்து, விபீஷணரை உயர்ந்த ஆசனத்திலிருத்தி, அக்குடத்தின்தீர்த்தத்தால் இலட்சுமணர் அவ்வரக்கருக்கு அபிஷேகம்பண்ணினார். தருமாத்துமாவாகிய அந்த

இராமரது கட்டளைப்படி, இலட்சுமணர் விபீஷணருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தல்.

இலட்சுமணர், இலங்கையிலிருந்த அரக்கர்களின் நடுவில், நண்பர்களின் கூட்டங்களாற் சூழ்ந்துநிற்கப்பெற்ற வெகு பரிசுத்தமான மனமுடைய விபீஷணருக்கு, ஸ்ரீராமருடைய கட்டளையால் சாஸ்திரப்பிரகாரம் இலங்கா ராஜ்யத்திற் பட்டாபிஷேகம்பண்ணினர். விபீஷணர் இலங்கை மாநகருக்கு மன்னவராகப் பட்டாபிஷேகஞ் செய்யப்பெற்றதைக் கண்டு, ராக்ஷஸ மந்திரிகளும், அவரிடம் அன்பு வைத்திருந்த அரக்கர்களும், களித்தார்கள்.

அவ்வாறு ஸ்ரீராமரால் தமக்களிக்கப்பட்ட அந்தப் பெரிய ராஜ்யத்தை யடைந்து, விபீஷணர், தமது குடிகளைச் சமாதானப்படுத்தி, ஸ்ரீராமரிடம் வந்துசேர்ந்தார். அரக்கக்குடிகளும், விபீஷணருக்கு அக்ஷதைகள் மோதகங்கள் பொரிகள் திவ்வியமான புஷ்பங்கள் என்னும் இவைகளையெல்லாம் வெகுசந்தோஷமாகக் கொண்டு வந்தார்கள். ஒருவராலும் தகையமுடியாதவரான விபீஷணரும், மங்கலத்தை வெளியிடுகின்ற அவைகளையெல்லாம் வாங்கி, ஸ்ரீராமருக்கும் இலட்சுமணருக்கும் கொடுத்தார். ஸ்ரீராமரும், தமக்கு உதவிபுரிந்த விபீஷணர் தம்மால் உபகாரம்பெற்றுச் சந்தோஷமடைந்ததைக் கண்டு, களித்து, அவருடைய சந்தோஷத்தையே பெருக்கக் கருதியவராய், அக்காணிக்கைகளையெல்லாம் பெற்றுக் கொண்டார்.

விபீஷணர் இராமரை வந்து காணுதல்.

அதன்பிறகு, அஞ்சலி பண்ணிக்கொண்டு தமக்கருகில் மலைபோல் வந்து நின்ற வீரனுகிய அனுமானைப் பார்த்து, ஸ்ரீராமர், பின்வருமாறு சொல்லானர் :— "ஸௌம்யனே! மகாராஜாவாகிய விபீஷணரிடம் விடைபெற்று, இலங்கைக்குட் சென்று, விபீஷணருடைய அநுமதியினால் இராவணனது மாளிகையிற் புகுந்து, நமக்கு வெற்றியுண்டான சந்தோஷ சமா

இராமர் சீதா பிராட்டிக்குத் தமது செய்தியை யுணர்த்துமாறு அநுமானுக்குக் கட்டளையிடுதல்.

சாரத்தைத் தெரிவித்துச் சீதையை மகிழ்வித்து, நான் சுக்கிரீவருடனும் இலட்சுமணனுடனும் க்ஷேமமாகவிருப்பதையும், இராவணன் என்னால் வதைக்கப்பட்டதையும் சொல்லுக. வானரவீரனே! இச்சந்தோஷசமாசாரங்களைச் சீதையினிடஞ் செரல்லி, அவள் தெரிவிக்கும் பதில் சமாசாரத்தை என்னிடம் வந்து சொல்லுக" என்றார்.

நூற்றுப்பதினைஞ்சருக்கம்:
அனுமானுக்கும் சீதைக்கும் நடந்த வம்பாஷணை.

அவ்வாறு, கட்டளையானதும், மாருதனதுமைந்தனுகிய அனுமான், அரக்கர்களெல்லாரும் மரியாதை செய்ய, இலங்கைமாநகரிற்புகுந்தான். அப்பெருவீரன், இராவணனுடைய மாளிகையில் நுழைந்து, அவ்விடத்தில் கிரகத்தாற் பீடிக்கப்பெற்ற உரோகிணிபோன்று தேகம் மாசுபடிந்து ஒரு மரத்தினடியில் சீதாதேவி பலஅரக்கியராற் சூழப்பட்டு மகிழ்ச்சியின்றியிருப்பதைக் கண்டு, அவ்வம்மணியினிடஞ் சென்று வணங்கித் தாழ்ச்சியோடும் விநயத்தோடும் நிச்சலமாய் நின்றான். மகாபலசாலியாகிய அவ்வனுமான் தன்னை நாடிவந்ததைக் கண்டு, அவனை இன்னனென்று நினைந்து வெகு மகிழ்ச்சியடைந்தவளாய், சீதாதேவியானவள், ஒன்றும் பேச நாவெழாமலிருந்தாள்.

அனுமான் சீதையைக் கிட்டுதல்.

அவ்வம்மணியின் முகம் சந்தோஷக்குறியுடன் விளங்குவதைப் பார்த்து, வானரர்களுக்குள் உத்தமனன அனுமான், ஸ்ரீராமர் தன்னிடஞ் சொல்லியிருந்த சமாசாரங்களைச் சொல்லலானான்: "வைதேஹி! ஸ்ரீராமர், இலட்சுமணருடனும் சுக்கிரீவருடனும் விபீஷணருடனும் வானரசேனைகளுடனும் க்ஷேமமாக விருக்கின்றார். பகைவரையடக்கவல்ல அவர், தாம் எடுத்த காரி

அனுமான் ஸ்ரீராமர் கூறிய செய்தியைச்சீதாபிராட்டியினிடம் உரைத்தல்

யம் நிறைவேறினதையும், சத்துரு வதைக்கப்பட்டதை யும் தங்களிடம் தெரிவிக்கச்சொன்னார். தேவீ! விபீஷண ருடைய சகாயத்தினாலும், வானரர்களின் உதவியினாலும், இலட்சுமணருடைய ஆலோசனையினாலும், ஸ்ரீராமரால், இராவணன் வதைக்கப்பட்டான். இரகுவின் வம்சம் சந் தோஷிக்குமாறு திருவவதரித்த வீரராகிய ஸ்ரீராமர், தமது காரியத்தை இவ்வாறு செய்துமுடித்து உள்ளங்குளிர்ந்த வராய், தங்களது க்ஷேமத்தை இவ்வாறு விசாரிக்கச்சொன் னார்: "தேவி! நான் இச்சந்தோஷசமாசாரத்தைத் தெரி வித்து, மிகுதியாக உன்னைக் களிக்கும்படி செய்கின்றேன். தருமத்தையுணர்ந்தவளே! இதுவரையில் தெய்வாதீன மாக வாழ்வுபெற்றிருக்கின்றாய். எனது பராக்கிரமத் தினால், நமக்கு வெற்றியுண்டாய்விட்டபடியால், இனி, நீ விசாரமில்லாமலும் துக்கப்படாமலு மிருக்கலாம். இராவ ணன்போரில் வதைக்கப்பட்டான்; இலங்கையும் நமது வச மாயிற்று; சீதே! சத்துருவினிடத்தினின்று உன்னை மீட் பதில் உறுதி கொண்டிருந்த யான், உறக்கமுமில்லாமல், இராவணனைக் கொல்வதாகச் செய்திருந்த சபதத்தை, சமுத்திரத்தின்மேற் சேதுவைக்கட்டிப் பிறகு நிறைவேற் றினேன். இராவணன்துமாளிகையில்வாழ்ந்திருத்தற்காக, இனி மனங் குழம்பவேண்டாம்; ஏனெனில், இலங்கை யின் சம்பத்து முழுமையும் விபீஷணரைச் சேர்ந்ததாகச் செய்யப்பட்டதன்றோ! ஆகையால், சீதே! உனது துய ரத்தை ஆற்றிக்கொள்வாய். நீ, இப்போது உனது மாளி கையில்தான் வசிக்கின்றாய். உன்னைச் சேவிக்க விரும்பு கின்ற விபீஷணர் இதோ வருவார்" என்று இவ்வாறு அனுமான் சொன்னதும், சந்திரனைப் போ ன்ற முகமுள்ள சீதை, அதிக சந்தோஷ மடைந்தவளாய், எழுந்து ஒன்றும் பேச நாவெழாமல் மௌனமாக விருந்தாள். அவ்வம்மணி அவ் வாறு மறுமொழி சொல்லாமலிருந்ததைப் பார்த்து, அவ்

சீதாதேவியின் மகிழ்ச்சி.

வானரவீரன், மறுபடியும் "தங்கள் மனத்தில் என்ன ஆலோசித்துக்கொண்டிருக்கின்றீர்கள்? என் என்னிடம் பேசவில்லை?" என்றான். இவ்விதமாக அனுமான் சொன்னதும், தருமநெறியி லிருக்குஞ் சீதாதேவி, பரமானந்த மடைந்தவளாய், ஆனந்தத்தால் தழுதழுத்த வாக்குடன் பின்வருமாறு சொல்லலுற்றாள்:—"எனது கணவர் வெற்றியடைந்தா ரென்ற இத்தச்சந்தோஷசமாசாரத்தைக் கேள்வியுற்று மிக்கமகிழ்ச்சியடைந்து, கொஞ்சகேரம் ஒன்றுஞ் சொல்ல நாவெழாதவளாக விருந்தேன். வானரரே! என்னிடம் இந்தச் சந்தோஷசமாசாரத்தைச்சொன்ன உமக்கு என்ன சொல்லலா மென்று ஆலோசித்துப் பார்த்தும், சரியான மறுமொழியொன்றுந் தோன்றவில்லையே! ஸௌம்யரே! அன்பான இந்தச் சமாசாரத்தைச் சொன்ன உமக்குத் தக்க வெகுமானங் கொடுக்க, இம்மூவுலகத்திலும் ஒரு வஸ்துவையும் காணேமே! பொன்னும் வெள்ளியும் பலவகைபிரத்தினங்களும் இம்மூவுலகவாட்சியும் இவைகளில் ஒன்றும், தாங்கள் சொன்ன சந்தோஷ சமாசாரத்துக்கு ஈடான வெகுமானமாக எடுத்துச்சொல்லவுந் தகாதாம்" என்றாள்.

சீதை அனுமானிடத்திற்கூறிய உத்தரம்.

இவ்விதமாகச் சீதாதேவி சொன்னதும், அனுமான், அஞ்சலிபண்ணியபடியே சீதாதேவியின் முன்னிலையில் நின்றுகொண்டு, பின்வருமாறு சொல்லலானான்:— "கணவரின் இனியநண்மையிலே கருத்தூன்றியிருக்கும் உத்தமியே! கணவருடைய வெற்றியையே விரும்பியிருக்கும் பதிவிரதையே! தங்களையன்றி வேறொருபெண்பிள்ளை இவ்வண்ணமான சொற்களைச் சொல்லவல்லளோ? அம்மணீ! கருத்தையுட்கொண்ட தங்களது அன்பான இந்தச் சொற்கள், பலவகைபிரத்தினங்களைப்பார்க்கிலும் தேவராஜ்யத்தைப்பார்க்கிலும் மேலானவை, பகைவரைக்கொன்று

சீதையின்மறுமொழியை அனுமான்கொண்டாடுதல்.

வெற்றிபெற்று உறுதியாக நிற்கும் ஸ்ரீராமரைக் காண்பதனல் தேவராஜ்யத்தைப் பெற்ற சந்தோஷத்தினும் மேலான சந்தோஷத்தை யடைந்துள்ளேன்" என்றுன்.

அவ்வண்ணம் அனுமான் சொன்னதைச் சீதாதேவி, கேட்டு, பிறகு, மிகவும் இனிய சொல்லே அனுமானே நோக்கிச் சொல்லலானுள்:— "மிகவும் லக்ஷணங்களுடன் கூடி, மாதுரியகுணத்தால் அணியப்பெற்று, கிரகணம் தாரணம் முதலிய எட்டுக் குணங்களும் நிரம்பிய புத்தியினுல் ஆராய்ந்து சொல்லும் நற்பேச்சுக்களைப் பேசுவதில், நீர் தாம் சமர்த்தர். நீர், மாருதனது மிகவும் தார்மிகரான புதல்வர்; வருத்தங்களைப் பொறுத்தல், வல்லமை, கேள்வி, தேஹபலம், பராக்கிரமம், மிக்கதாக்ஷிணியம், ஒளி, பொறுமை, உறுதி, தைரியம், வணக்கம், தெளிவு என்னும் இவைகளும், மற்றும் பலவகைக்குணங்களும் உம்மிடமே விளங்குகின்றன" என்றுள்.

அனுமானைச் சீதை கொண்டாடுதல்.

இதன்பிறகு, அனுமான், மறுபடியும் அஞ்சலி பண்ணிக்கொண்டு, வெகு வணக்கமாகச் சீதாதேவியின் முன்னே நின்று, சிறிதுங்கலக்கமின்றி மகிழ்ச்சியுடன் பின்வருமாறு சொல்லலானுன்:— "தாங்கள் எனக்கு அநுமதியளிப்பீர்களேயானுல், பதியையேதெய்வமாகக்கருதி மிக்க வருத்தத்தோடு அசோகவனத்திலிருந்த காலத்தில், பலவகைக்கொடிய கதைகளைச் சொல்லியும் முன்பு தங்களைப் பலவாறுவெருட்டியுந் துன்புறுத்திய வெகு கொடியவர்களும் எப்பொழுதும் கொடிய செய்கைகளையே செய்பவர்களும் கொடுங்கண்ணியர்களுமான இவ்வரக்கியரெல்லாரையும், நான், இப்போதுகொல்லவிரும்புகின்றேன். இவ்வரத்தை எனக்குத் தாருங்கள். நற்குணமுடையவரே! கைக்குத்துக்களினுலும், அறைகளினுலும், உதைகளினுலும், இன்னும் பலவகைக்

அனுமான் ராக்ஷஸிகளைச் சித்திரவதை செய்யுமாறு அநுமதியளிக்கவேண்டுதல்.

கொடுஞ்செய்கைகளினாலும் இந்தராட்சசிகளெல்லாரையும் நான், கொல்ல விரும்புகின்றேன். அன்றியும், அவர்களது முழங்கால்களை முறித்தும், பற்களையுதிர்த்தும், காதுகளையும் மூக்குகளையும் கடித்தும், தலைமயிரைப்பறித்தும், நகங்களால் முகங்களிற் பீறியும், உயரவெழுந்துமேலேதாக்கியும், கீழே தள்ளியும், தங்களுக்குத்தீமைபுரிந்த இவர்களை, நான் தரையில் துகைத்துக்கொல்லவிரும்புகின்றேன். புகழ் பெற்ற தேவியே! தங்கள்விஷயத்தில் இவர்கள்தீமை புரிந்திருக்கின்றார்க ளாகையால், இவ்வாறு பலவிதமாக, இவர்களை, நான் கொல்ல விரும்புகின்றேன்" என்றான்.

அனுமான் வேண்டுகோளைச் சீதை மறுத்தல்.

அவ்விதமாக அனுமான் சொன்னதைக் கேட்டு, புகழ் பெற்ற சீதாதேவி, தருமத்துடன்கூடிய சில சொற்களை மறுமொழியாகச் சொல்ல லானாள்:— "வானரர்களுக்குள் உத்தம ரே! இவ்வரக்கியர், தமதுஅரசருக்குப் பர வசர்கள்; பிறனது ஏவலின்படி தொழில்புரிபவர்கள்; அவ் வாறு தொழில்செய்யாவிடில், தண்டனைக்கு உரியவர்கள், அடியவர்கள்: இவர்களிடம் யார்தான் கோபிப்பார்கள்? எனதுபாக்கியத்தின்குறைவினாலும், முற்பவத்திற் செய்த தீவினையினாலும்நான் இவ்வாறெல்லாம் அனுபவித்தேன்; எல்லாரும் தத்தம்வினைகளின்பயனை அனுபவித்தே தீர வேண்டுமென்றே! ஊழ்வினையின் மாறுபாட்டால், நான், அனுபவித்ததாக உறுதியாய் நினைத்துக்கொண்டிருக்கின் றேன். இராவணன் ஏவுதலின்மேல் இவ்வரக்கியர் செய் தவைகளையெல்லாம், மாறுசெய்ய இயலாத நான், பொறுத் துக்கொண்டிருந்தேன். வானரோத்தமரே! இராவண னது கட்டளையால் இவர்கள் என்னை வெருட்டினார்கள்; அவன் இப்பொழுது மாண்டுபோய்விட்டா னாகையால், இனி இவர்கள் என்னை வெருட்டமாட்டார்களென்பது திண் ணம். வானரரே! ஒரு புலியினருகில் தருமத்தையொட்டி

ஒரு கரடியானது *இந்தச்சுலோகத்தை வெகுகாலத்திற்கு முந்திச் சொல்லியிருக்கிறது; நான் சொல்ல, இதனை, நீர் ஆராய்வீராக: பிறர்க்குத் தீமைசெய்கின்றவர் திறத்தில் அறிவுள்ளவன், மாறுகத் தீமையைச் செய்யான்: தீமை செய்கின்றவர்கட்கும் அபகாரத்தைச் செய்யாமையாகிய நல்லொழுக்கம், நன்னடக்கையை மேற்கொண்ட ஸத்புருஷர்களாற் பாதுகாக்கப்படவேண்டியதே வானரரே! பாபிஷ்டர்களானாலும், புண்யவான்களானாலும், வதைக்கு உரியவர்களிடத்திலும், பெரியோர் கருணையையே காட்டவேண்டும்; பிழைசெய்யாதவன் ஒருத்தனுமில்லையன்றே!

*முன்னொருகாலத்தில், ஒருகாட்டில் வேடனொருவனைப் புலியொன்று துரத்த, அவ்வேடன், ஓடி, ஒருமரத்தின்மீது ஏறிக்கொண்டான்; அவ்வாறு தான் ஏறிய மரத்தில் கரடியொன்று முன்னமே ஏறியிருந்ததைக்கண்டு, வேடன், மனங்குழம்பி உயிர்தப்பவழியின்றிக் கரடியினிடம் சரணமென்று சொல்லி அபயமடைந்தான். கரடியும், அவனுக்கு அபயங்கொடுத்தது. பிறகு, புலி, அம்மரத்தினடியைச் சார்ந்து, அக்கரடியைக் கண்டு, "இவ்வேடன் நம்மைப் போன்ற காட்டுவிலங்குகளுக்குச் சத்துரு; இவனை ஏன் பாதுகாக்கின்றாய்? இவனை மரத்தினின்று கீழேதள்ளிவிடு" என்று பலமுறை வேண்டியும், கரடி 'இவன் என்னிடத்தில் அடைக்கலம்புகுந்ததனால், இவனைப் பாதுகாப்பேனேதவிரக் கீழேதள்ளமாட்டேன்' என்று மறுத்துச்சொல்லி, பிறகு, தான் தூங்க ஆரம்பித்தது. அப்பொழுது, புலி, வேடனைப்பார்த்து, 'அடா! நீ அக்கரடியைக் கீழே தள்ளிவிடு; நான் அதைத் தின்றுவிட்டு, உன்னை ஒன்றுஞ் செய்யாமற் போகின்றேன்' என்றது. கொடிய அவ்வேடன், அதற்கு இசைந்து, அக்கரடியைக் கீழேதள்ளினான். ஆனால், கரடியோ, கீழேவிழுமுன்னமே மற்றொருகிளையைப்பற்றி உயிர்பிழைத்தது. அதைக்கண்டு, வேடன், நடுங்கி, 'தன்னை அக்கரடி அவசியம் புலிக்கு இரையாக்கிவிடும்' என்று பயந்திருந்தான். அப்பொழுது, 'உன்னைக் கொல்லநினைத்த அவ்வேடனைக் கீழேதள்ளிவிடு' என்று பலமுறை புலி கேட்டுக்கொள்ளவும், சரணமென்றதற்கு அபயங்கொடுத்த அக்கரடி, அப்படி செய்யாமல் இந்தச் சுலோகத்தைச் சொல்லி வேடனை இரட்சித்தது என்ற வரலாறு, இங்கு அறியத்தக்கது.

உலகத்தை ஹிம்ஸித்தலையே விளையாட்டாகவுடையவர் களான வேண்டுமுருவங்கொள்ளவல்ல அரக்கர்கள் தீத் தொழிலைப்புரிகின்றார்க ளென்றாலும், அவர்கட்குக்கெடுதி செய்யக்கூடாது" என்றாள். அவ்வாறு சீதை சொன்ன தும், பேசுவதில் வெகுசமர்த்தனன் அனுமான், புகழ் பெற்ற இராமபத்தினியாகிய சீதையை நோக்கிப் பின்வ ருமாறு சொல்லலானன்:—"தாங்கள், ஸ்ரீராமருக்கு ஏற்ற புகழ்பெற்ற மனைவி யாவீர். தேவி! என க்குச் சொல்லவேண்டிய சமாசாரத்தைச் சொல்லியனுப்புங்கள். நான், ஸ்ரீராமரிடம் போய் வருகின்றேன்" என்றான். இப் படி அனுமான் சொல்லவே, சீதாதேவி, "வானரோத்தமரே! என்துகணவரை நான் பார்க்கவிரும் புகின்றேன்" என்றாள். அப்பிராட்டி அவ்வண்ணஞ் சொன்னதைக் கேட்டு, பெரும்புகழ்பெற்ற அனுமான், அவளைச் சந்தோஷப்படுத்த, பின்வருமாறு மறுமொழி சொல்லலானன்: "இந்திராணி தேவேந்திரனைப்பார்ப்பது போல, சத்துருக்களை வதைத்தவராய்ப் பூர்ணசந்திரனுக் கொப்பான முகமுள்ள ஸ்ரீராமரை, விசுவாசமுள்ள நண் பர்களுடனும் இலட்சுமணருடனும்தாங்கள் சடிதியிற்பார் ப்பீர்கள்" என்றான். அவ்வாறு சீதாதேவியினிடஞ் சொல் லிவிட்டு, இலட்சுமிபோல விளங்கிய அப்பிராட்டியினிடம் விடைபெற்று, வெகுவேகமாக, அனுமான், ஸ்ரீராமரிடம் திரும்பிவந்தான்.

அனுமான் சீதா பிராட்டியினிடம் விடைபெற்று இராமரிடம் சேர்தல்.

நூற்றுப்பதினேழாஞ் சருக்கம்: சீதாதேவியை ஸ்ரீராமரிடம் விபீஷணர் அழைத்துவருதல்.

அதன்பிறகு, சொல்லவேண்டிய வகையையுணர்ந்த அனுமான், வெகுபுத்திமானாய் வில்வீரர்களுக்குள்உத்தம

ரான ஸ்ரீராமரை யடைந்து, அக்காலத்துக்குத் தக்கபடியா கப்பின்வருமாறுபேசலானன்:—" யாவர் பொருட்டு இவ்வளவு காரியங்கள் செய் தோமோ, வெற்றியும் நமக்குக் கைகூடிற் றே, அந்தத் தேவியாகிய சீதையைத் தாங்கள் இப்பொழுது பார்க்கவேண்டும். இதுவரையில் துக்கத்தால்ஏங்கிக் கண்ணுங்கண்ணீருமா கத் தவித்த அவ்வுத்தமி, தங்களுடைய ஜயத்தைக் கேட்டு வெகு சந்தோஷ மடைந்திருக்கின்றாள். முன்னமே அவ் வம்மணிக்கு என்னிடமுண்டாயிருக்கும் விசுவாசத்தினால் அவ்வுத்தமி, என்னிடம், தாம் செய்ய யத்தனித்த காரி யத்தை நிறைவேற்றிய எனதுகணவரைப் பார்க்கவிரும்பு கின்றே னென்றாள்" என்றான்.

சீதை சொன்ன செய்தியை அனுமான் இராமரிடம் தெரிவித்தல்.

தருமங்களைச் சரியாக ஆராய்ந்தறிந்த ஸ்ரீராமர்,அனு மான் அவ்வாறு சொன்னதைக் கேட்ட தும், கண்களில் நீர்ததும்பத் திடீரென்று சிறிது நாழிகை மனத்திற்குள்ளேயே சிந் தித்து, உடனே உஷ்ணமாகப் பெரு மூச்செறிந்து, பூமியைப்பார்த்துக்கொண்டு, தமக்கருகிலே மேகம்போல் விளங்கிக்கொண்டு நிற்கின்ற விபீஷணரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:— " தலைக்கு ஸ்நானஞ் செய்வித்தும், திவ்வியமான கலவைச் சாந்தைப் பூசியும் திவ்வியமான ஆபரணங்களை யணிந்தும், விதேஹராஜசத்தவளான சீதையை, இவ்விடம் வெகு சீக் கிரமாக வருமாறு செய்க; விளம்பம் வேண்டாம்" என்றார்.

ஸ்ரீராமர் சீதையை அழைத்து வருமாறு விபீஷணர்க்குக் கட்டளையிடுதல்.

இவ்வண்ணம் ஸ்ரீராமர் சொன்னதும், விபீஷ ணர், விரைவாக அந்தப்புரத்துக்குட் புகுந்து, தம்மைச் சேர்ந்த மடந்தையரைக்கொண்டு, " சீதாபிராட்டியாரே! தங்களுக்கு மங்களமுண்டாகுக; நற்கலவைபூசி, உயர்ந்த ஆபரணமணிந்து, தாங்கள் பல்லக்கி லேறுக; இராம

பிரான் தங்களைப் பார்க்க விரும்புகின்றார்" என்று சீதாதேவிக்குத் தெரியப்படுத்தினர். அவ்வித மாக விபீஷணர் சொன்னதும், சீதாதேவி, அவரைப்பார்த்து, "அரக்கமன்னவரே! நான் ஸ்நானஞ்செய்யாமலே இக்கோலத்துடனேயே எனது கணவரைப் பார்க்க விரும்புகின்றேன்" என்றாள். அவ்வுத்தமி அவ்வாறு சொன்னதைக் கேட்டு, விபீஷணர், "எல்லாருக்கும் மன்னவராகிய தங்கள் கணவர் எவ்வாறு சொன்னாரோ, அப்படியே செய்வது உத்தமம்" என்றார். விபீஷணர் அவ்விதமாகச்சொன்னதைக் கேட்டதும், கணவரையே தெய்வமாகக்கொண்டவளும்கணவரிடம்நிறைந்த அன்பைச் செலுத்தின பதிவிரதையுமாகிய சீதாதேவி, "அப்படியே" என்று ஒத்துக்கொண்டாள்.

விபீஷணர் இராமரிட்ட கட்டளையைத் தெரிவித்ததும், முடிவில் சீதை அதற்கு இசைதலும்.

அதன்பிறகு, ஸ்நானஞ்செய்து, மடந்தையரால் அலங்கரிக்கப்பெற்று, விலையுயர்ந்த ஆபரணங்களை யணிந்து, விலையுயர்ந்த பட்டாடையுடுத்திருந்த சீதாதேவியை, உயர்ந்த பட்டாடையால் மூடப்பட்டு விளங்குவதொரு பல்லக்கிலேற்றி, பல அரக்கியர்கள் பாதுகாத்துவர, அதை ஸ்ரீராமரிடம் விபீஷணர் கொண்டுவரச்செய்தார்.

விபீஷணர் சீதாபிராட்டியை இராமரிடம் அழைத்து வருதல்.

அவ்விபீஷணர், மகாத்துமாவாகிய ஸ்ரீராமரை நெருங்கி, தமது வரவை யறிந்ததும் ஆலோசனையிலிருந்த ஸ்ரீராமரிடம்வணங்கி, சீதாதேவியை அழைத்துவந்த சங்கதியை வெகு சந்தோஷமாகத் தெரிவித்தார். அரக்கன்வீட்டில் வெகுகாலம் வசித்த சீதாதேவி வந்ததைக்கேட்டதும், ஸ்ரீராமரது மனத்திலே சந்தோஷமும் எளிமையும் கோபமும் ஆக இம்மூன்றும் ஒருங்கே உதித்தன. பிறகு, அருகிலிருக்கும் விபீஷண

விபீஷணர் சீதையின் வருகையைத் தெரிவிக்க, இராமர் அருகில், வரச்சொல்லுதல்.

ரைப் பார்த்து, தமதுமனத்திற்குட் சிறிதுநேரம் ஆலோசித்து, அக்காரணத்தினுல் மயங்கிநின்ற விபீஷணரை நோக்கி, "அரக்கமன்னவரே! சாந்தகுணமுடையவரே! எப்பொழுதும் என்வெற்றியையே கருதி நிற்கின்றவரே! சீதாதேவி சடிதியில் என்முன்பாக வரட்டும்" என்றூர்.

சீதையைச்சேர்ப் பித்தற்கு ஜனத் திரளை விபீஷ ணர் விலக்க, ஸ்ரீ ராமர் கடிதல்.

விபீஷணர், தம்மை நோக்கி ஸ்ரீராமர் அவ்வாறு கட்டளையிட்டவுடனே, அவ்விடத்திலிருந்த ஜனங்களெல்லாரையும் விலக்க முயன்றூர். கஞ்சுகங்களும் தலைப்பாகைகளு மணிந்து கொண்டு கையிற் பிரம்புபிடித்து நின்ற புருஷர்கள், அவ்விடமிருந்த ஜனங்களையெல்லாம் விலக்கிக்கொண்டு நான்குபக்கங்களிலுஞ் சஞ்சரித்தார்கள். ரிக்ஷர்கள் வானரர்கள் அரக்கர்கள்என்ற இவர்களுடைய கூட்டங்கள், அவ்வாறு விலக்கப்பட்டு, அங்கு நின்று வெகுதூரஞ்சென்று நிற்கலாயின. அவர்களை அவ்வாறுவிலக்கும்பொழுது உண்டான சத்தமானது, காற்றடிக்கும்பொழுது சமுத்திரத்திலுண்டாகும் ஒலிபோலக் கேட்கலாயிற்று. அவ்வண்ணம் எல்லாரும் விலக்கப்பட்டதையும், அவர்கள் மனங்குழம்பி நான்கு பக்கங்களிலும் ஓடுவதையும் பார்த்து, ஸ்ரீராமர், அத்தொழிலைக் காணப்பொறுதவராய் மனமிரங்கி, அப்படிச் செய்யவேண்டாமென்று தடுத்துக்கூறினர். அன்றியும், அவர், தமது மனம் பதைத்து, பேரறிவுடையவரான விபீஷணரைத் தமது பார்வையால் எரித்துவிடுகின்றவர் போலப் பார்த்து, அவரைக் கடிந்து பின்வருமாறு சொல்லலானர்:—"ஏன் என்னுடைய அநுமதியில்லாமலிருக்கையில், இந்த ஜனங்களை வருத்துகின்றீர்கள்? இவ்வகையான முயற்சியை விட்டிடுங்கள்; இங்கிருக்கின்றவர்களெல்லோரும், எனது சுற்றத்தவராவர். மேலும், மகளிரின் மானத்தைப் பாதுகாப்பது, வீடுகளு மல்ல; வஸ்திரங்களு மல்ல; வளைதிரைகளு மல்ல; இவ்விதமான ராஜ

கௌரவங்களுமல்ல; அவர்கள்து நல்லொழுக்கமே மானத்தைக் காப்பதாகும். சங்கடமுண்டாகும்பொழுதும், ஆபத்துக்காலத்திலும், போர்க்களத்திலும், சுயம்வரசமயத்திலும், யாகசாலையிலும், கல்யாணத்திலும் பல்ருங்காணுமாறு வெளிவருதலால், மகளிர்க்கு, யாதொருகுற்றமுமுண்டாகாது. இந்தச் சீதையோ, யுத்தபூமியை யடைந்திருக்கிறாள். பெருங்கஷ்டத்தில் இப்போது இருக்கிறாள்: இவளைப் பலருங் காண்பதனற் குற்றமொன்றுமுண்டாகாது: மேலும், நான் அருகிலிருக்கையில், இதைப்பற்றிச் சிறிதும் ஆலோசிக்கவேண்டியதேயில்லை. ஆகையால், விபீஷணரே! சடிதியில் அவளை இவ்விடம் அழைத்துவாருங்கள். என்னை என்து நண்பர்கள் நான்குபக்கங்களிலுஞ்சூழ்ந்திருக்க, சீதாதேவி காணட்டும்" என்று கூறினார்.

விபீஷணர் சீதையை இராமரு ழிற் சேர்த்தல்.

ஸ்ரீராமர் அவ்வாறு சொல்லவே, விபீஷணர், சிறிது ஆலோசனை கொண்டவராய், வெகு வணக்கத்துடன், சீதாதேவியை ஸ்ரீராமர் முன்பாகக் கொண்டுவந்து சேர்த்தார். பிறகு, இலட்சுமணர் சுக்கிரீவன் அனுமான் முதலியவர்களும், ஸ்ரீராமருடைய வாக்கியத்தைக் கேட்டு மிகவும் மனங்குழம்பினார்கள்; மனவி இனி வேண்டியதில்லை யென்ற எண்ணங்கொண்டமையைத் தெரிவிக்கின்ற இராமரது கொடிய இங்கிதங்களினல், அந்த ஸ்ரீராமரைச் சீதையினிடம் அன்பற்றவராக ஊகித்தார்கள்.

ஸ்ரீராமர் வார்த்தையைக்கேட்ட லக்ஷ்மணர்முதலியோர்மனங்கலங்குதல்.

வெட்கத்தால் தேகத்தினுட் பதுங்கியவளாய், சீதாதேவி, விபீஷணரைத்தொடர்ந்து நடந்து, கணவரருகில் வந்துசேர்ந்தாள். அந்தக்கூட்டத்தில் ஸ்ரீராமரை யடைந்ததும், சீதாதேவி, "பெரியோர்மகரே!" என்று சொல்லி, நாணத்தினல் ஆடையைக்கொண்டு தன்முகத்தை மறைத்தவண்

சீதாதேவி ஸ்ரீராமரைக்காணுதல்.

ணம் அழலானுள். அன்றியும், மலர்ந்த முகமுள்ள அவ்வுத்தமி, தனது கணவரையே தனக்குத் தெய்வமாகக் கொண்டவளாகையால், வியப்போடும் சந்தோஷத்தோடும் நட்போடும் தனது கணவருடைய இனிய முகத்தைப் பார்க்கலானுள். உதயமாயிருக்கும் பூர்ணசந்திரன் மாசற்று விளங்குவதுபோல விளங்கிய முகமமைந்த அவ்வுத்தமி, தான் வெகுநாளாகக் காணுத தன் கணவருடைய பூர்ணசந்திரன்போன்ற முகத்தை வெகுநேரம் உற்றுப் பார்த்தபடியே, தான்பட்ட அவ்வளவு கஷ்டத்தையும் மறந்துவிட்டாள்.

நூற்றுப்பதினெட்டாஞ் சருக்கம் :
ஸ்ரீராமர் சீதையைக் கடிந்து பேசுதல்.

வெகுவணக்கத்தோடு தமதுபக்கத்திலிருந்த சீதையை நன்றுகப் பார்த்து, ஸ்ரீராமர், உள்ளத்திலிருந்து எழுந்தோங்கிய சினத்தாற் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர் :— "மங்களகரமானவளே ! போரில் எனதுசத்துருவை வென்று உன்னைமீட்டேன்; என்து வல்லமையாற் செய்யவேண்டியகாரியத்தைச் செய்து முடித்தேன். கோபத்தின் முடிவை நான் அடைந்தேன்; பகைவன் என்னை வலியவந்து ஹிம்ஸித்ததையும், நான் சாந்தப்படுத்தினேன்; எனக்குநேரிட்ட அவமானத்தையும் என்சத்துருவையும் நான் ஏககாலத்திற் போக்கிவிட்டேன். இன்று என் வல்லமையை எல்லாரும் அறிந்தார்கள் இன்று தான், என்முயற்சியும், பயன்பெற்றது. நான் மேற்கொண்டிருந்த சபதத்தை முடித்துவிட்டபடியால், இன்று முதல் தான், நான் என்னிஷ்டப்படி நடக்கலாம். உன்னைத் தனியாகப்பிரித்துச் சபலசித்தனை இராவ

ஸ்ரீராமர் சீதையின் முன்னிலையில் அவளைச்சேர்த்துக்கொள்ளும் எண்ணமில்லாமைதோன்றத் தமதுவெற்றியைக் கொண்டாடுதல்.

ணன் தூக்கிப்போகும்படி நேர்ந்த தெய்வக்குற்றமானது, மனிதனுகிய என்னுல் ஒருவாறு அகற்றப்பட்டது. தனக்கு நேரிடும் அவமானத்தை, எவனெருவன் தனது வல்லமையால் விலக்கிக்கொள்ளாம லிருக்கின்றனேவல்லமையற்ற அவ்வற்பனுக்கு, எந்தப்புருஷார்த்தந்தான் கைகூடும்? சமுத்திரத்தைத் தாண்டியதும் இலங்கையையழித்ததுமாகிய அனுமான்செய்த சிறந்த அக்காரியங்கள், இன்றுதான், பயனுள்ளன வாயின. சுக்கிரீவன் தன்சேனையுடன் போரிற்காட்டிய பராக்கிரமமும் எனக்குச் சொல்லிய நல்ல ஆலோசனையும், இன்றுதான் பயன்பெற்றனவாயின. நற்குணமற்ற தமது தமையனுகிய இராவணனைத் தாமாகவே வெறுத்துவிட்டு என்னிடம் வந்து சேர்ந்து என்னிடத்து அன்பைக்காட்டிய விபீஷணர் பட்ட சிரமம், இன்றுதான் பயன்பெற்றது" என்ருர்.

சீதையழுவதைக் கண்ட ஸ்ரீராமருக்குக் கோபம் மிகுதல்.

இராமர் இவ்விதமாகத் தன்னைச் சேர்த்துக்கொள்ளுகின்ற எண்ணமின்றிச் சொல்ல, சீதாதேவி, மான்போல மலர்விழித்துக் கண்ணீரைப் பெருக்கலாளுள். அவளைப் பார்க்கப்பார்க்க, நன்ருக நெய்யூற்றப்பட்ட அக்கினி கொழுந்து விட்டெரிவதுபோல, ஸ்ரீராமருக்குக் கோபம் அதிகமாகப் பொங்குவதாயிற்று.

இராமர்சீதாபிராட்டியைக் கடிந்து பேசுதல்.

அப்பொழுது, ஸ்ரீராமர், தமதுபுருவங்கள்நெற்றியின் மீது முரிந்துஏறக் குறுக்காகப் பார்த்து, அரக்கர்கட்கும் வானரர்கட்கும் நடுவிலே சீதையைக் கடிந்து பின்வருமாறு சொல்லலானுர்:—"சீதே! ஒரு மனிதன் சத்துருவினிடமிருந்து தனக்கு நேரிட்ட அவமானத்தையகற்றுதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ, அவ்வளவுமுயற்சிகளும்என்னுற்செய்யப்பட்டன; தவத்தினுல் ஆத்மஸ்வரூபத்தை யுணர்ந்த அகஸ்தியமாமுனிவர் இல்வலன்

வர்ழ்ந்திருந்ததனற் செல்வதற்கு அரியதாயிருந்த தென் திசையை அவனை யொழித்து எவ்வாறுவென்றீரோ, அவ் வாறே, நான், சத்துருவின் கைப்பட்டிருந்த உன்னை, எனது சினங்காரணமாகப் பகைவனை வென்று மீட்டேன். மங்கள கரமாக விருப்பவளே! எனதுநண்பர்களுடைய பலத்தால் நான் இப்போரில்நேர்ந்த பரிசிரமத்தைக் கடந்தது, உன க்காகவன்றென்பதை, நீ தெளிவாயாக. நல்லொழுக்கத் தைப் பாதுகாத்துக்கொள்ளவும், நான்குபக்கங்களிலுமி ருந்துஉண்டான கொடுஞ்சொற்களை மாற்றவும், உயர்குலத் திற்கு அபகீர்த்தியை விளையாமலிருக்கவும் கருதியே, நான், இவ்வளவு சிரமப்பட்டு வெற்றிபெற்றேன்; சத்துருவின் மனையில் வசித்ததனல் நல்லொழுக்க முடைமையிற் சந்தே கப்படுமாறுஉள்ள நீ என்கண்ணெதிரில் நிற்பதானது, கண்ணேய் வந்தவனது கண்ணுக்குத் தீபம் எவ்வளவு நோவை யுண்டாக்குமோ அவ்வளவுவருத்தத்தை உண் டாக்குகின்றது; இதுதிண்ணம். ஆகையால், சீதே! இதோ பத்துத் திசைகளு மிருக்கின்றன; உனக்கு எவ்விடத்திற் போகவேண்டுமென்று இஷ்டமோ, அவ்விடம் போக, நான் விடைகொடுத்துவிட்டேன். உனக்கு இஷ்டமான இடத்திற்கு நீ போகலாம். மங்களமானவளே! உன்னல் இனி எனக்கு ஒன்றும் ஆகவேண்டுவதில்லை. நற்குலத் திற் பிறந்திருக்கின்ற பராக்கிரமமுள்ள எந்த மனிதன் தான், பிறன்வீட்டில் வசித்த மனைவியை, மறுபடியும், தனது அன்பான மனைவியென்றுமனப்பூர்வமாக ஒத்துக் கொள்வான்? இராவணனற் கவரப்பட்டும் அவனுடைய கொடுங் கண்களாற் பார்க்கப்பட்டும் சீலத்தை யிழந்த உன்னை, பெரியகுலத்திற் பிறந்தவனென்று சொல்லிக் கொண்டு, நான், மறுபடியும் எவ்வாறு அங்கீகரிப்பேன்? என்புகழைப் பாதுகாத்துக்கொள்ளுதற்பொருட்டு, நான் உன்னை மீட்டேனேயன்றி, உன்னிடத்தில் ஆசையி னல் உன்னை மீட்கவில்லை. ஆகையால், நீ, இவ்விடம்

விட்டு உன்னிஷ்டமான இடத்துக்குப் போகலாம். நான் என்புத்தியைக்கொண்டு ஆலோசனைசெய்து சொல்லியது இது; அநாதையாகிய நீ, இனி இலட்சுமணன் பரதன் வானராராஜராகிய சுக்கிரீவர் அரக்கவேந்தராகிய விபீஷணர் என்னும் இவர்களுள் எவருடைய வீட்டிலாவது சுகமாக வசிக்கலாம்; அவர்கள் உன்னைக் காப்பாற்றுவார்கள். வெகு அழகான ரூபம் பொருந்தி மனத்துக்குப்பிடித்த உன்னை, தன்வீட்டில் வசிக்கையில், பரிசுத்தமுள்ள வளாக இராவணன் விட்டிருக்கமாட்டான்" என்றார்.

சீதையின் கலக்கம்.

மிக்க அன்புக்கிடமான சொற்களை யெதிர்பார்த்து வந்த சீதாதேவி, தனது அன்பர் அவ்வாறு அன்பற்ற சொற்கள் சொல்லியதைக் கேட்டு, யானையின் துதிக்கையாற் பெயர்த்து உதறப்பட்ட சல்லகி யென்ற கொடிபோல மிகவும் நடுநடுங்கிக் கண்ணீரைத் தாரைதாரையாக வடிக்கலானாள்.

நூற்றுப்பத்தொன்பதாஞ் சருக்கம்:
தனது சுத்தியைத் தெரிவிக்குமாறு சீதாதேவி அக்கினியிற் பிரவேசித்தல்.

சீதையின் வருத்தத்தோடுகூடிய நாணம்.

சீதையைப்பார்த்து மயிர்க்கூச்செறியும்படி கடிந்து அவ்வளவு கோபத்துடன் ஸ்ரீராமர் சொல்லவே, அவ்வுத்தமி, மிகவும் நொந்தவளானாள். தான் அது வரையில் ஒருபொழுதுங் காதினாற் கேட்டிராத கொடுஞ் சொற்களைத் தனது கணவர் சொல்லக் கேட்டு, அச்சீதாதேவி, அப்பெருஞ்சபையில் நாணத்தால் மிகவுந் தலைகவிழ்ந்தவளானாள். அம்புபோலத் தனதுமனத்தைக் குத்திவருத்திய அச்சொற்களைக்கேட்டு, சீதை, வெட்கத்தினால்தனது தேகத்திலேயே ஒடுங்கியவளாய் மிகவுங் கண்ணீர் வடித்தாள்.

அதன்பிறகு, கண்ணீரினல் நனைந்த தனது முகத்தைத் துடைத்துக்கொண்டு, தழுதழுத்த சொற்களாற் பின்வருமாறு சீதாதேவி தனது கணவரைநோக்கி மெல்லச் சொல்லலானுள்:—"வீரரே! அற்பபுருஷன் அற்ப குணமுள்ள ஒரு ஸ்திரீயைப் பார்த்துப் பேசுவதுபோல, தாங்கள் என்னைப்பார்த்து, கேட்பதற்கும் அச்சத்தையுண்டாக்குகின்ற தகாத கொடிய வார்த்தைகளை என் சொல்லுகின்றீர்கள்? மகாபாகுவே!

சீதை தன் நடக்கையைத் தெளிவிக்குமாறு ஸ்ரீராமரிடம் சில கூறுதல்.

தாங்கள் எண்ணுகின்றபடி நான் இல்லை; இதை எனது ஸத்தியத்தின்மேல் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன். தாங்கள் என்னை நம்புக. சாதாரணமகளிரின் நடக்கையால் ஸ்திரீஜாதி முழுவதையும் அவ்வாறே யிருக்குமென்று தாங்கள் சந்தேகிக்கின்றீர்கள்; என்னைத் தாங்கள் ஆராய்ந்தறிந்தவர்களாகையால், என்மேலுள்ள அவநம்பிக்கையை விட்டிடுங்கள். பிரபுவே! வேறொருவன் பரவசையான என்னைத் தொட்டானென்று என்மீது குற்றஞ் சொல்வீர்களே யானல், அக்குற்றம், நான் வேண்டுமென்று செய்த தல்ல; என்மனப்பூர்வமாக நடவாத அவ்விஷயத்தில் தெய்வத்தின்மீதுதான் குறை கூற வேண்டும். எனது வசத்திலுள்ள எனது உள்ளம், எப்பொழுதும் தங்களிடமே குடிகொண்டிருக்கின்றது; வல்லமையற்ற பேதையாகிய நான், பராதீனமாகிய எனது உடம்பின் விஷயத்தில், என்ன செய்ய முடியும்? தங்களுடன்கூடவளர்ந்ததனலும் இத்தனைநாள் நான் பழகியிருப்பதனலும் என் குணங்களைத் தாங்கள் நன்றாக அறிந்திராதபட்சத்தில், நான் அக்காரணத்தினலே அடியோடு கேடடைந்தவளாவேன். மகாவீரரே! என்னைப் பார்த்துவரும்படி அனுமானை இலங்கைக்கு அனுப்பினீர்களே, எனது நடத்தை கொடியதென்று எண்ணியிருந்தால், என்னை, அப்போதே ஏன் விட்டிருக்கக்கூடாது?

வீரரே ! அனுமான் என்னிடம் இவ்வாறு தங்களுடைய அபிப்பிராயமென்ற சமாசாரத்தை அப்பொழுதே சொல்லியிருந்தால், தாங்கள் என்னைக் கைவிட்டபின்பு இப்பிழைப்பால் எனக்கு என்னபயனென்று எண்ணி, என்பிராணனை அப்பொழுதே அவன் முன்பே விட்டிருப்பேனே ! தங்கள்பிராணனை இவ்வளவு அபாயங்களுக்கு உள்ளாக்கிக்கொண்டு, தாங்களும் இவ்வளவு வருத்தமெடுத்துக்கொண்டிருக்கவேண்டாமே ; தங்களதுநண்பர்களின் பயனற்ற பரிசிரமமும் நேர்ந்திராது. புருஷசிங்கமே ! கோபத்தினுற் கவரப்பட்டுத் தாங்கள் அற்பமனிதன்போல எனது பெண்தன்மையைக் கருதினீர்களேயன்றி, என்து சீலத்தைப்பற்றிக் கொஞ்சமேனும் ஆலோசிக்க வில்லையே ! நல்லொழுக்கமுணர்ந்தவரே ! ஜநகமஹாராஜரை ஒருவியாஜமாகக்கொண்டு பூமிதேவியினிடந்தோன்றிய என் பிறப்பையும், எனது மிக்க நடத்தைகளையும்தாங்கள் மதிக்கவில்லையே ! சிறுபருவத்திலேயே, பாலராயிருந்ததாங்கள், என்னைப் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டீர்கள் ; அதுமுதல் என்து விசுவாசமும் எனது நடத்தையும் தங்களுக்கு நன்முகத்தெரிந்திருக்கவேண்டும் : இவைகளெல்லாவற்றையும் மறந்தீர்களே !''

இலட்சுமணரை நோக்கிச் சீதாதேவி அக்கினிப் பிரவேசத்திற்குச் சிதையேற்படுத்தச் சொல்லுதல்.

என்று வருத்தத்தோடு சொல்லி அழுதுகொண்டே கண்களில் நீர்ததும்ப, சீதாதேவி, தனக்கு முன்பாக வெகு பரிதாபமான நிலையிற்சிந்தைகொண்டிருந்த இலட்சுமணரைப் பார்த்துச் சொல்லலானுள் :—

"இலட்சுமணரே ! எனக்காகச் சிதையொன்று அடுக்கி அதில்நெருப்புமூட்டுங்கள் ; எனக்கு இப்பொழுதுஉண்டாயிருக்கின்றவருத்தத்திற்கு, இதுதான், ஏற்றமருந்து. பொய்யான அபவாதத்தால் வருத்தமடைந்தநான், இனிப் பிழைத்திருக்கப் பொறேன். பாதிவ்ரத்யம் முதலிய குணங்களிருந்தும், சபையில் மனந்தெளியாத

கணவனுற் கைவிடப்பட்ட யான், எனக்குத்தக்க கதியை யடையுமாறு அக்கினிபிரவேசஞ்செய்கிறேன்" என்றாள்.

சீதை அவ்வாறு சொன்னதும், வெகு பராக்கிரம சாலியாகிய இலட்சுமணர், மிக்க பரிதாபமான தோற்றத்துடன், ஸ்ரீராமரது முகத்தைப்பார்த்தார். வீரியவானான லக்ஷ்மணர், ஸ்ரீராமருடைய முகக்குறியால் அவரதுகருத்தை யுணர்ந்து, அவரது இஷ்டப்படியே சிதையை அடுக்கினர்.

இராமர் அநுமதியின்மேல் லக்ஷ்மணர் சிதையை யடுக்குதல்.

சீதாதேவி, தமதுதலையை வணக்கிக்கொண்டு குனிந்திருந்த ஸ்ரீராமரை மெதுவாக வலம்வந்து, கொழுந்துவிட்டெரியுகின்ற அவ்வக்கினியைக் கிட்டி, தெய்வங்களுக்கும் அந்தணர்களுக்கும் நமஸ்காரம்பண்ணி, அஞ்சலியுடன் அவ்வக்கினியின் சமீபத்திலே நின்றுகொண்டு பின்வருமாறு சொல்லலுற்றாள்:— "எனது உள்ளம் என்றென்றைக்கும் ஸ்ரீராமரைவிட்டு வழுவாமலிருந்ததென்பது உண்மையானால், இவ்வுலகத்துக்கே சாட்சியாக இருக்கும் அக்கினிபகவான் என்னைப் பாதுகாக்கட்டும். ஸ்ரீராகவர் நன்னடத்தையுடைய என்னைத் துஷ்டையென்று நினைப்பதனால், இவ்வுலகத்துக்குச்சாட்சியாகவிளங்கும் அக்கினிபகவான், என்னை இரட்சிக்கட்டும். செய்கையினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் நான் எல்லாத்தருமங்களையும் அறிந்த ஸ்ரீராகவரைவிட்டு விலகாதவளென்பது உண்மையானால், இவ்வக்கினிபகவான், என்னைக் காப்பாற்றட்டும்; சூரியன் வாயுபகவான் திக்குகள் சந்திரன் பகல்சந்திகள் இரவு பூமி இவைகளும் மற்றுமுள்ளனவும் என்னை நன்னடத்தையுள்ளவளென்று அறிந்திருக்குமானால், என்னை, இவ்வக்கினிபகவான் இரட்சிக்கட்டும்" என்று இவ்வாறு சபதஞ்செய்து, அவ்வக்கினியை வலம்வந்து, கொஞ்சமேனும்

சீதையின் சபதம்

சீதாதேவியின் அக்கினிபிரவேசம்.

மன்க்குழப்ப மில்லாமல் அதனுட் குதித்தாள். அவ்வண்ணம் சீதாதேவி தீக்குதித்தபொழுது, சிறுவர்களும் பெரியவர்களும் நிரம்பிய அப்பெருஞ்சபை, நடுநடுங்கிற்று. பத்தரைமாற்றுத் தங்கத்தின் நிறமுள்ள அவ்வுத்தமி, பத்தரைமாற்றுத் தங்கவணிகளணிந்தவளாய், எல்லார் கண்களுக்கும்முன்பாகக் கொழுந்துவிட்டெரியுந்தியிலே குதித்தாள். மூவுலகத்திலுள்ள எல்லா ஜநங்களும், தீயிலே புண்ணியமான ஆஜ்யாஹுதி விழுவதுபோல மகாபாக்கியவதியாகிய சீதாதேவி குதித்ததைத் தங்களதுகண்களாற் பார்த்தார்கள். யாகத்தில் மந்திரத்தினல் ஸம்ஸ்காரமடைந்து இடைவிடாது விழும் நெய்யின் தாரைபோல, அவ்வுத்தமி தீயிற் புகுகையில், பெண்டுகள், பயத்தினுற் கதறினர்கள். சாபத்தால் ஆகாயத்திலிருந்து நரகத்தில் விழுந்தேவதைபோலச் சிதை எரியும் நெருப்பிலே விழுந்ததை, இம்மூவுலகத்தார்களான தேவ கந்தர்வ தானவர்கள், பார்த்தார்கள். அவ்வுத்தமி தீயிற் குதித்தபொழுது, அரக்கக் கூட்டங்களிலிருந்தும் வானரக்கூட்டங்களிலிருந்தும், 'ஹா! ஹா!' என்று பெருஞ்சத்தம் யாவரும் வியப்படையுமாறு உண்டாயிற்று.

நூற்றிருபதாஞ் சருக்கம்:
ஸ்ரீராமரைத் தேவர்கள் துதித்தல்.

தருமாத்துமாவாகிய ஸ்ரீராமர், அவ்வண்ணம் அரக்கர்களும் வானரர்களும் கதறிக்கொண்டு சொன்னதைக் கேட்டு மனக்குழப்பமடைந்தவராய், தமது கண்களில் நீர்ததும்பிநிற்க, கொஞ்சநேரம் தமக்குள்ளேயே 'ஏன் இவ்வளவு கொடிய செயலை நாம் செய்தோம்?' என்று ஆலோசிக்கலானர்.

இராமரது மனக்கலக்கம்.

அப்பொழுது, குபேரனும், கொடியவர்களைத் தண்டிக்கும் யமதருமராஜனும், ஆயிரங்கண்கள்படைத்த மகேந்

திரனும், சத்துருக்களை நாசம் பண்ணும் வருணனும், இடபத்துவசம் பிடித்த முக்கண்ணராய்ச் சீமானுகிய மகாதேவரும், உலகங்களெல்லாவற்றையும் படைத்தவரும் பிரமஞான மடைந்தவர்களுக்குள் உத்தமருமான பிரமதேவரும், சூரியனுக்கொப்பான் விமானங்களில் ஏறிக்கொண்டு, இலங்கைமாநகரத்துக்கு வந்து ஸ்ரீராமரைச் சேர்ந்தார்கள்.

தேவர்கள் ஸ்ரீராமரை யடைதல்.

ஆபரணங்களணிந்த தமது நீண்டகைகளை மேலே தூக்கிக்கொண்டு, தேவசிரேஷ்டர்கள், தமது முன்பாக அஞ்சலியுடன்நின்ற ஸ்ரீராமரைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானர்கள்:—"இவ்வுலகங்களவ்வளவையும் உண்டாக்கினவரே! ஞானிகளுக்குள் உத்தமரே! தேவதேவராகிய தாங்கள், சீதை அக்கினியிற் குதிக்கையில் உபேட்சை செய்யலாமா? தாங்கள் தேவகணங்களுக்குள் உத்தமரென்பதை அறியாதவர் போல ஏன் இருக்கின்றீர்கள்? தாங்கள், இவ்வுலகம் படைக்கப்படு முன்னமே இருப்பவர்; வஸுக்களுக்குள் பிரஜைகளுக்குத்தலைவராகிய ருததாமா வென்னும் வஸுவாவீர்; தாங்கள், இம்மூவுலகங்களையும் முதலிற் படைத்தவர்; தமக்குத் தாமே பிரபுவாவீர்; உருத்திரர்களுக்குள் தாங்கள் எட்டாவது உருத்திரர்; சாத்தியர்களுக்குள் தாங்கள் ஐந்தாவது சாத்தியர்; அசுவினிதேவர்கள்-தங்களுக்குக் காதுகள், சந்திர சூரியர்-கண்கள்; இவ்வுலகங்கள் படைக்கப்படுதற்கு முன்னும், இவ்வுலகங்கள் அழிந்த பின்னும் காணப்படுகின்றவர்கள் தாங்களே; பகைவர்களைத் தவிக்கச்செய்பவரே! இவ்வாறு உற்பத்தி நாசங்களற்றிருக்கும் தாங்கள், ஒன்றுந் தெரியாத ஒருமனிதன்போலச் சீதாதேவியை இவ்வண்ணம் அவமதிக்கலாமா?" என்றார்கள்.

தேவர்கள் இராமரைத்துதித்துச் சீதையை அங்கீகரியாமை தகாதென்றல்.

உலோகபாலர்களான அவர்களெல்லாரும் அவ்விதமாகச் சொன்னதும், இவ்வுலகங்களுக்கெல்லாந் தலைவரும் தருமத்தை யாராய்ந்தறிந்தவர்களுக்குள்உத்தமருமான ஸ்ரீராமர், அத்தேவதைகளை நோக்கிப் பின்வருமாறுசொல்லலானார்:—"என்னை, நான், தசரதமகாராஜருடைய குமாரனுகிய இராமனென்னும் மானிடனென்றே கருதியிருக்கின்றேன். ஆனால், எனதுஸ்வரூபம் என்ன? யாருடன் சம்பந்தமுடையேன்? எதற்காகப் பிறந்தவன்? இவைகளைப்பற்றி விவரமாகத் தாங்கள் சொல்லவேண்டும்" என்றார்.

ஸ்ரீராமர் தமது உண்மைநிலையை மறுத்துப் பிரமதேவரை அதனை யுணர்த்துமாறு கேட்டல்.

காகுத்ஸ்தர் அவ்விதமாகச்சொன்னதை, பிரமஞானிகளிலுத்தமரான பிரமதேவர், கேட்டு, பின்வருமாறு சொல்லலானார்:—"இராமரே! உண்மையான பராக்கிரமம்பெற்றவரே! நான் உண்மை கூறுகின்றேன்; சற்றுக்கேளுங்கள்: தாங்கள்தாம்—இலட்சுமியை யுடையவரும், சக்கரத்தைப் படைக்கலமாகவுடையவரும், எங்கும் பரந்துறைகின்றவருமான நாராயணக்கடவுள்; தாங்கள்தாம், ஒற்றைக் கொம்புடனே தோன்றிய ஆதிவராகமூர்த்தி; தாங்கள்தாம்—இறப்பு எதிர்காலங்களிலுண்டாகும் பகைவரை வெல்பவர்கள்; எது அழிவற்றதென்று சொல்லப்படுகின்றதோ, அதுவே தாங்கள். எல்லாவற்றினும் வளர்ந்திருப்பதும் எல்லாவற்றையும் வளர்ப்பதுமான ஸ்வரூபமுடையவர்-தாங்கள். ஆறுவிதவிகாரங்களின்றி விளங்கும்வஸ்து-தாங்கள். முதலிலும் இடையிலும் கடையிலும் விளங்கும் வஸ்து—தாங்கள்; இராகவரே! தாங்கள்தாம்-எல்லாவுலகங்களுக்கும் நன்மையை விளைக்கக் கருவியானவர்: எல்லார்க்குந் தலைவர்; நான்கு புருஷார்த்தங்களையும் அளிக்கவல்ல நான்கு திருக்கைகளை யுடையவர்; சார்ங்கமென்றவில்லைக்கைப்பற்றியவர்; ஐம்புலன்களையும்

பிரமதேவர் அவ்வாறே உணர்த்தல்.

அடக்கியாள்பவர். தாங்கள்—வெகு கொடையுள்ளவர்; சேதநாசேதநங்களினும் மேம்பட்டவர்; ஒருவராலும் வெல்லப்படாதவர்; நந்தகமென்ற கட்காயுதத்தைக்கைப்பிடித்தவர்; எங்கும் வியாபித்திருக்கின்றவர்; உலகத்துக்குச் சுகத்தைக் கொடுப்பவர்; பெருவல்லமையமைந்தவர்; தேவசேனையைப் போரிட நடத்திப் போகுபவர்; சூடிகளெல்லாரையும் பாதுகாப்பவர்; புத்தி, சத்துவம், பொறுமை அடக்கம் என்ற இவைகளை நடத்துபவர். இவ்வுலகத்தைச் சிருஷ்டிப்பதும் இவ்வுலகத்தை யழிப்பதும் தாங்களே. தாங்கள்—தேவேந்திரனுக்குச் சகோதரர்; மதுவென்றஅசுரனை யழித்தவர்; இந்திரனுடைய கருமத்தை யநுஷ்டிப்பவர்; எல்லாப்பாக்கியங்களையும் பெற்றவர்; நாபியில் விளங்கும் தாமரைமலரில் என்னையே உண்டாக்கியவர்; போரிற் சத்துருக்களை நாசம் பண்ணுபவர். தேவலோகத்து மஹர்ஷிகள், தங்களைத்தான் ரக்ஷகரான அடைக்கலமாகச் சொல்லுகின்றார்கள். தாங்கள்தாம்—நூறு சாகைகளாகிய கொம்புகளையும், அனேகவிதிரூபமாகிய நாவையும் படைத்துக் கருமங்களை யாலோசிக்கின்ற வேதரூபமாகிய மஹாவ்ருஷபம்; தாமாகவேதோன்றி இம்மூவுலகங்களையும் முதன்முதலிற் படைத்தீர்கள்; உலகமுண்டாவதற்குமுன்னமே தோன்றி, சித்தர்கள் சாத்தியர்கள் என்ற இவர்களுக்கெல்லாம் அடைக்கலமாக விருக்கின்றீர்கள். யஜ்ஞமும், தாங்கள்; அந்தயஜ்ஞத்தின் வஷட்காரமந்திரமும், தாங்கள்; ஓங்கார மந்திரமும், தாங்கள்; பெரிய தவசிகளால் வணங்கப்பட்டவர்கள்-தாங்கள். தங்களுக்கு உத்பத்தியென்பதும் நாசமென்பதும் கிடையாது. தாங்கள் இன்னபடியுள்ளவரென்பதை, எவர்கள்தாம், கண்டறிந்திருக்கின்றார்கள்? எல்லாப்பிராணிகளிடத்திலும் விசேஷமாக அந்தணர்களிடத்திலும் பசுக்களிடத்திலும் ஆகாயத்திலும் எல்லாத்திக்குகளிலும் மலைகளிலும் காடுகளிலும் தாங்கள் விளங்குகின்றீர்கள். ஆயிரங்கால்கள்

ஆயிரங்கண்கள் ஆயிரம்முகங்களுள்ள விராட்புருஷராக விருந்து எல்லாப் பிராணிகளையும் மலைகளுடன் விளங்கும் இவ்வுலகத்தையும் பாதுகாப்பவர்—தாங்களே. இவ்வுலகம் பிரளயகாலத்தில் அழிவையடையும்பொழுது, ஜலத்தின்மேல் ஆதிசேடனது உடலிற் படுத்துக்கொண்டு தேவர்கள் கந்தர்வர்கள் தானவர்கள் இவர்களுடன்கூடிய இம் மூவுலகங்களையும் குட்சியில் வகிப்பவர்—தாங்களே; இராமரே! நான், பரப்பிரமமாகிய தங்களுடைய இருதயம்; ஸரஸ்வதி தேவி—தங்களுடைய நாக்கு; மற்றைத் தேவதைகள்—தேகத்திலுண்டான உரோமங்கள். பிரபுவே! தாங்கள் ஒருதடவை கண்ணிமைப்பது-ஓரிரவு; ஒருதடவை கண்விழிப்பது-ஒருபகல். வேதங்களென்பன—தங்களது மூச்சுக்கள்; பலபடி சொல்லி என்ன பயன்? தங்களையன்றி ஒருபொருளுமே உலகத்தில் இல்லை. எல்லாவுலகமும்—தங்களுடைய சரீரம்; இப்பூமியின் கடினத்தன்மை—தங்களுடைய உறுதி; அக்கினியென்பது—தங்களுடைய கோபம்; தங்களுடைய ஸ்ரீவத்ஸம்போல் விளங்குஞ் சந்திரன்தான்—தங்களுடைய அருள். முற்காலத்தில் இம்மூவுலகங்களையும் மூவடிகளால் தாங்கள் அளந்தீர்கள்; அப்போது, பலியென்னும் அசுரனைச் சிறையிலிட்டு மகேந்திரனைத் தாங்கள் மன்னவனுக்கினீர். சீதாதேவியென்பவள், இலட்சுமியாவள்; தாங்களோ, விஷ்ணுவின் அவதாரம்; கிருஷ்ணனென்பவரும், தாங்களே; பிரமதேவரும், தாங்களே; இராவணனை வதைக்கவேண்டுமென்றே, தாங்கள், மனிதரூபங்கொண்டு திருவவதரித்தீர்கள். தருமத்தை நிலைநிறுத்தியவர்களுக்குள் உத்தமரே! இராவணவதமாகிய எங்களுடைய அந்தக்காரியத்தைத் தாங்கள் செய்துமுடித்தீர்கள். இராமரே! தங்களால் இராவணன் கொல்லப்பட்டான். இனித் தாங்கள் சந்தோஷமாகத் தேவலோகத்துக்குத் திரும்பலாம். தங்களுடைய பலமும், வீரியமும், வீண்போகாதன; தங்கள் பராக்கிரமமும், வீண்போகாதது;

தங்களுடைய தரிசனமும், வீண்போகாத தரிசனம்; தங்களுடைய தோத்திரமும், வீண்போகாத தோத்திரம். தங்களிடம் பக்திபண்ணும் மனிதர்களுடைய மனோரதங்களும், ஒருபொழுதும் வீண்போகமாட்டா. புராணராயும், புருஷோத்தமராயுமிருக்கும் தங்களை உண்மையாகப் பக்தி செய்யும் மனிதர்கள், இம்மையிலும் மறுமையிலும் தங்களுக்கு வேண்டிய எல்லாவகைச்சுகங்களையும் அடைகின்றார்கள்" என்றார்.

பிரம தேவர் செய்ததோத்திரத்தையுரைத்தலால் விளையும்பயன்.

வேதசம்பந்தமாயும், ஒருகாலத்தும் அழியாமல் நித்தியமாயும், பழைய இதிகாசமாயு மிருக்கும் இந்தத்தோத்திரத்தைச் சொல்லும் மனிதர்களுக்குத் தோல்வியென்பது ஒரு பொழுதுங்கிடையாது.

நூற்றிருபத்தோராஞ் சருக்கம்: அக்கினிபகவான் கொணர்ந்து கொடுத்த சீதாதேவியை ஸ்ரீராமர் அங்கீகரித்தல்.

அவ்வாறு பிரமதேவர் சொன்ன இனிய சொல்லைக் கேட்டு, அக்கினிபகவான், சீதாதேவியை மடியில் வைத்துக்கொண்டு வெளிக்கிளம்பினர். அக்கினிபகவான், அந்தச் சிதையை உதறிவிட்டு, புருஷரூபத்துடன், விதேஹவம்சத்தவளாய் ஜனக மஹாராஜரது குமாரியாகிய சீதையை எடுத்துக்கொண்டு வெளிக்கிளம்பினர். இளஞ்சூரியன்போன்ற நிறமுள்ளவளும், பத்தரைமாற்றுத் தங்கத்தாற்செய்த ஆபரணங்களையணிந்தவளும், செங்நிற வாடையணிந்தவளும், நெறிந்தகருங்குழலுடன் விளங்குபவளும், மலர்களும் அணிகளும் ஊருக்குலையாதிருக்கப் பெற்றவளும், தீக்குதித்த சமயத்தில் தானிருந்த உருவத்

அக்கினிபகவான் சீதையை இராமரிடம் கொணர்ந்து கொடுத்தல்.

துடன் அப்படியே சோபிக்கின்றவளும், சிறுமியும், உத்தமியுமான சீதாதேவியை, அக்கினிபகவான், மடியில் வைத்துக்கொண்டு வெளியில் வந்து ஸ்ரீராமரிடங் கொடுத்தார்.

அக்கினி பகவான் சீதாதேவியைக் குற்றமற்றவளென வுணர்த்தல்.

பிறகு, இவ்வுலகத்துக்குச் சாட்சியான அக்கடவுள், பின்வருமாறு சொல்லலானார்:—"இராமரே! இவள்தான் சீதாதேவி; இவளிடம் ஒருவகைப்பாவமுமில்லை. நல்வழியில் தவறாது ஒழுகுபவரே! இவ்வுத்தமி, வாக்கினாலாவது மனத்தினாலாவது ஸங்கல்பத்தினாலாவது பார்வையினாலாவது தங்களையன்றி வேறொருவனைக் கருதியவளல்லள்; தங்களைவிட்டுப் பிரிந்து ஒருவருமற்ற காட்டில் தனிமையாய் வெகுபரிதாபமான நிலையிலிருக்கையில், இவ்வுத்தமி, தனது பலத்தினாற் செருக்கடைந்த இராவணனாற் கவரப்பட்டாள்; தங்களிடமே மனத்தை வைத்தவளும் தங்களையே கதியாக நம்பினவளுமான இவள், இராவணனுடைய அந்தப்புரத்தில் தகைந்து காக்கப்பட்டு, கொடியவரும் குரூபமுள்ளவருமான இராட்சசிகளின் கூட்டங்களாற் பாதுகாக்கப்பட்டாள். அரக்க மன்னவன் பலவிதமாக ஆசைகாட்டவும், பலவகையாக அச்சமுறுத்தவும், எப்பொழுதும் தங்களையே தியானம்பண்ணிக்கொண்டிருந்த இவ்வுத்தமி, அவ்வரக்கனை ஒருபொருட்டாகக் கருதவில்லை. பரிசுத்தமான மனமுள்ளவளும் பாபமற்றவளுமான இச்சீதாதேவியை, இராகவரே! ஏற்துக்கொள்ளுங்கள்; என்சொல்லுக்குக் குறுக்குச் சொல்லவேண்டாம்; இவ்வுத்தமியை ஒப்புக்கொள்ளும்படி நான் கட்டளையிடுகின்றேன்" என்றார்.

அதைக் கேட்டு, பேசுபவர்களிற் சிறந்தவராய்த் தருமாத்துமாவாகிய ஸ்ரீராமர், சந்தோஷமடைந்து, தமது கண்களில் ஆனந்தபாஷ்பந்ததும்ப, கொஞ்சநேரம் ஆலோ

சித்துப் பார்த்தார். வெகுகாந்தியுடனும் வல்லமையுட னும் விளங்கிய ஸ்ரீராமர், அதன்பிறகு, அவ்வாறு கூறிய அவ்வக்கினிபகவானை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:-"சீதையினிடம் பாவமில்லை யென்பது, இம்மூவுலகங்களிலும் திண்ணம். ஆனாலும், அவள் இராவணனுடைய அந்தப்புரத்தில் வெகுநாள் வசித்திருந்தாள். நான் சீதையை இவ்விதமாகப் பரிசோதியாமல் ஒத்துக்கொள்வேனேயானால், அப்போது, பெரியவர்களெல்லாரும், 'தசரதகுமாரனை ராமன், காமபரவசனை மூடன்போலும்' என்று என்னைப்பற்றிப் பழித்துச் சொல்வார்கள். 'ஜனகருடைய குமாரியாகிய சீதை, என்னையன்றி வேறொருவனைத் தனது மனத்தாலும் கருதாதவள்' என்றும், 'என்னிடம் மிகஅன்புள்ளவள்' என்றும், 'என்னுடையஉள்ளத்தைத் தொடர்ந்துநடப்பவள்' என்றும் எனக்கும் நன்றாகத் தெரியும்; ஆனால், உண்மையை உறுதியாகக்கொண்ட நான், இம்மூவுலகங்களும் நம்பும் பொருட்டு, சீதை அக்கினிபிரவேசம் செய்யும்போதும் உபேட்சித்திருந்தேன். சமுத்திரத்தினால் எவ்வண்ணம் கரையைக் கடக்கமுடியாதோ, அதுபோல, தனது பதிவிரதாதருமத்தினாற் பாதுகாக்கப்பெற்ற நெடுங்கண்ணளான இவ்வுத்தமியை, இராவணனாலும், ஒருவிதமாகவும் வரம்பு மீறிப் பலாத்காரிக்கமுடியாது. கொழுந்துவிட்டெரியுந் தீயை எப்படி ஒருவனாற் கையாலவிக்கமுடியாதோ, அதுபோலவே, தனது பதிவிரதாதருமத்தால் விளங்குகின்ற இச்சீதையை, அத்துஷ்டனால் தனதுமனத்தினாற்கூடப் பலாத்காரிக்க முடியாது. இவள், இராவணனது ஐசுவரியத்திற்கு உரியவளல்லள்; ஏனெனில், சூரியனைவிட்டுக் காந்தி எவ்வாறு விலகமுடியாதோ, அதுபோல, சீதையும் என்னைவிட்டு வேறுபடமாட்டாளன்றே! ஜனகமகாராஜாவின் புதல்வியாகிய சீதை, இம்மூவுலகத்துமடந்தைமார்க்குள்

ஸ்ரீராமர் சீதையைச் சோதித்த காரணத்தைச் சொல்லி, அப்பிராட்டியைஅங்கீகரித்தல்.

ளும் உத்தமி. தனக்குக்கிடைத்த புகழை ஒருவன் எவ் வண்ணம் நீங்கமாட்டானே, அவ்வண்ணமே, இவளை விட்டு நீங்குதலும் தகாத தொன்றும். நண்பர்களும் உலகத்திற் கௌரவம்பெற்றவர்களுமான நீங்களெல்லீரும், எனது நன்மையை நாடி இவ்வண்ணஞ் சொல்லும்போது, நான் அதைத் தட்டுதலும் தகாத தொன்றும்" என்று இவ் வாறு தமது அறிவுக்கு ஏற்றவண்ணஞ் சொல்லி, பல வகைச் சுகங்களை அனுபவிக்கத் தகுந்தவரான ஸ்ரீராமர், தமது பலத்துக்காகவும் தாம்செய்யும் நற்காரியங்களுக் காகவும் வலிமைபடைத்தவர்களாற் புகழப்பட்டுத் தமது மனைவியை அங்கீகரித்தவராய், மிக்க சுகத்தை அனுப விக்கலானார்.

நூற்றிருபத்திரண்டாஞ் சருக்கம்: மஹேசுவரரும் தசரதரும் ஸ்ரீராமரை வாழ்த்துதல்.

ஸ்ரீராமர், அவ்வளவு அழகாகச் சொன்ன சொல்லைக் கேட்டு, மகேசுவரர், அதனிலும் அழகாகப் பின்வருமாறு சொல்லலுற்றார்:— "தாமரையிதழுக் கொப்பான கண்க ளமைந்தவரே! நீண்டகைக ளுள்ளவரே! விசாலமான மார்புள்ளவரே! பகைவரைத்தவிக்கச்செய்பவரே! ஆயு தங்களை யேந்தியவர்களுக்குள் உத்தமரே! இவ்விதமா கத் தாங்கள் இராவணனை வதைசெய்தது, வெகுஆச் சரியமான காரியம். இராமரே! இவ்வுல கத்தை முற்றிலும் மூடியிருந்த இராவண பயமென்னும் பேரிருளைத் தாங்கள் தெய் வாதீனமாகப்போரில் அகற்றினீர்கள். மிக்க திறலுள்ளவரே! இனிமேல், தாங்கள், வெகு பரிதாபமான நிலையிலிருக்கும் பரத னுக்கும் புகழ்பெற்ற கௌசல்யைக்கும் தேற்றரவுகூறி,

சிவபெருமான் இராமரைக் கொண்டாடிச் செய்யவேண்டு வனவற்றைத் தெரிவித்தல்.

கைகேயியையும் இலட்சுமணருடைய தாயாகிய சுமித்திரையையும் கண்டு, அயோத்தியில் அரசாட்சியைக் கைக்கொண்டு, அந்நகரத்திலுள்ள நண்பர்களைக் களிப்பித்து, இக்ஷ்வாகுவமிசத்தை நிலைநிறுத்தி, அசுவமேதயாகஞ் செய்துமுடித்து, ஒருவராலும் அடையக்கூடாத பெரும் புகழைப் பெற்று, அந்தணர்களுக்குப் பலவகைப்பொருள்களைத் தானஞ்செய்து, அதன்பிறகு திவ்வியலோகத்துக்குப் போகவேண்டும்".

சிவபெருமான் இராமரைக் காணவந்த தசரதரை அவர்க்குக் காட்டுதல்.

"தங்களைப் பெற்றதனால் நற்கதியையடைந்து இந்திரலோகத்துக்குச் சென்றவரும் இந்தமனிதவுலகத்தில் தங்களுக்குத் தந்தையாகவிருந்து புகழ்பெற்றவருமான தசரதமகாராஜர், விமானத்திலேறி, இதோ வந்திருக்கின்றார்; தம்பியாகிய இலட்சுமணருடன், அவரைத் தாங்கள் நமஸ்கரியுங்கள்" என்றார் காதேவர் சொன்ன சொல்லைக் கேட்டு, ஸ்ரீராமரும், இலட்சுமணருடன், விமானத்தின்மேலிருந்த தமது தந்தைக்கு நமஸ்காரஞ்செய்தார். உடனே, ஸ்ரீராமரும், இலட்சுமணரும், ஒப்பற்ற காந்தியால் விளங்கிக்கொண்டு மாசற்ற ஆடையணிந்து விளங்குந் தந்தையைப் பார்த்தார்கள்.

இராமர், தம்பியுடன், தசரதரை வணங்குதல்.

விமானத்தின்மீதிருந்த அந்தத் தசரதராஜரும் தமது உயிருக்கும் மேலாகத் தாம் மதித்து அன்புவைத்த தமது குமாரரைக் கண்டு, அடக்கமுடியாத சந்தோஷமடைந்து அவரைத் தமது மடியின்மேலுட்கார வைத்து, தமது கைகளினால் தழுவிக்கொண்டு, அவரைநோக்கிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினார்:— "ராம! தேவரிஷிகளின் சம்மானமாவது, சுவர்க்கலோகத்திலிருப்பாவது, உன்னைவிட்டுப்பிரிந்தபிறகு, எனக்கு விருப்பமானதன்று. இப்படி

தசரதரின் கழிவிரக்கம்.

நான் சொல்வது உண்மையே. உன்னை வனத்துக்குப் போகவேண்டுமென்று கைகேயிசொன்ன கொடியசொற் கள், எப்பொழுதும் என்மனத்தை வருத்துகின்றன. இன் று, இலட்சுமணனுடன் நீ க்ஷேமமாகவிருப்பதைக்கண்டு, உன்னை ஆலிங்கனஞ் செய்தபின்புதான், சூரியபகவான் பனியைவிட்டு நீங்குவதுபோல் நான் துக்கத்திலிருந்து நீங்கினேன். கஹோளரென்னும் அந்தணர் தமது புத்திர ராகிய அஷ்டாவக்கிரராற் கரையேறியதுபோல, நான், இன்று, நற்புத்திரனும் மகாத்துமாவுமாகிய உன்னற் கரையேறினேன். ஸௌம்யனே! புருஷோத்தமனே! இராவணனதுவதைக்காகவே உனதுபட்டாபிஷேகத்துக்கு அச்சமயத்தில் தேவர்களால் தடையுண் டானதென்பதை இப்பொழுதுதான் நான் அறிந்துகொண்டேன். ராம! சத்துருவை நாசஞ்செய்பவனே! நீ வனவாசத்தை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினதும், உன்னைப் பார்ப்பதனல், கௌசல்யை பேறுபெற்றவளாவளன்றே! ராம! நீ அயோ த்திசேர்ந்ததும், உனது பட்டாபிஷேகத்தைக் கண்ணுற் பார்க்கும் ஜனங்கள்தாம் பாக்கியசாலிகள். உன்னிடம் அன்புவைத்தவனும், பலசாலியும், நல்லொழுக்கமுள்ள வனும், தருமவழியில் நடக்கின்றவனுமான பரதனுடன் நீ சேர்ந்திருப்பதைப் பார்க்க, நான் ஆவலுட னிருக்கின் றேன். ஸௌம்யனே! சீதையுடனும் வெகு தைரிய சாலியான இலட்சுமணனுடனும் பதினன்கு வருஷகாலம் நீ வனவாசஞ்செய்தாய். வனவாசத்தை நிறைவேற்றி, என்பிரதிஜ்ஞையையும் உண்மையாகச் செய்துமுடித்தாய். போரில் இராவணனைக்கொன்று, தேவர்களையும் களிக்கப் பண்ணினாய். பகைவரை யழித்தவனே! நற்காரியஞ்செய்து உயர்ந்தபுகழையும் அடைந்தாய். நீ, உனது தம்பிகளு டன், இராச்சியபரிபாலனம் பண்ணி நீடூழி வாழ்வாயாக" என்றார்.

தசரதரது முகமன்.

கைகேயியையும் இலட்சுமணருடைய தாயாகிய சுமித்திரையையும் கண்டு, அயோத்தியில் அரசாட்சியைக் கைக்கொண்டு, அந்நகரத்திலுள்ள நண்பர்களைக் களிப்பித்து, இக்ஷ்வாகுவமிசத்தை நிலைநிறுத்தி, அசுவமேதயாகஞ் செய்துமுடித்து, ஒருவராலும் அடையக்கூடாத பெரும் புகழைப் பெற்று, அந்தணர்களுக்குப் பலவகைப்பொருள்களைத் தானஞ்செய்து, அதன்பிறகு திவ்வியலோகத்துக்குப் போகவேண்டும்".

சிவபெருமான் இராமரைக் காணவந்த தசரதரை அவர்க்குக் காட்டுதல்.

"தங்களைப் பெற்றதனால் நற்கதியையடைந்து இந்திரலோகத்துக்குச் சென்றவரும் இந்தமனிதவுலகத்தில் தங்களுக்குத் தந்தையாகவிருந்து புகழ்பெற்றவருமான தசரதமகாராஜர், விமானத்திலேறி, இதோ வந்திருக்கின்றார்; தம்பியாகிய இலட்சுமணருடன், அவரைத் தாங்கள் நமஸ்கரியுங்கள்" என்றார் மகாதேவர் சொன்ன சொல்லைக் கேட்டு, ஸ்ரீராமரும், இலட்சுமணருடன், விமானத்தின்மேலிருந்த தமது தந்தைக்கு நமஸ்காரஞ்செய்தார். உடனே, ஸ்ரீராமரும், இலட்சுமணரும், ஒப்பற்ற காந்தியால் விளங்கிக்கொண்டு மாசற்ற ஆடையணிந்து விளங்குந் தந்தையைப் பார்த்தார்கள்.

இராமர், தம்பியுடன், தசரதரை வணங்குதல்.

விமானத்தின்மீதிருந்த அந்தத் தசரதராஜரும் தமது உயிருக்கும் மேலாகத் தாம் மதித்து அன்புவைத்த தமது குமாரரைக் கண்டு, அடக்கமுடியாத சந்தோஷமடைந்து அவரைத் தமது மடியின்மேலுட்கார வைத்து, தமது கைகளினால் தழுவிக்கொண்டு, அவரைநோக்கிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினர்:— "ராம! தேவரிஷிகளின் சம்மானமாவது, சுவர்க்கலோகத்திலிருப்பாவது, உன்னைவிட்டுப்பிரிந்தபிறகு, எனக்கு விருப்பமானதன்று. இப்படி

தசரதரின் கழிவிரக்கம்.

ஷோத்தமனுகக் கருதி அர்ச்சிக்கின்றார்கள். உபநிஷத்துக் களால் அறியத்தக்கதும், வேதத்தின் கருத்தாக வுள்ள தும், பக்தியற்றவர்களுக்கு விளங்காததும், விகாரமற்றது மான பரப்பிரமமே, இராமரூபமாக அவதரித்திருக்கின்ற தாகப் பிரமாதி தேவர்கள் சொல்லியுள்ளார். சீதையும் நீயும், இவ்வளவு அன்புடன் இராமனுக்குப் பணிவிடை செய்தபடியால், நற்பயனையுமடைந்தீர்கள்; பெரும்புகழையு மடைந்தீர்கள்" என்றார்.

அவ்வாறு தருமாத்துமாவான தசரதமன்னவர், இலட்சுமணரைப்பார்த்துச் சொல்லிவிட்டு, சீதாதேவியை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார் :— "வைதேகி ! இராமன் உன்னை முதலில் ஒத்துக்கொள் ளாம லிருந்தா னென்று நீ அவனிடத் திற் சிறிதும் வருத்த மடைய வேண்டாம். இராமன், உனது நன்மையைக் கருதியே, உன்னைப் பரிசுத்தமுள்ளவ ளென்று இவ் வாறு காட்டினான். நீ உனது புருஷனுக் குப் பணிவிடைசெய்யவேண்டு மென்பது, நான் உனக்குச் சொல்லவேண்டுமா ? எனது கடமையென்று நான் சொல் லுகின்றேன்: இவன்தான் உனக்குச் சிறந்த தெய்வம்" என்றார்.

இராமர் அக்கினி பிரவேசஞ் செய்யச் சொன்னதைப்பற்றித் தசரதர் சீதையைத்தேற்றுதல்.

தமது இரண்டு குமாரர்களையும் மருமகளையும் பார்த் துத் தசரதராஜர், இவ்விதமாக அவர்களுக் குத்தாம் சொல்லவேண்டியவைகளைச் சொ ல்லிவிட்டு, தமது ஒப்பற்ற காந்தியால் விளங் கிக்கொண்டு, இந்திரலோகத்திற்கு மீண்டுஞ் சென்றார்.

தசரதர் மீண்டு செல்லுதல்.

நூற்றிருபத்துமூன்றுஞ் சருக்கம்:
இந்திரபகவான் இராமர்க்கு வரங்கொடுத்தல்.

தேவந்திரன்,வரங்கொள்ளுமாறு இராமரை வேண்டுதல்.

தசரதமன்னவர் புறப்பட்டுப்போனதும், மஹேந்திரபகவான், அஞ்சலிசெய்துகொண்டு, ஸ்ரீராமரைப் பார்த்து, மிக்க அன்புடனே பின்வருமாறு சொல்லலானார் :— "பகைவரைத் தவிக்கச்செய்பவரே! இராமரே! உத்தம புருஷரே! தங்களுடைய தரிசனமானது, வீண்போகாமல், இராவணனுடைய வதையால் எங்கள் விஷயயத்திற் பயனுள்ளதாக முடிந்தது; அதனால், நாங்கள் மகிழ்ச்சிகொண்டுள்ளோம். தாங்கள் எதை விரும்புகின்றீர்களோ, அதை வெளியிடுங்கள்" என்றார்.

இராமர் வரம் வேண்டல்.

மகேந்திரன் இப்படிச்சொன்னதும், ஸ்ரீராமர், இலட்சுமணருடனும் சீதாதேவியுடனும் அஞ்சலி பண்ணிக்கொண்டு பின்வருமாறு சொல்லலானார் :— "தேவர்களின் மன்னவரே! பேசுவதில் திறமைபெற்றவரே! என்னிடம் அவ்வளவு மிக்க அன்பு தங்களுக்குப் பொங்கியிருக்கும்பட்சத்தில், நான் கேட்டுக்கொள்ளுகின்றபடி, அவசியம் தாங்கள் செய்யவேண்டும். எந்தவானரர்கள், என்னிமித்தமாகப் போர்செய்து தங்களுயிர்களை யிழந்து யமன்மாளிகைக்குச் சென்றார்களோ, அவர்களெல்லாரும், மறுபடியும் உயிர்பெற்று எழுந்திருக்கட்டும். என்பொருட்டு எந்தவானரர்கள், தங்களின் மனைவிகளை விட்டும் தங்கள் குழந்தைகளை விட்டும் பிரிந்துவந்து, என்துவிருப்பத்தின்பொருட்டுத் தம்முயிரையும் ஒரு பொருட்டாகக் கருதாமலிருந்தார்களோ, அவ்வானரர்கள், மறுபடியும் தங்கள்மனைவிமக்களுடன் சேருமாறு கருணைகூரவேண்டும்; இதுதான் நான் கேட்டுக்கொள்ளும் வரம். பகைவரின்பெருமையையொழிப்பவரே! என்னைச் சேர்ந்த கொண்டைமுசுக்களை

யும் ரிக்ஷர்களையும் ஒருவிதநோயு மில்லாமலும் ஒருவித விரணமுமில்லாமலும், வல்லமையும் பலமும் குன்றாமலும் பார்க்க, நான் வேண்டுகின்றேன். அன்றியும், இவ்வானரர்கள் எவ்விடத்திற் சஞ்சரித்தபோதிலும், அவ்விடத்தில், காலமல்லாத காலத்திலும் முக்கியமான பழங்களும் கிழங்குகளும் உண்டாகவேண்டும்; அவ்விடத்தில் நதிகளும் தெளிந்தநீருடன் பெருகவேண்டும்" என்றார்.

இராமரது விருப்பத்தின்படியே மகேந்திரபகவான் வரமளித்தல்.

மகாத்துமாவாகிய அந்த ஸ்ரீராமர் அவ்வாறு சொன்னதை, மகேந்திரபகவான், கேட்டு, தமது அன்பை வெளிக்காட்டுகின்ற சொற்களைப் பின்வருமாறு சொல்லலுற்றார்:—"இரகுநந்தனரே! இளையவரே! தாங்கள் இப்பொழுது கேட்டது, பெருவரம். நான், ஒருபொழுதும் இரண்டுவகை சொன்னவனல்லனுகையால், தாங்கள் கேட்டுக்கொண்டவை அப்படியே உண்டாகட்டும். போரில் அரக்கர்களால் வதையுண்ட எல்லா வானரர்களும், தங்களுயிருடன் எழுந்திருக்கட்டும். தங்கள் தலையறுப்புண்டு கைகள் வெட்டுண்டு போரில் மடிந்த ரிக்ஷர்களும் கோபுச்சர்களும் உயிர் பெறட்டும். வானரர்கள், நோயற்றவர்களும், விரணமாறியவர்களும், தங்கள் வலிமையும் வல்லமையும் குன்றுதவர்களு மாகி, தூங்கிய பின்பு எழுந்திருப்பவர்போல, இப்பொழுது உயிர்பெற்று எழுந்திருக்கட்டும். அவர்களெல்லாரும், தங்கள் நண்பர்கள் பந்துக்கள் தாயாதிகள் ஸ்வஜநங்கள் என்னும் இவர்கள் யாவருடனும், மிக்க சந்தோஷத்துடன் கூடி வாழட்டும். பெருவிற்பிடித்த வீரரே! இவ்வானரர்கள் சஞ்சரிக்கின்ற இடங்களிலெல்லாம், காலமல்லாத காலத்திலும் மரங்கள் பூத்துக் காய்த்துப் பழுக்கக் கடவன; ஆறுகள் நீர் நிரம்பிப் பெருக்கடவன. முன்பு புண்பட்டு உயிரிழந்தவர்கள், இப்போது புண்மாறிய தேகத்துடன் எழுக்கடவர்கள்" என்றார்.

அப்பால், வானரவீரர்கள் யாவரும், தூங்கி விழிக்கின்றவர்கள்போல எழுந்திருந்தார்கள். அப்போது இறவாது பிழைத்திருந்தவர்கள், அதனைக்கண்டு, இதென்னவென்று ஆச்சரியமடைந்தார்கள். உடனே, பிழைத்தெழுந்த அவர்களெல்லாரும், ஸ்ரீராமருக்கு நமஸ்காரஞ்செய்தார்கள்.

தேவேந்திரனது வரதானத்தால் இறந்தவானரர் பிழைத்தெழுதல்.

தேவர்களெல்லாரும், ஸ்ரீராமர் தாம் மேற்கொண்ட காரியத்தைச் சரியாகச் செய்து முடித்ததைக் கண்டு சந்தோஷித்து, அவ்வீரரையும் இலட்சுமணரையும் முதலிற் புகழ்ந்து, பிறகு பின்வருமாறு சொல்லலானார்கள்:—"வீரரே! தாங்கள் இங்கிருந்து அயோத்திமாநகரத்துக்குச் செல்லுங்கள்; வானரர்களுக்கெல்லாம் விடைகொடுத்தனுப்புங்கள். எப்பொழுதும் தங்களிடம் அன்புபாராட்டி நிற்கும் மாசற்ற உத்தமியாகிய சீதாதேவிக்குத் தேற்றரவு கூறுங்கள். பகைவரைத் தவிக்கச் செய்பவரே! மகாத்துமாவாகிய சத்துருக்கினரையும் தங்கள் தாய்மார்களையும் தேற்றுக. தங்கள்நிமித்தம் விரதத்திலிருக்கும் பரதரை அருளுடன் பார்க்க. இங்கிருந்து சென்றதும், தங்களுடைய பட்டாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தி, குடிகளெல்லாரையும் களிக்கும்படி செய்க" என்றார்கள். இவ்வாறு சொல்லி, தேவர்கள், ஸ்ரீராமரிடமும் இலட்சுமணரிடமும் விடைபெற்று, சூரியனுக்கொப்பான தங்கள்தங்கள்விமானங்களிலேறிக் கொண்டு மகிழ்ச்சியுடன் தேவலோகஞ் சென்றார்கள்.

வானவர்கள், செய்யவேண்டுவதை இராமருக்கு நியமித்து, விடைபெற்றுச் செல்லுதல்.

ஸ்ரீராமர், இலட்சுமணருடன் அத்தேவர்களையெல்லாம் நமஸ்காரஞ்செய்து, பிறகு, வானரவீரர்களைநோக்கிச் சுகமாக இளைப்பாறும்படி கட்டளையிட்டார். அப்போது ஸ்ரீராம லட்சுமணர்களால் இரட்சிக்கப்பட்டு வெகு சந்தோஷத்துடன் விளங்கிய புகழ்பெற்ற அப்பெரு

இராமரது கட்டளைப்படி சேனை தங்குதல்.

வானரசேனையான்து, சந்திரனுல் இரவு அழகாகச்சோபிப் பதுபோலச் சோபிக்கலாயிற்று.

நூற்றிருபத்துநான்காஞ் சருக்கம் : விபீஷணர் ஸ்ரீராமருக்குப் புஷ்பகவிமானத்தைக் கொடுத்தல்.

தமது உபசாரத்தை ஏற்றுக்கொள்ளுமாறு விபீஷணர் ஸ்ரீராமரை வேண்டுதல்.

சத்துருக்களை யடக்குபவரான ஸ்ரீராமர், அன்றிரவு சுகமாகத் தூங்கியெழுந்ததும், ராக்ஷஸராஜரான விபீஷணரானவர், அஞ்சலி பண்ணிக்கொண்டு, வெற்றிவினவி, பின்வருமாறுசொல்லலானர்:—"இராகவரே! தாங்கள் ஸ்நானம்பண்ணுமாறு தீர்த்தங்களும், பல்வகை வாசனைத்திரவியங்களும், ஆடைகளும், ஆபரணங்களும், உயர்ந்த சந்தனங்களும், பலவிதமாலைகளும், சித்தமாகவிருக்கின்றன. தாமரையிதழுக்கொப்பான கண்களையுடைய மடந்தைமார், தங்களை ஸ்நானஞ் செய்துவைக்கக் காத்திருக்கின்றார்கள்: அவர்கள், தங்களை முறைப்படி நீராட்டுவார்கள். என்னைக் கௌரவப்படுத்துமாறு, அவைகளைத் தாங்கள் ஏற்றுக்கொள்க" என்றார்.

இராமர், சுக்கிரீவன் முதலானோர்க்கு அவ்வுபசாரத்தைச் செய்யுமாறு கூறுதல்.

இவ்விதமாக விபீஷணர் சொன்னதும், காகுத்தர், அவரை நோக்கி மறுமொழிகூறலானர்:—"நீங்கள், சுக்கிரீவர்முதலாகிய வானரவீரர்களை ஸ்நானம் முதலியவற்றால் உபசாரஞ்செய்க. எப்பொழுதும் சுகத்திலிருக்கவேண்டிய அந்தத் தருமாத்துமாவாகிய பரதன், என்னிமித்தம்வெகுசிரமப்படுகிறான். அவ்வீரன், சுகுமாரன்; மகாபாகு; உண்மையாகத் தனது பிரதிஜ்ஞையை நிறைவேற்றுபவன்; எனக்கு இளையவன். கைகேயியின் புதல்வனுய் வெகு தர்மிஷ்டனை அப்பரதனை

விட்டுப்பிரிந்திருக்கையில், ஸ்நாநமாவது ஆடைகளாவது ஆபரணங்களாவது எனக்கு உடன்பாடன்று; இவ்வழியானது அயோத்திக்குச் செல்லுகின்றதன்றே; செல்லுதற்கு அரிய இவ்வழியினூலேயே சீக்கிரத்தில் அயோத்திக்குத் திரும்பிப்போகக் கருதுகின்றேன்" என்றூர்.

புஷ்பகவிமானத்தால் விசைவிற் செல்லலாமென்று கூறி, இப்போது தமதுஉபசாரத்தைஏற்றுக் கொள்ளுமாறு விபீஷணர் மீண்டும் இராமரைப் பிரார்த்தித்தல்.

இவ்வண்ணம் காகுத்ஸ்தர் சொன்னதும், விபீஷணர், அவரைப்பார்த்துப் பின்வருமாறு மறுமொழி சொல்லலானூர்:—"சக்கரவர்த்தி திருமகரே! ஒருநாளில் நான் தங்களை அயோத்யாநகரத்திற் சேர்க்கின்றேன்; இராவணனூர் எனது தமையனூரான குபேரனூரிடமிருந்து வலியக்கொண்டுவந்த திவ்வியவிமானம் புஷ்பகமென்பது ஒன்று இருக்கின்றது; சூரியனுக்கொப்பான ஒளியுள்ள திவ்வியமாய்ச் சிறந்த அவ்விமானம், விருப்பத்தின்படி செல்லவல்லது; இராவணனூர் போரிற் குபேரனூரை வென்று, அவ்விமானத்தைக் கவர்ந்தனர். ஒப்பற்ற பராக்கிரமமைந்தவரே! தங்களுக்காகவே அந்தவிமானத்தை நிறுத்தி வைத்திருக்கின்றேன். மேகத்துக்கு ஒப்பான அந்தத் திவ்விய விமானம், இவ்விடத்தில் இருக்கின்றது. அவ்விமானத்தின்மீ தேறி, தாங்கள் வெகுசடிதியில், கவலையின்றி, அயோத்தியைச் சேரலாம். அறிஞரே! என்மீது அருள்செய்வதா யிருந்தால், என்னிடத்திற் குணங்களுள்ளனவாகத் தாங்கள் நினைத்தால், என்னிடம் தங்களுக்கு நட்பிருக்குமாலல், தாங்கள், இலட்சுமணருடனும் சீதாதேவியுடனும் இங்கு வசித்து, நான் செய்யும் உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு, இவ்விடம் விட்டுப் புறப்படலாம். தங்களிடம் அன்புடனிருக்கும் நான், சேனையுடனும் நண்பர்களுடனும் தங்களுக்குச் செய்யும் மரியாதைகளைப் பெற்றுக்கொள்க. இராகவரே! அன்பினலும் அபி

மானத்தினலும் நட்பினலும் பக்தியினலும் தங்களது அடிமையாகிய நான், தங்களை வேண்டிக்கொள்ளுகின்றேனேயன்றி, தங்களுக்குக் கட்டளையிடுவதாகக் கருதக்கூடாது" என்றார்.

விபீஷணரது அவ்வேண்டுகோளை மறுத்து ஸ்ரீராமர் விமானத்தைக் கொணரச்சொல்லுதல்.

இவ்வண்ணம் விபீஷணர் சொன்னதும், எல்லா வரக்கர்களும் வானரர்களும் கேட்குமாறு, ஸ்ரீராமர், அவ்வரக்கவேந்தரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:—"நண்பரே! பகைவரை யொழிப்பவரே! தாங்கள் செய்த மந்திராலோசனைகளாலும், ஆண்மைத்தொழில்களாலும், சிறந்தநண்பினலும், எல்லாப்படியாலும், நான், முன்னமே, தங்களால் வெகுமானம் பண்ணப்பட்டிருக்கின்றேன். அரக்கவேந்தரே! தங்களுடையவசனத்தைக் கேட்கக்கூடாதென்ற எண்ணம் எனக்குச் சிறிதுமில்லை; ஆனல், எனது மனம், எனது தம்பி பரதனைப் பார்க்க ஆவல்கொண்டிருக்கின்றது; என்னைச் சித்திரகூடமலையினின்று திருப்பியழைத்துப்போக அங்கு அவன் வந்தானன்றே! அவன் அவ்வாறு வந்து தலையால் வணங்கித் திரும்பிவரவேண்டுமென்று யாசித்துக் கேட்டும், நான், அவன்வேண்டுகோளின்படி நடக்கவில்லையன்றே! கௌசல்யையையும், சுமித்திரையையும், புகழ்பெற்ற கைகேயியையும், என்னுடைய குருமார்களையும், நண்பர்களையும், குழந்தைகளுடன் கூடியவர்களான தேசத்துக்குடிகளையும் பார்க்க வெகு ஆவலுடனிருக்கின்றேன். அரக்கவேந்தரே! சீக்கியில், என் பொருட்டு விமானத்தைக் கொண்டுவருக; நான் செய்யவேண்டிய காரியத்தைச் செய்து முடித்தபின்பு, இவ்விடம் தாமதிக்க எனக்கு மனமில்லை. சாந்தகுணமுடையவரே! தாங்கள் எனக்குச்செய்யவேண்டிய வெகுமானங்களெல்லாம் செய்தாயின; நான் திரும்பிப்போக விடைதருக.

என்மேற் சிறிதும் மனவருத்தம் வேண்டாம். வேகமாகச் செல்லுமாறு விடைகேட்டுக்கொள்ளுகின்றேன்" என்றார்.

விபீஷணர் இராமர்க்குப் புஷ்பக விமானத்தைக் கொடுத்தல்.

ஸ்ரீராமர் அவ்விதமாகச் சொன்னதை, அரக்கவேந்தராகிய விபீஷணர், கேட்டு, அவ்விமானத்தைச் சடிதியிற் கொண்டுவந்தார். அவ்விமானமோ, நன்முகத் தங்கமிழைக்கப்பட்டும், வைரியக்கற்கள் பதிக்கப்பட்டமேடைகளமைந்தும், பல மண்டபங்கள் நிரம்பியும், எங்கும் வெள்ளிநிறமாக விளங்கியும், வெண்கொடிகளும் பதாகைகளும் அணியப்பெற்றும், தங்கமயமான உபரிகைகளாற் சோபித்தும், தங்கத்தாமரைமலர்களாலலங்கரிக்கப்பட்டும், சதங்கைகள் எங்கும் கட்டப்பெற்றும், முத்துக்களாலாகிய பலகணிகள் வைக்கப்பட்டும், எல்லாப்பக்கங்களிலும் மணிகளின்கூட்டங்கள் மனோகரமாகச் சத்தஞ் செய்யப்பெற்றும் வெகுஅழகாகப்பிரகாசித்தது. மேருவின் சிகரம்போல் விளங்குமாறு விசுவகர்மாவினுலமைக்கப்பட்டதும், முத்துநிறமாகவும் வெள்ளிநிறமாகவும் விளங்கும் பல மேன்மாளிகையை யுடையதும், படிகக்கற்களால் தளம் அழகாக அமைக்கப்பட்டும் விலையுயர்ந்தவிரிப்புகள் விரிக்கப்பட்டும் வைரியக்கற்களாற் பலஆசனங்கள் பரப்பப் பெற்றும் மிகவும் விலையுயர்ந்து முள்ள இடங்களை யுடையதும் அழகால் ஒப்பற்றதும், மனோவேகமாகச் செல்லவல்லதுமான அப்புஷ்பகவிமானம் அங்கு வந்ததாக ஸ்ரீராமருக்குத் தெரிவித்து, விபீஷணர், அவர்கட்டளையைநோக்கிக்கொண்டு நின்றார்.

நூற்றிருபத்தைந்தாஞ் சருக்கம்:
யாவரும் புஷ்பகவிமானத்தி லேறுதல்.

புஷ்பங்களாலலங்கரிக்கப்பட்ட புஷ்பகவிமானத்தை, அரக்கவேந்தராகிய விபீஷணர், அவ்வாறு சமீபத்

திற் கொண்டுவந்து நிறுத்தி, கூப்பியகையராய்ச் சிறிது தூரத்தில் நின்று, வெகுவணக்கத்துடன், "ஸ்ரீராமரே! இன்னும், நான் நடந்துகொள்ளவேண்டியதற்குக் கட்டளையிடுக" என்று பரபரப்புடன் கேட்டுக்கொண்டார். அப்பொழுது, வெகுகாந்தியுடன் விளங்கிய ஸ்ரீராமர், தாம் விபீஷணரிடம் வைத்திருந்த அன்பைக் காட்ட, நன்முக ஆலோசித்து, தமது தம்பி இலட்சுமணரும் கேட்குமாறு சொல்லலானார்:— "விபீஷணரே! இவ்வானரவீரர்கள், வெகு உற்சாகத்துடனும் வெகு முயற்சியுடனும் நமது காரியத்தை நிறைவேற்றினார்கள்; அரக்கவேந்தரே! இது வரையில் ஒருவராலும் வெல்லப்படாத இலங்கையானது, தம்முயிரினிடத்தும் ஆசையில்லாமையாற் போரிற் பின்னிடாமலும் மகிழ்ந்தும்நின்ற இவ்வானரர்களுடைய உதவியாலல்லவோ வெல்லப்பட்டது? ஆகையால், இவர்களுக்குப் பலவித இரத்தினங்களையும், பலவகைப் பொருள்களையும், ஆபரணங்களையும் கொடுத்து மரியாதைசெய்யுங்கள். இவ்வாறு நம்பொருட்டு முயன்று நமது காரியங்களைநிறைவேற்றிய இவ்வானரவீரர்களுக்கெல்லாம் தக்கமரியாதைசெய்க. இவர்களுக்குப் பொருள்களையும் இரத்தினங்களையும் கொடுப்பதனால், இவர்கள் செய்த காரியங்களை வீண்போகாதவைகளாகச் செய்யுங்கள். மரியாதைசெய்யும் வகையை நன்முக அறிந்தவரே! இவ்வாறு இவ்வீரர்களுக்குத் தாங்கள் மரியாதைசெய்தலால், இவர்களெல்லாரும், உங்களிடத்து வெகு நன்றியுள்ளவர்களாயிருப்பதுடன், மிகு மகிழ்ச்சியு மடைவார்கள். ஏதேனும் கொடுத்து நண்பர்களைச் சேர்ப்பவர்களாகவும், தயையுடனும் புகழுடனும் கூடியவர்களாகவும், தங்களை இவர்கள் அறியவேண்டும். ஆகையால்தான், நான் இவ்வாறுசொல்லமூட்டுகின்றேன். பிறரைச் சந்தோஷப்படுத்துகின்ற ஔதாரியம் முதலிய குணங்களில்லாதவனும், போரில் எதிர்த்து இம்சிப்பவனும்

வானரர்களைக் கௌரவிக்குமாறு விபீஷணர்க்கு இராமர் கூறுதல்.

மான அரசனே, சேனையிலுள்ளோர், அஞ்சினவர்களாய், வெறுத்து விட்டிடுகின்றார்கள்" என்றார்.

விபீஷணர் வானரர்கட்குச் சம்மானஞ்செய்தல்.

இவ்விதமாக ஸ்ரீராமர் சொன்னதும், விபீஷணர், இரத்தினங்களாலும், மற்றைப்பொருள்களாலும், எல்லா வானரவீரர்களையும், அவரவர்களுக்குத்தக்கபடி மரியாதைசெய்தார்.

இராமர் முதலியோர் விமானத்தின்மீது ஏறிக்கொள்ளுதல்.

அவ்வானரவீரர்களெல்லாரும், அவ்விதமாய் ஸம்மானிக்கப்பெற்றதைப் பார்த்தபின்பு, ஸ்ரீராமர், அவ்வுத்தமமான விமானத்தின்மீது ஏறி, சிறிதுவெட்கப்பட்டுக்கொண்டிருந்த புகழ் பெற்றவளாகிய சீதாதேவியைத் தமதுமடியின்மேல் வைத்துக்கொண்டார். வெகுவீரராய் வில்லாளியான இலட்சுமணரும், அப்போது விற்பிடித்து அவர்பின்னே அவ்விமானத்தில் ஏறினர்.

விபீஷணரையும் சுக்கிரீவன் முதலானவரையும் வேறு ரதத்தில் இருப்பட்டங்களில் தங்கியிருக்குமாறு ஸ்ராமர் கூறல்.

அதன்பிறகு, அவ்விராமர், விமானத்திலிருந்தபடியே, சுக்கிரீவனுக்கும் விபீஷணருக்கும் மற்றைவானரவீரர்களுக்கும் வெகுமரியாதை செய்து, அவர்களெல்லாரையும் நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:— "வானரவீரர்களே! நீங்களெல்லாரும், உங்களது நண்பனுகிய எனக்குச்செய்யவேண்டிய உபகாரத்தைச் செய்துவிட்டீர்கள்; இனிமேல் நீங்களெல்லாரும் உங்கள் மனம்போனபடி சஞ்சரிக்க, நான் விடைகொடுக்கின்றேன். பகைவரை யெரிப்பவரே! தருமத்திற்குப் பயந்து நடுநடுங்கி நடப்பவரே! சுக்கிரீவரே! தாங்கள் என்னிடம் வைத்த அன்புக்கும் நட்புக்கும் தக்கபடி, வெகு அழகாக நடந்துகொண்டீர்கள். தாங்கள், தங்கள் சேனையாற் சூழப்பட்டவர்களாய், சடிதியில் கிஷ்கிந்தை நகரம் போய்ச் சேரலாம். விபீஷணரே! தங்கள்

ராஜ்யமான இவ்விலங்கையிலேயே, தாங்கள், சுகமாக வாசஞ்செய்யுங்கள். தேவர்களெல்லாரும் இந்திரனையே முன்னிட்டுக்கொண்டு இவ்விடம் வந்து தங்களையெதிர்த்தாலும், அவர்களால் லங்கூடத் தங்களை அசைக்கமுடியாது. நான், எனது தந்தையின் இராஜதானியாகிய அயோத்திக்குப் போகின்றேன். நீங்களெல்லாரும் எனக்கு விடை கொடுத்தனுப்பவேண்டும்" என்றார்.

இவ்விதமாக, ஸ்ரீராமர் சொன்னதும், மகாபலம் பொருந்திய வானரவீரர்களும், அரக்கர்கள் மன்னவராகிய விபீஷணரும், அஞ்சலிசெய்துகொண்டு பின்வருமாறு சொல்லலானார்கள்:— "நாங்களெல்லோரும் அயோத்திக்குத் தங்களுடன் கூடவருதற்கு ஆசைகொண்டிருக்கின்றோம். ஆதலால், எங்களையும், தாங்கள், அவ்விடம் உடனழைத்துப் போகவேண்டும். நாங்கள், அவ்விடம் ஒருவருக்கும் ஒருவிதபயமு மில்லாமல், வெகு ஜாக்கிரதையாக, அங்கிருக்கும் வனங்களிலும் நகரங்களிலும் சஞ்சரிப்போம். சக்கரவர்த்தித் திருமகனரே! தங்களுடைய பட்டாபிஷேக மகோத்ஸவத்தைச் சேவித்துவிட்டு, கௌசல்யையை வந்தனஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு எங்கள் வீடுகளுக்குச் சடிதியில் திரும்பிவிடுவோம்" என்றார்கள்.

அவர்கள் ஸ்ரீராமரது வாக்கிற்கு உடன்படாமை.

இவ்வண்ணம் அவ்வானரவீரர்களும் விபீஷணரும் சொல்லவே, புகழ்பெற்ற ஸ்ரீராமர், அவர்களைநோக்கி "என் நண்பர்களான உங்களைப்போன்றவர்களாற் சூழப்பட்டு, நான், எனது நகரத்துக்குச் செல்வேனையானால், நான், மிகவும் இஷ்டமான பொருளொன்றைப் பெற்றவனவே னென்பதற்குச் சந்தேகமுண்டோ? அதனால், பட்டணத்திற் புகுந்தபின், எனக்கு மிகுமகிழ்ச்சியுண்டாகும். சுக்கிரீவரே! எல்லாவானரர்

ஸ்ரீராமர் வானராகூலர்களின் வேண்டுகோளுக்கு இணங்குதல்.

களுடனும் சடிதியிற் புஷ்பகவிமானத்திலேறுங்கள். விபீஷணரே! தாங்களும், தங்கள் மந்திரிமார்களுடன் சடிதியில் விமானமேறுங்கள்" என்றார்.

அதன்பிறகு, சுக்கிரீவன் தன்து சேனைகளுடனும், விபீஷணர் தமது மந்திரிகளுடனும், சடிதியில் அந்த விமானத்திலேறினர்கள். அவர்களெல்லாரும், அவ்விதமாகஅவ்விமானத்திலேறின்தும், ஸ்ரீராமருடைய கட்டளையின்மேல், அவ்விமானம் ஆகாயத்திற் கிளம்பிற்று. அன்னப்பறவைகளின் பதுமைகளால் விளங்கிய அவ்விமானத்தின்மேல் வெகு கம்பீரமாக வீற்றிருந்த புகழ்பெற்ற ஸ்ரீராமர், மகழ்ச்சியோடும் கொண்டாட்டத்தோடும் குபேரன்போல விளங்கலானர். அதேவிமானத்தில் வெகு சந்தோஷமாக வானரர்கள்யாவரும், அரக்கர்களும், வெகுசுகமாக நெருக்கமின்றி உட்கார்ந்திருந்தார்கள்.

யாவரும் விமானத்திலேற, விமானம் ஆகாயத்திற்செல்லத் தொடங்குதல்.

நூற்றிருபத்தாரூஞ் சருக்கம்:
விமானம் சென்ற வழியி லிருந்த இடங்களைச் சீதாதேவிக்கு ஸ்ரீராமர் தெரிவித்தல்.

உத்தமமாக விளங்கும் அந்தப் புஷ்பக விமானமானது, ஸ்ரீராமராற் கட்டளையிடப்பட்டு, காற்றாற் செலுத்தப்படும் பெருமேகம்போல் ஆகாயத்தில் ஓடலாயிற்று.

புஷ்பகவிமானம் செல்லுதல்.

அதிலிருந்தபடியே, ஸ்ரீராமர், தம்மைச்சுற்றி நன்றாகப்பார்த்து, சந்திரனுக்கொப்பான முகத்தையுடைய சீதாதேவியைநோக்கிப் பின்வருமாறு சொல்லலானர்:—"வைதேகி! அதோ பார்! கைலாசமலையின் சிகரம்போல் விளங்குந் திரிகூடமலையினது சிகரத்தில் விசுவகர்மாவினால் நிரு

மிக்கப்பட்ட இலங்கை, விளங்குகின்றது. இதோ, மாமிசமும் இரத்தமும் சேருய்க குழம்பி யிருக்கும் போர்க்களத்தைப் பார்; இவ்விடத்தில்தான், வானரர்களும், ராக்ஷஸர்களும், மிகுதியாக மடிந்தார்கள். விசாலாக்ஷி! இவ்விடத்தில்தான், பலவரங்களைப் பெற்று உலகத்தை உபத்திரவஞ்செய்த அரக்கர்கள்தலைவனன இராவணன், உன்னிமித்தம் என்னற் கொல்லப்பட்டு விழுந்து கிடக்கின்றான். இவ்விடத்தில்தான், என்னற் கும்பகர்ணன் கொல்லப்பட்டான். பிரகஸ்தன் நீலனற் கொலையுண்டது, இவ்விடந்தான். வானரவீரனன அனுமான், இவ்விடத்தில்தான் தூம்ராக்ஷனைக் கொன்றான். இங்கு, மகாத்துமாவாகிய சுஷேணன், வித்யுந்மாலியை வதைத்தான். இராவணனுடைய குமாரனகிய இந்திரஜித்தை இலட்சுமணன் வதைத்தது, இவ்விடத்தில்தான். இங்குத்தான், அங்கதன் விகடனென்ற ராக்ஷஸனைக் கொன்றான். ஒருவராலுந் தகையமுடியாத விரூபாக்ஷனும், மகாபார்சுவ மகோதரரும், அகம்பனனும், இன்னும் பலசாலிகளான பல அரக்கர்களும், இவ்விடத்தில்தான் மடிந்தார்கள். இவ்விடத்தில்தான், தனது சக்களத்திகள் ஆயிரம் பெயர்களாற் சூழப்பட்டவளாய், மந்தோதரி யென்பவள், இராவணனைக்குறித்துக் கண்ணீர் ஆறாய்ப்பெருகப் புலம்பினள். இனிய முகமுடையாய்! இதோ காண்கின்றதே, சமுத்திரத்தின் துறைமுகம்; இங்குத்தான், சமுத்திரத்தைத்தாண்டி அன்றிரவு கழித்தோம். இதோ இச்சமுத்திரத்தினிடத்தில் விளங்குகின்றதே, விசாலாக்ஷி! ஒருவராலும் எளிதிற் கட்டமுடியாத இச்சேதுவை, உன்னிமித்தம், நான், களனுடைய சகாயத்தினற் கட்டினேன். சிதே! வருணபகவானுடைய இருப்பிடமாய், கலக்க மற்றதாய், கரையற்றதாய், சங்குகளும் முத்தஞ்சிப்பிகளும் நிரம்பியதான இச்சமுத்திரம் ஒலிப்பதைப்

இராமர் சேதாபிராட்டிக்கு இலங்கை முதல் இஷ்கிந்தை வரையிலுன்ன இடங்களிற் பலவற்றைக்காட்டுதல்.

பார்! மைதிலீ! இச்சமுத்திரத்தின் நடுவில், சமுத்திரத்தை யே பிளந்துகொண்டு ஹிரண்யநாபம் என்னும் பொன் மலை, அனுமான் இளைப்பாறிப்போவதற்காக வெளிவந்தது பார். இதோ, இச்சேதுவின் நடுவில் இருப்பது, சேனை தங்கியிருந்த இடமாகும். இதோ தெரிகின்றதே, இப் பெருஞ் சமுத்திரத்தின்மேற் சேதுவினாரம்பம், இங்குத் தான்; இது, சேதுபந்தமென்று வழங்கப்பெற்று, மூவுல கத்தாராலும் வணங்கத்தக்க இடமாகும். இது, எவ்வகைத் தீவினையையும் போக்கவல்ல வெகுபரிசுத்தமான இடம். இவ்விடத்தில்தான், நான், இலங்கைக்கு வருமுன்னமே வருணபகவானை ஆராதித்து அவருடைய திருவருளைப் பெற்றேன். இவ்விடத்தில்தான், அரக்கர்களின் மன்ன னாகிய விபீஷணர், என்னிடம் வந்துசேர்ந்தார். சீதே! இதோ அழகான காடுகளமைந்ததாகக் காண்கின்றதே, இதுதான் கிஷ்கிந்தை; இதுதான், சுக்கிரீவருடைய அழ கான பட்டணம். இவ்விடத்தில்தான், நான் வாலியைக் கொன்றேன்" என்றார்.

சீதை, வானர மடந்தையருடன் அயோத்திக்குச் செல்ல விரும்பியதைத் தெரிவித்தல்.

பிறகு, வாலி முன்பு ஆண்டுவந்த நகரமாகிய கிஷ்கிந் தையைக் கண்டதும், சீதாதேவி, வெகு அன்புடனும் அச் சத்துடனும் ஸ்ரீராமரைப் பார்த்து "வேந் தரே! குற்றமற்றவரே! தாரைமுதலான சுக்கிரீவருடைய மனைவிமார்களோடும் இன்னும் மற்றை வானரவீரர்களுடைய மனைவிகளோடும் கூட, நான், நமது ராஜ தானியாகிய அயோத்திக்குப் போக விரு ம்புகின்றேன்" என்று வணக்கமாகக் கூறினள்.

ஸ்ரீராமரும், "அப்படியே ஆகட்டும்" என்று சொ ல்லி, தமது விமானத்தைக் கிஷ்கிந்தையில் நிறுத்தி, சுக்

சீதையின் வேண்டுகோளுக்கு இணங்கிய ஸ்ரீராமர், வானரர்களைத் தமது மனைவிமாருடன் வருமாறு சுக்கிரீவனுக்குத் தெரிவித்தல்.

கிரீவனைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார் :— "வானர சிங்கமே! வானர வீரர்களியாவரும் தமது மனைவிமார்கள் சீதையுடன் வர, அயோத்திக்கு வரவேண்டுமென்று சொல்லுங்கள்; மகாபலசாலியே! அப்படியே, தாங்களும், தங்களுடைய மனைவிமார்களைச் சடிதியில் அழைத்து வாருங்கள். எல்லாருடனும் நாம் அயோத்திக்கு எகுவோம்" என்றார்.

சுக்கிரீவன் இராமது கட்டளைப் படியே செய்தல்.

ஒப்பற்ற காந்தியால் விளங்கும் ஸ்ரீராமர், இவ்வாறு சொன்னதும், புகழ்பெற்ற அவ்வானரராஜன், மற்றை வானர வீரர்களுடனும் தனது அந்தப்புரத்துக்குச் சென்று, தாரையைப் பார்த்துச் சொல்லலானான்:—"சீதாதேவியை மனங்களிப்பிக்க, ஸ்ரீராமர், காதலீ! நீ மற்றை வானரவீரர்களின்மனைவியருடன் அயோத்திக்கு வருமாறு கட்டளையிடுகின்றார்: ஆகையால், நீ, வானரமகளிர்யாவரையும் விரைவாக அழைத்துவருக: இங்குநின்றுஞ் சென்று, அயோத்தியையும், தசரதமன்னவரது எல்லா மனைவிமாரையும் பார்த்துவருவோம்" என்றான். இவ்வண்ணம், சுக்கிரீவன் சொன்னதைக் கேட்டதும், ஸர்வாங்க சுந்தரியான தாரை, வானரமடந்தைமாரெல்லாரையும் கூப்பிட்டுப் பின்வருமாறு சொல்லலானாள்:— "இப்பொழுது, நீங்கள் யாவரும் எல்லா வானரர்களுடனுங்கூட அயோத்திக்கு வருமாறு சுக்கிரீவர் கட்டளை கொடுத்திருக்கின்றார். அயோத்தியையும், ஸ்ரீராமர் தமது மந்திரிமார்களுடனும் குடிகளுடனும் அந்நகரத்திற் பிரவேசிக்குங் காட்சியையும், தசரதமன்னவருடைய மனைவிமாரின் பாக்கியத்தையும் கண்டு களிக்கவேண்டுமென்று எனக்கும் ஓரெண்ணமிருக்கின்றது" என்றாள். தாரை சொன்னதைக் கேட்டதும், எல்லாவானரஸ்திரீகளும், தங்களைச் சிங்காரித்

துக்கொண்டு வெளிவந்து, விமானத்தை வலஞ்
சீதாதேவியைக் காணவேண்டுமென்ற ஆவலுடன்
விமானத்தின்மீது ஏறினர்கள்.

அவர்களுடன் அவ்விமானம்மறுபடி ஆகாயத்
ழுந்துசெல்ல, ஸ்ரீராமர், ரிசியமூகபருவதத்துக்கருகில்,
தேவியைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:
"அதோ, மின்னற்கொடியுடன் மேகம்போலப் பலவண்
தாதுப்பொருள்களால் விளங்கிக்கொண்
ஒரு பெரும்மலை காண்கின்றதே; சீதே,
அதுதான் ரிசியமூகபருவதம். அவ்விடத்

ஸ்ரீராமர் மீண்டும் ரிசியமூக மலைமுதல்அயோத்திவரையில் சீதைக்குக் காட்டுதல்.

திலேதான், நான், வானரவேந்தரான சுக்
கிரீவருடன் நட்புச்செய்துகொண்டேன்:
வாலியைக் கொல்வதாகச் சுக்கிரீவரிடம் பிரதிஜ்ஞையையும்
செய்தேன். பம்பாஸரஸென்பது, இதோ காணப்படுகின்
றது: தாமரைமலர் நிரம்பி அழகான சோலைகளைக்கொ
ண்டு விளங்கும் இப்பம்பைக்கரையில்தான், உன்னை
விட்டுப்பிரிந்த பெருந்துயரத்தினால் நான் மிகப் புலம்பி
னேன். இப்பம்பையின் கரையில்தான், அறத்தை வழு
வாது நடத்துபவளான சபரியை நான் கண்டேன். ஓவ்
வொருகையும் ஒரு யோசனை நீளமுடையதாகப் பெற்றி
ருந்த கபந்தனை நான் வதைத்தது, இவ்விடம். அதோ ஜந
ஸ்தாநத்தில் பெருமரமொன்று காணப்படுகின்றது பார்;
அவ்விடத்தில்தான், கட்டழகியே! உன்னிமித்தம் கொடிய
அவ்விராவணனுக்கும் மகாத்துமாவாகிய ஜடாயுவுக்கும்
பெரும்போர் நடந்தது. பேரழகுபடைத்தவளே! எவ்வி
டத்தில் நான் ரனைக் கொன்றேனே, எங்கு நான் தூஷ
ணனை வதைத்தேனே, எவ்விடத்தில் நான் மகாபலம்
பொருந்தியதிரிசிரஸைக் கூரானபாணங்களால்நாசஞ்செய்
தேனே, அந்த இடமாகிய நமது ஆச்சிரமத்தை, இதோ
பார். சீதே! விசித்திரமான பர்ணசாலை, அழகாக இதோ
புலப்படுகின்றது; நீ இவ்விடத்திலிருந்தபொழுதுதான்,

உன்னை இராவணன் வலியத் தூக்கிப்போனன். அது, தெ
ற்கே நிரம்பி அழகாக ஓடுகின்ற கோதாவரி நதியாகும்.
அதோ இதோ காண்கின்றதே: இது, அகஸ்திய மஹர்ஷி
டைய ஆச்சிரமமாகும். அதோ தெரிகின்றதே, அது,
ற்ற காந்தியால் விளங்கியவராகிய ஸுதீக்ஷ்ண
ர்ஷியினுடைய ஆச்சிரமம். சரபங்கமாமுனிவரது சிற
ஆச்சிரமம், இதோ இங்கு விளங்குகின்றது. இவ்விடத்
தில்தான், இந்திரபகவான் வந்ததை நாம் கண்டோம்.
இந்த இடத்தில்தான், நான் பேருடல்படைத்த விராத
னைக்கொன்றேன். நுண்ணிடையாய்! இவ்விடங்கள், பல
ரிஷிகள் வாழுமிடங்கள்; இங்குத்தான், சூரியனுக்கும் அக்
கினிக்கும் ஒப்பான காந்தியுடன் விளங்கும் அத்திரி யென்
ற ரிஷிகுலங்களுக்கெல்லாந்தலைவர் வாழ்கின்ற ஆச்சிர
மம். இவ்விடத்தில்தான், அம்முனிவரது பத்தினியும்
பதிவிரதாதருமத்தில்தவறாதுநடப்பவளுமான அநசூயை
யென்ற உத்தமியை நீ பார்த்தது. கட்டழகீ! அதோ, காண்
கின்றதே, அதுதான்-சித்திரகூடமலை. அவ்விடத்தில்தான்,
என்னைச் சந்தோஷப்படுத்தி, அயோத்திக்கு அழைத்துப்
போகுமாறு பரதன் வந்தது. இதோ, சமீபத்தில் அழகான
தோப்புக்களுடன் விளங்குகின்ற யமுனைநதி காண்
கின்றது. இவ்விடத்தில்தான், வெகு புகழ்பெற்ற பரத்
வாஜமாமுனிவருடைய அழகான ஆச்சிரமம் விளங்குகின்
றது. மாசற்ற மேனிபடைத்தவளே! அதோ பார், பல
அந்தணர்கள் நிரம்பியதாகவும், அழகான மலர்கள் பூத்த
தோப்புகளுடன் கூடியதாகவும், கங்கைநதி விளங்குகின்
றது. இதோ காண்கின்றதே, இதுதான், சிருங்கிபேரபுரம்;
இவ்விடத்தில்தான், நாம் குகனைக் கண்டது. அதோ, தனது
கரைகளின்மீதெல்லாம் யூபங்கள் வரிசை வரிசையாக
நடப்பட்டுப் பலவகை மரங்கள் அடர்ந்து நன்றாகப் பூத்த
மலர்களுள்ள தோட்டங்களுடன் விளங்குகின்றதே, அது
தான்-சரயூநதி. அதோ பார், எனதுதந்தையின் பிரதான

நகரமாகிய அயோத்தி விளங்குகின்றது. சீதே! நாம் மறுபடி திரும்பிவந்துவிட்டோம்; அயோத்தியை நோக்கி நீ நமஸ்காரஞ் செய்வாய்" என்றார்.

யாவரும் வியப்புடன் அயோத்தியைக் காணுதல்.

அதைக் கேட்டதும், எல்லா வானரர்களும், விபீஷணரும், தாங்கள் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்து, வெகு அழகாக விளங்கிய அப்பட்டணத்தை அதிக ஆவலுடன் பார்க்கலானார்கள். வெள்ளிமயமான மேன்மாளிகைகள் வரிசைவரிசையாகக்கட்டப்பட்டு, விசாலமான வீதிகளமைந்து, யானைகளும் குதிரைகளும் உல்லாசமாகச் சஞ்சாரஞ்செய்யும்படி வெகுஅழகாக விளங்கிய அவ்வயோத்திமாநகர், இந்திரனுடைய அமராவதி நகரம் சோபிப்பதுபோற் சோபித்துக்கொண்டிருந்ததை அவ்வானர வீரர்கள் கண்டார்கள்.

நூற்றிருபத்தேழாஞ் சருக்கம்:
யாவரும் பரத்வாஜமுனிவரது ஆச்சிரமத்தில் வசித்தல்.

ஸ்ரீராமர் பரத்வாச முனிவரை வணங்கி அக்ஷேமம்விசாரித்தல்.

தாம் வனவாசஞ்செய்ய வேண்டிய பதினான்கு வருஷங்களையும் முடித்து, சித்திரைமாதச்சுக்கிலபட்சத்துப் பஞ்சமியன்று, ஸ்ரீராமர், பரத்வாஜமகா முனிவருடைய ஆச்சிரமம் வந்துசேர்ந்து, நியமத்துடன் அம்முனிவரை வணங்கினார். ஸ்ரீராமர், தவத்தின் களஞ்சியமாகிய அம்மாமுனிவரை நமஸ்காரஞ்செய்து, அவரை நோக்கிப் பின்வருமாறுவிண்ணப்பஞ்செய்வலானார்:— "முக்காலங்களையும் அறிந்த முனிவரே! அயோத்தி சுபிக்ஷமாக இருக்கின்றதா? அங்கு, எல்லாரும் க்ஷேமமாக இருக்குஞ் சங்கதி, தங்கள் காதில் விழுகின்றதா? பரதன் குடிகளைச் செவ்வையாகப் பாதுகாத்துவருகின்றானா? எனது தாய்மார்களெல்லாரும் உயிருடனிருக்கின்றார்களா?" என்றார்.

இவ்வாறு ஸ்ரீ ராமர்வினவவே, மாமுனிவராகிய பரத்வாஜர், கொஞ்சம் புன்னகைசெய்து வெகு மகிழ்ச்சியுடனே பின்வருமாறு சொல்லத்தொடங்கினர் :— "பரதர் தமது மேனி அழுக்கடைந்தவராய், தலைமயிரைச் சடையாக்கித் தங்கள் பாதக்குறடுகளையே எப்பொழுதும் தமக்கு முன்பாக வைத்துக்கொண்டு இராச்சியபரிபாலனம் பண்ணுபவராய், தங்கள் வரவையே எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றார். தங்களரண்மனையில் எல்லாரும்க்ஷேமமாக இருக்கின்றார்கள். போரில் வெல்பவரே! பதினான்கு வருஷங்களுக்கு முன்னால், தாங்கள் மரவுரிதரித்து, இலட்சுமணரையும் சீதாதேவியையும் உடனழைத்துக்கொண்டு, இடைத்த இராச்சியத்திலிருந்து ஓட்டப்பட்டவராய், தருமத்தைப் பாதுகாக்க விரும்பி, எல்லாவற்றையும் துறந்து, தங்கள் காலால் நடந்து, தந்தைசொல்லை நிறைவேற்றும் நோன்பைமேற்கொண்டவராய் எல்லாவகைப்போகங்களையும் விட்டிட்டு, தேவலோகத்திலிருந்து கீழே நழுவிவிழுந்த தேவதை போல வனவாசம்பண்ணச் சென்றபொழுது, என் மனத்திற் கருணை யுண்டாயிற்று; இப்பொழுதோ, காரியங்களையெல்லாம் சரிவரமுடித்துக்கொண்டு தங்கள் சத்துருக்களை ஜயித்துவிட்டு, தங்களுடைய நண்பர்களுடனும் பந்துக்களுடனும் இவ்விடம்வந்ததைப் பார்க்க, என் மனம், வெகுசந்தோஷமடைகின்றது. இராகவரே! தாங்கள்பட்டதுக்கங்களும், சௌக்கியங்களும், எனக்கு நன்றாகத்தெரியும். தாங்கள் ஜநஸ்தாநத்தில் அரக்கர்களை மிகுதியாக அழித்ததும், மாமுனிவர்களெல்லாருஞ் காப்பாற்றவேண்டுமென்று தங்களைக்கேட்டுக்கொண்டபடி தாங்கள் அவர்களைப் பாதுகாத்துவருகையில் தங்களுடையமாசற்ற மனைவியை இராவணன் தூக்கிச் சென்றதும், அவ்வாறு சீதையை இராவணன் கவர்ந்துசெல்வதற்கு முன்னமே மாரீசன் வந்து தோன்றியதும், கபந்தனைத் தாங்கள் கண்

பரத்துவாச முனிவரது விடை.

டதும், தாங்கள் பம்பாஸரஸின் வழியாகச் சென்றதும், சுக்கிரீவனுடன் தாங்கள் நட்புச்செய்துகொண்டதும், வாலியைத் தாங்கள் வதைத்ததும், சீதையைத் தேடியதும், அனுமான் செய்த பற்பல ஆச்சரியமான காரியங்களும், சீதையிருக்குமிடத்தை அறிந்துகொண்டபிறகு நளன்சகாயத்தினாற் சேது கட்டப்பட்டதும், வானரவீரர்கள் வெகு சந்தோஷத்துடன் இலங்கையைக் கொளுத்தியதும், தேவர்களுக்கு ஒரு முட்போலவிருந்த இராவணனைக் குமாரர்களுடனும் மற்றைப்பந்துக்களுடனும் மந்திரிகளுடனும் சைனியவாகனங்களுடனும் தாங்கள்போரில் நாசம்பண்ணியதும், தேவர்கள் தங்களைக்கண்டு தங்களுக்கு வரமளித்ததும் ஆகிய இவைகளெல்லாவற்றையும், எனது தவத்தின் பலத்தினல், நான், நன்றாக அறிந்துகொண்டிருக்கின்றேன். ஆயுதமேந்தியவரிற் சிறந்தவரே! நானும், தங்களுக்கு வரமளிக்கின்றேன். இப்போது நான் கொடுக்கும் அர்க்கியத்தை அங்கீகரியுங்கள். நாளையதினம் தாங்கள் அயோத்திக்குப்போகலாம்" என்று கூறினர்.

பரத்துவாசர் தமது உபசாரத்தை ஏற்றுக் கொள்ளஇராமரை வேண்டுதல்.

புத்திமானை சக்கரவர்த்தித் திருமகனர், அம்முனிவர் அவ்வாறு சொன்னதைத் தமதுதலையாலேற்றுக்கொண்டு, "அப்படியே ஆகட்டும்" என்றுசொல்லி, பிறகு, அம்மகாமுனிவரிடம் வரங்கேட்கலானர்:— "மூக்காலங்களையுமறிந்த மாமுனிவரே! நான், அயோத்திக்குப்போகும்வழிகளிலெல்லாம், காலமல்லாத காலத்திலும் மரங்கள் நன்றாகக் காய்த்துப்பழுத்து மிக்கதேனைச் சொரிவதாக விளங்கவேண்டும்; பலவகையான மிக்க அப்பழங்களும், அமுதத்துக்கு ஒப்பான சுவையுள்ளனவாகவும் அமைக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

முனிவர் "அப்படியே" என்று வாக்களிக்க, அவ்விடத்தில்எல்லாப்பக்கங்களிலுமிருந்த மரங்கள் யாவும், தேவலோகத்து மரங்களைப்போல மாறிவிட்டன. காய்க்காத மரங்கள் பழங்களுடன் கூடினவைகளாகவும், பூக்காத மரங்கள் பூங்கொத்துக்கள்நிரம்பியவைகளாகவும், பட்டுப்போன மரங்கள் தளிர்த்த மரங்களாகவும், மரங்கள் யாவும் தேனைப் பெருகவிடுகின்றவைகளாகவும் விளங்கின. அவ்வாச்சிரமத்தைச் சுற்றி, மூன்று யோசனை தூரம் எல்லாப்பக்கங்களிலும் எல்லாமரங்களும் அவ்வாறே மாறிவிட்டன.

பரத்துவாசமுனிவரது வரத்தின்படி அங்குமரங்கள்யாவும்செழித்துக் காணப்படுதல்.

அப்பால், எல்லா வானரவீரர்களும், வெகு சந்தோஷத்துடன்,அவ்வாறு மிகுதியாகவும் உருசியாகவும் உண்டான அக்கனிகளை ஆயிரக்கணக்காகப் பறித்து ஆனந்தத்துடன் புசித்து, சுவர்க்கத்தை யடைந்தவர்கள்போல்க் களிக்கலானார்கள்.

நூற்றிருபத்தெட்டாஞ் சருக்கம்:
ஸ்ரீராமர் தமதுவருகையை உணர்த்தப் பரதரிடம் அனுமானை அனுப்புதல்.

ஸ்ரீராமர், விமானத்திலிருந்தபடி அயோத்திமாநகரத்தைப் பற்றிச் சிந்தித்து, வானரசிரேஷ்டனை அனுமானைப் பார்த்துச் சொல்லலானார்:— "நீ அயோத்திசென்று, 'அரண்மனையில் எல்லாரும் சௌக்கியமா?' என்பதை அறிந்துகொள்க. சிருங்கிபேரபுரஞ் சென்று, வேடர்களின் மன்னவனாகிய குகனிடம் நான் சொன்னதாக எனது க்ஷேமத்தைத் தெரிவிக்க; அவன், ஒருவகைத் தீங்குமில்லாமல் சௌக்கியமாக நான் திரும்பிவந்ததைக் கேட்டதும் வெகு

ஸ்ரீராமர் அனுமானைப் பரதரிடம் அனுப்புதல்.

சந்தோஷ மடைவான்; அவன், எனதுஉயிர்போன்ற நண்பன். வேடர்களின் மன்னவனாகிய அக்குகன், அயோத்திக்குப்போகவேண்டிய வழியைக் காண்பித்து, அவ்விடம் பரதன் க்ஷேமமாக விருக்குஞ் சமாசாரத்தையும் சொல்லுவான். பரதனிடம் க்ஷேமசமாசாரத்தை நான் சொன்னதாகச் சொல்லுக. நான் என் காரியத்தைச் சரியாக முடித்துக்கொண்டு இலட்சுமணனுடனும் சீதையுடனும் திரும்பி வருவதும், வலியவனான் இராவணன் சீதையைக் கவர்ந்து போனதும், சுக்கிரீவரிடம் நான் நட்புச்செய்துகொண்டதும், வாலியைப் போரில் வதைத்ததும், சீதையைத்தேடியதும், நீ பெருங்கடலைத் தாண்டிச் சீதையைக் கண்டதும், அதன்பிறகு வானரசேனையுடன் நாம்சமுத்திரம்வந்துசேர்ந்ததும், சமுத்திரத்தைக் கண்டதும், சேதுவைக் கட்டி இலங்கைசென்று இராவணனை வதைத்ததும், மஹேந்திரன் பிரமா வருணன் என்னும் இவர்கள் நமக்கு வரங்கொடுத்ததும், மகாதேவருடைய அருளால் எமது தந்தையான தசரதரை யாம் கண்டதும், நாம் திரும்பி வந்ததும் ஆகிய இவைகளெல்லாவற்றையும்,எனதுநண்பனே!நீ பரதனிடம் தெரிவிக்க. நாம் இப்பொழுது அரக்கவேந்தராகிய விபீஷணருடனும் எல்லாவானரவீரர்களுடனும் வந்திருக்கின்றோ மென்பதையும் சொல்லுக. இச்செய்தியைக் கேட்டுப் பரதனுடைய முகக்குறி இன்னவாறுகின்றதென்பதையும், அவன் என்னிடம் என்னகருத்துடனிருக்கின்றனென் பதையும், நீ அவனது முகக்குறிகளா லறிந்துகொள்ளவேண்டும்.“இராமன் தனதுசத்துருக்களையெல்லாம்வென்று, ஒப்பற்ற புகழ்பெற்று, தான் ஆரம்பித்த எல்லாக்காரியங்களையும் சரிவர நிறைவேற்றிய பிறகு, தனது நண்பர்களுடனும் தனது பெருஞ்சேனையுடனும் வருகின்றான்” என்ற சமாசாரத்தைப் பரதனிடம்நீ சொல்லும்பொழுது, அவனுடைய முகத்தில் தோன்றுங் குறிகளாலும், அவனது பார்வையாலும், அவனது பேச்சாலும், அவன் நம்மிடங்

கொண்டிருக்குங் கருத்துமுழுதையும் தெரிந்துகொள்ள லாம். எல்லாவகை யின்பங்களும் நிரம்பி, யானை குதிரை தேர் இவைக ளடங்கிய சேனையுள்ளதாய் வம்சபரம்பரை யாக வந்திருக்கும் இராச்சியத்தில் யாருக்குத்தான் ஆசை யிருக்காது? பரதனுக்கு இராச்சியத்தில் ஆசையிருக்கும் பட் சத்தில், அவனே, இவ்வுலகம் முழுவதையும் ஆளட்டும். ஆகையால், வானரவீரனே ! அவனது எண்ணத்தை அறி ந்து, அவனது ஏற்பாடுகளையும் தெரிந்துகொண்டு, யாங்கள் அயோத்திக்குச் சமீபத்தில் வருவதற்கு முன்னமே, நீ என் னிடம் வந்து தெரிவிக்கவேண்டும்" என்றார்.

மானிடவுருக் கொண்டுசென்ற அனுமான் குக னைக்கண்டு இரா மரது க்ஷேமத்தை யுணர்த்துதல்.

இவ்விதமாக ஸ்ரீராமர் கட்டளையிட்டதும், வாயுபகவா னதுகுமாரனான அனுமான், மனிதரூபங் கொண்டு வெகு வேகமாக அயோத்திக்குச் சென்றான். பிறகு, அவன், பெரும்பாம்பைப் பிடிக்கும் படி வெகு வேகமாகக் கருடன் கிளம்புவது போல உயரவெழுந்து கங்கையும் யமுனை யும்சந்திக்குஞ்சங்கமத்துறைக்குமேலிருந்த ஆகாயமார்க்கத்தைத் தாண்டி, ஆகாயத் தின் வழியாகச் சென்று, சிருங்கிபேர புரத்தைச் சேர்ந்து, அவ்விடத்திற் குகனைக் கண்டு, அழகான சொற்களால் வெகுசந்தோஷத்துடன் அவனைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானான்:— "உண்மையையும் வல்லமையையும் உறுதியாகக்கொண்டவராய், தங்களது நண்பராயிருக்கும் ஸ்ரீராமர், இலட்சுமணருடனும் சீதையுடனும் சௌக்கிய மாயிருப்பதாகத் தங்களிடம் தெரிவிக்கச் சொல்லினார். ஸ்ரீராமர், இன்று பஞ்சமி இரவு பரத்வாஜமகாமுனிவரின் வேண்டுகோளின்படி அவரது ஆச்சிரமத்தில் தங்கிவிட்டு, அவரிடத்தினின்று விடைபெற்று நாளைக் காலையிற் புறப் பட்டுவருகின்றவரைக்காண்பீர்" என்றான்.

இவ்வாறு மகாபலம் பொருந்திய அனுமான், குகனி டஞ்சொல்லிவிட்டு, மகிழ்ச்சியால் மயிர்க்கூச்செறிய, வழியி

அனுமான் அங்கு நின்று சென்று பரதரைக் காணுதல்.

ஆள்ள காடு மலை நதிகளின் அழகைப்பற்றி யெண்ணுமல், வெகு வேகமாய் ஆகாயமார்க்கமாகச் சென்றான். பரசுராமதீர்த்தம், வாலகிலநதி, கோமதி என்ற இவைகளை யெல்லாம் ஆகாயத்திலிருந்தபடியே பார்த்துக்கொண்டு, சாலவிருக்ஷங்கள் நிரம்பிய காடுகள், பல்லாயிரங் குடிகள் க்ஷேமமாகவாழும் நாடுகள் இவைகளையும் கண்ணுற்றுக்கொண்டே, அவ்வானரவீரன், வெகுவேகமாய் வெகுதூரம்சென்று, நந்திக்கிராமத்துக்கருகில் பலமரங்களடர்ந்து விளங்குந்தோட்டமொன்றைச்சார்ந்தான். அத்தோட்டத்திலோ, தேவேந்திரனுடைய தோட்டமாகிய நந்தனவனத்திலிருப்பதுபோல் நற்புதல்வர்களைப் பெற்ற உத்தமிகளும் பெரியவர்களும் சிறியவர்களும் சந்தோஷமாகச் சஞ்சரிப்பதை, அனுமான் கண்டான். அத்தோட்டம், அயோத்தியிலிருந்து ஒரு குரோசதூரத்திலிருந்தது. அங்கு, மரவுரியும் மான்தோலும் தரித்தவராய், வெகுபரிதாபமான தோற்றமுள்ளவராய், உடம்புஇளைத்தவராய், ஆச்சிரமத்தில் வசிப்பவராய், தமது மயிர்முடியை ஜடையாகத் திரித்தவராய், மேனி முழுதும் மாசு படிந்தவராய், தமையனுரைவிட்டுப் பிரிந்த துக்கத்தினல் மெலிந்தவராய், கனிகளையும் கிழங்குகளையுமே உணவாகக் கொண்டவராய், ஐம்புலன்களையும் வென்றவராய், தவசியாய், தருமத்தை அநுஷ்டிப்பவராய், மிக்க ஜடாபாரத்தை மேற்கொண்டவராய், மரவுரியையும் மான்தோலையுமே ஆடையாக அணிந்தவராய், தவவிரதத்தை வெகுகடோரமாக அனுஷ்டிப்பவராய், வெகுபரிசுத்தமான உள்ளமுடையவராய், பிரமரிஷிக்கு ஒப்பான காந்தியுடன் விளங்குபவராய், தமது தமையனுராகிய ஸ்ரீராமர் தமக்கு அளித்த மரவடியிரண்டையும் தமது முன்பாக வைத்துக்கொண்டு உலகம் முழுவதையும் அரசாள்பவராய், நான்கு சாதியார்களும் நிரம்பிய இவ்வுலகமுழுவதிலும்ஒரு வகையச்சமு முண்டாகாமற் பாதுகாப்பவராய், காஷாய

வஸ்திர முடித்தவர்களான அமைச்சர்களாலும் ஆசார சீலர்களான புரோகிதர்களாலும் சூழப்பட்டவராய், கவச மணிந்த சேனைத்தலைவர்களாற் சூழப்பட்டவராய், ஸ்ரீ பரதர், அந்த ஆச்சிரமத்தில் வசித்துக் கொண்டிருப்பதை, அனுமான் கண்டான். ராஜகுமாரராகிய பரதர், தமது அன்பான தமையனார் பொருட்டு அவ்வாறு தவசியாக விருந்ததைப் பார்த்தபிறகு, அந்நகரத்துக்குடிகள் தாங்களும் தங்களுடையசுகங்களில் ஆசையொழிந்தவர்களாய் அவ்வாரூன ஒழுக்கத்தில் ஆசைகொண்டார்கள்.

அனுமான் இராமரது செய்தியைப் பரதர்க்கு உணர்த்துதல்.

அவ்வாறு தருமமே மனிதவுருவமெடுத்து வந்தது போல்விளங்கிய ஸ்ரீ பரதரை, அனுமான், பார்த்து, அஞ்சலி செய்துகொண்டு பின்வருமாறு சொல்லலானான்:—"தண்ட காரணியத்தில் மரவுரியணிந்து ஜடைமுடியுடன் வசித்துக் கொண்டிருக்கின்றாரே யென்று எவரொரு வரை நினைத்துத் தாங்கள் இவ்வளவு துயரப்படுகின்றீர்களோ, அவ்விராமர், தங்களுக்கு க்ஷேமத்தைத் தெரிவிக்கச்சொன்னார். வேந்தரே! தங்களுக்கு இந்தச் சந்தோஷசமாசாரம் சொல்லவந்தேன். இக்கொடிய துக்கத்தை இனி அகற்றுங்கள். இதே முகூர்த்தத்தில் தாங்கள் தங்களுடைய தமையனாகிய ஸ்ரீ ராமரைக் காண்பீர்கள். ஸ்ரீ ராமர், இராவணனவதைத்துச் சீதாதேவியை மறுபடியும்அடைந்து, தமது காரியங்களை முற்றிலும் நிறைவேற்றி, தமது நண்பர்களுடனும் பெருஞ்சேனையுடனும் இவ்விடத்துக்கு வந்துகொண்டிருக்கின்றார். வெகுபராக்கிரமமுள்ள இலட்சுமணரும் வருகின்றார். மகேந்திரரிடம் சசீதேவி விளங்குவதுபோல, புகழ்பெற்ற சீதாதேவியும், ஸ்ரீ ராமரிடம் விளங்குகின்றாள்" என்றான்.

இவ்வாறு அனுமான் சொன்னதும், தமையனாரிடம் மிக்க அன்பு வைத்திருந்த ஸ்ரீ பரதர், தமது சந்தோஷத்

தைத் தாங்கமுடியாமல் திடீரென்று பூமியில் விழுந்து மோகமடைந்தார். உடனே, கொஞ்ச நேரத்துக்குள், பரதர், மூர்ச்சை தெளிந்து எழுந்து, தமக்கு அவ்வாறு அன்பான செய்தி சொன்ன அனுமானைப் பரபரப்புடன் கட்டிக்கொண்டு, அதியானந்தத்தாற் பெருகிய கண்ணீர்வெள்ளத்தினுல் அவ்வானர வீரனை அபிஷேகஞ் செய்பவராய், பின்வருமாறு சொல்லலானுர்:—" இவ்வளவு கருணையை என்னிடம் காட்டிக்கொண்டு இவ்விடம் வந்த தாங்கள், தேவரா ? அல்லது, மனிதரா ? இச்சந்தோஷ சமாசாரத்தைத் தாங்கள் சொன்னதற்காக, நண்பரே ! நூருயிரம் பசுக்களையும், உத்தமமான நூறு கிராமங்களையும், உயர்ந்த ஆபரணங்களணிந்தவர்களாய் நல்லொழுக்கமுள்ளவர்களாய்த் தங்கநிறம் போன்ற மேனியுள்ளவர்களாய் அழகான மூக்குள்ளவர்களாய்ச் சந்திரனுக்கு ஒப்பான முகங்களுள்ளவர்களாய் எல்லாவகையான அணிகளுடனுங் கூடியவர்களாய் நற்குலமும் நல்ல நடத்தையுமுடையவர்களாய் விளங்கும் பதினுறு கன்னிகைகளையும் தங்களுக்குக் கொடுக்கின்றேன் " என்றுர். பரதர், அவ்வானரவீரனிடமிருந்து ஸ்ரீராமர் திரும்பிவருகின்ரு ரென்னுஞ் சந்தோஷசமாசாரத்தைக் கேட்டு, தமையனுரைச் சீக்கிரஞ் சேவிப்போ மென்ற சந்தோஷத்தில் மூழ்கியவராய், மறுபடியும் மிக்க சந்தோஷத்தினுல் அனுமானை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானுர்.

பரதர் அனுமானிடத்துப் பெருமகிழ்ச்சி காட்டுதல்.

நூற்றிருபத்தொன்பதாஞ் சருக்கம் :
ஸ்ரீராமருடைய வனவாசசரித்திரத்தைச் சுருக்க மாக அனுமான் பரதருக்குச் சொல்லுதல்.

பரதரது வியப்பு.

"என்னை யாளவேண்டிய எனது தமையனார் பெருவனத்துக்குச் சென்று பல வருஷங்கள் ஆயினவே ! அவரைப்பற்றிய அன்பான சமாசாரம், என்காதில் இப்பொழுதல்லவா விழுந்து, என்அன்பைப் பெருகச்செய்கின்றது. ஒரு மனிதன் உயிருடன்மட்டு மிருப்பானே யானால், நூறுவருஷத்துக்குப் பிறகாவது அவனுக்குச் சந்தோஷ முண்டாகுமென்ற உலகச்சொல் உண்மை யென்றே எனக்குத் தோன்றுகின்றது."

பரதர், அனுமானை இராமர்க்கும் வானரர்க்கும் நட்புண்டான வகையைப்பற்றி வினவுதல்.

"அனுமானே ! ஸ்ரீராமருக்கும் வானரவீரர்களுக்கும் சேர்த்தியான்னது, இவ்விடத்தில் இன்ன காரணத்திற்காக இப்படியுண்டாயிற்றென்பதைப்பற்றி, தாங்கள் எனக்குச் சொல்லவேண்டும்" என்று அனுமானைப் பரதர் வினவினர்.

ஸ்ரீபரதர் அனுமானை பிரம்பினால் முடைந்ததோராசனத்தி லுட்காரவைத்து இவ்வாறுகேட்கவே, அவன், ஸ்ரீராமரது வனவாச சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்லலானான்:—"தங்களதுமாதாவானகைகேயி கேட்டுக்கொண்டவரத்தின்படி ஸ்ரீராமர் காட்டுக்குச்சென்றதும், தமதுகுமாரனை விட்டுப்பிரிந்த துக்கத்தால் தசரதமகாராஜர் மாண்டதும், தூதர்கள் தங்களுடைய மாமனதுஅரண்மனையிலிருந்துசடிதியில் தங்களை யழைத்துவந்ததும், தாங்கள் அயோத்திக்குத் திரும்பிவந்தபிறகு அரசாட்சியில் மன்மில்லாமற் சித்திரகூடபருவதத்துக்குச் சென்று தருமத்தை அநுஷ்டித்துக்கொண்

அனுமானது விடை.

டிருந்த தமையனாகிய ஸ்ரீராமரையே திரும்பிவந்து ராஜ்யத்தை ஒத்துக்கொள்ளுமாறு வேண்டினதும், தங்கள் தமையனார் தமதுதந்தையின் சொல்லில் நின்று தமக்கு ராஜ்யம் வேண்டா மென்றதும், ஸ்ரீராமருடைய பாதுகையை வாங்கிக்கொண்டு தாங்கள் திரும்பிவந்ததும் ஆகிய இவைகளெல்லாம், பகைவரையழிக்க வல்லவரே! மகாபாகுவே! தங்களுக்கு நன்முகத் தெரியுமே. தாங்கள் சித்திரகூடத்தைவிட்டுத் திரும்பினபின்பு நடந்த சங்கதிகளைச் சொல்லுகின்றேன்; கேளுங்கள்: தாங்கள் அவ்விடம் விட்டுத் திரும்பினபின்பு, அவ்வனம், அபூர்வமாக இராமர் முதலியோரைக் கண்டதனால் அஞ்சிக் கலங்கிய பறவைகளையும் விலங்குகளையும் உடையதாய்ப் பரிதபிப்பது போலத்தோன்றிற்று. பிறகு, ஸ்ரீராமர், யானைகள் மிகுதியாகச் சஞ்சாரஞ் செய்யப்பெற்றதும், சிங்கங்களும் புலிகளும் பதினுயிரக்கணக்காக நிரம்பியிருப்பதும், மனிதசஞ்சாரமற்றதுமான பெரிய தண்டகாவனத்தினுட் புகுந்தார். அவ்வனத்தில் அவர்கள் புகுந்து நடந்து கொண்டிருந்த பொழுது, அவர்களுக்கு முன்பாக, விராதனென்னும் ஓர் பெரிய அரக்கன், பேரொலியுண்டாகக் கொக்கரித்துக்கொண்டு காணப்பட்டான். யானைபோலப் பிளிறிக்கொண்டு கையோங்கியவண்ணம் வந்த அவ்வரக்கனைத் தூக்கி ஸ்ரீராமர், தலைகீழாகப் பெருங்குழியொன்றில் தள்ளினர். அவ்விருசகோதரரும், அவ்வண்ணம் ஆச்சரியமான செயலைச் செய்துவிட்டு, சாயங்காலம் சரபங்கருடைய அழகான் ஆச்சிரமத்தையடைந்தார்கள். சரபங்கமுனிவர் தேவலோகஞ்சென்ற பின்பு, உண்மையையும் வல்லமையையும் உறுதியாகக் கொண்ட ஸ்ரீராமர், அங்கிருந்த முனிவர்களையெல்லாம் வணங்கி விடைபெற்று, ஜநஸ்தாநத்துக்குச் சென்றார். பிறகு, சூர்ப்பணகை அவ்விராமரது பக்கத்தில் வந்தாள். அப்பொழுது, ஸ்ரீராமருடைய கட்டளைப்படியே, மஹாபலசாலியாகிய இலட்சுமணர் சரேலென்று எழுந்து

கத்தியைக் கைப்பற்றி அவளுடைய காதையும் மூக்கை யும் அரிந்தார். அப்பால், மஹாத்மாவான ஸ்ரீராமர், அங்கு வசித்துக்கொண்டிருந்தபொழுது, சூர்ப்பணகையின் பொரு ட்டு வந்து எதிர்த்த பயங்கரமாகத் தொழில்செய்யவல்ல பதினன்காயிரம் அரக்கர்களைத் தாம் ஒருவராகவே கொன் றார். ஒரே பகலின் நாலிலொருபாகத்தில் அவ்வாறு பதினாலாயிரம் அரக்கர்கள் தம்மைமாத்திரம் குறியாகக் கொண்டு போர்செய்கையில், இராமர், தாமொருவராகவே, அவர்களில் ஒருவனுவது மிச்சமாகாதவண்ணம் ஒழித் தார். அதிக பலம் பொருந்தியவர்களும் அதிக வல்லமை பொருந்தியவர்களும் எப்பொழுதும் தவத்துக்கு இடை யூறு செய்துகொண்டிருந்தவர்களு மாகத் தண்டகாரணி யத்தில் வசித்துக்கொண்டிருந்த அவ்வளவு அரக்கர்களை யும், ஸ்ரீராமர், போரில் வதைத்தார். அரக்கர்களெல்லா ரையும் அவ்வண்ணம் நாசம்பண்ணி, கரனையும் போரில் ஸ்ரீராமர் கொன்றார். அதனைக்கண்டு, சூர்ப்பணகைவருத்த மடைந்து, இராவணனிடஞ் சென்று முறையிட்டாள். இராவணனைச் சேர்ந்தவனுகிய மாரீசன், இரத்தினமய மான மானுக உருமாறிச் சீதாதேவியின் மனத்தை அம் மானினிடத்தில்ஆசைவைக்கும்படிசெய்தான். அம்மானைக் கண்டதும், சீதாதேவி, ஸ்ரீராமரை நோக்கி, "அழகான இம்மான், என் மனத்தைக் கவர்கின்றது. இது நமது ஆச் சிரமத்திலிருந்தால், நமது ஆச்சிரமத்துக்கு ஓரழகு உண் டாகும். இதனைப் பிடித்துத் தாருங்கள்" என்றாள். அப் பொழுது, ஸ்ரீராமர், தமது கையில் வில்லை யெடுத்துக் கொண்டு, அம்மானைப் பிடிக்குமாறு அதனைத் துரத்திக் கொண்டு சென்றார். அது ஓட்டங்காட்டியதனால் மாயமா னென உணர்ந்து, அதனை அவர் தமது கூரான பாணத் தாற் கொன்றார். சாந்த மூர்த்தியே! அவ்வண்ணம் ஸ்ரீ ராமர் மானைத்துரத்திக்கொண்டு சென்றதும், இலட்சுமண ரும்அவ்வாச்சிரமத்தி லில்லாமலிருந்த சமயம் பார்த்து,

இராவணன் அவ்வாச்சிரமத்துக்குட் புகுந்தான். தன்து பலத்தால் * புதனென்னுங் கிரகம் ரோகிணியை ஆகாயத்திற் பற்றுவதுபோல, இராவணன் சீதாதேவியைப் பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டு ஓடலானன். அவ்வம் மணியைக் காப்பாற்ற, ஜடாயுவென்பவர், முயன்று, இராவணனுடன் போர்புரிந்தார். இராவணனும் போர்புரிந்து அப்பக்ஷிராஜனைக் கொன்றுவிட்டு, சீதாதேவியைத் தூக்கிக்கொண்டு வேகமாக ஓடினன். அப்படி அவன் ஓடின காலத்தில், மலைச்சிகரத்தில் வசிக்கின்ற மலைபோன்ற தோற்றமுள்ள சில வானரவீரர்கள், இராவணன் சீதையைக் கவர்ந்துசென்ற அவ்வாச்சரியத்தை வியப்புடன் கண்டார்கள். இவ்வுலகத்தையே கதறப்பண்ணிக்கொண்டிருந்த இராவணன், பிறகு வேகமாக இலங்கைக்குட்சென்று, தங்கவேலைகள் அழகாகச் செய்யப்பட்டிருந்த அழகான அரண்மனையிற் சீதாதேவியை நிறுத்தி, பற்பல நல்வார்த்தைகளால் அவ்வம்மணியை வஞ்சிக்கப் பார்த்தான். ஆனால், அவ்வுத்தமி, அவ்வரக்கமன்னவனையும் அவனதுபேச்சுக்களையும் ஒருசெத்தைபோல அலட்சியஞ் செய்ய, அவன், சீதாதேவியை அசோகவனத்திற்கொண்டு போய்ச் சிறைவைத்தான்; இதுநிற்க.

அப்பெருங்காட்டில் அம்மானைக் கொன்றுவிட்டு ஸ்ரீராமர் தமது ஆச்சிரமத்துக்குத் திரும்பினர். வழியில் குற்றுயிராய்க்கிடந்த ஜடாயுவைக் கண்டு மனம்வருந்தினர். இராவணனால் வதைக்கப்பட்டவரும் தமது தந்தையின் தோழருமான ஜடாயுவைத் தகனம்பண்ணி, சீதாதேவியைத் தேடிக்கொண்டு, ஸ்ரீராமர், இலட்சுமணருடன் கோதாவரி நதிக்கரையிலும் மலர்ந்துள்ள பல காடுகளிலும் சஞ்சரிக்கலானர். அவ்வாறு தேடும்பொழுது, அவ்

* ரோகிணி புதனுக்குத் தாயாகவேண்டும். சீதாதேவியும் உலகமாதா : ஆதலால், உபமானம்.

வீரர்கள், அப்பெருங்காட்டில், கபந்தனென்றஅரக்கனைக் கண்டார்கள். பிறகு, உண்மையையும் வல்லமையையும் உறுதியாகக்கொண்ட ஸ்ரீராமர், கபந்தன் சொற்படியே ரிசியமூகபருவதஞ்சேர்ந்து, சுக்கிரீவருடன் நட்புச்செய்து கொண்டார். அவ்விருவருக்கும் ஒருவருடன் மற்றொருவர் சந்திப்பதற்கு முன்னமே, அன்பென்பது, மனப்பூர்வமாக உண்டாயிற்று. கோபிஷ்டரான வாலியென்ற தமையனாரால் சுக்கிரீவர், முன்னமே இராச்சியத்தினின்று அகற்றப்பட்டிருந்தார். ஸ்ரீராமரும் சுக்கிரீவரும் ஒருவருடன் மற்றொருவர்பேசப்பேச, அவ்விருவர்கட்குள் முன்னிருந்த நட்பு, பின்னும் வலிமையுற்றது. பேருடல்படைத்துப் பெருவல்லமையமைந்திருந்த வாலியை, ஸ்ரீராமர், தமது புஜபலத்தால் வென்று, சுக்கிரீவரை அந்த இராச்சியத்தில் ஸ்தாபித்தார். எல்லாவானரர்களுடனும் சுக்கிரீவரை அவ்வாறு வானரராஜ்யத்தில் ஸ்தாபித்ததும், அதற்குப் பிரதியுபகாரமாக, அந்தச்சுக்கிரீவர் சீதாதேவியிருந்த விடத்தைத் தேடிக் கண்டுபிடிக்க ஒத்துக்கொண்டார். அதன்பொருட்டு, மகாத்மாவாகிய சுக்கிரீவர், பத்துக்கோடி வானரவீரர்களைக் கூப்பிட்டு, எல்லாத்திசைகளிலும் சீதையை நாடிக்காணுமாறு அனுப்பினர். அவ்வாறு தேடச்சென்றபொழுது, சிறந்த விந்தியமலையில் அவதி நாள்கழியுமளவும்கழித்துவிட்டநாங்களெல்லாரும், துக்கத்துடன் வெகுநாள் கழித்தோம். அப்போது ஜடாயுவென்ற புள்ளரசருடைய தமையனரான ஸம்பாதியென்பவர், சீதாதேவி இராவணனுடைய மாளிகையில் வசிப்பதாக எங்களுக்குத் தெரிவித்தார். துக்கப்பட்டுக்கொண்டிருந்த என்னினத்தார்களுடைய துயரத்தைப் போக்குமாறு கருதி, நான், எனது வல்லமையைக் கைப்பற்றி நூறுயோசனை தூரம் கடலைத்தாண்டி இலங்கைசேர்ந்து, அங்குஅசோகவனத்தில் தனிமையாய் அழுக்கடைந்த வெண்பட்டாடையணிந்தவளும் சந்தோஷமற்றவளும் உறுதியான நோன்

புள்ளவளுமான சீதாதேவியைக் கண்டேன். மாசற்ற அவ்வுத்தமியைச் சந்தித்து, எல்லாச் சங்கதிகளையும் கேட்டறிந்துகொண்டு, நான், என்னுடன் கொண்டு சென்றிருந்த இராமருடைய மிக்க காந்தியுள்ள இரத்தினமோதிரத்தை அடையாளமாகக் கொடுத்தேன். ஸ்ரீராமருக்குக் காட்டுவதற்காகச் சூடாமணியைச்சீதையினிடம்வாங்கிக்கொண்டு, சென்ற காரியம் முடிந்தபடியால், நான், வேகமாகத் திரும்பினேன். திரும்பி வந்துசேர்ந்து, விலையுயர்ந்த அவ்வடையாளத்தை, மாசற்றதொழில்கள் புரியும் ஸ்ரீராமரிடம் கொடுத்தேன். சீதாதேவி உயிருடனிருக்கின்ரு ளென்பதைக் கேட்டதும், ஸ்ரீராமருக்கு, பிராணன்போகின்ற நிலையிலிருக்கும் ஒருவனுக்கு அமிருதத்தைக்கொடுத்தாற் போல், தம்முயிரின்மேல் மீளவும் விருப்பம் வந்தது. பிரளயகாலத்தில் எல்லா வுலகத்தையும் பஸ்மஞ்செய்யத் தோன்றும் அக்கினிபோல, ஸ்ரீராமர் தமது சத்துருவை வதைப்பதில் முயன்று மனம்வைக்கலானர். பிறகு, யாவரும் சமுத்திரக்கரை சேர, நளனென்னும் வானரவீரன், சேதுவைக் கட்டிவைத்தான். அச்சேதுவால் வானரவீரர்களடங்கிய பெருஞ்சேனை, எளிதாக அக்கரை சேர்ந்தது. நீலன் பிரகஸ்தனைக் கொன்ரூன்; இராகவர் கும்பகர்ணனை வதைத்தார். இலட்சுமணர் இராவணனது குமாரனைக் கொன்ரூர். ஸ்ரீராமரே இராவணனையும் கொன்ரூர்.

அதன்பிறகு, ஸ்ரீராமர், தேவேந்திரன்யமன் வருணன் இவர்களெல்லாரையும் சந்தித்து, மகேசுவரர் பிரமதேவர் தசரதர் இவர்களையும் தரிசித்து, இவர்களிடமிருந்து வரங்களைப்பெற்று, பல மஹர்ஷிகளையும் தேவர்ஷிகளையும் கண்டு அவர்களிடமிருந்து பல வரங்களைப் பெற்றுக்கொண்டார். அவ்வாறு பல வரங்களைப் பெற்றுக்கொண்டு, ஸ்ரீராமர், வெகு சந்தோஷத்துடனே வானரவீரர்களுடன்கூடப் புஷ்பகவிமான மேறிக் கிஷ்கிந்தை வந்து சேர்ந்தார். ஸ்ரீராமர், அங்கிருந்து புறப்பட்டுக் கங்கைநதி

சேர்ந்து, ஸ்ரீ பரத்துவாசமாமுனிவரிடம் தங்கியிருக்கின்றார். ஒருவகைத்தடையுமில்லாத புஷ்யயோகம் நாளை யாகையால், அந்த நல்லநாளில், அவர், இங்கு வருவார். தாங்கள் அவரைச் சீக்கிரத்திற் காணலாம்" என்றான்.

அவ்வாறு உண்மையாக அனுமான் சிறந்த சொற்களைச் சொல்லக் கேட்டு, பரதர், ஆனந்தமடைந்து, அஞ்சலி பண்ணிக்கொண்டு, "வெகுநாளாக எதிர்பார்த்துக்கொண்டிருந்த என் மனோரதம் நிறைவேறிற்று" என்று தமது மனத்துக்குச் சந்தோஷமான வார்த்தையை வாய்விட்டுச் சொன்னார்.

நூற்றுமூப்பதாஞ் சருக்கம்:
பரதர் பரிவாரங்களுடன் ஸ்ரீராமரைக் காணுதல்.

உண்மையில் உறுதிகொண்ட வெகுபராக்கிரமசாலியாகிய பரதர், மிக்கமகிழ்ச்சியைக் கொடுக்குஞ் சமாசாரத்தைக் கேட்டு, தம்மைப்போலவே சந்தோஷத்தில் மூழ்கியிருந்த சத்துருக்கினரை நோக்கிப் பின்வருமாறு கட்டளையிடலானார்:—"வாசனைபொருந்திய பலவகைமலர்களாலும் வாத்திய கோஷங்களாலும், எல்லாக் கோயில்களிலும், நாற்சந்திகளிலிருக்கும்மண்டபங்களிலும், தக்கமானிடர்கள் வெகு ஆசாரத்துடன் பூஜை செய்யட்டும். எல்லாவகைத்தோத்திரங்களையும் புராணங்களையும் அறிந்த ஸ்துதிபாடகர்களும், வைதாளிகர்களும், வாத்தியங்களிற் சமர்த்தர்களான வாத்தியக்காரர்களும், கணிகையர்களும், கூட்டங்கூட்டமாகச் சந்திரனுக்கொப்பான ஸ்ரீராமருடைய முகத்தைப் பார்க்கும்பொருட்டுப் புறப்படட்டும்" என்றார்.

ராமரது வருகையைக் கேட்ட பரதர் சத்துருக்கினருக்கு இட்ட கட்டளை.

சத்துருக்களை யடக்கும் வல்லமையமைந்த சத்துருக்கினர், பரதர்சொன்னதைக் கேட்டு, சம்பளத்துக்கென்று

பரதர் கட்டளையைப் பெற்ற சத்துருக்கினர், பணியாளர்க்குப் பலவகையலங்காரஞ்செய்யுமாறு கட்டளையிடுதல்.

வேலைசெய்யாமல் எப்பொழுதும் உண்மையாகவே நடக்கும் பல்லாயிரக் கணக்கான வேலைக்காரர்களைத் தம்முன் அழைத்துப் பின்வருமாறு கட்டளையிடலானார்:—"இந்தநந்திக்கிராமத்திலிருந்து அயோத்திவரையிலும் வழியை மேடுபள்ளமின்றிச் சரியாகச் செய்யுங்கள். மிக்கமேடான இடங்களையும்சீர்ப்படுத்துங்கள். பனிபோலக்குளிர்ந்த ஜலத்தை வழிமுழுமையும்தெளியுங்கள். சிலர், வழி முழுவதும் பொரிகளையும் புஷ்பங்களையும் வாரியிறைத்துக்கொண்டே போகட்டும். நமது நகரத்தில்,எல்லாவீதிகளிலும்,கொடிகள் தூக்கி நிறுத்தப்படட்டும். சூரியோதயம் முதல், மலர் மாலைகளாலும் விடுதிமலர்களாலும் வீடுகள் விளக்கப்படட்டும். நன்றுக வாசனைவீசுகின்ற ஐவகைநிறங்களுடன் கூடிய பொடிகளைக்கொண்டு, மணிதர்களால் ராஜவீதிகள் நெருக்கமின்றிக் கோலமிடப்படட்டும்" என்றார்.

பட்டணத்தவர் பலரும் ஸ்ரீராமரை சேவிக்குமாறு நந்திக்கிராமத்தைச் சேர்தல்.

உடனே, தசரதராஜருடைய பத்தினிகள், மந்திரிகள், சேனைகள், சைனிகரின் மனைவியர், அந்தணர்கள், க்ஷத்திரியர்கள், கைத்தொழிலாளிகள் இவர்களும், இன்னும் பலவகைச்சாதியாரும், கூட்டங் கூட்டமாகப் புறப்பட்டார்கள். திருஷ்டி ஜயந்தர் விஜயர் ஸித்தார்த்தர் அர்த்தசாதனர் அசோகர் மந்திரபாலர் சுமந்திரர் முதலிய இவர்கள்,பொன்னுபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மதித்தயானைகளின் மீதேறிப் புறப்பட்டார்கள். மற்றுமுள்ள சிலமகாரதர், பொற்சரடுகளை யணிந்த ஆண்யானைகளின்மீதும் பெட்டையானைகளின்மீதும் ஏறிச்சென்றார்கள். சிலர், அழகான குதிரைகளின்மீதும் இரதங்களின்மீதும் ஏறிக்கொண்டு புறப்பட்டார்கள். வீரர்கள், சூலம் கத்தி தடி இவற்றைக் கைகளிலேந்திக்கொண்டு, கொடிகள் கட்டப்.

பட்டும் முக்கியர்களானமனிதர்க ளேறப்பெற்று முள்ள சிறந்த ஆயிரக்கணக்கான குதிரைகளாலும், ஆயிரக்கணக்கான காலாட்களாலும் சூழப்பெற்றவர்களாய் வெளிப்பட்டார்கள். அப்பால், தசரதமன்னவருடைய மனுவிமார்கள், கௌசல்யையையும் சுமுத்திரையையும் முன்னிட்டுக்கொண்டு, பலவிதவாகனங்களி லேறி வெளிப்புறப்பட்டார்கள். கைகேயியுடன்கூட இவர்களெல்லாரும் நந்திக்கிராமத்தைச் சேர்ந்தார்கள். அயோத்திமாநகரம் முழுவதுமே, அப்போது, அங்கு வந்துசேர்ந்தது. குதிரைகளின் குளப்படிகளின்சத்தத்தாலும், தேர்ச்சக்கரங்களின்சத்தத்தாலும், சங்கதுந்துபிவாத்தியங்களின் கோஷத்தாலும், பூமியே அசைந்ததுபோலக் காணலாயிற்று.

யாவரும் பரதரைக் காணுதல்.

தருமாத்துமாவாகிய ஸ்ரீபரதரை, பிரதானிகளான அந்தணர்கள், கைத்தொழிற்காரர்கள், வியாபாரிகள், மலர்களையும் மோதகங்களையும் கைகளிற் சித்தமாக வைத்துக்கொண்டிருந்த மந்திரிகள் இவர்களெல்லாரும், சூழ்ந்து நின்றார்கள். சங்கம் பேரிகை இவைகளி னொலிகளாலும், வந்தியராலும், ஸ்ரீபரதர் வணங்கப்பெற்றார்.

பரதர் பரிவாரங்களுடன் ஸ்ரீராமரை எதிர்கொள்ளச் செல்லுதல்.

ஸ்ரீராமருடைய பாதுகைகளை முடியின்மேலணிந்தவராய், உபவாசத்தால் உடம்பு இளைத்தவராய், வெகுபரிதாபமான தோற்ற முள்ளவராய், மரவுரியும் மான்தோலும் உடுத்தவராய், தமது தமையனர் வருகின்ற ரென்ற சமாசாரத்தைக் கேட்டதுமுதல் சந்தோஷக்குறி தமது முகத்தில் விளங்கப்பெற்றவராயுள்ள ஸ்ரீபரதர், வெண்மலர் மாலையால் விளங்கும் வெண்குடையையும் ராஜசின்னமான தங்கப்பிடியுள்ள இரண்டு வெண்சாமரங்களையும் எடுத்துக்கொண்டு, தமது மந்திரிமார்களெல்லாரும் தம்மைச் சூழ்ந்துவர, ஸ்ரீராமரை எதிர்கொண்டு சென்றார்.

இராமரது வருகையை யெதிர்பார்த்துக்கொண்டே கொஞ்சதூரம் சென்றதும், அந்தப்பரதர், அனுமானைப் பார்த்துப் பின்வருமாறு வினவலானார்:—

பரதர், இராமர் வருகை உணரப் படாமையைக் குறித்து அனுமானை வினவுதல்.

'குரங்குகளுக்கியல்பான சஞ்சலபுத்தி, உம்மிடம் இராதென்று நம்புகின்றேன் : அப்படியிருக்க, எனக்குப் பெரியவரும் சத்துருக்களை நாசம்பண்ணுபவருமான ஸ்ரீராமரைக் காணேமே ! இஷ்டமான உருவங்கொள்ளுகின்ற வானரர்கள் ஒருவரையும் காணேமே !" என்றார்.

இவ்வாறு, பரதர் சொன்னதும், காலம்விளம்பித்த தன்காரணத்தை விண்ணப்பஞ்செய்பவனும், அனுமான் சத்தியத்தி லுறுதியுள்ள பரதரைநோக்கிப்பின்வருமாறு சொல்லலானான்:— "பரத்வாஜமகாமுனிவருடைய அருளால், இப்போது கனிகள் நிரம்பிப் பூத்திருக்கும் மரங்களெல்லாம், தேனைப்பெருகவிட்டுக்கொண்டு கொழுத்த வண்டுகள் ரீங்காரஞ்செய்ய விளங்குகின்றன : ஸ்ரீராமர்போகும் வழிகளிலெல்லாம் அகாலத்திலும் மரங்கள் கனிகளைக் கொடுக்கக்கடவன வென்று முன்னமே ஸ்ரீராமருக்குத் தேவேந்திரர் வரமளித்திருக்கின்றார். மேலும், அந்தப்பரத்வாஜமஹர்ஷியானவர், தமது அன்பின் பெருக்கினால், சேனைகளுடன் கூடிய ஸ்ரீராமருக்கு எல்லாக்குணங்களும் நிரம்பிய விருந்தை அளிக்கின்றார். அதனால்தான், காமதமாயிருக்கலா மென்று தோன்றுகின்றது. அதோ, சந்தோஷத்தாற்களிக்கும் வானரர்களுடைய அட்டகாசம் கேட்கின்றது. அதனை, வானரசேனை கோமதியென்னும் நதியைத் தாண்டுஞ் சத்தமாயிருக்கலா மென்று எண்ணுகின்றேன். அதோ வானுகினிநதியை நோக்குங்கள் ; அங்கு மிகுதியாகத் தூளி யெழுகின்றது,

அனுமான், இராமர் வரத் தாமதமாவதற்குக் காரணங் கூறுதல்.

இராமர் வானர சேனையுடன் வருகின்றஇடங்களை அனுமான் பரதர்க்குத் தெரிவித்தல்.

இன்னும் சமீபமாகப் பாருங்கள்; வானரசேனை, இப்பொழுது இதோதெரிகின்ற சாலவிருக்ஷங்களின் தோப்பில் இறங்கி, அங்குச் சஞ்சரிக்கின்றதுபோலக் காண்கின்றது. இதோ சிறிதுதூரத்திற் களங்கமற்ற சந்திரன்போல அழகான புஷ்பகவிமானம் காண்கின்றது; இது, முற்காலத்திற் பிரமதேவரால் நிருமிக்கப்பட்டது. இராவணனை உறவுமுறையார்களுடன் கொன்றவுடனே, ஸ்ரீராமர் இவ்விமானத்தை யடைந்தார். இளஞ்சூரியனைப்போல விளங்கிக் கொண்டு மனோவேகமாகச் செல்வதாய் இப்பொழுது ஸ்ரீராமருடைய வாகனமாக வருகின்ற இவ்விமானத்தை, பிரமதேவரிடமிருந்து குபேரனர் முற்காலத்திற் பெற்றிருந்தார். இதில்தான், இலட்சுமணருடனும் சீதாதேவியுடனுங்கூடிய ஸ்ரீராமரும், மகாபலசாலியாகிய சுக்கிரீவரும், ராக்ஷஸ ராஜராகிய விபீஷணரும், வருகின்றார்கள்" என்றான்.

இராமரை யாவரும் காணுதல்.

அப்பால், அவ்விடமிருந்த பெண்கள், குழந்தைகள் யுவாக்கள் என்ற இவர்களது வாயினின்று சந்தோஷமாக வெளிக்கிளம்பிய "அதோ, ஸ்ரீராமர்" என்ற சத்தமானது, ஆகாயத்தையே முட்டிற்று. உடனே, அங்கு வந்திருந்தவர்கள், குதிரைகள் யானைகள் தேர்கள் இவைகளினின்று சரேலென்று கீழிறங்கி, ஆகாயத்தில் விளங்குஞ்சந்திரனைப்போன்ற, ஸ்ரீராமரை வெகு ஆவலுடன் பார்த்தார்கள்.

பரதர் ஸ்ரீராமரை வணங்குதல்.

உடனே, ஸ்ரீபரதர், அஞ்சலிசெய்தபடியே, வெகு சந்தோஷமாக ஸ்ரீராமரெதிரில் நின்றுகொண்டு மனப்பூர்வமாக நல்வரவு விசாரித்தார். பிரமதேவரால் உண்டாக்கப்பட்ட அந்தப் புஷ்பகவிமானத்தில், ஸ்ரீராமர், தமது புடைபரந்து நீண்ட கண்களினழகால், இரண்டாவது தேவேந்திரன்போல அப்பொழுது விளங்கலானர். மேருமலையில் விளங்குஞ் சூரியபகவானை வந்தனம்பண்ணுவது

போல், ஐம்புலவாசையை யொழித்தவரான பரதர், அவ் விமானத்தின்மீதிருந்த தமது தமையனராகிய ஸ்ரீராமரை நமஸ்காரஞ்செய்தார்.

அதன்பிறகு, வெகுவேகமாகச் செல்வதும் அன்னப் பறவைகளின்வடிவம் சித்திரவேலையிற் செய்யப்பெற்ற தும் மிகச்சிறந்தது மான அவ்விமானம், ஸ்ரீராமருடைய கட்டளைப்படி பூமியிலிற ங்கி நின்றது. உண்மையையும் வல்லமை யையும் பெற்ற ஸ்ரீபரதரை, ஸ்ரீராமர், தமது கை கொடுத்து அவ்விமானத்தி லேற்றி விட்டார். ஸ்ரீராமரைக் கண்ட சந்தோஷத்தில் மூழ்கியிருந்த பரதர், மறுபடியும் ஸ்ரீராமருக்கு நமஸ்காரஞ் செய்தார். வெகுநாளாய்த் தாம் காணுத தம்பியாகிய அப் பரதரை, ஸ்ரீராமர், தமது மடியின்மேல்வைத்து, சந்தோ ஷத்தாற் கட்டித்தழுவினர். அதன்பிறகு, பரதர், இலட்சு மணரைப் பார்த்துவிட்டு, சீதாதேவியை நமஸ்காரஞ் செய் தார். நமஸ்காரஞ்செய்து எழுந்து நின்று, வெகுகளிப்புடன் (அபிவாதயே என்றுசொல்லுகின்ற வழக்கப்படி) தமது பெயரையும் சொன்னர். அப்பால், பரதரானவர், சுக் கிரீவன் ஜாம்பவான் அங்கதன் மைந்ததுவிவிதர் நீலன் விருஷபன் ஸுஷேணன் நளன் கவாக்ஷன் கந்தமாத னன் சரபன் பநசன் என்ற இவர்கள் முதலான எல் லா வானரவீரர்களையும் சந்தோஷத்தாற் கட்டிக்கொண் டார். இஷ்டமான உருவங்கொள்ளும் அவ்வானரவீரர் களும், தாங்கள்கொண்டிருந்த அழகான மானிடவுருவத் துடன், வெகுசந்தோஷமாக ஸ்ரீபரதரை க்ஷேமம் விசா ரித்தார்கள்.

விமானத்தி லேற்றப்பட்ட பரதர், யாவரை யும் முறைப்படி கௌரவித்தல்.

தருமங்களை யாராய்ந்தறிந்தவர்களுக்குள் மிகவும் உத்தம பராக்கிரமசாலியான பரதர், சுக்கிரீவனைக் கட்டிக் கொண்டு, "சுக்கிரீவரே! சகோதரர்களாகின்ற எங்கள்

நான்கு பெயர்களுக்கும் பின்பிறந்த ஐந்தாவதுசகோதரர் தாங்கள் ; உபகாரஞ்செய்வதுதான், நண்பர்களென்று சொல்லுவதற்குக்காரணம், அபகாரமானது, சத்துருக்களென்பதற்கு அடையாளம்" என்றார். அதன்பிறகு, பரதர், விபீஷணரை நோக்கி நல்வார்த்தை சொல்லலானார் :— "தெய்வாதீனமாக, தங்களது உதவியாலல்லவா, ஒருவராலுஞ்செய்யமுடியாத காரியத்தை எனது தமையனர் செய்துமுடித்தார் ?" என்றார்.

பரதர் சுக்கிரீவ விபீஷணரிடங் கூறிய முகமன்.

சத்துருக்கினர், ஸ்ரீராமரையும் இலட்சுமணரையும் நமஸ்காரஞ்செய்து, சீதாதேவியினிடம் வந்து வெகுவணக்கமாக அடிபணிந்து நின்றார்.

சத்துருக்கினர் வணங்கியது.

சோகத்தில் மூழ்கி அக்காரணத்தாலேதிருந்த தமதுதாய் நின்ற விடத்துக்கு, ஸ்ரீராமர், வந்து, அவ்வுத்தமியின் பாதங்களில் நமஸ்காரஞ்செய்து, அவளது மனத்தைக் குளிரச்செய்தார். பிறகு, சுமித்திரையையும் பெரும்புகழ் பெற்றகைகேயியையும் மற்றுமுள்ள தாய்மாரையும் ஸ்ரீராமர் நமஸ்காரம்பண்ணி, தமதுகுருவிருந்த இடத்தைநோக்கிச்சென்றார். அப்போது, "மிக்கபுஜபராக்கிரமம் பெற்றவரே! கௌசல்யையின் ஆனந்தத்தைப் பெருகப்பண்ணுகின்ற ஸ்ரீராமரே! தங்களுடைய வரவு நல்வரவா?" என்று வினவி, எல்லாக்குடிகளும், அஞ்சலி பண்ணிக்கொண்டு ஸ்ரீராமரைப் பார்த்து முகமன் கூறினர்கள். ஒரேகாலத்தில் ஆயிரக்கணக்கான தாமரைமொட்டுக்களைப் பார்ப்பதுபோல நகரத்தார்கள் அங்கு அஞ்சலி செய்துகொண்டிருந்ததை ஸ்ரீராமர் பார்த்தார்.

ஸ்ரீராமர் முதலியோர், தாயர் முதலியோரை வணங்குதல்.

குடிகள் இராமரை வணங்கி க்ஷேமம்விசாரித்தல்.

தருமத்தை யாராய்ந்திருந்த ஸ்ரீ பரதர், அப்பொழுது, ஸ்ரீராமர் தமக்கு முன்புகொடுத்திருந்த அவ்விரண்டு பாதுகைகளையும் எடுத்துவந்து, அம்மன்னவருடைய திருவடிகளிற் பூட்டினர். அன்றியும், அவர், அஞ்சலிபண்ணிக்கொண்டு, ஸ்ரீராமரைநோக்கிப் பின்வருமாறு சொல்லலானர்:—"அரசரே! தங்களது இந்தநாட்டை, நான், இதுவரையிற் பாதுகாத்துவந்தேன். இப்போது தங்களிடம் ஒப்பித்துவிட்டேன். இன்றுதான், நான் பிறந்த பிறப்பின் பயனைப் பெற்றேன்; தாங்கள் மறுபடியும் அயோத்திக்கு மன்னவராகத் திரும்பிவந்ததை எனது கண்களாற் பார்த்த பிறகு, இனி எனக்கு என்ன குறையிருக்கின்றது? எனது உள்ளத்திலிருந்த எண்ணங்களெல்லாம் நிறைவேறின. தங்களது பொக்கிஷம், தானிய சாலை, நகரம், சேனை என்ற இவைகளையெல்லாம், வந்து கண்ணோக்குங்கள். தங்களுடைய மகிமையால், இவைகளையெல்லாம் நான் பதின்மடங்காகச் செய்திருக்கின்றேன்" என்றார்.

பரதர் பாதுகைகளை ஸ்ரீராமர்க்குச் சமர்ப்பித்து இராச்சியத்தையும் ஒப்பித்தல்.

தமது தமையனர்மீது அவ்வளவு அன்புவைத்திருந்த பரதர் அவ்வாறு சொன்னதைக் கேட்ட எல்லா வானரர்களும், அரக்கவேந்தராகிய விபீஷணரும், தங்கள்கண்களால் ஆனந்தபாஷ்பம் வடித்தார்கள்.

பரதரது சொல்லைக்கேட்ட அனைவரும் வியப்படைதல்.

ஸ்ரீராமரும், மிக்கசந்தோஷத்தாற், பரதரைத் தமது மடியில் உட்காரவைத்துக்கொண்டு, அவ்விமானத்திலேறியிருந்தபடியே, தமதுசேனையுடன், ஸ்ரீபரதருடைய ஆச்சிரமத்துக்குச் சென்றார். அவ்வாச்சிரமம்சேர்ந்ததும், ஸ்ரீராமர், தமதுசேனையுடன், அவ்விமானத்தை விட்டு இறங்கிப் பூமியில்நின்றார். உடனே, அவ்விமானத்தை நோக்கி, அவர், "விமானதே

ஸ்ரீராமர், பரதருடைய ஆச்சிரமத்தை யடைந்து, புஷ்பகவிமானத்தைக் குபேரனிடம் அனுப்புதல்.

வதையே ! நீ இனிமேல் வைசிரவணருக்கு வாகனமாக இருக்கலாம்; திரும்பிப்போக நான் விடையளிக்கின்றேன்" என்றார். உத்தமமான அவ்விமானமும், ஸ்ரீராமரிடம் விடைபெற்று, வடதிசையாக எழுந்து குபேரனதுமாளிகைக்குச் சென்றது.

ஸ்ரீராமர் வசிஷ்டரை வணங்கி ஆசனத்திலிருத்தல்.

தேவர்களின்வேந்தரான தேவேந்திரன் பிருகஸ்பதியின் பாதங்களை வணங்குவதுபோல, ஸ்ரீராமர், தமக்குஎற்றகுருவாகிய வசிஷ்டமுனிவரின் பாதங்களை வணங்கி, அழகான வேறுஆசனங்களில் அவ்வசிஷ்டருடன் ஒருங்கே உட்கார்ந்தார்.

நூற்றுமுப்பத்தோராஞ் சருக்கம்: அயோத்தியை யடைந்த ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகம் நடத்துதல்.

அதன்பிறகு, கைகேயியின்சந்தோஷத்தைப் பெருகச்செய்யும் ஸ்ரீபரதர், தமது தலையின்மேற் கரங்களைக் கூப்பிக்கொண்டு, உண்மையையும் வல்லமையையும் நோன்பாகக் கொண்டுள்ள தமையனரான ஸ்ரீராமரை நோக்கிப் பின்வருமாறு சொல்லலானார்:— "இந்த நாட்டை எனக்கு அளித்துக் காட்டுக்குப்போய் எனதுதாயைத் தாங்கள் கௌரவித்தீர்கள். பிறகு, சித்திரகூடத்தில் இந்த ராஜ்யத்தை என்னிடத்தில் அடைக்கலப்பொருளாக வைத்தீர்கள்; அந்த ராஜ்யத்தை, நான், இப்பொழுது தங்களிடம் திருப்பிக்கொடுக்கின்றேன். வெகுபலம்பொருந்திச் சகாயத்தை எதிர்பார்த்த பெரிய விருஷபமானது சுமக்கவேண்டிய பெரும்பாரத்தை இளங்கன்று சுமக்க வல்லமையற்றதாவதுபோல், இந்த இராச்சியச் சுமையைச் சுமக்க என்னாலாகாது.

இராச்சியத்தை யங்கீகரிக்குமாறு ஸ்ரீராமரைப் பரதர் வேண்டுதல்.

மிக்க ஜலவேகத்தா லுடைக்கப்பட்ட அணை ஒருகொடி யிற் கரைந்துபேவதுபோல, இராச்சியமும், தக்க ஆலோசனை முதலியன இல்லாமலும் நேரிடுஞ் சங்கடங்களைத் தடுக்கவழியில்லாமலும், போனால் சடிதியில் நாசமாய்விடும். ஸ்ரீராமரே! குதிரையின் ஓட்டம் கழுதையால் ஓடமுடியாததுபோலவும், அன்னப்பறவையின் அழகான நடை காக்கையால் நடக்கமுடியாதது போலவும், சத்துருக்களின்செருக்கையடக்கவந்தவரே! தங்களுடைய மேலான போக்கை என்னால் அனுசரிக்கமுடியாது. மன்னவரே! பணியாளர்களையும் நண்பர்களையும் தாங்கள் பாதுகாவாவிடின், ஒருவன் மரமொன்றைத் தனதுவீட்டுமுற்றத்தில் வைத்தபிறகு, அது ஏறுதற்கு அருமையாகுமாறு வெகுஉயரமாய்க் கப்புங்கிளையுமாக வளர்ந்து நன்றுகப் பூத்துப் பயன்தராமற் பட்டுப்போகுமேயானல், எவ்வாறு அம்மரத்தை வைத்தவன் ஒருவகைப் பயனையும் அடையாமற்போவானோ, அதுபோல, தங்கள்விஷயம் முடிந்ததா மென்று தாங்கள் இவ்வுபமானத்தைக் கருதுங்கள். இன்று இவ்விராஜ்யத்திற் பட்டாபிஷேகஞ் செய்யப் பெற்ற தங்களை, இவ்வுலகம், மத்தியான்னகாலத்தில் மிக்கவொளியுடன் பிரகாசிக்கின்ற சூரியபகவானைக் காண்பதுபோலக் கண்ணெடுத்துப்பார்க்கட்டும். இராகவரே! மங்களவாத்தியங்களின் கோஷத்தாலும், மேகலை சிலம்புகளின் இன்னொலியினாலும், மதுரகீதங்களின் நாதத்தாலும் தாங்கள் கண்விழிப்பீர்களாக. எதுவரையில் ஜ்யோதிஸ்சக்ரம் ஆகாயத்திற் சுழலுகின்றதோ, எதுவரையில் இவ்வுலகம் அழிவின்றி யிருக்கின்றதோ, அது வரையில் இவ்வுலகத்துக்குத் தலைவராக இருந்துகொண்டு, தாங்கள் ராஜ்ய பரிபாலனஞ் செய்க" என்றார்.

இராமர் அதற்கு உடன்படுதல்.

சத்துருக்களின் நகரங்களை வென்று புகழ்பெற்ற ஸ்ரீராமர், தமது தம்பியாகிய பரதர் அவ்வாறுசொன்னதைக் கேட்டு, "அப்படியே ஆகட்டும்" என்று ஒப்புக்கொண்டு அழகான ஓர் ஆசனத்தி லுட்கார்ந்தார்.

அதன்பிறகு, சத்துருக்கினருடைய கட்டளைப்படி, வெகு சுகமாகவும் வெகுசீக்கிரமாகவும் சாமர்த்தியமாகவும் வேலைசெய்யத்தக்க நாவிதர்கள், ஸ்ரீராமரிடம் வந்து வணங்கி நின்று வேலைக்கு ஆரம்பித்தார்கள். முதலில் பரதர் ஸ்நாநஞ் செய்தார்; பிறகு, மகாபலம் பொருந்திய இலட்சுமணருடைய ஸ்நாநம் நடந்தது. வானர வேந்தனுகிய சுக்கிரீவனும் அரக்கவேந்தராகிய விபீஷணரும், அதன்பின் ஸ்நாநஞ் செய்தார்கள். இவர்களுக்குப் பிறகு, ஸ்ரீராமர், தமது சடைகள் பிரிக்கப்பட்டவராய், மங்களஸ்நாநஞ் செய்து, அழகான மாலைகளையணிந்து, வாசனைப்பூச்சுக்களைப் பூசப் பெற்றவராய், உயர்ந்த ஆடைதரித்து, மிக்க காந்தியால் விளங்கிக்கொண்டு சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். சீமானன சத்துருக்கினர், ஸ்ரீராமருக்கும் இலட்சுமணருக்கும் அலங்காரங்கள் செய்தார். நல்லமனமுள்ளவர்களான தசரதரின் மனைவிமார்களெல்லாரும், தாமே சீதாதேவிக்குச் செய்யவேண்டிய அலங்காரங்களைச் செய்தார்கள். புதல்வன்மீது பேரன்பு வைத்தவளான கௌசல்யை, மிகமகிழ்ந்து, வானரமடந்தைமாரெல்லோர்க்குஞ் சிங்காரஞ் செய்தாள்.

யாவரும் அலங்கரிக்கப்படுதல்.

பிறகு, சத்துருக்கினருடைய கட்டளைப்படி, சுமந்திரர், எவ்வகையிலும் அழகாக விருந்த இரதத்தைக் கொண்டு வந்துநிறுத்தினர். மகாபாகுவும் உண்மையிலுறுதியுடையவருமான ஸ்ரீராமர், சூரியமண்டலத்துக்கொப்பாக விளங்கிய அந்தஇரதத்தி லேறினர். மகேந்திரபகவான்போல் விளங்கிய சுக்கிரீவனும், அனுமானும், ஸ்நாநஞ் செய்துவிட்டு, அழகான ஆடைகளணிந்து, விலையுயர்ந்த குண்டலங்கள் தரித்துக்கொண்டு புறப்பட்டார்கள். சுக்கிரீவனுடைய மனைவிமார்களும், சீதாதேவியும், உயர்ந்த ஆபரணங்களையணிந்து, அழகான குண்டலங்களைத் தரித்துக்

யாவரும் அயோத்தி நோக்கிப் புறப்படுதல்.

கொண்டு, அயோத்தியைப் பார்க்க வெகு ஆவலுடன் புறப்படலானார்கள். இதுநிற்க:

அயோத்திமாநகரத்திலோ வென்றூல், தசரத மன்ன வருடைய மந்திரிமார்களெல்லோரும், தங்கள்குலகுரு வாகிய வசிஷ்டரை முன்னிட்டுக்கொண்டு, அன்று நடக்கவேண்டிய விஷயங்களைப் பற்றி மந்திராலோசனை பண்ணினார்கள். அசோகரும் விஜயரும் சுந்திரரும் ஒன்று சேர்ந்து, ஸ்ரீராமருடைய க்ஷேமத்தைக் குறித்தும், அயோத்தியாநகரத்தின் க்ஷேமத்தைக் குறித்தும் ஆலோசனை செய்யலானார்கள். அவர்கள், வெற்றிக்குரிய மகாத்துமாவாகிய ஸ்ரீராமரது பட்டாபிஷேகத்திற்கு வேண்டியவற்றை மங்களமாக நடத்தவேண்டுமென்று புரோகிதரிடஞ் சொல்லிவிட்டு, ஸ்ரீராமரைக் காண ஆசைகொண்டவர்களாய், பட்டணத்தைவிட்டு வெளிப்புறப்பட்டார்கள்.

அயோத்தியில் அபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்துவிட்டு, மந்திரிமார், ராமரைக் காண வருதல்.

பச்சைக் குதிரைகள் பூட்டிய திவ்வியரதத்தில் தேவேந்திரபகவான் ஏறிச்செல்வதுபோல, ஸ்ரீராமர், இரதத்திலேறிச் சிறந்தநகரத்துக்குச் செல்லலானார். பரதர், குதிரைகளின் கடிவாளத்தைப் பிடித்துத் தேரைச் செலுத்தினார். சத்துருக்கினர், ஓற்றைவெண்கொற்றக்குடைபிடித்தார்; இலட்சுமணர், ஸ்ரீராமருடைய தலைக்கு மேலாக வெண்சாமரம் வீசினர். அரக்கமன்னவராகிய விபீஷணர், சந்திரனுக்கொப்பான மற்றொருவெண்சாமரத்தைக்கையிலெடுத்துக்கொண்டு ஸ்ரீராமருக்குமுன்பாக நின்று வீசினர். ஆகாயத்தில், ரிஷிகளின்கூட்டங்களும் தேவர்களும் மருத்துக்களும் ஸ்ரீராமரைப் புகழ்ந்த இன்னொலியானது கேட்கலாயிற்று. வானரர்களின் ராஜனான சுக்கிரீவன், மலைபோல் விளங்கிய சத்துருஞ்சயமென்னும்

இராமர் பரிவாரங்களுடன் அயோத்தி நோக்கிச் செல்லுதல்.

யானையின்மேலேறி யுட்கார்ந்தான். மற்றை வானரவீரர் கள், மானுடவேடம் பூண்டு, எல்லாவகை யாபரணங்களு மணிந்துகொண்டு, ஒன்பதினாயிரம்யானைகளின்மேல் ஏறி வரலானார்கள். ஆண்சிங்கமாகிய ஸ்ரீராமர், அவ்வாறு சங் கம் முதலிய வாத்தியகோஷங்கள் முழங்க, துந்துபி முத லியன ஒலிக்க, மேன்மாளிகைகளினால் வரிசையாக விளங் குகின்ற அவ்வயோத்திமாநகரைநோக்கிச் சென்றார்.

அப்போது, அதிரதராகிய ஸ்ரீராமர், ஒப்பற்ற தமது தேககாந்தியால் விளங்கிக்கொண்டு இரதத்திலேறி வரு வதை, அந்நகரத்தார்களெல்லாரும், ஆனந்தமாகப் பார்த் தார்கள். அவர்களெல்லாரும், ஸ்ரீராமருக்கு "க்ஷேம முண்டாக்கக்கடவது" என்று ஆசிவசனங் கூறி, ஸ்ரீராம ரால் மரியாதைசெய்யப்பெற்றவர்களாய், சகோதரர்களாற் சூழப்பட்டு விளங்கிய அம்மகாத்துமாவைப் பின்தொடர் ந்து சென்றார்கள். மந்திரிமார்களாலும் அந்தணர்களா லும் குடிகளாலும் சூழப்பட்டு விளங்கிய ஸ்ரீராமர், நட்சத் திரக்கூட்டங்களாற் சூழப்பட்டுச் சந்திரபகவான் விளங்கு வதுபோல, தமது ஒப்பற்ற காந்தியாற் பிரகாசிக்கலானார். அவர்முன்பாக, மேளங்களும் தாளங்களும் வாத்தியங் களும் ஸ்வஸ்திகமும் முழங்கிக்கொண்டு சென்றன. மங்க ளங்களைப்பாடிக்கொண்டு, பலவந்தியர், அவரைச் சூழ்ந்து கொண்டுசென்றார்கள். இன்னும், தங்கம்போல் விளங்கிய மங்களாக்ஷதைகளும், பசுக்களும், கன்னிகைகளும், அந்த ணர்களும், மோதகங்களைக் கையில் வைத்திருந்த மனிதர் களும், ஸ்ரீராமர்க்குமுன்பாகச் செல்லலானார்கள். ஸ்ரீராமர், போகும்பொழுது, தமது மந்திரிமார்களிடம், தமக்கும் சுக் கிரீவருக்குமுள்ள விசேஷமான நட்பைப்பற்றியும், அனு மானுடைய வல்லமையைப்பற்றியும், வானரவீரர்கள் செய் த பலவகை யாச்சரியமான காரியங்களைப்பற்றியும், அரக்கர் களுடைய வல்லமையைப்பற்றியும், விபீஷணர் தம்மிடஞ் சேர்ந்த விஷயத்தைப்பற்றியும் சொல்லலானார். இவை

கூயெல்லாங் கேட்டு, அயோத்தியாநகரவாசிகள், மிக்க வியப்படைந்தார்கள்.

வெகுகாந்தியுடன் விளங்கிய ஸ்ரீராமர், இவ்வாறு சொல்லிக்கொண்டு, தமது நண்பர்களான வானரவீரர் களாற் சூழப்பட்டவராய், தம்முடைய வரவைக் கண்டு சந்தோஷத்தாற் பூரித்திருந்த ஜனங்கள் நிரம்பிய அயோத்திநகரிற் புகுந்தார். அவர், அவ்வாறு அயோத்தியாநகரத்துக்குள் நுழைந்தபோது, அந்நகரவாஸிகளெல்லாரும், தங்கள்தங்கள் வீட்டில் துவசங்களைத்தூக்கி நிறுத்தினார்கள். அவ்வாறு விளங்கிய வீதிகளின் வழியாகச்சென்று, ஸ்ரீராமர், இக்ஷ்வாகுவமிசத்தவர்கள் வசித்ததான தமது தந்தையின் அழகிய அரண்மனைக்குட் பிரவேசித்தார்.

ஸ்ரீராமர் அயோத்தியையடைதல்.

ஸ்ரீராமர், அரண்மனையையடைதல்.

அவ்வாறு தமதுதந்தையின் அரண்மனை சேர்ந்து அதிற் புகுந்து, கௌசல்யை சுமித்திரை கைகேயி என்ற இவர்களுக்கு நமஸ்காரஞ்செய்துவிடடு, எல்லாத்தருமங்களையுமாராய்ந்தறிந்த ஸ்ரீராமர், தமதுதம்பி பரதரைநோக்கி, நல்ல பொருளுடன்கூடிய சில இன்சொற்களைப் பின்வருமாறு சொல்லலானார்:— "அந்தப்புரம் உத்தியானவனம் இவைகளுடன்கூடி, முத்துக்களும் வைரக்கற்களும் பதிக்கப்பெற்று விளங்கும் எனது மாளிகையை, சுக்கிரீவர் தங்கியிருக்குமாறு அவர்வசம் ஒப்பிப்பாயாக" என்றார். அவர் அவ்வாறு சொன்னதைக் கேட்டதும், உண்மையிற்பராக்கிரமமுள்ள பரதர், சுக்கிரீவரைக் கைப்பிடித்து அழைத்துக்கொண்டு அம்மாளிகைக்குச் சென்றார். சத்துருக்கினர் கட்டளைப்படி, அநேக விளக்குக்களையும் கட்டில்கள் விரிப்புக்கள் இவைகளையும், அம்மாளிகைக்கு வேலையாட்கள் கொண்டு வந்தார்கள்.

ஸ்ரீராமர் கட்டளைப்படி, பரதர், சுக்கிரீவமகாராஜர்க்கு இராமர்மாளிகையை விடுதியாக அளித்தல்.

அவ்விடஞ் சென்றதும், வெகு வல்லமை பொருந்திய பரதர், சுக்கிரீவனைப்பார்த்து, "பிரபுவே! ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகத்துக்குத் தீர்த்தங்கொண்டு வரத் தங்களுடையதூதர்களுக்குக் கட்டளையிட வேண்டுகின்றேன்" என்றார். உடனே, சுக்கிரீவன், சடிதியில், எல்லாவகையிரத்தினங்களாலும் இழைக்கப்பட்டநான்குபொற்குடங்களை, நான்கு வானரவீரர்களிடம் கொடுத்து "வானரவீரர்களே! நான்கு சமுத்திரங்களிலிருந்தும் இக்குடங்களில் தீர்த்தத்தை நிரப்பிக் காலையில் இவ்விடம் சித்தமாகவிருக்கும்படி செய்யுங்கள்" என்றார். இவ்வாறு கட்டளையிடப்பட்டவுடன், யானைக் கொப்பானவர்களும் மகாத்துமாக்களுமாகிய அவ்வானரவீரர்கள், வேகமாகச்செல்லுங் கருடன்போல் ஆகாயத்தில் சடிதியிற் பாய்ந்தார்கள். ஜாம்பவான் அனுமான் வேகதர்சீ ரிஷபன் என்ற இந்நான்குவீரர்களும், அக்கலசங்களில் தீர்த்தங் கொண்டுவந்தார்கள். அக்கலசங்களில் வந்தவை, ஐந்நூறுநதிகளின் தீர்த்தங்களாகும். வெகுபல சாலியாகிய சுஷேணன், கிழ்சமுத்திரத்திலிருந்து எல்லாவகை யிரத்தினங்களுமிழைத்த ஒருகுடத்தில் தீர்த்தம் நிறையக் கொண்டுவந்தான். ரிஷபன், பொற்குடத்தின் மேற்செஞ்சந்தனமரத்தின் கிளைகளால் மூடித்தென்சமுத்திரத்திலிருந்து சடிதியில் தீர்த்தங் கொண்டுவந்தான். கவயன், மேலைச்சமுத்திரத்திலிருந்து ஒரு பெரிய இரத்தின குடத்தில், குளிர்ந்த ஜல மெடுத்துவந்தான். எல்லா விதகுணங்களும் நிரம்பிய நளன், கருடன்போலவும் வாயுபகவான்போலவும் வெகுவேகமாகச் சென்று, வடசமுத்திரத்திலிருந்து தீர்த்தங்கொண்டுவந்தான். இவ்வாறு அவ்வானரவீரர்களால் ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகத்துக்கு வேண்டிய தீர்த்தங்கள் வந்துசேர்ந்ததை, சத்துருக்கினரும் மந்திரிமாரும் கண்டு, மிக்க ஆசாரசீலரான தங்கள் புரோகிதருக்கும் நண்பர்களுக்கும் அச்செய்தியைத் தெரிவித்தார்கள்.

பரதரது வேண்டுகோளின்படி சுக்கிரீவன் தூதர்களுக்குக் கட்டளையிட, அவர்கள்பட்டாபிஷேகத்திற்காகத் தீர்த்தங் கொணர்தல்.

ஸ்ரீராம பட்டாபிஷேகம்.

அதன்பிறகு, ஸ்ரீராம பட்டாபிஷேகத்துக்கு வெகுமுயற்சியுட னிருந்த பெரியவராகிய வசிஷ்ட மாமுனிவர், அந்தணர் பலருடன்கூட எழுந்து நின்று, ஸ்ரீராமரைச் சீதாதேவியுடன் இரத்தின சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்க வைத்தார். வசிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காசியபர், காத்யாயனர், வாயஜ்ஞர், கௌதமர், விஜயர் இவர்கள் கூடி, அஷ்டவசுக்கள் ஆயிரங்கண்ணனுன தேவேந்திரனுக்கு அபிஷேகஞ் செய்வதுபோல, நல்வாசனையுடையதாய்த் தெளிந்த நீரினுல், ஆண் புலியான ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகஞ் செய்தார்கள்.

வசிஷ்டர் முதலியோரது கட்டளையினுல், மந்திரவிதிப் பிரகாரம், முதலில் ருத்விக்குகளும் அந்தணர்களும் ஸ்ரீராமருக்கு அபிஷேகஞ் செய்தார்கள்; அதன்பிறகு, வெகு உற்சாகத்துடன், கன்னிகைகளும் மந்திரிமார்களும் போர்வீரர்களும் நகரத்தார்களும் அம்மன்னவருக்கு அபிஷேகம் பண்ணினுர்கள். ஆகாயத்தில் நான்குலோகபாலர்களும், எல்லாத் தேவதைகளும், வந்து நின்றுகொண்டு, திவ்வியங்களான எல்லா மூலிகைகளுடைய இரசங்களினுலும் ஸ்ரீராமருக்கு ஆ

காயத்திலிருந்தபடியே அபிஷேகஞ்செய்தார்கள். பலவகையிரத்தின பரணங்களை யணிந்த மஹாஜநங்கள் கூடிய பொன்மயமான சபையில் பொற்பீடத்தின்மேல் ஸ்ரீராமரை உட்காரவைத்து, முன்பு பிரமதேவனுல் நிருமிக்கப்பட்டு இரத்தினங்களினுல் விளங்கி, மநுவினுல்அணியப்பெற்றுக் குலமுறையாகவந்த ஒளியால்விளங்கும் இரத்தினகிரீடத்தை,வசிஷ்டர் இராமர்க்குச்சூட்டினர். ருத்விக்குகள், பலவகை யாபரணங்களை அணிவித்தார்கள். சத்துருக்கினர், வெகு அழகான வெண்குடையொன்றை ஸ்ரீராமருக்குப் பிடித்தார். வானரவேந்தனுகிய சுக்கிரீவன், வெண்சாமரம் வீசினுன். சந்திரனுக்கொப்பான மற்றொரு வெண்சாமரத்தை, அரக்கமன்னவராகிய விபீஷணர் வீசினுர். நூறு பொற்றுமரைகள் கோத்து மின்னிக்கொண்டிருந்த மாலையொன்றை, இந்திரபகவானுடைய கட்டளையின்படி, வாயுபகவான் ஸ்ராமருக்குக் கொடுத்தார். மற்றும், இந்திரபகவானுடையகட்டளைப்படியே, வாயுபகவான், எல்லாவிதரத்தினங்களும் கலந்திழைக்கப்பெற்று நாயகமணியாற்சோபித்துக்கொண்டிருந்த முத்துமாலையொன்றையும் ஸ்ராமருக்குக் கொடுத்தார். மிக்க சிறப்புக்குத் தக்க மேதாவியான ஸ்ராமருடைய பட்டாபிஷேகத்தில், தேவர்களும், கந்தர்வர்களும் கானம் பண்ணலாஞர்கள். அப்ஸரஸுக்களின் கணங்கள் கூத்தாடின.

ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகமான அம்மகோத்ஸவம் நடந்தவுடன், பூமி தானியங்கள் நிரம்பியதாகவும், விருக்ஷங்கள் கனிகள் நிரம்பியன்வாகவும், மலர்கள் வாசனை நிரம்பியனவாகவும் விளங்கின.

அதன்பிறகு, மனிதசிங்கமாகிய அந்தஸ்ரீராமர், நூறுயிரங் குதிரைகள், நூறுயிரம் பசுக்கள், நூறுயிரம் * தேனுக்கள், நூறு காளைமாடுகள் இவைகளை, ஹிரண்யதானத்துக்குமுன்பு அந்தணர்கட்குத் தானம்பண்ணினார். மூப்பதுகோடி பொன்னையும், பலவகையாபரணங்களையும், விலையுயர்ந்த வஸ்திரங்களையும், ஸ்ரீராமர், பிராமணர்களுக்குத் தானஞ்செய்தார். மானுடக்காளையாகிய அந்தஸ்ரீராமர், சூரியனுடைய கிரணங்கள்போல மின்னிக்கொண்டு, தங்கமும் இரத்தினமுமிழைக்கப்பட்டுவெகுஅழகாய்விளங்கிய மாலையொன்றைச் சுக்கிரீவருக்குக் கொடுத்தார். வைடூரியக்கற்கள் அழகாக இழைக்கப்பட்டு, நடுவில் வைரமும் இரத்தினமும் பதிக்கப்பெற்று, வெகு அழகாக விளங்கிய இரண்டு தோள்வளையல்களை வாலியின்புதல்வனாகிய அங்கதனுக்கு, ஸ்ரீராமர், கொடுத்தார். சிறந்தமணிக ளிழைக்கப்பட்டுச் சந்திரகிரணங்கள்போலஒப்பற்றதாகச்சோபித்துக்கொண்டிருந்த முக்தாஹாரமொன்றை, ஸ்ரீராமர், சீதாதேவிக்குக் கொடுத்தார்; அப்படியே சில உயர்ந்த வஸ்திரங்களையும், ஆபரணங்களையுங் கொடுத்தார். சீதாதேவி, தனதுகழுத்தினின்றும் அந்தஹாரத்தைக் கழற்றிவைத்துக்கொண்டு எல்லாவானரவீரர்களையும் பார்த்துவிட்டுத் தனதுகணவருடைய திருமுகத்தையும் பார்த்தாள். முகக்குறியால் எல்லாவிஷயங்களையு மறிந்துகொள்ளும் வல்லமையுள்ள ஸ்ரீராமர், அவ்வுத்தமியின் நிலைமையை அறிந்துகொண்டு, சீதையைப்பார்த்துப் பின்வருமாறு சொல்லலானார்:—

இராமர்செய்த தானங்கள்.

* தேனு—அப்போது ஈன்ற பசு.

" இனிய அழகுடையவளே ! இனிய சாயலுடையவளே ! எவனொருவனிடம், வல்லமை பலம் புத்தி இவைகளெல்லாம் அதிகமாக விருக்கின்றன வென்று சந்தோஷமடைந்திருக்கின்றாயோ, அவனுக்கு, இந்த ஹாரத்தை, நீ, வெகுமதியாகக் கொடுக்கலாம் " என்றார். உடனே, கறுத்த கண்களையுடைய அவ்வுத்தமியும், அந்தஹாரத்தை அனுமானுக்குக் கொடுத்தாள். அனுமானும், அந்தஹாரத்தை அணிந்துகொண்டு, சந்திரகிரணங்களால் வெண்மையாக விளங்குகின்ற வெண்மேகத்தால் மூலை சோபிப்பது போலச் சோபிக்கலானன். துவிவிதன் மைந்தன் நீலன் என்ற இவர்களுக்கு, அவரவர்களின் நோக்கங்களை யறிந்து கொண்டு, வேண்டியபடி, ஸ்ரீராமர், வெகுமானம் பண்ணினார். எல்லாவானரவிருத்தர்களும் எல்லா வானரசேனாபதிகளும், வஸ்திரங்களாலும் ஆபரணங்களாலும் அவரவர்களுக்குத்தக்கபடி மரியாதைசெய்யப்பெற்றார்கள்.

விபீஷணர் சுக்கிரீவர் அனுமான் ஜாம்பவான் மற்றுமுள்ள வானரஸேனாபதிகள் இவர்களெல்லாரும், மாசற்ற ஸ்ரீராமரால், அவரவர்களுடையபதவிக்குத் தக்கவாறு இஷ்டப்படி இரத்தினங்களாலும் மற்றைவிதமரியாதைகளாலும் பூஜிக்கப்பட்டார்கள்.

எல்லாரும், மிகவும் ஆனந்தமடைந்தவர்களாய், தங்கள்தங்கள் இருப்பிடங்கட்குத் திரும்பலானார்கள். வானரவீரர்கள், மகாத்துமாவாகிய அந்த ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகத்தைப்பார்த்தபிறகு, அம்மன்னவரிடம் விடைபெற்றுக்கொண்டு, கிஷ்கிந்தைக்குத் திரும்பினர்கள். சுக்கிரீவன், ஸ்ரீராமபட்டாபிஷேகத்தைப்பார்த்தபிறகு, கிஷ்கிந்தைக்குத் திரும்பினன். விபீஷணர், தமது குலதனமாகிய இலங்கைமாநகருக்கு ஸ்ரீராமருடைய அருள் பெற்றுத் திரும்பினர்.

வானரர் முதலியோர் தத்தம் இருப்பிடங்கட்குச்செல்லுதல்.

தமது சத்துருக்களை நாசம்பண்ணிப் பெரும்புகழ் பெற்ற பெருவள்ளலாகிய ஸ்ரீராமர், வெகுகம்பீரமாய், வெகுசந்தோஷத்துடன் அந்நாடு முழுமையும் பரிபாலனம் பண்ணலானார். தருமத்திலன்புள்ள ஸ்ரீராமர், தருமத்தை நன்றாக அறிந்த தமது தம்பியாகிய இலட்சுமணரை நோக்கி, "தருமத்தை யுணர்ந்தவனே! இதற்குமுன் மனுமுதலியவர்கள் பரிபாலனம் பண்ணியதும், நமது பிதா பிதாமகர் முதலியவர்கள் பரிபாலனம் பண்ணியதுமான இவ்விராச்சியத்தை, என்னுடன்கூட யுவராஜாவாக இருந்துகொண்டு, என்னைப்போலப் பரிபாலனஞ் செய்வாயாக" என்று கேட்டுக்கொண்டார். என்ன சொல்லியும், இலட்சுமணர் ஒத்துக்கொள்ளாமற் போகவே, மகாத்துமாவாகிய அந்த ஸ்ரீராமர், பரதருக்கு யுவராச்சியபட்டாபிஷேகம் பண்ணிவைத்தார்.

பரதருக்கு யுவராச்சியபட்டாபிஷேகம்நடத்தல்.

அதன்பிறகு, அம்மன்னவர், பௌண்டரீகம் வாஜபேயம் அசுவமேதம் முதலான பல யாகங்களைப் பலதரஞ் செய்துமுடித்தார். பதினாயிரம் வருஷகாலம் அவ்விராச்சியத்தைப் பரிபாலனம்பண்ணி, பலவகை நல்ல தக்ஷிணைகளாலும் நல்லஅசுவங்களாலும் நூறுதரம் அசுவமேதயாகம் செய்துமுடித்தார். தமதுமுழங்கால் வரையில் நீண்டு தொங்கும் பெருங்கைகளையுடையவரும் உயர்ந்தபிடரியையுடையவரும் புகழ்பெற்றவருமான மகாத்துமாவாகிய இலட்சுமணருடன் எப்போதும்பிரியாதிருக்கின்ற அந்தஸ்ரீராமர், பூமியை ஆண்டுவந்தார். தருமாத்துமாவாகிய ஸ்ரீராமர், ஒப்பற்ற இராச்சியத்தை, அவ்வாறு அடைந்து, தமது நண்பர்களுடனும் பந்துக்களுடனும், பலயாகங்களை நிறைவேற்றினார். ஸ்ரீராமர் இராச்சியபரிபாலனம்பண்ணிவந்தகாலத்தில், கைம்பெண்கள் புலம்பினார்களென்பதே கிடையாது; துஷ்டமிருகங்களால் பயமுண்டாயிற்றென்ற

ஸ்ரீராமரது அரசாட்சிச் சிறப்பு.

சொல்லே இல்லை. வியாதியினும் பயமுண்டாயிற்றென் றதும் இல்லாம லிருந்தது. உலகத்தில் திருடனென்ற வனேவாளியே இல்லை. ஒருவித சங்கடமும் உலகத்துக்கு உண்டாகவேயில்லை. பெரியவர்கள் சிறிய குழந்தைகளுக்கு உத்திரகிரியைசெய்தார்க ளென்பதே இல்லாமலிருந்தது. எல்லாரும், சந்தோஷப்பட்டவர்களாகவே யிருந்தார்கள். எல்லாரும் தருமகாரியத்திற் பிரவேசித்தவர்களாகவே விளங்கினர்கள். ஸ்ரீராமரையே பார்த்தவர்களாய், ஒருவரை மற்றொருவர் ஒருபொழுதும் இம்சிக்காமல் நடந்து வந்தார்கள். ஸ்ரீராமர் இராச்சியபரிபாலனம் பண்ணின பொழுது, யாவரும், ஒருவகை ரோகமும் துக்கமும் இல்லாதவர்களாய், ஆயிரவருஷகாலம் உயிருடன் வாழ்ந்துகொண்டு, ஆயிரம்பிள்ளைகளைப் பெற்றுச் சுகமாக வாழ்ந்துவந்தார்கள். இராமர் இராச்சியத்தைப் பாதுகாத்தபொழுது, குடிகளுக்குள் எங்குப் பார்த்தாலும் 'ராமர், ராமர், ராமர்' என்ற கதையே உண்டாயிற்று. ஜகத்துமுழுதும் இராமமயமாகவே தோன்றிற்று. விருக்ஷங்கள், நன்றாகக் கிளைகள்விட்டுக்கொண்டு எப்பொழுதும் பூத்துக் காய்த்தன. அந்தந்தக் காலங்களில், மேகங்கள் மழைபொழிந்தன. எப்பொழுதும் இளங்காற்று வீசிற்று. அந்தணர்கள் க்ஷத்திரியர்கள் வைசியர்கள் சூத்திரர்கள் என்ற இவர்களெல்லாரும், உலோபகுணமின்றி, தங்கள்தொழிலைச் செவ்வையாக நடத்தி, தாங்கள் செய்த காரியங்களாற் சந்தோஷமடைந்தவர்களாக இருந்தார்கள். ஸ்ரீராமர் இராச்சியபரிபாலனம்பண்ணின காலத்தில், எல்லாக் குடிகளும், தங்கள் தங்கள் தொழிலில் ஆசையுடன் கூடியவர்களா யிருந்தார்கள். எல்லாரும், சகல லட்சணங்களும் பொருந்தியவர்களாயும், எல்லாரும் சத்தைச் செய்கின்றவர்களாயும் இருந்தார்கள். இவ்வாறு ஸ்ரீராமர் பதினாயிரத்துநூற்றுப்பத்துவருஷகாலம் தமது தம்பிமார்களுடன் ஒருவகைக்குறைவு மின்றி,

வெகு பாக்கியசாலியாக இராச்சியபரிபாலனஞ் செய்து வந்தார்.

ராமாயணம் படிப்பதனால் உண்டாகும் பயன்.

தன்னைப்படிப்பவர்களுக்குப் பொருளையும் புகழையும் ஆயுளையும் அளிப்பதும், அரசர்களுக்கு வெற்றியைக் கொடுப்பதும், வேதத்துக்குச் சமமானதும், முதற் காவியமும், வால்மீகிமகாமுனிவரால் முன்னர் இயற்றப்பட்டதுமான இவ்விராமாயணத்தை எவனொருவன் படிக்கின்றானே, அல்லது எவனொருவன் கேட்கின்றானே, அவன், எல்லாவகைத் தீவினைகளிலிருந்தும் விடுபட்டவனுவான். ஸ்ரீராமருடைய பட்டாபிஷேகம்வரையிற் கேட்டவன், புத்திரபாக்கியத்தையடைய விரும்பியவனுக விருந்தால், அப்பாக்கியத்தை யடைவான்; பொருளையடைய விரும்பியவனுக விருந்தால், பொருளையடைவான். அரசனுகவிருப்பானேயானுல், அவன், இவ்வுலகம் முழுவதையும்வெற்றிகொண்டு, தனதுசத்துருவைநாசஞ்செய்வான். கேட்டவர்பெண்பாலாக விருந்தால், கௌசல்யை ஸ்ரீராமரைப் புத்திரனுக அடைந்ததுபோலவும், சுமித்திரை இலட்சுமணரைப் புதல்வனுகப் பெற்றதுபோலவும், கைகேயி பரதரைத் தனதுமகனுக அடைந்ததுபோலவும் ஜீவத்புத்திரனைப் பெற்றுச் சுகமடைவார். மாசற்ற செயல்புரிந்த ஸ்ரீராமருடைய வெற்றியைப்பற்றிச் சொல்லியிருக்கும் இவ்விராமாயணத்தைக் கேட்பவர், நீண்டஆயுளையடைவார்கள். வேதத்துக்கொப்பானதும் வால்மீகிமாமுனிவராலியற்றப்பட்டதுமான இக்காப்பியத்தை, வெகு சிரத்தையுடனும் வெகு பரிசுத்தமான மனத்துடனும் கேட்பவர்கள், எல்லாவகைச் சங்கடங்களையும் எளிதிற் கடப்பார்கள். ஊரை விட்டு ஊர் வெகுகாள் போயிருந்தால், அத்துக்கம் நீங்கி, பந்துக்களின் சேர்க்கையும் உடனே உண்டாகும். அன்றியும், இவ்விராமாயணத்தைக் கேட்டவன், தான் விரும்பிய

ல்லா வரங்களையும் ஸ்ரீராமரிடமிருந்து அடைவான். இவ் ராமாயணத்தைக் கேட்பவர்களிடம், எல்லாத்தேவதை தம் சந்தோஷமடைகின்றனர். அவர்களுக்கு இடையூ த் தோன்றியிருந்த இரகங்கள் யாவையும், அவர்களி சாந்தமடைந்து அவர்களுக்கு நன்மையையே விளைக் . அரசன், பூமியை வெற்றிகொள்வான். அயலூர் ன்றிருந்த பந்துவும், சுகமாகத் திரும்பிவருவான்; மியர்கள் எல்லாவிதநற்குணங்களும் நிரம்பிய புதல் களைப் பெறுவார்கள். பழைய இதிஹாஸமாகிய இவ் ராமாயணத்தைப் பூஜைசெய்பவரும், படிப்பவரும், ல்லாவகைப் பாபங்களினின்றும் நீங்கினவர்களாய், நீடி த ஆயுளையும் அடைவார்கள். இக்கிரந்தத்தை, கூடத்தி ர்கள், அந்தணர்களை வணங்கிக் கேட்பார்களேயானால், வர்களுக்கு ஐசுவரியமும் புத்திரபாக்கியமும் ஐயமின்றி ண்டாகும். எவரொருவர் அழிவற்ற விஷ்ணுபகவா டைய அவதாரமாக விளங்குகின்றாரோ, அந்த ஸ்ரீராம ானுடைய சரித்திரமாகிய இவ்விராமாயண கிரந்தத் த முழுவதும் படிப்பவரிடமும், கேட்பவரிடமும், ஸ்ரீரா , எப்பொழுதும் அருளுள்ளவராயிருக்கின்றார். ஸ்ரீரா தாம், ஆதிதேவர்; புஜபராக்கிரமமுள்ளவர்; அவர் ம் ஹரி; அவர்தாம், எல்லாவிதவல்லமையு மமை நாராயணர். பெரும் பொருள்கள் நிரம்பிய அழகான க்காப்பியத்தைக் கேட்ட மாத்திரத்தில், அவ்வாறு கேட் ன், குடும்பத்தின் விருத்தியையும், தனதானியங் ன் விருத்தியையும், உயர்ந்தகுணமுள்ள மடந்தைகளை , உத்தமமான சுகத்தையும், மற்றும் பலவற்றையும் டைவான்; இவ்வுலகத்தில் தான் ஜன்மமெடுத்த பயனை அடைவான். ஆயுளை அளிப்பதும், ஆரோக்கியத் தைக் கொடுப்பதும், புகழைத்தருவதும், நல்ல சகோதரர் களின் நட்பை எடுத்துக்காட்டுவதும், நற்புத்தியைக் கொடுப்பதும், சுகத்தைத் தருவதும், காந்தியை யளிப்பது

மான இக்கிரந்தத்தை, நல்லவர்கள் பாக்கியத்தை அடைய விரும்பினால், வெகு ஆசாரத்துடன் கேட்கவேண்டும்.

இக்காவியம், இவ்வண்ணமானது; உங்களுக்கெல்லாம் இது க்ஷேமத்தை யுண்டாக்கட்டும். ஸ்ரீ விஷ்ணுபவானுடைய பலத்தை எடுத்துச்சொல்லும் இந்தக்கிரந்தம் எங்கும் பரவட்டும். இவ்விராமாயணத்தைக் கேட்பவர்களிடமும், இவ்விராமாயணத்தைக் கேட்டவர்களிடமிருந்து விஷயங்களைக் கிரகிப்பவர்களிடமும், எல்லாத் தேவதைகளும் பித்ருக்களும் சந்தோஷமடைகின்றார்கள். மஹர்ஷி செய்த இந்தக் கிரந்தத்தை, பக்தியுடனே எவனொருவன் எழுதுகின்றானே, அவனுக்கு, இருப்பிடம் சுவர்க்கலோகமேயாம்.

யுத்தகாண்டம்

முற்றிற்று.



PRINTED AT THE LAWRENCE ASYLUM PRESS, MADRAS—1912.